வெளியீடு—14—7—1972]
Issued—14—7—1972]

3897

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

சனிக்கிழமை 1972 மார்ச் 18
**Saturday 18th March 1972**

தொகுதி XIX—எண் 1
**Volume XIX—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
[Price 50 Paise]

# Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*18th, 20th, 21st and 22nd March* 1972. 3897

**VOLUME XIX** (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.


PAGES

Personnel of the Government of Tamil Nadu .. i–vi

Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. .. .. .. vii

List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies .. .. ix–xvi

*Saturday, 18th March* 1972.

1. Questions and Answers .. .. .. 1–36
2. Adjournment Motions—
   (i) Establishment of Data Processing Centre and probable displacement of State and Central Employees .. .. .. .. 37–45
   (ii) Alleged Police lathicharge on Pudukkottai Raja's Arts College and B.T. College Students 45–48
3. Chief Minister's Statement—
   Installation of Raja Raja Cholan Statue in Thanjavur Temple .. .. .. 49–50

61559

*Saturday, 18th March* 1972—cont.


PAGES

4. Voting on Demands for the year 1972-73—

Demand No. XIII-Education .. .. 60-139

5. Papers laid on the Table 140


*Monday, 20th March* 1972.


1. Questions and Answers .. .. .. 195-233

2. Privilege Matter—

Publication of scurrilous matter in 'Nathigam' 233-236

3. Voting on Demands for Grants for the year 1972-73—

(i) Demand No. XXV– Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. .. . 236-301

(ii) Demand No. XXV-A—Welfare of the Backward Classes, etc. .. .. .. 301-347

4. Papers laid on the Table .. .. .. 347-348


*Tuesday, 21st March* 1972.


1. Questions and Answers .. .. .. 425-459

2. Calling Attention—

(i) Unrest among Agriculturists due to enhanced water rate in accordance with the Vaigai Canal Improvement Scheme .. .. .. 459-460

(ii) Stoppage of Central Scholarship to Students of Backward Classes and Denotified Tribes and the need to raise the Income Ceiling for Scholarships fixed by the State Government . .. 460-462




*Tuesday, 21st March* 1972—con


PAGES.

3. Voting on Demands for Grants for the year 1972-73—

Demand No. XXVI-Irrigation
Demand No. XXVII-Public Works—Works
Demand No. XXVIII-Public Works—Establishment and Tools and Plant
Demand No. XLI-Capital Outlay on Irrigation
Demand No. XLII-Capital Outlay on Public Works .. .. .. .. .. } 462-631

4. Papers laid on the Table .. .. .. 631-632


*Wednesday, 22nd March* 1972.


1. Questions and Answers .. .. .. 751-790

2. Calling Attention—

Allowing Students of the Salem Saradha College who were affected by the Selection Examination to appear for Public Examination .. .. 791

3. Voting on Demands for Grants for the year 1972-73—

Demand No. VII—Elections
Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff
Demand No. XXXIII—Miscellaneous,
Demand No. VI—State Legislature.. .. .. } 792-892

4. Papers laid on the Table .. .. .. 893

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்:

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நீதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (.ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு; செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்—வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், மூகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, உணவு உற்பத்தி

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.



13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான்—கிராமதான இயக்கங்கள்.

Medicine

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)— in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)— in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. THE HON. THIRU S. MADHAVAN (*Minister for Industries*—in charge of Industries, Textiles, Yarn, Handloom) Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (*Minister for Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. THE HON. THIRU K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. THE HON. THIRU O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

14. THE HON. THIRU M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

**பேரவைத் தலைவர்.**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.**

**பேரவைத் துணைத் தலைவர்.**

**மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.**

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

**சட்டப் பேரவைச் செயலாளர் :**

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர்.**

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள் :**

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம். .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25° இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. .. .. | குனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. .. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்தீசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை |
| 86 சண்முகம் திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார்கோயில். |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் செ வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. .. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. . | ஓசூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. .. .. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. வ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போதிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. கி. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோலையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னில், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| 132 தர்மலிங்கம், திரு. அ. பெ. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 134 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ரம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. வ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. வ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 151 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம் திரு. பா. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி ஏ. கோ. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிப்பாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில், |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னாகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ.வ). |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |

| தொடர் எண் | உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|---|
| 214 | மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 | ரங்கனாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 | ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 | ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர். |
| 218 | ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 | ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 | ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 | ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 | லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 223 | வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 | வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 | வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 226 | விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 227 | வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 | வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 | வெள்ளைத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 | வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்). |
| 231 | வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 | வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 | ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 | ஜோதி வெங்கடாசலம், திருமதி | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

தொடர் எண்ணும், பெயரும்.

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 | மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி | அமைச்சர். |
| 3 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1972 மார்ச் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Travel by policemen on foot-board in buses*

* 546 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state the action taken by Government to prevent policemen travelling on foot-boards in buses in Madras City?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்னைமாநகரில் காவல்துறைப் பணியாளர்கள் பேருந்துப் படிகளில் பயணம் செய்ய லாகாது என்று பொதுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: காவலர்கள் இப்போதும் இப் பழக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். இதுசம்பந்தமாக பஸ் ஊழியர் களுக்கும் காவலர்களுக்கும் இடையே வேறுபாடு ஏற்பட்டுக்கொண் டிருக்கிறது. கடந்த 16-ஆம் தேதி நடந்த பஸ் ஊழியர்கள் வேலை நிறுத்தம் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இதை அரசு கருத்தில் கொண்டு காவலர்கள் இப்படிப்பட்ட சம்பவங்களில் ஈடுபடாத வாறு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆங்காங்கு காவலர்கள் யாராவது இந்தப் பொதுக் கட்டளையை மீறி நடந்தாலோ அல்லது கண்டக்டர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டாலோ அல்லது மற்றவர்களுக்கும் காவலர் களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டாலோ, அவைகளைத் தனிப்பட்ட நிகழ்ச்சியாகவும் வழக்காகவும்தான் கருதவேண்டும். பொதுமக்களுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடைபெறுமல் இருப்பதைத்தான் பொதுமக்களும் விரும்புகிறார்கள்; இந்த அரசும் விரும்புகிறது; அமைதியை நாடுகிற அனைவரும்

விரும்புவார்கள். அந்தக் காவலர்மீது, குறிப்பிட்ட 16-ஆம் தேதியன்று ஒழுங்கு தவறி நடந்துகொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட காவலர்மீது, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 16-ஆம் தேதி நடந்த சம்பவத்தைப் பற்றி சொல்லப்படுவது என்னவென்றால், குறிப்பாக, போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் பஸ்ஸை நிறுத்தவேண்டும் என்று வற்புறுத்தியதாகவும், அதற்கு மீறிய ஒரு காரணத்தினால் அந்த டிரைவர் தாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, அம்மாதிரியான நடவடிக்கைகளில் போலீஸார் ஈடுபடக்கூடாது என்று அவர்களுக்குத் தெரிவிக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரந்து கிடக்கின்ற அந்த இலாகாவில் ஒருசிலர் தவறு செய்யக்கூடும். போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் நிறுத்த வேண்டும் என்று தகராறு செய்து, அதற்கு கண்டக்டர் இடம் அளிக்காத காரணத்தினால் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டார்கள். உடனடியாகப் புகார் கொடுக்கப்பட்டிருக்குமானால், இப்பொழுது எடுக்கப்பட்ட அதே நடவடிக்கை அந்தக் காவல் துறையாளர் மீது நிச்சயமாக எடுக்கப்பட்டிருக்கும். அப்படியில்லாமல், பொதுவாக இரண்டு மணி நேரம், மூன்று மணி நேரம் சென்னை நகரில் எல்லாப் பஸ்களையும் நிறுத்திவிடுவது என்பது சரியல்ல. வழியில் பஸ்ஸை நிறுத்தி அவ்வளவு பிரயாணிகளுக்கும் அவஸ்தை ஏற்பட்டு, அதற்குப்பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அந்த போலீஸார்மீது, அதே நடவடிக்கை, புகார் கொடுத்திருந்தாலும் எடுக்கப்பட்டிருக்கும். அந்த உறுதியை இந்த மன்றத்தின்மூலமாக நான் எல்லா பஸ் தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் நடந்தால்தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதல்ல. புகார் கொடுத்தாலும் ஏற்ற நடவடிக்கை உடனேயே எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அன்று நடந்த நிகழ்ச்சியில் மேல் மட்ட போலீஸ் அதிகாரிகளும், ட்ரான்ஸ்போர்ட் இலாக்காவிலுள்ள மேல்மட்ட அதிகாரிகளும் உடனடியாகத் தலையிட்டிருந்தால் அத்தகைய விரும்பத்தகாத நிகழ்ச்சி ஏற்பட்டிருக்காது. மேலும், அம்மாதிரி நிகழ்ச்சி ஏற்படாமல் இருப்பதற்கு, அம்மாதிரி ஏதாவது சம்பவம் நடந்தால் உடனடியாகத் துரித நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஆணை பிறப்பிக்குமா?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 9 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகி 11 மணிக்கெல்லாம் நடந்து முடிந்துவிட்டது. அதைவிடத் துரித நடவடிக்கை என்ன எடுப்பது என்று புரியவில்லை. அப்படி எடுப்பதற்கான வழிகள் இருந்தால் சொல்லும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மேல்மட்ட அதிகாரிகள் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்றால், நிகழ்ச்சி நடைபெறுகிற ஒவ்வோரிடத்திலும்—எந்த இடத்தில் நிகழ்ச்சி நடைபெறக்கூடும் என்று ஜோஸ்யம் தெரிந்தால் அல்லாமல் அந்த இடத்தில் எந்த மேல்மட்ட அதிகாரியும் இருந்துகொண்டே இருக்கமுடியாது. இன்ன போலீசார் இப்படி நடந்துகொண்டார் என்று உடனடியாகப் புகார் கொடுக்கப்பட்டால், இன்றைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதோ அதே நடவடிக்கை அன்றைக்கே நிச்சயமாக எடுக்கப்பட்டிருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விளக்கம் அளிக்கும்போது, 9 மணிக்கு நிகழ்ச்சி நடைபெற்றது, 11 மணிக்கு தீர்ந்துவிட்டது என்று கூறினார்கள். ஆனால், நிகழ்ச்சி 6 மணிக்கு நடைபெற்று, 11-30 மணிக்குத்தான் தீர்க்கப்பட்டது. ஆக, ஐந்தரை மணி நேரம் காலையிலிருந்து பஸ்கள் நிறுத்தப்பட்டு, 11-30 மணிக்குத்தான் திரும்பவும் எடுக்கப்பட்டன. ஐந்தரை மணி நேரம் பஸ்கள் ஓடாமலிருந்ததால் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமலிருக்க அரசு கவனம் செலுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிகழ்ச்சி நடந்த இரண்டு மணி நேரத்துக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னேன். இனிமேல் இப்படி நடக்கக்கூடாது என்றால், அதற்கு மாண்புமிகு உறுப்பினர்தான் வழி சொல்லவேண்டும். ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது; இரண்டு பேர் தகராறு செய்கின்றார்கள் என்றால் அவர்களில் ஒருவர் உடனே அதற்கான புகாரைத் தந்தால் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். விசாரித்து நடவடிக்கை எடுக்காவிட்டால், "நாளையதினம் இப்படிச் செய்வோம்" என்று அறிவித்துவிட்டு, மறுநாள் பஸ்களை நிறுத்தியிருந்தால் அது முறையாக இருந்திருக்கும். திடீரென்று எல்லா பஸ்களையும் உடனடியாக நிறுத்திவிட்டால், எவ்வளவோ அவசியமான காரியங்களைச் செய்ய வேண்டிய பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள். மருத்துவ மனைக்கு அவசரமாகச் செல்லவேண்டிய நோயாளிகள் பஸ்கள் நிறுத்தப்பட்டதன் காரணமாக அவஸ்தைப்பட்டிருப்பார்கள். எப்படி பலர் பலவிதமான அவஸ்தைக்கு உள்ளாகியிருப்பார்கள் என்பதை

பஸ்களிலே வேலை பார்க்கும் அன்பிற்குரிய தொழிலாளர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். முதல் நாள் புகார் கொடுத்து, "நீங்கள் ஒரு நாளுக்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாங்கள் வேலைநிறுத்தம் செய்வோம்" என்று சொன்னால், முன்னறிவிப்பை யாரும் உணர்ந்து கொள்ள முடியும். முன்னறிவிப்பு இல்லாமல் முன்பு சில நேரங்களில் திடீர் திடீரென்று பஸ்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அப்படித் திடீரென்று பஸ்களை நிறுத்திவிடுவதோ வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதோ நல்லதல்ல என்பதற்காகச் சொல்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறாமல் அவர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும். எந்தப் புகார் கொடுத்தாலும் அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : பஸ் தொழிலாளர்களும் அரசாங்க ஊழியர்கள்தான். போலீஸ்காரர்களும் அரசாங்க ஊழியர்கள் தான். இரண்டு வகையான அரசாங்க ஊழியர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு, அதன்மூலமாக நேரடி நடவடிக்கையில் அவர்களே ஈடுபடுவதால் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப் பாதிக்கப்படுவதனால், அதிலே ஈடுபடுகிற தொழிலாளர்களை விட்டு விட்டு, போலீஸ்காரர்கள்மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் அந்த இலாகா ஒழுங்காகச் செயல்படாது. போலீஸ்காரர்கள் ஸ்ட்ரைக் செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துவிடுகிறார்கள். தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், கண்டிப்பாக அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால்தான் அங்கே இப்படிப்பட்ட பிரச்சினை வளராமல் இருக்க முடியும். எனவே, தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த இடத்திலேயே விசாரணை நடைபெற்றது. அந்தக் காவல் துறைப் பணியாளர் அப்பொழுது ட்யூடியில் இருந்ததாகத் தெரியவில்லை. அவர் குறிப்பிட்ட ஓர் இடத்தில் இறங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பஸ்ஸை எந்த இடத்தில் வேண்டுமானாலும் நிறுத்தச்சொல்லி அங்கே இறங்கவேண்டுமென்று சொல்வதே முறையல்ல. பஸ்கள் எந்த இடத்தில் நிற்கவேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தில் நிற்பதுதான் நியாயம். அது விசாரிக்கப்பட்டு எடுத்த முடிவாகும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் காவல் துறை பணியாளருக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ அதேபோன்ற பொறுப்பு மற்ற அரசு ஊழியர்களுக்கும் இருக்கிறது என்பதை இந்த அரசு மறந்துவிடவில்லை.



*Regulation of passengers at bus stops*

* 547 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the police in Madras have launched a drive against bus passengers moving outside the Railings at Bus Stops in Madras City ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, எவ்வளவு பேர் இதில் "ப்ராசிகியூட்" செய்யப்பட்டிருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எவ்வளவு பேர் என்கிற அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. ஆனால், இதிலே பலர் பிராசிகியூட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதன்மூலமாக ஏற்படுகிற ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்காகத்தான் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அச்சிறுப்பாக்கம் அருகே கிராம்பு மூட்டைகள் கைப்பற்றல்.

* 548 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட கிராம்பு மூட்டைகளை 2—10—1971-ல் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியபோது, மதுராந்தகம் வட்டம், அச்சிறுப்பாக்கத்துக்கு அருகே துப்பாக்கிச் சுடல் ஏதாவது நடந்ததா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 2—10—1971 அன்று அல்ல. 1—10—1971 அன்று அதிகாலையில் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அருகாமையில் திண்டிவனத்திலிருந்து ஐயத்திற்கிடமான வகையில் சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த மூன்று மோட்டார் (கார்) வண்டிகளை நிறுத்துமாறு மத்திய ஆயத்துறை இன்ஸ்பெக்டர் அடையாளம் காட்டினார். ஆனால் வண்டிகள் நிற்காமல் தப்பிச்செல்ல முயன்றன. அதைத் தடுக்க அவைகளின் டயர்களை நோக்கி சுங்க இலாகா சப்-இன்ஸ்பெக்டர் ஐந்து முறை சுட்டார். அதன் விளைவாக ஒரு வண்டியின்

[1972 மார்ச் 18

டயர் பழுதுபட்டு நின்றது. மற்ற இரண்டு வண்டிகளில் ஒன்றை துரத்திச் சென்று நிறுத்தினர். மற்றொன்று தப்பிச் சென்றது. வண்டிகளில் இருந்தவர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

சுட்டதினால் எவரும் உயிரிழக்கவோ, காயமுறவோ இல்லை. பொதுச் சொத்துக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

பிடிக்கப்பட்ட இரண்டு வண்டிகளிலும் கள்ளத்தனமாக கடத்தி வரப்பட்டிருந்த 12 இலவங்க மூட்டைகள் கைப்பற்றப்பட்டன.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட இலவங்கம் போன்றவை கள்ளக்கடத்தல் செய்யப்படுவது அடிக்கடி ஏற்படுகிறது. இதை ஒழிக்க கடலோரப் பகுதிகளில் ஒற்றர் படையை அமைக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது முழுவதும் சுங்க இலாகாவைப் பொறுத்த விஷயம். அவர்கள் மிகுந்த கண்காணிப்புடன் இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டான நிகழ்ச்சியாகும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, கள்ளத்தனமாக பாக்கு மூட்டைகள் கிராம்பு மூட்டைகள் ஏற்றிவரக்கூடிய வண்டிகள் பல பிடிபடுகின்றன. இது சம்பந்தமாக அந்த வண்டிகள் யாருடையவை, எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மூன்று மோட்டார் வண்டிகளின் உரிமையாளர்களின் பெயர்கள் (1) எம். எஸ். வி. 1273—திரு. வி. ஏ. பாட்சா, சென்னை-53, (2) எம். எஸ். ஆர். 5266—திரு. பி. ராஜன், சென்னை-17, (3) டி. எம். சி. 1807—திரு. இந்துநூரி லட்சுமணராவ், சென்னை-17, (3) இந்த மூவரும் இந்த வண்டிகளின் உரிமையாளர்கள் என்று தெரிகிறது.

## வழக்குகள் பதிவு.

* 549 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போலீஸ் இலாகாவினர் ஒரு மாதத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வழக்குகள் பதிவு செய்ய வேண்டுமென்ற விதிமுறை நடைமுறையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.



1972 மார்ச் 18]

## Cholera in Srirangam Town

* 550. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the Srirangam Town in Tiruchirappalli District was declared cholera infected in December 1971; and

(b) if so, the steps taken to prevent the epidemic from spreading?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) 1971-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் திருச்சி மாநகராட்சியில் காலரா பரவியிருந்ததால், அது திருவரங்கம் நகராட்சியில் பரவாமலிருக்க தடுப்பு ஊசி குத்துதல், குடிநீரில் பாசிகையிடுதல், சுற்றுப்புற துப்புரவுப் பணிகளை தீவிரமாக்கல் போன்ற நடவடிக்கைகள் திருவரங்கத்தில் மேற்கொள்ளப்பட்டன.

THIRU N. DENNIS : Sir, may I know whether sufficient quantity of preventive medicine for the same is supplied to all hospitals, dispensaries and primary health centres?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எந்த வட்டாரத்தில் காலரா நோய்க்கான அடையாளம் இருக்கிறதோ, அந்த வட்டாரத்தைச் சுற்றி மருந்துகள் தெளிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். அந்த முறையில் திருச்சியில் ஏற்பட்ட காலரா நோய்த் தாக்குதல்களுக்குப் பரிகாரம் காணுகின்ற முறையில் திருவரங்கத்திலும் சேர்த்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

## எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் எக்ஸ்ரே படங்கள்

* 551 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே பிரிவில் ஒரு நாளைக்கு எத்தனை (X-ray) படங்கள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நாள் ஒன்றுக்கு சராசரியாக 124 எக்ஸ்ரே படங்கள் அந்த மருத்துவமனையில் எடுக்கப்படுகின்றன.

[1972 மார்ச் 18

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதுபோல் குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு அதிகமான குழந்தைகள் சிகிச்சை பெறுவதற்கு வருகின்றன. குழந்தைகள் வருகின்ற அளவிற்குத்தகுந்தாற்போல் எக்ஸ்ரே போன்றவை எடுப்பதற்கான பிலிம் போன்றவை பற்றாக்குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, வருகின்ற எல்லாக் குழந்தைகளுக்கும் வைத்தியம் அளிக்கும் வகையில் தேவையான பிலிம் போன்றவைகளை சப்ளை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறுவதற்காக குழந்தைகள் அதிகமான அளவில் வந்தாலும், எக்ஸ்ரே படம் எடுப்பதற்கான வகையில் இருக்கக்கூடிய குழந்தைகள் குறைவாகத்தான் இருக்கும். பல்வேறு விதமான நோய்களுக்கு "டயகனேஸ்" பண்ணுகின்ற நேரத்தில் எக்ஸ்ரே படம் எடுக்கக்கூடிய குழந்தைகள் குறைவாகத்தான் இருக்கும். ஆகவே, அந்த வகையில் அந்த ஆஸ்பத்திரியில் தேவையான பொருகள் நிறைவுடையதாகத்தான் இருக்கிறதென்று நான் கருதுகிறேன்.

### *Hosur Cattle Farm*

* 552 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce woolly type of sheep at Hosur cattle farm in Dharmapuri district; and

(*b*) if so, the variety of sheep proposed to be introduced?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) ஓசூர் கால்நடைப் பண்ணையில் சீமைக் கலப்பினப் பெருக்கத்திற்காக, ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் கிடாய்களை அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பும், ரஷ்ய மெரினோ செம்மறி ஆடுகளை அறிமுகப்படுத்தும் செயற்குறிப்பும் ஆய்வில் உள்ளன.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, அதேமாதிரி "ரெட் டேன்", "ப்ரௌன்", "ஸ்விஸ்" போன்ற மாடுகளை இறக்குமதி செய்து தமிழ்நாட்டில் அதிகமான அளவிற்கு இன விருத்தி செய்ய அரசு முன்வருமா?



1972 மார்ச் 18]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆட்டிலிருந்து அங்கத்தினர் அவர்கள் மாட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆஸ்திரேலியா இனமான கொரிடேல் இனம், ரஷ்ய மெரினோ செம்மறி ஆடு ஆகியவைகளைக் கொண்டு வந்து சேர்ப்பதன் மூலமாக நம்முடைய ஆடுகளின் தரத்தை நூற்றுக்கு 50 பங்கு உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இறைச்சியின் தரம் உயருவதற்கும், கம்பளி அதிகம் கிடைப்பதற்கும் வழி காண முடியும். ஆகவே, இந்த இரண்டு இன கிடாய்களை தமிழ் நாட்டு இன ஆடுகளோடு தொடர்பு படுத்தி நல்ல ரக ஆடுகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know the total number of such sheep supplied to the Hosur Cattle Farm?

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is only in the proposal stage and purchase has not yet been finalised.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த ஆடுகளை வளர்ப்பதற்காக உதவி ஏதாவது தருகிறார்களா? விசேஷ ஆடுகளை வரவழைத்து நமக்குத் தருகின்றார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து எந்தக் கால்நடை நம் நாட்டிற்குத் தேவையென்றாலும், மத்திய அரசின் மூலமாகத்தான் அது நடைபெற வேண்டும். மத்திய அரசிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் கிடாய்கள் 5 கிடைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவற்றை கொடைக்கானலில் உள்ள மன்னவனூரில் உள்ள பண்ணைக்கு வழங்குவதாக ஆலோசனை இருக்கிறது. அதேபோல் ஓசூர் பண்ணைக்கு ரஷ்ய இனமான மெரினோ பெற்றுத் தர வேண்டுமென்ற வேண்டுகோள் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது ஓசூர் கால்நடைப் பண்ணையில் உயர்ந்த ரக ஆடுகள் என்னென்ன இருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, உயர்ந்த ரக கொரிடேல் கிடாய்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருப்பதாகத்

தெரிகிறது. தமிழ்நாட்டிற்கு எத்தனை ஒதுக்கப்பட்டிருக்கிறது? அப்படி ஒதுக்கவில்லையென்முல், தமிழ்நாட்டிற்கு அந்த இன ஆடுகளை ஒதுக்க வேண்டுமென மத்திய அரசை நம் அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் ஆஸ்திரேலிய இனமான கொரிடேல் 5 கிடாய்களும், ரஷ்ய இனமான மெரினே பல ஆடுகளும் தேவை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மத்திய அரசு எவ்வளவு ஒதுக்கும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இம்மாதிரியான கால்நடைப் பண்ணைகள் ஆரம்பித்தவை சரியாக நடைபெறவில்லையென்று சொல்லப்படுகிறது. ஒசூர் பண்ணையாவது நல்ல முறையில் நடைபெறுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆடு இன விருத்தியைப் பொறுத்தவரையில் அது சாத்தூர் பண்ணையாக இருந்தாலும், சின்னசேலம் பண்ணையாக இருந்தாலும் இப்போது செம்மையாக இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இன ஆடுகள் பெருக்கம் எல்லாம் இந்தப் பண்ணைகளில் மட்டும் நடைபெறுவதால் அதிக முன்னேற்றத்தைக் கண்டுவிட முடியாது. ஆங்காங்குள்ள பஞ்சாயத்துக்களின் மூலமாகவோ, தனியார் மூலமாகவோதான் அம்மாதிரியான ஆடுகளை வாங்கி இனவிருத்தி செய்வதன் மூலமாகச் சிறந்த பலன் விளையும். ஆடு வளர்ச்சியிலே இந்தத் துறையினர் சிறந்த தனிக் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள்.

*Mechanised fishing boats*

* 553 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that the Government have sanctioned a scheme for grant of financial assistance to private people for purchase and operation of mechanised fishing boats; and

(b) if so, the details thereof and the total amount sanctioned to the scheme?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) மீன்பிடி படகுகள் வாங்கவும், இயக்கவும், தனியார் தொழில் முனைவர்களுக்கு படகின் விலையில் 20 சதவீதம் வட்டியில்லாக் கடனுக அரசு நிதியுதவிக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



தொழில் முனைவரே மூலதனத்தில் 20 சதவீதத்தைச் செலுத்த வேண்டும்; மீதமுள்ள 60 சதவீத மூலதனத்தை வேளாண்மை மறுநிதிக் கழகம், வேளாண்மை நிதிக் கழகம், வணிக வங்கிகள் போன்ற நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வட்டியில்லாக் கடனை அரசு வழங்கும். 30 அடி நீளமுள்ள 40 படகுகள், 32 அடி நீளமுள்ள 10 படகுகள் ஆகியவற்றைத் தொழில் முனைவர்கள் வாங்குவதற்காக 1971–72ல் ரு. 5,60,000 வட்டியில்லாக் கடனுக அளிக்கப்பட (படகு விலையில் 20 சதவீதம்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளியணைப் பகுதியில் பாய் நெசவு

* 554 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், வெள்ளியணைப் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் பாய் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் அங்கு கூட்டுறவு முறையில் பாய்த் தொழிலை அபிவிருத்தி செய்யத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் இதுபோன்ற சிறு தொழில்களை கிராமப் பகுதிகளில் ஊக்குவித்தால் சிறப்பாக இருக்கும் என்பதால், இனிமேலாவது இதுகுறித்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் சிறுதொழில்களுக்கென்ற பல திட்டங்கள் அரிசன நலத் துறையின் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாய் நெய்கின்ற தொழிலுக்கு திருச்சியிலே மத்திய நிலையம் ஒன்று இருக்கிறது. அதன் தொடர்பாக தஞ்சாவூர், தர்மபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் பாய் நெய்யும் தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவேதான் கரூரில் தனியாக தொழிற்சாலையை ஏற்படுத்தவில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிற தனித் தொகுதிகளிலே அரிசன நலத்

துறையின் மூலமாக தொழில்கள் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகள் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தனித் தொகுதிகள் என்று இல்லை. பெருவாரியான தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கெங்கு மிக மோசமான நிலையில் வாழ்கிறார்களோ அங்கேதான் தொடங்கப்படுகின்றன. தனித் தொகுதிகள் என்ற அடிப்படையில் இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன்: இப்பொழுது கிராமத்தில் கைத்தொழில் சம்மந்தமாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உபகாரமாக நடைபெறுகிற மாதர் நல இலாகா மூலமாக கூடைமுடைதல் இன்னும் வேறு பல தொழில்கள் நடைபெறுகின்றன. அவற்றிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதில் முதலிடம் தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனித்திட்டங்கள் இருக்கின்றன. அவற்றிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதலிடம் தரப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாதவர்களுக்கும் ஒரு சில சதவீதம் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 50 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டோர் நல இலாகா மூலமாகவும், மகளிர் நலத் திட்டம் மூலமாகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதில் முதலிடம் கொடுக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், மக்கள் பின்னுகின்ற பாய்கள் கைப்பொருட்கள் சந்தையிலே விற்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கூடுமானவரையில் வந்தவாசி போன்ற பகுதிகளில் பின்னுகின்ற பாய்க்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது. மற்ற இடங்களில் பின்னப்படுகின்ற பாய்களை நலத்துறையின் மூலமாக உள்ள பள்ளிகளுக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்திரவிடப்பட்டு இருக்கிறது; அதிலே பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நல்ல பாய்கள், சீர்காழி போன்ற இடங்களிலே உற்பத்தி செய்யப்படுகிற பாய்கள் அழகான பாய்களாக இருக்கின்றன. ஆங்காங்குள்ள கடைகளில் அவைகள் நல்ல விலையாகின்றன.



பாலமலை ஆதிவாசிகள்

*555 வினா—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுகா, பாலமலை ஆதிவாசிகளின் கிராம அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக மேட்டூர் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து 1970-ஆம் ஆண்டில் ஆலோசனைகள் அரசிற்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவைகள் பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டிருக்கிறதா?

(உ) ஆம் எனில், அவைகளின் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த பாலமலைப்பகுதி என்பது கிட்டத்தட்ட 4 ஆயிரம் அடி உயரத்திலே இருக்கிற பகுதியாகும். அங்கே முழுக்க முழுக்க ஆதிவாசிகள்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே போய்வர போக்குவரத்துக்கு ரோடு கிடையாது, ஆஸ்பத்திரி வசதி கிடையாது, மின்சார வசதி கிடையாது. இது போன்ற விவரங்களைப் பற்றியெல்லாம் சப்-கலெக்டரும், நானும் அங்கு சென்று பார்த்து அதற்கான விவர அறிக்கைகளை அனுப்பியிருக்கிறோமே, அவைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டதா? எந்த எந்த விஷயங்கள்பற்றி முடிவு எடுக்கப்பட்டு இருக்கின்றன, எந்த எந்த விஷயங்கள்பற்றி முடிவு எடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதைக் கூறமுடியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவர்கள் கோரிக்கைகள் நலத்துறையிலே மாத்திரம் செய்யக்கூடியவை அல்ல. சில விஷயங்கள் விவசாய இலாகா செய்யவேண்டியவையாக இருக்கின்றன. சில கோரிக்கைகள் சுற்றுலா வாரியம் கவனிக்கக்கூடியவையாக இருக்கின்றன. சில மருத்துவ, குடும்ப நலத் துறையால் கவனிக்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் இனம் இனமாகப் பிரித்து அந்த அந்த இலாகாவுக்கு அனுப்பியிருக்கிறோம். எஞ்சிய காரியங்களை நலத்துறை மூலமாகச் செய்வதற்கு நலத் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

[1972 மார்ச் 18

## சாத்தூர் வட்டத்திலுள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகள்

* 556 வினா—திரு. எஸ். அழகுத் தேவர் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் தீப்பெட்டி பண்ட்ரோல் முறை எடுக்கப்பட்டதனால், சாத்தூர் வட்டத்தில் உள்ள சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு சுமார் 800 சிறிய தீப்பெட்டி தொழிற்சாலைகள் மூடும் தருவாயில் உள்ளது பற்றி அரசுக்கு தகவல் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தீப்பெட்டி பண்ட்ரோல் முறையை மறுபடியும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என மத்திய அரசை இருமுறை இந்த அரசு கேட்டுக்கொண்டது. ஆனால் மத்திய அரசு உள் நாட்டுப் பொருள் வரி கொடாமல் ஏமாற்றுவதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், பண்ட்ரோல் முறையைத் திரும்ப அமுல்படுத்த இயலாதெனவும் தெரிவித்துவிட்டது. இவ்வரசு இப்பொழுது மூன்றாவது தடவையாக மத்திய அரசை இவ்விஷயமாய் அணுகியுள்ளது.

திரு. எஸ். அழகுத் தேவர் : தலைவர் அவர்களே, இந்த பண்ட்ரோல் முறையை எடுத்துவிட்டதாலே அவர்கள் ரொம்ப கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இந்த பண்ட்ரோல் முறையை மீண்டும் கொண்டுவந்தால்தான் தீப்பெட்டித்தொழில் நல்ல முறையில் இயங்கும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பண்ட்ரோல் முறை இருக்குமானால் வரி ஏய்ப்புச் செய்யமுடியாது என்று சிறிய உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சொல்கிறார்கள். பண்ட்ரோல் முறை இருக்கின்ற காரணத்தினால் வரி ஏய்ப்பு நடக்கிறது. இது இல்லாமலே வரி ஏய்ப்பைத் தடுக்கமுடியும் என்பது மத்திய அரசாங்கத்தினுடைய வாதம் ஆகும். பண்ட்ரோல் முறை வரவேண்டுமென்று சிறிய அளவில் தொழில் செய்கிறவர்கள் முதல் பெரிய பணக்காரர்கள் வரை வலியுறுத்திவருகிறார்கள். ஆகவே இதுபற்றி மத்திய அரசுதான் முடிவு எடுக்கவேண்டும்.



1972 மார்ச் 18]

திரு. கா. காளிமுத்து : இந்த முறையை எடுப்பதன் மூலமாக வரி ஏய்ப்புச் செய்கிறவர்கள்தான் லாபம் பெறமுடியும். ஆனால் வரி ஏய்ப்புச் செய்யாமல் ஒழுங்காக தீப்பெட்டித் தொழில் நடத்துகின்ற உற்பத்தியாளர்களும் கூட்டுறவுச் சேவை சங்கங்களும் ஊதிய இழப்புக்கு ஆளாகின்றன. எனவே மீண்டும் அதைக் கொண்டுவர வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படித்தான் நாம் இரண்டு முறைகள் வற்புறுத்தியிருக்கிறோம். இப்பொழுது மூன்றாவது முறையாக வற்புறுத்த முனைந்து இருக்கிறோம். ஆனால் யார் வரியை ஏய்க்கிறார்கள் என்பது சந்தேகத்திற்குரிய செய்தியாகும். சிறு தொழில் செய்கிறவர்கள், கூட்டுறவுத் துறைகள் இந்த முறை வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். பெரிய பணக்காரர்களாக இருக்கிற உற்பத்தியாளர்களில் ஒருவர் போராட்டத்திற்குத் தலைமைதாங்கி நாங்கள் எல்லோருமே வரி ஏய்ப்புச் செய்யமாட்டோம் என்று சொல்லியும் ஏன் மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது என்பது தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்த முறையால் சாத்தூர், சிவகாசியில் ஓரளவுக்கு நல்லமுறையில் நடந்து கொண்டு வருகிறது. இதிலே பாதிக்கப்பட்டிருப்பதாக தங்களுடைய அதிருப்தியைக் காண்பிப்பதற்காக ஒரு அடையாள வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். எனவே அரசு இதைப் பரிசீலனைசெய்து யாருக்கு வரிவிலக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்களுக்கு வரி விலக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வரி விலக்கு என்ற பிரச்னைக்கு இதிலே இடம் இல்லை. அந்த முறையைக் கொண்டுவந்தால் வரி ஏய்ப்பு இருக்காது என்று அவர்கள் சார்பில் கூறப்படுகிறது. ஆனால் அந்த முறையை கொண்டுவந்தால் வரி ஏய்ப்பு நடைபெறும் என்று மத்திய அரசு சொல்லுகிறது. அதைத்தான் மத்திய அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொண்டுவந்தால் வரி ஏய்ப்பு இருக்கும் என்று சொல்வதாகச் சொன்னார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதிலே உண்மை இருக்கிறதா இல்லையா என்று நம்முடைய அரசு ஆய்ந்திருக்கிறதா? அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது என்று நினைக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 18

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத்தான் முன்னரே நான் சொன்னேன். சிறிய தொழிலதிபர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இதிலே சட்டவிரோதமாக நடக்கமுடியாது என்ற காரணத்தினாலே அவர்கள் அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்கிறார்கள். சட்டவிரோதமாகத் தப்புகிறார்கள் என்ற வாதத்தை மத்திய அரசாங்கம் வைக்கிறது. நடைமுறையிலே அப்படிச் செய்ய முடியாது என்று சொல்லி பெரிய பணக்காரர்கள் தொழில் செய்கிறவர்கள்கூட அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது.

திரு. செ. கந்தப்பன் : அந்த வட்டாரத்தைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகித்து மாபெரும் போராட்டம் நடத்தப்போவதாகச் செய்தி வந்ததே? அது நடந்துகொண்டிருக்கிறதா, அதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் போராடப்போகிறோம் என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே சொல்லியிருப்பதாக பத்திரிகையிலே அறிக்கை வந்தது. அது அவர்களுடைய அரசாங்கம். அவர்கள் அவர்களோடு போராடுவதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

## விசைத்தறிகள்

* 557 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலங்கை, பர்மா அகதிகளுக்கு வேலை அளிப்பதற்காக இராமநாதபுரம், கோவை, நெல்லை, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையில் விசைத்தறி ஆலைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த விசைத்தறி ஏற்படுத்தும்போது எந்த எந்த அடிப்படையிலே அகதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை விவரங்களோடு கூற முடியுமா?



1972 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு தனியாகத் திட்டம்போட்டு மத்திய அரசாங்கம் உதவிசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தமாக 94 லட்சம் ரூபாய் அளவிற்குத் திட்டமிடப்பட்டு, சப்சிடி என்ற முறையிலே 20 லட்சம் ரூபாய் கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் [illegible]களைப்பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த விசைத்தறிகள் புகுத்தப்படுவதால் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அந்தக் கைத்தறித் தொழில் இந்த விசைத்தறிகளோடு போட்டிபோட முடியாமல் இருக்கிறது. விசைத்தறிகளுக்கு 4 அணா, 6 அணா குறைவாகக் கொடுக்கப்படுவதால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படுகிறது. ஆகவே, விசைத்தறிகள் 36 இஞ்சுக்கு உட்பட்டவைகளைத்தான் உற்பத்தி செய்யவேண்டுமென்றும் கரை போட்ட துணிகளை உற்பத்தி செய்யக்கூடாது என்ற கோரிக்கை சொல்லப்படுகிறது. அதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சொல்லப்படுகிறது; பாதிக்கப்படுகிறது என்று நாம் தென் மாவட்டங்களில் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் வட மாவட்டங்களில் ஏகக் கிராக்கி இருப்பதாக பல அங்கத்தினர்கள் விசைத்தறிகளைப்பற்றிக் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கருத்தாகும். ஆகவே, நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாத்துக் கொள்ளத்தான் கூட்டுறவுத் துறைக்குக் கொடுப்பது, நெசவு செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது, மாஸ்டர் வீவர்ஸ்க்குக் கொடுப்பதில்லை என்ற முடிவு அரசுக்கு இருக்கிறது.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, பர்மா அகதிகள் நெல்லை மாவட்டத்தில் ஒட்டப்பிடாரத்திற்கு வருகிறார்கள். ஆனால் அவர்களில் சிலருக்கு விவசாயம் செய்வதற்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டும், சிலர் வியாபாரம் செய்ய வருகின்றனர். அது சிறிய கிராமம், வியாபாரம் செய்வதற்கு லாயக்கற்ற இடம். எனவே, வியாபாரம் செய்ய வசதிகளைச் செய்து அவர்களை உடனடியாக வேறு பெரிய நகரங்களுக்கு அனுப்பவேண்டும். இல்லையென்றால் இனிமேலாவது மத்திய சர்க்காரிடம், ஒட்டப்பிடாரத்திற்கு வராமல் இருக்க வேண்டுமென்று மாநில அரசு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நெல்லை மாவட்டத்திற்கு 29 இலட்சம் ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் நல்லமுறைப்புகிறு செயல்பட்டு வருகின்றன. அவைகளை காம்போசிட் மில்களாக மாற்றியமைக்க யோசனை உண்டா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருக்கிறதே.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்காக நெல்லை மாவட்டத்தில் வேம்பார் பகுதியிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சில இடங்களிலும் உப்பளங்கள் அமைப்பது சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் ஒரு திட்டம் இருந்தது. அது இப்பொழுது எந்த நிலையிலுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது விசைத்தறி பற்றிய கேள்வி.

திரு. த. சோனையா : துணைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இலங்கை, பர்மாவிலிருந்து வரும் அகதிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த மாவட்டத்திற்கு இந்த விசைத்தறிகள் எந்த ஊரிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கிட்டத்தட்ட 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இடங்கள் பின்னால் தேர்வு செய்யப்படும்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற ஆலையில் இந்த அகதிகளுக்கு இந்த நல அகதிகள் புனர் வாழ்வு இலாகா ஸ்பின்னிங் பயிற்சி தந்து, அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெறும்பொழுது மாதம் ஒன்றுக்கு 120 ரூபாய் தரப்படுகிறது.



பயிற்சிபெற்ற பிறகு பணியில் அமர்த்த அரசு பொறுப்பேற்று வேலை தருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறைய அகதிகளுக்கு பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு உதவி செய்யும் வகையில் விசைத்தறி ஆலைகள், குறிப்பாக வடார்க்காடு மாவட்டத்தில் அமைக்க இருப்பதாக அறிகிறேன். அது எந்தப் பகுதியில் என்று அறியலாமா? அதோடு, பொதுவாக கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் போளூர், வடபாதிமங்கலம், மாம்பட்டு போன்ற இடங்களில் ஆரம்பிக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இடங்கள் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது இந்த அகதிகளுக்காக 94 இலட்சம் ரூபாய் செலவிடப்பட இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இதிலே எவ்வளவு பவர் லூம்ஸ் அடங்கும் என்று அறிவிப்பார்களா? அதே நேரத்தில் வட மாநிலங்களில் நிறைய இருக்கிறது, தென் மாநிலங்களில் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, யார் வேண்டுமானாலும் இப்படிப்பட்ட பவர் லூம்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டால் அனுமதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் 750 பவர்லூம்ஸ், 95 இலட்சம் ரூபாய்க்கு. மாஸ்டர் வீவர்ஸ் தவிர வேறு எல்லோருக்கும் கொடுக்கலாம்.

### *Salt manufacturers in Tuticorin*

* 558. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have given some assurance to Salt Manufacturers of Tuticorin about 28th October, 1971; and

(*b*) if so, the details thereof?

[1972 மார்ச் 18

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) 27—10—1971 ஆம் தேதி அன்று அரசு வெளியிட்ட அரசுக் குறிப்பொன்றின் நகல் * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, உப்பு உற்பத்தியை அரசு ஏற்று நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது உப்பு உற்பத்தி பாது காக்கப்படுவதற்கு என்ன அஷ்யூரென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றிய கேள்வி.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, உப்பு எடுக்கும் தொழி லாளர்களுக்கு ஏதாவது குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் இருக்கிறதா? அல்லது முதலாளிகள் கொடுப்பதுதானா? இனி மேலாவது குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவரப் படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உப்பு உற்பத்தி தொழில் இலாகா. தொழிலாளர்கள் மினிமம் வேஜஸ் தொழிலாளர் நல இலாகா.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், தூத்துக்குடியில் ஆரம்பிக் கப்படும் பெரிய தொழிற்சாலையினால் உப்பு உற்பத்தித் தொழி லாளர்கள் பாதிக்கப்படுவார்களா? எந்த அளவில் பாதிக்கப்படு வார்கள்? அவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துறைமுகத்திற்குப் பக்கத்தில் உள்ள நிலங்கள்தான் இந்தப் பிரச்னைக்கு உரியவையாக இருக்கின்றன. தொழிற்சாலை துறைமுகத்திற்குப் பக்கத்தில் உருவானால் வெளிநாடு களுக்கு அனுப்ப பயனுள்ள முறையில் அமையும் என்ற அடிப்படை யில் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த நிலங்களை எடுக்க வேண்டுமென்று அரசால் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. உடனடி யாக அதை எடுப்பதால் உப்பு உற்பத்திக்குப் பாதகம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற முறையில், மாற்று இடம் பார்க்க வேண்டும். இந்தக் குறிப்பிட்ட இடத்திலே வேறு தொழில்களுக்கு அவசியம் வந்தா லொழிய இந்த உப்பு உற்பத்தியைத் தடுக்கக்கூடாது என்ற முறையில் நம்முடைய அரசாங்கம் யோசனை செய்து வருகிறது.

---

* 141 -ஆம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1972 மார்ச் 18]

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஏற்கனவே, இந்தத் தொழி லாளர்கள் இரண்டு பகுதிகளாக, லைசென்ஸ் உள்ளவர்கள், லைசென்ஸ் இல்லாதவர்கள் என்ற முறையில் பாகுபாடு ஏற்பட்டு மத்திய அர சாங்கத்திற்கு மனுச் செய்ததன்மேல் ஏற்றுமதி வசதியெல்லாம் கொடுக்கப்பட்டது. அது தொடர்ந்து இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் சில விதி முறைகளை வைத்திருக்கிறது. அதிலே பாதகம் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, 4,000 ஏக்கர்கள் கையகப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது. இதனால் பாதிக் கப்படுபவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் என்னென்ன வழிவகை செய்திருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கென்று ஒரு நிபுணர் அமைக்கப்பட்டு, அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் அரசாங் கத்திலே. நெல்லை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை ஓரங்களில் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் புதிதாக உப்பளத்திற்குப் பயன்படுத்த முடியும் என்று கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப் படையில் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க வாய்ப்பு இருக்கும். ஆனால் அவர்கள் கூறுவது அந்த இடத்திலே பல ஆண்டுகளாகத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் உடனடியாக வெளியேற்றினால் பாதகம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். அந்த உறுதிமொழியைத் தான் கொடுத்திருக்கிறது, உடனடியாக வெளியேற்ற மாட்டோம், இன்றியமையாத வகையில், அதே இடத்தில் துறைமுகம் ஏற்பட்டா லொழிய வெளியேற்ற மாட்டோம் என்ற உறுதியைத் தந்திருக் கிறது.

### Dams

* 559. Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal pending with the Government to restore breached anicut at South Pennar near Thorapally Agraharam in Hosur Taluk of Dharmapuri district; and

(b) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :

(அ) ஆம்.

(இ) இத்திட்டம், சேலம் புலனுய்வுக் கோட்டச் செயற் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it is a small anicut, but is a very useful one. It breached 10 years back and since then people could not raise any wet crops. Investigation for the renovation work has since been completed, I understand. May I know from the Hon. Minister whether he would see that orders are issued for the repair of that dam?

THE HON THIRU S. J. SADIQ PASHA : Sir, the scheme for the work has been included in the Master Plan for work in Drought-affected areas for Dharmapuri district, and it has been sent to the Government of India for approval. The work will be taken up as soon as administrative sanction is received from the Government of India.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, May I know from the Hon. Minister when the scheme was submitted to the Government of India and when a reply is expected?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The reply is expected within a few months.

*560 வினா.—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியைச் சார்ந்த தோலம்பாளையம் பகுதியில் கட்டவிருந்த பெரும்பள்ள அணைத்திட்டம் தற்போது எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எவ்வளவு பாசன வசதி பெறக்கூடும் என்பது பற்றி வாரியம் எழுப்பிய சில ஐயப் பாடுகள் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. மே. சி. தூயமணி : மேட்டுப்பாளையம் தொகுதியைச் சார்ந்த தோலம்பாளையம் பெரும்பள்ள அணைத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பல ஆண்டுகாலமாக அந்தப் பகுதி



வாழ் மக்களால் சொல்லப்பட்டும் இதுகாறும் அது நிறைவேற்றப் படவில்லை. அதன் மீது உடனடி நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. உப்பார் ஓடைத்திட்டம் மதிப்பீடு ரூ. 5.64 இலட்சம். பெரியபள்ளத்திட்டம் ரூ. 7.55 இலட்சம். சிக்கன மற்றவையாயிருந்தும் பின்தங்கின வட்டாரத்திலிருப்பதால் தனிவகையாக எடுத்துக்கொள்ளும்படி மேற்படி கூறிய எண்ணில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

வட்டமலைக்கரை ஓடையில் நீர்த் தேக்கம்.

*561 வினா.—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி நாகமநாயக்கன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த சடையபாளையத்துக்கு பக்கத்தில், வட்டமலைக்கரை என்ற ஓடையில் நீர்த் தேக்கம் கட்டி பாசன வசதி செய்து தர அரசு ஏதேனும் திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஆம். இத்திட்டம் நீர்ப்பாசன தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு பழனிசாமி : இத்திட்டம் கடந்த நான்கு ஆண்டு காலமாக ஆய்வு செய்யப்பட்டு, அது தலைமைப் பொறியாளரிடம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் வறண்ட பகுதியான வெள்ளக்கோவில் வட்டாரத்தில் சுமார் மூவாயிரம் ஏக்கர் அளவிற்கு பாசனவசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் 3,000 ஏக்கர் பாசனவசதி கிடைக்கும். உத்தமபாளையம், இலக்கமநாய்க்கன்பட்டி, வெள்ளக்கோவில் ஆகிய கிராமங்களில் உள்ள நிலங்கள் சாகுபடி வசதி பெறும். இதன் மதிப்பீடு எழுபது லட்சம் ரூபாய். 25 லட்சம் என்றாலே மத்திய அரசின் அனுமதி பெறவேண்டியிருக்கிறது.

[1972 மார்ச் 18

## பாலங்கள்

*562 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், கும்முடிப்பூண்டி—மாதர் பாக்கம் நெடுஞ்சாலையில், ஈகுவார்பாளையம் அருகே ஓடப்பேரிக் கால்வாயின் மேல் சிறு பாலம் கட்ட செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஆம்.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டத்தையும் அமைச்சர் அவர்கள் நேரில் வெயிலில் வந்து பார்த்தார்கள். பஸ் போக்குவரத்து அதிகமாகவுள்ள இந்தப் பாதையில் ஒரு சிறிய பாலம் கட்டப்படாத காரணத்தினால் மழைக்காலங்களில் இரு பக்கங்களிலும் பஸ்கள் நின்றுவிடுகின்றன. ஆகவே இந்த ஆண்டாவது அதை எப்படியும் முடிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்ட மதிப்பீடு ரூ. 9 லட்சம். கடந்த ஆண்டு முயற்சி செய்தோம். இந்த ஆண்டு முயற்சி செய்து எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

*563 வினா.—திரு. எஸ். வடிவேல் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தாலூகாவில் முக்கூட்டு (பனங்காட்டாங்குடி) பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1972 மார்ச் 18]

திரு. எஸ். வடிவேல் : சீர்காழி தாலூகாவில் பனங்காட்டாங்குடி பாலத்தை அகலப்படுத்துகிற திட்டம் முதல் அமைச்சர் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது போடப்பட்ட திட்டம். அது இதுவரை நிறைவேற்றப்படாமல் பஸ் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. மக்களும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதை துரிதமாக நிறைவேற்றி வைப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் சொல்கிற இந்தப் பாலத்திற்கு மிக அருகாமையில் 3½ இலட்சம் ரூபாய் செலவில் புதுமனியாற்றின் குறுக்கே பனங்காட்டான்குடியில் ஒரு பாலம் அமைக்க வேலைகள் துவங்கப்பட்டு முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது. அந்தப் பால வேலை முடிந்தால் இந்தப் பாலத்தை அகலப்படுத்த வேண்டிய நிலை ஏற்படாது என்று நினைக்கிறேன். இருந்தாலும் இதைப் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* 564 வினா.—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்—சிலுவத்தூர் சாலையில் ராஜக்காபட்டி அருகே சந்தானவர்த்தினி ஆற்றின் மீது பாலம் ஒன்று அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) திண்டுக்கல்—சிலுவத்தூர் சாலையில் (அரசு "இதர மாவட்ட" சாலை) 11/2 கிலோ மீட்டரில் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே ரூ. 10 இலட்சம் செலவில் பாலம் ஒன்று கட்டும் வேலை நான்காவது ஐந்தாண்டு வரைவு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## வேப்பந்தட்டைக்கு புதிய ஏரி

* 565 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் வட்டம், வேப்பந்தட்டையில் புதிதாக ஏரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பெரம்பலூர் வட்டம் வேப்பந்தட்டையில் நீண்டநெடுங்காலமாக ஏரி ஆகிற அளவிற்கு நல்ல பள்ளமான பகுதி இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இனி மேலாவது இத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்களின் கேள்விக்குப் பிறகு இத்திட்டத்தைப் பரிசீலிக்கும்படி அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கூட்டுறவு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்பேரில் விஞ எண். 566 ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது.

*Rural Housing Schemes at Hosur*

* 567. Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether it is a fact that Rural Housing Schemes have been started in Hosur and Denkanikota taluks of Dharmapuri district ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) & (இ) கோட்டப் பொறியாளரின் (கிராம வீட்டு வசதிப் பகுதி) கீழ், செயல்படும் கிராம வீட்டு வசதித் திட்டத்தை ஒசூர் வட்டத்தில் பொம்மந்தபள்ளி, சென்னத்தூர், கிருஷ்ணபுரம், உத்தனபள்ளி ஆகிய கிராமங்களிலும் டெங்கனிகோட்டா வட்டத்தில் பேலாளம், சாலிவரத்தைச் சேர்ந்த புதட்டிக்கோட்டை, காக்காதேசம், போடிச்சிப்பிள்ளி ஆகிய கிராமங்களிலும் நிறைவேற்ற தனிச் சிறப்பு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த கிராம வீட்டு வசதித் திட்டம் மேலே குறிப்பிட்ட கிராமங்களில் நாளடைவில் நிறைவேற்றப்படும்.





வீட்டு வசதி வாரியம் அடைந்துள்ள கடன்கள்

*568 விஞ.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயுள் இன்சூரன்ஸ் கழகம் 1969–70, 1970–71 ஆகிய ஆண்டுகளில் வீட்டு வசதி வாரியத்துக்கு வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(இ) இதன் அளவை அதிகரிக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு 1969–70, 1970–71 ஆண்டுகளில் நேரிடையாகக் கடன் தொகை எதுவும் வழங்கவில்லை.

(இ & உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் வீட்டு வசதி வாரியத்திற்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தினிடமிருந்து கடன் வழங்கவில்லை என்று கூறுகிறார்கள். அப்படி வழங்காமல் இருந்தாலும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் மூலம் கடன் பெற்று வீட்டு வசதியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கேள்வி நீங்கள் நேரடியாகப் பெறுகிறீர்களா என்பது. நேரடியாக அவர்கள் வழங்குவது இல்லை என்று சொன்னேன். ஆனால் மத்திய அரசு தமிழ்நாட்டு வீட்டு வசதி வாரியம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நேர்முகமாகப் பெற்றுக்கொள்ள 100 லட்சம் ரூபாய், அதாவது ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. நாம் 888 இலட்சம் ரூபாய்க்கு நிதி உதவி கோரியிருக்கிறோம். அதில்கூட 150 இலட்சம் ரூபாய் தருவதாக எல்.ஐ.சி. வாக்களித்திருக்கிறது.

அரசுப் பேருந்துகளில் புகைப் போக்கிகள்.

* 569 விஞ—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துத் துறையில் உள்ள பேருந்துகளில் புகைப் போக்கிகளை மேல்நோக்கி வைக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

[1972 மார்ச் 18

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிலுள்ள பேருந்துகள் அனைத்திலும் புகைப்போக்கிகளை மேல் நோக்கி வைக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. ஏ. எம். இராஜா : அனைத்துப் பேருந்துகளிலும் புகைப் போக்கிகளை மேலே வைக்கிற செயற்குறிப்பு எதுவும் இல்லை என்று குறிப்பிட்டார்கள். சென்னை நகரில் ஓடுகிற பேருந்துகளுக்காவது புகைபோக்கிகளை மேலே வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சென்னை நகரில் உள்ள பேருந்துகளில் ஏற்கனவே பெரும்பாலான வண்டிகளில் இந்தப் புகை போக்கிகள் மேலே நோக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் புகை தவறி வந்துவிடுகிறது. ஆட்டமைஸர்ஸ் (Atomisers) ஃப்யூவல் பம்ப் (Fuel pump) ஆகியவற்றை பழுதுபார்த்து செப்பனிட்டு முறையாகப் பேணுவதன் மூலம் இதைத் தவிர்க்க முடியும் என்று அரசு கருதுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது கூட சென்னை நகரில் ஓடுகிற எல்லாப் பஸ்களும் புகையைக் கக்கிக்கொண்டே போகின்றன. அதனுல் அட்மாஸ்பியர் பொல்யூட் ஆகிறது என்று சொல்கிறுர்கள். எனவே இப்படி புகை அரசாங்கப் பஸ்களில் வராமல் இருப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புகை வராமல் பஸ்களை ஓட்டுவது சாத்தியமானதல்ல. புகையில் பாய்ஸனஸ் காஸ் (Poisonous gas) என்று சொல்கிற அந்த எரிபொருள் அதிகமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்படுகின்றன. புகை கக்காமல் பஸ்களை ஓட்டுவது என்றுல் மின்சார பஸ்களைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும்.

திரு. என். கணபதி : சாதாரணமாக நம் அரசுப் பேருந்துகளில் புகைப் போக்கிகள் வழியாக புகை போகாமல் என்ஜின் வழியாக உள்ளே இருக்கிற பாஸஞ்சர்களுக்கு புகை வந்து சேருகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



1972 மார்ச் 18]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புகை எங்கும் புகும் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister, in his reply, has stated that it is difficult to have buses without emitting smoke at all but will it not be possible for the Government to see that at least they emit the minimum amount of smoke. Smoke gives an indication of the condition of the engine and if there is more smoke, that means the engine is bad and ultimately the Transport Department is going to lose by having that kind of engine. So, will the Government take into consideration the suggestions of hon. Members and at least find out why they emit so much of smoke and whether it is not possible to reduce it to the normal quantity by properly toning up the engine?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I entirely agree with the suggestion of the hon. Member that only minimum smoke should be emitted because it involves extra fuel consumption and emits poisonous gas in the atmosphere. That is why a Committee has been constituted under Professor B. S. Murthy who is going into the various aspects of the problem. He has already submitted interim recommendations, based on which we can minimise emission of smoke to a considerable extent by repairing and reconditioning atomisers and fuel pumps and also testing the engine for their correct load. Already the Department is seized of the problem and various measures have already been taken in this regard.

திரு. நா. வீராசாமி : சிலருக்கு அரசாங்க பஸ்களில் மட்டும் தான் புகை போவது கண்ணுக்குத் தெரிகிறது. தனியார் லாரிகளில் மிக அதிகமான புகை கக்கிக் கொண்டு ஓடிக் கொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அவர்கள் கெரோசினை உபயோகப்படுத்து கிறுர்கள் என்று சொல்லுகிறுர்கள். அதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிப்பட்ட லாரிகளில் புகை போவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்க பஸ்களின் புகை மட்டும் கண்ணுக்குத் தெரிகிறது என்பதற்குக் காரணம் அந்தப் புகை கண்ணுல் பார்க்கும் அளவுக்குத்தான் இருக்கிறது. தனியார் லாரிகள் கண்ணுல் பார்க்கக்கூட முடியாத அளவுக்குப் புகையை

[1972 மார்ச் 18

விடுகின்றன. அதனால் சிலபேருக்கு அது தெரிவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் அதுபற்றியும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Is it not a fact that about 30 cases were registered against vehicles for emitting this sort of gas and may I know whether there was any Government transport vehicle among them? Was any action taken against any Government transport vehicle?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The fact that 100 cases have already been registered and the concerned buses fined and the very fact that no Government transport vehicle has been charged indicates that there is no such gas arising out of Government transport vehicle.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. எம். முத்தையா : பேருந்துகளில் புகை பிடிக்கக்கூடாது என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. அத்துமீறி புகை பிடிப்பவர்களைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : புகை பிடிக்கக்கூடாது என்று போட்டிருக்கிறார்கள். புகை பிடிப்பவர்களைத் தடுக்க அதிலிருக்கும் பயணிகளே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் பக்கத்தில் இருப்பவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமெரிக்க நிபுணர் ஒருவர் உலகத்திலேயே அதிகமாகப் புகைவிடுவது தமிழக அரசு பஸ்கள் தான் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் புகையைக் குறைக்க யோசனை சொல்லி இருக்கிறாரா? அரசாங்க நிபுணர் கமிட்டி அது பற்றி ஆராய்ந்து வருகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே சொன்னதுபோல் இதைப் பற்றி ஒரு கமிட்டி ஆராய்ந்து வருகிறது. அமெரிக்க புரபசர் ஒருவர் எடுத்துச் சொன்ன கருத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது—அமெரிக்காவில் காலிபோர்னியா நகரில் அதிகமாக ஏர் பொல்யூஷன் இருப்பதாகவும் அதைத் தடுக்க தீவிரமாக முயற்சி செய்து வருவதாகவும் அவரே கூறினார்.



1972 மார்ச் 18]

திரு. த. சோனையா : அரசாங்க பஸ்கள் எவ்வளவு ஆண்டுகளாக இந்தப் புகையைக் கக்கிக் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எப்போது அவை ஏற்பட்டனவோ அப்போதிருந்து.

திரு. இ. எஸ். தியாகராசன் : அரசாங்க பஸ்கள் ஏற்கனவே புகை விட்டுக் கொண்டிருந்தனவா அல்லது இப்போதுதான் விடுகின்றனவா? புகை விடுவது அதிகமாகிக் கொண்டிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ரொம்ப நாளாகப் புகை விட்டுக் கொண்டிருக்கிறது. அதைக் குறைக்க நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கேள்வி விரிவாகக் கேட்கப்பட்டிருப்பதால் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருப்பது இது. சென்னை மாநகரத்தில் கடந்த ஐந்தாண்டுக் காலமாக ஆட்டோமோபைல்ஸ் எண்ணிக்கை ஏறத்தாழ மூன்று நான்கு மடங்கு ஆகியிருக்கிறது. அந்தத் தொகை அதிகமாவதன் காரணமாகவும், மக்கள் தொகை நெருக்கம் அதிகமாகி இருக்கும் காரணத்தாலும் அதிகமான புகையால் ஏற்படும் விளைவுகள் தீவிர கவனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மாதிரி புகை கக்கும்போது சில சமயங்களில் விஷப்புகை கக்குகிறது என்ற முறையில் அதைப் பற்றி விசாரிப்பதற்கு ஏற்கனவே பரிசீலனைக் கமிட்டி போட்டிருந்தார்கள். அதனுடைய முடிவு என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தக் குழுவின் அறிக்கை ஏறத்தாழ கடந்த ஒரு வாரத்திற்குள்ளாக சுகாதாரத் துறையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலிக்கப் பட்டு அரசாங்கத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது எஞ்சினில் புகை வருவதால் புகை எங்கும் புகும் என்று சொன்னார்கள். எஞ்சினில் புகை வந்து அந்த வண்டியில் பயணம் செய்கிறவர்களும், வண்டியும் புகைந்துவிடாமல் பார்த்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா?

[1972 மார்ச் 18

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தியணைக்கும் படை ஒன்றை ஒவ்வொரு பஸ்சின் பின்னுலும் இணைக்க வேண்டுமென்று விரும்பமாட்டார்கள் என்று நினைக்கிறேன். எங்காவது ஓரிடத்தில் அப்படி நேர்ந்திருக்கலாம். பொதுவாக, கடந்த ஆண்டில் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளின் காரணமாக இதிலே தீவிர கவனம் செலுத்தப்பட்டு புகையைத் தடுக்க ஃபீயூவல் பம்ப் ஆட்டோமைசர் போன்றவற்றை சீர்திருத்த தனி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

நமக்குத் தரப்படுகின்ற டீசல் ஆயிலிலும் கலப்படம் இருக்கிறதா என்றும் பரிசோதிக்கப்படுகிறது. அதிலே கூடக் கொஞ்சம் கலப்படம் இருக்கிறதோ என்று பெட்ரோல் கம்பெனிகளிடத்தில் விவரங்களைக் கேட்டிருக்கிருேம். இதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : நம்முடைய அரசாங்க பஸ்கள் அவ்வளவும் சேர்ந்துவிடுகின்ற புகையை விட சென்னையின் மையமாக இருக்கும் சென்ட்ரல் ஸ்டேஷன் ரயில்வண்டிப் புகை மிக அதிகமாக இருக்கிறது. எழும்பூர் ரயில் நிலையத்தில் மின்சாரத்தால் சிறிது தூரம் போவதால் புகை வருவதில்லை. அப்படிப்பட்ட எலக்ட்ரிக் டிராக்கை சென்ட்ரல் ஸ்டேஷனிலும் அரக்கோணம் வரையில் உருவாக்க பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது பாராளுமன்றத்தில் கேட்கப்படவேண்டிய கேள்வி.

திரு. வை. பாலசுந்தரம் : வெளியிலே சிலர் அரசியல் நோக்கோடு புகைக்கிருர்கள். அப்படி அரசியல் நோக்கோடு புகைக்கப்படும் புகையைத் தடுக்க நம்முடைய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் சொல்லுவது பஸ்களில் ஏற்படும் புகையைப் பற்றி; சிலபேர் மனத்தில் இருக்கும் புகைச்சலைப் பற்றியல்ல.



1972 மார்ச் 18]

ஸ்கூட்டர் ஓட்டுபவர்களுக்குத் தலைக் கவசங்கள்

* 570 வினு—திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் ஸ்கூட்டர் ஓட்டுபவர்கள், தங்கள் தலைக்குக் கவசம் அணிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : லைசென்ஸ் வழங்கும்போது இதை ஒரு கண்டிஷனுக வைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஸ்கூட்டரில் போகும்போது பயணிகள் ஹெல்மெட்டைப் பயன்படுத்த வேண்டுமென்று அரசு 1967-ம் ஆண்டிலிருந்து முயற்சி செய்தும் கூட பல காரணங்களுக்காக அதைக் கட்டாயப்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு இப்போது இல்லை.

திரு. கோவை செழியன் : ஸ்கூட்டரில் செல்லுகின்றவர்கள் இப்படித் தொப்பி அணிந்து கொள்ளுவது உயிருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இருந்தாலும், அழகாகத் தலைவாரிக் கொண்டு போகிற பெண்களும், ஆண்களும் இந்தத் தொப்பியைப் போட்டுக் கொள்ளுவதால் ஜெர்மன் சோல்ஜரைப் போல் காட்சியளிக்கும் நிலை இருப்பதால் இதை அணிவதில்லை. ஆகவே, தொப்பிகளைக் கிரீடங்களைப் போல் அலங்காரமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கம் கம்பெனிகளுக்கு ஆணையிடுவதன் மூலம் எல்லோரும் அதை அணிய முன்வருவார்கள். அதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக, ஸ்கூட்டரில் செல்லுகின்ற ஆண்கள், பெண்கள் உயிரோடு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஹெல்மெட்டை அணிய வேண்டுமென்று சொல்லுகிருேம். அவை சிறந்த அலங்கார முடிகளாக, கிரீடங்களாக இருக்க வேண்டுமென்று சொன்னுல் குடியாட்சியில் மறுபடியும் முடியாட்சியைக் கொண்டு வந்து விட்டோமோ என்று

[1972 மார்ச் 18

அதைக் கட்டாயம் கொண்டுவரவேண்டுமென்பது மக்களின் நன்மையைக் கருதித்தான், இப்போது உறுப்பினர்கள் சொன்ன கருத்தின் பேரில் அரசாங்கம் மறுபரிசீலனை செய்யும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த போது அந்தக் கவசம் போட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்ன கருத்தை சொன்னபோது, அதை எதிர்த்தவர்கள் எல்லாம் இப்போது ஆதரிக்கிறார்கள் என்பது உண்மை. இதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : காலம் மாறுகிறது, அதற்கேற்ப கோலம் மாறுகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, not only husband and wife but all their children also travel in these scooters. In these days when there are so many accidents and when for the fault of the parents, the children suffer, will the Government be pleased to take necessary steps to avoid these?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது கணவன் மனைவி அவர்களாகவே பார்த்து குழந்தைகளை கூடுமான வரையில் ஏற்றிச் செல்லாத வகையில் இருக்கவேண்டியதொன்றாகும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, ஸ்கூட்டரில் போகிறபோது, ஆண்கள் விட்டுச் சென்றும், பெண்கள் பின்னாலே உட்கார்ந்துகொண்டு போவதுமாக இருப்பது அழகாகவும், பார்ப்பதற்கு முறையாகவும் இருக்கிறது. சில இடங்களில் பெண்கள் ஓட்டிச்செல்பவர்களாகவும், ஆண்கள் பின்னாலே போகிறவர்களாகவும் இருக்கிற நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது அவரவர்களின் வலிவைப் பொறுத்த விஷயம்.

(Thiru K. M. Subramaniam had a bandage in his fore-arm.)

MR. SPEAKER : Mr. K. M. S. You had an accident probably by scooter and so have a bandage in your hand; would you like to put a question?

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, this is not an accident by scooter. Sir, is it not a fact that there are bolder women who are capable of driving scooters and that is why women drive and men follow behind? (Laughter)

(No reply.)

1972 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மின்னணு கணக்கு இயந்திரங்களைப் பயன்படுத்த அரசின் முடிவும், மாநில அரசு ஊழியர், மத்திய அரசு கணக்காயர் அலுவலக ஊழியர் பாதிப்பும் குறித்து

MR. SPEAKER : The hon. Member, Thiru K. T. K. Thangamani and Thiru Manali Kandasamy have given notice of motions under Rule 42 in regard to the following matter of urgent public importance to adjourn the business of the House—

"Government proposal to establish a Data-processing Centre by way of modernisation as per G.O. 1125 dated 30th July 1971 which is an automation process likely to displace large number of State Government employees and the Central Government employees in the Accountant-General's Office working in the Accounts section and the agitation since 14th March 1972 launched by the 200 employees of the Accountant General's Office protesting against such a step".

Dr. Hande and Thiru James have also given notice of similar motions.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், ஏ. ஜி. ஆபீசிலே உண்ணாவிரதம் முதலிய இயக்கத்தை 2000 சிப்பந்திகள் கடந்த 4 தினங்களுக்கு முன்பாக நடத்தினார்கள். அங்கே அவர்கள் ஒரு இயக்கத்தை ஆரம்பித்த உடன் தான் என்ன காரணம் என்று நாங்கள் விசாரிக்கும்போது தெரிந்தது. இப்போது உங்களுக்குத் தெரியும். நம்முடைய மாநில அரசின் கணக்குகள், ஏ.ஜி. ஆபீசில் தான் தயாரிக்கப்படுகின்றன. நமது மாநிலத்தில் மட்டுமல்ல. இந்தியா பூராவும் இருக்கிற மாநிலங்களில் எல்லாம் அந்த முறை இருக்கிறது. அதன் காரணத்தால் ஒரு விதத்தில் செக் அப் செய்து கொள்வதற்கும் பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி போன்ற இடங்களில் முறையாக சில விஷயங்களை எழுப்புவதற்கும் பேருதவியாக இருக்கிறது.

அது மாத்திரமல்லாமல், சர்க்கார் ஊழியர்களின் பிராவிடெண்ட் பண்ட் சம்பந்தமான கணக்குகளும் அவர்கள் தான் வைத்து இருக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 18

கிறார்கள். இன்றைக்கு 60 இலட்சத்திற்கு மேல் இருக்கும் தொழிலாளர்கள் பிராவிடெண்ட் பண்ட் கூட மத்திய அரசு வைத்துக் கொண்டு சென்னையில் ஒரு ரீஜினல் ஆபீஸ் இருப்பது தெரியும். அவர்களில் ஸ்டாப் என்று 2000 பேர் இருந்தால், 500 பேர் ஆடிட் செக்ஷனில் இருப்பார்கள். நமது தமிழக அரசு இம்மாதிரியாக ஆடோமேஷன் ப்ராசஸ் கொண்டு வந்தால், அது தங்களைப் பாதிக்கும் என்ற முறையிலேயும், அதே நேரத்தில் இங்கே தமிழகத்தில் இருக்கிறவர்களுக்கு இன்னும் அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு பதிலாக, இன்று இருக்கும் அவர்களை வேலையை விட்டுப் போகச்சொல்லும்படியான ஆபத்து இருக்கிறது என்றும் அவர்கள் அச்சப்படுகிறார்கள்.

அதற்குச் சாதகமாக சான்றுகள் சில சொல்ல முடியும். நமது தமிழக அரசும், தமிழ் நாட்டில் இருக்கும் எல்லா அரசியல் கட்சிகளும், ஆடோமேஷன் கண்டிப்பாக கூடாது என்று வலியுறுத்தி இருக்கிறார்கள்.

It is not mechanisation process, but this is automation process which is likely to displace employees, particularly in the clerical cadre.

ஆகவே, இது சம்பந்தமாக ஏற்கனவே எல்.ஐ.சி.யில் இதற்காக இயக்கமே நடந்தது. ஆடோமேஷன் என்பது நவீன முறையிலே இன்று அமெரிக்கா, சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் தேவைப்படலாம். அங்கே போதுமான ஆட்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலை பளுவை குறைப்பதற்காகச் செய்கிறார்கள். நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருப்பதால் இதை நன்கு உணருகிறோம். நான் கூட இந்த பட்ஜெட் நிலைமையை பார்க்கிறபோது, டிமாண்ட் 9-ல் ஜெனரல் அட்மினிஸ்டிரேஷன் என்பதிலே டேடா ப்ராசசிங் சென்டர் என்பதற்காக 9 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

Under the heading of New Services P.80. Vol. I.

ஒரு சுற்றறிக்கை விட்டு, அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக இந்த ஆண்டிலேயே பட்ஜெட்டில் 9 இலட்சம் ஒதுக்கியிருப்பதைப் பார்த்தால் பெரும் அபாயம் ஏற்படும் என்பதை உணருகிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் ஆடோமேஷன் அனுமதிக்கமாட்டோம் என்று அண்ணா அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இப்போது இருக்கும் முறையில் எந்த விதமான மாறுதலும் இருக்கக்கூடாது. இப்போது அரசாங்கம் இதற்காக



1972 மார்ச் 18]

9 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதனால் குறிப்பாக இப்போது படித்து, பணிபுரிந்து கொண்டிருப்பவர்களுக்கு பெரிய பாதகம் ஏற்படும் வகையில் இருக்கிற காரணத்தால், இதைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, I have given notice of the following motion under Rule 42 of the Assembly Rules to discuss an urgent matter of public importance, namely, the proposal by the Government to establish a Central Budget Data Processing Centre at Madras under G.O. Ms. No. 1125, Finance, dated 30th July 1971, whereby there is a serious threat of a number of employees losing their jobs and also promotion opportunities and the consequent agitation and token hunger-strike by the employees of the Accountant-General's office.

Sir, as the hon. Member, Thiru Thangamani has pointed out, the whole problem is with regard to the need for automation and whether it is feasible at this stage of our economy to introduce under this Government Order the huge computer system in the departments of the Tamil Nadu Government.

Also the most important question is that quite a number of persons would be thrown out of employment. This is a major policy issue on which the Government should take a decision only after inviting the party leaders and discussing the matter with them.

When the hon. Member, Thiru Vezhavendan was the Minister for Labour, a non-official resolution was moved in this House and the former Member, Thiru Govindarajan and some Members belonging to the Congress Party also had stated that the introduction of automation would bring about large-scale unemployment.

Even in the United States of America there was a great Trade Union Leader, Mr. Walter Reuther, who had stated on several occasions that the introduction of automation would throw out a number of persons from employment. If that is the case in the highly advanced countries like the U.S.A., what would be the fate of the people employed here?

Sir, when that resolution was brought forward in this House, the then Hon. Minister for Labour, Thiru Vezhavendan, assured this House on behalf of the Government, that they would see to

it that wherever it affected the workers it would not be introduced and that they would even persuade the Central Government from introducing it. That was the assurance given on behalf of the Government two years ago.

This Government which promised to look into the matter when the Central Government and the Life Insurance Corporation of India introduced it, are now thinking of introducing it in our State. This should not be done.

(Mr. Speaker sounded the gong).

I will finish my speech in a minute.

Then, the employees in the Accountant General's Office are also worried about it. They are now scared and they have started the token strike. So I request the Hon. Chief Minister to postpone it till we discuss the matter in all its aspects. The Secretariat Staff are also concerned about it because they also will be thrown out of employment or at least their future promotions would be cut. Sir, India is a country with a mass of human beings and there is no necessity for the introduction of automation in our country and in our State. Even in Denmark and Sweden it was introduced because there were lesser number of people there.

(Mr. Speaker again sounded the gong.)

So, I request the Hon. Speaker to adjourn this House to discuss this important matter.

* THIRU J. JAMES: Sir, under Rule 42 of the Assembly Rules, I have given notice of the following urgent matter of public importance :—

"Government's proposal to establish a Data-processing Centre by way of modernisation as per G.O. No. 1125, dated 30th July 1971 which is an automation process likely to displace large number of State Government employees and the Central Government employees in the Accountant-General's Office working in the Accounts section and the agitation since 11th March 1972 launched by the 2,000 employees of the Accountant-General's Office protesting against such a step."

தலைவர் அவர்களே, அமெரிக்கா தேசத்தில் கூட இந்த மெஷினைப் புகுத்துவதற்கு எதிர்ப்பு இருந்ததாக கூறப்பட்டது. அமெரிக்கா தேசத்தில் இருக்கிற நிலைக்கும் நமது இந்தியாவில்



இருக்கிற நிலைக்கும் அதிக வித்தியாசம் உண்டு என்பதனை அந்த அரசாங்கம் நன்கு உணரும். இன்று இருக்கிற நிலையில் ஆடோமேஷன் சிஸ்டம் நமது நாட்டில் வருமேயானால் நிச்சயம் இன்று இருக்கிற ஊழியர்கள் மட்டுமல்ல, வருங்காலத்தில் கூட எண்ணற்ற ஊழியர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கம் நன்கு அறியும் என்பதனை நான் உணர்கிறேன்.

இந்த ஏற்பாட்டைக் கொண்டு வருவதால் இன்னொரு குறை கூட வரும் என்று நான் இந்த அரசாங்கத்திற்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். இப்பொழுது இருக்கிற முறையில் பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டிக்கு அகௌண்டெண்ட்-ஜெனரல் ஆபீசிலிருந்து இந்த அரசாங்க கணக்குகளில் இருக்கிற சில குறைபாடுகளை எடுத்துக் கூறுவதற்கு உள்ள வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால், இந்த ஆடோமேஷன் ஏற்பாடு வருமானால் அரசாங்கத்துக் கணக்குகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதற்கு உள்ள வாய்ப்பு இராது என்று கருதப்படுகிறது. ஆகவே, இந்தப் புது கருத்தை ஒட்டியும் கூட இந்த ஏற்பாடு உகந்ததாக இருக்காது என்பதனை இந்த அரசாங்கத்திற்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அதோடுகூட இந்த மெஷின்கள் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படவில்லை. இது அமெரிக்கா தேசத்தில் ஐ.பி.எம். என்ற ஒரு கம்பெனியால் உற்பத்தி செய்யப்பட்டு, பல இலட்சக்கணக்கான ரூபாய்க்கு வாடகைக்கு விடப்படுகிறது என்று கூறப்படுகிறது. வாடகைக்கு மட்டும் தான் அவர்கள் கொடுக்கிறார்கள். ஆகவே பல இலட்சக்கணக்கான ரூபாய் வாடகை கொடுத்துத் தான் நாம் இந்த மெஷினை வரவழைக்கக்கூடிய நிர்ப்பந்தமான நிலையில் இருக்கும் பொழுது, நமது மாநிலத்தில், தேசத்திலுள்ள பொருளாதாரத்தைக் கூட இந்த ஏற்பாடு அதிகமாக பாதிக்கும் என்ற ஐயப்பாடு கூட இருக்கிறது.

ஆகவே, தேசத்தின் நன்மையைக் கருதி, படித்த இளைஞர்களின் நன்மையைக் கருதி, வருங்காலத்து இளைஞர்களுடைய நிலைமையை உணர்ந்தாவது இந்த ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவருவதை கைவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இது மிகவும் அவசரமானதும், முக்கியமானதுமான விஷயமாக இருப்பதால் இதை விவாதிப்பதற்காக இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கருவூலங்களில் கணக்கு வைக்கும் முறைகளைப்பற்றியும், மாநில வரவு-செலவுத் திட்டத்தை

அமைக்கின்ற முறை பற்றியும் ஆராய்வதற்கு ஹைதராபாத்தில் உள்ள நிர்வாகப் பணியாளர் கல்லூரி (Administrative staff College, குழு ஒன்றை தமிழ்நாடு அரசு நியமித்தது. இக்குழு மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக, மாநில அரசு வரவு-செலவு திட்டத்தை அமைக்கும் முறைகளையும் வரவு-செலவு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரவினங்கள், செலவினங்கள் நடைமுறைகளை கவனித்து வரும் முறைகளையும் புதுமையாக்க முடிவு செய்யப் பட்டது.

இன்றுள்ள நிலையில், அடுத்த ஆண்டிற்கான மாநில வரவு–செலவுத் திட்டம், நடப்பு ஆண்டின் முதல் நான்கு திங்கள் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு திங்களின் விரிவான வரவு-செலவு கணக்குகள் ஓரிரு திங்களுக்குப் பிறகே கிடைக்கின்றன என்பது தான் இதற்குக் காரணம். இதன் விளைவாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கும், ஆண்டின் இறுதி கணக்குகளுக்கும் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

இப்போதுள்ள முறைப்படி ஒவ்வொரு துறையிலும் செலவிடப் படும் தொகைகள், வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்பட்ட ஒதுக் கீடுகளுடன் ஒத்துள்ளனவா என்பதையும் தொடர்ந்து கவனித்துக் கொண்டுவர முடியாமற் போகிறது. இக் குறைகளைத் தவிர்த்து வரவு-செலவுத் திட்டத்தை அமைக்கும் முறையை மேம்படுத்து வதற்காக ஹைதராபாத் நிர்வாகப் பணியாளர் கல்லூரிக் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி, மின்னணுக் கணக்கு இயந்திரங்களை பயன் படுத்த முடிவு எடுக்கப்பட்டது. புதுமைப்படுத்துதல் முயற்சியின் விளைவாக, நம்முடைய வரும் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை நடப்பு ஆண்டின் முதல் 8 அல்லது 9 திங்கள் கணக்குகள் அடிப்படையில் அமைக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மேலும், இம்முறையின் பயனாக ஒவ்வொரு திங்களின் செலவுப் போக்குகளை, ஒவ்வொரு கருவூல, துணைக் கருவூல வாரியாகவும் பணத்தினைச் செலவு செய்யும் அதிகாரிகள் வாரியாகவும் அடுத்த திங்கள் முதல் வாரத்திலேயே பிரித்து அறிய முடியும். வரவு–செலவுத் திட்டத்தின் அடிப்படையில் செலவினங்கள் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளனவா என்று தொடர்ந்து கவனித்து அறிவதோடு, இந்தச் செலவின் போக்குகளையும் கவனித்து வரமுடியும்.

தற்போது திட்டச் செலவின் போக்குகளை அறிவதற்கு ஏறத்தாழ மூன்று திங்கள்கள் ஆகின்றன. புதிய முறைப்படி ஒவ்வொரு திங்களின்



செலவு விவரங்கள் அடுத்த திங்கள் முதல் வாரத்திலேயே கிடைக்கும். இந்த முயற்சியின் விளைவாக மாநில அரசு ஊழியர் களிடையே ஆள்குறைப்பு ஏதும் ஏற்படவில்லை. மாறாக புதிதாக இத்திட்டத்தின் விளைவாக கூடுதல் வேலைவாய்ப்பு வசதிகள் அளிக்கப் படுகின்றன. வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவர மையத்தில் புதிதாக 122 வேலைகளும், அதற்கு உதவ மாவட்ட, வட்டக் கருவூலங்களில் புதிதாக 97 வேலைகளும் உருவாகி உள்ளனவே அல்லாமல் வேலை யிழப்பு ஏற்படவில்லை. இதுவரையில் செய்யப்படாமல் இருந்த வேலையைப் புதிதாக நாம் எடுத்துச் செய்ய முற்பட்டதன் விளைவாகத் தான் இவ்வாறு கூடுதல் வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாநில கணக்காளர் அலுவலகத்திற்கு (அக்கௌண்டன்ட்-ஜெனரல் ஆஃபீஸ்) வரவு-செலவுத் திட்டம் அமைக்கும் கடமை இல்லை. வரவு-செலவுத் திட்டம் அமைப்பதும் திட்டச் செலவினங் களைக் கண்காணிப்பதும் மாநில அரசின் முழுப் பொறுப்பாகும். மாநில அரசு, வரவுசெலவுத் திட்டத்தினை இன்னும் சீரிய முறையில் தயாரிக்க வேண்டிய பொறுப்பை வேறு எந்த வெளி அலுவ லகத்திற்கும் தந்திடமுடியாது.

தற்போதுள்ள வேலை முறைகளைப் புதுமைப்படுத்துகின்ற இப்பணி மாநில அரசின் அதிகார வரம்பிற்கு முற்றிலும் உட்பட்ட ஒரு செய லாகும். தற்போது மாநில கணக்காயர் அலுவலகத்தில் செய்யப் பட்டுவரும் வேலை எதனையும் இம்முயற்சிகள் மூலம் எடுக்கும் எண்ணம் அரசுக்கு இல்லையென்று நான் உறுதியாகக் கூறமுடியும். எனவே தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு தேவை ஏதும் இல்லை என்று தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக மத்திய அரசின் கீழ் இந்த ஏ.ஜி'ஸ் ஆபீஸ் இருந்தா லும் அரசியல் சட்டத்தின்படி, பொதுவாக இந்தியாவில் உள்ள எல்லா மாநில அரசுகளும் இந்த அலுவலகத்தில் தங்கள் கணக்கு களின் ஆடிட்களை வைத்துக்கொள்ளலாம். மாநில அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்கள் எல்லாம் ஒழுங்காக இருக்கின்றதா என்று பார்ப்பதற்கும் ஆடிட்டை வைத்துக்கொள்ளுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்போது, இப்போது திடீரென்று அந்த ஏற் பாட்டில் மாநில அரசு ஒரு மாறுதலைக் கொண்டுவரும்போது அதனால் அந்த ஏ.ஜி.ஸ் ஆபீசில் ஒரு ஆயிரம் பேருக்கு வேறு எங்கே யாவது மாற்றப்பட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் வரக்கூடிய நிலை

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 18

இருக்கிறது. இந்த ஏற்பாட்டினால் ஏதோ ஒரு 122 பேருக்கு புதிதாக வேலை கொடுக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும், ஏ.ஜி'ஸ் ஆபீசில் ஒரு ஆயிரம் பேருக்கு பாதிக்கக்கூடிய நிலை, ஒரு ஆபத்து இருக்கின்றது என்பதை இந்தச் சமயத்தில் சுட்டிக்காண்பிக்க விரும்புகிறேன். இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்ல இருக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : I will be very happy if the Hon. Chief Minister can tell us whether he had gone into the question of number of persons likely to lose promotional opportunities in the A.G.'s Office, because indirectly the Hon. Chief Minister has a responsibility for he is responsible for anything happening in any office in the whole State. Even when Railway employees were previously affected, the Hon. Chief Minister has gone and helped them. So, he has some responsibility for what happens in A.G.'s office also. Has he gone into that aspect, viz., how many will lose promotional opportunities there, what is the impact of this on the A.G.'s office. The Chief Minister, if he can give an assurance in that regard, it will be good. In spite of the fact that the Hon. Chief Minister has explained the position now, I feel that the problem may aggravate afterwards.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாநில அரசைப் பொறுத்த வரையில் இந்தப் புதிய ஏற்பாட்டின் மூலம் எந்தவிதமான வேலைக் குறைப்பிற்கோ, வேலை இழப்பிற்கோ இடம் ஏற்படாது என்று இங்கே நான் உறுதியாகத் தெரிவிக்கின்றேன். அதைப் போலவே ஏ.ஜி ஆஃபீசிலிருந்துதான் நம்முடைய கணக்குகளைப் பார்க்க வேண்டும் என்ற நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொதுவாக, பிராவிடெண்டுஃபண்டு, கணக்குகளையே நமது அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நமது அரசு ஊழியர்களின் சங்கம் ஏற்கனவே ஒரு கோரிக்கையை விடுத்திருக்கின்றார்கள். அது நமது அரசு பரிசீலனையில் இருந்துவருகிறது.

அக்கௌடண்டு-ஜெனரல் அலுவலகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல அது மாநில அரசின் பொறுப்பில் உள்ள அலுவலகம் அல்ல, மத்திய அரசின் பொறுப்பில் உள்ள ஒன்றாகும். எனவே அக்கௌண்டன்ட்-ஜெனரல் அலுவலகத்தில் உள்ளவர்கள் எந்த விதத்திலும் நமது மாநில அரசின் பொறுப்புகளை ஏற்றிருக்கவில்லை,



1972 மார்ச் 18]

வரவு-செலவுத் திட்டத்தினைப் பொறுத்தவரையில். எனவே நமது வரவு-செலவு பொறுப்புகளை நாமே பார்த்துக்கொள்ளுவதில், அங்கே எந்தவிதத்திலும் ஆள்குறைப்பு ஏற்படுவதற்குக் காரணம் இல்லை.

இது அகில இந்திய ரீதியில், மாநில அரசுகளின் கணக்குகள்—ஆடிட்டுகள் இவைபற்றி, பொதுவாக ஆராயப்படவேண்டிய ஒன்று. நமது மாநில அரசினைப் பொறுத்தவரையில், நமது வரவு-செலவுத் திட்டத்தினை விரைவாக முடித்திடவேண்டும், கணக்குகளை ஒழுங்காகவும், முறையாகவும் வைத்திடவேண்டும் என்ற அடிப்படையில், நமது வரவு-செலவுத் திட்டங்களின் விவரங்களை நாமே ஏற்று செயல்படுத்தவேண்டும் என்று இந்தப் புதிய திட்டத்தில் அவற்றைக் கொண்டுவருகின்றோமே தவிர, நிச்சயமாக இதனால் ஆள்குறைப்பு இல்லை என்ற உறுதியைத்தான் நான் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கான அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். எனவே அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) புதுக்கோட்டை இராஜா கலைக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் மீது போலீஸ் தடியடி செய்ததாகவும் அதனால் மாணவர்கள் காயமுற்றதாகவும் கூறப்படுவது குறித்து.

MR. SPEAKER : Thiru R. Ponnappa Nadar has given notice under Rule 42 of the Assembly Rules to adjourn the House to discuss a definite matter of urgent public importance i.e., the Police resorted to lathi-charge on the students of Pudukottai Raja's Arts College and the students of B.T. College. As a result several of the students sustained injuries.

Thiruvalargal K. T. K. Thangamani, M. Surendran and M. Satyamurthi have also given notice of similar motions.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தச் சபையின் விவாதங்களைச் சற்று ஒத்திவைக்க வேண்டும் என்ற இந்த அவசர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தினை முன்மொழிவதற்கான ஒரு சில காரணங்களை இந்த அவையின் முன் எடுத்துவைக்க விரும்புகிறேன்.

“புதுக்கோட்டையிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் உள்ள விடுதியில் தங்கியிருந்த மாணவர்களை போலீஸார் அங்கே அத்துமீறிப் புகுந்து அவர்களைத் தடிகொண்டு தாக்கியிருக்கின்றார்கள்,

[திரு. ஆர். பொன்னப்ப நாடார் [1972 மார்ச் 18

எந்தவிதமான காரணமுமின்றி இப்படிச் செய்திருக்கின்றார்கள்" என்று அவர்கள் எனக்குத் தந்தியனுப்பியிருக்கின்றார்கள். இப்படித் தாக்கப்பட்டதன் காரணமாக 11 பேர் காயமடைந்து, அவர்களில் ஐவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. குறிப்பாக தேர்வுகள் நடைபெற இருக்கும் நேரத்தில் இப்படி மாணவர்கள் தாக்கப்பட்டிருப்பின், அவர்கள் எப்படி முறையாக பயின்று தேர்வுகளை எழுதமுடியும் என்பதை மன்றம் யோசித்துப் பார்க்க முடியும். இப்படி மாணவர்கள் விடுதியில் போலீசார் அத்து மீறி நுழைந்து, அவர்களைத் தாக்குவது என்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழுகின்றன. குறிப்பாக புதுக்கோட்டை இராஜாக் கல்லூரியிலுள்ள விடுதியில் இப்படிச்சென்று தாக்கியிருக்கின்றார்கள். இது நியாயத்திற்கு உகந்தது இல்லை எனவே இதுபற்றி விசாரித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். யார் குற்றவாளிகளாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். எந்தவிதமான பாரபட்சமும் காண்பிக்காமல் இதுபற்றி அரசு யோசிக்க வேண்டும் என்ற காரணத்தினால் இதுபற்றி இம்மன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் ஸ்பீக்கர், சார், இது பற்றிய விவரங்களை ஏற்கனவே பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். எனக்கு மாணவர்கள் சார்பிலே கொடுக்கப்பட்டிருந்த தந்தியில், நேற்றைய முன்தினம் இரவு பத்துமணிக்கு எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் கல்லூரி விடுதியில் நுழைந்து பி.டி. மாணவர்களைத் தாக்கியதாகவும் அதன் விளைவாக 11 பேர் காயமடைந்து அவர்களில் ஐந்துபேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுதவிர மேற்கொண்டு எந்தவிதமான விவரமும் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மேல் விவரங்களை அறியவும் அங்கே அமைதி காண என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையறியவும் இதுபற்றி விவாதம் செய்ய வேண்டும் என்று கோருகின்றேன். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்பதைச் சுட்டிக்காண்பிக்கத்தான் இப்போது இதைக் கோருகின்றேன்.

திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, கல்லூரி மாணவர்கள் ஏற்கனவே எல்லா இடங்களிலும்.........



1972 மார்ச் 18] [திரு. எம். சுரேந்திரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதுக்கோட்டையைப் பற்றி மட்டும் சொல்லுங்கள். கல்லூரிகள் ஏராளமாக இருக்கின்றன. எப்போது புதுக்கோட்டைக்குப்போய்ச் சேருவது?

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, புதுக்கோட்டைக் கல்லூரியில் உள்ள மாணவர்கள் விடுதியில் போலீசார் அத்துமீறி நுழைந்து மாணவர்களை அடித்திருக்கின்றார்கள் என்ற செய்தி மிகுந்த பரபரப்பையும் வேதனையையும் உண்டாக்கும் செய்தியாக இருக்கின்றது. இப்படிப்பட்ட செய்திகள் கண்டு, மற்ற மற்ற இடங்களிலும் இதுபோன்ற உணர்ச்சிகள் தோன்றாமல் தடுத்திடவேண்டும் என்பதற்காக, இந்த விஷயம் மிகவும் பிரதானமானது, முக்கியத்துவம் வாய்ந்தது, அதிலும் பி.டி. பயிலும் மாணவர்கள் என்றால் எதிர்காலத்தில் மற்ற மாணவர்களுக்கு பயிற்சியளிக்க பயிற்சி பெற்றுக்கொண்டு இருப்பவர்கள் என்று சொல்லும்போது, இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிடுகிறது. எனவே இது மிகவும் அவசர-அவசியமானது என்ற காரணத்தினால், சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதை விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 16-ம்ஆம் தேதி இரவு 9 மணிக்கு புதுக்கோட்டை சட்ட ஒழுங்குத் துறை சப்-இன்ஸ்பெக்டர் ராஜா என்பவர் காவல் நிலையத்திலிருந்து தம் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபோது எதிரில் விளக்கு இல்லாமல் சைக்கிளில் வந்த ஒருவரை நிறுத்தி அவரை எச்சரித்துக்கொண்டிருக்கிறார். அப்போது அருகாமையில் இருந்து கலைக் கல்லூரியைச் சேர்ந்த அன்வார், ஜமாலுதின் என்பவர்கள் அந்த சப்-இன்ஸ்பெக்டரைக் கேலி பேசி, தாறுமாறான வார்த்தைகளை உபயோகிக்க சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் பெயர்களைக் குறித்துக்கொண்டு தம் வீட்டிற்குச் சென்று விட்டார்.

அவர் தம் வீட்டிற்குச் சென்ற அரை மணி நேரத்திற்குப் பிறகு பக்கத்தில் இருந்த விடுதியில் இருந்து 300 கல்லூரி மாணவர்கள் அவருடைய வீட்டிற்குச் சென்று அவரை வெளியே வரவேண்டும் என்றும், வந்து மன்னிப்புக் கேட்கவேண்டுமென்றும் கோரி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். பக்கத்து வீட்டில் இருந்த சப்-இன்ஸ்பெக்டர் உடனடியாக அங்கு வந்து, உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர் உதவியுடன் மாணவர்களை அமைதியாகக் கலைந்து போகுமாறு கேட்டுக்கொண்டார். மாறாக மாணவர்கள் சட்டம் ஒழுங்குத்துறை சப்-இன்ஸ்பெக்டர் வீட்டில் கற்களை எறிந்தார்கள்.

கல்வீச்சின் காரணமாகச் சட்டம் ஒழுங்குத்துறை இன்ஸ்பெக்டர், சமாதானம் செய்ய வந்த இன்ஸ்பெக்டர், 7 போலீஸ்காரர்கள் காயம் அடைந்தார்கள். அதற்குப் பிறகு மாணவர்களைக் கலைந்து போகும்படி பிரம்படி அங்கு கையாளப்பட்டது என்றும் அதன் தொடர்பாக 11 மாணவர்கள் காயமுற்று, 4 மாணவர்கள் சாதாரண காயங்களுக்குச் சிகிச்சை பெறுகிறார்கள் என்றும் செய்தி வந்திருக்கிறது.

போலீசார் தரப்பில், மாணவர்கள் விடுதிக்குச் சென்று தாக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். விடுதியில் இருந்து மாணவர்கள் கூட்டமாக வந்துதான் தாக்கியிருக்கிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் போலீசார் விடுதியில் வந்து தாக்கியிருப்பதாக மாணவர்கள் செய்தி கொடுத்திருக்கிறார்கள். தாங்கள் சென்று சப்-இன்ஸ்பெக்டர் வீட்டில் கல்லெறிந்து தாக்கிய சம்பவம் எதுவும் கூறப்படவில்லை. அதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர்களும் அதைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்று கருதுகிறேன்.

செய்தி கிடைத்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு உடனடியாக அனுப்பப்பட்டு, அவர் விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறார். அவர் என்ன தீர்ப்பு அளிக்கிறாரோ, அதை ஏற்றுக் கொள்வதாக மாணவர்களும் கூறியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஒரு சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது புதுக் கோட்டை அமைதியான நிலைமையில் இருக்கிறது. மாணவர்கள் அமைதியாகத் தங்கள் காரியங்களைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. இந்த விளக்கத்திற்குப் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று, தலைவர் அவர்களே, நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே, இவைகளுக்கான அனுமதியை நான் மறுக்கிறேன்.



## 3. அமைச்சரின் அறிக்கை

தஞ்சை கோயிலினுள் இராச இராச சோழன் சிலையை நிறுவுவது குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்தபடியாக விதி 82 இன் கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராச இராச சோழனின் சிலையொன்றை, அவரது ஆயிரமாண்டு நினைவு நாளைக் கொண்டாட தஞ்சையில் அமைக்கப்பட்ட பொதுமக்கள் குழு, கோயிலுக்குள் நிறுவ அனுமதி கேட்டதும், இது குறித்து இந்த அரசு, மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு பல கடிதங்கள் எழுதியுள்ளதும், இம் மாமன்றத்தின் உறுப்பினர்கள் அறிவார்கள். இச் சிலையை வெளிப்புற மதில் சுவருக்கு அருகாமையில் உள்ள ஓரிடத்தில்தான் வைக்க வேண்டுமென்று, இக் கோயிலின் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்றுள்ள மத்திய அரசின் தொல்பொருள் துறை வற்புறுத்தி வந்துள்ளது. இந்த இடத்தில் இச்சிலையை அமைப்பது மாண்புமிக்க அம் மன்னரின் நினைவுக்குச் சிறப்புச் செய்வதாக அமையாது என்று பொதுமக்களிடையே ஏற்பட்டிருந்த பலமான கருத்தை, இந்த அரசு மத்திய அரசுக்குப் பன்முறை எடுத்துச் சொல்லிவிட்டது. நானே நேரில் கோயிலுக்குச் சென்று, இச் சிலையை வைப்பதற்குத் தகுந்த இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். நேரிலும் கூறினேன். நாம் தேர்ந்தெடுத்த இடத்தில் சிலையை வைப்பதற்கு அனுமதிதர இயலாதென்று மத்திய அரசிடமிருந்து இறுதியான பதில் நேற்று வந்துள்ளதை வருத்தத்துடன் இம்மன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இச்சிலையைக் கோயிலுக்குள் அமைப்பது கோயிலின் தொல்பொருள் சிறப்புக்கு ஊறு விளைவிக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ள கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. பழமைப் பொலிவு கெடா வண்ணம் உருவாக்கப்பட்ட சிலை அமைப்பதால் தொல்பொருள் சிறப்புகெட்டுவிடுமென்றால், மின்னொளி போன்ற நவீன நாகரீக வசதிகளைக் கோயிலில் அமைத்துள்ளதும் தொல்பொருள் சூழலைப் பாதிக்குமென்று வாதிட இடமேற்படும்.

எனினும், நீண்ட கடிதப் போக்குவரத்துக்குப் பின்பும் நேரில் பலமுறை விளக்கியதற்குப் பின்பும் மத்திய அரசு நம் கருத்தை ஏற்றுக்கொள்ளப் பிடிவாதமாக மறுக்கிறது என்ற காரணத்தாலும், அவர்கள் சுட்டிக் காட்டுகிற இடத்தில் சிலையை அமைப்பது, கோயிலைக் கட்டிய மாமன்னரைக் காவற்காப்போன் நிலையில் வைத்து இழிவுபடுத்துவதற்குச் சமமாகுமென்று நாம் அஞ்சுவ தாலும், இச்சிலையைக் கோயிலுக்கு வெளியே பொது இடம் ஒன்றில் நிறுவுவது தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வரவேண்டி யுள்ளவர்களாயுள்ளோம்.

அவ்வாறே இச்சிலையைக் கோயிலுக்கு வெளியே, மாநில அரசுக்குச் சொந்தமான இடத்தில் நிறுவ நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். தமிழக வரலாற்றில் தகைமைசால் இடத்தையும், தமிழர் உள்ளத்தில் நீங்காத இடத்தையும் பெற்றுள்ள இம்மா மன்னரின் சிலையைப் பொருத்தமற்ற—பெருமைக்கு ஏற்காத இட மொன்றில் வைத்து மாமன்னரின் நினைவுக்கு மாசு கற்பிக்கும் செயலுக்கு நாம் உடந்தையாயிருக்க மறுத்துவிட்டோமென்ற ஆறு தலாவது நமக்கு எஞ்சி நிற்கட்டும் என்ற அடிப்படையில், இந்த நடவடிக்கைக்குப் பொதுமக்கள் ஆதரவு கிட்டுமென்று நம்புகிறேன். இது போன்ற சிறு பிரச்னைகளில் கூட மக்களின் ஒருமித்த கருத்துக்கு மதிப்புக் கொடுக்கும் முறையில் செயலாற்றும் உரிமை, இன்றைய அமைப்பில் மாநில அரசுக்கு இல்லையே என்ற வருத்தமும் வேதனை யும் அடைவதைத்தவிர, வேறுவழியில்லையே என்ற ஏக்கத்தையும் இம்மாமன்றம் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

### 4. 1972–73-ஆம் ஆண்டுக்கான நிதி கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண்–13—கல்வி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

"நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 91,24,22,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" .



DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss policy—

"That the allotment of Rs. 91,21,22.800 under Demand No. 13—Education—be reduced by Rs. 100."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion to discuss about the language policy of the Government in Schools and Colleges—

"That the allotment of Rs. 91,24,22.800 under Demand No. 13—Education—be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கல்வி நிலையங் களில் மதசம்பந்தமான பாடங்கள், படங்கள் வைத்திருப்பதை தடுப் பது பற்றி விவாதிக்க

"நிதிக்கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 91,24,22,800 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, பள்ளிகளுக்கு அளிக்கப்படும் ஆய்வுக்கூட சாமான்கள் தரமில்லாதவைகளாக இருப்பதைப்பற்றி விவாதிக்க

"நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 91,24,22,800 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion to discuss about the facilities to be provided for the linguistic minorities in the State and to develop their language and literature quickly and promptly,

"That the allotment of Rs. 91,24,22,800 under Demand No. 13—Education—be reduced by Rs. 100."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்வி பற்றி முழுவிவரங்கள் அடங்கிய குறிப்பு *இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் தனியாக விளக்க

* 142–195 பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[1972 மார்ச் 18

வேண்டிய தேவையில்லை என்று கருதி அதனை நிகழ்ச்சிக் குறிப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய விவாதத்தில் கலந்து கொள்ள ஏறக்குறைய 19 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகவேண்டும். இன்றையதினம் மாலையிலும் கூட்டம் நடத்த பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் மாலை நிகழ்ச்சியில் உற்சாகக் குறைவு காணப்படுகிற காரணத்தினால் இன்றைக்கு காலையிலேயே நிகழ்ச்சியை முடித்துவிடக் கருதுகிறேன். சுருங்கச் சொல்லியே விளங்க வைக்க முடியும். ஆகவே ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது. யாராவது ஒரு உறுப்பினர் அதிக நேரம் எடுத்துக்கொண்டால், அவரது கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறைக்கப்பட்டுவிடும். இன்றைய நிகழ்ச்சிகள் பிற்பகல் 1½ மணிக்கு மேல் போகாதிருக்க அமைச்சர் அவர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்பி—திரு. கே. பி. கோபால் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

* திரு. கே. பி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு கல்வி மானியக் கோரிக்கையின்போது இந்தப் பேரவையில் பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அந்தக் குறைகள் நீக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் தனியார் துறையில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் பகுதி நேர ஆசிரியர்கள் குறை நீக்கப்படவில்லை. அப்பரெண்டிஸ் ஆசிரியர்கள்—முழுத் தகுதிபெற்று—முழுநேர வேலை செய்தாலும் கூட அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஊதியம் கொடுக்கவில்லை. அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள குறிப்பில் 24—6—1971 இல் 3,671 ஆசிரியர்கள் வேலையில் நியமனம் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். ஆனால் சென்ற ஆண்டு நடைபெற்ற கவர்னர் பெருமான் உரைக்கு நன்றிதெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பதிலளிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தது குறித்து உண்மையிலேயே வருத்தமடைகிறேன்.



1972 மார்ச் 18] [திரு. கே. பி. கோபால்]

மேலும் சென்ற ஆண்டு ஆசிரியர் மாணவர் சதவிகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று பல உறுப்பினர்கள் கூறினார்கள். 24—10—1970-ம் தேதிக்கு முன்பு மனுச் செய்துகொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை இன்று சுமார் 25,498. இந்த நிலையில் 24—10—1972-க்கு மனு செய்தவர்கள் தவிர, மனு செய்ய தவறியவர்களும், அதற்குபின்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் ஆக பலர் இருக்கிறார்கள். இந்த நிலையில் மாணவர் ஆசிரியர் சதவிகிதத்தைக் குறைத்தால் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்வது என்பது முடியாது. மேலும் 11 ஆண்டு கல்வித் திட்டத்தை 10 ஆண்டாகக் குறைப்பது பற்றி பரிசீலிக்கப்படுவதாகத் தெரிகிறது. அவ்வாறு 11 ஆண்டு கல்வித் திட்டத்தை 10 ஆண்டு கல்வித் திட்டமாகக் குறைத்தால், மேலும் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு குறைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். அதற்காக இந்த அரசு எல்லா முயற்சிகளும் மேற்கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கல்வியின் தரம் உயர்வதற்கு முக்கியமாக பல்கலைக்கழக சிண்டிகேட் முழு பொறுப்பு ஏற்கவேண்டியிருக்கிறது. பல்கலைக் கழக சிண்டிகேட் குழுவில் நல்ல நிபுணர்களையும் கல்லூரிகளில் தொடர்புள்ளவர்களையும் நியமிக்கவேண்டும். மேலும் அந்த குழுவில் மாணவர் பிரதிநிதி ஒருவரையும் நியமிக்கவேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கிடையே அடிக்கடி ஏற்படும் அமளிகள், அமைதியின்மை குறையும் என்று நினைக்கின்றேன்.

மேலும் இந்த அரசின் மொத்த வருமானத்தில் 23 சதவிகிதம் கல்வி மானியத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு கல்வி மானியத்திற்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், கல்வியின் தரம் அதற்கு ஏற்ற வகையில் உயரவில்லை. கல்வி மானியத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த மானியமான 23 சதவிகிதத்தில் ஆரம்பப்பள்ளிகளுக்கு 54 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது இந்த அரசாங்கம் ஆரம்பக்கல்வியில் எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதற்காக இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் இப்போது பஞ்சாயத்து கல்வி நிதி விசாரணைக்குழு சில கருத்துக்களை குறிப்பிட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் சோசியல் எடியூக்கேஷன் ஆபீசர்களை நியமித்திருக்கிறார்கள். அவர்களின் பதவியை மாற்றி—எடியூகேஷன் எக்ஸ்டன்ஷன் ஆபீசர் என்று மாற்றி அமைத்து, அவர்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்களையும் கொடுத்தால், மேலும் ஊராட்சிகளில் கல்வியின் தரம் உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அகில இந்திய அளவில் முன்பு நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் 27 சதவிகிதம்பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் இப்போது 8 சதவிகிதம் பேர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது கல்வியின் தரம் குறைந்துவிட்டதையே காட்டுகிறது. கல்வியின் தரம் குறைவதற்கு ஒரு முக்கிய காரணம் பயிற்சி மொழித் திட்டம் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. எனவே, பயிற்சி மொழி விஷயத்தில் மாணவர்கள் விருப்பம்போல், ஆங்கிலம் படிக்க விரும்புவர்களுக்கு ஆங்கிலத்தில் கல்வி கற்க போதிய வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னதுபோல் பல ஊராட்சிப் பள்ளிகளிலும் கூட, ஆங்கிலத்தில் கல்வி கற்க அதிகமான மாணவர்கள் முன்வந்தால், அவர்களுக்கு அந்த வசதியை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி இலாகாவில் ஆசிரியர்களை நியமிப்பதில் ஒருசில சந்தர்ப்பங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. உயர்நிலைப் பள்ளிகளுக்கு போதுமான ஆசிரியர்களை உரிய காலத்தில் நியமித்தால் மாணவர்கள் கல்வி தரம் உயரும். மேலும் அவர்கள் கற்கவேண்டிய பாடங்களும் பாதிக்கப்படா. உதாரணமாக 29—4—1964-ல் அப்போதிருந்த இயக்குநர் அவர்கள், பள்ளி ஆரம்பித்த ஒரு வாரத்திற்குள் மாணவர்களுடைய எண்ணிக்கையை வைத்து அந்த பள்ளிக்கு போடவேண்டிய ஆசிரியர்களை நியமித்துவிட வேண்டுமென்று ஒரு சுற்றறிக்கை அனுப்பினர். ஆனால் சென்ற ஆண்டு 14—9—1971-ம் தேதி தான் ஒவ்வொரு பள்ளிக்கும் மேற்கொண்டு எத்தனை ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மாணவர்களுடைய படிப்பு பாதிக்கப்படுகிறது. அதோடு ஆசிரியர்களுக்கு வெக்கேஷன் சாலரியும் கிடைப்பதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது. ஆசிரியர்களுக்கு வெக்கேஷன்





சாலரி கொடுக்கப்பட வேண்டுமானால், அவர்கள் 7 மாதங்கள் வேலை செய்திருக்கவேண்டும். உரிய காலத்தில் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களானால், அவர்களுக்கு வெக்கேஷன் சாலரியும் கிடைக்கும்; கல்வியின் தரமும் மாணவர்களின் திறமையும் உயரும்.

இப்போது அரசாங்கம் புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இலவசக் கல்வி அளித்த போதிலும் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக் கட்டணமும், வேறு சிலவகை கட்டணங்களும் வசூலிக்கப்படுகின்றன. இந்த கட்டணங்களும் வசூலிக்கப்படாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். புகுமுக வகுப்பு வரையிலும் முடியாவிட்டால் எஸ்.எஸ்.எல்.சி. வரையிலாவது இந்தக் கட்டணங்களை வசூலிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு பேச வாய்ப்பளித்ததற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. ஆ. பரந்தாமன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று நடைபெறுகின்ற கல்வி மானிய கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ளவிழைகிறேன்.

எந்த ஒரு நாட்டின் வளர்ச்சியையும், அதனுடைய பொருள் வளத்தையும், நிலவளத்தையும் ஒட்டி கணக்கிடப்படுவதில்லை. அந்த நாட்டின் பெருமையைப் பற்றி பேசிக்கொள்ள இவை போதாது. இதை வைத்துத்தான் ஹெர்பர்ட்கேசன் என்ற அறிஞர் ஒரு நாட்டின் வளர்ச்சியினைக் கணக்கிட வேண்டுமென்றால், அந்த நாட்டிலே எத்தனை படித்தவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கை வைத்துதான் அதன் வளர்ச்சியினைக் காணமுடியும் என்று கூறியுள்ளார். அதை மனதிலே வைத்துதான் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு இன்றைய தினம் கல்வித் துறையிலே முழு கவனம் செலுத்தி வருகிறது. அதனுடைய பலன்தான் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற கல்வி நிபுணர்கள் எல்லாம் நல்லமுறையிலே நம்முடைய அரசைப் பாராட்டுகிறார்கள். we have earned the encomiums of the educationists என்று அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்தாலே தமிழக அரசு கல்வித் துறையிலே எந்த அளவுக்கு நாட்டம் செலுத்துகிறது என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும்.

அதேநேரத்தில் இன்றையதினம் தமிழக அரசு கல்வித்துறையிலே இன்று எதைச் சிந்தித்துச் செயல்படுகிறதோ, அதைத்தான் மற்ற மாநிலங்களிலே நாளை சிந்திக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்

[திரு. ஆ. பரந்தாமன்] [1972 மார்ச் 18

போது நாம் அதை எண்ணியெண்ணிப் பெருமைப்படலாம். இவ்வளவு செய்கின்ற தமிழக அரசு, 396 கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில் 23 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கி இருக்கின்ற இந்த நேரத்தில் பொதுவாக கல்வியின் தரம் எந்த நிலையில் இருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறோம். we are only in the learnin, stage and we have not yet come to the thinking stage. இதைக்கூர்ந்து இந்த அரசு பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டிலே, ஜெர்மனி நாட்டிலே அவர்கள் சிந்திக்கக் கூடிய கல்வி முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால்தான் அங்கே கல்வியின் தரம் உயர்ந்து காணப்படுகிறது என்பதை நான இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்னாலே நமது நாட்டில் குருகுலம் என்ற முறையிலே கல்வி கற்பிக்கப்பட்டுவந்தது. அந்த குருகுல முறையிலே பெற்ற பொது அறிவினை இன்றையதினம் மாணவர்கள் பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. அதன் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே, இந்த நிலையை உருவாக்கக்கூடிய, சிந்திக்கக்கூடியக் கல்வியாக இன்றைக்கு இருக்கின்ற கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுடைய அறிவு எந்தத் துறையிலே செல்கிறதோ, அந்தத் துறையிலே மாணவர்களுக்கு பாடம் கற்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இந்த இலாகா வேகமாகச் செயல்பட்டு, அதற்கேற்ப நல்ல பலனை காணவேண்டுமானால், இந்த இலாகாவை தனியாகப் பிரித்து "எஜுகேஷனல் போர்டு" அதாவது தனி கல்வி வாரியமாக அமைத்துச் செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் கல்விக்கு எவ்வளவுதான் முக்கியத்துவம் கொடுத்தாலும், இன்று நம் தமிழகத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை 39.31 சதவிகிதமாகத்தான் இருக்கிறது. இன்னும் படித்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்க பட்டிதொட்டிகளில் எல்லாம் முதியோர் கல்வித் திட்டத்தை விரிவுபடுத்தி, வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 18] [ஆ. பரந்தாமன்]

அதேபோன்று, இன்றைக்கு பி.யு.சி. என்று இருப்பதை மாற்றி பழைய இன்டர்மீடியேட் வகுப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி இப்போது மூன்று ஆண்டு பட்டப்படிப்பை மாற்றி இரண்டு ஆண்டாகக் கொண்டுவரவேண்டும். அதன் மூலமாக நன்கு பலன் கிட்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு, இந்தத் துறையை டாக்டர் நாவலர் அவர்களின் தலைமையில் இயங்கச் செய்து, தமிழ்நாட்டு மாணவர்கள் நல்ல மாணவர்களாக, பொது அறிவு உள்ள மாணவர்களாக இருக்கவேண்டுமென்று திட்டமிட்டுச் செயல்படுகிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

ஆனால் அதே நேரத்தில் இன்றையதினம் ஐ.ஏ.எஸ். பிரிவில் எத்தனை பேர் தமிழ்நாட்டிலிருந்து தேறுகிறார்கள் என்று பார்க்கும் போது மிகமிக வேதனையாக இருக்கிறது. ஒரு காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து ஐ.ஏ.எஸ். பரிட்சைக்குப் போய் தேறியவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இன்றையதினம் குறைந்திருக்கிறது. இதைச் சீர்படுத்த நல்ல முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1969–70-ல் ட்யூஷன் பீஸுக்குமேல் அதிகமாக கல்லூரிகளில் விதிக்க கூடாது என்ற உத்தரவு செய்திருந்தும், சில கல்லூரிகள் தவறாக நடந்துகொண்டன. அரசு உத்தரவுக்குப்பணியாத கல்லூரிகளின் மேல் நடவடிக்கை எடுக்க வழிவகுக்க வேண்டும்.

அடுத்தபடியாக கல்லூரிகளுக்குக் கொடுக்கக்கூடிய கிராண்டுகளை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்படி உயர்த்தும்போது ரூரல் ஏரியாக்களில் உள்ள மானேஜ்மெண்டுகளைக் கலந்துகொண்டு இதைச் செய்ய வேண்டும். செகண்டரி ஸ்கூல்களைப் பொறுத்தவரையில் 15 பர்சென்ட் மனேஜ்மெண்டு கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆகவே, எல்லாவற்றையும் கலந்து நல்ல முறையில் ஒரு வழிவகை செய்ய வேண்டும்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1972 மார்ச் 18

அடுத்தபடியாக, புதுக் கல்லூரிகளை ஆரம்பிக்க 5 லட்சம் ரூபாய் வேண்டுமென்று சொல்கிறார்கள். அது வரவேற்கக்கூடியது என்றாலும், நடைமுறையில் அது சாத்தியமா என்பதைப் பார்க்க வேண்டும். டிரஸ்ட் ப்ராபர்ட்டிகள் சம்பந்தப்பட்டமட்டில் ஒரு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. பூராவும் கல்விக்காகச் செல வழிக்கப்பட வேண்டும். புதுக்கல்லூரி வேண்டுமென்று கேட்கும் போது ஒரே சமயத்தில் 5 லட்சம் வேண்டும் என்கிறார்கள். அந்த டிரஸ்ட்டுக்கு அதைக் கொடுக்கக்கூடிய சக்தி இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, இதற்கான விதிமுறைகளைச் சற்று தளர்த்தி, விதிவிலக்கு அளித்து, செயல்பட வேண்டும்.

1972–73-ல் பில்டிங்ஸ் பண்ட் என்று மானேஜ்மெண்டு கல்லூரிகளுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. சென்ற ஆண்டு குறைவாக இருந்தது. மானேஜ்மெண்டு கல்லூரி வர வேண்டும் என்று சொல் கிறார்கள். இதுசம்பந்தமாக எக்விப்மெண்ட கிராண்டுக்கும் வழி வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விடுதிகளைப் பொறுத்தவரையில் ஒரு மாணவனுக்கு 60 ரூபாய், 70 ரூபாய் என்ற அளவில் செலவு ஏற்படுகிறது. சில இடங்களில் 45 ரூபாய் என்ற அளவில் செலவு ஏற்படுகிறது. ஒரு சிலர் விடுதிகளை ஒரு வியாபார நோக்கத்தோடு நடத்தி, லாபம் அடிக்க முயல்கிறார் கள். இதைச் சர்க்கார் கண்காணித்து, ஏன் அதிகமாகச் செலவா கிறது என்பதைக் கண்காணித்து தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித் துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். அவருக்குப் பேசுவதற்கு ஐந்து நிமிட நேரம் கொடுத்தால்கூட, அவர் தன்னுடைய பேச்சை மூன்று நிமிஷங்களுக்குள் முடித்துக்கொண்டு, இரண்டு நிமிஷ நேரத்தைக் காப்பாற்றி பேரவைக்குத் தந்திருக்கிறார்கள். அவர் நெடுங்காலமாக பேரவையின் உறுப்பினராக இருந்து வருகிறார். அவரை எல்லோரும் முன்னுதாரணமாகக் கொண்டு பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டு கல்வி மானியக்கோரிக்கையை வரவேற்று என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். 1971–72-ம் ஆண்டில்



1972 மார்ச் 18] [புலவர் சி. பழனிச்சாமி]

கல்வி வளர்ச்சிக்காக தமிழக அரசு 81.84 லட்சம் ரூபாயை செல வழித்திருக்கிறது. 1972–73-ம் ஆண்டில் அதைவிட அதிகமாக 89.85 லட்சம் ரூபாய் செலவிட வகை செய்துள்ளதைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, இரண்டாவது சம்பள ஆணைக் குழுவில் காணப் பட்ட சில குறைபாடுகள் அகற்ற முன்வந்திருக்கிறது. பி.டி. பட்டதாரி ஆசிரியர்களின் குறைகளை நீக்க ஒரு நபர் ஆணைக் குழுவை நியமித்து இரண்டு திங்களுக்குள் பரிவுரையை அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளது. அதற்காகவும் இந்த அரசை நான் பாராட்டு கிறேன்.

பொதுக் கல்விக்காக 1972–73-ல் 89.85 கோடி ரூபாயை வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறது. தொழில் நுட்பக் கல்விக் காக 77 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதில் 54 சதவீதமான 42 கோடியை தொடக்கக் கல்விக்குச் செலவிடப்படுகிறது பாராட் டத்தக்கதாகும். எந்தவித உயர்கல்விக்கும் தொடக்கக் கல்வியே ஆதாரம் என்பதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது.

அடுத்து, தொடக்கப் பள்ளிகளினுடைய நிர்வாகத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் நாட்டில் நடக்கின்ற தனியார் நடத்தும் பள்ளிகளை, பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்—அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே கல்வி வளர்ச்சி பெருக வேண்டும், எல்லோரும் கல்வி கற்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் தனியார் பள்ளிகள் நடைபெறுகின்றன என்று சொல்ல முடியாது. அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் ஒரு லாப நோக்கத்திற்காகத்தான். ஒரு வியாபார நோக்கத்தில்தான், கொள்ளை லாபம் அடிப்பதற்காகத் தான் இதை நடத்துகிறார்கள்.

மேலும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தனியார் நடத்தும் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களிடமிருந்து மாதம் 10 ரூபாய் அல்லது 20 ரூபாய் என்ற அளவிலே சம்பளத்தில் பிடித்துக் கொள்கிறார்கள். ஆனால் முழுச் சம்பளம் பெற்றதாக ஆசிரியர் களிடம் கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்த ஆசிரியர்களை நியமிக்கும்போது அவர்களிடமிருந்து 400 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையிலே கையூட்டு வாங்கிக்

கொள்கிறார்கள். இதை கற்பனை என்று யாரும் நினைத்துவிடக் கூடாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நானும் தொடக்கப் பள்ளி ஆசிரியனாகப் பணிபுரிந்தவன். ஆசிரியர்களின் தொல்லைகளை பூரணமாக உணர்ந்தவன். நானும் இம்மாதிரியான துன்பங்களை அனுபவித்திருக்கிறேன். என் மன வேதனை வெடித்துத்தான் இந்தப் பேரவையில் சொற்களாக வெளிவருகின்றன.

தனியார் நடத்தும் பள்ளிகளை எல்லாம் தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும். இந்தப் பள்ளிகளை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அந்தப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களைக் கசக்கிப் பிழிந்து அவர் களிடமிருந்து பெறுகின்ற பணத்தைத் தடுக்க எந்த வகையிலாவது அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டம். ஆசிரியர்களுக்கும் மதிய உணவுத் திட்டத்திற்கும் தொடர்பு இல்லாமல் செய்ய வேண்டும். ஆசிரியர்களின் முழுநேர ஊழியமும் கல்விக்குப் பயன் பட வேண்டும். அப்போதுதான் மாணவர்களின் கல்வித்தரமும் உயரும். மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி ஆசிரியர்கள் கவனித்துக் கொண்டிருக்கும்பொழுது பிள்ளைகளின் பாடங்களில் அவர்கள் எப்படி கவனம் செலுத்த முடியும். அதுவும் தவிர சில இடங்களில் ஆசிரியர்கள் மதிய உணவுத் திட்டத்தின் கணக்கப்பிள்ளைகளாகவும், சமையற்காரர்களாகவும்கூட வேலை செய்ய வேண்டிய அவல நிலைமை இருக்கிறது. மதிய உணவுத் திட்டத்திற்கும் ஆசிரியர்களுக்கும் சம்பந்தமில்லாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் கல்வியின் தரம் உயர்ந்து, கல்வி நல்ல முன்னேற்றம் அடையும்.

அடுத்தபடியாக, மைய சமையற்கூடங்கள் 61 ஏற்கெனவே இருந்து வருகின்றன. 1970–71-ல் 31 மைய சமையற்கூடங்களும், 1971–72-ல் 30 மைய சமையற்கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிலும் 1972–73-ல் 30 மைய சமையற்கூடங்கள் அமைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மைய சமையற்கூடங்களை அமைக்கும்போது என்னுடைய மதுரை மாவட்டத்தில் உள்ள பழனி பகுதியில் இதை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இரண்டாவது சம்பளக் குழுவினால் ஆசிரியர் களுக்கு நல்ல பலன்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. செலக்ஷன் கிரேடு என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சப் படியை சம்பளத் துடன் இணைத்திருக்கிறார்கள். மேலும் ஆசிரியர்கள் ரிடையராகும் போது மிகுந்த நன்மை ஏற்பட்டிருக்கிறது. இந்த நன்மைகளெல்லாம் செய்துகொடுத்த நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுக்கும் மனமுவந்த நன்றியை ஆசிரியர்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழாசிரியர்கள் பதவி உயர்பெற்று இரண்டாம் நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் பலருக்குப் பதவி உயர்வு அளிக்கப்படாமல் இருக்கிறது. எனவே அவர்களுக்கும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளியிறுதித் தேர்வு மட்டும் படித்த தனித் தமிழ் புலவர்கள் பணியாற்றுகிற காலம் வரையிலும் இரண்டாம் நிலை ஆசிரியர் களாகவே இருக்கிறார்கள். எனவே நான் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களையும் டாக்டர் நாவலர் அவர்களையும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன், தனித்தமிழ் புலவர்களையும் பத்து ஆண்டுக்காலம் ஊழியத்தை வைத்து அவர்களை முதல் நிலை ஆசிரியர் களாகப் பதவி உயர்வு கொடுக்கவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கல்வியானது இந்த நாட்டிற்கு மிக மிக அத்தியாவசியமானது. கல்வியிலே பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிற நிலையில் இந்த அபிவிருத்தியைக் கொண்டுவரவேண்டுமென்று அரசு கூறியிருக்கிறது. ஆனால் அதே சமயத்திலே கல்வியானது அஸ்தி வாரம் இல்லாமல் இருக்கக்கூடாது. ஆரம்பப் பாடசாலைதான் அஸ்திவாரம் ஆகும். அந்த அஸ்திவாரமான கல்வியை ஊட்டு வதற்கு ஏற்ற முறையிலே ஒரு வகுப்பிலே இப்பொழுது 50,60 பிள்ளைகள் இருக்கின்ற நிலைக்கு ஒரு வாத்தியார்தான் பாடம் சொல்லித்தருகின்றார். அப்படி அதிகமான அளவில் பிள்ளைகள் ஒரு வகுப்பில் இருந்தால் கல்வியின் தரம் குறைந்துவிடும். எனவே

பிள்ளைகள் 35 பிள்ளைகளாகக் குறைத்துவிட்டால் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு நன்மை ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

பள்ளிக்கூடமானது சில இடங்களிலே தங்களுடைய சொந்தப் பெயராலும், மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் ஏற்படுத் தப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிகளையெல்லாம் அரசாங்கம் உடனடியாக அகற்றிவிட்டு பொதுவான ஸ்தாபனமாக ஏற்படுத்த வேண்டும். எனவே மதத்தின் பெயரால் உள்ள பள்ளிகளையும் ஜாதியின் பெயரால் உள்ள பள்ளிகளையும் உடனடியாக அகற்றிவிட வேண்டும்.

மேனேஜ்மெண்டார் சொந்தப் பள்ளிகளை சொந்தப் பிழைப்புக் காக நடத்திவருகிறார்கள். எங்கள் பகுதியிலே மானேஜ்மெண்டார் நடத்துகிறார்கள். பள்ளிக்கூட வாத்தியார்களுக்குச் சம்பளம் சரியாகக் கொடுக்கவில்லை. பெண் வாத்தியார்கள் சம்பளம் கேட்டால் வீட்டுக்கு வா என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் வாத்தியார்களை நிர்ப்பந்தப்படுத்தக்கூடிய பள்ளிகளை—மதுக்கரை பிர்க்காவிலே இருக்கக்கூடிய மேனேஜ்மெண்ட் பள்ளியின் ஆசிரியர்கள் ரொம்ப மோசமான நிலையில் இருக்கிறார்கள், தோழர் பாலதண்டாயுதத்திடமும் அந்த ஆசிரியர்கள் எல்லாம் வந்து ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள்—பொறுத்தவரையில் அவற்றிற்கு அரசாங்கம் கொடுக்கிற கிராண்டை குறைத்து அந்தப் பணத்தை வைத்து வாத்தியார்களுக்கு அரசாங்கமே நேரடியாகச் சம்பளத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் அவர்கள் சரிவர வேலை செய்யமுடியும், தங்களுடைய குடும்பங்களையும் கவனிக்கமுடியும்.

அதே சமயத்திலே உடல் பயிற்சி வாத்தியார்கள் பயிற்சிபெற்றும் கூட சும்மா இருக்கிறார்கள், வேலையில்லை. ஒவ்வொரு பள்ளியிலேயும் தேகப்பயிற்சி வாத்தியார்கள் போட்டால் பல பள்ளிகளிலே அவர்களுக்கு வேலைகிடைக்கும், பள்ளிகளும் அபிவிருத்தியாகும், எனவே சும்மா இருக்கிற அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்திலே கல்வியானது இன்றைக்குத் தொழில் கல்வி என்று இருக்கிறது. மாணவர்களுக்கு தொழில் கல்விதான் முக்கிய மாகக் கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்கள் தொழில் கல்வி பயின்று வெளியே வந்தவுடன் சொந்தத் தொழில்கள் செய்து





பிழைக்கிற மாதிரி இருக்கவேண்டும். இப்படிச் செய்தால் வேலை யில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கான சூழ்நிலை ஏற்படும், எனவே அந்த முறையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடப் புத்தகங்களை முறைப்படி திருத்தியமைக்கவேண்டும். பாடப் புத்தகங்களில் மதப்போதனைகள், சாதிப் போதனைகள் இருக் கக்கூடாது. நமக்குச் சமதர்மகொள்கையை வரையறுத்து இருக் கிறோம், எனவே பாடப் புத்தகங்களில் மதபோதனை, ஜாதி போதனைகள் இருந்தால் சமதர்மக் கொள்கைக்கு விரோதம் ஆகும், எனவே அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. பி. பொன்சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியக் கோரிக்கையின்மீது நான் பேசுகின்ற நல்லதொரு வாய்ப்பைப் பெற்றமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இன்றைய தினம் நம்முடைய தமிழக அரசு கல்வித் துறையிலே பல முன்னேற்றங்களைச் செய்து வருவதை உள்ளபடியே நான் மனமுவந்து பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நாளடைவில் நாம் அதிகமாகத் தொகை கல்விக்காக ஒதுக்கீடு செய்தாலும் சிலபல இடங்களிலே கல்வியின் தரம் குறைந்துவருகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். உதாரணமாக வெல்பேர் கிராண்ட் அதிகமாகக் கொடுக்கிறோம். அதற்காக மாவட்டந் தோறும் தனியாகப்பிரித்து அந்த நிதியை ஒரு கமிட்டியை ஏற்படுத்தி அதன்மூலமாகத் தரலாம் என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

படித்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில்லாமல் இருக்கிற நிலை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு வேலைவாய்ப்பிற்குரிய வயதை 25 வயதாக இருப்பதை 30 வயதாக உயர்த்தினால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எப்படிப் பல இடங்களிலே ஏழை மாணவர்களுக்குக் கல்விச் சலுகைகள் பின் தங்கிய மாணவர்களுக்குச் சலுகைகள் தருகிறோமோ அதைப் போன்று எந்த இனம் எந்த ஜாதி என்று பார்க்காமல் சமதர்ம சோசலிஷ சமுதாயத்தை உருவாக்குகின்ற வகையிலே

ஏழை எளிய மாணவர்களுக்கு அவர்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும் உதவித் தொகைகள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்சொன்ன மூன்று திருத்தத்தை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும் என்றுதான் இதனை கூறுகிறேன்.

சிலபல இடங்களிலே ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் கல்வியின் தரம் குறையக் காரணமாக இருக்கிறது. சில இடங்களிலே ஆசிரியர்களைப் பழிவாங்குகிற நோக்கத்தோடு அந்தக் காரியங்களிலே தலைமையாசிரியர்களும் நிர்வாகிகளும் ஈடுபடுகின்றார்கள் அவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இருக்கிற மாணவர்களை—குறிப்பாக கடலூரிலிருந்து தந்தி வந்திருக்கிறது மாணவர்களைத் தலைமையாசிரியர்கள் கடுமையாகத் தண்டிக்கிறார் என்று தந்தி வந்திருக்கிறது—கடுமையாகத் தண்டிக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் போக்கினால்தான் நாம் அதிகமாகத் தொகையைச் செலவு செய்கின்ற நேரத்திலே கல்வி மக்களுக்கு உறுதுணையாக நிற்கக்கூடிய முறையிலே சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நம்மை அன்னியன் ஆண்டகாலம்தொட்டு கிளார்க்குகள் உற்பத்தி செய்யக்கூடிய ஸ்தாபனமாகவே கல்வித் துறை இருந்துவருகிறது. அந்தக் கொள்கையை நாம் மாற்றிக் கொள்ளவில்லை. ஒருவன் பி.எஸ்ஸி. படித்த பட்டதாரியாக ஆகி அவர் வழக்கறிஞராக மாறுகிறார் அல்லது வர்த்தகராக மாறுகிறார். வெகு சிலரே தாம் படித்த விஞ்ஞானக் கல்வியைப் பயன்படுத்தக் கூடியவகையிலே விஞ்ஞான ஆராய்ச்சியிலே ஈடுபடக்கூடிய தன்மை இருக்கிறது. ஆகவே விஞ்ஞான கல்விக்காக நாம் அதிகமாகப் பணம் செலவழித்தாலும் பி.எஸ்ஸி. பட்டதாரியும் மற்ற பட்டதாரிகளும் அவர்கள் கற்ற தொழில்களை சமுதாயத்திற்கு அளிக்கவில்லையென்றால் என்ன பயன்? ஓரளவிற்கு பொது அறிவு கொடுக்கப்பட்ட பிறகு மாணவர்கள் எந்த எந்தத் துறையிலே சிறந்து விளங்குகிறார்களோ—எந்தத்





துறையிலே சிறந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க ஒரு ஆராய்ச்சிப் பிரிவை ஏற்படுத்தி—அதற்கேற்ற முறையிலே—ஒருவன் வர்த்தகத் துறையிலே முன்னேறுவதற்கு தகுதியிருந்தால் வர்த்தகத் துறைக்கான கல்வியையும், விஞ்ஞானத் துறையிலே முன்னேறத்தக்க ஆர்வம் இருந்தால் விஞ்ஞானத் துறையிலேயும் கல்வியையும் தொழில்நுட்பத் துறையிலே முன்னேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்தால் அந்தத் துறைக்கான கல்வியையும்—இப்படி எந்த எந்தத் துறையிலே சிறந்து விளங்குகிறார்கள் என்பதை அறிஞர்கள் எப்படி நிர்ணயிக்கிறார்களோ அந்த முறையிலே அப்படிப் பட்ட கல்வியைத் தருவதின்மூலமாகத்தான் நாம் இந்த நாட்டிலே நூறு கோடி ரூபாய் செலவு செய்வதற்கு மதிப்பு ஏற்படமுடியும்.

பொதுவாகப் பார்க்கிறோம். ஒரு பெண், பி.எஸ்ஸி. வரை படித்துவிட்டு பிறகு வெறும் வீட்டுப்பெண்களாக அடுப்பங்கரையிலே வாழ்நாளையெல்லாம் போக்கிவிடுகிறார்கள். இத்தனை தூரம் பாடுபட்டு பி.எஸ்ஸி. அல்லது எம்.எஸ்ஸி. வரை படித்து விட்டும் பட்டம்பெற்றும் அப்படிப்பட்டவர்களால் அரசாங்கம் என்ன பயன் அடைந்தது? அதைவிட வீட்டுக் கல்வி அதாவது பிள்ளைகளை எப்படி வளர்ப்பது, எப்படி போஷாக்குடன் வளர்ப்பது, நல்ல, நல்ல புத்தகங்களைச் சொல்லிக் கொடுப்பது என்பதில் தேர்ச்சி பெற்றிருந்தால் இந்த நாட்டில் நல்ல புத்திரர்களை அவர்கள் சமுதாயத்திற்குத் தர முடியும். ஆகவே, இந்தக் கல்வி முறையிலே அரசு தீவிரக் கவனம் செலுத்தி நல்ல ஆர்வம் மிக்கவர்களைக் கொண்ட குழுவை அமைத்து ஏற்றமிக்க மாறுதலைச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நாம் என்ன காண்கிறோம் என்று சொன்னால் மாணவ சமுதாயத்தில் ஒரு கட்டுப்பாடு இல்லாத தன்மையை ஆங்காங்கே காண்கிறோம். இதற்கு என்போன்றவர்கள் கருதும் காரணம் என்னவென்றால் ஓரளவேனும் மதக்கல்வி, வாழ்க்கையிலே புனிதம் என்று சொல்லக்கூடிய தத்துவங்கள் இல்லாததுதான் கட்டுப்பாடின்மைக்குக் காரணம் என்று நான் நம்புகிறேன். நமது தாய்நாடு ஒரு மதச் சார்பற்ற நாடு என்பதை ஒப்புக்கொள்கிறேன். அப்படி மதச்சார்பற்ற நாடு என்று சொல்வதினாலேயே மதக் கல்வியைப் புறக்கணிக்க வேண்டும், மதத்தைப் பற்றித் தெரிந்துகொள்ளக்கூடாது என்று சொல்வது உண்மையிலேயே என்னுடைய புத்திக்குச் சரியாகப் புலப்படவில்லை.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1972 மார்ச் 18

ஆகவே, கல்விக்கூடங்களிலே ஓரளவுக்காவது ஒவ்வொரு மதத்திலுமுள்ள புனிதமான உண்மைத் தத்துவங்களைப் போதிக்க வேண்டும். பெரியோர்களை எப்படி மதிக்க வேண்டும், எப்படிக் கட்டுப்பாட்டோடு நடக்க வேண்டும் என்பதுபோன்ற தத்துவங்களைப் போதித்தால்தான், அவர்களுக்கு ஒழுக்கம் வளர்ந்தால்தான், இன்றைக்கு இளைஞர்களைப் பீடித்துள்ள எரி, அழி என்பது போன்றவைகள் மாறி ஆக்கு என்ற தத்துவத்திற்கு வர முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, புத்தகக் குழுவில் சிறுபான்மையோருக்குப் போதிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் கல்விமுறையிலே சிறுபான்மையோரின் மத சம்மந்தமான விஷயங்கள் பாடப்புத்தகங்களில் புகுத்தப்பட வேண்டும். அதை சிறுபான்மையோரைச் சேர்ந்த சிறந்த அறிஞரைக் கொண்டு ஆராயப்பட்டு அந்தப் பாடங்களைப் பாடப்புத்தகங்களில் புகுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துரதிருஷ்டவசமாக இந்த நாட்டிலே பல சமயத்தவர் வாழ்ந்த போதிலும் ஒரு சமயத்தைப்பற்றி இன்னொரு சமயத்தவர் புரிந்து கொள்ளக்கூட முடியாமல் உள்ள நிலை நம்நாட்டில் இருக்கின்றது. உதாரணமாக என்னுடைய பெயரை அப்துல் ஜப்பார் என்று உச்சரிப்பதற்குக்கூட முடியாமல் இருக்கிறது. இந்த அளவில் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியாமல், ஒருவருக்கொருவர் சமயத்தைப்பற்றிய அறிவு பெற முடியாமல் துவேஷங்களும், மாச்சரியங்களும், சகிப்பில்லாத தன்மையும் இருந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு சமயத்திலுள்ள உண்மைகளையும் மற்றவர்களும் புரிந்து கொண்டு ஒருவரையொருவர் மதிக்கக்கூடிய வகையிலே ஒவ்வொரு மதத்திலுமுள்ள சிறப்பான கோட்பாடுகளையும், தத்துவங்களையும் மாணவர்களுக்குச் சிறு வயதிலேயே போதிக்கின்ற நல்ல திட்டங்கள் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் தற்பொழுது பெருவாரியான கல்விக்கூடங்களில் வேலைநிறுத்தம் சகஜமாகிவிட்டது. இதைத் தடுப்பதற்கு நான் கூறுகின்ற மாற்றுத்திட்டம் என்னவென்றால், ஒரு கல்லூரியிலே வேலைநிறுத்தம் நடக்கிறது என்றால் அந்தக் கல்லூரியின் விடுமுறை நாட்களை ரத்து செய்து விட்டு வேலைநிறுத்தத்தால் இழப்பு ஏற்பட்டிருக்கும் நாட்களைச் சரிக்கட்டும் முறையிலே தொடர்ந்து



1972 மார்ச் 18] [வா. மை. அப்துல் ஜப்பார்]

கல்லூரிகள் நடக்கும்படி ஏற்பாடு செய்தால் அடிக்கடி ஏற்படும் கல்லூரி வேலைநிறுத்தங்கள் குறையலாம் என்று நான் கருதுகின்றேன்.

அத்துடன் இரண்டு மூன்று மாதங்கள்வரை கல்லூரிகள் மூடப்பட்டால் அந்த அளவிற்குப் பாடங்கள் போதிக்கப்படாமல் இருக்கும்பொழுது தேர்வுகள் நடக்கும்பொழுது பெரும்பாலோர் தேர்வில் தேர்ச்சிபெறுமல் போய்விடுகிறார்கள். இதை நீக்குவதற்கு கல்லூரிகளின் விடுமுறை நாட்களை ரத்து செய்துவிட்டு இழப்பு ஏற்பட்ட நாட்களுக்கு உண்டான பாடங்களை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிகளில் அறிவியல்கூடங்கள் ஏற்படுத்துவதிலே அரசாங்கப் பள்ளிகளுக்குத்தான் முதலிடம் கொடுப்பதாகத் தெரிகிறது. இந்த முறையை நீக்கி தனியார் பள்ளிகளுக்கும் இந்தச் சலுகையைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய அரவக்குறிச்சியில் பெண்களுக்காக ஒரு உயர்நிலைப்பள்ளி கூட இல்லை. குறிப்பாக பள்ளப்பட்டியில் அதிகமாக கோஷாப் பெண்கள் வாழ்கிறார்கள். அங்கு பெண்களுக்கு என்று பள்ளிக்கூடம் ஏற்பட்டால் எங்கள் சமுதாயத்தினரும் நல்லமுறையில் கல்வியைக் கற்று மற்றவர்களுக்கு இணையாக வாழ்க்கையிலே முன்னேற முடியும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: பேரவைத் தலைவரவர்களே, கல்வி மானியத்திலே ஒருசில கருத்துக்களை நான் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதன்முதலாக, உயர்நிலைக் கல்வியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உயர்நிலைப்பள்ளிகள் பல நம்முடைய நாட்டிலே இருந்தாலும்கூட கிராமங்களிலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே சயன்ஸ் படிப்பிலே அதிகமாகத் தேர்ச்சி பெறுவதற்கு முடியாமல் இருக்கிறது. அதற்கு ஒரு முக்கிய காரணம் என்னவென்றால், அவர்களுக்கு சயன்ஸ் பிளாக்குகள் இல்லை, அப்படியே இருந்தாலும்கூட அவர்களுக்கு சப்ளை செய்யப்படும் சயன்ஸ் எக்விப்மெண்ட்ஸ் தரமற்றவைகளாக இருக்கின்றன. கிரா

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி] [1972 மார்ச் 18

மங்களில் உள்ள பள்ளிகளுக்கு அளிக்கப்படும் சயன்ஸ் எக்விப்மெண்ட்ஸ் தரமுள்ளவைகளாக இல்லை என்பதைப் பலயிடங்களில் காண்கிறோம். இம்மாதிரியாக தரமில்லாத ஸயன்ஸ் எக்விப்மெண்டுகளை வைத்துக்கொண்டு எந்த முறையிலே ஆசிரியர்கள் பாடங்களை சொல்லிக் கொடுக்கமுடியும். முக்கியமாக இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு கல்வி இலாக்கா நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அதுவும் சயன்ஸ் பிளாக்குகளே இல்லாத பல உயர்நிலைப்பள்ளிகள் கிராமங்களில் ஏராளமாக இருக்கின்றன. பெரிய பள்ளிக்கூடங்களில் பெரிய அளவில் ஆயிரம், இரண்டாயிரம் மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் என்று பெரிய ஊர்களில் இருக்க முடியும், ஆனால் சாதாரணமாகக் கிராமப்புறங்களில் இருக்கும் உயர்நிலைப்பள்ளிகள் இவ்வளவு பெரிய மாணவர்களைக் கொண்டதாக இருக்க முடியாது. 300, 400 அல்லது 500 மாணவர்கள் இருந்தாலே அது பெரிய உயர்நிலைப்பள்ளிக்கூடம் என்றுதான் கிராமங்களில் சொல்லவேண்டும் அந்தமாதிரியான பள்ளிகளில் சயன்ஸ் பிளாக்குகள் கட்ட வேண்டுமென்றால் அரசினரின் பணம் கிடைக்கிறதா என்றால் கிடைப்பதில்லை. ஏனென்றால் மிக அதிகமாக மாணவர்கள் எந்தப் பள்ளிகளில் இருக்கிறார்களோ அந்தப் பள்ளிகளுக்கு அவர்களுக்கு வேண்டிய சயன்ஸ் பிளாக்குகளுக்குக் கொடுத்துவிட்டு அதற்குப்பிறகுதான் சற்றுக் குறைவாக இருப்பவர்களுக்குக் கொடுப்பது என்ற விதிமுறையை அல்லது பிரின்சிபிளை அனுசரித்து வருகின்ற ஒருமுறை இருக்கிறது. இதை மாற்றி எந்தப் பள்ளிக்கூடம் எங்கேயிருந்தாலும் சரி எந்த ஊரிலேயிருந்தாலும் சரி அதிலே படிக்கும் மாணவர்களின் விதாச்சாரம் குறைவாக இருந்தாலும் சரி அவர்களுக்கு, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சயன்ஸ் பிளாக் அமைத்து, தரமான சயன்ஸ் எக்விப்மெண்ட்ஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹையர் எலிமெண்ட்ரி ஸ்கூல்களிலேயிருக்கும் லேடி பி.டி. டீச்சர்ஸ் பற்றிக் கூற வேண்டும். அதாவது ஹையர் எலிமெண்ட்ரி பள்ளிக்கூடங்களில் பி.டி. ஆசிரியர்களை நியமிக்கிறோம். அதிகமாகப் பெண்கள் சேர்ந்து படிக்கின்ற ஹையர் எலிமெண்ட்ரி ஸ்கூல்களில் நம்முடைய மாநிலத்தில் பல இடங்களில் இருக்கின்றன. அந்த இடங்களில், ஹையர் எலிமெண்ட்ரி ஸ்கூல்களில் லேடி பி.டி. டீச்சர்ஸ் போட்டுக்கொள்ளலாம் என்ற முறையிருந்தது. ஆனால் அந்த முறை நடைமுறைக்குக் கொண்டு செல்லமுடியாமல் இருக்



1972 மார்ச் 18] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

கிறது. ஒருவேளை பணக்கஷ்டமாக இருக்கலாமோ என்னவோ தெரியவில்லை. இந்த மாநிலத்தில் அதிகமாகப் பெண்கள் படிக்கின்ற எல்லா ஹையர் எலிமெண்ட்ரி பள்ளிக்கூடங்களிலும் லேடி பி.டி. டீச்சர்களைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளுக்கு ஃபீ காம்பன்சேஷன் கொடுப்பதைப்பற்றி ஒரு வேண்டுகோளை நான் சமர்ப்பித்துக் கொள்ள விரும்புகிறேன். புதிதாகத் திறந்த கல்லூரிகளுக்கெல்லாம் இப்பொழுது ஃபீ காம்பன்சேஷன் ரூபாய் 50. ஆனால் ஏற்கனவே இருந்துவந்த கல்லூரிகளாக இருந்தால் 80 ரூபாய் வரையில் பெற்று வருகிறார்கள். புதிதாகத் திறந்த கல்லூரிகள் என்றே ஒரே காரணத்திற்காக இந்த வித்தியாசம் இருப்பது வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நிர்வாகத்திலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஏற்கனவே இருக்கும் கல்லூரிகள் நல்லமுறையிலே நடப்பதற்கு வாய்ப்பு வசதிகள் இருக்கும்பொழுது புதிதாகத் தொடங்கும் இந்தக் கல்லூரிகளுக்கு மட்டும் ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டிருப்பதை அரசு பரிசீலிக்க வேண்டும், பரிசீலித்து அதை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பயிற்சிமொழியாக நாம் தமிழ் மொழியைக் கொண்டிருக்கிறோம். அதுசம்பந்தமாக நான் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இந்தியோ, தெலுங்கோ, மலையாளமோ படிக்க விரும்பும் மாணவர்கள் இருந்தால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பைத் தர வேண்டும். கல்லூரியானாலும் சரி, அல்லது உயர்நிலைப்பள்ளியானாலும் சரி மாணவர்களில் யார் விரும்புகிறார்களோ அவர்கள் இந்தி படிக்கவும் ஒரு வாய்ப்பைத் தர வேண்டும். நம்முடைய குழந்தை இருக்கிறது என்றால் அதற்கு இந்தியாவிலுள்ள எந்த மொழியையும் படிப்பதற்கு உரிமை இருக்கிறது. அதை நாம் தடுத்துக்கொண்டிருப்பதாக இருக்கிறது. விருப்பமாக எடுத்துப் படிக்க விரும்பும் யாராகயிருந்தாலும் அவர்களுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். இந்தி, தெலுங்கு, மலையாளம், பிரெஞ்ச் இதைப்போன்ற மொழிகளைப் படிக்க ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்ற ஒருமுறையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்றைக்கு பி.யு.சி. வரை இலவசக் கல்வி முறை இருந்து கொண்டிருக்கிறது. அதை பி.ஏ. வரை நீட்டித்தர உள்ள சாத்தியக் கூறுகளை எல்லாம் அரசு ஆராய வேண்டும்.

[திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

இப்போது செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பி.ஏ. படிக்கவும், பி.ஏ. படித்த ஆசிரியர்கள் எம்.ஏ. படிக்கவும் சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்தச் சலுகையை மற்றவர்களுக்கும் கொடுத்தால் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் மேல்படிப்பு படிக்க வாய்ப்பு ஏற்படும். (மணி அடிக்கப்பட்டது)

* திரு. வீ. செ. கோவிந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களின் கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது அரசு கல்விக்காக ஆண்டுதோறும் மிக அதிகமான தொகையை ஒதுக்குவதிலிருந்தே கல்வியின் மேம்பாட்டிற்கு எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

மேலும் ஆரம்பக் கல்வி மாணவர்களின் கல்வித் தரத்தை அதிகப்படுத்த, மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும்.

பொதுவாக ஆரம்பப் பள்ளிகளுக்கு நல்ல கட்டடங்கள் கட்டித் தரவேண்டும். காரணம், பல ஊராட்சிகள் பங்குத் தொகை கட்ட வசதி இன்மையால் கட்டடங்கள் கட்ட முடிவதில்லை. ஆதலால் அதுபோன்ற ஊராட்சிகளுக்கு அரசே முழு மானிய அளவில் ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வர வேண்டும்.

படித்தவுடன் மாணவர்கள் அரசு உத்தியோகத்தையே நாடுவதை மாற்றியமைக்க ஆரம்பக் கல்வி முறையையே மாற்றியமைத்து தொழிற் கல்விக்கு முதலிடம் தரவேண்டும்.

பல மாவட்டங்களில் மதிய உணவு, கேர் நிறுவனமே தயாரித்து வழங்கும் திட்டத்தை எங்கள் மாவட்டமான தர்மபுரி மாவட்டத்திற்கும் விரிவுபடுத்தக் கோருகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் இருக்கும் இரண்டு அரசு கலைக் கல்லூரிகளில் போதுமான அளவில் பெண்களைச் சேர்த்துக் கொள்வதில்லை. ஆதலால் எங்கள் மாவட்டத்தில் அரசு தனியாக பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுகிறேன்.



1972 மார்ச் 18] [திரு. குழ. செல்லையா]

எனது தொகுதியில், காவேரிப்பட்டினத்தில், சுமார் 500 பெண்களுக்குமேல் படித்து வருகின்றனர். எனவே, அரசு இந்த ஆண்டு காவேரிப்பட்டினத்தில், பெண்கள் உயர்நிலைப்பள்ளி அமைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் பன்னிரண்டு அரசினர் உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. அவைகளுக்குப் போதுமான கட்டட வசதிகளும், விஞ்ஞான ஆய்வுக் கூடங்களும் இல்லாமல் இருக்கிறது. அது போன்ற பள்ளிகளுக்குக் கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் கட்ட அரசு முன்வரவேண்டும்.

வேலம்பபட்டி, ஜக்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வசதியாக, மாணவர் விடுதிகள் கட்ட அரசு முன்வர வேண்டும். பள்ளி மாணவர்களுக்கு இலவச வைத்திய பரிசோதனை செய்து, மாணவர்களின் உடல்நிலை பற்றிய பதிவேடு, ஒவ்வொரு பள்ளிகளிலும் வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. குழ. செல்லையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கல்வி மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டிலே ஏழை, எளிய மக்கள், பாட்டாளி மக்கள் ஏற்றத் தாழ்வு போக்கப்பட வேண்டுமென்றால் அதை வேறு எந்த ஸ்தாபனத்தின் மூலமோ, நிர்வாகத்தின் மூலமோ உண்டாக்க முடியாது. கல்வியின் மூலமாகத்தான் உண்டாக்க முடியும் என்ற கருத்தை அழுத்தந்திருத்தமாகக் கூற விரும்புகிறேன். கல்வியின் மூலமாக நாட்டிலே மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுக்கும் வகையில் ஏறத்தாழ 91 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 1966–67-ல் இருந்ததை விட இன்று 864 பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1966–67-ல் இருந்ததை விட இன்று 327 பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன. அதைப் போல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1966–67-ல் இருந்ததை விட இன்று 64 கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. இவற்றை எல்லாம் பார்க்கும்போது கல்வியின் முன்னேற்றம், எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை

[திரு. குழ. செல்லையா] [1972 மார்ச் 18

எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழக அரசுக்கு வரும் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கைக் கல்விக்காக இந்த அரசு செலவு செய்கிறது. அந்த அளவுக்குக் கல்வியின் முன்னேற்றத்திற்காக, கல்வியின் வளர்ச்சிக்காகப் பணியாற்றி வருவதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்றைக்குக் கல்வியின் முன்னேற்றம் ஆண்டுக்காண்டு மாறிக்கொண்டே வருகிறது, வளர்ந்து கொண்டே வருகிறது. விவர அறிக்கையில் இவை எல்லாம் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் 7 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கீரமங்கலத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒன்றியத்தின் அங்கத்தினராக இருக்கும் நிலையில் நான் ஒரு கருத்தை எடுத்துக் கூற விரும்புகிறேன். எஸ்.சி.ஓ. என்பவரின் கீழ் இ.ஓ.இ. என்று வைத்திருக்கிறார்கள். அவருக்கும் டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் அவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் எஸ்.சி.ஓ. இதுவரை அவர் செய்து வந்த பணிக்குத் தேவையில்லை. அவரை வேறு விதமான பணியிலே ஈடுபடுத்தலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிய உணவு பற்றி ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாண்டுக் காலம் நான் ஆரம்ப ஆசிரியனாகப் பணியாற்றியுள்ளேன். மதிய உணவுத் திட்டமானது மிக உயர்ந்த திட்டம். ஆசிரியர்களை அதிலே ஈடுபடுத்தாது தனியாக வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகரங்களில் மத்திய சமையல் கூடத்தில் சமையல் செய்து எல்லா இடங்களுக்கும் அனுப்பக்கூடிய நிலை இருக்கிறது. கிராமங்களில் அப்படிச் செய்ய வேண்டுமென்றால் போக்குவரத்துக்கு வசதி இல்லாத காரணத்தால் அது முடியாது. ஆகவே, ஒன்றியத்தின் மூலமாகத் தனியாக சமையல் ஆட்களைப் போட்டு அதற்காக வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கு இதிலே இருக்கின்ற தொடர்பை நீக்கிவிட்டால் அவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்ட முடியும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பக் கல்வியில் அதிகமான அக்கறை காட்டுகிறார்கள். ஆரம்பக் கல்வி கட்டடத்தின் அடித்தளமாகும். அடித்தளம் நல்ல முறையில் அமைந்தால்தான் மேல் மாடிகள் நன்கு அமைக்க முடியும்.



1972 மார்ச் 18] [திரு. குழ. செல்லையா]

அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் பி.டி. ஆசிரியர்களைப் போடும் திட்டத்தை உருவாக்க வேண்டும். உடற்பயிற்சிக்கான ஆசிரியர் ஒருவரையும் நியமிக்க வழி செய்ய வேண்டும். தமிழ்ப் புலவர் ஒருவரையும் போட வேண்டும். மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கின்ற நிலையில் மேலே உயர்நிலைப் பள்ளிகளுக்கு செல்லுகின்றபோது ஸ்டாண்டர்டு சரியாக இல்லையென்று சொல்லப்படுகிறது. கல்வித் தரம் வலிவடையும் விதத்தில் நல்ல முறையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 300 பிள்ளைகளுக்கு என்ற நிலை இல்லாமல் எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் பி.டி. பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். அடிப்படையான கல்வியில் அதிகமான அக்கறை காட்டினால் மேலும் நிலைமை வளரும். கிராமப் புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டுவசதி இல்லை. பெண் ஆசிரியை குடியிருப்பு மனை என்ற அளவில் ஒன்றியத்தில் இரண்டோ, மூன்றோ கட்டி வரும் நிலை இருக்கிறது. உயர் தொடக்கப் பள்ளிகள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஆசிரியர்கள் தங்குவதற்குக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராவூரணி தொகுதி பின்தங்கிய பகுதி. கிழக்குப் பகுதியான கடற்கரை ஓரத்தில் வாழும் ஏழெட்டு பஞ்சாயத்துக்களைச் சேர்த்து 30,000 மக்கள் வாழ்கிறார்கள். மேற்கு பகுதி வானம் பார்த்த பூமியாகும். இந்தப் பகுதியில் உள்ள 13 ஊராட்சி மன்றங்களில் 60,000 மக்கள் வாழ்கின்றனர். கீரமங்கலத்தில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியும், கொத்தமங்கலத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியும் கட்டட வசதி இல்லாமல் மரத்தடியில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. விஞ்ஞான பரிசோதனைக் கூடங்கள் இல்லை. அவற்றை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதி மக்கள் மிகவும் பின்தங்கிய மக்கள். அங்கு தங்கிப் படிப்பதற்கு ஒரு இலவச விடுதி ஒன்றை அமைத்துத் தரவேண்டும். கடற்கரைப் பகுதியில் பெருமகளூர் என்ற ஊர் இருக்கிறது. இங்குள்ள உயர்நிலைப் பள்ளியோடு இணைந்த ஒரு விடுதியைத் துவங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது கண்டு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

[திரு. குழ. செல்லையா] [1972 மார்ச் 18

ஒன்றை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். அறந்தாங்கி, ஆலங்குடி, பேராவூரணி, பட்டுக்கோட்டை இவற்றை உள்ளடக்கி ஒரு கல்லூரி அமைக்கவேண்டும். (மணி அடிக்கப்பட்டது) அதிராமபட்டினத்தில் ஒரு கல்லூரி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதி மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. அது நல்லமுறையில் செயல்படவில்லை. எனவே அவசியம் அந்தப் பகுதியில் இந்த நான்கு வட்டங்களுக்கு மத்தியில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு கல்வி முன்னேற்றத்திற்காக பாடுபடும் இந்த இலாகாவையும், அரசையும் பாராட்டி அமர்கிறேன்.

• THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Speaker Sir, I thought I would start with a word of praise for the Education Department but I think I will have to keep my remarks short because you have told us that we are not to take too much time:

MR. SPAKER: The hon. Member may take ten minutes.

THIRUMATHI ALDA M. FOWLER: Thank you, Sir.

I think education is far too important a subject to be stampeded through. We may drop some important points. When are we to take them up?

I find that special education has been clubbed together with Anglo-Indian education and schools that teach in English. I feel that special education should be treated separately, so that you know what is happening there.

I wish to make a few remarks on the subject of Anglo-Indian education and schools. I am the only speaker here who will speak for them. I hope you will hear me out. We feel in our schools (teachers also feel) that whenever benefits are given to schools, teachers and children, they are grudgingly given. For example, when notional pay was given, when house rent was given, we had to wait a long time to discover them, to stumble upon them and then to claim them. This should not be so because we have equal rights with others. We should be given equal rights. The same thing can be said about health.

Very few teachers know that there is a health scheme from which they may benefit. This should not be so.



1972 மார்ச் 18] [Thirumathi Alda M. Fowler]

Our teachers, headmasters and others working in our schools feel that we do not come in for consideration with regard to selection grades, State awards and National awards. In our long history of teaching, have we found no teacher who has been deserving of such awards or recognition? Surely this must be looked into and if there are such teachers, they should be given their just rights and what they deserve.

Look at our children in orphanages? We are still giving the same grant that we have been giving from the institution of this grant 156 and 159. I feel, Sir, that if you give Rs. 19 per child, to feed an orphan, that child can only go on half stomach. We have so many Oliver Twists in our orphanages and they dare not ask us for more. But today I claim that they should be given at least Re. 1 per day, coming to Rs. 30 per month. I think this must be examined clearly and the grant enhanced. Also we ask the parents to pay for children in orphanages, to make parent contribution. The parent who sends the child to orphanage would not do so if he were able to contribute in the first place. It is unfair to ask the parent to contribute.

Sir, regarding free education, it is the right of a child in the State to be educated freely. The Anglo-Indian child, has he not the right to claim free education? I feel he has. The schools that teach Anglo-Indian children should not be penalised by this. The fees due to the child should be made good to the institution and this should not be considered as subsidy or grant. It is the individual's right and on that ground we claim it and on that ground it should be paid to the schools and not as a special grant or subsidy.

I would like to draw the attention of the House and the department to the office that looks after the Anglo-Indian educacation. It is run with a skeleton staff. I wish that a job analysis and evaluation of work is done so that we may know what is exactly expected of them and the facilities we can extend to them. If we do not get answers from the office it is not their inefficiency that is to be blamed. They are carrying a heavy load and everyone knows it. For example I have been asking the office to let me know the name of the Anglo-Indian boy who got the highest marks in Tamil in 1970 and 1971. But they cannot drop their

[Thirumathi Alda M. Fowler] [1972 மார்ச் 18

work in order to give this small piece of information, because their workload is heavy. I would ask the department to please staff the office as it should be staffed so that they can work efficiently and well.

The Railway Schools in our State are a law unto themselves and seem to enjoy immunisation from this department, perhaps so since it is a central subject. Sir, it was my privilege to go round some of them. The school buildings are dilapidated and inadequate. They are not repaired. The children are taught in varandahs, and round the trees without proper cover. The office is not a real one and is shunted in to some alcove. The railways should take some pride in their institutions and try to produce something better than the schools I have visited.

All these I have said actually in a nutshell. I would have said much more. I want to make a plea on behalf of the Anglo-Indian community so that Government will recognise the good work done by Anglo-Indian schools. We are doing a good piece of work. We are proud of it. We are proud of our schools. If you are proud of them, we would like you to acknowledge it. Thank you, Sir.

* திரு. நா. வெ. குருசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின் மீது டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிப்பது என்று இந்த மானியக் கோரிக்கையின் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிப்பது உட்பட தொடக்கப் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரத்தை மேம்படுத்த ஏற்கனவேயுள்ள ஹையர் கிரேட் ஆசிரியர் பதவிகளை செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவிகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தின் கீழ் தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளை மாற்றியதன் மூலம் இதுவரை 19,500 செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஹையர் கிரேடு ஆசிரியர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இன்னும் அதிகப்படியாக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 900 பி.டி.



1972 மார்ச் 18] [திரு. நா. வெ. குருசாமி]

ஆசிரியர்களை உயர் தொடக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப் போவதாகவும் கூறப்பட்டுள்ளது. எல்லா உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பி.டி. படித்தவர்களை தலைமை ஆசிரியர்களாக நியமித்தால் பி.டி. படித்தவர்களின் தரமும் உயரும். பிள்ளைகளின் தரமும் உயரும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

நண்பகல் உணவுத் திட்டத்தை மைய சமையற்கூட திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வடஆற்காடு ஆகிய இடங்களில் தான் இது இருக்கிறது. இதைப் பார்க்கிற போது வட மாவட்டங்கள் வாழ்கின்றன, தென் மாவட்டங்கள் தேய்கின்றன என்ற நிலைமை தான் இருக்கிறது. இதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்திக் கொடுக்கவேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்களுக்கும் கட்டடங்கள் கட்டிக்கொடுப்பது பற்றி சில கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒன்றியங்களில் ஏராளமான பள்ளிகள் கட்டடங்கள் இல்லாத நிலையில் மரத்தடியிலும், கூரையால் வேயப்பட்ட கொட்டகைகளில், அவை இன்று விழுமோ, நாளை விழுமோ என்ற நிலையிலும், இருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்கு உடனடியாக கட்டட வசதி செய்து கொடுக்க வேண்டும்.

என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியில் ரங்கசமுத்திரம் என்ற இடத்தில் 4 இடங்களில் உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. இந்த 4 பள்ளிகளும் சத்திரம், சாவடிகளில் நடத்தப்படுகின்றன. அந்த ஊர் பொதுமக்களால் கொடுக்கப்பட்ட நன்கொடை மூலமாகவும், அரசு மானியத்தின் மூலமாகவும் கிட்டத்தட்ட ரூ. 25,000-ல் ஒரு கட்டடம் கட்டப்பட்டு இருக்கிறது. இன்னும் இரண்டு பள்ளிக் கட்டடத்தை உடனடியாக கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளில் இருக்கும் ஆய்வுக்கூடங்களுக்குப் போதுமான சாதனங்களை அளிப்பதற்காக பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி 1969-70 முதல் 1971-72 வரை மூன்று ஆண்டு காலத்தில் 235 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 1972-73-ல் ரூ. 35 இலட்சம் செலவில் 88 உயர்நிலைப் பள்ளிகளுக்கும்

கொடுக்க இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஆண்டிப்பட்டி, ஜெயமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இரண்டு பள்ளிகளிலும் உடனடியாக ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வரசநாடு, கடமலைக்குண்டு ஆகிய மலைப்பகுதிகளில் 23 பள்ளிகள் இருக்கின்றன. 77 ஆசிரியர்கள் அங்கே இருக்கிறார்கள். அதனுடைய பரப்பளவு 240 சதுர மைல். பஸ் செல்லும் இடத்தில் இருந்து 15 மைல் நடந்து சென்றுதான் அந்த ஆசிரியர்கள் வேலை பார்க்கச் செல்லவேண்டியிருக்கிறது. வருடாவருடம் அந்த மலைப் பகுதியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு மாறுதல் கொடுக்கும்போது ஊராட்சி ஒன்றியங்களில் பெரும் தொல்லை ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு ஊக்குவிப்பு படி கொடுத்தால் அவர்கள் அங்கேயே வேலை பார்த்துச்செல்வதற்கு எந்தவிதமான சிரமும் இல்லாமல் இருப்பார்கள். ஆகவே, அந்த மலைப்பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு படி கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இந்தச் சபையின் முன்னால் வைத்து இருக்கிற மானியக் கோரிக்கையின் மீது ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கல்வி கற்றுக்கொள்ளாதவர்கள் கூட மிகுந்த அறிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். கல்வி கற்றுக்கொள்வது என்பது அந்த அறிவை விரிவுபடுத்தி அவர்களின் வாழ்க்கையை தாங்களாகவே அமைத்துக் கொண்டு மற்றவர்களின் வாழ்க்கைக்கும் உதவ வேண்டுமென்ற நிலைக்குத்தான், கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது என்ற கருத்து இப்போது மேலோங்கியிருக்கிறது. ஆனால் அதற்கு உதவியாக தற்போது இருக்கிற கல்வி இருக்கிறதா என்று பார்த்தால் அப்படியில்லை என்று தான் தேர்ந்த கல்வியாளர்கள் கூட கூறுகிறார்கள். அந்தக் கல்வியை மாற்றியமைப்பதற்கு பல்வேறு விதமான நிபுணர்களைக்கொண்ட பல்வேறு கமிட்டிகளை அமைத்து அதிலே அவர்கள் பல நேரங்களில் பரிந்துரை வழங்கி இருந்தும் கூட அந்தக் கல்வி எந்த நோக்கத்திற்காக கற்றுக்கொடுக்கப்படவேண்டுமோ அந்த





நோக்கத்தை நிறைவேற்றுகிற வகையில் அது இன்னும் அமையாமல் இருப்பது வேதனையளிக்கும் ஒன்றாக இருக்கிறது. இந்த அறிக்கையில் கூட அது சம்பந்தமாக ஆராய்வதற்கு சில கமிட்டிகள் போட்டு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக்கமிட்டிகள் விரைவாக தங்களுடைய பரிந்துரைகளை வழங்கி, அரசாங்கம் உடனடியாக அதை ஏற்று மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

கல்வி கற்றுக்கொள்வதிலே மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இருக்கும் விகிதாச்சாரம் மிகவும் இடைவெளி உள்ளதாக இருக்கிறது. மாணவர்களை தங்களுடைய கட்டுக்குள் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு மாணவனையும் தெரிந்து கொண்டு, அவனுக்கு ஏற்ற வகையில் கல்வியை ஆசிரியர்கள் தரவேண்டுமானால், ஒருசில அளவில் எண்ணிக்கை கொண்ட மாணவர்களுக்குத்தான் செய்ய முடியும். இன்று ஆசிரியர்கள் பல பேருக்கு பாடங்கள் சொல்லிக் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் பல பேர் இன்று வேலையில்லாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறபோது இந்த விகிதாசாரத்தை மாற்றினால் நன்றாக இருக்கும். ஒரு கட்டத்திலே ஆசிரியர்கள் கிடைக்கவில்லையே என்ற கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்று நிலைமை வேறு மாதிரியாக இருக்கிறது. அமைச்சரவர்கள் பல நேரத்தில் கூறியிருக்கிறார்கள். பணம் போதுமான அளவு இல்லை என்று. நாம் செலவழிக்கிறபோது, எதற்கு எந்த அளவில் எவ்வப்போது அதிகமாக பணத்தை செலவழிக்கவேண்டுமென்பது தான். நாம் கல்விக்கு அதிகமாக பணத்தை செலவழிக்கவேண்டுமென்று சொல்வது சிந்திக்கவேண்டியதொன்றாகும்.

கல்வி என்பது பணத்தை விட அதிகமாக தேவைப்படுகிற ஒன்றாகும். ஜனநாயகம் முறையாக இயங்கவேண்டுமானால், சோசலிஷ பொருளாதாரம் சரியாக ஏற்படுத்தப்படுமானால், அதற்குக் கூட கல்வி மிக பொருத்தமானதாக இருக்கிறது என்பதை இந்தச் சபை அறியும். ஆகவே, அந்த விகிதாசரத்தை மாற்றி அமைப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

கல்வியைப் பற்றி பார்க்கிறபோது, மாணவர்களையும், ஆசிரியர்களையும் பற்றிப் பார்க்கிறோமே தவிர, இன்னும் அதிலே பணி செய்யும் பணியாளர்களைப் பற்றி சரியான கவனத்தில் எடுப்பதே

[திரு. எம். சுரேந்திரன்] [1972 மார்ச் 18

இல்லை. அவர்களிடமிருந்து புகார்கள் வருகின்றன. மற்ற காரியாலயங்களில் இருப்பது போல் அங்கே கண்காணிப்பாளர் இல்லை. உள்ளே இருப்பவர்களையே வைத்துக்கொண்டு வேலை வாங்கிவிட்டு, அவர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று புகார் வருகிறது. நாம் கல்விக்காக செலவழிக்கும் தொகை முழுதாக சரியாக செலவிடப்படவேண்டுமானால், அங்கே உள்ள பணியாளர்களின் குறையையும் கவனிக்கவேண்டியது பிரதானமானதொன்றாகும். அங்கே உள்ள பணியாளர்களுக்கு நிபுணர்கள் கமிட்டி ஆராய்ந்து எவ்வளவு செலவழிக்கலாம் என்று சொல்லியிருக்கிறதோ அந்தச் சதவிகிதத்தை விட குறைந்த அளவு செலவழிக்கப்படுகிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது. மற்ற மாநிலங்களை விட இவ்வளவு குறைவாக செலவழிக்கப்பட்டு, இவ்வளவு பெரிய அளவுக்கு சிறப்பாக நல்ல முறையில் காரியங்கள் செய்கிறது என்று சொன்னால் அது பெருமைப்படக்கூடியது தான். அப்படி குறைவான செலவின் மூலம் நாம் செய்கிற அத்தியாவசியமான காரியங்கள் தடைப்பட்டு விடுகின்றன. ஆகவே, அவர்களுடைய விகிதாசாரத்தை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்ற உடற்பயிற்சி ஆசிரியர்கள் சம்பந்தமாக இந்த மன்றத்தில் உள்ளவர்களோ, மற்றவர்களோ சரியாக கவனிக்கவில்லை. அவர்களிடமிருந்து நிறைய புகார்கள் வருகிறது. உடற்பயிற்சி மாணவர்களுக்கு மிகவும் தேவையான ஒன்று என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். ஆகவே, அவர்களுடைய குறைகளையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளில் விஞ்ஞான சாதனங்கள் மிகவும் தேவையாக இருக்கின்றன. விஞ்ஞான சாதனம் இல்லாத உயர்நிலைப் பள்ளிகள் இருக்கிறது. வைத்தீஸ்வரா உயர்நிலைப்பள்ளி என்று மேட்டூரில் இருக்கிறது. அது தனியார் பள்ளி. அவர்கள் அரசாங்கம் விதித்த அத்தனை நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலும், அங்கே விஞ்ஞான சாதனங்கள் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று புகார்கள் கூறி வருகிறார்கள். அந்த விஷயத்தை கவனத்தில் எடுத்துக்கொண்டு விஞ்ஞான சாதனங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 18] [திரு. எம். சுரேந்திரன்]

கடைசியான ஒன்றைப்பற்றி கூறவிரும்புகிறேன். மேட்டூரிலே இருக்கும் பகுதிகளில் பல உயர்நிலைப்பள்ளிகள் இருந்தாலும் கூட, தொழிற்சாலைத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியான சேலம் கேம்பில் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்திக்கொடுத்து, அங்கே ஆரம்பப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மீண்டும் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, அங்கே உயர்நிலைப்பள்ளி ஆரம்பிக்க அரசு முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. பெருமாள் : தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கல்வி மான்ய நிதி அறிக்கையின் பேரில் எனக்கு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு, நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி மான்யத்திற்காக நமது அரசு ரூ. 90 கோடி ஒதுக்கியிருக்கிறது. அந்த அளவுக்கு மிக மகிழ்ச்சி அடைகிறேன். கல்வி மேம்பாட்டில் இது நாள்வரை நாம் அடைந்துள்ள சாதனைகளைப்பற்றி நாட்டிலுள்ள கல்வி நிபுணர்களும், வல்லுனர்களும் பாராட்டியிருப்பதை நாம் கண்டறிகிறோம். கல்வி நிலையங்களிலே பாடங்களைக் கற்பிப்பதற்காகவும், தரத்தை உயர்த்துவதற்காகவும் அனைத்து நாடுகளும் பாராட்டும் அளவில் இங்கு ஒரு குழுவை அரசாங்கமே அமைத்திருக்கிறார்கள்.

மேலும், பி.டி. ஆசிரியர்களின் சம்பள நிலைமையைப்பற்றி ஆராய்வதற்கு நமது தலைமைச் செயலாளர் தலைமையில் குழு ஒன்றை நமது அரசாங்கம் நியமித்திருக்கிறது.

அதைப்போலவே நமது உடல் பயிற்சி ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவதற்கும், உடல் பயிற்சி சம்பந்தமான பாட திட்டங்களை விரிவாக்குவதற்கும் அரசு ஒரு கமிஷன் நியமிக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

நமது அரசு பொறுப்பேற்ற பிறகு கல்வியின் தரம் மிக உயர்ந்த அளவிலே உயர்ந்திருக்கிறது. ஏழை எளிய மக்கள் மிக நல்ல முறையிலே உயர்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. செ. பெருமாள்] [1972 மார்ச் 18

நான் உடல் பயிற்சி ஆசிரியராக 7, 8 ஆண்டு காலம் பணியாற்றிய பிறகு இந்த மாமன்றத்திற்கு வர வாய்ப்பு அளித்திருக்கிறார்கள் நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். என் போன்றவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. அந்த அளவில் நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன்.

உடல் பயிற்சி ஆசிரியர்கள் முன்பு பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழில் கையெழுத்திட ஒரு வாய்ப்பு இருந்தது, அந்த வாய்ப்பு இப்போது நீக்கப்பட்டுவிட்டது. அந்த வாய்ப்பைத் தந்தால், அங்குள்ள மாணவர்களுடைய கட்டுப்பாட்டை வளர்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். உடல் பயிற்சி ஆசிரியர்களுக்கு என்.சி.சி. ஸ்கௌட்ஸ் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அவர்கள் பயிற்சி பெறுவதற்கு வயது வரம்பை 40 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாம் நிலை உடற்கல்வி ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு டி.எஸ்.எல்.சி. தேர்வு எழுத அனுமதிக்கப்படுதல் வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்கள் பி.ஏ. பட்டப்படிப்பு படித்து முடிந்ததும் பேச்சலர் ஆப் பிசிகல் எஜுகேஷன் பட்ட பயிற்சியில் குறுகிய கால பயிற்சி செல்ல அனுமதிக்க வேண்டுவதுடன், மேற்படி ஆசிரியர்கள் பி.ஏ., பி.எஸ்சி. போன்ற பட்டப் படிப்புகளை முடித்ததும் குறுகிய கால பி.டி. பட்ட பயிற்சி செல்ல அனுமதிக்க வேண்டும். உடல் கல்வி ஆசிரியர்களுடைய நியமனங்கள் துவக்கப்பள்ளிகளிலும் இடம் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும்.

இதுவரையில் 250 மாணவர்களுக்கு ஒரு உடல் பயிற்சி ஆசிரியர் என்ற முறை இருந்து வருகிறது. அதை 200 மாணவர்களுக்கு ஒரு உடல் பயிற்சி ஆசிரியர் என்ற முறையில் மாற்றி, அதற்குத் தகுந்தாற்போல் உடல் பயிற்சி ஆசிரியரை நியமிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எட்டு ஆண்டு காலம் தொடர்ந்து இரண்டாம் நிலை உடற்கல்வி ஆசிரியராகப் பணி புரிந்த அனைவருக்கும் ஓர் தேர்வுடன் கூடிய குறுகிய கால பயிற்சி அளித்து முதல்நிலை உடற்கல்வி ஆசிரியர்களாக்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று வேண்டிவிரும்பி கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 18] [திரு. செ. பெருமாள்]

உடல் கல்வி டைரக்டர்கள், பிஸீகல் டைரக்டர்கள் 10, 15 ஆண்டு காலம் பிஸீகல் டைரக்டராக இருந்தால், மற்ற பி.டி. பட்டதாரி ஆசிரியர்களைப் போல அவர்களும் தலைமை ஆசிரியராக வருவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். 10 ஆண்டுகள் பணிபுரிந்த அனைவருக்கும் தேர்வுநிலை (செலக்ஷன் கிரேடு) அளிக்கும்படி சிபாரிசு செய்வதுடன் தேர்வு நிலைப் பதவிகளை 1—1—1971 முதல் அமுலாக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் சர்டிபிகேட் கோர்ஸ், டிப்ளமா கோர்ஸ் என்று இரண்டு பிரிவுகள் தான் இருக்கவேண்டும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும். இப்பொழுது லோயர் கிரேடு, ஹையர் கிரேடு, டிப்ளமா பிசிகல் எஜுகேஷன் என்று மூன்று பிரிவுகள் வைத்திருக்கிறார்கள், அதைத் தவிர்க்கவேண்டும். உடல் பயிற்சி ஆசிரியர்கள் வகுப்புக்குச் செல்லும்பொழுது ஒரு தனி உடை அணிந்து செல்லவேண்டும். அதற்கு அவர்களுக்கு ஒரு கிட் அலவன்ஸ் அல்லது டிரஸ் அலவன்ஸ் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் பள்ளிகளில் மருத்துவ பரிசோதனையை பற்றி ஒரு விதிமுறையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உடல் பயிற்சி ஆசிரியர்கள் பர்ஸ்டு எய்டு பயிற்சி முடித்திருக்கிற காரணத்தினால் மருத்துவ பரிசோதனை செய்யும்போது அவர்களை பயன்படுத்தினால் நலமாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு ஆற்றியிருக்கிற தொண்டுபற்றி நான் சொல்லப் போனால், நமது அரசு பொறுப்பேற்ற பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள், பிற்பட்ட சமுதாயத்தினர், நடுத்தர மக்கள் அனைவரின் கல்வி மேம்பாட்டிற்காக, அவர்களின் கல்வி தரத்தை உயர்த்துவதற்காக மிக அருமையான திட்டங்களை வகுத்து, அவர்களின் மேம்பாட்டிற்காக பல வாய்ப்புகளை தந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நான் அரசை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

*<u>திரு. ந. நாச்சிமுத்து</u> : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு கல்வி மான்யத்தை ஆதரித்து நான் எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. ந. நாச்சிமுத்து] [1972 மார்ச் 18

தமிழகத்தின் வரவு–செலவுத் திட்டத்தில் பெரும்பான்மையாக கல்விக்காக ரூ. 100 கோடிக்கு மேலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்த நிதியானது பரவலாக எல்லா மக்களுக்கும் நாட்டிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் ஒரு சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. குறிப்பாக உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொள்வோமானால் பெரிய நகரங்களிலும், அதற்கு அடுத்தாற்போல உள்ள நகரங்களிலும் தான் உயர்நிலைப் பள்ளிகள் பெரிதும் நடந்துகொண்டிருக்கின்றன. கிராமப் புறங்களைப் பொறுத்தவரையில் இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகள் மிகக் குறைவாகத் தான் ஏற்படுத்தப்பட்டுள்ளன; எண்ணிக்கையில் குறைவாகத் தான் இருக்கிறது. இப்பொழுது உயர்நிலைப் பள்ளி 5 மைல்களுக்கு இடையிலே இருக்கக்கூடாது என்று பொதுவாக அரசாங்கத்தினுடைய குறிப்பு இருந்தாலும், அந்த அளவுக்குக்கூட இல்லாமல், நாட்டிலே கிராமப் பகுதியில் குறைவாகத்தான் இருக்கிறது.

நமது மின்சார வாரியத்தினால் எப்படி தமிழ் நாட்டில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் ஆங்காங்கு மின்சார வசதி கொடுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஒரு திட்டத்தை வைத்து செயல்பட்டு வந்திருக்கிறதோ, அதே போல, பொதுப்பணித் துறையில் 1,500 மக்களைக் கொண்ட கிராமங்களை இணைக்கவேண்டுமென்று ஒரு தீவிர சாலை அமைப்புத் திட்டம் தீட்டப்பட்டு, செயல்பட ஏற்பாடு செய்திருக்கிறதோ, அதைப் போல, தமிழகம் முழுவதையும் எடுத்துக் கொண்டு ஐந்து மைல்களுக்குப் பக்கத்தில் எப்படியும் ஒரு உயர் நிலைப் பள்ளி ஏற்படுத்த வேண்டும் என்ற முறையில் ஒரு தீவிர திட்டத்தை ஏற்படுத்தி, ஆங்காங்கு உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளி ஏற்படும்பொழுது, அதைப் போல ஆங்காங்கு கலைக்கல்லூரிகளும் ஏற்படுத்தப்படவேண்டும் என்று அரசு ஒரு முடிவான உறுதியான திட்டத்தை வகுத்துக்கொள்ளவேண்டும். கலைக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பெரிய நகரங்களில் தான் அதிகமாக கலைக்கல்லூரிகள் இருக்கின்றன, பொறி இயல் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்றபடி கிராமப்பகுதிகளை எடுத்துக் கொண்டால் பெரிய கல்லூரிகளும் அப்படியே பெருநகர்களில் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லாமலே, முயற்சி இல்லாமலே இருந்துகொண்டிருக்கிறது. எப்படி உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த திட்டம் வகுத்துக்கொள்கிறோமோ, அப்படி ஒவ்வொரு வட்டத்தின்



1972 மார்ச் 18] [திரு. ந. நாச்சிமுத்து]

தலைநகரிலும் கட்டாயமாக கலைக் கல்லூரி ஏற்படுத்தவேண்டும் என்று அரசு குறியீடு வைத்து, அதற்குத் தகுந்தாற்போல் செயல்பட வேண்டும் என்று நான் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி செயல்பட்டால் கிராமப் பகுதியிலுள்ள அத்தனை மக்களும் நன்றாக பயன் அடைவார்கள் என்று நான் இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழகத்தினுடைய பழைய பண்பாடுகளை விடாமல் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தான் தமிழகத்தின் தொன்மையான பாரம்பரியத்தை பாதுகாத்துக்கொண்டு வருகிறார்கள். கிராமப் பகுதி மக்கள் அவர்கள் கொடுக்கிற வரிப் பணத்துக்கு தகுந்தமாதிரி அவர்கள் கல்விச் சலுகைகளை அடையவில்லை என நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் சொன்ன இந்த இரண்டு குறிக்கோள்களையும் வைத்துக் கொண்டு கிராமப் பகுதி மக்கள் கல்வி பெறுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்காக ஒரு தொகை ஒதுக்கி, அதை எப்படிப்பட்ட பள்ளிகளுக்குக் கொடுப்பது என்று நடைமுறை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது எப்படி நடைமுறை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், 500 பிள்ளைகளுக்கு மேற்கொண்டு படிக்கக்கூடிய பள்ளிகளுக்குத் தான் விஞ்ஞான ஆய்வுக் கூடங்களுக்கு நிதி உதவி செய்யப்படும் என்று நடைமுறை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த முறையால் பெரிய ஊர்களில் வைக்கப்பட்டிருக்கிற உயர் நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்கும், அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வி அறிவு பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறதே, தவிர, கிராமப்பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது இருக்கிற நடைமுறையை மாற்றி, ஒரு ஆண்டுக்கு இத்தனை பள்ளிகளுக்கு குறைந்த எண்ணிக்கை கொண்ட மாணவர்கள் உள்ள பள்ளிகளானாலும் அவைகளுக்கும் விஞ்ஞான ஆய்வுக் கூடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கவேண்டும் என்ற ஏற்பாட்டை நடைமுறையில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் இரண்டு ஊர்களில், அதாவது பொருளூரிலும், ஒட்டன்சத்திரத்திலும் உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் இரண்டு தொடங்கப்படவேண்டும் என்று சென்ற ஆண்டு முதல் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். இதை அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அடுத்து தாராபுரம் நகரில் கலைக்கல்லூரி ஒன்றினை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டும், என் உரையினை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கல்விக்காக மொத்தத்தில் நான்கில் ஒரு பங்கினை நாம் செலவிடுகிறோம். இது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இருப்பினும் தமிழகத்தினைப் பொறுத்த வரையில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை 60 சதவிகிதம் பேர்—அதாவது கையெழுத்தே போடத்தெரியாதவர்கள், தற்குறிகள் எண்ணிக்கை 40 சதவிகிதத்தினர் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இது வேதனைக்குரிய ஒன்றாகும். இது மாற்றப்பட்டே தீரவேண்டும். ஒரு ஐந்தாண்டு திட்டம் ஒன்றினைப் போட்டு, அடுத்த ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களே இல்லை என்ற அளவில் பெரியதொரு மாற்றத்தினைக் கொண்டுவர, நாம் இன்னும் கொஞ்சம் கல்வித் திட்டத்தினைத் தீவிரப்படுத்த வேண்டும்.

மூன்றாவது வகுப்பு வரையில் கட்டாயக் கல்வி என்ற திட்டத்தினை தீவிரமாகக் கொண்டு வந்து அதே நேரத்தில் முதியோர்களுக்கும் கட்டாயக் கல்வியளித்திட ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இப்போதைக்கு 300 பேர்களைக் கொண்ட எல்லா ஊர்களிலும் ஒரு ஆசிரியர் பள்ளியாவது இருக்கவேண்டும் என்ற நிலையிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே இரவு நேரங்களில் முதியோர்களுக்கும் கல்வியளிப்பது என்ற திட்டத்தினைச் செயல்படுத்தலாம். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது முதியோர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும் என்றதொரு நிலை ஏற்பட்டால் தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களே இல்லை என்ற ஒரு நிலையினை நாம் ஏற்படுத்தமுடியும். எனவே, இப்படிப்பட்டதொரு திட்டத்தினைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கொடுக்கப்பட்டுள்ள ஐந்து நிமிடத்தில் எதைத்தான் பேசுவது என்றே புரியவில்லை. எனவே, இதை இந்த அளவோடு விட்டுவிட்டு ஆசிரியர்கள் பிரச்னைக்கு வருகின்றேன். அவர்களைப் பொருத்த





வரையில் பல பிரச்னைகள் இருக்கின்றன. ஒரு பள்ளியில் முதுநிலை ஆசிரியர் தலைமை ஆசிரியராக இருக்கும்போது அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கப்பெற்று மாவட்டக் கல்வியதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுப் போகும்போது அவருடைய "லீன்" அந்தப் பள்ளிக் கூடத்திலேயே தொங்கிக்கொண்டு இருக்கின்றது. இதன் காரணமாக பதவி உயர்வு பெற்று, இன்னொருவர் அங்கே வரமுடியவில்லை. ஆகவே, பலர் பதவி உயர்வு கிடைக்காமல் திண்டாடிக்கொண்டு இருக்கின்றார்கள். இதைத்தவிர செலக்ஷன் கிரேடு பற்றியும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். செலக்ஷன் கிரேடை ஆசிரியர்கள் வரவேற்கின்றார்கள். ஆனால் நிலைமை எப்படியிருக்கிறது என்றால் இந்த போர்டு பள்ளி ஆசிரியர்களுக்கு அங்கே ஆறு அல்லது ஏழு ஆண்டுக்காலம் வேலை பார்த்தால் செலக்ஷன் கிரேடு கிடைத்து விடுகிறது. ஆனால் அந்த போர்டு ஆசிரியர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த பி.டி. ஆசிரியர்கள் பலர் அரசாங்கப் பள்ளியில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த கிரேடு சீக்கிரம் கிடைப்பதில்லை. "நான் சொல்லிக்கொடுத்த மாணவனுக்கு இப்போது செலக்ஷன் கிரேடு கிடைத்திருக்கிறது. ஆனால் எனக்குக் கிடைக்கவில்லை" என்று 15 ஆண்டுக் காலம் பணிபுரியும் பல ஆசிரியர்கள் சொல்லி வருத்தப் படக்கூடிய நிலை இருக்கின்றது.

அடுத்து கெஜெட் பதவிகளைப் பொறுத்த மட்டில் ஒரு ஆயிரம் மாணவர்கள் படிக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியர் கெஜெட் பதவி உள்ளவராக இருக்கலாம் என்று இருக்கிறது. அப்படியிருந்தும் பல பள்ளிக்கூடங்களிலே கெஜெட் அந்தஸ்து உள்ள ஹெட்மாஸ்டர்கள் நியமிக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொருத்தமட்டில் இந்த நிலை நீடித்துக்கொண்டு இருக்கின்றது.

இதுபோன்று இன்னும் முக்கியமானதொரு பிரச்னை, இந்தப் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது பற்றிய பிரச்னை. கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொறுத்த மட்டில் இந்தப் பிரச்னை அங்கே கிடையாது. அங்கே பஞ்சாயத்து யூனியனின்கீழ் எந்தப்பள்ளியும் இயங்கவில்லை. அங்கே தனியார் பள்ளி ஆசிரியர்களும் எல்லோரும் நேரடியாகச் சம்பளம் பெறுகின்றார்கள். அதே போன்று தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களிலுள்ள பள்ளிகள் பஞ்சாயத்து யூனியன்கள்கீழ் இருந்தாலும்சரி, முனிசிபாலிடிகள்கீழ் இருந்தாலும்சரி, அந்தப்பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடியாக அரசாங்கம் சம்பளம் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்தால் ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும்.

[திரு. எ. சுவாமிதாஸ்] [1972 மார்ச் 18

இன்னும் ஒரு பிரச்னை. மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் இருக்கின்றது. அங்கே படித்துத் தேர்வுபெறும் மாணவர்களுக்கு புலவர் பட்டம் கொடுக்கின்றார்கள். தனியார் பள்ளிகளில் இவர்கள் முதல் கிரேடு தமிழ்ப் பண்டிதராக இருப்பதற்கான அந்தஸ்தையும் அரசு கொடுத்திருக்கின்றது. இது ஒரு முக்கியமான பிரச்னை. தமிழ் ஆசிரியர்கள் இதுபற்றி வெகுவாக எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். எனவே இதுபற்றிக் குறிப்பிடுவது மிகவும் அவசியமாகும். வித்துவான்களுக்கு உள்ள அதே தகுதியின் அடிப்படையில் இவர்களுக்கும் பதவி உயர்வுகள் கொடுக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. ஆனால் அரசாங்கத்துறையில் பணியாற்றும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தேர்வு பெற்ற இரண்டாம் கிரேடு பண்டிதர்களுக்கு முதல் கிரேடு கொடுக்காமல் இருக்கின்றார்கள். இதை அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு மாவட்ட ஸ்போர்ட்ஸ் கவுன்சிலின்கீழ் பல உடற் பயிற்சியாளர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கும் பல குறைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அரசு பரிசீலித்து இப்படிப்பட்ட குறைகளைப் போக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Chairman, let me at the outset say that the Tamil Nadu Government has not made any substantial improvement in the matter of education. During 1966-67, the money spent was about 22 or 23 per cent of the total revenues; and the same 22 or 23 per cent is the amount spent today also on education. The number of schools that increased during this period 1966–72 or 1971 August, is 864 elementary schools, 327 High Schools and about 60 colleges and other institutions, while some had been closed or some opened. I do not think we can take pride in the fact that we have spent much more on education than what we have been doing during the period of the previous Governments.

Now, coming to the pattern of education which is very important, Sir, I feel that unless and until the men behind the machinery or behind the administration is clever and capable in handling the machinery and administration carefully, the country cannot progress. So Education Department must provide for these. But unforunately for Tamil Nadu, perhaps even for India, the standard of education has come down; it has not come down



1972 மார்ச் 18] [Thiru K. M. Subramaniam]

because of the increase in the number of pupils; it has come down because of various other factors which I think the present Government will be careful enough to examine, not by a Committee of Experts, because, the other day I found in the matter of our Five-Year Plans scientists examining our Plans, so what we want is not scientists, but people who know the subject, know why people are not behaving properly, people who know the reason for the indiscipline in schools, the reason for indiscipline in houses, indiscipline in offices and wherever we go we find indiscipline. This is not due to the boys and youngsters, but it is all due to seniors who do not bring them up properly and who do not put them in the proper way of life and give them proper instructions.

Sir, another important thing I find is that so far as building programme is concerned, costly buildings are built in some places and particularly in the City of Madras. If only the Hon. Minister will take the trouble of inspecting a few of the elementary schools, he will find to his utter surpriser that many elementary schools are housed in such bad places, that the whole environment is so bad, education there is so worse and the pupil's and teacher's behaviour is so worse that much requires to be done. In these circumstances, I do not understand how we can improve.

We have 1,65,000 children in Elementary Schools in Madras alone and there are 29 High Schools. But what is the percentage of results? It is not because the teachers are bad; the teachers are B.A., L.Ts. and M.A., L.Ts. and as good as elsewhere. But the reason is want of supervision, want of proper understanding on the part of both the teachers and the students.

Sir, I know we have got a big financial difficulty, so far as education is concerned, particularly in this part of Madras. We have been spending financial resources from the educational cess. It is part and parcel of a percentage of your property tax. To my utter surprise, the other day, I was told that from 1959–1967 only 10,000 houses had been built by the Municipal Corporation. If that is the case, what is the increase in revenue? It is 1,20,00,000 as educational cess and we have to maintain 1,65,000 children. Therefore the Hon. Minister can understand the resources that are necessary. It is difficult, I know, to find the resources. It is not easy.

But top most priority should be given to education.

Lastly, so far as education is concerned, it should be purposeful education. We have three categories of people living in the country. One is labour, another is the white-collared worker and the third is the officer. If Seventh or Eighth Standard is fixed as the minimum qualification for labour—also the study of physical education—I am sure our institutions will thrive. Now, Thiru K. N. Raj, the famous educationist has reported that a higher job can be given to a person who passed the Eleventh Standard, a standard equivalent to the Central School. So that standard can be adopted as the maximum qualification necessary for any job in the Government except for the All India Administrative Service and the Indian Police Service. I think efficiency will not suffer and certainly the rush of people to colleges will be reduced. So, I recommend to the Hon. Minister for Education that he should study the report of Dr. K. N. Raj if he has not already studied it.

I wanted to refer to many things but for want of time I could not do so. But I have got one more point to refer to. That is, in order that the local talent should be encouraged, all local way of life should be encouraged and also Tamil Literature or language literature should be encouraged. Also people should be attracted to study language literature. I hope and trust that this Government will soon recognise the need for oriental schools so that along with Tamil, Sanskrit and Arabic could be studied.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்) : இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், திரு. சுவாமிதாஸ் அவர்களும் தங்கள் கருத்துக்கள் முழுவதையும் சொல்ல வாய்ப்பு கிடைக்கவில்லை என்று வருத்தப் பட்டுக்கொள்கிறார்கள். இன்னும் ஆளும் கட்சி சார்பில் 6 பேர்களும், உங்கள் கட்சியின் சார்பில் 4 பேர்களும் இந்த விவாதத்தில் பேசவேண்டியிருக்கிறது. எனவே, பேசவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் குறைந்த அளவிலே நேரம் ஒதுக்கப்படுகிறது. உறுப்பினர்கள் குறைவாக இருப்பார்களானால் அதிக நேரம் ஒதுக்கியிருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. க. சுப்பு : மாண்புமிகு தலைவரவர்களே, கனம் கல்வி அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இன்றையக் கல்வித்திட்டம் தேசிய உணர்வினையும் சோஷலிச சிந்தனையையும் வளர்க்கும் முறையில் அமைந்திருக்கவேண்டும். விஞ்ஞான சோஷலிசத்தை தன்னுடைய கொள்கையாக ஏற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் அதற்கேற்ப பாடத்திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். இன்றையப் பாடத்திட்டத்தில் தேசிய உணர்வு வளர்க்கும் அம்சங்கள் குறைவாகவே இருக்கின்றன. கல்கத்தாவிலும், கேரளப் பல்கலைக் கழகத்திலும் மார்க்சிய மெய்ஞானத்தைப் பாடத்திட்டங்களில் சேர்த்து, பயில்வதற்கு வழி செய்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாணவர்கள் அத்தகைய கல்வியைக் கற்பதற்கு எவ்வித ஏற்பாடும் இல்லை. அரசாங்கத்தின் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே உள்ள இடைவெளி இமயத்திற்கும் குமரிக்கும் இருப்பதைப்போன்று விரிந்து கிடக்கின்றது. அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமாகிறது.

மாணவர்களுக்குப் பல்கலைக் கழகங்களில் ஆட்சிக்குழுவில் இடம் அளிக்கவேண்டும் என்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனினும் நடைமுறையில் கொண்டுவரத் தயக்கம் காட்டி வருகிறது. எதை எடுத்தாலும் பரிசீலிக்கப்படும் என்ற பதில்தான் அமைச்சரிடத்திலிருந்து அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு இத்தகைய பிரதிநிதித்துவம் அளிப்பதில் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு, செயல்படுத்த முற்பட்டிருக்கிறார்கள். கேரளத்தில்கூட அக்கடமிக் கவுன்சிலில் மூன்று மாணவர்களுக்கும், செனட்டில் 5 மாணவர்களுக்கும் இடம் அளிக்கும் வகையில் புதிய சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். எதற்கு எடுத்தாலும் கேரளத்தை பார் என்று காட்டுகிறார்களே என்று வருத்தப்படுவதை விட்டுவிட்டு, அங்கே நடைபெறுகின்ற நல்ல செயல்களை இங்கேயும் செயல்படுத்த முனைய வேண்டும். தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் வேலை பார்த்துக்கொண்டே சட்டமன்றங்களில் அங்கம் வகிப்பதை தடுக்கும் வகையிலும், கேரளத்தின் புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய முறை நமது மாநிலத்திலும் இடம் பெற சட்டம் இயற்றவேண்டும்.

பள்ளிக்கூடங்களை எல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்று அடிக்கடி வலியுறுத்தப்பட்டு வருகிறது. சோஷலிசத் திட்டத்தை செயல்படுத்துவதாகக் கூறும் நாம் இதைக்கூடச் செய்யாமல் தயக்கம் காட்டி வருகிறோம். ஆனால் அமெரிக்கா முதலாளித்துவத்தைப் பின்பற்றக்கூடியவர் என்று சொல்லப்பட்ட பூட்டோவே இன்று பள்ளிகளை யெல்லாம் தேசீயமயமாக்கிவிட்டார். பூட்டோ சோவியத் யூனியனுக்குச் செல்வதற்கு முன்னாலேயே இந்த அறிவிப்பைச் செய்துவிட்டு சென்றிருக்கிறார். எனவே, கல்விக்கூடங்களைத் தேசியமயமாக்கும் செயலிலேகூட நாம் முன்னணியில் நிற்கமுடியவில்லை. அந்த நற்பெயரைப் பூட்டோ தட்டிக் கொண்டு போய்விட்டார். நாம் இன்னும் ஆழ்ந்த பரிசீலனையிலேயே மூழ்கி இருக்கிறோம்.

ராஜராஜ சோழனுக்குச் சிலை எடுப்பதைப்பற்றியும், பூம்புகாரை பாதுகாப்பதுபற்றியும் மகிழ்ச்சியடையும் அதே நேரத்தில் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முதல் முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மனைப்பற்றியும் அவன் ஆண்ட பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப்பற்றியும் போதிய அக்கறை செலுத்தாமல் இருப்பதைப் பார்த்து வியப்பாக இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும் போது சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவு வராமல் திட்டமிட்டே மறக்கடிக்கப்படுகிறதோ என்று நான் ஐயுறுகிறேன். அந்த வீரர்களின் வரலாறுகளைப் பாடத்திட்டங்களில் சேர்த்து, மாணவர்களுக்குத் தேசிய உணர்ச்சியை வளர்ப்பதில் இனிமேலாவது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன்.

கல்வி முறையிலே சோஷலிச சிந்தனையை வளர்க்கும் முறையில் திட்டமிட்டு செயலாற்றவேண்டும். இன்றைய சூழ்நிலையில் விஞ்ஞான சோஷலிசத்தை கொள்கையாகக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னாலும் அதை அமல்படுத்தும் வகையில் ஆக்கப்பூர்வமான கல்வித் திட்டத்தை அமைத்திருக்கிறோம் என்று சொல்ல முடியாது. மாணவர்களுக்கு கல்லூரிகளிலே முதலாளித்துவப் பொருளாதாரம் தான் இன்றைக்கும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. அதிலே பயின்று வந்தவர்களையும் முதலாளித்துவ வளர்ச்சியிலே அக்கறைக் காட்டுபவர்களையும் நமது சோஷலிசத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பயன்படுத்திக்கொள்வது வேடிக்கையாக இருக்கிறது. இத்தகைய நிலை நீடிப்பதால்தான் மாநில அரசாங்கம் அமைத்துள்ள திட்டக் குழுவில் மிகப்பெரிய முதலாளியான பொள்



ளாச்சி மகாலிங்கம் இடம் பெற்றிருக்கிறார்கள். அவரைப் போன்றவர்களை நம்பி சோஷலிசத்தை அமல்படுத்தும் அவல நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்புக்கு பஞ்சாப் மாநிலத்திலேகூட ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்திலேயே ஒரு பால் கமிட்டிப் போடப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அந்தக் கமிட்டியின் சிபாரிசுகள் இன்னும் அரசாங்கத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வருவதாகவும் கூறப்படுகிறது. தனியார் பள்ளிகளை வைத்து நிர்வகிப்பவர்களும் அங்கு பணிபுரிபவர்களும்தான் இன்று சட்டமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள். அத்தகையோரிடம் ஆசிரியர்களின் நிலையைப் பரிசீலித்துப் பாதுகாப்பு அளிக்கும் குழுக்களிலும் இடம் பெற முடிகிறது. நிர்வாகத்திற்கு ஆதரவாக இருப்பவர்களைக் கல்வித் துறையில் வைத்துக் கொண்டு ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு தேடுவது இயலாத காரியம். பால், டைட்டஸ், ரயான் போன்ற பெயர்களை கேட்கும்போதே வெள்ளையர்கள்தான் இன்னும் கல்வித்துறையில் இருந்துவருகிறார்களோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இத்தகையவர்கள் வழங்குகின்ற பரிந்துரைகளும், ஆழ்ந்த பரிசீலனையில் இருந்துவருவதாகக் கூறப்படுவது வியப்பாக இருக்கிறது. நமது அகராதியில் ஆழ்ந்த பரிசீலனை என்றாலே ஆழ்ந்த நித்திரையில் இருந்து வருகிறது என்றுதான் பொருள். எனவே பரிசீலனை ஆழ்ந்த நித்திரையிலேயே இருந்துவிடாமல் அதை மீட்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு இன்று உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த உதவித்தொகையும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கும்கூட ஆண்டு வருமானம் இரண்டாயிரத்துக்கும் குறைவாக இருக்கவேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. இதனால் பெரும்பாலான மாணவர்கள் உதவித்தொகை பெறமுடியாமல் இருந்து வருகிறார்கள். எனவே 2,000 என்ற உச்சவரம்பை மாற்றி, குறைந்த பட்சத் தேவையை அடிப்படையாகக்கொண்ட வருமானம் இல்லாத அனைவருக்கும் உதவித்தொகை வழங்க வேண்டும் என்ற முறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் பின்தங்கியவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதைப்போல் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கும் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைய சூழ்நிலையில் ஆர்வமும் திறமையும் இருந்தும்கூட பொருளாதார கஷ்டத்தினால் முன்னேறிய வகுப்பில் பிறந்துவிட்ட ஒரே குற்றத்திற்காகக் கல்வி கற்க முடியாத நிலையில் பல மாணவர்கள் இருக்கிறார்கள். எனவே, அத்தகைய மாணவர்களுக்கும் கல்வி கற்க உதவித்தொகை வழங்கப் படவேண்டும். மத்திய அரசாங்கம் வைத்திருப்பதைப்போல் மெரிட்ஸ் ஸ்காலர்ஷிப் திட்டத்தை மாநில அரசாங்கமும் வைத்துக் கொள்ளவேண்டும். திறமையான ஏழை மாணவர் அனைவருக்கும் உதவித் தொகை வழங்க வழிவகைச் செய்ய வேண்டும். இத்தகைய நிலை ஏற்படுத்தப்படாவிட்டால் சமதர்ம சமுதாயம் அமைக்கப் போகிறோம் என்று சொல்வதில் அர்த்தமே இல்லை.

இன்றையநிலையில் ஆசிரியர்கள் நியமனத்தில் பல குறைபாடுகள் இருந்து வருகின்றன. ஹையர் கிரேடு இடத்தில் ஹையர் கிரேடு பயிற்சிப் பெற்றவர்களைத்தான் போடவேண்டுமென்று அரசாங்கம் இப்போது புதிய உத்தரவு ஒன்றை பிறப்பித்திருக்கிறது. எனவே, சமீபத்தில் ஹையர்கிரேடு இடத்தில் நியமிக்கப்பட்டிருந்த செக்கண்டரி கிரேடு ஆசிரியர்கள் பலரும் வேலை நீக்கம் செய்யப் பட்டு இருக்கிறார்கள்.

தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போதே எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். பெரும்பாலான பள்ளிகளில் பணம் வாங்கிக்கொண்டுதான் நியமனம் செய்திருக்கிறார்கள். தற்போது அவர்களையெல்லாம் வேலையை விட்டு நீக்கச் சொல்வது மீண்டும் தனியார் பள்ளி நிர்வாகிகள் பணம் வாங்கிக்கொண்டு மற்றவர்களை நியமிக்கத்தான் வழிவகை செய்யும். இந்த நிலையை எண்ணிப்பார்க்கும்போது தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு ஆதரவாக கல்வித்துறை அதிகாரிகளும் செயல்பட்டு வருகிறார்களோ என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. எனவே, அரசாங்கம் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வீட்டுக்கு அனுப்பிவிடாமல் இனிமேல் ஹையர் கிரேடு இடத்தில் செக்கண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கவேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களைப் பாதுகாப்பதில் அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தை இதில் பயன்படுத்தும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.





கல்வித் துறையினருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று நான் கூறவில்லை. மண்டபம் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றி வந்த தலைமை ஆசிரியரை கல்வி ஆண்டின் இடையிலேயே கட்சிச் செயலாளர் சொன்னார் என்பதற்காக உடனே வேறு ஊருக்கு மாற்ற முடிகிறது. ராஜபாளையத்திலே வேலைபார்த்து வந்த ஓவிய ஆசிரியர் ஒருவரை காளையர் கோவிலுக்கு தந்தி மூலமாகவே மாற்ற முடிகிறது. இதற்கு எல்லாம் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் வடமொழிக்குப் பதிலாகத் தமிழ்மொழியை பயன்படுத்தினார் என்ற குற்றத்திற்காக சிவகாசியில் உள்ள ஓர் உயர் நிலைப்பள்ளியில் பணியாற்றிய புலவர் கோவிந்தன் என்பவர் வேலை நீக்கம் செய்யப்பட்டது சட்ட விரோதம் என்று அரசுத்துறைச் செயலாளர் ஆணையிட்டு அவரை திரும்பவும் வேலையில் அமர்த்த வேண்டுமென்று கூறியும் நிர்வாகம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. அநியாயமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட அத்தகைய ஆசிரியர்களை வேலையில் அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று நிர்வாகத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்க மாத்திரம் அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. அத்தகைய அதிகாரத்தை எடுத்துக்கொள்ளுவதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. எந்த பாவமும் அறியாத ஆசிரியர்கள் பாதுகாப்பற்ற நிலையில் பணியாற்றி வரவேண்டிய நிலை நீடித்து வருகிறது. எனவே, இத்தகைய கேடுகளைக் களைய கல்வித் துறை உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள் கிறேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Mr. Chairman, Sir, I rise to support the Demand, "Education" and speak on my cut motion.

In the first place, I wish to add my quota of encomium to the chorus of encomiums already showered on the Hon. Minister for Education and also on the Government of Tamil Nadu and its Education Department for taking extraordinary steps to improve educational standards and make the State an ideal State in the field of education.

Coming to the note supplied to Hon. Members, by the Hon. Education Minister, it reads like a novel providing absorbing interest and attraction and it would be very useful if it is supplied to all schools in the State so that the teachers may know the good work that is done by the Department.

[Thiru K. S. Kothandaramiah] [1972 மார்ச் 18

Coming to my constituency and district I wish to point out certain grievances. The Government of Tamil Nadu have sanctioned one more educational district for Dharmapuri district. I wish to state that a Chief Education Officer has to be immediately appointed to this district in the interests of the teachers there and in the interest of administration.

With regard to English-medium sections in rural colleges in Chingleput and North Arcot, Dharmapuri and in the City of Madras the number has to be increased. There are a large number of linguistic minorities and Telugu High Schools and sections are there. But, the number of English-medium sections in the colleges are not adequate. I wish that more Telugu schools and English sections should be opened for linguistic minorities so that more Telugu students can join such schools.

Government want to improve the quality of education. The present teacher-pupil ratio is too much and if 25 students are fixed for one teacher, it will be all right. We can thus provide for appointment of more teachers and make them effective and thus improve the quality of education.

With regard to elementary schools, Government are already appointing B.T. teachers and I request that all higher elementary schools should be provided with B.T. teachers.

With regard to selection grade, there is a lot of confusion. The fact is that Government has stated that it should be based on merit. This point leads to lot of discrimination and abuse and especially in Panchayat Union Schools, it will lead to lot of trouble. Let it be done on the basis of seniority and lists be prepared by the Department itself.

There are linguistic minorities in the State and proper attention should be given to their children in their mother-tongue. With regard to teaching of Telugu in the districts of Ramanathapuram, Madurai, Tirunelveli, Coimbatore and Dharmapuri, the Linguistic Minorities Commission has recognised 20 taluks where Telugu is more than 20 per cent. Telugu teaching has to be provided there in schools. I request the Hon. Minister to see that Telugu teaching is provided there during school hours and boys are given proper text books.



1972 மார்ச் 18] [Thiru K. S. Kothandaramiah]

I am told that in geography books, the matter is not correct and the information given is wrong. Text-books should be checked and suitable and proper text-books should be given for linguistic minorities in proper time.

With regard to subject-matter I hope that Government would take extracts out of lives of famous Telugu poets and scholars and patriots, etc. and put them in the text-books so that these children will imbibe good things of Telugu culture.

As regards appointment of Telugu pandits in elementary schools, there is lot of demand and Government may take steps to see that Telugu pandits are appointed in higher elementary schools also, in Hosur and Denkanikota where the Telugu strength exceeds 300. Only one pandit is there and Government should take steps to appoint junior Telugu pandits to these schools.

Government have sanctioned hill allowance in other places but even though Hosur and Denkanikota are hilly tracts, they are not included in the list of hill areas and teachers are therefore not getting hill allowance. Government may treat these places as hill areas and sanction allowance to these teachers.

Mid-day meal programme is working well in many schools but there are not separate buildings to serve food and so Government should provide separate buildings.

I wish to state that payments be made to elementary school teachers directly by cheques or money-orders in time.

Lastly, I want Government to introduce two year-course in the place of the present one year P.U.C. in colleges.

With these words, I resume my seat.

* THIRU M. A. LATHEEF : Sir, I beg to differ from Thiru K. M. Subramaniam. He said that we have not made advancement in the field of education. As usual he has said something. If he had seen the actual figures, he would not have made the statement. During the regime when D.M.K. has accepted the responsibility of administration of this State, we have made rapid strides in the field of education which has earned the approbation and admiration of all not only in this State but in other States and also in foreign countries. Therefore in the field of education we have made sufficient and notable advances.

[Thiru M. A. Latheef] [1972 மார்ச் 18

But I would submit that the purpose for which money is spent for the advancement of education and for popularisation of education should be fully accomplished. Now what happens? There seems to be frustration and an unusual type of indifference on the part of the student community. The indifference is due to the frustration they have of their future. I would submit that there is a psychological frustration in the minds of the student community about their future. We have what is called " medical test " of the students in high schools and colleges. Along with that test, let us also have ' psychatric test ' of the students so that the basic things, that is responsible for this sort of frustration is found out and weeded out.

I would submit that the present examination system is quite useless. I know as one who has been a student and teacher in the educational field, that it would be far better to have monthly examinations and terminal examinations. Let the marks in these examinations be tabulated and let us have the aggregate of these marks. Let us take 60 per cent of the marks obtained in the university examinations and let us take 40 per cent of the aggregate marks obtained in these monthly and terminal examinations to confer degree and for promotions internally. Then the students will feel that not only the university examinations but also the marks obtained in monthly examinations and terminal examinations would be counted for the purpose of promotion. Then only the present draw backs found in the educational institutions could be remedied. That is my submission.

The P.U.C. has proved to be far from useful. Within one year, they have to adjust themselves to the college atmosphere. This should be abolished and the old Intermediate course should be immediately re-introduced. This has been also recommended by the Estimates Committee.

Linguistic minorities should be given their due weight. I am very very sorry that the solemn assurance given by our late lamented Chief Minister, our Great Anna that the rights and interests of linguistic minorities would be safe-guarded has been ignored. I do not know as to what the reason is for this. I do not know why this is being done purposely. This should be immediately put an end to.



1972 மார்ச் 18] [Thiru M. A. Latheef]

In Urdu schools where there are no facilities or teaching of Tamil, there should be at least an additional compulsory language teacher to teach Tamil for Urdu boys. This has been our request. Otherwise it would have the indirect effect of making Urdu boys not come to Urdu schools, for they fear they have no future if they studied in such Urdu schools.

The resources of private philanthrapy should be tapped and not left unused. Whether it is Muslim or Hindu or Government philanthrapy, that should be fully availed of for education of boys in this State. They should not be condemned. Their role should be recognised.

In order to eradicate the forces of indiscipline and frustration among the students, in all schools, I may submit for the very serious consideration of the Hon. Minister and the Government, that moral and religious instructions should be imparted to pupils both at the school level and college level. Then only we can weed out indiscipline from our boys. Secularism does not mean complete non-identification with religion. It means only that the State does not identify itself with any one particular religion. Therefore, moral instructions should be given in schools and other educational institutions.

The matter of providing Language Teacher in Urdu schools, should be given very serious consideration. I have a lot of things to say. But within five minutes what can I do? I think you, Sir.

திரு. கே. கந்தசாமி : கௌரவமிக்க மாற்றுத்தலைவர் அவர்களே, கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. லத்தீப் அவர்கள் தேசிய, தெய்வீக, மதச் சார்பற்ற கல்வியைப் பரப்ப வேண்டும் என்று கூறியதை மனமார வரவேற்கிறேன். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தன்னலமற்ற ஒழுக்கமுள்ள, தியாக குணத்தையும் உள்ளடக்கிய கல்வி நமக்கு வேண்டும். தேசிய தெய்வீகப் பண்பாட்டையும், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கவும் தேசத்திற்காகத் தியாகம் செய்த பழைய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் வரலாறுகளையெல்லாம் பாடமாக வைத்து, இளம் சந்ததியார்களின் மனதில் பதிய வைக்கும்

[திரு. கே. கந்தசாமி] [1972 மார்ச் 18

வகையில் கல்வியை மாற்றியமைக்க வேண்டும். பழைய சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வரலாறுகளைப் பாடமாக வைத்து, இளம் சந்ததியினரும் எதிர்காலத்தில் நாட்டைக் காக்கும் கடமை வீரர்களாக ஆவதற்கு வேண்டிய வகையில் பாடத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தெய்வீகக் கல்வி என்று பேசப்படுகிறது. நாம் இதைச் சொல்லும்போது சமுதாயத்தில் இருக்கின்ற பழைய நடைப் பழக்க வழக்கங்கள் இருக்கவேண்டுமென்று கூறவில்லை. காலத்திற்கேற்ற முறையில், கலாசாரத்திற்கேற்ற முறையில், இந்தியப் பண்பாட்டுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ற வகையில் பழம் கருத்துக்களை நல்லனவற்றை ஏற்று நடத்த வேண்டும். அவற்றைப் பள்ளிகளில் பாடமாக வைக்க வேண்டும். காலத்திற்கேற்ற வகையில் விஞ்ஞானத் தொழில் கல்வியும் கற்கத் தக்க வசதிகளைச் செய்து தரல் வேண்டும். இப்போது 11-வது வகுப்பு வரையில் இருக்கின்ற கல்வி முறை போதும் என்று கருதுகிறேன். அதற்குமேல் பி.ஏ., எம்.ஏ., போன்ற பட்டதாரிகளை உற்பத்தி செய்வதால் பயன் இல்லை. உற்பத்திப் பொருளுக்கேற்ற வகையில் மார்க்கெட்டைப் பிடிக்க வேண்டுமென்பது பிசினஸ் உலகில் இருந்து வருகிற வழக்கம்.

There is no use of producing Arts graduates ; there should be schemes for utilising them in employments. Therefore, I would request the Hon. Minister to consider very seriously, whether we cannot think of job-oriented education. It should be both industrial and agricultural, because India is mainly agricultural country and the Indian economy is agrarian economy. There should be consideration in respect of students' relationship with teachers and both the teachers and the taught should have very cordial relations, something like relationship between parents and children. That should be taken into consideration.

Next, regarding the demand for colleges, both technical and other professional colleges, no proper representation is given to B.Ts. they should be given to the Backward Class and Harijan communities more chances in admission.

அடுத்தபடியாக, ஆர்ட் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் போது, கணிதம், விஞ்ஞானம் போன்ற பிரிவுகளில் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த அரிசன மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சத வீதம் இடம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



61559

1972 மார்ச் 18] [திரு. கே. கந்தசாமி]

அடுத்தபடியாக, சில விடுதிகளில் மாணவர்களுக்கு இடம் இல்லையென்று சொல்கிறார்கள். இதன் காரணம் [illegible] சர்க்கார் [illegible] தொகை வாங்கிப் படிக்கும் மாணவர்கள் [illegible] படுகிறார்கள். இந்த நிலைமையை அரசு தவிர்க்க [illegible] என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களின் கோரிக்கைகள் பல அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு நாவலர் அவர்களும் ஆசிரியர்களைப்பற்றி நன்கு தெரிந்திருக்கிறார்கள். ஆசிரியர்கள்தான் சமுதாயத்தின் சிற்பிகள், சிருஷ்டிகர்த்தாக்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களை அரசு அரவணைத்துக் காக்க வேண்டும். அவர்கள் அரசியலில் கலக்காதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அரசியல் உணர்வு கொண்டு போராட்டம் நடத்தும்படி திசை திருப்பப்படுவார்களானால், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். முதன்மையாக அவர்கள் அரசியல்வாதிகளின் கைகளில் சிக்காமல், அரசே அவர்களை அரவணைத்துச் செல்ல வேண்டும். ஆசிரியர்களும் தந்தையின் ஸ்தானத்தில் இருந்து குழந்தைகளுக்குக் கல்வியைப் போதிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு அரசியல் சார்பு இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Mr. Chairman, Sir, in support of the cut motion moved on behalf of our Party, I wish to say a few words.

The most important thing is that there is a steep fall in the standard of education; however much the Hon. Education Minister and the Government may try to say, I am not at all convinced that the standard has not been falling. I will give a concrete example. With the permission of the Chair, I shall give an extract from a letter written by a Doctor who had studied in the U.S.A. to the 'Hindu'. In this letter he has clearly stated—

"............In 1958, I studied the notes in Genetics for my Honours degree that were written in 1941; But developments in Genetics have been explosive since 1950 and my post-graduate curriculam was remarkably free from the impact of modern developments in Genetics. However, when I had to study the same subject at the Doctorate level in the United States, I was

advised to join the undergraduate (equal to first year B.Sc.) class............".

I do not say that this is the case everywhere. But this is only an example, because of the importance of Genetics. Similar is the case in regard to Chemistry, Mathematics, etc. In so many subjects we are far far behind the present developments and current ideas and thought. Therefore, something must be done. Of course, in his reply the Hon. Minister may say that standards are all right, only a few persons here and there are wanting. But it is not a question of majority, minority here. It is a question of technical knowledge. What do technical experts think of us? That is the only question.

Then, Sir, I also wish to say that the Hon. Minister for Education must spell out the educational policy clearly. There is no point in going on tinkering with the educational policy every three or six months. Are you going to introduce Intermediate Course for two years? A categorical answer should be given in regard to it. A clear-cut educational policy should be evolved. The Hon. Minister for Industries has stated the other day that a certain amount of uncertainty in the industrial policy is responsible for the chaotic condition in the industrial sector. So also the uncertainty in the educational policy is responsible for the present chaotic condition.

Then I come to the D.P.I.'s office. Even last year the hon. Member, Thiru Abdul Jabbar has referred to the functioning of that office and we had hoped that something good would come out of it but nothing good came out of it. Whenever we want to meet the Director, out of 10 times, 8 times he would be away to the Secretariat. We do not go there to seek favour and we go there only if there is miscarriage of justice. In this connection, I want to suggest that they can appoint a Liaison Officer to go to the Secretariat so that the Director would be in the D.P.I.'s office. I request the Hon. Minister to look into the matter.

Then I come to graduate teachers. The Government realised the seriousness of the situation only after they started the strike or taken out the procession. I do not blame the Hon. Minister but his Departmental head should have advised him earlier. If they had done it, such crisis would have been prevented and in the initial stages they could have met their demands half-way and





prevented the crisis. On the floor of the House I once again demand that the Hon. Minister should give a categorical assurance that he would find a solution to the problems of the graduate teachers in the next few days.

Then I come to the Association of University Teachers. They have a number of grievances to be redressed. One of them related to cadres and scales of pay. The Association urges on the U.G.C. committee to have only two categories of teachers in colleges; Professors and Assistant Professors. The posts of Principal and Heads of Departments should be equivalent to that of Professor but carrying an administrative allowance and suitable reduction in teaching duties. The scales suggested are : Rs. 500—30—800—40—1,000 for Assistant Professor and Rs. 800—40—1,000—75—1,300 for Professor.

They have requested that an Assistant Professor who had completed twelve years of service be designated Professor and fitted into that scale of pay.

Their another request is with regard to Teacher-Representation on the Governing Bodies.

A third of the governing body of a college should be made up of teacher-representatives of the college. While a non-teacher need not be barred from representing the teachers, such representation should not exceed a quarter of the total number of teacher-representatives in the governing body.

Another request related to Librarians and Physical Directors. At present, the librarians are treated as members of non-teaching staff of colleges. It is but right that Librarians possessing the necessary qualifications, be treated on par with teachers.

Then I come to the private college teachers like lecturers and assistant lecturers. They have asked for liberalised pension and the managements are feudalistic in their outlook and they go on troubling them. The Hon. Minister should look into this matter and do the needful.

Then I come to the Vaishnava College for Women. Recently one Lady teacher, Mrs. Thomas was asked to meet the Principal of that college alone. But the Lady teacher accompanied by her husband met the Principal and the Principal abused her. They filed a case in the Court. They have also brought the matter to the

notice of the University Teachers' Association and to my notice also. I know the Hon. Minister cannot directly interfere in this matter as there might be legal difficulties but he can settle the matter to the best of his ability.

Then I come to the Government Arts College, Nandanam. A number of irregularities have been committed by its Principal and they have been brought to the notice of the Vigilance Commission by me in person. It is understood that he has been using the sweeper and peons of the College for his private work. When one of them did not turn to do private work for him, he was beaten. Then they sent a petition to the Director of Collegiate Education. Since the Principal comes directly under the control of the Government, they should take immediate action in the matter.

Then there is a G.O. Ms. No. 1399, Public (Services), dated 22nd April 1971 wherein the heads of institutions have been asked to send proposals to regularise all the contingent menials but he has not so far taken steps to send up the proposals.

Then I come to tutors and demonstrators. They have not been made permanent. The University has not stated that they should not be made permanent. They are in 'Thirusangu Sorgam' and I request that the Government should make them permanent.

Then, an International Sanskrit Seminor is being organised in Delhi. It is sponsored jointly by the UNESCO and the Education Ministry of the Government of India. It is to be held from 27th to 31st March 1972. Tamil Nadu has been in the forefront in regard to organising such Seminars and therefore I request the Hon. Minister whether he cannot send a delegation from our State.

Then I want to refer to one or two instances where politics is involved. It is tragic that politics is introduced in the field of education. I know personally the Hon. Minister for Education is incapable of politics and somebody in the name of the Education Minister should not exploit it for the sake of politics.

In this connection, I refer to 'The Kanya Gurukula' run by an ex-Member of the Madras Legislative Council, Thirumathi Saraswathi Pandurangam. Next to this institution, there is another institution which is competing with this institution and it has received the patronage of the Government and party members.





I would urge the Government not to allow such persons to indulge in such kind of competition. The Kanya Gurukula was started a few years ago with a feeling of nationalism and nothing should be done against the running of that institution.

Another example of political interference. There is a school at Pallavaram. The incident has come in the papers and I do not want to go into it in detail. I met the Headmaster and collected the particulars. The Headmaster has been dismissed. One of the boys was indulging in an undisciplined manner. This was found out by one teacher who complained to the Headmaster and the Headmaster asked the boy to get an assurance from his parent that he will behave properly in future. The Headmaster did not cane the boy or did anything like that. He wanted that assurance from the parent. What happened ? The boy went round, brought some pressure and the result is, the poor Headmaster had been dismissed. This is very shocking. I cannot think of such things happening here. (The Hon. Thiru V. R. Nedunchezhian : What is that school? ) It is a school in Pallavaram run by Military.

Finally I would request the Hon. Minister to consider whatever educational facilities we give, must improve matters.

I had talked to boys in Loyola College, Christian College, Arts College, etc. I talk often in meetings convened by them. I have come to the conclusion that they are frustrated. They do not know what is going to happen to their future? We are spending Rs. 100 crores of public money on education. It must produce good results, and surely not frustration among students. You must do something dynamic to see that this frustration is weeded out. I had cited the example of Dr. Mahadevan's letter. I strike a note of warning. Unless you do something dynamic, this explosive situation among students would explode. You must do something concrete. Sitting in offices and inside chambers will not solve the problem. A clear-cut education policy should be evolved in the top and something concrete should be done. Otherwise the student population will explode in the next decade or two. Please see the writing on the wall and do something and don't say " Dr. Hande's is a voice in the wilderness ". I have done my duty to the country and Government. I have sounded the note of warning. It is the business of Government to set things right. Thank you.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, பல முக்கிய மான கருத்துக்களைப்பற்றியெல்லாம் எங்கள் கட்சியின் சார்பாக வெட்டுப்பிரேரணைகளின் மூலமாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். இறுதியாக நான் ஓரிரு கருத்துக்களை இந்த முக்கியமான டிமாண்டின்கீழ் பேச முற்படுகிறேன்.

இப்பொழுது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் லிட்ரஸி ரேட்டிலே நாம் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்று பார்த்தால் அதிக அளவிலே முன்னேறவில்லை என்றுதான் பார்க்கிறோம்.

The literacy rate was 31.41 at the time of 1961 census and it is 39.39 at the time of 1971 census. The increase is only 25.4 per cent during the ten years 1961 to 1971.

இந்த முறையிலே பார்க்கும்பொழுது நம்முடைய கல்வித் தரம் எவ்வளவு முன்னேறியிருக்கிறது, அல்லது கற்றறிந்தவர்கள் எந்த அளவிற்கு முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நாம் பார்க்கின்றபொழுது நாம் சற்று ஐயப்பட வேண்டியதாக யிருக்கிறது.

இன்றையதினம் சென்னையைப் பொறுத்தவரையில் இது முதன்மை யிடமாக இருக்கிறது, அடுத்து செங்கற்பட்டு ஜில்லா, அடுத்து கன்னியாகுமரி ஜில்லா இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் கடைசியாக இருக்கிறது தர்மபுரி ஜில்லா என்று இந்த அறிக்கையிலேயிருந்து பார்த்தால் நமக்குத் தெரிகிறது. இம்மாதிரி இவ்வளவு கோடி ரூபாய் செலவழித்தும் இவ்வளவு முன்னேற்றம் தான் கிடைக்கின்றது என்று பார்க்கும்பொழுது எதனால் ஏற்பட்டது இந்தக் காரியம் என்று ஆராய வேண்டும்.

கட்டாயக் கல்வி முறையை நாம் அமல் நடத்துவதற்கு எவ்வளவு நடவடிக்கைகளை மேற்கொண்டும் இது துரிதமாக நடக்கவில்லை என்ற குறையை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

பொதுவாக இன்றைக்கு பள்ளிக்கூடங்கள் பலவிடங்களிலும் வளர்ந்து வந்திருக்கின்றன என்றாலும் இன்னும் போதிய அளவில் முன்னேறவில்லை. கல்வித் தரம் முன்னேறுகின்ற அளவில் இல்லை. அடிமட்டக் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டிய வழிவகைகளை நாம் செய்தாக வேண்டும்.





பொதுவாக இன்றைக்கு ஆசிரியர்கள், செகண்ட்ரி கிரேடு ஆசிரியர்கள், எலிமெண்ட்ரி கிரேடு ஆசிரியர்கள், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் ஆற்றும் பணி சிறப்பாக இருக்கிறதா என்று நாம் ஆய்வு செய்ய வேண்டும். இன்றைக்குக் கீழ் மட்டத்திலே இருப்பவர்கள் நல்லமுறையிலே படித்தால்தான் அவர்கள் மேல் மட்டத்திலே வரும்பொழுது நல்ல தேர்ச்சி பெற்றவர்களாக, நல்லெண்ணம் படைத்தவர்களாக, அறிவாளிகளாகத் திகழக்கூடிய சந்தர்ப்பம் உண்டாகும். ஆகவே நாம் அடிப்படையாகச் செய்ய வேண்டியது என்னவென்றால் இந்தக் கீழ்மட்டத்திலே இருக்கின்ற கல்வித்தரத்தை உயர்த்துவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, இந்த அறிக்கையைப் படித்தால் அதற்காக ஒரு நிபுணர் குழுவைப் போடுவதாக, முதலமைச்சரவர்கள் ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போடுவதாக, Expert Committee to improve quality of Instructions என்று சொல்லி அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவுதான் கமிட்டிகள் போட்டாலும், எவ்வளவுதான் அறிக்கைகள் தயாரித்தாலும் அடிமட்டத்திலே இருக்கும் குறைகளைப் போக்கினால்தான் மேல்மட்டத்திலே வரும் ரிசல்ட் நல்லமுறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பொதுவாக ஆசிரியர்கள் மத்தியிலே பலவிதமான குறைபாடுகள் இருக்கின்றன. இந்த எய்டட் ஸ்கூல் ஆசிரியர்கள் பற்றி டாக்டர் பால் கமிட்டி நிறுவப்பட்டது. அது தன் அறிக்கையை இந்த அரசாங்கத்திற்குக் கொடுத்திருந்தது. அது சம்பந்தமாக சட்டம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாக இந்த அறிக்கையிலே பார்க்கிறோம். பிரசிடெண்ட், அதாவது ஜனாதிபதி அவர்களின் அனுமதிக்காக அந்தச் சட்டம் அனுப்ப இருக்கிறது என்ற முறையிலே இதிலிருந்து தெரிகிறது. சட்டம் தீட்டியாகிவிட்டதா? அந்த நகலை மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறதா? பிரசிடெண்டின் ஒப்புதல் எப்பொழுது கிடைக்கும், காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் இந்த அவையிலே கல்வி அமைச்சரவர்கள் தெளிவாக விளக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

பொதுவாக, இம்மாதிரியான எய்டட் ஸ்கூல் ஆசிரியர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. உத்தியோக உயர்வு சரியாக இல்லை, வேண்டுமென்று துன்புறுத்தப்படுகிறார்கள், ஸ்திரத்தன்மை இல்லை

என்று பல குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. அதுபோல் இருக்கின்ற இன்னல்களையும், துன்பங்களையும் நீக்குவதற்கு இந்தக் கமிட்டியின் அறிக்கையைத் துரிதமாகப் பைசல் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் என்று சொல்லிவிட்டு காலம் தாழ்த்தாமல் இந்தக் கல்வியாண்டிலிருந்தே அமல் செய்வதற்கு வேண்டிய வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது ஆசிரியர்களாக இருப்பவர்களை வேண்டுமென்றே மேனேஜ்மெண்டார் வேலையிலிருந்து விலக்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. எனவே தனியார் துறையில் நடக்கும் இந்த அக்கிரமங்களைத் தடுப்பதற்கு சட்டம் செய்வது அவசியம். அதிலும் குறிப்பாக, பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் இப்பொழுது தனியார் துறையில்தான் இருக்கின்றன. இப்பொழுது கழகப் பள்ளிக்கூடங்களையெல்லாம் அரசாங்கப் பள்ளிக்கூடங்களாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் படிப்படியாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இது வரவேற்கத்தக்க அம்சமாகும். ஆனால் இம்மாதிரியான மாற்றம் ஏற்படுவதற்கு நாம் என்னென்ன வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்பதைப்பற்றி உடனடியாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது பள்ளிக்கூடங்களிலே உள்ள கல்வி முறை எந்த முறையிலே இருக்க வேண்டுமென்பதைப்பற்றிப் பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். கல்லூரிப்படிப்பு 4 வருஷங்கள் ஆகுமா, அல்லது புகுமுக வகுப்பு இருக்க வேண்டுமா, அல்லது இண்டர்மீடியட் மறுபடியும் கொண்டு வரப்படுமா என்பதைப்பற்றிப் பல கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. முன்பு இண்டர்மீடியட் இரண்டு வருஷங்கள், பட்டப்படிப்பு இரண்டு வருஷங்கள் என்று இருந்தது. அதையே மறுமுறையும் கொண்டுவரப்போகிறார்களா, என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப்பற்றித் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதேமாதிரி ஹைஸ்கூல் எஜுகேஷனும், எலிமெண்ட்ரி ஸ்கூல் எஜுகேஷனும் 11 வருஷங்கள் இருக்க வேண்டுமா அல்லது 10 வருஷங்கள் இருக்க வேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் ஆராய வேண்டும். இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. மற்ற மாநிலங்களில் வேறு முறை இருக்கிறது.





குறிப்பாக நாம் படிப்பைப்பற்றிப் பார்க்கும்பொழுது இன்றைக்கு சென்ட்ரல் ஸ்கூல்கள் இருக்கின்றன. அதிலேயிருக்கும் கல்வித் தரத்தை நினைக்கும்பொழுது அது சற்று மேம்பட்டதாக இருக்கிறது என்று அதிலே படிக்கும் மாணவர்களும், அதிலே செயலாற்றும் ஆசிரியர்களும் கூறுகிறார்கள். ஏன் அந்த மத்திய சர்க்காரின் கீழ் அவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் நல்ல ஸ்டாண்டர்ட் இருக்கிறது, நம் பள்ளிகளில் அவ்வளவு இல்லை என்பதையும் ஆராய வேண்டும். ஏனென்றால் இப்பொழுது நம்முடைய கல்லூரிகளிலே தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளைப் பார்க்கும்பொழுது அவர்களுக்கு ஆங்கிலத்திலே போதிய பயிற்சியில்லாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. ஐ.ஏ.எஸ். போன்ற பெரிய படிப்பிலே முன்பு சென்னை மாநிலத்திற்குக் கணிசமான பங்கு கிடைத்திருக்கிறது. ஆனால் இது மெல்லமெல்ல குறைந்துவருவதைப் பார்க்கிறோம். எனவே நாம் ஆங்கிலப் படிப்பிலே அதிக அக்கறை எடுக்க வேண்டும். முதலியார் கமிட்டி ரிப்போர்டிலே ஆங்கிலப்பிரிவு எல்லா அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலும் நிறுவ வேண்டுமென்ற ஒரு அறிக்கையின்படி அது இப்பொழுது அமல் நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால் ஆங்கிலம் படிப்பதற்கு போதிய அளவில் வழிவகைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நவீன முறையில் டீச்சிங் மெதட்ஸ் கையாளப்படவில்லை. சரியான முறையில் முன்னேறவில்லை என்ற கருத்தைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பண்டைக் காலத்தில் இருந்த முறையில்தான் இன்னும் சிலபஸ் இருந்து கொண்டிருக்கிறது. எவ்வளவோ முறை சிலபஸ் மாற்றியமைக்கத் திட்டமிட்டும் இதுவரை முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆங்கிலத்தை பொறுத்தவரை அதிகமான ஊக்கத்தை அளிக்க வேண்டும். அப்போதுதான் உலகத்தில் இருக்கும் விஞ்ஞான நூல்களையும், மற்ற அறிவையும் பெற வாய்ப்பாக இருக்கும்.

இருமொழிக் கொள்கை இருக்கும் காரணத்தால் ஆங்கிலத்தை நிர்ப்பந்தமாக கற்றுத்தான் ஆகவேண்டும். ஆங்கிலத்திற்கு நல்ல ஊக்கம் கொடுக்க வேண்டும். தாய் மொழிக்கு எந்த அளவுக்கு ஊக்கம் அளிக்கிறோமோ அதே அளவுக்கு ஆங்கிலம் முக்கிய தொடர்பு மொழியாக இருக்கும் காரணத்தால் அதற்கும் அளிக்கப்படவேண்டும். ஆங்கிலப் படிப்பைக் கைவிடக்கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

டெக்னிகல் எஜுகேஷனைப் பற்றி யாரும் பேசியதாகத் தெரியவில்லை. டெக்னிகல் எஜுகேஷனுக்கு 503 லட்சம் ரூபாய் செலவழிப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கல்வி மானியத்திலே செலவழிப்பதிலே ஆறு சதவிகிதமாக இருக்கிறது. இது போதாது. இன்னும் அதிகமாக டெக்னிகல் எஜுகேஷனுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

டெக்னலாஜிகல் யூனிவர்சிடியை நிறுவ பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டிருப்பதாக அறிகிறேன். கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் அறிக்கை தயாரித்து வைத்திருக்கிறார்கள். இதைத் துரிதமாகச் செய்யவேண்டும். மத்திய அரசாங்கத்திடமிருந்து போதிய ஊக்கம் கிடைக்கவும் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சேலத்தில் உருக்காலை வரப் போகிறது. மெடலார்ஜிகல் எஞ்சினியரிங்கை சேலம் கல்லூரிக்கு மாற்றப் போவதாகக் கூறப்பட்டிருப்பதைப் பார்த்தேன். அது இப்போது கிண்டியில் இருக்கிறது. சேலத்தில் வேண்டுமானால் அடிஷனலாக ஏற்படுத்தலாமே தவிர, சிறப்பாக நடந்து வருகின்ற கிண்டி எஞ்சினியரிங் கல்லூரியிலிருந்து அந்தப் பாடத்தை எடுத்துவிடக்கூடாது. எப்படி அக்ரிகல்சுரல் யூனிவர்சிடி வந்ததோ அதே போன்று டெக்னலாஜிகல் யூனிவர்சிடியையும் விரைவில் கொண்டு வரவேண்டும்.

தமிழ்நாடு கல்வித் துறையிலே இரண்டாவதாக இருப்பதாகக் கூறப்பட்டாலும் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் போதாது. இன்னும் கணிசமாக முன்னேற வேண்டும். எஞ்சினியரிங் படித்தவர்கள் மத்தியில் பலவிதமான கருத்துக்கள் இருக்கின்றன. வேலை கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. மெகானிகல் எஞ்சினியரிங், எலக்ட்ரிகல் எஞ்சினியரிங் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. வளர்ந்து வருகின்ற பொருளாதார அடிப்படையில் வேலை தேடித் தர அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அண்மையில் நடந்த பி.டி. ஆசிரியர்கள் கிளர்ச்சி இப்போது முடிந்திருக்கிறது. அதைப் பொறுத்து ஓரிரு விஷயங்களைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். அவர்களுடைய கோரிக்கை மிகவும் நியாயமானது, பி.டி. ஆசிரியர்கள் முன்பு பெற்று வந்த சம்பளம் 140—5—180—10—250. இரண்டாவது சம்பள ஆணைக் குழு-





சிபாரிசு படி 275—10—375—14—450 என்று மாற்றியமைக்கப்பட்டது. ட்யூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர்ஸ் இன் காலேஜஸ் என்ற தலைப்பில் சம்பளம், 140—5—180—10—250 ஆக இருந்ததை 325—15—550 ஆக மாற்றியிருக்கிறார்கள். இரண்டு பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்களுக்கு 275 தான் முதலில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் இவர்களுடைய இன்கிரிமென்ட் 10 ரூபாய் முதல் மட்டத்திலே. பிறகு 15 ரூபாய் என்று கூறப்பட்டிருக்கிறது. கல்லூரியில் இருக்கும் டியூட்டருக்கு 325-ல் ஆரம்பித்து 550-ல் முடிவு ஏற்பட்டிருக்கிறது. வேறு விதமான சில காரியங்களையும் கூற விரும்புகிறேன்.

எஞ்சினியரிங் இன்ஸ்ட்ரக்டர்ஸ் இன் ஹைஸ்கூல் டிப்ளாமா படித்தவர்கள். அவர்களுடைய சம்பளம் முன்பு இருந்தது 145—5—150—10—250. பி.டி. ஆசிரியர்கள் சம்பளந்தான். இப்போது மாற்றியமைத்திருப்பது 325—15—475—20—575—25—650 என்று போட்டிருக்கிறார்கள். டிப்ளாமா படித்தவர்களுக்கு இப்படி மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். பி.ஏ.பி.டி. படித்தவர்களுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்று இன்னும் பல காரியங்களை மெமோரண்டத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் வாதம் நியாயமான வாதம்.

பள்ளிக்கூடங்களில் இருக்கும் நான்–டீச்சிங் ஸ்டாபுக்கு ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது என்ற கருத்து இருக்கிறது. அவர்களுக்கு ப்ரொமோஷன் அதிகமாக இல்லை. எழுத்தர்கள் என்ற நிலைதான் அதிகமாக இருக்கிறது. அதிகப்படியாக ஹெட்கிளார்க் ஒரு போஸ்ட் இருக்கும். மானேஜர், சூப்ரன்டென்டென்ட் ஆக உயர்வு ஏற்பட சந்தர்ப்பம் இல்லை. ஆகவே, அவர்களுக்கு அதிகமான உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லா காலேஜ் தற்போது சென்னையில் இருக்கிறது. இந்த அறிக்கையில் கொடுத்திருக்கும் விவரப்படி 2,366 பேர்கள் படிக்கிறார்கள். ஈவினிங் வகுப்பில் 429 பேர்கள் படிக்கிறார்கள். ஒரு பெரிய மாநிலத்திற்கு ஒரு லா காலேஜ் போதுமானதா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மதுரையில் ஏன் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்தக்கூடாது? தற்போது 2,366 நபர்கள் ஒரே கல்லூரியில் படிக்கின்ற நிலையில் இடவசதிக் குறைவுகள் எல்லாம் இருக்கின்றன. மாணவர்கள் வந்து தங்கிப் படிப்பதற்கு விடுதி வசதியும் போதுமானதாக இல்லை.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 18

ஆகவே, மதுரையில் சட்டக் கல்லூரி அமைப்பது ஒருசில மாணவர்கள் கிளர்ச்சி செய்ததன் விளைவாக "டெஃபர்" செய்யப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. எப்படியும் சட்டப்படிப்பு மிக இன்றியமையாததாக இருக்கிறது. மதுரையில் எப்படியாவது அடுத்த ஆண்டில் மதுரைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்த சட்டக் கல்லூரி ஒன்று ஏற்படுத்த வேண்டும். கேரளாவில் கள்ளிக்கோட்டையில் சட்டக் கல்லூரி இருக்கிறது, எர்ணாகுளத்தில் இருக்கிறது, திருவனந்தபுரத்தில் இருக்கிறது. ஆகவே, தென் மாவட்டங்களில் இருக்கும் மாணவர்கள் சென்னைக்கு வந்து ஹாஸ்டல் வசதி கூட இல்லாத நிலையில் படிக்க வேண்டிய நிலையை மாற்ற மதுரையில் எங்களைப் போன்றவர்களுடைய குழந்தைகள் சட்டக் கல்லூரியில் படிக்க வசதி செய்து கொடுக்கும்வகையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்குமென்று கருத்தைக் கூற விரும்புகிறேன்.

நூலகங்களைப் பற்றி ஒரு வார்த்தை. பள்ளிக்கூடங்களில் இருக்கும் நூலகங்களில் பழைய புத்தகங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. புதுமையான விஞ்ஞான நூல்கள் அதிகமாக இல்லை. வளருகின்ற சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதற்கேற்ப நூலகங்களை விரிவடையச் செய்ய அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகண் மேற்கொள்ளவேண்டும்.

அப்பரென்டிஸ் ஆசிரியர்களைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 6,500 பேரை நியமிப்பதற்கான வழிவகைகளைச் செய்திருப்பதாக அறிக்கையில் பார்த்தேன். இவர்களை நியமிக்கும் போது அவர்கள் எந்த ஆண்டில் பரீட்சையில் தேறி இருக்கிறார்கள் என்று பார்த்து நியமிக்க வேண்டும். 1970-ல் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதலிலே கொடுத்துவிட்டு 1965-ல் தேறியவர்களுக்குக் கொடுக்கப்படாத நிலை இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல இடங்களில் அரசாங்கக் கல்லூரிகள் இருக்கின்றன. அரசாங்கக் கல்லூரிகள் இல்லாத ஜில்லாவாக எங்கள் ஜில்லா இருந்து கொண்டிருக்கிறது. போதிய இடம் இருக்கிறது. புலியூர் குறிச்சி என்ற இடத்தில் 140 ஏக்கர் அரசாங்கத்திற்குச் சொந்தமான பூமி இருக்கிறது. அக்ரிகல்சுரல் காலேஜுக்குக்கூட போதிய வசதி இருக்கிறது. மெயின் ரோட்டில் இருக்கிறது. எல்லா சவுகரியங்



1972 மார்ச் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

களும் இருக்கின்றன. செழிப்பான பகுதியாக இருக்கிறது. ரப்பர் போன்ற எல்லாச் செடிகளும் அங்கு வளர்வதால் அந்தப் பகுதியில் இந்தக் கல்லூரியை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெண்கள் படிப்பு பற்றி. நாகர்கோவிலில் இப்போது ஸ்காட் கிருஸ்தவக் கல்லூரி புது இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு பெண்கள் கல்லூரியை அமைப்பதற்கு அவர்கள் தயாராயிருக்கிறார்கள். அங்குள்ள பிஷப் போன்றவர்கள் அதற்கான வழிவகைகளைச் செய்வதற்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாகர்கோவிலில் இருக்கிற அந்த இடம் அதற்குப் பொருத்தமானதாகவும் இருக்கிறது. பெண்களை வேறு கல்லூரிக்கு அனுப்புவது என்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நாகர் கோவிலில் இப்போது ஒரு பெண்கள் கல்லூரி இருக்கிறது. அது சற்று பட்டணத்தை விட்டு தள்ளி இருப்பதால் அங்கு யாரும் போக விரும்பவில்லை. அதேமாதிரி இன்னொரு பெண்கள் கல்லூரியும் ஐந்தாறு மைல்கள் தள்ளி இருக்கிறது. அது ஒரு காட்டுப் பகுதியில் இருக்கிறது. எனவே குழந்தைகள் அங்கு சென்று படிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை. ஆகவே ஸ்காட் கிரிஸ்டியன் கல்லூரியில் ஒரு பெண்கள் கல்லூரி அமைத்துத் தரவேண்டும்.

இன்னொரு விஷயம். எங்கள் பகுதியில் லிங்க்விஸ்டிக் மைனாரிட்டீஸ், மலையாள மொழி படித்தவர்கள் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். அதுவும் என் தொகுதியில் அவர்கள் நிரம்பப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மலையாளம் கற்றுக்கொள்வதில் பல கஷ்டங்கள் உள்ளன, பலவிடங்களில், சமீபத்தில் குழித்துறையில் ஒரு பயிற்சிப் பள்ளி இருந்தது, மலையாள மாணவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக. நீலகிரி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கும் மலையாள மொழியில் பயிற்சி கொடுக்க ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே மலையாள மைனாரிட்டீஸ் அசோஸியேஷனும், மலையாளம் மொழி பேசுகிறவர்களும் மிகவும் வேதனைப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு என்று ஒரு செக்ஷன் வைத்துவிட்டு மற்றப் பகுதிகளில் தமிழ் வைப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். பொதுவாக இந்த மாதிரி மைனாரிட்டீஸ்க்கு போதிய பாதுகாப்பு அளிக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் நம்மைச் சார்ந்தது. வேலைவாய்ப்பு

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 18

வேண்டுமானால் கேரளாவில் தேடிக்கொள்கிறோம் என்ற கருத்தை என்னிடம் சொன்னார்கள். நான் சொல்வது அவர்களது கலாசாரம், பண்பாட்டைக் காப்பாற்ற இந்த அரசாங்கம் முனைந்திருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, தமிழ் வளர்ச்சியை, தமிழ் நாடு சரித்திரத்தை எழுதுவதற்காக ஒரு குழு நிறுவப்பட்டிருக்கிறது. அது பாராட்டத் தக்கதொரு அம்சம். தமிழ் நாட்டில் இருக்கிற எல்லா இடங்களிலும் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அதேமாதிரி நம் மாணவர்கள் ஏனையப் பகுதிகளுக்குச் சென்றால் அவர்களுக்கு தொடர்பு மொழியாக இருக்கிறது ஆங்கிலம். ஆகவே அப்படிப் பட்ட ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்று நான் மறுமுறையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதேமாதிரி யார் எந்த மொழியைப் படிக்க விரும்பினாலும் அதற்கு வேண்டிய வசதிகளை அரசாங்கப் பள்ளிகளில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதல்லாமல் இப்போதிருக்கிற தன்மையில் அப்படி விரும்பிப் படிப் பதற்குக் கூட அரசாங்கப் பள்ளிகளில் இடம் அளிக்க மாட்டோம். அப்படிப் படித்தால் வேறு மொழியின் ஆதிக்கம் வந்துவிடும் என்று நினைப்பது பொருத்தமுடையதல்ல.

குறிப்பாக மைனாரிட்டிகள் பலர் விரும்புகிறார்கள் என்றால் அவர் களுக்காவது அதைக் கொடுக்கவேண்டும். தமிழை தாய்மொழி யாகக் கொண்டவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்ல வில்லை. ஆகவே சிறுபான்மையோருக்கு இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

அதேபோல் ஆர்க்கியாலஜி பற்றி கற்றுக்கொடுப்பதற்கு பல யிடங்களில் க்ளாஸஸ் வைக்கவேண்டும். ஆர்க்கியாலஜி பொறுத்த வரையில் பலவிதமான காரியங்கள் உள்ளன.

வருந்தத்தக்க ஒரு கருத்தை முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். ராஜராஜசோழன் சிலையை தஞ்சை ஆலயத்தில் வைப்பதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்ற கருத்தை எடுத்துக் கூறினார்கள். இதையெல்லாம் பார்க்கிறபோது வேதனையாகத்தான் இருக்கிறது. இந்தமாதிரியான ஒரு உணர்ச்சி வசப்படக்கூடிய காரியங்களைச் செய்யக்கூடாது. ஆதலால், நாம் மிகவும் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்ற காரணத்



1972 மார்ச் 18] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

தினால் இம்மாதிரியான நிகழ்ச்சி எங்கிருந்து வந்தாலும், அது மத்தி யில் இருந்து வந்தாலும் சரி அல்லது எந்தப் பகுதியில் இருந்து வந்தாலும் சரி அது தவிர்க்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் கல்வியின் தரம் குறைந்திருக் கிறது என்று பரவலாகப் பேசப்படுகிறது. டாக்டர்கள், நிபுணர்கள் எல்லோரும் கூறுகிறார்கள். ராஜ் கமிட்டி, மற்ற நிபுணர்கள் கமிட்டி எல்லோரும் கூறினார்கள். நமது கல்வி அமைப்பை சற்று திருத்தி யமைக்கவேண்டும். ரபீந்தரநாத் டாகூர் அவர்கள் ஒரு தடவை சொன்னார்கள்.

Our educated community is not a cultured community, but a community of qualified candidates.

என்று ஒரு தடவை கூறினார்கள். பொதுவாக நமக்கு படிப்பு வேறு, அறிவு வேறு என்றிருக்கிற தன்மையை சுட்டிக்காட்டுகிற அளவிற்கு அக்கருத்து அமைந்திருக்கிறது. இன்று மாணவர்கள் இடையில் பலவிதமான தொந்தரவுகள், துன்பங்கள் இருக்கின்றன என்றும் அவர்களிடையே ஒரு சலசலப்பு இருக்கிறது என்றும் கூறினார்கள். அது வெடிக்கும் தன்மையில் இருக்கிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறினார்கள். அவர்களது எதிர்கால வாழ்வு நல்ல வளமுள்ள வாழ்வாக இருக்குமா என்று அவர்கள் ஐயப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடிக்கொடுக்கும் பொறுப்பும் கடமையும் அரசாங்கத்தைச் சார்ந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகியிருப்பதினால்தான் மாணவர்களிடையே இதுமாதிரியான கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜாப் ஓரியன்டட் எட்யூகேஷன் நமக்கு தேவையாக இருக்கிறது. எல்லோரையும் கல்லூரிப் படிப்பு படித்த பட்டதாரிகளாக்காமல் அவர்கள் பல துறைகளிலும் நிபுணர்களாகத் திகழும் விதத்தில் நம் கல்வி அமைப்பை மாற்றியமைக்கவேண்டும். அப்போதுதான் தமிழ் நாட்டின் பெருமையை எடுத்துக்காட்டவும் முடியும் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது இப்பேரவையின் உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய சீரிய கருத்துரைகள், பரிந்துரைகளை வைத்திருக்கிறார்கள். கல்வியின்

நிலையும், கல்வியின் தரமும் எப்படி எப்படி இருக்கவேண்டும் என்ற கருத்துக்களைப் பலரும் பரவலாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்னென்ன செய்யவேண்டும் என்று எடுத்துச்சொல்வது மிக மிக எளிது. என்னென்ன வேண்டும் என்பதற்கும் என்னென்ன முடியும் என்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. ஆனால் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் என்னென்ன வேண்டும் என்று எடுத்துச் சொன்னால் தான் கல்வித் துறையில் இருக்கிற எங்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுச் செய்வதற்கு வழிவகைகள் ஏற்படும். கல்வித் தரம் எந்தளவிற்குச் செல்லவேண்டும், எழுத்தறிவு எந்தள விற்கு வளரவேண்டும், எந்தளவிற்கு திறமை பெறவேண்டும், எந்தளவிற்கு அறிவு, ஆற்றல், திறன் இவற்றை மாணவர்கள் பெற வேண்டும் என்பதையெல்லாம் உறுப்பினர்கள் இங்கு சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் முழுமனதோடு வரவேற் கிறேன்.

ஆனால், என்னென்ன வேண்டும் என்பதை எல்லோரும் எடுத்துச் சொன்னாலும் நமக்கிருக்கிற சூழ்நிலையில், நமக்கிருக்கிற வசதி வாய்ப்பில், நமக்கிருக்கிற நிதியில் இவை அத்தனையையும் வைத்துக் கொண்டு என்ன செய்யமுடியும் என்பதைத்தான் இத்துறையினர் ஆராய்ந்து அதற்கேற்றபடி செய்கிறார்கள். என்ன முடியும் என்பதை துறையினர் ஆராய்ந்து பல்வேறு கருத்துக்களை எடுத்துவைத்தாலும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் இருக்கிற நிதி அளவைப் பார்த்து என்ன இயலும் என்பதைத்தான் காணவேண்டியவர்களாக இருக்கிறோம். என்ன வேண்டும் என்பதிலும், என்ன முடியும் என்பதிலும், என்ன இயலும் என்பதிலும் வேறுபாடு இருக்கிறது.

பேரவை உறுப்பினர்கள் என்னென்ன வேண்டும் என்பதைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்திருக்கிறார்கள். நீங்கள் அதைச் சொல்ல வேண்டியதுதான். ஆனால் என்ன முடியும் என்பதை அதிகாரிகள் ஆராயத்தான் செய்வார்கள். முதல் அமைச்சர் அவர்களோடு கலந்துகொண்டு பார்க்கிறபோது என்ன இயலும் என்பதைப் பார்த்து அதைத்தான் இந்த அரசு செய்துகொண்டு வருகிறது. அந்த அடிப்படையில் எந்தளவிற்கு நாம் கல்வித் துறையில் வளர்ந்திருக் கிறோம் என்பதைக் காணவேண்டும். எந்தத் துறைக்கும் தராத அளவிற்கு கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அதன் விகிதாசாரத்திலிருந்து காணவேண்டும்.





ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்கப்படுகிற தொகையில் வேறு எந்தத் துறைக்கும் ஒதுக்கப்படாத அளவிற்கு 23 சதவிகிதம் பொதுக் கல்விக்கும், தொழில் நுட்பக் கல்விக்கும் மட்டும் ஒதுக்குகிறோம். அந்த அளவிற்கு அரசு கல்வித் துறை முன்னேற்றத்தில் அக்கறை காட்டுகிறது. 23 சதவிகிதம் என்றால் இவ்வளவு சதவிகிதம் என்பதல்ல. அந்தந்த ஆண்டில் வேறு பல துறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது கல்வித் துறைக்கு ஒதுக்கப்படுவது எவ்வளவு சதவிகிதம் என்பதைத்தான் பார்க்கவேண்டும். அரசின் மொத்த வரவு செலவில், 397 கோடி ரூபாயில் 23 சதவிகிதம், 91 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது என்றால் முன்பு 200 கோடி ரூபாய் மொத்த வரவு செலவு இருந்து அதில் 23 சதவிகிதம் என்று போடுவதும், 397 கோடி ரூபாயில் 23 சதவிகிதம் என்று செலவு செய்வதிலும் உள்ள வேறுபாட்டை உணரவேண்டும். ஆகவே அப்போதும் 23 சதவிகிதம் இப்போதும் 23 சதவிகிதம் என்ற சதவிகித அளவைக் கொண்டு கணக்குகளைப் பார்க்கக் கூடாது. ஆண்டுக்கு ஆண்டு ஏற்படுகிற செலவில் மற்றத் துறைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இத்துறைக்கு நாம் அதிகமாகத்தான் செலவு செய்கிறோம். 1966–67-ல் 23 சதவிகிதம் என்பது 44 கோடி யாக இருந்தது. இப்போது 23 சதவிகிதம் என்பது 91 கோடியாக வளர்ந்திருக்கிறது. நான்கைந்து ஆண்டுக் காலத்தில் 44 கோடி ரூபாய் அளவில் நடைபெற்றுவந்த இந்தக் கல்வித்துறை இப்போது 91 கோடி ரூபாய் அளவில் நடைபெறுகிற அளவிற்கு பல்வேறு வகை களில் விரிவடைந்து பல்வேறு வகைகளில் முன்னேற்றம் பெற்று வருகிறது என்பதைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இன்னும் அதிகமாகச் செலவழிக்கக்கூடாதா என்றால், செலவழிக்க லாம், இன்னும் வசதி வாய்ப்புக்களை பெருக்க இயலாதா என்றால், செய்யலாம், செய்யும் திறமையில்லையா என்றால் திறமை உண்டு, வழி யில்லையா என்றால், வழி வகை இருக்கிறது, திட்டம் போட ஆட்கள் இல்லையா என்றால், ஆட்கள் இருக்கிறார்கள், வேறு பல மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கிற அளவுக்கு வழிவகை இல்லையா என்றால், வழி வகை உண்டு, இவையெல்லாம் உண்டு, ஆனால் நிதி வசதிதான் இல்லை. இவைகளில் நியாயம் இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 18

நிதி வசதி இல்லாததால்தான், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 91 கோடி ரூபாய்க்கு எந்தெந்த திட்டங்கள் செய்ய முடியுமோ அதை இந்தத் துறை செம்மையாக செய்து கொண்டிருக்கும் பாங்கினைக் காணலாம். பொதுக்கல்வி என்ற தலைப்பின்கீழ் 91 கோடி என்று ஒதுக்கியிருந்தாலும், அதிலே தொழில் நுட்பக்கல்வி, தொல்பொருள் ஆராய்ச்சித்துறை, அரும்பொருள்காட்சித்துறை சேர்க்கப்பட்டிருக்கிறது. கல்வி மானியம் என்று மாநிலம் முழுவற்கும் எடுத்துக்கொண்டால் அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத் துறை, அதன் மூலம் அவர்கள் நடத்தும் பள்ளிகள், அவர்கள் தரும் பள்ளிப்படிப்பு உதவித் தொகை, சமுதாய வளர்ச்சித் திட்டம் ஆகிய பணிகளின் கீழ் என்று பார்த்தால் அது ரூ. 107.50 லட்சமாக இருக்கிறது. மருத்துவம், வேளாண்மை, கால்நடை மருத்துவம் ஆகியவற்றைச் சேர்த்துப் பார்த்தால் ரூ. 112.75 லட்சமாக இருக்கிறது.

அதைத் தவிர, தமிழகம் முழுவதும் எடுத்துக்கொண்டால் 169 கல்லூரிகள் இருக்கின்றன. அதில் 46 அரசுக் கல்லூரிகள் என்றும், 123 மானியம் பெறும் கல்லூரிகள் என்றும் இருக்கிறது. இதைத் தவிர மத இயக்கங்களைச் சார்ந்தவர்கள் கல்லூரிகள், உயர்நிலைக் கல்லூரிகள் என்று நடத்துகிறார்கள். கிருஸ்தவர்கள், முகமதியர்கள், ஹிந்து அறக்கட்டளைகள், இராமகிருஷ்ண மடம் போன்றவற்றின் சார்பாகவும் பல்வேறு வகையில் செலவழிக்கப்பட்டு, அவைகள் எல்லாம் சேர்த்து கிட்டத்தட்ட ரூ. 4½ கோடி அளவில் மாநிலம் முழுவதற்கும் செலவழிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியம், மாநகராட்சி மன்றம் ஆகியவைகளுக்கு அளிக்கப்படும் தொகையையும் சேர்த்துக்கொண்டால் கல்விக்காக மட்டும் இந்த 1972-73-ல் எல்லாத் துறைகளிலும் சேர்த்து 121 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். என்னுடைய கணக்குப்படி 91 கோடி வருகிறது என்றாலும், மற்ற மற்ற அமைச்சர்கள் மூலம் செலவாகும் மொத்தத் தொகையைப் பார்த்தால் கல்விக்காக மட்டும் ரூ. 121 கோடி செலவாகியிருக்கிறது. அவ்வளவுதான் முடியும். அந்த அளவுக்கு இத்தகைய செயல்களை நாம் ஆற்றிக்கொண்டு வருகிறோம்.

அதிலும் ஓரளவு நம்முடைய கல்வியின் வளர்ச்சி வருஷத்திற்கு வருஷம் அதிகரித்துக்கொண்டே போகிறது. 1966-67-ல் தொடக்கப் பள்ளிக்கு வந்த மாணவர்களின் எண்ணிக்கை 57,67 லட்சமாகும். ஆனால் 1971-72-ல் பார்க்கிறபோது 65,77 லட்சம் மாணவர்கள்



1972 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பள்ளியில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். ஏற்கெனவே 88 சதவிகிதம் 6 வயது முதல் 11 வயதுள்ள மாணவர்கள் பள்ளியில் வந்து சேர்ந்தார்கள் என்று சொன்னால், இந்தக் கட்டாயக் கல்வித் திட்டத்தின் மூலமாக 94.5 சதவிகிதம் 6 முதல் 11 வயது வரை உள்ள மாணவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் இருக்கிற 5½ சதவிகித மாணவர்கள் நம் கண்ணுக்கும் அகப்படாமல், பெற்றோர்கள் கண்ணுக்கும் அகப்படாமல், ஆசிரியர்கள் கண்ணுக்கும் அகப்படாமல், எங்கேயோ திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். இப்போது சட்டம் கூட இருக்கிறது. பள்ளிக்கு பையன்களை அனுப்பாத பெற்றோர்களுக்கு அபராதம் விதிக்கக்கூட சட்டம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தினால், மாண்புமிகு உறுப்பினர்களே பிறகு வந்து அந்த அபராதம் விதிக்கக்கூடாது என்று சொல்வார்கள். இப்படி தங்களுடைய பையன்களை பள்ளிக்கு அனுப்பாமல் அசட்டையாக இருக்கும் பெற்றோர்கள் மீது அபராதம் விதிக்கவும் சட்டம் இருக்கிறது. இருந்தபோதிலும் அரசாங்கம் இந்தக் கட்டாயக் கல்வித் திட்டத்தின் மூலம் எல்லோரையும் பள்ளிக்கு கொண்டு வந்து கல்வி கற்றுக் கொடுக்கவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று உயர்நிலைப்பள்ளிகளிலும் 1966-67 வரை 9 முதல் 11 வகுப்புகளில் 6.08 லட்சம் மாணவர்கள்தான் இருந்தார்கள். 1971-72-ல் 7.14 லட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். இது போல் கல்லூரியை எடுத்துக் கொண்டாலும், 1966-67 வரையில் 94,000 மாணவர்கள்தான் இருந்தார்கள். 1971-72-ல் 183,000 மாணவர்களாக வளர்ந்து அந்த எண்ணிக்கை வந்திருப்பதைப் பார்க்கிறோம். இதை யாரும் மறுப்பதற்கு இல்லை.

ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் நாம் கல்விக்காக அதிகமாகத் தொகையை ஒதுக்கி, அந்தத் துறை நன்கு சிறந்து வளர்ந்து வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் கூறினேன். கட்டாயக் கல்வி அமல் நடத்தப்பட்டு, பல்வேறு வசதிகள் வாய்ப்புகள் செய்து இருக்கிறோம்.

1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு மதிய உணவு, இலவச புத்தக விநியோகம், சீருடை வழங்குதல் போன்ற திட்டங்களின் மூலம் ஏழைக் குழந்தைகளையும் பள்ளிகளுக்கு ஈர்க்க

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 18

முயற்சி செய்யப்படுகிறது. இந்த மதிய உணவுத் திட்டத்தின் மூலமாக 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். பல லட்சக் கணக்கான மாணவர்களை ஆங்காங்கு பள்ளியில் சேர்ப்பதற்காக முயற்சிகள் எடுத்து வருகிறோம். மாணவர்களை பள்ளிகளுக்கு ஈர்க்க இயலும் எல்லாவிதமான முயற்சிகளையும் நாம் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

கல்வியின் தரத்தைப் பற்றி பரவலாகப் பேசப்பட்டது. மற்ற நாடுகளின் கல்வி முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது மாண்புமிகு ஹாண்டே அவர்கள் இங்கே கல்வியின் தரம் உயர வேண்டுமென்று சொன்னார்கள். இங்கே மட்டுமல்ல, அகில இந்தியாவிலும் உயரவேண்டுமென்பதுதான். இதற்கான காரணங்களை நாம் உணரவேண்டும். கல்வியின் தரம் உயரவேண்டுமானால், அவர்களின் குடும்பத் தன்மை, குறிப்பாக பேரன்டேஜ், வளர்ச்சி பெற்ற குடும்பங்கள் தலைமுறை தலைமுறையாக 2–3 தலைமுறைகள் படித்த குடும்பங்களை மட்டுமே வைத்து கல்வி தந்தால் நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். கல்வி பரவலாக்கப்படுகிறபோது, வசதி வாய்ப்பு இல்லாவிட்டாலும், பரவலாக கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று கவனம் செலுத்திக்கொண்டு இருக்கிறோம்.

எண்ணற்ற தொடக்கப் பள்ளிகள், ஆயிரக்கணக்கான உயர்நிலைப் பள்ளிகள் கிராமப்புறங்களில் மாடிக்கட்டடங்கள் இல்லாமல், கூரை வேய்ந்த கட்டடங்களில் இருக்கின்றன. அவைகளுக்கு மெல்ல மெல்ல கட்டட வசதி ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். கட்டட வசதி செய்த பிறகுதான் பள்ளி ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால், பலருக்கு அடிப்படை கல்வி அறிவே தர முடியாது போய் விடும். பல இடங்களில் பள்ளிகள் ஆலமரத்தடியிலும், அரசமரத்தடியிலும் இருக்கின்றன. சில இடங்களில் நாற்காலி என்ற பெயரளவில் இருக்குமே தவிர, அதற்கு 4 கால் இருக்காது, 3 கால்தான் இருக்கும். இதை சுவர் ஓரமாக ஒட்டிப் போட்டுக்கொண்டு ஆசிரியர் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டிய நிலை கூட இருக்கிறது.

எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் இருந்தாலும் கூட அதைத் தாங்கிக் கொண்டு, ஆசிரியர்களும், மற்றவர்களும், அதைக்கருத்தில் கொள்ளாது, அவர்களுக்கு இருக்கும் குறைந்த வசதியைக் கொண்டு நிறையப் பேர்களுக்கு கல்வி தருகிறார்கள். வசதிவாய்ப்புகளைப் பெருக்குகிற முயற்சி இருந்தாலும், கல்வியைப் பெருக்குகிற முயற்சியில்தான் நாம் இப்போது முக்கியமாக ஈடுபட்டு வருகிறோம்.



1972 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கல்வியைப் பரவலாக்குவதன் காரணமாக படித்தே அறியாதவர்கள் கூட, படித்தே வழக்கம் இல்லாதவர்கள் கூட, முன்பின் படித்திராதவர்கள் கூட படிக்கிற அளவுக்கு வருகிறார்கள். படிப்பதற்கு வருகிறவர்கள் முழுவதும் படிக்க வேண்டுமென்ற உணர்வோடு இருந்தாலும், பலர் குடும்பத்தொல்லைகளைத் தாங்கிக்கொண்டு, குடும்பத்தில் உள்ள பொறுப்பை மனதில் கொண்டு பள்ளிக்கு ஏதோ வரவேண்டுமென்ற எண்ணத்தில் வருகிறார்கள்.

50 ஆண்டுகள், 30 ஆண்டுகள், 40 ஆண்டுகளுக்கு முன்பிருந்த தரத்தை ஒப்பிட்டுப்பார்க்கிறபோது தரம் குறைந்து விட்டது என்று சொல்லுகிறார்கள். அந்த முறையிலே பார்த்தால் கூட பொதுவாக கல்வியின் தரம் உயர்ந்து விட்டது என்று பொறியியல் துறை, தொழில் துறை ஆகியவை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தொழில் நுட்பத்துறையில், பொறியியல் துறையில் நம் தமிழ்நாட்டு மாணவர்கள் சிறந்து விளங்கிவருகிறார்கள். போட்டா போட்டி போட்டுக்கொண்டு சென்ற 3 ஆண்டுகாலமாக தமிழ் நாட்டு மாணவர்கள் அகில இந்திய ரீதியில் போட்டியிட்டு கேடயம் தமிழகத்திற்கு வாங்கி வந்திருக்கிறார்கள்.

மருத்துவத் துறையிலும் தமிழகம் தாழ்ந்து விட்டது, குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. அகில இந்திய ரீதியில் முன்னணியில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

ஆங்கில அறிவைப் பார்க்கிறபோது 30 ஆண்டுகளுக்கு முன்பு 9-வது வகுப்பு படித்தவர்கள், 10-ம் வகுப்பு படித்தவர்கள் சரளமாக ஆங்கிலம் பேசுகிறார்கள். ஆனால் இன்று புகுமுக வகுப்பு, பி.ஏ. தேறிய மாணவர்கள் கூட அப்படிப் பேச முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் அறிவே கிடையாது. ஆனால் இன்று தமிழ் சரளமாகப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். பெரிய கருத்துக்களை எல்லாம் பரவலாக்கி எடுத்துச் சொல்லிவருகிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

30 ஆண்டு, 40 ஆண்டு காலம் கடந்து நாட்டில் நல்லதோர் வளர்ச்சி ஏற்பட்டதற்குப் பிறகு தமிழில் சரளமாகப் பேச, தமிழில் சரளமாக எழுத, தமிழிலே அறிவை வெளிப்படுத்த, ஆற்றலை வெளிப்

படுத்திக் காட்ட நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. அப்பொழுது 6-ம் வகுப்பைத் தொடர்ந்து எல்லாம் தமிழ் பாடம் ஒன்றைத் தவிர, மற்றவைகள் ஆங்கிலத்தில் இருந்தன. இப்பொழுது ஆங்கிலப் பாடம் ஒன்றைத் தவிர மற்றவைகள் தமிழிலே இருக்கத்தக்க அளவிலே நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 30 ஆண்டு காலம் மட்டுமே அறிவு வளர்வதற்கு இருக்கும் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனாலும் கூட, மற்றைய மாநிலங்களில் இதெல்லாம் வளர்ந்து விட்டது, ஆகவே இது குறைந்துவிட்டது என்று யாரும் சொல்லி விட முடியாது.

தென்னகத்தைப் பொறுத்தவரையிலும், குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், மொழி அறிவு, பேச்சு வன்மை, எழுத்து வன்மை வளர்ச்சி அடைந்துதான் இருக்கிறது. தமிழகத்தில் ஆங்கில அறிவு குறைந்து, உத்திரப் பிரதேசத்தில் வளர்ந்துவிட்டது, ராஜஸ்தானில் ஓங்கிநின்று விட்டது, பீஹாரில் இதைவிட தரம் உயர்ந்து விட்டது என்று யாரும் சொல்வதற்கில்லை. நாம் ஒரு இன்சு தாழ்ந்தால், அவர்கள் ஒரு அடி தாழ்ந்துவிட்டார்கள் என்ற நிலைமை தானே தவிர, நம்மைவிட அவர்கள் மிஞ்சிவிட்டார்கள் என்று சொல்வதற்கு இல்லை. ஆனால், இன்னும் கொஞ்சம் ஊக்கம் தர வேண்டும்.

மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போன்று, ஆங்கில மொழி அறிவு வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இரு மொழித் திறனை எல்லோரும் பெற வேண்டும் என்று அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே, தமிழ் மொழி அறிவு, தாய் மொழி அறிவு, ஆங்கில மொழி அறிவு ஆக இரண்டு மொழிகளிலும் வல்லுநர்களாக இருக்கவேண்டும். மொழி உதவி கொண்டுதான் தமிழ்த் துறையிலும் வளரவேண்டும், ஆங்கிலத் துறையிலும் வளரவேண்டும், மற்றவைகளும் வளரவேண்டும்.

ஆங்கில அறிவு வளர்ந்தால்தான் உலகத் தொடர்பு கொள்ள முடியும், உலக அறிவியல் தொடர்பு கொள்ள முடியும். சென்ற ஆண்டுவரை மூன்றும் வகுப்பில் ஆங்கிலம் சொல்லிக்கொடுத்தால் போதும், எழுத வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை இருந்தது. ஆனால் இந்த ஆண்டு முதல் மூன்றாவது வகுப்பில் எழுதப் படிக்க, இரண்டு ஆற்றலும் பெறவேண்டும் என்று ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறோம். தலைமை ஆசிரியர்களும், மற்றவர்களும், பெற்றோர்





களும், 10-வது படித்து, 11-வது படித்து வெளியேறுகிற மாணவர்களுக்கு ஆங்கிலத்திலும் நன்றாகப் பேச, எழுத, படிக்கத் தெரிய வேண்டும், அதேபோல் தமிழிலும் பேச, எழுத, படிக்கத் தெரிய வேண்டும் என்று விரும்பினால், அவர்கள் எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டும். எப்படிப்பட்ட பாட திட்டங்கள்வைத்து, எப்படிப்பட்ட பயிற்சி தரவேண்டுமோ அத்தகைய பயிற்சியை ஆசிரியர்களும், மற்றவர்களும் பெற, ஒத்துழைப்பு தந்து, அத்தகைய கட்டம் ஓரளவுக்கு நிறைவேறவேண்டும்.

தரத்தை வளர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். பாட திட்டங்களை மாற்றி அமைக்கவேண்டும். தேவைப்படுகின்ற பாடப் புத்தகங்களை வைக்கவேண்டும் என்பதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஆண்டுக்கு ஒரு புத்தகம் 80 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை வைத்து, அதிலே 60 பக்கங்கள் படித்தால் போதும் என்ற அளவுக்கு வந்து, அதிலே இருக்கிற சொற்களை மாணவர்கள் கற்றுக்கொண்டால் போதும் என்று வைத்து, ஆசிரியர்கள் சொல்லிக்கொடுப்பது 40, 45 பக்கங்களாக இருந்து, மாணவர்கள் படிப்பது 30 பக்கங்களாகக் குறைந்து கேள்விகள் 8 கேள்விகளாக இருந்து, அதில் சாய்ஸ் என்ற முறையில் மூன்று கேள்விகளுக்கு பதில் எழுதினால் போதும், அப்படி மூன்று கேள்விகளுக்குப் பதில் எழுதி 35 மார்க்குகளுக்குக் குறைந்து வாங்காமல் இருந்தால் போதும் என்ற நிலைமைகள் இருந்தால், இந்த அளவுக்கு இடற்பாடுகள் இருக்கிறவரையில் தங்களுடைய நோக்கத்தை அங்கே கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார்கள்.

தரம் இன்னும் கொஞ்சம் வளரவேண்டுமென்றால் அடித்தளத்திலிருந்து வளரவேண்டும். சமுதாயமும் ஒத்துழைக்கவேண்டும், பெற்றோர்களும் ஒத்துழைக்கவேண்டும். இன்னும் தரம் வளர்வதற்கு அடித்தளத்திலிருந்து வளர்ச்சி ஏற்படவேண்டும், கண்டிப்பாக இருக்கவேண்டும், கட்டாயமாக இருக்கவேண்டும், அதற்கு சமுதாயமும் ஒப்புக்கொள்ளவேண்டும், பெற்றோர்களும் ஒத்துழைப்பு கொடுத்து ஒப்புக்கொள்ளவேண்டும். 6-ம் வகுப்பு, 7-ம் வகுப்பு, 8-ம் வகுப்பு, 9-ம் வகுப்பு வரை மாணவர்கள் போகிறார்கள் என்றால், இரண்டு ஆண்டுகளுக்கு இரண்டு, மூன்று பள்ளிகளில் கணக்கு எடுத்துப்பார்த்தோம். ஒரு குறிப்பிட்ட பாடத்தில் 8 மார்க் வாங்கிய, 7 மார்க் வாங்கிய மாணவர்கள் கூட மேல் வகுப்புக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால் எல்லாவற்றையும் சேர்த்துக் கூட்டிப் பார்த்தால், 90 மார்க்குகள் பெற்றிருக்கிற காரணத்

கின்றல் அவர்களை மேல்வகுப்பிற்கு அனுப்பிவிட்டோம் என்று கூறக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. தப்பித் தவறி 6, 7 மாணவர்களை ஒரு வகுப்பில் நிறுத்திவிட்டால், உடனே பெற்றோர்கள் சாதாரணமாகக் கூட வருவதில்லை, தடியோடு வந்துவிடுகிறார்கள். அதற்கு அஞ்சிக்கொண்டு ஆசிரியர்களும், மற்றவர்களும், "நமக்கு ஏன் இந்தத் தொல்லை, பிள்ளைகளை நிறுத்துவானேன், நாம் அடி வாங்குவானேன்" என்று கருதி மேல்வகுப்பிற்கு அந்த மாணவர்களை அனுப்பிவிடக்கூடிய சூழ்நிலை இருந்துவருகிறது. அந்தச் சூழ்நிலை மாறவேண்டுமானால் பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும், அடிமட்டத்திலிருந்து வளர்ச்சி ஏற்படவேண்டும், ஆசிரியர்களும் ஒத்துழைக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால்தான் இந்த நிலை மாறும்.

65 பங்கு முட்டாளாக இருந்து, 35 பங்கு அறிவு இருந்தால் போதும் என்ற அளவுக்கு நாம் வைத்திருக்கிற முறை மாறவேண்டும். 50 பெர்சண்டாவது அறிவு உயரவேண்டும். அதற்கு சமுதாயம் தயாராக இருக்கவேண்டும். அதேபோல் வெற்றிபெற்றோர்களை மட்டுமே மேல் வகுப்பிற்கு அனுப்பவேண்டும் என்ற முறை இருக்க வேண்டும். அதையும் சமுதாயம் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படி ஒரு நடைமுறை ஏற்பட்டால், இப்பொழுது வந்திருக்கிற எண்ணிக்கை கூட 11-வது வகுப்பு அளவுக்கு வரும் என்று எதிர்பார்க்கமுடியாது. அதற்கான முயற்சிகளை மெல்ல மெல்ல மேற்கொண்டு, அப்படிப்பட்ட முறைகளைக் கொண்டுவரும் நிலை இருந்துகொண்டுவருகிறது.

தரத்தை உயர்த்துவதற்கு, கீழ் மட்டத்தில் ஆங்கில அறிவு வளர வேண்டும் என்பதற்காக, 19,500 ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் இருக்கவேண்டிய இடங்களில், செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமித்து, 19,500 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறோம். அது ஹையர் கிரேடு வேலைதான். ஆனால் அதை செகண்டரி கிரேடு வேலையாக மாற்றி, மாணவர்களுக்கு முறையாக கல்வி பயிற்றுவிக்க, அவர்களுடைய ஆங்கில அறிவை உயர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

ஏற்கனவே உயர்துவக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் சாதாரண ஆசிரியர்களாகத்தான் இருந்தார்கள். இப்பொழுது பி.டி. ஆசிரியர்களே துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக இருந்தால் நலமாக இருக்கும், கல்வியின் தரம் உயரும் என்று கருதி





900 பி.டி. ஆசிரியர்களை நியமிப்பதற்கு வழிவகைகள் செய்திருக்கிறோம். உயர் தகுதி பெற்றவர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுப்பதற்கு வசதி, வாய்ப்புகள் செய்து வைத்திருக்கிறோம். ஆராய்ச்சித் தேர்வு பெறுவதற்கு பி.எச்.டி. கல்லூரிகளில் வசதி வாய்ப்பு செய்து தரவேண்டுமென்று கேட்டார்கள். அதுபற்றிய முயற்சிகளையும் இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கிறோம். பி.எச்.டி. பட்டம் பெற்றவர்கள் கல்லூரிகளில் பயிற்றுவைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தித்தந்து ஊக்கம் தரவேண்டிய முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம்.

டியூட்டர்கள், டெமான்ஸ்ட்ரேட்டர்களைப் பொறுத்தவரையில் பி.ஏ., பி.எஸ்ஸி.-யை, எம்.ஏ., எம்.எஸ்ஸி.-யாக மாற்றவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. அந்த மாற்றத்தைச் செய்திருக்கிறோம். டியூடர், டெமான்ஸ்ரேடர்கள் பற்றியும் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள், மற்றவர்களும் குறிப்பிட்டார்கள், பி.ஏ., பி.எஸ்ஸி. படித்து, இரண்டு மூன்று ஆண்டுகள் வேலை பார்த்தால் கூடுமானவரையில் அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுத்து ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகளை கல்லூரிக் கல்வி இயக்குநர் மேற்கொண்டிருக்கிறார்கள் தனிப்பட்ட கல்லூரிகளைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழகம்தான் முடிவு செய்யவேண்டும். இதற்கு அரசாங்கம் தக்க முடிவு எடுத்து, 5, 6, 7 ஆண்டுகள் பணிபுரிந்து கொண்டிருப்பவர்களை திடீரென்று வீட்டுக்கு அனுப்புவது முறையல்ல என்பதை அரசாங்கம் உணர்ந்துதான் இருக்கிறது. நல்ல வகையில் தீர்வு காண வழிவகைகளை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. இது அரசாங்கக் கல்லூரிகளில் நடைபெறுவதில்லை. தனியார் கல்லூரிகளில்தான் அந்த நிலைமைகள் நடைபெறுகின்றன. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.

Dr. H. V. HANDE: Sir, May I know whether the Hon. Minister has contacted the Vice-Chancellor and found out whether he had got any objection to make them permanent and if not, do the Government have any objection to it ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முழு விவரமும் என்னிடம் இல்லை. அதுபற்றி நான் ஆராய்ந்து, பல்கலைக்கழகத்திற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால், நடைமுறைக்குக் கொண்டு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 18

வருவதற்கு. கல்லூரிக் கல்வி இயக்குநரை அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்து, மற்றைய கல்லூரிகளிலும் அதை நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொள்கிறேன் என்ற அளவுக்குக் கூறிக்கொள்கிறேன்.

அந்த வகையிலே கூட, ஆசிரியர்–மாணவர் விகிதாசாரத்தைப் பொறுத்தவரையில், ஓரளவுக்கு நல்ல முறையில்தான் கொண்டு வந்து வைத்திருக்கிறோம். கூடுமானவரையில் அதைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். 1965–66-ம் ஆண்டில் கணக்கெடுத்துப்பார்த்தால் ஒரு ஆசிரியருக்கு 37 மாணவர்கள் இருந்தார்கள். அதை ஓரளவுக்குக் குறைத்துக்கொண்டு வந்திருக்கிறோம். அந்த விகிதாச்சாரம் 1971–72-ல் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொண்டால், அந்த ரேஷியோவை இன்னும் கொஞ்சம் சாதகமாக ஆக்கிவிட முடியும்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் 32 ஆக இருந்தது, 28.9 என்ற அளவில் குறைத்திருக்கிறோம். 1 :28 என்ற அளவில் அந்த விகிதாசாரம் இருக்கிறது. இத்தகைய வசதி வாய்ப்பு ஏற்படுவதற்கு, ஆசிரியர்–மாணவர் விகிதாசாரம் ஓரளவுக்குக் குறைந்த அளவுக்கு காணப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.

மற்றொன்று, இந்த நிலைமைகளை சீர்படுத்துவதற்கு, கல்வியினுடைய தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை நான் மேற்கொண்டிருக்கிறபொழுது, வேறு வகையிலே பள்ளி வருப்பு மாணவர்களைக் கூட நாம் ஓரளவுக்கு சீர்படுத்தி, செம்மைப்படுத்தியாகவேண்டிய நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கிறோம். அந்த் வகையில் அதற்கான முயற்சிகளை அரசாங்கம் தனியாக எடுத்துக்கொண்டு வருகிறது. சாதாரணமாக பாடங்களை பயிற்றுவைக்கின்ற அளவுக்கு கீழ் மட்டங்களில் பாடங்களை போதிக்கின்ற அத்தகைய நிலைமையில் கூட மாறுதல் ஏற்படவேண்டும், பல்வேறு சூழ்நிலைகள் ஏற்படவேண்டும் என்கின்ற தன்மையை அடிப்படையாக வைத்துத்தான் வருப்பு நேரத்தை அதிகமாக ஆக்குகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த் வகையிலே சாதாரணமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில்—மற்ற மாநிலங்களில் ஓரளவுக்கு வைத்திருக்கிறார்கள்—இதிலே ஆசிரியர்கள் ஓரளவுக்கு ஒத்துழைக்கவேண்டும்—ஒரு ஆண்டில் 365 நாட்களில் துவக்கப்பள்ளி 220 நாட்களுக்கும், உயர்நிலைப் பள்ளி 200 நாட்களுக்கும் வேலை செய்யவேண்டியிருக்கிறது. இப்படி இருக்கும் 200 நாட்களிலே தேர்வுக்களுக்கு



1972 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்று கிட்டத்தட்ட 20 நாட்கள் போய்விடுகின்றன. இதைத்தவிர ஆசிரியர்கள் வேலை செய்யும் நாட்களில் 15 நாட்கள் காஷுவல் லீவு என்று போய்விடுகிறது. இத்தகைய நிலைமையில் ஆண்டில் 365 நாட்களில் ஆசிரியர்கள் கிட்டத்தட்ட பணியாற்றும் நாட்கள் மிக அதிகம் என்று சொல்லுவதற்கு இல்லை. எனவேதான் கமிட்டியிலும் ஆசிரியர்களின் வேலை நேரத்தினைச் சற்று உயர்த்திக் கொண்டால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆசிரியர்களே இதை முன்வந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எண்ணுகிறோமே தவிர. அவர்களோடு கலந்து பேசி கல்வித்தரம் உயருவதற்கு என்று சிறிது அவர்களுடைய வேலை நேரமும் உயர்ந்திடவேண்டும் என்று அவர்களோடு கலந்துபேசி, அவர்களுடைய இசைவோடு இதைச் செய்யவேண்டுமென்று இருக்கிறோம். இதில் அரசு ஆணையிட்டு. பிறகு அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திடும் நிலை வராமல் அவர்களுடைய இசைவுடனேயே இதைச் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறேன்.

இப்போது சாதாரணமாக உள்ள 35 பீரியடுகளில் தினமும் முதல் நான்கு வகுப்புகள் 45 நிமிஷமும் அடுத்துவரும் மூன்று வகுப்புகள் 40 நிமிஷமும் இருக்கும் நிலையினை மாற்றி ஒவ்வொரு வகுப்பும் 40 நிமிஷங்கள் இருப்பது என்று வைத்தால், இப்போதுள்ள கணக்குப்படி கிட்டத்தட்ட 25 மணி நேரம் வேலைசெய்யும் நிலை சற்று மாறுபட்டு, வாரம் 26 மணிநேரமும் 40 நிமிஷமும் என்று ஏற்படுகிறது. ஆக கூடுதலாக ஒரு மணியும் நாற்பது நிமிஷங்களும் ஆகிறது வாரத்திற்கு. இதை ஓரளவிற்கு அவர்கள் ஏற்றுக்கொண்டால் வசதியாக இருக்கும் என்றே எதிர்பார்க்கின்றேன். மற்ற மாநிலங்களிலுள்ள நிலைமையை ஒப்பிட்டு நோக்குங்கால் இது அதிகம் என்று சொல்வதற்கு இல்லை. மற்ற மாநிலங்களில் இதை விட அதிகமாகத்தான் வேலை செய்கின்றார்கள்.

உதாரணமாக, இந்தப் பேரவை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஆந்திரத்தை எடுத்துக் கொள்ளுவோமானால் அங்கே வாரத்திற்கு 45 நிமிடங்கள் கொண்ட 42 பீரியடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆண்டொன்றுக்கு 220 நாட்கள் எல்லா நிலைகளிலும் பாட நாட்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 18

அதேமாதிரி பீஹாரில் எடுத்துக்கொண்டால் 1-லிருந்து 5-ம் வகுப்பு வரையில் ஆண்டொன்றுக்கு 256 நாட்களும் ஆறு-ஏழு வகுப்புகளில் ஆண்டொன்றுக்கு 242 நாட்களும் எட்டிலிருந்து பதினொன்றும் வகுப்புவரையில் ஆண்டொன்றுக்கு 240 நாட்களும் பள்ளி நாட்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுகின்றன.

இராஜஸ்தானை எடுத்துக்கொண்டால் எல்லா நிலைகளிலும் 250 நாட்களும் பஞ்சாபில் 245 நாட்களும் ஹரியானாவில் 244 நாட்களும் பள்ளி நாட்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குஜராத் மாநிலத்தில் முதல் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்பு வரையில் 237 நாட்களும் எட்டு முதல் பதினொன்றும் வகுப்பு வரையில் 235 நாட்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒரிசா மாநிலத்தினை எடுத்துக்கொள்ளுவோமானால் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் 255 நாட்களும் ஆறு–ஏழாம் வகுப்புகளில் 240 நாட்களும் எட்டாம் வகுப்புமுதல் இறுதிப் பள்ளிவகுப்பு வரை 230 நாட்களும் என்று இருக்கின்றன.

அஸ்ஸாம் மாநிலத்தில் முதல் மூன்று வகுப்புகளுக்கு ஆண்டொன்றுக்கு 250 நாட்களும் நான்கு முதல் இறுதிப்பள்ளிவகுப்பு வரையில் 220 நாட்களும் என்று வைத்துக்கொண்டு அங்கே செயல்படுகின்றார்கள்.

ஆந்திரத்தில்தான் எல்லா நிலைகளிலும் 220 நாட்கள் என்று வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

கேரளம் தமிழகம் ஆக இந்த இரண்டு மாநிலங்களில்தான் 200 நாட்கள் என்று வைக்கப்பட்டிருக்கின்றன.

இதுபோன்று வகுப்புகளின் நேரங்களைக் கணக்கிடும்போதும் இதுவரை வாரம் 25 மணிநேரம்தான் என்று வைத்துக்கொண்டு இருக்கின்றோம். வாரத்திற்கு 35 பீரியடுகள் என்று இப்போது இருக்கின்றன. மற்ற மாநிலங்களின் அளவினைக் கணக்கில் எடுத்துக்கொண்டால் ஆந்திரத்தில் 45 நிமிஷம் கொண்ட 42 பீரியடுகள் வைத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இது வாரத்திற்கு 31 மணியும் 30 நிமிடங்களும் ஆகின்றது. பீஹாரில் 40 நிமிடங்கள் கொண்ட 39 வகுப்புகள் 26 மணி நேரத்திற்குக் கணக்காகின்றது. குஜராத்தினை எடுத்துக்கொள்ளுவோமானால் 35 நிமிடம் கொண்ட 50 வகுப்புகள் வாரத்திற்கு 28 மணி 10 நிமிடங்கள் என்று ஆகிறது. அரியானாவில்



1972 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

35 நிமிஷம் கொண்ட 44 வகுப்புகள் 25 மணி 40 நிமிஷம் என்று ஆகிறது. ஜம்மு–காஷ்மீரத்தில் 30 நிமிஷங்கள் கொண்ட 54 வகுப்புகள் 27 மணி நேரத்திற்கும் மத்திய பிரதேசத்தில் 35 நிமிஷங்கள் கொண்ட 48 வகுப்புகள் 28 மணி நேரத்திற்கும் மகாராட்டிரத்தினை எடுத்துக்கொள்வோமானால் 35 நிமிஷங்கள் கொண்ட 45 வகுப்புகள் 26 மணி 25 நிமிஷங்களுக்கும், மைசூரை எடுத்துக்கொள்ளுவோமானால் 45 நிமிஷ நேரம்கொண்ட 38 வகுப்புகள் 23 மணி 30 நிமிஷம் என்றும், ஒரிசாவில் 40 நிமிஷம் கொண்ட 39 வகுப்புகள் 26 மணி நேரத்திற்கும், பஞ்சாபில் 40 நிமிஷம்கொண்ட 48 வகுப்புகள் 32 மணி நேரத்திற்கும் ராஜஸ்தானில் 35 நிமிடங்கள் கொண்ட 48 வகுப்புகள் வாரத்திற்கு 28 மணி நேரத்திற்கும், உத்திரப்பிரதேசத்தில் 40 நிமிஷங்கள் கொண்ட 48 வகுப்புகள் 32 மணி நேரத்திற்கும் கணக்காகிறது. இவற்றோடு தமிழ் நாட்டிலுள்ள நிலையினை ஒப்பிட்டுப்பார்த்தால் இப்போதுள்ள நிலை, 40 அல்லது 45 நிமிஷங்கள் கொண்ட 35 வகுப்புகள் வாரத்திற்கு மொத்தமாக 25 மணி நேரத்திற்கு ஆகிறது. இதைச் சற்று மாற்றி 40 நிமிடங்கள் கொண்ட 40 வகுப்புகளாக அமைப்பதன் மூலம் 25 மணி என்பது 26 மணி 40 நிமிஷங்கள்—அதாவது கூடுதலாக ஒரு மணி நாற்பது நிமிடங்கள் ஆகின்றது. இதனை ஆசிரியர்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ள முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

பள்ளிச் சீரமைப்புக் குழு டாக்டர் பால் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்தக்குழு பல்வேறு கருத்துக்களை எடுத்து உரைத்திருக்கிறது. அவற்றின்மீது ஓரளவிற்கு முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவை பரிசீலனையில் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள் அவை "ஆழ்ந்த பரிசீலனையில் உள்ளன" என்று. ஆழ்ந்த பரிசீலனை என்று சொல்லும்போது, மேற்போக்கான பரிசீலனை, ஆழ்ந்த பரிசீலனை என்று இருப்பதாக ஏற்படுகிறது. மேற்போக்கான பரிசீலனை என்று சொல்லும்போது, தலைப்பினைப் புரட்டிப் பார்த்துவிட்டு, பிறகு முடிவுரையினைப் பார்த்துவிட்டு அதன்பிறகு முடிவெடுப்பது மேற்போக்கான பரிசீலனை என்று சொல்லலாம். ஆனால் ஆழ்ந்த பரிசீலனை என்று சொல்லும்போது பிரச்சினையின் ஒவ்வொரு கோணத்தையும் சற்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 18

அவர்கள் குறிப்பிட்டார்கள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்று. இதை அரசு ஒப்புக்கொள்ளுகின்றது. எனவே தான் அந்தக் குழுவிலும் ஆசிரியர் பிரதிநிதியினை அமர்த்த எண்ணினோம். இதை அரசு ஒப்புக்கொள்ளுகிறது என்று சொல்லும்போது தனியார் பள்ளி அனைத்தும் மோசம் என்று அரசு எண்ணிவிடுவதாக யாரும் எண்ணிவிடக்கூடாது. சொல்லப்போனால் அக்குழு தனியார் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறியிருப்பதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. நல்ல முறையில் நாம் பாராட்டக்கூடிய வகையில் தனியார் பள்ளிகள் பல இருக்கின்றன என்பதை மறுக்கவில்லை. ஆனால், வியாபார நோக்கோடு ஒரு சில பள்ளிகள் அல்லது கல்லூரிகள் ஏற்படும்போதுதான் சங்கடங்கள் ஏற்படுகின்றன. வேறு வேலை கிடைக்கவில்லையென்றால் இப்படி ஒரு சிலர் ஆரம்பித்துவிடக்கூடும். இவற்றின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது என்று வரும்போது, கல்லூரிகளானால் பல்கலைக்கழகம் கல்லூரிக்குத் தந்துள்ள அனுமதியினை அல்லது பள்ளியானால் அரசு தந்துள்ள அனுமதியினை திரும்பப்பெற்றுவிடலாம். ஆனால் அதிலுள்ள கஷ்டம் அதில் படித்துக்கொண்டுள்ள மாணவர்களுடைய நிலையும் பணியாற்றிக்கொண்டுவரும் ஆசிரியர்கள் நிலைமையும் அதன் பிறகு யோசிக்க வேண்டியிருக்கிறது. எனவேதான் தவறிழைக்கும் பள்ளிகளை அல்லது கல்லூரிகளை அரசு ஏற்று நடத்திட வழிசெய்யும் வகையில் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது. இது சட்டத்துறைக்குப் போய் வரவேண்டும்.

அதற்குப்பிறகு கல்வியானது "கன்கரண்டு ஸப்ஜெக்ட்" டாக இருப்பதால் இது மத்திய அரசுக்கும் அனுப்பப்பட்டு பிறகு குடியரசுத் தலைவர் அவர்களுடைய சம்மதத்தின்பேரில் இது சட்ட முன்வடிவு பெற்று இம்மன்றத்தில் கொண்டுவரப்படும். சட்டத் துறையில் ஒரு சில யோசனைகளைச் சொல்லியிருக்கின்றார்கள். இவற்றை ஆராயவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். ஒரு பள்ளியினை அரசு மேற்கொள்ளும் போது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அடிப்படை ஜீவாதார உரிமையின் கீழ், அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள இம்முன்னுரிமைகளின் கீழ் அவர்கள் நீதி மன்றங்களுக்குப்போகக்கூடும். ஒருவர் இப்படித்தான் உரிமை கோரி, "எனக்கு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க உரிமை இருக்கிறது, நீங்கள் பணம் கொடுத்துத்தான் ஆகவேண்டும்" என்று கோரி சுப்ரீம் கோர்ட்டிலேயே போய் வாதாடி வெற்றிபெற்றிருக்கின்றார். இதுபோன்றே ஒரு குறிப்பிட்ட கல்லூரியில் குறிப்பிட்ட வகுப்பினை



1972 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஆரம்பித்துவிட்டு, "இது சிறுபான்மையோருக்கான கல்லூரி, இதற்கு நீங்கள் உதவித்தொகை அளித்துத்தான் ஆகவேண்டும்" என்று வாதிட்டுக்கொண்டு இருக்கின்றார். அதை நாங்கள் நிறுத்தி வைத்திருக்கின்றோம். எனவே இப்படிப்பட்ட சட்ட சிக்கல்கள் ஏற்படாதவாறு இச்சட்டம் இயற்றிடவேண்டும் என்று இதைச் சட்டத்துறைக்கு அனுப்பிவைக்க வேண்டிய நிலை இருக்கிறது. இக் கூட்டத்தொடரிலேயே இதைக்கொண்டுவரவேண்டும் என்றுதான் விரும்புகிறோம். இதற்குள் முடியாவிட்டாலும் அடுத்த தொடருக்குள் கண்டிப்பாகக் கொண்டுவரமுடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, மதிய உணவுத் திட்டம்பற்றிக் குறிப்பிட்டார்கள். நண்பர் குருசாமி அவர்கள் வடக்கு மாவட்டங்கள் வாழ்கின்றன, தெற்கு மாவட்டங்கள் தேய்கின்றன என்று குறிப்பிட்டார். தெற்கு மாவட்டங்களைத் தேயவைத்துவிட்டு வடக்கு மாவட்டங்களை வாழ வைக்கும் திட்டம் ஏதும் கிடையாது. இதில் உள்ள நிலை என்னவென்றால் "கேர்" நிறுவனத்தார் இத்திட்டத்தினை பெருமளவிற்கு ஏற்றுக்கொண்டு செயல்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். அவர்களே ஒரு திட்டமிட்ட முறையில் இதைச் செயல்படுத்திக்கொண்டு வருகின்றார்கள். அவர்களோடு வாதிட்டு உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் நவீன சமையற்கூடங்களை ஏற்படுத்தி ஒவ்வொன்றிலும் இரண்டு வேன்களை வைத்துக்கொண்டு, பகல் ஒரு மணிக்குள் அனைத்து பள்ளிகளுக்கும் உணவினை வழங்கமுடியாதா என்று கேட்டு வருகின்றோம். ஆனால் அவர்களுக்கும் சில சங்கடங்கள் இருக்கின்றன. மாநிலம் முழுதும் பல இடங்களிலே ஏற்படுத்திவிட்டால் அதற்கான வசதிகளும் அதிகாரிகளும் இல்லை என்கிறார்கள். அவர்கள் விரும்புவது ஒவ்வொரு மாவட்டமாக இதை அமைத்துக்கொண்டு போக வேண்டும் என்பதுதான். அப்படிப்பார்த்தால் சென்னைக்கு அருகிலுள்ள செங்கற்பட்டு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் என்று ஒவ்வொன்றாகக் கவனம் செலுத்திக் கொண்டு வருகின்றார்கள். இயற்கையாகவே இராமனாதபுரம் மாவட்டம் தென்கோடியில் அமைந்துவிட்டபடியால் இவர்களுடைய திட்டப்படி அங்கே இன்னும் ஆரம்பிக்க முடியவில்லை. எனவே ஆரம்பிக்காதது அரசின் செயல் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது "கேர்" நிறுவனத்தின் கீழ் நவீன சமையற்கூடங்கள் 31 நிறுவப்பட்டு இருக்கின்றன. மேலும் 30 திறக்கப்பட இருக்

கின்றன. அடுத்து இன்னும் ஒரு 30 எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து பத்து சமையலறையினை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் அவர்கள் தங்களுக்குள்ள வசதிக்குறைவினால் இதைச் செய்ய முடியாது என்கிறார்கள். இது சீக்கிரம் பரவலாக்கப்படும் என்று நம்புகிறேன்.

அடுத்து, இந்தி ஆசிரியர்களுக்கு மாற்று வேலையளிப்பது பற்றி அடிக்கடி சொல்லிவந்திருக்கின்றேன். எனவே அவற்றை மீண்டும் சொல்ல வேண்டும், விளக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மேலும் கல்லூரிகளை ஏற்படுத்துவதன் அவசியம்பற்றிக் குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொறுத்தமட்டில் உள்ள வாய்ப்புகளையும் வசதிகளையும் அனுசரித்து பரவலாக கல்லூரிகளை அங்கே ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். புதிய கல்லூரிகளை ஏற்படுத்துவதன் மூலமாகவும், இருக்கும் கல்லூரிகளில் இடங்களை அதிகப்படுத்துவதன் மூலமும் இட வசதிகளை அதிகப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

சென்ற ஆண்டு பி.யு.சி. யில் மொத்தம் ஒதுக்கப்பட்டிருந்த இடங்கள் 72,160. அதில் ஆங்கில பயிற்சி மொழிக்கு 52,113 இடங்களும், தமிழ் பயிற்சி மொழிக்கு 20,047 இடங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. அப்படி இருந்தும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு இட நெருக்கடி ஏற்பட்டது. அதற்குக்காரணம் சில மாணவர்கள் இந்த ஊரில் இந்த கல்லூரியில்தான் இடம் வேண்டும்; அதுவும் இந்த பாடம் தான் வேண்டுமென்று கேட்பதால் தான் சில குறிப்பிட்டக் கல்லூரிகளில் இட நெருக்கடி ஏற்படுகிறது. வேறு சில கல்லூரிகளில் ஒதுக்கப்பட்டதில் பல இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அப்படி இடம் இருக்கக்கூடிய கல்லூரிகளில் மாணவர்கள் போய் சேர விருப்பம் இல்லாமல் இருக்கின்றார்கள். தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தின் கீழ் 20,047 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 2,364 இடங்கள் நிரப்பப்படவில்லை. ஆங்கிலப் பயிற்சி மொழித் திட்டத்தின்கீழ் 52,113 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 5,753 இடங்கள் நிரப்பப்படவில்லை.

அதைப்போன்று பி.ஏ., பி.எஸ்ஸி., போன்ற பட்டப்படிப்புத் துறையில் மொத்தம் 35,611 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 4,696 இடங்கள் நிரப்பப்படவில்லை. அதில் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தின் கீழ் 6,079 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 1,802 இடங்கள் நிரப்பப்படவில்லை. ஆங்கிலப் பயிற்சி மொழித் திட்டத்தின்கீழ் 29,532 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 2.894 இடங்கள் நிரப்பப்படவில்லை. சில கல்லூரிகளில் இடம் காலி இருப்பது மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். வரும் ஆண்டிலிருந்து அதுபற்றி விளம்பரம் செய்யலாம் என்று அரசு கருதியுள்ளது.



தொழில் நுட்பத் துறையில் பணியாற்றிவருபவர்கள் வேலையில் இருந்து கொண்டே பட்டப் பயிற்சி பெறுவதற்கு வசதி செய்யும் பொருட்டு இந்த ஆண்டிலிருந்து பகுதி நேரப் பொறியியல் பட்டப் படிப்புப் பயிற்சித் தொடங்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்கு ஒரு முயற்சியாக பழகு தொழில் பயிற்சித் திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 600 பேரை நியமனம் செய்ய அரசு வழி செய்துள்ளது. இதில் 236 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதில் 93 பேர்கள் தான் வேலையில் சேர்ந்துள்ளனர். தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு வேலை வாய்ப்பில்லாத நிலை அங்கத்தினர்கள் சொல்கின்ற அந்த அளவுக்கு இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இப்போது இல்லை.

நான்காவது ஐந்தாண்டு திட்டம் ஏற்பட்டதற்குப் பின்பு தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு வேலைவாய்ப்பு வசதிகள் பெருகி வருகின்றன. முதலாவது, இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில், தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் தொழில் நுட்பக்கல்வி நிலையங்கள் பலவற்றைத் தோற்றுவிப்பதிலும், அவற்றிற்கான இயந்திர சாதனங்களைப் பெருக்குவதிலும் ஈடுபட்டிருந்தோம். தொடர்ந்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டதால், ரயில்வே துறை, பொதுப்பணித் துறை போன்றத் துறைகளில் புதியப் பணிகள் தொடங்கப்படாமையும், பொதுவாக தொழில் வளர்ச்சியில் மந்த நிலை ஏற்பட்டதும் அவர்களின் வேலை வாய்ப்பு குறைந்ததற்கு காரணங்களாகும். இப்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படத் தொடங்கிய பின்னால் பொறியியல் துறையைப் பொறுத்தமட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 18

இப்போது பி.இ. பட்டம் பெற்றவர்களுக்கும் வேலைக்குச் செல்லும்போது முன் அனுபவம் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அதனால் அவர்கள் ஓராண்டு பயிற்சி பெறவும் இப்போது வகை செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பயிற்சி கால உதவிப் பணமாக ரூ. 250 அளிக்கப்படுகிறது. பி.இ. பட்டதாரிகளுக்கு இந்த பயிற்சித் திட்டத்தின்கீழ் 80 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதில் 30 பேர்கள் தான் வேலையில் சேர்ந்திருக்கிறார்கள்.

அதேமாதிரி டிப்ளமா கோர்ஸ் படித்தவர்களுக்கு 108 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் இதுவரை 47 பேர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகையாக மாதம் ரூ. 150 வழங்கப்படும்.

அடுத்து 50 கிராஃப்ட்ஸ்மென்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டதில் இதுவரை ஒருவர்தான் சேர்ந்திருக்கிறார். அவர்களுக்கு மாதம் 90 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும். இந்த புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, தொழில் நுட்பப் பயிற்சிப் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் தேக்கநிலை இல்லை என்பதை நிச்சயமாக நம்பலாம்.

தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு போதிய வேலை வாய்ப்பு ஏற்படவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்களும் வேறு பல உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு போதிய வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கின்ற வகையில் 9 வகையான கோர்ஸ்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை

'Cosmetology—Government Polytechnic for women, Madras

Horticulture—Central Polytechnic, Madras.

Medical Equipment Technology—Central Polytechnic, Madras

Making Confectionary—Government Polytechnic for Women, Coimbatore.

Agricultural Engineering—Muthiah Polytechnic, Annamalainagar.

Architectural Assistantship—Government Polytechnic for Women, Madras.

Instrument Technology—Sandwich Courses.

Sugar Technology—Institute of Chemical Technology, Madras

Welding Technology—Government Polytechnic, Tiruchirappalli. (*Post-Diploma course*).



1972 மார்ச் 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1972–73-ல் இன்னும் சில கோர்ஸ்கள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளன. அவை,

'Diesel Traction—Government Polytechnic, Tiruchirappalli.

Library Science and Office Methods and Practices—Government Polytechnic for Women, Madurai.

Prosthetics and Orthetics—Central Polytechnic, Madras.

Marine Diesel Engineering—Central Polytechnic, Madras.

மகளிர் பாலிடெக்னிக்குகளில் ஸ்டேனோகிராபி, டைப்ரைட்டிங் முதலிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு இருக்கிறது. மற்ற இடங்களிலும் இதுபோன்ற பாலிடெக்னிக்குகள் ஏற்படுத்துவதற்கு வகை செய்யப்பட இருக்கின்றன.

சட்டக்கல்லூரியைப் பொறுத்தவரையில், இப்போது 2000-க்கு மேற்பட்ட மாணவர்கள் படித்துவருகிறார்கள் என்றும், அதனால் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை தொடங்கவேண்டும் என்றும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும், அதை குறைக்கவேண்டுமென்றும், இப்போது படிக்கின்ற மாணவர்களுக்கே வேலை வாய்ப்புகள் இல்லாத நிலை இருக்கிறது என்றும் மாணவர்கள் ஒரு கோரிக்கையை கொடுத்திருக்கிறார்கள்.

இப்போது நடைபெறுகின்ற கல்லூரிகளிலே சட்டக் கல்லூரி ஒன்றுதான் அரசாங்கத்திற்கு லாபமானது. மற்ற கல்லூரிகளினால் அரசாங்கத்திற்கு நஷ்டம் தான். எனவே, சட்டக்கல்லூரி ஏற்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்கு செலவும் அதிகமாகாது. ஆனால் வேலைவாய்ப்பினைக் கருதி அந்தத் திட்டத்தை இப்போது ஒற்றிப்போட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை அரசு ஏற்கவேண்டியிருக்கிறது. ஆனால் காலம் செல்லச் செல்ல, மதுரை பல்கலைக்கழகத்தில் ஒரு சட்டக் கல்லூரி வேண்டுமென்று கேட்டால், அப்போது அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

மாலை நேரச் சட்டக்கல்லூரியிலும் அதிக மாணவர்களைச் சேர்க்க வசதி செய்யப்பட்டுள்ளது. இப்போது இருக்கின்ற கட்டடம் போதவில்லை என்றும் புதிய கட்டடம் ஒன்று கட்ட வேண்டும் என்றும் சொல்லியிருக்கின்றார்கள், புதிய கட்டடம் கட்டுவதற்கு மொத்தம் 11 லட்சத்து 45 ஆயிரம் செலவாகும். அதற்கு வேண்டிய

நிலமும் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. விரைவிலே அந்தப் பணி தொடங்கப்படும்.

அடுத்து, நூலக இயக்கங்களைப் பற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நூலகங்களின் வருவாயைப் பெருக்குவதற்காக இது வரை வசூலிக்கப்பட்ட 3 காசு செஸ் வரியை இப்போது 5 காசாக உயர்த்தியிருக்கிறோம். அதற்குச் சமமான ஒரு தொகையை அரசாங்கமும் மானியமாக வழங்கும். அரசு அளிக்கும் இத் தொகையில் ஒரு பகுதியை புத்தகங்களாகவே வாங்கி வழங்கலாமா என்ற யோசனை அரசின் ஆய்வில் உள்ளது.

நூலகப் பணியாளர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுவது பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது நூலக இயக்கத்திற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு தனியாக நூலக இயக்குநர் பதவி ஒன்று அரசு ஏற்படுத்த முடிவு செய்துள்ளது.

மற்றும் ஆங்காங்கே இருக்கின்ற பல சிறு சிறு குறைகளை யெல்லாம் சொன்னார்கள். அவைகளையும் போக்குவதற்கு அரசாங்கம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும். கல்வித் துறையானது விரிந்து பரந்த ஒரு பெரிய துறையாக இருக்கிறது. நானும் 10, 15 துறைகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இதுபோன்ற சிக்கலான சங்கடமான துறை வேறு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால் அந்த அளவுக்கு பிரச்னைகள் இருக்கின்றன. 91 கோடி செலவிடுகிற துறை. அரசாங்கப் பள்ளி, உள்ளாட்சித்துறைப்பள்ளி, மதஸ்தாபனங்கள் நடத்துகிற பள்ளி, ஆங்கிலோ இந்தியன் பள்ளி, ஜில்லா போர்டில் இருந்து வந்த பள்ளி—இவை எல்லாவற்றுக்கும் மேலாக கன்னியாகுமரியில் இருந்து வந்து சேர்ந்த பள்ளி—இவர்கள் தங்களுக்கென்று சில இலக்கண விதிமுறைகள் வைத்திருக்கிறார்கள். நம்மோடு சேர்ந்துவிடக்கூடிய நிலையில் இப்போது ஓரளவுத்தான் மாற்றம் ஏற்பட்டுவருகிறது. அதைப்பற்றி எல்லாம் திரு சுவாமி நாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள்—இப்படி மிகப் பெரிய துறை—மிகச் சிக்கலான துறை—பள்ளிகளை நடத்துகிறவர்கள் யாராக இருந்தாலும், எந்த இடத்தில் இருந்தாலும் நாம் அவை எல்லாம் ஒரு படியாக ஒரே தன்மையில் நடத்தப்படத்தான் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.





தொல்பொருள் ஆராய்ச்சியும் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. இன்னும் அதிகமான நிதி அந்தத்துறைக்கு ஒதுக்கப்பட்டால் அவர்களது ஆராய்ச்சிகள் இன்னும் சிறப்பாக, நன்றாக அமையும்.

தொழில் நுட்ப பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதுபற்றிக் குறிப்பிட்டார்கள். தனியாக அதுபோன்ற ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்போது யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன் சில ஐயங்களை கிளப்பியிருக்கிறது. அடுத்த மாதம் டெல்லியில் நடக்க இருக்கிற மகாநாட்டில் நம்முடைய அதிகாரிகள் விவாதித்து அந்த ஐயங்களையும் தெளிவுபடுத்திவிடுவார்கள். இப்போது தொழில்நுட்பக் கல்லூரிகள் சென்னை பல்கலைக்கழகத்தோடு இருக்கிறது. இங்குள்ள செனட்டில் எல்லா உறுப்பினர்களும் தொழில்நுட்ப நிபுணர்களாகவே இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கே தனியாக பல்கலைக் கழகம் ஏற்படுமானால் அத்துறை வல்லுநர்கள் கூட தங்களுக்குள்ள பிரச்னைகளை நல்ல முறையில் விவாதித்து முடிவு எடுக்க வகை ஏற்படும். அந்தவகையில் தனியாக தொழில் நுட்ப பல்கலைக்கழகம் அமைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பல்லாவரம் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் வேலையில் இருந்து நீக்கப்பட்டது சம்பந்தமாக திரு ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். மிஸ் அப்ரோப்ரியேஷன் செய்ததாக அவர் பள்ளியில் இருந்து முதலில் சஸ்பெண்டு செய்யப்பட்டார். அதுபற்றி அவர் மேல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக்கொண்டார். மேலதிகாரிகளின் முடிவு வருவதற்குள் அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். இதை ஆட்சேபித்து அந்தத் தலைமை ஆசிரியர் ஹைக்கோர்ட்டில் ரிட் போட்டார். அந்த ரிட்டின்மீது விசாரணை நடத்தப்பட்டு, கோர்ட்டில் இவருடைய கேஸ் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு அவர் கல்வித் துறைக்கு யாதொரு முறையீடும் அனுப்பவில்லை. இனிமேல் ஏதாகிலும் வந்தாலும்கூட அதுபற்றி சட்டநிலை என்ன என்பது பற்றி ஆராயப்பட்டு, அநீதி இழைக்கப்பட்டிருந்தால் அது நீக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நாட்டில் ஏழ்மை, வறுமை, இல்லாமை, போதாமை எல்லாவற்றுக்கும் காரணமாக அமைந்திருப்பது கல்வி அறிவு இன்மைதான். இதை அகற்ற கல்வித்துறையில் அரசு அதிக முதலீடு

டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 18

செய்வது மட்டும் போதாது. மக்கள், ஆசிரியர்கள், உறுப்பினர்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அந்த முறையில் இன்றைய தினம் அதிகமான ஒத்துழைப்பைத் தந்து வருகிற கல்வித்துறை செயலாளர், தொழில் நுட்ப கல்வி இயக்குநர், பள்ளி இயக்குநர், இத்துறை அலுவலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார் ஆன் ய பாயிண்ட் ஆப் க்ளாரிபிகேஷன். சார், கல்லூரிகளில் ஆங்கில மீடியம் வேண்டுமென்று கேட்கிற மாணவர்களை தமிழ் மீடியம் எடுத்துக்கொள்ளச் சொல்லி கட்டாயப்படுத்துகிறார்கள். அப்படியின்றி ஆங்கில மீடியம் வேண்டுமென்று கேட்கிற அத்தனை மாணவர்களுக்கும் ஆங்கில மீடியம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

இரண்டாவதாக, அப்பரெண்டிஸ் என்பதாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களை வைத்திருக்கிறார்கள். ரெகுலர் போஸ்ட் வரும்போது இவர்களை எடுத்துக்கொள்ளாது, வெளியில் இருந்து புதியதாகக் கொண்டுவருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியின்றி இவர்களைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இன்றையதினம் ஏறக்குறைய பி.யு. சி. யில் 52 ஆயிரம் இடம் ஆங்கில மீடியத்திற்குத்தான் இருக்கிறது. 20 ஆயிரம் இடம் தான் தமிழ் மீடியத்திற்கு இருக்கிறது. அரசாங்கக் கல்லூரிகளில் கூட திரு. ஏ. எல். முதலியார் சிபார்சுப்படி ஒரு ஆங்கில மீடியம் செக்ஷனும் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதுபோல தனியார் கல்லூரிகளில் ஒரு தமிழ் மீடியம் வகுப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கை கூட வற்புறுத்தப்படவில்லை. அவர்கள் இன்னமும் எல்லா வகுப்புகளையும் ஆங்கில மீடியமாகவே வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில், இருக்கிற இடங்களில் எல்லாம் ஆங்கில மீடியம் வேண்டுமென்று கேட்கிறவர்களுடைய தகுதி. தேர்ச்சி எல்லாம் பார்த்துச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். கேட்கிறவர்களுக்கு எல்லாம் கொடுக்க வசதி செய்வது என்பது எங்கும் முடியாது. எம்.எஸ்.ஸி. பிசிக்ஸ் படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் 50 பேர்களாக இருக்கலாம். இருக்கிற சீட் பத்துத்தான் இருக்கிறது என்றால் அவர்களிடையே தேர்ச்சி, மெரிட் பார்த்து பத்துப்பேர்களை சேர்த்துக்கொள்ள முடிகிறது. காமர்ஸ் வேண்டும் என்கிறார்கள்



1972 மார்ச் 18]

இருக்கிற இடங்கள் பூர்த்தியாகிவிட்டது என்றால் மற்றவர்கள் வேறு சப்ஜக்ட்தான் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே கேட்கிறவர்களுக்கு எல்லாம் ஆங்கில மீடியம் கொடுக்கவேண்டும் என்பது இயலாத காரியம், நடக்காத காரியம்.

அடுத்ததாக, அப்பரெண்டிஸ் ஆக இருக்கும் ஆசிரியர்களைப்பற்றிச் சொன்னார்கள். அதில் குறை இருக்குமானால் பரிசீலித்து அந்தக் குறை அகற்றப்படும்.

இவ்வளவு எல்லாம் கேட்டுக்கொண்டு கல்வித்துறைக்கு 100 ரூபாய் குறைக்கவேண்டும் என்கிற உங்கள் வெட்டுத்தீர்மானங்களை வற்புறுத்தினால் அது நியாயம் ஆகாது, ஆகவே உங்கள் வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப்பெற்றுக்கொண்டு இந்த மானியத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தருமாறு உங்களை வேண்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அனந்தநாயகி திரு சோ. அழகர்சாமி, திரு. கே. ஏ. வகாப், திரு. கே. எஸ். கோதண்டராமையா ஆகியவர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால் அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி "கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 91,24,22,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவடைகின்றன. நாளை பேரவைக் கூட்டம் கிடையாது—நாளைக்கு மறுநாள் திங்கட்கிழமை 20—3—1972 அன்று காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

68. Notification issued with G.O. R. No. 9, Revenue, dated the 4th January 1972 in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the President, Pattinappakkam Mahalir Manram on 8th January 1971 at Rajkumari Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

69. Notification issued with G.O. R. No. 43, Revenue, dated the 7th January 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the Principal, Don Bosco Matriculation School, Madras on 23rd January 1972 at Devi Theatre, Madras. [Laid on the Table of the House under Section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939.)]

### B. *Reports, Notifications and Other Papers.*

@ 84. Speech Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health on Demand No. 38—Capital Outlay on Public Health—1972-73 (English and Tamil).

@ 85. Speech of Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health on Demand for Medical Grants, 1972-73 (English).

£ 86. Speech of Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health on Demand for Public Health Grants, 1972-73 (English and Tamil).

£ 87. Pamphlets on Family Planning.

& 88. Speech of Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health on Demand for Medical Grants, 1972-73 (Tamil).

& 89. The Performance Budget of the Medical Education 1972-73.

& 90. The Performance Budget of the Health Services and Family Planning 1972-73.

& 91. Note on Progress of Education in Tamil Nadu 1972-73 (English and Tamil).

---

@ Despatched to Members on 15—3—1972.

£ Despatched to Members on 16—3—1972.

& Laid on the Table of the House on 17—3—1972.



## இணைப்பு 1

20-ஆம் பக்கத்தில் 558-ம் எண்ணுள்ள வெளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### SALT PRODUCTION IN TUTICORIN.

In connection with the construction of the major harbour at Tuticorin about 4,000 acres of land was notified for acquisition. This land was meant to meet the needs of the harbour as also the need of the Industries that are likely to be started in the vicinity of the harbour. In the lands proposed to be acquired, there are salt pans, some owned by private parties, others owned by Government of India and leased out to small salt manufacturers. Government of India have agreed to hand over their lands to the State Government. The salt manufacturers of Tuticorin have been expressing the fear that acquisition of salt lands may affect the production of salt in Tuticorin. Government is aware that salt is one of the important items that will have to be exported through the Tuticorn harbour, and hence has provided one berth exclusively for ships used for exporting salt. Government is therefore planning to locate suitable alternate areas where salt could be manufactured in and around Tuticorin. It is the intention of the Government that wherever the salt manufactures get dislodged due to the acquisition of the land by the Government, Government will take all possible steps to rehabilitate those dispossessed owners in alternate lands which are suitable for salt production. In order to achieve this objective, Government intends to permit the salt manufacturers whose lands are being acquired now to continue in their lands for temporary short periods, till alternate lands where salt can be produced are located. In this process Government will also ensure that those who are dispossessed of the land first get a chance for being rehabilitated in alternate site first, i.e., following a policy of first dispossessed first rehabilitated. Through this method, it is hoped to ensure that salt production in Tuticorin is not affected and also least possible dislocation is caused to the traditional salt manufacturers in the area.

## இணைப்பு 2.

[·51 .....ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### அத்தியாயம்—1

### கல்வி வளர்ச்சி—அன்று, இன்று, நாளை.

#### கல்விச் செலவும் மாநில வரவு–செலவுத் திட்டமும் :

கல்வித் துறையில் தமிழ்நாடு எய்தியுள்ள கவின்பெறு முன்னேற்றம் நாடெங்கணும் உள்ள கல்வி வல்லுநர் பலராலும் பாராட்டப்பட்டு வந்துள்ளது. இந்நாள் வரை நாம் அடைந்துள்ள இச்சாதனைகளை நிலைபெறச் செய்து, கல்வியின் தரம் மேம்படும் வண்ணம் சீரிய முயற்சிகளை மேற்கொள்வதே நம் முன் உள்ள வருங்காலப் பணியாகும்.

2. 1971–72-ஆம் ஆண்டில் கல்வியின் வளர்ச்சிக்காக ரூ. 81.84 லட்சம் செலவிடப்பட்டது. 1972–73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலோ மொத்தம் ரூ. 89.85 லட்சம் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 396 கோடி வருவாய் உள்ள நமது மாநில வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி மேம்பாட்டிற்காக மட்டும், நமது மொத்த வரவினத்தில் 23 சத வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றால், கல்வியின் ஏற்றத்தில் இவ்வரசு காட்டி வரும் ஆர்வத்திற்கும் ஆற்றி வரும் அருஞ்செயலுக்கும் வேறென்ன சான்று வேண்டும்?

3. 1971–72-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தையும் 1972–73-ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தையும் ஒப்பு நோக்கி அறியும் வகையில் தனித்தனித் தலைப்புகளின் கீழ் "28. கல்வி" என்னும் தலைப்பில் செய்துள்ள நிதி ஒதுக்கங்களின் விவரங்களைக் கீழே காணலாம்.



| (1) | 1971-72 வரவு-செலவு மதிப்பீடு. திட்டத்தின் கீழ் வராத செலவினம். (2) | திட்டச் செலவுகள். (3) | மொத்தம் (4) | 1972-73 வரவு-செலவு மதிப்பீடு. திட்டத்தின் கீழ் வராத செலவினம். (5) | திட்ட செலவுகள். (6) | மொத்தம். (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. இலட்சத்தில்.) | | | |
| (1) தொடக்க நிலைக் கல்வி | 36,84·35 | 1,05·77 | 37,90·12 | 40,64·63 | 1,13·83 | 41,78·46 |
| (2) இடை நிலைக் கல்வி | 22,66·05 | 3,00·68 | 25,66·73 | 23,74·11 | 3,31·27 | 27,05·38 |
| (3) பல்கலைக் கழகக் கல்வி | 5,47·02 | 77·78 | 6,24·80 | 6,01·73 | 1,25·07 | 7,26·80 |
| (4) சிறப்புக் கல்வி | 1,22·63 | 7·17 | 1,29·80 | 1,19·47 | 9·28 | 1,28·75 |
| (5) பிற இனங்கள் | 5,34·58 | 1,49·03 | 6,88·61 | 7,37·75 | 1,11·99 | 8,49·74 |
| (6) தொழில் நுட்பக் கல்வி | 2,22·79 | 49·73 | 2,72·52 | 1,82·09 | 77·02 | 2,59·11 |
| (7) தொழில் பயிற்சிப் பள்ளிகள் | 1,09·09 | 2·33 | 1,11·42 | 1,30·88 | 5·53 | 1,36·41 |
| மொத்தம் "28. கல்வி" | 74,91·51 | 6,92·49 | 81,84·00 | 82,10·66 | 7,73·99 | 89,84·65 |

குறிப்பு.—பள்ளிக் கல்வி சாதனை நிலை அறிக்கையில் தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி, ஆகிய இரண்டு இனங்களிலும் அடங்கிய சில சில்லரை இனங்கள் தனியாகத் தரப்பட்டு இருப்பதால் 1972-73-ல் தொடக்கக் கல்விக்கு நிதி ஒதுக்கம் ரூ. 41,36·61 லட்சம் என்றும் இடைநிலைக் கல்விக்கு நிதி ஒதுக்கம் ரூ. 26,78·88 லட்சம் என்றும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறே "பிற இனங்களில்" அடங்கிய கல்லூரிக் கல்வி, தொழிற் கல்வி, ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கத்தையும் சேர்த்து கல்லூரி கல்விக்கும், தொழிற் கல்விக்கும், 1972-73-ல் நிதி ஒதுக்கம் முறையே 8,07·29 லட்சம் என்றும் 5,03·32 லட்சம் என்றும் கல்லூரிக் கல்வி, தொழிற் கல்வி சாதனை நிலை அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

4. 13-வது மானியக் கோரிக்கையில் " 28. கல்வி " என்ற தலைப்பின் கீழ் ரூ. 89.85 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைத் தவிர, தொல்பொருள் ஆய்வு வளர்ச்சி, அரும் பொருட் காட்சி நிலையங்கள், அரசுத் தேர்வுகளை நடத்துதல் ஆகியவற்றிற்காகவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் விவரங்கள் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| | | | (ரூ. லட்சத்தில்.) |
| 26. | பல்வகைத் துறைகள் (அரசுத் தேர்வுகள்). | | 65·12 |
| 27. | அறிவியல் துறைகள், தொல் பொருள் ஆராய்ச்சி. | 5·55 | |
| | அரும் பொருட்காட்சி நிலையங்கள். | 9·43 | |
| | | | 14·98 |
| 28. | கல்வி .. .. .. | | 89,85·00 |
| | பிற இனங்கள் .. .. | | 59·13 |
| | மொத்த மானியக் கோரிக்கை .. | 13. கல்வி. | 91,24·23 |

5. 1972–73-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி மேம்பாட்டிற்காகச் செய்யப்பட்டுள்ள மேற்படி நிதி ஒதுக்கத்தில் வேறு சில செலவினங்கள் " 28. கல்வி " என்னும் கணக்குத் தலைப் பல்லாத பிற கணக்குத் தலைப்புகளுக்குப் பற்று வைக்கப்பட்டு, 1972–73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் "கோரிக்கை 13" தவிர பிற கோரிக்கைகளின்கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளன.



| | பொதுக் கல்வி. | | தொழிற் கல்வி. | | மொத்தம். | | |
|---|---|---|---|---|---|---|---|
| | திட்டச் செலவு. | திட்டத்தின் கீழ் வாராச் செலவு. | திட்டச் செலவு. | திட்டத்தின் கீழ் வாராச் செலவு. | திட்டச் செலவு. | திட்டத்தின் கீழ் வாராச் செலவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| ரெவின்யூக் கணக்கில் செலவு. | | | | | | | |
| 50. (க) புதிய பணிகள் கட்டடங்கள் (இவற்றிற்கான செலவு நடப்பு வருவாயிலிருந்து செய்யப்படுகிறது) அரசு கல்வி நிறுவனங்களுக்கான கட்டடச் செலவு. | 0·67 | 1·00 | 10·78 | 1·00 | 11·45 | 2·00 | 13·45 |
| 52. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு (a) 4. | .. | 0·55 | .. | .. | .. | 0·55 | 0·55 |
| வருவாயக கணக்கின் கீழ் வராத செலவு. | | | | | | | |
| 103. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு. கட்டடங்கள் (இவற்றுக்கான செலவு நடப்பு வருவாயில்லாத பிற இனங்களிலிருந்து செய்யப்படுகிறது)—அரசுக் கல்வி நிறுவனங்களுக்கான கட்டடச் செலவு. | 1,74·25 | 1·41 | 26·78 | 2·00 | 2,01·03 | 3·41 | 2,04·44 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **கடன்கள்.** | | | | | | | |
| தேசியக் கடன் படிப்பு உதவித் தொகை. | .. | 56·36 | .. | .. | .. | 56·36 | 56·36 |
| தமிழ்நாடு கல்வி கடன்களும் (பொறியியல் கல்லூரி, பல் தொழில் பயிற்சி கல்லூரி மாணவர்களுக்காக) தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து பயிற்சி பெற்று வெளிவரும் மாணவர்களுக்குக் கடன்களும். | .. | .. | 42·52 | .. | 42·52 | .. | 42·32 |
| மொத்தம் .. | 1,74·92 | 59·32 | 80·08 | 3·00 | 2,55·00 | 62·32 | 3,17·32 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கீடுகளை கணக்கில் கொள்ளப்பட்டால், கல்வி மேம்பாட்டுக்கான செலவு ரூ. 94·42 லட்சமாகும்.



6. அரிசன நலப் பள்ளிகள், அரிசன நல பின்தங்கிய வகுப்பினருக்கான படிப்பு, உதவித் தொகைகள், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், சமூகக் கல்வி ஆகியவற்றுக்காக சமுதாய வளர்ச்சி வரவு-செலவுத் திட்டத்திலிருந்து செய்யப்படும் செலவு. சீர்திருத்தப் பள்ளிகள் போன்றவற்றிற்கான செலவுகளும் பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி குறித்த மேற்படி செலவினங்களின்கீழ் வாரா. இச் செலவினங்களும் (சுமார் 1,308 லட்சம்) கல்வி மேம்பாட்டிற்கான மொத்தச் செலவில் சேர்க்கப்பட்டால், கல்வி மேம்பாட்டுக்கான மொத்தச் செலவு இன்னும் அதிகமாக அதாவது ரூ. 107,50 லட்சமாக இருக்கும்.

7. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றுக்கு, அந்தந்தத் துறைகளின்கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுக்காகும் செலவையும் (சுமார் 525 லட்சம்) கணக்கில் கொண்டால், கல்விக்காக அரசு செலவிடும் மொத்தத் தொகை ரூ. 112,75 லட்சம் ஆகிறது:

8. "கோரிக்கை-13 கல்வி" என்பதன்கீழ் 1966–67 கணக்குகளில் ரூ. 44.28 லட்சமாயிருந்ததற்கு மாறாக 1972–73-ல் அது ரூ. 89.85 லட்சமாக உயர்ந்துள்ளது. கல்வி மேம்பாட்டில் முதலீடு செய்வது எவ்வளவு இன்றியமையாததென அரசு கருதுகிறதென்பதற்கு இதுவே அறுதியான சான்றாகும்.

9. கடந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் பொதுக் கல்வியைச் சேர்ந்த பல்வேறு துறைகளுக்கு செய்யப்பட்ட திட்டச் செலவையும், திட்டத்துக்குப் புறம்பான செலவுகளையும், நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்திற்காக செய்துள்ள நிதி ஒதுக்கத்தையும் கீழ்க்கண்ட விவர அறிக்கை காட்டுகிறது :—

| | முதல் ஐந்தாண்டுத் திட்டம். (1) | இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம். (2) | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம். (3) | மூன்று ஆண்டுத் திட்டங்கள். (1966–69.) (4) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| தொடக்க நிலைக் கல்வி .. .. .. | 3,02·00 | 8,29·72 | 20,80·00 | 10,74·61 |
| உயர் நிலைக் கல்வி .. .. .. | 54·00 | 2,64·04 | 9,20·00 | 6,50·05 |
| பிற கல்வித் திட்டங்கள் .. .. .. | 19·60 | 32·57 | 3,75·00 | 85·33 |
| பல்கலைக் கழகக் கல்வி .. .. .. | 5·40 | 14·66 | 34·00 | 1,48·39 |
| மொத்தம்—பொதுக் கல்வி | 3,81·00 | 11,40·99 | 34,09·00 | 19,58·38 |



| | நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கம். | கணக்குகள் 1969–70. | கணக்குகள் 1970–71. | வரவு-செலவுத் திட்டம் 1971–72. | வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு 1972–73. |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| தொடக்கக் கல்வி .. .. .. | 26,60·17 | 1,72·00 | 2,81·40 | 4 90·39 | 4,85·18 |
| | | | | | +15·68 |
| உயர்நிலைக் கல்வி .. .. | 15,95·55 | 1.39·86 | 1,22·46 | 2,47·73 | 2,43·63 |
| பிற கல்வித் திட்டங்கள் .. .. | 2,11·50 | 37·96 | 50·18 | 62·93 | 62·92 |
| | | +0·17 | +0·33 | +0·52 | +0·52 |
| பல்கலைக் கழகக் கல்வி .. .. | 8,50·00 | 99·53 | 1,15·07 | 2,14·[illegible]3 | 2.42·74 |
| | | +1·00 | +7·55 | +6·00 | +30·00 |
| மொத்தம்—பொதுக் கல்வி .. | 53,17·22 | 4,49·35 | 5,69·11 | 10,42·38 | 10,34·47 |
| | | + 1·17 | +7·93 | + 6·52 | + 46·19 |

மேற்சொன்ன புள்ளி விவரங்களில், "50. கட்டடப்பணிகள், 103 மூலதனச் செலவுகள்—கடன்கள்" என்றும் அமைந்துள்ள தலைப்புகளின்கீழ் காட்டப்பட்டுள்ள கல்வி குறித்த திட்டச் செலவுகளும் அடங்கும். "+" எனக் குறிப்பிட்ட புள்ளி விவரம் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டினைக் குறிக்கிறது. தொடக்கக் கல்விக்கான ரூ. 4.85·18 லட்சத்தில் "28. கல்வி"-இல் திட்ட வேலைகளல்லாத பணிகளுக்கான தலைப்பில் தொடக்கக் கல்வி திட்ட வேலைகளுக்காகச் செலவிடப்படும் தொகையும் சேர்ந்துள்ளது.

10. கடந்த சில ஆண்டுகளில் கல்வி வசதிகள் நன்கு திட்டமிட்ட வகையிலும் ஒரு சீராகவும், வளர்ச்சி அடைந்துள்ளதைக் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் தெளிவாக விளக்குகின்றன :

| கல்வி நிலையங்களின் பெயர். | கல்வி நிலையங்களின் எண்ணிக்கை. | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1966-67. | 1967-68. | 1968-69. | 1969-70. | 1970-71. | 1971-72. (1-8-71-ல் உள்ளபடி). |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| தொடக்கப் பள்ளிகள் .. .. | 31,157 | 31,429 | 31,712 | 31,823 | 31,881 | 32,021 |
| * உயர்நிலைப் பள்ளிகள் .. .. | 2.372 | 2,449 | 2,513 | 2,580 | 2,635 | 2,699 |
| பயிற்சிப் பள்ளிகள் .. .. | 145 | 143 | 142 | 140 | 139 | 135a |
| ஊனமுற்றோருக்கான பள்ளிகள் .. | 22 | 22 | 23 | 24 | 24 | 24 |
| கல்லூரிகள் .. .. .. | 105 | 116 | 126 | 140 | 131 | 169 |
| பயிற்சிக் கல்லூரிகள் | 19 | 20 | 23 | 23 | 23 | 23 |
| பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் .. | 33 | 35 | 35 | 35 | 35 | 35 |
| பொறியியல் கல்லூரிகள் .. .. | 12 | 12 | 12 | 12 | 12 | 12 |
| தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் | 14 | 15 | 15 | 15 | 14 | 14 |

* மெட்ரிகுலேஷன் மத்திய அரசுப் பள்ளிகள் உட்பட.

(a) ஆங்கிலோ இந்தியர்களுக்கான பயிற்சிப் பள்ளி ஒன்று, சிறுபான்மையினருக்கான பயிற்சிப் பள்ளிகள் இரண்டு உட்பட.

குறிப்பு.—1971-72-ல் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்ததற்கு, மூன்று அரசினர் ஆண்கள் பயிற்சிப் பள்ளிகள் மூடப்பட்டதும், ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள பெண்களுக்கான தனியார் உதவிபெறும் ஆதார பயிற்சிப் பள்ளியின் நிர்வாகத்தினர் அப்பள்ளியை மூடிவிட்டதும் இதற்குக் காரணமாகும்.



## 2. எதிர்நோக்கியுள்ள பணிகள்.

11. வரும் ஆண்டுகளில் நம்மை எதிர் நோக்கியுள்ள முக்கியமான பிரச்னைகளில் ஒன்று, பள்ளி நிலையில் சேர்க்கப்படும் மாணவர்களின் சதவீதம் அதிகரித்து வருமாறு செய்வதாகும். 1—8—1971 வரை, பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் சதவீதம் 6-11 வயதுத் தொகுதியில் 94.5 ஆகும்; 11-14 வயதுத் தொகுதியில் 55.6 ஆகும். 14-17 வயதுத் தொகுதியில் 35.7 ஆகும். சிறுவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதைப் பொறுத்த வரையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள், 6-11 வயதுத் தொகுதியில் எல்லோரையும் சேர்க்கவும், 11-14 வயதுத் தொகுதியில் 80 சத வீதத்தினரை சேர்க்கவும், 14-17 வயது தொகுதியில் 55 சத வீதத்தினரைச் சேர்க்கவும் நாம் முயற்சி செய்யக் கருதுகிறோம்.

12. மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களது பணி நிலைமைகள் குறித்து ஆய்வு செய்வதற்கென அரசால் நியமிக்கப்பட்ட டாக்டர் பால் குழு தனது அறிக்கையை அனுப்பியுள்ளது. இக் குழுவின் முக்கியமான பரிவுரைகளைச் செயல்படுத்த அரசு முனைப்பாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அரசியல் அமைப்பின் தேவைப் படி, இந்திய அரசினரின் ஒப்புதலையும், குடியரசுத் தலைவரின் முன் இசைவையும் பெற்ற பிறகு விரைவில் அடங்கல் சட்டம் ஒன்றை முகவுரைக்கக் கருதப்படுகிறது.

13. நமது கல்வி நிலையங்களில் பாடங் கற்பிக்கும் தரத்தை உயர்த்துவது குறித்தும், அதை அனைத்து நாடுகள் தரத்துக்கு உயர்த்துவது குறித்தும் ஆலோசனை வழங்குவதற்கென, வல்லுநர்க் குழு ஒன்று அமைக்கப்படுமென்று முதலமைச்சர் தமது வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்துள்ளார். அக்குழுவின் உறுப்பினர்களின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

14. தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரைக் கொண்ட ஒரு நபர் ஆணைக் குழு ஒன்றை அமைத்துள்ளதாகவும் முதலமைச்சரவர்கள் அறிவித்துள்ளார். தங்களது சம்பள விகிதங்களைத் திருத்தியமைக்குமாறும், இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளில் கண்டுள்ள முரண்பாடுகளைக் களையுமாறும் பி.டி. ஆசிரியர்களும் தேர்வு நிலை ஆசிரியர்களும் செய்து கொண்ட முறையீடுகளை ஆய்வு செய்வது அக்குழுவின் பணிகளில் ஒன்றாகும். இந்த ஆணைக்குழு இரண்டு திங்களுக்குள் தனது பரிவுரைகளைச் செய்யும்.

1972 மார்ச் 18]

## கல்வி முறை

15. கல்வி முறையை மாற்றியமைத்தல் வேண்டும், கல்வி பயிலும் கால அளவையும் மாற்றியமைக்க வேண்டுமெனப் பலரும் பலகாலும் எண்ணியும் கூறியும் வந்துள்ளனர். தமிழ்நாட்டில் தற்போதுள்ள கல்வி முறையின்படி, ஒரு மாணவன் 11 ஆண்டு பள்ளியிலும் 4 ஆண்டுகள் கல்லூரியிலும் கல்வி பயில்கின்றான். (11 ஆண்டுகளான பள்ளிக் கல்வியில் 5 ஆண்டுகள் தொடக்கப் பள்ளியிலும், 3 ஆண்டுகள் உயர் தொடக்கப் பள்ளியிலும், 3 ஆண்டுகள் உயர் நிலைப் பள்ளியிலும் மாணவன் கல்வி பயில்கின்றான்.) கல்லூரியில் பயிலும் மாணவன் ஓராண்டு புகுமுக வகுப்பிலும், 3 ஆண்டுகள் பட்டப்படிப்பு வகுப்பிலும் கல்வி பயில்கின்றான். நமது கல்வி முறையில் இந்த அமைப்பினைப்பற்றி, மாநில திட்டக் குழு நிறுவிய பணிக்குழுக்களும் (Task Forces) பரிசிலனை செய்து வருகின்றன. ஓராண்டு புகுமுக வகுப்பு தொடர்ந்து நீடிக்கலாமா, அல்லது ஈராண்டு இண்டர்மீடியேட் முறையையும் வகுப்பினை மீண்டும் கொண்டு வரலாமா என்னும் பிரச்னை குறித்து பல்கலைக் கழகங்கள் ஆராய்ந்து வருகின்றன. ஈராண்டு இண்டர்மீடியேட் வகுப்பு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமெனில் பட்டப்படிப்பு இரண்டு ஆண்டுப் படிப்பாக இருக்க வேண்டுமா, அல்லது மூன்றாண்டுப் படிப்பாக இருக்கலாமா என்பது பற்றியும் முடிவு செய்ய வேண்டியுள்ளது. பள்ளிக் கல்வி 10 ஆண்டுக் கல்வியாக இருக்க வேண்டுமா, அன்றி 11 ஆண்டுக் கல்வியாக இருக்க வேண்டுமா என்கிற வினாவிற்கு விடை முன்னர்க் குறிப்பிட்ட முடிவில் அடங்கியுள்ளது. நமது அண்டை மாநிலங்கள் உட்பட, பிற மாநிலங்களிற் பல, ஈராண்டு இண்டர்மீடியேட் கல்வி முறைக்கு ஏற்கெனவே மாறியுள்ளன என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். இவ்வாறு வெவ்வேறு வினாக்கள் நம் முன் எழுகின்றன. இவற்றை விரிவாகப் பரிசீலனை செய்து இத்துறையில் பணியாற்றி வருகின்ற, இதன் நலனில் நாட்டமுடைய வல்லுநர்கள் பலரது கருத்துக்களையும் கேட்டறிந்து அவர்களுடன் விரிவாக ஆலோசனை செய்த பின்னரே தக்கதொரு கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகங்கள், அறிஞர்கள், கல்வித் துறை வல்லுநர்கள் ஆகியோர் தம் திறன்மிகு அறிவுரை விரைவில் அரசுக்குக் கிட்டும் எனவும், அதன் துணை கொண்டு இவ்வாண்டிலேயே இப்பிரச்னைக்கு ஓர் முடிவு மேற்கொள்ளவியலும் என்றும் நம்புகிறோம்.



1972 மார்ச் 18]

## கல்லூரிக் கல்வி

16. உயர் கல்வியைப் பொறுத்தவரை, நமது மாநிலத்தைச் சேர்ந்த பட்டதாரிகள், நம் நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த பட்டதாரிகளுடன் ஒப்பிடுகையில் பொதுக் கல்வி அறிவிலும், தொழில் தகுதியாற்றலிலும் சிறந்தவர்களாக விளங்கவேண்டும்; அதற்கு, நமது பல்கலைக் கழகங்கள் பெரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்பதில் நமது அரசு பெரிதும் ஆவல் கொண்டுள்ளது. பல்கலைக் கழகங்கள் அண்மையில், பல்வேறு படிப்புகளுக்கும் உரிய பாடத் திட்டங்களின் தரத்தை உயர்த்தியுள்ளன. புதிய பாடத் திட்டங்களில் பயிற்சி பெற பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காகவும் அரசு உதவியுள்ளது. டாக்டர் ஏ. எல். முதலியார் குழுவின் பரிவுரைகளை முழுமனதுடன் ஏற்றுச் செயற்படுத்தியதன் விளைவாக அரசுக் கல்லூரிகளிற் சேரும் மாணவர்கள் ஆங்கிலம் அல்லது தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயில வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

## தொழில் நுட்பக் கல்வி

17. வரும் ஆண்டுகளில், நமது மாநிலத்தின் தொழில் நுட்பக் கல்வி முன்னேற்றத்திற்கென, தொழில் நுட்பக் கல்லூரிகளில், புதிய பாடங்களில் உயர் பட்டப் படிப்புகள் தொடங்கப்படும். பல் துறைப்படுத்திய படிப்புகளும், சிறப்புத் தேர்ச்சிப் படிப்புகளும் தொடங்கவும் வசதி செய்து தரப்படும். இதன் மூலம் தொழில் நுட்பக் கல்வியில் நாம் எய்தியுள்ள வளர்ச்சி மேலும் நிலை பெறச் செய்யப்படும். நமது தொழில் நுட்பக் கல்விப் படிப்புகளில் பணியிருப்புப் பயிற்சித் திட்டத்தையும் (Sandwich Training) "செமஸ்டர் முறையையும் (Semester System) கொண்டுவந்துள்ளோம். இவற்றால் இப்படிப்புகளில் பயிற்சியின் அளவும் தரமும் உயர்ந்துள்ளன. நமது மாணவர்களின் தொழில் அறிவு, தரம் ஆகியவையும் உயர்ந்துள்ளன. தொழில் தொடர்பு வாரியம் (Industrial Liaison Board) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் நாம் தொழில் நுட்பக் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எய்துவதற்கு அடியெடுத்து வைத்துள்ளோம். இந்த வாரியத்தின் நோக்கம், பெருந் தொழில் அதிபர்களையும் தொழில் நுட்பக் கல்வித் துறையில் உள்ள வல்லுநர்களையும் நெருங்கிய உறவு கொள்ளச் செய்வதாகும். இதன் மூலம் தொழில் துறைக்கு அவசியமாகவுள்ளனவற்றையும், அதன் தேவைகளையும் நிறைவு செய்யும் வண்ணம், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் அளிக்கப்படும் கல்விப்

அடிப்படையில் அறிவியல் சாதனங்கள், துணைக் கருவிகள் வழங்குவதற்கான திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 10,400 தொடக்கப் பள்ளிகளும், 2,600 இடைநிலைப் பள்ளிகளும் (Middle Schools) பயன் பெற்றுள்ளன. 1972–73-ல் ரூ. 5 லட்சம் செலவில் மேலும் 1,000 தொடக்கப் பள்ளிகளுக்கும், 200 இடைநிலைப் பள்ளிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தக் கருதப்பட்டுள்ளது. இது தவிர, 6–11 வயதுத் தொகுதியிலுள்ள பிள்ளைகளைக் கூடுதலாகப் பள்ளியில் சேர்க்கும் திட்டத்தின் கீழ் தொடங்கப்படவிருக்கும் கூடுதல் வகுப்புகள் தொடர்பாகச் சாதனங்கள் வாங்குவதற்காகவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

9. III ஆம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிப்பது உட்பட தொடக்கப் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரத்தை மேம்படுத்த, ஏற்கனவேயுள்ள தொடக்க நிலை ஆசிரியர் (Higher Grade) பதவிகளை செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளாக (Secondary Grade) மாற்ற வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தொடக்கநிலை ஆசிரியர் பதவிகளை மாற்றியதன் மூலம் இதுவரை 19,500 செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

10. கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான பெரும் நடவடிக்கையாக, 900 பி.டி. ஆசிரியர்களை உயர் தொடக்கப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நியமிக்கக் கருதப்பட்டுள்ளது. ஏற்கனவேயுள்ள செகண்டரி கிரேடு தலைமையாசிரியர் பதவிகள் கூடுதல் தலைமை ஆசிரியர் பதவிகளாக அழைக்கப்படும். இதனால் பதவியிலுள்ளவர்களுக்கு ஊதிய இழப்பு ஏதும் இருக்காது. இந்திய அரசின் உதவியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதன் பயனாகத் தொடக்கப் பள்ளிகளில் கல்வியின் தரம் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

<u>நண்பகல் உணவுத் திட்டம்</u>

11. தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிலும் ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டம் நன்முறையில் செயல்பட்டு வருகிறது. இது நாடெங்கணுமுள்ள கல்வி வல்லுநர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தால் அரிசன நலப்பள்ளிகளில் உள்ள மாணவர்கள் உட்பட 18 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். இத்திட்டத்திற்கு 1972–73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டி ரூ. 205.48 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது; இதில் திட்டத்தில் சேராப் பணிகளின்கீழ் ரூ. 162.89 லட்சமும், திட்டப் பணிகளின்கீழ் ரூ. 42.59 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.





12. நண்பகல் உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவின் அளவையும், ஊட்டச்சத்தினையும் அதிகரிக்க "கேர்" நிறுவனம் உணவுப் பொருள்கள் வழங்குவதன் மூலம் இத்திட்டத்திற்குத் தொடர்ந்து உதவியளித்து வருகிறது. அறிவியல் முறைக்கும், சுகாதார நிலைக்கும் ஏற்பவும், நண்பகல் உணவைத் தயாரிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள மையச் சமையற்கூடத் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. 31 மையச் சமையற்கூடங்கள் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் தற்போது செயல்பட்டு வருகின்றன. 30 மையச் சமையற் கூடங்கள் அமைக்கும் பணி நடந்தேறி வருகிறது. 1971–72-ல் மேலும் 30 மையச் சமையற் கூடங்களை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1972–73-ம் ஆண்டிலும் மேலும் 30 மையச் சமையற் கூடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

13. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்கு வசதியளிக்க "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் தமிழ் நாட்டில் 10 வட்டாரச் சேமிப்புக் கிடங்குகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவலத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சேனுபுரி பாளையத்திலும், கௌண்டன் பாளையத்திலும், தருமபுரியிலும் வட்டார சேமிப்புக் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இன்னும் இரண்டு இடங்களில் சேமிப்புக் கிடங்குகள் கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

நண்பகல் உணவு "கேர்" நிறுவனம் உதவி அளிக்கும் திட்டத்தின் தொடர்பாக, மாநில அரசின் பங்குக்காக நடப்பு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 64.10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

14. I முதல் V வரையிலான வகுப்புகளில் பயின்று, நண்பகல் உணவு பெறுகின்ற ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சுமார் 11 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். 1972–73-ல் மேலும் 33,000 மாணவர்களுக்கு இத்திட்டத்தை நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது.

15. இம்மாநிலத்திலுள்ள 32,201 தொடக்கப் பள்ளிகளில் சுமார் 22,000 தொடக்கப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகள் நடத்தப்படுவதைச் சீரமைக்கும் நோக்கத்துடன், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு நிதியளித்தல் குறித்துத் தகுந்த பரிந்துரைகள் செய்ய ஊராட்சி ஒன்றிய நிதி விசாரணைக் குழுவை அரசு அமைத்தது. இக்குழுவின் அறிக்கை குறித்து முனைப்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இவ்வறிக்கை பரிசீலிக்கப்படும்வரை, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் சம்பளம் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளன்றும் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை மனநிறைவளிப்பதாக இல்லாதலால், அவற்றிற்கு முன்னதாக மானியங்கள் வழங்க அனுமதிக்கப்படுகின்றது. இந்த முடிவினால், ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் முதல் நாளன்று சம்பளம் முறையாகக் கொடுக்க ஏதுவாகிறது. இந்த முடிவு பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

16. மாணவர்கள் மேல் வகுப்புகளுக்குத் தேர்வு பெறாது காலத்தை விரயமாக்கி அதே வகுப்பில் நீடிக்கும் நிலையைத் தவிர்க்கவும், பெண்கள் கல்வி முன்னேற்றத்திற்காகவும் ஒரு முன்னோடித் திட்டத்தை இந்திய அரசின் உதவியுடன் சைதாப்பேட்டை கல்வி மாவட்டத்தில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான தொடக்க ஆய்வுகள் தற்போது நடந்தேறி வருகின்றன.

கட்டடத் திட்டங்கள்.

17. போதிய பள்ளிக் கட்டடங்கள் ஏற்படுத்துவதற்கு வசதியளிப்பதைத் துரிதப்படுத்தும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியத்தில் சேராத பகுதிகளில் தொடக்கப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்ட ரூ. 10.45 லட்சமும், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கட்டடங்கள் கட்டுவதற்கு மானியமாக ரூ. 40.06 லட்சமும் 1972–73-ம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. இது தவிர, சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு–செலவுத் திட்டத்திலிருந்து ரூ. 12.54 லட்சம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கு கட்டட மானியங்களாக வழங்கப்படும். தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகப் பயன்படுத்த பரிசுச் சீட்டுத் திட்டத்தின் வருவாயிலிருந்து ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





18. கிராமப் பகுதிகளில் ஆசிரியைகள் வசிப்பதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, கிராமப் புறங்களில் ஆசிரியைகளுக்காகக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இதுவரை 1,568 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு 1972–73-ம் ஆண்டில் ரூ. 5 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

அத்தியாயம்

இடைநிலைக் கல்வி (Secondary Education).

1966–67-ம் ஆண்டில் 2,372 உயர்நிலைப் பள்ளிகளில் 9–11 வகுப்புகளில் 6.08 லட்சம் மாணவர்கள் படித்து வந்திருக்க, 1971–72-ல், 2,699 உயர்நிலைப் பள்ளிகளில் 9–11 வகுப்புகளில் 7.14 லட்சம் மாணவர்கள் படித்து வந்தனர். 1971–72-ம் ஆண்டில் 54 புதிய உயர்நிலைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இவற்றில் 37 அரசுப் பள்ளிகள் ; 17 மானியம் பெறும் பள்ளிகள்.

2. 14–17 வயதுத் தொகுதியில் மாணவர் சேர்க்கையின் சதவீதம் மூன்றாவது திட்ட முடிவில் 29.65 சதவீதமாயிருந்ததற்கு மாறாக, 1971–72-ல் 35.7 சதவீதமாக உயர்ந்தது. 1969–70, 1970–71-ம் ஆண்டுகளில் 2,510 பி.டி. ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். 1971–72-ல் புதிதாக 1,500 பி.டி. ஆசிரியர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1972–73-ல் மேலும் 40,000 மாணவர்களைச் சேர்த்து 1,000 பி.டி. ஆசிரியர்களை நியமிக்கக் கருதப்பட்டுள்ளது.

3. உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கும் ஆய்வுக் கூடங்களுக்குப் போதுமான சாதனங்களை அளிப்பதற்காக மேற்படி பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. 1969–70 முதல் 1971–72 வரை மூன்று ஆண்டுக் கால அளவில் இத்திட்டத்தின்கீழ் 235 உயர்நிலைப் பள்ளிகள் பயன்பெற்றன. 1972–73-ல் ரூ. 35 லட்சம் செலவில் 88 உயர்நிலைப் பள்ளிகளை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

4. தற்போது மாயூரம், பட்டுக்கோட்டை கல்வி மாவட்டங்களில் உயர்நிலைப்பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள இரு ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் (Mobile Laboratory) இயங்குகின்றன. உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேலும் 7 ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் வாங்கக் கருதப்பட்டுள்ளது.

1972 மார்ச் 18]

பள்ளிகளில் அறிவியல் கல்வி கற்பிக்கும் தரத்தினை உயர்த்துவதற்காக யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் கூடிய ஒரு முன்னோடித் திட்டம் சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான புதிய அறிவியல் பாடத்திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் I-ம் வகுப்பு முதல் III-ம் வகுப்பு வரைக்கும், VI-வது வகுப்பிற்கும் 1971–72 முதல் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆதரவாக, தெரிந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மற்ற ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி In Service Training நடத்துவர். யூனிசெஃப் நிறுவனத்தின் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக 50 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும், 30 உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் பணிக்காலப்பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

5. பல்கலைக் கழக மானியக் குழுவும் கல்வி ஆராய்ச்சி—பயிற்சி குறித்த தேசியக் குழுவும் 1969 முதல் கோடை காலப் பயிற்சி நிலையங்கள் நடத்தி வருகின்றன. 1972-ம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இயல்பியல், வேதியியல், உயிரியல், கணிதம் ஆகிய பாடங்களில் கோடைக் காலப் பயிற்சி வகுப்புகளை நடத்தவும் கல்வி ஆராய்ச்சி பயிற்சி தேசியக் குழு திட்டமிட்டுள்ளது.

6. அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகள் அனைத்திற்கும் படிப்படியாகப் போதிய கட்டட வசதிகள் அளிக்கும் பொருட்டு, முந்திய ஆண்டில் எஞ்சி நின்ற பணிகளுக்கு வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் நீங்கலாக, 1972–73-ம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 25 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

7. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதிகளைப் பெருக்கும் பொருட்டு, நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்காக உயர்நிலைப்பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. மூன்றும் திட்டக்கால இறுதி வரை இத்திட்டத்தின்கீழ் 1,021 உயர்நிலைப் பள்ளிகள் பயன்பெற்றன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 267 பள்ளிகள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. 1972–73-ல் ஓர் உயர்நிலைப்பள்ளிக்கு ரூ. 1,000 வீதம் ரூ. 1 லட்சம் செலவில் 100 உயர்நிலைப்பள்ளிகளை இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.



1972 மார்ச் 18]

மாதிரிப் பள்ளி

8. கல்வி ஆணைக்குழு தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் சோதனை மாதிரிப்பள்ளி ஒன்று 1972–73 முதல் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இச்சோதனைப்பள்ளி வெளியூரிலுள்ள பயிற்சிக் கல்லூரி ஒன்றுடன் இணைக்கப்படும். படிப்பில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இப்பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அப்பள்ளியில் 750 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். குறைந்தது 25 சதவீத மாணவர்களுக்கு விடுதி வசதிகளும் இப்பள்ளியில் செய்து தரப்படும். 1972–73-ல் இத்திட்டத்திற்காக ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக இத்திட்டத்தின் வாயிலாக சிறப்பான படிப்பினைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாடதிட்ட மேம்பாடு.

9. மாநிலக் கல்வி நிலையத்தில் பாடத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இப்பிரிவு, பாடத்திட்டம் குறித்து தொடர்ந்து ஆய்வு செய்து புதிய கருத்துக்கள், போக்குகள் உத்திகள் ஆகியவற்றை அமைத்து மேம்பாடுகளுக்கு வகை செய்யக் கருத்துத் தெரிவிக்கும். இதற்காக 1972–73-ல் ரூ. 30,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

10. 10 அல்லது 11-ம் வகுப்புகளில் தோல்வியுறும் அரிசன மாணவர்கள், பழங்குடி மாணவர்களின், நலனுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட சில உயர்நிலைப்பள்ளிகளில் சிறப்புப்பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நகராட்சிப் பள்ளிகளை அரசு மேற்கொள்ளுதல்.

11. பள்ளிகளில் இலவசக்கல்வியைக் கொண்டு வந்ததன் விளைவாக சென்னை மாநகராட்சிக்கும் பிற நகராட்சிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளைப் பேணுவதற்காக அளிக்கப்பட்டு வந்த மானியங்களின் அளவு 1967–68 முதல் நிகரச் செலவில் 50 சதவீதத்திலிருந்து 66-2/3 சதவீதம் ஆக உயர்த்தப்பட்டது. உயர்நிலைப்பள்ளிகளைப் பேணுவதற்காக, உள்ளாட்சி மன்றங்களுக்கு முன்னதாக வழங்கப்படும் கல்வி மானியமும் கூட, 1969–70-லிருந்து, முந்திய ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 75 சதவீதத்திலிருந்து 85 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. தங்கள் நிர்வாகத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளைப் பேண இயலாத நிலையிலுள்ள நகராட்சிகளுக்கு நிதியுதவி வழங்கும்

[1972 மார்ச் 18

கருத்துடன் நிதி வசதியற்ற நகராட்சிகள் நடத்துகின்ற உயர்நிலைப் பள்ளிகளைப் படிப்படியாக மேற்கொள்ளவும், அப்பள்ளிகளை அரசின் நேரடி நிர்வாகத்தில் நடத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. முதல் நடவடிக்கையாக 1972–73-ல் 10 நகராட்சி உயர்நிலைப்பள்ளிகள் அரசால் மேற்கொள்ளப்படும்.

12. பள்ளிகள் தொகுதி (School complex) பள்ளிகள் பல ஒன்றுக்கொன்று உதவிப் பயன்பெறும் பொருட்டு, பள்ளித் தொகுதித் திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளிகளையும் தொடக்க நிலைப்பள்ளிகளையும் இணைக்கலாம் என்ற கருத்தினை கல்வி ஆணைக் குழு தெரிவித்தது. அத் திட்டத்தின்கீழ், உயர்நிலைப் பள்ளிகளைச் சுற்றிலும் அமைந்துள்ள 10-இலிருந்து 20 தொடக்கநிலைப் பள்ளிகள், 3 அல்லது 4 உயர்தொடக்கப்பள்ளிகள் அனைத்தும் ஒரு தொகுதியாக அமைந்து கொள்ளும். இத் தொகுதி கல்வி மேம்பாட்டுக்கான திருத்தங்களை ஆய்ந்து ஏற்கும் நிலையில் இயங்கும். பள்ளிகள் தொகுதித்திட்டம், நமது மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் தெரிந்தெடுத்த இடங்களில் செயல்பட்டு வருகின்றது.

13. மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் : சென்னையிலுள்ள மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் தேசிய நிலையில் உள்ள, கல்வி ஆராய்ச்சி பயிற்சி குறித்த தேசிய மன்றத்துக்கு நிகரான மாநில அமைப்பாகும். சென்னையிலுள்ள மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம், பள்ளி அளவில் பணிக்காலப் பயிற்சிக்கு பொறுப்பு ஏற்கிறது. 1972–73-ல் ரூ. 4 லட்சம் செலவில், பல பணிக்காலப் பயிற்சித் (In service training) திட்டங்களை நடத்தக் கருதப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் கல்வி தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராய்ச்சியும் நடத்துகிறது. தொடக்க விரிவுப்பணி நிலையமும் கூட இந் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவுப் பணித்திட்டத்துக்காக ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்திலும் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திலும் 25 பள்ளிகள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

8-வது வகுப்பிற்கான பொது தேர்வு.

14. ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் 8-வது வகுப்பு ஆண்டு தேர்விற்கான பொதுவான வினாத்தாள்கள் 1970–71-ம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டு விடுகின்றன. எனினும், விடைத்தாள்கள் அந்தந்தப் பள்ளிகளிலேயே திருத்தி மதிப்பிடப்படுகின்றன. முன்பு இருந்த முறையை விட இது குறிப்பிடத்தக்க மேம்பாடாகும். இம்முறை இவ்வாண்டும் தொடர்ந்து பின்பற்றப்படும்.



1972 மார்ச் 18]

மாணவர்களுக்கு வசதிகள்.

15. பள்ளி மேம்பாடு மாநாடுகள் : பள்ளிகளுக்குரிய வசதிகளையும், மாணவர்களுக்குரிய வசதிகளையும் செய்து தருவதற்காக உள்ளூர் மக்களின் முயற்சிகளை ஒருங்கு திரட்டும் பொருட்டு இது வரை 495 பள்ளி மேம்பாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாக ரூ. 18.68 கோடி நிதியுதவி அளிக்கப் பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டு மாநாடுகளைப் பொறுத்த மட்டில், நமது மாநிலம் முன்னோடியாக உள்ளதென்று அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

16. அந்தந்தப் பள்ளிகள் தாமாகவே எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாக, 1972 பிப்ரவரி முடிய, ரூ. 246 லட்சம் செலவில் 36.42 லட்சம் மாணவர்களுக்கு நிகராடை வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறுமியர் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்ல இது ஊக்குவிக்கிறது.

17. மருத்துவப் பரிசோதனை : சென்னை மாநகரிலுள்ள தொடக்க உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள சுமார் 5,000 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக முன்னோடி திட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது.

18. படிப்பு உதவித் தொகைத் திட்டங்கள் : தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வி எல்லா நிலைகளிலும் இலவசமாக அளிக்கப்படுகிறது. கிராமப் பகுதியிலுள்ள பள்ளிகளில் படிக்கும் திறமையான மாணவர்களுக்கு உதவும் நோக்கத்துடன், சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் திறமையான சிறுவர்கள் இருவர் என்ற வீதத்தில் விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 என்றும், வீட்டிலிருந்து படிக்கும் மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 என்றும் படிப்பு உதவித் தொகையாக வழங்குவதற்கு இந்திய அரசின் உதவியுடன் 1971–72-ம் ஆண்டிலிருந்து ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ், 1971–72-ல் 758 பேருக்குப் படிப்புதவித் தொகை ஒப்பளிக்கப்பட்டது.

19. பர்மா, இலங்கை அகதிகள், பாதுகாப்புப் படையினர், முன்னாள் இராணுவத்தினர், அரிசனங்கள், பழங்குடியினர், தங்கக் கட்டுப்பாட்டு ஆணையால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரது சிறுர்களுக்கும் கல்வித் துறை கல்விச் சலுகைகளை அளிக்கிறது. அரிசனங்கள், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு

[1972 மார்ச் 18

கல்வியின் எல்லா நிலைகளுக்கும் அரிசன நலத் துறையும் பின்தங்கிய வகுப்பினர் நலத் துறையும் தங்களது நிதியிலிருந்து படிப்பு உதவித் தொகைகள் வழங்குகின்றன.

அத்தியாயம்

## ஆசிரியர் நலன்

1. இந்த அரசு ஆசிரியர்கள் நலனில் இடைவிடாமல் அக்கறை காட்டி வருவதுடன், அவர்களுடைய பணி நிலைமைகளை மேம்படுத்தி ஆசிரியர்கள் மனநிறைவுடன் கல்விக்குத் தொண்டாற்ற வகை செய்யத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிறது. இலட்சிய நிலைமைகளை எட்டுவதற்கு நாம் இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டியுள்ளதென்றாலும், நம்மை எதிர்நோக்கியுள்ள கடுமையான நிதி நெருக்கடிக்களுக்கிடையிலும் ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்கு நம்மால் இயன்ற வரையில் உயர்ந்த அளவு பரிவு காட்டி வந்துள்ளோம். நாம் ஏற்றுள்ள இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகள் ஆசிரியர்களுக்குக் கணிசமான அளவு நன்மைகள் அளித்துள்ளன. அகவிலைப் படியின் பெரும் பகுதி சம்பளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, அவர்களது ஓய்வுக்காலப் பயன்கள் பெரும் அளவு உயர்ந்துள்ளன. சில பதவித்தரங்களைப் பொறுத்த வரையில் சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகள் போதுமான அளவுக்கு மனநிறைவு தருவதாக இல்லையெனச் சில முறையீடுகள் வந்துள்ளன. இந்த முறையீடுகளைப் பரிவுடன் ஆய்வு செய்ய அரசு விழைகிறது.

மேற்சொன்ன முறையீடுகளை ஆய்வு செய்து, முரண்பாடுகளைக் களைவதற்காக தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலாளரைக் கொண்ட ஒரு நபர்க் குழு அமைக்கப்பட்டது பெரிதும் வரவேற்கப் பட்டுள்ளது.

2. இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளின்படி, அரசு, உள்ளாட்சி மன்றங்கள், தனியார் நிர்வாகம் ஆகிய எல்லா நிர்வாகங்களின் கீழும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒரே படித்தான வீதத்தில் மாதச் சம்பளம், படிகள் வழங்கப்படுகின்றன. இதுபோன்று ஓய்வூதியம், பிற ஓய்வூதியக் காலப் பயன்கள், ஆகியவற்றைக் கொடுப்பதிலும் ஒரே சீரான முறை மேற்கொள்ளப் பட்டது. மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடிய தாராள ஓய்வூதிய விதிகள், தாராள குடும்ப ஓய்வூதிய விதிகள்



1972 மார்ச் 18]

2—10—1970 முதற்கொண்டு, மானியம் பெறும் பள்ளிகளிலும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன. அரசுப் பள்ளிகளல்லாத பிற பள்ளிகளில் பணி புரிந்து 1—6—1970-ல் அல்லது அதற்குப் பிறகு, ஆனால் 2—10—1970-க்கு முன்பு, ஓய்வு பெற்று 1970–71-ம் பள்ளி ஆண்டு முடிய மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் தாராள ஓய்வூதிய விதிகள் பொருந்துமென ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

3. தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்காக விடுப்பு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. அரசுப் பள்ளிகளிலும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலுமுள்ள ஆசிரியர்கள் ஈட்டிய விடுப்பு பெறுவது போலவே, இவர்களும் ஈட்டிய விடுப்பு பெறுவதற்குத் தகுதி பெறுவர்.

4. மானியம் பெறும் ஆசிரியர்களுக்கான பொதுப் பணி நிபந்தனைகள்—

தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாதவர்களின் பணி நிபந்தனைகளை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்ட டாக்டர் பால் குழுவின் பரிவுரைகள் அரசின் ஆழ்ந்த பரிசீலனையில் உள்ளன. இந்தப் பரிவுரைகளை ஒருங்கிணைக்கும் அடங்கல் சட்டம் ஒன்றை விரைவில் கொண்டு வரக் கருதப்பட்டுள்ளது.

5. ஆசிரியர்களுக்குப் பிற சலுகைகள்—

B பிரிவில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்களுக்காக 1,200 தேர்வு நிலைப் பதவிகளுக்கும், முதல்நிலைத் தமிழ் பண்டிதர்களுக்காக 300 தேர்வு நிலைப் பதவிகளுக்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், துவக்கநிலை, இடைநிலை ஆசிரியர்கள், தமிழ்ப் பண்டிதர்கள் மற்றும் பிற மொழி ஆசிரியர் பதவிகளில் பத்து சத வீதப் பதவிகளும் தேர்வு நிலைப் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

A பிரிவிற்காக, 4 பிரிவுகளும் அதற்கு மேலும் உள்ள அரசுப் பயிற்சிப் பள்ளிகளுக்கு 25 அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும், 1,000-மும் அதற்கு மேற்பட்டும் மாணவர்கள் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு 15 அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதல்நிலைத் தமிழ் பண்டிதர்களுக்காக, 45 தேர்வு நிலைப் பதவிகளுக்கும் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

1,000-மும் அதற்கு மேலும் மாணவர்களைக் கொண்டுள்ள 80 அரசினர் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர் களின் பதவிகள் அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. அரசினர் பள்ளிகளில் பணிபுரியும் அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டத்தக்க சம்பள வீதத்தில் இவர்களுக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது.

நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு தனிச் சம்பள வீதத்தில் சம்பளம் வழங்க ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பள வீதம் ரூ. 225—5—250—10—350 ஆகும்.

தலைமை ஆசிரியர் உட்பட, 4 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசிரியர்களைக் கொண்ட தொடக்க நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு, அப்பள்ளிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 300 அல்லது அதற்குக் குறைந்திருந்தால் தலைமை ஆசிரியர் அலுவல்படி ரூ. 5-ம், 300-க்கு மேற்பட்டிருந்தால் ரூ. 10-ம் வழங்க ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இடைநிலை ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றும் முன்னரே தேர்வுத் தரத்தில் சேர்க்கப்படாமலும் உள்ள வர்களுக்கே இப் படி வழங்கப்படுகிறது.

முதுநிலைத் தமிழ்ப் பண்டிதர்களாக நியமிக்கப்படுவதற்கு முழுத் தகுதியுடைய இரண்டாம் நிலைத் தமிழ்ப் பண்டிதர்களுக்கு முதல் நிலைப் பண்டிதர்களுக்கு அளிக்கும் சம்பள வீதத்தில் சம்பளம் வழங்கும் நோக்கத்துடன், இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்களின் 2,000 பதவிகள் முதல்நிலைப் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. செகண்டரி கிரேடு பதவிகளுக்கு முழுவதும் தகுதி பெற்றுள்ள தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர் களுக்கு வழங்கும் வீதத்தில் சம்பளம் வழங்கும் நோக்கத்துடன் 19,500 தொடக்கநிலை ஆசிரியர்களின் பதவிகள் செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அவர்தம் குடும்பங்களுக்கும் 1—4—1970 முதற்கொண்டு அரசினர் மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றில் இலவசமாக மருத்துவ சிகிச்சை அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் வீதத்தில், மானியம் பெறும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப் பட்டுள்ளது.





சென்னை மாநகரம், அதை அடுத்துள்ள பகுதிகள், மதுரை ஆகிய இடங்களிலுள்ள மானியம் பெறும் தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் வீதங்களில் நகர ஈட்டுப் படிகளைப் பெறுகின்றனர்.

பண்டிகை முன்பணங்களும், கைத்தறித் துணி வாங்குவதற்கான முன்பணங்களும் மானியம் பெறும் தனியார் பள்ளிகளிலுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் அவரவர்களுடைய வருங்கால வைப்பு நிதியில் சேர்ந்து வரும் தொகையிலிருந்து அத்தொகையில் 50 சத விகிதம் வரை அளிக்கப்படுகின்றன.

மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 500-க்கு மேற்படாத திருமணக் கடன் கொடுக்கப்படுகிறது. இத் தொகை 60 தவணைகளில் திருப்பிச் செலுத்தத் தக்கதாகும்.

அறிவிக்கப்பட்ட மலைப் பகுதிகளிலுள்ள மானியம் பெறும் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் 4 திங்கள் கால அளவிற்கு (குளிர் பருவம்) குளிர் காலப் படிகள் வழங்கப்படுகின்றன.

1—8—1970 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 80 என்ற உச்ச அளவுக்குட்பட்டு, மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சம்பளத்தில் 20 சதவீதம் மலைவாழ் இடப் படியாக அளிக்கப்படுகிறது.

பள்ளிகளில் தாம் பணிபுரியும் பதவிகளுக்குத் தேவையான அடிப் படைக் கல்வித் தகுதிகளைக் காட்டிலும் அதிகமான தகுதிபெறும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், உடற் பயிற்சி ஆசிரியர்கள், பிற சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் 1—7—1968 முதற்கொண்டு, முன்கூட்டியே இரண்டு நிலைச் சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாறும் போது, அந்த புதிய பள்ளிகளில் சம்பளம் வரையறுக்கப்படுகையில், அவருடைய கடந்த காலப் பணிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது.

நாற்பத்தாறு கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மாநில அரசு

1972 மார்ச் 18]

விருதுகள் வழங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்து தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும் விருதுகள் வழங்கப் படுகின்றன. இந்த விருதில் தகுதிச் சான்றிதழ் ஒன்றும், வெள்ளிப் பதக்கம் ஒன்றும், ரூ. 200 ரொக்கப் பரிசும் அடங்கும்.

ஆதாரக் கல்வி அல்லது பிற பொதுவகைக் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், சம்பள உயர்வு பெறுவதற்கு முன்னர் கைவினைப் பணித் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை அரசு நீக்கியுள்ளது.

தமிழல்லாத பிறிதோர் மொழியில் பிற மாநிலங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள், தமிழில் எஸ்.எஸ்.எல்.சி. அரசுத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர்.

சில தனிப் பிரச்னைகளையுடைய கன்னியாகுமரி மாவட்ட ஆசிரியர் களின் துயர்தணிப்புக்கு வகைசெய்வதற்காக, கீழ்க்கண்ட நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(a) மானியம் பெறும் உயர்பள்ளிகளில் 1—11—1956-ல் பணிபுரிந்தவர்களும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் பட்டத்தைப் பெற்றிருதவர்களுமான மலையாளம் பண்டிதர்களுக்கு, முதல்நிலை சம்பள வீதத்தில் சம்பளம் வழங்க அனுமதிக்கப் பட்டுள்ளது.

(b) கேரள வித்துவான், சாகித்ய வித்துவான் பட்டங்களைப் பெற்றவர்களும், அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் 1962 ஆகஸ்ட் திங்களுக்கும் 1968 மார்ச் திங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் முதல்நிலைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அல்லது உயர்த்தப் பட்டவர்களுமான தமிழ்ப் பண்டிதர்களும் மலையாள பண்டிதர்களும் சென்னை, அண்ணாமலை பல்கலைக்கழகங்களில் வித்துவான் பட்டம் பெறுவதினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்கள் நலனுக்கான தேசியக் கழக நிதியிலிருந்து, பணியி லுள்ள ஆசிரியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும், மரண மடைந்த ஆசிரியர்களைச் சார்ந்துள்ள அவர்தம் குடும்பத்தினருக்கும், திங்கள்தோறும் குறிப்பிட்ட தொகையோ ஒரு மொத்தமான தொகையோ அளிக்கப்படுகின்றது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமிப்பதற்காக, 1964-ல் வரையறுக்கப்பட்ட உச்ச வயது வரம்பைத் தாண்டிவிட்ட



1972 மார்ச் 18]

காரணத்தால் வேலை வாய்ப்பு பெற முடியாதவர்கள் செய்து கொண்ட முறையீடுகளை ஏற்று, 1972 ஜனவரியிலிருந்து உயர் அளவு வயது வரம்பு நீக்கப்பட்டுள்ளது.

6. தொழில் பழகும் ஆசிரியர்கள் :

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் நோக்கத் துடன், தொழில் பழகும் ஆசிரியர் திட்டத்தை அரசு 1970–71-ல் கொண்டு வந்தது. 6,500 தொழில் பழகு ஆசிரியர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1970-ல் அல்லது அதற்கு முன்னர் பயிற்சித் தேர்வில் தேறிய ஆசிரியர்கள் எவரையும் இப்பதவிகளுக்கு நியமிக்க நிர்வாகத்தினருக்கு உரிமையளிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கணிதம், அறிவியல் போன்ற பாடங்களில், தேறியுள்ள பி.டி. ஆசிரி யர்களைப் பொறுத்தவரையில், 1971-ல் ஆசிரியர் பயிற்சித் தேர்வில் தேறியவர்களும் நியமிக்கப்படலாம். ஆசிரியர் பதவிகளில் முறை யான காலியிடங்கள் ஏற்படும்போது, வெளியிலிருந்து நியமிப் பதற்கு முன்பு, தொழில் பழகு ஆசிரியர்கள் முதலில் நியமிக்கப்பட வேண்டும் என்றும் விதிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் V

## கல்விச்சூழலை மேம்படுத்தல்

### I. பாடப் புத்தகங்கள் வெளியிடும் உரிமையை நாட்டுடைமையாக்குதல்.

தமிழ்நாடு பாடப் புத்தக வெளியீட்டுக் கழகம் 1970 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அமைக்கப்பட்டது. பாடப்புத்தகங்கள் வெளியிடும் உரிமையை நாட்டுடைமையாக்கும் கொள்கையைச் செயல்படுத்து வதற்கு, இக்கழகம் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பாடப்புத்தகங்கள் வெளியிடும் உரிமையை நாட்டுடைமை ஆக்கும் பணி, பள்ளி அளவில், 1972–73 ஆம் கல்வி ஆண்டின் ஆரம்பத்தில் அநேகமாக நிறைவு பெறும்.

2. 1971–72-ம் ஆண்டில், 108 லட்சம் படி பாடப்புத்தகங்களை இக்குழு அச்சிட்டது. பள்ளிகள் திறக்கப்படுவதற்கு முன்னதாகவே பாடப் புத்தகங்கள் வெளியிடப்பட்டன. எனவே, பாடப்புத்தகங்கள் கிடைக்கப் பெறவில்லை என்று புகார் ஏதும் வரவில்லை என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன். பாடப்புத்தக நிறுவனம் சென்னை மாநகரிலுள்ள பள்ளிகளுக்கு நேரடியாகப் புத்தகங்களை வழங்கியது. ஏற்பளிக்கப்பட்ட விற்பனையாளர்கள் மூலம் வெளியூர்களிலுள்ள பள்ளிகளுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன. (24 வளர்ச்சி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விற்பனையாளர் மூலம்.)

3. பாடப் புத்தகங்கள் வெளியிடும் உரிமையை நாட்டுடைமையாக்கும் திட்டம் 1972–73 ஆம் ஆண்டில் ஏறத்தாழ எல்லாப் பாடங்களும் நீட்டிக்கப்படும். கீழ்க்கண்ட புத்தகங்களை வெளியிடும் உரிமை மட்டுமே இன்னும் நாட்டுடைமையாக்கப்படவில்லை; அவை யாவன: (1) விருப்பப் பாடங்கள் 10, 11-ம் வகுப்புகளுக்கு (தமிழில்) (Elective subject), குறிக்கணக்கியல் (Algebra) வடிவியல் (Geometry), இயற்பியல் (Physics), வேதியல் (Chemistry), வரலாறு, (2) பல்வேறு பாடங்களுக்கான, தெலுங்கு, மலையாளம், உருது போன்ற சிறுபான்மை மொழிகளிலுள்ள பாடப் புத்தகங்கள், (3) சிறுபான்மை மொழிகளில் மொழிப் பாடங்களுக்கான பாடப் புத்தகங்கள்.

4. வெளியிடப்படும் புத்தகங்களின் தரத்தை மேம்படுத்தவும், பக்கங்களை அதிகமாக்கவும், இக்கழகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. I முதல் III வகுப்புக்குரிய பாடப்புத்தகங்கள் பல வண்ணங்களில், இந்த ஆண்டு அச்சிடப்பட்டு வருகின்றன. புதிதாக இந்த ஆண்டு அச்சிடப்படவேண்டிய புத்தகங்கள், பல வண்ண, கவர்ச்சிமிக்க அட்டைகளைக் கொண்டதாகவும், நல்ல தரமுள்ள தாள்களிலும் அச்சடிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடப்புத்தகங்களின் விலை, தனியாரால் வெளியிடப்படும் புத்தகங்களின் விலையைக் காட்டிலும் மிகக் குறைவாக இருக்கின்றது.

5. அதிக அளவில் பாடப்புத்தகங்களை அச்சிட வேண்டியுள்ளதால் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கென்றே, பாடப் புத்தக அச்சகம் ஒன்றை நிறுவப் பாடப் புத்தக நிறுவனம் கருதியுள்ளது. இது குறித்து, இந்திய அரசோடு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

6. <u>குழந்தைகளுக்கான நூல்களை வெளியிடுதல்</u>.—குழந்தைகளுக்கான நூல்களை (தமிழில்) எழுதுவோருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும், ரூ. 500-க்கு மேற்படாமல்,





பத்து பரிசுகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளுக்கான சிறந்த நூல்களைத் தமிழில் படைப்போருக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், குழந்தைகளுக்கு சிறு நூல்களைத் தமிழில் படைப்போருக்கு 1,000 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

## II பாடத் திட்டத்தைத் திருத்தியமைத்தல்.

7. நமது பள்ளிகளில் தற்போது பின்பற்றப்படும் பாடத்திட்ட முறையானது, கடைசியாக, 1965 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பாடத்திட்ட முறையை அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டிய தன் தேவையையும் கல்வி கற்பிக்கும் முறையை தற்காலத்திற்கேற்றவாறு புதுப்பிப்பதன் தேவையையும் உணர்ந்து, பள்ளிப் பாடத் திட்டமுறை முழுவதையும், திருத்தியமைப்பதற்கு, 1970 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், அரசு, குழுக்களை அமைத்தது. I முதல் V வது வகுப்பு வரைக்கும், இக்குழுக்களால் முடிவு செய்யப்பட்ட வரைவுத் திருத்தப் பாடத்திட்டமானது, 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெளியிடப்பட்டது. VI முதல் VIII வரையிலுள்ள வகுப்புகளுக்கான பாடத்திட்டமானது, 1972 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் வெளியிடப்பட்டது. IX முதல் XI வரையிலுள்ள வகுப்புகளுக்கான பாடத்திட்டம், விரைவில் வெளியிடப்படும். பொதுமக்களின் கருத்தை அறிந்து, இப்பாடத் திட்டத்தை முடிவு செய்த பிறகு, படிப்படியாக இந்தத் திருத்தப் பாடத்திட்ட முறையானது கொண்டு வரப்படும்.

8. புதிய பாடத்திட்டத்தை முழுதும் நிறைவேற்றுவதற்கு தேர்வு நாட்கள் நீங்கலாக உயர்நிலைப்பள்ளிகள், நடுத்தரப்பள்ளிகள் ஆகியவற்றிற்கு 200 நாட்களும், தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 220 நாட்களும் தேவை என்று இக்குழுக்கள் தெரிவித்துள்ளன. தற்போதுள்ள பாடத்திட்டத்தின் கீழ், தேர்வு நாட்கள் உட்பட, உயர்நிலைப்பள்ளிகள் 200 நாட்களும், தொடக்கப் பள்ளிகள் 220 நாட்களும் செயல்படுகின்றன. ஆசிரியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையோர் ஆகியோருடன் உரிய ஆலோசனை நடத்திய பிறகு, இப்பரிவுரையை ஆய்வு செய்வது என்று திட்டமிடப்பட்டுள்ளது.

9. கல்வி கற்பிக்கும் நாட்கள் ஒவ்வொன்றும் 40 நிமிடங்கள் கொண்ட 8 பாட வேளைகளாகப் பிரிக்கப்படவேண்டும் என்றும், ஒரு வாரத்தில் 5 நாட்கள் கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்றும்,

மேற்படி குழு பரிவுரை செய்துள்ளது. இப்பரிவுரையையும் அரசு ஆசிரியர்களையும் கல்வி வல்லுநர்களையும் கலந்து ஆலோசித்துப் பரிசீலனை செய்யும்.

10. தற்போதுள்ள திட்டத்திற்கிணங்க, I முதல் V வரையிலுள்ள வகுப்புகளில், கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களைத் தவிர, ஏனைய எல்லாப் பாடங்களிலும், திருத்த பாடத்திட்ட முறையை, 1972–73 ஆம் கல்வி ஆண்டிலிருந்து கொண்டு வருவது என்று திட்டமிடப்பட்டுள்ளது. கணிதம், அறிவியல் ஆகியவற்றிற்கான திருத்தப் பாடத்திட்டமானது, ஆசிரியர்களுக்கான மறுபயிற்சித் திட்டத்தை நடத்தியதற்குப்பிறகு, செயற்படுத்தப்படும்.

## III. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி வசதிகள்.

11. தமிழ்நாட்டில், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 135 உள்ளன; (5 தொடக்க நிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், 1 ஆங்கிலோ-இந்திய பயிற்சிப் பள்ளி ஆகியவை உட்பட). இவற்றில் 72 பயிற்சிப் பள்ளிகளை அரசும், 63 பயிற்சிப் பள்ளிகளைத் தனியாரும் நடத்தி வருகின்றனர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலைபெறுவது சிரமமாகியுள்ள சூழ்நிலையின் காரணமாக ஆசிரியர் பயிற்சிக்கான தற்போதைய வசதிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகிறது. இந்த வகைப் பணியாளர்கள் ஏற்கனவே, வேலையின்மைப் பிரச்சினையை எதிர்நோக்கியிருப்பதால், ஆண்டுதோறும் புதிதாகப் பயிற்சி பெற்று வெளிவரும் ஆசிரியர்கள், ஏற்கெனவே கடுமையாகவுள்ள இச்சிக்கலை மேலும் கடுமையாக்கக் கூடாதென்பதே இதன் நோக்கமாகும். இப்பிரச்சினை இப்போது பெருமளவுக்கு வலுத்துள்ளது. சில மாநில அரசுகள் தங்கள் ஆசிரியர் பயிற்சி நிலையங்களைக்கூட தற்காலிகமாக மூடிவிட்டனர். இத்தகைய கடுமையானதொரு நடவடிக்கை நம் மாநிலத்தில் எடுக்கப்படக்கூடாதென அரசு விரும்புகிறது. அதே நேரத்தில், நமது பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு நமது நிதி வாயில்களை ஆதாயத்துடன் பயன்படுத்தும் நோக்குடன் தற்போதைய வசதிகளை நடைமுறைக்குகந்த வகையிலே மறு ஆய்வு செய்து பார்ப்பது அவசியமாகும்.

12. அறிவியல் கல்வி மேம்பாட்டிற்காக, யுனிசெஃப் திட்டத்தின் கீழ், இரண்டு பயிற்சிப் பள்ளிகள் (கடலூரிலுள்ள ஆதாரப் பயிற்சிப் பள்ளி, எழும்பூரிலுள்ள அரசு பயிற்சிப்பள்ளி) இந்த முன்னோடித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான முக்கிய நிலையங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.





13. பயிற்சிப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், அரசுப் பணியிலுள்ள ஆசிரியர்கள், துணை ஆய்வாளர்கள் ஆகியோர் தங்கள் தொழில் தகுதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும், பள்ளி ஆசிரியர்களிலிருந்தும், துணை ஆய்வாளர்களிலிருந்தும் 10 பேர், 1970–71 ஆம் ஆண்டு முதற்கொண்டு, அரசுச் செலவில் எம்.எட்., M. Ed.) பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். இத்திட்டம் 1972–73 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலில் இருக்கும்.

## VI. ஆங்கில மொழி கற்பிக்கும் இயக்கம்.

14. தமிழ் நாட்டில் மட்டுந்தான் மூன்றாவது வகுப்பு முதற்கொண்டு, ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளில் உள்ள ஆங்கில மொழி ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி அளிப்பதற்காக, பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் விரிவான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1967–68 ஆம் ஆண்டு முதல் 1971–72 ஆம் ஆண்டு முடிய உள்ள ஐந்தாண்டுகளில் 6,204 ஆசிரியர்களுக்கு பாளையங்கோட்டை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர் ஆகிய இடங்களில் நடத்தப்படும் தமிழ்நாடு ஆங்கில மொழி கற்பிக்கும் நிலையங்களில் ஆங்கில மொழி கற்பிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி முறைகளைத் தவிர, கருத்தரங்கங்களும், பணி வகுப்புகளும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன. பெங்களூரிலுள்ள ஆங்கிலப் படிப்பு வட்டார நிலையத்திற்கு நமது மாநிலத்திலிருந்து 25 பேர் அனுப்பப்படுகின்றனர்.

15. ஆங்கிலம் கற்பிப்பதைத் தொடக்க நிலையிலிருந்தே வலுப்படுத்தும் நோக்குடன் பாடத் திட்டத் திருத்தக்குழு, ஆங்கில மொழியை மூன்றாவது வகுப்பு முதற்கொண்டே எழுதப்படிக்கக் கற்றுத்தர வேண்டுமென்று பரிவுரை செய்தது. இந்த பரிவுரையின் அடிப்படையில், பாடப் புத்தகக் குழு, 3-வது வகுப்புக்காக புதியதொரு பாடப் புத்தகத்தைக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான கையேடுகளும் வெளியிடப்படும்.

## தொழில் புதுமுகப் பயிற்சி நிலையங்கள்

16. 11–14 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்களுக்காக இந்திய அரசு தொடங்கியுள்ள தொழில் புதுமுகப் பயிற்சித் திட்டத்தின் கீழ், தொடக்கப் பள்ளிக்கு மேல் படிக்கவியலாதவர்களும், இந்த

வயதுத் தொகுதியைச் சேர்ந்தவர்களுமான சிறுர்களுக்குப் புகுமுகத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது. இம் மாநிலத்தில் இத் திட்டத்தின்கீழ் 6 நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

### V சிறப்புப் பள்ளிகள்

17. ஐந்து வயதுக்கும் குறைந்த சிறுவர்களுக்கான 42 சிறப்பு பாலர் பள்ளிகள் பெரும்பாலும் நகரங்களில் கல்வித் துறையினால் நடத்தப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் குழந்தைகள் காப்பகங் களும், சிறுவர் பள்ளிகளும் (Belwadis) ஊராட்சிகளினால் நடத்தப்படுகின்றன.

#### உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்கான பள்ளிகள்

18. உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காக தற்போது இம் மாநிலத்தில் 24 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 8 பள்ளிகளும், காது கேட்காத சிறுவர் களுக்காக 9 பள்ளிகளும், கண், காது ஊனமுள்ள சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காக ஒரு பள்ளியும், தொழு நோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும் நடை பெற்று வருகின்றன. இப் பள்ளிகளில் 2,708 மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர்.

19. பூவிருந்தவல்லியில் அமைந்துள்ள கண் பார்வையற்றோர் பள்ளியில் நிறுவப்பட்டுள்ள வட்டார பிரெய்ல் அச்சகம், தென் மாநிலங்கள் நான்கின் தேவையையும் நிறைவு செய்கிறது. இம் மாநிலங்களின் தேவைகளை ஈடு செய்வதற்காக, இந்த நிலையத்தில், வட்டாரப் பயிற்சி நிலையம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது. 14 ஆசிரியர்கள் இதில் பயிற்சி பெற்றுள்ளனர். 9 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

#### அனாதைச் சிறுவர்கள் இல்லங்கள்

20. அனாதைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யும் அனாதை இல்லங்களுக்கு, அரசு நிதி உதவி அளிக்கிறது. தற்பொழுது 389 அனாதை இல்லங்கள் அரசு நிதி உதவி பெறு கின்றன. (அவற்றுள் 15 புதியதாக 1971–72 முதல் நிதி உதவி பெறுகின்றன.) இவற்றின் வாயிலாக கிட்டத்தட்ட 60,000 அனாதைச் சிறுவர்கள் பயன் பெறுகின்றனர்.



### VI. விளையாட்டுகளும், உடல்நலக் கல்வியும்.

21. நமது மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்கள், உடல் நலக் கல்விக்கும், விளையாட்டுகளுக்கும், தொடர்ந்து சிறப்பிடம் அளித்து வருகின்றன. மாவட்ட, மாநில விளையாட்டுப் போட்டிகள் குறித்த காலத்திற்கொருமுறை ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. மாநில விளையாட்டுக் கழகமும், மாவட்ட விளையாட்டுக் கழகங்களும், மாணவர்களிடையே மட்டுமின்றி, பொது மக்களிடையேயும், பந்தயங்களையும், விளையாட்டுகளையும் நடத்துவதில் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. கிராமங்களில் பந்தய விளையாட்டுக்களைப் பிரபலப்படுத்துவதில் நாம் இன்னும் நாட்டம் செலுத்த வேண்டும். இந்த முக்கியமான பணியில் சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

22. மாநில அரசு, மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்களைக் கட்டுவதற்காக, மானியங்கள் வழங்குகிறது. இதுவரையில், திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, சேலம், மதுரை, நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. இம் மாவட்டங் கள் அனைத்திலும் விளையாட்டு அரங்கங்கள் கட்டப்பட்டுள்ளன. 1971–72 ஆம் ஆண்டில், காஞ்சீபுரத்திலும், நாகர்கோயிலிலும் விளை யாட்டு அரங்கங்களைக் கட்ட மானியங்கள் வழங்கப்பட்டன. 1972–73 ஆம் ஆண்டிலும், மேலும் இரண்டு மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்களைக் கட்டுவதற்காக ரூ. 2 லட்சம் வழங்க வகை செய்யப் பட்டுள்ளது. இதைத் தவிர சேப்பாக்கம் திடலில் நவீன கிரிக்கெட் விளையாட்டு அரங்கு ஒன்றைக் கட்டுவதற்காக, சென்னை கிரிக்கெட் சங்கத்திற்கு ரூ. 15 லட்சம் சிறப்பு மானியம் வழங்க, தமிழக அரசு வாக்குறுதி அளித்துள்ளது. ரூ. 7 லட்சம் ஏற்கெனவே வழங்கப் பட்டுள்ளது.

### VII. முதியோர் கல்வி.

23. 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 31.4 சதவீதம் ஆகும். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி இது 39.39 சதவீதமாக உயர்ந்தது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆண்களில் 51.68 சதவீதத்தினரும், பெண்களில் 26.83 சதவீதத்தினரும் எழுதப்படிக்கத் தெரிந் திருந்தனர். எழுத்தறிவின்மையைப் போக்குவதற்காக 80 முதியோர் கல்வி நிலையங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

[1972 மார்ச் 18

குடியானவர் கல்வி–தொழில் எழுத்தறிவுத் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை வட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும் நடத்தப்பட்டன. இத்திட்டம், 1972–73 ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கொண்டு வரப்படும்.

## VIII. நூலக இயக்கம்.

24. நூலகச் சட்டம் இயற்றி, நூலக இயக்கத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் ஒரு சில மாநில அரசுகளுள் தமிழ் நாடு அரசும் ஒன்றாகும். தற்போது இம் மாநிலத்தில் மாவட்ட மத்திய நூலகங்கள் 13-ம், கிளை நூலகங்கள் 1,437-ம், புத்தகம் வழங்கும் நிலையங்கள் 1,882-ம் உள்ளன. இயங்கும் நூலகப் பணி, புத்தகங்களை இல்லங்களில் கொண்டு தரும் பணி, சிறுவர்கள், மகளிர் ஆகியோருக்கான நூலகப்பணி, சீருலாப் பயணிகளுக்கான நூலகப் பணி, கைதிகளுக்கான நூலகப் பணி, காவல்துறைப் பணியாளர்களுக்கான நூலகப் பணி, மருத்துவ மனை நூலகப் பணி ஆகிய பணிகளை மாவட்ட நூலக அதிகார மன்றங்கள் செயல் படுத்துகின்றன.

25. நூலக நிதியின் பெரும் பகுதி, வீட்டு வரி அல்லது சொத்து வரி ஆகியவற்றின் மீது ரூபாய்க்கு 3 காசு வீதம் விதிக்கப்படும் மேல் கட்டணத்தின் மூலம் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் மேல் கட்டணத்திற்கு இணையான உதவித் தொகை, சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள மாவட்ட நூலக அதிகார மன்றங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ள நூலகங்களுக்காகவும் தனி மானியங்கள் வழங்கப்படுகின்றன.

26. 1972 ஏப்ரல் முதல் நூலக மேல் கட்டணத்தை ரூபாய்க்கு மூன்று பைசாவிலிருந்து ஐந்து பைசாவாக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. நூலக ஆணைக் குழுக்களின் வருவாய் பெருக்குவதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநர் பொது நூலகங்களின் இயக்குநராகவும் இப்பொழுது செயல்படுகின்றார். இந்த இயக்கத்திற்கு ஊக்கமளிக்கவேண்டி பொது நூலகங்கள் இயக்குநர் பதவி ஒன்றைத் தனியாக ஏற்படுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.



1972 மார்ச் 18]

## IX. தேர்வுகள்.

27. நாடு முழுவதும் உள்ள கல்வி வல்லுநர்கள், தேர்வு முறையில் உடனடியாக மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். இந்தப் பிரச்சினையில் கல்வி வல்லுநர்களிடையே உருவாகும் கருத்து ஒற்றுமை, தேர்வு முறைகளில் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதில் அரசுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பது அரசின் விருப்பமாகும்.

28. தற்போது பள்ளிக் கல்வி இயக்குநர், அரசுத் தேர்வுகளின் ஆணையாளராகவும் பணியாற்றி, சுமார் 22 தேர்வுகள் நடத்துகிறார். இவற்றில் சில, ஆண்டுக்கொரு முறை நடத்தப்படுகின்றன. ஆண்டுக்கு இரு முறை சில தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் ஆகியவை போன்ற வணிகப் பாடங்களில் தேர்வு நடத்தும் பொறுப்பு, அரசுத் தேர்வுகள் ஆணையாளரிடமிருந்து தற்பொழுது தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது.

29. அரசுத் தேர்வுகள் ஆணையாளரால் நடத்தப்படுகின்ற தேர்வுகளிலேயே மிகப் பெரியது எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு ஆகும். இத் தேர்வு மார்ச் மாதத்தில் சுமார் 900 இடங்களிலும், அக்டோபரில் சுமார் 180 இடங்களிலும் நடத்தப்படுகிறது. 1970 ஏப்ரலில் 1,91,853 பேர்கள் எழுதியதற்கு மாறாக, 1971 ஏப்ரலில் நடத்தப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 1,93,059 பேர் எழுதினர். 1970 ஏப்ரலில் நடத்தப்பட்ட இத் தேர்வில் 1,03,974 மாணவர்கள் மட்டுமே தேற, 1971 ஏப்ரலில் நடத்தப்பட்ட தேர்வில் 1,11,823 பேர் தேறினர். தேறியவர்களின் சதவீதம் 1970 ஏப்ரலில் 56 சதவீதத்திலிருந்து 1971 ஏப்ரலில் 59.2 சதவீதமாக உயர்ந்துள்ளது.

## அத்தியாயம் VI.

### கல்லூரிக் கல்வி

### I நிதி ஒதுக்கீடு

1972–73-ஆம் ஆண்டில் "28-கல்வி" என்னும் தலைப்பில் மொத்தமாகச் செலவிடப்படும் ரூ. 8,985 லட்சத்தில், கல்லூரிக் கல்விக்கென ரூ. 807.29லட்சம் செலவிட கருதப்பட்டுள்ளது. இது இம்மாநிலத்தில் கல்விக்கான மொத்தச் செலவில் 9 சதவீதமாகும்

[1972 மார்ச் 18

2. 1972–73 வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கல்லூரிக் கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரங்கள் வருமாறு:—

| | 1971–72 திருத்த மதிப்பீடு. | 1972–73 வரவு-செலவு மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 28. கல்வி .. .. .. | 770 88 | 807·29 |
| 103 (a) மூலப் பணிகள் முதலியன எனப்படும் தன் கீழ் கட்டடங்களுக்கான நிதி ஒதுக்கீடு .. .. .. | 110·05 | 146·98 |
| 47. அரசுக் கடன்களும் முன் பணங்களும் தேசியக் கடன் படிப்பு உதவித் தொகை .. | 50·00 | 56·36 |
| | 930·93 | 1,010·63 |

3. கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பல்வேறு கல்வித் திட்டங்களுக்காக இத் தொகை எவ்வாறு செலவிடப்படுகிறது என்னும் முழு விவரங்களைக் கீழேக் காணும் புள்ளி விவரங்கள் காட்டும்:—

| | 1971–72 திருத்த மதிப்பீடு. | 1972–73 வரவு–செலவு மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| நிர்வாகமும் மேற்பார்வையும் .. | 7·53 | 7·64 |
| பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள் .. .. .. | 72·25 | 57·92 |
| தற்போதுள்ள கலைக் கல்லூரிகளைப் பேணுதல் :— .. | | |
| (a) அரசுக் கல்லூரிகள் .. | 344·73 | 386·03 |
| (b) தனியார் கல்லூரிகள் .. | 304·03 | 328·13 |
| தற்போதுள்ள பயிற்சிக் கல்லூரிகளைப் பேணுதல் : | | |
| (a) அரசுக் கல்லூரிகள் .. | 26·24 | 24·55 |
| (b) தனியார் கல்லூரிகள் .. | 7·17 | 7·10 |
| சென்னை சட்டக் கல்லூரி .. .. | 6·71 | 8·00 |



1972 மார்ச் 18]

| | 1971–72 திருத்த மதிப்பீடு. | 1972–73 வரவு-செலவு மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| தற்போதுள்ள தனிக் கல்வி நிறுவனங்களைப் பேணுதல் :— | | |
| (a) அரசு நிறுவனங்கள் .. | 2·32 | 2·17 |
| (b) தனியார் கல்வி நிறுவனங்கள் . | 5·24 | 5·09 |
| புதிதாக அரசினர் கலைக் கல்லூரிகளைத் திறத்தலும், புதிய படிப்புகளைத் தொடங்குதலும் .. .. .. | .. | 24·20 |
| மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகைகள், சலுகைகள் ஆகியவை வழங்கவும், தமிழில் கல்லூரிப் பாடப் புத்தகங்கள் தயாரிக்கவும் .. .. | 150·04 | 154·86 |
| பல்வகை .. .. .. .. | 4·67 | 4·94 |
| மொத்தம் .. | 930.93 | 1,010·63 |

## II. திட்டக் குறிக்கோள் அளவுகள்.

1970–71-ஆம் கல்வியாண்டு முடிவில், இம் மாநிலத்தில் மொத்தம் 160 கலை–அறிவியல் கல்லூரிகள் (43 அரசுக் கல்லூரிகள், 117 மானியம் பெறும் கல்லூரிகள்) இருந்தன. 1971–72-ல் மன்னார்குடி, திருப்பூர், உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் புதிதாக மூன்று அரசினர் கல்லூரிகள் திறக்கப்பட்டன. இவற்றுடன்; ஆறு தனியார் கல்லூரிகள், அரசு நிதியிலிருந்து மானியம் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இதனால், இம் மாநிலத்தில் உள்ள கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 169 (46 அரசு கல்லூரிகள், 123 மானியம் பெறும் கல்லூரிகள்) ஆக உயர்ந்தது. புதிதாக மூன்று கல்லூரிகள் திறக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், 1971–72-ல் 17 அரசு கல்லூரிகளில், கூடுதல் பட்டப் படிப்புப் பாடமுறைகளும், பட்ட மேற்படிப்புப் பாடமுறைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பதிய படிப்புகள், கல்லூரிகளில் பயிற்று மொழி குறித்து டாக்டர் ஏ. எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாகத் திறக்கப்பட்ட,

[1972 மார்ச் 18

ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவுகளுக்குக் கூடுதலாகத் தொடங்கப் பட்டவையாகும். மானியம் பெறும் கல்லூரிகளில் தொடங்கப் பட்ட கூடுதல் பிரிவுகளுக்கும் 1971–72-ல் அரசு நிதியிலிருந்து மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1970–72-ல் எல்லா கலைக் கல்லூரிகளிலும் 1.63 லட்சம் மாணவர்கள் படித்தனர். 1971–72-ல் இது 1.83 லட்சமாக உயர்ந்தது.

5. 1972–73-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் புதிதாக நான்கு அரசு கல்லூரிகள் திறப்பதற்கும் (ரூ. 9.2 லட்சம்) புகுமுக வகுப்பில் கூடுதல் பிரிவுகள் தொடங்கவும் (ரூ. 2.5 லட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (கல்லூரிகள் தொடங்குவதற் கென்று பொது மக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நன்கொடைத் தொகை திரட்டப்பட்டு, சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்கள் இக் கல்லூரிகளுக்கு இணைப்பு வழங்கினால் இப் புதிய அரசினர் கல்லூரி கள் திறக்கப்படும்) 1972–73-ல் அரசு கல்லூரிகளில் புதிய பட்டப் படிப்புகள் தொடங்குவதற்கும், பட்ட மேற் படிப்பு வகுப்புகள் தொடங்குவதற்கும் ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

6. இம் மாநிலத்தில் கல்லூரிக் கல்வியை விரிவுபடுத்தும் பணியின் ஒரு பகுதியாக, கல்லூரிக் கட்டடங்கள், மாணவர் விடுதிகள் ஆகிய வற்றிற்காக 1971–72-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 115 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1971–72-ல் பல்கலைக்கழக மானியத்திலிருந்து பெறப்படும் மானியத்தைக் கொண்டு நான்கு கல்லூரி மாணவர் விடுதிகளைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியது. கல்லூரிக் கட்டடங்கள், விடுதிக் கட்டடங்கள் ஆகியவை கட்டுவதற்காக 1972–73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ. 146.99 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

7. தற்போது 30 கல்லூரிகளில் (15 அரசினர் கல்லூரிகள் 15 மானியம் பெறும் கல்லூரிகள்) மாலை நேர வகுப்புகள் நடத்தப் படுகின்றன. வேலையில் உள்ளவர்கள் தங்களது கல்வித் தகுதிகளை உயர்த்திக் கொள்ள இவை வாய்ப்பு அளிக்கின்றன. இந்த மாலை நேர வகுப்புகளில் மொத்தம் 8,312 மாணவர்கள் பயிலுகின்றனர். 1972–73-ல் இன்னும் சில அரசினர் கலைக் கல்லூரிகளில் சில மாலை நேரப் படிப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



1972 மார்ச் 18]

## III. கல்வித்தர உயர்வுக்கான நடவடிக்கைகள்

8. கல்லூரிகளில் நெறிமுறை ஆசிரியர்கள் (Tutors) விளக்குநர்கள் (Demonstrator) ஆகிய பதவிகளுக்குப் பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். கல்லூரிகள் கல்வியின் தரத்தை உயர்த்தும் ஒரு முயற்சியாக, அத்தகைய நெறி முறை ஆசிரியர்கள், விளக்குநர் ஆகியோரின் கல்வித் தகுதியைப் பட்டபடிப்பு நிலையி லிருந்து பட்ட மேற்படிப்பு நிலைக்கு உயர்த்துவது என்று அரசு 1971–72-ல் முடிவு செய்தது.

9. பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு வகுப்பு நடத்தும் ஆசிரியர்களுக்கு ஆராய்ச்சி அனுபவம் அவசியமாக இருப்பதால், அரசு கல்லூரிகளில் உள்ள சில பேராசிரியர்களையும் உதவிப் பேராசிரியர்களையும் Ph.D. பட்டங்கள் பெறுவதற்கான ஆராய்ச்சிப் பணிக்காக முகமையில் அனுப்பத் திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக 1972–73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் ரூ. 28,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. M. Ed. பயிற்சிக்கு உதவிப் பேராசிரியர்களை முகமையில் அனுப்பும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

10. ஆங்கிலம் கற்பிக்கும் தரத்தை உயர்த்துவதற்காக, கல்லூரி அளவில் ஆங்கிலம் பயிற்றுவிப்பதில் முறையான பணிக்காலப் பயிற்சி அளிக்கும் திட்டங்கள் 1971–72-லும் தொடர்ந்து நிறைவேற்றப் பட்டன. இத் திட்டம் பிரிட்டிஷ் கவுன்சில், சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் உடனுழைப்புடன் நிறைவேற்றப் படுகின்றது. 1969–70 லிருந்து உடனுழைப்புடன் நிறைவேற்றப்படு கின்றது. 1969–70-லிருந்து ஒவ்வோர் ஆண்டும் எம்.ஏ. (ஆங்கிலம்) பயிலும் 40 மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகைகள் கொடுக்கப் பட்டு வருகின்றன. திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 அளிக்கப்படுகிறது. அவர்கள் எம்.ஏ., (ஆங்கிலம்) பயிற்சியில் தேறியவுடன் அரசினர் கல்லூரிகளில் பொருத்தமான பதவிகளில் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவார்கள். இத் திட்டம் 1972–73-லும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

11. சென்னை பல்கலைக் கழகத்தினால் பின்பற்றப்படுகின்ற புதிய பாடத் திட்டங்களைக் கற்பிப்பதற்கு மறுபயிற்சி வகுப்புகள் நடத்து வதற்காக, அரசு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 1971–72-ல் ரூ. 10 லட்சம் மானியம் வழங்கியது.

[1972 மார்ச் 18

IV பயிற்று மொழி.

12. இணையான பயிற்று மொழிப் பிரிவுகள் திறப்பது தொடர்பான ஏ.எல். முதலியார் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, அரசு 1971–72-ல் தமிழ் பயிற்று மொழிப் பிரிவுகள் மட்டும் உள்ள அரசு கலைக் கல்லூரிகளில் ஆங்கில பயிற்று மொழி வகுப்புகளைப் புதிதாகத் திறக்க ஆணை பிறப்பித்தது. உயர்கல்வியை தமிழில் கற்பிப்பதற்கு ஊக்கமளிப்பது என்ற தங்களது கொள்கையை அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட பி.ஏ., பி.எஸ்.சி. வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 180-ம், புகுமுக மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50-ம் உதவித் தொகையாக வழங்கியது. இந்த உதவித் தொகை 1971–72-லிருந்து, அரசு தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் உட்பட, அவர்கள் எந்த வகுப்பினராயிருப்பினும், என்ன வருமானம் உடையவராயிருப்பினும், தமிழைப் பயிற்று மொழியாகப் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. உதவித் தொகை வழங்கும் இந்த திட்டம் 1972–73-லும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

V. கல்லூரிக்கான தமிழ்ப் பாடப்புத்தகங்கள்

13. கல்லூரி மாணவர்களுக்காக தமிழில் இதுவரை 273 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நாடு முழுமையிலும் எல்லா வட்டார மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள 600 கல்லூரிப் பாடப் புத்தகங்களில் தமிழில் மட்டும் 273 புத்தகங்கள் வெளியிடப்பட்டிருப்பதைக் கருதிப் பார்க்குங்கால், இது ஒரு சிறப்பான சாதனை என்பது விளங்கும். தமிழ்நாடு பாடப் புத்தக நிறுவனம் அரசின் சார்பில், தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களின் திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டங்களுக்கு இணங்க, பல்கலைக் கழகத்தின் பல் வேறு பாடங்களில், தமிழில் சுமார் 450 மூலப் புத்தகங்கள் எழுத ஏற்பாடுகள் செய்துள்ளது. 74 புத்தகங்கள் தற்போது அச்சில் உள்ளன. எஞ்சியுள்ள புத்தகங்களும் இவ்வாண்டில் இறுதிக்குள் வெளியிடப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிறுவனம் பட்ட மேற்படிப்பில் வரலாறு, பொருளாதாரம் ஆகிய பாடங்களுக்கும் தமிழில் பாடப் புத்தகங்கள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

VI. தேசிய மாணவர் படை

14. தற்பொழுது தமிழ்நாட்டில், தேசிய மாணவர் படையில் (அதிகாரிகள் பயிற்சிப் பிரிவு ஒன்று உட்பட) 51 முதுநிலைப் பிரிவு



1972 மார்ச் 18]

களும் இவற்றை நிர்வகிப்பதற்கான தேசிய மாணவர் படைக் குழுத் தலைமையிடங்கள் ஐந்தும் உள்ளன. தேசிய மாணவர் படையில், முதுநிலைப் பிரிவில் 32,145 பேர்களும் இளநிலைப் பிரிவில் 70,200 பேர்களும் உள்ளனர். ரூ. 2.5 லட்சம் செலவில், இளநிலைப் பிரிவின் படையில் அதிகமாக 5,000 பேரைச் சேர்ப்பதற்காக 1972–73-ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 1971 சனவரியில் புதுடில்லியில் நடத்தப்பட்ட குடியரசு தின அணிவகுப்பில் கலந்துகொண்ட தமிழ்நாட்டுத் தேசிய மாணவர் படைப் பிரிவு அதில் சிறப்பிடம் வகித்ததோடன்றி அனைத்து இந்தியக் கேடயத்தையும் (All India Banner) பெற்றது.

VII. சட்டக் கல்லூரி.

சட்டக் கல்லூரி, 1953-ல் சட்டக் கல்வி இயக்குநரின் பொறுப்பின் கீழ் வந்தது. சட்டக் கல்வியில், பட்ட மேற்படிப்புத் தகுதிப் பட்டயப் படிப்பு, சில பிரிவுகளில் எம்.எல். படிப்பு ஆகியவை தொடங்கப் பட்டுள்ளன. 1971–72-ல் இக் கல்லூரியில் பயின்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2,366. இதில் 429 மாணவர்கள் மாலை நேர சட்டக் கல்வி பயில்கின்றனர். 48 மாணவர்கள் பட்ட மேற்படிப்புத் தகுதிப் பட்டயப் படிப்பு பயிலுகின்றனர். 46 பேர் எம்.எல். படிப்பு பயின்றனர்.

சட்டக் கல்லூரி மாணவர் விடுதி தற்போது, வாடகைக்கு எடுக்கப்பட்ட தனியார் கட்டடத்தில் உள்ளது. இந்த விடுதியில் 220 பேர் மட்டுமே தங்க முடிகிறது. ஏராளமான மாணவர், விடுதி வசதி வேண்டும் எனக் கோருகின்றனர். விடுதி கட்டுவதற்குத் தகுதி யான அரசு நிலம் எதுவும் இல்லை. எனவே, தற்போதுள்ள தனியார் கட்டடத்தை மனையுடன் சேர்த்து அரசு வாங்கத் திட்டமிட்டுள்ளது. இங்கு புதிய கட்டடங்கள் கட்டுவதன் மூலம் மேலும் சுமார் 400 மாணவர்களுக்கு இட வசதி அளிக்கலாம்.

## அத்தியாயம் VII.

## தொழில் நுட்பக் கல்வி.

### I. நிதி ஒதுக்கீடு

1. 1972–73-ல், "28. கல்வி" என்னும் கணக்கில் மொத்தமாகச் செலவிடப்படும் ரூ. 8,985 லட்சத்தில், தொழில்நுட்பக் கல்விக்காக, ரூ. 503 லட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது கல்விக்

காகச் செலவிடப்படும் மொத்தச் செலவில் சுமார் 6 விழுக்காடு ஆகும்.

2. 1972–73 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் தொழில்நுட்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையின் விவரங்கள் வருமாறு :—

| கணக்குத் தலைப்பு. | தொகை (ரூ. லட்சத்தில் |
|---|---|
| "28. கல்வி" | 503·32 |
| "103. மூலதனச் செலவு" முதலிய தலைப்புகளின்கீழ் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களின் கட்டடங்களுக்கான மூலதனச் செலவு .. | 40·55 |
| "109. மூலதனச் செலவு" என்னும் தலைப்பின்கீழ் தொழில் பயிற்சிப் பள்ளிகளின் கட்டடங்களுக்கான மூலதனச் செலவு .. .. | 14·47 |
| மாணவர்களுக்கும், தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறிய மாணவர்களுக்கும் கடன் தொகை .. .. .. | 42·52 |
| | 600·86 |

3. தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் பல்வேறு கல்விப்பணிகளுக்காக இத்தொகை எவ்வாறு செலவிடப்படுகிறது என்னும் முழுவிவரங்களைக் கீழ் காணும் புள்ளி விவரங்கள் தெற்றெனக் காட்டும் :—

| | 1971–72-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1972–73-ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. நிர்வாகமும் மேற் பார்வையும் .. | 15·99 | 16·39 |
| 2. பொறியியல் கல்லூரிகள்— | | |
| (a) அரசினர் பொறியியல் கல்லூரி. | 113·52 | 132·90 |
| (b) தனியார் .. .. .. | 38·13 | 37·86 |
| 3. தொழில் நுட்ப தனியார் நிறுவனங்கள்— | | |
| (a) அரசு .. .. .. | 112·71 | 120·95 |
| (b) தனியார் .. .. .. | 44·41 | 43·55 |





| | 1971-72-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| 4. தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளிகள்— | | |
| (a) அரசு .. .. .. | 16·19 | 15·36 |
| (b) தனியார் .. .. .. | 4·00 | 4·00 |
| 5. வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி .. .. | 19·32 | 16·82 |
| 6. மாணவர்களுக்கு படிப்பு உதவிச் சம்பளம், பயிற்சி உதவிப்பணம், கடன்கள் .. .. .. | 21·65 | 23·15 |
| 7. தொழிற் பயிற்சிப் பள்ளிகள் .. | 282·44 | 180·88 |
| 8. தேர்வுகள்— | | |
| (a) தொழில் நுட்ப நிறுவனங்கள் | 4·00 | 4·40 |
| (b) வணிகவியல் .. .. | 4·10 | 4·60 |
| | 575·86 | 600·86 |

## II திட்டக் குறிக்கோள் அளவுகள்.

4. முதல் ஐந்தாண்டுத் திட்டம் செயல்படத் தொடங்கிய காலத்தில் இம்மாநிலத்தில் 5 பொறியியல் கல்லூரிகளும் 6 பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும்தான் இருந்தன. இம்மாநிலம் முழுவதிலுமுள்ள பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை தற்போது 12 பொறியியல் கல்லூரிகள் (இவற்றுள் ஏழு மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ளவை) 35 பல்தொழில் பயிற்சிப்பள்ளிகள் (மகளிர் பல்தொழில் பயிற்சிப்பள்ளிகள் மூன்று உட்பட), 14 தொழில் நுட்பப் பள்ளிகள் (அரசுப் பள்ளிகள் 11, அரசு உதவி பெற்றவை 3) ஆக உயர்ந்துள்ளது.

இதுவரையில் தனியார் நிர்வாகத்தில் இயங்கி வந்த அழகப்ப செட்டியார் பொறியியல்–தொழில்நுட்பவியல் கல்லூரி, காரைக்குடி, பல்தொழில் பயிற்சிப்பள்ளி ஆகியவற்றை அரசு மேற்கொண்டது குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும். சென்னை திரைபடத் தொழில் நுட்ப நிறுவனம், செய்தி–விளம்பரத்துறை இயக்குநர் மேற்பார்வைக்கு மாற்றப்பட்டுள்ளது. தனியார் நிர்வாகத்தில், ஆனல்,

[1972 மார்ச் 18

அரசு மானியம் பெறும் புதியதோர் பணியிருப்புத் தொழில் பயிற்சிப் பள்ளி 1971–72-ல் எண்ணூரில் அமைக்கப்படுமென்று எதிர்ப் பார்க்கப்படுகிறது.

5. 1971–72-ல் 7 பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப் பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1,584 ஆகும். முறையான படிப்பு—1,167. பகுதி நேரப் படிப்பு—417. புதிதாகச் சேரு வோருக்காக, 1972–73-ல் 1,660 இடங்கள். (பகுதி நேரப் பட்டப் படிப்பு உட்பட) கிடைக்கப் பெறும். 1971–72-ல் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் 4,642 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். 1972–73-ல் புதிதாகச் சேருவோருக்காக 4,800 இடங்கள் கிடைக்கப் பெறும்.

## III கல்வியைப் பல்துறைப்படுத்தல்.

6. ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள தொழிற் கல்வி நிறுவனங்களை ஒருமுகப்படுத்தி, அந்நிறுவனங்களால் அளிக்கப்படும் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் மூலம் தரமான மேம்பாட்டை அடையச் செய்வதே நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்பட மேற்கொள்ளப்படும் திட்டங்களின் நோக்கம் ஆகும். தேறிவந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பல வழிகளை ஏற்படுத்த, வேலை வாய்ப்பளிக்கும் படிப்பையும் பல்துறைப்படுத்தப்பட்ட படிப்பையும் தொடங்கியது. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றுகும். 1971–72-ல், பற்றவைப்புத் தொழில் நுட்பவியல், வணிகவியல் பயிற்சி, ஒப்பனைப் பொருளியல் (Cosmetology) ரொட்டி தயாரிப்பு போன்ற பல்வகைப்படுத்தப்பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டன. வரும் ஆண்டில், பல்தொழில் பயிற்சிப்பள்ளிகளில் டீசல் ரயில்வண்டிகள், புள்ளி விவரக் கணக் கியல், பிராஸ்தெடிக்ஸ் (Prosthetics) ஆர்தெடிக்ஸ் Orthetics) போன்ற படிப்புகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத் தவிர, கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியில், மோட்டார் பொறியியல் ஆய்வுக் கூடத்துடன் செயல்முறை மின்னணு இயல், செயல்முறைக் கணிதப் . பயிற்சிகளில் இரண்டாண்டு பட்ட மேற் படிப்பைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. சென்னை, அரசு மகளிர் பல்தொழில் பயிற்சிப்பள்ளி, சென்னை, இரசாயனத் தொழில் நுட்பப்பள்ளி ஆகிய வற்றில் தொடங்கப்பட்ட பணியிருப்புப் பயிற்சித் திட்டங்கள் செவ்வனே இயங்கி வருகின்றன.



1972 மார்ச் 18]

## IV. தொழில் தொடர்பு வாரியம்.

7. தற்காலத் தொழிற்சாலைகள் தேர்ச்சி பெற்ற, திறமை வாய்ந்த தொழில் நுட்பப் பணியாளர்களை மேன்மேலும் நாடு கின்றன. எனவே, தொழில்நுட்பப் பணியாளர்களை, தொழிற்சாலை களுக்குத் தேவைப்படும் பொறியியல் துறைகளில் பயிற்று விப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. இதற்கென தொழில் நிறுவனங்களுக்கும், தொழில்நுட்பக் கல்வி நிலையங்களுக்கு மிடையே நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும். அதன் மூலம் இரு சாராரும் அவரவருடைய பிரச்சினைகளை அறிந்து கொள்ள இயலும்; தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் தொழிற்சாலைக்குத் தேவையான பணி யாளர்களைப் பயிற்றுவிக்க இயலும். இதற்காக மாநிலத்திலுள்ள முக்கிய தொழிலதிபர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கும் தொழில் தொடர்பு வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. பணியிருப்புப் பயிற்சி போன்ற வகுப்புகளில் செய்முறைப் பயிற்சியைத் தொடங்க இவ்வாரியம் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டு மென்றும், தொழில்நுட்பப் பள்ளிகளில் எத்தகைய பயிற்சியளிக்கப் பட வேண்டுமென்பது குறித்து கருத்துக்கள் வழங்க வேண்டு மென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## V. கணக்கிடும் பொறி நிலையம்.

8. 1964-ஆம் ஆண்டு முதற்கொண்டு, கணக்கிடும் பொறி வசதி கள் கொண்ட அடிப்படை பொறியியல் நிலையமொன்று கிண்டி பொறியியல் கல்லூரியில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நிலையத்தில் கிடைக்கும் கணக்கிடும் பொறியின் பணியை அரசும் தனியார் நிறுவனங்களுக்கும் பயன்படுத்திக் கொள்கின்றன. இந்நிலை யத்தில் கணக்கிடும் பொறியின் பணியினை, மேலும் விரிவாக்க, 1968-லும், 1971-லும், கூடுதலான தொழில்நுட்பப் பணியாளர் களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அரசின் பல்வேறு துறை களின் நிர்வாகம், தொழில்நுட்பப் பிரச்சினைகள் ஆகியவற்றைக் கணக்கிடும் பொறியின் மூலம் தீர்த்துக்கொள்ள இயலுமாதலின், அத்துறைகள் இந்நிலையத்தில் கிடைக்கும் வசதிகளை மேலும் பயன் படுத்த அண்மை மாதங்களில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுள்ளன.

## VI. பொறியியல் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள்.

9. 1971–72-ஆம் ஆண்டில் பட்டயம் பெற்றவர்களுக்கான பகுதி நேரப் பட்டப் படிப்பு வகுப்பு தொடர்ந்து நடத்தப்படுகிறது.

[1972 மார்ச் 18

1971–72-ல் இவ்வகுப்புகளில் சேர்ந்து பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

கட்டடவியல்—158.

பொறியியல்—141.

மின் இயல்—118.

தங்களுடைய கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டு, சிறந்த வேலை வாய்ப்புக்களைப் பெற விழைவோருக்காக இவ்வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தற்போது இப்பள்ளிகளில் உள்ள பொறி வசதிகளைக் குறைவான கட்டணங்களில் பயன்படுத்தி, முன்னாள் மாணவர்கள் பொருள்களைத் தயாரிப்பதற்கும் வேலைகளைச் செய்வதற்கும் ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. இது பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வழிகளில் ஒன்றாகும். இத்திட்டம் திருச்சியிலும், மதுரையிலும் தொடர்ந்து செயலில் உள்ளது. இந்த ஊக்கத்திட்டம் காரணமாக மாணவர்களும் தகுதிப் பட்டயம் பெற்றவர்களும் ஆக 180 பேர் இதுவரைப் பலனடைந்துள்ளனர்.

10. சேலம் உருக்காலைத் திட்டம் செயல்படத் தொடங்கியுள்ள நிலையில், இம் மாநிலத்தில், உலோகவியல் பொறியாளர்களைப் பயிற்றுவிப்பதில் அதிகத் தேவை ஏற்பட்டுள்ளது. இந்தத் தேவையை நிறைவு செய்ய எண்ணி 1970–71-ல் உலோகவியல் பயிற்சி தொடங்கப்பட்டது. சேலம் உருக்காலைத் திட்டம் செய்முறைப் பயிற்சிக்கான வசதிகளனைத்தையும் அளிக்கக்கூடியதாய் இருப்பதாலும், சேலத்தில் புதிய உருக்காலை வசதிகள் இப்பயிற்சிக்குத் துணை செய்யும் என்பதாலும், கிண்டி பொறியியல் கல்லூரியிலுள்ள இப் பயிற்சியை சேலம் அரசினர் பொறியியல் கல்லூரிக்கு மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

## VII. தொழிற்கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள்.

11. (அ) பல்வேறு வகுப்புகளின் பாடத் திட்டத்தை நவீன முறைக்கேற்ப திருத்துவதும், ஒவ்வொரு துறையிலும் புதிய மேம்பாடுகளுடன் ஒட்டியிருக்க வகுப்புப் பாடத் திட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மாற்றியமைப்பதும் அவசியமாகும். 1972–73-ல் இதற்காக கிண்டி பொறியியல் கல்லூரியில் கல்வி பாடத்திட்ட மேம்பாட்டுப் பிரிவொன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



1972 மார்ச் 18]

(ஆ) ஆசிரியர்களின் கல்வித் தகுதியை உயர்த்தும் பொருட்டு தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர் ஐவர் ஆராய்ச்சி செய்வதற்காக, 1971–72-ல் இந்தியத் தொழில் நுட்பவியல் நிறுவனத்திற்கும், பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனத்திற்கும், வெளிநாட்டைச் சேர்ந்த சில பல்கலைக் கழகங்களுக்கும் அனுப்பப்பட்டனர். 1972–73-ல் அவர்கள் தொடர்ந்து அந்நிலையங்களில் பயில்வர்; பயிற்சிக்காலத்தில் ஊதியமும் பெற்று வருவர்.

12. 1971 ஏப்ரல் வரை வணிகப் பாடங்களில் சான்றிதழ்ப் படிப்புத் தேர்வுகள், அரசுத் தேர்வுகள் ஆணையாளரால் நடத்தப்பட்டு வந்தன. தட்டச்சுக் கல்வி போன்ற இப்பாடங்களில் தொழில் நுட்ப அறிவு தேவைப்படுவதாலும், ஏற்கெனவே வணிகவியல் பள்ளி தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ளதாலும், மேற்சொன்ன தேர்வுகளை நடத்தும் பொறுப்பு 1971 அக்டோபரிலிருந்து தொழில்நுட்பக் கல்வி இயக்குநருக்கு மாற்றப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கான நடைமுறைகள் சீர்செய்யப்பட்டுத் தேர்வு முடிவுகளை வெளியிடுதல் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

## VIII. தொழில்நுட்பக் கல்விக்கான பல்கலைக் கழகம்.

தொழிற்கல்வியின் பலதுறைகளிலும் உயர்சிறப்பறிவு பெறுவதற்கான தேவைகள், தொழிற் கல்விக்கென்று சிறப்பான நிறுவனமொன்றை அமைப்பதன் மூலமே செம்மையாக நிறைவு செய்யப்படும் என்ற உண்மை அனைவராலும் பெருமளவில் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது. தொழிற்கல்விக்கென தனி நிறுவனமொன்று அமைந்தால், அது தொழிற்கல்வி நிறுவனங்களுக்கு நிலையாகவும், தொடர்ந்தும் கல்வி, தொழில்நுட்ப உதவியளித்து, வழிகாட்டியாக அமையமுடியும். இம் மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்விக்கான பல்கலைக் கழகமொன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## IX. கைத்திறப் பணியாளர்கள் பயிற்சித் திட்டங்களும் தொழில் பயிற்சி நிறுவனங்களும்.

கைத்திறப் பணியாளர்கள் பயிற்சித் திட்டம், வேலைவாய்ப்பு-பயிற்சித் துறை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. 1968–69 வரையில் மத்திய அரசின் உதவிபெறும் திட்டமாக இருந்த இத்திட்டம் 1969–70-லிருந்து ஒரு மாநிலத் திட்டமாக மாறியுள்ளது.

## (i) தொழில் பயிற்சிப் பள்ளிகள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 10 தொழில் பயிற்சிப் பள்ளிகள் (3,368 மாணவர்கள்) செயல்பட்டு வந்தன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் தொழில் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை 30 ஆக (9,592 மாணவர்கள்) உயர்ந்து தற்பொழுது 31 தொழில் பயிற்சிப் பள்ளிகள் (13,112 மாணவர்கள்) அளவில் உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மேலும் 1,000 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வகை செய்யக் கருதியுள்ளோம்.

தொழில்களைப் பல்துறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், சில தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிற வேலை வாய்ப்பு பெரிதும் இல்லாத, தொழில்கள் சிலவற்றிற்குப் பதிலாக, இயந்திரக் கம்மியர் (மின் அணுவியல்), இயந்திரக் கம்மியர் (டிராக்டர்), இயந்திரக் கம்மியர் (குளிர் பதனம்-சீர்வளிச் சாதனம் பொருத்துதல்) முதலியன போன்ற, வேலைவாய்ப்பு செறிந்த தொழில்களில் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சிப்பள்ளிகள் தொழிற் சாலைத் தொழிலாளர்களுக்காக மாலை நேர வகுப்புகள் நடத்து கின்றன. தற்போது, மொத்தத்தில் சுமார் 688 தொழிலாளர்கள் மாலை நேர வகுப்புகளில் பயிலுகின்றனர்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப்பட்ட ஒரு திட்டத்தின்கீழ், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், பேட்டை ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சிப்பள்ளிகள் பொற் கொல்லர், வடிவமைப்பு தயாரிப்போர், கைத்தறி நெசவாளர் ஆகியோருக்கு, அவர்கள் ஒரு துணைத் தொழில் பழகிக்கொள்ள இயலும் வகையிலும், வேலைவாய்ப்பினைப் பெறத்தக்க வகையிலும் மாற்றுத் தொழில்களில் பகுதிநேரப் பயிற்சி அளிக்கின்றன. சுமார் 125 தொழிலாளர்கள் இத்தகைய பயிற்சி பெறுகின்றார்கள்.

வட சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சிப்பள்ளிகள், முன்னோடித் திட்டமாக, தச்சுத் தொழிலில் வாணிபத் தொழில் பிரிவுகளைத் தொடங்கியுள்ளன. இந்தப் பிரிவுகள், பயிற்சி பெறுபவர்களுக்கு, உற்பத்தியில் நடை முறை அனுபவங்கள் அளிக்கின்றன. இந்த அனுபவத்தினால் பயிற்சி





பெறும் தொழிலாளர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்கு வதிலும், சொந்தமாகப் பணி ஆணைகள் பெறுவதிலும் ஊக்கம் அளிக் கிறது. இந்த முன்னோடித் திட்டம் வெற்றி அடைந்தால், இது ஏனைய இடங்களில் உள்ள நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

தொழில் பயிற்சிப்பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறியவர் களுக்கு, தொழிலை நோக்கமாகக் கொண்ட நடைமுறைப்பயிற்சி அளிக்கும் திட்டங்களும் செயலில் உள்ளன. திருச்சிராப்பள்ளி, தொழில் பயிற்சிப்பள்ளியில், பாரத் கனரக மின்சாரக்கருவிகள் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரப் பாகங்களைத் தயாரித்து அளிப்பதற்கான பணி ஆணைகள் பெறுவதற்கு அவர்கள் அனுமதிக்கப் படுகின்றனர். கிண்டியிலும் மதுரையிலும் உள்ள தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சியாளர்கள், குளிர்பதனப் பெட்டி, மற்றும் மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படுகிற கருவிகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கவும் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

பர்மா, இலங்கை அகதிகளுக்கு, ஒவ்வொரு தொழில் பயிற்சிப் பள்ளியிலும் ஒவ்வொரு தொழிலிலும் 5 சதவீத இடங்கள் ஒதுக்கப் படுகின்றன.

இம் மாநிலத்தில் உள்ள தொழில் பயிற்சிப்பள்ளிகளில் தரமான பயிற்சி அளிக்கப்படுகிறது. புதுடில்லியில் ஆண்டு தோறும் நடத்தப் படுகின்ற அனைத்து இந்தியத் திறமைப் போட்டிகளில், தமிழ்நாடு இரண்டொரு தொழில்களில் தொடர்ந்து முதலிடம் வகித்துள்ளது. சிறந்த மாநிலத்திற்கான குடியரசுத் தலைவரின் சுழல் கோப்பையையும் தமிழ்நாடு மும்முறை பெற்றுள்ளது.

## (ii) தொழில் பழகுவோர் பயிற்சித்திட்டம்.

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்படி, ஒரு தொழில் நிறுவனம் தொழில் பழகுவோர் சிலருக்கு பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமாகும். தற்போது 195 தொழிற்சாலைகள் இச் சட்டத்தின்கீழ் வருகின்றன. 489 தொழில் நிறுவனங்கள் இச் சட்டத்தைச் செயற்படுத்துகின்றன. இவற்றில் மொத்தம், 2,727 தொழில் பழகுவோர் உள்ளனர். 10 தொழில் பயிற்சிப்பள்ளிகளில் தொடர்புள்ள பாடங்களில் போதனை வகுப்புகள் நடத்தப்படு கின்றன.

(iii) மானியம் பெறும் தொழில் பள்ளிகள்.

இம் மாநிலத்தில், வேலைவாய்ப்பு பயிற்சித் துறையால் ஏற்பளிக்கப்பட்ட 31 உதவி பெறும் தொழில் பள்ளிகள் உள்ளன. இவற்றிற்கு, பேணுதல் செலவு, கருவிகள், மற்றும் கட்டடங்களுக்காக மானியங்கள் அளிக்கப்படுகின்றன.

(iv) தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறி வேலையில்லாமல் இருப்பவர்களுக்குக் கடன் உதவி.

தொழில் நுட்பத் தகுதிபெற்ற கைத்திறப் பணியாளர்களுக்கு, சொந்தமாகத் தொழில் தொடங்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன், தொழில் பயிற்சிப்பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறி, வேலையில்லாமல் இருக்கும் கைத்திறப் பணியாளர்களுக்கு கருவிகளும் உபகரணங்களும் வழங்குவதற்கான கடனுதவித் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சொந்தத்தில் தொழில் தொடங்குவதற்காக ஒருவருக்கு ரூ. 1,000 மதிப்புள்ள கருவிகளும் உபகரணங்களும் என்ற வீதத்தில் 3,000 பேர்களுக்கு வட்டியின்றி இக் கடன் உதவி அளிக்கப்படும். இந்த கடன், ஒரு தவணையில் ரூ. 40 வீதம் 25 சமமான மாதத் தவணையில் வசூலிக்கப்படும். இத் திட்டத்திற்காக 1971–72, 1972–73 ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவுத் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் VIII

## இசை, கலைகள், கலை நிகழ்ச்சிகள்.

### தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்.

1. தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், திரைப்படம், நுண்கலை, இசை, நாடகம் ஆகியவற்றைப் பேணி வளர்க்கும் பணிகளையும், அவற்றின் மூலம் தமிழ்நாட்டில் கலைப் பணிகளை மேம்படுத்தும் செயல்களையும் தொடர்ந்து நிறைவேற்றி வந்தது.

2. இச் சங்கம் திறன் படைத்த இளம் கலைஞர்களை ஊக்குவிக்கிறது. தனது ஆதரவின் கீழ் கலை நிகழ்ச்சிகளை நடத்த அவர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கிறது. இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம் ஆகிய துறைகளில் சிறந்த திறமையுள்ள கலைஞர்களுக்கு இச் சங்கம் விருதுகளும் பாராட்டிதழ்களும் வழங்குகிறது.



3. 1971–72-ல், இச் சங்கம் தனது பணிகளுக்காக ரூ. 1.90 லட்சமும் வெளிநாடுகளிலிருந்து வரும் கலாச்சாரக் குழுக்களை வரவழைத்து உபசரிப்பதற்காக ரூ. 50,000-ம் மானியம் பெற்றது. 1972–73 ஆம் ஆண்டுக்காக இச் சங்கத்துக்கு ரூ. 2.40 லட்சம் ஒதுக்கப்பட்டது.

4. சிறந்த கலைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கும் மாநில அரசுத் திட்டத்தின்கீழ், 1971–72 ஆம் ஆண்டில் 190 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அரசு இதற்காக ரூ. 2 லட்சம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

5. அரும்பொருட்காட்சிச் சாலைகள்.—அரும்பொருட்காட்சிச் சாலை அரங்கில் அமரும் இடவசதி ஏற்பாட்டில் மேம்பாடுகள் செய்வது 1971–72-ல் மேற்கொள்ளப்பட்டு 1972–73-ல் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

6. கர்நாடக இசை மத்தியக் கல்லூரி.—இக் கல்லூரியில், 1971–72-ல் பரத நாட்டியம், புல்லாங்குழல், மிருதங்கம் ஆகியவற்றில் மூன்று புதிய வகுப்புகள் தொடங்கப்பட்டன. ரூ. 3 லட்சம் செலவில் கட்டப்பட்ட மகளிர் விடுதியில் தற்போது மகளிர் தங்கியுள்ளனர்.

7. தொல்பொருள் துறை.—பொதுப்பணித்துறையிலிருந்து தொல்பொருள் துறையினால் மேற்கொள்ளப்பட்ட திருமலை நாயக்கர் மகாலைச் செப்பனிட, 1972–73 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ. 3 லட்சம் செலவில் செப்பனிடும் பணிகளை முடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

8. 1970-ல் இராஜராஜ சோழனின் 1000-வது நினைவு நாளையொட்டி தஞ்சாவூரிலுள்ள உள்ளூர்க் குழுவொன்று அம் மன்னரின் சிலையொன்றை வழங்கியது. இச் சிலை, இராஜ ராஜ சோழனால் கட்டப்பட்ட பெரிய கோவிலுக்குள் வைக்கப்படுவதே பொருத்தமென்று அக்குழுவும் மாநில அரசும் கருதின. இக் கோவிலின் பாதுகாப்பு இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் (இந்திய அரசின்) நிர்வாகத்தில் இருப்பதால், 1970, பிப்ரவரித் திங்களில் இது குறித்து மாநில அரசு இந்திய அரசுடன் உயர்மட்டத்தில் தொடர்பு கொண்டது. கோவிலுக்குள் இச் சிலை வைக்கப்படுவதற்கு மாநில அரசு விடுத்த வேண்டுகோளை இந்திய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. இச் சிலையை, கோவிலின் உட்புற, வெளிப்புறச் சுவர்களுக்கிடையே ஓரிடத்தில் வைக்கலாம் என்று இந்திய

அரசு தெரிவித்தது. மாநில அரசால் தெரிந்தெடுக்கப்பட்ட இடம் கோவிலின் தொல்பொருள் சிறப்புக்குத் குந்தகம் விளைவிக்காது. எனவே, இப்பொருள் குறித்துத் இந்திய அரசிடம் இன்னமும் தொடர்பு கொண்டு, மாநில அரசின் கருத்தை ஏற்கத் தொடர்ந்து முயற்சி செய்யப்படுகிறது.

9. தஞ்சாவூரிலுள்ள பிரகதீஸ்வரர் கோவில், வேலூர் கோட்டையிலுள்ள ஜலகண்டீஸ்வரர் கோவில், கங்கை கொண்ட சோழபுரம் கோவில் ஆகிய இம் மாநிலத்திலுள்ள முக்கியத் தொல் பொருள் நினைவுச் சின்னங்கள் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சிக் குழுவால் பேணப்பட்டு வருகின்றன. மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையொன்று 1964 ஆம் ஆண்டிலேயே அமைக்கப் பட்டு, இம் மாநிலத்திலுள்ள அறிவிக்கப்பட்ட நினைவுச் சின்னங் களைப் பாதுகாக்கச் சட்டமும் இயற்றப்பட்டுள்ளதால், இந்த முக்கிய நினைவுச் சின்னங்களை, இந்திய அரசு, மாநில தொல் ஆராய்ச்சித் துறையிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கருதி 1966 ஆம் ஆண்டிலேயே மாநில அரசு நடவடிக்கை எடுத்தது. இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் போதிய பணியாளர்கள் இல்லாமையாலும் போதிய நிதி வசதியின்மையாலும் மேற்சொன்ன சின்னங்களில் பல பழுதுபட்ட நிலையிலுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டது. இக் கருத்து பற்றி இந்திய அரசிடம் மிக உயர் மட்டத்தில் தொடர்பு கொள்ளப்பட்டது. ஆனால், இந்த முக்கியச் சின்னங்களைத் தொல்பொருள் பாதுகாப்பிலிருந்து நீக்கிவிட இந்திய அரசு இதுவரையில் இசையவில்லை. இக் கருத்துபற்றி இந்திய அரசிடம் தொடர்ந்து தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் IX

## தமிழ் வளர்ச்சி.

1968 சனவரித் திங்கள் 23 ஆம் நாள் மாநிலச் சட்டமன்றம் நிறை வேற்றிய தீர்மானத்தில் சாற்றியுள்ள கொள்கைக் குறிப்பிற்கிணங்க, தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவருதலும் அலுவலக மொழி யாகப் பயன்படுத்திவருவதிலும் ஆண்டுதோறும் விரிவடைந்து கொண்டே வருகின்றன. அரசு இக்கொள்கையைச் செயல்படுத்து வதில் மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.

தமிழில் சிறந்த வரைவுகளும் குறிப்புகளும் எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆண்டுதோறும், இம் மாநிலத்தில் சிறந்த வரைவுகளும் குறிப்புகளும் எழுதும் 15 பேருக்கு



தலைக்கு ரூ. 500 வீதம் ரொக்கப்பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்டந்தோறும் ஒருவர் வீதம் 13 மாவட்டங்களிலும், சென்னை நகரில் இரண்டு பேருக்கும் இப்பரிசு வழங்கப்படுகிறது.

மாவட்ட அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்தப்படுவதை மேற் பார்வையிடும் பணியையும் நிர்வாகத்தில் தமிழை மேலும் பயன் படுத்தி வருவதையும் விரைவுபடுத்தும் பொருட்டு தமிழில் குறிப்பும் வரைவும் எழுதப் பணியாளர்கட்கு ஆக்கவழிகளில் அறிவுரை வழங்கவும் தற்போது மாவட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் வளர்ச்சி-ஆராய்ச்சி மன்றம் பரிசுகள் வழங்கி, தமிழில் தரமான நூல்களை வெளியிட ஊக்கமளித்து வந்துள்ளது. 1970–71 வரை இருபது வகைப்பட்ட நூல்களில், ஒவ்வொரு வகையிலும் சிறந்த ஒரு நூலுக்கு ரூ. 1,000 பரிசு அளிக்கப்பட்டது. 1971 மே திங்களிலிருந்து, ஒவ்வொரு வகையிலும் சிறந்த நூல்கள் இரண்டுக்கு பரிசு வழங்கப்படலாமென உத்தரவிடப்பட்டுள்ளது; அவ்விரண்டில் முதற் பரிசு பெறும் நூலுக்கு ரூ. இரண்டாயிரமும், இரண்டாம் பரிசு பெறும் நூலுக்கு ரூ. ஆயிரமும் வழங்கப்படும்.

இம் மன்றம் தமிழில் தரமான நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு நூலாசிரியர்களுக்கு நிதியுதவியளிக்கும் திட்ட மொன்றையும் செயல்படுத்தி வருகிறது. இது வரை இத் திட்டத்தின்கீழ் ஒரு நூலாசிரியருக்கு நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது. மேலும் 4 நூலாசிரியர்களுக்கு நிதியுதவியளிக்கும் கருத்து மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

தமிழில் சிறுவர் கலைக் களஞ்சியம் வெளியிடுவதற்காக தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கும், தென் மொழிகள் புத்தகப் பொறுப்புக் கழகத்தின் பொது நூல் வெளியீட்டுத்திட்டத்திற்கும், "யுனெஸ்கோ" கூரியர் (UNESCO Courier) இதழைத் தமிழில் வெளி யிடுவதற்கும் அரசு தாராளமாக மானிய உதவியளித்து வந்துள்ளது. தமிழில் பட்டமேற்படிப்புக் கல்வியில் ஆராய்ச்சி செய்வதற்காக, பிற மாநிலங்களைச் சேர்ந்த சில பல்கலைக்கழகங்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் உஸ்மானியா பல்கலைக் கழகமும், வேங்கடேஸ்வரா பல்கலைக் கழகமும் தமிழ்நாடு அரசின் உதவியுடன் தமிழ் ஆராய்ச்சித் துறையை நிறுவியுள்ளன.

அதிகாரபூர்வமான தமிழக வரலாற்றை எழுத, 1971 ஜூன் திங்களில் டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் அரசு அமைத்துள்ள ஒரு குழு செயற்படத் தொடங்கியுள்ளது.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

## திங்கட்கிழமை, 1972 மார்ச் 20.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### (1) வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### மதுவகைகள் உற்பத்தி

* 571 வின.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் "திராட்சை ரசம்" தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டத்தில் ஏராளமான திராட்சை விளைச்சல் இருக்கிறது. அங்கே திராட்சை ரசம் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்குவதால், அங்கிருக்கும் விவசாயிகள் உற்பத்தி செய்யும் திராட்சைக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்பு ஏற்படும். நம் மாநிலத்திற்கு வெளி மாநிலத்திலிருந்து திராட்சை ரசம் வந்துகொண்டிருக்கிறது. அதையும் நம் மாநிலத்திலேயே தயாரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கோவையில் அதிகமான அளவுக்கு திராட்சை கிடைக்கிறது என்றும், அது மாநிலத்தின் பல் வேறு பகுதிகளிலும் கிடைக்கிறது என்றும், அதிலிருந்து "ஒயின்" தயாரிக்கும் தொழிற்சாலை கிருஷ்ணகிரி, தர்மபுரி அருகிலும், சேலத்திற்கு அருகிலும், திண்டுக்கல் அருகிலும் நிறுவுவதற்கான

செயற்குறிப்பு ஒன்று, கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்களால் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பல இலாக்காக்களும் பல கட்டங்களில் தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றனர்.

திரு. எம். தேவராசன் : நீலகிரி மாவட்டத்தில் பெருமளவில் பார்லி கிடைப்பதால் அங்கே ஒரு பீர் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா? அரசுக்கு உத்தேசமில்லையென்றால், தனியார் யாராவது ஆரம்பிக்க முன்வந்தால் அதற்கு அரசு ஆதரவு கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி, திராட்சையைப் பற்றியது; பார்லியைப்பற்றியதல்ல.

திரு. அ. முனியாண்டி : நிலக்கோட்டை தொகுதியில் அதிகமாக திராட்சை கிடைப்பதால் திண்டுக்கல்லில் அமைக்கும் தொழிற்சாலையை நிலக்கோட்டையிலேயே அமைக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதுரை மாவட்டத்தில் கொடைக்கானலில் விளைகிற திராட்சையை மூலப் பொருளாகக் கொண்டு, அங்கே போதைச் சத்து அடங்கிய "ஒயின்" தயாரித்தால் 12 சத வீத சத்து அடங்கியதாக இருக்கலாம் என்கிற அளவுக்கு சில குறிப்புகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி இன்னும் அரசு எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

* 572 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state the number of licences issued for the manufacturing of brandy and liquor from cashaw apple.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏதுமில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : முந்திரிக்கொட்டை ஓடுகளிலிருந்து ஒரு உயர்தரமான பிளாஸ்டிக் தயாரிப்பதற்கான வசதி இருப்பதாகவும், அதற்கு மேல்நாடுகளில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும் கூறப்படுகிறதே, அப்படிப்பட்ட தொழிற்சாலையை இங்கே ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முந்திரிப் பழத்திலிருந்து மது தயாரிப்பதைப்பற்றியது, மூலக்கேள்வி.





திரு. நா. வீராசாமி : முந்திரிப் பழத்திலிருந்து மது தயாரிக்கும் செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். இன்றையதினம் பல விதமான சாராயங்களைக் குடித்து மக்கள் இறந்துபோகிறார்கள். இதற்குக் காரணம், உயர் ரக பானங்களைக் குடித்தும் போதை ஏறவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, முந்திரிப் பழத்திலிருந்து தயாரிக்கப்படுகிற பிராந்தி அதிகமான போதை தருவதாகவும், அதிலிருந்து தயாரித்தால் மக்கள் அதையே அருந்தி பழகி விடுவார்கள், கள்ளத்தைக் குடிக்கமாட்டார்கள் என்று சொல்லப் படுகிறதே, அதை உத்தேசித்து இனிமேலாவது இப்படிப்பட்ட தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் செயற்குறிப்புபற்றி எதுவும் சொல்லவில்லை. முந்திரியிலிருந்து பிராந்தியும் மதுவும் தயாரிப்பதற்கு வழங்கப்பட்ட உரிமங்களுடைய எண்ணிக்கை மூலக் கேள்வியில் கேட்கப்பட்டிருந்தது. அதற்கு "எதுவும் இல்லை" என்று பதில் சொன்னேன். இப்பொழுது முந்திரியிலிருந்து மது தயாரிப்பதைப்பற்றி வருவாய்த் துறை, தொழில் துறை, விவசாயத் துறை, வனத் துறை ஆகிய இந்த நான்கு துறைகளும் அதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கின்றன. பொதுவாக, அரசாங்கத்தினுடைய பல இலாக்காக்கள் பல பரிசீலனைகளைச் செய்வதென்பது எப்போதும் தவிர்க்க முடியாதவை. ஆகவே, அதுபற்றி விரைவில் எந்த முடிவும் எடுக்க இயலவில்லை.

திரு. என். கிட்டப்பா : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். எதிர்க்கட்சி வரிசையில் தலைவர்கள் யாருமே காணோம். அதைப் பற்றி அவைத் தலைவர் அவர்கள் ஏதேனும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Krishnagiri taluk in Dharmapuri district is noted for grape production and grape production is increasing now. May I know from the Hon. Chief Minister whether a grape juice production unit will be started in Krishnagiri?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திராட்சை முடிந்து முந்திரிக்கு வந்திருக்கிறோம். இருந்தாலும், திராட்சையிலிருந்து மது தயாரிக்கும் தொழிற்சாலையை தர்மபுரி சார்புடைய இடங்களில் அமைப்பதுபற்றி அரசு பரிசீலித்து வருவதற்கு முன்பே நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. எஸ். காதர் பாஷா என்கிற வெள்ளைச்சாமி: கோவை போன்ற இடங்களில் முந்திரியிலிருந்து மது தயாரிக்கப்பட்டு பங்களூர் போன்ற பகுதிகளில் நல்ல விற்பனை ஆகிறது. விலையும் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நமது மாநிலத்தில் வரவழைத்து விற்பதற்கு உரிமம் வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றி எந்த விதமான நடவடிக்கையும் அரசு எடுக்கவில்லை. நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற முந்திரியைப் பயன்படுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. செ. சதாசிவம்: முந்திரி, திருச்சி மாவட்டத்தில் உடையார் பாளையம் தாலூக்காவிலும், அரியலூர் தாலூக்காவிலும் அரசாங்கக் காடுகளும், தனியார் காடுகளும் மிகுதியாக இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதியில் முந்திரி ரசம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முதலில் முந்திரியிலிருந்து மது தயாரிப்பது ஏற்றதா என்கிற ஆராய்ச்சியே இன்னும் முடியாமலிருக்கும்போது, எந்த இடத்தில் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவது என்பதைப்பற்றி நான் இப்பொழுது பதில் அளிக்க இயலாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்பொழுது நமது மாநிலத்தில் விற்பனையாகின்ற வெளிநாட்டு மதுப் பொருள்கள்—ஃபாரின் டேஸ்ட் விக்கர் என்று அவற்றுக்கு விலாசம் இருக்கிறது—எங்கிருந்து வரவழைக்கப்படுகின்றன என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்த விவரங்கள் எனக்குத் தெரியவில்லை. (சிரிப்பு) தனிக் கேள்வி போட்டால், தெரிந்துகொண்டு பதில் அளிக்கிறேன்.



## விற்பனை வரித்துறை அலுவலர்கள்

* 573 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விற்பனை வரி இலாகாவில் பணிபுரியும் அலுவலர்களை மது விலக்குத்துறைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, முன்பு ஒருமுறை மதுவிலக்கு அமல் செய்தபொழுது மதுவிலக்கு இலாகாவில் பணி புரிந்த ஊழியர்கள் விற்பனை வரி இலாகாவுக்கு மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. இப்போது மதுவிலக்கு ரத்து செய்திருப்பதால், முன்பு விற்பனை வரி இலாகாவுக்கு மாற்றப்பட்டவர்களை மறுபடியும் இந்தத் துறைக்கு எடுத்துக்கொள்வதால் அவர்களுக்கு உரிய பதவி உயர்வுகள் போன்ற சலுகைகள் கிடைக்க வழியிருக்கும் என்று சொல்லப்படுகிறதே, இப்படிச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வருவாய்த் துறையிலே இன்னும் பணியாளர்கள் கூடுதலாக்கப்பட்டிருக்கிறார்கள். வருவாய்த் துறையின் பணிகள் உரிமங்கள், அனுமதி வழங்குதல், ஏலங்கள் விடுதல், வருவாய் வசூலித்தல் போன்றவை. அந்தத் துறையிலே அந்தப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் அந்தத் துறையிலிருந்து இந்தத் துறைக்கு அழைக்கப்பட வேண்டிய அவசியமில்லையென்று அரசு கருதுகிறது.

## *Lives lost in Indo-Pakistan war*

* 574. Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of fighting personnel from Tamil Nadu who died in the Indo-Pakistan war; and

(b) how much money has been paid to families of such soldiers?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இதுவரை (18—3—1972 வரை) கிடைத்த தகவலின்படி தமிழகத்தைச் சேர்ந்த 107 வீரர்கள் உயிரிழந்தனர்.

(இ) ரூபாய் 4,75,000 இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, உயிரிழந்த நம் வீரர்களுக்கு நம்முடைய அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறது? பணம் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், நிலம் அளித்தல் போன்ற உதவிகள் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உயிரிழந்த வீரர்களின் குடும்பங்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நாம் அறிவித்திருப்பதைப்போல இறந்துபோன படைவீரரின் குடும்பத்திற்கு அல்லது முழுமையாக ஊனமுறும் படைவீரரின் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணத் தொகை 5 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. போர் வீரரின் குடும்பத்திற்கு 3 ஏக்கர் புஞ்சை நிலம் அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை நிலம்—இரண்டில் ஒன்று—இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, நாட்டிற்குப் போரிட்டு வீரத்தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்களுக்கு உதவுவதோடு, எதிர்காலத்தில் அவர்களுடைய சந்ததியினருக்குச் சலுகைகள் அளிக்க ஏதாவது செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பதவியிலிருக்கும் அல்லது படையிலிருந்து விடுவிப்பு பெற்றிருக்கும் படைவீரர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் அளிக்கப்படும் சில சிறப்புச் சலுகைகள்: விடுவிப்பு பெற்றவர்களுக்கு அரசுப் பணிகளில் சேருவதற்கு வயது வரம்பு விதிகள் தளர்த்திக் கொடுப்பது, படைவீரர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை—தொழில் கல்வி பயில்வோருக்கு இலவசக் கல்வி, தொழில் கல்லூரியில் பயில்வோருக்கு இலவசக் கல்வி, மேலும் பள்ளிச் சீருடை, புத்தகங்கள், ஹாஸ்டல் சார்ஜஸ் ஆகியவற்றுக்கான செலவு முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. உயிரிழந்த வீரர்களின் மகள் திருமணத்திற்கு ரூபாய் 1,500 வரை இலவசமாக அளிக்கப்படும். படைவீரர்களின் குழந்தைகள் அரசுப் பணிகளில் சேரும்போது முதன்மையிடம் அளிக்கப்படும். இப்படிப்பட்ட பல சலுகைகளை அரசு அளிக்கிறது.



திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டப்படி, நிலங்களை உயிரிழந்த குடும்பத்தார்களுக்கு அருகாமையிலேயே ஜாரி செய்து கொடுக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்படி நிலங்களுக்கு அருகாமையிலேயே அவர்கள் குடும்பங்கள் இருக்குமானால், 3 ஏக்கர் புஞ்சை அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நஞ்சை என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய குடும்பங்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்கள் இருந்தாலும் அப்படி வழங்கப்படுகின்றன.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த உயிரிழந்த 107 பேரில் எத்தனை பேர் பிற்பட்டவர்கள், எத்தனை பேர் தாழ்த்தப்பட்டவர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாவட்டவாரியாக எண்ணிக்கை இருக்கிறது. பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற கணக்கு இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, இந்தப் போரிலே உயிரிழந்தவர்களுக்கு நம்முடைய மாநிலம்தான் அதிகமான சலுகைகள் வழங்கியிருக்கிறதென்று கூறப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு நான் பார்க்கவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்தியா-பாகிஸ்தான் போரில் இறந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு மத்திய அரசாங்கம் ஏதேனும் உதவி அளித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மத்திய அரசு தனியாக உதவி அளித்திருக்கிறது. அவர்களுக்கு வீரப் பதக்கங்கள், பரமவீரச் சக்கரம், மகாவீரச் சக்கரம், வீரச் சக்கரம் போன்றவை அப்படைவீரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமான பேர் போரில் உயிர் இழந்திருக்கிறார்கள்?

[1972 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட 107 பேரில் அதிகமாக இறந்தவர்கள் 40 பேர் வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

முதல் அமைச்சர் அவர்களின் ரஷியப் பயணம்

*575 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ரஷிய நாட்டிற்கு வருகை தரவேண்டுமென்று அந்நாட்டினர் அழைப்பு விடுத்துள்ளார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். தம்முடைய வசதிப்படி ரஷ்ய நாட்டிற்கு வருகை தருமாறு தமிழக முதல்வரை இந்தியாவில் உள்ள ரஷ்ய நாட்டு தூதர் திரு. பேகாவ் அழைப்பு விடுத்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நமது மாநிலத்தில்தான் அண்மையில் சிறப்பான ஒரு சோஷலிச பட்ஜெட்டை நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். ரஷ்யா போன்ற சோஷலிச நாடுகளுக்கு நேரில் சென்று வருவதன் மூலம், மேலும் நமது கொள்கை வன்மை பெறும் என்ற அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவிலே தம்முடைய சுற்றுப்பயணத்தை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மற்றவர்களைப் பார்த்து நாம் சோஷலிசம் கற்றுக்கொள்ளத் தேவை இல்லை. நம் மண்ணுக்கு ஏற்ப சமதர்ம திட்டங்களை நாம் வகுத்துக் கொள்ளலாம். சோசலிஷ நாடுகளுக்கு நேரில் சென்று அதன் திட்டங்களை அறிந்துகொள்வதன் மூலம், மேலும் நம் கொள்கைக்கு ஆக்கம் அளிக்க உதவியாக இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை முன்னிட்டு நான் சோவியத் ரஷ்யாவுக்குச் செல்வதாக இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எப்போது ரஷ்யாவுக்குப் போக இருக்கிறார்கள்? அதற்கு ஆகும் செலவு என்ன? அந்தச் செலவை அந்த நாட்டு அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா? அல்லது தமிழ்நாட்டு அரசாங்கம்தான் ஏற்க வேண்டுமா?



1972 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் முன்பு ஐரோப்பா கண்டத்திற்கு, அமெரிக்காவுக்குச் சென்றபோது, நான் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதினேன். அவர்கள் செலவிலே அந்த நாடுகளுக்குச் சென்றுவர இசைவுத் தர வேண்டுமென கேட்டிருந்தேன். அதற்கு மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவித்த பதில். இந்த அரசாங்கத்தின் சார்பில் தான்—தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில்தான்—செல்ல வேண்டுமென்றும், அழைக்கின்ற நாடுகளின் செலவிலே செல்லக்கூடாது என்றும், தமிழ்நாடு அரசாங்கம்தான் அந்தச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். இப்படி மத்திய அரசு கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறது. இந்திய அரசு எடுத்திருக்கின்ற முடிவு நமக்கும்—தமிழ் நாட்டிற்கும்—ஏற்புடையதாகும். நான் ரஷியாவுக்குச் செல்ல நேரிட்டால், தமிழ்நாட்டு அரசாங்கத்தின் செலவில்தான் போக வேண்டும். ஆனால் நான் இப்போது வெளி நாடு போவதாக இல்லை.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வெளிநாடு செல்லும்போது நம்முடைய மாநில சுயாட்சியைப்பற்றித் தவறாகப் புரிந்துகொண்டிருப்பவர்களுக்குச் சரியான விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த விளக்கம் உள்நாட்டுக்குத்தான் தேவைப்படுகிறது. வெளி நாட்டுக்குத் தேவைப்படுவதாகத் தெரியவில்லை.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், அவருக்கு இருக்கின்ற பல்வேறு வேலைகளின் காரணமாக, நேரம் இல்லாத காரணத்தால்தான் ரஷிய நாட்டிற்கு செல்லவில்லை. ஆனால் வெளியிலே இருப்பவர்கள் ரஷ்ய நாட்டிற்குச் செல்ல முதலமைச்சர் மறுக்கிறார் என்று குறை கூறுகிறார்கள். ஆகவே, வேலை நெருக்கடி காரணமாகச் செல்லவில்லையா? அல்லது அரசியல் நோக்கம் காரணமாகச் செல்லவில்லையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, போகா விட்டாலும், "ஏன் போகவில்லை" என்கிறார்கள்; போனாலும் "ஏன் போய் வந்தார்" என்கிறார்கள். ஆகவே, பிறர் பேசுவதை, பிறர்

கூறுவதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. சொல்லப்போனால், இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, சுயமரியாதைக் கழக மானாலும் சரி—இவை அந்தக் காலத்திலிருந்தே ரஷ்ய நாட்டிலே பரவியிருக்கிற சமதர்மக் கொள்கையிலே தனியாக ஆர்வம் கொண்டு, அதைத் தமிழகத்திலே எடுத்துச் சொல்கின்ற பணியில் மிக முக்கிய மான பங்கினை வகித்து வந்திருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. ரஷ்ய நாட்டின் மீது எனக்கோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ வெறுப்பு யாருக்கும் இல்லை.

ரஷ்ய நாட்டினர் தன் நாட்டிற்கு வர வேண்டுமென்று என்னை அழைத்திருக்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்னர் "பிராவ்தா" பத்திரிகையின் ஆசிரியர் என்னைச் சந்தித்து, தமிழ்நாட்டில் நடக்கும் ஆட்சியைப்பற்றியும் இன்னும் பல்வேறு விஷயங்களைப்பற்றியும் பேசினோம். அவர் தமிழ்நாட்டு ஆட்சியைப் பாராட்டி, என்னையும் பாராட்டிவிட்டுச் சென்றிருக்கிறார் ரஷ்யா செல்லக்கூடாது என்ற காரணம் எங்களுக்கு இல்லை. வேலைப் பளுவின் காரணமாக இப்போது இயலாது என்றேன். இப்போது இயலாது என்றால், எப்போதும் இயலாது என்று பொருள் அல்ல

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னால்தான் முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று வந்தார். உலகத்திலே இருக்கிற நாடுகளில் அமெரிக்கா முதலாளித்துவ நாடு, ரஷ்யா சோஷலிச நாடு. வேலைப் பளுவின் காரணமாக இப்போது போகவில்லை என்கிறார்கள். சோஷலிச நாட்டுக்குப் போகவில்லையென்றால், கொள்கையின் காரணமாகப் போகவில்லை என்று பிறர் சொல்வார்கள். ஆகவே, முதலாளித்துவ நாடுகளில் தங்கியதைவிட சோஷலிச நாடுகளில் அதிகநாள் தங்கி, அந்த நாடுகளில் சுற்றுப்பயணம் செய்ய முதலமைச்சர் வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலாளித்துவ நாட்டில் அதிகமான நாள் தங்கியதற்குக் காரணம் என்னுடைய கண் நோய்க்கான சிகிச்சை பெறுவதற்கேயாகும். அப்படி இல்லாமல், சோவியத் நாட்டில், ரஷ்யாவில் நீண்டநாள் தங்கி வரலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர்கள்கூட ரஷ்ய நாட்டிற்குப் போய்வந்திருக்



கிறார்கள். அதேபோல் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் அங்கு சென்று அங்கிருக்கின்ற பல நல்ல திட்டங்களைக் கண்டு வந்து நம்முடைய தமிழகத்திலே நிறைவேற்றுகின்ற முறையிலே உடனடி யாக பயணம் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் என்னை ரஷ்யாவிற்கு விரைவிலே அனுப்புவதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வேலைப் பளு குறைந் ததும் அங்கு சென்று வந்து கண்டுவந்ததை நிச்சயம் செய்வேன்.

திரு. என். ராஜாங்கம் : தமிழ்நாடு அரசாங்கம்தான் இதற்கான செலவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்லிவிட்டதால் நம்முடைய அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏன் என்று முதலமைச்சர் அவர்கள் நினைக்கக்கூடாது. நம்முடைய அரசாங்கத்திற்கு நஷ்டம் வருமே என்று நினைப்பார்களானால் அதற்காக நம்முடைய கட்சியிலிருந்து நிதி திரட்டி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம். எனவே இதை ஏற்றுக்கொண்டு சோஷலிஸ நாட்டுக்குச் சென்றுவந்து நல்ல திட்டங்களையெல்லாம் நம்முடைய நாட்டிலேயும் நிறைவேற்றக் கூடிய முறையிலே இதை ஏற்றுக்கொண்டு ரஷ்யாவுக்குச் சென்றுவர நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விருப்பம் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சோஷலிஸ நாடுகளுக்குச் சென்று வரவேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் கொண்டிருக்கிற ஆர்வம் எனக்கும் உண்டு. நாம் சார்ந்திருக்கிற இயக்கத்திற்கும் உண்டு. இயக்கத்தின் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர் களும் ரஷ்ய நாட்டுக்குச் சென்றுவந்தார்கள். ரஷ்ய நாட்டிற்குச் சென்று வந்த அவர்கள்தான் பகுத்தறிவுக் கொள்கைகளையும் சமதர்மக் கொள்கைகளையும் தமிழ் நாட்டிலே முதன்முதலாக எடுத்துச் சொன்னார்கள். எனவே, பெரியார் அவர்களுக்கும் அந்த ஆர்வம் உண்டு. அப்படியிருக்கும்போது இன்றைக்கு நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்த நானோ அல்லது மற்றவர்களோ ரஷ்ய நாட்டிற்குச் செல்வதில் வியப்பொன்றும் இல்லை. சோஷலிஸ நாட்டிற்கு நான் செல்லவில்லை என்ற தவறான கருத்துப் பரவுமாறு யாரும் வழிவகுத்துவிட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேரம் கிடைக்கும்பொழுது போய்வருவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1972 மார்ச் 20

திரு. த. சோனையா: தமிழகத்திலிருந்து முன்னல் இருந்த முதலமைச்சர்கள் ரஷ்யநாட்டிற்குச் சென்று வந்தார்களே அப்பொழுது அவர்கள் எந்தச் செலவில் சென்றுவந்தார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளை எனக்கு அறிவிக்க இயலாது. ஏனென்றால் இந்திய அரசு, வெளிநாடுகளுக்குச் சென்று வருவதற்கான செலவுகளை நம்முடைய அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அண்மையிலேதான் ஆணை பிறப்பித்ததாக எனக்கு நினைவு.

THIRU K. S. KOTHANDARAMIAH: Many foreign countries send invitations to State Chief Ministers, to visit their countries. It is a very good thing. May I know from the Hon. Chief Minister whether they send copies of the invitations to the Central Government?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப் பயணம் நடத்துமாறு நான் ஏற்கெனவே கூறியுள்ளபடி ரஷ்யத் தூதுவர் அழைத்திருக்கிறார், மத்திய அரசிடமிருந்து அப்படி தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

திரு. செ. கந்தப்பன்: தலைவர் அவர்களே, ரஷ்ய நாட்டிலிருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு எப்பொழுது அழைப்பு வந்தது என்பதையும் ரஷ்யாவை ஒட்டி கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் இதுபோன்ற அழைப்பு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பல்வேறு சோஷலிஸ நாடுகளிலிருந்து அண்மையிலே அழைப்பு வந்தது. ரஷ்ய நாட்டுத் தூதுவர் 4—2—1972-ஆம் நாள் என்னை சந்தித்தார். அன்றைக்குத் தான் அழைப்பும் விடுத்தார்.

திரு. கே. கந்தசாமி: அவ்வாறு அழைப்பு வந்திருப்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெருமையாக எடுத்துக்கொண்டு இந்த சோஷலிஸ நாடுகளுக்குச் சென்று அங்குள்ள கருத்துக்களை அதிகமாக தெரிந்துவந்தால் நமக்கு நலமாக இருக்கும் என்பதால் அவர்களுடைய விருப்பம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



1972 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தாமதமாக வந்தார்கள். நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். ஆகவேதான் கேட்டு முடித்த கேள்வியை மீண்டும் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முழுவதற்கும் பெருமை என்று கருதுகிறேன்.

### *Siddha Dispensaries*

* 576 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that more Siddha Dispensaries will be opened by temples in the State shortly; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விவரமான அறிக்கை @ ஒன்று பேரவையின் முன் வைக்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி: நல்ல புகழ்பெற்ற சித்த மருத்துவர்கள் பழனி நகரிலே இருக்கிறார்கள். வெளிமாநிலங்களிலிருந்து எல்லாம் வந்து அங்கே மருத்துவம் செய்துகொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட புகழ்பெற்ற சித்த மருத்துவர்களை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ள ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி சித்த மருத்துவத்திலே தனிச்சிறப்புடைய மருந்துகள் எதுவாக இருந்தாலும் அவை உலகத்திற்கு அறிவிக்கப்படுமானால், சித்த மருத்துவத்திற்காக உள்ள இந்திய மருத்துவத் துறைக்கு அறிவிக்கப் படுமானால் அப்படிப்பட்ட சிறப்புள்ள மருந்து விவரங்களை பி.ஐ.எம். படிப்பவர்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யலாம். ஆனால் பெரும்பாலும் உண்மை அறிவிக்கப்படாத காரணத்தினால், அருமையான மருந்துகள்கூட உலகத்திற்குத் தெரிவதில்லை.

திரு நா. வீராசாமி: இங்கே ஒரு நீண்ட பட்டியல் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆலயங்கள் இப்படிப்பட்ட மருத்துவ மனைகளை

@ 155–157-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[1972 மார்ச் 20

வைக்கவேண்டும் என்றால், எந்த அடிப்படையிலே வருவாய் இருக்க வேண்டுமென்று ஏதாவது விதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு லட்சத்திற்கும் அதிகமான அளவில் வருமானம் வரக்கூடிய ஆலயங்கள் எவையாக இருந்தாலும் கூடுமானவரையில் சித்த மருத்துவமனை ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஏனென்றால் பி.ஐ.எம். மருத்துவத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் நியமிக்கப்படுவதற்கும் மற்ற செலவுகளுக்கும் ஏறத்தாழ 10 ஆயிரம் ரூபாயும், ஆறாயிரம் ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரையில் மருத்துவச் செலவுகளுக்காகவும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே 14 ஆலயங்களில் திறந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 5 ஆலயங்களிலே திறந்திருக்கிறார்கள். மேலும் 20, 25 ஆலயங்களிலே திறக்கவேண்டுமென்ற வேண்டுகோள் இருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, சித்த மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? தேவஸ்தானங்கள் நன்கொடை கொடுத்தால் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவைகள் எவ்வளவு நன்கொடை கொடுக்க வேண்டும்? இந்த நிறுவனங்கள் தயாராக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சித்த மருத்துவக் கல்லூரி ஏற்கெனவே பாளையங்கோட்டையிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்னையிலே ஏற்படுத்த வேண்டுமானால் அதற்குத் தேவையான நிதியைத் தர ஆலயங்கள் முன்வருமானால் அதை அரசாங்கம் ஆலோசிக்கும். இதைப்போன்றே ஆயுர்வேதம், யுனானி ஆகியவற்றிற்கும் கல்லூரி வேண்டுமென்று கூறுகிறார்கள். 5 லட்சம் ரூபாய் நிதி தந்தால் மீதியை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு மூன்று துறைகளுக்கும் கல்லூரிகள் அமைக்க முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அரசாங்கம் தன்னுடைய செலவிலேயே மாவட்ட ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல்களில் சித்த மருத்துவப் பிரிவை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.



1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏற்கெனவே 5, 6 மருத்துவமனைகளிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மேலும் 5, 6 இடங்களிலே சித்த மருத்துவம் விரிவுபடுத்தப்படும்.

## சென்னை அரசுப் பொது மருத்துவ மனை

*577 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசாங்க பொது மருத்துவ மனையினை மேலும் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, எந்தெந்த வகையில் சென்னை அரசாங்க பொது மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சென்னை பொது மருத்துவமனை தலைமை மருத்துவமனையில் சில பகுதிகள் ஏற்கெனவே உயர்த்தப்பட்டிருக்கின்றன. உயர்த்தப்படுவதும் விரிவுபடுத்தப்படுவதும் ஒன்றுதான். "நியூராலஜி, கார்டியாலஜி" பகுதிகளுக்காக ஏற்கெனவே பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு கேன்ஸர், லெப்ரஸி, டி.பி. பெட்ஸ் அமைப்பதற்காக 4 லட்ச ரூபாய் செலவில் வார்டுகள், கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைத்தவிர, சென்ட்ரல் ஜெயில் பகுதியிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளலாமா என்ற ஆலோசனை இருந்தது. ஆனால் அது முழு அளவுக்குச் செம்மையாக நிறைவேறுமா என்ற ஐயப்பாடு இருந்த காரணத்தினால், இந்த விரிவுத் திட்டம் இப்பொழுது கைவிடப்பட்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன்: சார், அரசாங்கப் பொது மருத்துவமனையிலே பிரிவுகளை விரிவுப்படுத்துவதற்கான ஆலோசனைகளைப் பற்றித்தான் அமைச்சர் அவர்கள் சொன்னதாகக் கருதுகிறேன். அங்கே தினசரி நோயாளிகள் படுக்கை அல்லாமல் கீழே படுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்னையைப் போக்க படுக்கைகளை அதிகப்படுத்துவதற்குச் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனையிலே சிறப்புப் பகுதிகளை அதிகப்படுத்தும்போது பொதுப் பகுதியையும் விரிவாக்குவது என்பது இடவசதி காரணமாக இயலாது. தலைமை மருத்துவ மனையிலே சிறப்புப் பகுதிகளை விரிவு படுத்தியிருக்கிறோம். ஸ்பெஷல் பிரான்சஸ் ஆப் மெடிஸனுக்காக விரிவுபடுத்தும்பொழுது பொதுப் பகுதியைப் போதிய அளவுக்கு விரிவுபடுத்த முடியாத காரணத்தினால், மற்ற நோயாளிகளுக்கு வேறு இடங்களிலே சிகிச்சை தருவதற்கு ஏற்பாடுகள் செய்வதுபற்றிக் கவனிக்கலாம்.

மு.ப. 9·30. THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Government think of improving the Nephralgy Department in the General Hospital?

THE HON. THIRU K. ANBAZHAGAN : A proposal is under consideration.

## கோழி வளர்ப்பு

*578 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமங்களில் வேலை வாய்ப்புத் திட்டத்தை அதிகரிக்கக் கட்டாய கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்புத் திட்டத்தை அமுல் செய்ய அரசிடம் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் ஊராட்சிமன்றங்களின் மூலமாக கோழிப்பண்ணை வைக்கவும், பன்றி வளர்க்கவும் அரசாங்கம் உற்சாகம் காட்டியதே, அது தொடர்ந்து செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கோழி வளர்ப்புத் திட்டம், பன்றி வளர்ப்புத் திட்டம் ஆகியவை பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகவும், கால்நடைத் துறையின் மூலமாகவும் கிராமப் பகுதிகளில் பரவலாகச் செய்யப் பட்டு வருகிறது. ஆனால் கேள்வியில் கேட்கப்பட்டிருப்பது கிராமங் களில் வேலை வாய்ப்புத் திட்டத்தை அதிகரிக்கக் கட்டாய கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்புத் திட்டத்தை அமுல் செய்ய அரசிடம்





உத்தேசம் உள்ளதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. கட்டாயம் என்ற வார்த்தை இங்கே இடம்பெற்ற காரணத்தினால் இல்லை என்ற பதில் கிடைத்தது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்பொழுது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் அடிக்கடி பன்றிக்கறி சாப்பிடுங்கள், பன்றிக்கறி சாப்பிடுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அதற்காகவாவது பன்றி வளர்ப்புத் திட்டத்தைக் கட்டாயப்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பன்றி வளர்ப்பதையும் கட்டாயப்படுத்த மாட்டோம், அம்மையார் போன்ற அங்கத்தினர்களைச் சாப்பிட சொல்லியும் கட்டாயப்படுத்த மாட்டோம். ஆனால் பன்றிக்கறி என்பது, வேறு மற்ற வகையான இறைச்சிகளைவிட மருத்துவத் துறையினரால் சிறப்புத் தகுதி யுடையது என்று கருதப்படுகின்ற ஒன்று. எளிதில் செரிக்கும் ஆற்றலையும், ஊட்டச் சத்தில்லாத குழந்தைகளுக்கு ஊட்டம் அளிக்கின்ற வகையில் ஏழை எளியவர்களுக்கு விலை மலிவாகக் கிடைப்பதுமாகும். இந்த நாட்டிலே மாடுகளும் வறண்டுபோய், ஆடுகளும் தேய்ந்து போய் இருக்கும்பொழுது வளப்பமாக இருப்ப தற்கு ஏழை மக்களுக்கு வாய்ப்பாக இருப்பது இந்தப் பன்றி வளர்ப்புத் திட்டந்தான் என்ற முறையில் அரசாங்கம் அக்கறையோடு கவனிக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தக் கொள்கை யிருந்தது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துகின்ற ஆற்றல் அப்பொழுது இல்லை. இப்பொழுது இருக்கும் அரசு இதை நடை முறைப்படுத்துவதிலே தீவிரம் காட்டுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்திற்குத் தேவையான கோழி முட்டைகள் இப்பொழுது நமது மாநிலத்தில் உற்பத்தியாக்கப்படவில்லை. ஆகவே, அந்த நோக்கத்தை மனத்தில் கொண்டு கோழி வளர்ப்பைக் கட்டாயப்படுத்துமா? அப்படிக் கட்டாயப்படுத்துவதற்கில்லை என்றாலும் தீவிரப்படுத்துவதற்காவது அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கடந்த ஓராண்டு காலமாக கோழி வளர்ப்புத் திட்டத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகச் செய்வதற்கு கொல்லைப்புற கோழி வளர்ப்புத் திட்டம் என்று வைத்து பல்வேறு கிராமங்களில் ஏற்றுக்கொள்ளச் செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல் ஆழ்குப்பைக் கோழி வளர்ப்புத் திட்டம் என்ற திட்டம் வைத்து கூண்டிலே குப்பைகளை வைத்து, எருவாக்கும் முறையில் கோழி வளர்க்கும் திட்டமும் நடைபெறுகிறது. இவைகள் தமிழ்நாட்டிலே விரிவாக நடக்கிறது.

இன்றைக்கு ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு 1 லட்சம் முட்டைகள் வரை உற்பத்தியாகும் வண்ணம் ஈரோடு, நாமக்கல், அதேபோன்று தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளில், சேலம் மாவட்டத்தில் சில பகுதிகள், விருதுநகர், கப்பலூர் பகுதிகளில் கோழி வளர்ப்பு செயல் படுகிறது. இப்பொழுது அந்த முட்டைகளை விற்பனை செய்வதற்கு என்ன திட்டம் என்பதைப் பரிசீலித்து, மார்க்கெட்டிங் ஃபெசிலிட்டீஸ் ஏற்படுத்த அந்தத் துறை இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக் கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்பொழுது முட்டைகளை விற்பனை செய்வது எப்படி என்ற பிரச்னை வந்திருக்கிறது என்ற கருத்தைக் கூறினார்கள். கேரளாவிலே முட்டை பவுடர் செய்யும் தொழிற்சாலை இயங்குவதாக நான் அறிகிறேன். ஆகவே அம்மாதிரி ஒரு தொழிற்சாலையை இங்கே அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த நாட்டில் உள்ள நம்முடைய மக்களில், ஆள் ஒருவருக்கு அரை முட்டை வீதம் சராசரியாகக் கிடைக்க வேண்டுமானால், ஏறத்தாழ 700 கோடி முட்டைகளும், அதற்கு மேலும் கிடைக்க வேண்டு மென்றும், ஆனால் அதிலே பத்திலே ஒரு மடங்குதான் இந்த நாட்டிலே கிடைக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. நான் சொல்லுகின்ற இந்தப் புள்ளிவிவரங்களில் சிறு மாறுபாடுகள் இருக்கலாம். ஏனென்றால் அதுபற்றிய முழு விவரக்குறிப்புகள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. பத்திலே ஒரு மடங்குதான் கிடைக்கிறது, இன்னும் பாக்கி 9 மடங்குகள் கிடைக்க வேண்டும். மக்களுக்கு அதைப் பயன்படுத்துகின்ற சக்தி வளர வேண்டும், பழக்கத்தையொட்டி மக்களின் தேவை உணர்வும் வளர வேண்டும். வேறு வீண்விரயங்களில் செலவிடுகின்ற மக்கள் இதை நல்ல உணவு என்ற அடிப்படையில் நாளும் பயன்படுத்துகின்ற பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஆகவே இப்பொழுது முட்டையை மாவாக்கி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க வேண்டிய அவசியமில்லை. உள் நாட்டிலேயே மக்களை முட்டைகளைச் சாப்பிடுவதிலே பழக்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமாகும்.



திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் கோழி வளர்ப்பிற்காகக் கட்டப்பட்ட சில கட்டிடங்கள் இன்றைக்குப் பயன் படுத்தப்படாமல் பாழடைந்த நிலையிலே இருக்கின்றன. அப்படிப் பட்ட கட்டிடங்களை மாற்றுத் தொழில் ஏதாவது செய்ய வேண்டு மென்று விரும்பினால், அந்தக் கட்டிடங்களைத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, மாற்றுத் தொழிலுக்கு அந்தக் கட்டிடங்களைப் பயன்படுத்துவது நோக்க மல்ல. கோழி வளர்ப்புத் திட்டத்தில் அந்தக் கட்டிடங்களை எடுத்து நடத்தத் தனியார் எவரேனும் பொறுப்பேற்க வந்தால் டெண்டர் மூலம் கொடுப்பதற்கு அரசு கூறியிருக்கிறது. அந்த ஏற்பாடுகளை இனிதான் செய்ய வேண்டும்.

திரு. இ. ராமசாமி: தலைவரவர்களே, பன்றிக்கறி சாப்பிடுவதால் ஏற்படும் உடல் வலிவையும், நன்மைகளையும்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த நாட்டு மக்களுக்கு அதில் விளம்பரம் தர வேண்டும். அப்படி விளம்பரம் தருவதற்கு எம்.எல்.ஏ.-க்களுக்கு ஒரு நாள் அரசாங்கச் சார்பிலே விருந்தளித்து நல்ல விளம்பரத்தைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இன்றையதினம் பத்து அல்லது இருபது இடங்களில் "போர்க் கிளப்" ஏற்படுத்தி, அந்தக் கிளப்புகளில் பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தலைவராகவும், துணைத் தலைவராகவும் இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்து கொண்டு இத்தகைய விருந்துகளை நடத்துகிறார்கள். அப்படி இனிமேல் நடத்தப்படும் விருந்துகளில் எம்.எல்.ஏ-க்களையும் அழைக்கும்படி அரசாங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்வேன்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, காங்கிரஸ் அரசாங் கம் இருந்த காலத்தில் பிளாக் டெவலெப்மெண்ட் ஆபீஸ் மூலமாகக் குடும்பத்திற்கு ஒரு கோழி, இரண்டு கோழி என்று அளிக்கப்பட்டு, அப்படிக் கொடுத்த அடுத்த நாளே அதைப் பிரியாணி செய்து சாப்பிட்டுவிட்டார்கள். ஆகவே, கோழி அபிவிருத்தித் திட்டத்தை உண்மையாக அமல் நடத்த வேண்டுமானால், 100 அல்லது 200 கோழிகளைக் குறைந்த விலைக்கு, சப்ஸிடி கொடுத்து விருத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கோழி வளர்ப்புத் திட்டத்தில் இன்றைக்கு ஓரளவு நல்ல லாபம் வரும் முறையில் அந்தத் தொழிலை நடத்துவதற்கு வசதியாக அரசாங்கத்தின் துறைகள் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் அந்த வளர்ப்புத் தீனி முதலியவைகள் இப்பொழுது தரப்படுகிறது. ஆகவே சப்சிடி தேவையில்லை. ஆனால் ஈரோட்டிலும் மற்றப் பகுதிகளிலேயும் இதில் ஈடுபட்டிருப்பவர்கள் மார்க்கெட்டிங் ஃபெசிலிட்டி தான், விற்பனை வசதிதான் கேட்கிறார்கள். அதை அரசாங்கம் செய்துவிட்டால் இந்தத் துறையிலே இன்னும் தீவிரமாக ஈடுபட முன்வருவார்கள்.

## மாயூரம் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் குடியிருப்புகள்

*579 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சியில் பணிபுரியும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதுபோன்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் நகராட்சிப் பகுதியில் அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு இதற்கு முன் அங்கே 60,000 ரூபாய் கடனாகவும், மானியமாகவும் தமிழக அரசு வழங்கியிருக்கிறது. ஆனால் இன்னும் சரியாக இடம் கிடைக்கவில்லை என்று மாயூரம் நகராட்சியில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு மாயூரம் நகராட்சியில், குறிப்பாக கலைஞர் கருணாநிதி காலனியிலாவது இந்தக் குடியிருப்பு வசதிகளை உருவாக்கித் தர மாயூரம் நகராட்சிக்கு அரசு ஆலோசனை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் உரிய இடத்தை ஆங்காங்கேயிருக்கும் நகராட்சிமன்றங்கள் தேர்ந்தெடுத்துக் கொடுக்க வேண்டும். அப்படிப் பலமுறை மாயூரம் நகராட்சியில்





நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர்கள் இடம் கிடைக்கவில்லை என்ற சாக்கைச் சொல்லி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப்போல் கருணாநிதி நகரில் அவர்களுக்கு இடம் கிடைக்கும், அதைக் கொடுப்பதற்கு நகராட்சி மன்றம் தயாராகயிருந்தால், மாண்புமிகு உறுப்பினரவர்கள் நகராட்சியிடம் சொல்லி வாங்கித் தந்தால் விரைவில் வீடு கட்டும் திட்டத்தைச் செயல்படுத்த முடியும்.

திரு. கே. ஆர். கிருஷ்ணன்: தலைவரவர்களே, ஏற்கனவே நிலம் கையகப்படுத்தப்பட்டும் நீண்ட காலமாக வீடுகள் கட்டாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதை நிவர்த்திக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, நிலம் கையகப்படுத்தி வீடு கட்டாமல் இருப்பது பெரும்பாலும் அரிசன மக்களுக்கு அரசாங்கமே நிலம் எடுத்துக் கொடுக்கும் திட்டத்தின் மூலம்தான் இருக்க முடியும். இந்தக் கேள்வி மாயூரம் நகராட்சியின் பணிபுரியும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது. ஆகவே இந்தத் திட்டத்தின் அடிப்படையில் பெரும்பாலான இடங்களில் நிலம் கிடைக்காமல் தாமதம் ஆகிறது. நிலம் கிடைப்பது மிகவும் அரிது. காரணம், அந்த நகராட்சியின் எல்லைக்குள்ளேயே இருக்க வேண்டுமென்ற அரசின் கருத்தும் அனுப்பப்படுகிறது.

## மேலப்பாளையம் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*580 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், மேலப்பாளையத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருக்க போதுமான வீட்டுமனை இல்லை என்பது உண்மையா?

(இ) அதற்காக நிலம் கையகப்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

[1972 மார்ச் 20

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) கரூர் வட்டம் மேலப்பாளையம் கிராமத்தில் உள்ள 87 அரிசனங்களுக்கு வீட்டு வசதி அளிக்க மேலப்பாளையம் கிராமத்தில் சர்வே எண் 727-ல் 5.02 ஏக்கர் பரப்பளவுள்ள புன்செய் பட்டா நிலங்களை நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 4 (1) முன் மொழிவு அறிவிப்பு வரைவு சமூக நலத்துறையின் 18—1—72 நாளிட்ட 76-ம் எண் அரசு ஆணையில் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் பாகம் 11, பிரிவு 1, பக்கம் 72, நாள் 2—2—72-ல் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 விளம்பரம் இன்னும் வரவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த வீட்டுமனைக்காகக் கையகப்படுத்துகிற பணி பல ஆண்டுகளாக தாமதமாக நடந்து வருகிறது. ஆகவே இதைத் துரிதப்படுத்த அரசு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: நிலம் கொடுப்பவர்கள் விரைவில் ஒப்புதல் கொடுப்பார்களேயானால், தாமதமில்லாமல் செயல்படுத்திவிட முடியும். பெரும்பாலான இடங்களில் நிலம் கொடுப்பதில் எதிர்ப்பு கொடுக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் வழக்குமன்றம் செல்கிறார்கள். எனவே தாமதம் ஏற்படுகிறது. இதில், வழக்குமன்றம் செல்லவில்லை என்றாலும் பல எதிர்ப்புகள் இருந்ததால் முறைப்படி செய்யவேண்டியிருந்தது. அதனால் தாமதம். அதைத் தவிர்க்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*Supply of essential commodities*

*581 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Food and Revenue be plrased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to constitute any cell for the supply of essential commodities to consumers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) "தமிழ்நாடு உணவு வழங்கல் கழகம்" (Tamil Nadu Civil Supplies Corporation Limited) என்ற பெயரில் அரசுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனம் விலையை நிலைப்படுத்துவதற்காக, அவ்வப்போது



1972 மார்ச் 20]

நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கக்கூடிய நெல், அரிசி மற்றும் பிற இன்றியமையாப் பொருள்களை வெளிச்சந்தையில் கொள்முதல்—விற்பனை செய்தல் உட்பட வாணிகம் செய்தலை மேற்கொள்ளும்.

திரு. என். டென்னிஸ்: கூட்டுறவு விற்பனைக் கடைகளிலும் தேவைக்கேற்ப அத்தியாவசியப் பொருள்கள் கிடைப்பதில்லையென்பதால் இவைகளின் விலைகள் உயர்ந்துகொண்டே செல்கிறது. ஆகவே விலைவாசியைக் குறைப்பதற்காக இவைகளை விற்பனை செய்வதில் அரசாங்கமே நேரடி வினியோக முறையை வகித்து செயல்படுத்துமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விலைவாசியைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வெளிச் சந்தையில் இருப்பதை வாங்கி லாபம் நஷ்டம் இல்லாத வகையில் மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, will the Government think of issuing family cards to the families who earn less than Rs. 500 per month so that all the essential commodities for a month could be supplied to them?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் அனைவருக்கும் குடும்பக் கார்ட் வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விற்பனை கோடவுன்ஸ் பற்றிச் சொன்னார்கள். அதேபோல் அறுவடை காலங்களில் விவசாயிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு அறுவடைப் பொருள்களை அரசாங்கமே கொள்முதல் செய்வது அல்லது கடனுதவி 50 சத வீதம் அல்லது 75 சத வீதம் ஆஃப் தி போட்டல் காஸ்ட் கடனுதவி குறைந்த வட்டியில் கொடுத்து கோடவுன்ஸில் வைத்து பிறகு அவர்களுக்கு வேண்டும்போது டிஸ்ட்ரிப்யூட் செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அறுவடைக் காலங்களில் பொது மக்களுக்கு என்ன தேவை என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று புரியவில்லை. அறுவடை காலங்களில் கிடைக்கக்கூடிய பொருள்களை அரசாங்கமே விலைக்கு வாங்கி வைத்து லீன் பீரியேட்களில், அறுவடை இல்லாத காலங்களில் விநியோகிக்க அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

[1972 மார்ச் 20

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது அரிசியை அரசாங்கம் விநியோகம் செய்வதுபோல் சாதாரணமாக மற்ற உணவுப் பண்டங்களையும் அவைகளின் விலைகள் திடீர் திடீரென்று ஏறிப் போகின்ற காரணத்தினால், வாங்கி அவற்றின் விலைகளைக் கண்ட்ரோல் செய்து அரசாங்கமே அவற்றையும் விநியோகம் செய்வதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விலைவாசி ஏறுகிறது, விலைவாசி ஏறுகிறது என்று சொல்வது வாடிக்கையாகிவிட்டது. விலைவாசிகள் இப்போது குறைந்துக் கொண்டிருக்கிற நிலையில் உறுப்பினர்கள் இப்படிச் சொல்லக்கூடாது. விலைகள் ஏறாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்கும். வணிகக் கழகம் மூலம் பொருள்களை வாங்கி வைத்து விற்க வசதியாக இருக்கும்.

* 582 வினா—திரு. சி. மணலி கந்தசாமி : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உணவு தானிய வர்த்தகத்தை அரசு மேற்கொண்டு கூட்டுறவு அமைப்புகளின் மூலம் விநியோகிக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அத்தகைய செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய விருப்பமாயிருந்து, அவை திறம்படச் செயலாற்றுமானால், இயங்கக் கூடிய நேர்வுகளில், அரசு மேற்கொள்கின்ற அளவுக்குக் கொள்முதல், பங்கீட்டுப் பணிகளைச் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : கிராமங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப்பொருள்களுக்கு நியாயவிலை நிர்ணயம் செய்து சிவில் சப்ளைஸ் இலாகா மூலமாகவாவது விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கம் நெல் போன்ற பொருள்களுக்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயித்திருக்கிறது. வெளிச் சந்தையில் வாங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனால் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். அதே நேரத்தில் வாங்கிய பொருள்களை மீண்டும் வழங்குவதற்கு இந்தக் கார்ப்பரேஷன் மூலம் திரும்ப வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.



1972 மார்ச் 20]

திரு. சோ. அழகர்சாமி : விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதாகவும், விலை நிர்ணயம் செய்திருப்பதாகவும் கூறினார்கள். விவசாயிகளிடம் கொள்முதல் செய்கிற விலைக்கும் மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய விலைக்கும் இடைவெளி மிகவும் அதிகமாக இருக்கிறது. உணவுத் தானியங்கள் பூராவையும் அவை மார்க்கெட்டுக்கு வரும்போதே அரசாங்கமே அவற்றையெல்லாம் வாங்கி கொஞ்சம் லாபம் வைத்து மக்களுக்கு விநியோகம் செய்யக்கூடிய ஒரு ஏற்பாட்டினைச் செய்தால் மக்களுக்கு உணவு தானியங்கள் மலிவான விலைக்கு கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே மார்க்கெட்டுக்கு வரும் எல்லா உணவு தானியங்களையும் அரசாங்கமே கொள்முதல் செய்து நியாயமான விலைக்கு அவை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாம் துவக்கியிருக்கிற கார்ப்பரேஷன் கொள்கை அதுதான். அறுவடைக் காலங்களில் அதை வாங்கிவைத்து—லாபம் வைத்தல்ல—லாப நஷ்டமில்லாத முறையில் அரசாங்கம் விநியோகிக்க ஏற்பாடு செய்கிறோம். இது துவக்க காலமாதலால் வெளிச் சந்தையில் இப்போது நெல் மட்டும் வாங்குவது என்று முடிவு எடுத்திருக்கிறோம். தொடர்ந்து வரக் கூடிய காலங்களில் இதை விரிவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. இ. ராமசாமி : வால்பாறைத் தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் அரிசியை தனிப்பட்ட நபர்களிடமிருந்து தான் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, விற்கப்படும் விலை சற்று ஏற்றமாகயிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த கூட்டுறவு ஸ்டோர் மூலமாக அரிசி சப்ளை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாடு எல்லையோரத்தில் உள்ள இடங்களில் எல்லாம் ஐந்து மைல் பெல்ட் ஏரியாவிற்கு உட்பட்ட இடங்களில் எல்லாம் பங்கீட்டுக் கார்ட் மூலம் அரிசி விநியோகிக்கப்படும். அங்கெல்லாம் அரிசி விநியோகம் நிர்ணயம் செய்வது என்பது மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவரது அனுமதி பேரில் நிர்ணயம் செய்யப்படுவதால் இப்படிப்பட்ட தவறான காரியங்கள் இனிமேல் நடக்காது என்று நான் நம்புகிறேன்.

திரு. கா. காளிமுத்து : உணவு தானிய வர்த்தகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று தேசிய அபிவிருத்திக் குழுவில் ஏதாவது ஆலோசனை செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்குச் செல்கிறவர்கள் முதல் அமைச்சர் அவர்கள். அவரைத்தான் கேட்கவேண்டும். அப்படி ஒன்றும் இந்த அரசுக்குத் தகவல் இல்லே. அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்ற கொள்கை முழு அளவிற்கு இப்போது ஏற்றுக்கொள்ளவில்லே.

*Quarters for staff of Industrial Training Centres.*

* 583 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that there are no adequate quarters for the staff in Industrial Training Centres?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லே. தமிழ் நாட்டில் உள்ள 31 தொழிற்பயிற்சி நிலேயங்களில் 22 நிலேயங்களில் பணியாற்று வோருக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன கிண்டி மற்றும் வட சென்னேயில் உள்ள நிலேயங்கட்கும், சென்னே மகளிர் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கும் சென்னே நகர் எல்லேக்குள் உள்ள படியால் தனியே குடியிருப்புகள் கட்ட வேண்டுவதில்லே என்று தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 6 நிலேயங்கட்கு ஊழியர் குடியிருப்புகள் கட்டும் யோசனே நிதி நிலேமை இடங்கொடுக்கும் பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

வேலே வாய்ப்பின்மை குறித்த வல்லுநர் குழு

*584 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடையளிப் பாரா—

தமிழ் நாட்டில் உள்ள வேலேவாய்ப்பு நிலேமைகளே ஆராய்ந்து ஆவன செய்ய நிபுணர் குழு ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனேயிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலேவாய்ப்பின்மை குறித்த ஆய்வு செய்ய வல்லுநர் குழு ஒன்றைத் தொழிலாளர் நலத் துறையின் 17—9—71 நாளிட்ட 1175-ஆம் எண் ஆணேயில் அரசு அமைத்துள்ளது. மேற்படி ஆணேயின் நகல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 154–157-ம் பக்கங்களில் இரண்டாம் இணேப்பாக அச்சிடப் பட்டுள்ளது.





திரு. என். கிட்டப்பா: தலேவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள வேலேவாய்ப்பின்மைக்கு முக்கிய காரணம் மத்திய அரசு மேற் கொள்ளும் கொள்கைகள் என்று நம்பப்படுவதால், இந்தக் குழு அதற்கேற்றவாறு பரிந்துரை செய்ய முன்வராவிடில் நம் அரசு அது பற்றி மேற்கொள்ளவிருக்கும் கொள்கையினே அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏராளமான தொழிற்சாலேகள் நாட்டில் பெருக்கப்படவேண்டுமென்று பொருளாதார அடிப் படையில் மத்திய அரசு கொள்கைகளே வகுக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிரேம். இந்த வேலேயில்லாத் திண்டாட்டத்தைப் பரிசீலிப்பதற்கு அகில இந்திய அடிப்படையில் மத்திய அரசு ஒரு குழு அமைத்துள்ளது. அந்தக் குழுவிற்கு ஆலோசனே கூறி ஒத்துழைப்பு தருவதற்கு நம் மாநில சார்பில் நான் முன்னர் குறிப்பிட்டபடி ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

THIRU K. M SUBRAMANIAM: Sir, in this Committee are there only officials or are there public men who are deeply involved in this sort of unemployment problem?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அகில இந்தியக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். அலுவலர்களும் இருக்கிருர்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் தலேவராக இருக்கிருர். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் அரசுக்கு உதவி செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் காரணத்தால், அலுவலர்கள் மட்டுமே இந்தக் குழுவில் நியமிக்கப் பட்டிருக்கிருர்கள்.

ஊராட்சிகளிலுள்ள சாலேகள்

*585 விஞ—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடை யளிப்பாரா—

பஞ்சாயத்தினுல் பராமரிக்க முடியாத ரோடுகளே (பஸ் போக்குவரத்து மார்க்கம்) அரசாங்கம் ஹைவேஸ் மூலம் பராமரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. சு. துரைசாமி: அமைச்சர் அவர்கள் "ஆம்" என்று சொன்னுர்கள். எவ்வளவு ஆண்டுக் காலத்தில் அந்தப் பாதைகளே எல்லாம் அரசாங்கப் பாதைகளாக மாற்றும் செயற்குறிப்பு இருக்கிறது?

[1972 மார்ச் 20

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பஸ் போக்குவரத்து மார்க்கத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் சாலைகளில் ஆயிரம் மைல்களை அரசு இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறது. மொத்தம் 3,000 மைல் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். மூன்றாண்டுக் காலத்திற்குள்ளாக இந்தச் சாலைகள் முழுவதையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கு. அ. பொம்மன் : இந்தத் தடங்களை எடுத்துக் கொள்வது எந்தெந்த மாவட்டங்களில் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்தெந்த மாவட்டங்களில் என்ற விவரம் இல்லை. இப்படி எடுத்துக்கொள்ளும் போது டி.டி.சி.-ல் பிரையாரிடி கொடுத்து சிபாரிசு செய்வது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு அரசாங்கத்திற்குத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆயிரம் மைல்களை எடுத்துக் கொள்வது என்று சொல்லுவதற்குப் பதிலாக ஒன்றியத்தினுடைய சாலைகளிலே எங்கெங்கு பஸ்கள் ஓடுகின்றனவோ, அவைகளை எல்லாம் எடுத்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைத்தான் சொன்னேன். ஒன்றியத்தில் பஸ் ஓடுகின்ற சாலைகளை எடுத்துக் கொள்வது என்று கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் மொத்தம் மூவாயிரம் மைல்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு ஆயிரம் மைல்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எம். இராசகோபால் : ஒன்றியத்திலுள்ள பஸ் பாதைகளை எடுத்துக்கொள்ள நீண்ட நெடுங்காலம் ஆகிறது. அதை எடுத்துக் கொள்கிற வரையில், பஸ் மூலம் வருகிற டாக்ஸை ஒன்றியத்திற்குக் கொடுத்து அவர்கள் அதைப் பராமரிப்பதற்கு வழி செய்வார்களா?



1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சொல்ல முடியும். கேள்வி அரசாங்கம் அந்தச் சாலைகளை எடுத்துக் கொள்வது பற்றி. அரசாங்கத்தின் வருமானத்தில் பங்கு கேட்பது பற்றித் தனியாகக் கேட்க வேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பஸ் போகும் பாதைகளை மட்டும் அரசு ஆயிரம் மைல்கள் எடுத்துக் கொள்ளப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பஸ் ரூட்டுகள் இல்லாமல் இருக்கும் பாதைகளைப் பற்றியும் மனத்தில் கருதி முக்கியமான பொதுப் பாதைகளை அரசு எடுத்துக் கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதற்காகத்தான் இணைப்புச் சாலைகளுக்கென்று தனியாக ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. டி.டி.சி. கூட்டத்தில் தீர்மானம் போட்டு அனுப்பிய தற்கேற்ப அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

## தமிழ்நாட்டில் இணைப்புச் சாலைகள்

*586 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971–72ல் தமிழகத்தில் விவசாய விளை பொருட்கள் எடுத்துச் செல்லும் இணைப்புச் சாலைகள் அமைத்திட மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சியுள்ள மூன்று ஆண்டுக்கால அளவில் ரூ. 1.50 கோடி நிதி உதவி வரம்புக்குள், மத்திய அரசுத் துறையின் கீழ் தமிழ் நாட்டில் காவிரிப்பாசனப் பகுதியில் (தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆற்காடு மாவட்டங்கள்) அங்காடிகளையும் இணைப்புச் சாலைகளையும் ஏற்படுத்துவதை முக்கியமாகக் கொண்ட பகுதி வளர்ச்சித் திட்டம் ஒன்றுக்கு இந்திய அரசு ஏற்பளித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிக அதிகமான விளைபொருள்களை உற்பத்தி செய்து தருகின்ற தஞ்சை மாவட்டத்திற்கு இத்தகைய இணைப்புச் சாலைகளை அதிகமாக ஆக்கித் தர அரசு ஆலோசனை செய்ய முன்வருமா?

[1972 மார்ச் 20

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அரசு சார்பாக 3½ கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு அனுப்பினோம். மத்திய அரசாங்கத்திலிருந்து 1½ கோடி ரூபாய்க்குள் திட்டம் போட்டு அனுப்புமாறு தெரிவித்திருக்கிறார்கள். அந்த 1½ கோடி ரூபாய்க்கு இப்போது திட்டம் போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தத் திட்டத்தின்படி பாலங்கள் கட்டுவது, சாலைகள் போடுவது என்று மதிப்பீடு செய்த பிறகு பாலங்களைக் கட்ட வேண்டாமென்று மாநில அரசோ மத்திய அரசோ சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே குறிப்பிட்டது போல் நம்முடைய அரசின் மூலமாக 1½ கோடி ரூபாய்க்கு 122 இணைப்புச் சாலைகளையும், 9 அங்காடிகளையும் இணைக்கும் வகையில் திட்டமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பிற்று. மத்திய அரசு 1½ கோடி ரூபாய்க்கு மட்டுமே திட்டமிட வேண்டுமென்று குறிப்பிட்டதன் காரணமாகச் சில திட்டங்களைக் கைவிட நேரிட்டது.

## தேசிய நெடுஞ்சாலைகள்

*587 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையின் (National Highways) இரு மருங்கிலும் நிழல் தரும் மரங்களை உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் இருமருங்கிலும் நிழல் தரும் மரங்களை நடும் அவசியத்தைக் கருதி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பும்படி அரசு தலைமைப் பொறியாளர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பி. எஸ். மணியன் : இத்தகைய நெடுஞ்சாலையில் தற்போது திருச்சியிலிருந்து மதுரைக்கு திண்டுக்கல் வழியாக இருக்கும் தூரம் 100 மைல்; திருச்சியிலிருந்து மேலூர் வழியாக மதுரைக்கு இருக்கும் தூரம் 85 மைல். 15 மைல் தூரம் குறைவாக இருக்கின்ற மேலூர் சாலையைச் செப்பனிட்டு தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க அரசு ஆவன செய்யுமா ?



1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்கும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்படும். அவர்கள் ஒப்புக்கொண்டால் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்கப்படும்.

## ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலம்.

*588 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாரூர்–விஜயபுரத்தில் உள்ள "ஓடம் போக்கி" ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது திருவாரூரில் மிக அதிகமான போக்குவரத்து ஏற்பட்டிருக்கும் காரணத்தால் இனிமேலாவது அந்த "ஓடம்போக்கி" ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தை அகலப்படுத்தி அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற அந்த இடத்தில் அப்ரோச் ரோடு 20 அடி அகலந்தான் இருக்கிறது. மேற்கொண்டு அகலப்படுத்த சாத்தியம் இல்லை. இரு மருங்கிலும் கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை அப்புறப்படுத்த வேண்டும். ஆகவே, தற்போது அந்தப் பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் கிடையாது.

## கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர்

*566 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிக்கு தலைவர் நியமிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

## *Tapioca Package Scheme at Killiyoor*

*290 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there was any misappropriation in the Tapioca Package Scheme case in Killiyoor about 1969-70; and

(*b*) the stage at which the matter stands now?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ் . எவ்வளவு ரூபாய்க்குக் கையாடல் நடந்திருக்கிறது? மூன்று ஆண்டு காலமாகியும் இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலேயே இருப்பதற்குக் காரணம் என்ன? காலதாமதத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்கள் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள செலவினங்களில் கையாடல் நடந்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்தக் கையாடல் வழக்கில் சம்பந்தப்படாத ஒரு சிலரும் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதிலே சம்பந்தம் இல்லாதவர்களையும் ஸ்டேட்மென்ட் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சம்பந்தம் இல்லாதவர்களா இல்லையா என்பதைப் பற்றி நீதிபதி தீர்ப்புக்கூறவேண்டுமே தவிர, சம்பந்தம் உண்டு, இல்லை என்று நாம் இப்போது சொல்லுவதற்கில்லை.

## டிராக்டர்கள் விற்பனை.

* 291 வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டிலிருந்து தமிழ்நாடு விவசாய முன்னேற்றத்திற்கு அரசு சார்பில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலம் வரவழைத்து கொடுக்கும் வெளிநாட்டு டிராக்டர்களை வாங்குபவர்கள் அதிக லாபத்திற்கு வெளி மாநிலத்திற்கு விற்பனை செய்வது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?





மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) இம்மாதிரியான தவறுகள் செய்பவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிவகை செய்யுமாறு தமிழ்நாடு வேளாண்மை—தொழில் கழகம் கேட்டுக்கொண்டதன் விளைவாகவும், உள் நாட்டு/வெளிநாட்டு உழுவைகளைத் தேவையான குடியானவர்களுக்கு நியாயமான முறையில் சமமாகப் பகிர்ந்தளிக்கும் நோக்குடனும் "உழுவை (வழங்குதல் மற்றும் விற்பனை) கட்டுப்பாட்டு ஆணை" ஒன்றினை மைய அரசு சமீபத்தில் பிறப்பித்துள்ளனர். இவ்வாணையின் கீழ் எந்த ஒரு நபரும் தான் வாங்கிய உழுவையை அவர் வாங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியின் "எழுதிய முன் அனுமதியின்றி" விற்கக்கூடாது. இச்சட்டத்தை மீறுபவருடைய உழுவை பறிமுதல் செய்யப்படுவதோடு அவர்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் மேற்படி ஆணையில் வகை செய்யப்பட்டுள்ளது.

## *Agricultural Information Workshop*

*202 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any Agricultural Information Workshop was conducted by the Agriculture Department on or about 26th April 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) சென்னையில் விவசாய செய்தி விளம்பர ஆய்வுக் கூட்டம் 25—4—1970 முதல் 27—4—1970 வரை நடைபெற்றது.

## திருப்பூர் மின் நிலையம்.

* 589 வினா...திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மின்சார நிலையத்தை 110 K.V. சக்தி கொண்ட மின்சார நிலையமாக மாற்றும் வேலை எப்போது முடிவு பெறும் ? மு.ப. 10·00.

மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் : அடுத்த ஆண்டுக்குள் இவ்வேலை முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அடுத்த ஆண்டுக்குள் முடிவடையும் என்று சொன்னார்கள். திருப்பூர் நகரத்தில் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்போது இருக்கும் சக்தி 66 கேவி வாட்ஸ்தான் இருக்கிறது. சக்தி குறைவாக இருப்பதால், அடிக்கடி தொழிற்சாலைகளில் வேலை தாமதமாகிறது. இதனால் உற்பத்திக் குறைவு ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட தொழிற்கூடங்கள் இருக்கிற காரணத்தால் 1 ஆண்டுக்குள் வேலை முடியுமென்றிருப்பதை, அதிக ஆட்கள் வேலைக்கு வைத்து 6 மாதத்திற்குள் செய்து முடிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அரசு அப்படிக் கருதிய காரணத்தால்தான் அங்கே பெரிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய சாதனங்கள் கொண்டு வருவதற்கு வேண்டிய ரயில்வே வாகன்கள் கிடைப்பதில் கஷ்டமாக இருக்கிறது. கூடியவிரைவில் செய்து முடிக்க முயற்சிக்கப்படும்.

பள்ளிக்கொண்டா ஊராட்சிக்கருகில் விபத்து.

* 590 வினா : திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 31—10—1971 அன்று காலையில் சென்னை—பங்களூர் நெடுஞ்சாலையில் பள்ளிக்கொண்டா பஞ்சாயத்திற்கருகில் வாகன மோதலால் அடிபட்டு இறந்த ஒருவரின் சடலம் கிடந்தது உண்மையா?

(இ) ஆம் எனில், மோதிவிட்டு ஓடிவிட்ட நபர் (Hit and Run) யாரென கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு .எம். ஏ. லத்தீப் : இப்படி மோதி விட்டு ஓடிப்போன நபர் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா? செத்தவர் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே. பெரியப்பக்கவுண்டர் மகன் கணேசன் என்பவர் அப்படி மோதி ஓடி





விட்ட லாரியாலோ, மற்ற வாகனத்தாலோ இறந்து விட்டார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மோதிவிட்டு ஓடிப்போன வாகனம் எவ்வளவோ முயற்சி செய்தும் இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருந்து வருகிறது.

திரு. எம். ஏ. லத்திப் : இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டில் பல இடங்களில் நடந்து வருகின்றன. இப்படி சென்ற ஆண்டு மோதிவிட்டு ஓடிவிட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? அதைக் குறைப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? இரவு நேரங்களில் லாரி ஓட்டுபவர்கள் மிகவும் வேகமாக ஓட்டுவதால் இப்படி நடக்கிறது. இதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கடந்த ஆண்டு எத்தனை பேர் இறந்தார்கள் என்ற கணக்கு இல்லை. ஆனால் பொதுவாக இரவு நேரங்களில் இதைப்போன்று மோதிவிட்டு ஓடிப்போகிறவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை அளிப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். மோதிவிட்டுச் சென்ற வண்டிகளின் டயர்களின் பதிவுகளை போட்டோ எடுப்பதன் மூலமும், கண்ணாடித் துண்டுகள் சிதறி இருந்தால் அவைகளைச் சேகரித்து போரன்சிக் லாபரேடரிக்கு அனுப்பி சோதனை செய்து, அந்தமாதிரி வண்டிகள் எங்காவது இருக்கிறதா என்று வண்டிகள் நிற்குமிடங்களில் சோதனையிட்டும், காவல்துறையினர் இதைக் கண்டுபிடிக்க முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். அந்த முறை ஓரளவுக்கு வெற்றிகரமாக நடந்து வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த போரன்சிக் லாபரேடரியில் எத்தனை கேஸ்களில் இம்மாதிரியாக டயர்கள் பதிவு எடுப்பதன் மூலம், கண்ணாடித் துண்டுகளைப் பரிசோதிப் பதன் மூலம் துப்பு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றிச் சொன்னேன். அந்த விவரம் இல்லை.

[1972 மார்ச் 20

பேருந்துகளில் அறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள்

*591 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நாட்டுடைமையாக்கப்பட்ட எல்லாப் பேருந்துகளிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளைப் பொறித்திட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஏதாவது தகராறு ஏற்பட்டு விட்டால் உடனடியாக நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் மீது தான் கண் விழுந்து கல் எறிவதையும் சேதப் படுத்தப்படுவதையும் பார்க்கிறோம். எனவே, அந்த நிலைமைகளை மனதில்கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்கிற பொன்மொழியை ஒவ்வொரு பேருந்திலும் பொறிக்க அரசு ஆவன செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இன்று இருக்கும் சூழ் நிலையில் அது மிகவும் பொருத்தமான யோசனைதான். ஆனால் இப்போது எதையும் தாங்கும் உடம்பு தேவைப்படுகிறது (சிரிப்பு).

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படிப்பட்ட பேருந்துகளில் மகாத்மா காந்தி அவர்களின் பொன்மொழிகளை எழுத இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொருத்தமாக இருந்தால் யோசிக்கலாம்.

திரு. நா. வீராசாமி : இப்போது அண்ணா அவர்களின் பொன் மொழிகளை எழுதுகிற செயற்குறிப்பு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சில வழித்தடங்களில் பெரம்பூர், எண்ணூர் போன்ற வழித் தடங்களில் போகின்ற பஸ்களிலாவது; "கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு" என்ற வாசகம் எழுதுவதற்கு அரசு முன் வருமா? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை மிகவும் பொருத்தமானது தான். கத்தியைத் தீட்டுவது ஆத்திரத்தின் அறிகுறி, புத்தியைத் தீட்டுவது அறிவின் அறிகுறி.



1972 மார்ச் 20]

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, பஸ்களில் இப்படி வாசகங்கள் எழுதுவது டிரைவர்களுக்கா, கண்டக்டர்களுக்கா, அல்லது பயணிகளுக்கா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லோருக்கும் தான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பல அரசுப் பேருந்து களில் திருவள்ளுவர் படம் சரியாக இருப்பதில்லை. சில பஸ்களில் திருக்குறள் சரியாக இருப்பது இல்லை. அதைச் சரியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குறிப்பிட்ட குறைகள் ஏதேனும் இருக்குமானால், தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

அரசுப்பேருந்துகளில் பெண்களுக்கு இடங்கள்

*592 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு ஆன இடத்தினை முதற்பகுதியில் ஒதுக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, ஆண்களும் பெண்களும் சமம் என்று போராட்டக்குரல் எழுப்பும் இந்த நாட் களில் ஆண்களுக்கு என்று தனி இடமும், பெண்களுக்கு என்று தனி இடமும், இருப்பது பெண்களை அவமானப்படுத்துவது போல் இருக் கிறது. இந்த முறையை ஒழித்துவிட்டு, எல்லோரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எல்லோரும் சமம் என்ற நிலை தான் என்று இருந்தாலும் இரு வேறு உலகத்து இயற்கை என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். (சிரிப்பு)

[1972 மார்ச் 20

திருமதி த. ந. அனந்தநாயகி: பெண்களை விட ஆண்கள் உயர்ந்தவர்கள் என்பதை அரசு அறியுமா? ஆகவே, பெண்களுக்கு பாதி இடம் பஸ்ஸில் ஒதுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பெண்களுக்கு பாதியிடமல்ல. முக்கால் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பெண்களுக்கு பாதியிடம் பஸ்ஸிலே மட்டுமல்ல, பரமசிவனே ஒதுக்கி இருக்கிறார் (சிரிப்பு).

THIRU K. M. SUBRAMANIAM : Sir, if space is reserved exclusively for ladies like this, what will happen to persons travelling with their family, husband, wife and children? And have they to separate themselves or can they sit together in the other places?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பஸ்ஸிலே போகும்போதாவது பிரிந்து இருக்கலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, சக்திக்கு இடது பக்கமும் சிவனுக்கு வலது பக்கமும் இடம் ஒதுக்கியது போல், அரசாங்க பஸ்ஸிலும் இடது பக்கம் பெண்களுக்கும், வலது பக்கம் ஆண்களுக்கும் இடம் ஒதுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசாங்க பஸ்ஸில் இப்போது அந்த முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, ஆண்டவனே பெண்ணைத் தலையில் வைத்துக்கொண்டிருந்தார் என்று புராணம் கூறுகிறது. எனவே தலையாய இடத்தை இந்தப் பேருந்துகளில் அம்மையார்களுக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பஸ்ஸிற்குத் தலை கேரியர் தான்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, நகரப்பேருந்துகளில் நின்றுகொண்டு பயணம் செய்வோர் தொகை எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா? இப்போது மிகவும் நெரிசலாக இருக்கிறதே, அதற்கு ஒரு வரைமுறைப்படுத்த முடியாதா?



1972 மார்ச் 20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அவையுரிமைப் பிரச்னை.

## அவை உறுப்பினர்கள் பற்றி தரக்குறைவாக "நாத்திகம்" நாளிதழில் வெளியிடப்பட்டது குறித்து

MR. SPEAKER : Under rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, the hon. Member, Thiru Sowdi S. Sundara Bharathi has given notice of a matter of breach of privilege against the Newspaper, 'NATHIGAM'. I gave my consent to the Hon. Member to raise the matter.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Mr. Speaker, Sir, I wish to raise a matter of breach of privilege against the Tamil Daily 'NATHIGAM' which has in its issue, dated 11th March 1972 published an article criticising the hon. Member Thiru K. Kandasamy for his speech in this House.

MR. SPEAKER : Under rule 188, I have to read the matter to the House and decide whether *prima facie* there is breach of privilege. The matter is as follows :—

"Under rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I wish to raise a matter of privilege against the Editor and publisher of the daily paper "Nathigam".

During the course of General Debate on the Budget in the Assembly on 8th March 1972 the hon. Member, Thiru K. Kandaswamy has referred to—

"அன்று இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எங்களது பெருந் தலைவர் தேவர் அவர்களை வெளியில் விடுவதற்கு முன்னால் ஸ்லோ பாய்சன் என்று சொல்லக்கூடிய, உடனே கொல்லாமல் நாளடைவில் கொல்லக்கூடிய ஸ்லோ பாய்சனைக் கொடுத்து அவரைக் கொல்ல சதி செய்தார்கள்."

[Mr. Speaker] [1972 மார்ச் 20

The paper "Nathigam" in its Madras issue, dated 10th March 1972 has in an editorial commented on the Member's speech **as follows :—**

"முத்துராமலிங்கத் தேவருக்கு கொஞ்சம் கொஞ்சமாக விஷம் கொடுத்து கொல்ல சதி செய்தவர் காமராஜ்" என்று ஒரு கழிசடை, பாதுகாப்பான இடத்தில் இருக்கிறோம் என்ற தைரியத்தில் பேசுகிறது.

The Member has been referred to as "*கழிசடை*" with reference to his speech made in the Assembly. Further he has been referred to—

"*ஆனால் இந்த தரங்கெட்டதுகளின் சின்னத்தனமான பேச்சுக்களால் நாமும் எழுதவேண்டியிருக்கிறது.*"

"*அந்த தேவரின் வாரிசுகள் என்று தங்களை அறிமுகம் செய்து கொள்ளுகிற அற்பர்கள்.*"

"மக்களை ஏமாற்ற புறப்பட்டிருக்கும் நவீன கோமாளிகள்."

"வடிகட்டிய மடையர்கள் இன்று தேவரைக் கொல்ல காமராஜ் சதி செய்தார்கள் என்று சட்ட சபையில் பேசுகிற கோமாளிகள்."

"கோமாளிகள் சட்ட சபையில் இடம் கிடைத்தவுடன் தங்களை பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக்கொண்டு காமராஜ் சதி செய்தார் என்கிறார்கள்."

"......சூழ்நிலை என்றைக்கும் தமிழ் நாட்டில் இருந்ததில்லை என்பதை இந்த மனிதாபிமானமற்ற மூடர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்."

**By way of reference to the Assembly proceedings the editoral** states--

"*......காமராஜ் ஒன்றரைக் கோடி ரூபாய் பாங்கியில் போட்டு வைத்திருக்கிறார் என்று ஒரு கிறுக்கன் பேசுவதும், அதற்கு, சட்ட சபைக்குள்ளே கில்லாடித்தனம் செய்வதாக நினைத்துக்கொண்டு, இன்னொரு கிருக்கன், அப்படி போஸ்டர் ஒட்டியிருந்தது என்று வியாக்கியானம் செய்வதும், சாதாரண அரசியல் அறிவு உள்ளவர்களும் சிரிக்கும்படியான கோமாளிக் கூத்தே தவிர, இந்த அநாகரீகப் பேர்வளிகளின் வார்த்தைக்கு . . .*"



1972 மார்ச் 20] [Mr. Speaker]

"*கொஞ்சமும் படிப்பு வாசனை, கல்வியறிவு இல்லாத இந்த மூடர்களை நம்பி......*"

"சாக்கடைத்தனமான பேச்சுகளா" **Thus the conduct of the Member in the Assembly has been referred to as** "*கழிசடை*" "தரங்கெட்டது" "அற்பர்கள்" "நவீன கோமாளிகள்" "வடிகட்டிய மடையர்கள்" "கோமாளிகள்" "மூடர்கள்" "கிறுக்கன்"

"*கிறுக்கன்*" and the proceedings of the House has been commented "*சின்னத்தனமான* பேச்சு" and "கோமாளிக் கூத்தே". The words are scandalous libels on the conduct of the Mrmber and **the House.**

Absolute privilege has been given to the Member in respect of anything said or any vote given in the Legislature or a Committee so that Members may not be afraid to speak out their minds and freely express their views. The editorial is a deliberate and scandalous statement which lowers the image and prestige of the Member in the eyes of the public. It is also a refirction on the conduct and character of the Member as a Member of the House and also a reflection on the proceedings of the House. It is calculated to deter the Member from performing his duties as Member of the Legislature.

Reflections upon Members, the particular individuals not being named or otherwise indicated are equivalent to reflections on the House.

Thus the editor of the paper and author of the article have committed gross breach of privilege of the Member and of this House and they are liable to be proceeded against under the rules of this Legislative Assembly.

The hon. Member has enclosed a copy of the editorial of Nathigam', dated 10th March 1972. Under Rule 188 I have to read the matter to the House and decide whether *prima facie* there is breach of privilege. From the matter I have read, it is evident that the matter stated above is a reflection on the conduct of a Member of the House. I, therefore, hold that *prima facie* there is breach of privilege.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Mr. Speaker, Sir, under Rule 189 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move—

'That the matter of privilege against the Tamil Daily 'Nathigam' be referred to the Committee of Privileges.'

The motion was duly seconded.

The motion was put and carried and the matter was referred to the Committee of Privileges.

## (3) 1972-73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

### (அ) நிதிக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள்—

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, "ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் * என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,41,23,00-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட கால அளவுக்குள் வீடில்லாத எல்லா அரிசனக் குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க திட்டமிட வேண்டுமென்று விவாதிக்க, கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரணையை பிரேரேபிக்கிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள், அரிசனங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,41,23,400-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

---

* ......-ம் பக்கங்களில் அரிசன நலத்துறை மானியக் கொள்கை விளக்க குறிப்பு 3-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



THIRU J. JAMES: Sir, I move the following cut motion to discuss about the necessity to allot more teachers to the tribal schools at Pechiparai and Pattukany in Kanyakumari District—

**'That the allotment of Rs. 8,41,23,400 under Demand** No. 25—Welfare of the Scheduled Tribes and Castes, etc.—be reduced by Rs. 100.'

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு இரண்டு மானியங்கள் இருக்கின்றன. அவைகளைத் தனித்தனியாக எடுத்துக் கொள்ளலாமா, ஒன்றாக எடுத்துக் கொள்ளலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தனித் தனியாக எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனித் தனியாக எடுத்துக் கொண்டால் சௌகரியமாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். 10-15 மணியிலிருந்து 12-15 மணி வரை இந்த மான்யத்தின் மீது விவாதம் வைத்துக் கொள்ளலாம். மிச்சம் இருக்கிற நேரத்தில் பின்தங்கிய வகுப்பினர் நலன் பற்றிய மானியத்தை விவாதிக்கலாம்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த மானியத்தை 12 மணிக்கு முடித்துவிடலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 12 மணிக்கும் 12-15 மணிக்கும் அதிக வித்தியாசம் இல்லை. உறுப்பினர்கள் கொஞ்சம் நேரத்தைக் குறைத்துக் கொண்டால் உங்கள் விருப்பம் கூட நிறைவேறும். வேண்டுமானால் உங்கள் மான்ய விவாதத்தை 2½ மணி வரையில் கூட வைத்துக்கொள்ளலாம். அந்த வகையிலே இப்பொழுது இந்த பழங்குடி மக்கள், அரிசனங்கள் பற்றிய மான்யம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். 10-15 மணியிலிருந்து 12-15 மணி வரையில் இந்த விவாதம் நடைபெறும். பிறகு அடுத்த மானியத்திற்குச் செல்லலாம். ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 நிமிடங்கள்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, இந்த அரிசனங்கள் பற்றிய மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. என். மருதாசலம்] [1972 மார்ச் 20

இந்த மானியத்தின் கீழ் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். சென்ற வருஷம் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த வருஷம் ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், அரிசன மக்களுக்கு அது ஒழுங்காகப் போய்ச் சேரவில்லை. அரிசன மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் ஒழுங்காகப் போய்ச் சேருவதில்லை என்பதை முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். அந்த முறையை ஒழுங்கு படுத்த வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 10, 12 வீடுகள் கட்டிக் கொடுக்கப் படுகின்றன. அப்படிக் கட்டினதால் காங்கிரஸ் அரசாங்கம் இருந்த வரையிலும் வீட்டுப் பிரச்னை தீரவேயில்லை. வீட்டுப் பிரச்னை தீர வேண்டுமென்றால், அரசு மாவட்டம்தோறும் வீடு இல்லாத அரிசனங்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு சர்வே செய்ய வேண்டும். வீடற்ற அரிசனங்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டு, திட்டமிட்ட முறையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் அவ்வளவு பேருக்கும் வீடுகள் கிடைக்கும்படி ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

பல இடங்களிலே அரிசனம்கள் வீட்டு மனைக்கு என்று மனுக் கொடுத்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட மனுக்கள் கோட்டைக்கும் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களுக்கும் போய்க் கொண்டு இருக்கின்றனவே தவிர காரியங்கள் முறையாக நடைபெறவில்லை. எங்கேயும் வீடற்ற அரிசனங்களுக்கு என்று நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கோவையிலும், தொண்டாமுத்தூர் பகுதியிலும் உள்ள அரிசனங்களுக்கு என்று நிலங்கள் ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டு இருக்கின்றார்கள். இது வரையில் ஒன்றும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு என்று நிலத்தை ஆர்ஜிதம் செய்து பட்டா செய்து கொடுக்க வேண்டும்.

அடுத்து, இன்று அரிசனங்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையிலிருக்கிறது. குறிச்சி கிராமத்திலே ஒரு அரிஜனத் தோழரை "தண்ணீர் மடக்கிக்கொண்டுவா நிலத்திற்கு" என்று அனுப்பினால் அங்கே வேலாயுதம் சேர்வை தோட்டத்தில் அவரை அடித்துக் கொன்று விட்டார்கள். இதுபற்றி மேல் மட்டத்திலுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரையில் நடவடிக்கை இல்லை. காரணம் அவர் பெரும் பணக்காரர். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இப்படி பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது.



1972 மார்ச் 20] [திரு. என். மருதாசலம்]

அடுத்து, அரிசனங்கள் உள்ள பகுதிகளில் தீண்டாமை போய் விட்டதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். "தீண்டாமை ஒழிப்பு வாரம்" என்று நாம் கொண்டாடுகிறோம். ஆனால் தீண்டாமை சிறிதும் ஒழியவில்லை.

கல்வியினைப் பொருத்த வரையில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள தொகையோ ஸ்தானங்களோ முறையாக அவர்களுக்குக் கிடைப்பது கிடையாது. கல்லூரிகளில் இடமும் சரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் சரி, 18 சதவிகிதம் அவர்களுக்கு என்று ஒதுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இது முறையாகச் செயல்படுத்தப்படவில்லை. பஞ்சாயத்து அல்லது நகராட்சி பள்ளிகளில் ஆசிரியர்கள் வேலைகள் இருக்கின்றன என்று இவர்கள் மனுப்போட்டால் கிடைப்பது இல்லை. விண்ணப்பித்துக்கொள்ளும் அரிசனத் தோழருடைய பொருளாதாரம் நன்றாக இருந்தால்தான் கிடைக்கிறது. இந்த நிலைகளையெல்லாம் பரிசீலிப்பதற்கு என்று முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவினுடைய அறிக்கை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்த அறிக்கையினுடைய நகல்களை ஒவ்வொரு அங்கத்தினருக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

இன்றைக்கு ஒவ்வொரு இடத்திலும் அரிஜனங்களுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவை பரிசீலிக்கப்பட வேண்டும். கோவை நகரசபையில் உள்ள பள்ளிகளுக்கு என்று சென்ற வாரம் 10, 12 பேர் ஆசிரியர்கள் மற்றும் பல வேலைகளுக்கு இன்டர்வ்யூ வைத்துத் தெரிந்தெடுத்தார்கள். அதில் எவ்வளவு பேர் அரிசனங்கள் என்று ஒன்றும் தெரியவில்லை. அரிசனங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமானால் அவர்களிடம் 500, 1,000 ரூபாய் என்று இருந்தால் தான், முடிகிறது. பஞ்சாயத்து யூனியனாலும் சரி நகரசபையாலும் சரி, இந்த நிலைமைதான் இருக்கிறது. இந்த விஷயம்பற்றி எழுதிக் கொடு என்று சொன்னார் பாதிக்கப்பட்டவர்கள் எழுதிக் கொடுக்கப் பயப்படுகிறார்கள். இந்த நிலைமை மாறி திட்டவட்டமாக 18 சதவிகிதம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டே ஆக வேண்டும். இதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு என்று அரிசனங்களைக் கொண்ட ஒரு கமிட்டியைப் போட்டு இந்த வேலை கொடுக்கும் விஷயத்தை முறைப் படுத்தியாக வேண்டும்.

அடுத்து அரிசன நல இலாகாவில் உள்ள அதிகாரிகளும் சரி மற்ற அலுவலர்களும் சரி—தலைமைச் செயலகத்திலிருந்து மாவட்ட அளவில் உள்ள இந்தத் துறையின் இலாகாக்களை எடுத்துக்

கொண்டால் அநேகமாக பிராமணர்களும், ஜாதி இந்துக்களும்தான் இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்கள் முறையாகச் செயல்படவில்லை என்று தான் சொல்லுகிறேன். இதை மாற்ற அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து சேலத்தில் கடந்த 50 வருஷமாக சில இடங்களிலே அரிசனங்கள் குடியிருந்து வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு இது வரையில் அந்த இடங்களைப் பட்டா செய்து கொடுக்காமல் இப்போது அவர்களைத் திடீரென்று வெளியேற்றுகின்றார்கள். இது போலவே தெலுங்கு பாளையத்தில் ஒரு சில குறைபாடுகள் நடந்திருக்கின்றன. அங்கே உள்ள போலீஸ் நிலையத்திலும் அதிகாரிகள் மத்தியிலும் ஆளும் கட்சியினருடைய தலையீடு இருக்கின்றது என்பதைச் சொல்லித்தான் தீர வேண்டியிருக்கிறது. உள்ளதைச் சொல்லுகிறேன். நேரடியாக இதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அரிசனம்கள் முன்னேற முடியும்.

அடுத்து, தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு ஊரில் ஒரு அரிசனப் பெண்ணுடைய கணவனை வீட்டிலிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று விசாரிக்கிறேன் என்று சொல்லி கடைசியில் அந்தப் பெண்ணுடைய கணவனை போலீஸ் ஸ்டேஷனிலேயே கொன்றுவிட்டதாக வதந்தி இருக்கிறது. இப்படி ஒரு அரிசன் செத்திருந்தால் அவர்கள் எப்படிப்பட்ட பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றார்கள் என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளலாம். எனவே அரிசனங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், அவர்களுக்காக உள்ள சட்டங்கள் கண்டிப்பாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கு இணங்கி, அமருகின்றேன்.

திரு. சு. ம. துரைராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73 ஆம் ஆண்டிற்கான அரிசன மானியக் கோரிக்கையின் மீது நடைபெறும் விவாதத்தில் பேசும் வாய்ப்பினை அளித்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த மானியத்தில் தாழ்த்தப்பட்டவர்களுடைய கல்விக்கு என்று ரூ. 562.31 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மான்யத்தின் கீழ் உள்ள மொத்த தொகையே ரூ. 841.23 லட்சம் ஆகும். இதில்





கல்விக்கு என்று ரூ. 562.31 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு மிச்சம் இருப்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது. எனவே அரிசன இலாக்காக்களின் கீழ் உள்ள பள்ளிகளை அரசே மேற்கொண்டுவிட்டால் அந்தத் தொகையும் அரிசன மக்களுடைய தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கு மற்றும் வேண்டியதைச் செலவிட வழிசெய்ய முடியும்.

அடுத்து, வேளாண்மையினைப் பொறுத்த மட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிரம்பச் சலுகைகள் கொடுப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலே சொல்லப் போனால் குறிப்பிடத் தக்க அளவிற்கு நிலமற்ற அரிசனங்கள் அல்லது தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் அளிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

என் தொகுதியில், திருவள்ளூர் தொகுதியில் ஒரு கிராமத்தில் பட்டரைபொம்பத்தூர் அருகில் உள்ள கிராமத்தில் ஒரு இராணுவ வீரருக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவர் அதற்கு ஏராளமான பணத்தினைச் செலவழித்து வளப்படுத்தியிருந்தார். சமீபத்தில் அவர் இறந்துவிட்டார். அந்த ஏழை விதவை அந்த நிலத்தைப் பயிரிட்டுக் கொண்டு இருந்தாள். இப்போது திடீரென்று அந்த நிலத்தை எடுத்து பி.டபிள்யூ.டி. இலாகாவில் வேலை செய்கின்ற ஒருவருக்கு பட்டா போட்டுக் கொடுத்திருக்கின்றார்கள். அவர் அந்த நிலத்தில் கிணறு வெட்ட வேண்டும் என்று சென்ட்ரல் பாங்கியிலிருந்து நாலாயிரம் ரூபாய் கடனும் பெற்றிருக்கின்றார். உண்மையிலேயே அங்கே கிணறும் வெட்டப்படவில்லை. எப்படி இப்படிப்பட்ட கடனைக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இதை யெல்லாம் அரிசன நல இலாகா அமைச்சர் அவர்கள் பரிசீலித்து நல்ல தீர்ப்பினை அளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து அரிசனங்களுக்கு நிலம் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு நிலம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அங்கு 300 மைலுக்குமேல் டெல்ட் ஏரியா இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருந்தும் அந்த பகுதி மக்களுக்கு நிலம் கிடைக்காமல் கவலைப்படுகிறார்கள். அதை அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மு. ப. 10.30.

அடுத்து, அரிசனங்களுக்கு குடிநீர் கிணறுகளுக்கு என்று மானியம் ஒதுக்கப்படுகிறது. எங்கள் பகுதியான வேப்பம்பட்டி மிகவும் வறட்சியான பகுதி. கோடைக்காலங்களில் தண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இனி வருகின்ற கோடைக் காலத்திற்குள்ளாவது குடிநீர் கிணறுகளை வெட்டி, தண்ணீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊரின் நிலைமையைப் பார்க்கும்போது ஒரு கதை கூட ஞாபகத்திற்கு வருகிறது.

அங்கே இருக்கிற பெண்களை யாரும் திருமணம் செய்துகொள்ள விரும்புவது இல்லை. பெண்கள் நிலை இப்படி என்றால், அங்குள்ள ஆண்களுக்கும் யாரும் பெண் கொடுப்பதில்லை. காரணம் என்ன வென்றால், அங்கிருக்கும் பெண்கள் தண்ணீருக்காக இரண்டு மைல் தூரம் தலையில் பானையை சுமந்துபோய், தண்ணீர் கொண்டுவர வேண்டும். அதனால் அவர்கள் தலையில் உள்ள முடியெல்லாம் கொட்டிப்போய், தலை வழுக்கையாக இருக்கிறது இந்த மிக முக்கியமான குறைபாட்டை நீக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக ஒரு மைல் தொலைவில் உள்ள ஆற்றில் ஓவர்டேங் கட்டி அதன் மூலமாகத் தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு அரிசனங்களுக்கு நல்ல உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த அரசாங்கம் அரிசன இலாகாவில் அரிசன அதிகாரிகளை நியமிக்கிறார்கள். ஆனால் அவர்கள் அரிசனங்களுக்கு உதவி செய்வதே கிடையாது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மிக விரும்பி, வேண்டிக் கொள்கிறேன், இந்தத் துறையில் அரிசன அதிகாரிகளைப் போட வேண்டாமென்று.

குறிப்பாக இப்போது மாணவர்களுக்கு நல்ல முறையில் நீங்கள் ஸ்காலர்ஷிப் பணம் ஒதுக்குகிறீர்கள். மத்திய அரசாங்கம் கொடுக்காமல் இருந்தபோதிலும் மாநில அரசாங்கம் பணம் கொடுக்கிறது. அந்த நல்ல மனது படைத்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்படாமல் சில மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மதுரை மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவனுக்கு ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்படாததால், அந்த மாணவனை





வீட்டுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதிகாரிகள் அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்போது 15,600 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டாலும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் நிறையபேர் இன்றைக்குப் படித்து வருகிறார்கள். ஒரு மாணவர் இன்றைக்கு சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் 3-வது ஆண்டு படித்து வருகிறான். அவன் அரிசன கிறிஸ்தவ மாணவன். இப்போது அவனுக்கு "ஷோ காஸ்" நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள், ஏன் உன்மீது நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று. அந்த மாணவன் தாசில்தார் இடத்தில் பிற்பட்ட மாணவன் என்று சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்திருக்கிறான். அதனால் ஸ்காலர்ஷிப் எல்லாம் பெற்று 3-வது ஆண்டாகப் படித்து வருகிறார். அவர் ஒரு கிறிஸ்துவ அரிசன மாணவர் என்பதற்காக இப்போது அவன்மீது நடவடிக்கை எடுப்பதற்கு "ஷோ காஸ்" நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதே மருத்துவக் கல்லூரியில் பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்று சர்டிபிகேட் கொடுத்து, நான்காவது வருடமாகப் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அரிசன கிறிஸ்தவ மாணவன் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் அரிசன கிறிஸ்தவ மாணவன் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்று சர்டிபிகேட் கொடுத்து படித்துவரும் பிராமண வகுப்பைச் சேர்ந்த மாணவன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த பிராமண வகுப்பைச் சேர்ந்த மாணவன் யார், எந்த வகுப்பில் படிக்கிறான் என்பன போன்ற முழு விபரத்தையும் கொடுப்பாரானால் அதுபற்றி தக்க

நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த விபரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சு. ம. துரைராஜ்: நாளை அந்த விபரங்களைச் சமர்ப்பிக்கத் தயாராய் இருக்கிறேன்.

அடுத்து, தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்றும், அதற்கு தக்க முறையில் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கும் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் சிறுவாக்கம் பகுதியில் தீண்டாமை தாண்டவமாடுவதை நாம் பார்க்கலாம். அந்தப் பகுதியில் அரிசனங்கள் காலில் செருப்பு அணிந்து செல்லக் கூடாது. அங்கே அவர்கள் உட்காரக் கூடாது. அரிசனங்கள் வீடு கட்டுவதானால், உயர் ஜாதியினர் அனுமதி இல்லாமல் கட்டக் கூடாது. அவர்கள் வீடு கட்டும்போது திண்ணை இல்லாமல் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி இருந்தால் தீண்டாமை எப்படி ஒழியும்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அம்பேத்கார்தான் நமது அரசியல் சட்டத்தைத் தயாரித்தவர். இருந்தபோதிலும் 1956-ல் என்று நினைக்கிறேன். அவர் அமைச்சராக இருந்த நேரத்தில் இந்தச் சட்டத்தை எரிக்க வேண்டும் என்று கூறினார்கள். இந்தக் கருத்தை மத்திய அரசாங்கத்திற்கு நமது அரசாங்கம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

அடுத்து, ஐ.நா. சபையில் பாகிஸ்தான் பிரதிநிதி இங்குள்ள பிற்பட்ட மக்களைப்பற்றிக் கூறியிருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதாவது, வங்காளத்தில் பாகிஸ்தான் படையெடுத்த போது, நியாயமான காரணத்திற்காக இந்தியா வங்காளதேசத்திற்கு ஆதரவளித்து, அந்த மக்களைக் காப்பாற்றியது. ஆனால் அதே நேரத்தில் இந்தியாவிலே இருக்கின்ற பல கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போதிய உரிமைகள் வழங்கப்படாமல், அவர்கள் நசுக்கப்பட்டு வருகிறார்கள். அந்த மக்கள் தங்கள் உரிமைக்காகக் கிளர்ச்சி செய்யும்போது நாங்கள் உதவி செய்வோம் என்று பாகிஸ்தான் பிரதிநிதி ஐ.நா. சபையில் கூறியிருக்கிறார். இந்தச் செய்தியை மத்திய அரசாங்கத்திற்கு நமது மாநில அரசாங்கம் தெரிவித்து, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள் காக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





நமக்கு மாநில சுயாட்சி இருந்தால் மத்திய அரசாங்கத்தைக் கேட்காமலேயே தாழ்த்தப்பட்ட மக்களின் நலனைக் காக்க நடவடிக்கை எடுக்கலாம். இப்போது மத்திய அரசாங்கத்தின் தயவை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. எனவே, இந்த அரசாங்கத்தின் மாநில சுயாட்சிக் கொள்கையை வரவேற்று, இந்த அரசாங்கத்தின் மாநில சுயாட்சிக் கொள்கையை வரவேற்று, இந்த மானியத்தை ஆதரித்து, எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டு அரிசனத் துறை மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வருவாய் கூடியிருந்த போதிலும் கூட, அந்த அளவுக்குப் பலன்பெற, அரிசனத் துறைக்கு கூடுதலாக நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே கூற விரும்புகிறேன். உதாரணமாக அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற வகையில் கழிந்த ஆண்டு 5.72 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு 4.12 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்று கழிந்த ஆண்டை எடுத்துக் கொண்டால் 1970–71-ல் 8,136 அரிசன மாணவர்கள் கல்விச் சலுகையில் பயன்பெற்றார்கள். ஆனால் 1971–72-ல் 6,806 மாணவர்கள் தான் பயன்பெற்றிருக்கிறார்கள் என்ற விபரம் இந்த அறிக்கையில் இருக்கிறது. ஆக இந்த அரசில் அரிசன மாணவர்களுக்குச் சலுகைகள் குறைந்து கொண்டே வருகிறதாகத்தான் தோன்றுகிறது.

அடுத்து மலைஜாதி வகுப்பினரை எடுத்துக் கொண்டால், 1970–71-ல் 1,004 மாணவர்கள் பயன்பெற்றார்கள். 1971–72-ல் 583 மாணவர்கள்தான் பயன் பெற்றிருக்கிறார்கள். ஆக பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருவதை இந்த அறிக்கை மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதேபோன்று மலைஜாதி வகுப்பைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கூட கல்லூரியில் படிக்கவில்லை என்றால் அது மிகவும் வருந்தத் தக்க செய்தியாகும். மலைஜாதி வகுப்பினருக்குக் காட்டுகின்ற ஆதரவை ஒட்டித்தான் அவர்கள் முன்னேற முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 மார்ச் 20

அடுத்தபடியாக, முக்கியமான பிரச்சினை ஒன்றை இங்கே கூற விரும்புகிறேன். மதம் மாறிய அரிசனங்களுக்கும், மற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும். மதம் மாறிவிட்டான் என்ற குற்றத்திற்காக அந்த மாணவருக்கு அளிக்கப்படும் சலுகை நிறுத்தப்படக் கூடாது. மதம் மாறிவிட்டதால் அந்த மாணவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறிவிடவில்லை. மற்ற பிற்பட்ட—அரிசன மக்களின் நிலையிலேதான் இருக்கிறார்கள். ஒருவேளை இந்த நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்ட காலத்தில் அவர்களுக்குச் சில சலுகைகள் கொடுத்திருக்கலாம், அவர்கள் பெற்றிருக்கலாம். ஆனால் இப்போது அவர்கள் நிலை மிகவும் மோசமாகத்தான் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, மதம் மாறிய ஒரே காரணத்திற்காக அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாகக் கருதுவது சரியாகாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது நாடு ஒரு செக்குலர் ஸ்டேட்—மதச்சார்பற்ற நாடு. அந்த அடிப்படையிலே எந்தக் காரணத்தைக் கொண்டும் மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கு இந்து அரிசன மாணவர்களுக்கு வழங்குகின்ற சலுகைகள் மறுக்கப்படக் கூடாது என்று கூறிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மலைவாசி மக்களைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய மாவட்டத்தில் காணிகாரர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். திருவிதாங்கூர்-கொச்சியில் ஒரு பகுதியாக கன்னியாகுமரி ஜில்லா இருந்தபோது அவர்களது குடும்பங்கள் ஒவ்வொன்றும் 15 ஏக்கரா நிலம் வைத்து விவசாயம் செய்யலாம் என்ற விதிமுறை இருந்தது. ஆனால் இன்றையதினம் அந்த அளவுக்கு அவர்களுக்கு நிலம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருந்து வருகிறது. அதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு எந்தவிதமான வசதியும் இதுவரையிலும் செய்து கொடுக்கப்படவில்லை. உடனடியாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்குப் பணம், விவசாயம் செய்வதற்கும் நிலம் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு அவர்களுக்குப் பேச்சிப்பாறை என்கிற இடத்தில் பிரம்புத் தொழிற்சாலை இருந்தது. அதை மூடிவிட்டார்கள். தொழில் பயிற்சி பெறுவதற்கு நிரம்ப இளைஞர்கள் இருக்கிறார்கள். தொழில்



1972 மார்ச் 20] [திரு. ஜே. ஜேம்ஸ்]

செய்வதற்கும் மூலப் பொருள்கள் ஏராளம் அங்கே கிடைக்கின்றன. ஆகவே மீண்டும் அங்கே பிரம்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கும், பல இளைஞர்களுக்கு அந்தத் தொழிலில் பயிற்சி கொடுப்பதற்கும் இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மலைசாதி வகுப்பினர்களுக்காக 3 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. பேச்சிப்பாறையில் உள்ள பள்ளிக்கூடத்தில் 8-வது வகுப்பு வரைதான் இருக்கிறது. மூன்று ஆசிரியர்கள்தான் இருக்கிறார்கள். அதனால் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆசிரியர்களை அதிகப்படுத்த வேண்டுமென்று இலாக்காவில் இருந்தே அரசாங்கத்தின் அனுமதிக்கு எழுதியிருக்கிறார்கள். இதுவரை அனுமதி வழங்கியதாகத் தெரியவில்லை. உடனடியாக அதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக திருவிதாங்கூர்-கொச்சியில் அந்தப் பகுதி இருந்தபோது காடுகளில் வாழ்கிற மலைவாசி மக்கள் லைசென்சு இல்லாமல் துப்பாக்கி வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டிருந்தார்கள். பாகிஸ்தான் யுத்தத்தின்போது அருகில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் லைசென்சு இல்லாமல் துப்பாக்கி வைத்துக் கொண்டிருப்பவர்கள் அவற்றை சரண்டர் செய்ய வேண்டும் என்று சொன்னதால் அவர்கள் சரண்டர் செய்துவிட்டார்கள். இப்போது மீண்டும் அவற்றைக் கேட்கிறபோது அவர்கள் அவற்றுக்கு லைசென்சு வாங்க வேண்டும் என்கிறார்கள். இது சரியல்ல. முன்பு அவர்கள் அனுபவித்து வந்த சலுகைப்படியே அவர்கள் லைசென்சு இல்லாமல் துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குலசேகரத்தில் குறவர்களுக்காக ஒரு கூட்டுறவு சங்கம் இருந்தது. அது இப்போது செயலற்று இருக்கிறது. குறவர்களுக்குத் தொழில் செய்வதற்கும் வசதி இல்லை. ஆகவே அந்தக் குறவர் கூட்டுறவுச் சங்கத்தைப் புதுப்பித்து, அவர்கள் தொழில் செய்வதற்குத் தேவையான பொருளுதவி கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அரிசன நலத்துறை மானியத்தை என்னுடைய மனமார வரவேற்று சில கருத்துக்களைக் கூறலாம் என்று முற்படுகிறேன்.

வை. பாலசுந்தரம். [1972 மார்ச் 20

இன்றையதினம் இந்த மானியத்தைப் பார்க்கின்றபோது வெளியில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு பரவசப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். இதற்கு முந்தைய ஆண்டுகளுக்கு முன்னில்லாத புதுமையும், புரட்சியும் இந்த மானியத்திலே இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மானியத்திற்காக ஒதுக்கப் பட்ட தொகையையும், இன்றைக்கு இருக்கின்ற தமிழக அரசு இவ் வாண்டு ஒதுக்கியிருக்கிற தொகையையும் ஒப்பிட்டுப் பார்க்கிற போது இன்றையதினம் ஏறத்தாழ எட்டரை கோடி ரூபாய் ஒதுக்கி யிருப்பது பெருமைப் படத் தக்கதாக இருக்கிறது. ஆனால் இந்த எட்டரைக் கோடி ரூபாயில் கல்விக்காக ஐந்தரை கோடி ரூபாய் செலவிடுகிற தன்மையைப் பார்க்கிறோம். இது மொத்த மானியத்தில் 65 சதவிகிதம் ஆகும்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

உள்ளபடியே தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் எதிர்காலத்தில் நல்ல கல்வி அறிவு உள்ளவர்களாக ஆவார்கள் என்பதில் சந்தேக மில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் 65 சதவிகிதம் கல்விக்காகவே போய்விடுவதனால், மிச்சம் இருக்கிற தொகையை வைத்துக் கொண்டு அந்தச் சமுதாயத்தினர் களுக்குச் செய்ய வேண்டிய இதர பணிகளைச் செய்ய முடியாது போகும். ஆகவே, இந்த ஐந்தரைக் கோடி ரூபாய் முழுவதற்கும் கல்வி இலாகாவே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக, தலைவர் அவர்களே தங்கள் மூலமாக கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றையதினம் அந்தச் சமுதாயத்தினர்களுக்கு இந்த அரசு நிறையச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறது. "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கவில்லை" என்பதைப்போல அரசு அவர்களுக்காகப் பல சலுகைகளை அளித்தாலும் அதிகாரிகள் அந்தச் சலுகைகளை அந்தச் சமுதாயத்தினர் அனுபவிக்க இடம் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள்.

இன்றையதினம் தனியார் கல்லூரிகளிலும் 18 சதவிகிதம் இடத்தை இந்தச் சமுதாயத்தினர்களுக்காக ஒதுக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருக்கிறது. ஆனால் பல தனியார் கல்லூரி



1972 மார்ச் 20] [திரு. வை. பாலசுந்தரம்]

களிலும் இதுபோன்று இவர்களுக்கு இடமளிப்பதில்லை. ஆகவே இதுபோல இனி எந்தத் தனியார் கல்லூரியும் தாழ்த்தப்பட்டவர் களுக்கு 18 சதவிகிதம் இடத்தை ஒதுக்க முன்வரவில்லை என்றால் அந்தக் கல்லூரிக்கு அளிக்கப்பட்டு வரும் மானியத்தை இந்த அரசு நிறுத்திவிட முன்வர வேண்டும்.

அதுபோல அரசாங்கக் கல்லூரிகளில் இடம் கொடுக்கவில்லை என்றால் உடனே அந்த அரசாங்கக் கல்லூரி முதல்வர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றையதினம் மத்திய சர்க்காரிலே இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்களுக்கு 22 சதவிகிதம் வேலை வாய்ப்புத் தருகிறபோது நம்முடைய மாநில சர்க்காரில் 18 சதவிகிதம் வேலைவாய்ப்புத்தான் தரப்படுகிறது என்கிறபோது—இதில் இப்படி அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கிற தன்மை அகற்றப்பட வேண்டும்—மத்திய சர்க்காரிலே ஒதுக்கப்படுவதுபோல இங்கும் 22 சதவிகிதம் ஒதுக்குவதற்கு முன்வர வேண்டும் என்று நமது அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சமுதாயத்தினர்களின் சூழ்நிலையை உணர்ந்து பார்க்கிற போது நம்முடைய முதல்வர் அவர்கள் அழகாகச் சொல்லி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந் தாலும், யாராக இருந்தாலும் இந்த நாட்டில் உள்ளவர்களுக்கு மனைப்பட்டா, நிலப்பட்டா இல்லாது யாரும் இருக்கும் நிலையை வைத்திருக்கமாட்டோம் என்பதாக எல்லோருக்கும் இனிக்கின்ற செய்தியைத் தமிழ்நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப் படையில் பார்க்கிறபோது தமிழ்நாட்டில் உள்ளவர்கள் குதூகலிக் கிறார்கள், தங்கள் எதிர்காலத்தை நினைத்துப்பார்த்து. ஆந்திர மாநிலத்திலும், பிறமாநிலங்களிலும் இன்றைக்குத் தனி வாரியம் என்று அமைக்கப்பட்டு அந்தச் சமுதாயத்தினரின் பணிகள் கவனிக்கப் பட்டு வருகின்றன. அந்தத் திட்டத்தை இங்கும் பின்பற்றினால் நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர்களுக்கு 18 சதவிகிதம் ஸ்தானம் வேலை கொடுப்பதில் சரியாகப் பின்பற்றப் படுகிறதா என்பதை நமது மாண்புமிகு முதல்வர் தலைவராகவும்,

[திரு. வை. பாலசுந்தரம்] [1972 மார்ச் 20

அரிசன நலத்துறை அமைச்சர் உறுப்பினராகவும் உள்ள குழு கவனித்து வருவது பாராட்டத்தக்கது. மேலும் மற்ற மாவட்டங்களில் உள்ளதுபோல இங்கும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு நல்லமுறையில் பரிசீலிக்கலாம்.

இப்படித் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு நல்ல பல சலுகைகளை அளித்து வருகிற இந்த அரசுக்கு இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் தங்கள் நேசக் கரங்களை நீட்டத் தயாராய் இருக்கிறார்கள் என்கிற இனிப்பான செய்தியைத் தெரிவித்துக் கொண்டு பேச சந்தர்ப்பம் அளித்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. எம். சுரேந்திரன்</u>: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே வைக்கப்பட்டிருக்கிற அரிசன நல மானியக் கோரிக்கையின்மீது ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது இருக்கிற சமுதாயத்திலே மிகத் தாழ்வான, மிகப் பிற்பட்ட வகுப்பினர் என்று கருதப்படுபவர்கள் மலைவாசிகள் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மலைவாசிகள் விஷயத்திலே இந்த அரசு எவ்வளவோ காரியங்கள் செய்கிறது என்றாலும், இன்னும் சரியான முறையில் அவர்களுடைய நலன் ஊன்றிக் கவனிக்கப்படவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே தந்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழ்நாடு அரசு படிப்பு உதவித் தொகை என்ற சம்பந்தப்பட்டியலில், 1969–70ல் 744 மலைவாசி, மாணவ மாணவியர்கள் பயன்பெற்றனர். ஆனால் 1971–72-ல் பயன்பெற்றவர்களுடைய எண்ணிக்கை 593 ஆகும். இப்படி 1969–70-ஐ விட 1971–72-ல் இந்த அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் 1969லிருந்து வருகின்றபொழுது மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதை இந்தக் குறிப்பு காட்டுகிறது. மேலும், அவர்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை 0.14 லட்சம் ரூபாயிலிருந்து 0.12 லட்சம் ரூபாய் என்ற அளவில் குறைந்திருக்கிறது. இப்படி மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்து, செலவிடப்படுகின்ற தொகையும் குறைந்திருப்பது மலைவாசி மக்களுக்கு ஏற்படுகின்ற நிலைமை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.



1972 மார்ச் 20] [திரு. எம். சுரேந்திரன்]

அரிசன நல இலாகா என்றால் அரிசன மக்களின் நலனை மட்டும் பிரதானமாகக் கருதுகிற துறையாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. மலைவாசி மக்களின் கஷ்டத்தை உணர்ந்ததாக, அவர்களின் நிலைமைகளை உணர்ந்து காரியங்கள் செய்யப்படுகிறதா என்று பார்த்தால் அப்படி காரியங்கள் செய்யப்படவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பாலமலை என்ற பகுதி இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 3 ஆயிரம் மலைவாசி மக்கள் இருக்கிறார்கள். வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை. அந்தப் பகுதி 3,200 அடி உயரத்தில் இருக்கிறது. அவ்வளவு உயரத்தில் அந்த மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் கீழே சமவெளிக்கு வந்து தங்கள் வேலைகளைச் செய்துவிட்டுப் போகிறார்கள். அவர்கள் சென்று வருவதற்குச் சரியான பாதைகூட இல்லாமல் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் நான் இதைப்பற்றிச் சொல்லி வந்தும், உரிய முறையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லையென்பதைக் கண்டு வருத்தப்படுகிறேன்.

அங்கே சாதாரணமாக 3 ஆயிரம் ஜனங்கள் வாழ்கிறார்கள். அங்கே பஞ்சாயத்து இருக்கிறது. அங்கே இருக்கும் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் உபயோகிக்கும் விவசாய நிலங்கள் ஒன்று காட்டு இலாகாவைச் சேர்ந்தவையாக இருக்கும் அல்லது புறம்போக்கு நிலமாக இருக்கும். ஆகவே, அந்த நிலங்களை அவர்களுக்கே உரியதாக ஆக்கி, அவர்களை நல்வாழ்வு வாழ வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வசிக்கும் பகுதியிலிருந்து 3,200 அடி உயரத்திலிருந்து அவர்கள் கால் நடையாகவே சமவெளிக்கு வந்து போக வேண்டியிருக்கிறது. சரியான நடைபாதை இல்லாத காரணத்தினால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சரியான நடைபாதை இல்லாத காரணத்தினால் அரசு அதிகாரிகளும் அந்த இடத்திற்குச் சென்று வருவதில்லை. நானும் மேட்டூரில் இருக்கிற சப்-கலெக்டர் திரு. சிங் அவர்களும் ஒரு தடவை மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்று, அங்கே ஒரு நாள் தங்கி, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அறிந்து, அதற்கான விரிவான பரிந்துரை ஒன்றை அரசாங்கத்திற்கும் அனுப்பிவைத்தோம்.

அங்கே 3 பள்ளிகள் இருக்கின்றன. அங்கே இருக்கிற குழந்தைகள் சரியாகப் பள்ளிக்கூடம் செல்வதில்லை. மேலும் அங்கே ஆசிரியர்களும் சரியாக பள்ளிக்கு வருவதில்லை. அந்தப் பிள்ளைகள் சரியாகப்

[திரு. எம். சுரேந்திரன்] [1972 மார்ச் 20

படிக்க வேண்டுமென்றால், அரிசன நல இலாகாவே மாணவர்கள் தங்கி உண்டு, படிப்பதற்கான வகையில் பள்ளிகளை அமைத்துக் கொள்ள வேண்டும். இதைக் குறித்து பஞ்சாயத்து யூனியனிலே தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளி இருக்கிற இடத்திலே அம்மாதிரியான பள்ளிகளைத் திறக்க முடியாது என்று அரசாங்கத்திலிருந்து தகவல் வந்ததாகச் சொல்லப் பட்டது. ஆகவே, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை எடுத்துவிட்டு, அரிசன நல இலாகா பள்ளிகளை ஏற்படுத்தும் வகையில் நல்ல ஏற்பாட்டை அரசு உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், அங்கே இருக்கிற பெண்கள் பிரசவத்திற்குக் கீழே வர வேண்டுமென்றால், அது முடியக் கூடிய காரியம் இல்லை. ஆகவே, அந்தப் பகுதியிலே ஒரு பிரசவ விடுதியை ஏற்படுத்தித்தர வேண்டும். ஆரம்பச் சுகாதார நிலையமாவது குறைந்தபட்சம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

அந்தப் பகுதியில் இன்னும் மின்சாரம் வரவில்லை. எங்கு பார்த் தாலும், எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளித்திருக்கிறோம் என்று சொல்கிறோம். அந்தப் பகுதியிலே இருள் மூடிக் கிடப்பதால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர் களுக்கு மின்சார வசதியளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். இராஜாங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்" என்ற குறளுக்கு இணங்கவும், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கொள்கைக்கு இணங்கவும் அரிசன நல இலாகா அறிமுகப்படுத்தியிருக்கும் மானியக் கோரிக்கையில் இந்தக் கொள்கை உள்ளடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன நல இலாகா சில லட்சங்களில் ஆரம்பிக்கப்பட்டு, இன்றையதினம் பல கோடிக்கணக்கில் செலவு செய்கின்ற ஒரு பெரிய துறையாக விளங்குகிறது. இப்படிப்பட்ட இலாகா செய்துவரும் தொண்டில் மேலும் பல காரியங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 20] [திரு. என். இராஜாங்கம்]

அர்ச்சகர்கள் வேலைக்கு எல்லோரும் தகுதி வாய்ந்தவர்கள் என்று தமிழக அரசு கொண்டு வந்த சட்டத்திற்கு இன்றைக்கு சுப்ரீம் கோர்ட் அனுமதி வழங்கப்பட்டது. ஒரு காலத்தில் இது நடக்குமா, என்று எண்ணியவர்கள் எல்லாம் இன்றையதினம் இருக்கின்ற அரசியல் சூழ்நிலையில் இப்படிப்பட்ட ஒரு திட்டம் நிறைவேற்றப் பட்டது தீண்டாமை ஒழிப்புக்கு சிகரம் வைத்தது போலாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்புக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு ஆலயத்திலும் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அறங்காவலராக நியமிக்க வேண்டும். இப்போதுகூட சிலர் அறங்காவலராக இருக்கிறார்கள். ஓர் ஆலயம் 3 பேர்களை அல்லது 5 பேர்களை அறங் காவலர்களாகக் கொண்டதாக இருந்தாலும், அந்த மூவரில் ஒருவர், அந்த ஐவரில் ஒருவர் அரிசன வகுப்பைச் சார்ந்தவராக கட்டாயமாக இருக்க வேண்டுமென்கிற நிலையை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிதம்பரத்தில் நந்தனார் கல்விக் கழகம் இருக் கிறது. அதன் சார்பில் பல பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அங்கே பெண்கள் படிப்பதற் கென்று பெண்கள் கல்லூரி தேவைப்படுகிறது. அந்தக் கல்லூரியை அந்தக் கல்வி ஸ்தாபனமாவது அரசாங்கமாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அங்கே ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அரசைக் கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டிலாவது அடுத்த ஆண்டிற்குள்ளாகவாவது அந்தப் பெண்கள் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர் களுக்கு தக்க உணவு வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் மூன்று மைல், நான்கு மைல் என்று நடந்து போய் படிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கம் எவ்வளவோ செலவிடும்போது இதற்காகச் செலவிடுவது வீண் அல்ல. அரசாங்கச் செலவில் பத்து அல்லது பன்னிரண்டு இலவச உணவு விடுதிகளை தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத் திருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் கருத்தில் கொண்டு தக்க வசதிகளைச் செய்து தர வேண்டும்.

[திரு. என். இராஜாங்கம்] [1972 மார்ச் 20

அடுத்தபடியாக, மின்சார வாரியம், குடிநீர் வாரியம் என்று பல வாரியங்களை ஏற்படுத்தி ஏழை மக்களுக்கும் இந்த நாட்டிற்கும் பல திட்டங்களை இந்த அரசு தீட்டிச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது. எனக்குத் தெரிந்த அளவில் இருபது, முப்பது ஆண்டுக் காலமாக அரிசனங்களுக்கு தக்க வீட்டு மனைகள் கொடுக்க முடியாத நிலை இருந்து வருகிறது. ஆகவே, அவர்களுக்கு சௌகரியமான முறையில் வீட்டுமனைகளை அளித்து, நல்ல வீட்டு வசதிகளைச் செய்து தருவதற்காக வீட்டுமனை வாரியம் ஒன்றை ஏற்படுத்தி, இத்தனை இத்தனை ஆண்டுக்குள்ளாக இந்த வேலை முடிந்துவிட வேண்டுமென்று வரையறை செய்துகொண்டு வீட்டுவசதிகளைச் செய்துதர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாமற்போனால் அரிசனங் களின் வீட்டுப் பிரச்சினை தீர நூறாண்டுக் காலமாகும். ஆகவே, அவர்களுக் கென்று தனியாக வீட்டுமனை வாரியம் ஏற்படுத்தித் தீவிரமாகச் செயல்பட வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு ஏற்கெனவே கொடுத்திருக்கிற வீட்டு மனைகள் பூராவும் பள்ளத்தில் இருப்பதால் அரிசனங்கள் உடனடியாக வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியவில்லை. இப்படி பள்ளத்தில் கொடுத்ததன் காரணமாக அரசாங்கத்திற்கும் பணம் நஷ்டம். அரிசனங்களுக்கும் வீடு கட்டிக்கொள்ள முடியவில்லையே என்ற வருத்தம். ஆகவே, அந்தமாதிரி பள்ளமாக இருக்கும் இடங்களை மேடாக்கி, வீடுகள் கட்டுவதற்குரிய வகையில் நல்ல வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பகல் உணவு ஏற்பாடு பற்றியது. பதினைந்து ஆண்டுகளாக ஒரு மாணவனுக்கு பதினைந்து காசு என்ற அளவில் தான் பணம் தரப்பட்டு வருகிறது. சர்க்கார் சாப்பாடு போடுகிறார் கள் என்றாலும் அரசாங்க அதிகாரிகளுக்கு மனம் வரவில்லை. ஆகவே பதினைந்து பைசா என்றிருப்பதை ஓரளவுக்கு உயர்த்தி 25 பைசா என்ற அளவிலாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்பு சம்பந்தப்பட்டது. ஜாதி சம்பந்தமாக பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களிடையே அடிக்கடி சண்டைகள் ஏற்படுகின்றன. பிற்பட்ட நலத்துறை, தாழ்த்தப்பட்ட நலத் துறை ஆகிய இரு துறைகளின் அதிகாரிகளும், உயர்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரையில் உள்ள அதிகாரிகள்— இணைப்பாக ஒருங்கிணைந்து நல்ல ஆலோசனைகளைக் கண்டு, நல்ல



1972 மார்ச் 20] [திரு. என். இராஜாங்கம்]

முறையில் இத் துறைகள் இயங்கவும், வழிவகை செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் இரு துறைகளின் வேலை சுமுகமாக நடைபெறு வதுடன், இரு துறைகளின் அதிகாரிகளுக்கிடையே ஒற்றுமை மனப் பான்மையும், சமரச மனப்பான்மையும் ஏற்படும்.

அடுத்தபடியாக, வெல்பேர் ஸ்கூல்களுக்குக் கொடுத்து வந்த புத்தகங்கள் எல்லாம் காலாகாலத்தில் வந்து சேருவதில்லை. நாம் லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்தும் நமக்குக் கெட்ட பெயர் வர வேண்டாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். நந்தனார் பெண்கள் பள்ளி ஹாஸ்டல்களில் குடிப்பதற்கும், குளிப்ப தற்கும் தண்ணீர் வசதி கிடையாது. ஆகவே, அவர்களுக்கு குடிப்ப தற்கும், குளிப்பதற்கும் வசதியாக இருக்கும் பொருட்டு, அந்த விடுதி களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன நல மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தை களைக் கூற விரும்புகிறேன். 11.00

1972–73 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை பார்க்கிற நேரத்திலே வருஷா வருஷம் கூடுதலாகத் தொகை ஒதுக்கப் பட்டு இருந்தாலும் ஜனத்தொகை அடிப்படையைப் பார்க்கிற நேரத்தில் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருந்தாலும்—ரூபாய் 8,41,23,400 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது கடலில் காயத்தை உரசினமாதிரித் தான் இருக்கிறது. அரிசனங்கள் முன்னேற வேண்டுமானால் அவர் களுக்குக் கூடுதலாகத் தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் சமுதாயத்திலே இருக்கிற மக்களோடு அவர்களும் சமமாக முன்னேற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்கள் தங்குகிற ஹாஸ்டலைப் பார்த்தால் அதே ஹாஸ்டலில் சில பிற்பட்ட வகுப்பு மாணவர்களும் தங்கியிருக்கிறார் கள். என்னுடைய திருநெல்வேலி மாவட்டத்திலே சில ஹாஸ்டல் களை நான் நேரடியாகப் பார்த்தேன். பிற்பட்ட மாணவர்களுக்குப் படுப்பதற்கு ஜமக்காளம், பாய் போன்றவற்றைக் கொடுக்கிறார்கள்.

ஆனால் அரிசன மாணவர்களுக்கு அப்படிக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட வேறுபாடு காட்டப்படுகிறது.

அது மட்டுமல்ல, அரிசன மாணவர்கள் விடுதியில் சமைத்துப் போடும் சமையல்காரருக்கு 25 ரூபாய் மாதம் ஒன்றுக்குச் சம்பளம். ஆனால் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குச் சமைத்துப் போடும் சமையல்காரருக்கு மாதம் ஒன்றுக்குச் சம்பளம் ரூபாய் 45. இதிலே வேறுபாடு. இதுவெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். இவரும் சமையல்காரர்தான், அவரும் சமையல்காரர்தான். இருவருக்கும் ஏன் வேறுபாடு காட்டப்படுகிறது என்று தெரியவில்லை.

அரிசனங்களுக்கு உழவு மாடுகள் வாங்குவதற்காகக் கடன் கொடுக்கிறார்கள். ஒரு நபருக்கு 400 ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இப்பொழுது மாடு விலை இருக்கிற நிலைமையைப் பார்த்தால் 1,000 ரூபாய், 800 ரூபாய்க்குக் குறைந்து வாங்க முடியாது. எனவே அந்தத் தொகையைக் குறைந்தது 1,000 என்றாவது உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறு வெட்டுவதற்கு ரூபாய் 1,500 என்று கொடுக்கப்பட்டதை ரூபாய் 2 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறோம். கோயில்பட்டி, சங்கரன் கோயில் தாலூகாக்களில் கிணறு வெட்டுவதற்கு 10 கஜம் வெட்டினால்தான் ஊற்றைக்கூட கண்டுபிடிக்க முடியும். எனவே இரண்டாயிரம் ரூபாய் என்றால் மண்ணைத்தான் பார்க்க முடியும். பாறையைக் கூட கண்டுபிடிக்க முடியாது. எனவே இரண்டாயிரத்தை 5 ஆயிரமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர்கள் ஹாஸ்டலில் தங்கிக் கொண்டு படிக்கிற மாணவர்களுக்கு இந்த அரசாங்கம் ஒரு நல்ல முற்போக்கான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதுதான் சத்துணவுத் திட்டம். அரிசன மாணவர்களுக்காக 5 ரூபாய் அதற்காகக் கொடுக்கப்படுகிறது. அதேபோல் பிற்பட்ட மாணவர்களுக்கும் 5 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் அரிசன மாணவர்களுக்கு அந்தத் தொகையை வைத்து முட்டை வாங்கிக் கொடுக்க வேண்டும், அப்படி முட்டை கிடைக்கவில்லையென்றால் சர்க்காருக்கு ரூபாயைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் பிற்பட்ட மாணவர்களுக்கு அந்த 5 ரூபாய் முட்டைக்காகச் செலவிடும்



பொழுது முட்டை கிடைக்கவில்லையென்றால் அந்த ரூபாயை மற்ற உணவுக்குச் சேர்த்துக் கொள்ளலாம் என்று விதியிருக்கிறது. இதை மாற்றி பிற்பட்ட மாணவர்களைப்போல் அரிசன மாணவர்களுக்கும் அந்த 5 ரூபாயை முட்டை கிடைக்கவில்லை என்றால் மற்ற உணவுக்காகச் செலவிடுவதோடு சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியாகிய ஒட்டப்பிடாரத்திலே வீட்டு மனைகள் கொடுப்பதில் பரும்பூர், புதூர், கட்டாரங்குளம் போன்ற இடங்களிலே பல விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைப் பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நல்ல காரியத்திலே இறங்கி இந்தச் சமுதாயம் முற்போக்கு அடைய வேண்டுமென்றால் நல்ல தொகையை ஒதுக்கி முற்போக்கு அடையச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசன நல மானியத்தின்மீது நானும் என் கருத்தைச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் அளித்ததற்காக பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன நலம் என்று சொல்வதிலே சர்க்காருக்கு அதிகமான அக்கறையுண்டு என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அவ்வாறு அனுதாபத்தோடு எடுக்கப்படும் நடவடிக்கைகள் எல்லாம் அந்த மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று எண்ணும் பொழுது மெய்யாகவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நான் அறிந்த வரையில், ஒரு நாற்பது வருஷ காலமாக நான் அறிந்த வரையில், அரிசனங்களுடைய நலனில் அக்கறை கொண்டவர்கள் பல முனைகளிலேயும் அவர்களை முன்னேற்றுவதிலே முயற்சித்தவர்களுடைய அணியிலே எனக்கும் பங்கு உண்டு. மனித இனத்திலே கடுமையான முறையில் பல நூறு வருஷங்களாக மனிதத் தன்மையற்ற முறையில் மேட்டுக்குடியினர் சிலரால்—சிலரால் என்று நான் சொல்வதற்குக் காரணம் பலரால் என்று சொல்ல அஞ்சுகிறேன்—

மிருகத்தனமாக நடத்தப்பட்டு இன்றும்கூட மிருகத்தனமாக நடத்தப்படுகிறார்கள் என்று சொல்லும்பொழுது மெய்யாகவே மனது வேதனைப்படுகிறது.

கிராமப்புறங்களிலே சென்று பார்த்தால் அவர்களுக்குச் செய்யப் படுகிற தொல்லைகள், அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள், அவர்களுக்கு ஏற்படுகிற இன்னல்கள் இருக்கிறதே அவை மிகவும் கொடூரமானவை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் எவனுடைய வண்டியாவது, காராவது வழியிலே நின்றுபோய் விட்டால் டிரைவரை விட்டு பக்கத்திலேயுள்ள சேரிகளுக்கு அனுப்பி அங்கேயுள்ள அரிசன மக்களை அழைத்துவரச்செய்து மைல் கணக்காகக் காரைத் தள்ளிவிடச் சொல்லப் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் எங்களால் இயலாது என்று சொன்னால் அவர்களுக்குப் பல விதமான இன்னல்கள் வந்துசேரக்கூடிய இம் மாதிரியான சம்பந்தம் இல்லாத, அவர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பு இல்லாத கடுமை யான விஷயங்கள், காரியங்கள் செய்யப்படுகின்றன, அவற்றை யெல்லாம் சர்க்கார் கடுமையாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் இன்றும் உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்று எண்ணிவிட முடியாது. திட்டம் இருக்கிறது. ஆனால் சமுதாயம் இன்னும் நல்ல நோக்கத்தோடு அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் இன்றைக்கும்கூட கைகட்டி நிற்பவர்களாக கெஞ்சுகிறவர் களாக அடிமைகளாக ஏவலர்களாக பரிதாபத்திற்குரியவர்களாகத் தான் இருந்துவருகிறார்கள். நான் இந்தப் பேரவையின் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பேரவையின் உறுப்பினர் களாக யார் யார் எல்லாம் வந்திருக்கிறார்களோ, அந்த அந்த உறுப்பினர்கள் கொஞ்சம் அதிகமாக இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரக்கூடியதைத் தடுப்பதற்காக இருக்கக்கூடிய முட்டுக்கட்டைகளைத் தகர்ப்பதற்காக—அவர்கள் மூதாதையர்கள் எந்தப் பாவமும் அறியாத யதார்த்தவாதிகளாக இருந்தார்கள் என்ற ஒரே காரணத் திற்காக—சமுதாயத்திலே பின்தங்கிய நிலையில் ஒதுக்கப்பட்டுவிட்ட வர்கள், மனித நிலையிலிருந்து கடைநிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக் கின்றவர்கள்—ஆங்காங்கு நடக்கிற கொடுமைகளைக் கேட்டறிய அவரவர்களைச் சந்தித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



எந்த ஜில்லாவில், எந்த கிராமத்தில், எந்தப் பகுதியில், எந்த ஊரில், இப்படிக் காரியங்கள் நடைபெறுகின்றன என்ற புள்ளி விவரங்களைச் சொல்ல முடியும். இன்றைக்கும் ஒரு கார் போகிறது என்று சொன்னால்—கொங்கு நாட்டைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியும்—ஒரு கார் போகிறது என்று சொன்னால் அந்தப் பகுதி யிலே உள்ளவர்கள் கீழே படுத்துக் கொண்டு சாமி, சாமி என்றும் புத்தி புத்தி என்றும் சொல்லவேண்டும். எவனாவது காலிலே செருப்பு அணிந்திருந்தால் நடப்பது வேறு. இவையெல்லாம் இல்லையென்றும் சொல்லிவிடக்கூடாது, நடக்கிறது, இன்றைக்கும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வேட்டைக்காரன் புதூரில் இன்னும் நடந்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள் சொல்கிறார்கள், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைத் தடுக்கவேண்டும். அதற்காக நாம் போராட்டமே கூட நடத்தலாம். அவர்கள் இன்னும் திருந்த வில்லை. அவர்கள் முன்னணிக்கு வரவேண்டுமென்று பாடுபடுகிறோம், அவர்கள் இன்னும் முன்னணிக்கு வந்துவிடவில்லை. அவர்கள் ஒரு தலைப்பட்சமாக அடக்கி ஒடுக்கி வைக்கப்படுகிறார்கள் என்ற நிலையிலே நாம் வேதாந்தம்போலும், தத்துவம்போலும் இங்கே பேசிக்கொண்டு நிதி ஒதுக்கி வருகிறோம், காரியங்கள் செய்கிறோம், கிணறு வெட்டுகிறோம், குழி வெட்டுகிறோம் என்று சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம் என்றால் எனக்கு வருகிற ஆத்திரத்தில் ஒரு பெரிய குழி வெட்டி அவர்களைப் போட்டு மூடிவிடவேண்டு மென்று வருகிறது.

என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். ஏனென்றால் அவ்வளவு அநியாயம் செய்கிறார்கள், பல அநியாயங்களைச் செய்து கொண்டிருக் கிறார்கள். அவர்களின் பிரதிநிதிகள் நீங்கள்தானே? எல்லோருடைய பிரதிநிதிகளாகவும் நாம் வந்திருக்கிறோம். இந்தப் பேரவையில் பேசுவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு தொகுதியிலேயும் சென்று அரிசனங்கள் படுகின்ற இன்னல்களைப் பார்த்து, உயர்ந்த ஜாதிக் காரர்கள் என்று சொல்பவர்கள் செய்கின்ற கொடுமைகளை நிச்சயமாகக் கண்காணித்து ஆங்காங்கேயிருக்கும் போலீசாருக்கு அறிவித்து அவர்களை மனிதாபிமானத்தோடு நடத்த வேண்டும். வேதாந்தம் பேசுகிறார்கள், ஏன் அவர்களை ஒதுக்கி வைக்கிறீர்கள் என்று கேட்டால் பஸ்ஸிலேயே நடந்திருக்கிறது, பஸ்ஸிலே உயர்ந்த ஜாதிக்காரன் ஏறியவுடனே, டிக்கெட் வாங்கி உட்கார்ந்

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1972 மார்ச் 20

திருந்த இவன் பஸ்ஸைவிட்டு இறங்கி புத்தி என்று கும்பிட்டுவிட்டு, சீட்டிலே உட்காராமல் கீழே உட்கார்ந்து கொண்டு சென்றதை நானே கண்களால் பார்த்திருக்கிறேன். இது என்ன நியாயம் என்பதைச் சிந்திக்க வேண்டும். அவர்களைத் திருத்துவதில் சர்க்காருக்கு நல்லெண்ணம் இருக்கிறது என்பது தெரியும். ஆனால் அது பயன்படவில்லை. சமுதாயத்தில் மாற்றத்திற்கான எண்ணங்களை பேரவையிலுள்ள சக அங்கத்தினர்கள் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை எங்கள் கட்சியின் சார்பிலே ஆதரிக்கிறேன் என்று சொல்லி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

திரு. ந. தருமலிங்கம் : தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான அரிசன நல மானியக்கோரிக்கையின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். 1967-லே ஆட்சிப்பொறுப்பையேற்ற நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டுவரும் இந்த நேரத்தில் நான் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் ஒருசில கருத்துக்களை இங்கே விரிவாக எடுத்துக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, ஜாதி மதம் இல்லையடி பாப்பா என்று பாரதி எழுப்பிய குரலுக்கு ஏற்றவாறு பேரறிஞர் அண்ணா அவர்கள் கலப்புத் திருமணம் என்ற கொள்கையைப் பின்பற்றி, அந்தக் கொள்கையின் அடிப்படைக் கட்டிடமாக இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்கள் திகழ் கிறார்கள் என்று சொன்னால் நாங்களெல்லாம் அவர்களுக்கு நன்றி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நாட்டின் சமுதாய வளர்ச்சிக்காக, ஏழை எளிய பாட்டாளி மக்களின் நலனுக்காகப் பல திட்டங்களை வகுத்துச் செயல் பட்டு வருவது திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது, மறக்கவும் முடியாது. சரித்திரத்திலே ஒரு புகழ்பெற்ற இடத்தைப் பெற்றிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்னென்ன சலுகைகளைச் செய்திருக்கிறது என்பதை ஒவ்வொரு ஏடுகளையும் புரட்டிப் பார்த் தால்தான் அடுத்த கட்சி நண்பர்களுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்றையதினம் மக்களின் ஆட்சியே மகேசனின் ஆட்சி என்று சொல்வதற்கேற்ப கலைஞர் அவர்களின் ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, நாட்டில் செல்வாக்கு



1972 மார்ச் 20] [திரு. ந. தருமலிங்கம்]

பெற்று, பல நாடுகளும் போற்றும் அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு உறுதுணையாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1967-லே அரிசனங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டிருந்த தொகை எவ்வளவு? இன்றைக்கு சிறு துளி பெருவெள்ளம் என்று சொல்வதுபோல் அன்றைக்குச் சிறுதுளியாக இருந்தது இன்றைக்குப் பெருந்துளியாக நிதியாக மாறியிருப்பதை உண்மையிலேயே பாராட்டுகிறேன். அதற்காக முதலமைச்சரவர் களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1967-ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்த பிறகு, முன்னாலேயிருந்த காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில் மாடு மானியமாக கொடுக்கப்பட்ட 400 ரூபாய் என்பதை இப்பொழுது நம் அரசு 500 ரூபாயாக என்று கொடுத்து உதவியிருக் கிறது. அப்படியென்றால் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன சாதனை செய்திருக்கிறது என்பதைச் சற்று அடுத்த கட்சிக்காரர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மக்களின் உயிர்நாடியாக இருக்கும் விவசாயம் விவசாயத்திற்கு உதவக்கூடிய முறையில் நீர்ப்பாசனக் கிணறு தோண்ட அரிசனங்களுக்கு முன்பிருந்த அரசு 1,500 ரூபாய்தான் கொடுத்தது, இப்பொழுது நம்முடைய அரசு 2,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால் கலப்புத் திருமணம்தான் இதற்குக் கலங்கரை விளக்கம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோன்று அண்ணா வகுத்த பாதையில் சென்று இப்போது டாக்டர் அவர்கள் பல கிராமங்களில் கலப்புத் திருமணத்தை உருவாக்கி, ஜாதிமதம் இல்லை என்ற கோட்பாட்டை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது.

அதேபோன்று இன்றைக்கு அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் முன்பிருந்த நிலைமையைவிட இப்பொழுது எந்த அளவிற்கு உருவாகியிருக்கிறது என்பதை நாங்கள் உளமார வரவேற் கிறோம். இன்றைக்கு அரிசன மாணவர்கள் பட்டப் படிப்பு படிப்ப தற்கு எத்தனையோ பல சலுகைகளை இன்றைக்கு நம் அரசு வகுத்திருக் கிறது. 9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்புவரை உள்ள தேர்வுகளில் தேறாத அரிசன மாணவர்களுக்கு தட்டெழுத்துப் பயிற்சியும்,

சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளித்து வருகிறது. இதையும் பார்க்கும் பொழுது முன்பிருந்ததைவிட இப்பொழுது நிறைய சலுகைகளை நம்முடைய அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது என்பதைக் காட்டுகிறது.

அதேபோன்று அரிசனங்கள் சிறுதொழில் நடத்துவதற்கு, மிதி வண்டிக் கடைகள் வைத்து நடத்த, மளிகைக் கடைகள் துவக்க, உணவு விடுதிகள் நடத்த வட்டியில்லாக் கடன்களை நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. அதற்கும் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களிலே இன்னும் அரிசனங்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதில்லை. எத்தனையோ பேர் படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த ஒன்றியத்திலே முதலிடம் கொடுப்பதில்லை. எனவே 25 சதவிகிதமாவது அரிசனங்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க ஊராட்சி ஒன்றியங்கள் முன் வரவேண்டும். அதற்கு நம்முடைய அரசு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அதேபோன்று தாலூக்காவாரியாக, கிராம வாரியாக இன்றைக்கு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டிகளில் அரிசனங்களை கமிட்டி மெம்பர்களாகப் போடக்கூடாது என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இதர மதத்தைச் சேர்ந்தவர்களை இந்தக் கமிட்டிகளில் மெம்பராக போட்டால்தான் அவர்களுக்கு அக்கறை உண்டாகும். அந்த அக்கறையின்பேரில் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று பார்வையிடும்பொழுது என்னென்ன செய்ய வேண்டும் என்று உற்சாகத்தோடு செயல்படு வார்கள். ஆனால் அதிலே அரிசனங்களை கமிட்டி மெம்பராகப் போட்டால் அதை எந்த அளவில் எப்படி எடுத்துச் சொல்வது என்ற தயக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதாக எனக்குத் தெரிகிறது, எனவே, அடுத்த மதத்தைச் சேர்ந்தவர்களை அதில் கமிட்டி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே எத்தனையோ குறைபாடுகள் இருக் கின்றன. ஆனால் 1967-க்கு முன்பு ஆண்டார்களே காங்கிரஸ்காரர் கள், அன்றிருந்த நிலைமையைவிட இன்றைக்கு நாங்கள் பெருமைப்



படக்கூடிய அளவிலே என்னுடைய தொகுதி பொருளாதாரத் திலேயோ அல்லது விவசாயத்திலேயோ மற்ற துறைகளிலேயோ முதலிடத்தை நாடிக்கொண்டிருக்கிறது என்பதை மிகவும் பணிவன் போடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சிகளின் காரணமாக எல்லாக் கிராமங்களிலும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது பாராட்டுதற்குரியது, அதற்கு நன்றி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நகரங்களிலே இன்றைக்கு குடிசை மாற்று வாரியம் இருக்கிறது. அதேபோன்று கிராமங்களிலும் குடிசை மாற்று வாரியத் திட்டத்தை அமல் செய்து நடைமுறைக்கு கொண்டு வந்தால் பல ஏழை விவசாயிகள், அரிசனங்கள் பயன் பெறுவார்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான மனைப்பட்டாக்களை நம்முடைய அரசு வழங்கி இருக்கிறது. அண்மையிலேகூட கடலூரில் நடைபெற்ற ஒரு விழாவில் கலைஞர் அவர்கள் 20,000 ஏக்கர் நிலங்களை பட்டா கொடுத்திருக்கிறார்கள். அது பெருமைக்குரியது, எங்கள் சமுதாயத் திற்கே எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சியெடுத்து ஏரி புறம் போக்கு தரிசாக இருக்கும் நிலங்களை ஏழை எளிய மக்களுக்கு அடைமானம் செய்து கொடுப்பதற்கு சீரிய முயற்சிகளை எடுத்திருக் கிறார்கள் என்றால் அவர்களைத் தமிழக அரிசனங்களின் சார்பில் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதேபோன்று டாக்டர் கலைஞர் அவர்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், என்னுடைய தொகுதியிலே நான்கைந்து பாலங்கள் இருக்கின்றன, அவைகளை இந்த நிதி ஆண்டிலாவது கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்னும் பல நியாயமான கோரிக்கைகள் இருக்கின்றன. அவைகளுக்கு இப்பொழுதாவது விமோசனம் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு அமர்கிறேன். வணக்கம் நன்றி.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1971–72ம் ஆண்டு இந்த இலாகா 719.57 லட்சம் ரூபாய் செலவிட்டார்கள். ஆனால் இந்த ஆண்டில், 1972–73-ம் ஆண்டில் அதைவிடக் கூடுதலாக, 866.88 லட்சம் செலவிட இருக்கிறார்கள். அதில் கல்விக்காக மட்டும் 562.31 லட்சம் செலவிடப்பட இருப்பதாகக் கண்டு மெத்த மகிழ்ச்சியையும், நன்றியையும் தமிழக அரசுக்கும், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், அரிசன நல அமைச்சர் அவர்களுக்கும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன நல இலாகாவைப் பற்றிய என்னுடைய தாழ்மையான கருத்தை ஒன்றிரண்டு சொல்ல விழைகிறேன். அரிசன நல இலாகாவில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் அவ்வளவு பேரையும் அரிசனங்களிலிருந்தே நியமிக்க வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதுதான் அவர்களுக்கு மிகுந்த அக்கறை ஏற்படும். நன்றாக வேலை செய்வார்கள்.

தற்போது அரிசன நல இலாகாவில் பணியாற்றுகின்ற அதிகாரிகள் எல்லாம் ரெவின்யூ இலாகாவில் இருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்படுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். வருவாய்த் துறை அதிகாரிகள் எல்லாம் உழைத்து உழைத்து தங்களுடைய சக்தியை எல்லாம் செலவிட்ட பிறகு தாங்கள் ஓய்வு பெறுகின்ற நிலையில் இங்கு வந்து ஓய்வாகப் பணியாற்றுகிறார்களோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. எனவே, இப்படி வருவாய்த் துறையிலிருந்து அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்காமல் புதிதாகப் பட்டம் பெற்ற இளைஞர்களிலிருந்து தேர்ந்தெடுத்து அரிசன நல இலாகாவில் பணியாற்றுவதற்கான வாய்ப்பைக் கொடுத்தால் அந்த இளைஞர்கள் சிறப்பாக இந்த இலாகாவில் பணியாற்றுவார்கள் என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் என்ற அளவிலே குறைவாக இருக்கும் காரணத்தால் நம்முடைய அரசுக்கு இந்த இனத்திலே செலவு மிச்சப்படும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்பு-





கிறேன். மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் என்னுடைய இந்தத் தாழ்மையான கருத்தைப் பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

துப்புரவுப் பணியாளர்களுக்காகத் தனியாகக் கவனம் செலுத்தி எட்டு லட்சம் ரூபாய் ஆண்டுக்கு செலவிட்டு வருகிறார்கள். இது போதாது. இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரிசன மக்களிலேயே மிகப் பின்தங்கியவர்களாக இருக்கிற அருந்ததியர்கள் என்று சொல்லப்படுகிற பகுதியினரைப் பொறுத்து நிச்சயமாகத் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அருந்ததியர்களின் மூலத் தொழிலான செருப்புத் தைத்தல், தொம்பை, தொப்பரை தைத்தல் இந்த நாகரிக உலகில் நசிந்துவிட்டது. ஸ்பாஞ்சு செருப்பு, பாட்டா கம்பெனி செருப்புகள் வந்துவிட்ட காரணத்தாலும் மோட்டார் பம்புகள் வந்துவிட்ட காரணத்தாலும் அந்தத் தொழிலை நடத்தி வந்தவர்கள் இன்று விவசாயக் கூலிகளாக இருந்து அல்லலுறும் நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை கண்டிப்பாக தனிக் கவனம் செலுத்தியாக வேண்டும். கள்ளர் ரெக்ளமேஷன் என்ற தனி நிறுவனம் இருப்பது போல் அருந்ததியர் ரெக்ளமேஷன் என்ற தனி நிறுவனத்தை ஏற்படுத்தி அவர்களோடு துப்புரவுத் பணியாளர்களையும் சேர்த்து தனிக் கவனம் செலுத்தி அவர்களை முன்னேற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இதை அரசாங்கமே பார்த்துச் செய்தால்தான் அவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படுமே தவிர அவர்களில் யாரும் போராடிப் பெறக்கூடிய நிலையில் இல்லை. காருண்யமிக்க முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தக் கருத்தை மனத்தில் வைத்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித் தருவதில், மனைகள் ஒதுக்கித் தருவதில், ஜாரி செய்து கொடுப்பதில் மிகவும் காலதாமதமாகிறது. இதைக் கொஞ்சம் விரைவுபடுத்திக் கொடுக்க வேண்டும். வீட்டு மனைகள் ஜாரி செய்து கொடுப்பது மட்டுமல்ல; ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் கூலி பெற்று குடும்பத்தை நடத்தி வரும் நிலையில் இருக்கிறபடியால் அவர்களுக்கு வீட்டு மனை கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு வீடு கட்டவும் நிதி உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[புலவர் சி. பழனிச்சாமி] [1972 மார்ச் 20

1972–73ம் ஆண்டில் ஒரு வீட்டுக்கு 1,500 ரூபாய் ஒதுக்கித் தருவதாக அறிக்கையிலே பார்த்தேன். இந்தத் திட்டத்தை எங்கள் மதுரை மாவட்டத்திலும் செயல்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்புத் திட்டத்தில் 18 சதவிகிதம் அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட வேண்டுமென்றாலும் அந்த அளவுக்கு அவர்களைப் போடுவதில்லை என்று பரவலான புகார் மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு டாக்டர் அவர்களைத் தலைவராகவும், அரிசன நல அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்டுள்ள உயர்மட்டக் குழு மீண்டும் நன்றாகப் பரிசீலித்து 18 சதவிகிதம் இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா என்பதை ஆராய்ந்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மாணவர் விடுதிகளை எடுத்துக் கொண்டால் எங்கு பார்த்தாலும் வாடகைக் கட்டடங்களிலேயே இருக்கின்றன. பழனியில் ஆண்களுக்கு ஒன்றும், பெண்களுக்கு ஒன்றும் ஆக இரண்டு விடுதிகள் இருக்கின்றன. ஆண்களுக்கு இருக்கும் மாணவர் விடுதியில் தரை எல்லாம் உடைந்து மேடுபள்ளமாக இருக்கிறது. மாணவர்கள் பாய்விரித்துப் படுக்க வசதி இல்லை. பழனியிலுள்ள அந்த மாணவர்களுக்கு விடுதிக்காக தனியாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அரிசன நல மானியக் கோரிக்கையை வரவேற்று முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவர் அவர்களே, அரிசன நல மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இப்போது தமிழ்நாடு அரசு ஆற்றும் ஆக்கப் பணிகளை கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள் என்ற தலைப்புகளின்கீழ் தொகுக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே இந்தச் சலுகைகள் எல்லாம் உரிய காலத்திலே அந்தச் சமூகத்தாருக்குக் கிடைத்திருக்கின்றனவா என்றால் இல்லையென்று சொல்லுவது மிகையாகாது. இதிலே பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. எந்த இடத்திலே தடங்



1972 மார்ச் 20] [திரு. கு. அ. பொம்மன்]

கல்கள் ஏற்படுகின்றன என்பது பிரச்சினைக்குரியதாக இருப்பதால் இதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களை தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

"வேளாண்மை முன்னேற்றம்" என்று குறிப்பிட்டு, அதில் "பெரும்பான்மையான அரிசன மலைவாசி மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே, அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு உழவு மாடுகள், விதை, உழவுக் கருவிகள் முதலியன வாங்கவும், பாசனக் கிணறுகள் தோண்டவும் மானியம் வழங்கப்படுகிறது" என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சலுகைகள் நீலகிரி மாவட்டத்தில் இருப்பவர்களுக்குக் கிடைக்கிறதா இல்லையா என்று சொல்லப்போனால் இல்லை. அம்மக்களுக்கு நிலங்களே அரசு அளித்திருக்கும்போது இது பொருந்தாது. நீலகிரி மாவட்டத்தில் அரிசனங்களுக்கும், மற்ற நிலமற்ற விவசாயிகளுக்கும் நிலங்களை அளிப்பதற்குச் சர்க்கார் தடை உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்தத் தடை உத்தரவின் காரணமாக அவர்களுக்கு நிலப்பட்டா வழங்க முடிவதில்லை. இந்தக் கட்டுப்பாட்டை நீக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு எழுதியிருக்கிறார். இம்மன்றத்தில் மூலக் கேள்விகளும் உபகேள்விகளும் போட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் அப்போதெல்லாம் இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்றே சொல்லி வந்திருக்கிறார்கள். எவ்வளவு காலத்திற்கு இப்படிப் பரிசீலனையிலேயே இருந்து கொண்டிருக்கும் என்று தெரியவில்லை. இந்தத் தடை உத்தரவை உடனடியாக நீக்க வேண்டும். மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்கக் கூடிய சலுகையை நீலகிரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரிசன மக்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழில்களுக்குக் கருவிகள் வழங்குவதிலே குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டுந்தான் கருவிகள் வழங்குகிறார்கள். இவைகளைத் தவிர மற்றத் தொழில்களைச் செய்யக்கூடிய அரிசனங்களும் இருக்கிறார்கள். அரிசனங்கள் எந்தெந்தத் தொழில்களைச் செய்கிறார்களோ அந்தந்தத் தொழில்களுக்கேற்ப கருவிகளைக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களுக்கு கடன் உதவி செய்வதில் 22 குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும் கடன் உதவி செய்யப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை எங்கள் ஜில்லாவில் இந்தக்

[திரு. கு. அ. பொம்மன்] [1972 மார்ச் 20

கடனுக்காக 50 மனுக்கள் போடப்பட்டு மூன்று மனுக்களுக்கு மட்டுமே சிபாரிசு செய்யப்பட்டு 500 ரூபாய் வீதம் கொடுத்திருக்கிறார்கள். மீதி 47 மனுக்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை. காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மு.ப. 11·30. புதிய திட்டத்தின்படி 150 உறுப்பினர்கள் இருந்தால் பால்வழங்கு கூட்டுறவுச் சங்கம் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் ஜில்லாவிலிருந்து, தேவர்சோலையில் இருந்து ஒரு மனு இதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு 150 பேர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து பணம் கூட சம்பந்தப்பட்ட வங்கியில் கட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் மனு ஒன்றும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை உடனடியாக அமைக்க அதிகாரிகளுடன் கலந்து வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரம், வீட்டுவசதி, ஏனைய திட்டங்கள்—வீட்டு மனைகள் என்ற தலைப்பின்கீழ் "...... அரசாங்கப் புறம்போக்கு நிலங்கள் இருக்கும் இடங்களில் அவர்களுக்கு மனைகளுக்காக நிலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. அரசுக்குச் சொந்தமான நிலம் இல்லாத இடங்களில் தனியார் நிலங்களை அரசு விலைக்கு வாங்கி மனைகளாக வழங்குகின்றது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிராமப்புறங்களில்தான் மனைக்கட்டுகள் கொடுக்கிறார்களே தவிர நகரங்களில் அப்படிக் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, நகரங்களிலும் அவ்விதம் மனைக்கட்டுகள் கொடுப்பதற்கு அரசாங்க நிலம் இருந்தால் அரசாங்க நிலம் அல்லது மற்ற நிலங்களை எடுத்து மனைக் கட்டுகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "...... 1960 ஆம் ஆண்டிற்கு முன்பு குடியேறி வாழ்ந்து வரும் அரிசன (அந்நிலங்களை ஒப்படைப்பதில் வேறுவித தடையேதுமில்லை எனில்) ......" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 1960-க்கு முன்பே குடியேறியிருந்தால் அவர்கள் சிலயிடங்களில் வெளியேற்றப்படுகிறார்கள். ஆகவே அப்படி வெளியேற்றுவதை அரசாங்கம் தடுக்கக் கூடிய திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவம். எங்கள் பகுதியில் தேவர்சோலையில் ஒரு பள்ளிக்கூடத்தில் சரியான மருத்துவ வசதி இல்லாத காரணத்தினால் ஒரு சிறுவன் இறந்துவிட்டான் என்று சொல்லப்படுகிறது. ஒரு



1972 மார்ச் 20] [திரு. கு. அ. பொம்மன்]

மொபைல் மெடிக்கல் வான் கூடலூரில் இருக்கிறது. அந்த வான் இப்படிப்பட்ட இடங்களுக்குப் போவதில்லை. ஆகவே 15 நாட்களுக்கு ஒரு தடவையாவது இப்படிப்பட்ட இடங்களுக்கு அந்த மொபைல் மெடிக்கல் வான் போவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தீண்டாமைபற்றி மாண்புமிகு மொய்தீன் அவர்கள் விளக்கமாகச் சொல்லி விட்டார்கள். (மணியடிக்கப்பட்டது.) ஆகவே அதைப் பற்றி மேற்கொண்டு அதிகமாகச் சொல்வதற்கு நான் விரும்பவில்லை. பதினெட்டு பர்செண்ட் பற்றி உறுப்பினர்கள் தெளிவாகச் சொல்லி விட்டார்கள்.

கடைசியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதவித் தொகை வழங்கும்போது வருமான வரம்பு ரூ. 2,000-ல் இருந்து ரூ. 2,500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. எங்களைப் போன்ற உறுப்பினர்கள் மாதச் சம்பளம் பெறுவதால் அதையும் கணக்கில் எடுத்துக் கொள்வதால் இப்படிப்பட்ட சலுகைகளை எங்கள் குழந்தைகள் பெற முடியாமல் இருக்கிறது. என்னைப்போல்தான் மற்ற உறுப்பினர்களின் நிலையும் இருக்கின்றது. ஆகவே, சட்டசபை உறுப்பினர்கள், பார்லிமெண்ட் உறுப்பினர்கள் இவர்களுக்கெல்லாம் இதை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் ஒரு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

கூடலூர் தாலுகாபற்றி ஒரு வார்த்தை. கூடலூர் தாலுகாவில் இந்த அரசு ஜன்மி ஒழிப்புத் திட்டத்தை மேற்கொண்டு அது இன்று சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. ஆகவே இப்போது கிணறு வெட்டவோ அல்லது வீடு கட்டவோ ஜன்மியின் உத்தரவில்லாமல் செய்ய முடியாது. ஆகவே அங்குள்ள மக்கள் இந்தவிதமான சலுகைகளைப் பெறமுடியாத நிலை இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டில் இருந்து வருவதற்கு தாமதமாவதால், இந்தக் குறையைக் கவனித்து அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வீ. இராசகோபால்: தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத்துறை மானியக்கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்கள் சில வற்றை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

*[திரு. வீ. இராசகோபால்] [1972 மார்ச் 20*

இந்தக் கோரிக்கைக்காக ஏறக்குறைய எட்டரை கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ்காரரர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட இந்த ஆட்சியில் இரண்டு மடங்குக்கும் அதிகமாக இந்தப் பணம் ஒதுக்கப்பட்டு இருப்பது கண்டு உள்ளபடியே நான் பூரிப்படைகிறேன். ஆனால் ஒதுக்கப்படும் தொகையில் ஏறக்குறைய 60 சதவீதத்திற்கு மேல் கல்விக்காகச் செலவிடுகிறோம். இப்படி கல்விக்காக இவ்வளவு பெரிய தொகை செலவிடப்பட்டபோதிலும் கூட மாணவர்களிடையே பரவலாக ஒரு அதிருப்தி இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில் நான் தெரிந்து கொண்ட காரணம் என்னவென்றால், காங்கிரஸ்காரரர்கள் ஆட்சியில் இருந்தே, கடந்த இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக இந்த உதவித் தொகை அளிக்கப்பட்டு வருவதால் 'எந்த அரசு வந்தாலும் இதைக் கொடுத்துக்கொண்டுதான் இருக்கப் போகிறது என்ற அடிப்படையில் மாணவர்களிடம் இதைப் பற்றி ஒரு அலட்சியப் போக்கு இருந்து வருகிறது. எனவே கல்வித் துறையை விட சமுதாயத்தில் வேறு சில புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற என் விருப்பத்தைக் கூறிக்கொள்கிறேன்.

உதாரணமாக, ஆந்திராவில் ஆண்டு ஒன்றுக்கு 70,000 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் நம் மாநிலத்திலும் கிராமப்புறங்களில் ஆயிரக்கணக்கான வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தினால்தான் இன்றையதினம் ஹரிஜன மக்களுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவிற்குப் பாடுபடுகிறது என்பதை அவர்கள் அறியக்கூடும். இப்படிப்பட்ட பரவலான அதிருப்தி இருப்பதைக் கண்டு உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். என் வேதனைக்குக் காரணம் இவ்வளவு பணம் செலவழித்தும் அதிருப்தி இருக்கிறதே என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகு எல்லாத் துறைகளிலும் ஹரிஜனங்களுக்கு பலவிதச் சலுகைகள் கொடுக்கப்பட்டுவருகின்றன.

உத்தியோகத்துறையில் கூட 18 சதவீதம், 2 சதவீதம் அதிகப்படுத்திக் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. இருந்தும் மாணவர்களிடையே அதிருப்தி இருப்பதை நான் அறிகிறேன். அவர்களிடத்தில்கூட நான் கேட்டேன். காங்கிரஸ்காரரர்கள் கொடுத்ததைவிட குறைத்திருக்கிறோமா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இல்லை என்று கூறியிருக்கிறார்கள். எதை வைத்து திராவிட



*1972 மார்ச் 20] [திரு. வீ. இராசகோபால்]*

முன்னேற்றக் கழக ஆட்சி சரியான சலுகைகள் கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள் என்று கேட்டால் முழிக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுகள் நீங்குவதற்கு சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.

கிராமப்புறங்களில் ஏராளமான வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். வீட்டு மனைகள் ஏராளமாக ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்புத் திட்டம் பற்றி கூறப்படுகிறது. இங்கு நிதிநிலை அறிக்கை மீது பேசிய உறுப்பினர் திரு. எல். கணேசன் அவர்கள் அதுபற்றி அழகாகக் கூறியிருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகியும்கூட, மனிதன் சந்திரனில் காலை வைத்திருக்கும் இந்தக் காலத்திலும்கூட தீண்டாமை என்பது பரவலாக இருக்கிறது. தீண்டாமைக் கொடுமை ஒழிந்திருக்கிறதே தவிர தீண்டாமை இருந்துகொண்டு தான் இருக்கிறது. நீர் பூத்த நெருப்பு போல் தீண்டாமை இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதை எப்படியாவது ஒழிக்க வேண்டும். இதற்கான புரட்சிகரமான மாற்றத்தை திராவிட முன்னேற்றக் கழகம்தான் சமுதாயத்தில் ஏற்படுத்த முடியும். திராவிட முன்னேற்றக் கழகம் மற்றக் கட்சிகள் போன்றதல்ல. ஏற்கனவே சமுதாய சீர்த்திருத்த இயக்கமாக பாடுபட்டு பிறகு அரசியல் கட்சியாக மாறியிருக்கிற ஒரு கட்சியாகும் திராவிட முன்னேற்றக் கழகம். இப்படி இரு துறைகளிலும் பணியாற்றக்கூடிய கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பதினால்தான் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால்தான் தீண்டாமையை ஒழிக்க முடியும். ஆகவே அதற்கான தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வழக்கறிஞர்களாக வரக்கூடிய ஹரிஜனங்களுக்கு குறைந்தது மூன்று ஆண்டுக் காலமாவது மாதம் ஒன்றுக்கு ரூ. 500 அல்லது ரூ. 300 அவர்களுக்கு கொடுத்து உதவி செய்ய வேண்டும். நான் இதை அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். ஹரிஜனங்கள் வழக்கறிஞர்களாக வரும்போது அவர்கள் ப்ராக்டீஸ் செய்யும்போது முதலில் ஒருதுளி கூட அவர்களுக்கு வருமானம் வருவது கிடையாது. ஒரு பைசாகூட சம்பாதிக்க முடியாது என்ற நிலையில் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இந்த நிலையைப் போக்க தயவுசெய்து மாண்புமிகு டாக்டர் கலைஞர்

அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு அல்லது மூன்று ஆண்டுக்காலத்திற்கு அவர்களுக்கு ஒரு உதவித் தொகை கொடுத்தால் ஹரிஜன மக்களிலிருந்து நல்ல திறமையான வழக்கறிஞர்களை நாம் உருவாக்க முடியும் என்ற என் கருத்தினை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தெள்ளாறு, கீழ்கொடுங்காலூர் இவ்விரு இடங்களில் மாணவர்கள் விடுதி ஏற்படுத்த வேண்டுமென்று சென்ற முறையே கேட்டுக்கொண்டேன். அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களின் முன்னேற்றம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால்தான் ஏற்பட முடியுமே தவிர, இந்த ஆட்சிக்குப் பிறகு வேறு எந்த ஆட்சி வந்தாலும் எங்களுக்கு முன்னேற்றம் இருக்காது என்ற எனது தாழ்மையான கருத்தைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. சி. பாண்டுரங்கம்: தலைவர் அவர்களே, இந்த அரிசன நலத்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

அரிசனங்கள், அரிசனங்கள் என்று சொல்வதைவிட நம் தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்வதையே நான் விரும்புகிறேன். மகாத்மா காந்தி அடிகள் அன்று அரிசனங்கள் என்று சொன்னதற்குக் காரணம், இவர்கள் மனிதர்களால் கைவிடப்பட்டதால் இவர்கள் கடவுளின் குழந்தைகள் என்று அப்படிப் பெயரிட்டார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொன்னால் தான் நம் நாட்டிலுள்ள மற்றவர்கள் தாழ்த்தி வைக்கப்பட்டிருப்பவர்களை முன்னேற்ற வேண்டும், அவர்களும் முன்னேற வேண்டும், அவர்கள் முன்னேறுவதற்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணக் கூடிய நிலை ஏற்படும். மக்கள் மனதில் அப்படிப்பட்டதொரு எண்ணம் ஏற்படவேண்டுமென்றால் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற சொல்தான் பொருந்தும். தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லும் போது இவர்கள் எதிலும் தாழ்ந்தவர்கள் அல்ல. அறிவாலும் தாழ்ந்தவர்கள் அல்ல. காலம் சென்ற டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்த நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை



அமைத்துக்கொடுத்தார்கள். இந்த நாட்டிலுள்ள மக்கள் மக்களாக மதிக்கப்படவேண்டுமென்ற முறையில் *எல்லாவற்றையும் தொகுத்து ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துக்கொடுத்தார்கள். அப்படிப்பட்ட மேதைகள்கூட அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் தோன்றுகிறார்கள். எனவே அவர்கள் தாழ்ந்தவர்கள் அல்ல, மற்றவர்களால் தாழ்த்தி வைக்கப்பட்டு இருக்கிறவர்கள் என்று சொல்வது பொருந்தும்.

இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன், ஒரு 10 வருட காலத்திற்கு இந்த வீட்டு மனைகள் வழங்குதல், மாடு வாங்கித் தருதல், கிணறு வெட்டித் தருதல் ஆகியவற்றை நிறுத்தி வைத்து விட்டு, அவர்கள் உண்மையாகவே மக்களால் மதிக்கப்பட வேண்டுமானால், இந்த நாட்டிலே மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டுமானால், அந்த அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியில் முன்னேற வேண்டும். கல்வி இருந்தால்தான் அவர்களை மற்றவர்கள் மதிப்பார்கள். என்னதான் பண வசதி, சொத்து சுதந்திரம் இருந்தாலும் அவர்களுக்கு நாகரீகம், கல்வி இல்லாவிட்டால் உண்மையிலேயே ஒதுக்கி வைக்கப்படுவார்கள். ஆகவே, அவர்கள் மக்களாக மதிக்கப்பட வேண்டுமானால் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மக்களையும் கல்வி அறிவு பெற்றவர்களாகச் செய்ய வேண்டும்.

இதற்காக எல்லாச் சலுகைகளையும் ஒரு 10 ஆண்டு காலத்திற்கு நிறுத்தி வைத்து விட்டு, எத்தனையோ புரட்சிகளைச் செய்யும் தமிழக அரசு, தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் கல்வி அறிவு பெற்றவர்களாகச் செய்யும் ஒரு அறிவுப்புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தாலுக்காக்களில்—தமிழகத்தில் 125 தாலுக்காக்கள் இருக்கிறது என்று சொன்னால், ஒவ்வொரு தாலுக்காவிலும் உள்ள 5 வயதுக்கு மேற்பட்ட, படிக்கும் வயதை எட்டிய குழந்தைகளை பெற்றுக் கொண்டு வந்து, 10 ஆண்டு காலத்தில், ஒவ்வொரு தாலுக்காவாக இதைச் செய்து, ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு ஹாஸ்டல் வைத்து, எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி பயிற்சி அளிக்க வேண்டும். இதை ஒரு 10 ஆண்டு கால திட்டமாகப் போட்டு அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்தால், ஒரு 10 ஆண்டு காலத்தில் தமிழ் நாட்டில் உள்ள எல்லா அரிசன மாணவர்களும் கல்வி அறிவு பெற்றவர்களாக ஆகி விடுவார்கள். பெற்றோர்களிடத்தில் இருந்தால் அறியாமை, கல்லாமை, இல்லாமை

என்ற நிலைமை இருக்கும். ஆகவே, அவர்களை அந்தப் பாதையிலிருந்து தனியாகப் பிரித்து, எல்லா மாணவர்களுக்கும் ஒரு 5–வது வரை படிப்பு கொடுத்துவிட்டால் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும். அந்த சமூகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடு கொடுத்தால் என்ன செய்கிறான்? 4–5 மாதத்தில் விற்று விடுகிறான். நிலம் கொடுத்தால்—அதை வேறு ஒருவருக்கு ரிஜிஸ்தர் செய்ய முடியவில்லை என்றாலும், 200–300 பெற்றுக்கொண்டு விற்று விடுகிறான். உண்மையிலேயே அந்த மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமானால், அவர்கள் முன்னுக்கு வரவேண்டுமானால் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கல்வி அறிவு கொடுக்க அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். நானே பார்த்தேன், மெடிகல் காலேஜில் இருக்கும்படியான ஒரு பையன் 4 அணா பையோடு வந்தான். நான் மெடிகல் காலேஜில் சேரப்போகிறேன் என்றான். அப்படிப்பட்ட பிள்ளைகள் கூட கல்லூரிகளில் படிக்க வருகிறார்கள். மெடிகல் காலேஜ் ஹாஸ்டலில் மாதம் ரூ. 120, ரூ. 130 ஆகிறது என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு, கல்விக்காக கட்ட வேண்டிய பணம் இருக்கிறது. புத்தகம் வாங்கவேண்டியிருக்கிறது. ஆனால் அரசாங்கம் இப்போது தரும் உதவிப்பணம் வருஷத்திற்கு ரூ. 600 தான். 10 மாதத்திற்கு என்று கணக்கு எடுத்துக்கொண்டால் கூட, ஒரு மாதத்திற்கு ரூ. 60 தான் வருகிறது. ஆகவே, அரிசன மாணவனைப் பொறுத்தாவது, ஹாஸ்டல் செலவை அரசாங்கம் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் இந்தமாதிரி தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள, மிகத் தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ளவர்கள் முன்னுக்கு வரமுடியும். ஆகவே, இப்படிப்பட்ட ஏழை மாணவர்களின் ஹாஸ்டல் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

படித்து பட்டம் பெற்ற அரிசன மாணவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். உடனடியாக உத்தியோகம் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் அந்த சமுதாயத்தினிடையே ஒரு அதிருப்தி ஏற்பட்டு விடும். படித்தவனுக்கே ஒன்றும் உத்தியோகம் கிடைக்கவில்லை என்று சொல்லி மற்றவர்களும் படிக்க முன்வராமல் இருந்து விடுவார்கள். ஆகவே, எல்லா அரிசன மாணவர்களுக்கும், படித்து பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)





திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த அரிசன நல இலாகா செய்யும் நல்ல காரியங்களைக் கொண்டிருக்கின்ற இந்த மானியக்கோரிக்கையை ஒட்டியும் என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஒட்டியும் சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன்.

எத்தனை திட்டங்கள் தீண்டாமை ஒழிக்கவேண்டுமென்று இருந்தாலும் கூட, தீண்டாமை இருந்து கொண்டே வருகின்றது. இந்த தீண்டாமையை ஒழிப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்று பார்க்கும் போது, அரசு கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களுக்கு பரிசுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை பல மக்கள் அவர்களாகவே தேர்ந்தெடுத்து திருமணம் செய்துகொண்டு பரிசு வாங்குவதை விட, இந்த அரிசன நல இலாகாவே ஒரு "இன்டர் காஸ்ட் மேட்டிரிமோனியல் பிரோ" ஏற்படுத்தி அதன் மூலமாக ஒழுங்கான முறையில் யார் அரிசன வகுப்பைச் சார்ந்த ஆணையோ, பெண்ணையோ திருமணம் செதுகொள்வதற்கு முன்வருகிறார்களோ அவர்களை அதிலே பதிவு செய்து கொண்டு, அவர்களுக்கு தகுந்தபடி திருமணம் செய்து வைத்து பரிசு கொடுத்தால் அது மிகவும் வரவேற்கத்தக்கதாகும் என்று கூறிக் கொள்கிறேன். இந்த முறையைக் கையாண்டால்தான் இந்த ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க முடியும். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் கூட இந்த ஜாதி வேறுபாடு ஒழியவேண்டுமானால் கலப்புத் திருமணம் அவசியம் என்று சொன்னார்கள். அது மிகவும் அவசியம்.

நான் மற்றொன்றும் பார்க்கிறேன். என்னுடைய கட்சி ஆட்சி செய்த காலத்திலும் சரி, இப்போது இருக்கின்ற அரசு காலத்திலும் சரி, தொடர்ந்து இந்த மானியம் வரும்போது எல்லாம் அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் அதிகப்படியாக பேசுவதற்கு வாய்ப்பு; அரிசன வகுப்பைச் சார்ந்தவர்தான் அந்த இலாகாவிற்கு டைரக்டராக இருக்கவேண்டும்; அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் அந்தக் குழுவில் இருக்கவேண்டும்; இப்படி அரிசன வகுப்பினரைப் பார்த்துக்கொள்வதற்கு அரிசனங்களே இருந்து கொண்டிருந்தால் அப்படி அந்த இனத்தைச் சார்ந்தவர்கள் இவர்களைப்பற்றியும் இவர்கள் பிரச்சனையையும் தெரிந்துகொள்வது எப்படி. ஜாதி எராடிகேஷன் ப்ரோகிராம் என்று வைத்து—எப்படி பல வியாதிகளை எராடிகேட் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு சில இடங்களில் அவை இருந்து கொண்டு இருக்கிறதோ அப்படித்தான் இந்த ஜாதிப் பிரச்சனையும்—இதை

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1972 மார்ச் 20

எராடிகேட் செய்யவேண்டும்.We must have an Eradication Programme to eradicate eastes in the country. Instead of perpetuating it, it is better that we eradicate it.

இந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்காக இந்த அரிசன நல இலாகா ஏற்பட்டபோது, முதன்முதலாக அதற்குத் தலைவராக இருந்தவர்கள் திரு. பாஷ்யம் அய்யங்கார் ஆவார்கள். உயர் வகுப்பைச் சார்ந்த வர்களாக இருந்தாலும், அவர்கள் அந்த அரிசன இனத்தவர்கள் வாழ்க்கை நல்ல விதத்தில் அமையவேண்டுமென்பதற்காக சிறந்த ஆலோசனைகளைத் தந்தார்கள், சேவையும் செய்தார்கள் என்பதை மறந்து விட முடியாது. அரிசன இலாகாவில், அரிசன இனத்தைச் சார்ந்த ஒருவரே டைரக்டராக நியமித்தால் என்ன ஆகிறது என்றால், அந்த டைரக்டர் நாம் அரிசன இனத்தைச் சார்ந்தவன் நாம் ஏதாவது நன்மை அரிஜனங்களுக்கு செய்து விட்டால், மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ, தனிப்பட்ட சலுகை தந்து விட்டோம் என்று நினைப்பார்களோ என்ற மனப்பான்மை ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்றும் அதற்குத் தகுந்த முறையில் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நிலப்பட்டா செய்வதில் வெகு அதிகமாக விவசாயத்திற்கும் வீடு கட்டுவதற்கும் தான் செய்யப்படுகிறது. என்னுடைய தொகுதியைச் சார்ந்த திருவளர்சோலையில் இருக்கும் அரிசன மக்களுக்கு இன்னும் பட்டா செய்து கொடுக்கவில்லை. அரிசன நல இலாகா அமைச்சர் அங்கு சென்றபோது அவர்களிடம் முறையிட்டும் கூட இன்னும் அவர்களுக்கு செய்துகொடுக்கவில்லை. இதையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எத்தனையோ உயர்மட்டக்குழுக்கள் ஷெட்யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப்ஸ் நலனுக்காக வந்து விட்டன. இளையபெருமாள் கமிட்டி என்று அமைக்கப்பட்டு அதன் ரிப்போர்ட் கூட வந்து விட்டது. அந்த அறிக்கையில் என்ன சிபார்சு செய்தார்கள், அந்த சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்பட்டனவா என்று தெரியவில்லை. இப்போது 18 சதவிகிதம் ரிசர்வேஷன் கொடுத்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இந்த 18 சதவிகிதம் ரிசர்வேஷன்—குற்றமாகச் சொல்லவில்லை—நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா



1972 மார்ச் 20] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

என்பதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். எந்த இலாகாவை எடுத்துக் கொண்டாலும் இந்த 18 சதவிகிதம் ரிசர்வேஷன் ஏற்படுத்தி வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு உயர்மட்டக் குழு 1969-70-ல் அறிக்கை கொடுத்திருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கையில் என்னென்ன சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் இந்தச் சபையில் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது எடுத்துக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல கிராமங்களில் அரிசன மக்களுக்கு, அவர்கள் வாழ்கின்ற இடங்களில் பாதைகள் இல்லாத பெருங்குறைகள் இருக் கின்றன. நேற்று கூட முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், கனெக்டிங் ரோட்ஸ் போடுவதாகச் சொன்னார்கள். கிராமங்களில் சரியான பாதையில்லாத காரணத்தினால் அவர்கள் பிணங்களை தூக்கிக்கொண்டு சுடுகாட்டுக்குச் செல்லுவதற்குக் கூட வழி இல்லாமல் இருக்கிறது. இதன் காரணமாக பல இடங்களில் பிணங்களைக் கீழே போட்டுவிட்டு தவிக்கிறார்கள். ஏனென்றால் ஜாதி இந்துக்கள் வசிக்கின்ற இடங்களில் அவர்கள் போகமுடியாத நிலைமையில், செத்தபிறகும் கூட சரியான முறையில், ஒழுங்கான முறையில், நிம்மதியாக பிணங்களை எடுத்துச் செல்வதற்கு பாதைகள் இல்லாத நிலைமையில் அவர்கள் மிகவும் துன்பத்திற்குள்ளாவதைப் பார்க்கிறோம். ஆகவே, ஆங்காங்கு கிராமங்களில் அரிசனங்கள் வாழும் இடங்களில் சரியான முறையில் பாதைகளை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாசிகளுக்கும், அரிசனங்களுக்கும் ஏற்படக்கூடிய வன்முறை களையும், துன்பங்களையும், கொடுமைகளையும் தடுத்து நிறுத்தும் வண்ணம் நடமாடும் காவல்படைகள் அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. நடமாடும் காவலர்கள் இந்தக் கொடுமைகள் ஏற்படாவண்ணம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று ஒரு அறிக்கையை மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது அரசுக்கு சமர்ப் பிக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தனிப்பட்ட துறையில் நடக்கக்கூடிய பல ஹாஸ்டல்களை நல்ல முறையில் இயக்குவதற்கு நிதி வசதி இல்லாததால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே கொடுக்கக்கூடிய நிதியை சற்று அதிகப்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1972 மார்ச் 20

ஷெட்யூல்டு காஸ்டு ஹாஸ்டல்களில் 483 ஹாஸ்டல்களில், 436 ஹாஸ்டல்கள் வாடகைக் கட்டடங்களில்தான் இருக்கின்றன. வாடகைக் கட்டடங்களில் இருக்கின்ற காரணத்தினுல் அந்தக் கட்டடங்களுடைய சொந்தக்காரர்கள் அவைகளுக்கு எந்தவிதமான ரிபேரும் செய்ய முன்வருவதில்லே. ஆகவே அந்த ஹாஸ்டல்கள் பலவிதங்களில் பழுதடைந்து, சில மேற்கூரை கூட இல்லாமல் இருக்கின்றன. நான் ஒன்றையும் அதிகப்படுத்திச் சொல்லவில்லே. சில ஹாஸ்டல்களே நானே நேரில் பார்த்திருக்கிற காரணத்தினுல் தான், இருக்கிற நிலேமையை எடுத்துச் சொல்கிறேன். அரசாங்கம் எடுத்து நடத்தக் கூடிய ஹாஸ்டல்களுக்கு ஒரு பேஸ்டு ப்ரோகிராம் மோர் ஹாஸ்டல்ஸ் வில் பி டேகன் அப் நெக்ஸ்ட் இயர்". இப்படி மோர் ஹாஸ்டல்ஸ் வில் பி டேகன் அப் நெக்ஸ்ட் இயர்": இப்படி நான்கு நான்காக எடுத்துக்கொண்டால், எத்தனே ஆண்டுகளுக்குப் பிறகு இந்த 488 ஹாஸ்டல்களேயும் எடுத்துக்கொண்டு சரிக்கட்ட முடியும்? பல ஆண்டு காலம் ஆகிவிடும். இன்னும் புதிய ஹாஸ் டல்கள் ஏற்படவேண்டிய நிலேமையும் உருவாகலாம். ஆகவே, மொத்தமாக 50 சதவிகித ஹாஸ்டல்களேயாவது அரசாங்கம் எடுத்துக்கொள்ள முன்வரவேண்டும். அதற்கு நிதி அதிகமாகத் தேவைப்படும் என்பதை நான் அறிவேன். இருந்தாலும், அப்படிச் செய்வதுதான் நல்ல முறையாக இருக்கும், இந்தப் பிரச்னேயை தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

சென்னேயில் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு இயங்கி வருகிறது. அதிலே ஏறத்தாழ 30, 40 விழுக்காடு வரையில் அரிசனங்கள் தான் ஸ்லம்களில் வசிக்கிருர்கள். ஸ்லம் என்று சொல்லும்போதே அரிசனங்கள் மாத்திரம் வசிக்கின்ற இடம் அல்ல, பலரும் சேர்ந்து வசதிகள் குறைவாக இருக்கிற காரணத்தினுல் வசிக்கக்கூடிய இடம், இடம் மாற்றிக்கொள்ள வசதியில்லாத காரணத்தினுல் பலரும் வசிக்கக்கூடிய ஒரு இடம். ஆனுல், நடைமுறையில் ஸ்லம் என்ருல் ஜாதி அடிப்படையில் அரிசனங்கள் வசிக்கின்ற இடம் என்று வழங்கிக்கொண்டு வருகிறது. சென்னேயில் அரிசனங்கள் வசிக்கக் கூடிய இடங்களில் ஏற்கனவே நாம் ஜில்லாக்களில் கொடுப்பது போல், ரூ. 1,500 வரையிலும் வீடு கட்டிக்கொள்வதற்கு கொடுக் கின்ருேம். அதற்கேற்ப நாம் கட்டிக் கொடுக்கின்ற வீடுகளுக்கு 1,500 ரூபாய் (exemption) கொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் சென்னேயிலும் இன்னும்



1972 மார்ச் 20] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

அவர்களுக்கு சலுகை காட்டி, அவர்களுக்காக கட்டக்கூடிய வீடு களுக்கு எந்த அளவு பணம் செலவாகின்றதோ, அதிலே ரூ. 1,500 குறைத்து, மற்ற தொகையை தான் அவர்களிடம் வாங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

நான் சொன்னவற்றையெல்லாம் தயவு செய்து அரசு மனதில் வைத்து நல்ல முறையிலே இந்த ஜாதி வேறுபாட்டை ஒழிப்பதற்கு பாடுபட்டு, சிறந்த முறையில் பணியாற்றவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு பேரவை தலேவர் அவர்களே, இன்றைக்கு அரிசன நலத் துறையின் மூலமாக 1972–73-ல் நடத்த இருக்கும் பல திட்டங்களுக்கும் ஏறத்தாழ ரூ. 8½ கோடி ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுள்ள கோரிக்கை யின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களே எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலேவர் தலேமை)

நேற்றையதினம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல் ரூ. 100 வெட்டவேண்டும் என்று கூறுவது ஒரு சம்பிரதாயமாக இருந்தாலும், இன்னும் மேலும் மேலும் மக்க ளுடைய நல்வாழ்விற்காக இப்படிப்பட்ட தொகைகள் செலவழிக்கப் படவேண்டும், தொகைகள் அதிகப்படியாக வேண்டும் என்று ஒவ்வொருவரும் எண்ணம் கொண்டிருக்கிருர்கள். எந்தெந்த திட்டங்களின் பலங்கள் அந்த மக்களுக்கு சரியான முறையில் போய்ச் சேர முடியாத நிலேயில் இருக்கின்றன என்பதைப்பற்றியும், இன்னும் சமுதாய அமைப்பு முறையில் மக்கள் படுகின்ற துன்பங்கள், கஷ்டங்கள் இவைகளேப்பற்றியும் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே சுட்டிக்காட்டியிருக்கிருர்கள். அவர்களுக் கெல்லாம் நான் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நாளுக்கு நாள், ஆண்டுக்கு ஆண்டு இந்த அரசு அரிசன மக்களுடைய நல்வாழ்விற்காக புதிய புதிய திட்டங்களேயெல்லாம் உருவாக்கி, செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்தாகவேண்டும். அதுபோன்று ஆண்டுக்கு

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 20

ஆண்டு அதிகப்படியான தொகை செலவழிக்கப்பட வேண்டும் என்ற முறையில் அரிசன மக்களது நல்வாழ்விற்காக எப்படிப்பட்ட வகைகளிலே அதிகமான தொகைகள் செலவழிக்கப்படுகின்றன என்பதை நான் கொடுத்த விளக்க அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறேன். என்னென்ன புதிய புதிய திட்டங்களை இந்த ஆண்டு ஏற்றுக்கொண்டிருக்கிறோம், பழைய திட்டங்கள் எவை எவை மேலும் அதிக நிதி ஒதுக்கப்படுவதன் மூலம் செயல்பட இருக்கின்றன என்பதை எல்லாம் நான் இந்த அறிக்கையின் மூலம் உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.

ஏறத்தாழ 14 உறுப்பினர்கள் இந்த மானிய விவாதத்தில் கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். இந்த விளக்க உரையில் என்னென்ன புதிய திட்டங்கள் இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் இன்னும் சரியாக கவனிக்கவில்லை என்று தான் நான் கருதுகிறேன். மதம் மாறியவர்களுக்கு அரசாங்கம் சலுகைகள் பல அளிக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். குறிப்பாக அரிசனங்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்களுக்கு சலுகைகள் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அரிசனங்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் எல்லாவற்றையும் பெறுவதற்கு மதம் மாறிய அரிசனங்களும் இந்தப் பட்டியலில் இடம் பெற வேண்டும் என்றால், மத்திய அரசு தான் அதற்கான ஆணையை பிறப்பிக்கவேண்டும். இந்த விளக்க உரையிலே மூன்றாவது பக்கத்தில்,
"புத்த மதம் மாறியுள்ள அரிசன மாணவ மாணவிகளுக்கும் நடப்பு ஆண்டு முதல் மேல் படிப்பு உதவித் தொகைகள் வழங்க மத்திய அரசு உத்தரவு போட்டுத் தான் அவர்களுக்கு மேல் படிப்பிற்கான என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. புத்த மதம் மாறியவர்களுக்குக் அரசு உத்தேசித்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. புத்த மதம் மாறியவர்களுக்குக் கூட மத்திய அரசு உத்தரவு போட்டுத் தான் அவர்களுக்கு மேல் படிப்பிற்கான உதவித் தொகையை மத்திய அரசு வழங்க முன் வந்திருக்கிறது.

எனவே, மதம் மாறியவர்களுக்குச் செய்யும் சலுகைகள் எல்லாவற்றிற்கும் மத்திய அரசு ஆணையின் அடிப்படையில் தான் மாநில அரசு செய்யவேண்டும். இம்மாதிரி மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு மத்திய அரசு ஆணைக்கு உட்பட்டுத் தான் மாநில அரசு பல சலுகைகளை செய்து கொடுக்கவேண்டும். ஆனால், மாநில அரசு எடுக்கக்கூடிய திட்டங்களாக இருந்தால், இம்மாதிரி முறையில் மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கு சலுகைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மாநில அரசு இம்மாதிரி மதம் மாறிய தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதுகிறது



1972 மார்ச் 20] [திருமதி சத்தியவாணிமுத்து]

என்பதற்கு, ஆளும் கட்சியின் சார்பில் சமீபத்தில் மேலவை உறுப்பினராக தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ சமூதாயத்தினர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது என்பதே சான்றாகும். மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு ஆளும் கட்சியும், ஆட்சியும் ஆதரவு தர தயாராக இருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு செய்யக்கூடிய திட்டங்களுக்கெல்லாம் எங்களால் எதுவும் செய்ய முடியாது. மாநில அரசைப் பொறுத்த வரையில் கல்வித் துறையாக இருந்தாலும் சரி, பொருளாதார முன்னேற்ற திட்டமாக இருந்தாலும் சரி, மதம் மாறியவர்களுக்கு சலுகை காட்டுவதற்கு என்றைக்கும் தயங்காது என்பதை முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதுபோன்றே "லோன் ஸ்காலர்ஷிப்" கடந்த ஆண்டில் ந ப 12.00
கொடுத்துக்கொண்டு வந்ததுபோல இந்த ஆண்டும் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இது ஒன்றும் புதிய திட்டம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள். வீடுகள் கட்டுவதுபற்றி அதிகமாகக் குறிப்பிடப்பட்டது. இதுவரையிலும் ரூ. 940-க்குத்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால் இந்த ஆண்டிலிருந்து இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்று இச்சட்ட மன்றத்திலும் வேறு பல இடங்களிலும் குறைகள் சொல்லப்பட்டதன் காரணமாக இந்த ஆண்டிலிருந்து ரூ. 940-க்குப் பதிலாக ரூ. 1,500-ல் வீடுகளைக் கட்டித்தருவது என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் இதைக் கவனிக்கவில்லை என்றே கருதுகிறேன். இதுபற்றி மத்திய அரசுக்கும் பலர் புகார்கள் அனுப்பியதன் விளைவாக அவர்கள் அப்படிப்பட்ட புகார்களை மாநில அரசுக்கு அனுப்பி ரூ. 940-ல் வீடுகளைக் கட்டினால் போதாது ரூ. 5,000-க்கு வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று அதற்குரிய வரைவை அனுப்புங்கள் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கேட்டார்கள். நாங்களும் அப்படிப்பட்ட வரைவுடன் மத்திய அரசுக்கு பதில் அனுப்பியிருந்தோம். ஆனால், இன்று வரையில் அதற்குப் பதில் கிடைக்கவில்லை அங்கிருந்து. மத்திய அரசில் வரைவினைக் கேட்டார்களே தவிர ரூ. 3,000, ரூ. 5,000 செலவில் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று சொன்னார்களே தவிர, நாம் அனுப்பிய வரைவினை அவர்கள் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. "வீடுகளுக்கான தொகையினை உயர்த்திட வேண்டும் என்று சொன்னால் அதற்காக ஆகும் கூடுதல் செலவுகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கேட்டால் அதை அவர்கள் கொடுக்க மறுத்து விட்டார்கள்.

வீடு கட்டுவது எப்படி என்று திட்டம் கொடுப்பவர்கள் அதற்காகும் கூடுதலான தொகையினை அவர்கள் கொடுத்தால் நலமாக இருக்கும். இதை விடுத்து மாநில அரசுகளின் திட்டங்களில் மத்திய அரசு குறுக்கிட்டு "இப்படிக் கட்ட வேண்டும், அப்படிக் கட்டக்கூடாது" என்று சொன்னால் இது மத்திய அரசின் குறுக்கீடு அல்லவா என்றுதான் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காண்பிக்க விரும்புகிறேன். நாம் போடும் திட்டங்கள் போதுமானதாக இல்லை என்று எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் அதற்கு ஏற்ற வகையில் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால் பரவாயில்லை. மாறாக அவற்றிற்கு பணம் கொடுக்க மாட்டோம் என்று சொல்லும் மத்திய அரசு ரூ. 5,000-க்குக் கட்டு, ரூ. 10,000-க்கு கட்டு என்று உத்தரவிட்டால் அது எப்படி சாத்தியமாகும்? எனவேதான் அப்படிப்பட்டதொரு திட்டத்தினை செயல்படுத்த முடியவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படிப்பட்ட விளக்கத்தினைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் இச்சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், கேரளத்திலும் ஆந்திரத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தனியானதொரு வீடுகட்டும் கழகத்தினை ஏற்படுத்தி, அதற்கு ஆயுள் காப்பீடுக் கழகத்தின் மூலம் கடன்தொகை பெற்று, பன்னிரண்டு கோடி, ஐந்து கோடி என்ற அளவில் நிதி உதவி பெற்று அதற்கான முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டி இங்கிருந்து அதிகாரிகளைக் கேரளத்திற்கும் ஆந்திரத்திற்கும் அனுப்பிவைத்து, அதற்குப் பின்னர், அத்திட்டத்தின் பயனறிந்த பின்னர் தமிழ்நாடு அரிசன–மலைவாசி மக்கள் வீட்டுவசதிக் கழகம் என்று ஒன்றை நிறுவுவதற்கு இன்றையதினம் அரசு ஒப்புக்கொண்டு இருக்கிறது. ரூ. 1,500 என்ற அளவில் வீடுகளைக் கட்டுவதற்கு என்று ரூ. 9.42 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதுபோக, இப்படி ஆயுள்காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் உதவி பெற்று, தமிழ்நாடு அரிசன–மலைவாசி மக்கள் வீட்டுவசதிக் கழகம் என்று ஒன்றினை நிறுவி, அவர்களிடம் இத்தொகையினை அளித்து, அவர்கள் மூலம் மாவட்டவாரியாகப் பல நிறுவனங்களை அமைத்து மாநில அளவில் மத்திய நிறுவனத்தினை நிறுவி, இதன் மூலம் வீடுகளைக் கட்டிக்கொடுத்து, மாதத்தவணைகள் முறையில் அத்தொகையினை மீண்டும் பெறுவதற்கான திட்டத்தினை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இதிலேகூட அவர்கள் பெறும் ஊதியத்திற்கேற்ற





முறையில் ரூ. 125 மாத வருவாய் உள்ளவர்களுக்கு என்று ஒரு அமைப்பான வீடும், அதற்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு என்று ஒரு அமைப்பான வீடும் இப்படி சம்பளத்தின் அடிப்படையில் திட்டமிட்டு, இரண்டாயிரம் மூவாயிரம் என்று ரூபாய் பதினாயிரம் வரையில் கடன்களைக் கொடுப்பதற்கு இந்த வீடு கட்டும் கழகத்தின் மூலம் உதவி செய்யலாம். கடன் தொகையினைத் திருப்பிக் கட்டுகின்றவர்களுக்குத்தான் இந்தத் திட்டத்தின்கீழ் உதவியளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழகமும் இதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் கொள்கையளவில், அவர்களும் இப்படிப் புதிதாக ஏற்படுத்தப்படும் நிறுவனத்திற்கு ரூபாய் ஒரு கோடி கடனைக் கொடுப்பார்கள் என்று ஏதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்த புதிய நிறுவனத்தின் கீழ் கொடுக்கப்படும் கடன் தொகை, திருப்பிக் கட்டக்கூடியவர்களுக்குத்தான். கட்ட முடியாத நிலையிலுள்ள ஏழை அரிசன மக்கட்கு மாநில அரசின் செலவிலேயே அவர்களுக்கு ரூ. 1,500 வரையில் கட்டிக்கொடுக்கத் திட்டமிட்டு, இத்தொகையில் 75 சதவிகிதத்தினை மானியமாகக் கொடுக்கவும் மிச்சமுள்ள 25 சதவிகிதத்தினை கடனைக் கொடுக்கலாம் அல்லது அவர்களுடைய சரீர உழைப்பின்மூலம் ஈடுசெய்யலாம் என்ற வகையில் முடிவினை எடுத்திருக்கிறோம். இந்த இரண்டு திட்டங்கள் நீண்டகாலமாக மக்கள் மத்தியில் ஒரு குறையாக சொல்லப்பட்டு இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள இந்த இரண்டு திட்டங்கள் இந்த ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மருதாசலம் அவர்கள் குறிப்பிட்டார்கள், உபகாரச் சம்பளம் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை, வீடுகளும் ஆண்டுக்கு 5 அல்லது 10 என்றுதான் கட்டுகின்றார்கள் என்று, இப்படிப்பட்ட குறைகள் நீக்கப்பட வேண்டும் என்றுதான் இந்தத் திட்டங்களை மேற்கொண்டு இருக்கிறோம். இந்த வகையில் ஆண்டொன்றுக்கு குறைந்த பட்சம் பத்தாயிரம் வீடுகளை நாம் நமது மாநிலத்தில் கட்ட முடியும் என்று இப்போது நான் நம்புகிறேன்.

உபகாரச் சம்பளங்களைப் பொறுத்தமட்டில், அது இந்த இலாகாவிலிருந்து கல்வித் துறைக்கு உரிய காலத்தில் அனுப்பப் பட்டுவிடுகிறது. ஆனால் கல்வித் துறையில்தான் நாம் செக்காகக் கொடுக்கும் அதை பணமாகப் பெற்று உதவிபெறும் மாணவர்

களுக்குக் கொடுப்பதில் சற்று காலதாமதம் ஏற்படுகிறது. இது பற்றி பரிசீலனைசெய்து, இப்படிப்பட்ட தாமதங்கள் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அடுத்து, முனிசிபாலிடியில் ரிஸர்வேஷன் வேண்டும் என்று கேட்டார்கள். முனிசிபாலிடியில் ரிஸர்வேஷன் இருக்கவேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஒருவருக்குக்கூட வேலை தரப்படவில்லை என்று சொல்லுவது தவறாகும். அதே நகராட்சியில் அன்பழகன் என்ற ஒரு ஆசிரியருக்கு ஒரு வேலை கொடுத்திருக்கின்றார் கள். எனவே இந்தக் குறைகளையெல்லாம் உள்ளபடியே நன்கு விசாரித்தறிந்துகொள்ளாமல் மேலெழுந்தவாரியாக இங்கே சொல்வது சரியில்லை என்பதை நான் சுட்டிக்காண்பிக்க விரும்பு கிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, நான் மேலெழுந்த வாரியாகச் சொல்லவில்லை. தெரிந்துதான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மதிப்பிற்குரிய நண்பர் மருதாசலம் அவர்கள் குறிப்பிட்டது சரியில்லை என்பதை இங்கே சான்றுகளோடு பேசுகின்றேன்.

அடுத்து, கல்விக்கென செலவழித்திடும் ஐந்தரைக் கோடி ரூபாயை கல்வி இலாகாவே செலவழிக்க வேண்டும். இந்த இலாகா வில் செலவழிக்க வேண்டாம் என்று திரு. துரைராஜ் அவர்கள் குறிப் பிட்டார்கள். இந்தத் தொகையினை நாமே ஏற்றுச் செலவழிப்ப தால்தான் இவ்வளவு செலவழிக்க முடிகிறது. இவர்கள் இப்படிச் சொல்லுகின்றார்கள். ஆனால் மதிப்பிற்குரிய உறுப்பினர் பாண்டு ரங்கன் அவர்கள் கல்விக்கே அதிகத் தொகையினைச் செலவழிக்க வேண்டும் என்று வாதாடுகிறார்கள். மற்ற, மற்ற செலவுகளைக் குறைத்துக்கொண்டால்கூட இதில் அதிகமாகச் செலவிடவேண்டும் என்று குறிப்பிடுகின்றார்கள். கல்வியளிப்பதன் மூலம்தான் இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றத்தினைத் துரிதப்படுத்த முடியும். கல்வி யளிப்பதன் மூலம்தான் பல்வேறு துறைகளில் இவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித்தரமுடியும். படிக்காதவர்கள் அதிகமாக இருக்கும் கிராமங்கள்தோறும் இவர்கள் சென்று அவர்களுடைய கல்விக்காகவும் மற்ற மற்ற சமுதாயப் பணிகளுக்காகவும் இவர்களை ஈடுபடுத்த முடியும். எனவே இவர்களுடைய கல்விக்கென அதிக





நிதி ஒதுக்குவதுதான் சாலச்சிறந்தது என்று இந்த அரசு கருது கிறது. பொது நிலை அறிக்கையில்கூட நமது மாநிலத்தின் மொத்த வருவாயில் அதிக அளவிற்கு கல்விக்கென்றே அதிகமாகச் செலவழிக்கப்படுவதை உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே இவர்களுடைய கல்விக்காக ஒதுக்குவது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

அடுத்து, பட்டா அளிப்பதைப் பொறுத்தவரையில், சிற்சில இடங்களிலே பட்டா அளிப்பதில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். பல இடங்களிலே அரிசனங்கள் பயிரிட்டுக்கொண்டு வந்த நிலங்களை மற்றவர்கள் பிடுங்கிக்கொண்டுவிட்டதுபோன்ற நிகழ்ச்சிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவ்வப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறைகள் இருப்பின் இங்கே எடுத்துக்காண்பிப்பதுடன் அவ்வப்பொழுது உரிய நேரத்தில் உரிய இடத்தில் புகார்களை அனுப்பினால் தக்க நடவடிக்கைகள்— துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள இயலும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து சொல்லப்பட்டது "பெல்ட் ஏரியா", அதாவது சென்னை நகரின் எல்லையினை ஒட்டி உள்ள இடங்களில் மனைகளுக்கு என்று இடம் ஒதுக்கித்தரப்படுவதில்லை என்று. இப்போது சென்னை நகரினை "கிரேட்டர் மெட்ராஸ் ஸிடி" என்ற முறையில் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் இருப்பதால், அப்படிப்பட்ட நேரத்தில் பெரும் தொழிற்சாலைகள் போன்றவற்றை அமைப்பதற்கு இடம் தேவைப் படும் என்ற காரணத்தினால் சென்னை நகரின் 20 மைல் சுற்று வட்டா ரத்திற்கு யாருக்கும் நிலத்தைப் பட்டா செய்து தரக்கூடாது என்று அரசு முடிவெடுத்து இருக்கும் காரணத்தினால், அங்கெல்லாம் பட்டா கொடுக்கக்கூடாது என்று நான் கருதுகிறேன். இதர இடங்களிலே அவர்களுக்கு நிச்சயமாகப் பட்டாக்கள் வழங்கப்பட்டு, வீடுகளைக் கட்டிக்கொள்ளவும், அவர்களுக்கு குடிநீர் வழங்கவும் அரசு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது என்பதை நான் கூறிக்கொள்ளுகிறேன்.

மருத்துவக் கல்லூரியில் பயின்றுவருகின்ற அரிசன கிறிஸ்தவ மாணவன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும், ஸ்காலர்ஷிப் பெற்று பிராமண வகுப்பைச் சேர்ந்த மாணவர் ஒருவர் படித்து வருகிறார், அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். அதன் விபரத்தைக் கேட்டிருக்கிறேன். நாளை கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதுபோன்ற இன்னும்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 20

பல குறைகளைச் சுட்டிக் காட்டினார்கள். எந்தக் குறை இருப்பினும் அவைகளை அவ்வப்போது அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால், நிச்சயமாக அவைகளைப் பரிசீலித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, மாநில சுயாட்சி பெற்றால் அரிசனங்களின் நலன் பாதிக்கப்படும் என்று திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் கூறினார்கள். மாநில சுயாட்சிப் பெறுவதால் நிச்சயமாக அரிசனங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் எந்த உரிமைகளையும் பாதிக்காது. அரசியல் சட்டம் 339-ல் 2-வது பிரிவில் மத்திய அரசு 10 ஆண்டு காலம் பொறுத்து மாநிலங்களில் இருக்கின்ற அரிசனங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய உரிமைகள் சரியாக வழங்கப்படுகின்றனவா என்பதை அறிய ஒரு கமிஷனரைப் போடவேண்டுமென்று திட்டமிட்டு இருக்கிறது. அதன்படி கமிஷனர் போடப்பட்டு, அவர் ஒவ்வொரு மாநிலமாகச் சென்று விசாரணை செய்து வருகிறார். இப்போது நான்கு தினங்களுக்கு முன்பு அந்த கமிஷனர் நமது மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்யும் போது, சேலத்தில் இருக்கும்போது உடல்நிலை கோளாறு ஏற்பட்டு இப்போது அவர் சென்னை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். ஆகவே, மாநில சுயாட்சியினால் அரிசனங்களுக்கு அளிக்கப்படும் நலன் பாதிக்கப்படும் என்பது பொருளற்ற வாதம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலைவாசி வகுப்பினரின் நலனுக்காக ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் அவர்களுக்கு என்று ஒரு கமிஷன் போடவில்லை. காரணம் நமது மாநிலத்தில் மலைவாசி வகுப்பினர் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள். சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும் சுமார் 2½ லட்சம் மக்கள் தான் இருப்பார்கள். ஆனால் வட மாநிலங்களில் இவர்கள் அதிகமாக வாழுகிறார்கள். நமது மாநிலத்தில் மலைவாசி வகுப்பினர் மிகவும் குறைவாக இருப்பதால் அவர்களை அரிசன மக்களோடு சேர்த்து கணக்கிட்டு, அரிசனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, மாநில சுயாட்சி வந்தால் அரிசன மக்கள், மற்றவர்களுடைய நலன்கள் பாதிக்கப்படும் என்று கூறுவது சில மாற்றுக் கட்சிக்காரர்களின் தவறான தூண்டுதலேயன்றி வேறொன்றுமில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1972 மார்ச் 20] [திருமதி சத்தியவாணிமுத்து]

அடுத்து திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். கல்லூரிகளில் மாணவர்களுக்கு அதிகமான இடம் தரப்படவில்லை. அவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. 1970–71-ல் 8,136 பேர் கல்லூரியில் படித்த எண்ணிக்கை இருக்கிறது. 1971–72-ல் அது குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். இது 1971 பிப்ரவரி மாதம் வரையில் வந்த கணக்கு. இன்னும் சில மாவட்டங்களில் இருந்து விபரம் வரவில்லை. நீலகிரி, இராமநாதபுரம், இன்னும் தென்னாற்காடு போன்ற மாவட்டங்களிலிருந்து இன்னும் புள்ளி விபரம் வரவில்லை. இன்னும் ஒரு மாதத்திற்குள் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆக, அதையும் சேர்த்துப் பார்க்கின்ற போது அதிகமாகத்தான் இருக்குமே தவிர குறையாது. அந்த விபரத்தையும் நான் மன்றத்திற்கு அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை விகிதத்தை எடுத்துக் கொண்டால் அதிகமாக இருப்பது தெரியவரும். முன்னால் 82.55 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்க, இப்போது 94.82 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளி மாணவர்கள் அதிகமாக மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதை அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் உதவித் தொகை காட்டும். கல்லூரிகளுக்குச் மாணவர்கள் செல்கிறார்கள். சில இடங்களில் அவர்கள் கல்லூரிக்குச் சில மாணவர்கள் செல்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலிருந்தும் புள்ளிவிபரங்கள் கிடைத்தால் அதன் முழுவிபரம் தெரியும்.

கன்னியாகுமரியில் இருக்கின்ற காணிக்காரர்களுக்கு (மலை வாசிகள்) வீட்டுமனைகள் ஒதுக்கித்தரவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக அவர்களுக்கு லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். கன்னியாகுமரி திருவிதாங்கூரோடு சேர்ந்து இருந்தபோது அவர்கள் சட்டத் திட்டங்களுக்கு ஏற்றமுறையில் அப்போது லைசென்ஸ் இல்லாமல் கொடுத்திருக்கலாம். நமது மாநிலச் சட்டப்படி லைசென்ஸ் இல்லாமல் துப்பாக்கி வைத்திருப்பது மிகப்பெரிய குற்றம். எனவே, கேட்டவர்களுக்கு லைசென்ஸ் உடன் துப்பாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே எந்தவித குறைபாடும் இல்லை. அவர்கள் காட்டிலே வாழக்கூடியவர்கள் என்பதால், யார் யார் துப்பாக்கி

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 20

வேண்டுமென்று கேட்டார்களோ அவர்கள் எல்லோருக்கும் லைசென்ஸும் கொடுக்கப்பட்டு, துப்பாக்கியும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: லைசென்ஸ் வாங்குவதில் தவறில்லை. லைசென்ஸ் கொடுக்கப்படவில்லை என்றும் யாரும் குறை சொல்லவில்லை. அவர்களுக்கு லைசென்ஸ் ஃபீஸ் இல்லாமலாவது வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஃபீஸ் இல்லாமல் துப்பாக்கி லைசென்ஸ் வழங்கவேண்டுமென்று யாரும் கேட்கவில்லை. அப்படி அவர்கள் கேட்பார்களானால்—எங்களால் ஃபீஸ் கொடுக்க முடியவில்லை என்று கேட்பார்களானால் அரசாங்கம் அதை கவனித்து, நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. பாலசுந்தரம் அவர்கள் கல்விக்காக ஒதுக்கப்படுகின்ற தொகையை கல்வி இலாகாவுக்குத் தரவேண்டுமென்று சொன்னார்கள். திரு. எஸ். எம். துரைராஜ் அவர்களும் இந்த கருத்தினைத் தெரிவித்தார்கள். எனவே அவர்களுக்கு அளிக்கப்பட்டப் பதிலே இதற்கும் பொருந்தும் என்று கருதி, மேலும் இதற்குப் பதிலளிக்க விரும்பவில்லை. கல்வி இலாகாவில் கொடுத்து விடலாம். அதில் தவறு இல்லை. ஆனால் இதற்கு என்று ஒரு இலாகா ஏற்படுத்தப்பட்டிருப்பதால் அந்த இலாகா மூலமாகவே செலவிடுவது பொருத்தமாகும். அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குகின்றபோது இதற்கென்று ஒரு துறை இருக்கவேண்டும், இதற்கென்று ஒரு அமைச்சர் இருக்கவேண்டும்; இதற்கென்று தனியாகத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் வரையறுத்துக்காட்டப்பட்டச் சட்டத்தினால் நமது மாநிலத்தில் இதற்கு தனி இலாகா, தனி அமைச்சர், தனி திட்டங்கள் என்று அமைக்கப்பட்டுள்ளன.

வட்டமேஜை மாநாட்டில் டாக்டர் அம்பேத்கார் பேசுகின்றபோது கூட தனி இலாகா, தனி அமைச்சர், தனி திட்டங்கள் இருக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். அதையேதான் சட்டமாகவும்



1972 மார்ச் 20] [திருமதி சத்தியவாணிமுத்து]

செய்திருக்கிறார். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த தனி இலாகாவின் மூலம் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய சலுகைகள், அவர்களுக்கிருக்கின்ற குறைபாடுகள் எல்லாம் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

18 சதவிகிதம் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் 18 சதவிகிதமும் பூர்த்தி செய்யப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அம்மாதிரி குறைகளைப் போக்க நலத்துறை கல்வி இலாகா மூலமாக ஏற்பாடு செய்யும். 18 சதவிகிதமும் பூர்த்தியாக வேண்டுமென்று வலியுறுத்தும். குறைகளைக் களைய அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வேலைவாய்ப்புகளில் மத்திய அரசாங்கம் 22 சதவிகிதம் இடம் ஒதுக்கியிருக்கிறது. மாநிலத்தில் 18 சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறது. அதை 22 சதவிகிதம் ஆக்கவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது இருக்கின்ற 18 சதவ்கிதத்தையே நம்மால் பூர்த்தி செய்ய முடியவில்லை. அப்படி இருக்கும்போது 22 விழுக்காட்டை எப்படி பூர்த்தி செய்ய முடியும் என்பதை நாம் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். அதிக இடத்தை பூர்த்தி செய்யக் விழுக்காட்டின் அடிப்படையில் பூர்த்தி செய்யலாம். அவ்வப்போது நேரத்தில் 100 இடம், 25 இடம் என்று வந்தால் ஒதுக்கப்பட்டிருக்கும் கூடிய வாய்ப்பு இருந்தால் அதிக விழுக்காடு ஒதுக்கலாம். ஒரே 2, 3, 4, 5 என்ற அளவில் தேவைப்பட்டால் அரிசனங்களுக்கு அல்லது பிற்பட்டவர்களுக்கு என்று பார்க்க முடியாது. தகுதி அடிப்படையில் நியமித்துவிடுகிறார்கள். புதுத் தொழிற்சாலைகள் அல்லது புது அலுவலகங்கள் திறக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான பேர் தேவைப்பட்டால் நிச்சயமாக குறிப்பிட்ட விழுக்காடு அளவினை பூர்த்தி செய்துவிட முடியும். அதை உத்தேசித்துத்தான் இன்றைக்கு சில இலாகாக்களில் அதிகமான பயிற்சி அளித்து, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். தனிப் பயிற்சி அளிக்கப்படுவதால் நிறைய பேர்களுக்கு வெற்றிவாய்ப்பு கிட்டுகிறது. அந்த முறையில் மாணவர்கள் 10-வது அல்லது 11-வது வகுப்பு படித்த பிறகு, அவர்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றவற்றில் பயிற்சி அளித்து, குரூப் 4 சர்வீஸுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 20

இன்றைக்கு குரூப் 4 சர்வீஸுக்கு தட்டெழுத்து, சுருக்கெழுத்தில் பயிற்சி கொடுப்பதற்கு—சில மாவட்டங்களில் 20 இடங்களில் பயிற்சி இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆயிரம் பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களில் 200 பேர்களுக்காவது வேலை வாய்ப்பை அளிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், ஆன் பாயின்ட் ஆப் ஆர்டர். புதியதாக வேலை வாய்ப்புகள் ஏற்படுகின்றபோது தாழ்த்தப் பட்ட சமூதாயத்தினர்களுக்கு முழுக்க முழுக்க வாய்ப்பு அளிக்க லாம் என்பது வேறு விஷயம். இருக்கக்கூடிய பதவிகளுக்கே ப்ரமோஷன் அளிப்பதற்கு எல்லாத் தகுதிகளும் இருந்து அதுபோல தரப்படவில்லை என்கிற புகாரைத்தான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தகுதி இருந்தால் நிச்சயமாகப் ப்ரமோஷன் கொடுக்கப்படும், யாருக்குத் தகுதி இருந்தது, கொடுக்கப்படவில்லை என்பதை குறிப்பாகச் சொல்லலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தகுதி வாய்ந்தவர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற குறையை நான் மாத்திரம் கூறவில்லை. ஒரு கேசாக இருந்தால் குறிப்பாகச் சொல்லிவிடலாம். பரவலாக அந்தக் குறை சொல்லப்படுவதால் அரசேதான் அதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். சில இடங்களில் ப்ரமோஷன் செய்யப்பட்டவர்கள் கூட ரிவர்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்கிற புகார்கள் வருகின்றன. அதையும் அரசு பரிசிலனை செய்யவேண்டும்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இன்றைக்கு இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாகக் கூட இருக்கிறார்கள். தகுதி பெற்றிருந்தால் அவர்களுக்கு நிச்சயமாக வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சப்-ரிஜிஸ்திரார் ஆபீசில் 9 பேர்களுக்கு—தகுதி இல்லாமலேயே இருக்கிறபோது ப்ரமோஷன் கொடுக்கப்பட்டிருப்பதாக நாத்திகம் பத்திரிகையில் மிகப் பெரிய குற்றமாக சொல்லப்பட்டது.



1972 மார்ச் 20]

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, நான் இந்த மானியத்தின் கீழ் முதலில் பேசக்கூட விரும்பவில்லை. எங்கள் கட்சித் தலைவர் வராத காரணத்தினால் நான் பேசினேன். அடிக்கடி குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். நாத்திகம் பத்திரிகையில் என்ன வந்தது என்பதைப்பற்றி நாம் கவனிக்க வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் திரு. நடராசன் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். தகுதி வாய்ந்தவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நாங்கள் சொல்கிறோமே தவிர தகுதி இல்லாதவர்களுக்குக் கொடு என்று நாங்களும் ஒரு நாளும் சொல்ல மாட்டோம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எனக்குத் தெரிந்த விவரப்படி ஒரு பெண்ணுக்கு 3 மாத சர்விஸ்தான் இல்லாமல் இருந்தது. பாக்கி எட்டுபேர்கள் குறிப்பிட்ட காலத்தில் பரிட்சை யில் தேறவில்லை என்று சொல்லப்பட்டது. இந்த இலாக்காவில் 20 ஆண்டு காலமாக அரிசனங்களுக்கு எந்த வாய்ப்பும் அளிக்கப் படாமல் இருந்த காரணத்தினால் இந்த 9 பேர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கப்பட்டது. இதுபற்றித்தான் பெரியதாக குற்றம் சாட்டி நாத்திகம் பத்திரிகையில் எழுதியிருந்தார்கள். இதுபற்றிய முழு விவரத்தையும் மாண்புமிகு நடராசன் அவர்களே தம்முடைய மானியத்தின்போது விவரமாகச் சொல்வதாக குறிப்பிட்டிருக் கிறார்கள்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மக்கள் குழந்தைக்கு சத்து உணவு இந்த இலாக்காவின் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. சுகாதார மானியத்தின்போது பேசுகிறபோது சரியான முறையில் குழந்தைகள் எடைகள் எடுத்துப் பார்க்கப்படுவதில்லை என்றார்கள். இந்தக் கார்டுகள் எல்லாம் முன்னால் அச்சிடப்பட்டவை. அப்போது இரண் டாயிரம், மூவாயிரம் பேர்களுக்கே கொடுக்கப்பட்டு வந்தது. இன்றையதினம் சுமார் லட்சத்துச் சொச்சம் பேர்களுக்கு சத்து உணவு வழங்கப்படுகிறது. எல்லாக் குழந்தைகளையும் அவ்வப் போது எடை எடுத்துப் பார்ப்பது என்பது எல்லாம் முடியாத காரியம்—செலவு, காலம் அதிகமாகும் என்று கருதிய காரணத்தினால் இன்றைக்கு மங்காபுரத்தில் மட்டும் 300 குழந்தைகளுக்கு முதலில் எடை எடுத்துப் பார்த்து, இந்த சத்து உணவு கொடுக்கப்பட்டு, அதன்மூலம் அந்தக் குழந்தைகள் எப்படி வளர்கிறார்கள் என்று பார்த்து, அதுபோல மற்ற இடங்களிலும் வளர்வார்கள் என்கிற

அடிப்படையில் இந்த இலாக்கா மங்காபுரத்தில் மட்டும் பரிட்சார்த்தமாக இதை நடத்தி வருகிறது. மன்றத்தில் இதுபோன்ற குறைகளை எடுத்துச் சொல்வதன் காரணத்தினால்தான் இந்த விளக்கங்களை அளிக்க முடிகிறது என்பது குறித்து நான் மகிழ்ச்சியே அடைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜாங்கம் அவர்கள் பேசும்போது நந்தனார் கல்வி நிலையத்தின் சார்பில் ஒரு பெண் கல்லூரியை ஏற்படுத்த அனுமதிக்காததுபற்றிக் குறிப்பிட்டார்கள். அதுபற்றியும் அரசு பரிசீலித்தது. அங்கே அண்ணாமலை யுனிவர்சிடி இருப்பதனால் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் 10 மைல் சுற்றளவுக்குள் வேறு கல்லூரி இருக்கக்கூடாது. பத்து மைலுக்கு அப்பால் வேண்டுமானால் கல்லூரியைக் கொடுக்கலாம். அவர்கள் எதிர்ப்பதனால் நந்தனார் கல்வி நிலையத்தின் சார்பில் கல்லூரி ஏற்படுத்த அனுமதிக்க முடியவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கோயில்களில் அறங்காவலர்கள் போடும்போது 5 பேர்களுக்கு ஒருவர் இந்தத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் போடப்படவேண்டும் என்று தெரிவித்தார். அதுபற்றி அமைச்சர் அவையிலும் சொல்லியிருக்கிறேன். அறங்காவலர் குழுவில் அப்படிக் கட்டாயமாகப் போடுவதற்கு சட்டமே கொண்டுவருவதாக அத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அர்ச்சகர்கள் நியமனமாக நாம் சட்டம் கொண்டுவந்ததை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனது போல வைதிக மனப்பான்மை உடையவர்கள் இந்தச் சட்டத்தையும் எதிர்க்கலாம். ஆயினும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு நமக்குச் சாதகமாகவே இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட புரட்சிகரமான சட்டத்தையும் நம்மால் கொண்டுவந்து நிறைவேற்ற முடியும் என்றே கருதுகிறேன்.

அடுத்து, மதிய உணவுக்காக கொடுக்கிற 15 பைசாவை உயர்த்த வேண்டும் என்கிறார்கள். கல்வித் துறையின்கீழ் இன்றைய தினம் 10 பைசாதான் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த இலாக்காதான் 15 பைசா என்ற அளவில் கொடுக்கிறது. மாவு அதிகம் இருந்தால்தான் பணியாரம் அதிகமாகப் பண்ண முடியும். பணம் இருந்தால் இதை உயர்த்தலாம். நம்முடைய நிதிநிலை அதற்கு இப்போது இடம் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. முத்தையன் அவர்கள் கூறும்போது அரிசன நல விடுதிகளில் பணியாற்றுகிற சமையற்காரர்களுக்கு, பிற்பட்டோர் நல விடுதிகளில் பணியாற்றுகிற சமையற்காரர்களுக்குக் கொடுக்கப்படுவதைவிட குறைவாகச் சம்பளம் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அதுபோன்ற புகார் வந்து அரசு பரிசீலித்தது. அது உண்மைதான். அந்தக் குறை இப்போது அகற்றப்பட்டு—பிற்பட்டோர் நலத்துறையில் பணியாற்றுகிற சமையற்காரருக்கு அளிக்கப்படுகிற சம்பளம் அரிசன நலத்துறை விடுதியில் பணியாற்றுகிற சமையல்காரர்களுக்கு அளிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறும்போது கொடுக்கப்படுகிற உதவித்தொகை, அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுகிறபோது கொடுக்கப்படவில்லை என்றும் சொல்லப்பட்டது அதுபற்றியும் ஆராய்ந்து பிற்பட்ட வகுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிற உதவித்தொகை இவர்களுக்கும் அளிக்க தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்கள் வேறு, அரிசனங்கள் வேறு என்ற எண்ணம் இல்லாமல் அதிகாரிகள் செயல் பி.ப.
படுத்த வேண்டும். அதிகாரிகள் இந்த முறையில் இன்றைக்குச் 2.30
செயல்படுவதில்லை. பின்தங்கிய மக்களுக்கு ஒரு திட்டம் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு திட்டம் என்றும் அவர்களே பிரித்துக் கொண்டு தவருக நடத்திக்கொண்டு வருகிறார்கள். அரசு அதைக் கண்காணித்து நல்ல முறையில் முறைப்படுத்துகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

வேறு பல உறுப்பினர்களும், அம்மையார் ஜோதி வெங்கடாசலம் அவர்களும் இந்த அதிகாரிகள் எல்லாம் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். வேற்று சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை அதிகாரிகளாகப் போட்டால் வேலை செய்வதற்கு அஞ்சுகிறார்கள். வேற்று சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைப் போட்டால் அவர்கள் ஜாதி வெறிப்பிடித்தவர்களாக இருக்கிறார்கள் அல்லது அவர்களுக்கு ஏன் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையுடையவர்களாக இருக்கிறார்கள்.

சமீபத்தில் அரிசன நலத் துறை டெபுடி செகரடரி—துணைச் செயலாளர்—பதவியில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் இருந்ததை மாற்றி, அந்தப் பணியில் பிராமண வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அமர்த்தியிருக்கிறோம். குறை கூறுபவர்கள் எப்படியிருந்தாலும் குறை கூறுவார்கள். குறை காண வேண்டுமென்று கருதி, குறைகளையே கண்டு வராமல், எல்லோரும் இணைந்து நல்ல ஒத்துழைப்புத் தந்தால் நிச்சயமாக நல்லமுறையில் வெற்றி கிடைக்கும் என்பது திண்ணம். எந்தக் குறைகளும் வராத அளவிற்கு நானும் அதிகாரிகளை மாற்றிக்கொண்டு வருகிறேன்.

திரு. முத்தையன் அவர்கள் கூறியதுபோல, பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவராக போட்டால், பின்தங்கிய விடுதிகளுக்கு அதிகமான சலுகை கேட்க முடிகிறது என்றார்கள். இந்தத் துறையின் இயக்குநரை இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவராகப் போட்டிருக்கிறோம். செயலாளர் அவர்கள் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர். நான் இந்தத் துறையைப் பொறுப்பேற்றுக் கொண்டபோது மறைந்த திரு. வெங்கடேசன் அவர்கள் பொறுப்பாக இருந்தார். பிறகு தாழ்த்தப்பட்டவராக தகுந்தவரைப் போடுவது நல்லது என்று உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார். அவருக்கு நல்ல நோக்கம் இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார் "Love thy neighbour as thyself" என்று பைபில் கூறுகிறது. கிறுஸ்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பணியாற்றுபவர்கள் என்று குறிப்பிட்டார்கள். மூன்று செயலாளர்களை அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவராகப் போட்டிருக்கிறோம். இன்றைக்கும் ஒரு கிறுஸ்தவர் இருக்கிறார். இந்த மானியம் வருகிற நேரத்தில் வெளியூருக்கு மாற்றப்பட்டு, அவருக்குப் பதிலாக "ஓசா" என்பவர் பணியாற்றுகிறார். நாங்கள் போட்டால் அலுவலகத்தில் கேட்பதில்லை. திட்டங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. ஆகவே, எந்தக் குறைக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக, உணவு விடுதியில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவி 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இப்பொழுது அதிகமாகக் கொடுக்கும் 5 ரூபாய்க்கு முட்டையும் பாலும் கொடுக்கச் சொன்னதை பின்தங்கிய துறையில் உள்ளவர்களுக்கும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று திரு. முத்தையா அவர்கள் கூறினார்கள். இருபது ரூபாய் போதவில்லையென்று கூறப்படுகிறது. இருபது ரூபாயிலே சத்தான





யென்று கூறப்படுகிறது. இருபது ரூபாயிலே சத்தான உணவு உணவு கொடுக்க முடியவில்லையென்று சொல்லப்பட்டது. மேலும் 5 ரூபாய் கொடுத்தாலும் அவர்கள் முருங்கைக்காய் வாங்கினோம், கத்தரிக்காய் வாங்கிப் போட்டோம் என்றுதான் கணக்குக் காட்டுவார்கள். அதற்காகத்தான் மேற்கொண்டு தரப்படும் 5 ரூபாய்க்கு முட்டை கிடைக்கிற இடத்தில் முட்டையும், பால் கிடைக்கிற இடத்தில் பாலும் வாங்கித் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இந்த இரண்டிலேயும் நல்ல சத்து இருக்கிறது. மேலும் இதைக் கண்காணிக்கவும் முடியும். தினமும் பால் கொடுக்கப் காணிக்கவும் முடியும். தினமும் பால் கொடுக்கப்பட்டதா, முட்டை கொடுக்கப்பட்டதா என்பதை அறிந்துகொள்ளவும் முடியும். கணக்கு வைப்பதும், காட்டுவதும் சுலபம்.

நான்கைந்து தினங்களுக்கு முன் நான் சில உணவு விடுதிகளுக்குச் சென்று பார்த்தேன். "ஒத்தைக்கடை" பகுதியில் உள்ள ஒரு உணவு விடுதிக்குச் சென்றேன். அங்கே பால் கொடுக்கப்பட்டதா, முட்டை கொடுக்கப்பட்டதா என்று கேட்டேன். அங்கே 5 ரூபாய் மாமிசம் வாங்கி போடப்பட்டது என்றார்கள். ஐந்து ரூபாய்க்கு எந்த அளவு மாமிசம் வாங்கினார்கள். ஒரு கிலோ அல்லது அரை கிலோ வாங்கி, நானும் சாப்பாடு போட்டேன் என்று ஒப்புக்குக் காட்டினார்களா என்று தெரியவில்லை. முட்டையும் பாலும் சத்துள்ள உணவுப்பொருள். போட்ட கணக்கும் தெரியும். எனவேதான் இந்தத் துறை அக்கறையாக இருந்து, முட்டை கிடைக்கிற இடத்தில் முட்டை; பால் கிடைக்கிற இடத்தில் பால் என்று வரையறை செய்திருக்கிறோம். அப்படிப் போடாவிடில் இந்த ஐந்து ரூபாயைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் நிச்சயமாக கட்டாயமாக வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

மாண்புமிகு முஸ்லீம்லீக் கட்சித் தலைவர் திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் அவர்கள் பேசும்போது, இந்த நிலை இருப்பதற்கு தீண்டாமைதான் முக்கிய காரணம் என்று குறிப்பிட்டார்கள். அவருடைய தொகுதி சென்னையிலேதான் இருக்கிறது. சென்னையிலே கூட தீண்டாமை இருக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அவருடைய தொகுதியிலே உள்ள ஒரு சாராயக் கடையின் அருகில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண் மீன்பொரித்து விற்றுக்கொண்டிருந்தாளாம். தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சேர்ந்த பெண் மீன் பொரித்து இங்கே விற்பதா என்று அந்தப் பெண்ணை

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 20

மற்ற ஜாதிக்காரர்கள் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அதைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களே போலீசில் புகார் கொடுத்ததாகச் சொன்னார். அதை உத்தேசித்துத்தான் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் **Eradication of untoucharbility** சய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன நடவடிக்கை முன்பு எடுக்கப்பட்டது?

அடுத்தபடியாக, மத்திய அரசாங்கத்தின் மூலமாக திரு. இளைய பெருமாள் குழு ஒன்று தீண்டாமை ஒழிப்புக்காக என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது குறித்து சிபார்சுகள் செய்திருந்தது. பொருளாதார அபிவிருத்திக்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறது. அந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. தீண்டாமை ஒழிப்புக்காக கடந்த ஆண்டில் கூறியது போல் ஒரு குழு அமைத்திருக்கிறோம். தாலூகா வாரியாக, மாவட்ட வாரியாக குழு அமைத்து, குழுவிலே இருப்பவர்கள் முழுக்க முழுக்க தீண்டாமை ஒழிப்புச் சட்டம் எந்த அளவிற்கு நிறைவேற்றப்படுகிறது என்பதைக் கண்காணிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. பல குழுக்கள் எல்லா மாவட்டங்களிலும் போட வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்போது 8 மாவட்டங்களிலிருந்து பெயர்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. இன்னும் 4 மாவட்டங்களிலிருந்து பெயர்கள் வரவில்லை. குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையே இந்தக் குழுக்களில் போட வேண்டுமென்று சிலர் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரல்லாதவர்களைப் போட வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். பொதுவாக இருக்கட்டும் என்று நானும் கருதினேன். போடப்பட்ட உறுப்பினர்களின் பெயர்கள் மத்திய அரசிலேயிருந்து வரும்போது, இந்தச் சமுதாய உயர்விலே அக்கறையில்லாதவர்கள், ஜாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், உயர்வடைய வேண்டுமென்ற விருப்பமில்லாதவர்கள் ஆகியோருடைய பெயர்களைக் கூட கலெக்டர்கள் அனுப்பியிருக்கிறார்கள் என்கிற செய்தி வந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களையே போட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்தச் சமுதாயம் உயர்வடைய வேண்டுமென்றால், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களையே மாவட்டக் குழுக்களிலும், மாநிலக் குழுவிலும் போட வேண்டுமே தவிர, வேற்று சாதிக்காரர்கள் இடம் பெறுகின்ற நிலைமை இருக்கக்கூடாது என்கிறார்கள். முழுக்க முழுக்க



1972 மார்ச் 20] [திருமதி சத்தியவாணிமுத்து]

இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். தீண்டாமை ஒழிப்புக்காக இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே உறுப்பினர்களாக குழுக்களில் இருக்க வேண்டுமென்கிற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, போலீஸ் ஸ்குவாட் ஒன்று தீண்டாமை ஒழிப்புக்காக தனியாக அமைக்கப்பட்டு, 6 மாவட்டங்களில் அந்தப் போலீஸ் படை அனுப்பப்பட்டிருக்கிறது. சென்னையிலேகூட அப்படிப்பட்ட போலீஞ் படை அமைக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். பிறகு எல்லா மாவட்டங்களிலும் அந்த போலீஸ் படை பற்றிக் கவனிக்க 6 அதிகாரிகள் இருந்து செயல்படுகிறார்கள். ஆங்காங்கு தீண்டாமை சம்பந்தமான வழக்குகள் வரும்போது சம்பந்தப்பட்டவர்களை நேரடியாக விசாரித்து வழக்கு போட்டு, தண்டனை அளிக்க வேண்டும். தீண்டாமை ஒழிப்பு சட்டத்தை மீறுகிறவர்களுக்கு முன்னாள் அரசு ஏற்கெனவே 50 ரூபாய் அபராதம் என்றும், அப்படி 50 ரூபாய் கட்டத்தவறினால் 6 மாதம் கடுங்காவல் என்றும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதை உயர்த்தி 200 ரூபாய் வரையில் அபராதம் என்றும், அபராதம் கட்டத் தவறினால் 6 மாதம் கடுங்காவல் சிறைத் தண்டனை என்றும் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது முறையாக அதே குற்றத்தைச் செய்தால் 6 மாதத்திற்கு மேல் கட்டாயமாக சிறைத்தண்டனையும் 200 ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் அபராதமும் கட்ட வேண்டும் என்று செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக அந்தக் குற்றத்தைச் செய்தால் ஓராண்டுக் காலம் வரை கடுங்காவல் தண்டனையும், இல்லாவிடில் ஆயிரம் ரூபாய் வரைக்கும் அபராதம் என்று கடுமையாக தண்டனைகளை உயர்த்திப் போட்டிருக்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்புக்காக போலீஸ் படை வைத்தும், சட்டமும் போட்டு, சமுதாய நலக் குழுக்களும் அமைத்திருக்கிறோம். இவையெல்லாம் ஒழுங்காகச் செயல்பட வேண்டிய நல்ல வழிவகைகள் செய்யப்படும். சமுதாயத்தில் புரையோடிப் போயிருக்கிற இந்த நோயின் வேர் அகற்றப்பட வேண்டும். அந்த நோய் முற்போக்கு வகுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் அனைவருடைய உள்ளத்திலும் அதிகமாக பகிர்ந்து கிடக்கிறது. அவர்கள் அதை காலப்போக்கில் மாற்றிக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அதை மாற்றிக் கொள்ளக்கூடியவர்கள் ஒருவர் இருவர் இருக்கலாம். அந்த ஒருவர் இருவரை நாம் தேடிப்பிடித்து கண்டுபிடித்து வேட்டையாடிக்

[திருமதி சத்தியவாணிமுத்து] [1972 மார்ச் 20

கண்டுபிடித்துதான் அந்தப் பொறுப்பிலே போடுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட நல்ல காரியங்களை யெல்லாம் அரசு செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பின்தங்கிய நல அமைச்சர் அவர்கள் பேச வேண்டும், அவர்களது நேரத்தை நான் அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்ப வில்லை; ஏறக்குறைய எல்லோருடைய கருத்துக்களுக்கும் பதில் சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். அரிசனங்கள் என்ற பெயரை மாற்றி தாழ்த்தப்பட்டவர்கள் என்ற பெயரை வைக்க வேண்டுமென்று பாண்டுரங்கன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். பெயரிலே ஒன்றுமில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் என்று வைத்தால் தான் மக்களுக்கோ, அரசாங்கத்திற்கோ நினைவு இருக்கும். அரி சனங்கள் என்று சொன்னதே மற்றவர்கள் நினைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் காந்தியடிகள் அந்தப் பெயரை வைத் தார்கள். அந்தப் பெயர் பழக்கத்திற்கு வந்துவிட்டது. பழக்கத்தை மாற்றியமைத்தால் திட்டங்கள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். எனவே அதை மாற்றுவதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலம் கிளியரன்ஸ் போர்டிலே அரிசனங்கள் மாத்திரம் இல்லை, பிற்பட்ட வகுப்பினர்களும் வருகிறார்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள்தான் பெரும் பாலானவர்கள். சென்னையிலே பெரும்பான்மையான அளவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கிடைத்து இருக்கிறது. மற்ற இடங்களிலே மொப்பூஸலில் 1,500 ரூபாய் அளவிலே வீடுகள் கட்டப் படுகிறது. இங்கே அப்படி வீடுகள் கட்டவேண்டுமென்று சொன்னார்கள்......

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்பொழுது 5 ஆயிரம் ரூபாய் ஒரு வீட்டுக்கு சிலம் கிளியரன்ஸ் போர்டிலேயிருந்து கொடுக்கப்படு கிறது. அந்த ஐயாயிரம் ரூபாயில் மற்ற இடங்களில் கொடுக்கப் படுகிற 1,500 ரூபாயைக் குறைத்து விட்டு பாக்கியை வாங்கிக் கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மற்ற மாவட்டங்களிலே நாம் 1,500 ரூபாய்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் சென்னையிலே...............



1972 மார்ச் 20]

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Sir. Mr. Speaker allotted till 12-15 for this Demand. There is another important Demand relating to Backward Classes. If so much time is taken for this Demand, I do not think there will be any time left for the Backward Classes Demand.

THIRUMATHI JOTHI VENKATACHELLUM: Let us not proceed in this House on communal basis.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: There is no communal basis in this. Backward Classes and Harijans, both are important. But we are taking so much time for the one. The other's rights also must be protected and that is why I am saying that the time allotted for that Demand should not be reduced. Or, let us have it on some other day.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: The Hon. Speaker will, I hope, give more time to the Hon. Minister for Harijan Welfare and compensate it later.

THIRU S. KANDAPPAN: Let there not be inter-party clash.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரும் பேசிக்கொள்வதைப் பார்த்தால்தான் தகராறு இருப்பது போல் இருக்கிறது. தகராறு என்றால் உங்களுக்குள் தகராறு அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஒழுங்குப் பிரச்னையைத்தான் எழுப்பியிருக்கிறார்கள். அரிசன நல மானியத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரமே பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைக்கு வேண்டு மென்றால், ஒரு மணி நேரம் கூட ஆகும். உறுப்பினர் அவர்கள் பொறுமையாக இருப்பார்களேயானால் இரண்டு மணிவரை விவாதிக் கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் முடித்து விட்டார்கள். ஏறக்குறைய முடிக்கிற தறுவாயிலே இருக்கிறார்கள். நீங்கள்தான் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி விட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இரண்டு பேரும் பேசிக்கொண்டதுதான் பிரத்தியட்ச நிலை. * * *

திருமதி த. ந. அனந்தநாயகி: பிற்பட்ட வகுப்பு மானியத்திற்கு நேரம் குறையக்கூடாது என்று சொன்னேன். அரிசன மானியக் கோரிக்கைக்கு அதிக நேரம் வேண்டாம் என்று சொல்லவில்லை.

* * * *

அப்படியெல்லாம் கிளப்பிவிட்டு தவறான எண்ணத்தை ஏற்படுத்த வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * * * * * என்று சொன்னதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும். அது மாண்புமிகு அமைச்சரவைக்கும், சபைக்கும் நல்லதாக இருக்காது என்பதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசலாம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற எல்லா சமூக மக்களும் ஒத்துழைப்புத் தந்தால்தான் நிறைவேற்ற முடியும். அரசு போடுகிற, சட்டம், திட்டம் இவையிருந்தாலும் எல்லோருடைய ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் எத்தனை லட்ச ரூபாய்கள் இதிலே செலவழித்தாலும் முன்னேற முடியாது. எனவே, இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் நல்ல முறையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வெட்டுத்

தீர்மானங்களைத் திருப்பிப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். இராஜாங்கம்: அமைச்சர் அவர்கள் வீடு கட்டுவதற்காக 940 ரூபாய் கொடுக்கப்பட்டது. 1,500 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 3 ஆயிரம், 5 ஆயிரம் என்ற அளவில் மத்திய அரசுத் திட்டம் வீடு கட்டும் திட்டம் இருப்பதுபற்றியும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



சொன்னார்கள். நான் சொன்னது மனையே இல்லாதவர்கள் 70 சத வீதம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் மனைகள் கொடுப்பதற்காகத் தனியாக—எப்படி மின் வாரியம், தண்ணீர் வாரியம், குடிசை மாற்று வாரியம்—என்று போட்டிருக்கிறோமோ அதைப்போன்று ஒரு வாரியத்தைப் போட்டு மனைகள் வழங்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டேன். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திருப்பிக் கட்டக்கூடிய வாய்ப்பு இருக்கிறவர்களுக்கு வாரியத்தின்மூலமாக ஏற்பாடு செய்திருக்கிறோம். திருப்பிக் கட்டக்கூடிய வாய்ப்பு இல்லாதவர்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டு செய்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

The cut motion of Thiru S. Alagarsami was deemed to have been withdrawn, as he was not in his seat.

The cut motion of Thiru J. James was, by leave, withdrawn.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"நிதிக்கோரிக்கை எண் 25—பழங்குடி மக்கள் அரிசனங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,41,23,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

## (ஆ) நிதிக் கோரிக்கை எண் 25-ஏ—பின்தங்கிய வகுப்பினர் நலன்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கோரிக்கை எண் 25-ஏ—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ்

[திரு. க. இராசாராம்]

என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,41,23,400-க்கு மேற்படாத தொகை வேண்டும் ".

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move the following cut motion, to discuss about the need to increase the income limit of the Backward Classes to Rs. 3,600 per annum for **obtaining scholarships :—**

' That the allotment of Rs. 4,68,07,700 made under Demand No. 25-A—**Welfare of the Backward Classes, etc., be reduced by** Rs. 100. '

The cut motion of Thiru S. Alagarsami was not moved as he was not in his seat.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய நலத்துறை மானியக் கோரிக்கையைப் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை @ அவைமுன் வைத்திருக்கிறேன். அதையே என்னுடைய பேச்சாகக் கருதி அதை பதிவேட்டிலே ஏற்ற வேண்டுமென்று சபையை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Speaker, Sir, I would like to congratulate this Department which works for Backward Classes for the enormous burden that it carries and for the amount of work achieved. Unless and until every single member of the whole community is emancipated and when every single one of the entire community can walk with us claiming their equal rights that we can really regard ourselves as truly free. Sir, it is not on the deserving ones I focus the attention of the House this morning.

I feel that the burden that is carried by the Government is so enormous but it will never be really free from the burden unless we plan that there should be a time when we can achieve the whole

@ ......-ம் பக்கங்களில் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை மானிய கொள்கை விளக்கக் குறிப்பு 4-ம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



work that we can envisage before us. By that I mean that, with the amount of work that has already been achieved, and the sums of money that have already been spent during the past years, Surely there must be some section of the community which is not backward anymore. Surely we have adopted them and set them on their feet on the road to success but this does not appear to be so.

We have a section of the backward community still perched on the back of the Government and not willing to get off it because it has it so good. I refer to the members who have qualified and who have taken their degrees and who are earning good salaries and who still claim to be backward. Their children will continue to get scholarships and all the benefits. This, I feel, has to be examined. I also feel that we should keep statistics about this section of the community which does not need aid anymore, because as long it stays there, it is going to be harder for the Government to aid the truly socially handicapped people which is after all its aim.

So, we should keep our eyes wide open on this matter because there must come a time when this segment of this community will no longer be backward.

I think the fault lies in the name because we say it is a ' backward class '. Why should they be called ' backward class '. We should stop calling it a ' backward class '. We want to help all backward people, no matter to which community they belong. The Government's aim should be to help the poor people, no matter where they are, what they call themselves and to which religion they belong.

I find that some aid is given to Buddhist students and that is very good. But is similar aid given to the Christian students? There are lots of them who are very poor in exactly the same position as the members of the backward community are but are not labelled thus. So, I feel that unless we drop this name of calling a certain class as ' backward ', we shall have members just wanting to belong to it because of the benefits they receive.

[Thirumathi Alda M. Fowler] [1972 மார்ச் 20

Now this is a subject, I think, that comes up every year. If I am not mistaken, everybody seems to remark about this in one way or the other. But the time has come when we should seriously think about it so that these people no longer claim the benefits which the Government give thrm. It is like a convalescent person and how long do you except a person to convalesce. A sick person is a convalescent person for a little while and then he must stand on his own feet. So we cannot keep a person under convalescence for ever because our aim is to see that they are no longer socially handicapped. Therefore, there must come a time when they can move out of that category and belong to the group of people who do not call themselves 'backward' any more.

Thank you, Sir.

* திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே கோரியுள்ள மானியக்கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்திலுள்ள மக்கள் தொகையில் சரிபாதிக்கு மேற்பட்ட பின் தங்கிய மக்களின் நலனைக் கருதி டாக்டர் கலைஞர் அவர்கள் இதற்கென்று தனியாக துறை 1969-ல் நிறுவி, இந்தத் துறைக்கென்று ஒரு அமைச்சரையும் ஏற்படுத்தி இன்றைக்கு இந்தத் துறையானது மிகப் பின்தங்கிய மக்களுக்கு நல்ல காரியங்களை ஆற்றி வருகிறது. இத்தகைய துறை தமிழ்நாட்டில் பன்னெடுங்காலத்திற்கு முன்பே தனியாக நிறுவப்பட்டிருக்குமேயானால், தமிழ்நாட்டிலே பின்தங்கிய மக்கள் இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்களோடு சில குக்கிராமங்களில், இன்னும் கிராமங்களில் பொருளாதார வசதியில் மிகக் கீழ்நிலையிலேயும், தாழ்த்தப்பட்ட மக்களா, பின்தங்கிய மக்களா என்று வித்தியாசம் தெரியாமல் இருக்கின்ற இன்றைக்கு இருக்கும் நிலைமையை மாற்றி பொருளாதார அடிப்படையிலே பின்தங்கிய மக்களையும் ஒரு நிலைக்கு கொண்டுவந்திருக்க முடியும். ஆனால் பன்னெடுங்காலமாக இவைகளைக் கருத்திற்கொண்டு செயல் படுத்தாததால் உள்ள நிலைமைகளை நன்கறிந்த தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்குத் தனியாக இந்தத் துறையைப் பிரித்து இருப்பதன்மூலம் பின்தங்கிய மக்களுக்கு இதயமாக கலைஞர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1972 மார்ச் 20] [திரு. எஸ். ஆறுமுகம்]

இதிலேகூட மாணவர்கள் படிக்க உதவித்தொகை 1966–67-ல் 82.90 லட்சமாகயிருந்தது. இன்றைக்கு 1971–72-ல் 270.40 லட்சமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்தத் தொகை போதுமான அளவில் இல்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டு அடுத்த ஆண்டாவது இதற்கு அதிகத் தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர் இல்லங்கள் 1971–72-ம் ஆண்டில் 81 இல்லங்களை ஏற்படுத்த அனுமதி பெற்று எல்லா இல்லங்களும் இன்றைக்குத் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த ஆண்டில் புதிதாக எத்தனை மாணவர் இல்லங்கள் துவக்கப்போகிறார்கள் என்ற குறிப்பு இங்கே தரப்படவில்லை. அதையும் அமைச்சரவர்கள் கருத்திற்கொண்டு புதிய 100 மாணவர் இல்லங்களையாவது இந்த ஆண்டில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை மேற்கொள்ள வேண்டும். அதோடு சென்ற ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களுக்கெல்லாம் நல்ல தரமான கட்டிடங்கள் கட்டுவதற்கு முயற்சிகளை இந்தத் துறையானது மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த அரிசன நல இலாக்காவோடு இந்தத் துறை தனியாகப் பிரிக்கப்பட்டு இதற்கென்று ஒரு அமைச்சர் இருந்தாலும் மாவட்ட அளவில் மாவட்ட நல அதிகாரிகள்தான் கவனித்துக் கொள்கிறார்கள். அதைப்போல இங்கே தலைமைச் செயலகத்திலேயும் இங்கிருக்கும் இயக்குநர்களும் இன்றைக்கு அரிசன நலத்துறைக்கு இருப்பவர்கள்தான் இந்த பின் தங்கியோர் நலனையும் கவனிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இதற்கென்று தனியாக இலாக்காவைப் பிரித்து ஒரு அமைச்சரையும் போட்டுவிட்ட பிறகு பின்தங்கிய மக்களின் நலன்களைக் கருத மாவட்ட அளவிலும் தனியாக அதிகாரிகளை நியமிக்க வேண்டும். அதேபோன்று மாநில அளவில் பி.ப.
உதவி இயக்குநர், இயக்குநர், தலைமைச் செயலகத்தில் தனியாக 1.00.
செயலாளர் ஒருவரும் பின் தங்கிய மக்களின் நலனைக் கருதுவதற்காக என்று நியமித்தால்தான் இந்தத் துறைக்குத் தனியாகக் கவனத்தைச் செலுத்த, இந்தத் துறையிலேயிருப்பவர்கள் மக்களின் நலனை நல்ல முறையில் கவனிக்க வாய்ப்பு ஏற்படும். அதைவிட அரிசன நலத் துறைக்குத் தனியாகவும், இந்தத் துறைக்குத் தனியாகவும் அதிகாரிகள் இருப்பது நல்லது. இதை நம்முடைய அமைச்சர் அவர்கள்

[திரு. எஸ். ஆறுமுகம்] [1972 மார்ச் 20

கருத்தில் கொண்டு உடனடியாக, தனியாக இதற்கென்று அதிகாரிகளை நியமிப்பதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

1971-ம் ஆண்டு திரு. சட்டநாதன் குழு அறிக்கை வந்திருக்கிறது. அந்த அறிக்கையில் 110 கோரிக்கைகளுக்கு மேல் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றைப் பற்றி இன்னும் ஆய்வு செய்து கொண்டிருப்பதாக நம்முடைய அறிக்கையில் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். கல்வி, வேலை வாய்ப்புக்காக 25 சதவிகிதம் என்று இருந்ததை 35 சதவிகிதமாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பேசுகிறபோதே ஒரு கருத்தைத் தெரிவித்தேன். 31 சதவிகிதமாக ஒட்டு மொத்தமாக பின்தங்கியவர்களுக்கு வைத்து இருப்பதால், அது எல்லாப் பின்தங்கிய வகுப்பினருக்கும் சரிவரப் போய்ச் சேருவதில்லை. ஆகவே, பின்தங்கிய வகுப்பினருக்கு 16 சதவிகிதமும், மிக மிகப் பின்தங்கிய வகுப்பினருக்குப் 15 சதவிகிதமும் என்று இரண்டு பிரிவாகப் பிரித்தால், தமிழகத்தில் இருக்கக்கூடிய பின்தங்கிய சமூகத்தில் இருப்பவர்கள் பயன்பெற முடியும். இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சதவிகிதத்தைப் பிரித்துக் கொடுக்க முதல்வர் அவர்களோடு கலந்து முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு மனைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு எப்படி அரிசன மக்களுக்கு வீட்டு மனை கொடுக்கிறோமோ, அதே போன்ற முயற்சியினை பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தும் எடுத்துக் கொள்ளவேண்டும். கிராமப் பகுதிகளில் மட்டுமல்லாது நகரப் பகுதிகளிலும் கூட பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வீட்டுவசதி இல்லாமல், வீட்டு மனை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையும் போக்கி இவர்களுக்கும் வீட்டு மனை வசதியைச் செய்து தரவேண்டும். இதற்கென்று தனியாக நிதியை ஒதுக்கியாக வேண்டும். முழுமையாகக் கொடுப்பதற்கு அரசிடத்தில் நிதிநிலைமை இல்லாவிட்டாலும் கூட, படிப்படியாக இந்தத் திட்டத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் வீட்டு மனை நிலம் கொடுக்கிறபோது 50 சதவிகிதம் வீட்டு



1972 மார்ச் 20] [திரு. எஸ். ஆறுமுகம்]

மனை கோருபவர்களும், மீதி 50 சதவிகிதத்தை அரசே ஏற்று கொடுக்கக்கூடிய முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு பின்தங்கிய மக்கள் நலனுக்காக இந்த அரசு பாடு பட்டு வருகிறது. நான் சொன்ன கருத்துக்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு செயல்படவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, கிராமப் புறங்களிலும், நகரப்புறங்களுக்கு வேலை தேடி வந்தவர்கள் மிகப் பின்தங்கிய, பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள், அரிசனங்கள் இருவரும் ஒரே நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதை நேரில் காணலாம். அந்த அளவுக்குப் பின்தங்கிய மக்க மக்களும், மிகப் பின்தங்கிய மக்களும் ஏழ்மையில் இருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் சரிபாதி மக்கள், 35 சதவிகிதம் மக்கள் மிகவும் மோசமான, கீழ்த்தரமான நிலையில் பொருளாதார வசதி இல்லாத நிலைமையில், படிப்பு அறிவு இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இலாகா தனியாக அதிகாரிகளை போட்டு தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் பின்தங்கிய மக்கள் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது என்று பார்த்து அந்த மாவட்டங்களில் இந்தப் பின்தங்கிய மக்கள் கல்வி வசதி பெறவும், பொருளாதார வசதிகளைப் பெறவும், முழுமையான வேலை வாய்ப்புகள் கிடைக்கவும், தொழில் செய்வதற்கு அரசு மூலம் தொழிற் கடன்கள் பெறவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் சரிபாதி மக்களாக உள்ள பின்தங்கிய சமூகத்தினைச் சேர்ந்த மாணவர்கள் படிக்கும்போது அவர்களுக்கு உணவு கொடுக்க உணவு மானியத்திற்காக 6 லட்சம் ரூபாய் அளவுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மிகக் குறைவான தொகை. இதை உயர்த்திக் கொடுக்க நம்முடைய இந்தத் துறை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு அமைச்சர் அவர்கள் தக்க முயற்சியினை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பின்தங்கிய மக்கள் நலனுக்காகப் பாடுபடக்கூடிய இந்த அரசுக்கு எதிராக அந்த மக்களை திசை திருப்பிவிடக்கூடிய அளவில், அந்த மக்கள் ஏமாற்றம் கொள்ளக்கூடிய அளவில் சிண்டிகேட்டிலே

இருப்பவர்கள் காரியமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு பின் தங்கிய மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை, எதுவுமே செய்ய வில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் சொல்லப் போனால் வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று வன்னிய சமூகத்தை மிகப் பின்தங்கியவர்கள் பட்டியலில் இருந்து பின்தங்கியவர்கள் பட்டிய லுக்கு மாற்றிவிட்டார்கள் என்ற பிரசாரங்களைச் செய்து வருவதைப் பார்க்கிறோம். இப்படி முன்னாலே ஆட்சியிலே இருந்தவர்கள், இப்போது எதிர்க்கட்சி என்ற அந்தஸ்திலே இல்லாது சிறு அளவிலே இருந்து கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமென்ற காரணத் தோடு எந்தெந்த மக்கள் எங்கெங்கு அதிகமாக இருக்கிறார்களோ, அந்த மக்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வதைப் பார்க்கிறோம்.

இந்தப் பிரசாரத்திற்கெல்லாம் இடம் கொடுக்காதவண்ணம் இந்தத் துறை செயல்படும் என்று நம்புகிறேன். தமிழகத்திலுள்ள பின்தங்கிய, மிகப் பின்தங்கிய மக்களுடைய நல்லாதரவு என்றும் தொடர்ந்து இந்த அரசுக்கு உண்டு என்ற நம்பிக்கையைத் தெரிவித்து இந்தத் துறைக்குக் கோரியுள்ள தொகை ரூ. 4,68,07,700 என்றாலும் அடுத்த ஆண்டு 10 கோடி ரூபாய் அளவுக்கு இதை உயர்த்துவதற் கான முயற்சியினை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, மாண்புமிகு பின்தங்கிய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக் கையின்மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்

பின்தங்கிய வகுப்பினர் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டு திட்டமிட்டு செயல்பட்டு வருவது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. பின்தங்கிய நல அமைச்சர் அவர்கள் நல்ல அக்கறை செலுத்தி அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்ற முனைந்திருக்கிறார் என்பது வரவேற்கத்தக்கது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அந்த மாவட்டமே பிற்படுத்தப்பட்ட மாவட்டம். அந்த மாவட்டத்திலே இருக்கின்ற வகுப்பாரும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். ஜமீந்தார் காலத்திலிருந்து அடக்குமுறைக்கு ஆட்பட்டவர்கள். விவசாயிகளை எடுத்துக் கொண்டால், ஒருசிலர் நல்ல நிலையில்





இருந்தாலும் பல விவசாயிகள், ரெட்டியார்களும், நாயுடுக்களுமாக இருப்பவர்கள் பிற்பட்ட நிலையில்தான் இருக்கிறார்கள். இந்த இரண்டு வகுப்பாரும் நசித்துப் போய்விடக்கூடிய நிலையில் இவர் களிலே ஒருசிலர் பிரிவினரைத்தான் பின்தங்கியவர் பட்டியலில் வைத்திருப்பதால் இவர்கள் தங்களுடைய தொழிலும் நசிந்துபோய் வேலை கிடைக்காமலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், 25 பகுதிகளில் இந்த வகுப்பாரைச் சேர்ந்தவர்கள்தான் பிரதிநிதியை நிர்ணயிக்கும் நிலையில் இருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்குச் சரியான பிரதி நிதித்துவம் கொடுக்கப்படவில்லை. பப்ளிக் சர்விஸ் கமிஷனிலும் தொடர்ச்சியாகப் பார்த்துக் கொண்டு வந்தால், இவர்களைச் சேர்ந்த வர்கள் யாரும் வராமலே இருக்கிறார்கள். இது ரொம்ப விநோத மான விஷயமாக இருக்கிறது. தேர்தலில் பாஸ் பண்ணியும் கிடைக்காமல் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. கிடைக்காமலே கூடப் போய்விடுகிறது.

அமைச்சர் அவர்கள் ராஜபாளையத்திற்கு வந்தபோது இதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டது. சாலியப் பெரு மக்களைச் சேர்ந்தவர்களை "சாலியன்" என்று சொல்லுவது அவமான கரமாக இருக்கிறது. "சாலியர்" என்று மாற்றவேண்டுமென்று கோரினோம். அமைச்சர் அவர்களும் முயற்சி செய்வதாகச் சொன் னார்கள். அரசாங்கத்திற்கு இதிலே ஒன்றும் செலவு கிடையாது. இதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"தொட்டியன்" என்ற வகுப்பினரை கல்வித் துறையிலே "தொட்டை" என்று எழுதுகிறார்கள். பப்ளிக சர்விஸ் கமிஷனிலே "தொட்டியர்" என்று எழுதுகிறார்கள். ஆங்கிலத்திலே 'Thottai' என்று கல்வித்துறையிலே எழுதுகிறார்கள். இதிலே அதிகாரிகளுக்குச் சந்தேகம் வருகிற காரணத்தால் "தொட்டியரா", "தொட்டை"யா என்று கேட்டு திருப்பி அனுப்புகிறார்கள். ஸ்பெல்லிங்கிலே இருக் கின்ற தவறைப் பெரிய தவறாக அவர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இந்தச் சிறிய தவறுகளை எல்லாம் போக்க அரசாங்கம் உடனடியாக ஆவன செய்ய வேண்டும்.

தெலுங்கர் மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள், இனப்பாகுபாடு இருப்பது என்பது வருந்தத்தக்கது. தெலுங்கர்கள்,

[திரு. க. சுப்பு] [1972 மார்ச் 20

ராஜபாளையத்தில் மாணவர்கள் முன்வந்தபோது அரசு உதவி அளிக்கவில்லை என்ற குறை இருக்கிறது. ஒரு ஆசிரியர் வந்தார். அவருக்கு மானியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 30 கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு யாருமே வரமாட்டார்கள். ஆகவே மைனாரிட்டி வகுப்பினர் கல்வி கற்றுக் கொள்வதற்கு சரியானபடி தொகை வழங்கி தெலுங்கு போன்ற பாடங்களை படிக்க மாணவர்கள் முன்வரும்போது அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் அரசாங்கம்.

பின்னர், ரெட்டி, கஞ்சம் ரெட்டி என்றிருக்கிறது. ரெட்டி என்று சொன்னால் முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் கஞ்சம் ரெட்டி என்றால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்படுகிறார்கள். ரெட்டியார் என்று தனியாக தமிழ் நாட்டில் முன்னால் இருந்து வந்தவர்கள் அல்ல. தெலுங்கு பேசும் ரெட்டியார்கள் அங்கிருந்து வந்தவர்கள்தான். யார் யார் எங்கிருந்து வந்தார்கள் என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டியதில்லை. கஞ்சம் ரெட்டி என்று போட்டால் அப்படிப் போடுவதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, ராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் கஞ்சம் ரெட்டி என்று அவர்கள் போட்டுக் கொள்வதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு சார்பில் எடுத்துக் கூறியிருக்கும் நல்ல கருத்துக்களை நான் வரவேற்கிறேன். விடுதிகளில் உள்ள பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகையைக் கூட்டிக்கொடுத்திருப்பது வரவேற்கத் தக்கது. ஆனால் அப்படி உதவித் தொகை கூடக்கூட விடுதிக் கட்டணத்தையும் கூட்டிவிடுகிறார்கள். அதனால் கூட்டி கொடுத்தும் பலனில்லாமல் போகிறது. ஆகவே விடுதிகளை அரசாங்கமே அதிகமாக பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அமைத்துக்கொடுத்து அதற்காகும் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்வதினால் குறைந்தபட்சம் நல்ல உணவாவது கிடைக்கும். உணவு விடுதிகளைக் கூட தனியாரிடமிருந்து எடுத்து அரசாங்கமே நடத்துவதற்கு வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



1972 மார்ச் 20]

திரு. கே. கந்தசாமி: கௌரவமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை மானியக் கோரிக்கையை பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பில் வரவேற்று பாராட்டுவதற்கு முற்படுகிறேன்.

இன்று என்றுமில்லாத அளவிற்கு கலைஞர் அவர்களின் ஆட்சியில் பெரியதொரு சமுதாயமாக விளங்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு என்று ஒரு தனி இலாகா அமைத்து அதன் அமைச்சராக அந்த இனத்தைச் சேர்ந்த—அந்த இன மக்களின் குறைபாடுகளை எல்லாம் நன்கு உணர்ந்து செயல்படும்முறையில்—ஒருவரையே போட்டிருப்பதை வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டைப்பொறுத்தவரையில் இங்குள்ள மக்களில் பாதிப் பேர்களுக்கு மேல் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாவார்கள் என்று உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். உத்தியோகத் துறையில் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விகிதாசாரத்தைப் பார்த்தால், 31 சதவிகிதம் என்பதைப் பார்க்கும்போது ஓரளவிற்கு முன்பு இருந்ததைவிடக் கூடியிருக்கிறது என்பதைப் பாராட்டினாலும், ஜனத்தொகையோடு ஒப்பிட்டு மேல் சமூகத்தினர் வளரும் வேகத்தைப் பார்க்கும்போது இன்னும் அதிகபட்சமான இடங்களை இந்த பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு ஒதுக்கினால் நல்லது. இந்த பிற்பட்ட இனத்தவர்களில் சுமார் 200 ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 200 ஜாதிகளும் ஒன்றாகச் சேரும்போது அதில் உள்ள ஒரு சிறிய மைனாரிட்டியினர் டாமினேட் செய்கிறார்கள். அதிகப்படியான வேலைகளைப்பெறுகிறார்கள். மெஜாரிட்டியாக இருக்கக்கூடியவர்களை டாமினேட் செய்யும் நிலையில் இந்த மைனாரிட்டியினர் இருக்கிறார்கள்.

Weak majority is being dominated by strong minority from among backward communities. That is what I want to bring to the Hon. Minister's kind notice.

இந்தியாவைப் பொறுத்தவரையில், அல்லது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சமுதாய அமைப்பில் அரசியல் இலக்கை அடைய,

We are for establishment of a classless and casteless society and to have effective socialism.

[திரு. கே. கந்தசாமி] [1972 மார்ச் 20

என்ற நிலையை நாம் அனைவரும் ஒத்துக்கொண்டிருந்தாலும் அதை அடைய இருக்கக்கூடிய சமுதாய, பொருளாதார வேறுபாடுகளை நீக்க நாம் கையாளுகின்ற முறையில் வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் கொடுக்கிற முறையை நம் அரசைப் பொறுத்தவரையில் நாம் கையாண்டு வருகிறோம்.

திரு. சுப்பு அவர்கள் ஜாதி, மத, எல்லை வேறுபாடுகளைக் கடந்து நிற்கிற கொள்கையை உடையவராக இருந்தாலும் இங்கு குறிப்பிடும் போது ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் வாழ்கிற குறிப்பிட்ட ஒரு இனத்தவரைப் பின்தங்கிய இனத்தவர் என்றும், அவர்களது நலனை இன்னும் அதிகம் கவனிக்க வேண்டும் என்றும் மிக உருக்கமாகப் பேசினார்கள். அதை அவர் குறிப்பிடக் காரணம், நாம் அடைய வேண்டிய இலக்கு உயர்ந்ததாக இருந்தாலும்; அதை அடைய கையாளும் முறையில் இன்னும் சிறப்பாகச் செயல்படவேண்டும் என்ற விதத்தில்தான் அவர்கள் ஆலோசனை கூறினார்கள்.

என்னைப்பொறுத்தவரை, தமிழ்நாட்டில் பின்தங்கிய வகுப்பினரில் பாதிக்கு மேல் இருப்பார்கள் என்று கருதுகிறேன். முக்குலத்தோர், தேவர் சமுதாயத்தைப் பொறுத்தவரையில். அவர்களுக்கு வேண்டிய பிரதிநிதித்துவம் முன்னாள் அரசாங்கத்தினால் கொடுக்கப்படவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். இன்றைய அரசு, கலைஞர் அவர்களின் கருணையால் கழக அரசு அதில் கவனம் செலுத்துகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். செலுத்துகிறது என்று பேச்சில் சொன்னால் போதாது. நடைமுறையில் காட்டும்படி கலைஞர் அவர்களையும், பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் அவர்களையும் மற்ற ஏனைய அமைச்சர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட இனத்தவர்களில், 200-ல் முக்குலத்தோர் பாதி இருந்தாலும்கூட எம்.பி.எஸ்.சி. அல்லது ஏனைய உத்தியோகத் துறைகளில் அவர்கள்,

In proportion to the population they should have representation in appointment matters also. That is my humble request. ஆகவே இதை, இந்தச் சமுதாய உணர்வை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். கவனத்தில்கொண்டு அதை நடைமுறைப்படுத்தவேண்டும்.

அடுத்தபடியாக, பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதிகக் கல்விச் சலுகை வழங்குவதைப் பாராட்டுகிறேன். இந்த அவையில்கூட ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற ரீதியில் ஒரு



1972 மார்ச் 20] [திரு. கே. கந்தசாமி]

தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இன்னும் வரவில்லை, 2,000 ரூபாய்க்குமேல் வருமானம் இருந்தால் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் கல்விச் சலுகை அளிப்பதில்லை. இந்த விதிமுறை முன்னாள் அரசால் அன்றிருந்த சமுதாய பொருளாதார ரீதிக்கேற்ப அமைத்திருக்கலாம். ஆனால் இன்று விலைவாசியேற்றம், சமுதாயத்தில் சம்பள உயர்வு என்ற நிலைகள் எல்லாம் ஏற்பட்ட பிறகு அந்த விதிமுறைதான் நடைமுறையிலிருக்கும் என்றால் அது நூற்றுக்கணக்கான மாணவர்களைப் பாதித்திருக்கிறது.

பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களின் பிரதிநிதியாக நான் அமைச்சர் அவர்களிடம் ஒரு மகஜர் கொடுத்துள்ளேன். அதன்பேரில் என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்று தெரியவில்லை. கல்வி ஆண்டு முடியும் தறுவாயில் இருக்கிறது. பரீட்சைகள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில், ஆண்டு இறுதிக்குள் ஸ்காலர்ஷிப் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில் ஹாஸ்டல் பணத்தைக் கேட்காதீர்கள் என்ற அண்டர்ஸ்டான்டிங்கில் பலர் தங்கிப்படித்து வருகிறார்கள். ரூ. 500, ரூ. 600 என்று அரியேர்ஸ் கட்டவேண்டியிருக்கிறது. அதை பிரின்ஸிபாலும், விடுதிக்காப்பாளரும் நெருக்கும்போது ஏழை மாணவர்கள், வழக்கம் போல் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்கள் அதைக் கட்டமுடியாது படிப்பை நிறுத்திவிடும்படியான ஒரு நிர்ப்பந்த நிலைமை ஏற்படுகிறது.

ஆகவே கலைஞர் அவர்களும், பிற்பட்ட வகுப்பினர் நலத் துறை அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து இந்தச் சட்டத்தை மாற்றி ரூ. 2,000 என்றிருக்கும் உச்சவரம்பை மாற்றி, ரூ. 5,000 வரை வருமானம் இருந்தால் பரவாயில்லை, ஆனால் அதற்கு மேலே போனால் சலுகை இல்லை என்ற நிலையை உருவாக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு திருஷ்டாந்தம் சொல்ல விரும்புகிறேன். எல்.ஜி.எஸ். சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருக்கும் மக்கள், அரசாங்கத்தில் வேலை பார்க்கும் இந்த ப்யூன்ஸ்க்கு மாக்சிமம் வரும்போது ரூ. 195 என்றிருக்கிறது. எல்லா அலவன்ஸையும் சேர்த்து ரூ. 250 வரும். இந்த வருவாயில் அவர் தமது ஐந்தாறு பிள்ளைகள் யாரையும் படிக்க வைக்கமுடியாது. அலவன்ஸையும் சேர்த்துப் பார்க்கும்போது ஆண்டு ஒன்றுக்கு 2,000, 3,000 வந்துவிடும்.

[திரு. கே. கந்தசாமி] [1972 மார்ச் 20

இதே நிலைதான் க்ளார்க்ஸ் போன்றவர்களுக்கும். இந்நிலையில் யாரும் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கமுடியாது. எந்த என்.ஜி.ஓ.வும் படிக்க வைக்கமுடியாது. ஆகவே கலைஞர் அவர்களும், இத்துறை அமைச்சர் அவர்களும் இந்த உச்சவரம்பை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டி-நோடிபைடு டிரைப்ஸ் அண்டு எக்ஸ்-கிரிமினல் டிரைப்ஸ் என்ற சட்டத்தின்கீழ் அகில இந்திய ரீதியில் 40 லட்சம் மக்கள் அழுத்தப்பட்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் 13 லட்சம் பேர் இருக்கிறார்கள். அகில -இந்திய அடிப்படையில் பார்க்கிறபோது 1/3 பாபுலேஷன் தமிழகத்தில் இருக்கிறது. அகில இந்திய ரீதியில் இதற்காக ஒதுக்கியிருக்கும் பணம் ரூ. 150 லட்சமாகும். இதில் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டது 18½ லட்சம்தான்.

It is not at all in proportion to the population strength இதைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது 12.03 சதவிகிதம்தான் கிடைக்கிறது. ஆகவே, அகில இந்திய அடிப்படையில் தமிழகத்தில் 1/3 பங்கு மக்கள் இங்கேயிருக்கிறார்கள் என்று சொல்லி பிற்பட்ட நலத்துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து 1/3 பங்கு இந்த நிதியிலிருந்து தமிழகத்திற்குத் தரவேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது ரூ. 50 லட்சம் தமிழகத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காகப் பிற்பட்ட நலத்துறை கமிஷனர் அவர்கள் வந்திருந்தபோது மனுகூட கொடுத்து இருக்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு அதன் நகல் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பிற்பட்ட இனத்தைச் சார்ந்த மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு எப்படியோ படித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய வேலை கிடைக்கவில்லை. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களிடத்தில்கூட மனுக்கொடுத்திருக்கிறேன். பிற்பட்ட நாயுடு வகுப்பைச் சார்ந்த ஒருவன் 24 வயதில் கேஷியராக வேலையில் சேர்ந்திருக்கிறான். 3 மாதம் கழித்து ஊஸ்ட் செய்யப்பட்டு விட்டான். 2 மாதம் கழித்து மறுபடியும் வேலைக்குச் சென்றபோது உங்களுக்கு 25 வயதுக்கு மேலாகிவிட்டது என்று சொல்லி



1972 மார்ச் 20] [திரு. கே. கந்தசாமி]

விட்டார்கள். பிற்பட்ட நிலையிலிருந்து வரும் ஏழை எளிய மாணவர்களுக்கு டிபார்ட்மெண்டில் நுழையும்போது 25-க்குள் இருந்தால் போதும்

I hope the Government will consider him as having entered into Government service within the prescribed age-limit. இந்த விதியை ஏன் தளர்த்தக் கூடாது என்று கேட்டேன். அதைப் பரிசீலித்துச் செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைத் தனியாக வைத்துக் கவனிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, தயவுசெய்து 25 வயது, டிபார்ட்மெண்டில் நுழைவதற்குண்டான சமயத்தில் இருந்தால் போதும் என்று சொல்லவேண்டும். கலைஞர் அவர்களும், அமைச்சர் அவர்களும் சேர்ந்து குறைந்தது இதை 30 வயது என்று ஆக்கினால் நல்லது என்று நினைக்கிறேன். பிற்பட்ட வகுப்பினருக்கு 25 வயதுக்கு மேல் உத்யோகம் இல்லை என்று சொல்வது, பிற்பட்ட இனத்தவருக்கு 10 சதவிகிதம் கொடுக்கலாம் அதற்கு மேல் கூடாது என்று சொல்வது போல் இருக்கிறது. படித்துவிட்டு வேலை இல்லை என்ற நிலை இருக்கிறபோது மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. படித்த பட்டதாரிகளாக இருப்பவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறபோது

They have become completely frustrated and lost all hope in society. That is what is happening in West Bengal. Therefore, I request the Hon. Minister to consider to relax the age-limit from 25 to 30. With these words, I conclude. Thank you, Sir.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சபைமுன் வைக்க விழைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பேசும்போது, நாம் இன்று இருக்கிற சமுதாயத்தினுடைய அமைப்பை மாற்றி, ஜாதி மத பேதமற்ற ஒரு சாத்வீகமாக சமுதாயத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டுமென்ற கருத்தினைச் சொன்னார்கள். அந்தக் கருத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இன்று வகுப்பின் அடிப்படையிலே, பல வகுப்பினர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள்கூட, வருங்காலத்தில் இன்று இருக்கும் ஏற்றத் தாழ்வு மாறி சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்டவர்கள், மற்றவர்கள் உயர்த்தப்பட்டு இருக்கும் நிலை மாறவேண்டுமென்றும் அந்த

[திரு. எம். ஏ. லத்தீப்] [1972 மார்ச் 20

நிலையை அகற்றுவதற்குத்தான் அரசாங்கம் உதவி கொடுத்து, அவர்களையும் மற்றவர்களோடு சமமாக நடைபயிலுவதற்குத்தான் இந்தத் திட்டங்களெல்லாம் வைத்து இருக்கிறது.

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்று பிற்பட்ட வகுப்பினர்களாகக் கருதப்படாமல் ஒரு குறிப்பிட்ட பிற்பட்ட வகுப்பினர்களிலேகூட அவர்களுடைய உட்பிரிவிலே பாகுபாடு காட்டப்பட்டு வரும் நிலை இருப்பதைச் சுட்டிக்காட்டினார்கள். உதாரணத்திற்காகச் சொல்கிறேன், நாயுடு வகுப்பை எடுத்துக் கொண்டால் கூடுநாயுடு பிற்படுத்தப்பட்டவர்கள் என்று இருக்கிறது. பலிஜா நாயுடு; கவர நாயுடு என்பதெல்லாம்கூட பிற்பட்ட வகுப்பிலே சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில் நாயுடு வகுப்பைச் சேர்ந்த கம்மாவர் நாயுடு என்று சொல்லக்கூடியவர்கள் முற்போக்கு வகுப்பினராகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, இந்த கவர நாயுடு என்ற வகுப்பு பிற்பட்ட வகுப்பாகக் கருதப்பட்டாலும், அந்த வகுப்பு பிற்பட்ட வகுப்பாகக் கோயம்புத்தூர் மாவட்டத்தில்தான் கருதப்படும் என்ற நிலை இருக்கிறது. அண்மையிலே ஒருவருக்கு நான் கம்யூனிட்டி சர்டிபிகேட் வாங்குவதற்கு குடியாத்தம் தாசில்தாரிடம் சென்றபோது அவர்கள் சொன்னார்கள். இந்த கவரநாயுடு கோயம்புத்தூர் மாவட்டத்தில் தான் பிற்பட்ட வகுப்பாகக் கருதப்படும், இங்கே இல்லை என்று சொன்னார்கள். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இந்த நிலைகளை மாற்றி நாயுடு என்றால் எல்லோருமே பிற்பட்டவர்கள் என்ற நிலையைச் செய்யவேண்டும்.

இதுபோன்று சென்ற காலத்திலே பிரிட்டிஷ்காரர்கள் ஆண்டு வந்த காலத்தில் அதற்கு முந்தி முஸ்லீம்கள் என்று சொன்னால் எல்லோரும் பிற்பட்டவர்கள் என்றுதான் கருதப்பட்டார்கள். பிறகு கன்னியாகுமரி மாவட்டம் பிரிந்து தமிழ்நாட்டுடன் சேர்ந்த பிறகு, நாஞ்சில் நாடு பகுதி இணைந்த பிறகு—அங்கிருந்து வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்—அங்கே முஸ்லீம்களில் முற்பட்டோர், பிற்பட்டோர் என்று இல்லாமல் இருந்தது, தமிழ் நாட்டில் சேர்ந்த உடன் அங்கேகூட பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற நிலைமை வந்துள்ளது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1972 மார்ச் 20] [திரு. எம். ஏ. லத்தீப்]

உருது பேசும் முஸ்லீம்கள் எல்லாம் முற்பட்டவர்கள், ஃபார்வார்ட் என்று சொல்லுகிறார்கள். நான் கேட்கிறேன், இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் மக்களோடு தொடர்பு கொண்டவர்கள், இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர்கூட உருதுபேசுகிற முஸ்லீம்களின் பிரதிநிதியாக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் கேட்கிறேன், தமிழ்நாடு முழுவதும் சென்று பார்க்கிறீர்கள், நீங்கள் பார்க்கின்ற இடங்களில் எல்லாம் உருதுமொழி பேசக்கூடியவர்கள் ரிக்ஷா ஓட்டுபவர்களாகவும், பிளாட்பாரத்தில் கூலி வேலை செய்கிறவர்களாகவும்தான் இருக்கிறார்கள். ஆனால் இன்று அவர்கள் முற்பட்டவர்களாக கருதப் பட்டு, சமுதாயம் முன்னேறிக்கொண்டிருக்கும் காலத்தில் அவர்கள் பிள்ளைகள் படிப்பதற்கு வசதியற்று, அவர்கள் தொழிற்துறையிலும், மற்றவற்றிலும் வசதியற்று இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே அழகாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 12 புதிய வகுப்புகள் பிற்பட்ட வகுப்பாகத் தமிழக அரசு இன்று அறிவித்து இருக்கிறது. இந்த 12-ஐ அறிவித்திருப்பதற்காக நான் புதிய தெம்புடன் நம்முடைய அமைச்சர் அவர்களைப் பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் அடிக்கடி நானும், என்னுடைய கட்சியைச் சார்ந்தவர்களும், மற்றவர்களும் எடுத்துக்கூறி வருகிற ஒரு கோரிக்கை இதுவரையிலே நிறைவேற்றப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதற்கான வாக்குறுதியைச் சென்ற சட்டமன்றத் தொடரில் கொடுத்தார்கள். ஆனால் அது இன்று வரையில் நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் இதை வேண்டுகோளாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே இருக்கின்ற அத்தனை முஸ்லீம்களும் எப்படி இதற்கு முன்பு பிற்பட்டவர்கள் என்று கருதப்பட்டார்களோ, அதே முறையில் பிற்பட்டவர்களாக அறிவிக்கப்படவேண்டும். அது உங்கள் காலத்தில் நடைபெற வேண்டும். உங்கள் காலம் என்றால் எங்கள் காலம். உங்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இல்லை. இந்தக் காலம்தான் எங்கள் காலம். ஆகவே உரிமையுடன் கேட்கிறேன். நீங்கள் இன்று இந்தக் கொடுமையை அகற்றி உடனடியாக அறிவிப்புத் தரவேண்டும். இந்த 12 வகுப்பிலே முஸ்லீம் வகுப்பைச் சேர்க்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம்..ஏ. லத்தீப்] [1972 மார்ச் 20

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அங்கே என்ன நடைபெறுகிறது என்றால், வடாற்காடு மாவட்டத்தில் இருந்து வந்திருக்கும் உறுப்பினர்களைக் கேட்டால் தெரியும்.

பி.ப. 1·30. வட ஆற்காடு மாவட்டத்தில் ஏதோ பல சூழ்நிலையில் அவர்களும் தமிழ் முஸ்லீமாக இருந்தாலும், உருது பேசுபவர்களாக இருக்கிறார்கள். நான்கூட தமிழ் முஸ்லீம், ஆனால் வீட்டில் உருது பேசுகிறேன். சர்டிபிகேட்டில் தாய்மொழி உருது என்று எழுதி வைத்திருக்கிறார்கள். சர்டிபிகேட்டில் உருது என்று இருந்தாலும், லப்பை என்று குறிப்பிட்டிருந்தால், அவர்களுக்கெல்லாம் கம்யூனிடி சர்டிபிகேட் இதுவரையில் கொடுத்து வந்தார்கள். ஆனால், அண்மையில், கடந்த இரண்டு மாதங்களாக என்ன நடக்கிறது என்றால், தாசில்தாரிடம் சென்றால், "உங்களுடைய தாய் மொழி உருது மொழி என்று எழுதி வைத்திருக்கிறார்கள், நீங்களெல்லாம் லப்பைகள் என்று எனக்குத் தெரியும். ஆனால், அரசாங்கத்தினிடமிருந்து ஒரு புதிய ஜி.ஓ. வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் நான் கொடுப்பதற்கு இல்லை, அரசாங்கத்திடம் முறையீடு செய்யுங்கள்" என்று சொல்கிறார்கள்.

நாங்கள் எல்லோரும் பின்தங்கியவர்களாக இருக்கவேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறோம். அப்படிப் போராட்டம் ஆரம்பித்திருக்கிற இந்த நேரத்தில் "ஆகா, இப்படியா நீங்கள் சொல்கிறீர்கள், எல்லா முஸ்லீம்களையும் பிற்பட்டவர்கள் என்று கூற வேண்டும் என்று குறிப்பிடுகிறீர்கள். உருது பேசுகின்ற லப்பைகளைக்கூட நாங்கள் பிற்பட்டவர்கள் என்று கருதுவதற்கு இல்லை" என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். யாரோ சில அதிகாரிகள் இப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். உடனே அரசாங்கம் இதைக் கவனித்து, லப்பை என்று எங்கே எங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அவர்கள் மொழி உருது மொழியாக இருந்தாலும் அவர்களையும் பிற்பட்டவர்களாகக் கருத வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

ஒரே விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஏலகிரி மலையில் ஒரு அரசாங்க விடுதி இருக்கிறது. அங்கு சிறு பிள்ளைகளுக்கு உணவு கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்பொழுது வந்தாலும் அந்த விடுதியைப் போய்ப் பார்க்கவேண்டும். அந்தப் பிள்ளைகளைப்பார்த்தால் எலும்புக் கூடாகத்தான் இருக்கிறார்கள். அங்கு சீதோஷ்ண நிலை மிகவும் குறைந்த சீதோஷ்ண நிலை. அவர்கள் உடம்பிலே அதிகமான சக்தி இருக்க வேண்டும். ஆனால், அந்தப் பிள்ளைகளுக்குக் கொடுக்கிற உணவு மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அவர்களுக்குத் தரப் படுகிற உணவுக்காகக் கொடுக்கும் தொகையை உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏலகிரி மலையில் பிற்பட்ட மக்களுக்குக் கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கிற.........



1972 மார்ச் 20] [திரு. எம். ஏ. லத்தீப்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் 5 நிமிடங்களுக்கு மேலாகவே எடுத்துக்கொண்டுவிட்டார்கள். கிட்டத்தட்ட 9 நிமிடங்கள் பேசிவிட்டார்கள். திரு. சதாசிவம் அவர்கள் இப்பொழுது உரையாற்றுவார்கள்.

* திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே இந்தப் பேரவையின்கண் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையின் சார்பாக வைக்கப்பட்டிருக்கிற நிதி மான்யக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1966–67-ல் 0.91 கோடியாக இருந்ததை, 1972–73-ல் ரூ. 4.68 கோடியாக உயர்த்திச் செலவிடப்படுவதற்கு இங்கு திட்டமிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் பின்தங்கிய மக்களுடைய நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சட்டநாதன் அவர்களுடைய குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை நடவடிக்கைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவைகளில் எவை எவை முக்கியமாக எடுத்துக்கொள்ள முடியுமோ அந்தப் பரிந்துரைகளை எடுத்துக் கொள்ள இருக்கிறோம் என்று சென்ற கூட்டத்தில் முதல்வர் அவர்கள் சொன்னதில் சிலவற்றை நிறைவேற்றியதற்கு அவர்களைப் பாராட்டி, ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பின்தங்கிய வகுப்பினர்களின் நலனைக் கவனிப்பதற்காக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னதுபோல, ஒரு தனி இயக்குனரை, அல்லது ஜாயிண்டு இயக்குனரை நியமித்து, மாவட்ட ரீதியில் தனி ஒரு அதிகாரியாக நியமித்து செயல்படஆவன செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. சதாசிவம்] [1972 மார்ச் 20

மேலும் மாவட்ட அதிகாரிக்குக் கீழே இருக்கக்கூடிய தாசில்தாருக்கு டிவிஷனில் பல விடுதிகளுக்குச் சென்று பார்வையிட வேண்டியிருந்தாலும்கூட, அவருக்கு எந்தவிதமான போக்கு வரத்து வசதியும் கிடையாது. உணவு விடுதிகளிலிருந்து ஏதாவது ரிப்போர்ட்டுகள் வந்தாலும்கூட, அல்லது வேறு எந்தவிதமான காரியமாக இருந்தாலும், அவர்கள் விடுதிகளை அணுகவேண்டுமென்று இருந்தாலும், உடனடியாகச் சென்று வர போக்குவரத்து வசதி கிடையாது. ஆகவே, தாசில்தார்களுக்கு ஜீப் வசதி செய்து கொடுத்து, உணவு விடுதிகளையும் மற்ற வேலைகளையும் அடிக்கடி சென்று பார்வையிடுவதற்கு வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய வகுப்பினர்களுடைய உபகாரச் சம்பளம் பற்றி முன்னமே சொல்லப்பட்டது. அவர்களுடைய வருவாய் ஆண்டுக்கு 2,000-க்கு குறைவாக இருந்தால்தான் கொடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்கூட கிட்டத்தட்ட ரூ. 2,500-க்கு மேல் சம்பளம் வாங்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளெல்லாம் பள்ளிகளில் உபகாரச் சம்பளமில்லாமல் பயில்வதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய வருமான வரம்பை ஒரு ஆண்டுக்கு ரூ. 5,000 என்ற கணக்கில் உயர்த்திக் கொடுக்குமாறு நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவேதான், பின்தங்கிய வகுப்பினர்கள் 40 பெர் செண்டுக்குக் குறைந்த மார்க்குகள் வாங்கியிருந்தால் அவர்கள் உபகாரச்சம்பளம் பெறுவதற்கு லாயக்கு இல்லாதவர்கள் என்ற நிலை இருக்கிறது. பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் படிப்பதற்குப் போதுமான வசதி இல்லாத காரணத்தினால், 40 சதவிகிதம் மார்க்குகள் வாங்கமுடியாத நிலை இருக்கிறது. நான் முந்தைய கூட்டத்தில் பேசும்பொழுதுகூட எடுத்துச்சொன்னேன். அந்த மார்க்குகளைக் கொஞ்சம் குறைத்து, 30 அல்லது 35 பெர்சண்டாக நிர்ணயம் செய்து, அவர்களுக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும்படியாகச் செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுடைய வயது வரம்பையும் கொஞ்சம் தளர்த்திக் கொடுக்க வேண்டும். அவர்கள் உத்தியோகத்திற்குப் போவதற்கு 25 வயது என்று இருப்பதை, 30 ஆக உயர்த்தித் தரவேண்டும். இப்பொழுது ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகளுக்குப் போவதாக



1972 மார்ச் 20] [திரு. செ. சதாசிவம்]

இருந்தால்கூட, அங்கே அவர்களுக்கு வயது அதிகமாக இருப்பவர்களைத்தான் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். 25 வயது வரையில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். பிறகு அவர்கள் படித்து வெளியே வந்தால் முன்பு அப்ரெண்டிஸ் ஸ்கீம் என்று இருந்தது, அதன் அடிப்படையில் ஏழைகளுக்கும் வேலை கிடைத்து வந்தது. இப்பொழுது அதுகூட இல்லை. அதுவும் வசதியுள்ளவர்கள்தான் வேலைக்குப் போகிற வசதி இருக்கிறதே தவிர, வசதியில்லாதவர்கள் வேலைக்குப் போக முடியவில்லை. அதற்குள் வயது 30 ஆகிவிடுகிறது. அதுவும் சில பஞ்சாயத்து யூனியன்களில் வேண்டியவர்களுக்குத்தான் வேலை கொடுக்கிறார்கள். வேண்டாதவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. அப்படி வேலை கொடுத்தாலும் வயது 25க்கு மேல் இருந்தால் வேலையை விட்டு நீக்கிவிடுகிறார்கள். சென்ற வருஷம் இந்தச் சட்டமன்றத்தில் நான் பேசும்போதுகூட சொன்னேன். வேலை செய்து கொண்டிருப்பவரை வயது ஆகிவிட்டது என்று சொல்லி, அவரை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள். பிறகு அப்பீல் செய்துதான் வேலையில் அமர்த்த வேண்டியிருந்தது. ஆகவே, வயது வரம்பை 30 ஆக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பின்தங்கிய வகுப்பினர்களுக்குத் தட்டெழுத்துப் பயிற்சி கற்றுக் கொடுப்பதற்கும், சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுத கோச்சிங் செண்டர் மூலம் அவர்கள் கற்றுக்கொள்வதற்கு டிவிஷன் லெவலில் இரு பள்ளிகள் ஆரம்பித்து, அங்குள்ள பின்தங்கிய மாணவ, மாணவியர்கள் தட்டெழுத்துப் பயிற்சி பெறுவதற்கும், சர்வீஸ் கமிஷன் கோச்சிங் செண்டர் மூலம் பயிற்சி பெறவும் தேர்வு எழுத ஏற்பாடு செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அவர்கள் தொழில் செய்வதற்கு, சைக்கிள் ஷாப், காம்பிளைப் போன்ற தொழில்கள் செய்வதற்கு அவர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அங்குள்ள உணவு விடுதிகளில் உள்ள 50 பிள்ளைகள் தங்கிப் படிப்பதற்குக் கட்டட வசதி இல்லை. கிராமங்களில் விடுதிகளுக்குச் சரியான கட்டட வசதி கிடையாது. 10 விடு குடிசை வீடுகளாக இருந்தால், ஒரு வீடு ஓட்டுவில்லை வீடாக, சிமெண்டு கட்டடமாக இருக்கிறது. ஆகவே, எந்த உயர்நிலைப் பள்ளிகளில் உணவு விடுதிகள் இருக்கின்றனவோ,

[திரு. செ. சதாசிவம்] [1972 மார்ச் 20

அங்கெல்லாம் அரசாங்கம் தகுந்த கட்டடத்தைக் கட்டிக்கொடுத்து, பிள்ளைகள் நல்ல முறையில் படிக்க ஆவன செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பொன்பரப்பி, ஆண்டிமடம் ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு உயர் நிலை பள்ளியிலும் 500-க்கு மேற்பட்ட பின்தங்கிய பிள்ளைகள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு உணவு விடுதிகள் ஆரம்பிக்கப்படவில்லை. அதைப் பரிசீலனை செய்து இந்தக் கல்வி ஆண்டு முதலாவது அங்கெல்லாம் உணவு விடுதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கிராமங்களில் படையாச்சி என்ற வகுப்பினர்கள் இருக்கிறார்கள். கிராம மணியக்காரர்கள், கணக்குப்பிள்ளைகள் எழுதும்பொழுது, படையாச்சி என்பதற்கு பூச்சி என்று எழுது கிறார்கள். படையாச்சி என்று எழுதும் பழக்கம் கிடையாது. ஆகையால் அமைச்சர் அவர்கள் இந்த முறையை நீக்கி, யாருடைய பெயரை எந்த வகையில் எழுதவேண்டுமோ அந்த வகையில் எழுதும்படிச் செய்யவேண்டும். நான் ஜாதியை வளர்ப்பதற்காக இதைச் சொல்லவில்லை. எழுதும்பொழுது, எழுதும் முறையில் எழுதவேண்டும் என்று சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. அந்த வகுப்புக்கு என்ன பெயர் உரியதோ, உரிய பெயரை, சரியாக எழுதவேண்டும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆசிரியர் பயிற்சி பள்ளிகளில் சேருபவர்களுக்கு ஏற்கனவே எல்லாம் பட்டதாரியாக இருந்தால் ஒரு வருஷம், 6 மாதம் சர்வீஸ் போதும் என்று இருந்தது. சென்ற வருஷம் முதல் பர்ஸ்டு கிரேடில் பாஸ் பண்ணிய பட்டதாரி ஆசிரியர்களாக இருந்தால்தான் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ள முடியும் என்று சொல்லப்படுகிறது. ஆசிரியர் வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேருவதற்கு இடம் கிடைப்பதில்லை.

வயது 25-க்கு மேல் ஆகிவிட்டால் அவர்கள் அரசு பணியில் ஈடு படமுடியாத நிலையில் இருக்கிறது. வயதைக் கொஞ்சம் தளர்த்தி, சர்வீஸில் இருந்தவர்களையும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளும்படியாக ஆவன செய்யவேண்டும் என்று பணி வோடு கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 20] [திரு. செ. சதாசிவம்]

இப்படி எந்த அளவுக்கு அவர்களுக்குச் சலுகைகள் செய்து கொடுக்கப்படுகிறதோ அந்த அளவுக்குத்தான் பின்தங்கிய மக்கள் வளர்ச்சி பெற முடியும். ஆகவே, இந்தச் சலுகைகளை அவர்களுக்கு உடனடியாக அளிப்பதற்கு முன்வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யம் மிகவும் முக்கியமானது. சமுதாயத்தின் அச்சாணியாக இருப்பவர்கள் இந்தத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் தான் என்பதை மறந்துவிடக்கூடாது. இவர்களுக்குக் கொடுக்கப் பட்டுவரும் சலுகைகளை மேலும் உயர்த்திக்கொடுத்தால் சமுதாயம் மேலும் வளர்ச்சியுறும். ஆனால் இந்த அரசு பிற்பட்ட இனத்தின் நலன்களில் நல்ல அக்கறை காட்டிவருகிறது என்பது குறித்து என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருந்தாலும் கொடுத்துக்கொண்டுவருவது போதாது, மேலும் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்பதில் தவறில்லை.

மொத்தம் ரூ. 397 கோடி வரவு—செலவு செய்யக்கூடிய நமது மாநிலத்தில் இன்றைக்கு ரூ. 270 லட்சம்தான் கல்விச் சலுகை களுக்காகக் கேட்கப்படுகிறது என்றால் அது மிகமிகக் குறைவாகத் தான் தோன்றுகிறது. இதற்கு முன்பாவது இதைவிட முக்கியமான வேலைகள் இருந்தன. இனிச் சமுதாய வளர்ச்சியில் என்ன என்ன கடமைகளைத் துரிதமாகச் செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். பணமும் இருக்கிறது. உங்களுக்கு மனமும் இருக் கிறது. அமுல் படுத்துங்கள் என்று கேட்கிறோம்.

மொத்தமாக இவர்களுடைய நலனுக்கென்று ரூ. 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் குறைவு. பத்துகோடியாவது இருந்திருக்க வேண்டும். பட்ஜெட்டில் மூன்று சதவிகிதம் என்று வைத்தாலும் பத்துகோடி ரூபாய்க்கு வரும். எனவே மேலும் அதிகமாகவே நிதி ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு மேலும் பல கல்விச் சலுகைகளை அளித்து, மேலும் அவர்களைப் பொருளாதாரத் துறையில் உயர்த்தி விட்டால் அவர்களுடைய குடும்பம் நல்ல முறையில் செழிக்கும். குடும்பத்தில் ஒரு நபர் உயர்ந்துவிட்டால்கூடப் போதும். எனவே மேலும் மேலும் என்னென்ன சலுகைகள் கொடுக்க வேண்டுமோ அவற்றைக் கொடுக்கவேண்டும். ஆனால் எவ்வளவுதான் சலுகை களைக் கொடுத்து, அவர்களை முன்னேற்றமடையச் செய்ய

முனைந்தாலும் இப்போது அவர்களைப் பின்னோக்கி இழுக்கும் நிலைமையினைத்தான் பார்க்கிறோம். அதுதான் மதுவிலக்கை ரத்துசெய்திருப்பது. இதனால் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்பட்டவர்களும்தான் பெரிதாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். ஏதோ இதுவரையில் ஒரு பிள்ளையாவது பள்ளிக்கூடம்போய்ப் படித்துவிட்டு வந்து பிறகு அரசு கொடுக்கும் சலுகைகளின் பலனாக நல்ல நல்ல உத்தியோகங்களுக்கும் போக முடிந்தது. இனி அவர்கள் குடித்துக்கொண்டு வாழ்வினைப் பாழ்படுத்திக்கொண்டு இருந்தால் அவர்களுடைய எதிர்காலம் என்ன ஆவது என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம். எனவே, இந்தப் பிற்பட்டோர் நல இலாக்கா கள்குடிப்பதால் ஏற்படும் தீமைகளையாவது அவர்களிடையில் எடுத்துச்சொல்லி அவர்களை நல்ல வழியில் திருப்பிவிடலாம். ஏதோ நாங்கள் சொல்லுவதால் கள்ளுக்கடைகளை அரசு மூடிவிடப்போவதில்லை. எனவே இந்தப் பிரச்சாரத்தையாவது செய்ய முனையலாம். இது மிகமிக அவசியமாகும்.

அடுத்து, ஒரு சிறு மாற்றம் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பிற்பட்ட வகுப்பினர் பற்றிச் சொல்லும்போது, கள்ளன், மறவன் என்று "அன்" விகுதியில் போட்டு அவமானப்படுத்துகின்றீர்கள். "அர்" விகுதியில் சொல்லுவதால் யாருக்கு என்ன குறை ஏற்பட்டுவிடும்? இப்படிப்பட்ட ஒரு சிறு திருத்தம் செய்வதற்குக்கூட இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்றால், இதில் உங்கள் அக்கறை செலுத்தப்படுகிறது என்பதே கேள்விக்குறியாக ஆகிவிடுகிறது. இனியாவது கனம் அமைச்சர் அவர்கள் "அன்" விகுதி போடாமல் "அர்" விகுதி போடும்படி வேண்டுகிறேன். மீண்டும் இதுபற்றி அடுத்த பட்ஜெட்தொடரில் பேசும்போது இப்படிப்பட்ட குறையினை மீண்டும் எடுத்துக்காட்டும் சூழ்நிலை ஏற்படக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக "ஆண்டொன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட வசதி உள்ளவர்களுக்கு நாங்கள் எந்த உதவித் தொகையும் கொடுக்கப்போவதில்லை" என்று சொல்லும்போது, அது இந்தப் பிரச்சினையினை எந்த அளவிற்குத் தீர்க்கும் என்பது சந்தேகமாக இருக்கிறது. இந்தக் காலத்தில் ரூ. 300 சம்பளம் என்பது மிகவும் சாதாரணம். அங்கத்தினர் கந்தசாமி அவர்கள் அடிப்படை சம்பளம், அலவன்ஸ்கள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போதுகூட வெறும் அடிப்படைச் சம்பளம் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இப்படி வெறும் அடிப்படைச் சம்பளம்



மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டால் கூட "எக்கனாமிக்கல்லி பேக்வர்டு கிளாஸஸ்" பிரச்சனை தீருமா என்று தெரியவில்லை. எனவே ஆண்டொன்றுக்கு இரண்டாயிரம் என்று இருப்பதைவிட, அடிப்படைச் சம்பளம் 300 என்று எடுத்துக்கொண்டு ஆண்டொன்றுக்கு ரூ. 3,600 வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே இச்சலுகைகள் என்று அறிவித்திடவேண்டும். அடிப்படைச் சம்பளத்துடன் கிடைக்கும் இதர அலவன்ஸ்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

இது மட்டும் இல்லாமல் மாவட்டங்களில் பயிர் செய்யும் குடும்பத்தில் உள்ளவர்களுடைய ஆண்டு வருமானம்பற்றி தாசில்தார் ஸெர்டிஃபிகேட் கொடுக்கும்போது, உதாரணமாக இராமனாதபுரத்தில் ஐந்து அல்லது ஆறு ஏக்கர் உள்ளவர்கள் கேட்கும்போது இரண்டாயிரம் ரூபாய்க்குமேலே வருமானம் என்று ஸெர்ட்டிஃபிகேட் கொடுத்துவிடுகின்றார்கள். கொடுத்துவிட்டு, "உனக்கு சலுகை கிடையாது" என்று சொல்லிவிடுகின்றார்கள். பொன் விளையும் தஞ்சை மாவட்டத்திலேயே ஏக்கருக்கு ரூ. 300 வருமானம் வருவது கஷ்டம். இராமனாதபுரத்தில் உள்ள ஒருவருக்கு அந்தமாதிரி சொல்லி, "உனக்குச் சலுகை இல்லை" என்று சொன்னால் அந்தப் பையன் எங்கே போவான்? அவனுக்கு எப்படி ஸ்காலர்ஷிப் கிடைக்கும்?

எனவே இந்த நிலையை மாற்ற, அரசே ஒரு முடிவெடுத்து, இந்த இந்த மாவட்டத்தில் இவ்வளவுதான் ஒரு ஏக்கருக்கு வரலாம் என்று நிர்ணயம் செய்து விட்டால், இப்படி தாசில்தாரும் விரட்டு விரட்டு என்று விரட்ட வேண்டாம், பையனும் இப்படிக் கஷ்டப்பட வேண்டாம். என்னைப் பொறுத்தவரையில் தாசில்தார் சர்ட்டிபிகேட் இல்லாமல் ஒரு சட்டமன்ற உறுப்பினர் அல்லது பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் சான்றிதழ் கொடுத்தாலே போதும் என்று இருக்கலாம். இவர்களாவது அடுத்துவரும் தேர்தலை மனதில் வைத்தாவது சற்று பச்சாதாபத்தோடு நடந்துகொள்ளுவார்கள். தாசில்தாருக்கு என்ன பயம்? மாதம் போனால் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார். யாருக்குப் பயப்பட வேண்டும்? வேண்டுமானால் அந்தப் பையனிடமிருந்து, அவன் இந்த வகுப்பினைச் சார்ந்தவன், இன்ன வருமானம் என்று ஒரு "அஃபிடவிட்" மாதிரி ஒரு ஸ்டேட்மெண்டு வாங்கிக்கொண்டு சட்டமன்ற உறுப்பினரோ அல்லது ஒன்றியத் தலைவரோ ஸர்டிஃபிகேட் கொடுக்கலாம்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 20

பையன் கூறியதில் தவறு இருந்தால் அவன் நடவடிக்கைக்குள்ளாகிறான். கெஜடட் ஆஃபீஸர்ஸ் ஸர்டிஃபிகேட்டும் வேண்டாம். அவர்களிடம் போனால் நிச்சயமாகக் கிடைக்காது. நானே எவ்வளவோ "பேக்வர்டு கிளாஸஸ்" பிள்ளைகளுக்கு என்று ஸர்டிஃபிகேட் வாங்கப் போனபோது இந்த அதிகாரிகள் எவ்வளவு கஷ்டப்படுத்தியிருக்கின்றார்கள் என்று எனக்குத் தெரியும். எனவே சேர்மென் அல்லது எம்.எல்.ஏ. இவர்களிடம் அனுப்பினால் சுலபமாக அதிகாரிகளின் தயவில் இந்தப் பையன்களை விடாமல் பஞ்சாயத்து இருக்கும். எம்.எல்.ஏ.க்கள் அல்லது பஞ்சாயத்து சேர்மென் என்றால் யார்? பப்ளிக் ரெப்ரஸெண்டேடிவ்ஸ்தானே? இவர்கள் ஏன் கொடுக்கக்கூடாது?

அடுத்து, இந்தத் துறையில் பேக்வர்டு ட்ரைப்ஸ்களுக்கு என்று 271 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. கனம் கல்வியமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அரிசனங்களுக்கு என்று சில பள்ளிகள், மலைவகுப்பினருக்கு என்று சில பள்ளிகள் இன்னும் பஞ்சாயத்துப் பள்ளிகள் முனிசிபாலிடிகளுடைய பள்ளிகள் என்று ஏன் இவ்வளவு பிரிவுகள்? இவ்வளவையும் கல்வியிலாகாவே எடுத்துக்கொண்டு நடத்தினால் என்ன? என்ன கெட்டுவிடும்? மேலும் சிறப்பாகத்தானே நடக்கும்? இதைவிட முக்கியமான பணிகள் நிறைய இருக்கின்றன. எனவே கல்வியை கல்வியிலாகாவிடமே விட்டுவிட்டு அந்தப் பணிகளில் கவனம் செலுத்தலாம். பின் தங்கிய வகுப்பினருக்கு என்று என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றில் நாம் கவனம் செலுத்தலாம்.

அடுத்து, சலவையாளர்களைத் தாழ்த்தப்பட்வர்களுடைய லிஸ்டில் சேர்க்க வேண்டும் என்று பல காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகமிகப் பின்தங்கியவர்கள் எக்கனமிக்கலி. எனவே அவர்களைச் சேர்ப்பதற்கு அரசு முயற்சிகளை எடுக்க வேண்டும். அவர்களுக்கு என்று முனிசிபாலிட்டியும் அரசாங்கமும் 50/50 என்று போட்டு டோபிகானா கட்டிக்கொடுக்கின்றார்கள். இதை வேண்டிய இடங்களிலே கட்டிக்கொடுப்பதற்கு இந்த இலாகா நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அக்கறை காண்பிக்க வேண்டும். சைதாப்பேட்டையில் ஒரு டோபிகானா இருக்கிறது. அதைக் கவனிப்பதே கிடையாது. என் தொகுதியில் அடையாற்றில் ஒரு டோபிகானா வேண்டும். இதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திடம் இந்தச் சந்தர்ப்பத்தில் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



1972 மார்ச் 20] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அடுத்து, ஹாஸ்டல்களைப் பொறுத்த மட்டில் சில பெண்களுக்கு அரசாங்கம் நடத்தும் ஹாஸ்டலில் இடம் கிடைக்கிறது. மற்ற உள்ள பெண்களுக்கும் அரசாங்கம் போதிய உதவிகளை அளிக்க வேண்டி நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

வர்கள் தனியார் நடத்தும் விடுதிகளில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அரசாங்க சலுகைகள் வேண்டும் என்று கேட்டால் அதில் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. தனியார் விடுதியில் உள்ள பெண்கள் அதற்கான சான்று வேண்டும் என்று கேட்டால், ஆண்டு முழுவதுக்குமான தொகையைக் கட்டு, பிறகு சர்டிபிகேட் கொடுக்கிறேன் என்று சொல்லுகின்றார்கள். அந்த வசதியிருந்தால் சலுகை வேண்டும் என்று ஏன் கேட்கப்போகின்றார்கள்? எனவே தனியார் ஹாஸ்டலில்

அடுத்து, ஒருசிறு யோசனை. இராமனதபுரம் மாவட்டத்தில் சென்று பார்த்தால் அங்கே சில பின்தங்கிய வகுப்பினர் வாழும் நிலைமை மிக மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. பயங்கரமாகவும் இருக்கிறது: இப்படிப்பட்ட நிலை தமிழ்நாட்டில் இருக்கிறதா என்று எண்ணத் தோன்றும். குறிப்பாக, குடிநீர் விஷயத்தில் அவர்கள் அவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள். எனவே பிற்பட்ட வகுப்பினருக்கு மிகமிகப் பின் தங்கிய வகுப்பினருக்கு இது விஷயத்தில் போதிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

அதுபோலவே அங்கேயெல்லாம் போதிய பள்ளிக்கூடங்களையும் திறப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கும் மேலாக குழந்தைகள் பள்ளி செல்லும் பருவத்திற்கு முன்னதாக அவர்களைப் பராமரிக்கும் நிலையங்கள்—பால்வாடிகள், ஏற்படுத்தித் தர இந்த இலாகா முன் வரவேண்டும். இதனால் தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பினர் உள்ள பகுதிகளில் குழந்தைகள் நன்கு பராமரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

அடுத்து ஒன்றே ஒன்று, இந்தக் கருணிகர் வகுப்பினரை, அவர்கள் ஜாதியில் கணக்கப்பிள்ளை என்று இருந்தாலும், அவர்களில் பலர் படித்திருந்தாலும் எக்கனமிக்கலி அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில்தான் இருக்கின்றார்கள். எனவே, இவர்களை "பேக்வார்டு கிளாசில்" சேர்க்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட சலுகைகள் இன்றி மத்திய அரசு ஜாதி அடிப்படையிலின்றி பொருளாதார அடிப்படையில் உதவும்படி ஆண்டுக்கு ரூ. 14 லட்சம் நமது மாநிலத்திற்குத் தந்துகொண்டிருந்தார்கள். அது இப்போது நிறுத்தப்பட்டு விட்டது.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 20

எனவே மத்திய அரசோடு வாதாடி இந்தத் தொகையை முடிந்தால் இன்னும் கூட அதிகமாகப் பெற்று பின்தங்கிய வகுப்பினருக்கு உதவ அரசு முன் வரவேண்டும். இதற்கெல்லாம் பிற்பட்ட இலாகாவினரின் அமைச்சர் அவர்கள் பாடுபடவேண்டும். அவர்கள் உயர்ந்த வகுப்பினரைச் சேர்ந்தவராகி விட்டபடியால் மற்றவர்களுக்கு வாய்ப்பில்லாமல் இருந்துவிட வேண்டாம். அவர்களுக்கெல்லாம் அமைச்சர் அவர்கள் வசதிகளைத் தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு. எம். தேவராசன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பிற்பட்ட நலத்துறை அமைச்சரவர்கள் இங்கே அளித்துள்ள இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய மாவட்டத்தைப்பற்றி சில கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் பெரும்பாலோர் வடுகர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள். நீலகிரி மாவட்டம் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. எல்லா மாவட்டங்களிலும் உள்ள நிலம் இல்லாத ஏழைகளுக்கு, விவசாயிகளுக்கு நமது கழக அரசு நிலப்பட்டா அளித்து வருகிறது. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் ஒரு அங்குலம் நிலம் கூட எந்த ஒரு ஏழை விவசாயிக்கும் இதுவரை பட்டா செய்யப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால் அங்கே ஒரு தடை இருக்கிறது. ஒரு பொதுத் தடை—பான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்கே உள்ள மலைவளம் குறைந்து விடும் என்றும் அதன் அழகு கெட்டுவிடும் என்றும் கருதுவதால் நிலம் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். மலைவளம் கெட்டுப்போகக் கூடிய அளவில், அல்லது அதன் அழகு பாழ்பட்டுப் போகக்கூடிய அளவில் உள்ள நிலத்தை யாரும் கேட்கவில்லை. அப்படிப்பட்ட நிலங்கள் போக, பாக்கியிருக்கின்ற புறம்போக்கு நிலத்தைக் கொடுத்தால் அந்த மலைவாழ் மக்கள் இந்த அரசுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதைப் பணிவோடு அமைச்சரவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அங்குள்ள பிற்பட்ட இனத்து மக்களின் தொழில் விவசாயம். உருளைக்கிழங்கு விவசாயம் செய்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளாகவே "லேட் பிளைட்", "கோல்டன் நெமிடோட்" என்ற கொடிய நோய்களால் உருளைக்கிழங்கு விவசாயம்



1972 மார்ச் 20] [திரு. எம். தேவராசன்]

மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் வருவாய் மிகவும் குறைந்து விட்டது. இப்போது நமது அரசாங்கம் மதுவிலக்கை ரத்து செய்திருப்பதால், அந்த மாவட்டத்திலே பார்லி பயிர் செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. இப்போது உருளைக்கிழங்கு பயிர் செய்யும் நிலத்தில் அந்த மக்கள் பார்லி பயிர் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுத்துறை மூலமாகப் பார்லி உற்பத்தியைப் பெருக்க, தேவையான கடன் வசதிகளும், இதர வசதிகளும் செய்து கொடுத்து, ஒரு பீர் தொழிற்சாலையும் அமைத்துக் கொடுத்தால், அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பும் பெருகும்; அவர்கள் வருவாயும் அதிகரிக்கும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் அங்கு கல்லூரி மாணவர்களுக்கு, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், உபகாரச் சம்பளம் சரியாகக் கொடுக்கப்படவில்லை. முன்பு யார் மனு செய்தாலும், தகுதி படைத்தவர்களுக்கு எல்லாம் உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டு வந்தது. இப்போது அப்படிக் கொடுக்கப்படவில்லை. அதையும் அமைச்சரவர்கள் கவனித்து, தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உதகையில் கல்லூரி விடுதி கிடையாது. இதைப்பற்றிப் பலமுறை இந்த மன்றத்திலே நான் வலியுறுத்தியிருக்கிறேன். கல்லூரி விடுதி இல்லாததால் மாணவர்கள் வெளியில் ஹோட்டல்களில் தங்கிப் படிக்க வேண்டிய நிலைதான் இருக்கிறது. அதற்கு அதிகமாக செலவாகிறது. வசதி படைத்தவர்கள்தான் ஹோட்டல் விடுதிகளில் தங்கிப் படிக்க முடிகிறது. எனவே, அங்கே மாணவர்களுக்கு ஒரு விடுதி கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அங்குள்ள மலைப்பகுதிகளில் தோதுவர் என்ற சமூகத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். இன்றைக்கு அவர்கள் சமூகமே அற்றுப்போகக்கூடிய நிலையில் இருக்கிறது. இன்று அந்த சமுதாயத்தில் ஆயிரத்திற்கும் குறைவானவர்கள்தான் காணப்படுவார்கள். அவர்களுக்குக் கொடிய நோய் ஒன்று இருந்து வருகிறது. எவ்வளவோ மருத்துவம் செய்தும் அந்த நோயைக் குணப்படுத்த முடியவில்லை. அந்த மக்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தைக்கூட, சமீபத்தில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்று நமது அரசாங்கம் திரும்பப் பெற்றுக்கொண்டது. மூன்று ஏக்கர் நிலம் வரை கொடுத்தால் போதும் என்று ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள்.

அதனால் அந்த மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அமைச்சரவர்கள் இதுபற்றிக் கலெக்டரிடம் விசாரித்து, மீண்டும் அவர்களுக்கு முன்போலவே நிலம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. டி. கணபதி: தலைவரவர்களே, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து, அதிலே என்னுடைய பொதுவான சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன்.

1966–67-ல் 97 லட்சம் ரூபாயும், 1972–73-ல் 4.68 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் தற்போதைய நிலைமையைப் பார்த்தால் அரிசனங்களுக்கு அடுத்தாற்போல் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பாலானோர் கிராமங்களில் வாழ்கின்றனர். அவர்கள் விவசாயத்தையே பெரிதும் நம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை முன்னேற வேண்டுமானால் கணிசமான அளவில் தொகை செலவிட்டால் மட்டும் போதாது. இன்றைக்கு அவர்கள் எந்த நிலையில், எப்படி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் தனிப்பட்டவர்களிடத்திலே பத்து வட்டி, இருபது வட்டி என்ற அளவுக்குக் கடன்பட்டு, அவர்களிடம் கையெழுத்திட்ட வெற்று நோட்டுக்களை எழுதிக் கொடுத்து சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையை மாற்றுவதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடன் நிவாரணச் சட்டமும், குத்தகைக்காரர் சட்டமும் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நல்ல முறையிலே அமல் நடத்தினால்தான், சி.ஐ.டி. மூலம் யார் யார் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் கண்டுபிடித்து, அதனால் யார் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுத்தால்தான் இந்தச் சட்டத்தின் பலனை அடைய முடியும். கடன் தொல்லையால் அவதிப்படுபவர்களுக்கு வங்கிகள் மூலமாக இலகுவான முறையில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்தால், அந்தப் பிற்பட்ட மக்கள் சமுதாயத்தில் முன்னேறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு கன்னியாகுமரியில் உள்ள லட்டின் கிருஸ்தவர்கள் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற கிருஸ்தவர்கள் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்படவில்லை.



அங்கேயும் நெல்லை மாவட்டத்திலும் பனை ஏறும் தொழிலில் ஈடுபட்டிருப்போர், பதநீரைக் காய்ச்சுவோர் பெரும்பாலும் கிருஸ்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்படவில்லை. அந்தத் தொழிலைச் செய்யும் அதே இனத்தைச் சேர்ந்த இந்துக்கள் பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எல்லோரும் உயிரைப் பணயம் வைத்து பதனீர் இறக்கும் பரம ஏழைகள். எனவே, பிற்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கும் இந்துக்களுக்கு என்ன என்ன சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அதேமாதிரியானச் சலுகைகளை அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த கிருஸ்தவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி நெல்லை, குமரி மாவட்டங்களிலே இருக்கின்ற முடிதிருத்துவோர்கள் இந்துக்களாக இருந்தால் பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்படுகிறார்கள். ஆனால் கிருஸ்தவர்களாக இருந்தால் பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்படவில்லை. அதைப்போன்று கணியான்கள், சலவைத் தொழிலாளிகள் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களாக இருந்தால் தொழிற் கருவிகளும் கொடுப்பதில்லை. செய்கிற தொழிலே அப்படி அதற்காவது வழி செய்ய வேண்டும். ஒரே தொழிலைச் செய்து வந்தாலும், ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்துக்களாக இருந்தால் பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்டு, சலுகைகள் வழங்கப்படுகின்றன. கிருஸ்தவர்களாக இருந்தால் பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்படுவதும் இல்லை. சலுகைகளும் கிடையாது.

ஆகவே, இந்துக்களாக இருந்தாலும், கிருஸ்தவர்களாக இருந்தாலும், ஒரே தொழிலைச் செய்கின்றவர்கள், ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் பிற்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்டு, எல்லோருக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி கன்னியாகுமரி, நெல்லை மாவட்ட கடற்கரையோரம் வாழுகின்ற பரதவர் சமுதாயத்தவர் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தபோதிலும் அவர்களுக்கு, உத்தியோகத்தில் எந்தவித சலுகையும் கொடுக்கப்படவில்லை. அதற்கும் ஆவனச் செய்யவேண்டு கேட்டுக்கொள்கிறேன்.

முஸ்லீம்களிலே "லப்பை" என்று கஞ்சம்ரெட்டி, பரிஜா, கௌரா நாயுடு என்றும் எழுதினால் சலுகை கிடைக்கிறது. ஏதாவது கௌரா நாயுடு என்றும் எழுதினால் சலுகை கிடைக்கிறது. எல்லா

[திரு. டி. கணபதி] [1972 மார்ச் 20

வகுப்பாரும் கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பேர் பிற்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைகளை ஏதாவது ஒரு பெயரில் பெறுகின்றார்கள். பிற்பட்ட இனத்தவரைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, சர்டிபிகேட் வாங்கிக் கொடுத்து, அதற்கான சலுகைகளைப் பலர் பெற்று வருகிறார்கள். தைரியசாலிகளான தாசில்தார்களும், எல்.எல்.ஏ.க்களும் அவர்களுக்கு சர்டிபிகேட் கொடுத்து விடுகிறார்கள். இவ்வித நிலை தொடர்ந்து நீடிக்க வேண்டுமா? படிப்படியாக ஏற்றத்தாழ்வுகளை அகற்றப்போகிறோம். இப்பொழுதே இந்த விஷயத்தில் மிகவும் தாமதமாகி விட்டோம். ஆகவே, இனியும் தாமதம் இல்லாமல், எல்லா வகுப்பினருக்கும் வருவாயின் அடிப்படையில் கல்விச் சலுகைகளாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என் தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் கூறி முடித்துக் கொள்கிறேன். என் தொகுதியில் ஒரு ஊரில் அரிசனங்களுக்கு ஒரு விடுதி, பிற்பட்டவர்களுக்கு ஒரு விடுதி, அரிசன பெண்களுக்கு ஒரு விடுதி என்று நடைபெறுகிறது. நமது இலாகா—அமைச்சர்கள் துறை இரண்டாக இருந்தாலும்—பிற்பட்டவர்களுக்கும், அரிசனங்களுக்கும் ஒரே விடுதி கட்டி, அதில் தங்கச் செய்தால் அவர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து பேசி, ஜாதி மதபேத வித்தியாச உணர்ச்சி ஏற்பட வழி இல்லாமல் இருக்கும். ஜாதி மத பேதமற்ற சதாயத்தை உருவாக்க விரும்புகின்ற நாம், கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கின்ற நாம், இனிமேலாவது அரிசனங்களுக்கு தனி ஆஸ்டல், பிற்பட்டவர்களுக்குத் தனி ஆஸ்டல் என்று கட்டாமல், எல்லோரும் ஒரே ஆஸ்டலில் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் மாணவர் சமுதாயத்திலிருந்தே ஜாதி வித்தியாச உணர்ச்சிகள் மறைந்து, கலப்புத் திருமணம் பெருக வழி ஏற்படும் என்று தெரிவித்து, கல்வியைப் பொறுத்தமட்டில் பொருளாதாரத்தின் அடிப்படையில் எல்லோருக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU K. M. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, almost all the points have been exhausted by the various speakers and so I do not want to take much of the time of the House. If at all I take some time, it is only for some definite purpose.

Sir, we have had a Backward Class Commission and the report of it was before this Government. As a result of that report, certain actions were taken. All these actions, I think, are so



1972 மார்ச் 20] [Thiru K. M. Subramaniam]

small that I do not know when we are going to march from the backwardness to the forwardness which we want to achieve. The only thing that is happening nowadays is the so-called forward communities like mine are going backwards while the backward communities stay-put as backward communities, except perhaps for some small improvement in education by getting scholarships etc. I should like to suggest certain dynamic programmes for this Government.

The backwardness of the people will remain backward so long as they are economically backward. Have this Government thought about assisting the economically backward community in trade because many of the small traders and retail merchants belong to the backward communities. They now borrow money from usurious money-lenders at exhorbitant rate of interest and consequently prices are generally going up. I wish that the Government themselves should start a Backward Traders Financial Corporation to support small businessmen who can get Rs. 2,000 or Rs. 3,000 from that Corporation by pledging their shops and thus economically develop themselves. பி.ப. 2.00.

The second most important thing is that it is not enough if a few scholarships or more admissions are given to the backward community. It has also been stated that special training would be given to them to enable them to appear for the I.A.S. and I.P.S. examinations. I do not think the backward community can progress as quickly as they want. I would suggest—whatever be the cost it is worth spending—that the Government should start a public school exclusively for backward communities and Harijans.

What is the use of sending them to the Corporation schools or other ordinary schools where the standard is so low that they are not able to compete with the persons studying in private and other schools, where heavy fees are charged and good tuition is given. There are more than one lakh children studying in such schools in the Madras City alone—I am speaking subject to correction. If that is the case, what is the fate of the backward communities who have to study in ordinary schools and who are half-dressed and who are not properly made up? There the environment is so bad that they will not come up and they will permanently remain backward in spite of the financial assistance given by the Government. It may be that there may be 15 I.A.S. officers belonging to the

[Thiru K. M. Subramaniam] [1972 மார்ச் 20

backward communities. All right, but what is the total number of I.A.S. officers? We want more I.A.S. officers. Even my community is in danger and that is why I am speaking now. If one community goes forward the other communities go backward. Therefore, I would urge the Government to start a public school about 25 miles from the Madras City where you can accommodate about 4,000 best children belonging to the backward community. As my Deputy Leader has suggested, you can take them at the age of 3, give them nursery training, and feed them well. If you do so, you will find the backward communities develop to the highest level. Now the feeding charges have been increased from Rs. 10 to Rs. 20. I spend daily Rs. 20 and how can they feed themselves with Rs. 20 per month. In this connection, I would invite the attention of the House to the recent speech of Thiru Chavan wherein he had stated that large sums of money had been allotted for giving vitaminised food to the children. That money has to be spent through the State Governments. It should be spent on children and if it is routed through Kazhagam or social institutions, bags and bags of food will come out in the open market for resale. So I request the Government to take maximum advantage of the scheme for supplying vitaminised food to the children.

As I have stated earlier if the State Government start a public school, the Central Government will definitely come to the rescue of the State Government. Now there is no discipline in teaching and under the cloak of rationalism. So many things are taught to children—as if there is nothing to be respected when there are so many things to be respected. So I once again urge that a public school should be started for the backward class students.

Then I come to my constituency. Dhobikhanas had been constructed for washermen in 1954–55 but they have not worked well. There is no water there but water is going to other places. There are three kinds of dhobis there—Caste dhobis, backward dhobis and Harijan dhobis. There are also Muslim dhobis. There are about 250 Harijan dhobis there.

(Mr. Deputy Spraker sounded the going.)

I will finish my speech in a minute.



1972 மார்ச் 20] [Thiru K. M. Subramaniam]

These Harijan dhobis have given me a memorandum wherein it is stated that there are Government lands situated on the southern side of the Saidapet bridge which can be allotted to them. As they are Government lands, there is no question of land acquisition. I request the Government to allot those lands to them.

MR. DEPUTY SPEAKER: The hon. Member's time is up.

THIRU K. M. SUBRAMANIAM: I wanted to refer to many matters but due to want of time, I stop with this. Thank you, Sir.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை இலாகா மானியக் கோரிக்கையின்மீது பல மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களைத் தெரிவித்ததற்கு முதற்கண் அவர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இலாகா தோன்றுவதற்கு முன்னதாக சமுதாயம் எந்த நிலையில் இருந்தது என்பதை எண்ணிப் பார்த்தால்தான் இந்த இலாகாவின் முக்கியத்துவம் தெரியும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் திரு. கலேல்கார் அவர்கள், சமுதாயத்தில் இருக்கிற பின் தங்கிய வகுப்பினர் நிலையை ஆராய்ந்து ஒரு அறிக்கையை அளித் திருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் சமுதாயம் ஆறு கூறுகளாகப் பிரிந்திருந்தது என்று அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். பிராமணர்கள், பிராமணரல்லாதார், இந்திய கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள், ஐரோப் பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், மற்றவர்கள் என்று ஆறு வகை களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நம்முடைய திரு. கே. எம். சுப்பிர மணியம் அவர்கள் சொன்னதைப்போல முன்னேறியவர்கள் எல்லாம் இப்போது பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்று அவர் தம்மையும் பின்தங்கியவராகச் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். அவர் வெறும் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை.

இன்றையதினம் சமுதாயத்தில் வருகிற விண்ணப்பங்களையெல் லாம் எடுத்துப் பார்த்தால் எல்லோரும் பின்தங்கியவர்களாக மாற வேண்டுமென்ற ஆர்வம் சமுதாயத்திலே இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. முன்னாலே இருந்த சமுதாயத்தில் பிராமணர் உயர்ந்த ஜாதியாகக் குறிப்பிடப்பட்டது. தேவாங்கர் கூட தெய்வீகப் பிரமாணாள் என்றும், வணிகர் வைசிய பிராமணாள்

[திரு. க. இராசாராம்] [1972 மார்ச் 20

என்றும் இப்படியாக ஒவ்வொருவரும் பிராமணருக்குப் பக்கம் போகவேண்டுமென்ற காலம் ஒன்று இருந்தது. இப்போது காலம் மாறி, எல்லோரும் கீழ்த்திசையிலே போய்க்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே எல்லோரையும் பிற்பட்ட நிலையில் வைத்துக்கொள்ள முடியுமா என்றால் முடியாது என்பதைச் சொல்லிவிடுகிறேன்.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 40,034,200 ஆகும். இது 1971-ம் ஆண்டு எடுத்த கணக்காகும். மொத்த பிற்பட்ட வகுப்பினர் 20,467,928. அதாவது 51.13 விழுக்காடு ஆகும். பிற்பட்ட வகுப்பினர் 11,514,597 ஆகும். அதாவது 28.76 விழுக்காடு ஆகும். மிகப் பிற்படுத்தப்பட்டோர் 8,953,331. அதாவது, 22.37 விழுக்காடு ஆகிறது.

பின்தங்கியோர் பட்டியல், மிகப் பின்தங்கியோர் பட்டியல் என்றும் 16 சதவிகிதம், 18 சதவிகிதம் என்று பிரித்தளிக்க வேண்டுமென்றும் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமை முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டத்தில் ஏற்பட்டிருக்கிற நிலைமையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் படி 15 (4) பிரிவின்படி நாம் இந்த நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். திரு. எம். ஆர். பாலாஜி அவர்களுக்கும், மைசூர் மாநில அரசுக்கும் இடையே ஏற்பட்ட வழக்கில் திரு. வாஞ்சு, சுப்ரீம் கோர்ட் நீதிபதி அளித்த தீர்ப்பின்பேரில் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது.

"அரசியலமைப்பு 15 (4) பிரிவில் தொனிக்கிறபடி அரசுப் பணிகள் ஒதுக்கீடு செய்யவும் 16 (4) பிரிவில் தொனிக்கிறபடி நியமனங்கள் செய்யவும், தனி வசதி செய்வது என்பது, நியாயமான வரம்புக்குள் இருக்க வேண்டும். மாநில அரசினரும் மத்திய அரசினரும் தங்கள் முதல் பொறுப்பாகக் கொண்டிருக்கிற நலிந்த மக்களின் நலன், சமுதாயம் முழுவதற்குமான நலனுடன் இசைந்து இருத்தல் வேண்டும். பல்வேறு கோரிக்கைகளை வைத்து இயைந்த முறை காண்பது என்பது சங்கடமான வேலை. ஆனால் தனி வசதி செய்வது என்ற பேரால் எல்லாக் கல்லூரிகளிலும் அநேகமாக எல்லா இடங்களையும் அரசாங்கம் ஒதுக்கி வைத்துவிடுமானால் அது 15 (4) பிரிவின் நோக்கத்தை மீறிய செயலாகிவிடும். இதில் சரியான ஒதுக்கீடு அளவு என்ன என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாதவர்களாக நாங்கள் இருக்கிறோம். பொதுவாக ஏக



1972 மார்ச் 20] [திரு. க. இராசாராம்]

தேசமாகச் சொல்லுமிடத்து தனி ஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும். ஒவ்வொன்றிலும் சந்தர்ப்ப சூழ் நிலையைப் பொறுத்து அமைத்துக்கொள்ளலாம்."

என்று திரு. வாஞ்சு தீர்ப்பளித்து இருக்கிறார். இதேபோன்ற கருத்து திரு. பெரியகருப்பன் அவர்கள் தமிழக அரசின்மீது தொடர்ந்த வழக்கிலும் சுப்ரீம் கோர்ட் தெரிவித்திருக்கிறது.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் அவர்கள் ஜாதி என்பதற்கு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலைமையிலே பின்தங்கிய சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் சமீபகாலத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அதற்காக என்று ஒரு துறை உருவாக்கப்பட்டு பல்வேறு காரியங்களைச் செய்து வருவதை எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள். 1969-ம் ஆண்டு இந்தத் துறை உருவாக்கப்பட்ட போதில் இதற்காக ஒதுக்கியது 265 லட்சம் ரூபாயாகும். 1970–71-ல் இத்துறைக்கு ரூ. 320 லட்சம் ஒதுக்கப்பட்டது. தற்போது 1972–73-ல் ரூபாய் 468 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே மாணவர் இல்லங்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். 1966–67லே 11 மாணவர் இல்லங்கள் இருந்தன. 1971–72-ல் 81 மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த மாணவர் இல்லங்களினால் பயன் பெறும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 5,333 ஆகும்.

அடுத்தபடியாக, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் மாணவர் இல்லங்கள் 46 ஆகும். இதனால் பயன் அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 4,369 ஆகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்களும் மற்றவர்களும், மாண்புமிகு ஜோதி வெங்கடாசலம் அவர்களும் அரிசன நலத் திட்டத்தைப்பற்றியும், கலப்புத் திருமணத்தைப்பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே இந்த இலாகா அந்தக் காரியத்தை மிகத் திறமையாகச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக படிப்பு உதவித்தொகையாக 1969–70ல் 160.89 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகப் பயன் அடைந்தவர்கள் 90,565 பேர்கள், 1970–71ம் ஆண்டில் 201.20

லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 1,34,249 பேர்கள் பயன் அடைந்தனர். 1971–72ம் ஆண்டில் ஜனவரி முடிய இதனால் 1,65,068 மாணவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் குறிப்பிட்டது போல பிற்படுத்தப்பட்டோர், அரிசன மகளிருக்கென்று விடுதிகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன். மாணவர்கள் சமுதாயத்திலும்கூட ஜாதியின் பெயரால் விடுதிகள் அமைக்கப்பட்டு, பேதங்களை உருவாக்க வேண்டுமா என்று உறுப்பினர்கள் மிக்க உருக்கத்தோடு கேட்டார்கள். நான் உங்களை வேண்டிக்கொள்வதெல்லாம், நீங்கள், சட்டமன்றஉறுப்பினர்களாகிய நீங்கள், அருகிலுள்ள விடுதிகளுக்குச் சென்று பார்க்க வேண்டுமென்பதுதான். அந்த இல்லங்களில் எல்லாம் எந்த அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்று கேட்டால் அது மிக்க பயனைத் தரும். அந்த இல்லங்களில் பின்தங்கிய வகுப்பினருக்கு 65 சதவீதம், அரிசனங்களுக்கு 25 சதவீதம், முன்னிலை வகுப்பு மாணவர்களுக்கு 10 சதவீதம் என்ற அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள். அரிசன மாணவர் இல்லங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 24 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. பின்தங்கிய வகுப்பினருக்கு 25 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. பின்தங்கிய ஒதுக்கப்படுகிறது. ஆகவே, ஜாதி மனப்பான்மை மறைந்து கொண்டே வருகிறது. பழைய காலக் கொடுமைகள், நிலைமைகள் எல்லாம் இன்றையதினம் மாணவர் விடுதிகளில், இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டது முதல், இல்லாத அளவிற்கு மாறிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இல்லங்களில் பின்தங்கியவர்களுக்கு 10 சதவீதமும், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு 60 சதவீதமும், அரிசனங்களுக்கு 25 சதவீதமும், முன்னிலை வகுப்பினருக்கு 5 சதவீதமும் இடம் ஒதுக்கித் தரப்படுகின்றது.

இந்த ஆண்டிலிருந்து நம்முடைய மாணவர்களுக்கு, பின்தங்கிய மாணவர்களுக்கு மிகச் சிறப்பான முறையில் உணவு விடுதிகளை அமைத்துத் தர வேண்டுமென்று நாங்கள் தீவிரமாகச் சிந்தித்து, அதற்கான வேலைகளைச் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் மொத்தத்திலே தருவது, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் என்று தருகிறோம். நாங்கள் இப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்பதை அறிக்கைகள் அனுப்பி, அதன்படி காரியங்கள்





நடைபெறுகின்றனவா என்பதை அடிக்கடி சென்று பார்த்து, மாணவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்று வருகிறோம். இதன் காரணமாகப் பின்தங்கிய மாணவர்களின் உணவுவிடுதிகள் நல்ல முறையில் நடைபெறுவதை நான் சுட்டிக்காட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பின்தங்கிய மாணவர்கள் இல்லங்களில் 400 கிராம் அரிசியும், கோதுமை அல்லது வேறு வகை 75 கிராமும், பருப்பு வகைகள் 15 கிராமும், சுண்டல் 60 கிராமும், காய்கறி, மசாலா, புளி, உப்பு போன்றவைகள் 80 காசுகளுக்கும் இதைத்தவிர தனியாக தினசரி மோர் தருவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காலையிலே கோதுமை உப்புமா, பொங்கல், கஞ்சி ஏதாவது தருவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது அத்தனையிலும் தேவையான கலோரி கிடைக்கிறதா, சத்துணவு கிடைக்கிறதா என்று பார்க்கிறோம்.

சமீபத்திலே ஐக்கிய நாடுகள் சபையிலே ஒரு ஆராய்ச்சி நடத்தினார்கள். ஏன் பின்தங்கிய சமுதாயத்தினரிடத்தில் மட்டும் அறிவு ஒளிவிட்டுப் பிரகாசிக்கவில்லை என்று பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து ஆராய்ச்சி செய்து, அறிவு என்பது எல்லோருக்கும் பொதுவாகத்தான் இருக்கிறது. அந்த அறிவு வளர்ச்சிக் கூறுகள் கொடுக்கிற சத்துணவைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் சத்துணவு என்று அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்ட சத்துணவை நம்முடைய குழந்தைகளுக்கு நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். டாக்டர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே, இரண்டு லட்சத்து அறுபதாயிரம் குழந்தைகளுக்கு வாரி வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சத்துணவு அரிசனங்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும்தான் கொடுக்கப்படுகிறது. பின்தங்கிய மக்களுக்குத் தனி, அரிசனங்களுக்குத் தனி என்று தனித் தனியாக இல்லாமல் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் செய்து கொண்டு வருகிறோம் என்பதை எடுத்துச் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டுப் பேசிய நேரத்திலே சலுகைகளைப்பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசு ரூ. 14.87 லட்சம் 1969–70 ஆம் ஆண்டு கொடுத்து வந்ததை ஒரேபடியாக நிறுத்திவிட்டார்கள். 1970–71 ஆம் ஆண்டுக்கு மாநில அரசே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தொடர்ந்து அந்தக்

காரியத்தைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிநிலை காரணமாக இதுவரையிலும் அந்தச் சலுகை பெற்றுவந்தவர்கள் தொடர்ந்து பெற்றுவருவதற்காக அம்மையார் அவர்கள் மத்திய அரசோடு போராடவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப் போராடுவதற்கு அவர்கள் ஒத்துழைப்பார்களானால் நாங்களும் மத்திய அரசோடு போராடுவதற்கும், போராடி அந்தத் தொகையைப் பெறுவதற்கும் முயற்சிக்கலாம்.

திரு. சுப்பு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் ரெட்டியார், நாயுடு என்ற வகுப்பினர் பின்தங்கியவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அவர்களுடைய நிலையைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அது மட்டுமல்ல, சாலியர் என்ற ஒரு வகுப்பினர் இருப்பதாகவும் அவர்களை சாலியன் என்று அழைக்காமல் சாலியர் என்று அழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலும் எங்களுடைய கழகத்தைப் பொறுத்தவரையிலும் என்று கூடச் சொல்வேன், எந்த ஜாதியையும் இவன், அவன் என்று மட்டரகமாக நினைப்பது எந்தக் காலத்திலேயும் எந்த நாளிலேயும் இருந்ததில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கந்தசாமி அவர்கள் மறவர்களைப்பற்றிச் சொன்னார்கள். மறவர்களை மறவன் என்று அழைக்கிறார்கள். அதை மாற்றி மறவர் என்று அழைக்கவேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு உத்திரவு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுவிட்டது. சாலியர் என்று உத்திரவு போடுவதற்காக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அங்கிருந்து அறிவிப்பு வந்தவுடனே நான் இந்தச் சபைக்கு அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகப் பின்தங்கிய சமுதாயத்திலே உள்ள சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் ஆகியோர்களுக்காக என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் நம்முடைய நண்பர்கள் எடுத்துச்சொன்னார்கள். 1971–72ஆம் ஆண்டிலே 1,47,560 ரூபாய் சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்துவோருக்கு 65 ஆயிரம் ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக 868 பேர்கள் பயன் பெற்றார்கள். சலவைத் தொழிலாளர்





களுக்கும், முடிதிருத்துவோர்களுக்கும் உபகரணங்கள் வழங்குவதற்கு கடன்கள்தான் வழங்கப்பட்டு இருந்தன. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் அதை மானியமாகக் கொடுத்து விடவேண்டுமென்ற அளவிலே சலவைத் தொழிலாளர்கள் உபகரணங்கள் வாங்க 170 ரூபாயும், முடிதிருத்துவோர் உபகரணங்கள் வாங்க 75 ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கியோர் நலக் குழுவிலே எடுத்துச் சொன்னதைப்போல்.........

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. டி. கணபதி: தலைவர் அவர்களே, கிறிஸ்துவ சலவைத் தொழிலாளர்களும், கிறிஸ்துவ முடிதிருத்துவோர்களும் இந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? அவர்களுக்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சலவைத் தொழிலாளர்கள் பிற்பட்டோர் பட்டியலிலேதான் இருக்கிறார்கள். கிறிஸ்துவர்களைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதை விளக்க இருக்கிறேன். அப்படிப்பட்ட சிக்கலிலே அவர்கள் முன்னேறியவர்களாக மாறிவிடுகிறார்கள். சமுதாயம் முன்னேறியதாலே அவர்களுக்கு முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறதா என்ற கேள்வி பெரிய கேள்வி. திருமதி பௌலர் அவர்கள் பின்தங்கியோர் பட்டியலில் சமுதாயத்திலே வசதி படைத்தவர்களும், அந்தஸ்து பெற்றவர்களும் சேர்ந்துகொண்டு உபகாரச்சம்பளம் அனுபவிக்கிறார்களே அதைக் கவனிக்கவேண்டாமா என்று கேட்டார்கள். அதையெல்லாம் பரிசீலிப்பதற்கான நிலைமைகளை அரசாங்கம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்தங்கியோர் பட்டியலில் ஒவ்வொருவரும் சேர விரும்புவதற்குக் காரணம், பின்தங்கியோர் பட்டியலில் சேர்ந்தால் எல்லோருக்கும் கிடைக்கிற சலுகைதான் கிடைக்கிறது, புகுமுக வகுப்பிலே இலவசக் கல்வி, பல்வேறு உபகாரச் சம்பளங்கள் கிடைக்கின்றன. இருந்தாலும் அவர்கள் சேரவிரும்புவது மருத்துவப் பயிற்சிக்கு, தொழிற்பயிற்சியில் சேருவதற்கு, உத்தியோகச் சலுகைகள் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்றுதான் சேருகிறார்களே தவிர வேறு இல்லை. சமுதாயத்தின் அடித்தளத்தில் மிக மிகப் பின்தங்கியவர்களாக இருக்கிறவர்கள் என்றைக்குத்தான் சரிசமமாகக் கொண்டு வரப்படப் போகிறார்கள்? சமுதாயத்தின் மேல்தட்டிலே

இருக்கிறவர்கள் மேலும் மேலே போவதற்கு முயற்சிக்கிறார்கள், பின்தங்கியோருக்குச் சலுகை என்றால் எனக்கு என்ன சதவீதம் சலுகை என்று கேட்கிறார்கள். முன்னேறுவதற்கு சலுகை என்றால் எனக்கு என்ன சதவீதம் என்று கேட்கிறார்கள். அரசு மிகுந்த பொறுப்போடு அடித்தளத்திலே இருக்கிறவர்கள் ஏறக்குறைய வள்ளுவர் காலத்திலிருந்து இன்றைய காலம் வரையிலும் கவனிக்கப் படாமல் இருந்து வந்திருக்கிறார்கள் அவர்களை கைதூக்கிவிட வேண்டும், கல்விக்கண் திறந்துவிடவேண்டுமென்று தான் இந்த இலாகா இருக்கிறது.

ப. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சலவைத்
0. தொழிலாளர்களுக்கு முழுத் தொகை மானியமாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மேலும் ஒன்று சொன்னார்கள், எம்.எல்.ஏ.க்களிடத்திலே சர்ட்டிபிகேட் வாங்கினால் போதுமே, தாசில்தாரிடம் வேண்டாம் என்று சொன்னார்கள். இருபது ஆண்டுக் காலமாக எம்.எல்.ஏ.க்களிடத்திலே வாங்கலாம் என்று ஏன் அவர்கள் செய்யவில்லை? அப்படிச் செய்திருக்கலாமே! அப்படிச் செய்யாததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM : The difficulty is whenever anybody goes for certificate to the Tahsildar, he asks either the Councillor's or the M.L.A.'s certificate, to be brought to him. Instead of that the M.L.A. can as well give the certificate.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அதைச் சொல்லிவிட்டு அந்த அம்மையார் அவர்கள் சொன்னார்கள், நாங்களாவது ஓட்டுகளுக்கு எத்தனை பேர்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இதிலே ஓட்டுக்காக ஜாதியை மறந்தால் ஆபத்து. தாசில்தார்களுக்கு ஓட்டுகள் வேண்டியதில்லை. எந்த ஜாதியாக வேண்டுமானாலும் எழுதிக்கொடுக்கின்ற தத்துவத்திற்கு நாம் ஆட்பட்டுவிடுவோம் என்ற ஐயப்பாட்டின் காரணமாகத்தான் எம்.எல்.ஏ.க்களை அந்தப் பட்டியலில் சேர்க்கவில்லையோ என்னவோ தெரியவில்லை, இல்லாவிட்டால் அந்தக் காலத்திலேயே செய்திருப்பார்கள்.

சலவைக்கூடத்திற்கு 2½ லட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு. 50 சதவிகிதம் மான்யமாகத் தர இருக்கிறது.





சென்ற ஆண்டில் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்ட சமூகத்தினர் கம்பர், ஓவச்சர், பாணன், வேடன், வெள்ளன் செட்டியார், அர்ச்சகரை வெள்ளாளன், கன்னட சைனீகர், சக்ரவார், கன்னர், அஸ்டாந்திர கொல்லர், செட்டி (கன்யாகுமரி மாவட்டம்) இந்த 11 ஜாதிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் பிற்பட்டோர் நலக்குழுவின் பரிந்துரைக்கிணங்க, குஞ்சடிகர் என்னும் ஜாதியும், கல்வேலி கவுண்டர் என்னும் ஜாதியும் இணைக்கப் பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாணவ விடுதிகளில் தங்குவதற்கு நகர்ப்புறத்தில் இருந்தவர்களுக்கு கலை, விஞ்ஞானம் படிப்பவர்களுக்கு முன்பு 40 ரூபாய் வழங்கப்பட்டது, இப்பொழுது 60 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது: மருத்துவம், பொறியியல் படிப்பவர்களுக்கு முன்பு 40 ரூபாயாக இருந்தது இப்பொழுது 60 ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது. தொழிற்கல்வி படிப்பவர்களுக்கு முன்பு 40 ரூபாயாக இருந்தது இப்பொழுது 50 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பிற இடங்களில் கலை, விஞ்ஞானம் படிப்பவர்களுக்கு 35 ரூபாய் என்றிருந்தது இப்பொழுது 50 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பிற இடங்களில் மருத்துவம், பொறியியல் படிப்பவர்களுக்கு முன்பு 35 ரூபாயாக இருந்தது இப்பொழுது 55 ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது. பிற இடங்களில் தொழிற்கல்வி படிப்பவர்களுக்கு முன்பு 35 ரூபாய் தரப்பட்டது, இப்பொழுது 45 ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த வகையில் எல்லா வகைகளிலும் பின் தங்கியவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பின்தங்கிய வகுப்பினர் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகியவர்களின் முன்னேற்றத்திற்கு இந்த ஆண்டு நிறைய செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநில அரசு 1969–70-ஆம் ஆண்டில் 17.83 லட்சம் ரூபாய் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காகச் செலவழித்திருக்கிறது. இந்த ஆண்டு 1970–71-இல் 24.08 லட்சத்திற்குச் செலவழித்திருக்கிறது.

ஷெட்யூல்ட் சாதியிலிருந்தும் பழங்குடியிலிருந்தும் மாறியவர்கள் சுமார் 50 சதவிகிதம் பெரும்பாலும் செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, தஞ்சாவூர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பிற்பட்ட வகுப்பிலிருந்து மாறியவர்கள் 30 சதவிகிதம் கன்யாகுமரி,

திருநெல்வேலி. மற்ற வகுப்புகளிலிருந்து பரவலாக 20 சதவிகிதம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அடிப்படையில் மொத்த எண்ணிக்கை 20, 95, 127 பேர் மதம் மாறியவர்களாக இருக்கிறார்கள் என்று மொத்தத்திலே ஒரு கணக்கு நமக்குக் கிடைத்திருக்கிறது. என்னிடத்திலே ஒரு விண்ணப்பத்தை அறிந்தவர் பெரியவர்களெல்லாம் அளித்தார்கள். அவர்களையெல்லாம் பின் தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்றும் கூடக் கேட்டுக்கொண்டார்கள். அதை அரசின் பரிசீலனைக்கு வைத்துத் தான் முடிவெடுக்க முடியும் என்று சொன்னேன். அதிலே அவர்கள் ஏற்கனவே சமுதாயத்திலே தாழ்ந்து கிடக்கிறார்களா என்றால் இல்லை, கல்வியிலே தாழ்ந்து கிடக்கிறார்களா என்றால் இல்லை. ஆகவே சமூகத்திலே அந்தஸ்திலேயும், கல்வியிலே நல்ல நிலைமையிலேயும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கருதுகிற ஒரே காரணம் மருத்துவக் கல்லூரிகளிலும், தொழில் கல்லூரிகளிலும் இடம், உத்தியோகத்தில் இடம், இதற்காகத்தான் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று விரும்புகிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

அடுத்து, சென்ற முறையில் இதேபோன்ற பல கருத்துக்களை நம்முடைய நண்பர் லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அதே கருத்துக்களை இந்த முறையும் அவர்கள் இம் மாமன்றத்தில் எடுத்துரைத்தார்கள். லப்பைகள் உருது பேசுகிறார்கள் என்று சொல்கிறார்கள், உருது பேசுகின்றவர்களை பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் சட்டநாதன் குழு அறிக்கையிலே அநேகமாக உருது பேசுபவர்கள் மிகமிகக் குறைவு என்று குறிப்பிட்டு, கொஞ்சம் பேர்தான் உருது பேசுகிறார்கள், மீதி எல்லோருக்குமே பின்தங்கியவர்களுக்கான சலுகைகள் கிடைக்கிறது என்ற பொதுப்படையான கருத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். அதைத்தான் திரு. லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்விச் சலுகைகளுக்கு விண்ணப்பிக்கும் முஸ்லீம்கள் எல்லோரும் தாங்கள் லப்பையாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி லப்பை என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று இருக்கிறது. கொஞ்சம் தமிழ் பேசினாலும் அவர்களை லப்பை என்று பிற்பட்டோர் நலத்துறையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. உருது மொழியிலேயே ஒட்டிக்கொண்டிருக்கும் சிலருக்குத்தான் சலுகை கிடைப்பதில்லை. இந்த வகையிலே, அதோடு, கல்வித் துறையிலும், பொருளாதாரத்திலும்





தமிழ் முஸ்லீம்கள் இன்னும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பது எங்களுக்கு வந்த கோரிக்கைகளிலிருந்து தெளிவாகிறது என்று குறிப்பிட்டுள்ளது.

கல்வித்துறையில் தமிழ் முஸ்லீம்களிடையே எழுந்துள்ள உத்வேகத்தின் காரணமாகவும் அந்த முஸ்லீம் சமுதாயத்தினருக்கு பல ஏற்பாடுகளைச் செய்தபிறகு இன்றைக்கு அதன் எண்ணிக்கையில் ஏறத்தாழ 20 சதவிகிதத்தினர் படித்தவர்களாக மாறுகிறார்கள். 50, 60 உயர்நிலைப்பள்ளிகளும், 10, 11 கல்லூரிகளும் சமீபத்தில் தொடங்கப் பெற்றுள்ளன. இந்த வகையிலே அவர்கள் முன்னேறுவதற்கான நல்ல சாத்தியக்கூறுகளை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உருது முஸ்லீம்களையும் இதிலே எடுப்பதில் ஏற்படும் சிரமம் என்னவென்றால் 50 சதவிகிதத்திற்கு மேலாக இந்தப் பின் தங்கியோர் பட்டியலைத் தயாரிப்பதற்கு இந்த அரசியல் சட்டம் இடம் தரவில்லை என்பதையும் கனம் அங்கத்தினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, உருது முஸ்லீம்கள் அளவிலே மிகவும் குறைவாக இருக்கிறார்கள் என்று பிற்பட்டோர் நலத்துறை விசாரணைக்குழு அறிவித்திருக்கிறது. ஆகவே, அவர்களையும் பிற்பட்டோராக அறிவிக்க, எல்லா முஸ்லீம்களையும் பிற்பட்டோராக அறிவிக்க, அரசாங்கம் ஆவன செய்யும் என்று முதல்வரவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆகவே, குறைந்த அளவில் இருப்பவர்களை ஏன் தள்ளி வைக்க வேண்டும்? அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எல்லா முஸ்லீம்களையும் அன்றைக்கிருந்ததைப் போன்று பிற்பட்டோராக அறிவிக்கும்படி கோருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்களின் எண்ணங்களை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வேன் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கந்தசாமி அவர்கள் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்களுக்கு எந்த அளவிற்கு நீங்கள் பண உதவி செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். உள்ளபடியே தமிழ்நாட்டிலேதான் இந்தக் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்கள் அதிகமாக இருக்கிறார்கள், "டீ நோட்டிஃபைட் ட்ரைப்ஸ்" அதிகமாக இருக்கிறார்கள்

[1972 மார்ச் 20

அதை மத்திய அரசு ஒப்புக்கொள்ள மறுக்கிறது. அந்த வகையில் நமக்குக் கிடைக்க வேண்டிய தொகை கிடைக்காமல் இப்பொழுது ஆண்டு ஒன்றுக்கு 127 லட்சம் ரூபாய் செலவு செய்து என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் கொண்டிருக்கும் நிலைதானே தவிர நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தொகை கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு கந்தசாமி அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள். கிராஜுவேட்ஸ், பி.ஏ., பட்டப் படிப்பு படிப்பவர்களுக்கு 30 வயது என்று அதன் வரம்பை வைத்து பின்தங்கிய மற்றவர்களுக்கு 25 வயது என்று வைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்களின் கவனத்திற்குக்கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, ஊட்டியிலே பின்தங்கியோருக்காக ஒரு உணவு விடுதி இல்லை என்று தேவராசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே இருக்கும் கல்லூரிக்கு பின்தங்கியோர் உணவு விடுதி நடைபெற்றுக்கொண்டு வருகிறது, அதை உறுப்பினரவர்களும் சென்று பார்வையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையினை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று கோரி முடிக்கிறேன். வணக்கம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, நரிக்குறவர்களுக்கு இந்த அரசு என்ன செய்திருக்கிறது என்பது இந்த அறிக்கையிலே இல்லை. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நரிக் குறவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் பின்தங்கிய பட்டியலில் இருக்கிறார்கள். அவர்கள் எங்களை அணுகி உதவி கேட்ட நேரத்தில் காதி இலாகா மூலமாக 10,000 ரூபாய் வரை கடன் கொடுத்து வெள்ளிக் கம்பி எல்லாம் வாங்கிக் கொடுத்து அவர்கள் கைவினைத் திறனுடன் செய்த பொருள்களை சுற்றுலாவுக்கு வருகின்ற வெளிநாட்டுக்காரர்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு டிரான்சிஸ்டர் ரேடியோக்களெல்லாம் வாங்கிக் கொடுக்கப்பட்டு சந்தோஷமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



1972 மார்ச் 20]

திருமதி அனந்தநாயகி அவர்கள் தம்முடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

" கோரிக்கை எண் 25-ஏ—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,68,07,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

பி.ப. 2·40

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இன்று இந்த அளவுடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(4) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

*A. Statutory Rules and Orders.*

70. Notification issued with G.O. Ms. No. 2755, Agriculture, dated the 15th October 1971, in regard to declaration of notified market area of the Dindigul market for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959, in respect of paddy, cotton, groundnut and chillies. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

71. Notification issued with Roc. No. 86559/69, dated the 5th March 1970, in regard to modification of Alagarnaickenpatti and Melamangalam Panchayats by excluding certain areas from the existing Alagarnaickenpatti Panchayat and included in the Melamangalam Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

72. Notification issued with G.O. Ms. No. 1870, Agriculture, dated the 28th June 1971, in regard to appointment of Soil Conservation Officer, Kundah Soil Conservation Scheme, as Member-

[1972 மார்ச் 20

Secretary and appointment of Non-Official Members of the Kundah Soil Conservation Board. [Laid on the Table of the House under section 44 (3) of the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959 (Tamil Nadu Act 31 of 1959).]

*B. Reports, Notifications and Other Papers.*

92. Erratum issued with Roc. No. 198204/69-P1, dated the 4th March 1970, to the notification published on pages 87–88 of **Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 25th February 1970, relating to bifurcation of Pazhaverkadu** Panchayat for constitution of a separate panchayat.

*** 93. The Performance Budget of the School Education 1972-73 (English and Tamil).**

* 94. The Performance Budget of the Technical Education 1972–73 (English and Tamil).

*** 95. The Performance Budget of the Collegiate Education** 1972–73 (English and Tamil).

**£ 96. The Tamil Nadu Betting Tax (Amendment) Bill, 1972** (L.A. Bill No. 2 of 1972).

**£ 97. Note on Progress of Education in Tamil Nadu 1972-73.**

**£ Despatched to Members on 17th March 1972.**

*** Laid on the Table of the House on 18th March 1972.**



1972 மார்ச் 20]

இணைப்பு-1.

13-ம் பக்கத்தில் 576-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

(அ) ஆம்.

(இ) 1971-ம் ஆண்டுக்கு முன் திறக்கப்பட்ட சித்த மருத்துவ மருந்தகங்கள்:—

1. தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழநி, மதுரை மாவட்டம்.

2. ராமநாதசுவாமி தேவஸ்தானம், ராமேஸ்வரம்.

3. மாரியம்மன் கோவில், இருக்கண்குடி, சாத்தூர் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

4. பூமிநாதசுவாமி, திருகாளசாந்தி மற்ற கட்டளைகள், வீரவநல்லூர், திருநெல்வேலி.

5. பிள்ளையன் கட்டளை, திருநெல்வேலி.

6. திருமலை குமாரசுவாமி கோவில், பண்புழி, தென்காசி வட்டம்.

7. அக்னீஸ்வரசுவாமி கோவில், திருபுகலூர், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம்.
தஞ்சை.

8. வைத்தியநாதசுவாமி கோவில், வைதீஸ்வரன் கோவில்,

9. சுவாமிநாதசுவாமி கோவில், சுவாமிமலை, கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

10. மாரியம்மன் கோவில், சமயபுரம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

11. கொளிஞ்சியப்பர் கோவில், மணவாளநல்லூர், விருத்தாசலம், தென்னாற்காடு மாவட்டம்.

12. பொன்னரி மாரியம்மன் கோவில், ராஜன்நகர், கோபி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

13. சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை, இராமநாதபுரம்

14. சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாவட்டம்.

1971-ம் ஆண்டில் கீழ்க்கண்ட அறநிலையங்களில் சித்த வைத்தியசாலைகள் திறக்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டது :—

1. தியாகராஜஸ்வாமி ஆலயம், திருக்கரவாசல், நாகப் பட்டினம் வட்டம்.

2. கம்பகேஸ்வரர் ஆலயம், திருபுவனம், கும்பகோணம் வட்டம்.

3. வெங்கடாஜலபதி ஆலயம், ஒப்பிலியப்பன் கோவில், கும்பகோணம் வட்டம்.

4. சீனிவாசப் பெருமாள் ஆலயம், நாச்சியார் கோவில், கும்பகோணம் வட்டம்.

5. ராஜகோபாலசுவாமி கோவில், மன்னார்குடி, நகர் மற்றும் வட்டம்.

6. பசுபதீஸ்வரர் ஆலயம், பந்தநல்லூர், கும்பகோணம் வட்டம்.

7. மந்திரபுரீஸ்வரர் ஆலயம், கோவிலூர், திருத்துறைப் பூண்டி வட்டம்.

8. சுப்பிரமணியஸ்வாமி ஆலயம், எட்டுக்குடி, நாகப் பட்டினம் வட்டம்.

9. சற்குணநாதஸ்வாமி ஆலயம், இடும்பவனம், திருத்துறைப் பூண்டி.

10. வேதாரண்யேஸ்வரஸ்வாமி ஆலயம், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி.

11. வீரட்டேஸ்வரஸ்வாமி ஆலயம், வழுவூர், மாயூரம் வட்டம்.

12. சுப்பிரமணியஸ்வாமி ஆலயம், திருவிடைக்கழி, மாயூரம் வட்டம்.

13. சுப்பிரமணியஸ்வாமி ஆலயம், மருதமலை.





14. ஆயிர வைசியர் மடம், பவானி, நெருஞ்சிப்பேட்டை.

15. பட்டீஸ்வரர் ஆலயம், பேரூர்.

16. வெள்ளிங்கிரி ஆண்டவர் ஆலயம், பூண்டி.

17. வரதராஜப்பெருமாள், வெங்கம்பூர்.

18. மருதீஸ்வரர் ஆலயம், கொடுமுடி.

19. சித்தீஸ்வரர் ஆலயம், கஞ்சமலை.

20. சுகவனேஸ்வரர் ஆலயம், சேலம்.

21. கோட்டை மாரியம்மன் ஆலயம், சேலம்.

22. அரண்மனை தேவஸ்தானங்கள், தஞ்சாவூர் நகர் மற்றும் வட்டம்.

23. கோபிநாதஸ்வாமி தேவஸ்தானம், ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் வட்டம்.

24. திரு. காளஹஸ்தீஸ்வரர் கோவில், திண்டுக்கல் நகர் மற்றும் வட்டம்.

1971-ம் ஆண்டில் அறநிலையங்களில் சித்த வைத்திய சாலைகள் திறக்க உத்திரவு பிறப்பிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட அற நிலையங்களில் சித்தவைத்தியசாலைகள் செயல்பட்டு வருகின்றன:—

1. வேதாரண்யேஸ்வரர் கோவில், வேதாரண்யம், திருத் துறைப்பூண்டி வட்டம்.

2. அரண்மனை தேவஸ்தானங்கள், தஞ்சாவூர் நகர் மற்றும் வட்டம்.

3. மந்திரபூரீஸ்வரர் கோவில், கோவிலூர், திருத்துறைப் பூண்டி வட்டம்.

4. கோபிநாதஸ்வாமி கோவில், ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் வட்டம்.

5. காளஹஸ்தீஸ்வரர் கோவில், திண்டுக்கல் நகர் மற்றும் வட்டம்.

## இணைப்பு-2.

26-ம் பக்கத்தில் 584-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.

In G.O. Ms. No. 1175, Labour, dated 17th September 1971 Government have constituted an Expert Committee on unemployment. A copy of the above Government Order is placed on the Table of the House.

ABSTRACT—Employment—Expert Committee on Unemployment—Constituted.

*Read*—

From the Chairman, Expert Committee on Unemployment, New Delhi, Letter No. MS/ECU/36-71, dated 12th and 22nd May 1971.

(*G.O. Ms. No.* 1175. *Labour, dated* 17*th September* 1971.)

The problem of unemployment and under-employment in the rural and urban areas has been a cause of serious concern to the Government in recent years and the emergence of considerable surpluses among the educated persons in general and technically qualified persons such as engineers and technicians in particular has added a new dimension to the problem. The Government of India have set up a Committee to assess the extent of unemployment and under-employment and to suggest suitable remedial measures. The Chairman of the Committe has requested this Government to extend all possible co-operation and assistance to the above committee in its studies and enquiries and to ensure that action is taken at all levels in the State Government to facilitate and expedite the work of the Committee including the supply of such information material, data, etc., as may be requested from time to time by the Committee. Suitable instructions have been issued to the Departments of the Secretariat in this regard in the U.O. Note No. 35353/F. II/71-4, dated 17th June 1971.



2. The Government have decided that similar committee may be constituted at State level. They accordingly direct that a State Expert Committee on unemployment be constituted with the following officers :—

Chief Secretary to the Government of Tamil Nadu—*Chairman.*

Secretary to Government, Industries Department—*Member.*

Secretary to Government, Labour Department—*Member.*

Secretary to Government, Finance Department—*Member.*

Secretary to Government, Education Department—*Member.*

Director of Employment and Training—*Secretary.*

3. The terms of reference of the above Committee will be as follows :—

(i) to extend co-operation and assistance to the Export employment in all its-aspects;

(ii) to recommend the directions in which the programmes;

programmes; included in the plan schemes could be made more oriented in their implementation, with due regard to their timely execution, economy and productivity and to the requirements of rapid economic development;

(iii) to suggest suitable strategies for employment generation both short-term and long-term including technical, financial and fiscal measures, in respect of different sectors of the economy, taking into account the mobility of labour and openings for employment and self-employment in the territiary sector as a result of implementation of plan programme and various measures initiated by the Government for activating the economy;

(iv) to suggest specific programmes for promoting productive employment and self-employment of the educated unemployed in general and the unemployed technical personnel such as engineers, technicians, etc., in particular and to suggest measures to rectify the imbalance between the out-term of educated and technical persons on the one hand and the available employment opportunities on the other;

(v) to suggest a suitable machinery at the State level for a continuous appraisal of the changing employment and manpower situation and assessment of long-term demand and supply; and

(vi) to extend co-operation and assistance to the Expert Committee on unemployment constituted by the Government of India.

4. This order issues with the concurrence of Finance Department—*Vide* its U.O. No. 114012/Lab. 71-1, dated 11th September 1971.

விடை : வேலைவாய்ப்பின்மை குறித்து ஆய்ந்தறிய வல்லுநர் குழு ஒன்றைத் தொழிலாளர் நலத்துறையின் 17—9—1971 நாளிட்ட 1175-ம் எண் ஆணையில் அரசு அமைத்துள்ளது: மேற்படி ஆணை யின் நகல் ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

சுருக்கம் :—வேலைவாய்ப்பு—வேலைவாய்ப்பின்மை குறித்த வல்லுநர் குழு—அமைக்கப்பட்டது.

படிக்கவும் :—வேலைவாய்ப்பின்மை குறித்த வல்லுநர் குழு வின் தலைவரிடமிருந்து (புதுடில்லி) வந்த 12—5—1971, 22—5—1971 நாளிட்ட H/S.ENC 36-71-ம் எண் கடிதம்.

தொழிலாளர் நலத்துறை.

அ.ஆ. எண் 1175. நாள் : 17—9—1971.

கிராமப் பகுதிகளிலும் நகர்ப் பகுதிகளிலும் வேலை வாய்ப் பின்மை, போதிய அளவு வேலைவாய்ப்பின்மை ஆகியவை பற்றிய பிரச்சினை அண்மை ஆண்டுகளில் அரசுக்கு மிகவும் கவலையளித்து வந்துள்ளது. பொதுவாக, படித்தவர்களும், குறிப்பாகப் பொறி யாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் போன்ற தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களும் கணிசமான அளவுக்கு மிகுதியாக இருப்பது இப்பிரச்சினையை மேலும் வளரச் செய்துள்ளது. வேலைவாய்ப் பின்மையும், போதிய அளவு வேலை வாய்ப்பின்மையும் எந்த அளவுக்கு உள்ளன என்பதை மதிப்பிடவும் இதனைத் தீர்ப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும் வல்லுநர் குழு ஒன்றை இந்திய அரசு அமைந்துள்ளது. மேற்படி குழு நடத்தும் ஆய்வுகள், விசாரணைகள் ஆகியவற்றில் மேற்படி குழுவுக்கு ஒத்துழைப்பையும் உதவியையும் நல்குமாறும், குழு அவ்வப்போது கேட்கக்கூடிய தகவல், புள்ளி விவரம் ஆகியவற்றைக் கொடுப்பது உட்பட, குழுவிற்கு வசதி செய்து கொடுத்துக் குழு ஆற்றும் பணிக்கு



உதவியளித்து துரிதப்படுத்தும்படி மேற்படிக் குழுவின் தலைவர் இவ்வரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்துத் தலைமைச் செயலகத்திலுள்ள துறைகள் எல்லாவற்றுக்கும் 17—6—1971 நாளிட்ட 35353/ஏப். 2/71-4-ம் எண் அலுவல் சார்பற்ற கடிதத்தில் தகுந்த கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. மாநில அளவில் இதுபோன்ற குழு அமைக்கப்படலா மென்றும் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, வேலைவாய்ப் பின்மை குறித்துக் கீழ்க்காணும் அதிகாரிகளைக் கொண்ட மாநில வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படவேண்டுமென்று அரசு கட்டளை யிட்டுள்ளது :—

தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலாளர்—தலைவர்.

அரசுச் செயலாளர், தொழில்துறை—உறுப்பினர்.

அரசுச் செயலாளர், தொழிலாளர் நலத்துறை—உறுப்பினர்.

அரசுச் செயலாளர், நிதித்துறை—உறுப்பினர்.

அரசுச் செயலாளர், கல்வித்துறை—உறுப்பினர்.

வேலைவாய்ப்பு-பயிற்சி இயக்குநர்—செயலாளர்.

3. மேற்படிக் குழுவின் ஆய்வு வரம்பு பின்வருமாறு :—

(அ) எல்லா வகையிலும் வேலை வாய்ப்பின்மை, போதிய அளவு வேலைவாய்ப்பின்மை ஆகியவை எந்த அளவுக்கு உள்ளன என்பதை மதிப்பிடுதல் ;

(ஆ) வேலைத்திட்டங்கள் உரிய காலத்தில் நிறைவேற்றப் படுதல், சிக்கனம், உற்பத்தித் திறன், விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான அம்சங்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, ஐந்தாண்டுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் வேலைவாய்ப்பையே பெரிதும் நோக்கமாகக் கொண்ட திட்டங்களாகச் செயல்படுத்தப்படும் வகையில் வழிமுறைகளைப் பரிவுரை செய்தல் ;

(இ) ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியதின் விளை வாகவும், பொருளாதாரத்தைப் பெருக்குவதற்காக அரசு மேற் கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாகவும் தொழிலாளர் இடப்பெயர்ச்சி, வேலைவாய்ப்புகள், சொந்தத் தொழில் நடத்து வதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொரு

ளாதாரத்தின் பல்வேறு துறைகளில் தொழில் நுட்ப, நிதி, அரசு வருவாய் ஏற்பாடுகள் உட்பட வேலைவாய்ப்புகளை குறுகிய கால, நீண்ட கால ஏற்பாடுகள் பற்றி ஆலோசனை கூறுதல் ;

(ஈ) பொதுவாக, படித்து வேலையற்றிருப்பவர்கள், குறிப்பாகப் பொறியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் போன்ற தொழில் நுட்பத் தகுதி பெற்றிருந்து வேலையற்றிருப்பவர்களுக்கு ஆதாயம் தரத்தக்க வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சொந்தத் தொழில் தொடங்கவும் வகை செய்யும் மேற்கொள்ள வேண்டிய சிறப்புத் திட்டங்கள் பற்றி ஆலோசனை தெரிவிக்கவும், படித்தவர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மொத்த எண்ணிக்கைக்கும் தற்போதுள்ள வேலைவாய்ப்பு வசதிகளுக்குமிடையேயுள்ள ஏற்றத் தாழ்வினைச் சரிப்படுத்தத் தகுந்த நடவடிக்கைகள் குறித்துக் கருத்துத் தெரிவித்தல் ;

(உ) மாறிவரும் வேலைவாய்ப்பு நிலை பற்றியும் ஆட்படை ஊற்றம் பற்றியும் தொடர்ந்து ஆய்ந்தறியவும் தேவைப்படும் பணியாளர்கள், வேலைவாய்ப்புப்பற்றி நீண்ட கால அடிப்படையில் மதிப்பிடவும் மாநில நிலையில் தகுந்ததொரு அமைப்பு நிறுவுவதற்கான ஆலோசனை நல்குதல் ;

(ஊ) வேலைவாய்ப்பின்மை குறித்து ஆய்ந்தறிய இந்திய அரசு அமைத்துள்ள வல்லுநர் குழுவிற்கு ஒத்துழைப்பையும் உதவியையும் அளித்தல்.

4. நிதித்துறையின் இசைவுடன் இந்த ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. தொழிலாளர் நலத்துறையின் 11—9—1971 நாளிட்ட 114012/71-1-ம் எண் அலுவல் சார்பற்ற கடிதத்தைக் காண்க.

## இணைப்பு 3.

# அரிசன நலத்துறை மானியம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1972–73

"அரிசன, மலைவாசி மக்கள் நலன்" என்ற தலைப்பின்கீழ் 1972–73-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையை நான் இம்மன்றப் பேரவையின் முன் வைத்து ரூ. 841·23 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

அரிசன, மலைவாசி மக்களின் நலன்களைப் பேணுவதற்காகத் தமிழ்நாடு அரசு ஆற்றும் ஆக்கப்பணிகளை—

(1) கல்வி,

(2) பொருளாதார முன்னேற்றம்,

(3 சுகாதாரம், வீட்டுவசதி ஏனைய திட்டங்கள் என்ற தலைப்புகளின் கீழ் தொகுக்கலாம்.

**1. கல்வி.—**

ஒவ்வோர் ஆண்டும் அரிசன நலத் துறைக்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி கல்விக்காகச் செலவிடப்படுகிறது. 1971–72-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 719·57 லட்சத்தில் கல்விக்கு மட்டும் ரூ. 527·59 லட்சம் செலவழிக்கப்பட்டு வருகிறது. 1972–73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையான ரூ. 866·88 லட்சத்தில் (கடன் மற்றும் மூலதனக் கணக்குகள் உட்பட விவரப்பட்டி 1-ல் உள்ளதுபோல்) கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 562·31 லட்சமாகும். இது மொத்தத் தொகையில் 65 விழுக்காடு ஆகும்.

**படிப்பு உதவித் தொகைகள்.—**

அரிசன, மலைவாசி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட மாணவ, மாணவியர்களுக்கு உணவு, உறைவிடத்திற்கான உதவித்தொகைகளும், படிப்பு உதவித் தொகைகளும், தொடரா மானியங்களும், தொடக்க வகுப்புகளிலிருந்து பட்ட மேற்படிப்பு வரையிலும், கலைப்படிப்பிற்கும் தொழில் படிப்பிற்கும் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன.

[1972 மார்ச் 20]

1969–70, 1970–71, 1971–72-ஆம் ஆண்டுகளில் இதற்காக வழங்கப் பட்ட தொகையும் இதனால் பயன் பெற்றவர்களின் எண்ணிக்கையும் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | அரிசன மாணவ மாணவியர்கள். | | | மலைவாசி மாணவ மாணவியர்கள். | | |
|---|---|---|---|---|---|---|
| | பள்ளியில் பயில்வோர். | கல்லூரியில் பயில்வோர். | செலவான மொத்த தொகை. | பள்ளியில் பயில்வோர். | கல்லூரியில் பயில்வோர். | செலவான மொத்த தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை) | | (ரூபாய் லட்சத்தில்.) | (பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை.) | | (ரூபாய் லட்சத்தில்.) |
| மத்திய அரசு படிப்பு உதவித் தொகை— | | | | | | |
| 1969-70 .. | .. | 11,527 | 57·43 | .. | 117 | 0·70 |
| 1970–71 .. | .. | 13,138 | 64·03 | .. | 158 | 0·80 |
| 1971–72 | .. | 15,141 | 66·56 | .. | 145 | 0·77 |
| (15—2—1972 முடிய). | | | | | | |
| தமிழ்நாடு அரசு படிப்பு உதவித் தொகை— | | | | | | |
| 1969–70 .. .. | 3,52,155 | 7,640 | 82·55 | 744 | .. | 0·14 |
| 1970–71 .. .. | 3,86,843 | 8,136 | 88·02 | 1,004 | .. | 0·13 |
| 1971–72 .. .. | 3,99,594 | 6,806 | 94·82 | 593 | .. | 0·12 |
| (15–2–1972 முடிய). | | | | | | |

மேலே கண்ட விவரப்பட்டியலிலிருந்து படிப்பு உதவித்தொகையின் அளவும், பயன் பெற்றவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருவது நன்கு விளங்கும்.

உதவித் தொகை பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 2,000-லிருந்து ரூ. 2,500 ஆக 1970–71 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த வரம்பு படிப்புக் கட்டணச் சலுகைக்கும் பொருந்தும்.

பட்ட மேற்படிப்பு, ஆசிரியர் பட்டப் பயிற்சி, புலவர் படிப்பு, தொழில் நுட்பக் கல்வி, தொழிற்கல்வி, தட்டெழுத்துப் பயிற்சி, முதலிய ஐம்பது வகைப் படிப்புகளுக்கு உதவித் தொகை வழங்க நிர்ணயிக்கப்பட்டிருந்த உச்ச வரம்பு எண்ணிக்கை 1970–71 முதல் அறவே நீக்கப்பட்டுவிட்டது. எனவே, இனி இக்கல்வி கற்கத் தகுதி பெற்ற அனைவரும் உதவித் தொகை பெற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகம் நடத்தும் நூலக அறிவுப் பட்டப் படிப்பிற்கும் உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



[1972 மார்ச் 20]

காந்தி அடிகள் நினைவுச் சிறப்புக் கல்வி உதவித் தொகை திட்டம் நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு 1970–71-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1971–72-ஆம் ஆண்டு முதல் உணவு, உறைவிடத்திற்கான உதவித் தொகைகள் கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளன:—

| படிப்பு. | சென்னை மாநகர். | | வெளியூர்ப்புறம். | |
|---|---|---|---|---|
| | பழைய வீதம். | உயர்த்தப் பட்ட வீதம் | பழைய வீதம். | உயர்த்தப் பட்ட வீதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (மாதம் ஒன்றுக்கான ரூபாய்.) | | | |
| கலை, விஞ்ஞானம் மற்றும் சட்டக்கல்வி. | 60 | 70 | 50 | 55 |
| மருத்துவம், பொறியியல் .. .. | 70 | 75 | 70 | 70 |
| உழவியல் .. .. .. .. | .. | .. | 50 | 70 |
| கால்நடை மருத்துவம் .. .. | 60 | 75 | 50 | 70 |
| எல்.சி.இ., எல்.எம்.இ., போன்ற டிப்ளமோ படிப்பு. | 50 | 60 | 45 | 50 |

இதற்காக இவ்வாண்டில் ரூ. 3·07 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப பட்டுள்ளது. இதேபோல் சிறப்புக் கட்டண உதவித் தொகையின் அளவையும் உயர்த்த 1971–72-ஆம் ஆண்டிற்கு ரூ. 4·50 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்த மதம் மாறியுள்ள அரிசன மாணவ மாணவியர்களுக்கும் நடப்பு ஆண்டு முதல் மேல் படிப்பு உதவித் தொகைகள் வழங்க மத்திய அரசு உத்தேசித்துள்ளது. 1971–72 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு இத்திட்டத்தினைச் செயற்படுத்தும்.

1971–72-ஆம் ஆண்டிலிருந்து பள்ளி மற்றும் பல்கலைக் கழக ஆண்டு இறுதித் தேர்வில் 60 சதவிகிதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று தேர்வு பெறும் இந்து அரிசன மற்றும் மலைவாசி மாணுக்கர்கள் (மதம் மாறியவர்கள் உட்பட) மத்திய அரசு உதவித்தொகை திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டணம் 1½ மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. 60 சதவிகிதத்திற்கும் குறைவான மதிப்பெண்கள் பெறும் மாணுக்கர்களுக்கு வழக்கம்போல் விடுதிக் கட்டணம் வழங்கப்படும்.

அரசினரால் வழங்கப்படும் உதவித்தொகைகளுக்கு மேல் கூடுதலாகப் பொறியியல், உழவியல், மருத்துவம் போன்ற படிப்பு வகைகளுக்குச் செலவு செய்ய நேர்கின்றது. அத்தகைய கல்வி பயிலும் மாணவர்களில் மிகவும் அவசியமாகப் பொருளுதவி தேவைப்படுபவர்களுக்கு கடன் வழங்கவும் அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. இதற்கென 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதே அளவுள்ள தொகை 1972–73-ம் ஆண்டிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

[1972 மாரச் 20]

மேல் பட்டப்படிப்பிற்காக மத்திய அரசு வழங்கும் உதவித் தொகைகளும் அரிசன நலத்துறையின் மூலமாக வழங்கப்படுகின்றன. சில கொள்கைகளையும் விதிமுறைகளையும் அனுசரித்து மத்திய அரசு நிதி உதவி நிர்ணயம் செய்து வழங்குகின்றது. அதன்படி 1969–70 ஆம் ஆண்டிற்கு ரூ. 5 லட்சம் வழங்கியது. 1970–71-ம் ஆண்டிற்கு ரூ. 8·79 லட்சம் வழங்கியது. 1971–72 ஆண்டிற்கு ரூ. 22·90 லட்சம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீடுகள் போதுமானதல்ல என்பதாலும், இத்திட்டத்தின்கீழ் மாநில அரசால் செலவிடப்படும் தொகை ஆண்டுதோறும் உயர்ந்து வருவதாலும், மத்திய அரசு தன் பங்கை அதிக அளவிற்கு ஏற்றுக்கொண்டு நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என ஒவ்வொரு ஆண்டும் இவ்வரசு மத்திய அரசை கேட்டுக் கொள்கின்றது.

மத்திய அரசு வழங்கும் உதவித் தொகை பெறும் மாணவர்கள் மாநில அரசு உதவித் தொகை பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களாயிருந்தால் மாநில அரசு உதவித் தொகைக்கும், மத்திய அரசின் உதவித் தொகைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை இவ்வரசு ஈடுசெய்து அளித்து வருகின்றது.

**அரிசனநலத் துறைப் பள்ளிகள் (அரிசனங்கள்) :**

அரிசன மாணவ மாணவியர்களுக்காக 833 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் தொடக்கப் பள்ளிகள் 745, நடுநிலைப் பள்ளிகள் 77, மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் 11. இப்பள்ளிகளில் சுமார் 1·22 லட்சம் மாணவ மாணவியர்கள் கல்வி கற்றுப் பயனடைந்து வருகின்றனர். இப்பள்ளிகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் மாவட்டவாரியாக விவரப்பட்டி 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

1971–72-ஆம் ஆண்டில் செங்கை மாவட்டத்திலுள்ள இஞ்சம்பாக்கம் தொடக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. சென்னை நகரில் உள்ள புளியந்தோப்பில் புதிதாகப் பெண்கள் நடுநிலைப் பள்ளியொன்று ஆரம்பிக்கப்பட்டது. தஞ்சை மாவட்டம் சென்னம்பட்டி கிராமத்திலுள்ள தனியார் துறை பள்ளிக்கூடத்தை அரிசன நலத்துறை தன்னுடைய நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொண்டுள்ளது.

1972–73 ஆம் ஆண்டில் முப்பது தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது. இக்காரியத்திற்காக 1972-73 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0·90 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

**அரிசன நலத்துறைப் பள்ளிகள் (மலைவாசிகள்) :**

மலைவாசி மாணவ மாணவியர்களுக்காக 69 உறைவிடப்பள்ளிகளை அரிசன நலத்துறை நடத்தி வருகிறது. அவற்றில் தொடக்கப்பள்ளிகள் 64, நடு நிலைப்பள்ளிகள் 4, உயர் நிலைப்பள்ளி 1. இவைகளைத் தவிர 4 உறைவிட வசதியில்லாப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. மாவட்ட வாரியாக உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையும் பயிலுகின்றவர்களின் எண்ணிக்கையும் விவரப்பட்டி 3–ல் கொடுக்கப்பட்டுள்ளன.



[1972 மார்ச் 20]

கீழ்க்கண்ட இடங்களில் மலைவாசியினருக்காக 1971–72-ஆம் ஆண்டில் புதியதாக நான்கு உறைவிடப்பள்ளிகள் திறக்கப்பட்டன:—

1. பெசலாத்தி—கோவை மாவட்டம்.
2. உள்ளியூர்—கோவை மாவட்டம்.
3. வெப்பாடி—சேலம் மாவட்டம்.
4. கள்ளிச்சால்—உதகை மாவட்டம்.

1972–73 ஆம் ஆண்டில் மலைவாசியினருக்காகக் கீழ்க்கண்ட இடங்களில் புதியதாக உறைவிடப்பள்ளிகள் திறக்க அரசு உத்தேசித்து கூடுதலான நிதியும் ஒதுக்கியுள்ளது :—

1. நடுவஞ்சேரி, சேலம் மாவட்டம்—ரூ. 1·15 லட்சம்.

2. பத்துக்காணி, கன்னியாகுமரி மாவட்டம் (உறைவிட வசதியில்லாப்பள்ளியை உறைவிடப்பள்ளியாக மாற்றுதல்)—ரூ. 0·21 லட்சம்.

**பள்ளிகளில் வசதிகள் பெருக்கம்.**

அரிசன நலத்துறை நடத்தும் பள்ளிகளில் மேசைகள், நாற்காலிகள் முதலியவற்றிற்கும், விஞ்ஞானக் கருவிகள், கல்விப் பயிற்சி சாதனங்கள், அறிவியல் ஆய்வுக்கூட சாதனங்கள் முதலியவற்றிற்கும், நூல் நிலைய வசதிகளைப் பெருக்கவும், படிப்படியாக ஆண்டு தோறும் வகை செய்யப்பட்டு வருகின்றது. இதற்காக 1970–71 ஆம் ஆண்டில் ரூ. 7·10 லட்சம் செலவழிக்கப்பட்டது. 1971–72 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 6·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டின் வரவு-செலவு திட்டத்தில் ரூ. 7·84 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

இதே போல் பழுதடைந்த பள்ளிக்கட்டிடங்களை மேம்பாடு செய்யவும், புதுக்கட்டிடங்கள் அமைக்கவும் படிக்கிரமத் திட்டப்படி நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக சென்ற ஆண்டில் ரூ. 11·89 லட்சம் ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டிற்கு ரூ. 13·50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன நலப்பள்ளிகளில் 130 பள்ளிகள் இன்னும் வாடகைக் கட்டிடங்களிலேயே இயங்கி வருகின்றன. அரசு கணிசமான நிதி ஒதுக்கி ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் இப்பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் அமைக்க வேண்டுமென 1968–69-ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது. அதற்கிணங்க ஒரு படிக்கிரமத் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் பள்ளிக் கட்டிடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

**சிருடை வழங்கல்.**

அரிசன நல விடுதிகளில் தங்கிப் பயிலும் எல்லாச் சிறுமிகளுக்கும், அரிசன நலப்பள்ளிகளில் உள்ள எல்லா மாணவியர்களுக்கும் (இனப் பாகுபாடின்றி) ஆண்டுக்கு இரு முறை தீபாவளி, பொங்கல் விழாக்களையொட்டிச் சீருடை வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் அரிசன மற்றும் மலைவாசி சிறுவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் விழாவையொட்டி ஒரு சிறுவருக்கு ரூ. 10 வீதம் சீருடை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி சீருடை வழங்கும் திட்டம் அரிசன நல விடுதிகளில் தங்கி நான்காவது ஐந்தாவது பயிலும் எல்லா மாணவர்களுக்கும் (இனப்பாகுபாடின்றி) 1971–72 முதல் நீடிக்கப்பட்டுள்ளது. (முதல் வகுப்பிலிருந்து மூன்றும் வகுப்பு வரையிலும் அரிசன மாணவர்களுக்கு விடுதியில் தங்கும் வசதி இல்லை. இந்தத் திட்டத்தினால் ஆண்டொன்றுக்கு ரூ. 18·00 லட்சம் செலவில் 0·64 லட்சம் சிறுமிகளும், 0·55 லட்சம் சிறுவர்களும் பயனடைகின்றனர்.

**சுற்றுலா.**

மலைவாசியினருக்கான பள்ளிகளில் பயிலும் மாணவர்களைப் பொது வெளி உலக அறிவு வளர்ச்சிக்காக ஆண்டில் ஒருமுறை நமது நாட்டிலுள்ள முக்கிய இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் சென்றுவரும் திட்டம் 1969–70-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3,000 நிதி ஒதுக்கப்படுகிறது.

**மதிய உணவு.**

அரிசன நலத்துறையின் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் எல்லா மாணவ மாணவியர்களுக்கும் மதிய உணவு வழங்கும் இப் பயனுள்ள திட்டம் சீரிய முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இதனால் ஆண்டுதோறும் சுமார் 1·25 லட்சம் குழந்தைகள் பயனடைகின்றனர். வேறு பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் 75 விழுக்காட்டிற்குக் குறையாமல் அரிசன மாணவர்கள் இருந்தால் அவ்வரிசன மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டம் அமுலாக்கப் படுகிறது.

மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு 1970–71-ம் ஆண்டு மொத்தம் ரூ. 35·62 லட்சம் செலவழிக்கப்பட்டது. 1971–72-ம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் இதற்கென ரூ. 36·15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 36·34 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

**புத்தகங்களும் பலகைகளும் வழங்கல்.**

அரிசன நலத்துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்குப்புத்தகங்கள், குறிப்பேடுகள், கரும் பலகைகள், எழுது பொருள்கள் முதலியன இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**பள்ளிகளில் சுகாதார வசதிகள்.**

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் உள்ள மாணவிகளுக்கும் ஆசிரியைகளுக்கும் சுகாதார (கழிவு அறை) வசதியை முதல் கட்டமாகச் செய்து தரப்படுவது அவசரத் தேவை என்பதை உணர்ந்து ஒருபடிக்கிரமத் திட்டம் வகுத்து இத் தேவையைப் பூர்த்தி செய்ய அரசு முடிவு செய்தது.





சென்ற ஆண்டில் முதல் கட்டமாக ஐம்பது அரிசனப் பள்ளிகளில் ஆசிரியைகளுக்கும், மாணவியர்களுக்கும், சுகாதார (கழிவு அறை) வசதிகள் ஏற்படுத்த ரூபாய் ஒரு லட்சம் நிதி ஒதுக்கியது. இத் திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஆசிரியர்களுக்கு விடுகள்**

அரிசன நலத்துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரும் திட்டத்தின் முதல் கட்டமாக மலைவாசி மக்களுக்கான பள்ளிகள் உள்ள இடங்களில் ஆசிரியர்களுக்கான இல்லங்கள் 1967–68-ம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை அரிசன நலப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்து இதற்காக 1971–72 ஆண்டுக்கு 20 குடியிருப்புகள் அமைப்பதற்கு மொத்தம் ரூபாய் 1·00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மலைவாசி மக்களுக்கான பள்ளிகளுக்கு ரூபாய் 0·50 லட்சம் ஆக மொத்தம் ரூ. 1·50 லட்சம் ஒதுக்கப்பட்டது. இதே அளவுள்ள தொகை 1972–73-ம் ஆண்டுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிலத் திட்டம்.**

அரிசன, மலைவாசி மாணவ மாணவியர்களில் தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயின்றவர்கள் போதிய அளவு இல்லாத காரணத்தால், மேற்படி பணிகளில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட விழுக்காடு நிறைவு பெறாமல் இருந்தது. இதை உணர்ந்து அரிசன மலைவாசி மாணுக்கர்களை இப்பயிற்சிகளில் தேர்வுபெற ஊக்கமளிக்கும் நோக்கத்துடன் இதற்கென 1971–72-ம் ஆண்டு முதல் புதிதாக ஒரு திட்டம் சென்னை, கோவை, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய நகரங்களில் செயல்படுத்த ஆணையிடப் பட்டது. பின்னர் இத்திட்டம் சேலம், தென்னாற்காடு, ஆகிய நகரங்களுக்கும் நீடிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி தனியார் பயிற்சிப் பள்ளிகளில் தட்டெழுத்துப் பயில 454 மாணுக்கர்களுக்கும், சுருக்கெழுத்துப் பயில 225 மாணுக்கர்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படும்:—

மாவட்ட வாரியாக விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.—

| | | மாணுக்கர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|
| | | தட்டெழுத்துப் பயிற்சி. | சுருக்கெழுத்துப் பயிற்சி. |
| 1 | சென்னை .. .. .. | 200 | 165 |
| 2 | மதுரை .. .. .. | 50 | .. |
| 3 | கோயம்புத்தூர் .. .. | 54 | 1 |
| 4 | திருச்சி .. .. .. | 50 | 9 |
| 5 | தென்னாற்காடு .. .. | 50 | 25 |
| 6 | சேலம் .. .. .. | 50 | 25 |
| | மொத்தம் .. | 454 | 225 |

இத்திட்டத்திற்காக 1971-72-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ. 1·75 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பயனுள்ள திட்டத்தினை எஞ்சியுள்ள இதர மாவட்டங்களுக்கும் நீடிக்க வேண்டுமென்று அரசு உத்தேசித்துள்ளதால் 1972–73-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·04 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

**தேர்வுகளில் தேருத மாணுக்கர்களுக்கு சிறப்புப் பயிற்சி**

9-ம் வகுப்பு முதல் 11-ம் வகுப்புவரை உள்ள தேர்வுகளில்தேருத அரிசன மற்றும் மலைவாசி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்ட மொன்று அரிசன நல உயர்நிலைப்பள்ளிகளில் சென்ற ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது. இதற்கென ரூபாய் 1·00 லட்சம் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்படும்.

**பட்டயக் கணக்கர் தேர்வுக்கான பயிற்சி**

1972–73 ஆம் ஆண்டு முதல் பரிசோதனை நடவடிக்கையாகச் சென்னை நகரில் மொத்தம் பத்து அரிசன, மலைவாசி மாணவ மாணவியர்களுக்குப் பட்டயக் கணக்கர் தேர்வுக்கான பயிற்சி தர அரசு உத்தேசித்துள்ளது. இப்புதிய திட்டத்திற்காக 1972–73 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0·15 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் அரிசன மக்களின் கல்வி வாய்ப்பினைப் பெருக்குவதற்காகவும், உரிய வேலை வாய்ப்பினைப் பெருக்குவதற்காகவும் வகை செய்யும்:—

**மாணுக்கர் இல்லங்கள்: பராமரிப்பு.**

அரிசன, மலைவாசி மாணவ மாணவிகளுக்கான இல்லங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. நிதி நிலைமையைப் பொறுத்தும், தேவைக் கேற்பவும் புதுப்புது இல்லங்கள் ஆண்டுதோறும் திறக்கப்பட்டு அரசினுல் பேணப்பட்டு வருகின்றன. அவற்றில் கீழ்க்காணும் விகிதத்தில் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:—

| | மலைவாசி மாணுக்கர் இல்லங்கள். (விழுக்காடு) | அரிசன மாணுக்கர் இல்லங்கள். |
|---|---|---|
| அரிசனங்கள் | 30 | 75 |
| மலைவாசிகள் | 60 | |
| பின்தங்கிய வகுப்பினர் | 10 | 20 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் | .. | |
| முன்னிலை வகுப்பினர் | .. | 5 |
| மொத்தம் | 100 | 100 |

சென்ற ஆண்டில் புதியதாகத் திறக்கப்பட்ட இல்லங்களின் விவரம் பின் வருமாறு.—

அரிசனங்கள்:

1. உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கான இல்லங்கள்—18
2. உயர் நிலைப்பள்ளி மாணவிகளுக்கான இல்லங்கள்—5
3. கல்லூரி மாணவர்களுக்கான இல்லம்—1
4. கல்லூரி மாணவிகளுக்கான இல்லம்—1



பள்ளி மாணவிகளுக்கான இல்லம்—1.

மலைவாசிகள்

1972–73-ஆம் ஆண்டில் 2 புதிய இல்லங்கள் திறக்கவும் சில தனியார் இல்லங்களை மேற்கொள்ளவும் ரூ. 5·00 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

அரிசன நலத்துறையால் நடத்தப்படும் மொத்தமுள்ள மாணுக்கர் இல்லங் களின் எண்ணிக்கையும், தங்கிப் பயிலுபவர்களின் எண்ணிக்கையும் விவரப் பட்டி 4 (அரிசனங்கள்) மற்றும் விவரப்பட்டி 5 (மலைவாசிகள்)-ல் கொடுக் கப்பட்டுள்ளன.

**இல்லக் கட்டடங்கள் கட்டுதல்.**

அரிசனநலத்துறையில் நடத்தப்படும் மொத்தமுள்ள 502 இல்லங்களில் 440 இல்லங்கள் தற்போது வாடகைக்கட்டடங்களில் தான் உள்ளன. அவைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் விவரப் பட்டி 6-ல் கொடுக்கப் பட்டுள்ளன.

அவசியமான வசதிகளுடன் கூடிய கட்டடங்களை அமைத்துத் தரவேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்து படிப்படியாகப் புதுக் கட்டடங்களைக் கட்ட நீண்ட கால திட்ட அடிப்படையில் வகை செய்துள்ளது.

| இல்லங்களின் பெயர்கள். | அனுமதிக்கப் பட்ட தொகை (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| **அரிசனங்கள்.** | |
| 1970–71— | |
| 1. அரசினர் நந்தனுர் மாணவர் இல்லம், சிதம்பரம் கூடுதல் இடவசதி. | 1·76 |
| 2. அரசினர் நந்தனுர் மாணவர் இல்லம், சிதம்பரம் உணவு அருந்தும் கூடம் | |
| **மலைவாசிகள்.** | |
| 1970–71— | |
| 3. மலைவாசிகள் இல்லம், முள்ளுக்குறிச்சி, சேலம் மாவட்டம். | 1·50 |
| 4. மலைவாசி பெண்கள் இல்லம், அரும்பாவூர், திருச்சி மாவட்டம். | 1·97 |
| **அரிசனங்கள்.** | |
| 1971–72— | |
| 5. கல்லூரி மாணவர்களுக்கான இல்லம், தஞ்சாவூர் | 2·00 |
| 6. மாணவர் இல்லம், திருத்தலையூர், திருச்சிராப்பள்ளி | 2·04 |
| 7. அரசினர் பெண்கள் விடுதி, செங்கல்பட்டு | 3·14 |
| 8 அரசினர் பெண்கள் விடுதி, திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம். | 2·25 |

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 9 அரசினர் மாணவர் இல்லம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். | 5·63 |
| 10 அரசினர் மாணவர் இல்லம், இராமச்சந்திரபுரம், இராமநாதபுரம் மாவட்டம். | 1·84 |

1972–73-ஆம் ஆண்டு சென்னை நகரிலுள்ள புளியந்தோப்பு அரசு மாணவியர் விடுதிக்கு மூன்று லட்ச ரூபாய் அளவில் அரிசன மாணவிகளுக்கான இல்லமொன்று கட்ட அரசு உத்தேசித்துள்ளது.

ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள கட்டடங்களை நிறைவு செய்வதற்கும், புதிய கட்டடங்கள் கட்டவும் 1971–72 ஆம் ஆண்டில் ரூ. 11·02 லட்சம் செலவழிக்கப்படுகிறது. 1972–73 ஆம் ஆண்டிற்கு ரூ. 13·17 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பகுதிநேர ஆசிரியர்கள்**

மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வித் தரத்தை உயர்த்தவும், இறுதி ஆண்டுத் தேர்வில் அவர்களது செயல்திறனை வளர்க்கவும் பகுதிநேர ஆசிரியர்களை நியமனம் செய்து பாடம் சொல்லித்தரும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தனியார் விடுதிகளுக்கு உணவு மானியங்கள்**

ஏற்புப்பெற்ற தனியார் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவ மாணவிகளைப் பேணுவதற்காக நிதி உதவி மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 7·59 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு மானியம் பெறும் தனியார் விடுதிகளின் எண்ணிக்கை மொத்தம் 55. அவைகளின் பெயர்கள் விவரப்பட்டி 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 2. பொருளாதார முன்னேற்றம்.

**வேளாண்மை.**—பெரும்பான்மையான அரிசன மலைவாசி மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே, அவர்களின் நிலையை உயர்த்துவதற்கு உழவு மாடுகள், விதை, உழவுக்கருவிகள், முதலியன வாங்கவும், பாசனக் கிணறுகள் தோண்டவும் மானியம் வழங்கப்படுகிறது. இந்த வகையில் வழங்கப்பட்டு வந்த தொகை போதுமானதாக இல்லை என்பதை உணர்ந்து உழவு மாடுகள் வாங்க ரூ. 400-லிருந்து 500 ஆகவும், கிணறு தோண்ட ரூ. 1,500-லிருந்து 2,000 ஆகவும், 1970–71-ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டது. மின் இறவைச் சாதனங்கள் பொருத்துவதற்கும் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கும் இந்த மானியத் திட்டம் பொருந்தும். இப்படி மானியம் வழங்க அரிசன மக்களுக்கென 8·69 லட்சம் ரூபாயும், மலைவாசி மக்களுக்கென 2·54 லட்சம் ரூபாயும் 1970–71-ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்டது. 1971–72 ஆம் ஆண்டில் அரிசன



மக்களுக்கென ரூ. 8·80 லட்சமும், மலைவாசி மக்களுக்கென ரூ. 2·97 லட்சமும் செலவழிக்கப்படும். வரும் நிதி ஆண்டுக்கு மொத்தம் ரூ. 12·00 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தரிசு நிலங்களை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட பட்டியலில் அரிசனங்களுக்கு 7-வது இடமாக இருந்ததை 2-வது இடத்திற்கு உயர்த்தி மேலும் மிகுதியான அரிசனங்கள் வேளாண்மை நிலங்களைப் பெற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

**நிலக்குடியேற்றம்**

நிலமில்லாத ஏழை அரிசன உழவுத் தொழிலாளர்களுக்கு உதவும் வகையிலும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும் கூட்டுறவுப் பண்ணை திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. பயிரிடத்தக்க புறம்போக்கு நிலங்களும் தரிசு நிலங்களும் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு அச்சங்கங்களில் உறுப்பினராக உள்ள அரிசன உழவர்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இந்த நிலங்களைச் சீர்திருத்தி வேளாண்மை செய்யவும், பாசன வசதிக்காகக் கிணறுகள் தோண்டவும், உழவு மாடுகள் வாங்கவும் மற்றுமுள்ள இத்தகைய வேளாண்மைப் பணிகளுக்காக மானியமாகவும் கடனாகவும் இச்சங்கங்களுக்கு அரசு நிதி உதவி அளித்து வருகிறது. வரும் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 92,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொழிற்கருவிகள் வழங்குதல்**

கருமார் தொழில், தச்சுத்தொழில், நெசவுத் தொழில் இன்ன பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள அரிசன மலைவாசி மக்களுக்கு அவரவர் தொழில்களுக்குத் தேவையான கருவிகளும் சாதனங்களும் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து அமுலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 1972–73-ம் ஆண்டிற்கு ரூ. 2·50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**தொழில் நடத்த வட்டியில்லாக் கடனுதவி:**

சிருந்து பழுதுபார்த்தல், மிதிவண்டி கடைகள், மளிகை, உணவு விடுதிகள் நடத்துதல் முதலான 22 குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள அரிசன மக்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அந்தந்தத் தொழில்களுக்குத் தகுந்தாற்போல் ரூ. 250 முதல் ரூ. 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கும் திட்டம் 1968–69-ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகின்றது.

இவ்வரிய திட்டத்தின் மூலம் இதுவரை பயன்பெற்றோரின் பட்டியல் வருமாறு:—

| ஆண்டு. | பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை. | கடனாக வழங்கப்பட்ட தொகை. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1968–69 .. .. .. .. .. | 170 | 1·00 |
| 1969–70 .. .. .. .. .. | 707 | 3·01 |
| 1970–71 .. .. .. .. .. | 1,853 | 10·02 |

இத்திட்டத்திற்காக 1971–72-ஆம் ஆண்டிலும் வரும் நிதி ஆண்டிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 10·00 லட்சம் செலவழிக்கப்படும்.

[1972 மார்ச் 20]

**தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஈட்டுத்தொகை:**

வேலை வாய்ப்புப் பயிற்சித்துறை இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ் நடத்தப்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் அரிசன மலைவாசி மாணவ மாணவியருக்கு உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இதற்காகும் செலவு முழுவதும் அரிசன நலத்துறையால் ஈடுசெய்யப் படுகிறது 1971–72–ஆம் ஆண்டிற்கு ரூ. 13 லட்சம் திருத்த மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. 1972–73 ஆம் ஆண்டிற்கும் ரூ. 13 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**கூட்டுறவு (அரிசனங்கள்):**

தொழில் துறையில் அரிசனத் தொழிலாளர்கள் முன்னேற்றம் காண வகை செய்யும் முறையில் கூட்டுறவுத் தொழிற்சங்கங்களையும் உற்பத்திப் பயிற்சி பணிநிலையங்களையும் புதிதாக அமைத்திடவும் ஏற்கனவே அமைக்கப் பட்டவைகளைப் பேணி பலப்படுத்தவும், அரசு வழிவகை செய்து வருகிறது. நிர்வாக வசதிகளுக்காக இவைகள் தொழில் வணிகத்துறை, மகளிர் நலத்துறை, தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் ஆகியவற்றின் பொறுப்பில் உள்ளன. இதற்குத் தேவையான நிதிஉதவியை அரிசன நலத்துறை அளிக்கிறது.

**கூட்டுறவு (மலைவாசிகள்):**

காட்டுப் பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் வாழும் மலைவாசி மக்களின் பிற்பட்ட நிலையையும் பொருளாதாரச் சீர்கேட்டையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வியாபாரிகளும் வட்டிக்குக் கடன் கொடுப் பவர்களும் அவர்களைச் சுரண்டிவிடுகிறார்கள். இக்கொடுமையைத் தடுக்கவும் மலைவாசி மக்கள் காட்டு வளங்களை நல்ல முறையில் பயன்படுத்தித் தொழிலில் ஈடுபட்டு அதிகப்படியாக பொருளீட்டுவதற்கும் உதவியாக இருக் கும்பொருட்டுக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நிறுவப்பட்டு சிறப்பாக நடந்து வருகின்றன. இச்சங்கங்களின் அவசியத்தை ஒட்டிச் சில சிறப்புச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இத்தகைய சங்கங்கள் தற்போது 20 இயங்கி வருகின்றன. அவைகளைப் பற்றிய தகவல்கள் விவரப்பட்டி 8-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்:**

வேளாண்மையில் ஈடுபட்டுள்ள அரிசனங்களுக்குப் பொதுவாக ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு இல்லை. ஆகவே, பணியின்றி இருக்கும்போது தக்கவேலைகளில் ஈடுபட்டுத் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், மற்றும் ஏழை அரிசன மக்களுக்கு உதவவும் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் மூலம் அரிசன உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க மானியமாக ரூ. 150, கடனாக ரூ. 150 ஆக மொத்தம் ரூ. 300 நிதி உதவி 1968 முதல் அளிக்கப்பட்டு வந்தது.



]1972 மார்ச் 20]

சென்ற ஆண்டு முதல் கறவைமாடுகள் வாங்க மானியமாக ரூ. 250, கடனாக ரூ. 250 ஆக மொத்தம் ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது. 1970–71 ஆம் ஆண்டு வரையில் 352 சங்கங்கள் துவக்கப்பட்டன. பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படவும் தன்னிறைவு பெற்ற அமைப்புகளாக அமையவும், இதுவரை இயங்கிவந்த திட்டம் 1971–72–ஆம் ஆண்டுமுதல் சற்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய திட்டத்தின்படி இனி புதியதாக அமைக்கப்படும் சங்கங்களில் 150 உறுப்பினர்கள் இருக்கவேண்டும். (தற்போது 50 உறுப்பினர்கள்). கறவை மாடுகள் வாங்க மூன்று முறை உதவி அளிக்கப்படும். முதல் மாடும், இரண்டாவது மாடும் வாங்க முறையே ரூ. 375 கடனும், ரூ. 125 மானியமும் ஒவ்வொரு முறையும் அளிக்கப்படும். மூன்றாவது மாடு வாங்க ரூ. 500 கடனாக அளிக்கப்படும். பொதுச் சங்கங்களில் உள்ள அரிசன அங்கத்தினர்களும் இக்கடனுதவி பெறத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள். இத்திட்டத்திற்காக 1971–72–ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ. 8 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் நிதி ஆண்டுக்கும் ரூ. 8·00 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்கள்.**—போக்குவரத்துக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவுவதற்கு அரிசனங்களுக்கு ஆதரவும் நிதி உதவியும். அளிக்கப்படுகின்றன. இத்தகைய சங்கங்கள் தற்போது ஈரோடு, மதுரை, சேலம், மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன. இராமநாதபுரத்திலும், இத்தகைய சங்கத்திற்கு அரசு பங்குத் தொகை அளிக்க முடிவு செய்துள்ளது.

**தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகத்தின் மூலம் வேலைவாய்ப்புக்கான பயிற்சி.**—தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகம் ஆண்டு தோறும் நடத்தும் தேர்வுகளில், அரிசனங்கள் மற்றும் மலைவாசிகள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தச் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவை ஆகிய நான்கு இடங்களில் பயிற்சி நிலையங் நடைபெற்றன. இப்போது இம்மாதிரியான பயிற்சி நிலையங்கள் இருபது இயங்கி வருகின்றன. இத்திட்டத்திற்காக 1972–73 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2·63 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**முன்னோடி பயிற்சி திட்டம்.**—பள்ளியிறுதித் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்ணும் அதற்கு அடுத்த மதிப்பெண்ணும் பெற்றுக் கல்லூரியில் பயிற்சி பெறும் இரண்டு அரிசன மாணவர்களுக்கு அவர்களது மேற்படிப்புக்காக இத்திட்டம் செயல் படுத்தப் படுகிறது. அவர்களுக்கு இலவச உண்டி, உறைவிடத்திற்காகச் சிறப்பு உதவித்தொகை மாதம் ரூ. 80 (ரூபாய் எண்பது மட்டும்) வீதம் வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்குக் கல்லூரி விடுமுறை நாட்களில் உல்லாசப் பிரயாணமும் குடிமைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இச்சிறப்பு உதவித் தொகைக்கு எவ்வித வருமான உச்சவரம்போ அல்லது விடுதிகளில்தான் தங்க வேண்டும் என்ற வரையறையோ கிடையாது.

இத்திட்டம் 1971–72 முதல் செயல்படுகிறது. இதனால் வருடந்தோறும் 28 அரிசன மாணவர்கள் பயனடைவர்.

## இந்திய ஆட்சிப் பணியாளர் பயிற்சி நிலையம்.

அனைத்திந்தியப் பணிகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மத்திய அரசுப்பணிகள் போன்ற தேர்வுகளுக்கு அரிசன மற்றும் மலைவாசி இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு முன்னோடி பயிற்சி நிலையம் ஒன்று செயற்பட்டு வருகிறது. இதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ. 3.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 60 மாணவர்கள் பயிற்சி பெறலாம். எனினும் 30-க்கும் குறைவான மாணவர்களே கடந்த சில வருடங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர். எனவே எஞ்சியுள்ள 30 காலி இடங்களை தமிழ்நாடு அலுவலர்கள் அரசுப்பணிக்கான தேர்வு, ஆயுள் காப்புக் கழகத்தினரால் நடத்தப்படும் தேர்வு, ஸ்டேட் வங்கி, இதர தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் முதலியனவற்றால் நடத்தப்படும் பொறுக்குத் தேர்வுகள் முதலியவற்றிற்கு பயிற்சி அளிக்க தலா 10 இடங்கள் வீதம் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3. சுகாதாரம், வீட்டு வசதி, ஏனைய திட்டங்கள்

**வீட்டு மனைகள்.**—மனிதனின் அடிப்படைத் தேவைகளில் வீட்டுவசதி முக்கியமானது. வீடில்லாத எல்லா அரிசன மக்களுக்கும் வீட்டு மனைகள் வழங்கி அவர்கள் வீடுகட்டி வாழ வகைசெய்ய வேண்டுமென்பது அரசின் அவா. இதற்காக அரசாங்க புறம்போக்கு நிலங்கள் இருக்கும் இடங்களில் அவர்களுக்கு மனைகளுக்காக நிலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. அரசுக்கு சொந்தமான நிலம் இல்லாத இடங்களில் தனியார் நிலங்களை அரசு விலைக்கு வாங்கி மனைகளாக வழங்குகின்றது. இவ்வேலையையும் சேர்த்துக் கவனிக்கத் தனி வட்ட அலுவலர்கள் (தாசில்தார்) அவர்களின் கீழ்த்தனி வருவாய் ஆய்வாளர்கள், நில அளவையாளர்கள் முதலிய பணியாளர்கள் தேவைக்கேற்ப எல்லா மாவட்டங்களிலும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தேவையான நிலங்களைக் கையகப்படுத்தி மனைகளாக வழங்கிப் பட்டாவும் தந்து வருகின்றனர். இத்திட்டத்திற்காக 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 15·00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1972–73-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 15·00 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலங்களில் அரிசன மக்கள் மிகுதியாகக்குடியேறி பல்லாண்டுகளாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் குடியேறியுள்ள மனைக்கட்டுகளைத் தங்களுக்கே உரிமையாக்க வேண்டுமெனக்கோரி வந்தனர். இவ்வரசு பொறுப்பேற்றதும் இக்கோரிக்கையை நன்கு ஆய்ந்து மறுப்பில்லாத புறம்போக்கு நிலங்களில் 1960 ஆம் ஆண்டிற்கு முன்பு குடியேறி வாழ்ந்து வரும் அரிசன மக்களுக்கு (அந்நிலங்களை ஒப்படைப்பதில் வேறுவித தடையேதுமில்லை எனில்) அவற்றை அவர்களுக்கே வழங்கலாம் என அரசு ஆணை பிறப்பித்து அதை விரைந்து செயற்படுத்தி வருகின்றது.

**வீட்டுவசதி.**—அரிசன மக்களுக்கு ஏராளமானவீட்டு மனைகள் வழங்கப்பெற்றும் இன்னும் அநேக மனைகள் வீடுகள் கட்டப்படாமல் காலியாக உள்ளன. ஆகவே அதிகப்படியான மக்கள் பயன்பெற மலிவு வீடுகள் கட்டும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. சென்ற இரண்டு ஆண்டுகளாக ரூ. 940 மதிப்புள்ள வீடுகள் கட்டப்பட்டு வந்தன. அதில் ரூ. 690 மான்யமாகவும் ரூ. 250 வட்டியில்லாக்கடனாகவும் வழங்கப்பட்டது. அரிசன மக்களின் குடியிருப்புக்காக ரூ. 940க்கு வீடுகள் கட்டப்பட்டு வந்ததை மாற்றியமைத்து ரூ. 1,500-க்கு 1972–73-ம் ஆண்டுமுதல் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 75 விழுக்காடு மான்யமாகவும், எஞ்சியுள்ள 25 விழுக்காடு கடனாகவும் அளிக்கப்படும்.



இத்திட்டத்திற்காக 1972–73 ஆம் நிதியாண்டில் ரூ. 9·42 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அரிசனங்களுக்காகவும், மலைவாசிகளுக்காகவும் "தமிழ்நாடு அரிசன, மலைவாசி மக்கள் வீட்டு வசதி கழகம்" நிறுவ அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. இக்கழகம் ஆயுள் காப்பீட்டு கழகம், மற்ற நிறுவனங்களிலிருந்து கடன் முதலிய வசதிகள் பெறும். இதைப்பற்றிய விவரங்களையும், கழகம் எவ்விதம் செயல்படவேண்டுமென்பதைப் பற்றியும் ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுவருகின்றது.

காந்தி அடிகள் தென் ஆப்பிரிக்காவில் நடத்திய புனிதப்போரில் பங்கு பெற்ற தமிழ்நாட்டு வீராங்கனை வள்ளியம்மையின் தியாகத்தையும் பண்பையும் நினைவூட்டும் வகையில் தில்லையாடியில் அவ்வம்மையாரின் பெயரில் ஓர் அரிசனக் குடியிருப்பு அரசு அமைத்துள்ளது. அங்கு அரிசனங்களும் மற்ற இனத்தவர்களும் வாழ்வதற்கு தேவையான வீடு, குடிநீர், தெருக்கள், மருத்துவமனை, உயர்நிலைப்பள்ளி, உண்டுறை இல்லம் முதலிய வசதிகள் யாவும் செய்து தரப்பட்டுள்ளன.

## துப்புரவுப் பணியாளர்களுக்கு வீட்டு வசதி திட்டங்கள்.

நகர், உள்ளாட்சி, ஊராட்சி மன்றங்களில் பணிபுரிந்துவரும் துப்புரவுத் தொழிலாளர்களின் நிலையை உணர்ந்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தரவும் அரசு தனித் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. மத்திய அரசு ஆதரவுள்ள திட்டத்தின் கீழ் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இத் திட்டத்திற்காக 1971–72 ஆம் ஆண்டிலும், 1972–73 ஆம் ஆண்டிலும் ஆண்டொன்றுக்கு ரூ. 8·00 லட்சம் செலவழிக்கப்படும்.

துப்புரவுப் பணி செய்யும்போது அவர்கள் உபயோகிக்க தட்டுகளும், கரண்டிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. கழிவுப் பொருள்களைத் தலையிலோ, கையிலோ ஏந்திச் செல்லும் முறையை அறவே ஒழிக்கத் தள்ளு வண்டிகள் வழங்கப்படுகின்றன. இத் திட்டத்திற்காக நடப்பு ஆண்டில் ரூ. 1·50 லட்சமும், வரும் நிதி ஆண்டில் ரூ. 2·00 லட்சமும் செலவழிக்கப்படும்.

## குடிநீர் கிணறுகள்.

அரிசன மலைவாசி மக்களுக்குச் சுத்தமான நல்ல குடிநீர் வசதியை செய்து தரும்பொருட்டு அவர்கள் வாழும் குடியிருப்புகளில் குடிநீர் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு கிணறுக்காகும் செலவு ரூ. 3,000 இத் திட்டத்தின் கீழ்த் தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| ஆண்டு. | தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. அரிசனங் மக்களுக்கு. | தோண்டப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை. மலைவாசி மக்களுக்கு. |
|---|---|---|
| 1969–70 | 337 | 37 |
| 1970–71 | 372 | 30 |
| 1971–72 | 575 | 77 |
| 1972–73 (மதிப்பீடு) | 600 | 79 |

அரிசன குடியிருப்புகளில் குடிநீர் வசதிக்காக வழக்கமாக ஒதுக்கும் ரூ. 8·50 லட்சத்துக்கு மேல் 1971-72-ம் ஆண்டில் கூடுதலாக ரூ. 8·75 லட்சமும், 1972-73-ம் ஆண்டில் கூடுதலாக ரூ. 9·50 லட்சமும் அரசு ஒதுக்கியுள்ளது. இப்படித் தனிக் கவனம் செலுத்தி அரிசன குடியிருப்புகளில் வசதிகளைப் பெருக்குவதன் நோக்கம் குடிநீர் வசதி இல்லாக் குடியிருப்பு எதுவுமே இல்லை என்ற நிலையை விரைவில் எய்த வேண்டுமென்பதே ஆகும்.

### மின் வசதி.

அரிசனக் குடியிருப்புகளுக்கும் மலைவாசி மக்கள் குடியிருப்புகளுக்கும் மின் இணைப்பு வசதிகள் செய்து தருவது தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. எல்லாக் குடியிருப்புக்களுக்கும் மின் இணைப்பு வசதி விரைவில் செய்து தரவேண்டும் என்று அரசு கருதி அதற்கான செயல்முறையை மேற்கொண்டுள்ளது. இந்த நோக்கம் நிறைவேறுவதற்காக கிராமத்தில் மின் இணைப்பு வசதி இருந்தால்தான் அரிசன குடியிருப்புக்கு மின் இணைப்பு வசதி செய்யலாம் என்றிருந்த நிபந்தனையைச் சென்ற ஆண்டில் இவ்வரசு நீக்கிவிட்டது. ஆண்டு ஒன்றிற்குச் சுமார் ரூ. 3 லட்சமாக வழங்கப்பட்டு வந்த தொகையைத் தேவைக்கேற்ப கூடுதலாக்கி வந்துள்ளது இவ்வரசு. அண்மையில் அரிசன காலனி தெருக்களில் உள்ள தெரு மின்சார விளக்குகளுக்கான கட்டணத்தையும் அரசு ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இதற்காகவும் மின்சார கட்டணத்திற்காகவும் வழங்கப்பட்ட தொகைகள் பற்றிக் கீழே தந்துள்ள விவரங்களிலிருந்து மின் இணைப்பு வசதி செய்து தருவதில் அரசின் அக்கறையும் தீவிரமும் தெளிவாகும்.

| ஆண்டு. | செலவான தொகை. (ரூ. லட்சத்தில்) | |
|---|---|---|
| 1967-68 .. .. .. | 5·07 | |
| 1968-69 .. .. .. | 5·67 | |
| 1969-70 .. .. .. | 9·15 | |
| 1970-71 .. .. .. | 20·03 | (மின்சாரக் கட்டணத்திற்கான செலவுகள் உட்பட). |
| 1971-72 (திருத்த மதிப்பீடு) | 40·00 | ,, |
| 1972-73 (நிதி ஒதுக்கீடு) .. | 40·00 | ,, |

1970-71-ம் ஆண்டு முடிவிற்குள் 6,466 குடியிருப்புகளுக்கு மின் வசதிகள் செய்து தரப்பட்டன. 1971-72-ம் ஆண்டு சுமார் 3,000 குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து தரப்படும். 1972-73-ம் ஆண்டிற்குள் மொத்தமுள்ள 20,235 அரிசனக் குடியிருப்புகள் அனைத்திற்கும் விரைவில் இவ்வசதி செய்து தர ஒரு படிக்கிரமத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன்படி 1973-74-ம் ஆண்டு முடிவிற்குள் இத் திட்டம் பூர்த்தியாகி மின்வசதி இல்லாக் குடியிருப்பு எதுவுமே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை எட்டும். மேலும் அரிசனக் குடியிருப்புகளில் ஆகும் மாதாந்திர மின்சாரச் செலவுக் கட்டணத்தையும் அரசு ஏற்க முடிவு செய்துள்ளது.





**மருத்துவம்.**—மலைப்பகுதிகளிலும், காட்டுப்பகுதிகளிலும் மலைவாசி மக்கள் ஆங்காங்கே சிதறிய குடியிருப்புகளில் இருந்து வாழ்கின்றனர். தக்க போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தாலும், மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதாலும், மற்றச் சுற்றுப்புற சூழ்நிலைகளாலும் தேவையான மருத்துவ வசதிகளைப் பெற இவர்களுக்கு இயலாமற் போகின்றது. ஆகவே, அவர்களது இருப்பிடங்களுக்கே சென்று வேண்டிய மருத்துவ வசதிகளை இலவசமாக வழங்க அரசு வகை செய்துள்ளது. இது நடமாடும் மருத்துவ உந்துகள் மூலம் செயல்படுத்தப்பட்டு நல்ல பலனை தந்துள்ளது. வட ஆற்காடு, கோவை, நீலகிரி, மதுரை மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம் 1969-70-ல் தர்மபுரி மாவட்டத்திலும் துவக்கப்பட்டு நல்ல முறையில் செயல்படுகின்றது. திருநெல்வேலி, கன்யாகுமரி மாவட்டங்களிலும் இம்மாதிரி நடமாடும் மருத்துவ உந்துகள் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

**தீண்டாமை ஒழிப்பு.**—தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தவும், இச்சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்யவும், வட்ட, மாவட்ட, மாநில நிலைகளில் அரிசன நல வாரியங்களை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும் ஊர்ப்புறத்திலுள்ள அரிசனங்களும், மலைவாசிகளும் மற்ற இனத்தவர்களின் வன்முறைகளுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகாவண்ணம் பாதுகாக்கும் பொருட்டு " நடமாடும் காவல்படைகளை " நிறுவியுள்ளது. 1972-ம் ஆண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள இப் படைகள் முதலில் கோவை, மதுரை, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி ஆக ஆறு மாவட்டங்களில் இயங்கிச் செயல்படும்.

### உயர் மட்டக்குழு:

அரசு நிர்வாகத்திற்குட்பட்ட பலவகை அலுவலகங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுகையில் அரிசனங்களுக்கும், மலைவாசி மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்களில் நிர்ணய சதவீத இடங்கள் நிரப்பப்படுகின்றதா என்பதை ஆராய " உயர் ஆணைக்குழு " என்ற அமைப்பு இயங்கி வந்தது. இதில் இன்னும் ஆழ்ந்த கவனம் செலுத்தும் வகையிலும் மேலும் உயர் மட்டத்தில் உள்ளவர்கள் ஈடுபடும் வகையிலும் இந்த அமைப்பை மாற்றி முதலமைச்சரைத் தலைவராகவும், அரிசன நல அமைச்சரைத் துணைத்தலைவராகவும் கொண்ட " உயர் மட்ட குழு "வாக 1969-70-ல் இவ்வரசு அமைத்தது. இக் குழு அரிசன மலைவாசி மக்கள் பெருமளவில் அரசுப் பதவிகளில் இடம் பெறுவதற்கு வாய்ப்பு வசதிகளைப் பெருக்கித் தருவதில் ஆழ்ந்த அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது.

அரிசன மலைவாசி மக்களின் நலனுக்காகத் தமிழ்நாடு அரசு விரைந்து ஆற்றும் ஆக்கப்பணிகள் சிறப்பிடம் பெறத்தக்கவை. சிறப்பான கல்வி, பொருளாதாரத்தில் சீரிய முன்னேற்றம் குறிப்பாகத் தீண்டாமை ஒழிப்பு ஆகிய நல்வாழ்வுக் கொள்கைகளுக்காக ஆண்டு தோறும் பலப்பல புதிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி—பல இலட்சங்களைக் கூடுதலாக செலவழித்துப் பாடுபட்டு வருகின்றது.

இவற்றைக் கூறி, இத்துறையின் மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்றிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

**சத்தியவாணிமுத்து,**
**அரிசன நல அமைச்சர்.**



**விவரப்பட்டி 1.**

**அரிசன நலத்துறை.**

**வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1972–73.**

(ரூ. லட்சங்களில்.)

(866·88)

திட்டத்திலுள்ள இனங்கள் (277·14). திட்டத்திலில்லாத இனங்கள் (589·74).

| திட்டங்களின் விவரங்கள். | மத்திய அரசு ஆதரவுள்ள திட்டம் (61–66). | | மத்திய அரசின் உதவி திட்டம் (215·48). | | திட்டத்திலில்லாத இனங்கள் (453·72+136·02). | | மொத்தம். | | கூடு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரிசனங்கள். | மலை வாசிகள். | அரிசனங்கள். | மலை வாசிகள். | அரிசனங்கள். | மலை வாசிகள். | அரிசனங்கள். | மலை வாசிகள். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1 நிர்வாகம் .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 48·26 |
| 2 மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவு திட்டம். | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 87·76 |
| 3 கல்வி— | | | | | | | | | |
| படிப்பு உதவித்தொகை | 35·00 | 0·80 | 37·50 | 0·10 | 123·71<br>1·00* | 0·13 | 197·21 | 1·03 | 198·24 |
| பள்ளிகள் .. .. | .. | .. | .. | 4·21 | 94·82 | 5·70 | 94·82 | 9·91 | 104·73 |
| நண்பகல் உணவு .. | .. | .. | 7·34 | .. | 29·00 | .. | 36·34 | .. | 36·34 |
| சீருடைகள் .. .. | .. | .. | 5·45 | .. | 12·84 | .. | 18·29 | .. | 18·29 |
| பள்ளிச்சாதனங்கள் .. | .. | .. | 3·79 | 0·40 | 3·65 | .. | 7·44 | 0·40 | 7·84 |

| திட்டங்களின் விவரங்கள். | மத்திய அரசு ஆதரவுள்ள திட்டம் (61-66). | | திட்டத்திலுள்ள இனங்கள். (277·14) மத்திய அரசின் உதவி திட்டம் (215·48) | | திட்டத்திலில்லாத இனங்கள். (589·74). திட்டத்திலில்லாத இனங்கள் (453·72)+136·02). | | மொத்தம். | | ஆக மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரிசனங்கள். | மலைவாசிகள். | அரிசனங்கள். | மலைவாசிகள். | அரிசனங்கள். | மலைவாசிகள். | அரிசனங்கள். | மலைவாசிகள். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| பள்ளிக்கட்டிடங்கள் .. | .. | .. | 9·90 | 0·60 | 3·00 | .. | 12 90 | 0·60 | 13·50 |
| புத்தகங்களும், பலகைகளும் வழங்குதல். | .. | .. | 1·11 | .. | .. | .. | 1·11 | .. | 1·11 |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | .. | 1·00 | 0·50 | .. | .. | 1·00 | 0·50 | 1·50 |
| கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் | .. | .. | 17·13 | 0·78 | .. | 0·10 | 17·13 | 0·88 | 18·01 |
| சுற்றுலா .. .. | .. | .. | .. | 0·03 | | | .. | 0·03 | 0·03 |
| பரிசுப்பொருட்கள் .. | .. | .. | | | 0·37 | .. | 0·37 | .. | 0·37 |
| மாணக்கர் இல்லங்கள்—பராமரிப்பு. | .. | .. | 28·00 | 2·22 | 82·13 | 8 95 | 110·13 | 11·17 | 121·30 |
| மாணக்கர் இல்லங்கள் கட்டுதல் | 3·00<br>3·00† | 0·67 | 5·00† | 1·50 | .. | .. | 11·00 | 2·17 | 13·17 |
| பகுதி நேர ஆசிரியர்கள் .. | .. | .. | . | 0·20 | 0·40 | .. | 0·40 | 0·20 | 0·60 |
| தனியார் விடுதிகளுக்கு மானியம். | .. | .. | .. | .. | 7·45 | 0·14 | 7·45 | 0·14 | 7·59 |
| இந்திய ஆட்சிப் பணியாளர் பயிற்சி நிலையம் | 3·00 | .. | .. | .. | .. | .. | 3·00 | .. | 3·00 |
| **தொழிற்கல்வி திட்டங்கள்—** | | | | | | | | | |
| தொழிற்[illegible] சேர்க்கை. | .. | .. | .. | .. | 13·94 | .. | 13·94 | .. | 13·94 |
| சிறுந்து ஓட்டுநர் பயிற்சி | .. | .. | 0·20 | 0·10 | .. | .. | 0·20 | 0·10 | 0·30 |
| முன்னோடிப் பயிற்சி திட்டம் .. | .. | .. | 0·26 | .. | .. | .. | 0·26 | .. | 0·26 |
| பட்டயக் கணக்கர் தேர்வுக்கான பயிற்சி. .. | .. | .. | 0·15 | .. | .. | .. | 0·15 | .. | 0·15 |
| தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிலத் திட்டம். .. | .. | .. | 1·04 | .. | 1·00 | .. | 2·04 | .. | 2·04 |
| 3. கல்வி—மொத்தம் .. | 44·00 | 1·47 | 117·87 | 10·64 | 373·31 | 15·02 | 535·18 | 27·13 | 562·31 |
| 4. பொருளாதார முன்னேற்றம்— | | | | | | | | | |
| வேளாண்மை .. .. | .. | . | 9·00 | 3·00 | .. | .. | 9·00 | 3·00 | 12·00 |
| கூட்டுறவு .. .. | 2·06 | 1·50 | .. | .. | .. | 0·08 | 2·06 | 1·58 | 3·64 |
| பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் .. | .. | .. | 4·00<br>4·00* | .. | .. | .. | 8 00 | .. | 8·00 |
| நிலக்குடியேற்ற சங்கங்கள் .. | .. | .. | 0·92 | .. | .. | .. | 0·92 | .. | 0·92 |
| குடிசைத் தொழில் .. | .. | .. | .. | .. | 2·50 | 0·26 | 2·50 | 0·26 | 2·76 |
| உற்பத்தி பயிற்சி பணி நிலையங்கள் .. | .. | .. | 0·60 | 1·28 | .. | .. | 0·60 | 1·28 | 1·88 |
| தொழிற் கருவிகள் வழங்குதல். .. | .. | .. | 2·00 | 0·50 | .. | .. | 2·00 | 0·50 | 2·50 |
| தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக்கழகத்தின் மூலம் வேலை வாய்ப்புக்கான பயிற்சி. | 2·63 | .. | .. | .. | .. | .. | 2·63 | .. | 2·63 |
| தோட்டக்கலை .. .. | .. | .. | .. | .. | .. | 0·93 | .. | 0·93 | 0·93 |

| திட்டங்களின் விவரங்கள். | மத்திய அரசு ஆதரவுள்ள திட்டம் (61-66). | | திட்டத்திலுள்ள இனங்கள். (277·14) மத்திய அரசின் உதவி திட்டம் (215·48). | | திட்டத்திலில்லாத இனங்கள் (453·72 + 136·02). | | திட்டத்திலில்லாத இனங்கள். (589·74) மொத்தம். | | ஆக மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரிசனங்கள். | மலைவாசிகள். | அரிசனங்கள். | மலைவாசிகள். | அரிசனங்கள். | மலைவாசிகள். | அரிசனங்கள். | மலைவாசிகள். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| தொழில் கடன்கள் .. | .. | .. | 10·00* | .. | .. | .. | 10·00 | .. | 10·00 |
| 4. பொருளாதார முன்னேற்றம்—மொத்தம். | 4·69 | 1·50 | 30·52 | 4·78 | 2·50 | 1·27 | 37·71 | 7·55 | 45·26 |
| 5. சுகாதாரம், வீட்டுவசதி, ஏனைய திட்டங்கள்— | | | | | | | | | |
| வீட்டு வசதி .. .. .. | .. | .. | 4·12 1·50* | 2·75 0·75* | .. 0·30* | .. .. | 5·92 | 3·50 | 9·42 |
| வீட்டு மனைகள் .. .. | .. | .. | 15·00 | .. | 0·10* | .. | 15·10 | .. | 15·10 |
| துப்புரவுப்பணியாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டங்கள். | 10·00 | .. | .. | .. | .. | .. | 10·00 | .. | 10·00 |
| பொது சுகாதாரம் .. .. | .. | .. | .. | .. | 18·10 | 0·07 | 18·10 | 0·07 | 18·17 |
| குடிநீர் கிணறுகள் .. .. | .. | .. | 18·00 | 2·38 | .. | .. | 18·00 | 2·38 | 20·38 |
| மருத்துவம் .. .. .. | .. | .. | 1·44 | 0·88 | 3·01 | 0·27 | 1·45 | 1·15 | 2·60 |
| மின்வசதி .. .. .. | .. | .. | .. | .. | 40·00 | .. | 40·00 | .. | 40·00 |
| சாலைகள் .. .. .. | .. | .. | .. | 3·50 | .. | .. | .. | 3·50 | 3·50 |
| ஆக்கப்பணிகள் பரப்புதல் .. .. | .. | .. | .. | .. | 0·14 | .. | 0·14 | .. | 0·14 |
| தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பரிசுகள். | .. | .. | .. | .. | 0·20 | .. | 0·20 | .. | 0·20 |
| துப்புரவான குடியிருப்புகளுக்கு பரிசுகள் .. | .. | .. | .. | .. | 0·30 | .. | 0·30 | .. | 0·30 |
| சுது தாப நிலையங்கள் .. .. | .. | .. | .. | .. | 2·10 | .. | 2·10 | .. | 2·10 |
| முன்மாதிரி கிராமம் .. | .. | .. | .. | 1·00 | .. | .. | .. | 1·00 | 1·00 |
| பயலகை .. .. | .. | .. | .. | .. | .. | 0·03 | .. | 0·03 | 0·03 |
| கலப்புத் திருமணங்கள் .. | .. | .. | 0·35 | .. | .. | .. | 0·35 | .. | 0·35 |
| 5. சு. வீ. ஏனைய திட்டங்கள்—மொத்தம். | 10·00 | .. | 40·41 | 11·26 | 61·25 | 0·37 | 111·66 | 11·63 | 123·29 |
| ஆக மொத்தம் .. .. | 58·69 | 2·97 | 188·80 | 26·68 | 437·06 | 16·66 | 684·55 | 46·31 | 866·88 |

| | |
|---|---|
| வருவாய்க் கணக்கில் .. .. | ரூ. 841·23 |
| † மூலதனக் கணக்கில் .. .. | ரூ. 8·00 |
| * கடன் கணக்கில் .. .. .. | ரூ. 17·65 |
| ஆக மொத்தம் .. .. | ரூ. 866·88 |

| [redacted] மாவட்டமும். | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவியர்கள். | மொத்தம். | நடுநிலைப் பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவியர்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. .. | 4 | 2,042 | 1,918 | 3,960 | .. | .. | .. | .. |
| 2 செங்கல்பட்டு .. .. | 100 | 7,910 | 7,959 | 15,869 | 16 | 3,529 | 2,043 | 5,572 |
| 3 தென் ஆற்காடு .. | 168 | 8,912 | 7,307 | 16,219 | 6 | 937 | 652 | 1,589 |
| 4 வட ஆற்காடு .. .. | 151 | 9,798 | 8,908 | 18,706 | 4 | 1,078 | 863 | 1,941 |
| 5 தஞ்சாவூர் .. .. | 146 | 7,774 | 6,440 | 14,214 | 6 | 891 | 909 | 1,800 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 108 | 6,376 | 6,638 | 13,014 | 25 | 4,492 | 3,831 | 8,323 |
| 7 இராமநாதபுரம் .. | 13 | 833 | 696 | 1,529 | 3 | 519 | 366 | 885 |
| 8 மதுரை .. .. | 11 | 901 | 293 | 1,194 | 8 | 1,673 | 626 | 2,299 |
| 9 சேலம் .. .. | 7 | 464 | 386 | 850 | 3 | 648 | 515 | 1,163 |
| 10 தர்மபுரி .. .. | 3 | 172 | 167 | 339 | 2 | 357 | 266 | 623 |
| 11 கோயம்புத்தூர் .. | 71 | 781 | 582 | 1,363 | 3 | 420 | 430 | 850 |
| 12 நீலகிரி .. .. | | 114 | 95 | 209 | 1 | 212 | 144 | 356 |
| 13 திருநெல்வேலி .. | 1 | 891 | 815 | 1,706 | .. | .. | .. | .. |
| 14 கன்னியாகுமரி .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 745 | 46,968 | 42,204 | 89,172 | 77 | 14,756 | 10,645 | 25,401 |



| | உயர்நிலைப்பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவியர்கள். | மொத்தம். | மொத்தம். பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள். | மாணவியர்கள். | மொத்தம். | கட்டடங்கள். வாடகைக் கட்டடங்களில் உள்ளவை. | அரசாங்க கட்டடங்களில் உள்ளவை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) | (18) | (19) |
| (1) | 1 | 717 | 508 | 1,225 | 5 | 2,759 | 2,426 | 5,185 | 2 | 3 |
| (2) | 2 | 1,687 | 949 | 2,636 | 118 | 13,126 | 10,951 | 24,077 | .. | 118 |
| (3) | 4 | 1,706 | 1,024 | 2,732 | 178 | 11,557 | 8,983 | 20,540 | 15 | 163 |
| (4) | .. | .. | .. | .. | 155 | 10,876 | 9,771 | 20,647 | 11 | 144 |
| (5) | 2 | 231 | 159 | 390 | 154 | 8,896 | 7,508 | 16,404 | 53 | 101 |
| (6) | 2 | 160 | 56 | 216 | 135 | 11,028 | 10,525 | 21,553 | 41 | 94 |
| (7) | .. | .. | .. | .. | 16 | 1,352 | 1,062 | 2,414 | .. | 16 |
| (8) | .. | .. | .. | .. | 19 | 2,574 | 919 | 3,493 | 2 | 17 |
| (9) | .. | .. | .. | .. | 10 | 1,112 | 901 | 2,013 | .. | 10 |
| (10) | .. | .. | .. | .. | 5 | 529 | 433 | 962 | .. | 5 |
| (11) | .. | .. | .. | .. | 17 | 1,201 | 1,012 | 2,213 | .. | 17 |
| (12) | .. | .. | .. | .. | 4 | 326 | 239 | 565 | 4 | .. |
| (13) | .. | .. | .. | .. | 17 | 891 | 815 | 1,706 | 2 | 15 |
| (14) | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| மொத்தம் | 11 | 4,503 | 2,696 | 7,199 | 833* | 66,227 | 55,545 | 1,21,772 | 130 | 703 |

833 அரிசன நலப்பள்ளிகளைத் தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 இரவுப் பள்ளிகளும், 1 இணைப்பள்ளியும் அரிசனங்களுக்காக நடத்தப்படுகின்றன.

## விவரப்பட்டி 3.

அரிசன நலத்துறை.

### மலைவாசி மாணவ மாணவியாகளுக்கான பள்ளிகள்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | உறைவிடப் பள்ளிகள் — ஆரம்பப் பள்ளி. பள்ளிகளின் எண்ணிக்கை. | பயில்வோரின் எண்ணிக்கை. | உயர்தர ஆரம்பப்பள்ளி. பள்ளிகளின் எண்ணிக்கை. | பயில்வோரின் எண்ணிக்கை. | உயர்நிலைப்பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | பயில்வோரின் எண்ணிக்கை. | உறைவிட வசதி இல்லாத பள்ளிகள். பள்ளிகளின் எண்ணிக்கை. | பயில்வோரின் எண்ணிக்கை. | மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை. | மொத்தப் பயில்வோரின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 செங்கல்பட்டு .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 2 கோயம்புத்தூர் .. | 18 | 823 | .. | .. | .. | .. | .. | .. | 18 | 823 |
| 3 கன்னியாகுமரி .. | 1 | 60 | 1 | 75 | .. | .. | 1 | 100 | 3 | 235 |
| 4 மதுரை .. | 1 | 40 | 1 | 40 | .. | .. | 2 | 85 | 4 | 165 |
| 5 வட ஆற்காடு .. | 2 | 100 | | .. | .. | .. | .. | .. | 2 | 100 |
| 6 இராமநாதபுரம் . | 1 | 20 | .. | .. | .. | . | .. | .. | 1 | 20 |
| 7 சேலம் .. | 9 | 536 | .. | .. | .. | 120 | .. | .. | 10 | 656 |
| 8 தென் ஆர்க்காடு .. | 2 | 275 | .. | .. | . | | .. | .. | 2 | 275 |
| 9 நீலகிரி .. . | 20 | 1,110 | 2 | 201 | .. | .. | .. | .. | 22 | 1,311 |
| 10 திருச்சி .. .. | 9 | 380 | .. | .. | .. | .. | 1 | 90 | 10 | 470 |
| 11 திருநெல்வேலி .. | 1 | 66 | .. | .. | .. | .. | .. | .. | 1 | 66 |
| மொத்தம் .. | 64 | 3,410 | 4 | 316 | 1 | 120 | 4* | 275 | 73 | 4,121 |

* உறைவிட வசதியில்லாத பள்ளிகள்.

1 கன்னியாகுமரி .. .. .. பத்துக்காணி.

2 திருச்சிராப்பள்ளி .. .. .. மலையாளப்பட்டி.

3 மதுரை .. .. .. மஞ்சப்பரப்பு.

4 மதுரை .. .. .. .. நல்லூர்காடு வளவு.

# விவரப்பட்டி 4.

அரிசன நலத்துறை.

## அரிசன மாணாக்கர் இல்லங்கள்.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | உயர்நிலைப் பள்ளிகளுக்கான விடுதிகள். மாணவர்களுக்கானவை. விடுதிகளின் எண்ணிக்கை | உயர்நிலைப் பள்ளிகளுக்கான விடுதிகள். மாணவர்களுக்கானவை. மாணவர்களின் எண்ணிக்கை. | உயர்நிலைப் பள்ளிகளுக்கான விடுதிகள். மாணவியர்களுக்கானவை. விடுதிகளின் எண்ணிக்கை. | உயர்நிலைப் பள்ளிகளுக்கான விடுதிகள். மாணவியர்களுக்கானவை. மாணவியரின் எண்ணிக்கை. | கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள். மாணவர்களுக்கானவை. விடுதிகளின் எண்ணிக்கை. | கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள். மாணவர்களுக்கானவை. மாணவர்களின் எண்ணிக்கை. | கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள். மாணவியர்களுக்கானவை. விடுதிகளின் எண்ணிக்கை. | கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள். மாணவியர்களுக்கானவை. மாணவியரின் எண்ணிக்கை. | தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான விடுதிகள். விடுதிகளின் எண்ணிக்கை. | தொழிற்பயிற்சி மாணவர்களுக்கான விடுதிகள். மாணவர்களின் எண்ணிக்கை. | ஆக மொத்தம். விடுதிகளின் எண்ணிக்கை. | ஆக மொத்தம். மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1 சென்னை .. | 3 | 270 | 4 | 345 | 2 | 600 | 1 | 30 | 2 | 225 | 12 | 1,470 |
| 2 செங்கற்பட்டு .. | 29 | 1,632 | 10 | 407 | .. | .. | .. | .. | .. | .. | 39 | 2,039 |
| 3 வட ஆற்காடு .. | 16 | 1,031 | 10 | 517 | .. | .. | .. | .. | .. | .. | 26 | 1,548 |
| 4 தென் ஆற்காடு | 32 | 2,556 | 13 | 975 | .. | .. | .. | .. | .. | .. | 45 | 3,531 |
| 5 தஞ்சாவூர் .. | 29 | 1,331 | 13 | 620 | 1 | 50 | .. | .. | .. | .. | 43 | 2,001 |
| 6 திருச்சிராப்பள்ளி | 40 | 3,711 | 11 | 899 | 1 | 125 | .. | .. | 1 | 55 | 53 | 4,790 |
| 7 மதுரை .. | 34 | 2,420 | 18 | 1,275 | .. | .. | .. | .. | 2 | 118 | 54 | 3,813 |
| 8 இராமநாதபுரம் | 46 | 3,165 | 12 | 797 | .. | .. | .. | .. | .. | .. | 58 | 3,962 |
| 9 திருநெல்வேலி | 35 | 2,027 | 19 | 845 | 2 | 80 | .. | .. | .. | .. | 56 | 2,952 |
| 10 கன்னியாகுமரி | 4 | 225 | 3 | 125 | 1 | 30 | .. | .. | 1 | 40 | 9 | 420 |
| 11 சேலம் .. | 22 | 1,054 | 10 | 472 | 2 | 170 | 1 | 50 | .. | .. | 35 | 1,746 |
| 12 தர்மபுரி .. | 14 | 545 | 4 | 140 | 1 | 100 | .. | .. | .. | .. | 19 | 785 |
| 13 கோயம்புத்தூர் | 15 | 1,004 | 10 | 501 | 1 | 50 | .. | .. | 1 | 40 | 27 | 1,595 |
| 14 நீலகிரி .. | 9 | 560 | 3 | 245 | .. | .. | .. | .. | .. | .. | 12 | 805 |
| மொத்தம் | 328 | 21,531 | 140 | 8,163 | 11 | 1,205 | 2 | 80 | 7 | 478 | 488 | 29,457 |

## விவரப்பட்டி 5.

அரிசன நலத்துறை.

### மலைவாசி மாணவ மாணவியர்களுக்கான விடுதிகள்.

| மாவட்டம். | உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான விடுதிகள். | | | | ஏனைய விடுதிகள். | | | | மொத்தம். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர்கள். | | மாணவியர்கள். | | மாணவர்கள். | | மாணவியர்கள். | | | | | |
| | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவியர்களின் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவியர்களின் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர்கள். | மாணவியர்கள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1 வட ஆற்காடு .. | .. | .. | .. | .. | 2 | 75 | .. | .. | 2 | 75 | .. | 75 |
| 2 செங்கல்பட்டு .. | .. | .. | .. | .. | 1 | 50 | .. | .. | 1 | 50 | .. | 50 |
| 3 கோயம்புத்தூர் .. | .. | .. | .. | .. | 2 | 115 | .. | .. | 2 | 115 | .. | 115 |
| 4 மதுரை .. | .. | .. | .. | .. | 2 | 110 | .. | .. | 2 | 110 | .. | 110 |
| 5 திருச்சி .. | 1 | 50 | 1 | 35 | .. | .. | 1 | 30 | 3 | 115 | .. | 115 |
| 6 சேலம் .. | .. | .. | 1 | 50 | 1 | 40 | 1 | 25 | 3 | 40 | 75 | 115 |
| 7 கன்னியாகுமரி . | .. | .. | .. | .. | .. | .. | 1 | 40 | 1 | .. | 40 | 40 |
| மொத்தம் .. | 1 | 50 | 2 | 85 | 8 | 390 | 3 | 95 | 14 | 505 | 115 | 620 |



## விவரப் பட்டி 6.

அரிசன நலத்துறை.

### இல்லக் கட்டடங்கள்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | அரிசனங்களுக்கான விடுதிகள். | | | | மலைவாசியினருக்கான விடுதிகள். | |
|---|---|---|---|---|---|---|
| | வாடகை கட்டடத்தில் உள்ளவை. | | அரசாங்க கட்டடத்தில் உள்ளவை. | | | |
| | மாணவர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவியர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவியர்களுக்கான விடுதிகளின் எண்ணிக்கை. | வாடகை கட்டடத்தில் உள்ளவை. | அரசாங்கக் கட்டடத்தில் உள்ளவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 சென்னை .. .. .. | 4 | 5 | 3 | .. | .. | .. |
| 2 செங்கற்பட்டு .. .. | 25 | 10 | 4 | .. | 1 | .. |
| 3 வட ஆற்காடு .. .. | 14 | 9 | 2 | 1 | 1 | 1 |
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல்வேறு பகுதிகளில் உள்ளவர்கள் நெல்லித்துறைத் திட்டம் தங்கள் பகுதிகளில் செயல்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இப்போது சேர்க்கப்பட் டுள்ள ஊர்கள், கோவை நகராட்சி, சிங்கநல்லூர் நகராட்சி, பெரிய நாய்க்கன்பாளையம், நரசிம்மநாயக்கன்பாளையம், துடியலூர், வெள்ளக்கிணறு, கணபதி, சங்கனூர், சூலூர், இருகூர், பல்லடம், சோமனூர், கவுண்டன்பாளையம். இவை இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஊர்களின் பெயர்களாகும்.

திரு. சு. துரைசாமி : முதல் அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் சில ஊர்களை மட்டும் இங்கு குறிப்பிட்டார்கள். இப்போது திருப்பூரை எடுத்துக்கொண்டால் 1,75,000 மக்கள் இருக்கிறார்கள். ஆனால் அங்குள்ள குடிநீர்த் திட்டம் 80,000 மக்கள்தான் 1971-ல் இருக்கக்கூடும் என்ற கணக்கின் அடிப்படையில் அமைக்கப்பட்ட திட்டமாகும். எனவே திருப்பூரையும் இந்த நெல்லித்துறை திட்டத் தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கப்பட்டு குடிநீர் வாரியமும் இதை ஏற்றிருப்பதாக அறிகிறேன். அப்படி வளர்ச்சி பெற்று வருகிற நகரத்திற்குப் பல்லடத்திலிருந்து கொண்டு வர வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அதையும் சேர்ப்பதற்கு இயலுமா?



1972 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நிதி அளவு, நீர் அளவு இவையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும்.

திரு. என். மருதாசலம் : நெல்லித்துறைத் திட்டம் விவசாயி களுக்குப் பயன்படும்படிக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிநீருக்குத் தேவையான அளவிற்குத் தண்ணீர் கொடுப்பதற்கு எல்லாப் பகுதிகளுக்கும் இயலாத சூழ்நிலையில் விவசாயத்தைப் பற்றி யோசிப்பது கடின மானது.

## தீ அணைப்பு நிலையங்கள்.

*595 வினா.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஒவ்வொரு தாலூகா தலைநகரிலும் தீ அணைப்பு நிலையங் கள் Fire stations ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சமீபத்தில் ஃபையர் சர்வீஸ் தனி இலாகாவாகப் பிரிக்கப்பட்டு வட மாவட்டங்களுக்கு ஒரு பகுதியும், தென் மாவட்டங்களுக்கு ஒரு பகுதியும் வந்து, பல இடங்களிலும் இம்மாதிரி தங்கள் ஊர்களிலும் ஃபையர் சர்வீஸ் ஸ்டேஷன்ஸ் வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு புதிதாக எந்தெந்த இடங்களில் திறப்பதற்கு ஆலோசனை இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971–72-ல் உத்தரவிடப்பட்டுள்ள இடங்கள் மணலி, கள்ளக்குறிச்சி, ஜெயங்கொண்டசோழபுரம். 1972–73-ல் உத்தமபாளையம், கோவில்பட்டி, குழித்துறை, மேட்டூர் ஆகிய இடங்கள்.

திரு. நா. வீராசாமி : தாலூகா தலைநகரங்களில் தீ அணைப்பு நிலையங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டபோது இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ரெவின்யூ டிவிஷன் ஹெட்க்வார்ட்டேர்சில் இவை தேவையாக இருக்கின்றன. அங்கெல்லாம் ஒவ்வொரு தீ அணைக்கும் அலுவலகம் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. பல தாலூகா தலைநகரங்கள் ரெவின்யூ டிவிஷன் ஹெட்க்வார்ட்டேர்சுக்குள் வருவதில்லை. எனவே தாலூகா தலைநகரங்களுக்கு இல்லை என்று சொன்னாலும் பெரிய நகரமன்றத் தலைநகரங்களிலாவது இப்படிப்பட்ட தீ அணைக்கும் அலுவலகங்கள் வைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல்வேறு இடங்களிலும் தீ அணைக்கும் நிலையங்கள் வைக்கவேண்டும் என்றுதான் அரசு ஆர்வத்துடன் இருக்கிறது. ஆனால் செலவினங்களைப் பார்க்கும் போதுதான் அது கஷ்டமாகயிருக்கிறது. இப்போதே ஒரு தீ அணைக்கும் நிலையத்திற்கு தொடரா இனச் செலவாக ஏறத்தாழ 2,15,000 ரூபாயும், தொடர் இனச் செலவாக ஆண்டு ஒன்றுக்கு 1,23,000 ரூபாயும் செலவாகிறது. இவற்றையெல்லாம் மனதில் வைத்துத்தான் படிப்படையாக ஆண்டுதோறும் நான்கு இடங்கள் அல்லது ஐந்து இடங்கள் என்றளவில் இவைகளை அமைக்க முடிகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : முதல் அமைச்சர் அவர்கள் தாலூகா தலைநகரங்களில் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை என்று சொன்னார்கள். போளூரைப் பொறுத்தவரையில் அங்கு ஏற்படுகிற தீ விபத்துக்களுக்கு உதவி கோரவேண்டுமென்றால் வேலூர் அல்லது திருவண்ணாமலையில் இருந்து வரவேண்டியிருக்கிறது. எனவே அந்தப் பகுதி ஊராட்சிமன்றங்கள் மூலம் அரசுக்குக் கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கோரிக்கைகள் அனுப்பியது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்





அவர்கள் சொன்னதுபோல் தமிழ் நாட்டில் இப்போது 58 நகரங்களில் இந்தத் தீ அணைப்பு நிலையங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பரவலாக வைக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணுகிறது என்றாலும், நிதிநிலைமை இடம் தராத காரணத்தினால் ஆண்டுதோறும் படிப்படியாக இந்த நிலையங்கள் திறக்கப்படும் என்று கூறினேன்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : நான்கு மாதங்களுக்கு முன்பு எங்கள் ஏரியாவில் முக்கூடலில் ஒரு மாபெரும் தீ விபத்து ஏற்பட்டு கிட்டத்தட்ட முப்பது லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் தீயினால் பாதிக்கப்பட்டது. அந்தமாதிரி பீடிக் கம்பெனிகள் அந்த ஏரியாவில் அதிகமாக இருப்பதால் அம்பாசமுத்திரம் தாலூகாவில் உடனடியாக ஒரு தீ அணைப்பு நிலையம் அமைத்துத் தருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கனவே பல்வேறு கேள்விகளுக்கு இதைப்பற்றி சொன்ன பதிலைத்தான் இதற்கும் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

## பாரதியாரின் பிறந்த நாள்.

*596 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த தினத்தை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) அத்தகைய செயற்குறிப்பு யாதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா : நம் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தேசீயக் கவி சுப்பிரமணிய பாரதியார் போன்று நம் தமிழகத்தில் நிறையப் பேர்கள் தேச விடுதலைக்காகப் போராடியிருக்கிறார்கள். ஆனால் இதில் சுப்பிரமணிய பாரதியார் மிக முக்கியமானவர். ஆகவே இவருக்காவது அரசாங்கம் விடுமுறை விடும்

[1972 மார்ச் 21

உத்தேசம் இப்போது இல்லை என்றாலும் இனிமேலாவது அதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுவாக தேசியத் தலைவர்களின் பிறந்த நாட்கள் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட வில்லை. இப்போதே இருபது நாட்கள் விடுமுறை நாட்களாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். சுப்பிரமணிய பாரதியார் போன்று முக்கியத்துவம் படைத்தவர்கள் பலர் தமிழ்நாட்டில் இருக்கக்கூடும். ஒவ்வொருவருக்கும் நாம் இதுபோன்று விடுமுறை விடுவோமானால் பிறகு வேலை செய்வதற்கு நாட்களை நாம் தேட வேண்டிய நிலைக்கு ஆளாகிவிடுவோம்.

திரு. கோவை செழியன் : உலகத்திலேயே தலைசிறந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிறந்த கவிதைகளை இயற்றி தமிழ் நாட்டின் பெருமையை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அவருடைய நூல்களை எல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அரசாங்கமே அனைத்து உலகத்திற்கும் அறிவிப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி விடுமுறை பற்றியது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பாரதியார் நம்முடைய அகில இந்தியாவுக்கும் ஒரு விடுதலைப் போராட்டம் நடத்தியவர். ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் சொல்லியாவது இது போன்ற விடுமுறை விடுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தியாவிற்கே தேசிய கீதம் அளித்த தாகூருக்குக் கூட விடுமுறை நாள் அனுஷ்டிக்கப் படுவது இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அரசியல் தலைவர்கள் யார் யார் பிறந்த தின விழாவுக்கு அரசு விடுமுறை விட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசியல் தலைவராக சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று சொன்னால் மகாத்மா காந்தி அவர்களுடைய பெயரைச் சொல்லலாம். ஆனால், அவர்களை அரசியல் தலைவருக்கு அப்பாற்பட்டு தேசத்தந்தையாகக் கருது கிறோம்.



1972 மார்ச் 21]

திரு. எம். தேவராசன் : பேரவைத் தலைவரவர்களே, பாரதியார் பிறந்த தின விழாவை ஆண்டுதோறும் எட்டையபுரத்தில் தனிப்பட்ட கட்சிக்காரர்கள் நடத்துவதைவிட, அரசே அந்த விழாவை நடத்தினால் சிறப்பாக இருக்கும். இதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை எந்தக் கட்சிக்காரர் களும் தனியாக நடத்தவில்லை. விழாக்குழுவினர் தான் நடத்து கிறார்கள். வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினரும் கூட, அப்படிப் பட்ட விழாக்குழு அமைத்து பாரதியார் விழா கொண்டாடலாம்.

திரு. சோ. கருணைநாதன் : தலைவரவர்களே, "தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார், வாயைத் திறந்து சும்மா, கிளியே, வந்தே மாதரம் என்பார்," என்று பாடிய பாரதியார் பிறந்த தினத்தில் எல்லோரும் அதிகாலையில் எழுந்து ஒரு மணிநேரம் அதிகமாக உழைக்க அரசு வேண்டுகோள் விடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் செயலில் அதைச் செய்து காட்டி, மற்றவர்களைப் பின் பற்றச் சொல்லலாம் அடுத்த ஆண்டில் (சிரிப்பு).

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, பாரதியாருக்கு ஏற்கனவே தபால் தலை வெளி வந்திருக்கிறது. மணி மண்டபமும் கட்டி இருக்கிறார்கள். செப்டம்பர் மாதத்தில் அவர் பிறந்த நாள் கொண்டாடுகிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த தினத்திலே அரசு வெளியிடுகிற தமிழரசு சஞ்சிகையிலே பாரதியாருடைய வாழ்க்கைக் குறிப்புகள், பாராட்டுப் பாடல்கள், அவர்களுடைய முக்கியமான கவிதைகள் முதலியவை வெளியிடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதே தமிழரசு இதழில் அவர்களுடைய படங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவர் களுடைய வாழ்க்கைக் குறிப்பு, அவர்களுடைய கவிதைகள், பாராட்டு பாடல்கள் இவைகளெல்லாம் வெளியிடப்படுகின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சார், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்த சுப்பிரமணிய பாரதியார் அவர்களுடைய பாட்டுப்புத்தகத்தை பள்ளிக்கூடங்களில் படிக்கக்கூடாது என்று தடை விதித்து இருந் தார்கள். அவர்களுடைய பாடல்களைப் படித்தால் புரட்சி எண்ணம் மாணவர்கள் மத்தியில் வரும் என்பதால் அப்படிச் செய்திருந்தார்கள்.

இந்தச் சர்க்கார் அதை மாற்றி வருஷத்திற்கு ஒரு நாளிலாவது—விடுமுறை என்று விடாவிட்டாலும்—அதை ஒரு விழா நாளாக தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாட வழிசெய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் பாரதியார் நாளை மாணவர்கள் கொண்டாடிக் கொண்டு வருகிறார்கள். பாரதியார் பாடல்களுக்குக் காங்கிரஸ் ஆட்சியில் தடை விதித்திருந்தாகத் தகவல் எதுவும் எனக்கில்லை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பெரியவர் ஒருவரின் நினைவு நாளைக்கொண்டாடுகிறபோது, பிறந்த நாளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா, இறந்த நாளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தப் பெரியவரைப் பொறுத்து, சிலருக்கு பிறந்த நாளும், சிலருக்கு பிறந்த நாள், மறைந்த நாள், இரண்டுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

## கோயம்புத்தூரில் ஆயுதங்கள் கைப்பற்றல்

*597 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில் கோயம்புத்தூரில் சட்டவிரோதமாக இயங்கி வந்த ரகசிய ஆயுதத் தொழிற்சாலை ஒன்று கண்டுப்பிடிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அத்தொழிற்சாலையை நடத்தி வந்தவர்களுக்கும் நக்ஸல்பாரிகளுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். கோவை நகரில் தனியார் வீடு ஒன்றை 17—8—1971-ல் காவலர் சோதனையிட்டுச் சில ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

(இ) இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டனவா? எவரேனும் கைது செய்யப்பட்டு, வழக்கு தொடரப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



## *Rent Collectors in Madras Corporation*

*598 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(a) whether posts of Rent Collectors were filled in the Madras Corporation during 1971;

(b) the method adopted for making the selection;

(c) whether (1) the Employment Exchange and (2) Public Service Commission were consulted; and

(d) the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1971-ல் இரண்டு ஏவலர்கள், வாடகை வசூலிப்போராக நியமிக்கப் பட்டுள்ளனர். வாடகை வசூலிப்போர் பதவிகளுக்கான விண்ணப் பங்கள் அனுப்புப்படலாம் என 1971 செப்டம்பரில் நாளிதழ்களில் மாநகராட்சிப் பொறுப்பதிகாரியால் விளம்பரம் வெளியிடப் பட்டது. அதையடுத்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் அவரால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

(இ) பதவிகள் காலி இருப்பது குறித்து நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டு உரிய தகுதிகளைப் பெற்றவர்களிலிருந்து பொருத்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(உ) இல்லை.

(எ) 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் விதித் துறைகளின்படி, சம்பளம் அல்லது அதிக அளவுச் சம்பளம் ரூ. 100-க்கு மேற்படுகின்ற III, IV- ஆம், வகுப்புப் பதவிகள் அனைத்திற்கும், நியமனக் குழுவினால் ஏற்பளிக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் பட்டியலிலிருந்து மாநகராட்சி பொறுப்பதிகாரி நியமனம் செய்கிறார். அவர், விண்ணப்பதாரர் பட்டியலில் உள்ள விருப்ப வரிசை முறைப்படி அவர்களை நியமனம் செய்கிறார்.

திரு. என். டென்னிஸ் : எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சை கன்சல்ட் செய்து நியமனம் நடத்த வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சி மன்றத்தில் தனி நியமனக்குழு இருக்கிறது. அந்த நியமனக்குழு விண்ணப்பங்களைப் பெற்று, பரிசீலித்து, நியமித்து வருகிறது. வேலை வாய்ப்புத் துறையினர் அவர்களை கலந்தாலோசிக்க வேண்டும்.

[1972 மார்ச் 21

## ஊர்நல உதவியாளர்கள் நியமனம்

* 599 வினு.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் கிராம நல ஊழியர்கள் எந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுகின்றனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களில் 2-ம் நிலை ஊர் நல உதவியாளர் பதவிகள் குறித்து பொது மக்களுக்கு விரிவாக விளம்பரம் செய்த பிறகு, வெளிச் சந்தையிலிருந்து ஆளெடுப்பதன் மூலமாக இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். 2-ம் நிலை ஊர் நல உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதன் மூலமாக 1-ம் நிலை ஊர் நல உதவியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரியும் கிராம நல ஊழியர்கள், சமூக நல ஊழியர்கள், சோஷியல் ஒர்கர்ஸ் என்று இருப்பவர்களைப் பொறுத்த வரையில் முன்பு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் போராட்டங்கள் நடந்தபோது அதில் ஈடுபட்டவர்களுக்குத்தான் சலுகை அளித்து நியமனம் கொடுக்கப்பட்டது. அம்மாதிரி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு, இப்போது வேலையில்லாமல் இருக்கும் தொண்டர்களுக்கும் முதலிடம் தரப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நியமனம் பெறுவதற்கு அப்படிப்பட்ட தகுதிகள் இருக்கவேண்டுமென்று வரையறுக்கப்படவில்லை. அப்படிப்பட்ட போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் பலபேர் இருக்கலாம். இதற்கு என்று தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டு, குழு அமைக்கப்பட்டு, அந்த வகையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களில் அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களும் இருக்கலாம். வேறு பல போராட்டங்களில் ஈடுபட்டவர்களும் இருக்கலாம். எல்லோரும் தகுதியின் அடிப்படையில் தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களில் பணியாற்றும் கிராம சேவக்குகள், சேவகிகள் ஆகியவர்களால் எந்தவிதமான பயனும் கிடையாது. அரசாங்கத்திற்கு பண விரயம்தான் ஆகிறது. ஆகவே, அந்தப் பதவிகளை இந்த அரசாங்கம் ஒழிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1972 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற முறையை மாற்றியமைப்பதற்காக நிர்வாகச் சீர்திருத்தக்குழு ஆராய்ந்து வருகிறார்கள். நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை வெளிவந்த பிறகு, அவர்கள் என்ன பரிந்துரைகள் செய்கிறார்கள் என்பதைப் பார்த்து, இது செய்யப்படும்.

## நகராட்சிகளை மாநகராட்சியாக உயர்த்தல்

*600 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கு வேண்டிய தகுதிகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கு வேண்டிய தகுதிகள் குறித்து விதிகள் எதுவுமில்லை. ஒரு நகராட்சியின் மக்கட்தொகை சுமார் ஐந்து இலட்சத்திற்குக் குறையாமலும், அதன் வருமானம் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் இருந்தாலும், அதன் மக்கள் மாநகராட்சியாக மாற்றும்படி விரும்பினால், அந்நகராட்சி மாநகராட்சியாக மாறும் தகுதியைப் பெற்றுவிட்டதாகக் கருதலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சி பகுதியில் திருவரம்பூர், திருவானைக்கோவில் போன்ற ஊர்களையும் இணைத்து மாநகராட்சியாக்கவேண்டுமென்று அந்தப் பகுதி பொது மக்கள் நீண்டகாலமாகச் சொல்லி வருகிறார்கள். ஆகவே பல தகுதிகளைப் பெற்று இருக்கிற திருச்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டபடி ஒரு நகராட்சி 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களைக்கொண்டதாகவும், 2 கோடி வருமானத்தைப் பெறுவதற்குரிய வகையிலும், மற்றும் பல்வேறு வசதி வாய்ப்புகள் பெறுவதற்குரிய அளவிலும், அதிகாரிகள் அதிகமாக நியமனம் செய்தால் அதைத் தாங்கிக்கொள்கிற வகையிலும் இருக்கவேண்டும். மாநகராட்சியாக மாற்றவேண்டுமென்பதற்காக திருச்சி நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை இணைத்துக்கொண்டால், அந்த மாநகராட்சி நல்ல விரிவான, வலுவான தன்மை பெறமுடியாது.

1972 மார்ச் 21]

இப்போது மதுரை நகரை மாநகராட்சியாக மாற்றினோம் என்றால், அந்த நகரம் 5½ இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களையும், 2 கோடி வருமானத்தையும் பெறத் தக்க அளவுக்கு நிலையை அடைந்திருந்தது. அதே அளவுக்கு திருச்சி வரும் சூழ்நிலையில் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகராட்சியில் வருமானம் இருக்கிறது. மக்கள் தொகையும் ஏறத்தாழ இருப்பதன் பயனாக, கோவை நகராட்சி மன்றத்தில் அதை மாநகராட்சியாக மாற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, கோவை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றும் நோக்கம் அரசாங்கத்திற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றி தகவல் இல்லை. அப்படி ஒரு தீர்மானம் வந்திருக்குமானால் அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யும். அதற்கான நிபந்தனைகளுக்குட்பட்டு அமையுமானால் அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(ஒரு உறுப்பினர் அவைக்குள்ளிருந்துகொண்டே பக்கத்திலுள்ள அதிகாரிகள் இருப்பிடத்திலுள்ள ஒரு அதிகாரியிடம் பேசிக்கொண்டு இருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் சட்ட மன்றத்திற்குள் இருந்துகொண்டு அதிகாரிகளோடோ, மற்றவர்களோடோ பேசுவது முறையானது அல்ல. அது தவிர்க்கப்படவேண்டும்.

## கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்

* 601 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள Directorate of Rural Development. அலுவலகத்திற்கு வாடகை ஏதேனும் தரப்படுகிறதா?

(இ) ஆம் எனில், மாதம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.



1972 மார்ச் 21]

(இ) மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூபாய் 12,480 தரப்படுகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் துறைக்காக ஒரு தனி இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே ஒரு கட்டடத்தைக் கட்டி, வாடகை இல்லாமல் இருப்பது பற்றி பரிசீலனையில் இருந்ததே. அது தற்போது எந்த நிலையில் உள்ளது? இனிமேலாகிலும் தனிக் கட்டடம் கட்டப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கான முயற்சி எதுவுமில்லை. தனி இடத்தில் கட்டடம் கட்டுவதற்கு பெரிய செலவு ஏற்படும். அப்படி செலவு ஏற்பட்டால், வாடகை இல்லாமல் வைப்பதற்கான முயற்சியில் ஈடுபடலாம். இப்பொழுது கொடுக்கப்படுகின்ற வாடகை ஓரளவுக்கு மற்ற துறைகளில் கொடுக்கப்படுவதை விட குறைந்து இருக்கிறது. சொந்த அலுவலகம் ஏற்பட்டால், வாடகை இல்லாத சூழ்நிலை ஏற்படும். அதுபற்றி நிதிவசதி ஏற்படும்பொழுது கவனிக்கப்படும்.

## அரசுக் கல்லூரிகளுக்கானத் தேர்வுக் குழுக்கள்.

*602 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கக் கல்லூரிகளில் மாணவர்களைப் பொறுக்குவதற்கான தேர்வுக்குழுவில் அக்கல்லூரிகளில் பணிபுரியும் அரிசன ஆசிரியர்கள் உறுப்பினராக தற்போது சேர்க்கப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், எந்தெந்த அரசாங்கக் கல்லூரிகளில் உறுப்பினராக இருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) அரசர் கல்லூரி, புதுக்கோட்டை.
அரசினர் கலைக்கல்லூரி, விருத்தாசலம்.
கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக்கல்லூரி, திருவாரூர்.
அரசினர் பயிற்சிக் கல்லூரி, ஒரத்தநாடு.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள சட்டக்கல்லூரியில் மாணவர்களைப் பொறுக்குவதற்கான தேர்வுக்

குழுவில் அரிசன ஆசிரியர் யாராவது உறுப்பினர்களாக இருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக முதல்வர், அதற்கு அடுத்து இருக்கிற சீனியர் ப்ரொபசர், அடுத்து இருக்கிற அசிஸ்டெண்டு ப்ரொபசர் என்ற நிலைமையை ஒட்டி குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்ட மக்கள் வருவார்களேயானால், அவர்களும் உறுதியாக இடம் பெறுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்படி பிற்பட்ட மக்களை தேர்வு செய்வதற்கு அவர்களை நான்-அபிஷியல் மெம்பராகவாவது அந்தக் கமிட்டியில் சேர்த்துக்கொள்வதற்கு வழிவகைகள் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களைச் சேர்ப்பது என்றால், அப்படிப்பட்ட ஒருவர் அந்தக் குழுவில் இருந்தால் தான் அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்ற நிலையில் இல்லை. ஏனென்றால், நாம் அதற்கான விதிமுறைகளை வைத்திருக்கிறோம். சாதாரணமாக 31 சதவிகிதம் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்த்துத் தான் தீரவேண்டும், 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்த்துத்தான் தீரவேண்டும். பொதுவாக, எல்லோரையும் சேர்த்துக் கணக்கிடும்பொழுது அதிலும் பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வரலாம். அதற்கும் மீறி 49 சதவிகிதம் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் எல்லாக் கல்லூரிகளிலும், எல்லா இடங்களிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட ஒருவர் இருந்தால் தான் அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று எண்ணுவதற்கு அவசியமில்லை. அதற்காக முறை வகுத்திருக்கிறோம். அந்த முறைப்படி நடைபெறுகிறது.

திரு. எம். தேவராசன் : அரசாங்கக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுக்களில் முன்பு சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றுவந்தார்களே, அந்த முறை எதற்காக நீக்கப்பட்டு விட்டது? மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுக்களில் இடம் பெறுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதிலே பல சங்கடங்கள் இருந்தன. இப்பொழுது இருக்கிற முறை மிகத் தெளிவாகவும், நன்றாகவும் இருக்கிறது. பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களும் சரியாக இருக்கிறது என்று கூறுகிற காரணத்தினால் அந்த முறையே நீடிக்கப்படும்.



திரு. ந. தர்மலிங்கம் : இதுவரையில் எந்தெந்த மாவட்டத்தில் எந்தெந்த கல்லூரிகளில் அரிசன உறுப்பினர்கள் இந்தக் கமிட்டியில் மெம்பர்களாக போடப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மூலக் கேள்வியே அதுதான். நான் அப்பொழுதே விடை கூறினேன். அரசினர் கல்லூரி, புதுக்கோட்டை, அரசினர் கலைக்கல்லூரி விருத்தாசலம், கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி, திருவாரூர், அரசினர் பயிற்சிக் கல்லூரி, ஒரத்தநாடு ஆகியவற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

*Government Arts College for women in North Madras*

* 603 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) the number of students studying in the Government Arts College for Women, North Madras at present;

(*b*) the number of students in each class;

(*c*) whether all the classes are provided with adequate benches for the students; and

(*d*) whether drinking water is available for the students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1668.

(ஆ) புகுமுக வகுப்பு—758 பேர்.

இளங்கலை—முதலாண்டு—181 பேர்.

இளங்கலை—இரண்டாம் ஆண்டு—144 பேர்.

இளங்கலை—மூன்றாம் ஆண்டு—81 பேர்.

இளங்கலை (விஞ்ஞானம்)—முதலாண்டு—214 பேர்.

இளங்கலை (விஞ்ஞானம்)—இரண்டாம் ஆண்டு—164 பேர்.

இளங்கலை (விஞ்ஞானம்)—மூன்றாம் ஆண்டு—126 பேர்.

(இ) அண்டு (உ) ஆம்.

[1972 மார்ச் 21

*Government Hospital at Chingleput.*

* 604 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the State Government have issued orders for opening additional Women and Children Wing in Government Hospital at Chingleput District; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அண்டு (இ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 6 லட்ச ரூபாய் செலவில் 100 படுக்கைகள் கொண்ட தாய் சேய் மருத்துவப் பகுதி ஒன்றைக் கட்டுவதற்காக, அரசு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. என். டென்னிஸ் : எப்பொழுது கட்டடம் ஆரம்பிக்கப் படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கட்டடம் கட்டுவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது. அதற்கான இடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது. விரைவில் கட்டத் துவங்குவார்கள்.

கண் மருத்துவ முகாம்கள்.

* 605 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நடமாடும் இலவசக் "கண் வைத்திய முகாம்களை" துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை கண் சிகிச்சை பிரிவினால் ஆண்டு ஒன்றுக்கு 24 இலவச கண் வைத்திய முகாம்களை செயல்படுத்த தேவையான ஆணையை அரசு பிறப்பித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இலவச கண் சிகிச்சை முகாமை இதர மாவட்டங்களுக்கும் விரிவு படுத்த உத்தேசம் உண்டா?



1972 மார்ச் 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மதுரையில் உள்ள எர்க்ஸ்கின் மருத்துவ மனையில் உள்ள கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவினரால் இது நடத்தப்படுகிறது என்பதைத் தவிர, மதுரை மாவட்டத்தில் மட்டுமின்றி தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அவர்களுடைய முகாமின் மூலம் கண் மருத்துவம் நடத்தி வருகிறார்கள்.

*Damage to fishing boats.*

* 606 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that 10 mechanised fishing boats were destroyed and 3 damaged as a result of incendiary materials thrown on them by some local fishermen on 18th October 1971 at Kanyakumari; and

(b) if so, the details thereof and the action taken thereon to book the offenders?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 18—10—1971 அன்று அதிகாலையில் சில நாட்டுப்படகுகள், வீரபாண்டியன் பட்டிணத்திற்கு அருகில் நங்கூரம் போட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சில விசைப்படகுகளை அணுகி அவற்றிற்குத் தீ இட்டன. பன்னிரெண்டு விசைப்படகுகள் முற்றிலும் எரிந்து சாம்பலாயின. மூன்று படகுகள் சேதமடைந்தன. மேற்சொன்ன இந்த நிகழ்ச்சி, திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் வட்டத்தைச் சேர்ந்த வீரபாண்டியன் பட்டிணத்திற்கு அருகில்தான் நடைபெற்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அல்ல. இந்த வழக்கைத் தனிக் காவலர் படைப்பிரிவு ஒன்று புலனாய்வு செய்து வருகிறது.

*Notices for Urban Land Tax.*

* 607 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether it is a fact that the Native Residents Association of Madras has urged the Government of Tamil Nadu during the last week of October, 1971 to serve demand notice for urban land tax in the same way as Corporation tax demands; and

(b) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) அப்படிப்பட்ட முறையீடு எதுவும் அரசுக்கு வரவில்லை.

(இ) வினா எழவில்லை.

DR. H. V. HANDE : Sir, in the matter of collection of Urban Land Tax, a number of complaints were received by me that the assessees were not given proper opportunity to go and explain before the Officers who summarily issue notices and the assessees do not have the opportunity. Will it be possible for the Government to see that these Officers give one or two chances as they do in the Income Tax Department where they do not assess suddenly unless they give full opportunity to the assessees? Will the Hon. Minister re-examine the Rules and make it more easy and more sympathetic for the assessees?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அசெஸ்மெண்டு போடுவதற்கு முன்பு அவர்கள் மனு கொடுப்பார்கள் அந்த மனுக்களைப் பரிசீலித்துத் தான் அலுவலர்கள் அதுபற்றி நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படி ஏதாவது சிக்கல் இருக்குமாயின், அங்கத்தினர் இதுபற்றித் தெரிவித்தால், அரசு பரிசீலிக்கும்.

DR. H. V. HANDE : Sir, they fix a particular date and on that date if the assessee fails to be present, immediately on the same day they will assess and issue notice. Will it be possible to give one or more chances to the assessees as is done in the Income-Tax and Sales Tax Department where they give more chances? Will the Hon. Minister contact the department and see what could be done in the matter?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் அவர்கள் சொன்ன சங்கடத்தை நான் உணர்கிறேன். அசெஸிகள் வருவதற்கு இல்லை என்றால், வர இயலாமல் இருப்பதற்கான காரணத்தை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். வர இயலவில்லை, இன்னொரு வாய்தா கொடுக்கவேண்டும் என்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். அது கூட இல்லையென்றால்தான் அலுவலர்கள் முடிவு எடுப்பார்கள். இருந்தாலும், சங்கடத்தைப் பற்றிப் பரிசீலிக்கச் சொல்லலாம்.



## இராஜபாளையம், விருதுநகர் துணை வட்டங்கள்.

* 608. வினா.—திரு. எஸ். அழகுத் தேவர் : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்திலுள்ள இராஜபாளையம், விருதுநகர் ஆகிய இரண்டு ரெவின்யூ துணை வட்டங்களை வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் இராசபாளையம், விருதுநகர் ஆகிய துணை வட்டங்களை வட்டங்களாக உயர்த்தும் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அதன்மேல் வருவாய் வாரியத்தின் குறிப்புரை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, துணை வட்டங்களை வட்டங்களாக மாற்றுவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணை வட்டங்களை வட்டங்களாக மாற்றுவதற்கு அதிலிருக்கிற ஜனத்தொகை, அதிலிருக்கிற வருவாய், இவைகளையெல்லாம் தகுதியாக வைத்துச் செய்கிறார்கள். மேற்கொண்டு சில தகவல்கள் அங்கிருந்து எதிர்ப்பார்க்கின்ற காரணத்தினால் தாமதமாகிறது. தகவல் வந்தவுடன் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இராஜபாளையம், விருதுநகர் துணை மாவட்டங்கள் அதிகமான பகுதியை உள்ளடக்கியிருப்பதால், விரைவிலே அவைகளை வட்டங்களாக மாற்றுவதற்கு அரசு முடிவு எடுக்குமா? எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வருவாய்த் துறை வாரியத்திலிருந்து சில குறிப்புகள் எதிர்ப்பார்க்கிறோம். அவைகள் கிடைத்தவுடன் அரசாங்கம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்கும்.

[1972 மார்ச் 21

திரு. த. சோனையா : தலைவரவர்களே, ஏற்கனவே மானாமதுரை தனி வட்டமாக இருந்து, இப்போது அது துணை வட்டமாக இருக்கிறது. அதை வட்டமாக்குவதற்குரிய எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். எனவே, அரசாங்கம் அதை தனி வட்டமாக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதற்குத் தனி கேள்வி போடவும்.

திரு. வீ. மலைக்கண்ணன் : தலைவரவர்களே, இளையாங்குடி இப்போது சப்–தாலூகாவாக இருக்கிறது. அதைத் தாலூகாவாக மாற்றும் அத்திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுபோன்ற அறிக்கை எதுவும் அரசாங்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் விசாரித்துப் பதில் சொல்லலாம்.

*Development of Coir Industry.*

* 609 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have drawn a Comprehensive Scheme for planned development of coir industry in the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) ஆம்.

(இ) ஊற வைக்காத தென்னை மட்டைகளிலிருந்து இயந்திரங்களால் நார் உறிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்த முன்வருவோர்களுக்கு நிலம் வாங்க, கட்டிடங்கள் கட்ட, இயந்திரங்கள் வாங்க, மேலும், மூலதனத்திற்காகவும் அரசு தொழில் உதவி கடன் சட்டத்தின்கீழ் கடன் வழங்கப்படும்.

உறிக்கப்பட்ட நார்களை கிடங்கில் சேமித்து வைத்து விற்க முன் வருவோர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு மைய கூட்டுறவு உதவிச் சங்கம் ஏற்படுத்த அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.



1972 மார்ச் 21]

Dr. H. V. HANDE : Sir, how many persons have so far applied for this facility. Also whether it is possible for the Government to examine the possibility of setting up this mill near or in the Thanjavur district where coconut is grown in abundance. Also whether it will be possible for the Government to develop this industry so as to compete with the Kerala State and export its products from our State to other States?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அந்த நல்ல யோசனையின் அடிப்படையிலேதான் தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டைப் பகுதியிலே இதை நிறுவி பரிசீலிக்கவேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. இதுவரை 16 பேர் மனு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. இறுதியாக முடிவுசெய்து, பைனலைஸ் செய்து பணம் கொடுக்கப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, கேரளாவில் இந்த கயர் தொழில் நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. தமிழ் நாட்டிலும் பல பகுதிகளில் இந்தத் தொழில் நல்லமுறையில் நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆகவே, இந்த ஆண்டிலாவது பல தொழிற்சாலைகளைத் தொடங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செ. மாதவன் : தலைவரவர்களே, இந்தத் தொழிலை அரசாங்கம் தொடங்குவதாக இல்லை. இத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்து, பின்னால் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்றுதருவதற்கு ஒரு மையக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து, அதன்மூலம் விற்பனை செய்வது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இந்தத் தொழிலுக்கு நிறைய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, கயர் இண்டஸ்டிரிகளை விரிவு படுத்துவதற்கு கயர்போர்டு ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறதா என்றும், அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கயர்போர்டு கூட்டம் ஒன்று சென்னையிலே நடைபெற்றது. நம்முடைய மாநிலத்தில் அதிகமான வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய முறையில், இந்தத்

[1972 மார்ச் 21

தொழிலுக்கு அதிக உதவி தரவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். நம்முடைய மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து இது போன்ற முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக எந்த எந்த உதவிகள் செய்வார்கள் என்ற விபரம் என்னிடம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஈத்தாமொழி என்ற ஊரில் இந்த கயர் பயிற்சிப் பள்ளி ஒன்று இருந்தது. அதிலே பயிற்சி பெற்றவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். பயிற்சி பெற்றவர்கள் தனியாகத் தொழில் நடத்துவதற்கு ஊக்கமளித்து உதவி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நிச்சயமாக அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும். இப்போதும் அந்த பயிற்சிப் பள்ளி அங்கே இருக்கிறது. அதை ஒரு ட்ரெயினிங் சென்டராக மாற்றி, பயிற்சிப்பெற்றவர்களை அதிலே பணியாளர்களாக நியமிக்கலாமா என்பதனை அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்த தேங்காய் நாரில் கயர் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னால் இந்த மாநிலத்திலே எங்கெங்கே இந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பற்றி சர்வே செய்யப்படுமா என்பதைப்பற்றியும், கேரளாவில் இருப்பதைபோன்று நமது மாநிலத்தில் கயர் கலர் இருப்பதில்லை. ஏனெனில் அங்கிருப்பதைப் போன்று பாக் வாட்டர் இல்லை. ஆதலால் இங்கே தயாரிக்கப்படும் தேங்காய் நார் பொருள்கள் அவ்வளவு சிறப்பாக இருக்காது என்று சொல்லப்படுவதால் இதுபற்றி நிபுணர்கள் ஆராய்ச்சி செய்வார்களா என்பதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கேரளாவில் இந்தத் தொழில் அதிகமாக நடைபெறுவதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மை. அதே நேரத்தில் தமிழ்நாட்டில் இத்தொழில் விரிவுபடுமா என்று கேட்பது சரியாகாது. இதுபற்றிப் புதிய ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. பொதுவாக கடற்கரை ஓரங்களில் இத்தொழிலுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. தஞ்சாவூர் இராமநாதபுரம், கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இத்தொழில் சிறப்பாக நடைபெறும் என்றும்



1972 மார்ச் 21]

தெரிகிறது. எங்கெங்கே தென்னை மரங்கள் ஏராளமாக உள்ளனவோ அங்கெல்லாம் இந்தத் தொழிலை விரிவுபடுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

திரு. தொ. க. சிறைமீட்டான் : தலைவரவர்களே, தென்ன மட்டையிலிருந்து நார் தயாரிக்கும் தொழிற்சாலை இருப்பதாகச் சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில் பனை மட்டையிலிருந்து நார் உரித்து, பயன்படுத்துகிறார்கள். ஆகவே பனை மட்டை நார் தொழிற்சாலைக்கும் உதவி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்களுடைய மாவட்டம் பனை மரம் நிறைந்த மாவட்டம். பனை நார் உற்பத்தி செய்வதற்கும் உதவி கோரப்பட்டால் நிச்சயமாக அரசாங்கம் அதற்கும் உதவி செய்யும். கனம் அங்கத்தினரே கூட அங்கே அந்தத் தொழிலை ஆரம்பிக்க முயற்சி செய்யலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த கயர் ஃபைபரும் ரப்பரும் சேர்ந்த சில பொருள்கள் செய்யலாம் என்று காங்கிரஸ் அரசாங்கம் காலத்தில் ஒரு திட்டம் இருந்தது. அந்த முறையை இந்த அரசாங்கம் ஆராய்ச்சி செய்ததா. அந்த திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறது. ஆனால் அந்த பொருட்களுக்கு நல்ல சந்தை இல்லை என்றுதான் சொல்கிறார்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, தேங்காய் நார் தொழிலுக்கு அரசாங்கம் உதவி செய்வதாகச் சொன்னார்கள். செஞ்சி, ஆலம்பூண்டி, ரெட்டிப்பாளையம் போன்ற இடங்களில் காசரத்து நார் உற்பத்தி செய்கிறார்கள். அந்தத் தொழிலையும் ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கும் உதவி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நான் கயிறு திரிக்கும் வேலையைப்பற்றிச் சொன்னேன். அங்கத்தினர்கள் பலரும் பலவித நார் உற்பத்தியைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். ஆக எந்த நாரில் கயிறு திரிப்பதாக இருந்தாலும், உதவி கோரப்படு

மாலைல் பரிசீலனை செய்யப்படும். கனம் அங்கத்தினர் கோரிக்கை யையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. த. சேர்னையா : தலைவரவர்களே, தேங்காய், மட்டையி லிருந்து கயிறு திரிக்கின்ற தொழிலுக்கு அரசாங்கம் உதவி செய்யும் என்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். ஆகவே, கூடுதலாக எந்த அளவுக்கு தொகை கடனுக அரசாங்கம் வழங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் கயிறு திரிப்பதிலேயே இருக்கிறுர்கள். கயிறு திரிப்பதோடு நின்றுவிடாமல் பல உப பொருட்களையும் உருவாக்க முடியும். அதற்கும் அரசாங்கம் உதவி செய்யும். எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும் நிலம் வாங்க, கட்டிடங்கள் கட்ட, இயந்திரங்கள் வாங்க, மற்றும் உள்ள செலவு களுக்கு எவ்வளவுத் தேவைப்படுகிறதோ அதில் 75 சதவிகிதம் வரை கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

தென் ஆர்க்காடு மாவட்டத்துக்கு உருக்காலே.

* 610. விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப் பாரா—

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உருக்காலே ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லே.

கரூர்—தூத்துக்குடி இரயில் பாதை.

* 611. விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

கரூருக்கும் தூத்துக்குடிக்குமிடையே அகல இரயில் பாதை அமைக்கக் கோரி, மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதேனும் செய்யப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கரூர் வழியாக சேலத்திலிருந்து திண்டுக்கல் வரை அகலப்பாதை அமைத்தல், திண்டுக்கல்—தூத்துக்குடி (மதுரை வழி) இருப்புப்பாதையை அகலப்



பாதையாக்குதல் (மணியாச்சியிலிருந்து திருநெல்வேலி வரையுள்ள குறுகிய இணைப்பு உட்பட) திட்டங்களை நான்காவது திட்டத்தில் சேர்த்து கொள்வதற்காக மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த கரூர்—திண்டுக்கல் இருப்புப்பாதை ஒரு ஆண்டுக்கு முன்னுலே சர்வே செய்யப்பட்ட திட்டமாகும். அதற்குப் பதிலாக அந்தப் பாதையை மிலக்குறிச்சி, காலக்குறிச்சி, பல்லப்பட்டி, வேடசந்தூர் மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் அமைத்தால், அந்தப் பகுதிகளின் முன் னேற்றத்திற்கு ஒரு உப சாதனமாக இருக்கும். அந்த வகையில் மத்திய அரசாங்கம் அவர்களுடைய சர்வேயை மீண்டும் பரிசீலித்து, இந்த புதிய சர்வேயை செய்ய நமது மாநில அரசு வேண்டுகோள் விடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1965-ல் செய்யப்பட்ட பரிந்துரையின் அடிப்படை யில் சர்வே செய்யப்பட்டது. அந்த விபரப்படி இப்போது .........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்லப்பட்டி வழியாக இரயில் பாதை உண்டா என்பதைச் சொன்னுல் போதும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விபரம் இப்போது இல்லே.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, திருப்பூர், காங் கேயம், தாராபுரம் வழியாக பழனிக்கு ஒரு இருப்புப்பாதை போடுவதுபற்றி 20 ஆண்டுகளுக்கு முன்பே சர்வே நடைபெற்றது. அதை மீண்டும் போடுவதற்கு மத்திய அரசை நமது மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்ட வேலைகள் இன்னும் நடை பெருமல் இருக்கின்றன. ஆகவே, அவை பூர்த்தியான பின்னுல் சிபாரிசு செய்யலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know the other railway lines, broad-guage railway lines, recommended to Central Government by this Government for formation?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The following is the list of new railway lines recommended to Government of India for being taken up on a priority basis during the successive plan periods :—

(i) Theni-Gudalur

(ii) Neiveli-Vridachalam-Salem

(iii) Salem-Bangalore

(iv) Chinna Salem—Chinglepu**t**.

(v) Tirunelveli-Cape Comorin

(vi) Salem-Tiruchirappalli

(vii) Manamadurai-Tuticorin

(viii) Thanjavur-Pattukottai

(ix) Kanchipuram-Vellore

(x) Satyamangalam-Chamrajanagar

(xi) Manamadurai-Virudhunagar

(xii) Ariyalur-Salem (via) Perambalur, Thuraiyur and Namakal.

(xiii) Karur-Dindigul (via) Gujiliamparai

*Cauvery Irrigation System*

* 612 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have received loan from the World Bank for the Modernisation of Cauvery Irrigation System in Thanjavur District?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

சோலையாறு அணைத்திட்டம்.

* 613 வினா.—திரு. இ. இராமசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சோலையாறு அணையைப் பார்க்க வெளியூரிலிருந்து ஜனங்கள் வந்துகொண்டிருப்பதால் அதில் படகுவிட அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.



திரு. இ. இராமசாமி : சோலையாறு அணையில் பயணிகளுக்காகப் படகுகள்விட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வால்பாறையில் இருந்து இந்த அணை கட்டப்பட்டுவிட்டதால் 22 மைல்கள் சுற்றி ஜனங்கள் வரவேண்டியதாக இருக்கிறது. அவர்களுடைய நலனை உத்தேசித்தும் உடனடியாகப் படகுப்போக்குவரத்தை ஆரம்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அணையைப் பார்க்க வெளியூரில் இருந்து ஜனங்கள் வந்துகொண்டிருப்பதால் அதில் படகுவிட அரசுக்கு உத்தேசமுண்டா என்பது கேள்வி. நான் ஆம் என்றேன். ஜனங்களுடைய போக்குவரத்துக்குப் படகு விடுவதாகக் குறிப்பு இல்லை. அவர் கருத்தை ஏற்றுக்கொள்ளாததற்கு வருந்துகிறேன்.

வால்பாறையில் சுற்றுலா மையம்.

* 614 வினா—திரு. இ. இராமசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வால்பாறையை டூரிஸ்டு சென்டராக ஆக்குவது சம்பந்தமாக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. இ. இராமசாமி : வால்பாறை மலைப்பகுதி—அங்குள்ள இயற்கைக் காட்சியைக் காண பல ஊர்களில் இருந்து ஜனங்கள் வந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை சுற்றுலாப் பகுதியாக கருதி விடுதி அமைக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்திருக்கிறார்கள். இனிமேலாவது அதை அரசாங்கம் மறுபரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனியாக சுற்றுலா வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் எங்கெங்கு இயற்கைக் காட்சிகள் இருக்கின்றன, எந்த இடத்தில் சுற்றுலா விடுதி ஏற்படுத்தலாம் என்பது பற்றி அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். அந்த ஆராய்ச்சியில் வால்பாறை வந்தால் அதுவும் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மலைவாச ஸ்தலங்களில் உதகமண்டலம், கோடைக்கானல் இரண்டும்தான் டூரிஸ்ட் சென்டராக

ஆக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலா வாரியம் சேர்வராயன் மலை, ஆனை மலை ஆகியவற்றையும் ஆராய்ந்து சேர்வராயன் மலை அல்லது வால் பாறையில் சுற்றுலா விடுதி கட்ட முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே சேர்வராயன் மலையில் ஏற்காட்டில் டூரிஸ்ட் சென்டர் கட்டப்பட்டு முடிவு அடையும் தருவாயில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஓரிடத்தை டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்களிடத்தில் விண்ணப்பம் போட வேண்டுமா? அல்லது சுற்றுலா வாரியத்திற்கு விண்ணப்பம் போட வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரைச் சுற்றி உலா வர வேண்டும்? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : யாருக்கும் மனுப்போடத் தேவையில்லை. சுற்றுலா வாரியத்தினர்களே அங்கங்கே சென்று பார்த்து எங்கே ஏற்படுத்த வசதி, வாய்ப்பு இருக்கிறதோ அங்கே ஏற்படுத்துவார்கள்.

திரு. எம். தேவராசன் : உதகமண்டலத்தில் உள்ள ஏரியைச் செப்பனிட்டு வருகிறீர்களே, அந்த வேலை இந்தச் சீசனுக்குள் முடிவுறுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : உதகமண்டலத்தில் உள்ள ஏரி தூர்வாரப்பட்டு வருகிறது. அந்த வேலை முடிய இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே கோடைகால சீசனுக்குள் முடிவடையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

## சிறுவாணியில் சுற்றுலா விடுதி

* 615 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவாணியில் சுற்றுலா விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. க. இராசாராம் :

(அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. சு. துரைசாமி : அண்மையில் அமைச்சர் அவர்கள்கூட அந்தச் சிறுவாணி பகுதியைச் சுற்றிப்பார்த்தார்கள். இங்கே இயற்கைக் காட்சிகள் நிரம்பி இருப்பதால் டூரிஸ்ட் சென்டர் ஏற்படுத்தலாம் என்ற கருத்தை அவர் அப்போது தெரிவித்தார்கள். விரைவில் அங்கே ஒரு சுற்றுலா விடுதி அமைத்துத்தரப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே சுற்றுலா வாரியத்தின் மூலம் கோவை மாவட்டம் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள பெரியார் நீர்வீழ்ச்சியை நானும் பார்த்தேன். அதைச் சிறிய குற்றாலமாக ஆக்கலாம் என்கிற எண்ணம் என் உள்ளத்தில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. காலப் போக்கில்தான் அது பயன்தரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சுற்றுலா வாரியம் கோவை மாவட்டத்தில் சர்வே நடத்திவிட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போதாவது அமைச்சர் அவர்கள் சுற்றுலா வாரியத்தினிடம் சொல்லி சிறுவாணி திட்டப்பகுதியை எடுத்துக் கொள்ள முயற்சிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சுற்றுலா வாரியத் தலைவர், நான், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகிய நாங்கள் கலந்துபேசி சுற்றுலா இடங்கள் எங்கு எங்கு அமைக்கப்படலாம் என்கிற ஆலோசனைகளை நடத்தி இருக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்கள் பலன் அளிக்கிற முறையில் நடைபெறும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Tourism whether there is a proposal to convert the Cauvery river running between Hoganekal and Mettur into a big pond introducing boat facilities?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஹொகனகல் இருந்து காவேரியில் இப்போதே மூங்கில், மிளகாய் போன்றவை படகுகளின் மூலம் கொண்டுவரப்படுகிறது. மேட்டூர் பகுதி நீர்த்தேக்கமே குளம்போலத்தான் இருக்கிறது. இப்போது அதுபோன்ற வசதி எதுவும் செய்வதாக இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Funds from Thiruvalluvar temple at Mylapore*

* 616 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to start a Thiruvalluvar High School for boys and girls with the funds of the Thiruvalluvar temple in Mylapore, Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ் : அங்கு உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்தப்பட வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து கோயில் வருவாயில் இருந்து அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயிலுக்கு வருகிற வருமானமே குறைவாகத்தான் ஐயாயிரத்திற்குள் இருக்கிறது. ஆகவே, உபரி நிதி எதுவும் இல்லாத காரணத்தினால் அதுபோன்று உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி : அங்கே இருக்கிற கோயிலையே போதுமான அளவில் பராமரிக்க நிதி இல்லை. மேலும் ஒரு கல்யாண மண்டபம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு நிதி இல்லாமல் பாதியில் நின்று கொண்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் சொன்னபடி அந்தக் கோயிலைப் பராமரிக்கவும், கல்யாண மண்டபத்தைக் கட்டி முடிக்கவும் போதுமான நிதி உதவியை அரசாங்கம் செய்யவேண்டும். பொதுவாக கோயில் நிதியில் இருந்து இதுபோன்ற காரியங்களைத் தான் முதலில் செய்யவேண்டும், அதற்குப் பிறகும் உபரியாக நிதி இருந்தால் உயர்நிலைப்பள்ளி வைக்கலாம், சித்த மருத்துவசாலை வைக்கலாம் என்ற கொள்கையை அரசாங்கம் நிர்ணயித்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அந்தத் திருவள்ளுவர் கோயிலை ஒரு கலாசார நிலையமாக ஆக்கவேண்டும், திருக்குறள் ஆராய்ச்சி, கருத்து அரங்கு, திருக்குறளை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கும் வேலை ஆகியவை நடைபெற வேண்டும். முடிவு செய்யப்படாமல் இருக்கிற கல்யாண மண்டபத்தைக் கட்ட முயற்சி



எடுக்கவேண்டும் என்பனபோன்று அந்தக் கோயிலை நமது முதல்வர் அவர்கள் பார்வையிட்டு வந்த பின்னர் யோசிக்கப்பட்டு வருகிறது. விரைவில் அந்த வேலை தொடங்கப்பட இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, திருவள்ளுவர் கோயிலில் ஏதாவது வழிபாடு நடைபெறுகிறதா? அந்த வழி பாட்டில் ஏதாவது மந்திரங்கள் ஓதப்படுகின்றனவா? அப்படி மந்திரங்கள் ஓதப்படுகின்றன என்றால், எந்த முறையில் ஓதப்படு கின்றன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருவள்ளுவர் கோயிலில் சிவ வழிபாட்டு முறையில்தான் வழிபாடு நடைபெறுகிறது. தமிழ் மந்திரங்கள்தான் ஓதப்பட்டு வருகின்றன.

வெங்கடாசலபதி கோவிலிலிருந்து கடன்

* 617 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி வெங்கடாசலபதி கோயிலிலிருந்து தமிழ்நாட்டுக் கோவில்களுக்காகக் கடன் ஏதாவது வாங்கப்பட்டுள்ளதா?

(இ) அப்படி வாங்கியிருந்தால் அதற்கு ஏதாவது வட்டி உண்டா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, திருப்பதி வெங்கடாசலபதி கோயில் மிகவும் பெரிய ஸ்தலம். அந்தக் கோயி லுக்கு ஏராளமான வருமானம் வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள நிறையக் கோயில்களுக்கு வருமானம் இல்லாத காரணத்தால் கோயில் காரியங்கள் சரிவர நடைபெறவில்லை. திருவள்ளுவர் கோயில் சம்பந் தப்பட்ட கல்யாண மண்டபம் போன்றவைகூடச் சரியாகக் கட்டி முடிக்கப்பட போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் அரைகுறை யாக இருக்கிறது. ஆகவே, ஆந்திர மாநிலத்திலுள்ள திருப்பதி

அப்படித்தான் பல கோயில்களின் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்திற்குக் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதி தமிழ் நாட்டிலுள்ள மக்கள் செலுத்துகிற காணிக்கையாகும். அந்தக் கோயிலிலிருந்து நமக்குக் கடனுகை கொடுக்காவிட்டாலும், அந்தக் கோயில் டிரஸ்ட் நிதியிலிருந்து பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றைத் தமிழ்நாட்டில் திருப்பதி தேவஸ்தானம் அமைத்துக் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருப்பதி தேவஸ்தானத்தை பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென கேட்டு இருக்கிறோம். ராமேஸ்வரம் முக்கியமான யாத்திரை ஸ்தலமாக இருப்பதால் அம்மாதிரியான இடங்களில் பயணிகள் இலவசமாகத் தங்குவதற்காக விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்த விடுதியைக் கட்டித்தர திருப்பதி தேவஸ்தானத்தார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, திருப்பதிக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டில் அதிக வருவாய் உள்ள ஆலயம் எது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அதிக வருமானம் உள்ள கோயில் பழனி முருகன் கோயில் தான்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இப்படி திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து கடன் கோருவதைவிட, தமிழ்நாட்டிலிருந்து இவ்வளவு ஆட்கள் அந்த ஆலயத்திற்குச் செல்கிறார்கள் என்று ஒரு சர்வே எடுத்து அந்த விகிதாசாரத்தில் பணம் தர வேண்டும் என்று ஏன் கேட்கக் கூடாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருப்பதி வெங்கடாசலபதி கோயிலுக்குத் தமிழ்நாட்டில் இருப்பவர்கள்மட்டும் செல்வதில்லை. வட இந்தியாவிலிருந்து—இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலிருந்து—பலர் வருகிறார்கள். அதேபோல் வட இந்தியாவிலிருந்தும்—இந்தியத் துணைக்கண்டத்தின் பல பாகங்களிலிருந்தும்—பலர் ராமேஸ்வரத்திற்கு வருகின்றனர். நாம் இப்படி திருப்பதியில் பங்கு கேட்கும்போது, அவர்களும் நம்மிடம் பங்கு கேட்க ஆரம்பித்தால் நம் கதி என்ன ஆவது?





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழனி கோயிலுக்குப் பெரும்பாலும் கேரளத்திலிருந்தும் மக்கள் வருவதால், கேரள சட்டசபையிலும் உறுப்பினர்கள் இம்மாதிரியான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்து, பங்கு கேட்க ஆரம்பித்தால், என்ன செய்ய முடியும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு.

(அ) வைகை சீரமைப்புத் (கால்வாய்) திட்டத்தின்படி நன்செய் நிலங்களின் தீர்வை மாறுபாடு செய்யப்பட்டதால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள குழப்பம் குறித்து

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

"வைகை சீரமைப்புத் (கால்வாய்) திட்டத்தின்படி நன்செய் நிலங்களின் தீர்வை 6—5—1969 முதல் மாறுபாடு செய்யப்பட்டுள்ளதால் நிலையூர்—சம்பல் கால்வாய்—அவனியாபுரம் கால்வாய் ஆகியவைமூலம் பாசன வசதி பெறும் சுமார் 30 கிராமங்களில் சுமார் 15,000 ஏக்கர் நன்செய் நிலங்களின் தீர்வை முன்பு இருந்ததை விட (ரூ. 14) இப்போது இரட்டிப்பாக்கப்பட்டு (ரூ. 28) இருக்கிறது. இந்நிலை அப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களிடையே பெருங்குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது" என்னும் அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON: THIRU P. U. SHANMUGAM : Sir, Government sanctioned in March 1968, the scheme for modernising the Vaigai channels by the construction of the regulators—one at Virahanur in Madurai District and the other at Parthibanur in Ramanathapuram district and excavation of channels on both sides of the river. An additional water rate of Rs. 5 per acre was fixed uniformly for all the ayacut lands benefited by the execution of the scheme for modernising the Vaigai channels. Necessary resettlement notification for the levy of this enhanced rate of assessment on the wet

[Thiru P. U. Shanmugam] [1972 மார்ச் 21

lands benefited by the scheme of modernising the Vaigai Channels in Madurai district was also issued in January 1971. The lands irrigated by the Nilayur channel and the Avaniapuram channel stand included in the ayacut lands for which the assessment has been increased.

The scheme of modernising the Vaigai channels has been taken up but has not been completed so far. The enchanced water rate can be collected only after the completion of the scheme.

(ஆ) பின்தங்கிய வகுப்பினருக்கும் அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்கும் படிப்பு உதவித் தொகை மத்திய அரசால் நிறுத்தப்பட்டது குறித்தும், மாநில அரசு நிர்ணயித்துள்ள வருமான வரம்பு உயர்த்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்

THIRU K. KANDASWAMY: Hon. Speaker, Sir, I call the kind attention of the Hon. Minister for Backward Classes to a matter of urgent public importance, namely, " the stoppage of grant of scholarships by the Central Government to the students of Backward Classes and Denotified Tribes and the income ceiling fixed by State Government as Rs. 2,000 for such students especially, after the enhancement of pay to the Government employees has resulted in making hundreds of studentts ineligible to get their usual scholarships and as a result of it, now they are likely to discontinue their studies ".

THE HON. THIRU K. RAJARAM: Mr. Speaker, Sir, there is Low Income group scholarship scheme which was initiated at the instance of the Government of India. They gave an annual grant of Rs. 14.84 lakhs towards the scheme. Under this scheme, scholarship is awarded to poor students irrespective of the community to which they belong. The applicants are categorised into two groups, one with an income of Rs. 1,500 per annum and the others with an income of Rs. 1,500 to 2,000 per annum. Usually, funds provided under the scheme would be just sufficient to sanction scholarship to students whose parental income is Rs. 300 and less. The Government of India refused to grant financial assistance for this scheme with effect from 1st April 1969. Since then, the scheme is financed by this Government. In view of the fact that the State scholarship programmes have been expended and that ways and means position of the State Government would not permit such a huge expenditure, it has been ordered that the scheme may be



1972 மார்ச் 21] [Thiru K. Rajaram]

continued on a restricted basis permitting sanction of scholarship to renewal cases, only, that is, those who are yet to complete the study for which they are already sanctioned scholarship under the scheme.

As regards ceiling on income limit, the present income limit for the award of fee concession under the Madras Educational Rules to Backward Classes is Rs. 1,500 per annum and for the award of State Scholarship to Backward Classes is Rs. 2,000 per annum. The Backward Classes Commission constituted by this Government recommended in their report presented in January 1971 that the income limit for the award of fee concession might be raised from Rs. 1,500 to Rs. 2,000 per annum and that for the award of State Scholarship increased from Rs. 2,000 to Rs. 3,600 per annum.

In this connection, our calculations showed that the Commission's proposals would involve an annual extra cost of approximately Rs. 70 lakhs to Government and that as an alternative, if the income limit for the award of Scholarship were increased from Rs. 2,001 to Rs. 3,600 per annum but half scholarships were given to the Backward Classes students in the income group of Rs. 2,001 to Rs. 3,600 and in that case cost would be reduced to Rs. 34.56 lakhs. The proposal was considered for implementation in the year 1972–73. It was decided that in view of the huge cost involved in the proposal, it may be deferred and the proposal further examined in all aspects with reference to the recommendations of the Backward Classes Commission. Accordingly, the proposal is being further examined.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் பாராட்டுகிறேன். அதே நிலையிலே இன்னும் உதவி செய்ய வேண்டியிருக்கிறது. பிற்பட்டோர் நலக்குழுவினுடைய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பொழுது அவர்கள் ரிப்போர்ட் சேகரித்தபொழுது அரசு ஊழியர்கள் பெற்றிருந்த சம்பளத்தைவிட அதிகமாக அதற்குப் பின்னல் அரசு ஊழியர்கள் பெற்றுவருகிறார்கள். எனவே அந்த நிலையில் அந்த சம்பள உயர்வுக்குப் பின்னல் இப்பொழுது இருக்கிற நிலையை இறுதியாக வைத்துக்கொண்டு வருமான நிலையை உயர்த்தி 5 ஆயிரம் என்று வைத்தால் உதவிகரமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். டீ-நோடிபைட் டிரைப்ஸ், எக்ஸ் கிரிமினல் டிரைப்ஸ் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக மத்திய அரசாங்கம் 105 லட்ச ரூபாய் ஒதுக்கி வருகிறது. அகில இந்திய

லெவலில் மூன்றில் ஒரு பங்கு டிநோடிபைட் டிரைப்ஸ் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் தமிழகத்திலே இருப்பதால் அந்த உதவித் தொகையான 105 லட்ச ரூபாயில் மூன்றில் ஒரு பங்கை சுமார் 50 லட்ச ரூபாயாவது தரவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி உடனடியாக வாங்கினால் அதன்மூலம் அவர்களுக்குக் கணிசமான அளவுக்கு அதிகமாக உதவி கிடைக்கும். மாணவர்கள் அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படாத அளவுக்குத் தொடர்ந்து படிக்க முடியும். படிப்பை விட்டுவிடாதபடி இருக்கக் கூடிய வகையில் உதவிகரமாக இருக்கும் என்பதால் அப்படி மத்திய அரசிடம் வற்புறுத்தி வாங்குவதற்கு நம்முடைய அரசு முயற்சி செய்ய வேண்டுமென்ற கருத்தையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு வைத்து உபகாரச் சம்பளம் கொடுக்கிற நிலையிலேயே சர்க்கார் எவ்வளவு செலவழிக்கவேண்டியிருக்கிறது என்ற புள்ளி விவரங்களையும் நான் நேற்றைய தினம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் தமிழ்நாட்டிலே அதிகமாக இருக்கிறார்கள், சென்ற சில நாட்களுக்கு முன்னாலே நான் மத்திய அமைச்சர் சித்தார்த்த சங்கர் ரே அவர்களைச் சந்தித்த பொழுது இதைப்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். அவர்கள் ஒப்புக் கொள்கிற நிலையில் வங்காளத்திற்குப் போய்விட்டார்கள். இனி யார் கல்வியமைச்சராக வரப்போகிறார்கள் என்று தெரியவில்லை. நாம் மீண்டும் மீண்டும் இதிலே மத்திய அரசை வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐயாயிரம் ரூபாய் உச்ச வரம்பு வைப்பதற்குத் தமிழக அரசின் நிதிநிலை இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், " நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,22,36,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் " என்று முன்மொழிகிறேன்.



THIRU R. PONNAPPA NADAR: Sir, I move the following cut motion to discuss about the policy with particular reference to the distribution of water for irrigation purposes:—

'That the allotment of Rs. 13,22,36,500 under Demand No. 26—Irrigation be reduced by Rs. 100.'

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சகலவித பாசனக் கண்மாய்களையும், பொதுப்பணித் துறை நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 13,22,36,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I move the following cut motion to discuss about the delay in completion of Cooum Reclamation Scheme—

'That the allotment of Rs. 13,22,36,500 under Demand No. 26—Irrigation be reduced by Rs. 100.'

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் " கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,27,04,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, To discuss policy.

"நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 12,27,04,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, I move the following cut motion to discuss about the necessity to broaden the road on either side of the Thiruvettar bridge in Kanyakumari district—

'That the allotment of Rs. 12,27, 04,600 under Demand No. 27—Public Works—Works be reduced by Rs. 100.'

கொண்டு ஐந்து நிமிஷங்களுக்குள் பேசுவது என்ற அந்த வரம்பு முறையை வைத்துக்கொண்டு வெற்றிகரமாக நடத்தியதைப்போல் இன்றைக்கும் அதை அமல்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவில் பேசினால்தான் இன்றைய மானியக் கோரிக்கைகள் இன்று சாயங்காலமாவது நிறைவேறும் கட்டத்தில் இருக்கும் என்று கூறி அவசியம் தங்கள் உரையை ஐந்து நிமிஷங்களுக்குள் சுருக்கி ஆற்றுமாறு நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது எங்கள் சார்பில் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்துச் சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவதாக சாலைப் பராமரிப்பை எடுத்துக்கொண்டால், அதிக சாலைகளை அமைப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோன்று அந்தச் சாலைகளைப் பராமரிக்க வேண்டியதும் மிகவும் முக்கியமாகும். வேலை வாய்ப்புத் திட்டத்தின்மூலம், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள்மூலம் சாலைகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் மாநிலத்தில் எங்கு பார்த்தாலும் சாலைகள் பராமரிக்கப்பட்டதாகக் காண முடியாமல் சீரற்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே முக்கியமான பஸ் போக்குவரத்து சாலைகளையாவது அரசு ஏற்று நடத்துவதற்கு முன்வர வேண்டும். பஸ் ரூட்டுகளாக இருக்கும் பல சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை அரசு ஹைவேஸ் எடுத்துப் பராமரிக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பஸ் ரூட்டுகள் போகும் பல சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தால் சில பஸ் ரூட்டுகள் சில இடங்களில் நிறுத்தல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மிகவும் மோசமாக இருக்கும் பஸ் ரூட்டுப் பாதைகளை அரசு ஹைவேஸ் எடுத்து அவைகளைப் பராமரிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த ஆண்டு ஒரேவொரு சாலைதான் கன்னியாகுமரி மாவட்டத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. ஆதலால் அடுத்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிக பஸ் போக்குவரத்து செய்யக்கூடிய சாலைகளையாவது எடுத்து நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆய்வுரையில் பல பால வேலைகளைப்பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பாலம் கூட இடம் பெற்றதாக இல்லை. கன்னியாகுமரியில், மிக முக்கியமான



பல பால வேலைகளைச் செய்ய வேண்டுமெனப் பொதுமக்கள் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக குழித்துறை ஆற்றில் மங்காடு ஞானமிளக்கடவு, திக்குறிச்சி ஆகிய இடங்களில் பாலங்கள் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

இன்னும் ஏ.வி.எம். கால்வாயில் பழைய பாலங்கள் இருக்கின்றன. அவைகளைத் துரிதமாக அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சில கடிதப் போக்குவரத்துகளை நடத்தி, சிபாரிசுகள் அனுப்பபட்டிருக்கின்றன. அவைகள் இன்னும் பரிசீலிக்கப்படாமல் இருக்கின்றன. அந்தப் பாலங்களைப் புதுப்பிக்கவும், புதிய பாலங்களை அமைக்கவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இணைப்புச் சாலைகள் அமைக்க அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இணைப்புச் சாலைகளை அமைப்பதற்குப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி வசதி இல்லாத காரணத்தினால் அவைகளைப் பராமரிக்கவும், அவைகளில் பாலம் கட்டவும் முடியாமல் இருக்கிறது.

அடுத்து லோகல் ரோட்ஸ் கிராண்ட், அதாவது உள்ளூர் சாலை மானியம் மிகவும் குறைவாக இருப்பதால் பஞ்சாயத்து யூனியன்கள் அதைப் பராமரிப்பதற்கு நிதி நிலை இல்லாததால் பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஆகவே அவைகளுக்கு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கட்டட வேலைகளைப்பற்றி எடுத்துக்கொண்டால் அரமனை டிஸ்பென்சரிக்குச் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வழிவகைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றுவரையில் அந்தக் கட்டடம் கட்டப்பட்டதாக இல்லை.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ஆரம்பப் பாடசாலைகள் ஷெட்டுகளில் செயல்படுகின்றன. அவைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை மாற்றி அரசு நல்ல முறையில் கட்டட வசதிகளை அளிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாசன வசதிகளை எடுத்துக்கொண்டால், ஆய்வுரையில் முதல் பக்கத்தில் பட்டணங்கால் திட்டம் முடிவடையும் தறுவாயில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பல பாகங்களிலுள்ள மக்கள் தங்களுக்குக் கிளைக் கால்வாய்கள் வேண்டும்,

[திரு. என். டென்னிஸ்] [1972 மார்ச் 21

மடைகள் வைத்துக்கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பிக்கிருர்கள். ஆகவே, அந்தத் திட்டம் முடிவதற்குள் இந்தக் கால்வாய்களை வெட்டவும் அதற்கான புது மடைகள் அமைக்கவும் வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பட்டணங்கால் கால்வாயில் கருங்கல் டிஸ்ட்ரிபூட்டரியில் தண்ணீர் விநியோகக் குறையைப்பற்றி அமைச்சரவர்களுக்குப் பொதுமக்களால் விண்ணப்பங்கள் பல அனுப்பப்பட்டன. போதுமான அளவில் தண்ணீர் விடப்படாததால் பல நாட்கள் தண்ணீரே விடப்படாததால் எல்லாக் காலங்களிலும் பயிர் கரிந்த வண்ணமிருக்கின்றன. விவசாயிகள் கஷ்ட நஷ்டத்திலிருக்கின்றனர். ஆதலால் கருங்கல் டிஸ்ட்ரிபூட்டரில் கூடுதல் தண்ணீர் விடுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்புத் திட்டம் வகுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது தடுப்புச் சுவர் கட்டும் முறை அவ்வளவு எஃபெக்டிவ்வாக சீராக இல்லாததால் கேரளத்தில் சில இடங்களில் செய்திருப்பதைப்போல் கடலில் கல், அடுக்கு வழிமுறைகளை வகுத்துச் செயல்படுத்த வேண்டும். கட்டப்படும் தடுப்புச் சுவரை கடல் அலைகள் வந்து நாசமாக்கி விடுவதாகத் தெரிகிறது. இந்த ஆய்வுரையில் கூறப்பட்டிருக்கும் மிடாலத்தில் தடுப்புச் சுவர் கட்டியது பெரும்பகுதியும் கடல் அலைகளால் அழியப்பட்டதாகக் காணப்படுகிறது. கொல்லத்தில் நீண்ட கரையில் கேரள அரசால் கையாளப்படக்கூடிய முறையான கடலினுள் கல்லை அடுக்கி அந்த வழிமுறைகளை வகுத்துச் செயல்படுத்துவது மிகவும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி. ப. பழனியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைக்கு மிகவும் இன்றியமையாத இப்பாசன வசதி மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். பாசனத்திற்காக 1966–67-ல் ரூபாய் 7.89 கோடி செலவழிக்கப்பட்டது. 1972–73-ல் 14.28 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதில் எங்கள் பகுதியிலுள்ள அமராவதி ஆற்றுப் பாசன ஏற்பாடுகளின் பராமரிப்புக்காகவும் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

கங்கையும் காவிரியும் இணையும் திட்டம் இணையற்ற திட்டமாகும். இத் திட்டம் வெற்றிபெற நமது முதல்வர் மத்திய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவது போற்றுதற்குரிய செயலாகும். அன்று கண்ணகிக்குச் சிலையெடுப்பதற்காக கங்கை சென்று கல்லெடுத்த சேரன் செங்குட்டுவன் பெற்ற வெற்றியை இன்று நம் முதல்வர் அவர்களும் உறுதியாகப் பெறுவார் என்பதை அறுதியிட்டுக் கூறலாம்.



1972 மார்ச் 21] [திருமதி வி. ப. பழனியம்மாள்]

இந்த மானியத்தை ஆதரிக்கும்பொழுது என் தொகுயிலுள்ள ஓரிரு பொதுப்பணித் துறை சம்பந்தப்பட்ட சில திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கும்படி நமது முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தாராபுரம் தொகுதியில் பி.ஏ.பி. திட்டத்தின்கீழ் சில பகுதிகள் வாய்க்கால் இருந்தும் பாசனம் பெருமல் இருக்கிறது. அநேக பகுதிகளில் வாய்க்கால் வெட்டுவதற்காக சர்வே செய்தும் வெட்டப்படாமல் இருக்கிறது. அவைகளில் குடிமங்கலம் யூனியனில் பெரும் பகுதியும், தாராபுரம் யூனியனில் ஒரு பகுதியும், மடத்துக்குளம் யூனியனில் ஒரு பகுதியும் ஆகும். பி.ஏ.பி. திட்டத்தில் பயன் பெருததால் வாய்க்கால் வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை எழுப்பப்பட்டு வருகிறது.

நமது அமைச்சர் அவர்களும் நீராறுத் திட்டம் முடிந்ததும் மேற்குறிப்பிட்ட இடத்திற்கு வாய்க்கால் வெட்டித் தருவதாக உறுதி அளித்திருக்கிருர். இருந்தாலும் என் தொகுதி மக்கள் வாய்க்கால் பாசன வசதி கிடைக்கும் என்ற ஆவலுடனும் கிடைக்காதோ என்ற ஐயப்பாட்டுடனும் இருப்பதால் நீராறு அணைத் திட்டம் அங்கு நடந்து முடியட்டும் என்று காத்திராமல் இப்பொழுதே என் தொகுதியில் வாய்க்கால் வெட்ட ஆரம்பிக்குமாறு கோருகிறேன்.

தாராபுரம் யூனியனில் சின்னக்கரை ஓடை என்ற ஓடையின் குறுக்கே கொட்டாப்புடி சின்னக்காம்பாளையம் என்ற இடத்தில் ஒரு குளம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிருேம். இந்த பட்ஜட்டில் இத்திட்டம் இடம் பெறும் என்று எதிர்பார்த்து ஏமாந்தோம். இத்திட்டத்தால் சுற்றிலுமுள்ள கிணறுகளுக்குத் தண்ணீர் கிடைப்பதுடன் குடிநீர்க் கஷ்டமும் நீங்கும். அது ஓரளவுக்கு வேளாண்மைக்கும் பயன்பெறுமாகையால், இத்திட்டத்தை விரைவில் நடத்திக்கொடுக்கவேண்டுமாய்க் கோருகிறேன்.

தாராபுரம் நகரத்தில் அமராவதிப் பாலத்தில் போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. இப்பாலம் மிகப் பழமையானதால் பழுதடைந்த நிலையிலுள்ளது. மேலும் பாலம் குறுகலாக இருப்பதால் ஒரு புக்கம் பேருந்துகள் செல்லும்பொழுது மறுபக்கமுள்ள பேருந்துகள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனுல் போக்குவரத்

திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. அந்தப் பாலம் பழுதடைந்த நிலையில் இருப்பதால் பேருந்துகள் அதிலே செல்லும் போது பாலம் ஆடிக் கொண்டிருக்கிறது. இது குறித்து தாராபுரம் ஹைவேஸ் ஆபீசிலிருந்து எஸ்டிமேட் தயாரித்து அனுப்பியிருப்பதாக அறிகிறேன். இப்பாலத்தை விரைவில் அகலப்படுத்த வேண்டும் அல்லது இதைப் பழுது பார்த்துவிட்டு அருகில் இன்னொரு பாலம் கட்டிக் கொடுத்துப் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தாராபுரம் வட்டம் வீராச்சிமங்கலத்தில் மதுக்கம்பாளையத்திற்கு அருகில் அமராவதிக்குக் குறுக்கே ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டுமாய்க் கோருகிறேன். இதில் ஆற்றின் இருபுறங்களிலும் உள்ள ஊர்களில் இருப்பவர்களுக்கு தங்கள் நிலத்தில் விளைந்த விளைபொருட்களைக் கொண்டுசெல்ல வேண்டுமானால் 12 மைல்கள் தாராபுரம் டவுனிற்குள் நுழைந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு மைல் செல்லுவதற்கு 12 மைல் சுற்ற வேண்டியிருப்பதால் இப்பாலத்தையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நமது அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தாராபுரம் நகரத்தில் பெரிய கடைவீதியில் மிகக் குறுகலான பாதை இருப்பதால் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. இதற்கு ஒரு பை-பாஸ் ரோடு வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இப்பாதையையும் போட்டுக் கொடுத்து தாராபுரம் நகரத்திலுள்ள இடையூறுகளைத் தீர்த்து வைக்குமாறு கோருகிறேன்.

மேலும் தாராபுரம், மடத்துக்குளம், குடிமங்கல் ஆகிய மூன்று யூனியன்களிலும் அநேக இடங்களில் போக்குவரத்திற்குப் பாதைகள் நல்ல முறையில் இல்லை. யூனியன் செலவில் போட முடியாத நிலையில் அநேக பாதைகள் உள்ளன. இவைகளை அரசாங்கமே ஏற்று ஹைவேசில் சேர்த்து இப்பாதைகளையும். அரசாங்கமே போட்டுக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கங்கை காவிரி இணைப்பைப்பற்றிச் சொன்னார்கள். அது பற்றிய ஒரு அறிக்கையைச் சபையின் முன்னால் வைத்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென்று கருதி அந்த அறிக்கையை இப்பொழுது பேரவைமுன் வைக்கிறேன்.





The U.N.D.P. Team headed by Dr. Joseph Barnea held discussions on 16th March 1972 with the Minister for Works and officials of Tamil Nadu regarding the National Water Grid, linking the river Ganga with the Cauvery. Explaining the salient features of the proposed Ganga-Cauvery Grand Feeder Canal, Dr. Barnea said that the proposed project will be a multipurpose one designed for irrigation as well as inland navigation. The whole system may have to be operated by a Board with the active participation of the States concerned. He said that the cost of water from the project will inevitably be high as pumping to a high head will be required. He made a plea for introduction of a volumatric system of charging for water so as to discourage the wastage of water by the farmers.

The officials of Tamil Nadu pointed out that Dr. K. L. Rao's proposal envisaged a link from the Godavari to Mettur Dam through a pumped canal. This was not necessary as we can have a substantially cheaper gravity canal taking off from Srisailam reservior and tailing into the Cauvery above the Upper Anicut. This will avoid the need for pumping at a high cost. They also stressed the desirability of taking up the Godavari—Cauvery link as the first phase of the Grand Feeder Canal from the Ganga, as the Godavari has a large sparable surplus and as this part of the canal is more economical and can confer early benefit so as to make the high cost scheme financially viable.

Dr. Barnea said that his suggestion could, certainly, be considered so long as Tamil Nadu was not asking for any permanent right in the waters of the Godavari.

Regarding the sharing of the cost of the scheme, the Minister for Works said that this was a matter which will have to be decided in due course by the Central and State Governments.

The question of collection of betterment levy and the exact quantum thereof will also have to be decided then, though it has to be stated straightway that the collection of a betterment levy would be inevitable. He also assured the Team that there would be difficulty in regard either to the labour or Technical personnel required for the project. He assured the Team that Tamil Nadu fully welcomed the scheme, as it would save the Northern States from floods and the Southern from drought and both the Government and the farmers of Tamil Nadu would extend their fullest co-operation to make the Project a striking success.

[1972 மார்ச் 21

* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது அந்தப் பகுதியில் செய்ய வேண்டிய சில பணிகளைப்பற்றி நான் குறிப்பிட விரும்பு கிறேன். அந்த வகையில் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஓரிரு வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன்.

வேதாரண்யம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகள் பின்தங்கிய பகுதிகள் என்று சர்வே எடுத்து எங்கள் வேதாரண்யம் பகுதியிலும் பல நன்மைகளை, பாசன வசதிகளைச் செய்துதர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேதாரண்யம், தலைஞாயிறு ஆகிய இரண்டு நகரங்களையும் இணைப்பதற்கு இணைப்புச் சாலை இல்லை. அந்த இணைப்புச் சாலையை ஏற்டுத்தித் தரும்படி கேட்டுக் கொள் கிறேன். கடில்வயல், கருப்பம்புலம், கத்திரிப்புலம் வழியாக ரோடும் ஆயக்காரன் பாலம், உம்பளச்சேரி வழியாக ஒரு சாலையும் அமைத் துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 25 லட்சம் ரூபாய்க்குக் குறைவான திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு முன் வந்திருப்பதாக வரவு—செலவுத் திட்டத்தில் கண்ணுற்றேன். அந்த வகையில் 25, 30 கிராமங்களில் 25 லட்சத்திற்கும் குறைவாக செல வாகக் கூடிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல வருஷங்களுக்கு முன்னால் அடப்பாறு ஆற்றிலிருந்து பாசன வசதி செய்து தரவேண்டுமென்று அரசு முயற்சித்ததாகத் தெரிகிறது. அந்த முயற்சி தற்போது கைவிடப்பட்டதாக அறிகிறேன். அதை மறுபடியும் பரிசீலிக்க வேண்டும். மேலும் இறைவைப் பாசனமாக வும் மற்ற வழியிலும் பல கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முள்ளாற்றை வெட்டி லகூனுக்கு விட்டால் பல கிராமங்களுக்கு வடிகால் வசதி பெற வாய்ப்பாக இருக்கும். அந்த வடிகால் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் பல வடிகால் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று ஊராட்சி மன்றத் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும் சேர்ந்து ஆலோசித்து பொறியாளர்களைக் கலந்து ஆலோசித்து அரசுக்கும் மகஜரை அளித்திருக்கிறார்கள். முக்கியமான பல வேலைத் திட்டங் கள் அதில் இருக்கின்றன. அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

அடுத்தபடியாக, கட்டடங்கள் அறவே இல்லாமல் இருக்கக்கூடிய நிலையில் பல உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிக் கூடங்களுக்கு நல்லமுறையில் கட்டடங்கள் கட்டித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக மிகவும் தாழ்மையுடன், பணிவன்புடனும் கேட்டுக் கொள்கிறேன், என் தொகுதியில் அதிகக் கவனம் செலுத்தி சாலைப் போக்குவரத்தையும், பாசன வசதிகளையும் செய்து தரவேண்டு மென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைமீது என் கருத்துக்களையும் சொல்வதற்கு விரும்புகிறேன்.

நம் மாநிலத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் இடையே இருக்கும் நீர்த்தகராறை முறையாக, பரஸ்பரம் தீர்க்கவேண்டிய ஒரு அவசியம் இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் மைசூர் மாநிலம், ஆந்திர மாநிலம் போன்ற மாநிலங்களிலிருந்து வீணாகிற தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்குப் பயன்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட மாநிலங்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி அந்த நீரைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாட்டை நம் அரசு செய்வதன் மூலம் நம் மாநிலத்தில் ஏற்பட் டிருக்கக்கூடிய தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு முடியும். அதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை நாம் விவசாயத் திற்குக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்த முடியும். ஆகவே, அந்த முறையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தஞ்சை மாவட்டத்தில் காவிரி பாசனவாய்க்கால்களை நவீனப்படுத்தக் கூடிய திட்டம் வேகமாக நடைபெறவில்லை. காலையில் ஒரு கேள்வி கேட்டபோது சொல்லப்பட்டது. ஐக்கிய நாட்டுச் சபையில் இருந்து கடன் கொடுக்கவில்லை என்று சொன் னார்கள். அந்த மாவட்டத்தில் 42 கோடி ரூபாய் அளவிற்கு மதிப் பீடுகள் தயார் செய்து அந்தப் பணத்தைப் பெறுவதன்மூலம் தஞ்சை மாவட்டத்தில் மழைக்காலங்களில் வரும் அதிகப்படியான தண்ணீரைப் பாதுகாத்துக் கொடுக்கும் வகையில் இந்த நவீன வடிகால் சீரமைப்புத் திட்டம் அவசியமாகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படும் சேதத்தை

யும், விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தையும் தடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே அந்த மாவட்டத்திலுள்ள விவசாய நிலங்களையும், விவசாயிகளையும் பாதுகாக்கும் வகையில் இந்தத் திட்டத்தை அரசாங்கம் முதன்மையாக மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் வடிகால் வசதிகள் செய்துதர வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். உதாரணமாக, தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி தாலுகாவில் இடையூர் என்ற கிராமத்தைச் சுற்றிலும் நான்கைந்து கிராமங்கள் உள்ளன. அங்கு மொத்தம் 2,300 ஏக்கர்கள் வடிகால் வசதி இல்லாமல் இருக்கின்றன. மாசிக்கால் கோரையாறு மூலமாகத்தான் வடியவேண்டும். அதை சர்வே செய்து, மதிப்பீடு செய்து அரசாங்கம் அனுமதி கொடுக்காததினால்தான் இன்றையதினம் 2,300 ஏக்கர் நிலம் வருடாவருடம் பாழடைந்துவருகிறது. ஆகவே அதற்கான அனுமதியை விரைவில் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சி மாவட்டத்தில் கரூர் தாலுகாவில் நொய்யல் நதி அணைக்கட்டு மூலம், துக்காச்சி, தென்னிலைகீழ்பாகம், குப்பம், கத்திபாளையம், வேட்டமங்கலம், புஞ்சைபூதனூர், புஞ்சை தோட்டக்குறிச்சி, புஞ்சைகம்பங்குறிச்சி, கம்மங்குறிச்சி, ஆத்தூர் கிராமங்கள் பயன்பெறும். கிராம மக்கள் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டதாகவும் தெரிகிறது. அதன்படி, நொய்யல் ஆற்றின் குறுக்கே அணைகட்டுவதின் மூலம் சுமார் 20,000 ஏக்கர்கள் பாசன வசதி பெறும். குடிப்பதற்கும் நீர் கிடைக்கும். இம்மாதிரியான ஒரு திட்டத்தை அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்தவேண்டும். இது குறித்து மதிப்பீடு தயார் செய்தும் கூட அங்கீகரிக்கப்படாத நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக, போக்குவரத்து பற்றி ஒரு வார்த்தை. தஞ்சாவூர் மாவட்டத்தில் இணைப்புச் சாலைகள் போடுவது மட்டுமல்லாமல் அம்மாவட்டத்தில் ஆறுகள், வாய்க்கால்கள் இவை அதிகமாக இருப்பதால் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குச் செல்ல மிகவும் கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகளும் கஷ்டப்படுகிறார்கள். கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கும் கஷ்டமாகயிருக்கிறது.





ஆகவே அந்த மாவட்டத்தை விசேஷமாக எடுத்துக்கொண்டு இணைப்புச் சாலைகளையும், வேண்டிய ரோடுகளையும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல திட்டங்கள் உள்ளன. நானே ஒரு ஐந்தாறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று அரசாங்கத்தினிடம் முறையிட்டிருக்கிறேன், மனுக்களும் கொடுத்திருக்கிறேன். அவை இந்த ஆண்டு இதில் வரும் என்று நினைத்தேன். ஆனால் ஒன்று கூட வரவில்லை. கடைசியாக ஒன்றுகூறி முடித்துக்கொள்கிறேன். நம் ராஜ்யத்தில் 20,000 பேர்கள் அத்துக்கூலிகளாக இருக்கிறார்கள். அவர்கள் நெடுஞ்சாலை இலாகாவில் காங்கிமேனை வேலைபார்த்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டே இருக்கிறோம். அமைச்சர் அவர்கள் அவர்களை நிரந்தரமாக்குவதில் நியாயம் இருக்கிறது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் தயவு வைத்து அந்த 20,000 பேர்களையும் நிரந்தரமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் பல்வேறு தலைப்புகளின்கீழ் சற்றேறக்குறைய 56 கோடி ரூபாய் அளவில் மானியக் கோரிக்கைகளை நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அவை முன் வைத்திருக்கிறார்கள். அதன் மீதுள்ள விவாதத்தில் பங்கு பெற எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல நல்ல திட்டங்களை நாம் இந்த அறிக்கையில் பார்க்கிறோம். இந்த அறிக்கையில் கூவம் சீரமைப்புத் திட்டமும், பக்கிங்காம் கால்வாய் சீரமைப்புத் திட்டமும், இப்படி பல நல்ல திட்டங்கள் காணப்படுகின்றன. அதிலே காவிரி பிரச்னைபற்றி கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. மைசூர் மாநிலத்தோடு நம் முதல்வர் டாக்டர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிபற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கும்போது மத்திய அரசு அதைப்பற்றி கவனிக்காததோடு மட்டுமல்லாமல் மறைமுகமாக கர்நாடக மாநிலத்தை ஆதரிக்கிற நடவடிக்கையாக மத்திய திட்ட அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது காரணமாக தமிழகத்தை மத்திய அரசு புறக்கணிக்கிறது என்று நாம் எடுத்துக் கூறாமல் இருக்கமுடியாது.

வடிகால் திட்டங்கள் பற்றியும் இந்த மானியக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலையில் என் தொகுதி கடலோரப்

பகுதியில் இருப்பதாலும், கடைமடைப் பகுதியாக இருப்பதாலும், ஆறுகளும் சிறு சிறு நதிகளும் இடை இடையே புகுந்துவருவதன் காரணமாக கிராமங்கள் இணைப்பற்றுக் கிடக்கின்றன. அவற்றில் பாலங்கள் அமைப்பதென்றால், அவற்றை ஊராட்சி ஒன்றியங்கள் செய்வது என்று சொன்னால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதற்குப் போதுமான நிதி வசதி இல்லை. எனவே பொதுப்பணித் துறை மூலம் இடையிடையே பாலங்கள் அமைத்து சாலை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் வேதாரண்யம் கால்வாய் என்பது சற்றேறக் குறைய இருபத்தைந்து மைல்கள் குறுக்கே செல்கிறது. அந்தக் கால்வாய் பல கிராமங்களைப் பிரித்துவிடுகிறது. அந்தக் கால்வாயின் நடுவே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு என் தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு பல இடங்களில் இணைப்புச் சாலைகளும் அமைத்துத் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அழிச்சமங்கலம், பாலையூர் போன்ற இடங்கள் அரை மைல் தூரத்தில் இருந்தாலும்கூட மழைக்காலங்களில் நாகபட்டணத்திற்கு வரவேண்டுமென்றால் எட்டு மைல் சுற்றிவர வேண்டியிருக்கிறது.

உப்பன் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை பல நாட்களாகவே இருந்து வருகிறது. ஆகவே அந்தப் பாலத்தை விரைவில் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காரைக்காலுக்கும் நாகபட்டணத்திற்கும் செல்லும் வழியில் நாகூரில் வெட்டாற்றுப் பாலம் பழுதடைந்து இருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்தை புதுப்பித்துத் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் 1,600 கிலோ மீட்டர் நீளத்திற்கு பேருந்து வழித் தடச்சாலைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என் தொகுதியில் உள்ள சிக்கல்—பாலக்குறிச்சி பேருந்து சாலையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்கனவே கோரப்பட்டு வந்திருக்கிறது. அதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பாங்கோவில்—கருங்கண்ணிச் சாலையையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, தடுப்புச் சுவர்பற்றி இந்த அறிக்கையில் உள்ளது. அது போல் நாகபட்டிணம்—வேளாங்கண்ணியில் கடலரிப்பு ஏற்படுவதால் அங்கு தடுப்புச் சுவர்கள் கட்டித்தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கும் ஊராட்சி ஒன்றியம் 58 பஞ்சாயத்துக்களை பெற்று இருப்பதால்—எல்லா ஒன்றியங்களுக்கும் ஒதுக்கிற தொகையே இதற்கும் ஒதுக்குவதால்—பல இணைப்புச் சாலைகளை போடமுடியாமல் இருக்கிறது. அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. வீ. மலைக்கண்ணன் : அவைத் தலைவரவர்களே, உணவு உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கும் பொதுப்பணித்துறை மானியத்தை வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எங்கள் இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அது வறட்சியால் அடிக்கடி பாதிக்கப்படுவதும், அங்கே வாழும் விவசாயப் பெருங்குடி மக்கள் வானத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பதும் எல்லோரும் அறிந்த ஒன்றாகும். அங்கே இருக்கும் விவசாயிகள் அனைவரும் அவர்களுடைய நிலத்தின் பாசன வசதிக்காக கண்மாய்களையே நம்பியிருக்கிறார்கள். ஆனால் இப்போது நாம் மதிப்பீடு தயாரித்து கண்மாய்களை பழுது பார்த்து வரும் வேகத்தைப் பார்த்தால் இன்னும் 25 வருஷங்கள் ஆனாலும் கூட இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கண்மாய்கள் பழுது பார்க்க முடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஏற்கெனவே ஸ்டான்டர்டைஸ் பண்ணி பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் ஒப்படைத்து இருக்கும் கண்மாய்கள் 200 ஏக்கர் பாசனத்திற்கு கீழ் இருந்தால் அவைகளைப் பொதுப்பணித்துறையினர் பழுது பார்ப்பது இல்லை. பஞ்சாயத்து யூனியன் நிதிகளைக்கொண்டு அவைகளை சரிவர அவர்கள் பழுது பார்க்க முடிவதில்லை. ஆகவே, 200 ஏக்கர் பாசனத்திற்குக் கீழ் இருந்தாலும் அவற்றைப் பழுது பார்க்கும் பொறுப்பை பொதுப்பணித்துறைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்மாய்களுக்கு மதிப்பீடு தயாரிக்கும்போது கண்மாய்க்குத் தண்ணீர் வரும் கால்வாய்க்கும் சேர்த்து மதிப்பீடு தயாரிப்பதில்லை. இப்போது இருந்து வரும் பழக்கம் அது தான். அதனால் சரியான பலன் கிடைக்கவில்லை. கீழ் மட்டத்தில் இருப்பவர்களைக் கேட்டால் அதற்கான ப்ரொவிஷன் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள்.

[திரு. வீ. மலேக்கண்ணன்] [1972 மார்ச் 21

ஆகவே, ஒரு கண்மாய்க்கு மதிப்பீடு தயாரிக்கும்போது கண்மாய்க்கு தண்ணீர் வரும் கால்வாயையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராஜசிங்கமங்கலம் கண்மாய் எங்கள் மாவட்டத்தில் இருக்கும் பெரிய கண்மாய். அந்தக் கண்மாயில் மேல்நாட்டார் கால் என்று ரூ. 7½ லட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அந்த வேலே முடியும் தருவாயில் இருக்கிறது. அதற்காக அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போலவே அந்த கண்மாயில் கீழ் நாட்டார் கால் என்ற கால்வாய்க்கு மதிப்பீடு போட்டு அந்த மதிப்பீடு இப்போது இங்கே வந்திருக்கிறது. அதை சாங்ஷன் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, சாலேக்கிராமம் கால், ராதானூர் கால், ஆகிய வற்றிற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அவைகளேயும் சாங்ஷன் செய்து இந்த ஆண்டு வேலே துவங்குவதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மதிப்பீடுகளில் சிறு சிறு தவறுகள், குறைகள் இருந்தாலும், சில விவரங்கள் தேவையென்ருலும் இங்கேயிருந்து கீழே அனுப்பிவிடு கிருர்கள். அது இங்கும் அங்குமாக பயணம் செய்து கொண்டு இருக் கிறது. ஆகவே, அப்படிப்பட்ட குறைகள் இங்கேயே திருத்த முடியு மென்ருல், திருத்தி அந்த மதிப்பீடுகளே உடனடியாக சாங்ஷன் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக சாலே வசதிகளேப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் நம்முடைய ஆட்சி வந்தபிறகு தான் சாலேகள் அமைக்கப்பட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் பஸ்களில் போகிற நிலே வந்தது. இன்னும் பல சாலேகள் மோசமான நிலேயில் இருக்கின்றன. ஆயிரம் மைல் களுக்கு மேல் பேருந்துகள் செல்லும் சாலேகளே அரசாங்கம் எடுத்துக் கொள்வதாக அறிவித்திருப்பதற்காக நான் அதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

தேவக்கோட்டை, இணேயான்குடி, இராஜசிங்கமங்கலம், போகலூர் ஆகிய நான்கு பஞ்சாயத்து எல்லேகளேச் சேர்த்து ஓடிக் கொண்டிருக்கும் சாலே நயினுர்கோயிலிலிருந்து, சாலிக்கிராமம், சூராணம், வளனே வழியாக சருகணி செல்லும் சாலேயை அரசாங்கம் சீரமைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டுமென்று மாண்புமிகு



1972 மார்ச் 21] [திரு. வீ. மலேக்கண்ணன்]

அமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை கொடுத்து இருக்கிரும். அந்தச் சாலேயை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் ஆனந்தூர் செல்லும் சாலே—அதை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கூட அங்கு வந்திருந்த போது அழைத்துச் சென்று காட்டியிருக்கிறேன்—அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டு 10 ஆண்டுகள் ஆகியும் அந்த ரோட்டில் மெட்டல் பரப்பவில்லே. மெட்டல் பரப்பித் தார் போட ரூ. 8 லட்சம் ஆகும் என்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். நான்கு லட்சம் கொடுங் கள், பாலங்கள் கட்டி, மெட்டல் மட்டும் போட்டுக் கொடுத்தால் போதும் என்று சொல்லியிருக்கிறேன். அதையாவது செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களேப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போன்றே 10 ஆண்டுகளுக்கு முன்பு அரசு எடுத்துக் கொண்ட இரண்டு சாலேகள், பேருந்து செல்லும் சாலேகள்—உப்பூர் சாலே, திருவொற்றியூர் சாலே இருக்கிறது. மழை பெய்து விட்டால் அங்கே பஸ் போக முடியாது. அந்தச் சாலேகளேயெல்லாம் ஆண்டுக்கு 2 மைல் வீதம் மெட்டல் பரப்பினுல் 3–4 ஆண்டுகளில் அந்த வேலே முடிந்து விடும். இதற்கு எஸ்.இ. லெவலில் அதிகாரம் தந்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்—கேட்டால் டி.இ. லெவலில் செய்யமுடியாது என்று சொல்கிருர்கள். ஆகவே, இந்தச் சாலேகளுக்கு மெட்டல் போடுவதை ஒரு பேஸ்ட் ப்ரோ கிராமாக போட்டு, மொத்தமாக 8 லட்சம் 10 லட்சம் ஒரு ஆண்டில் ஒதுக்க முடியாவிட்டாலும், ஆண்டு ஒன்றுக்கு 2 அல்லது 3 லட்சம் ஒதுக்கி 4–5 ஆண்டுகளில் அதை நல்ல சாலேகளாக ஆக்கமுடியும். அந்த மாதிரி செய்வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். கடற்கரைச் சாலே சுந்தரபாண்டியன் பட்டணம், தேவிப் பட்டணம் வரையில் போட்டுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. அபுசாலி: தலேவரவர்களே, பொதுப்பணித் துறை மானியத்தின் மீது இரண்டொரு கருத்துக்களேச் சொல்ல ஆசைப்படு கிறேன்.

காட்டுமன்னுர்குடி–சிதம்பரம் வழியாக வரும் ரோடு 15 மைல் இருக்கிறது. குறிப்பாக ஒரு நாள் ஒன்றுக்கு 126 பஸ்கள் ஓடுகின்றன. அதைத் தவிர எத்தனேயோ லாரிகளும், கட்டை வண்டிகளும் ஓடிக்

[திரு. எம். ஏ. அபுசாலி] [1972 மார்ச் 21

கொண்டிருக்கின்றன. அந்த ரோடு நூற்றுக்கணக்கான வளைவுகளைக் கொண்டதாக உள்ளது. இருபுறமும் வாய்க்கால்கள் இருக்கின்ற காரணத்தால் அந்த ரோடை சரிவர பயன்படுத்த முடியாமல் எத்தனையோ கஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை நேராக்கித் தருமாறு மிகப்பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

லால் பேட்டையில் இருக்கிற அந்த ஏரியிலிருந்து தண்ணீர் எடுத்து கள்ளிமேடு, ஆடுர் போன்ற கிராமங்களுக்குத் தருகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் பொதுவாக ஒரு நாள் ஒன்றுக்கு நான் நினைக்கிறேன் 10 ஆயிரம் பேர்களுக்காவது வேலை கொடுக்கும் கிராமமாக இருக்கிறது. அவர்கள் பூராவும் 30,000—35,000 விவசாயிகள்—அந்த ஊரில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் கொடிகால் வேலைதான் தெரியும். மற்ற வேலைகள் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். அந்த நிலையிலுள்ள ஒரு கொடிகால் செய்யும் விவசாயிகளுக்கு தண்ணீர் தந்து—ஒரு நேரத்தில் குறைவாகத் தருகிறார்கள், ஒரு நேரத்தில் அதிகமாகத் தருகிறார்கள்—அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த கொடிகாலுக்கு எந்த நேரத்திலும் தண்ணீர் தேவைப்படுகிறது என்று சொல்லப்படுவதால், அந்த கிராமங்களுக்கு எந்த நேரத்திலும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்வராஜன் பேட்டையிலிருந்து காட்டுமன்னார்குடிக்கு ஒரு ரோடு இருக்கிறது. பல்லாண்டுகாலமாக அவர்களுக்கு ரோடு வசதி கிடையாது. ஒரு வெள்ளம் வந்த காலத்தில் கூட அவர்கள் இந்த ரோடு வசதி இல்லாததால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். அந்த இடத்தில் ஒரு பாலம் கட்டவேண்டும்.

பரங்கிப்பேட்டையிலிருந்து சிதம்பரம் வரையில் உள்ள ரோடு—16–17 மைல் உள்ள ரோடு—வளைவுகள் நிறைந்த ரோடாக இருக்கிறது. பரங்கிப்பேட்டைக்கும் பொன்னந்தட்டு கிராமத்திற்கும் இடையே ஒரு பாலம் கட்டிக்கொடுத்தால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்களுக்கும், அந்தப் பகுதியில் இருக்கும் கிராம மக்களுக்கும் மிகவும் பயனுடையதாக இருக்கும். அந்தப் பாலம் நீண்ட நாட்களாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதை மிகவும் அவசியமாக போட்டுக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிச்சைவரம் பகுதியில் கொத்தவாச்சேரியில் 1,000 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களுக்கு தண்ணீர் வசதி இல்லை.



1972 மார்ச் 21] [திரு. எம். ஏ. அபுசாலி]

அந்தப் பகுதியில் பாசன வசதிக்காக ஒரு அணைக்கட்டு போட்டுக் கொடுத்தால் அந்த நிலங்களுக்கு பாசன வசதிக்கு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

என்னுடைய தொகுதி புவனகிரியைப் பொறுத்தவரையில் ஆலம் பாடியிலிருந்து–மருதூர் வழியாக உள்ள பாதையில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாலம் கட்டிக்கொடுத்தால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு நல்ல பலனளிக்கும் என்று சொல்லிக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைக்கூறி விடைபெறுகிறேன்.

* திரு. வி. பழனிவேலு : பேரன்புகொண்ட தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறையினுடைய 1972–73-ம் ஆண்டினுடைய மானியக் கோரிக்கையின் மீது நான் சில வார்த்தைகளைப் பேச ஆசைப் படுகிறேன்.

1967-ம் ஆண்டிலிருந்து நமது அரசு ஏற்பட்டதற்குப் பிறகு பல நல்ல திட்டங்களை தீட்டி நடத்திவருகிறது. விவசாயிகளுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் நல்ல சாதகமான முறையில், நல்ல திட்டங்களை தீட்டி மக்களுக்கு நன்மை செய்துகொண்டு வருகிற நமது டாக்டர் கலைஞர் அமைச்சரவையையும், அவர்களையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் பாதைகள் அமைப்பதற்கு திட்டங்கள் வகுத்து நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. பாதை அமைப்புத் திட்டங்கள் சாதாரணமாக கிராம மக்களுக்கு மிகவும் நல்ல வசதிகளை உண்டாக்குகின்றன. இந்தத் திட்டத்தை எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தி, பாதைகள் நல்ல முறையில் சீர்திருத்தி போடப்பட்டால், பசுமை புரட்சி மிகவும் நல்ல முறையில் செயல்பட வசதியாக இருக்கும். விவசாயிகளுக்கு போக்குவரத்து வசதி நல்ல முறையில் அமைந்தால் தான், விவசாயி தனது நிலத்திற்கு வேண்டிய மண், எரு, தழை, உரம் இவைகளையெல்லாம் கொண்டு போய் சேர்த்து, தீவிரமான முறையில் விவசாயம் செய்வதற்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்ற அடிப்படையில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனது தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். எனது தொகுதியில் அநேகமாக எல்லாப் பகுதிகளும் மலைப்பாங்கான கல்ராயன்மலை, கொல்லிமலை பகுதியாக இருக்கின்றன. அங்கே பல நீர்த் தேக்கங்கள் ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மழைக் காலத்தில் மழை பெய்யும்

பொழுது மழைத் தண்ணீர் அனைத்தும் வசிஷ்ட நதி மூலம் சென்று வீணாகப்போய்கொண்டிருக்கிறது. ஆகவே, மழைத் தண்ணீரை ஆங்காங்கு அணைகளிலும், ஏரிகளிலும், குட்டைகளிலும் தேக்கி, நீர் தேக்கங்கள் ஏற்படுத்தினால், நல்ல வசதியாக இருக்கும். மழை காலத்தில் கிடைக்கும் தண்ணீரை அப்படி தேக்கினால், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு கிணறுகளுக்கு நல்ல தண்ணீர் ஊற்று கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கல்லாறு—பெத்தநாயக்கன்பாளையம் திட்டம், மலையாறு—இராமநாயக்கன்பாளையம் திட்டம் ஆகிய திட்டங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளன. இந்தத் திட்டங்களை விரைவில் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மூலக்கரடு ஓடை, பைத்தூர் புதூர் கிராமம், மூலப்பள்ளி ஓடை, சீலியம்பட்டி, பெரும்பள்ளம் ஓடை, தாண்டவராயபுரம், செட்டியணைச் சேனல், கல்லாறு, பெரிய சாமி கோயில் அருகில் இராமநாயக்கன்பாளையம், மாயமலை, ஈஸ்வரமலை, ஈஸ்வரமூர்த்திப்பாளையம் முதலிய திட்டங்களை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பைத்தூர் அணைக்கட்டு ஆத்தூருக்கு ஏறக்குறைய 4, 5 மைல் தூரத்தில் இருக்கின்றது. இந்த அணையைக் கட்டினால் சுமார் 20, 25 கிராமங்கள் பயனடைய வாய்ப்பாக இருக்கும். ஆகவே, முக்கியமாக இவைகளை உடனடியாக கட்டிக்கொடுப்பார்கள் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

ரெட்டி அணை, கல்பகனூர், எருத்துக்கரடு, தாயங்கரடு, மங்களபுரம், கொட்டவாடி அணைக்கட்டு, சின்னசமுத்திரம் ஏரி, பனை ஏரி ஆகியவற்றுக்கு வசிஷ்ட நதியிலிருந்து கால்வாய் வெட்டிக்கொண்டு செல்லல் ஆகிய திட்டங்களை விரைவில் செயல்படுத்தினால், தண்ணீர் தேக்கம் ஏற்படும், தண்ணிர் விரையம் ஆகாமல் விவசாயிகளுக்கு மிகவும் நன்மை பயப்பதாக இருக்கும். ஐயனார்கோவில் ஏரி, கல்லாநத்தம் ஏரி, ஆத்தூர் புதிய ஏரி ஆகியவற்றிற்கு வசிஷ்ட நதியிலிருந்து கால்வாய் வெட்டிக்கொடுத்தால் எல்லா ஏரிகளுக்கும் நீர் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

ஆத்தூர் பாலத்திலிருந்து எத்தாப்பூர் பாலம் வரை சுமார் 11 மைல் தூரம் இருக்கிறது. மழை காலத்தில் வசிஷ்ட நதியில் அதிகமாக தண்ணீர் வருவதால் ரோடு உடைப்பு எடுத்துக்கொண்டு விடுகிறது. பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஏறக்குறைய 25 கிராமங்களிலிருந்தும் ஆத்தூர் பகுதிக்கும் சேலத்திற்கும் வரமுடியாமல் பெரிய கஷ்ட நிலையாக இருக்கிறது. அந்த இரண்டு பாலத்திற்கும் நடுவே 11 மைல் இருக்கிறது. அங்கே நல்ல ரோடு வசிஷ்ட





நதிக்கு வடக்கே, கீழ் மேலாக இல்லாமல் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு நல்ல ரோடு அமைத்துக்கொடுத்தால் விவசாயிகளுக்கும், எல்லா மக்களுக்கும் மிகவும் வசதியாக இருக்கும். கல்ராயன் மலை பகுதியிலுள்ள மக்கள் பயனடைய வசதியாக இருக்கும்.

மேலும் ஆத்தூர்—ராசிபுரம் பாதையில் ஈசமுத்துபாளையம் அருகாமையில் ஒரு பாலம் கட்டாமல் நீண்ட நெடுங்காலமாக ஒரு பெரிய குறையாக இருக்கிறது. அந்தக் குறையை நீக்கவேண்டும். அதே பாதையில் சஞ்சருவான் கணவாய் செங்குத்தாக இருப்பதால், லாரிகள், வண்டிகள் கவிழ்ந்து பல பேர் உயிரை இழக்கவேண்டிய கஷ்டமான நிலை இருக்கிறது. அந்தப் பாதையை வளைவு பாதையாக அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்—ஆத்தூர் பாதைக்கும், ஆத்தூர்—ராசிபுரம் பாதைக்கும் இடையில் சுமார் 8 மைல் இருக்கும் குறுக்கு பாதையை நல்ல முறையில் அமைத்து பஸ் போக்குவரத்து ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்............(மணி அடிக்கப்பட்டது)

* திரு. தொ. க. சிறைமீட்டான்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மான்யத்தை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எங்கள் பகுதியில் பல விவசாயிகள் குளங்கோர்வை நிலங்களில் பட்டா கிடைக்காமல் தண்டத் தீர்வை செலுத்திக் கொண்டு வந்தார்கள். ஜமீன் காலத்தில் சொந்த நிலமாக இருந்து இடைக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பட்டாவை விட்டு நீக்கப் பட்டு விட்டார்கள். நமது அரசு வந்தவுடன் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உதவியாலும், பொதுப்பணித் துறை அமைச்சர், வருவாய்த்துறை அமைச்சர் தொழில் அமைச்சர் எல்லோரும் முழு முயற்சியோடு அங்குள்ள விவசாயிகள் கூறுவதை நேரில் கேட்டு அறிந்து, விவசாயிகளுடைய தண்டத் தீர்வையை ரத்து செய்து, 65,000 ஏக்கர் நிலங்களுக்கு பட்டா வழங்க அரசு உத்தரவிட்டதைப் பகுதி மக்கள் பாராட்டுகிறார்கள். அவர்கள் சார்பாக நான் முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வைகை கால்வாய் திட்டத்தினால் இராமநாதபுரம் மாவட்டத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும் என்ற வகையில் பல ஆண்டு காலமாக அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருந்தது, செயல்படாமல் இருந்தது. நமது அரசு வந்ததற்குப் பிறகு அது நல்ல முறையில்

செயல்படத் தொடங்கியிருக்கிறது. விரகனூர், பார்த்திபனூர் அருகாமையில் இரண்டு பொறி மதகுகளும், கால்வாய் வெட்டும் வேலைகளும் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள விவசாய மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் வகையில் அங்குள்ள பெரிய கால்வாய்களெல்லாம், கிளைப் பிரிவு கால்வாய்களெல்லாம் நல்ல முறையில் மராமத்து செய்யப்பட்டு வருகிறது. அந்த பிரிவுக் கால்வாய்களையெல்லாம் குடிகளே மராமத்து செய்யவேண்டும் என்ற ஒரு திட்டம் இருப்பதால், குடிகள் அவைகளை மராமத்து செய்வதற்கு இயலாத நிலையில் இருப்பதால், பொதுப் பணித் துறையினரே அவைகளை ஏற்றுப் பராமரிப்பு செய்தால், விவசாயிகளுக்குப் பலன் அளிக்கக்கூடியதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் பல பெரிய கண்மாய்களெல்லாம் பொதுப்பணித் துறை மூலமாக பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. சிறிய கண்மாய்களாக இருந்தால், 200 ஏக்கர்களுக்கு உட்பட்ட கண்மாய்களாக இருந்தால், பஞ்சாயத்து யூனியன் மராமத்து செய்யவேண்டுமென்று ஒரு திட்டம் இருந்துவருகிறது. ஆனால், ஊராட்சி ஒன்றியங்களால் சரியான முறையில் அவைகளை பராமரிப்பு செய்ய முடியவில்லை. இதன் காரணமாக பல கண்மாய்கள் மராமத்து செய்யப்படாமல் தூர்ந்து போய் இருக்கிறது. மழைக் காலத்தில் தண்ணீர் தேக்க இயலாமல் உடைப்பு எடுத்து, விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். ஆகவே, எல்லா கண்மாய்களையும், சிறிய கண்மாய்கள், பெரிய கண்மாய்கள் என்று பாராமல், நீர்ப்பாசன ஏரிகள் எல்லாவற்றையும் பொதுப்பணித் துறை ஏற்று, மராமத்து செய்தால் மிகவும் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், மேலநாட்டார் கால்வாய், அறியாங்கோட்டை அருகாமையில் நல்ல முறையில் மராமத்து செய்யப்பட்டு வருகிறது. வட பகுதியிலுள்ளவர்கள் தெற்கே ரோடுக்கு வரவேண்டுமென்றால் கால்வாயை கடந்து செல்லவேண்டியிருக்கிறது. அந்தக் கால்வாயில் ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் களறிக்கால்வாயில், சத்திரக்குடி அருகாமையில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூத்தன் கால்வாயில் பாலம் கட்டாமல் இருக்கிறது. பாலங்கள் பொதுப் பணித்துறையின் மூலம் கட்டவேண்டியிருக்கிறது. ஆனால் பஞ்சாயத்து யூனியன் ரோடுகளில் உள்ள கால்வாய்களில் பாலங்கள் கட்டுவதற்கு அதிக பணம் ஒதுக்கவில்லை; ஆகவே மெதுவாகத் தான்



செய்ய முடியும் என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே, கால்வாய்களை மராமத்து செய்து, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் நகரங்களுக்கு வருவதற்கு, இடையிலே இருக்கிற கால்வாய்களில் பாலங்கள் கட்டுவது மிகவும் அவசியம். என்னுடைய தொகுதியில் இந்த மூன்று பாலங்களையும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், நைனார் கோவில்—தேவிபட்டணம் ரோடு நேரடிப்பாதை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து தள்ளிப் போடப்பட்டு வருகிறது. அந்தப் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் வந்தபோது பட்ட கஷ்டம் தெரியும். மழைக் காலத்தில் தீவு போலக் காட்சியளிக்கிறது. அந்த ரோடு இன்னும் செயல்படவில்லை. அரசாங்கம் எடுத்து அதை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* <u>திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:</u> துணைத் தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டுக்கான பாசன, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது என் கட்சி சார்பாக கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற முற்படுகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் விவசாயிகளுக்கு கிணறு வெட்ட, பம்ப்செட் அமைக்க நில வள வங்கி மூலம் கொடுக்கப்பட்டு வந்த கடன் வசதிகள் தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பாகக் கேள்விப் படுகிறேன். அடுத்து கூட்டுறவு வங்கி மூலம் கொடுக்கப்பட்ட கடன் வசதிகளும் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இதனால் திருநெல்வேலி ஜில்லாவில் வரண்ட பகுதிகள் மேம்பாடு அடைய முடியாது அவதிப் படும் சூழ்நிலை இருக்கிறது. புதுக் கிணறு வெட்ட, பம்ப் செட் அமைக்க விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அத்துடன் நமது சர்க்கார் உலக பாங்குடன் செய்துகொண்ட ஒப்பந்த அடிப் படையில் திட்டம் செயல்படாத சூழ்நிலை இருப்பதால், வறண்ட பகுதி மக்கள் விவசாயத்தால் மாகாணத்தை மேம்பாடு அடையச் செய்வதற்கான திட்டத்தை செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. அதை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் அரசு அதற்கு ஆவன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடனா நதி–ராம நதி திட்டத்திற்கு தேவையான தொகை பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்தத் திட்டம் எப்போது முடிவடையும், எப்போது அந்த அணையிலிருந்து

தண்ணீர் திறந்து விடப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதே சமயம் கடனாநதி—காங்கயம் கால்வாய் மூலம் பாசன வசதி செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் காலில் வரும் தண்ணீர் பெருகி ஒவ்வொரு குளங்களுக்கும் வருகிறது. கால் வசதி இல்லாத குளங்களுக்கு தனியாகக் கால்வாய் அமைத்து அந்தக் குளங்களுக்கு தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு சில குளங்கள் மட்டும் பெருகுவதால் அங்கே உள்ள விவசாய மக்களிடையே வீண் தகராறு ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து, முக்கூடல்—விரவநல்லூர் பாலம் முக்கியமான பாலமாகும். அதை என்னுடைய பட்ஜெட் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஆகவே அதை முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கூடல்—கடையம் ரோடு 1952-க்கு முன்பு போடப்பட்ட திட்டம். அது 10 ஆண்டுகளுக்குப் பின் 1962-ல் பாப்பாகுடி பஞ்சாயத்து யூனியனால் செயல்முறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர்களுக்கு நிதி வசதி இல்லாததால் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பொதுப்பணித் துறையால் அந்த ரோடு வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்த ரோடு இன்னும் முடிவு பெறாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அது கிட்டத்தட்ட 20, 25 கிராமங்களை இணைக்கும் ரோடாகும். ஆகவே அந்த ரோடை உடனடியாக முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது மாநிலத்தில் சிவில் என்ஜினியரிங் படித்த வேலையில்லாமல் இருக்கும் என்ஜினியர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு உண்டு பண்ணிக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எனது ஏரியாவில் குளங்கள் மராமத்து செய்து எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. அவற்றை உடனடியாக மராமத்து செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிசம்பர் மாதக் கடைசியில் பெய்த மழை காரணமாக மணிமுத்தாறு பாசன ஏரியாவில் உள்ள நிலங்களுக்கு தாமதமாகப் பாய்ந்ததால், இந்த மார்ச் மாதம் முடிய வேண்டிய அறுவடை இன்னும் 20—25 நாட்களாகும் சூழ்நிலை இருக்கிறது. ஆற்றில் இப்போது தண்ணீர் திறந்து விட முற்பட்டால் விவசாய மக்களுக்கு மிகவும் பாதகம் ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இன்னும்





20, 25 நாட்களுக்கு மணிமுத்தாறு அணையில் 80 அடிக்கு குறையாத சூழ்நிலை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* திரு. பி. பொன்சொக்கலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின் மீது அதை வரவேற்றுப் பேசும் வாய்ப்பு பெற்றமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்றைய தினம் இந்த நீர்ப்பாசனத் துறை 20 ஆண்டு காலத்திற்குப் பின்னர் குறிப்பாக தமிழகத்தில் சிறப்பாக நல்ல வேலை செய்து வருகிறது என்பதை நினைக்கும்போது நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில் நீர்ப்பாசனத் துறையில் இருக்கக் கூடிய அதிகாரிகள் சிறப்பாக வேலை செய்திருக்கிறார்கள் என்பதை சில பல இடங்களில் பார்க்கின்றபோது, உள்ளபடியே அதை நேராக, கண்கூடாகப் பார்த்து பல பேராலே பாராட்டப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியான சிதம்பரம் தொகுதியில் 20 ஆண்டுக் காலமாக தூர் வாரப்படாமல் மோசமான நிலையிலிருந்து சிதம்பரத்திற்கு அருகிலிருக்கும் பொன்னேரி என்ற ஏரி, இந்த மாமன்றத்தில் 3 தடவை சட்ட மன்ற உறுப்பினராக இருந்த திருவாளர் வாகீசம் பிள்ளை ஊரில் இருந்த ஒரு பெரிய ஏரி, தூர் வாரப்படாமல் இருந்த இடம் இப்போது தூர் வாரப்பட்டு சிறப்பான வேலை என்று அந்தப் பகுதி மக்களால் பாராட்டப்பட்டது. அந்த ஏரி நீர்ப்பாசனத்திற்கு சிறப்பாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைப்போல திருமுட்டம் பகுதியில் பல ஏரிகள் வேலை செய்து வருகிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆனால், இந்த சென்னை மாநகரத்திற்கு குடி தண்ணீர் கொண்டு வருவதற்கு உறுதுணையாக, ஏற்ற இடமாக இருக்கும் வீராணம் ஏரி தூர் வார வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் அவர்களிடமும், பின்னர் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் அந்த ஏரியை தூர் வாரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த ஏரியை ஆழப்படுத்தினால், அந்த ஏரி மண்ணை எடுத்து சிதம்பரம் வட்டாரத்தில் சாலைகளை அகலப்படுத்துவதற்கு அந்த ஏரி மண்ணை அடித்தால், அந்தப் பகுதியில் உள்ள நஞ்சை நிலங்களுக்கு எருவாகப் போடவும் உபயோகப்படும் என்று

சுட்டிக் காட்டியிருக்கிறேன். அதற்கு அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதை இந்த திட்டத்தில் சேர்த்திருப்பார்கள் என்று ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். அதைச் சேர்க்காதது எனக்கு வருத்தம் அளிக்கிறதென்றாலும், அதை உன்னிப்பாக கவனித்து மீண்டும் அதை செய்து தருவார்கள் என்று நம்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திற்கு அருகாமையில் இருக்கும் சிதம்பரம் பகுதியில் அதிக விளைச்சல் தரக்கூடிய பகுதி. அதில் தீவிர சாகுபடி செய்யக்கூடிய 7, 8 ஏரிகளையும், இன்னும் அதி தீவிர சாகுபடி செய்ய வேண்டி மேற்படி 8 ஏரிகளையும் கொண்ட பகுதியான திருமுட்டம் பகுதி ஏரிகளை உடனடியாக தூர் வாரவேண்டும் என்றும் சிறப்பான சாலைகள் போடுவதற்கும் கடந்த இதே சட்ட மன்றத்தில் நான் சொல்லியுள்ளேன். சிதம்பரம்—சேத்தியாதோப்பு பாதையில் ஒரத்தூர் கோணற்று மூலைக்கு அருகே 4, 5 கிலோ மீட்டர் பாழடைந்திருக்கின்றன என்று சொல்லியபோது பி.டபிள்யூ.டி. அதிகாரிகள், ஹைவேஸ் அதிகாரிகளைச் சுட்டிக் காட்ட, ஹைவேஸ் அதிகாரிகள் பி.டபிள்யூ.டி. அதிகாரிகளைச் சுட்டிக் காட்ட, அந்த இடம் இன்னும் பழுது பார்க்க முடியாத சூழ்நிலை இருக்கிறது, என்பதை நான் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். எனவே ஏதோ ஓரிடத்தில் கோளாறு இருந்து கொண்டிருக்கிறது. ஒரு பகுதியில் சிறப்பாக வேலை செய்கிறார்கள். ஒரு பகுதியில் வேலை செய்ய முடியாமல் இருக்கிறது. எனவே அந்தக் குறைபாடுகளைப் போக்கினால் அந்தப் பகுதி மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு வசதியாக இருக்குமென்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பு. செ. முத்துச்செல்வன்: தலைவரவர்களே, இந்தப் பொதுப்பணித் துறை மானிய கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பொதுப்பணித் துறையில் நாம் எவ்வளவுதான் செலவு செய்தாலும் பொதுமக்களை நாம் திருப்திபடுத்த முடியவில்லை. நாம் கோடிக்கணக்கான ரூபாய்களை ஆண்டுக்காண்டு அதிகப்படுத்தி செலவழித்தாலும் பல பிரச்சனைகளில் தீர்வு காணமுடியாத நிலை இருக்கிறது. பொதுவாகப் பொதுப்பணித் துறையில் பணியாற்றுகின்ற நீர்ப்பாசன இலாகா, கட்டிட சம்பந்தப்பட்ட பணிகள், இன்னும் சாலை பராமரிப்புப் பணிகள் சம்மந்தப்பட்ட இலாகா ஆகிய





பிரிவுகள் மேலும் விரைவாகப் பணியாற்றினால் நாம் பொது மக்களுடைய நம்பிக்கையையும் நல்ல முறையிலே பெறமுடியும். அந்த வகையில் இந்த மூன்று பிரிவுகளையும் தனித்தனி வாரியங்களாக அமைத்து, அந்தந்த வாரியத்தின் மூலமாக நாம் பணத்தை ஒதுக்கி, பணிகளை செய்ய வேண்டுமென்று பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவேரி ஆற்றில் மைசூர் அரசாங்கம் அணை கட்டி வருவதன் காரணமாக திருச்சி மாவட்டம் முதலிலே பாதிக்கப் படக்கூடிய மாவட்டமாக இருக்கிறது. அதற்கு சுமுகமான முறையில் மத்திய அரசாங்கத்தோடு பேசி, தீர்வு காணவேண்டுமென்று முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களையும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனம் சம்மந்தப்பட்ட காரியங்களில் நமது நீர்ப்பாசனத் திட்டமாக எஸ்டிமேட் தயாரிக்கப்படும்போது ஒரு டன்னுக்கு 3,000 ரூபாய் செலவிடலாம் என்ற நிலை இருக்கிறது. அது 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட எஸ்டிமேட். அது இன்றைய விலைவாசி நிலவரத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது மிகவும் குறைவாக இருக்கிறது. எனவே ஏறிவருகின்ற விலைவாசிகளுக்குத் தக்கபடி ஒரு டன்னுக்கு 5,000 ரூபாய் செலவு செய்யக்கூடிய நிலையை உருவாக்கவேண்டும். அப்போதுதான் பல காரியங்கள் அன்-எக்கனமிக்கல் ஸ்கீம் என்று சொல்லப்படுபவை எக்கனமிக் ஸ்கீம் ஆக இருக்கும். அந்தவகையில் அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் பல காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. முதலிலே செய்யப்பட்டக் காரியங்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் முசிரி—குளித்தலை பாலத்திற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் அனுமதி அளித்து, அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள். அதைக் குறைந்தது $1\frac{1}{2}$ ஆண்டிலாவது கட்டி முடித்துவிட்டால் திருச்சி மாவட்டம் மட்டுமல்ல, அண்டை மாவட்டங்களில் இருக்கின்ற மக்கள் எல்லாம் பயன் பெறுவார்கள். எனவே அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் அறிஞர் அண்ணா பெயரில் ஒரு கல்லூரி அமைக்கப்படுவதற்கு ஏறத்தாழ $8\frac{1}{2}$ லட்சம்

ரூபாய் மதிப்புள்ள கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் மாணவர்கள் விடுதி கட்டுவதற்கு அரசாங்கத்தில் அனுமதி பெற இங்கே பொறியாளர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் விரைவாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் இன்னும் பல நீர்ப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. ஜேடர்பாளையம் வாய்க்கால் திட்டத்தை விரைவாக நிறைவேற்றினால் பல தாலுகாக்கள்—நாமக்கல் முதல் அரியலூர் வரையுள்ள பகுதிகள்—பயனடையும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொல்லிமலைச் சாரலில் அய்யாற்றில் நீர்த்தேக்கம் கட்டுவதற்கு ஏறத்தாழ 2½ கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள வேண்டிய அனுமதி கோரி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதையும் விரைவாக நிறைவேற்றினால் என் தொகுதி மக்கள் பயன் பெற வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

என் தொகுதியில் மணியம்பட்டி கிராமத்தில் ஒரு ஏரி ரூ. 4½ லட்சம் செலவில் அமைத்தும், சித்தாம்பூர் ஏரிக்கு தண்ணீர் வருவதற்கு அய்யாற்றின் குறுக்கே கலிங்கல் கட்டியும், திருப்பட்டூர் கொனிலே கிராமத்திற்கு அருகில் உள்ள ஆற்றில் ஒரு அணை கட்டி, நீர்த்தேக்கம் அமைத்துத் தரவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று திருத்தலையூர்–டி. புதூர் வாய்க்கால் திட்டத்தை ஏறத்தாழ 1,42,000 ரூபாய் செலவில் அமைத்து, சாத்தனூர் அருகில் உள்ள ஒன்றிய ஏரிகளை இணைக்க வேண்டும். அவைகளை இணைப்பதன் மூலம் அது பல ஏக்கர் பாசனம் பெறக்கூடியத் திட்டமாகும்.

ஒன்றியச் சாலைகள் பல என்னுடைய தொகுதியில் உள்ளன. அவற்றில் ஒரு சாலை கூட அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்தச் சாலைகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுப்பணித்துறை அமைச்சரவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் டி. புத்தூர்–வாத்தலை சாலை, டி. புத்தூர்–மூவானூர் சாலை, காட்டாம்பட்டி–சிறுகாம்பர் சாலை, புலிவலம்–தின்னனூர்–புத்தனாம்பட்டி சாலை, எதுமலை–சிறுகனூர் சாலை, எதுமலை–செட்டிகுளம் சாலை, பொகம்பி–தேசிய நெடுஞ் சாலையை இணைக்கும் சாலை, ஆகிய இந்த சாலைகளை அரசே ஏற்று நடத்துவதோடு, காவிரி டெல்டா பகுதியில் சாலைகள் அமைத்துத் தரவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, இந்த சாலை பராமரிப்புகள் பணியாற்றக்கூடிய நம்முடைய சாலை பராமரிப்புப் பணியாளர்கள் மிகவும் நல்லமுறை யில் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை இப்போது டெம்பரரியாக நியமித்திருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கவும் நமது அரசு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற முன்வருகிறேன்.

இந்த அரசு 1972 முடிவுக்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்துவிடுவதற்கு திட்டம் வைத்திருப்பது போல 1972, 1973, 1974, 1975 ஆண்டுகளுக்குள் எல்லாக் கிராமங் களுக்கும் ரோடு வசதி செய்து கொடுத்துவிட வேண்டுமென்ற ஒரு திட்டத்தையும் வகுத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பெரிய நகரங்களில், பெரிய புதிய பல சாலைகளை அமைக் கிறோம், பின்னை ஓவர் பெருஞ்சாலைகளை அமைக்கிறோம். அதற்காக ஏராளமான பணத்தையும் செலவிடுகிறோம். ஆனால் கிராமங்களில் ஒரு ஊரிலிருந்து பிறிதொரு ஊருக்குப் போக போதுமான ரோடு வசதி இல்லை. மழைக்காலங்களிலே பெண்கள் நடந்து செல்லமுடி யாத அளவுக்கு கஷ்டப்படுகிறார்கள். அதைப் போக்குவதற்கு உடனடியாக நாம் ஒரு காலவரையறையை வகுத்துக் கொள்ள வேண்டும். அந்த காலகட்டத்திற்குள் இந்தத் திட்டத்தை நிறை வேற்றவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி ரோடு அமைப்புப் பணியிலே வேறு ஏதாவது காரணங் கள் சொல்லலாம். பஞ்சாயத்துக்கள், டி.டி.சி. இவைகளிடமிருந்து பரிந்துரை வரவேண்டுமென்று சொல்லலாம். அந்த விதிமுறைகளை யெல்லாம் விட்டுவிட்டு, எந்த எந்தப் பகுதிக்கு அத்தியாவசியமான தேவை என்று தெரிகிறதோ அந்தப் பகுதி ரோடுகளை எல்லாம் அரசாங்கம் நேரடியாக ஏற்றுக்கொண்டு, போதிய வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நமது தமிழகத்தில் இருக்கக்கூடிய கண்மாய்கள் எல்லாம் மராமத்து செய்யப்படவேண்டும். மதகுகளுக்குப் பக்கத்தில் சமுதாயக் கிணறுகள், ஆழக்குழாய்க் கிணறுகள் (மு

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1972 மார்ச் 21

போர் வெல்ஸ்) ஏற்படுத்துவதற்கு ஒரு காலகட்டத்தை நிர்ணயித்துக்கொண்டு அதற்குள் இவற்றை எல்லாம் முடித்துவிட வேண்டும் என்பதாக ஒரு திட்டம் வகுத்து படிப்படியாகச் செயல்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரை சேதுசமுத்திரத் திட்டம் மிக முக்கியமான திட்டம். கால்வாய் எங்கு வெட்டுவது என்கிற தகராறில் அது நின்றிருப்பதாகத் தெரிகிறது. எந்த இடத்தில் வெட்டினாலும் பரவாயில்லை—எவ்வளவு ரூபாய் செலவழித்தாலும் பரவாயில்லை—அந்தத் திட்டத்தை சீக்கிரமாகச் செயல்படுத்த வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. மிகமிகப் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டம் தொழில் வளத்தில் சிறக்க அந்தத் திட்டத்தை உடனடியாக அரசு நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குப் பகுதியில் உள்ள ஆறுகளில் தண்ணீர் இருக்கிறது. அவை கேரள மாநிலத்தைச் சேர்ந்த பகுதி. கேரள மாநிலம் நமது அண்டை மாநிலமாதலால் அவர்களுடைய தேவைக்குப்போக வீணாகும் தண்ணீரை அவர்கள் நமக்குத் தர மனிதாபிமானத்துடன் முன்வருவார்கள் என்றே நினைக்கிறேன். அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி அங்கு உபரியாக இருக்கும் ஆற்று நீரையும் பெறுவதற்கு—சற்றும் தயங்கிவிடாது அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிருதுமால் நதியைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அந்த நதியின் ஆரம்பம் மதுரைதான். மதுரையில் அந்த நதியின் இரு பக்கங்களில் கடைகளும், வீடுகளும் வந்து அது நதியா, ஓடையா என்கிற அளவில் இருக்கிறது. வைகையில் பொறி மதகுகள் கட்டி, மீதமுள்ள தண்ணீரை கிருதமால் நதியில் திருப்பிவிடுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் கடந்த 14 வருடங்களாக இருந்து வருகிற ஒருசில குறைகள் இருக்கின்றன. குறிப்பாக குல்லூர் சந்தை, பெரிய வள்ளிக்குளம், பாலவ நத்தம், டி. மீனாட்சிபுரம், ஆண்டிப் பட்டி, சேதுராஜபுரம், எம். மீனாட்சிபுரம், தெற்கு நத்தம், வடக்கு நத்தம் என்பதாக பதினான்கு புதிய கண்மாய்த் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. ஆனால் திருவிருந்தாள்புரம், கஞ்சம்பட்டி ஆகிய இரண்டு கண்மாய்த் திட்டங்கள்தான் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. குல்லூர் சந்தைத் திட்டம் கிட்டத்தட்ட



1972 மார்ச் 21] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

மூவாயிரம் ஏக்கராவுக்குப் பயன்படக்கூடியது. அந்தத் திட்டங்களை எல்லாம் எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலையைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை. தூத்துக்குடி இன்றையதினம் ஒரு பெரிய துறைமுகமாக ஆகிவிட்டது. மதுரை—தூத்துக்குடியை இணைக்கும் சாலையாக அருப்புக்கோட்டை, எட்டயபுரம் வழியாகப் போகும் சாலை இருக்கிறது. இந்தச் சாலையை நாஷனல் ஹைவேஸ் சாலையாக அல்லது ஸ்டேட் ஹைவேஸ் சாலையாகவாவது உடனடியாக மாற்றினால்தான் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. முனியாண்டி: பேரவைத் தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியத்தை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருதாநதியின் குறுக்கே ஒரு கோடி ரூபாய் அளவில் ஒரு பெரிய அணைக்கட்டைக் கட்டித் தந்தால் நிலக்கோட்டை, திண்டுக்கல் தொகுதியைச் சேர்ந்த நாங்கள் முதல்வர் அவர்களுக்கு ஒரு சிலை வைப்பதாகவே சொன்னோம். எனக்குச் சிலை வேண்டாம், உங்கள் இதயத்தில் சிலை வைத்துத் தாருங்கள் போதும் என்றார். இன்றைய தினம் 1972–73-ம் ஆண்டில் அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள இருப்பதற்கு நாங்கள் அவருக்கு எங்களுடைய வாழ்த்தையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு எங்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் அவர் தெய்வமாகச் சிலை வைக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம் எங்கே நிறைவேறப்போகிறது என்கிற அவநம்பிக்கையோடுதான் பலகாலமாக மக்கள் இருந்தார்கள். அதை நிறைவேற்றித்தர இந்த அரசு முன் வந்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் அங்கே அவர்கள் இரண்டு பாலங்களைக் கட்டித் தரவேண்டுமென்று கோரி வந்தார்கள். அந்த ஊரைப் பொறுத்த வரையில் உலகம் தோன்றிய காலத்தில் இருந்து இந்நாள்வரை எந்த அமைச்சரும் சென்றதில்லை. எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி நமது அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தார்கள். அவர்கள் வந்ததே எங்களுக்கு பாலம் வந்துவிட்டது போன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. சிறுமலை ஆறு அணைக்கட்டுத் திட்டத்தையாவது

உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் வைகையின் குறுக்கே உள்ள பாலத்தை போக்குவரத்துக்குப் பயனுள்ளதாக ஆக்கித்தர வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

வைகைக்கு மேலும் 4 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் போட்டு மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. நடக்கோட்டை, சிவஞானபுரம் ஆகிய இடங்களில் அந்தப் பாலத்தை ஏற்படுத்தித்தர இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை—உசிலம்பட்டி பகுதியில் மலைச்சாலை—குறுக்கே ஓடைகள் குறுக்கிடுகின்றன. போக்குவரத்து வசதியற்று இருக்கிறது. அதை முறையாகச் செப்பனிட்டு போக்குவரத்துக்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மஞ்சளாற்றுக்கு அணைக்கட்டு கட்டி ஏறத்தாழ 13 ஆயக்கட்டுகளுக்கும் தண்ணீர் அளிக்கப்படும் என்றார்கள். ஆனால் இந்நாள் வரை கடைக்கோடிவரை தண்ணீர் வரவில்லை—கடைக்கோடியில் பல ஏக்கரா நிலங்கள் காய்ந்து கிடக்கின்றன. பொதுவாக 1967-க்கு முன்பே பல வாய்க்கால்கள் லட்சக்கணக்கான ரூபாய் செலவில் எங்கள் பகுதியில் வெட்டப்பட்டும் இந்நாள் வரை அந்த வாய்க்கால்கள் ஒன்றில் கூட தண்ணீர் வந்தது இல்லை. அந்தக் கால்வாய்களில் தண்ணீர் போகும்படி செய்யவேண்டும், ஆவரம்பட்டி கண்மாய்க்குத் தண்ணீர் நிச்சயமாகத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை மானியங்களை ஆதரித்து பாராட்டுகிற நிலையில் ஒன்று சொல்வார்கள்.

அழகாகத் துவங்குவது அரைவேலை முடிவுக்குச் சமம் என்பார்கள் அதுபோல 1967-ம் ஆண்டு அறிஞர் அண்ணா தலைமையில் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது டாக்டர் கலைஞர் அவர்கள் பொதுப்பணித் துறை பொறுப்பை ஏற்று அந்த வேலைகளை நல்ல முறையில் துவங்கிக் கொடுக்க இன்றையதினம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் அவற்றைச் செயல்படுத்தி வருவது பாராட்டிற்குரியதாகும். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் செலவில் பலப்பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் தீட்டியிருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்





கிறேன். அண்மையில் திருவையாறில் கடந்த 19-ம் தேதி எட்டே முக்கால் லட்சம் ரூபாயில் வெண்ணாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட கால்கோள் விழா நடத்தப்பட்டிருப்பதை பாராட்டி பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கிறேன்.

அதோடு குறிப்பாக என்னுடைய தொகுதியில் பல ஆண்டுக்காலமாக நிறைவேற்றப்படாமல் இருப்பது முதலம்பட்டிவாரி திட்டம் ஆகும். இது நீண்ட நாட்களாக இருந்துவரும் பிரச்சினையாகும். இதற்கு ஏறத்தாழ 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அது மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறாமல் இதுவரையில் தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதி மக்கள் விவசாயத்திலே பசுமைப் புரட்சி காண வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கிற நேரத்தில், என்னுடைய தொகுதி வறண்டிருக்கிற நேரத்தில் இந்தத் திட்டம் நீண்டகாலமாக நடைபெறாமல் இருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. ஆகவே, அரசு இதை இனியும் அலட்சியம் செய்யாமல் உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நல்ல பலன் பெறும் விவசாயிகள் மேலும் பலன் அடைய புது ஆற்றிலிருந்து ராமநாடு வாய்க்கால் என்று ஒன்றை தஞ்சைக்குப் பக்கத்தில் ஆரக்கோட்டைக்கு அருகாமையில் பிரித்து, தஞ்சை வட்டம், ஒரத்தநாடு வட்டம், கந்தர்வக்கோட்டை, ஆலங்குடி, புதுக்கோட்டை, தேவகோட்டை வழியாக ராமநாடு செல்வதற்கு ஒரு வாய்க்கால் பிரித்தால் நல்ல பலன் கிடைக்கும். இதனுடைய நீளம் 35 மைல் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. பொறியாளர்கள் மூலம் இந்தத் திட்டத்தை ஆராய்ந்தால் இதற்கு சுமார் 4½ கோடியிலிருந்து 5 கோடி ரூபாய் வரைக்கும் செலவாகலாம் என்று தெரிகிறது. இந்தத் திட்டத்தினால் வறண்ட பகுதிகள் இருபோக சாகுபடி நிலங்களாக மாறி, பசுமைப் புரட்சியை எடுத்துக்காட்டவும், பலர் வேலைவாய்ப்பு பெறவும், உற்பத்தி பெருகவும் வழிவகை செய்யலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 1962-ம் ஆண்டு தஞ்சை தொகுதியிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். பனவெளி தென்பெரம்பூர்—தென்னங்குடிக்கு இடையே,

வெட்டாறு, வெண்ணாறு பாலம் கட்ட வேண்டுமென்று நீண்டகாலத் திட்டமாக இருக்கிறது. இதைக் கட்டித்தருவதாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு வாக்குறுதி அளித்ததாக அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். பனவெளி–தென்னங்குடிக்கு இடையே இந்தப் பாலத்தைக் கட்டிக்கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிக்க சௌகரியமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இதற்காகும் பணத்தை பொது நிதியிலிருந்து எடுத்துச் செலவழிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கந்தர்வகோட்டை என்று சொல்லும்போது, அது கந்தர்வலோகமாக இருக்கும் என்று பலர் எண்ணுகிறார்கள். தமிழகத்திலே என்னுடைய தொகுதி மிக வறண்ட பகுதியாக காட்சியளிக்கிறது. அந்தப் பகுதி வறட்சியாக இருப்பதால் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. தமிழகத்திலே பொங்கல் விழாக்காலங்களிலே மாடு பிடிப்பது வழக்கம். அந்தப் பகுதியில் உள்ளவர்கள் மாடுகளைத் திருடி விற்கக்கூடிய நிலையில், வேறு தொழில் ஏதும் இல்லாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லும் சொல் ஒழிக்கப்பட வேண்டும். அந்தப் பகுதியில் நல்ல பல திட்டங்களை அமல் செய்து, அந்தப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்கு எந்தவிதமான தொழிலும், வேலையும் இல்லாத காரணத்தினால்தான் இம்மாதிரியான தொழில்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அந்தப் பகுதியில் நல்ல பல திட்டங்கள் அரசு நிறைவேற்றித் தந்து, அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றியைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சின்னசாமி : தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டின் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளம் பொறியாளர்கள் நேற்றையதினம் அமைதியான முறையில் ஊர்வலம் நடத்தி மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் ஒரு வேண்டுகோள்





விடுத்திருக்கிறார்கள். இளம் பொறியாளர்களுடைய கோரிக்கையை கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். எனவே, அந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் அருள்கூர்ந்து வேண்டியதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நீண்ட நெடுங்காலமாக, இருபதாண்டுக் காலமாக உடையார்பாளையம் வட்டத்தைப்பற்றி எனக்கு முன்னால் இருந்த பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வேண்டியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற வறட்சித்தன்மை இதுவரை போக்கப்படவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் போக்க அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டி' பழூர் பகுதியில் பொன்னாறு என்ற ஆறு கொள்ளிடத்திலிருந்து பிரிந்து பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு ஒரு போகத்திற்கு பாசனம் அளிக்கிறது. இந்த பொன்னாற்றுத் தலைப்பை விரிவுபடுத்தி, சிறிய மரத்தாலான தடுப்புச் சுவர் அமைத்தால் இன்னும் பல ஆயிரக் கணக்கான நிலங்கள் பாசன வசதி பெறும். இதைச் செய்து கொடுத்தால் அதன்மூலம் 4 ஆயிரம், 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

அடுத்தபடியாக, மருதையாறுத் திட்டம். இருபது ஆண்டுகளாக பரிசீலனை நடைபெறுகிறது என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்தத் திட்டம் இப்போது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று பயனடையும். அந்தத் திட்டத்தை உடனடியாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உப்போடை, கோடாலி கருப்பூர் பகுதியில் உள்ள ஏரியிலிருந்து செல்கிறது. அந்த ஏரி இன்றையதினம் பலரால் ஆக்கிரமிக்கப்பட்டு மிகமிகக் குறுகிவிட்டது. அந்த ஏரியினால் 300 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தன. இந்த ஏரியை பொதுப்பணித் துறையினர் எடுத்துக்கொண்டு பாசன வசதி பெறுவதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொன்னேரி, ஆமணக்கந்தோண்டி என்ற இடத்தில் 150 ஏக்கர் நிலத்தில் ஒரு ஏரி உள்ளது. வெள்ளையன் காலத்தில் ஏற்பட்டது. 4,000 ஏக்கர் பாசனம் உள்ளது. இதை ஆழப்படுத்தி, சீர்படுத்தினால் இன்னும் 1,500 ஏக்கர் அதிகமாகப் பாசன வசதி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. சின்னசாமி] [1972 மார்ச் 21

அடுத்ததாக, ஆயுதக் கலம், கச்சேரி புலி என்ற இடத்தில் 25 ஏக்கர் நிலத்தில் (காட்டு நிலம்) புதிய ஏரியை அமைத்தால் அதன் மூலமாக 4 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி அடையும். அதை அருள்கூர்ந்து செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வெண்ணெங்குழி ஓடை என்ற ஓடை இருக்கிறது. வங்குடிக்கு அருகில் நமது அரசு தற்சமயம் 2 லட்சம் ரூபாயில் ஏரி அமைத்துள்ளது. மழைக் காலத்தில் ஒரு நாள் மழையில் நிரம்பி விடுகிறது. மீதமுள்ள நீர் தற்போது கழிவடை வழியாக ஒரு ஓடையில் (தெற்குப் பகுதி) போய் காட்டுமன்னார்குடியில் உள்ள பல கிராமங்களை ஆண்டுதோறும் அழிக்கிறது. இந்த ஏரியில் வடக்கு பகுதியில் கழிவடை கட்டி, மீதி தண்ணீரை விட்டால் பக்கத்தில் உள்ள வங்குடி ஏரி, பூலாங்குளம், இரண்டு ஏரிகளை நிரப்பி, மீத முள்ள நீர் கண்டக்குழி ஏரி, பாப்பாக்குடி வழியாக செங்கால் ஓடை மூலம் வீராணம் ஏரிக்கு நேரடியாக போய்ச் சேரும். நான் கேட்ப தெல்லாம் 10,000 ரூபாய் வடக்குப் பகுதியில் ஒரு மதகும், 2 பர்லாங் தூர கால்வாயும்தான். இதற்கு 15 ஆயிரம் ரூபாய் ஆகும். இதன் மூலம் நூற்றுக்கணக்கான ஏக்கர் பாசனம் பெறும், சில கிராமங் களின் அழிவையும் தடுக்கலாம். அரசு இதை அருள்கூர்ந்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தா. பழூர்—விளாங்குடி சாலை வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. நாற்பதாயிரம் ஏழை மக்களின் கடந்த இருபதாண்டுக் கால கோரிக்கையாக இது இருந்து வருகிறது. இது மிகமிக அவசியம் என்பதை நானும், நாடாளுமன்ற உறுப்பினரும் அரசிடத்தில் வேண்டிக்கொண்டிருக்கிறோம். அரசு இதில் அதிக அக்கறையைக் காட்டி, அவசியமாகச் செய்து தர வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நீர்ப் பாசனப் பொறுப்பை அரசே நேரடியாக பொதுப்பணித் துறையின் சார்பாக எடுத்துக் கொள்ளவேண்டும். பாசன வசதிகளை ஏற்படுத்து வதற்கு விவசாயிக்கு அதிகமாகப் பணம் செலவாவதோடு மட்டு மல்லாமல், காலமும் வீணாகிறது, நஷ்டமும் ஏற்படுகிறது. வறட்சிப் பகுதிகளில் கிணறு வெட்டுவதற்காகவும், பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும், பம்பு செட்டு வைத்துக்கொள்வதற்கும் ஒரு விவசாயி பத்தாயிரம் ரூபாய் கடனைப் பெறுகிறான். அவனுக்கு ஐந்து ஏக்கரா நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளலாம். அவன் கடனைப் பெற்ற 10 ஆயிரம் ரூபாய்க்கு வட்டி வருடத்திற்கு



1972 மார்ச் 21] [சோ. அழகர்சாமி]

1,000 ரூபாய் ஆகிறது. மின்சாரக் கட்டணம் என்ற வகையில் 500 ரூபாய் செலவாகிறது. நீர்ப்பாசனத்திற்காக ஒரு ஏக்கருக்கு வருடத்திற்கு 300 ரூபாய் வரையில் செலவழிக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவெல்லாம் செலவு செய்த பிறகு அவனுக்கு ஐந்து ஏக்கர் நிலத்தில் விளையும் விளைச்சலைக்கொண்டு அவன் வாங்கிய கடனை அடைக்க முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். பல விவசாயி கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். வாங்கிய கடனுக்காக பம்பு செட், மாடுகள் போன்ற வற்றை ஜப்தி செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். பல கிராமங் களில் என்னுடைய தொகுதியில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பாசன வசதிகளை விவசாயிகளின் தலையில் போட்டதால் ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியிருக் கிறது. எப்படி அணைகளையும், கண்மாய்களையும் பொதுப்பணித் துறை அமைத்துக் கொடுக்கிறதோ அதேபோல பாசன வசதிகளையும் அரசே செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வறட்சிப் பகுதிகளில் ஆழமான குழாய்க் கிணறுகளை அரசே அமைத்துக்கொடுத்து பாசன வசதிக்கு வழி செய்யலாம். அதற்காக தண்ணீர்த் தீர்வை போன்று வரி விதிக்க ஏற்பாடு செய்யலாம்.

அடுத்தபடியாக, பாசனக் கண்மாய்கள் அமைப்பு இன்றையதினம் பல்வேறு பிரிவுகளிலே இருக்கின்றன. சில ஆர்.டி.ஓ. பிரிவிலும், சில பொதுப்பணித் துறையின் பிரிவிலும், சில பஞ்சாயத்து யூனியன் களிலும் இருக்கின்றன. எல்லா அமைப்புகளையும் பொதுப்பணித் துறையின்கீழ் கொண்டுவந்து ஓர் அமைப்பாக இருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, எங்களுடைய பகுதியிலே வைப்பாறு என்ற ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் இருகரைகளிலும் பெரிய ஆழ் குழாய்கள் அமைத்தால் ஒரு குழாய்க்கு 30 ஏக்கர், 40 ஏக்கர் அளவுக்குப் பாசனம் செய்வதற்கு முடியும். அதன்மூலம் உற்பத்தி யைப் பெருக்குவதற்கும், அந்த வட்டாரத்து மக்கள் வாழ்க்கை நிலை உயர்வதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரியாறு திட்டம் பல ஆண்டுகளாக பேசப்பட்டு வருகிறது. சங்கரன்கோவில், கோவில்பட்டி வட்டாரங்கள் வறட்சியான பகுதி

[சோ. அழகர்சாமி] [1972 மார்ச் 21

களாக இருப்பதால் அங்கே பாசன வசதிகளை ஏற்படுத்த அண்டை மாநிலமான கேரளத்தோடு பேச்சுவார்த்தைகள் நம்முடைய அரசு நடத்த முயற்சிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சிப் பகுதிகளிலே கண்மாய்கள் அமைக்கக்கூடிய நேரத்திலே அன்—எக்கனமிக் ஸ்கீம்களாக இருந்தால் அவற்றைத் தள்ளிவிடு கிருர்கள். அப்படி கட்டுப்படியாகாது என்று தள்ளிவிடாமல்—அன்—எக்கனமிக் ஆக இருந்தாலும் பல பகுதிகளிலே கண்மாய்கள் அமைப் பதின் மூலம் அவ்வட்டார மக்களுக்கு உதவிகரமாக இருக்கும், மக்களின் வாழ்க்கையும் மேம்பாடு அடையும், எனவே அன்—எக்கனமிக் என்று தள்ளுபடி செய்யாமல் வறட்சிப் பகுதிகளில் கண்மாய்கள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்தமட்டில் எங்களுடைய மாவட்டத்தில் பல ஆண்டுகளாக கோவில்பட்டி—பசுவந்தனை சாலை நீண்ட நெடுங்கால மாக பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது, அதை ஹைவேஸ் எடுத் துக்கொள்ள வேண்டுமென்று நீண்ட நாட்களாகவே கோரிக்கை இருந்து வருகிறது. இந்த ஆண்டு ஆயிரம் மைல்கள் வரையில் எடுத்துக்கொண்டாலும்கூட அதைச் சேர்க்கவில்லை. அந்தச் சாலை நடுக்காட்டிலே ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே அதையும் எடுத் துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆறுமுகமங்கலத்தில் வடிகால் வசதியைச் செய்துதர வேண்டுமென்று அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் நீண்டகாலமாகக் கோரிக்கை கொடுத்திருக்கிருர்கள். அதையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிவகிரிக்குப் பக்கத்திலே கோம்பை மலை அடிவாரத்திலே ஒரு அணை கட்டினல் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பயிர் செய்வதற்கும் புஞ்சை நிலங்களை நஞ்சைச் சாகுபடி நிலங்களாக மாற்றுவதற்கும் வசதியாக இருக்கும். எனவே அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் இருக்கக்கூடிய சில பகுதிகளில், கோவில்பட்டி, சங்கரன்கோவில், விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம் போன்ற பகுதிகள் எவ்வளவு பஞ்சமான பகுதிகள் என்பதை ஏற்கனவே சர்வே செய்து கண்டுபிடித்திருக்கிருர்கள். அங்கே குடிநீர்கூட கிடைக்காது என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, அந்தப் பகுதிகளிலே எல்லாம் பான்ட் ஸ்கீம் என்று சொல்லப்படுகிற வகையில் சிறு சிறு குளங்கள் அமைக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனல் இந்த வட்டாரங்



1972 மார்ச் 21] [திரு. சோ. அழகர்சாமி]

களைப் பொறுத்தவரையில் ஒரு தனி சிறப்பு அதிகாரியை நியமித்து எங்கெங்கே அப்படிப்பட்ட ஸ்கீம்கள் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் ஏற்படுத்தவேண்டும். எனவே இதற்காக ஒரு தனி சிறப்பு அதிகாரியை அந்தப் பகுதிக்காக ஏற்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக அந்த ஸ்கீம்களை எங்கெங்கு வாய்ப்பு இருக்கிறதோ அங்கங்கு நிறைவேற்றித்தர வேண்டுமென்றும், பாசனக் கண்மாய்கள் ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள் கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ரோடுகளுக்கு மானியங்கள் கொடுக்கப் படுவதில் 1967-ம் ஆண்டிலே எந்த அளவுக்கு ரோடு நீளம் இருந்ததோ அதைப் பொறுத்துத்தான் மானியம் கொடுக்கப் படுகிறது. அப்படியில்லாமல் இப்பொழுது உள்ள அளவுக்கு ரோடு களின் கணக்கை எடுத்து அதற்குகந்த முறையிலே மானியம் கொடுத் தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன். ஹைவேஸில் 20 ஆயிரம் பேர்கள் கேங்க் மஸ்தூர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிருர்கள். அவர்கள் எல்லாம் 55 வயது ஆனவுடனே வீட்டுக்கு அனுப்பப்பட்டவுடனே அவர்களுக்கு பென்ஷன் கிடையாது. பி.எப். பிடித்துவைத்துக் கொடுப்பது கிடையாது. 55 வயது ஆனவுடன் பிச்சையெடுக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. மேலும் விபத்துக் கள் ஏற்பட்டால் காரிலோ வண்டியிலோ அடிபட்டுவிட்டால்கூட மத்தியானம் அடிபட்டால் மத்தியானம்வரைதான் சம்பளம் தருகிருர்கள், முழுச் சம்பளம்கூட அன்றைக்குக் கொடுப்பதில்லை, அதைத் தவிர அமைச்சர் அவர்கள் அவர்களுடைய மாநாட்டில் இரண்டுமுறைகள் கலந்து கொண்டிருக்கிருர்கள். அப்பொழுது அவர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிருர்கள், அவர்கள் கோரிக்கை யும் நியாயமானது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிருர்கள், அதைக் கவனிக்கவேண்டும். அவர்களுக்கு மாதச் சம்பளம் 120 ரூபாய்தான் வருகிறது. அதிலும் அவர்களில் முழுத் தொகையும் வாங்குபவர்கள் மிகமிகச் சொற்பம்தான். ஏனென்றல் லீவு எடுத் தால் சம்பளம் கிடையாது, மண்டையடி வந்து லீவு போட்டு விட்டால் அதற்கும் சம்பளம் கிடையாது, எனவே அந்த 120 ரூபாய் வாங்குவதுகூட கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் 20 ஆண்டுக் காலம், 30 ஆண்டுக்காலம் என்று வேலை செய்து வருகிருர்கள். ஆனல் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிருர்கள். அவர்கள், சமு தாயத்தின் அடித்தளத்திலே இருக்கிறவர்கள், இருபதாயிரம் பேர்கள்

இருக்கிறார்கள். 12 ஆயிரம் பேர்கள் பொதுப்பணித் துறையிலும் ஊராட்சி மன்றம், ஸ்தல ஸ்தாபனம் போன்றவற்றிலே 8,000 பேர் களும் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கினால்தான் அவர்கள் எதிர்காலத்தில் மற்றத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதைப் போன்ற வசதிகளையும் சலுகைகளையும் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதாலும் அவர்கள் வேலைவிட்டு வந்தவுடனே நிம்மதி யாக வாழ்க்கை நடத்தமுடியும் என்பதாலும் இதை உடனடியாக அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் மீண்டும் கேட்டுக்கொள்வது, வறட்சியான பகுதிகளுக்கு தனி சிறப்பு அதிகாரிகளை நியமித்து வேண்டிய பாசன வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Mr. Chairman, Sir, I rise to support the Demands—Irrigation and Public Works. I thank you for having given me an opportunity to say a few words on these two demands, which are essential for the proper regional development and also industrial development of the country.

Coming to the irrigation projects in our district particularly in Hosur and Denkanikotta taluks, I wish to say a few lines. The review given to us this year is not as interesting as the review given to us in the previous year. In the previous year's review, it contained details regarding small bunds small dams and small projects; but in this year's review we do not find such things. But the Hon. Minister is very good and he knows the needs of the various areas. So, I think I can explain a few details, about our needs which he is aware of.

With regard to Doddahalla project in Denkanikotta taluk, the present Hon. Chief Minister when he was the Public Works Department Minister in 1967 sanctioned this scheme. The scheme has not yet been executed. Everytime it is said that it is under the consideration of the Central Government. The scheme is half a century old and people there have been urging for this scheme since a long time and so I request the Hon. Minister to sanction the scheme at an early date.

With regard to Dalavayi Cheruvu dam in Sulagiri block, it can irrigate 500 acres and cost is only about Rs. 3 lakhs. Investigation is over and I request that it may be sanctioned early.



With regard to Kelavarapalli dam, it can irrigate about 5,000 acres and this is the first dam that is being constructed in the centre of the taluk. The paper is pending with Government. I request the Hon. Minister to consider it early and sanction it so that it may be taken up for execution early next year.

With regard to tanks in Hosur taluk the Hon. Minister was kind enough to assure us that he would send a team of engineers for special investigation of tanks in Hosur taluk, because it was a Zamindari area. 600 tanks are there in a bad condition. The bunds, etc., have to be repaired. The condition of them is so miserable that unless a study team investigates the matter and sends a report for sanction it is not possible to repair them. I hope this question will be sympathetically considered.

Coming to the matter of roads, due to want of roads in rural areas irrigation suffers. The roads in Dharmapuri district have to be properly linked. Otherwise communications will be difficult. People are not able to go to hospitals and students to high schools because there are no good road facilities. Under the Rural Crash Programme, roads are being laid but they are not metalled. Since they are not metalled, they get ruined within a few mouth. They have not become fit for traffic. I hope they would be metalled and made fit for vehicular traffic.

Tanks in panchayat union areas also have to be repaired urgently by the department.

Sir, another dam called Vempalli Dam is there in Sulagiri block and proposals have been investigated at an estimated cost of about Rs. 36 lakhs and it will irrigate about 800 acres. This is a very important dam and I think necessary consideration would be given to this by the Government early.

So far as drinking water wells are concerned, there are many villages without wells and a scheme was proposed to supply water to them. But it was not extended to Hosur and Denkanikottai taluks. I request the Government that the scheme be extended to those taluks also.

With regard to jungle streams, there are many in my area as it is a hilly area. There are no bridges across these streams. The Highways Department says that they would put up bridges only if the rivers pass-cross the Highways. But what about the jungle

[Thiru K. S. Kothandaramiah] [1972 மார்ச் 21

streams flowing in the interior areas? People find it very difficult to cross them and even school children find it difficult to cross them and go to schools when there are floods in the streams. There should be some arrangement in respect of the jungle streams that flow in the interior areas or rural areas, bridges or cause-ways or sub-mergible bridges should be put up.

With regard to the special rural works programme, in Uddanapalli area there are about 100 or 150 villages which have to be given road facility and for the last many years nobody has taken interest in it. Recently, I understand, investigation is over and it has been proposed to put up a bridge at a cost of Rs. 1,60,000 across south Pennar in Sulagiri block. I request that it may be taken up soon and formation of roads, metalling, etc., may be done soon.

Coming to another important thing, that is Ganga-Cauvery link scheme, I think that the water from Ganga will be brought into Cauvery. In Mr. K. L. Rao's article in the 'Hindu' paper it is said that water would be brought via Srisailam project to Mettur Dam. Since Hosur taluk is in the Mysore table and Kurnool and Ananthapur districts are also in the same table, water could be brought to Hosur taluk easily because the river Cauvery flows at the bottom of Hosur taluk and Hogenekal Falls is very close to it. Once it is brought there water can be given to South Pennar and Palar and other rivers. Therefore, by bringing the canal through Hosur we can give water not only to Dharmapuri district, but also all the districts in Tamil Nadu. Therefore, when Government take up this matter of Ganga-Cauvery link, they may consider the effecting the link in Hosur taluk and then take it to Hogenekal Falls and Mettur dam.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Chairman, Sir, there is just one point I have to say and before I do so, I would like to congratulate the Government on the Cooum Project. Paris was built round the river Seine and in Switzerland, its capital Berne also has grown round another river which runs through it. You can say the same about many capitals in Europe and other places. The Tamil Nadu Government has inherited this, the canal called the Cooum whether it wanted it or not. The question was to do something with it or leave it in the state in which it was handed over. To make of it a thing of beauty is really a good plan and although it may call for criticism, the



1972 மார்ச் 21] [Thirumathi Alda M. Fowler]

criticism which would have been given, if we neglected it would have amounted to a great deal more and of a worse type than the criticism it now receives and so, I think that since it has been done and completed, almost, we have cause to be grateful for, what was once an eye-sore has now been made into something pleasant.

But the responsibility of the Government does not end there. One great duty grows out of the project and that is to keep it clean and that is most important. Otherwise, we shall find that it will become the dust-bin, the garbage can and sewage outlet for the city. That must be guarded against at all costs. Otherwise, the very purpose for which the project was undertaken would be defeated. That is only by the way. I do feel that we owe our gratitude to Government for this great venture.

The point I really want to make this morning is this. While large cities clamour for water, I have in mind Coimbatore district where there are small panchayats which are neglected. I have in mind particularly Pothanur Panchayat. Whenever a scheme for water supply is formulated, it is so easy to curtail and curb what has been planned for smaller places, but their need for water is great too. So, Sir, I feel that the Government should look and take a careful look at smaller and neglected places. The people of Pothanur depend on one man for their water, Mr. G.D.Naidu. Why should that be so? Has not the Government a responsibility to the people there? So, I ask that this problem be taken up again. There was some plan about a year ago which was meant to bring temporary relief to this little corner of Tamil Nadu and it was that water should be diverted or taken from the Industrial Estate which is quite close by. For some reason or other, it has not been followed and water is non-existent or has been channelled elsewhere, I do not know. I would request the Government to please have a good look at this problem. Pothanur is a beautiful, little place; it used to be so. It is also a drought affected area. It is much cooler than Coimbatore and any time perhaps it can be made into a Holiday Resort. So, there I leave the suggestion with you. Thank you.

* திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் மாற்றுத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறையிலே பணம் ஒதுக்குவது பெரிதல்ல, அதை எவ்வளவு துரிதமாகப் பயனுள்ளதாகச் செலவழிக்கிறோமோ அந்த

அளவிற்கு மாகாணத்தில் பொருளாதார வளர்ச்சி இருக்கும் என்பது நாமெல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்தாகும்.

கடந்த 15 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சி பெரும் பெரும் அணைக்கட்டுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டது. மீதியிருக்கும் கொஞ்சம் வேலைகளைத் திறமையாக நடத்த ஆரம்பித்தால் உண்மையிலேயே தமிழகத்தில் சிறந்த முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கேயிருக்கின்ற நதிகளின் மேல் பெரிய பெரிய அணைக்கட்டுகளை முடித்துவிட்டோம். இனிமேல் அண்டை மாநிலத்தில் ஓடுகின்ற நதிகளை நம்மால் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதை யோசிக்க வேண்டும்.

ஆனால் இன்றைக்கிருக்கும் நிலையைப் பார்த்தால் காவேரித் திட்டத்தில் ஏமாந்துவிட்டோம், மைசூர் மாகாணம் அணை கட்ட ஆரம்பித்துவிட்டது, சுப்ரீம் கோர்ட் நமக்கு என்ன முடிவு தரப் போகிறதோ தெரியவில்லை. அதைப்போல மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் கடலிலே ஓடி வீணாகும் தண்ணீரை தமிழகத்திற்குத் திருப்பிப் பயன்படுத்த முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். அறிக்கையிலே அக்ரிமெண்ட் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் கேரள அமைச்சர்கள் கூறுவதைப் பார்த்தால் நமக்கு ஏமாற்றமாக இருக்கிறது. எந்த அளவில் வெற்றி காண இருக்கிறோம் என்பதற்கு துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவைக்கு சிறுவாணி நீரைப் பெறப்போகிறோம் என்று சொல்லி இரண்டாண்டு காலம் ஆகிறது. இன்றைக்கு தண்ணீர்ப் பிரச்னை தீரவில்லை. மீண்டும் மீண்டும் கேரளா அது சரியில்லை, இது சரியில்லை என்று சொல்வதைப் பார்க்கிறோம். ஆகவே இந்தத் திட்டங்களைத் துரிதமாக முடிப்பதற்கு என்னென்ன வசதிகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்வதற்கு முன்வரவேண்டும்.

தஞ்சையில் வடிகால் வசதி செய்யும் திட்டம் பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. பல நிபுணர்கள் வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள். இன்றுவரை ஒன்றும் காணவில்லை. துரிதமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் திட்டங்களே பழசாகிப் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது.

சேதுசமுத்திரத் திட்டத்தைப்பற்றி 1968-லேயே மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்தாகிவிட்டது. 1971-ல் விளக்கங்கள் தேவை என்று கேட்கப்பட்டு, அதையும் கொடுத்தாகிவிட்டது. இன்னும்



ஏன் வரவில்லை? மத்திய அரசாங்கம் ஏன் இன்னும் பச்சைக்கொடி காட்டாமல் இருந்து கொண்டிருக்கிறது. நாம் அப்போதைக்கப் போது இதைப்பற்றி ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இதிலே துரிதநடவடிக்கை எடுக்கும் வகையில் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும்.

பொறியியல் இலாகாவிலே இருக்கக்கூடிய எஞ்சினீயர்கள் நிலை வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. இரண்டாவது சம்பளக் கமிஷன் முடிவுகளிலே அவர்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறது. டாக்டர்களுக்கு 525 ரூபாய் ஆரம்பச் சம்பளம், வெட்டிரினரி டாக்டர்களுக்கு 525 ரூபாய் சம்பளம்; தாசில்தார்களுக்குக் கூட 425 ரூபாய் சம்பளம்; ஆனால் ஜூனியர் எஞ்சினீயர்களுக்கு 400 ரூபாய் தான் பேசிக் சம்பளம், பஞ்சாபில் இதே எஞ்சினீயர்கள் 550 ரூபாய் வாங்குகிறார்கள்; மற்ற பல பகுதிகளில் 550 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இங்கு இருப்பவர்களுக்கு 400 ரூபாய் சம்பளம், 30 ரூபாய் டி.ஏ. அவ்வளவுதான். இவர்களும் டாக்டர்களைப் போல் ஐந்து ஆண்டுகள் படித்து வருபவர்கள்தான்......

திரு. நா. வீராசாமி : டாக்டர்களுக்கும் எஞ்சினீயர்களுக்கும் இடையே சம்பளத்தில் இருக்கும் வேறுபாடு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இருந்ததா அல்லது தி.மு.க. ஆட்சி வந்த பிறகுதான் இந்த வேறுபாடு உண்டாகியிருக்கிறதா?

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்போது இருந்தது என்றால் இப்போது நீங்கள் வந்து அதைச் சரி செய்யுங்களேன். அதற்காகத் தானே ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். திரும்பத் திரும்ப பழசையே சொல்லிக் கொண்டிருப்பதைவிட்டு மாற்றங்களைச் செய்யுங்கள்.

வியாசர்பாடியில் டிசில்டிங் ரெக்ளமேஷனுக்காக ஒரு தொழிற்சாலையை வைத்திருக்கிறார்கள். ஏரியில் கொண்டு போய் அதை வைத்திருக்கிறார்கள். மழை பெய்தால் நீந்திக் கொண்டுதான் போக வேண்டும். தொழிலாளிகள் சகதியில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. சமீபத்தில் ஒரு தொழிலாளி பாம்பு கடித்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அங்கு விளக்கு கிடையாது. அதற்காக ஒரு நாளைக்கு பத்து லிட்டர் டீசல் செலவழிக்கிறார்கள். பக்கத்தில் இருக்கக்கூடிய இந்த ஒர்க் ஷாப்பைப்பற்றியே கவனம் செலுத்தாதவர்கள் வெளியிலே இருப்பவற்றைப்பற்றி என்ன கவனிக்கப் போகிறார்கள்? அந்த இடத்தில் நன்றாக மண்ணடித்து உயர்த்த வேண்டும். இப்போது இருக்கின்ற நிலையிலே தரை போட்டால்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 21

கூட தண்ணீர் மழைக் காலத்தில் நிரம்பிவிடும். ஆகவே, இதைப் பற்றி நல்ல முறையில் கவனித்து எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தால்தான் தொழிலாளிகள் நல்ல முறையில் வேலை செய்ய முடியும்.

ஜூனியர் எஞ்சினீயராக ஐந்து ஆண்டு காலம் வேலை செய்தால் அவர்கள் ஏ.இ.க்களாக வசதி செய்து தரவேண்டும். அதேபோன்று ஏ.இ.க்கள் குறிப்பிட்ட காலம் வேலை செய்த பிறகு இ.இ.க்களாக மாற வசதி செய்து கொடுக்க வேண்டும். பி.டபிள்யூ.டி.-இல் இருக்கும் எஞ்சினீயர்களுக்குச் சீக்கிரமாக ப்ரொமோஷன் வருவ தில்லை. ஆனால் 1962-ல் பாஸ் பண்ணியவர்கள் வாட்டர் போர்டு, ஸ்லம் போர்டில் நுழைந்தவர்கள் இப்போது எக்சிக்யூட்டிவ் எஞ்சினீயர்களாக இருக்கிறார்கள். ஆனால் பி.டபிள்யூ.டி-ல் இருப் பவர்கள் 15 ஆண்டுகளாகியும் இன்னும் ஜூனியர் எஞ்சினீயர் களாகவோ அல்லது அசிஸ்டென்ட் எஞ்சினீயர் அளவிலோ இருக்கக் கூடிய நிலைதான் இருக்கிறது. எல்லாரும் ஸ்டேட் சர்வீஸ் என்ற நிலையில் இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது. இதனால் பி.டபிள்யூ. டி-ல் வேலை செய்யக்கூடிய எஞ்சினீயர்கள் பின்னால், தங்களுக்குப் பின்னால் வந்தவர்கள் உயர்நிலையில் இருக்கக்கூடிய நிலையில் வாரியங் களுக்குச் சென்று சீக்கிரமாக ப்ரொமோஷன் பெற்றவர்களுக்குக் கீழ் வேலை செய்யக் கூடிய நிலை ஏற்படும். அரசாங்க சிப்பந்திகள் மத்தியில் இந்த சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாது. செல்வாக்குள்ள வர்கள் வாரியங்களிலே புகுந்துவிடுவதால் மேலே மேலே போய்க் கொண்டிருக்கக் கூடிய நிலையும், செல்வாக்கு இல்லாதவர்கள் செத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையும் இருக்கக்கூடாது என்று கூற விரும்புகிறேன்.

சென்னையில் டவுனிலுள்ள மொபஸல் பஸ் ஸ்டாண்டை அமைச்சர் அவர்கள் சென்று பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். உள்ளேயே போகமுடியாது. அவ்வளவு மோசமான நிலைமையில் சென்னையிலுள்ள பஸ் ஸ்டாண்டு இருக்கிறது. அங்கிருந்து பல வியாதிகள் உற்பத்தியாக வழிகள் இருக்கின்றன. அதை இனியாவது அழகாகச் செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்.

வால்டாக்ஸ் ஏரியாவில் உள்ள பி.டபிள்யூ.டி.-க்குச் சொந்தமான ஏரியாவில் ஒரே குப்பை கூளமாக இருக்கிறது. அந்த நிலம் பி.டபிள்யூ.டி.-க்கு சொந்தமானது. வட சென்னை நெருக்கடி மிகுந்த பகுதி. இந்த மாதிரிக் குப்பை அங்கு இருந்தால் வியாதிகள் பரவ ஏதுவாகும். அங்கு ஒரு ஸ்மால் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் வைக்கலாம். அங்கு எல்லாத் தொழில்களும் நடக்கின்றன.



1972 மார்ச் 21] [திருமதி த. ந. அனந்தநாயகி]

தாங்களாகவே ஏதோ கட்டடங்களை கட்டி தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். ஹார்ட் ஆப் தி சிடியில் இப்படி ஒரு ஏரியா இருப்பதைச் சரி செய்வது அவசியம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை இன்னும் சில பாலங்களைக் கட்டித்தர வேண்டும். முகத்துவார பிரிட்ஜ் என்று அடையாற்றில் இருக்கிறது. அது ஆள் நடக்கக்கூடிய அளவுக்கு நான்கு அடி அகலந்தான் இருக்கிறது. அப்போது போட்டதுதான் என்றாலும் இப்போது அதை விஸ்தரிக்கலாம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> நான் தவறாகச் சொல்லவில்லை. அந்தக் காலத்திலேயே கொஞ்சம் அகலமாகப் போட்டிருக்கலாம். கடற்கரையில் ஐ.ஜி. ஆபீஸ் வரை போடப் பட்டுள்ள பாதையை மகாபலிபுரம்வரை இணைக்கலாமா என்று யோசித்தோம். நடுவிலே அந்தப் பாலத்தை அகலப்படுத்துவது என்றால் 90 லட்சம் ரூபாய் அளவுக்குச் செலவாகிறது. ஆகவே, இப்போது அதை விட்டு விட்டு அடையாறு பாலத்தை மட்டும் கட்டுவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி:</u> அடையாறு பிரிட்ஜை கட்ட முடிவு செய்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இருந்தாலும் இந்தப் பாலத்தையும் அகலப்படுத்தினால் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்ற நகரின் நெரிசலைத் தவிர்க்க உதவிகரமாக இருக்கும். அதையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியில் முண்டகக் கண்ணியம்மன் கோயில் பாலம் எப்போது இடிந்து விழுந்துவிடுமோ என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் கவனத் தில் கொண்டு நெருக்கடியான பகுதியில் இருக்கக்கூடிய அந்தப் பாலத்தையும் பழுது பார்த்துக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

<u>* திரு. பி. கோபால்:</u> மதிப்பிற்குரிய சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 1972-73-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள்.

இந்த மானியம் விவசாயப் பெருங்குடி மக்களை ஊக்குவிப்பதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் சாலச் சிறந்த மானியமாக இந்த ஆண்டு அமையப் பெற்றுள்ளது என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மானியக் கோரிக்கையானது விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், வேலையற்றவர்களுக்கும் வேலை கொடுக்கும் வகையில் புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதைக் காணும்போது அது தமிழகத்தில் ஒரு மறுமலர்ச்சி சர்க்கார் அமைந்து விட்டது என்பதை நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

கொங்கு நாட்டின் தொழிற்கேந்திரமான கோவை நகரம், மிகப் பெரிய தொழிற்சாலைகள், பஞ்சாலைகள் மற்றும் பல்வகைத் தொழில்களைக் கொண்ட கோவை திருநகரம் 5 லட்சம் மக்களை உள்ளடக்கியும் மேலும் விரிவடைந்து மாநகரம் ஆகும் தகுதியினைப் பெற்று விளங்குகிறது. வருவாய்த் துறையில் முன்னோடியாக இருந்திடினும் வளங்காணு நிலையில் உள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக முந்திய அரசு செய்த தவறினால் தீராத பிரச்சினையாகவும், கோவை நகர மக்களின் சோக கீதமாகவும் என்று குறை தீருமோ என்ற ஏக்கத்தில் விழிகளிலே கண்ணீரைத் தேக்கி கோடை வந்துவிட்டதே, குடிநீர் நிலை என்னவாகுமோ என்ற வேதனையோடு உள்ளார்கள் அருள்கூர்ந்து கருணை உள்ளம் படைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கோவை நகரத்தை அனுதாபத்தோடு சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டுமாய் தங்களையும், நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களையும் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவாணித் திட்டம் பற்றிய சிந்தனையே கோவை நகர மக்கள் நினைவில் இருந்தே மறைந்து விட்டது என்று சொல்லுவதிலே தவறு இல்லை என்று கருதுகிறேன். நெல்லித்துறைத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலே உள்ள கோவை நகரத்து மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து வைத்து, மக்களின் விழிநீரைத் துடைத்திட வேண்டுகிறேன்.

கோடையில் அவசரத் தேவைக்காக வேண்டி கோவை நகரில் போடப்பட்ட குழாய்க் கிணறுகளில் 60 சதவிகிதம் சரிவர இயங்குவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கோடையின் உடனடித்





தேவைக்காக பழுதடைந்துள்ள குழாய்க் கிணறுகளைப் பழுது பார்த்தும் மேலும் தேவையான இடங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்திடவும் வேண்டுகிறேன்.

தண்ணீர் பற்றுக்குறை காரணமாக புதிய தொழிற்பட்டறைகள் துவங்கிட அச்சம் கொண்டுள்ளார்கள் என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கூலி வேலை செய்யும் ஏழை மக்கள் வாழும் பகுதியான பல இடங்களில் குடிசைகள் இன்னும் நீக்கப்படாமலும் அவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான முத்தணங்குளத்தின் தடாகம் ரோடு பகுதி, பேரூர் ரோடில் உள்ள கரையோரப் பகுதியோடு குளத்தில் தண்ணீர் தேங்கி நிற்காத காரணத்தால் குளத்தின் கரையோரப் பகுதியோடு வேண்டும் இடத்தையும் ஒதுக்கித் தந்திட வேண்டுகிறேன். இதைப்போல் வின்சென்ட் ரோடு பகுதியிலும் வாளங்குளத்தை ஒட்டியுள்ள, தற்போது குடிசைமாற்று வாரியத்தினரால் கட்டப்படும் இடத்திற்கு சமீபமாக உள்ள பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான இடத்தினை தந்து குடிசைவாழ் மக்களுக்கு வீடு கட்டி கொடுத்திட ஆவன செய்திட வேண்டுகிறேன்.

கோவை நகரத்தைச் சுற்றியுள்ள ஐந்நூறு மைல் தூரத்தில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத இடங்களை ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொள்ள அனுமதியும் பட்டாவும் வழங்கிடவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் பொறுப்பு மிக்கவர்கள் தங்குவதற்கு சுற்றுலா மாளிகை கோவையில் இல்லாமல் இருப்பது பெருங்குறையாக உள்ளது.

தற்போது உள்ள சர்க்யூட் மாளிகை குடியரசுத் தலைவர் அவர்களும் நம்முடைய ஆளுநர் அவர்களும் தங்குவதற்குத்தான் வசதியாக உள்ளது. ஆகவே எழில் நிறைந்த சுற்றுலா மாளிகை ஒன்று கட்டிட வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வடகோவை ரெயில்வே கேட்டை அடிக்கடி மூடிவிடுவதால் போக்குவரத்து தவக்கம் ஏற்பட்டு பொதுமக்களுக்கு அதிக இடையூறாக இருப்பதால் அந்தப் பகுதியில் சிறிய திட்ட அளவிலாவது ஒரு மேம்பாலம் கட்டிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. கோபால்] [1972 மார்ச் 21

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு புதிதாக கட்டப்படவேண்டிய கட்டடத்தையும், காவல் துறையினருக்குக் கட்டிக் கொடுக்கப்படும் வீடுகளையும் துரிதப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை நகரத்தில் உள்ள முக்கிய சாலைகள் அகலப்படுத்தப்பட வேண்டும்.

கோவை சிதம்பரம் பூங்காவில் பொருட்காட்சி மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்படுமிடத்தில் விளையாட்டு அரங்கு கட்டப்படுவதால் நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் சிறைச்சாலையின் பின்புறத்தில் தேவையற்று காலியாக இருக்குமிடத்தை நகராட்சிக்கு கொடுத்துதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவையில் உள்ள தண்ணீர் பிரச்னையையும் கவனிக்க வேண்டுமென்று மீண்டுமொரு முறை கேட்டுக்கொண்டு (மணியடிக்கப்பட்டது) கோவை நகர மக்கள் தண்ணீருக்காக மிகவும் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்று, ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

* <u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :</u> மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை பாராட்டி, வரவேற்றுப் பேசும்போது ஒரு சில விஷயங்கள் கூற விரும்புகிறேன்.

இரண்டு தினங்களுக்கு முன்னதாக நானும் அறநிலைய அமைச்சர் அவர்களும் திண்டுக்கல் நெடுஞ்சாலை வழியாக வந்துகொண்டிருந்தோம். அங்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட நல்ல நிலையில் உள்ள பாலங்களை எல்லாம் உடைத்து புதிதாகக் கட்டுவதற்காக மிகவும் சிரமப்பட்டு உடைத்துக் கொண்டிருப்பதை பார்த்தேன். எவ்வளவோ மழை பெய்தும்......

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> அங்கு நாஷனல் ஹைவேஸ் ஸ்டான்டேர்ட் வரவேண்டுமென்று மத்திய அரசு வற்புறுத்தி வருகிறது. அந்த ஸ்டான்டேர்ட்படி கட்ட சிலயிடங்களில் அகலப்படுத்தும் பணி நடந்துவருகிறது. வேறு ஒன்றும் அல்ல.



1972 மார்ச் 21]

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :</u> அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. அகலப்படுத்துவதற்குப் பதிலாக சில பாலங்கள் உடைக்கப்படுகின்றன. மிக அவசியமான கிராமப் பகுதிகளுக்கு செய்யப்பட வேண்டிய பல பாலங்களைக் குறித்து வற்புறுத்தி வந்து கொண்டிருக்கும் நிலையில், அவைகள் நிறைவேற்றப்படாமல் இப்படிப் பட்ட நல்ல பாலங்கள் உடைக்கப்படுகின்றனவே என்ற வேதனை உள்ளத்தில் எழும்பியது. அதற்கு தக்க பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப் பற்றி நான் பலமுறை இங்கு கூறிவிட்டேன். இரண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன திருச்சி மாவட்ட பொறியாளரால். இனிமேலாவது இரக்கம் கொண்டு அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடவனாறுத் திட்டம். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இது சம்மந்தமான செயற்குறிப்புகள் எல்லாம் தயாரிக்கப் பட்டு விட்டன என்று தெரிய வருகிறது. ஆனால் இன்றையதினம் வரையில் அது அமலாக்கப்படவில்லை. ஆகவே அதையும் அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதி மழையில்லாத தொகுதி.

ஆகவே அங்கு பாண்ட்ஸ் ஸ்கீமாவது நிறைவேற்றித் தர வேண்டும். மழைக் காலங்களில் வரக்கூடிய ஓடைத் தண்ணீரை தேக்கிவைத்தால் கிணறுகளில் ஊற்று ஏற்பட வாய்ப்பு ஏற்படும். இதுவரையில் ஒரு குளம் குட்டையாவது என் தொகுதியில் ஏற்பட வில்லை. ஆகவே இதைக் கவனித்து பாண்ட்ஸ் ஸ்கீம் அளவிலாவது என் தொகுதியில் உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் மனு கொடுத்துள்ளேன். பள்ளப் புட்டி அணைக்கட்டுத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அரவக்குறிச்சி, சின்னதாராபுரம், பாதையிலிருந்து மானூர்பட்டி, சாந்தப்பாடி, ஆணங்கூர் போகும் பாதை படுமோசமாக இருக்கிறது. அதை ஒழுங்குபடுத்தவேண்டும். அப்போதுதான் கிராமப் பகுதிகள் முன்னேற முடியும்.

இராசிபுரம் பாலம் பற்றி அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்கு சுற்றுப்பயணம் வந்தபோது வாக்களித்திருந்தார்கள். அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித்தர ஆவன செய்வோம் என்று வாக்களித்திருந்தார்கள். ஆகவே இந்த அறிக்கையில் அந்தப்

[வா. மை. அப்துல் ஜப்பார்] [1972 மார்ச் 21

பாலத்திற்காக ஏதாவது ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று ஆவலோடு பார்த்தேன். மிகவும் ஏமாற்றம் அடைந்தேன். அமைச்சர் அவர்கள் வாக்களித்துள்ளபடி அந்தப் பாலத்தை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

23 ஆண்டுகளாக என் தொகுதியில் எந்த ஒரு சிறப்பு மிக்கத் திட்டமோ பாசன வசதித் திட்டங்களோ அல்லது சாலைத் திட்டங்களோ அல்லது கட்டடத் திட்டங்களோ எதுவும் நிறைவேற்றப் படாமல் இருக்கும் நிலையில் ஓராண்டுகாலமாக நானும் ஓயாது குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அதற்கு இன்னும் மதிப்பு ஏற்படவில்லை, இன்னும் செவிசாய்க்கப்படவில்லை. என் மனம் மிகுந்த வேதனை அடைந்திருக்கிறது. எனவே என் தொகுதி மக்களை ஒரு நாள் கூட்டிவந்து அமைச்சர் அவர்களின் வீட்டின் அருகாமையில் அமர்ந்து ஓயாது உண்ணும் போராட்டத்தில் இறங்கும் நிலை ஏற்பட்டு விடும்.

வாணியம்பாடிக்கும் ஜாபராபாத்துக்கும் இடையில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சர் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்தப் பாலம் மிகவும் அவசியம். அதை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்தப் பாலத்தை நிச்சயம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடனடியாகக் கட்டித்தர வேண்டும்.

அறவக்குறிச்சி தொகுதிமீது சற்று இரக்கம் கொண்டு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று என் குரலை எழுப்பி அமர்கிறேன். நன்றி.

* <u>திரு. மு. இராமன்</u> : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1972–73-ம் ஆண்டுக்கான பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 1972–73-ம் ஆண்டுக் கான திட்டத்தில் ஏழை விவசாயிகள் முன்னேற்றம் குறித்து சிறு பாசனங்களை அபிவிருத்தி செய்வதற்காகவும், ஏரி குளங்களை ஆழப் படுத்தவும் இந்த ஆண்டுத் திட்டத்தில் மூன்று கோடி ரூபாய் அதற் காக வகை செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். வளவனூர் ஏரியை ஆழப்படுத்த வேண்டுமென்று தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு 20 லட்சம், ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு



1972 மார்ச் 21] [திரு. மு. இராமன்]

முதன்மைப் பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இதைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் விக்ரவாண்டி ஒன்றியத்தில் உள்ள பிடாரிப் பட்டு கிராமத்தில் நீர்பாசன வசதிகள் இல்லை. பிடாரிப்பட்டில் சிறுவராக நதி ஓடுகிறது. அந்த நதி நீரை பிடாரிப்பட்டு கிராமத்தி லுள்ள விவசாய மக்கள் நல்ல முறையில் பயன்படுத்த கல்லணைத் திட்டம் வேண்டுமென்று நீண்ட நெடுநாட்களாக அந்தப் பகுதி மக்கள் மனுக்கள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் செயல்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாடாமங்கலம், கள்ளிப்பட்டி, அகரத்தூமேடு, சின்ன மடம், பெரிய மடம், பூவரசங்குப்பம், மேட்டுப்பள்ளம் போன்ற கிராமங் களின் ஓரங்களில் தென் பெண்ணையாறு, மலட்டாறு ஓடுகிறது. மழை நேரங்களில் வெள்ளம் உள்ளே புகுந்து விடுகிறது. அதனால் பல கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. அந்த கிராமங்களின் முன்னேற் றத்திற்காக நான் பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக் கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் இதைச் சொல்லிவந் திருக்கிறேன். அது சம்பந்தமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அந்த வெள்ளம் கிராமங்களில் புகாமல் இருப்பதற்கு அந்த மலட்டாறு, தென் பெண்ணை ஓரங்களில் ஒரு மதில் சுவர் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவள்ளிக்குப்பம், பகண்டை, புராணசிங்கப்பாளையம் ஆகிய ஊர்களை இணைக்கும் 10 மைல் ஊராட்சி சாலை இருக்கிறது. அதைச் சீரமைக்க ரூ. 2½ லட்சம் மதிப்பீடு தயார் செய்து தலைமைப் பொறி யாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதைப் போட்டுத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி புதுவை மாநிலத்திற்கு அருகில் இருக்கிறது. அங்கே உள்ள மதகடிப்பட்டு, நெட்டப்பாளையம் ஆகிய இடங்களில் ஒரு ஓடை ஓடுகிறது. அங்கே ஒரு சிறு பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று பலமுறை பல அதிகாரிகளிடம், சம்மந்தப்பட்டவர் களிடம் சொல்லியிருக்கிறேன். அது சம்பந்தப்பட்ட மதிப்பீடு வந் திருப்பதாகத் தெரிகிறது. அதையும் இந்த ஆண்டே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தென் பெண்ணையாற்றுக்கு அருகில் மேட்டுப்பாளையம் முகத்துவாரத்திலிருந்து பாக்கம் ஏரிக்கு தண்ணீர் செல்ல வேண்டும். அந்த ஏரி வாய்க்காலை ஆழப்படுத்த வேண்டுமென்று மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் கூட தெரிவித்து இருக்கிறேன். அது சம்பந்தமாக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பொதுப்பணித் துறை சம்மந்தப்பட்டமட்டில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். விக்கிரவாண்டி ஒன்றியத்தில் இருக்கும் பிரமதேசம் போன்ற கிராமங்களில் உள்ள மாணவர்கள் மாணவிகள் பள்ளிக்கூடங்களுக்கு வருகிறார்கள். மழைக் காலங்களில் வெள்ளம் வந்துவிட்டால் அவர்கள் அந்த ஓடையைக் கடந்து வர முடியவில்லை. ஆகவே, அங்கே அந்த ஓடையின் நடுவே ஒரு சிறு மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறதாக தெரிகிறது. அதை சாங்ஷன் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டு பாசன, பொதுப்பணித் துறைக்கான மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன். தமிழ் நாட்டில் வேளாண்மை செழிப்பதற்கும், உணவு உற்பத்தி பெருகுவதற்கும் தொழில்கள் சிறப்பதற்கும், இந்த பாசனப் பொதுப் பணித் துறைக்கு ஏறத்தாழ ரூ. 56 கோடி ஒதுக்கப் பட்டிருப்பது மிகச் சிறந்ததொரு அம்சமாகும். இந்தப் பாசனத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் பெரும்பாலான நிலங்கள், நீர்த் தேக்கங்கள், கண்மாய்கள், பெரிய நதி, சிறிய கால்வாய்கள், ஏரி குளங்கள் மூலமாகப் பாசனம் பெறுகின்றன. இந்தப் பாசனத்திற்கு காரணமாக உள்ள ஏரிகள், குளங்கள் என்று எடுத்துக்கொண்டால் பல ஆண்டுகளுக்கு முன்பே இவைகள் அமைக்கப்பட்டவை. இந்த ஏரிகள் தூர்ந்து வருகிற நிலையைப் பார்க்கிறோம். இந்த ஏரிகளில் ஆண்டுதோறும் பொதுப்பணித் துறையால் தூர் வாரப்படுகிறது. அங்கே தூர் வாரப்படுகிறது என்றாலும், ஏரி போதுமான அளவுக்கு ஆழம் இல்லாமல் இருக்கிறது. இவற்றிற்கு நிரந்தரமான பரிகாரம் காணவேண்டும்.

ஏரிகளைத் தூர் எடுப்பது பெயரளவில் தான் நடைபெறுகிறதே தவிர அவை சரிவர செய்ய முடியவில்லை. இப்படி இருக்கிற நிலையைப்



பார்க்கிறபோது பழங்காலத்தில் தோன்றிய ஏரிகள் தூர்ந்துபோய், அவைகள் பயிர் நிலங்களாக ஆகும் நிலையைப் பார்க்கிறோம். இதற்கெல்லாம் பொறியாளர்களைக் கேட்கிறபோது அவர்கள் இந்த தூர் எடுக்கிற மண்ணைப் போடுவதற்கு சரியான இடம் இல்லை. ஆகவே, ஏரியின் உள்ளேயே அந்த மண்ணைப்போட்டு, அந்தப் பகுதியில் பாசனம் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி பாசனத்திற்காக ஏரியின் பரப்புகளைக் குறைத்துவிட்டால், நாளாவட்டத்தில் ஏரி என்ற பெயரே இல்லாது மறைந்து விடும். ஒரு ஏரி 50 ஏக்கர் பரப்பளவு இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அதிலே ஒரு ஏக்கர் அளவிலேயே அந்த வண்டல் மண் தேங்கிவிடுகிறமாதிரி அமைப்பு (Device) செய்யவேண்டும். அதற்குப் பிறகு அந்த ஒரு ஏக்கர் பரப்பில் படிகிற வண்டல் மண்ணை அப்புறப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். இதற்குப் பொறியாளர்கள் சரியான வழிவகை காணவேண்டும். இதற்கு பொதுப்பணித்துறை அதிகாரிகளும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுமார் பத்து ஆண்டுகளாக ஆய்வில் உள்ள கல்லகம் ஆண்டி ஓடை நீர்த் தேக்கத்தை நிறைவேற்றிக் கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் பொதுவாக லால்குடி வட்டம் பெருவளை வாய்க்கால், அய்யன் வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால் இவற்றிற்கு தண்ணீர் மேல் அணையிலிருந்து வருகிறது. அதிலே ஒரு குறை இருக்கிறது. ஆண்டுதோறும் மழை பெய்கிற போது—வெள்ளம் ஏற்படும்போது தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீர் தேவையில்லை என்று வருகிறபோது தண்ணீரைக் குறைத்து விடுகிறார்கள். ஒரு பக்கம் நஞ்சை நிலங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கிறது. அதே நேரத்தில் 3 வாய்க்கால்களில் வருகிற தண்ணீர் போதுமானதாக இல்லாததால் பயிர் காய்ந்து விடுகிற நிலை இருக்கிறது. இதற்கு மாற்றுத் திட்டமாகத்தான் தஞ்சையில் உள்ள நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கப்படாமல் இருப்பதற்கும் அதே நேரத்தில் 3 கால்வாய்கள் வழியாக வரும் தண்ணீர் குறையாமல் இருப்பதற்கும் வசதியாக காவேரியின் மேல் அணை பகுதியில் (Upper Anicut) ஒரு பெட் ரெகுலேட்டர் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கங்கை—காவிரி இணைப்பு நம்முடைய மாநிலங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய, ஒரு பாசன ஒருமைப்பாடு திட்டமாகும். அந்த திட்டத்தை நிறைவேற்றித் தர முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் கேட்டபோது, அதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் இது சம்பந்தமாக ஒரு விளக்கத்தை அமைச்சர் அவர்கள் படித்தார்கள். அதனுடைய தமிழ் ஆக்கத்தை அமைச்சர் பதில் அளிக்கிறபோது தருவார்கள் என்று எதிர்ப்பார்க்கிறேன். ஒன்றியச் சாலைகளைப் பராமரிக்க போதிய நிதி உதவி செய்ய வேண்டும். அதிலே பேருந்துகள் செல்லும் சாலைகளை அரசாங்கமே எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும் அல்லது அதை நன்கு பராமரிப்பதற்கு சிறப்பு மானியம் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. மு. இரத்தினசபாபதி : சட்டப்பேரவை மாற்று-த் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள பாசன, பொதுப்பணித் துறை மானியத்தின் கீழே 5 கோரிக்கைகள் வைத்து, 5-க்கும் சேர்த்து 55 கோடி அளவுக்கு மானியம் கோரியிருக்கிறார்கள். அந்த மானியங்களை ஆதரித்து பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த நாட்டில் மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் முடிந்து மூன்று ஆண்டுகள் தனியாக திட்டமிட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 4-வது ஆண்டாக இந்த வரவு—செலவு திட்டத்தில் இப்போது இந்த மானியத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். 22 ஆண்டுகளாக திட்டங்கள் என்ற பெயரால் நீர்ப்பாசனத் துறையிலும் பொதுப்பணித் துறையிலும் பல திட்டங்கள் நிறைவேற்றியதற்கும் பின்னாலே இங்கே பேசிய அத்தனை உறுப்பினர்களும் தங்களது தொகுதியில் இருக்கும் நிலையினை—பின் தங்கிய நிலையினை எடுத்துச் சொன்னார்கள். இன்னின்ன திட்டங்கள் வேண்டுமென்று முறையீடு செய்து இருக்கிறார்கள் என்றால் இவைகளையெல்லாம் இந்த அரசு செய்யவில்லை. அதன் காரணத்தால்தான் இந்தக் குறைகளை அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள் என்று கூறிவிடமுடியாது. இன்று அந்தந்த பகுதி மக்கள் அங்கே செய்யப்படும் திட்டங்கள் மிக விரைவாகவும், ஒவ்வொருவரும் தங்களுக்கு கூடிய சீக்கிரம் பலன் கிடைக்கவேண்டுமென்ற முறையிலும் ஆசைப்படுகிறார்கள்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]





உதாரணத்திற்குக் கூறவேண்டுமென்றால் எனது தொகுதியில் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமத்திலிருந்து 13 மைல்கள் நடந்து வந்தோ, கட்டை வண்டிகளில் வந்தோ, பிறகு பஸ் பிரயாணம் செய்யக்கூடிய நிலைமை இருந்து வந்தது. ஆனால், இன்று 2 மைல் தூரம் வரை பஸ்கள் வந்துகொண்டு, போய்க்கொண்டிருந்தாலும், உடனே எங்கள் ஊருக்கும் பஸ் வரவேண்டும், சரளைப் பாதையாக இருப்பதை மாற்றி கல் ரோடு அமைத்துத்தர வேண்டும் என்று கிராமத்திலுள்ள ஆண்கள், பெண்கள், சிறார், பெரியோர் ஆகிய பலரும் கோரிக்கை விட்டுக்கொண்டிருக்கக் கூடிய அளவுக்கு, அந்த அளவுக்கு அவர்கள் அரசாங்கத்திலிருந்து பலனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் மேலும் மேலும் பல திட்டங்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக உண்மையில் எது தான் பின்தங்கிய பகுதி, எது தான் மிகவும் வறட்சியான பகுதி என்று நிலையான ஒரு முடிவு எடுப்பதற்குக்கூட அமைச்சர் அவர்களும், மற்றுமுள்ள அதிகாரிகளும் திணறிவிடுவார்கள் என்று கருதுகிறேன்.

நான் இதை முதல் பீடிகையாக ஏன் கூறுகிறேன் என்றால், விளாத்திகுளம் தமிழகத்தில் மிகவும் வறட்சியான பகுதி, மிகவும் பிற்பட்டதான பகுதி. விவசாயம் தவிர அங்கு வேறு ஒரு தொழிலுக்கும் அங்குள்ள மக்களுக்கு வாய்ப்பு செய்து கொடுக்காத நிலையில், விவசாயத்தையே அந்தப் பகுதி மக்கள் நம்பியிருக்கிறார்கள். அந்தப் பகுதிக்கு நல்ல முறையில் பொதுப்பணித் துறையிலிருந்து ஏதாவது செய்யவேண்டும் என்று நினைத்தால், நிச்சயம் அந்தப் பகுதியை ஒரு ஐந்தாண்டு காலத்திலே ஒரு மாறுதலான பசுமைப் புரட்சி நிறைந்த பிரதேசமாக மாற்றிவிடமுடியும்.

ஏனென்றால் இந்தத் தாலூகாவின் மையத்தில் வைப்பாறு என்று ஒரு காட்டாறு ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தக் காட்டாற்றில் ஒரு அணை கட்ட 1971–72-ம் ஆண்டில் ஏறக்குறைய 24 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை அரசு அனுமதித்து இப்பொழுது அங்கே வேலைகள் நடைபெற ஆரம்பித்திருக்கின்றன. அப்படிப்பட்ட அந்த ஆற்றில் கடந்த ஆண்டு பொதுப்பணித் துறையினர், ஓடும் தண்ணீருடைய அளவு எவ்வளவு தான் அந்த ஆற்றில் போகிறது என்று கணக்கிட்டுப் பார்க்கிற நேரத்தில், 45 நாட்கள் ஆற்றில் ஓடிய தண்ணீர் ஏறக்குறைய நெல்லை மாவட்டத்தில் பாபநாசம் அணைக்கு எவ்வளவு தண்ணீர் அவசியமோ அந்த அளவுக்கு தண்ணீர் ஓடிக்

[திரு. மு. இரத்தினசபாபதி] [1972 மார்ச் 21

கொண்டிருப்பதாக கணக்கெடுத்திருக்கிறார்கள். அந்தக் காட்டாற்றில் பெரிய அணை கட்டுவதற்கு நிலப்பரப்பு போதுமானதாக இல்லை. அந்த ஆறு இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் தாலூகாவிலும், நெல்லை மாவட்டத்தில் விளாத்திகுளம் தாலூகாவிலும் ஓடிக்கொண்டிருக்கிறது. 5 மைலில் ஒரு ரெகுலேட்டர், ஒரு சிறிய அணை கட்டி, இரு பக்கங்களில் இருக்கிற குளங்களுக்கும் தண்ணீர் வசதி செய்துகொடுத்து, புதிய குளங்களையும் அமைப்பதன்மூலம் பெரிய பசுமை புரட்சியை அங்கே ஏற்படுத்தலாம்.

அந்தப் பகுதியில் இருக்கிற நிலங்களெல்லாம் மிகவும் தரம் நிறைந்த நிலங்கள். கரிசல் மண்ணாக இருந்தாலும், மழை இல்லாத வறட்சி பகுதியாக இருப்பதால் விவசாயிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக மழை இல்லாமல், இந்த ஆண்டு மழை பெய்து ஓரளவுக்கு விவசாயிகள் புஞ்சை விவுசாயத்தை மட்டும் நம்பியிருக்கிறார்கள். ஆகவேதான் கருணை கூர்ந்து வைப்பாறு பகுதியில் இருக்கிற இப்படிப்பட்ட ஒரு பெரிய திட்டத்தை, ஒரு மாஸ்டர் பிளானாக எடுத்து, பொதுப்பணித் துறையிலே அதை ஆராய்ந்து, இந்தத் திட்டத்திற்கு செலவு செய்தால், அதன் மூலம் பணம் விரயம் ஆகாது என்று நல்ல முறையில் உணர்ந்து, அந்தத் திட்டத்தினை ஏற்று செயல்படுத்த வேண்டும் என்று இந்த அவையின் மூலம் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பகுதியிலே இப்படி ஒரு பெரிய திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில், பல சிறிய குளங்களை அமைப்பதற்கு பல திட்டங்கள் அங்கே உள்ள சிறப்பு சிறிய நீர்ப்பாசன பொதுப்பணித் துறையினரால் அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. தற்சமயம் கூட விளாத்திகுளம் தாலூகாவில் ராமச்சந்திரபுரத்தில் ஒரு புதிய குளம் அமைக்கும் வேலையும், டி. புதுப்பட்டி ஊரில் ஒரு புதிய குளம் அமைக்கும் வேலையும், புதுசின்னையாபுரத்தில் ஒரு புதிய குளம் அமைக்கும் வேலையும் அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த நிதி ஆண்டில் நிதிநிலைமை சரியான முறையில் இல்லாத காரணத்தினால் 1972–73-ல் எடுத்துக்கொள்வதற்கில்லை என்று கருதுகிறேன். ஆனால், எப்படியாவது இந்த ஆண்டின் இடையிலாவது அவைகளைச் சேர்த்து—டிசம்பர் மாதத்தில் சேர்த்து, இந்தத் திட்டங்களை எனது பகுதியில் அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. மு. இரத்தினசபாபதி]

அடுத்து, பெருவழித் துறையை எடுத்துக்கொண்டால், தமிழகம முழுவதும் பல மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை கண்டுகொண்டிருக்கிறோம். சாலைகள் அமைப்பதில் நாம் நல்ல பல முன்னேற்றங்களை காண்கிறோம் என்று நான் முன்னமேயே சொன்னேன். குக்கிராமங்களில் தங்கள் பகுதியில் வசதி தேவை என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்கள் இந்தத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளுக்கு நிதிநிலை இல்லாத காரணத்தினால் தான் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் தயங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

விளாத்திகுளம் தாலூகாவில் பல கிராமங்கள் ரோடு இணைப்பு இல்லாமல், கிராம மக்கள் விவசாய விளைபொருள்களை பெரிய நகரங்களுக்குக் கொண்டு போகமுடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அங்கெல்லாம் ரோடுகள் போடவேண்டுமென்றால், பெரிய கிராமங்களில் இருக்கக்கூடிய மிராசுதார்கள் தாங்கள் நிலங்கள் மிகவும் அதிகமாக வைத்திருக்கிற காரணத்தினால், அவர்களுடைய நிலங்களின் வழியாகப் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களுடைய ஆணையாளர்களோ அல்லது தலைவர்களோ அவர்களிடம் சென்று "உங்கள் நிலத்தின் வழியாக ரோடு போடவேண்டும்" என்று சொல்லி அந்த நிலத்தை பலவந்தமாக ரோடு போடுவதற்கு, எடுப்பதோ, அல்லது அதற்கு நஷ்ட ஈடு கொடுத்து எடுப்பதோ என்ற நிலைமை இல்லாத காரணத்தினால் "நீங்கள் தயவு செய்து நிலத்தைக் கொடுங்கள்" என்று கேட்டால் அவர்கள் நிர்தாட்சண்யமாக மறுத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அங்கே பல கிராமங்களில் இணைப்பு சாலைகள் இல்லாமல் மழை காலத்தில் தீவில் வசிப்பதுபோல் இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கிராமங்கள் மூன்று கிராமங்கள் இருக்கின்றன. விளாத்திகுளம் தாலூகாவில் நீராவிப்புதுப்பட்டி, தலைகாட்டுபுரம், புதூர் ஊராட்சியில் சக்கணாபுரம், இப்படிப்பட்ட நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கெல்லாம் ரோடுகள் போடவேண்டியதற்கு வேண்டிய இடங்களை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதற்கு உடனடியாக வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்தப் பெருவழித்துறையில் இருக்கிற காங் கூலிகள் ஏறக்குறைய 22 ஆயிரம் பேர்கள் பல ஆண்டுகாலமாக காங் கூலிகளாகவே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலையான உத்தியோகம் வேண்டும் என்று அரசிடம் கேட்டுக்கொண்டிருக்

கிறார்கள். அவர்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்ற ஒரு எண்ணத்தோடு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அதிலே கூடிய சீக்கிரம் அவர்கள் நல்ல முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த விவாதத்தில் நான் பேசுவதற்கு என்னைப் பணித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. மணலி சி. கந்தசாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது பேசும்பொழுது பொதுவாக ஒரு விஷயத்தை முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மற்ற விஷயங்களில் முன் பின் இருந்தாலும் கூட, இந்த மான்யத்தைப் பொறுத்த வரையில், சட்டமன்ற உறுப்பினர்கள் வோட்டு வாங்குவதற்கு மிகவும் முக்கியமாக இருக்கக் கூடிய ஒரு மானியம் என்று கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், தொகுதிக்குப் போனால், "பாலம் கட்டிக் கொடுத்தாயா, ஆறு வெட்டிக் கொடுத்தாயா, அணை கட்டிக்கொடுத்தாயா" என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் பிரச்னை வருகிறது. ஆகவே, என்னுடைய ஆலோசனை என்னவென்றால், இப்படி ஒரு நாளைக்கு ஐந்து நிமிடங்களில் எல்லாவற்றையும் உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டிருப்பது ஒரு பக்கத்தில் இருந்தாலும், அது சரியாக இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் இரண்டு நாட்களுக்காவது வந்து, எம்.எல்.ஏ-க்கள் அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லோரையும் கூட்டி, ஜில்லாவில் இருக்கக்கூடிய பல்வேறு தேவைகளைப்பற்றி அங்கேயே ஆலோசனை நடத்தி, பரிசீலனை செய்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் சொல்வது போல கடந்த சட்டமன்றத்தில் கூறப்பட்டவைகளைப் பொறுத்து, அப்படி ஒரு ஏற்பாடு செய்து, தொடக்கத்தில் திருச்சி ஜில்லாவில் ஆரம்பித்து, தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் இரண்டு நாட்கள் வைத்துக்கொண்டு, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர், செயலாளர் அத்தனை பேர்களையும் அழைத்து அந்த இடத்திலேயே பரிசீலனை செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : ரொம்ப மகிழ்ச்சி. எல்லா ஜில்லாக்களுக்கும் குறிப்பாக நமது அமைச்சர் அவர்கள் வரவேண்டும் என்று





நான் வேண்டிக்கொள்கிறேன். ஏனெனில் அங்கேயே விவாதித்து எது முக்கியம், எது முதலில் செய்யப்பட வேண்டும் என்பது போன்ற விஷயங்களில் முடிவு எடுத்துவிடவேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்தப் பிரச்னை தீரும். அணை கட்டவேண்டும், குளம் வெட்ட வேண்டும் என்று ஒவ்வொரு உறுப்பினரும் பேசிக்கொண்டு நேரத்தை வீணாக்கவேண்டிய அவசியம் இல்லை. இம்மாதிரி பொதுவாக ஒரு கொள்கையை கடைப்பிடிப்பது முக்கியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் வேறு சில விஷயங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது பாசனத்தை விஸ்தரிப்பது ஒரு பக்கத்தில் இருந்தாலும்கூட, சில இடங்களில் பாசனம் இருக்கக் கூடிய இடங்களில் வடிகால் இல்லாத தன்மை இருப்பது ரொம்பவும் வேதனையைத் தருகிறது.

எனக்கு முன்பு பேசிய திரு. சுப்பையா அவர்கள்கூட என் தொகுதியில் இருக்கக்கூடிய ஒரு பிரச்னையைப் பற்றி சொன்னார்கள். 2,300 ஏக்கர் நிலங்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகிறது. இது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டும். இப்பொழுது பாசனம் விஸ்தரிப்பது ஒரு பக்கத்தில் இருந்தாலும்கூட, இருக்கக்கூடிய வசதி ஒழுங்காக பயன்படுத்தப்படுகிறதா, தங்களுடைய தேவைக்கு அதிகமாக தண்ணீர் விரயமாகிறதா என்பதையும் கண்காணிக்க வேண்டும். அது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடி தஞ்சை ஜில்லாவில் சமுத்திரக் கரை ஓரத்தில் "டெயில் எண்ட்" பகுதியில் எல்லா தாலூகாவிலும் ஆறுகளெல்லாம் போய் சமுத்திரத்தில் கலக்கும் விஷயம் இருக்கிறது. அந்தப் பகுதி பூராவும் பம்ப் செட் சாகுபடிக்கு கொண்டுவரும் முறையில் தீவிரமாக அமுலுக்கு கொண்டுவர முயற்சித்தால் குறைந்த செலவில் அதிக விஸ்தீரணத்தில் பாசனம் ஏற்படுத்த முடியும். என்னுடைய பகுதியில் பம்ப் செட் பாசன வசதிகள் அரைகுறையாக பல வருடங்களாக அப்படியே இருக்கின்றன. அவைகளைப் பரிசீலித்து செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரோடு போடுவது சம்மந்தமாக, அணைகளை பலப் படுத்துவது சம்மந்தமாக படிப்படியாக "எர்த் ஒர்க்" மண்ணை வெட்டிக் கொட்டும் வேலையைக் குறைக்க வேண்டும். ஏனென்றால் இது வியர்த்தமாகப் போகிறது. நவீன காலத்தில் பல்வேறு விதமான

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 மார்ச் 21

நடவடிக்கை எடுக்கும் காலத்தில், மண்ணை வெட்டி வருடா வருடம் கொட்டுவதும், அது கரைந்து போவதும், மறுபடி மண்ணை வெட்டிக் கொட்டுவதும் என்ற இந்த விஷயம் இருக்கிறதே, இதைப் படிப்படியாக Phased Programme) "ஃபேஸ்டு ப்ரோகிராம்" போட்டுக் குறைக்கும் விதத்தில் அதிகப் பயன் பெற பல புதிய ஏற்பாடுகளை வரவர நவீன மயமாக்கும் விதத்தில் இந்த மண் வேலையைக் குறைத்தால் நாட்டுக்கும் நல்லது. வரும் வரிப் பணத்தை நல்ல முறையில் செலவழித்தவர்களாவோம், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சமுத்திரக் கரை ஓரம் நீண்ட வாய்க்கால்களில் அரசாங்கம் படகுப் போக்குவரத்தை அதிகப்படுத்தினால், அதன் மூலம் சாமான்களைக் கொண்டு வருவது, ரோடு நெரிசலைக் குறைப் பதற்கும் ரோடு சீக்கிரத்தில் பலவீனப்படாமலிருக்கவும் உதவும். அந்த வகையில் அதை விஸ்தரிக்கும் நடவடிக்கைகள் எடுப்பது நன்ருக இருக்குமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடி, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை முக்கிய மான விஷயம்—இதை ஏற்கனவே அமைச்சர் அவர்களைப் பார்த்து சொல்லி இருக்கிறேன்—அவர்களும் வடிகால் பற்றி நடவடிக்கை எடுக்க உறுதி சொல்லியிருக்கிறார்கள். 2,300 ஏக்கர் வெள்ளத்திற்கு ஆளாகாமல் பாதுகாக்கப்படும் என்று இப்போது சொல்வதை உள் துறை மானியத்தில் பேசும்போது சொல்லியிருக்கிறேன். அதில் சில இடங்கள் ஒதுங்கி இருக்கின்றன. அந்த இடத்திலுள்ள ஜனங்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். கொருக்கைத் தலைக்காடு கிராமத்தின் அருகே முள்ளியாற்றிற்குப் பாலம் இருந்தால், மூன்று கிராமங்களுக்கு பல ஆயிரம் கலம் நெல் நேரடியாக லாரியில் ஏற்றி அனுப்பும் நிலைமை ஏற்படும். இல்லாவிட்டால் மூட்டைக்கு 3, 4 ரூபாய் அதிகம் கொடுக்கும் வகையில் பாதிக்கும். பல வருஷமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்ஜினீயர்களைப் பற்றி எனக்குப் பக்கத்தில் இருக்கும் அம்மையார் நன்ருகச் சொன்னார்கள். சம்பளம் ஒரு புறமிருந்தாலும் பல என்ஜினீயர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களை எப்படி ஈர்த்துக் கொள்வது, சமுதாய வளர்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்வது என்ற அடிப்படையில் அவர்களுக்கான வேலை வாய்ப்புத் திட்டங்களை சிந்தித்து அதற்கான திட்டங்களை எடுத்துக்கொள்வார் கள் என்று நினைக்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. மணலி சி. கந்தசாமி]

தஞ்சாவூரில் விஞ்ஞான ரீதியான பாசனத் திட்டம் ரொம்ப தாமதப்படுகிறது. தண்ணீர் ரொம்ப சேதமாகிறது. தண்ணீர் வேண்டுமென்ற சமயத்தில் கிடைப்பதில்லை. வேண்டாத சமயத்தில் தண்ணீர் வருகிறது. தண்ணீர் தேவை பற்றி விஞ்ஞான ரீதியாக "ஃபோர்டு ஃபவுன்டேஷன்" திட்ட அடிப்படையில் சீக்கிரமாக முயற்சி செய்தால் இன்னும் இரண்டு, மூன்று லட்சம் டன் அதிகமாக உபரி நெல் கொள்முதல் செய்வதற்கு உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் பக்கத்து மாநிலங்களுடன் கலந்தாலோசித்து, ஆறுகளில் வீணாகும் தண்ணீரை கடலில் போய் விழுவதை அண்டை ராஜ்யத்திற்கு கொண்டு வரும் திட்டத்தை, தேசீய ஒற்றுமை என்ற அடிப்படையில், தேசம் பூராவும் பயனடையும் என்ற அடிப்படையில் பொதுச் சொத்தாகப் பயன் படுத்தும் விதத்தில் தண்ணீரைப் பயன்படுத்தும் வகையில் மத்திய சர்க்காரை நிர்ப்பந்திந்தாவது, மைசூருக்கும் நமக்கும் உள்ள தகராறை கேரளாவுடன் ஒப்பந்தத்தை துரிதபடுத்த நிச்சயமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, இத் துடன் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. குழ. செல்லையா: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தப் பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இதற்கு ஏறத்தாழ 56 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது வரவேற்கத் தக்கது. பொதுவாக நாடு உணவுத்துறையில் முன்னேறு வதற்கும், போக்குவரத்து நன்ருக அமைவதற்கும் அடிப்படை இந்தப் பொதுப்பணித்துறை என்பதை மறந்துவிட முடியாது. எனவே 56 கோடி ரூபாய் என்ற அளவை விட அதிகம் ஒதுக்கி இருந்தாலும் அது சிறந்த முறையில் நல்வாய்ப்பாக இருக்குமென்று சொல்லிக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையில் கடந்த சில ஆண்டுகளாக பொறியாளர்களும், மற்றவர்களும் கவனம் செலுத்தி மிகக் கண்காணிப்பாகச் சரியான அமைப்பில் தண்ணீரை ஒழுங்காக கட்டுப் படுத்தும் முறையில் வேலை செய்து உணவுப் பெருக்கத்தை எந்த அளவு அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. பொதுப்பணித் துறையினர் நல்ல முறை யில் பணியாற்றுகிறார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் முக்கால் பகுதி சி.எம்.பி. பாசனப் பகுதியாகும். ஒரு கால் பகுதி "நான்-சி.எம்.பி."

(Non-C.M.P.) நான் சார்ந்துள்ள தொகுதியாகும். பொதுப்பணித் துறை சிறந்த முறையில் செயல்படுவதால் உணவு உற்பத்தி அதிகமாகப் பெருகி வருகிறது என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். நான் ஒரு சாதாரண விவசாயி. அதன் பலனை அனுபவிக்கிறேன் என்ற முறையில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆற்றங் கரைகளில் சில பல இடங்களில் நடமாடக் கூடாது, ஆடு மாடுகள் போகக் கூடாது என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தி உணவு உற்பத்தி பெருக, விவசாய முன்னேற்றத்திற்கு அனுமதி வழங்கி, அதன் மூலம் பல்வேறு கிராமங்களுக்குச் சாலைகளுக்கு இணைப்புக் கொடுத்து, விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு ஏற்ற முறையில் கரையோரப் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலங்கள் அமைக்கும்போது 1935-ல் போடப்பட்ட மதகுகளை அகலப்படுத்துவதையும், விரிவுப்படுத்தும் பொறுப்பையும், "கிளைக் பன்களை" விரிவுபடுத்தும் பொறுப்பை பஞ்சாயத்தில் விட்டு விடுகிறார்கள். நிதிநிலை பற்றுக்குறையால் பஞ்சாயத்துக்களால் அதைச் செய்ய முடிவதில்லை. அப்படி மதகுகளை விரிவுபடுத்தினால் தான் சாலைகள் போட முடியும் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்—குறைந்த வருமானம் உள்ள சிறிய பஞ்சாயத்துக்கள் அந்தப் பொறுப்பை ஏற்க முடியாது. ஆகவே அதை பொதுப்பணித் துறையே எடுத்துக் கொண்டு செலவு செய்து போக்குவரத்து வசதிகளை விரிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய அணைக்கட்டுகள் வரவேற்கத் தக்கது. அதே நேரத்தில் சிறிய அணைக்கட்டுகளும் தேவைப்படுகின்றன. எனது தொகுதியில் பல்வேறு காட்டாறுகள் செல்கின்றன. அமைச்சர் அவர்கள் என்னுடைய பகுதியை நன்றாக அறிவார்கள். பாப்பாங்கண்ணியாறு, முடியனாறு பகுதியில் கடலில் விழும் தண்ணீரை விவசாயத்தைப் பெருக்கும் திட்டங்களாக உருவாக்கித் தந்திருக்கிறார்கள். "நான்-சி. எம்.பி." ஏரியா வறட்சி பகுதியாக இருக்கிறது. வில்லுணியாற்றில் குளமங்கலம் எல்லையில் அணை கட்டுவதன் மூலம் அந்தப் பகுதியில் 7, 8 பஞ்சாயத்துக்கள் கொண்ட 13 கிராமங்கள் பயனடையும் அளவிற்குச் செய்ய முடியும். அம்புலியாற்றில், சேத்தங்குடி என்கிற இடத்தில் அணை கட்டுவதன் மூலமாக, நகரம், கீரமங்கலம், செரியலூரர் ஆகிய கிராமங்களிலுள்ள மக்களுக்குப் பயன் தரும். அந்தப் பக்கத்தில் 7, 8 கிராமங்களுக்கு பாசன வசதி ஏற்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



"போர்-வெல்" இரண்டு போட்டு 30 ஏக்கர் புஞ்சையை நஞ்சை நிலங்களாக, இரு போகமாக மாற்றப்படும் அளவுக்கு நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இன்னும் சில இடங்களில் "போர்-வெல்" போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. அரசே அதை ஏற்று நடத்தலாம். அதனால் புஞ்சைப் பயிர்கள் நிலம் நஞ்சைப் பயிராகும் நல்ல நிலைமை உருவாகும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அக்கினியாற்றில், நெய்வேலி என்கிற இடத்தில் அணைக்கட்டு கட்டுவதன் மூலம் ஏறத்தாழ பல்வேறு கிராமப் பகுதிகளுக்கு பாசனத்தை விரிவு படுத்த முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன். கடலுக்கு வீணாகப் போகும் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்த ஏற்ற திட்டங்களை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் தலைமையில், ராஜாமடம் ஆற்றில் ஒரு பாலம் கட்டும் வேலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. வேலை முடிந்து விட்டது.

அதே போல் அம்புலி ஆற்றில் அம்மணிசத்திரம் பாலம் கட்ட அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. வேலை முடிவடையும் தருவாயில் இருக்கிறது. இந்த சென்னை—கன்னியாகுமரிச் சாலையில் அந்தப் பகுதியில் சிறுசிறு பாலங்கள் கட்ட வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்துப்பேட்டை—மீமிசல் சாலை சம்பந்தமாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அத்துடன் இந்தப் பகுதி மிகப் பின் தங்கிய பகுதி என்பதை அமைச்சர் பெருமக்கள் நன்றாக அறிவார்கள். அந்தப் பகுதியில் சிறுசிறு பாலங்கள் கட்டி இந்தக் கடற்கரைச் சாலையை சிறந்த முறையில் ஆக்கித் தர முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், ஆவுடையார்கோயில்—பேராவூரணி—அறந்தாங்கி சாலையில் முதுகாட்டில் பிரிந்து, சேது—சமுத்திரச் சாலையை இணைக்கின்ற சாலைக்கு "மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ் ஸ்கீம்" அடிப்படையில் டெண்டர்கள் கோரப்பட்டு, வேலை தொடங்கும் தருவாயில்

நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை இந்த ஆண்டு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக பட்டுக்கோட்டையிலிருந்து பேராவூரணி, நாகுடி ஆவிடையார்கோவில் வழியாக இராமநாதபுரத்திற்கு ஒரு சாலை செல்கிறது. அந்தச் சாலையில் பூனைகுத்தி ஆறு, இரட்டைவாயல் ஆறு ஆகிய இடங்களில் பாலம் அமைத்துக் கொடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த பாலங்கள் கட்டுவதன் மூலம் திருவப்பாடி, இரட்டைவயல் பாதை விரிவு அடைந்து, பட்டுக்கோட்டை, தஞ்சை ஆகிய மாவட்டத் தலைநகருக்குச் செல்வதற்கு வழி ஏற்படும். அதோடு அதனால், அந்தப் பகுதி கடற்கரை மக்கள் எல்லோரும் பயன்பெறுவார்கள்.

அடுத்து இப்போது நமது அரசு தீவிர வேலைவாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. எனது தொகுதியில் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் இந்த தீவிர வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்மூலம் போக்குவரத்து வசதி இல்லாது இருந்த இடங்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதிகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி சிறந்த முறையில் பணியாற்றி வந்தாலும் சம்பளம் வழங்குவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. மாதம் 100 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது என்றாலும், அவர்கள் செய்திருக்கின்ற வேலையின் அளவைப் பொறுத்துதான் கூலி கொடுக்கப்படுகிறது. வேலையின் அளவு எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகச் செய்ய முடியாது. ஏனென்றால் சில இடங்கள் மணற்பாங்கானதாக இருக்கின்றன; சில இடங்கள் கடின தளமானதாக இருக்கின்றன; இன்னும் சில இடங்கள் உப்பங்கழி பகுதியாக இருக்கின்றன. ஆகவே ஒரே அளவான சக்தியை செலவிட்டாலும், எல்லா இடங்களிலும் ஒரே அளவான வேலை நடைபெற முடியாது. எனவே, வேலை நடைபெறுகின்ற இடத்தை உத்தேசித்து, அவர்களுக்குத் தினம் மூன்று ரூபாயாவது கூலி கிடைக்கச்செய்ய வேண்டும்.

அடுத்து, ஆற்றின் கரைகளில் 25 அடி அகலத்திற்கு சாலைகளை அமைத்திருக்கிறார்கள். பொதுப்பணித் துறையின் அனுமதியோடு அந்த ஆற்றின் கரைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும். அந்த அனுமதியைக் கொடுத்தால், ஆற்றின் கரைக்கு ஊறு ஏற்படாதவாறு, தென்னங்கன்றுகளை நட்டு வளர்த்து, அதனால் ஊராட்சிகளின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். அந்த வருமானத்தினால் பல வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள முடியும். ஆற்றின் கரைகளும் அழகுபெறும். அதற்கு ஆவனச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இறுதியாக கங்கை—காவிரி இணைப்புத் திட்டம் பற்றி எனது கருத்தினை இங்கே கூறிட விழைகிறேன். இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த 20, 30 ஆண்டுகள் ஆகும் என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்தை முழுவதும் மத்திய அரசாங்கமே நேரடியாகச் செய்ய வேண்டுமானால் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதற்குப் பதிலாக, ஒவ்வொரு மாநிலத்திலுள்ள பொறியாளர்களும் கங்கை—காவிரி இணைப்புத் திட்டத்திற்கான அந்தந்த மாநிலப் பணிகளை மேற்கொள்ள அனுமதித்தால் அத் திட்டம் விரைவிலே முடிவுபெறும். நமது அரசு இந்த யோசனையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதற்கான அனுமதியைப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பி. இ., எம்.எஸ்ஸி. படித்தவர்களுக்கு பல சலுகைகள் வழங்குவதாக ஊதிய ஆணைக்குழுவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தீவிரப்படுத்தி உடனடியாக வழங்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

திரு. வீ. சா. இளஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற அனைத்து மானியங்களையும் வரவேற்று, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

எங்கள் விராலிமலைத் தொகுதிக்கு, அதிகமான தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு காவேரி தண்ணீர் வேண்டும் என்று முன்பு இந்த மன்றத்திலே பலமுறை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இப்போது இரண்டு ஆண்டு காலமாக நாங்கள் அதைப்பற்றி வலியுறுத்துவதை விட்டுவிட்டோம். காரணம் இப்போது தஞ்சை மாவட்டத்திற்கே போதிய அளவு காவேரியில் தண்ணீர் கிடைக்குமா என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இப்போது அந்தத் தண்ணீரைப் பற்றி நாங்கள் கேட்கவில்லை.

ஒருசமயம் விவசாயக் கருத்தரங்கு நடைபெற்றபோது பேரறிஞர் அண்ணா அவர்களும் அதில் கலந்து கொண்டார்கள். அப்போது அவர்கள், "காவேரி ஆற்றுத் தண்ணீர் உங்களுக்குக் கிடைக்கா

[திரு. வீ. சா. இளஞ்செழியன்] [1972 மார்ச் 21

விட்டாலும் அமராவதி ஆற்றிலிருந்து தண்ணீர் கிடைக்க பரிசிலனை செய்கிறோம்" என்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் தெரிவித்த அந்தத் திட்டத்தையாவது நிறைவேற்றித் தாருங்கள். அதனால் அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படச் செய்யுங்கள் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். பட்டுக்கோட்டையைப் பொறுத்த வரையில் வெள்ளம் நிறைந்த நேரங்களில் தண்ணீர் வந்தால் கூட அந்தப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் குளங்களும் நிரம்பிவிட முடியும். அதற்கு ஏற்றவகையில் குளங்களையும், ஏரிகளையும் மராமத்து செய்து, பொதுப்பணித்துறையே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுப்பணித் துறையைச் சேர்ந்த பல குளங்களை பஞ்சாயத்து யூனியன்கள் மராமத்து செய்து வருகின்றன. ஆனால் யூனியனுக்கு அந்த ஏரிகளை மராமத்து செய்யப் போதுமான நிதி வசதி இல்லாததால் அந்த ஏரிகள் நீண்ட காலமாகவே மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. எனவே, எல்லா ஏரிகளையும் பொதுப்பணித் துறையே மராமத்து செய்து, நீர்ப் பெருக்கினை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். ஊராட்சிகளிலே என்ன வேலை செய்கிறார்கள் என்பது தெரிவதில்லை. அதனால் ஊராட்சிகள் பல வேலைகளைச் செய்யாமலிருந்தாலும் தெரிவதில்லை. எனவே, ஊராட்சிகளில் செய்யப்படுகின்ற வேலைகள் குறைந்த அளவில் ஏ.இ. அளவுக்காவது தெரியப்படுத்தப்பட வேண்டும். அதற்கு, இந்த ஊராட்சி ஒன்றியங்களிலே நடைபெறுகின்ற வேலைகள் அனைத்தும் ஒரு ஏ.இ. மூலமாகவே நடைபெறச் செய்யவேண்டும் என்ற என்னுடைய கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதையாறு ஒரு காட்டாறாக இருக்கிறது. அதனால் கீரனூர் மக்களுக்குச் சில சமயங்களில், அதாவது மழைக் காலங்களில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் அங்கே ஒரு பாலம் கட்டவேண்டுமென்று நீண்டகாலமாக வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் அந்த இடம் நன்றாகத் தெரியும். அந்தப் பாலம் கட்டுவதற்கு அதிகம் செலவாகாது. 3 அல்லது 4 இலட்சம் ரூபாய்தான் செலவாகும். ஆகவே, கோதையாற்றின் குறுக்கே அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாலம் இல்லாததால் மழைக் காலங்களில் போக்கு



1972 மார்ச் 21] [வீ. சா. இளஞ்செழியன்]

வரத்தே இல்லாமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் அமைச்சரவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று மிக்கப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியில் துவரங்குறிச்சி—மங்கம்மா சாலை செல்லுகிறது. இந்த ரோடு யாருக்குச் சொந்தமானது என்று வெகுநாட்களாகவே தேடிக் கொண்டிருக்கிறோம். இன்னும் கண்டுப் பிடிக்க முடியவில்லை. ஆனால் மதுரைக் கோட்டப் பகுதியில் அந்த ரோடு ரிப்பேர் செய்யப்பட்டு, நல்லமுறையில் போக்குவரத்திற்கு பயன்பட்டு வருகிறது. திருச்சி மாவட்டத்திலிருந்து 5 மைல் தூரத்திற்கு இந்த துவரங்குறிச்சி—மங்கம்மா சாலை இதுவரை ரிப்பேர் செய்யப்படவில்லை. அதனால் அவ்வளவு தூரமும் ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது. அதை போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியாமல் இருப்பதால் இக்கரச்சோசூர்—துவரங்குறிச்சியிலிருந்து மதுரைக்கு 12 மைல் சுற்றிக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இரண்டு பக்கமும் விவசாய மக்கள் ஏராளமாக இருக்கின்றார்கள். மழைக்காலங்களில் அவர்கள் போக்குவரத்து இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பஸ்ஸுக்கு போக வேண்டுமானால் 5 அல்லது 6 மைல் தூரம் நடந்தே துவரங்குறிச்சிக்கு வந்து அங்கிருந்துதான் போக வேண்டும். ஆகவே, அரசாங்கம் பொதுப்பணித்துறை மூலமாக அந்தச் சாலையை ஏற்று, பழுது பார்த்து, போக்குவரத்திற்கு வசதிசெய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஆயிரம் மைல் நீளத்திற்கு ரோடுகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த முயற்சியினை நான் பாராட்டுகிறேன். 1967-க்கு முன்னால் பல ஊர்களுக்குச் செல்ல ரோடு வசதியே இல்லை. தேர்தல் வேலைகளைக்கூட நடந்து சென்றே செய்யக்கூடிய நிலைதான் இருந்தது. ஆனால் 1971 தேர்தலின்போது அந்த நிலை பெருமளவிற்கு மாறி இருப்பதைக் காண்கிறோம். அந்த நிலைமை மேலும் மேலும் பெருக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பார்வேட் ப்ளாக் மெம்பர் குறிப்பிட்டதுபோல கிராமங்களில் உள்ள மக்களுடைய நன்மைக்காக ரோடுகளையாவது போட்டுக் கொடுப்பது நல்லது. முன்பெல்லாம் வருமானத்தை அடிப்படையாக வைத்துத்தான் லாபகரமாக இருக்கும் என்றால் மின்சார இணைப்புக் கொடுத்து வந்தோம். இப்போது அதை மாற்றி மின்சார வசதி செய்யப்படாத கிராமமே இருக்கக் கூடாது,

லாபமோ இல்லேயோ, மின்சார பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பது என்கிற ஒரு திட்டத்தை அமைத்துக் கொண்டு செயல் படுவதைப் போல கிராமங்களில் உள்ள ரோடுகளை எல்லாம் போட்டுத்தர முன்வர வேண்டும்.

காரணம் நாட்டில் இருக்கிற எத்தனேயோ தரப்பார்கள் நம்மை எதிர்த்தார்கள். அரசியல் விமர்சனம் செய்தார்கள். ஆரூடம் சொன்னார்கள். ஆனல் கிராமத்துக் குடிமக்கள் அனைவரும் நம் முடைய கழக ஆட்சியில்தான் அவர்களுடைய அடிப்படைத் தேவை கள் பூர்த்தி செய்யப்படும் என்கிற ஒரே நம்பிக்கையில் நமக்கு வாக் களித்திருக்கிறார்கள். அவர்கள் பெரிய காரியங்கள் எதையும் கேட்ப தில்லை. தங்களுக்கு ரோடு வசதி வேண்டும், குடிதண்ணீர் வசதி வேண்டும், மின்சார இணைப்பு வேண்டும் என்பதாக அடிப்படைத் தேவைகளைத்தான் கேட்கிறார்கள். நான் நகரங்களுக்குச் செலவிடப் படுவதைப்பற்றிக் குறை சொல்லவில்லை. ஆனல் கிராம மக்களுடைய நிலையையும் கவனித்து உடனடியாக எல்லா ரோடுகளையுமாவது போட்டுத் தருமாறு கேட்கிறேன்.

இன்னென்று—என்னுடைய தொகுதியில் கிரியாற்றில் எறும்பூர் அணை அல்லது ஏரிக்காக இவ்வாண்டு நிதிநிலையில் நிதி ஒதுக்கம் செய் திருப்பதற்கு என்னுடைய தலையைச் சாய்த்து நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகள் பராமரிப்புக்காக யூனியன்களிடம் தொகை கொடுக்கப் படுவதை மாற்றி ஹைவேசிடமே அதை வைத்துக்கொண்டு சாலைகளை பராமரிக்கலாம். இன்றையதினம் நான் யூனியன்களைக் குறை சொல்ல வில்லை—ரோடுகள் போடுவதற்காகச் செலவிடுகிறார்களே தவிர நல்ல ரோடுகள் நல்லமுறையில் அமைகின்றதா என்றால் இல்லை. நம்முடைய ஹைவேஸ் துறை இந்தியாவிலேயே நல்ல புகழ்பெற்றது. ஆகவே இவர்கள் மூலமாகவே சாலைகள் எல்லாவற்றையும் போடு வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாக என் யோசனையைக் கூறி—கோரப்பட்டிருக்கிற மானியத் தொகையை மனமார வர வேற்று இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பா. நாகலிங்கம் : சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே 1972–73-ஆம் ஆண்டுக்கான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று அந்தத் துறையில் பணியாற்றுகிற அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் பாராட்டவும், போற்றவும் கடமைப்பட்டிருக்கிறேன்.





பொதுவாக இன்றையதினம் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அம்மையார் அனந்தநாயகி அவர்கள் பேசும்போது காங்கிரஸ் ஆட்சி யில் பெரிய பெரிய அணைகளை எல்லாம் கட்டிவிட்டதாகச் சொன் னார்கள். ஆயினும் அவர்கள் காலத்தில் இருந்தே நாங்கள் கேட்டு வருகிறோம், நாப்பாளையத்தில் ஒரு பாலத்தைக் கட்டவேண்டு மென்று. அது செய்துமுடிக்கப்படவில்லை. நம்முடைய ஆட்சியில் நிச்சயமாக இவ்வாண்டு மானியக்கோரிக்கையில் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டிருக்கும் என்று நினைத்தேன். அது இடம் பெறவில்லை. இருப்பினும் அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டிலாவது இதைப் பற்றி கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரிக்கும், மத்தியில் அமைந்துள்ள ஆயில் ரிபைனரிக்கும் இருக்கிற முக்கியத்தை உணர்ந்து இதை அமைத்துக்கொடுக்க முன் வரவேண்டும்.

சென்னை மாநகரத்திற்கே தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டபோது, எங்கள் பொன்னேரி தொகுதி பஞ்செட்டியில் இருந்து தண்ணீர் சப்ளை செய்தது. சென்னைமாநகரின் தண்ணீர்ப்பஞ்சம் போக்கப்பட்டது. அதுபோல இங்கே அரிசிப் பஞ்சம் ஏற்பட்டபோதும் பொன்னேரி தான் சென்னையின் அரிசிப் பஞ்சத்தைப் போக்கியது. ஆனல் இன்றையதினம் பொன்னேரி தொகுதியின் நிலைமை என்ன என்று பார்க்கவேண்டும். அந்தப் பகுதி விவசாயிகள் நிலவள வங்கிகளிடம் இருந்து கடன் வாங்கி 80 அடி ஆழமுள்ள போர்வெல்களை அமைத் தார்கள்.

ஆனல் இன்றையதினம் நம்முடைய அண்டர் க்ரவுண்டு வாட்டர் செல் மூலமாக சுமார் இருநூறு அடிக்குமேல் கிணறுகள் எடுக்கப் பட்டு ஆயில் ரிபைனரி போன்ற தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் சப்ளை செய்யத் தொடங்கிவிட்டதால், விவசாயிகளுடைய கிணறு களில் தண்ணீர் இல்லை. அவர்களுடைய நிலங்கள் சாகுபடி செய்ய முடியாதவாறு பாழ்ப்பட்டுக் கிடக்கின்றன. பம்பு போட நிலவள வங்கிகளிடம் இருந்து வாங்கிய கடனைக்கூட அடைக்க முடியாமல் இன்றையதினம் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த நேரத்தில் இது பற்றி அப்போதே அவர்களிடம் சொன்னபோது அவர்கள் சொன்னார்கள், தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் அளிப்பதன் மூலமாக அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றார்கள். ஆனல் இன்றையதினம் அதற்கு மாறாக எங்கள் தொகுதி விவசாயிகள்

[திரு. பா. நாகலிங்கம்] [1972 மார்ச் 21

பாதிக்கப்பட்டிருக்கிற நிலையை அரசு உணர்ந்து அவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்கலாம் என்பதைக் காண முன்வர வேண்டும்.

அடுத்து அமைச்சர் அவர்களே எங்கள் பகுதி அவுரிவாக்கம் பகுதிக்கு வந்தார்கள். அங்கே சாலைபோடுவதற்காக—மீனவப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக ஒரு திட்டம் போடப்பட்டு—ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தச் சாலை பூர்த்திசெய்யப்படவில்லை. ஒரு லட்சத்து இருபத்தைந்தாயிரம் - கடலில் கரைத்த பெருங்காயம்போல ஆகிவிட்டது. மீனவத் துறையும், பொதுப்பணித்துறையும் சேர்ந்து அந்தச் சாலையை அரசுச் சாலையாகவே செப்பனிட்டுத்தர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து எண்ணூரில் இருக்கிற அனல் மின்சாரத் திட்டத்தினால் எங்கள் தொகுதியின் மற்றொரு பகுதியினர்களாகிய மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக இப்படி ஒரு பக்கம் விவசாயிகள்—ஒரு பக்கம் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியாக எங்களுடைய தொகுதி ஆகிவிட்டது. அப்பேர்ப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி செய்ய இந்த அரசு முன்வந்தாக வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பெருவழித்துறையில் பல்வேறு தொழிலாளர்கள் பத்தாயிரத்துக்குமேல் இருபதாயிரம் வரை இன்றையதினம் நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிகமாகவே வேலைக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட—பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களாகையால், உடனடியாக அவர்களை நிரந்தரமாக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு இந்த மானியத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE: Hon Speaker, Sir, in support of the cut motion moved on behalf of my party, I wish to offer a few remarks.

Firstly, I would like to refer to the statement of the Hon. Minister placed on the table of the House with regard to Demands for Irrigation for 1971-72 wherein there is reference at page 7 to Work-charged Establishment. This is one of the long standing demands of the work-charged establishment employees of the Public Works Department and Highways and Rural Works Department, that their services should be provincialised. Now, Government have issued orders that the services of the members of the work-charged establishment in the Public Works, Highways and Rural Works Departments who have put in more than 5 years of service as on 24th November 1971 be regularised. My information is that till this day they have not been provincialised. I wish to bring this to the notice of the Hon. Minister.



1972 மார்ச் 21] [Dr. H. V. Hande]

Then a number of Junior Engineers have placed their demands before the Hon. Minister on 1st March 1972. I only wish to point out one aspect of the matter. For instance, the pay scales are different between Junior Engineers in Tamil Nadu and those in other States. For instance, in Punjab it is Rs. 550, in Haryana it is 550, in Uttar Pradesh Rs. 550 in Madhya Pradesh it is Rs. 550, in Gujarat it is 550 and in Tamil Nadu it is Rs. 430. For paucity of time, I could not go into more details. I request the Hon. Minister to give some sort of parity as between Junior Engineers of our State and other States.

I wish to point out another important aspect which the hon. Member Thirumathi Anandanayaki also referred to. Here is a book ("தொழிற்சாலைகள் கட்டம்" Factories Act and this book gives instructions to the department how exactly a Public Works Workshop should be looked after. In page 4, they have said:

அத்தியாயம்—4-ல், "தரைகள், படிக்கட்டுகள், கிட்டிச் செல்வதற்கான வழிகள்" என்றும், அத்தியாயம் 5-ல், "சுத்தம் செய்துகொள்வதற்கான வசதிகள்". இவை பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

cleanliness should be observed. They have issued clear instructions to the departments concerned. My point is whether such things prevla in the workshops organised not only by the Government but by others also. But it is in a bad condition and especially in Vyasarpadi, in the name of desilting and reclamation, no work has been done and photographs also have appeared in some magazines like the "Tuglak". After that, the department woke up and opened their eyes. At that stage there was a case of lady being bitten by a snake and allthat. Therefore, I want the Hon. Minister to give proper consideration to this aspect.

Sir, I have a number of cut motions and one of them is in regard to Cooum Scheme.

[Dr. H. V. Hande] [1972 மார்ச் 21

Before that, I would draw the attention of the Hon. Minister to my cut motion No. 474 where I have clearly referred to the grievances of the Junior Engineers of the Public Works Department.

Another cut motion also has been given, the substance of which is to discuss about the need to reduce the electricity charges for agricultural purposes, and the need to take steps to redress the grievances of Engineers, particularly the Junior Engineers regarding enhancement of their pay scales on par with the Associate Lecturer in Government Engineering Colleges, etc.

Another cut motion is in regard to regularisation of service of Junior Engineers numbering over 1100 out of 2000. They are in 'Thrisanku Swargam'. Also I would like to draw attention of the Hon. Minister to the need to promote the Junior Engineers after completion of five years of service as is being done in the case of Junior Engineers of Neyveli Lignite Corporation.

Another important aspect is about the grievances of Engineering Diploma holders. I hope and trust that the Hon. Minister will view all these cases very sympathetically and do something about it.

Then I come to another important aspect. I have before me a book relating to 1968-69, with regard to Cooum Reclamation Scheme. Here, at page 17—it is an old book relating to 68-69—it is stated that the first stage works are under way. The formation of embankment at the mouth of the river has almost been completed and the construction of *berms* on either side is under rapid progress. Like this, almost the same words are found in 71-72 also. And then they have given a statement that Rs. 1.18 crores will be required for this execution in two stages.

I wish to bring to the notice of the Hon. Minister that in the book relating to 1971-72, at page 6, it is said 'under the III Stage of the scheme, rehabilitation of the slum dwellers in fire proof tenements has been taken up.........and the remaining works are in progress. The expenditure incurred on the Cooum Improvements Scheme in 1970-71 is Rs. 75.77 lakhs and the total expenditure so far incurred is Rs. 120.17 lakhs. A revised estimate for the scheme costing about Rs. 190 lakhs is under consideration of the Government. Then if we compare this with 1970-71—this I would have quoted earlier, taking them in a chronological order—it is the expenditure on the first stage works during 1967-68 was Rs. 1.24 lakhs and during 68-69 it was Rs. 5.24 lakhs. The expenditure during 1969-70 was Rs. 24.08 lakhs. The expenditure on first stage works in 1970-71 was Rs. 19.49 lakhs ". If you take all these, one does not tally with the other. That is why I say that I will be happy if the Hon. Minister would look into all these things.





Then I shall bring to the notice of the Hon. Minister another aspect. On 15th March 1972, the Hon. Minister was answering a question on the floor of the House. The hon. Member, Thiru Surendran asked with regard to Cooum Reclamation Scheme. He asked whether money from Anna Samadhi has been transferred to Cooum Improvement Scheme. That is (Interruption) he did not mention the heads; money has been transferred from one head to another. From the head 'Anna Samadhi' to the head 'Cooum Improvement Scheme', money has been transferred. He also asked whether any Audit Report had been received and whether there is any Audit Objection. The Hon. Minister replied that there was no audit objection.

" இது ஆதாரமற்றது, ஆடிட் அப்ஜெக்‌ஷன் வர இடம் இல்லை. வேலை முடிந்த பிறகுதான் ஆடிட் செய்யப்படும். தவறான நோக்கத்தை ஏற்படுத்த வேண்டாம் " என்று அமைச்சர் கூறியிருக்கிறார்.

As far as I am concerned, I am not at all against ' and I want to make it very clear ' spending on Anna Samadhi. Where my objection comes is ........

* திரு. கோவை செழியன் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூவம் அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் செய்ததை அண்ணா சமாதிக்குச் செலவழித்ததாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் கூவம் திட்டத்திலே அந்த நீச்சல் குளத்திற்கும், அண்ணா சமாதிக்கும் இடையில் இருக்கின்ற இடம் கூவம் அழகுபடுத்தும் திட்டத்தில் சேர்ந்திருக்கிறது. அண்ணா சமாதிக்கு 3 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். இது கூவம் " ப்யூட்டிஃபிகேஷன் ஸ்கீமில் " சேர்ந்ததுதான். இதில் அங்கத்தினர் அவர்கள் குழப்பமடைந்திருக்கிறார்.

அண்ணா சமாதிக்கு தனிதலைப்பில் கிட்டதட்ட 3 லட்சத்திற்கு தொகையை அனுமதித்துள்ளார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, இதில் எந்த விதமான குழப்பமும் இல்லை. உறுப்பினரவர்களுக்குத்தான் குழப்பம். நான் பேசுவதை முழுமையாகக் கேட்க வேண்டும். நான் இன்னும் அந்தக் கட்டத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதால் நேரமாகிறது. கொஞ்ச நேரம் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரமாக உங்கள் பேச்சை முடித்துவிடுங்கள்.

Then, I come to another important point.

Mr. SPEAKER : We have to rise at 1.30 p.m. for lunch.

Dr. H. V. HANDE : If hon. Members do not interrupt me. I would finish my speech before 1.30 p.m.

In this connection, I would like to read G.O. Ms. No. 694, dated 15th March 1971. In this G.O. it is clearly stated in the first paragraph .........the area for beautification had to be extended further southward around Anna Samadhi also so as to make the area a complete stretch for development and that in view of the extension of the beautification around Anna Samadhi the estimates have to be revised to Rs. 4.40 lakhs. He has also stated that the entire beautification works have been taken up and completed in view of the urgency and has requested approval of the revised estimate'.

In the third paragraph of the G.O. it is stated—

'The expenditure should be debited to 99-Capital Outlay on Irrigation, Navigation embankment and Drainage Works (commercial II Development schemes) in the Fourth Five-Year Plan—B. Navigation, Embankment and Drainage Works (2) unproductive—3 (Improvements to Cooum river in Madras City).'

Earlier in the second paragraph of the G.O. it is state—

'The Government approved the revised estimate for Rs. 4.40 lakhs for beautification of the area around Anna Samadhi and the area on the southern bank of Cooum mouth, in modification of the orders issued in G.O.Ms. No. 2180, P.W. dated 5th December 1969.....: "



So, this is not an original G.O. and this is the second G.O. This G.O. has been signed by Thiru K. S. Sivasubramanian, Secretary to Government. It is clearly stated that the original G.O. has been modified and the amount has been transferred to this area. That is the point I would like to.........

Thiru N. GANAPATHI : Sir, on a point of order. The hon. Member is giving a wrong information......

Mr. SPEAKER : The Hon. Minister is there to reply to it and why the hon. Member is so much interested in that?

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முழுவதையும் பேசியதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், பதில் சொல்வார்கள், எனவே அவர்கள் முழுதும் பேசட்டும்.

திரு. என். கணபதி : அறிஞர் அண்ணா அவர்களின் சமாதியைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே பொறுப்பு வாய்ந்த கழகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கடமை இருக்கிற காரணத்தினாலேதான் நாங்கள் தலையிடப்போகிறோமே தவிர வேறு பிரச்சினையாக இருந்தால் நாங்கள் தலையிடப்போவதில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சரியாக உணராமல்தான் அப்படிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சுற்றியுள்ள இடத்தை—கூவம் திட்டத்தை அழகுபடுத்தும் திட்டத்தின் அடிப்படையில் அண்ணா சமாதியைச் சுற்றி உள்ள இடத்தை—தான் சொல்லியிருக்கிறார்களே தவிர அண்ணா சமாதியைப்பற்றிச் சொல்லவில்லை. எனவே அவர்கள் பேசுவதைக் குறுக்கிட்டுத் தடுத்துப் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இப்பொழுது பதில் சொல்லவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் ஏதோ குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான்கு மணி நேரம் பேசி விடுவதாலேயே அது நிலைநாட்டப்பட்டதாக ஆகிவிடாது. எனவே உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய உரிமையைப் பயன்படுத்திப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை முழுவதும் உணர்ந்துகொண்டதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாமே தவிர இப்பொழுது குறுக்கிட வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, this matter has been taken up by the Accountant General. The Hon. Minister in his reply has stated that the Accountant General would not normally take cognizance of the matter till it is finished. My information is that every six months the Accountant General calls for reports from the departments concerned. Now the point is, the entire expenditure has been ordered to be debited to the head, '99–Capital Outlay on Irrigation, Navigation, embankment and Drainage works' commercial II Development Schemes. . . It is observed that the work contemplated under this G.O. primarily relates to improvements in and around Anna Samadhi. In this connection, I have to make it clear that I have nothing against spending in Anna Samadhi. But I have to bring to the attention of the House the irregularities pointed out by the Accountant-General. It is observed that the work contemplated primarily relates to that Capital Outlay.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதிலிருந்து படிக்கிறீர்கள்?

DR. H. V. HANDE : This is a copy of the remarks of the Accountant-General. . . .

MR. SPEAKER : How did you get that copy ?

DR. H. V. HANDE : I will explain it.

MR. SPEAKER : Is it a final copy?

DR. H. V. HANDE : We have our own channels of communication.. . .

MR. SPEAKER : My point is, I want authenticity.

DR. H. V. HANDE : This is an extract ...

MR. SPEAKER : The hon. Member is entitled to speak anything but I want to know how did he get it?

DR. H. V. HANDE : I got it in my own way. In this connection, I want to point out that Thiru Bhupesh Gupta had stated that he had got a copy of the Income-tax Assessment Order. Here also I want protection of the Chair.

MR. SPEAKER : Do not get excited. I would give all the protection to the hon. Member. In fact I have already given protection to him. But I want to know. what is that copy ?



DR. H. V. HANDE : This is a copy of the A.G.'s remarks to the Department. Now, does the Hon. Speaker want me to reveal its source ?

MR. SPEAKER : The hon. Member need not reveal its source. Somebody might have stolen it or somebody might have given it and that is a different matter in which we are not interested. But I want to know. what is that copy ?

DR. H. V. HANDE : If the Chair wants, I am prepared to reveal its source.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கோட்பண்ணுவது என்ன என்று கேட்டேன். ஏ.ஜி.யின் ரிமார்க்ஸ் என்று சொன்னீர்கள். அப்படியென்றால் அது என்ன ஆடிட் ரிப்போர்ட்டா, அல்லது ஆடிட் நோட்டா அல்லது கரஸ்பான்டன்ஸில் இருக்கிற விவரமா?

DR. H. V. HANDE : This is in the correspondence stage.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : So, it is not audit Objection. உறுப்பினர் அவர்களுக்கே கூடத் தெரியும். ஆடிட் ரிப்போர்ட் என்றால் நமக்கு எல்லாம் கூட அச்சடித்துக் கொடுக்கப்படுவதுதான். There are various stages. The hon. Member has been in the Public Accounts Committte. நடுவிலே அவர்கள் கேட்பதையெல்லாம், கரஸ்பான்டன்ஸிலே இருப்பதையெல்லாம் இங்கே சொல்வது சரியல்ல.

DR. H. V. HANDE : After this, the Chief Engineer ...

MR. SPEAKER : I want to know whether it is an objection or note ?

DR. H. V. HANDE : It is not a final one ...

MR. SPEAKER : Then how are you going to decide it ? The Accountant-General would have sent a Note to the Government.

DR. H. V. HANDE : The Engineer has replied to that particular objection.

MR. SPEAKER : I want to get a clear answer. All the time the hon. Member has been saying that it is an audit objection. Now I want to know whether it is an audit objection or not ?

DR. H. V. HANDE : This is an objection raised by the A.G.'s Office. It has not come as Audit Report.

[Dr. H. V. HANDE] [1972 மார்ச் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் இருந்திருக்கிறீர்கள். ஒரு அரசாங்கத்திற்கும் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கும் விவரங்களைக் கேட்டுக்கொள்ள எவ்வளவோ வாய்ப்புகள் இருக்கும். எவ்வளவோ விஷயங்களைப் பற்றி விளக்கம் கேட்பார்கள். அவற்றிற்கு எல்லாம் பதில் எழுது வார்கள். அதற்குப்பிறகுதான் ஆடிட் ரிப்போர்டிலே எழுதுவார்கள். பூபேஷ் குப்தா அங்கே சொல்லியிருக்கிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள். பூபேஷ் திருடிக்கொண்டுவந்தேன் என்று வேண்டு மானாலும் சொல்லுங்கள் என்று சொன்னதாக எனக்கு ஞாபகம். அவர்கள் சொன்னார்களா அல்லது வேறு யார் சொன்னார்களோ தெரியவில்லை. அப்படி மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னால்கூட எனக்கு கவலையில்லை.

Dr. H. V. HANDE : I must be given a chance to explain it.

Mr. SPEAKER : I am interested in.....

Dr. H. V. HANDE : If the Chair gives me two minutes I will explain it.

Mr. SPEAKER : It is a technical point ...

Dr. H. V. HANDE : Sir, I will explain it. The hon. Member, Thiru Surendran has asked, whether Audit has raised any Objection. He did not say that final audit report was there. He asked whether audit has raised objection. The Hon. Minister said 'No.' My point is audit has raised objection and it has been referred to Chief Engineer and the Chief Engineer has replied. He has not met any objection in his reply. If the reply of the Chief Engineer is placed on the table of the House, if a copy of the Accountant General's objection is placed on the table of the House and also the final decision of the Government, it would help us. I have never said it is a final audit report. What I say is that Hon. Minister's information is wrong and incorrect. That is the only point.

Mr. SPEAKER : I am not interested whether the Hon. Minister's information is correct or incorrect. My point is the hon. Member must speak on an authentic thing.

Dr. H. V. HANDE : I am saying this is authentic.

Thiru N. GANAPATHY : On a point of Order, Sir.



1972 மார்ச் 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னையைப் பற்றி குறைகள், குற்றச்சாட்டுகள் சொல்லும்பொழுது அங்கத்தினர்கள் தாங்களாக எந்தக் குறையையும் சொல்லலாம், அமைச்சர்கள் மறுக்கலாம். ஆனால் அக்கவுண்டெண்ட் ஜெனரல் தந்த ஆடிட் ரிபோர்ட் என்ற அடிப்படையில், அரசாங்கத்தில் உள்ள ஒரு இலாக்கா தெரிவித்தது என்ற கருத்தின் அடிப்படையில் ஆதாரத் தோடு கூடிய ரிப்போர்ட் கையில் இல்லாமல் யாரும் பேசுவது அந்த அலுவலகத்தில் உள்ளவர்களைத் தவறான முறையில் இங்கு கொண்டு வந்து நிறுத்துவதாகும். பாராளுமன்றத்தில் நடைபெற்றபோது கூட அலுவலகத்தில் பதிவான காப்பியை வைத்துக்கொண்டு பேசினார்கள்.

Dr. H. V. HANDE : No. It was Bhupesh Gupta's Copy.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு காப்பியை வைத்துக் கொண்டு பேசுவதனால்கூட ஃபைனல் ஸ்டேஜில் அலுவலகத்தில் முடிந்ததை வைத்துக்கொண்டு பேசாமல் அங்கேயுள்ள கரெஸ்பாண் டெண்ட்சை வைத்துக்கொண்டு பேசுவது முறை அல்ல. அப்படிப் பேசுவதாகயிருந்தால் தாங்களாகப் பேசலாமே தவிர அக்கவுண் டெண்ட் ஜெனரல் அலுவலகத்தின் குறிப்புகள் என்ற அடிப்படையிலே பேசுவது இந்த அவையின் தரத்தை உயர்த்துவதற்கு ஏற்றதாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹாண்டே, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் தாராளமாகப் பேசுங்கள். தஸ்தாவேஜியை பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் அக்கவுண்டெண்ட் ஜெனரல் அலுவலகமும் அரசாங்கத்தின் ஒரு உறுப்புதான், அதையும் நாம் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அவை சரியாக நடை பெற வேண்டுமென்பதற்காகத்தான் நான் உங்களோடு பேசுகிறேனே தவிர, மாண்புமிகு அமைச்சரவர்கள் கரெக்டாகச் சொன்னாரா, கரெக்டாகச் சொல்லவில்லையா, அந்த ஹெட்டிலிருந்து இது செல வழிக்கப்பட்டதா, இல்லையா என்று நீங்கள் கூறுவதற்குத் தாராள மாக உரிமை இருக்கிறது. பேரவைத் தலைவராகிய எனக்கு ஒன்றும் அதைப்பற்றி கவலையில்லை.

நான் நீங்கள் பேசுவதை ஃபாலோ செய்ததால் எனக்கு ஏற்படும் அர்த்தம் என்னவென்றால், கூவம் இம்ப்ரூவ்மெண்ட் என்பது வேறு, அண்ணா சமாதி என்பது வேறான ஒன்று, கூவம் இம்ப்ரூவ்மெண்டுக்கு செலவு செய்ய வேண்டிய பணத்தைத் தவறாக அரசாங்கம் அண்ணா சமாதி என்பதாகச் செலவு செய்துவிட்டது, அது முறை கேடானது,

கணக்கில் 99-லே எழுத வேண்டியதை 104-லே எழுத வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்பது உங்களுடைய ஒரு வாதம். நான் கேட்பதெல்லாம், நீங்களும் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் இருந்திருக்கின்றீர்கள், நானும் இருந்திருக்கின்றேன். அதற்காகத்தான் நான் முதலிலேயே கூறினேன். நீங்கள் பேசியதிலிருந்து நான் தெரிந்துகொள்வது என்னவென்றால் அது ஆடிட் அப்ஜெக்ஷன் அல்ல, ஆடிட் நோட் என்று தெரிகிறது. ஒரு ஆபீசிலிருந்து எழுதுவார்கள், தவறாகக்கூட எழுதுவார்கள். அக்கவுண்டெண்ட் ஜெனரல் ஆபீசில்கூடத் தப்பு செய்யலாம், அரசாங்கமும் தப்பு செய்யலாம். நீங்கள் ஏன் இப்படி எழுதியிருக்கிறீர்கள், அது சரியல்ல என்றுகூடச் சொல்லலாம். நீங்கள் படித்த ஜி.ஓ.வை நானும் படித்துப் பார்த்தேன். நாலு வரி முன்னால் படித்திருந்தால் ஒரு விஷயம் தெளிவாகியிருக்கும்

I am referring to G.O. No. 694. I shall read what it says—

In the G.O. read above, the Government approved the estimate for Rs. 3.00 lakhs for beautification of the area between right bank of Cooum river mouth and Anna Samadhi as part of the Cooum Improvement Project, has now reported that the area on the right bank of cooum river mouth could not be utilised as originally intended, in view of the location of a swimming pool and a boat-club, that the area for beautification had to be extended further southward around Anna Samadhi also so as to make the area a complete stretch for development and that in view of the extension of the beautification around Anna Samadhi the estimates have to be revised to Rs. 4.40 lakhs.

என்றுதான் இருக்கிறது. அந்த இடத்திலே செய்ய முடியவில்லை, அதையொட்டிச் செய்ய 3 லட்சத்திலிருந்து 4½ லட்சம் வரை ஆகிறது என்றுதான் இருக்கிறது. ஆனால் முறையானதா, அண்ணா சமாதிக்குச் செலவழிக்கலாமா வேண்டாமா என்பதுபற்றி ஏதோ இரண்டுபேருக்கும் நடைபெறும் கரெஸ்பாண்டென்ஸை வைத்துக் கொண்டு சொல்வது சரியல்ல. முழுமை பெறாமல் இருக்கிறது. 99-லே எழுத வேண்டுமென்று ஏ.ஜி. சொல்கிறார். இல்லையென்று இவர்களே நிலைநாட்டலாம்.

ஏனென்றால் உறுப்பினர்கள் பலர் ஒழுங்குப் பிரச்னைகள் எழுப்பினார்கள். அதனால் தவறான அர்த்தத்திற்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேனே தவிர, இதுகூடப் பேரவைத் தலைவரின் வேலை அல்ல. ஏ.ஜி.யைக் காப்பாற்ற, அரசாங்கத்தைக்



காப்பாற்ற வேண்டியிருக்கிறது. பூபேஷ் குப்தாகூட நான் படித்துக் காண்பித்ததைத் திருடிக்கொண்டு வந்தேன் என்று கூறியதாகக்கூட எனக்கு ஞாபகம். ஆனால் நீங்கள் நல்லவேளையாக அப்படிச் சொல்ல மாட்டீர்கள். ஆனால் ஒரு மாமன்றத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இண்டிபென்டென்ஸ் இருக்கிறது என்பதற்காக ஒரு தவறான அர்த்தத்தை, அண்ணா சமாதிக்குச் செலவு செய்ததால் ஏற்பட்டது என்ற அளவிற்குப் போய்விட்டார்கள். அதிலுள்ள ஆதாரம் என்ன என்பதை மட்டும் விளக்கினால் இந்த விவாதத்திற்கு நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது இந்த மன்றத்திற்குப் பெருமையாகவும் இருக்கும் என்பதுதான் என் கருத்து.

உறுப்பினர்களின் கருத்துக்களைச் சொல்லிவிட்டேன். அமைச்சர் தவறாகச் சொல்லியிருக்கின்றார், கரெக்டாகச் சொல்லவில்லை என்று சொல்லுங்கள், முறைகேடுகள் இருந்தால் சொல்லுங்கள், அதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. ஆனால் இந்த மன்றத்தில் தவறான எண்ணம் வரும்படிச் செய்யக்கூடாது என்பதுதான் என்னுடைய கவலை.

THIRU N. GANAPATHY : On a point of Order, Sir. the hon. Member Dr. Hande is saying that he is speaking on the correspondence between Accountant-General's Office and Chief Engineer's office. Has he furnished copies to the Hon. Speaker. I want your ruling Sir. Can he use a document without furnishing a copy to the Hon. Speaker.

DR. H. V. HANDE : I have shown it to the Hon. Speaker. This is for the information of the Hon. Member.

My only point is, as the Hon. Speaker said, it was only an audit note. I never claimed it as audit objection . . .

MR. SPEAKER : That is the point.

DR. H. V. HANDE : I never said and insisted that it was an audit report. The hon. Member Thiru Surendran asked whether audit objection had been raised at several stages by the department and the Hon. Minister said 'no objection was raised'. I fully agree that it is not a final audit objection. But what I want to say . . .

MR. SPEAKER : What is your point, Mr. Hande? What are you making out? The original estimate was Rs. 3 lakhs and it

has now risen to Rs. 4½ lakhs. There is difference of Rs. 1½ lakhs. What do you want to make out? What is the omission of Government?

Dr. H. V. HANDE : I claim that it is wrongly put under a wrong head. I can substantiate my claim. The audit note was sent to Chief Engineer. But the Chief Engineer has not given his reply to all the points.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ராங் ஹெட்டில் வைக்கப்பட்ட காரணத்தால் அது ஊழல் என்ற தலைப்பில் வருமா?

Dr. H. V. HANDE : The Hon. Chief Minister was not here during the first part of my speech. I have never said ' "ஊழல்"

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இங்கு சொல்லவில்லை. ஆனால் நீங்கள் சொல்லி பத்திரிகையிலே கொட்டை எழுத்துக்களில் வந்திருக்கிறது. கூவத்திற்காகச் செலவழிக்கப்படும் பணம் அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்டு ஊழல் ஆகிவிட்டது என்று முழக்கம் செய்ததாக, ஊழல் முழக்கம் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. வெளியிலே இப்படிப் பேசுகிறார்கள். சட்டசபையில் பேசும்பொழுது ஊழல் என்ற வார்த்தையை விட்டுவிட்டு வெளியில் பேசுவதை, அப்படியே பேசுகிறார்கள். ஆகவே அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்டதா அல்லது அண்ணா சமாதியைச் சுற்றிலும் அழகுபடுத்துவதற்காகவா? சுற்றிலும் உள்ள இடம் என்று காட்டுவதற்காக, குறிப்பிட்டுக் காட்டுவதற்காக அண்ணா சமாதி என்ற அந்த வார்த்தை போடப்பட்டிருக்கிறது. கடற்கரை ஓரமாகவுள்ள அந்த இடம் அழகுபடுத்தப்பட்டது. ஒரு ஹெட்டிலிருந்து இன்னொரு ஹெட்டிற்குப் போட்டதால் என்ன ஊழல்? அது ஊழல் அல்ல. அது திருத்திக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றே தவிர ஊழல் அல்ல.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சுரேந்திரன் அவர்கள் கேட்டதைப்பற்றிய பிரச்னை. நாம் டெக்னிக்கலாகப் பேசுவதால் இந்தத் தகராறுகள் வருகின்றன. அவருடைய கேள்வியில் அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்ட பணம் என்று சொல்லியிருக்கிறார். ஆடிட் அப்ஜெக்ஷன் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அண்ணா சமாதிக்குப் பக்கத்தில் என்று கேட்டிருந்தால் மாற்றிச் சொல்லியிருக்கலாம்.





சொன்னதிலே எந்தவிதமான தவறும் இருப்பதாகத் தெரியவில்லை. அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்ட பணம் கூவம் திட்டத்திலிருந்து செலவழிக்கப்பட்டதாக ஆடிட் அப்ஜக்ஷன் இருக்கிறதா என்பது- கேள்வி.

அமைச்சர் " இல்லை " என்று கூறியிருக்கிறார்.

Dr. H. V. HANDE : My claim is that a particular amount has been transferred from one to another head. . .

Mr. SPEAKER : You have been belabouring the point; you have to establish your point.

Dr. H. V. HANDE : First of all, the Hon. Minister for Industries, says ' Anna Samadhi க்காக My claim is ' in and around Anna Samadhi ' money has been spent . . . This is the argument advanced by the Accountant-General also.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திரு. சுரேந்திரன் அவர்கள் கேள்வி—" அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்ட பணம் கூவம் திட்டத்தில் இருந்து எடுத்துச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றி ஆடிட் அப்ஜக்ஷன் செய்யப்பட்டிருப்பாதகத் தகவல் இருப்பது உண்மையா? " என்பது.

அதற்குப் பதில் " இது ஆதாரமற்ற செய்தி. ' ஆடிட் அப்ஜக்ஷன் வர இடம் இல்லை....... " என்று சொல்லப்பட்டிருக்கிறது. கூவம் திட்டத்தின் பணத்திலிருந்து அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டதற்கு " இல்லை " என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், " ஆடிட் அப்ஜக்ஷன் வருவதற்கு இடமே இல்லை " என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது.

Because we have not spent from Cooum Improvement Scheme on Anna Samadhi.

இதைத்தான் சொல்லியிருக்கிறோமே தவிர வேறல்ல. இதை வைத்துக் கொண்டு ஆடிட் அப்ஜக்ஷன் வந்திருப்பதாகக் கூறுவது தவறு, சரியல்ல.

Dr. H. V. HANDE : My point is that amount under the head had been instructed to be transferred to another head. What was the specific interest in issuing instructions to transfer from one head to another.

[1972 மார்ச் 21

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது "கூவம் சீரமைப்புத் திட்டத்திலிருந்து அண்ணா சமாதிக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதாகும். ப்யூடிபிகேஷன் ஸ்கீம்படி, அண்ணா சமாதிக்கும், கூவம் ஆற்றுக்கும் இடையில் இருக்கும் பகுதிகளை அழகுபடுத்தும் திட்டத்தின்படிதான் செய்யப்பட்டிருக்கிறது. போட் கிளப் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகள் எல்லாம் பியூட்டிபிகேஷன் ஸ்கீமில் கொண்டு வரப் பட்டிருக்கிறது. ப்யூடிபிகேஷன் ஸ்கீமைத்தான் எக்ஸ்டென்ட் செய் திருக்கிறோமே தவிர, அண்ணா சமாதியை அல்ல. கூவம் திட்டத்தி லிருந்து எடுத்து அண்ணா சமாதிக்குச் செலவ்ழிக்கப்பட்டதாக பொறுப்புள்ள மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறாரே, அதைப் பற்றிக் கவனமாகப் பார்க்க வேண்டுமென்று காலையில் முதலமைச்சர் அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான் எல்லா ஜி.ஓ.க்களையும் படித்துப் பார்த்தேன். ஒருவேளை உண்மை இருக்குமோ என்று பார்த்தேன். ஆனால் அந்த மாதிரி ஒன்றும் இல்லை. கூவம் ப்யூடிபிகேஷனுக்காகத்தான் செலவழிக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே 3 லட்சம் ஒதுக்கப்பட்டது தற்போது கொஞ்சம் அதிக மாகியிருக்கிறது; அதைத்தான் உத்தரவு குறிப்பிடுகிறது. இதைப் பற்றித்தான் இருக்கிறதே தவிர, ஆடிட் ரிப்போர்ட் வரவில்லை. ஆடிட் ரிப்போர்ட் என்றால், சில விளக்கங்களை அக்கவுண்டன்ட் ஜெனரல் ஆபீசில் கேட்பார்கள்; விளக்கங்களைக் கேட்ட பிறகு அவர்கள் கருத்தாக முடிவாக ஒரு "பாரா" சேர்ப்பார்கள். அது தான் ஆடிட் ரிப்போர்ட்டாக ஆக முடியும். இப்போது இதிலே எந்தவிதமான தவறும் இல்லை.

MR. SPEAKER: That is what I have been telling Dr. Hande all the time.

DR. H. V. HANDE: My point is ' in modification of the orders issued, this G.O. No. 2180 has been issued. ' I do not say that audit report has come. I wanted to know whether an audit objection has been received from the Accountant-General and whether any answer had been given. If so, what is the answer. My only question is in and around Anna Samadhi work had been done and that is included in Cooum Improvement Scheme. With regard the point of Hon. Chief Minister, I was making a serious charge in the Cooum affairs there was ' Oozhal '. That relates to expenditure incurred for importing labour using departmental lorries. The Special Chief Engineer in his order has agreed to importing



1972 மார்ச் 21] [Dr. H. V. Hande]

labour by departmental conveyance, though he has already paid the contractor for the purpose. But the contractor who was supposed to import labour separately was assisted by arranging departmental lorries to import labour. There was double payment. That is the main point.

Another point is whether the original objects of the Cooum Project had been achieved. The High Power Technical Committee in August 1960, made its recommendations for guidance in the preparation of the estimates and designs for the various works which formed part of the Scheme as a whole.

Their recommendations to the Government are (i) one of the terms of reference to the Committee was to draw up a comprehensive scheme for the development of the Cooum as a clean and tidal river. The most important step to be taken to keep the Cooum and the Buckingham canal clean is to prevent the overflow into them from the sewage pumping stations. The scheme for the improvement of the City sewerage system in Zone V as per the Corporation Master Plan for the City drainage should be given top priorityy as it could prevent nearly 90 per cent of the sewage pollution of the river Cooum and the Buckingham Canal. This should be followed up by the implementation of the rest of the drainage scheme of the Corporation of Madras already formulated.

(ii) The pollution of the river and the canal from the slums on their banks was very high. Very bad insanitary conditions prevailed on the river and canal margins near those slums. It was of atmost importance that all the slums should be cleared immediately. Measures for the prevention of sewage pollution as recommended by the Committee have not been taken so far. The work on the removal of the slum dwellers also has not been completed. In other words, the main objects of the scheme have not been completed. The duty of the Opposition is to pin-point these things. It will be to the advantage of the Government, so that they could weed out and set their records clean. If we do not do our duty, how can the Government have any idea of the mistakes? That is the purpose of the Public Accounts Committee and the Opposition.

Therefore, I hope the Hon. Minister will in his reply give clear information with regard to both the Government Orders, the original and the modified one and why it was modified. The purpose of my cut motion is to expedite the whole work.

I want to make one thing very clear. I have not spoken anything against 'Anna Samadhi', for, tomorrow no political advantage should be taken of it. I have very clearly supported it. For that matter, I was one of the first men and it was my original stand when both of us where in Anna's House when the present Chief Minister made the suggestion. I said 'It is quite an admirable idea' and I have been always supporting that. . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Dr. Hande's suggestion is not necessary for them ; they are 184 and they can spend any amount.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே முடித்தாகி விட்டதா?

*இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன ; மாலை 4-30 மணி யளவில் பேரவை மீண்டும் கூடும்.*

*பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

*மாலை 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* திரு. ஜே. ஜேம்ஸ். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பாசனம், சாலைகள் ஆகிய மானியங்கள் மீது எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களையொட்டி சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம் மாநிலத்தில் 1966–67-க்கு முன்பே காங்கிரஸ் ஆட்சி இருந்த போது மாநிலத்தில் உள்ள அத்தனை பெரிய ஆறுகளிலும் பெரிய பெரிய அணைகளைக் கட்டி இந்த அரசு வந்தபோது பெரிய வேலைத் திட்டங்களை எடுத்துச் செய்வதற்கான சூழ்நிலை இல்லாதிருந்தது. சாதாரணமாக எந்த ஒரு மானியத்தை எடுத்துக்கொண்டாலும் அமைச்சர்கள் தருகின்ற அறிக்கைகளில் 1966–67-யை ஒப்பிட்டு இந்த அரசு செய்திருக்கிற காரியங்களை எடுத்துக் காட்டுவது வழக்கம். ஆனால் இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் 1966–67-யை ஒட்டி எந்தவிதமான தகவலையும் இங்கு வைக்கவில்லையென்பதைப் பார்க்கும்போது இந்த அரசுக்கு பெரிய வேலைகளை காங்கிரஸ் அரசு வைத்துவிட்டுப் போகவில்லை என்பதைத்தான் 'அது எடுத்துக் காட்டுகிறது என்றே நான் கருதுகிறேன்.





இந்த ஆண்டு சமர்ப்பித்திருக்கக்கூடிய அறிக்கையைப் பார்க்கும் போது பெரிய பெரிய திட்டங்கள் இல்லை என்று சொன்னாலும் சிறிய சிறிய திட்டங்களை அல்லது பெரிய திட்டங்களைப் பராமரிக்கும் வேலை களுக்குத்தான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருவேளை பெரிய வேலைகள் இல்லையென்று சொன்னாலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் முக்கியமான சிறு சிறு திட்டங்கள் இருக்கின்றன. கழிந்த இரண்டு ஆண்டு காலத்திய மழையின் கணக்கை எடுத்துப் பார்த்தால் அதிக மான தண்ணீர் வீணாக கடலிற்கு சென்று கலந்திருக்கிறது. முன்பு ஒருமுறை அமைச்சர்கள் சொன்னார்கள், தண்ணீர் அதிகமாக வேஸ்ட் ஆகவில்லையென்று.

இன்றைய அறிக்கையைப் பார்க்கும்போது கழிந்த காலங்களில் நல்லமழை இருந்தது என்பதும் தண்ணீக் வேஸ்டாகிப் போயிற்று என்பதும் தெரிய வருகிறது. கன்னியாகுமரிப் பகுதியில் ஆலத்துறை ஆறு அணைத்திட்டம், மாம்பழத்துறை ஆறு அணைத்திட்டம் இவை களை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்று சொல்லும்போது, அப்படி அவற்றை நிறைவேற்றி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மக்களுக்காகச் செய்வதா என்று நினைத்தால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமல்ல வறட்சிமிக்க நெல்லை மாவட்ட மக்களுக்காகவேனும் அத்திட்டங்களை எடுத்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திற்பரப்பு வலதுகரை கால்வாய் திட்டம் பட்டணங்கால் திட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. 1966-ல் இந்தத் திட்டத்தை எடுத்து அதற்கான எஸ்டிமேட்ஸ் தயார் செய்து, சர்வே முடிந்து, கால்வாய் வெட்டக்கூடிய இடத்தில் கற்கள் கூட அங்கு நாட்டப்பட்டிருந்தன. ஆனால் இந்த அரசு வந்ததற்குப் பிற்பாடு அதை கைவிட்டது மட்டுமல்லாமல் நாட்டியிருந்த கற்களைக் கூட பரித்து எறிந்து விட்டார்கள் என்பதை வேதனையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒருசில தனிப்பட்டவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்பதினால், இக்கால்வாயை வெட்டினால் நஷ்டம் ஏற்படும் என்று சொல்லி கைவிட்டது பாராட்டத்தக்க நிகழ்ச்சி யல்ல. அதன் காரணமாக அருமனை, சிதறால், வெள்ளாய்கோடு ஆகிய பஞ்சாயத்துக்களில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடிதண்ணீருக்குக்கூட அத்திட்டம் அத்தியாவசியமாக இருக்கிறது.

சிற்றாறு பட்டணங்கால் திட்டத்தில் அணையில் தண்ணீர் இருந் தாலும் டேல் என்ட்க்கு தண்ணீர் போய்ச் சேருவதில்லை. ஆகவே

கரையை உயர்த்த வேண்டும். அடுத்தபடியாக அருவிக்கரை வலதுகரை இடதுகரை கால்வாய் சீரமைப்புத் திட்டம். அத்திட்டத்திற்காக கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் இன்னும் அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அதனல், அக்கால்வாய் சீரமைக்கப்படாததால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே காலம் கடத்தாது அதை உடனடியாக அமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறப்புச் சிறுபாசனம், சிறுபாசனம் என்ற தலைப் பின்கீழ் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டங்களில் அதிகமாக தஞ்சை மாவட்டத்திற்கும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கும்தான் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. கோவை, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு, கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்கள் பொறுத்தவரையில் சிறுபாசனத்திட்டத்தின்கீழ் எந்த வேலையும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆக, இந்த அறிக்கை தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மட்டும்தானு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சாலைவளர்ச்சி, கட்டட வேலைகளைப் பொறுத்தளவில் 1967-க்கு முன்னல் கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பாலங்களையும், சில அணைகளையும் அன்றிருந்த காங்கிரஸ் அரசாங்கம் நிறைவேற்றியது. அதற்கு அப்புறம் ஒரு சிறிய பாலத்தையாவது இந்த அரசாங்கம் அமைத்துத் தந்திருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. கழிந்த ஐந்து ஆண்டுக் காலமாக ஒரு சிறிய பாலம் கூட எங்கள் பகுதியில் கட்டப்படவில்லை என்றால் அதற்குக் காரணம் அரசியல் நோக்கமா அல்லது வேறு காரணங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று மக்கள் ஐயப்படக்கூடிய நிலை இருக்கிறது.

ஞாறுன்விளை பாலம் பொறுத்தமட்டில் திருவிதாங்கூர்–கொச்சி அரசாங்கம் இருந்தபோது அந்தப் பாலத்திற்கான எஸ்டிமேட்ஸ் தயாரிக்கப்பட்டு 1965-ல் யுத்தம் காரணமாக அத்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்தது. ஆனல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அத்திட்டம் கைவிடப்பட்டதாக கூறப்படுகிறது. இது முக்கியமானதொரு திட்டம்.

அடுத்தபடியாக, மூலாற்றுமுகம், மாரப்பாடி போன்றயிடங்களில் மழைக்காலங்களில் மக்கள் பாலமில்லாத காரணத்தினல் அவதியுறுகிறார்கள். ஆகவே, அங்கு பாலங்கள் அமைத்துத் தர வேண்டும். (மணியடிக்கப்பட்டது) திருவெட்டாற்றில் ஒரு பாலம் இருக்கிறது. அதன் இருமருங்கிலும் உள்ள ரோடு மிகவும் உயரமும்





அகலக் குறைவாகவும் இருப்பதால் பல பஸ் விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே விரைவில் அந்த ரோடை விரிவுபடுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அருவிக்கரை பாலம் கட்டப்படவேண்டும். சாமியார் மடத்திற்கு அருகில் பாம்பூர்வாக்காலில் உள்ள பாலத்தை விரிவுபடுத்த வேண்டும். கணபதியான் கடவில் ஒரு பாலம் கட்டவேண்டும். இப்படி பல திட்டங்கள் உள்ளன. ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டுபோக சமயமில்லை. நான் வெட்டுத்தீர்மானம் கொடுத்துள்ளேன். அவைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாவற்றையும் செய்யமுடியவில்லை என்றாலும் அந்த ஜில்லா புறக்கணிக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவாவது ஒன்றிரண்டு திட்டங்களையாவது எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி நீர்பிரச்னை முக்கியமானது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் அது எவ்வளவு பெரிய பிரச்னை என்பது அரசுக்குத் தெரியும். 1971-ம் ஆண்டு ஜூலை 8-ம் தேதி இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினேம். நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பிவைத்தோம். 15 நாட்களுக்குள் பிரச்னையை நடுவர் தீர்ப்புக்கு அனுப்பவில்லை என்றால் இங்கு நாம் கிளர்ச்சி செய்வோம் என்று தீர்மானம் செய்தோம். இதுவரையில் மத்திய அரசிலிருந்து ஏதாவது மறுபடி வந்ததா? அதன்மீது ஏதாவது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறேமா என்பதுபற்றி இந்த அறிக்கையில் ஒன்றுமே காணவில்லை. இதுசம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு, அந்த அணைகள் கட்டுவதை நிறுத்திவைக்கவேண்டும் என்று ஸ்டே மனு கொடுக்கப்பட்டதாகவும் அது தள்ளப்பட்டதாகவும் பத்திரிகை வாயிலாக அறிகிறேமே தவிர இந்த அரசாங்கம் இந்த மன்றத்திற்கு எந்தவிதத் தகவலையும் தரவில்லை என்பதைச் சொல்லும்போது நிச்சயமாக மனவேதனைப்பட வேண்டியிருக்கிறது.

கேரள மாநிலமும் அங்குள்ள தண்ணீரை நமக்குப் பயன்படுத்துவதற்கு இனிமேல் தரப்போவதில்லை என்று—பாண்டியாறு—புன்னப்புழா திட்டப்படிகூட நமக்குத் தண்ணீர் தரப்போவதில்லை—கேரள முதல் அமைச்சர் அவர்கள் அங்கு சட்டமன்றத்தில் கூறியிருப்பதாக பத்திரிகை வாயிலாக அறிகிறேம். பக்கத்து மாநிலங்கள் நமக்கு எதிராக இந்த விஷயத்தில் இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் மாநில சுயாட்சி கேட்கிறேம் என்றால் அது எங்கே கொண்டு சேர்க்கும் என்பதை இந்த அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 மார்ச் 21

கூவம் சீரமைப்புத் திட்டம் சம்பந்தமாக ரூ. 4.80 லட்சம் ரூபாய் அண்ணா சமாதியில் ரோடு போடுவதற்கும், அவர் சமாதிக்கு முன்பு போட்டிருக்கும் ஆர்ச்-க்குமாக இந்தப் பணம் செலவு செய்யப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அது உண்மையா இல்லையா என்பதைப் பற்றி இந்த மன்றத்திற்கு ஒரு விளக்கம் தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. த. சோணையா: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பொதுப்பணித் துறை மானியத்திலே பேசு வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் நான் கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறைய செலவு செய்யப்படுகிறது, அதற்கான புள்ளி விவரம் இருக்கிறது என்று பெருமதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஆண்ட காலத்தில் புறக்கணிக்கப்பட்ட மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம் என்பது அவர்களுக்கு நினைவில்லை என்று நான் கருது கிறேன். மாவட்டங்களிலேயே பஞ்சை மாவட்டம், வறட்சி மாவட்டம், பட்டினி கிடந்து பழக்கப்பட்ட மாவட்டம் என்று சொல்லப்படுவது இராமநாதபுரம் மாவட்டம்தான். எவ்வளவோ இந்த அரசு வந்ததற்கு பிறகு ஐந்தாண்டுக் காலத்தில் செய்திருந் தாலும் இன்னும் செய்யவேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, ஊராட்சி ஒன்றியச் சாலைகளை 1,600 கிலோ மீட்டருக்கு மேல் வருவதையெல்லாம் 1972–73-ம் ஆண்டில் அரசு எடுத்துக்கொள்ளும், பொதுப்பணித் துறை நிர்வகிக்கும் என்று கூறி யிருப்பது ஊராட்சிப் பொறுப்பிலே இருக்கும் எங்களைப் போன்றவர் களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. ஏனென்றால் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நிர்வகிக்க முடியாமல், பல கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறோம் என்பதை நன்கு உணர்ந்தவன் என்ற காரணத் தால் இதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், போற்று கிறேன். அதே நேரத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு நிறைய செய்து இருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட என்னுடைய தொகுதியில் குறிப்பாக புல்வார்கரை–தஞ்சாக்கூர் இரண்டையும் இணைக்கும் இடத்தில் பழையநூருக்கு அருகில் அச்சங்குளத்தில் பாலம் ஒன்று கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்புவனத்திலிருந்து மதுரை செல்லும் நெடுஞ்சாலையில் கழுகர் கடை என்ற இடத்தில் திருப்புவனம் கால்வாயில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. த. சோணையா]

என்னுடைய தொகுதியில் 40 இடங்களில் பாலம் கட்டவேண்டிய அவசியம் இருக்கிறது என்றாலும், அத்தனையும் நான் வலியுறுத்தாமல், இந்த இரண்டு பாலங்களை மட்டும் வேண்டும் என்று சொல்வதற் கான காரணத்தை கூற விரும்புகிறேன், சென்ற ஆண்டேகூட நிதி இல்லை, சரியில்லை என்று சொல்லி விட்ட காரணத்தால் வேலை நடை பெறாமல் போய்விட்டது. இந்தத் தடவை அதை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இதனை வலியுறுத்திச் சொல்வதற்கான காரணம், அங்கே இருக்கிற மக்கள் சிறு மழை பெய்தாலும், அந்த வாய்க்காலை கடந்து அந்தப் பக்கம் செல்லவேண்டுமானால் தண்ணீரிலே நீந்திதான் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இன்றும் அங்கே இருக்கும் ஆண்களும் பெண்களும் நீந்தித்தான் செல்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், வெள்ளைக் காரன் காலத்திலும் நீந்தி வந்தோம், காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் நீந்தி வந்தோம், இப்போது தி.மு.க. ஆட்சியிலும் நீந்துகிறோமே என்று மனம் நொந்து சொல்லுகிறார்கள். இந்தச் சொல் மாற்றப் படவேண்டும் தமிழக அரசால் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தண்ணீர் வருகிறபோது எல்லாம் ஆண்கள்—நீங்கள் இதுவரையில் கேள்விப்பட்டு இருக்கமாட்டீர்கள் இந்த மன்றத்திலே அந்தமாதிரியான வார்த்தைகளை யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்—ஆண்கள் கோமணம் கட்டிக்கொண்டு நீந்திச் செல்கிறார்கள். இடுப்பில் கட்டி இருக்கும் துணியைத் தலையில் எடுத்து கட்டிக்கொண்டு செல்கிறார்கள். பெண்கள் நீந்திச்செல் கிறார்கள் என்றால், அவர்களுடைய உறவினர் தனியாக துணியைக் கொண்டு வந்து கொடுத்து, அதை மாற்றிக்கொண்டு செல்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான் அந்த இரண்டு இடங்களில் உள்ள பாலத்தை முக்கியமாகக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இரண்டு பாலங்களையும் அமைச்சரவர்கள் மனதில் வைத்து, பெரிய மனது கொண்டு, கருணைகூர்ந்து அந்த இரண்டு பாலங்களையும் கட்டித்தர வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். எப்போது அந்தப் பிரச்னை தீரும் தீரும் என்று அந்தப் பகுதி மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், இதைச் செய்து தந்தால் மிகவும் நன்றி யுடையவர்களாக இருப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வைகைக்கால்வாய் சீரமைப்புத் திட்டத்தில் பார்த்திபனூரில் மதகு வேலை அமைக்க மிக விரைவாக நடைபெறுகிறது. அதற்காகப் பாராட்டுகிறேன். விரகநூரில் வேலை இன்னும் துவங்கப்படாமல்

[திரு. த. சோனையா] [1972 மார்ச் 21

இருக்கிறது. அதைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் அதையொட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட சாலைகளை எடுக்கவேண்டியது வெள்ளக்கரை சிலைமான், படமாத்தூர், திருப்பாச்சேத்தி வரையிலும் பரமனூர் சாலையை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திருப்புவனம், பழையனூர், மாரைநாடு, கட்டிக்குளம், மிளகநூர், கானூர், சின்னகண்ணநூர், மானாமதுரை, திருப்பாச்சேத்தி, கொந்தகை, தேனுபுதுக்கோட்டை போன்ற பெரும் கண்மாய்கள் இன்றும் வெட்டாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட பெரிய கண்மாய்களை வெட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீப காலத்தில் மதுரையில் பெய்த பெருமழையின் காரணத்தால் வெள்ளப்பெருக்கெடுத்தது. பல பிணங்கள் ஆற்றில் மிதந்தது தெரியும். அப்படிப்பட்ட மதுரைக்குப் பக்கத்தில்தான் மானாமதுரை தொகுதி இருக்கிறது. அந்தத் தொகுதி வைகையின் இருமருங்கிலும் இருக்கிற காரணத்தால் வெள்ளம் சீறி எழுந்து அருகில் இருக்கும் ஏரி, குளங்கள், காடுகள், ரோடுகள் அத்தனையையும் உடைத்து எடுத்து விட்டது. அங்கே இருக்கும் அதிகாரிகள் அந்தக் குறிப்பை எல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். அவற்றைப் பழுது பார்ப்பதற்கு பணம் வரும் வரும் என்று எதிர்பார்த்தார்கள். அதிகாரிகளும் வரும் வரும் என்று சொன்னார்கள். இதுவரையில் வரவில்லை. அரசுக்குச் சொந்தமான தார் ரோடு ஒன்றுதான் அந்த வெள்ளத்தில் பிழைத்தது. மற்ற ரோடுகள் பெரும்பாலும் அழிந்து போய் விட்டது, அல்லது உருக்குலைந்து போய்விட்டது. தமிழக அரசு அந்த பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்தப் பாதைகளை சரி செய்து தரவேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது பொதுப்பணித் துறை நம்முடைய மாநிலத்திலே சிறப்பாக செயலாற்றி வருகிறது என்பதனை ஒரு சில உதாரணங்களால் நான் நிரூபித்துக்காட்ட முடியும். காவிரியிலே தண்ணீர் வருகிற நேரத்தில் அந்த தண்ணீரை கட்டுப்படுத்தி விட வேண்டிய நேரத்தில் விட்டு, நிறுத்த வேண்டிய நேரத்தில் நிறுத்தி தஞ்சை மாவட்டத்திலே பல லட்சக்கணக்கான ஏக்கர்களை ஒரு போக சாகுபடியிலிருந்து இரு



1972 மார்ச் 21] [திரு. கு. காமாட்சி]

போக சாகுபடிக்கு கொண்டு வந்து இன்றைக்கு உணவுத் துறையிலே புரட்சிகரமான ஒரு சாதனையை செய்வித்து இருக்கிறது என்பதை யாரும் மறுத்திட இயலாது.

இரண்டாவதாக, 25 லட்சம் மக்களுக்கு மேற்பட்ட இந்த சென்னை மாநகரத்தில் அந்த சென்னை நகர மக்கள் அனுபவித்து வந்த துர்நாற்றத்தை போக்கும் வகையில் கூவம் சீரமைப்புத் திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்திக்கொண்டு இருப்பதை யாரும் மறுத்திட முடியாது என்று நான் கூறுகிறேன். அதே நேரத்தில் இன்னொன்று, பக்கிங்காம் கால்வாயை சீர்படுத்த வேண்டுமென்று பொதுப்பணித் துறை இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

நமது பொதுப்பணித் துறை அமைச்சர் இந்த மானியத்திலே ஏறத்தாழ 56 கோடி ரூபாய் கோரியிருக்கிறார். ரூ. 56 கோடி கோரியிருக்கிற நேரத்தில் நான் நினைத்தேன், எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் சொல்வார்கள், எதற்காக 56 கோடி ரூபாய் இங்கே ஏது திட்டம், கட்டவேண்டிய அணைகளையெல்லாம் நாங்களே கட்டியிருக்கிறோமே, போட வேண்டிய பாலங்களையெல்லாம் நாங்களே போட்டு இருக்கிறோமே, எதற்காக இப்போது இவ்வளவு ரூபாய் என்று கேட்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்கள் பேசும் போது இந்த அணை கட்டவில்லை, அங்கே பாலம் போடவில்லை, இங்கே பழுதுபார்க்கவில்லை என்று சொன்னார்களே தவிர அணைகள் எல்லாம் கட்டப்பட்டு விட்டது என்று அவர்களே ஒரு காலத்தில் சொன்னார்கள், அப்போது நாங்கள் சொன்னோம், இந்த ஆற்றிலே அணை கட்டவில்லை, பாலம் சீர்படுத்தப்படவில்லை, புதுப் பாலங்கள் போடவில்லை என்று எல்லாம் சொன்னோம்.

அப்போது அவர்கள் ஆண்ட காரணத்தால் கேலி பேசினார்கள். கிண்டல் பேசினார்கள். பாலம் எல்லாம் கட்டிவிட்டோம், அணையை எல்லாம் அணைத்து விட்டோம், எந்த ஆற்றுக்கும் நாங்கள் அணையைக் கட்ட வேண்டியதில்லை, எம்.ஜி. ஆறுக்குத்தான் கட்ட வேண்டும். எஸ்.எஸ். ஆறுக்குத்தான் அணை கட்ட வேண்டும், கே.ஆர். ஆறுக்குத்தான் பாலம் கட்ட வேண்டும் என்று கேலி பேசினார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களே சொல்லுகிறார்கள். இன்னும் பாலம் கட்டப்பட வேண்டும். அணைகள் கட்டப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த நிலையில் நமது அரசு மிக நல்ல முறையில் செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

[திரு. கு. காமாட்சி] [1972 மார்ச் 21

இன்றைக்கு உணவுப் பிரச்சினை தீர்ந்திருக்கிறது என்றால், அது பொதுப்பணித் துறையினுடைய ஒரு சிறப்பான செயல் என்பதை யாரும் மறுத்திட இயலாது. அவர்கள் காலத்தில் ஓடிய காவேரி நதி தான் இன்றைக்கும் ஓடிக்கொண்டிருக்கிறது. அவர்கள் காலத்தில் போய்க்கொண்டிருந்த கிளைக் கால்வாய்கள்தான் இன்றைக்கும் போய்க் கொண்டிருக்கின்றன. ஏன் அப்படியானால் அதை அவர்களால் செய்ய முடியவில்லை, ஏன் அவர்களால் சாதிக்க முடியவில்லை? அன்றைக்கு தஞ்சையில் இருந்த நஞ்சை நிலங்களெல்லாம் அன்றைக்கும் பரந்து கிடந்தன, இன்றைக்கும் பரந்து கிடக்கின்றன. அவர்கள் ஏன் செய்யவில்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நான் இங்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். காரணம் நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த நாட்டிலே இருக்கிற பொதுப்பணிகளில் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது, அவர்கள் திருச்சி மாவட்டத்திற்கு நேரடியாக வந்து எங்களுடைய குறைகளையெல்லாம் கேட்டு அறிந்து இருக்கிறார்கள் என்பதிலிருந்து தெரியவரும். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்று நான் சொன்ன குறைகளையெல்லாம் இன்றைக்கும் அவர்கள் திருப்பிப் பார்த்து, என்னுடைய தொகுதியிலுள்ள குறைகளையெல்லாம் தீர்க்கவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* <u>திரு. துரைமுருகன் :</u> மதிப்புமிக்க துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மான்யக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கூவம் மணக்கிறது, பாம்பன் பாலம் உயிர் பெற்று எழுகிறது. நாட்டிலே அரசாங்க கட்டடங்கள் எழில் மிக்கதோடு விளங்குகிறது. இன்றைக்கு இவைகளுக்கெல்லாம் பொதுப்பணித் துறையில் எடுத்த நடவடிக்கை குறித்து நாம் பெருமைப்படுகிறோம். கூவம் மணக்கிறது என்று சில பேர் கும்மி மன வேதனைப்படுகிறார்கள். இன்றைக்கு நாம் எடுத்துக்கொண்ட பணிகள் நாடு பூராவும் செம்மையாக நடைபெறவேண்டும் என்ற அடிப்படையில் இந்த மான்யத்தில் பல நல்ல திட்டங்கள் இருப்பதை நாம் எல்லோரும் மெத்த மகிழ்ச்சியுற்று வரவேற்றுப் பேசிக்கொண்டிருக்கிறோம்.



1972 மார்ச் 21] [திரு. துரைமுருகன்]

எனது தொகுதியைப்பற்றி முதலில் சொல்லிவிடுகிறேன். காரணம் மணி அடித்துவிடுவீர்கள். நான் சென்ற கூட்டத்தொடரில் என்னுடைய பேச்சில் என்னுடைய தொகுதியைப்பற்றி படம் பிடித்துக் காட்டினேன். அதிகாரிகள் அதுபற்றி குறிப்பு எடுத்துக் கொண்டார்கள். அதற்குப் பிறகு எனக்கு ஒரு திருப்தி, நிச்சயம் என்னுடைய தொகுதி சீர்பட்டுவிடும் என்று நான் கருதினேன். அதற்குப் பிறகு பொதுப்பணித்துறை அமைச்சரை அழைத்துச் சென்று, அதிகாரிகளையும் அழைத்துச் சென்று காட்டினேன். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் வந்திருந்தார். போக்குவரத்துத் துறை அமைச்சர் வந்திருந்தார். எல்லா அமைச்சர்களையும் அழைத்து வந்து காட்டியும் நான் சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் பேசும்பொழுது எந்த இடத்தில் நின்றதோ, அந்த இடத்திலிருந்து இம்மிளவும் மாறவில்லை, கடுகளவும் மாறவில்லை என்ற நிலையில்தான் இருக்கிறது என்பதை நான் மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐரோப்பிய நாட்டின் நோயாளி துருக்கி என்று சொல்வார்கள். அதைப்போல் தமிழகத்தின் நோயாளியாக இருக்கிற என்னுடைய காட்பாடி தொகுதி என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நோயாளியை நான் மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டுமானால் இந்த பொதுப்பணித்துறையால் தான் முடியுமே தவிர, வேறு இலாகாவினால் முடியாது. அதனால் வேறு இலாகாவினுடைய உதவி வேண்டாமா என்றால், வேண்டும். அந்த நோயாளி பிழைத்துவிட்டபிறகு தரப்படுகிற டானிக், பழச்சாறு போலத்தான் அந்த உதவியே தவிர, மருந்தாக இருப்பது பொதுப்பணித் துறை தான் என்பதை மெத்த பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப்பற்றி ஏற்கனவே சொன்னேன். பாதிப் பகுதி ஆந்திர மாநிலத்திலிருந்து பிரிந்து வந்தது. எல்லை போராட்டம் நடந்து கொண்டிருந்த காரணத்தினால், அது தமிழ் நாட்டிற்குப் போய்விடுமோ என்று ஆந்திரர்கள் ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்கள். அது ஆந்திராவிலேயே இருந்துவிடுமோ என்று தமிழ்நாட்டிலும் அதற்கு ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டார்கள். ஆகையினால் என்னுடைய தொகுதி இரண்டு ஆடுகளில் ஊட்டிய குட்டியைப்போல் ஆகிவிட்டது. அந்த ஆடு பால் கொடுக்கும் என்று இந்த ஆடு இருந்தது. இந்த ஆடு பால் கொடுக்கும் என்று அந்த ஆடு இருந்தது. அப்படியிருந்தால் கடைசியில் பாலில்லாமல் குட்டி செத்துப்போய்விடும். அந்த நிலை தான் இன்று என்னுடைய தொகுதிக்கு இருக்கிறது.

ஏறத்தாழ 40,000 வாக்காளர் மக்கள் இருக்கிற பகுதி மேல்பாடி பிர்க்கா. வாக்காளர் பெருமக்களே 40,000 என்ருல், மக்கள் தொகை எவ்வளவு இருக்கும் ஏன்பதை நீங்களே கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள். அங்கே பொன்னையாற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டும். ஐந்து கோடி ரூபாயா ஆகப்போகிறது (மணி அடிக்கப் பட்டது).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொன்னை ஆற்றைப்பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கிருேம். அடுத்த ஆண்டு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும். ஆகவே நேரத்தை வீணுக்காமல் அவர்கள் வேறு பிரச்னையைப் பற்றி பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : என் வயிற்றில் பாலை ஊற்றியது மாதிரி இருக்கிறது செய்தி. என்னுடைய தொகுதி மக்கள் கஷ்டம் தீர்ந்து விடும் என்று அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்த வேலைகளை முடித்துத்தருவீர்களேயானுல் என்னுடைய தொகுதி மக்கள் தங்களை கோவில் கட்டி கும்பிடுவார்கள். அமைச்சர் அவர்கள் பொன்னையாற்றிற்கு பச்சைக் கொடி காட்டியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று ஆந்திரத்தையும், தமிழகத்தையும் இணைக்கின்ற பாலம் பாலாற்றுப் பாலம் மட்டுமல்ல. அதன் மீது ஒரு பாலம் கட்டுகிறீர்கள். அதற்கு நன்றி. ஆனுல் ஆந்திரத்தையும் தமிழகத் தையும் இணைக்கின்ற முதற் பாலம் காட்பாடி ரயில்வே மேம்பாலம் தான். மிகக் குறுகலான அந்தப் பாலத்தின் மீது ஒரு லாரி போகு மானுல் கூட, கிடுகிடு என்று நடுங்குகிறது. எப்பொழுது இடிந்து விழுமோ, தெரியாது. அது இடிந்துவிழுமானுல் ஆந்திரத்தையும் தமிழகத்தையும் இணைப்பதற்கு கிழக்கேயும், மேற்கேயும் 20 மைல் தூரத்தில் வேறு பாலங்களே கிடையாது. அந்தக் காட்பாடி ரயில்வே மேம்பாலத்தை உடனே புதுப்பித்துத்தரவேணுமாய் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). "மை லார்ட்" கைண்ட்லி கிவ் மீ டூ மினிட்ஸ். இரண்டு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். குடியாத்தம் தாலூகா லத்தேரிக்குப் பக்கத்திலுள்ள ராஜாத்தோப்பில் ஒரு சிறிய அணை கட்டுவீர்களேயானுல், ஏறத்தாழ 10, 15 ஆயிரம் ஏக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறும். அதைச் செய்துதரவேண்டுமென்று மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்னும் சொல்லவேண்டியது எவ்வளவோ இருந் தாலும், அமைச்சர் அவர்கள் தந்த பதிலே திருப்திகரமாக இருக் கிறது என்று கூறி விடைபெறுகிறேன்.





திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், உறுப்பினர் அவர்கள் மைலார்ட் என்று சொன்ஞர்கள். அவர்கள் எங்கே இருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் புதியதாக கோர்ட்டுக்குப் போகிருர்கள் என்று கருதுகிறேன்.

*திரு. கே. எ. வகாப் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மான்யத்தை வரவேற்றுப் பேசுகிற வகையில் என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன். பசுமைப் புரட்சிக்கு வித்தாக, வேராக, சத்தாக இருக்கிறது பாசன வசதி என்று பார்க் கும்பொழுது, முக்கியமாக தெற்கே பல நதிகள் இருந்தாலும், வடக்கு மாவட்டங்களில் பல ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளை யெல்லாம் நல்ல முறையில் பராமரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏரி பராமரிப் பிற்காக ஃபிளட் டிவிஷன் என்று ஒன்று இருந்தது. இப்பொழுது அது எடுக்கப்பட்டுவிட்டது என்று அறிகிறேன். அதிலே வேலை செய்த நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை இழந்துவிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் பொதுப்பணித்துறையில் வேறு இடத்தில் வேலைகளை அமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றைப் பற்றி இங்கே சொன்ஞர்கள். பாலாறு பாழாருக இருந்தாலும், அந்த ஆற்றை நாங்கள், வட ஆற்காடு மாவட்டத்தி லுள்ளவர்கள் ஜீவ நதி என்று கருதுகிருேம். பாலாற்றின் அடியிலே நீர் படிந்து இருக்கிறது, அதற்கு அடியிலே நீர் இருக்கிற விவரம் அனைவருக்கும் தெரியும். பாலாற்று அடியில் உள்ள நீரை நாங்களெல்லாம் பயன்படுத்தும் வகையில், பாலாற்று பேசின் படுகை என்று வைத்திருக்கிற அந்த அம்சத்தை எடுத்துவிடவேண்டும் என்று பல முறை சொல்லியிருக்கிருேம். அதை எடுத்துவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாலாறு ஆங்காங்கு மண்மேடு இட்டு, மண் அகற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே மணல் மேடிட்டிருப்பதை அகற்றவேண்டும், அப்படி அகற்றிஞல் நீர்வளம் பெருகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அங்கே மண் மேடுகளை அகற்றவேண்டு மென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி யான வாலாஜாபேட்டை அருகில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அந்த அணை ஹைதர் காலத்தில் கட்டப்பட்ட அணை, நவாப்

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 21

காலத்தில் கட்டப்பட்ட அணை. அது பழைய காலத்தில் கட்டப்பட்ட அணையாக இருப்பதால், அதைக் கொஞ்சம் உயர்த்தினால் நீர் பல நூற்றுக்கணக்கான ஏரிகளுக்குப் பாயும் என்பதைக் கருத்தில்கொண்டு அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று செய்யாற்றில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது, வரவேற்கிறேன். செய்யாற்று உபநதி சுகநதி வந்தவாசிக்கு அருகில் செல்கிறது. அந்த சுகநதியில் ஒரு சிறிய அணை கட்டியிருக்கிறார்கள். அது போதிய அளவு இல்லை. அதைக் கொஞ்சம் உயர்த்தி விரிவுப் படுத்தி கட்டினால் நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் நிலத்திற்கு தண்ணீர் பாயும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய மாவட்டத்திலுள்ள மிகப் பெரிய ஏரி புரிசை ஏரி. ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாய்கின்ற ஏரி. அந்த ஏரியினுடைய சுசக்கால் தண்ணீர் கால்வாய் வழியாக தென்னங்கூர் என்ற ஏரிக்கு வருகிறது. தென்னங்கூர் மிகவும் மண்வளம் மிக்க ஒரு ஊர். முப்போகம் விளையக்கூடியது. அந்தக் கால்வாயில் நீர்வரத்து சரியாக இல்லை. அந்தக் கால்வாய் பல ஆண்டுகாலமாக தூர் எடுக்காமல் இருந்துகொண்டுவருகிறது. உடனடியாக அந்தக் கால்வாயில் தூர் எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தென்னங்கூரிலிருந்து சளுக்கை கிராமத்திற்கு பொதுப்பணித் துறையைச் சேர்ந்த ஒரு கால்வாய் வருகிறது. அந்தக் கால்வாய் புலிவாய் என்ற ஊர் வழியாகச் செல்கிறது. அந்தக் கால்வாயினால் 7, 8 ஆண்டுகளுக்கு தென்னங்கூருக்கும் புலிவாய்க்கும் இடையிலே மக்கள் தொடர்பு கொள்ள முடியவில்லை. அங்கே ஒரு பாலம் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபற்றி முதல் அமைச்சர் அவர்களிடத்திலும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடத்திலும், கவர்னர் அவர்கள் அங்கு வருகை தந்தபொழுதும் மகஜர்கள் கொடுத்திருக்கிறோம். தயவு செய்து உடனடியாக தென்னங்கூர் பாலத்தைக் கட்ட முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் பெருமைப்படக் கூடிய விதத்தில், இதர மாநிலங்களைக்காட்டிலும் நம்முடைய மாநிலத்தில் பாதைகள் மிகவும் அற்புதமாக இருக்கின்றன, செம்மையாக இருக்கின்றன. நேஷனல் ஹைவேஸ் என்று சொல்லக்கூடிய தனித்துறை ஏற்பட்டு மிகவும் செம்மையாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. என்னுடைய தொகுதியிலும் விரிவு படுத்தியிருக்கிறார்கள்,



1972 மார்ச் 21] [திரு. கே. எ. வகாப்]

நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதிலும் இன்னும் நல்ல முறையில் பரவலாக முன்னேற்றம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொன்னியாற்றுப் பாலத்தைப்பற்றி கூறப் பட்டது. எனது தொகுதியைச் சேர்ந்தது, அங்கே பல சிறு ஓடைகள் இருக்கின்றன. அவற்றில் பாலம் அமைத்துக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக பொதுப்பணித்துறை மூலம் சாலை ஓரத்திலுள்ள நிலங்களுக்கு பட்டா கொடுப்பதுபற்றி முன்பே குறிப்பிட்டிருக் கிறேன். பல நூற்றுக்கணக்கான ஏழை மக்கள், ஹைவேஸ் ரோடு அருகிலுள்ள ரொம்ப தூரத்திலுள்ள இடங்களில் குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கருணையோடு கவனித்து ஏழை மக்களுக்கு ஏழை மக்களுக்காக பாடுபடுகிற சர்க்கார் என்ற காரணத் தினால், அப்படி நிலம் இல்லாத ஏழைகளுக்கு அப்படிப்பட்ட நிலங் களை ரெவின்யூ துறை கொடுப்பது போன்று பொதுப்பணித்துறையும் அளித்து உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேஷனல் ஹைவேஸ் என்று சொல்கிற போது அவர்கள் சாலை பட்டு அருகே, அச்சரபாக்கம் அருகே உள்ள பாலங்கள் மேம்பாலம் கட்டுவதற்கு பல கோடி ரூபாய் கொடுத்திருப்பதாக சொல்கிறார்கள். இந்தப் பணத்தை மற்ற மாநிலங்கள் பயன்படுத்தாத போது, நாம் சண்டையிட்டு வாங்கி மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் பல முறை டில்லிக்குச் சென்று பெற்று வருகிறார்கள் என்று அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன். மேம்பாலம் கட்ட வேண்டும்; ஆனால் அது தாம்பரம் அருகே உள்ளது போன்ற பாலமாக இல்லாமல், சிமெண்ட் பால மாக "ஃப்ளை ஓவர்" பாலமாக கட்டினார்களானால், கீழே இருக்கும் நிலம் மிச்சம். இன்னும் தாம்பரம் மேம்பாலத்தில் ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் அதிலே காரில் வருவதற்கு முடியாமல் இருக்கிறது. ரயில்வே ஓவர்பிரிட்ஜ் கட்டும்போது "ஃப்ளை ஓவர்" முறையில் கட்டும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ராணிப்பேட்டை (பயணிகள் விடுதி) T. B யைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்திரா காந்தி அவர்கள் கூட அதிலே வந்து தங்கினார். அப்போது ஏர்-கண்டிஷன் வைத் தார்கள். கம்பளம் விரித்தார்கள். இன்றைக்கு அது சாதாரண குதிரைக் கொட்டகை மாதிரி இருக்கிறது. தயவு செய்து அதற்கு "மொசைக்" போட்டு இன்னும் சில முன்னேற்றம் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

[1972 மார்ச் 21

*<u>திரு. ஆர். சின்னச்சாமி :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் இங்கே அளிக்கப் பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

குறிப்பாக என்னுடைய தர்மபுரி மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக இருந்து ஏறத்தாழ 20 ஆண்டுக் காலமாக காங்கிரஸ் அரசாட்சி காலத்திலிருந்து எங்கள் மாவட்ட மக்களுடைய சார்பாக ஒரே கோரிக்கையாக எழுப்பப்பட்டது சின்னாறு நீர்த்தேக்கம். அதற்கு நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் ஒப்புதல் அளித்து அதற்கான வேலையில் ஈடுபட்டு மிக நல்ல முறையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்த அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கிறேன்.

அடுத்து, தர்மபுரி நகரில் பேருந்து நிலையம் அமைக்க ரூ. 12.71 செலவில் நிலையம் அமைக்க 1972–73-ம் ஆண்டு வேலை தொடங்கயிருக்கிறார்கள் என்பது கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். தர்மபுரி மாவட்டத் தலைநகரத்தில் பேருந்து நிலையத்தில் இவ்வளவு நாட்களாக அங்கு வருகிறவர்கள் எல்லாம் மழைக்காலத்தில் படும் அவஸ்தையைப் போக்கி செயல்பட துணையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு அரசுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கரிவேங்கடம் அவர்களின் தொகுதியையும் ஒன்றாக இணைக்கும் ஜேர்த்தலாங் வாய்க்கால் திட்டத்தை எங்கள் மாவட்டப் பொறியாளர் தயாரித்து, தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறார்கள். பாக்கோடு அருகே ஜேர்த்தலாங் ஏரியிலிருந்து தருமபுரி, கடகத்தூர் சோகத்தூர் ஏரி வரைக்கும் 8 லட்சம் ரூபாய் செலவில் திட்டத்தை தயாரித்து அது தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். காரணம், தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூட அதற்காக ஒரு நாள் பூராவும் செலவு செய்து அந்தப் பகுதியில் சென்று ஏரிகளைப் பார்வையிட்டு குறைந்த செலவில் 10 ஏரிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டும் என்ற எண்ணத்துடன் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து நல்ல விதமாக அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஜேர்த்தலாங் வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. ஆர். சின்னச்சாமி]

அத்துடனில்லாமல் எங்கள் மாவட்டத்தில் 1972–73-ம் ஆண்டில் பாலங்கள் கட்டுவது சம்பந்தமாக எந்த விதமான பாலங்களுக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, தர்மபுரி–திருப்பத்தூர் சாலையில் இருமத்தூர் அருகே பாலம் வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. அந்த ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தரும்படி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் இருந்து ஏறத்தாழ 60, 70 பேருந்துகள்—தர்மபுரியிலிருந்து திருப்பத்தூர் செல்லும் பேருந்துகள் அனைத்தும் அந்த ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். மழைக் காலத்தில் இந்த பஸ்கள் 25–30 மைல் சுற்றி வரவேண்டிய சூழ்நிலை இருக்கும் காரணத்தால் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்ட வரையில், மொரப்பூர்–ஏ. பள்ளிப்பட்டி சாலையில் 13.5 கிலோ மீட்டரில் ஒரு காட்டாறு இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் 20 ஆண்டுக்காலமாக குரலெழுப்பியும் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படவில்லை. அந்தக் காட்டாற்றில் 3, 4 மாதங்கள் தண்ணீர் ஓடுகிறது. அதனால் மக்கள் 30 மைல் சுற்றி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. சின்னப்பாலமாக இருந்தாலும் அது முக்கியத்துவம் வாய்ந்தது. இப்போது ஆற்றைக் கடக்கும் சூழ்நிலை இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்தை மொரப்பூர்–ஏ. பள்ளிப்பட்டி சாலையில் கட்டித் தரும்படி மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*<u>திரு. என். மாணிக்கம் :</u> மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டுகான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கையின் மீது பேசும் வாய்ப்பளித்தமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் சின்னாறு திட்டத்திற்கு ரூபாய் ஒரு கோடி 18 இலட்சம் ஒதுக்கியிருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சார்ந்துள்ள பெண்ணாகரம் தொகுதியில் நாகாவளி அணை சின்னாறு அணைக்கு அடுத்தபடி வசதியுள்ள அணைக்கட்டாகும், என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அது சம்பந்தமாக 1967-ம் ஆண்டிலிருந்து சர்வே செய்யப்பட்டு ஏரிகளை ரூ. 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட செலவில் செப்பனிட அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். நெருப்பூர் பகுதியில் மேலும் ஆசாரிக்கிணற்றுப் பள்ளம்,

[திரு. என். மாணிக்கம்] [1972 மார்ச் 21

முத்தையன் கோயில் பள்ளம் மஞ்சாரவள்ளிப் பகுதியில் கோட்டான் பள்ளம், சிக்கனூர் ஆகிய திட்டங்களுக்கு இத்திட்டத்தோடு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கூடிய விரைவில் நிறைவேற்றினால் பெண்ணுகரம் பகுதியில் நீர்ப்பாசன வசதி ஏற்படும் என்று இந்த நேரத்தில் மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கொண்டு பெண்ணுகரம் தொகுதியில் தாசம் பட்டி, வாட்டுப்பள்ளம், அலகட்டுப் பள்ளம், தும்கல் காட்டாறு ஆகிய அணைக்கட்டுகளை மேற்கொண்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் நல்லம்பள்ளி பஞ்சாயத்து யூனியனில் சாமி செட்டிப்பட்டி என்ற ஊர் இருக்கிறது. அங்குள்ள கொப்பகரை ஆற்றில் அணை கட்ட வேண்டுமென்று அரசாங்கத்தை அந்தப் பகுதி மக்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் அணை கட்டினால் 1,500 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கும் என்பதைச் சுட்டிக் காட்டி அதை கட்டி முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம்முடைய அரசு பல பாதைகளுக்கு பல கோடி ரூபாய் செலவு செய்தாலும், தர்மபுரி-சேலம் மாவட்டத்திற்கிடையே பெரும் பாலைக்கு அருகில் உள்ள ஆற்றில் ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டு மென்று நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது. சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் பேசப்பட்டு, அந்த மாவட்டப் பொறியாளர்கள் மேம் பாலம் கட்ட ஒரு திட்டத்தை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக் கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் அதை கவனித்து அந்த மேம் பாலத்தை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நடப்பு ஆண்டில் இரண்டேமுக்கால் இலட்ச ரூபாய் ஒதுக்கி இருப் பதற்காக தொகுதி மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மேற்கொண்டு, ஒகேனக்கல்லில் சுற்றுலாத் துறை முன்னேற்றம் ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்கு குறுக்கே சின்னாறு இருக்கிறது. அந்தச் சின்னாற்றைக் கடக்கவேண்டுமென்றால் நீந்திக் கொண்டு தான் செல்லவேண்டும். நம்முடைய மாநிலத்தில் ஒகேனக்கல்லில் சுற்று லாத் துறை அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதால் சின்னாற்றுக்கு மேம் பாலம் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்ணுகரம் நகரத்தில் போக்குவரத்துக்குச் சங்கடமான இடமாக இருப்பதாலும் ஒருவழிப் பாதை அமைக்கவேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்பு கிறேன். அடுத்து பெண்ணுகரம்-அஞ்சட்டி பாதை அமைக்க



1972 மார்ச் 21] [திரு. என். மாணிக்கம்]

வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் இப்படிச் சொல்லும் பாதை அமைத்தால் மைசூர் மாநிலத்திற்கு செல்லும் பாதை 100 மைல் குறையும் என்று சுட்டிக் காட்டி, வாய்ப்பளித்த மைக்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக் கின்ற மானியக் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில் எனது தொகுதியாகிய உசிலம்பட்டித் தொகுதியைப்பற்றி சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் நடந்த நிகழ்ச்சிகள்—அரசியல் காரணங் களுக்காக நடைபெற்றவைகள் —உண்மையானவை என்பதை பலரும் அறிவார்கள். பழைய காலத்தில்—ஆங்கிலேயர் காலத்திலே—திரு மங்கலம் தாலூகா என்று வழங்கப்பட்டது இன்று உசிலம்பட்டி என்று வழங்கப்படுகிறது. அந்தக் காலத்தில் அந்தப் பகுதி மக்கள் ஆங்கிலேயரை எதிர்த்தார்கள். அதற்குப் பின்னால் அந்த மக்கள் தேவர் பெருமானைப் பின்பற்றி வந்தார்கள். அப்போது ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைக் காரணமாக அந்தப் பகுதி மக்கள் குற்றப்பரம் பரையாகவே கருதப்பட்டு வருகிறார்கள். அவர்கள் முன்னேறுவதற்கு வழியில்லாமல் செய்துவிட்டார்கள்.

எடுத்துக்காட்டாக வைகை அணைத்திட்டம். இந்தத்திட்டத் தினால் 21 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுவதாக இருந்தது. அங்குள்ள மக்கள் பொருளாதார, சமுதாய, கலாச்சார துறைகளில் போதுமான அளவில் முன்னேற வழியில்லாமல் போய்விட்டாலும், இன்று மாநிலத்திலே மிகவும் தாழ்வான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்காக அங்கே நல்ல திட்டத்தை வைகைத் திட்டத்தைக் கொண்டுவந்ததன் மூலம் விவசாய வளம் பெற்று அதனால் பொருளாதார வளம் பெற்று சிறந்து வாழ்வார்கள் என்று எல்லோரும் எதிர்பார்த்தோம். ஆனால் அன்று பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த திரு கக்கன் அவர்களுடைய தொகுதிக்கு இந்தத் திட்டத்திலே பகுதியைக் கொண்டுபோய் விட்டார்கள். மீதமுள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் பெறத்தான் போதுமானதாக இருந்தது. போராட்டம் நடத்தி, முழுவதையும் பெறலாம் என்றாலும் அப்போதிருந்த சூழ்நிலையில் அது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. அந்த அளவுக்கு மிகத் தாழ்வு மனப்பான்மையோடு நாங்கள் நடத்தப்பட்டோம்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் வைகைத் திட்டத்தை செயல்படுத்திய முறையினை துருவி, ஆராய்ந்து பார்த்தால் எந்த அளவுக்கு ஒழுங்கீனங்கள் நடைபெற்றிருக்கின்றன என்ற விபரங்கள் எல்லாம் தெரியும். அந்த பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. அவர்களும் பயன்பெற வேண்டியதுதான். ஆனால் இங்கே இருக்கின்ற மக்கள் போதுமான நீர்ப்பாசன வசதி இன்மையால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையையும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை இங்கே குறிப்பிடுகிறேன். இங்கே இருக்கின்ற மக்கள் எல்லோருமே பெரும்பாலோர் 3 ஏக்கர், 2 ஏக்கர், 1 ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய சம்சாரிகளாகத்தான் இருக்கின்றார்கள். அவர்கள் மண்ணையே நம்பி வாழக்கூடியவர்கள், வானை நம்பி வாழக்கூடியவர்களாக இருக்கிறார்கள். வானம் பொய்த்தால் அவர்களுடைய வளம் பொய்த்துவிடும். அந்த மாதிரியான ஒரு நிலையில் தான் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

அண்டர் கிரவுண்டு வாட்டரைப் பயன்படுத்தலாம் என்று சொன்னாலும் இப்போது அதற்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் இது சம்பந்தமாக நடைபெற்ற ஆராய்ச்சியில், கிரவுண்டு வாட்டர் இப்போது குறைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் நிலவள வங்கிகள் மூலம் கடன் உதவிபெற்று, கிணறுகளை வெட்டி, நீர்ப்பாசனம் செய்யலாம் என்று சொன்னால் ஆயிரம் கெஜம், மூவாயிரம் கெஜம் தூரத்தில் கிணறு வெட்டுவதாக இருந்தால்தான் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். காரணம் அருகாமையில் வெட்டினால் தண்ணீர் கிடைக்காது என்ற நிலை இருக்கிறது.

புதுக் கிணறு வெட்டினால் தண்ணீர் கிடைக்காது என்று பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு கடன் கேட்டால், பழைய கிணறுகளைப் புதுப்பிப்பதற்கு கடன் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லுகிறார்கள். கேட்டால் பூமிக்கு கீழே வெள்ளாமை இல்லை; அதனால் பணம் கொடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அரபிக் கடலில் வீணாகப்போய்விடும் தண்ணீரை கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, கொண்டுவந்தால், மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம் மட்டுமின்றி, கிழக்கு இராமநாதபுரத்திற்கும் தண்ணீர் கிடைக்கும். கிழக்கு இராமநாதபுரம் நல்ல வளம் மிக்கப் பகுதி. ஆனால் தண்ணீர் இல்லாததால் வறண்டு காணப்படுகிறது.





கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, அந்தத் தண்ணீரைக் கொண்டுவந்தால், நமது அரசாங்கத்தின் பசுமைப் புரட்சித் திட்டத்திற்கு உறுதுணையாக இருக்கும் என்பதைத் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மைனர் இரிகேஷனைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தத் திட்டத்திலே நமது அரசு அதிக அக்கறை காட்டி வந்தாலும், பணிகளை நிறைவேற்றுவதில் விறுவிறுப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அரசாங்கம் அதிகாரிகளுக்கு தக்க உத்தரவுப் பிறப்பித்து, பணிகளை விரைவுப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்மாய்களைப் பொறுத்தவரையில், பல கண்மாய்கள் மராமத்து செய்யப்படாமல் தூர்ந்துபோய் இருக்கின்றன. அதனால் கொஞ்சம் தண்ணீர் வந்தவுடனேயே உடைப்பெடுத்து விடுகிறது. எனவே, கண்மாய்களை எல்லாம் உடனடியாக மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலே இன்னும் போதுமான ரோடு வசதி இல்லாததால், சம்சாரிகள் வண்டிகள் கொண்டு செல்வதற்கும், உரம் மற்றும் விவசாய சம்பந்தப்பட்ட பொருள்களை எடுத்துச்செல்வதற்கும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே எல்லாக் கிராமங்களுக்கும் நல்ல ரோடுவசதி செய்துதர வேண்டுகிறேன். (மணி அடிக்கப் பட்டது).

அடுத்தபடியாக, கட்டடங்கள் கட்டுவதைப் பொறுத்தவரையில், அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தும் கூட, பொறியாளர்கள் இன்னும் கட்டி முடிக்காமல் இருக்கிறார்கள். அதையும் விரைவில் கட்டி முடிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில பள்ளிகளில் ஆஸ்டல் கட்டுவதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, ஆஸ்டல்களையும் உடனடியாகக் கட்டி முடிப்பதற்கு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்ததற்கு நன்றிதெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

திரு. தி. ஒ. பெரியசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் அளித்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே பொதுப்பணித் துறை மிகவும் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. எந்த இடத்திலும் பாசனத்திற்கு பயன்படுத்தக்கூடியத் தண்ணீரை பயன்படுத்தாமல் இருக்கிறோம் என்ற நிலையே இல்லாத அளவுக்கு நல்லமுறையில் செயலாற்றி வருகிறது. எதிர்காலத்தில் நமக்கு பாசன வசதி தேவை என்றால் இருக்கக்கூடிய கால்வாய்களை நலப்படுத்திதான் பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறோம்.

அப்படிப் பார்க்கும்போது நாம் இந்த ஆண்டு எல்லா கால்வாய்களையும் மராமத்து செய்வதற்காக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு மானியம் கேட்டிருக்கிறார்கள். அதை நான் ஆதரிக்கிறேன். இன்னும் எதிர்காலத்தில் நாம் நிலத்திற்கு கீழே இருக்கக் கூடியத் தண்ணீரைத்தான் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது காவேரி படுகைப் பகுதியில் குழாய்க் கிணறுகளை அமைத்து பாசன வசதியை ஏற்படுத்திக் கொண்டு, காவேரி ஆற்று நீரை வறண்டப் பகுதிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக கோவை மாவட்டத்தில் அவிநாசி போன்ற பகுதிகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. அங்கே குடிப்பதற்குக் கூட தண்ணீருக்குக் கஷ்டமாக இருக்கிறது. அப்படி இருக்கின்ற போது, சில பகுதிகளில் 12 மாதங்களும் ஆற்றுநீரையே பயன்படுத்த கூடிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே பாசன வசதிகளையும் நிரம்பப் பெற்றிருக்கிறார்கள். நாம் சோஷலிஸத்தை பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, இப்படி ஒரு பகுதியில் குடிப்பதற்கே தண்ணீர் கிடைக்காமல் இருக்கின்றபோது ஒரு பகுதியில் தேவைக்கு அதிகமாகத் தண்ணீர் இருக்கவேண்டுமா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். அவர்களும் கஷ்டப்படவேண்டும் என்று சொல்லவில்லை. இருக்கின்ற தண்ணீரை சமமாகப் பங்கிட்டுக்கொண்டால் நலமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மிகவும் பின்தங்கிய மக்களின் கஷ்டத்தை ஓரளவுக்கு அவர்களும் பகிர்ந்துகொண்டால் எல்லோரும் நலம்பெற முடியும் என்பதைத்தான் சொல்கிறேன்.

என் பகுதி மக்கள் நீண்ட நாட்களாக பாண்டியாறு—புன்னம்புழா, திட்டம் கிடைக்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். கேரள முதலமைச்சர் அவர்கள் சென்ற 14-ந் தேதி சட்டமன்றத்திலே "நாங்கள் பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்திலுள்ள நீரினை பாசன வசதிக்கு அளிக்கமாட்டோம்" என்று கூறி





விட்டார்கள். அதைப் பார்த்த பிறகு அந்த மக்களுக்கு என்ன செய்வதென்றே புரியாமல் இருக்கிறது. எனவே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக குளங்களை எல்லாம் மராமத்து செய்து, பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏற்படுத்துவதற்கும் பவானி ஆற்றில் கீழ் பாசனத்தில் உள்ளவர்கள் எதிர்க்கக்கூடும் என்ற ஐயம் இருக்கிறது. அவர்களுக்கு இந்த அரசு சோஷலிச சமுதாய அமைப்பில் தீவிரமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம், இந்த நேரத்தில் இருக்கும் வசதிகளை எல்லோரும் பகிர்ந்துகொள்ளத்தான் வேண்டும் என்கிற கருத்தினை எடுத்துத் தெளிவுபடுத்தி—வருடத்தில் ஒன்பது மாதங்கள் ஆற்றுப்பாசனத்தைப் பெற்று பணப்பயிர்களைச் சாகுபடி செய்து கொண்டிருப்பவர்கள், ஒரு ஆறு மாதம் கிணற்றுப்பாசனத்தை நம்பி இருக்கச் செய்து, மற்ற வறண்ட பகுதியில் உள்ளவர்களுக்கு குடிநீருக்காவது தண்ணீர் சப்ளை அளிக்க வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

அடுத்தபடியாக, நெடுஞ்சாலைத் துறையினர் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலத்திலே சாலைகளை நல்லமுறையில் பராமரித்து வருகிறார்கள். சில இடங்களில் சாலைகள் மிக மோசமாக இருக்கின்றன. கோவையில் இருந்து மைசூருக்குச் செல்லும்பாதை முக்கியமானது. ஆனால் இன்றைய தினம் அது சரியான முறையில் பராமரிக்கப்படாமல் இருக்கிறது. அந்தப் பாதையை அகலப்படுத்தி நல்லமுறையில் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீலகிரி மாவட்டத்தினர் உபயோகப்படுத்தக் கூடிய மேட்டுப்பாளையம் அவிநாசி சாலையையும் அகலப்படுத்தி பராமரிக்க வேண்டுமென்று கேட்டு இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*<u>திரு. நா. வெ. குருசாமி :</u> சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று ஆசைப்படுகிறேன்.

சாலை வசதிகளை எடுத்துக்கொண்டால் ஆண்டிப்பட்டி தொகுதியில் குறிப்பிட்ட முன்னேற்றம் ஒன்றும் ஏற்படவில்லை. வரிசைநாடு, மயிலாடு பாறை ஆகியவை மலைப்பகுதி. ஒரு இடத்தில் இருந்து

[திரு. நா. வெ. குருசாமி] [1972 மார்ச் 21

மற்றொரு இடத்திற்குப் போவதற்கு எந்தவிதமான சாலை வசதியும் அந்தப் பகுதியில் செய்யப்படவில்லை. அங்கும் கிட்டத்தட்ட நாற்ப தாயிரம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குச் சாலை போக்கு வரத்து இல்லாத காரணத்தினால் முப்பது மைல், நாற்பது மைல் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அந்தப் பகுதிச் சாலைகளை நல்லமுறையில் போக்குவரத்துக்கு ஏற்றபடி அமைத்துத்தரவேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வைகை அணைப்பகுதியில் தற்சமயம் பத்தாண்டுகளாகத் தொடர்ந்து வேலைபார்ப்பவர்கள் கூட என்.எம்.ஆர் அடிப்படையில் தினக்கூலிகளாகத் தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

பெரியகுளத்தில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்து சோத்து பாறை, குப்பாம்பாறைத் திட்டம் வரப்போவதாக மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை மேற்கொண் டால் ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த ஜயமங்கலம், குள்ளப் புரம் போன்ற இடங்களில் இரண்டாயிரம், மூவாயிரம் ஏக்கரா நிலங்கள் நல்ல பாசன வசதியைப்பெறும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது மஞ்சள் ஆற்றில் இருந்து ஆண்டிப்பட்டி தொகுதிக்கு ஒரு சில இடங்களுக்குத் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அதிலே இருந்து இன்னும் அதிக அளவில் இந்தப் பகுதிக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். அதன்மூலம் ஜயமங்கலம் பகுதிக்குத் தண்ணீர் அளிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் வேட்டுவன் குளம் கண்மாய்க்கும் தண்ணீர் நல்லமுறையில் வர அந்தக் கண்மா யைச் செப்பனிட்டு, வரத்துக்காலையும் செப்பனிட்டுத் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கண்டமனூர் பக்கம், ஆத்தங்கரைப்பட்டி திட்டத்தை சென்ற ஆண்டே எடுத்துக்கொண்டு அதற்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரையில் எந்தவிதமான முன்னேற்றமும் அடைந்ததாகத் தெரியவில்லை. ஆகவே அந்த அணைக்கட்டுத் திட்டத்தை உடனடி யாக நிறைவேற்றித்தர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. நா. வெ. குருசாமி]

அடுத்து, மதுரை தேனி சாலை ரொம்ப ரொம்ப மோசமாக இருந்து கொண்டிருக்கிறது. அதை அகலப்படுத்தி நல்லமுறையில் வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றதாகச் செய்து தரும்படியாக இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கண்டமனூரில் இருந்து கோவிந்தநகரம், அம்பாசமுத்திரம் முதலிய இடங்களுக்குப் போவதற்கு பாலம் கிடையாது. வரிசை நாடு பகுதியில் இருந்து தேனிக்குச் செல்ல பதினைந்து மைல்களுக்கு மேல் சுற்றிப்போகவேண்டியதாக இருக்கிறது. நேரடி சாலை அமைப்பை ஏற்படுத்தித்தர 15 ஆண்டுகளாகக் கோரிவருகிறார்கள். ஆகவே, கண்டமனூர் பக்கம் ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் என்றும் ஆகவே குள்ளப்புரம் பக்கம் பாலம் கட்டினால் கிட்டத்தட்ட 30 மைல்களுக்குக் குறைவாகச் செல்ல முடியும். ஆண்டிப்பட்டியில் இருந்து திண்டுக்கல் செல்லவேண்டுமானால் பெரிய குளம் சுற்றித்தான் போக வேண்டியுள்ளது. ஆகவே குள்ளப்பரம் பக்கம் பாலம் கட்டித் தரும்படியாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் உசிலம்பட்டி வட்டாரம் புறக்கணிக்கப்பட்டதாக திரு. கந்தசாமி அவர்கள் கூறினார்கள். அதை என்போன்ற ஆண்டிப்பட்டி வட்டாரத்தினர்கள் சொல்ல வேண்டும். எங்கள் பகுதியில் வைகை அணையிலிருந்தும் சனி, ஞாயிறுகளில் நாங்கள் அந்த விளக்குகளைத்தான் பார்த்து வந்தோம். அதனால் நாங்கள் பயன் அடையவில்லை. அந்த அணைக்கட்டினால் பயன் அடைந்து வருபவர்கள் உசிலம்பட்டி தொகுதியைச் சேர்ந்தவர்கள் தான். ஆனாலும் அவர்கள் இன்னமும் தாங்கள் கஷ்டப்படுவது போல சொல்லிக்கொண்டிருப்பதற்கு வருந்துகிறேன்.

மற்றும் எங்கள் தொகுதியில் லட்சுமிபுரம், பாலக்கோம்பை, தெப்பம்பட்டி ஆகிய 3 கண்மாய்களையும் அரசாங்கம் எடுத்து அதற்கு வேலை செய்துகொடுக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வீ. கார்த்திசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள பொதுப்பணித் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. வீ. கார்த்திசன்] [1972 மார்ச் 21

தமிழக அரசு பாசன வசதியை மேம்படுத்தும் எண்ணத்தோடு பல திட்டங்களை வகுத்து, அதன் காரணமாக பல கோடி ரூபாய்களை செலவு செய்து எல்லாப் பகுதிகளையும் வளப்படுத்திக்கொண்டு வருகிறது. எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் ராம நதி, கடானு நதி ஆகிய திட்டங்களை நிறைவேற்றி அதன் காரணமாக அந்தப் பகுதியில் வாழ் மக்கள் பயன் அடைய இருக்கிறார்கள்.

குறிப்பாக நெல்லை மாவட்டம் இராதாபுரம் துணை வட்டம் தமிழகத்திலேயே மிகவும் வரட்சியான பகுதி. அங்கே சிற்றாறு—பட்டணங்கால் திட்டம் ஒன்று வந்தது. அதன் காரணமாக ஒருசில பகுதிகள் தண்ணீர் பாசன வசதியைப் பெற்றிருக்கிறது. சிற்றாறு—பட்டணங்கால் திட்டத்தின் மூலம் பதினேழாயிரம் ஏக்கரா பாசன வசதிபெற்றது என்றால் மீதமுள்ள பதினேழாயிரம் ஏக்கராவுக்கு மேல் பாசன வசதிபெறவில்லை. ஆகவே அந்தப் பகுதியில் ராதாபுரம் பட்டணங்கால்—கால்வாய்க்கு அதிகத் தண்ணீர்விட்டால் எங்கள் பகுதி வறட்சி நீங்கும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை காலங்களில் ஏராளமான தண்ணீர் கடலில் போய் வீணாகிறது. அந்தத் தண்ணீரையும் மறித்து சிற்றாறு—பட்டணங்கால் கால்வாயில் விட்டால் ராதாபுரம் பகுதியை செழிப்படையச் செய்ய முடியும்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் கடல் அரிப்பு அதிகம். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் கடல் அரிப்பைத் தடுக்க சில திட்டங்களை நிறைவேற்றினார்கள். அவை போதுமானதாக இல்லை. இந்தப் பகுதியில் மீனவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுடைய வீடுகள் மட்டும் அல்ல கிறிஸ்துவ கோயிலுக்கும் கூட கடல் அரிப்பினால் நாசம் ஏற்பட்டுவருகிறது. ஆகவே அந்தப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க நல்ல முறையில் திட்டங்களை மேலும் வகுத்து செயல்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, இங்குள்ள ஆலத்துறை ஆறு திட்டம் பற்றி கடந்த இருபது ஆண்டுகளாக நாங்கள் கேட்டுவந்தும் அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. நாங்கள் சம்பந்தப்பட்ட சூப்பரின்டெண்டிங் என்ஜினியரையும், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்ட கலெக்டர்களையும் அணுகி, பல முறை முயற்சிகள் செய்தும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. வீ. கார்த்திசன்]

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே நம்பியாறு திட்டம் ஒன்று இருக்கிறது. இதற்கு சுமார் 6½ இலட்சம் ரூபாய்தான் செலவாகும். இதை நிறைவேற்றினால் இதன்கீழுள்ள ஆறு அல்லது ஏழு குளங்கள் நிரம்பி, அதன்காரணமாக விவசாயிகள் பம்பு செட் மூலம் தண்ணீர் இறைத்து, விவசாய உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பு இருக்கும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரோடுவசதிகளைப் பற்றிச் சொல்வதற்கு நிறைய இருக்கிறது. இராதாபுரத்திலிருந்து திசையன்விளைக்குப் போக வேண்டுமென்றால் நம்பியாறு குறுக்கே வருகிறது. இந்த நம்பியாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிக்க சௌகரியமாக இருக்கும். ஆகவே, இந்தப் பாலத்தையும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். இராஜாங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் பரவனாறு, பக்கிங்காம் கால்வாய்களைப் பொறுத்தவரையில் பாலம் கட்ட வேண்டுமென்று பத்தாண்டுகளாக முயற்சி எடுத்தும், இன்னும் கட்டவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீன்துறையைப் பொறுத்தவரையில் 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அதைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்தபோது, இரண்டு கிராமத்தினர் சச்சரவிட்டுகொண்டதன் காரணமாக அந்த வேலை நிறுத்தப்பட்டுவிட்டது. அந்தப் பாலத்தைக் கட்டினால் இந்தப் பக்கம் சுமார் 10 கிராமங்கள், அந்தப் பக்கம் 18, 20 கிராமங்கள் பயன் அடையும். அந்தப் பாலம் இல்லாததால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசு உடனே அதைக் கட்டித் தர வேண்டும்.

அடுத்தபடியாக காயல்பட்டு, பூச்சிமேட்டிலிருந்து கடலுக்குப் போகும் வழிக்காக சாலைபோட 2 இலட்சம் ரூபாய் மத்திய அரசால் ஒதுக்கப்பட்டு, வேலை ஆரம்பமாகி, சமீபத்தில் ஏற்பட்ட யுத்தத்தினால் அந்த வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்போது யுத்தம்

முடிந்துவிட்ட காரணத்தினால் அந்த வேலையையும் உடனடியாகச் செய்து நல்ல சாலை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்து, கருங்குழியிலிருந்து வடலூருக்கு ஒவ்வொரு தைப் பூசத்தின்போதும் மக்கள் ஏராளமாக வருகிறார்கள். அங்கு செங் கால் ஓடை என்று ஒன்று இருக்கிறது. அந்த ஓடையின்மீது பாலம் கட்டித் தந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு மிக்க வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திருவரத்திலிருந்து சட்டுமேடு, பெருந்துறை ரோடு மோசமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு பாலம் இருந்தால் மக்கள் பயம் இல்லாமல் போக முடியும். அது பல நாள் கோரிக்கை. அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப் பளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, இன்றையதினம் பேரவையில் மாண்பு மிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் "பாசனம்—பாசனத் திற்கு மூலதனச் செலவு, பணிகள், பணியாளர்கள், கருவிகள், பொதுப் பணிகளுக்கு மூலதனச் செலவு" என்ற மானியக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து நான் உரையாற்ற விரும்புகிறேன்.

இந்த மானியங்களுக்கு 56 கோடி ரூபாய் நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கியிருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். இந்தத் தொகை இந்தத்துறைக்கு மிகவும் பற்றாக்குறைதான். காரணம் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு நீர்ப்பாசனம் இன்றியமையாதது. தமிழகத்தில் இன்னும் நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தருவதற்கும், சாலை மேம்பாடுகளைக் கவனிப்பதற்கும், பல பாலங்களைக் கட்டித் தருவதற்கும், இன்னும் நிதி ஒதுக்க வேண்டியிருக்கிறது. இவை களுக்கெல்லாம் இன்னும் அதிகமான தொகைகளை ஒதுக்க வேண்டியிருக்கிறது.

எனக்கு முன்னாலே பேசிய காங்கிரஸ் (ஓ) உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டதாகக் கூறினார்கள். ஆனால் இங்கே பார்க்கிறபோது 1972-73-ம் ஆண்டில் எந்தத் திட்டமும் அங்கே போடப்படவில்லை.





மேலும், அந்தப் பகுதி இருபது ஆண்டுக் காலமாக மாற்றாந்தாய் குழந்தையாக ஒதுக்கப்பட்டு, கண்மாய்களுக்குப் பதிலாக காவல் நிலையங்களைத்தான் திறந்தார்கள். அதிகமாக இராமநாதபுர மாவட்டத்திற்குச் செய்துவிட்டார்களே என்று சொல்வதற்குக் காரணம் ஒருவேளை அவருடைய கட்சியின் தலைவராக இருக்கும் திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது அந்தப் பகுதிக்கு ஒன்றுமே செய்யவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற் காகத்தான் அப்படிச் சொல்கிறார் என்று நினைக்கிறேன். எங்க ளுடைய கழக அரசை குறை கூறுகிறார் என்றால் அது மக்களுடைய அரசாக இருக்கிறது. மேலும் அவருடைய கட்சிக்கும், அவரது தலைவருக்கும் எங்கள் மாவட்டத்தில் செல்வாக்கு தரப்படவில்லை என்ற காழ்ப்பு உணர்ச்சித்தான் அதற்குக் காரணம் என்று கருது கிறேன். எங்கள் மாவட்ட மக்கள் அவர்கள் ஆட்சியில் துன்பங் களையும் துயரங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். கழக அரசு வந்தபிறகுதான் ஒருசில நல்ல திட்டங்கள் அந்த மாவட்ட மக்களுக்குக் கிடைத்தன.

பரளையாறு போன்ற நல்ல திட்டங்களை உருவாக்கியிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய பகுதி ஜமீந்தார் களுடைய பகுதி. ஒவ்வொரு ஜமீந்தாருக்கும் ஆயிரக்கணக்கான கண்மாய்கள் இருந்து வந்தன. அவர்கள் எந்த மராமத்தும் செய்ய வில்லை. மேலும் கிருதமால் நதி வழியாக வைகை தண்ணீர் முதுகுளத்தூர் பகுதிக்குக் கொண்டுவந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல பயன் ஏற்படும். இதில் 800-க்கு மேற்பட்ட கண் மாயிகள் இருக்கின்றன. நடப்பு ஆண்டில் அந்தப் பகுதியிலுள்ள கண்மாய்களையெல்லாம் தூர் எடுத்து, பராமரிப்பு வேலைகளைச் செய் தால் நல்ல பயன் ஏற்படும். அதற்குப் பல கோடி ரூபாய் தேவைப் படுகிறது. காலப்போக்கில் இதைச் செய்து, மக்களுடைய வளர்ச்சி யில் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் மலட்டாறு ஓடுகிறது. கடந்த வாரம்கூட இங்கே இதைப்பற்றி விமர்சனம் செய்யப்பட்டது. அது மலடான ஆறுதான், குழந்தை இல்லாதவளை மலடு என்று சொல்கிறோம். அதுபோல பயனற்ற ஆறாக இருப்பதால் இதை மலட்டாறு என்று சொல்கிறார்கள். மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் இந்த ஆண்டி லாவது நடைபெறும் என்று எதிர்பார்த்தோம். அது பரிசிலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த

மலட்டாறு திட்டத்தை உடனடியாகப் பரிசீலித்து, அந்தப் பகுதி மக்களின்மேல் அனுதாபம் கொண்டு, இதைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொறியாளர் துறையில் உள்ளவர்கள் நல்ல ஒத்துழைப்புத் தந்து, சட்டதிட்டங்களை சிறிது தளர்த்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுதந்திரா கட்சி அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் லேட்டுகளைத்தான் பார்த்தோம், அலங்காரமான பூந்தோட்டங்களைப் பார்த்தோம் என்றெல்லாம் சொன்னார்கள். வைகை திட்டத்தால் நாங்கள் எதையும் அனுபவிக்கவில்லை என்று கூறினார்கள். அதைகூட கிழக்கு இராமநாதபுரம் மக்கள் எதையும் அனுபவிக்கவில்லை. ஒரு காலத்தில் வைகை தண்ணீர் அபிராமம் வழியாக முதுகுளத்தூருக்குப் பாசனம் இருந்ததாக தஸ்தாவேஜுகள் எல்லாம் இருப்பதாகத் தெரிகிறது. வைகையில் தண்ணிர் முதுகுளத்தூர், அபிராமம் வழியாக தண்ணீர் விட தக்க அனுமதியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கஞ்சம்பட்டி கால்வாய்த் திட்டம், பழைய நாராயனக் காவேரி திட்டம், கூத்தங்கால் திட்டம் ஆகியவை எல்லாம் துரிதமாகச் செயல்பட வேண்டுமென்று அரசைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மேஜர் டேங்க்ஸ் 200 ஏக்கருக்குமேல் பொதுப்பணித் துறையினரால் பராமரிக்கக் கூடிய கண்மாய்களும் இருக்கின்றன. இந்தக் கண்மாய்களைச் சரியானபடி பராமரிக்காத காரணத்தால் வெள்ளம் ஏற்படும்போது சில இடையூறுகள் விளைகின்றன. ஆகவே, முதுகுளத்தூர், பொந்தம்புளி, காடாமங்கலம், மண்டலமாணிக்கம், கமுதி, ஆப்பனூல், சாயல்குடி, கோவிலாங்குளம், பெருநாளி முதலிய கண்மாய்களை டி.சி.ஆர். திட்டம் மூலமாக பராமரிப்பு செய்ய வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

* __திரு. எஸ். கே. வடிவேல்:__ மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

பொதுவாக தமிழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பின், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டந்தோறும் நல்ல எண்ணத்தோடு, சட்டமன்ற உறுப்பினர்களையும் ஆங்காங்குள்ள அதிகாரிகளையும் அழைத்துப்பேசி,





என்னென்ன குறைகள் இருக்கின்றன, என்னென்ன செய்தால் விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும், விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் என்று கேட்டு, அதற்கான வழிவகைகளைச் செய்து வருகிறார்கள். சென்ற மாதம் எங்களையெல்லாம் அழைத்துப் பேசி நல்ல கருத்துக்களை அறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் காட்டுப்புத்தூர் வாய்க்கால் புதுப்பிக்கும் திட்டம் நீண்டநாளாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தினால், நல்ல முறையில் தண்ணீர் கிடைத்து, விவசாயம் பெருக வழி ஏற்படும். மேலும், அந்த வாய்க்காலில் சுமார் 130 பம்பு செட்டுகள் அனுமதியில்லாமல் இருந்து வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அதிகாரிகளைக் கண்டு இந்த பம்பு செட்டுகளை அகற்ற வேண்டும் என்று முயற்சி செய்து இன்னும் அந்த பம்பு செட்டுகள் எடுக்கப்படாமல் இருக்கின்றன. எனக்கு முன்னால் ஒன்றிய பெருந் தலைவராக இருந்த திரு. விஸ்வநாதன் அவர்கள் சென்ற ஆண்டில் அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுப்பதாக புகார், இதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டில் கூட 100 பம்பு செட்டுகள் அனுமதி இல்லாமல் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்தார்கள் என்று தெரிய வருகிறது. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே பல மனுக்களைக் கொடுத்து உள்ளேன். அது விஷயமாக எவிக்ஷன் கொடுக்க வேண்டுமென்று முசிறி கோட்டாட்சித் தலைவரிடத்தில் சொன்னேன். அவர் உத்தரவிட்டிருந்தும்கூட அதையும் மீறி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே ஸ்டே ஆர்டர் வாங்கியிருக்கிறார்கள். இப்படி அனுமதியில்லாத பம்பு செட்டுகளை உடனடியாக நீக்குமாறு செய்வதற்கு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முள்ளிப்பாடி வாய்க்கால் என்று எனது தொகுதியிலே இருக்கிறது. அது தலைப்பு சரி இல்லாமல் இருக்கிறது, அந்த வாய்க்காலை யாரும் டெண்டர் எடுக்காததால் வேலை செய்யவில்லை. பல விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஒரு சிறிய தலைப்பைக்கூட மாற்றாத காரணத்தால் தண்ணீர் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள்.

ஆராய்ச்சி என்ற பகுதியிலே ஒரு லட்சம் இருபதாயிரம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார்செய்து திட்டம் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ஏரியையும் துரிதமாக அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காட்டுப்புத்தூர் வாய்க்காலைச் சீர்திருத்தம் செய்வதற்காக ஏழு லட்சம் ரூபாய் செலவில் திட்டம் தயாரித்து அரசுக்கு வந்திருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் எங்களால் பராமரிக்க முடியாமல் இருந்து வருகின்றன. பேருந்துகள் செல்கின்ற சாலைகள் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் வசதியாகச் செய்துகொடுக்கப் படமுடியாமல் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆயிரம் மைல் சாலைகளை எடுத்துக்கொள்ளப் போவதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படி எடுக்கும்பொழுது இந்த ஒன்றிய சாலைகளை அரசு எடுத்துக்கொண்டால் அதனால் போக்குவரத்தும் நன்றாக இருக்கும் ஒன்றியங்களும் நல்ல முறையிலே செயல்படும் என்பதால் அந்த சில ஒன்றிய ரோடுகளை அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. மூ. மாரிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது அரசு குறிப்பாக நம்முடைய கழக அரசு எனது பகுதியிலே முன்பெல்லாம் கோயிலில்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்று சொல்வது முதுமொழி மாறி இப்பொழுது ஏரியில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற அளவிலே—ஊருக்கு ஊர் ஏரியோ குளமோ நம்முடைய அரசு நிறைவேற்றித் தருகிறது. குறிப்பாக எனது தொகுதியில் அம்மம்பாளையம், மணிவிழுந்தான் திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறது. பல கிராமங்களிலே சிறிய சிறிய குளங்களை வெட்டிக் கொண்டு வருகிறார்கள். இதுபோன்ற விவசாயிகளுக்கு நல்ல காரியங்களையெல்லாம் நமது அரசு செய்து வருகிறது. காமக்காபாளையம், உளிபுரம், சிறுவாச்சூர், ஊணத்தூர் இந்தத் திட்டங்களின் மதிப்பீடுகள் எல்லாம் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அவற்றையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று அதிகாரிகளையும் அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலிருந்து உளுந்தூர்பேட்டை வரையிலும் செல்கின்ற சாலையை விரிவுபடுத்தி அந்தப் பாதையைச் செப்பனிட்டால் அங்கே கோயம்புத்தூர், மலபார் போன்ற இடங்களிலிருந்து வருகின்ற





மக்களுக்கும் லாரிகளுக்கும் போக்குவரத்திற்கும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியம் அதிகப்படியாகக் கொடுப்பதில்லை. குறிப்பாக எனது பகுதி பிற்பட்ட பகுதி. என்னுடைய தொகுதி ரிசர்வ் தொகுதி. ரிசர்வ் தொகுதியிலிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். எனவே அதிகப்படியாக அங்கே நிதி வழங்கி மக்களுடைய நலனுக்கேற்றவகையில் இணைப்புச் சாலைகளை நல்ல முறையில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊணத்தூர் செல்கின்ற சாலையை அரசாங்கமே எடுத்துச் செயல்பட வேண்டும். வசிஷ்டா நதியிலும், சுவேதா நதியிலும் பாலங்கள், ஆரகளூர், கவர்ப்பனை, திட்டச்சேரி, காட்டுக்கோட்டை ஆகிய திட்டங்களையும் அந்தப் பகுதி மக்களுக்காக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கக் கலைக் கல்லூரிக் கட்டடமும், ஆத்தூர் வட்ட மருத்துவமனையிலே இருக்கின்ற படுக்கைகளை விரிவுபடுத்த அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்புத்தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாதைகளையும், பாசன வசதிகளையும், கட்டட வசதிகளையும் உண்டாக்கித் தருகின்ற பொதுப்பணித் துறையானது நாகரித்தையும் சுபிட்சத்தையும் உண்டாக்குகிறது என்று சொன்னால் அது அதிகமான சொல் ஆகாது. பாதைகள் அதிகப்படுகின்ற காரணத்தினால் போக்குவரத்து அதிகமாகி மக்கள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று ஒருவரோடொருவர் பழகக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுவதன் மூலம் நாகரீகம் வளர்கிறது. பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன்மூலம் சுபிட்சம் ஏற்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் இந்தக் காரியங்களைச் செய்வதிலே மிகவேகமாகச் செயல்பட வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வருங்காலத்தில் மற்ற எல்லாத் துறைகளையும்விட பொதுப்பணித்துறைதான் மிக உயர்ந்த அந்தஸ்தை அடையப் போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளகிறேன். தேசத்திலே பெரிய திட்டங்களை, கங்கை—காவிரி இணைப்புத் திட்டம் போன்ற

[திரு. எம். சுரேந்திரன்] [1972 மார்ச் 21

திட்டங்களைக் கொண்டுவருவதன்மூலம் பொதுப்பணித்துறைக்குப் பொறுப்பு, அந்தஸ்து, தகுதி உயரப்போகிறது என்ற காரணத்தினால் இந்த மாநிலத்திலுள்ள வேலைகளையெல்லாம் துரிதமாகச் செய்வதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த வேலைகள் எப்படிப் பிரிக்கப்படுகின்றன, எப்படிப் பிரிக்கப் பட்டுச் செயல்படுகின்றன என்பது கேள்வியாக இருக்கிறது. ஆங்காங்கு பாசனங்கள் வேகமாகக் கிடைக்க வேண்டுமென்றும் பாதைகள் வேகமாகக் கிடைக்க வேண்டுமென்றும் எல்லாப் பகுதி மக்களும்தான் கோருவார்கள். அவர்கள் அப்படி கோருவது தான் இயல்பு. அவற்றிலே எதற்கு முதல் இடம் எப்படி அளிப்பது, எந்த வகையிலே இரண்டாவது இடம் அளிப்பது என்று ஏதாவது வரையறை செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் அப்படி யொன்றும் வரையறை செய்யப்படவில்லை. காரணம் பல திட்டங்கள் 1967-ம் ஆண்டிலிருந்தே இருந்துகொண்டே இருக்கின்றன. எஸ்டிமேட் போட்டு பரிசீலனை செய்யப்படுகிறது, மீண்டும் மாற்றி யமைக்கப்படுகிறது, பல்வேறு முறைகளை இப்படிக் கையாண்டு அரசாங்கத்திற்கு வந்ததற்குப் பிறகும் அமலுக்கு வரவில்லை என்றால் இதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்று எண்ணினால் அதிலே தவறில்லை. கருங்கரடு, பாலமலை, கொத்தநேரி, தோணிமடுவு இந்தத் திட்டங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்படத் தக்க நிலையிலே இருக்கின்றன. நான் இந்தப் பிரச்னைகள் பற்றி யெல்லாம் அமைச்சர் இடத்திலும், சீப் எஞ்சினீயரிடத்திலும் சொல்லி இருக்கிறேன். தோணிமடுவு நடுவான திட்டம், மற்றவையெல்லாம் சிறுபாசனத் திட்டங்கள்தான். ஆனால் இதுவரையிலும் ஒரு திட்டம் கூட நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னால் எனக்குச் சாதாரண மாகத் தோன்றுவது ஆளுங்கட்சியாக இல்லாத காரணத்தினாலே என்னுடைய தொகுதியிலே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வில்லையோ என்று சந்தேகப்பட்டால் வருத்தப்பட்டுக் கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேரம் இல்லாத காரணத்தினாலே சுருக்கமாக முடித்துக்கொள் கிறேன். மேட்டூர் அணையிலே தண்ணீர் தேங்கும் பகுதிகளிலே 30, 40 ஆண்டுகளாக விவசாயம் செய்துவருகிற விவசாயிகளை வெளி யேற்ற வேண்டுமென்று பொதுப்பணித் துறையிலேயிருந்து உத்திர விட்டிருப்பதாக நான் அறிகிறேன். விவசாயம் செய்யப்படுவதால் மண் இளகுவதன்மூலம் அணைக்குக் கேடு வரும் என்று சொல்லப்படு கிறது. இப்பொழுது தண்ணீர் தேங்காத இடங்களில் எல்லாம் மரங்கள் வைத்து மண் அரிப்புத் தடுக்கப்படுகிறது. புது மண் வராத



1972 மார்ச் 21] [திரு. எம். சுரேந்திரன்]

நிலையில் மண்ணைக் கிளறினால்தான் ஒரு பக்கத்திலே மேடானால் இன்னொரு பக்கத்திலே பள்ளம் ஆகிறது. ஆகவே அங்கேயிருக்கக் கூடிய விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கக்கூடியதை ஏன் தடுக்க வேண்டும்? ஆனால் எப்படியோ விவசாயம் செய்வதால் மேடாகிவிடும் என்று சொல்லும் வாதம் சரியல்ல. மண் அரிப்பு தடுப்பு ஏற்பட்ட பிறகு இந்த வாதம் எடுபடாது. எனவே அதை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் அங்கே விவசாயம் செய்பவர்கள் வருஷத்தில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களிலேதான் விவசாயம் செய்கிறார்கள். தண்ணீர்த் தேக்க பகுதியில் நிரந்தரமாகச் செய்ய முடியாது. ஆகவே, மூன்று மாதங்களிலே கோராலி, குதிரைவாலி தானியத்தைத்தான் எடுக் கிறார்கள். வேறு பலனளிக்கக்கூடிய தானியங்கள் எடுக்க முடிவ தில்லை. அவர்கள்கூட ஏழைகளாகவும், நிலமில்லதாவர்களாகவும் தான் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் வெளியேற்ற வேண்டு மென்றால் ஆயிரக்கணக்கில் வெளியேற்ற வேண்டிவரும். ஆயிரக் கணக்கான குடும்பங்கள் வெளியேற்றப்பட்டு அவர்கள் தெருவிலே நிற்கின்ற நிலை உண்டாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று பாதைகளிலே பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் பாதைகளை நாம் கொஞ்சங் கொஞ்சமாக எடுக்கிறோம். இப்படி எடுப்பதில் நாம் என்ன ஆதாரத்தை வைத்து எடுக்கிறோம் என்று சொன்னால் பண வசதி, பஸ் வசதி இவைகளைப் பார்க்கிறோம். ஆனால் எல்லா இடங்களிலும் பஸ் போகவேண்டுமென்ற நிலை இருக்கிறது. எனவே பஸ் போகத் தகுதியுடைய வருமானம் வரக்கூடிய அளவில் இருக்கும் அப்படிப்பட்ட கிராமங்களைப் பற்றி சர்வே செய்து தகுதி யான பாதைகளை எடுத்து அவைகளை முதலிலே எடுக்க ஏற்பாடு செய்தால், அப்படி அந்தப் பாதைகளை எடுத்தால் நியாயமாகவும், நீதியாகவும் இருக்குமே தவிர வேறு பஞ்சாயத்து யூனியன்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளைப் பார்த்து எடுத்துக்கொள்வது, பஞ்சாயத்து ரோடுகளை ஹைவேஸ் எடுப்பது போன்ற இந்த முறைகள் இருக்கின்றனவே அந்த முறை நல்லதாகயிருந்தாலும் அத்தகைய ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், பஞ்சாயத்துக் களிலும் பாதை போடமுடியாது, பஸ் போக முடியாது, அதன் காரணமாக மற்றக் கிராமங்களிலுள்ளவர்கள் பஸ்களில் பிரயாணம் செய்யும்பொழுது பஸ் இல்லாத கிராமங்களில் உள்ளவர்கள் நமக்கும் பஸ் வரவில்லையே என்று ஏங்கியிருக்கும் நிலைமைகள் ஏற்படுகின்றன.

[திரு. எம். சுரேந்திரன்] [1972 மார்ச் 21

ஆகவே பஸ் போக தேவை என்றிருந்தால், அவசியம் இருக்கிறது என்று உணர்ந்தால் அப்படிப்பட்ட இடங்களைச் சர்வே செய்து அவைகளை ஹைவேஸில் எடுத்து அங்கு பாதைகள் அமைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றைக் கூறிக்கொள்ளுகிறேன். கொளத்தூர் பஞ்சாயத்து யூனியனில் பண்ணைசாவாடி என்ற இடத்தில் பாதை இல்லாமலிருக்கிறது. இரண்டு மூன்று பஞ்சாயத்துக்களின் அதிகாரத்தில் அது இருக்கிறது. பஞ்சாயத்தும் போடுவதில்லை, பஞ்சாயத்து யூனியனும் அதைப் போடுவதில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் பண்ணைவாடி, விண்ணப்பட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்கள் 6, 7 மைல் நடந்துவந்து பஸ்ஸிலே போக வேண்டியிருக்கிறது. நல்ல பாதைகள்போட்டு அங்கே சரியானால் பஸ் விடுவதற்கு ஆட்சேபணையில்லை. இதை 1967-ம் ஆண்டிலிருந்து சொல்லிக்கொண்டு வருகிறோம். பஞ்சாயத்து யூனியனிலும், பஞ்சாயத்திலும் பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கும் மேடுபள்ளமாக அந்தப் பாதை இருக்கிறது. அவைகளை எடுத்துச் செய்வதில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று மேட்டூர் ஆர்.எஸ்ஸிலிருந்து தூளாம்பட்டி வரையில் செல்லும் பாதையை போட ஹைவேசிலிருந்து கேட்டு நடவடிக்கை எடுக்கச் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் சரியாக்கப்படவில்லை. அங்கே பல கல்வெர்ட்டுகள் அமைவதால் அதை பஞ்சாயத்து யூனியன் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதுபோன்ற பாதைகளையும் அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூரிலிருந்தும், கோனூரிலிருந்தும் குஞ்சாண்டியூர், ஆண்டிக்கிரி ஆகிய ஊர்களுக்குச் செல்லும் பாதைகள் சரியாக இல்லை. அதைச் செய்வதற்கு பஞ்சாயத்துக்கு வசதியில்லை. அங்கு ஒரு பகுதி வரையில்தான் பஸ் போகிறது. அந்தப் பக்கம் போகவில்லை. அப்படிப் போகாத இடங்களுக்குப் பாதைகள் போட்டால் கிராமப்புறமக்கள் பெரிதும் பயனடைவார்கள். அப்படிப்பட்ட பாதைகளைச் சர்வே செய்து அந்தக் காரியங்களைச் செய்வதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இதுபோன்ற மராமத்து இலாக்கா, பொதுப்பணித்துறை ஆகியவைகளின் பணிகள் மிகவும் மகத்தானவை. அந்தப் பணிகள் எல்லா இடங்களிலும் நியாயமாகக் கிடைப்பதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமே தவிர, ஏதோ அவசரப்படுத்தி, செல்வாக்கை பயன்படுத்தி செய்பவர்களுக்கு முதலிலே செய்வது மற்றவர்களுக்கு இரண்டாவது மூன்றாவதாகச் செய்வது என்றில்லாமல் எங்கே நியாயமான வேலைகள் இருக்கின்றனவோ அவைகளை சீரியலாக வரிசைப்படுத்திச் செய்வதுதான் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதியில் நான் ஏற்கனவே சொல்லிய அந்தத் திட்டங்களையெல்லாம் முறையாக எடுத்து உடனே நடைபெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த அறிக்கையைப் பார்த்தவுடன் எனக்குப் பெருத்த ஏமாற்றம்தான் ஏற்பட்டது. 1967-லேயிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறோமே, ஒன்றுகூட சேர்க்கவில்லையே என்று பெரிய ஏமாற்றம். ஆகவே, அமைச்சரவர்கள் அந்தக் குறிப்புகளைக் கவனத்திற் கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்பி அமர்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. எம். சுரேந்திரன்]

* திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, இந்த மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

பொதுவாக என்னுடைய போளூர் தொகுதி முழுக்க முழுக்க விவசாயிகளை உள்ளடக்கிய தொகுதி என்று இந்த மன்றத்தில் பல முறை நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே போளூர் ஏரி என்று இருக்கிறது. ஏறத்தாழ 1,200 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய ஏரி. அந்த ஏரியைக் கட்டிய காலத்தில் 10 மாதத்திற்கு நீர் கொள் அளவு தகுதி உடையதாக அந்தக் காலத்தில் கட்டப்பட்டது. உயர்தர அதிகாரிகளும், தலைமை எஞ்சினியரும் பார்க்கும் வகையில் காண்பித்தேன். தற்பொழுது நான்கு மாதம்தான் தண்ணீர் இருக்கக்கூடிய அளவில் அது தூர்ந்துவிட்டது. அதற்கு அதிகாரிகள், இப்பொழுது தண்ணீர் இருக்கிறது, தண்ணீர் தீர்ந்தவுடன் ஆழப்படுத்தும் திட்டத்தை நாங்கள் உருவாக்குகிறோம் என்று அதிகாரிகள் என்னிடத்திலே கூறினார்கள். இப்பொழுது அங்கே தண்ணீர் வடிந்துவிட்டது, ஆகவே அதைத் துரிதமாக ஆழப்படுத்தி 10 மாதம் தண்ணீர் பாயக்கூடிய தகுதியாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய பெரிய ஏரிக்கு வரும் தண்ணீர் செய்யாற்றிலிருந்து வர வேண்டும். ஏறத்தாழ 10 மைல் தூரத்தில் அந்த ஏரி இருக்கிறது. அந்த 10 மைல் தூரமும் விவசாயிகள் நடந்து சென்று ஆற்றை மணலால் பாலம் கட்டி தண்ணீரைக் கொண்டுவர வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை அங்கேயிருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்று 15, 20 வருஷங்களாக நாங்கள் இந்த மன்றத்தின் மூலம் கேட்டோம். இந்தக் காருண்யமிக்க அரசு சென்ற

தொடர் கூட்டத்தில் நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரண்டு மணல் போக்கிகளை அமைக்க ஏறத்தாழ 48,000 ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் துவங்கியிருக்கிறார்கள். அதற்காக அந்த இலாக்காவிற்கும், அமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை முடித்துவிட்டு விவசாயம் செய்யும் காலத்தில் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை அந்தப் பகுதி மக்களுக்கு செய்து தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலைத்தொடரிலே செண்பகத் தோப்பு அணைக்கட்டுத் திட்டம் என்று 1959-லே ஒரு திட்டம் போடப்பட்டது. 1960-லே பூர்வாங்க வேலைகள் முடிவு பெற்றன. ஆனால் அது இவ்வளவு காலமாகச் செயலுக்குக் கொண்டுவராமல் விட்டு விட்டார்கள். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டபொழுது, மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அந்தத் திட்டம் இருக்கிறது, உடனடியாக மேற்கொள்கிறோம் என்று சொன்னார்கள். இந்த செண்பகத் தோப்பு அணைத் திட்டத்தினால் சந்தவாசல், ஆரணி, களம்பூர் போன்ற இடங்களுக்குப் பயன் கிடைக்கும். ஆனால் நான் அஞ்சுகிறேன், அந்தப் பகுதியில் கடந்த கால அரசு இருந்த காலத்தில் அது அவர்களுக்குச் சாதகமாக இல்லாத பகுதி என்ற காரணத்தால் அதை வஞ்சம் தீர்க்கும் பகுதியாகக் கருதி கிடப்பில் போட்டுவிட்டார்களோ என்று நான் எண்ணுகிறேன். அந்தக் காலத்தில் இருந்த சட்டமன்ற உறுப்பினருக்கு 1960-லே ஒரு பதிலை அரசாங்கம் அனுப்பியிருக்கிறது. அந்தப் பதிலை அமைச்சரவர்களிடத்திலே நான் நேரிலே கொடுத்து மிகவும் வேண்டிக் கொண்டேன். என்னுடைய தொகுதியில் அந்த செண்பகத் தோப்பு அணை இல்லாத காரணத்தால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், அதை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதை அதிகாரிகளும் குறித்துக்கொண்டு முடித்துக் கொடுக்கும்படி பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஏறத்தாழ 200 ஆண்டுகளாக இயற்கை வளம் மிகுந்த கோட்டப் புத்தூர் ஏரி இருக்கிறது. இரண்டுபுறமும் மலைகளைக் கொண்டு இயற்கையாக அணை கட்டியதுபோல் இருக்கும். அந்த ஏரி உடைந்து விட்டது. சென்ற கூட்டத்தொடரில் அதுபற்றிக் கேட்டபொழுது, அதிகாரிகள் நேரடியாக வந்து அதைப் பார்வையிட்டு அதைக் கட்டினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லித் திட்டம் தயாரித்திருக்கிறார்கள். அதைக் கட்டிக் கொடுத்தால் விவசாயி





களுக்கு நன்மையாக இருக்கும் என்று முடிவெடுத்தார்கள். அமைச்சரிடத்திலேயும் அந்த விவசாயிகள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். அதையும் கட்டிக் கொடுக்கும்படி இந்த மன்றத்தில் நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் சிறு இணைப்புச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு எங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் நிதி வசதி குறைவாக இருப்பதாகச் சொல்லி வருகிறார்கள். அதனால் மண்டகளத்தூர், கரிக்காத்தூர் போன்ற இடங்களிலிருப்பவர்கள் அதிக தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்தக் குறையைப் போக்குவதற்கு அந்தச் சிறுபாதைகளைச் செப்பனிட்டுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

* <u>திரு. கோவை செழியன் :</u> தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டினுடைய பொதுப்பணித் துறை மானியத்தை வரவேற்றுச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு பெரிய மானியத்திலே பேசுவதற்குக் குறைந்தது இரண்டு நாட்களாவது ஒதுக்கியிருக்க வேண்டும், எல்லோருக்குமே சேர்ந்துதான். மிகக் குறுகிய நேரத்தில் எதைச் சொல்வது, எதை விடுவது என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இரண்டொரு கருத்துக்களை ஒப்புவித்து விடுகிறேன். பொதுவாக நம்முடைய நாட்டிலே ஆற்று நீர்வளம் குறைந்திருப்பதால் இருக்கின்ற தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்.

வேளாண்மைப் புரட்சி, க்ரீன் ரெவல்யூஷன் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அந்த அளவுக்கு ஆற்று நீர் வசதி இல்லாவிட்டாலும் கிரவுண்ட் வாட்டர் டேபிளில் இருந்து நீரை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். சமீபத்தில் ஐக்கிய நாட்டிலிருந்து வந்த நிபுணர்கள் தஞ்சை போன்ற மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு அதைப் பற்றி ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில பகுதிகளில் ஏராளமான நீர் இருக்கிறது ; ஆனால் கோவை மாவட்டத்தில் அத்தகைய நீர் குறைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு 30 அடி ஆழத்தில் தண்ணீர் கிடைத்தது இப்போது 300 அடி ஆழத்தில்தான் கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறது. வேளாண்மை அதிகமாக அதிகமாக அதிகமான தண்ணீர் இறைப்பதால் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. அதோடு காடுகள் அழிக்கப்பட்ட காரணத்தால் பெய்கின்ற மழைத் தண்ணீர் எங்கோ ஓடிவிடுகிறது. இதை மனத்திலே வைத்து பெய்கின்ற

[திரு. கோவை செழியன்] [1972 மார்ச் 21

மழைத் தண்ணீர் ஒரு சொட்டுக் கூட வெளியிலே போகாமல் தடுத்து நிறுத்த சிறு சிறு பாண்ட் ஸ்கீம்களைப் போட வேண்டும். இப்போதிருக்கும் முறை பிரிட்டிஷ்காரன் காலத்தில் போடப்பட்ட முறை. அவர்கள் இவ்வளவு மைல்களுக்குத்தான் ஒரு பாண்ட் ஸ்கீம் போட வேண்டுமென்று வைத்திருந்தார்கள்.

குறிப்பாக, காங்கேயம் தொகுதியில், ஊத்துக்குளி, குன்னத் தூருக்கு எந்த ஆற்று நீரும் கிடையாது. பெய்கின்ற மழைத் தண்ணீரை ஒழுங்காகப் பயன்படுத்த வேண்டும். நம்முடைய பழைய முறையை மாற்றிக் கொள்ள வேண்டும். Basic concept, traditions and policies என்ற அமைப்பில் நடைமுறைக்கு எந்த அளவு ஒத்து வருகிறதோ அதை எடுத்துக் கொள்ள வேண்டும். வெள்ளைக் காரர்கள் இவ்வளவு பணத்தைப் போட்டால் எவ்வளவு வரும் என்று வணிகர்களைப் போல் லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பார்கள். நாம் அப்படிப் போடக்கூடாது. 60 லட்சம் 70 லட்சம் செலவானாலும் மக்களுக்குப் பயன்பட்டால் எவ்வளவு அளவில் பயன்படுகிறது என்பதைப் பற்றிக் கவலைப்படக் கூடாது.

Scientific and modern concepts of conservation, and development of natural resources like water.

இவைகளை எல்லாம் எந்த அளவுக்கு அதிகம் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். லாப நோக்கு இல்லாமல் நிறைய பாண்ட் ஸ்கீம்களை உண்டாக்க வேண்டும்.

கோவையில் ரிசர்ச் சென்டர்களில் சில * * * ஆராய்ச்சிகளைச் செய்கிறார்கள். இந்த வார்த்தையைச் சொன்னதற்காக மன்னிக்க வேண்டும். சில தேவையில்லாத .......

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): That word may be omitted.

திரு. கோவை செழியன்: இஸ்ரேல் நாட்டில் வருஷத்திற்கு அரை அங்குலம் மழைதான் பெய்கிறது. ஆகவே, அவர்கள் சொட்டுச் சொட்டாகத் தண்ணீரை ஊற்றி செடி வளர்க்கிறார்கள். அதுபோன்ற ஆராய்ச்சியை இங்கு செய்து கொண்டிருக்கிறார்கள். அது இங்கு தேவையில்லை. நம்முடைய விவசாயிகள் தண்ணீரை நிறைய வீண் செய்கிறார்கள். இருக்கின்ற தண்ணீரை ஒழுங்காகப் பயன்படுத்தாமல் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. அவ்வாறு தண்ணீரை வீணாக்காமல் மற்ற பல இடங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. கோவை செழியன்]

இன்றைக்கு பி.ஏ.பி. வாய்க்கால்களில் வரக்கூடிய தண்ணீரை வருஷத்திற்கு ஒரு முறை, இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை என்று இரண்டு லட்சம் ஏக்கர்களுக்குமேல் பயன்படுத்துகிறார்கள். தண்ணீர் ஆறு மாதத்திற்கு அங்கு பாய்ந்தால் நிச்சயமாக அங்கு கிணற்றில் எல்லாம் கூட தண்ணீர் நன்றாக இருக்கும். இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை, மூன்று வருஷத்திற்கு ஒரு முறை என்று மாற்றி இன்னும் ஒரு லட்சம், இரண்டு லட்சம் ஏக்கர்களுக்குப் பாய்கின்ற வகையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையில் தண்ணீர் கிடைக்க முடியாத இடங்களில் பயன்படுத்திக் கொள்ள வழி செய்ய வேண்டும்.

ஒரு சிறு குறையை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்பு கிறேன். பி.ஏ.பி. தண்ணீர் வருகிறது. அது வருகிறபோது அங்கு நஞ்சை வைக்கக்கூடாது, புஞ்சைதான் வைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் மிளகாய், பருத்தி, புகையிலை ஆகியவை எல்லாம் இந்தத் தண்ணீரில் வருவதில்லை. வீணாகப் போய்விடு கிறது. மேலும் சர்சார்ஜ் போடுகிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் அனுமதியோடு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி இந்த ஆண்டு ஸ்டே வாங்கிக் கொடுத் தார்கள். இதை பர்மனென்ட் ஆகக் கொடுங்கள். இன்றைக்கு இந்தத் தண்ணீர் பாயும் இடங்களில் நீர் வேண்டாம் என்றால் அவர்களிடம் செலவுப் பணத்தை வாங்கிக் கொண்டு எக்ஸம்ப்ஷன் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அடிக்கடி பத்திரிகைகளில் அடிபடக்கூடிய வார்த்தை கங்கையிலிருந்து காவேரிக்குத் தண்ணீர் கொண்டு வரவேண்டு மென்பது. இது எல்லாம் நடக்கக்கூடிய காரியமா? பெரிய எஞ்சி னியர் ஒருவர் எழுதிய ஆர்டிகிள் ஒன்றைப் படித்தேன். கங்கை யிலிருந்து தண்ணீர் காவிரிக்கு வரும்போது வெறும் ஈரம் தான் மிஞ்சும் தண்ணீர் வராது என்று எழுதியிருக்கிறார்கள். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். திரு. கே. எல். ராவ் அவர்கள் ஏதோ ஆர்வத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார். கங்கைத் தண்ணீரை இறைக்க அதாவது பம்பிங் செய்ய எவ்வளவு மின்சாரம் தேவைப்படுகிறது என்று பார்த்தால், இன்று இந்தியா பூராவுக்கும் எவ்வளவு மின்சாரம் தேவைப்படுகிறதோ அதைப் போல் மூன்று மடங்கு மின்சாரம் தேவைப்படும் என்று சொல்லு

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[திரு. கோவை செழியன்] [1972 மார்ச் 21

கிறார்கள். ஆகவே, கால தாமதம் ஆகும். முதல் காரியமாக கோதாவரி, கிருஷ்ணாவில் இருந்து காவிரிக்குத் தண்ணீர் பாய திட்டங்களை மத்திய அரசிடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

கேரளாவில் தண்ணீர் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரைக் கேட்டால் அவர்கள் அந்தத் தண்ணீர் இல்லா விட்டால் கடல் நீர் உள்ளே வந்துவிடும் என்று சொல்லுகிறார்கள். மழை பெய்கிற காலத்திலாவது தண்ணீரைக் கொடுங்கள், நாங்கள் தேக்கி வைத்துக் கொண்டு பின்னால் பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்று சொல்ல வேண்டும்.

இந்த ஒப்பந்தங்கள் போடும்போது கேரள அதிகாரிகளும், நம்முடைய அதிகாரிகளும் இருந்து ஒப்பந்தங்களைப் போடுகிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மட்டுந்தான் உட்கார்ந்து போடுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் மேப்பைப் பார்த்துப் போடு கிறார்கள். தயவு செய்து இனிமேல் எஞ்சினியர்களையும் உட்கார வைத்து எது சாத்தியம், எது எது முடியும் என்று பார்த்து ஒப்பந் தங்களில் கையெழுத்துப் போட வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இந்த ஒப்பந்தங்களை எஞ்சினியர்களை வைத்துப் போட வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய எஞ்சினியர்களை வைத்துப் பரிசீலனை செய்துதான் ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. சில நேரங்களில் வக்கீல்களும் தேவைப்படுகின்றனர். ஆகவே, வக்கீல்களையும் கூட வைத்துக் கொண்டு அக்ரிமெண்ட் செய்கிறோம்.

திரு. கோவை செழியன் : அமைச்சர் அவர்கள் சொன்ன கருத் துக்கு நன்றி. அமைச்சர் அவர்களே வக்கில். அவர்களே திறமை யாக ஆராய்ந்து பார்த்துத்தான் போட்டிருப்பார்கள்.

விவசாயத்திற்கு நிறைய மின் வசதிகளைச் செய்து தர வேண்டும். விளக்குகளுக்காக அதிகமாகத் தந்தாலும் விவசாயத்திற்கு அதிக மாகத் தரவேண்டும். என்னுடைய தொகுதியில் வட்டமலைக் கரைத் தண்ணீர் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது. செட்டிப்பாளையம் என்ற இடத்திலும் வட்டமலை என்ற இடத்திலும் அணை கட்டினால் அந்தத் தண்ணீரை 4,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாய்ச்சலாம் என்று கூறி என்னுடைய உரையை முடிக்குமுன், தலைவர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். எம்.எல்.ஏ.க்கள் உட்கார வெளியிலே ஒரு பெஞ்ச் போட்டிருக்கிறார்கள், அந்த சோபாவில் கம்பி மட்டுந்தான் இருக்



1972 மார்ச் 21] [திரு. கோவை செழியன்]

கிறது. தாங்கள் பொதுப் பணி துறைக்குத் தெரிவித்து அந்த பெஞ்சை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினர் அந்த பெஞ்சில் உட்காரக் கூடாது என்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சுமார் 46 மாண்புமிகு அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்து நானும் என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி ஓரிரு கருத்துக்களைக் கூறுவதற்காக முற்படு கிறேன்.

மிக முக்கியமான ஒரு திட்டம் நமது வீராணம் ஏரித் திட்டம். சென்னை மாநகரில் வாழ்கின்ற லட்சக்கணக்கான மக்கள் இதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மிகப் பெரிய திட்டம் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. குறிப்பாக, நமது அமைச்சர் அவர்கள் மேல் நாட்டுக்கு, கிரேக்க நாட்டுக்கெல்லாம் சென்று கம்பெனியார்களிடம் தொடர்பு கொண்டு பைப்கள் அமைப்பதில் முனைந்திருந்தார்கள். அந்தத் திட்டம் என்னவாயிற்று என்பதைப் பற்றி அமைச்சர் அவர் கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

இன்று பல இடங்களில் வீராணம் ஏரித் திட்டத்திற்காக ஓப்பன் ட்ரென்சஸ் வெட்டப்பட்டிருக்கின்றன. அந்த ட்ரென்சுகள் நீண்ட நெடுங்காலமாக அப்படியே கிடக்கின்றனவே தவிர பைப்புகள் வைத்து நிரப்பப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். பொதுவாக, இந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவில் ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் ஏற்படுத்த இந்த அரசாங்கம் வேண்டிய வழிவகைகளை செய்ய வேண்டும்.

பொதுவாக, பொதுப்பணித் துறையில் இந்தமாதிரிக் காரி யங்கள் செய்கிறபோது எனக்கு ஒரு பெரிய ஐயப்பாடு ஏற்படு கின்றன. மதிப்பீடுகள் போடுகிறார்கள். இதற்கு 21 கோடி ரூபாய் ஆகும் என்று சொல்லுகிறார்கள். இது எத்தனை கோடியில் முடி கிறது என்பது கடைசியில் கணக்குப் பார்த்தால்தான் தெரியும். எவ்வளவு கோடி ஆனாலும் சரி துரிதமாக நடத்தினால்தான் பயனுள்ள

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 21

திட்டமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் காலத் தாழ்வு இல்லாமல் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இங்கு பேசிய பல உறுப்பினர்களும் 56 கோடி ரூபாய் இந்தப் பொதுப் பணித்துறைக்கும், பெருவழித் துறைக்கும், ஏனைய துறைகளுக்கும் செலவு செய்கிறார்கள் என்பது சிறப்பான அம்சம் என்று பாராட்டினார்கள். அதே சமயத்தில் அவர்களுடைய தொகுதியில் இருக்கும் குறைபாடுகளைப் பற்றியெல்லாம் கூறி அவற்றை நிறைபடுத்த வேண்டுமென்ற பட்டியலையே இந்த மன்றத்தில் எடுத்துக் கூறினார்கள்.

பொதுவாக இன்று சமதர்மம் பூத்துக் குலுங்கச் செய்வதில் முனைந்திருக்கும் இந்த அரசுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இந்த அரசு பலயிடங்களைப் புறக்கணித்திருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் தொகுதிகளில் வேலைகள் எல்லாம் துரிதமாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் எதிர்கட்சியில் இருப்பவர்களின் தொகுதிகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இந்த அறிக்கையை நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். எங்கள் ஜில்லாவில் என்னென்ன வேலைகளை பொதுப்பணித் துறையினர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு பாலங்களை தந்திருக்கிறார்கள். எவ்வளவு நீர்பாசனத் திட்டங்களை தந்திருக்கிறார்கள், எவ்வளவு சிறப்புத் திட்டங்களை தந்திருக்கிறார்கள் என்று துருவித் துருவிப் பார்த்தேன். ஆனால் ஒன்றையும் காணவில்லை. அவர்களிடம் நான் ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை எங்களை அனுப்பிய பாவத்திற்காக அந்தப் பகுதியில் வாழ்கிற மக்களை வஞ்சம் தீர்க்க வேண்டாம், பழி தீர்க்க வேண்டாம் என்று மட்டும் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு புறமிருக்க, காலையில் மாண்புமிகு சுதந்திராக் கட்சித் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூவம் பிரச்னையைப் பற்றி இங்கு எடுத்துக் கூறினார்கள். கூவம் பிரச்னையோடு இணைந்திருக்கிற மற்ற சில பிரச்னைகள் பற்றியும் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறினார்கள். கூவம் ஆரம்பத்திலே என்ன முறையில் நடந்தது, எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, இன்னும் எவ்வளவு மாற்றம் பெறும் என்ற ஐயப்பாடு ஏற்படும் நிலைமையில் இருக்கிறது. இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு இன்று அத்திட்டம் எட்டிப்பிடித்திருக்கிறது. மதிப்பீடுகள் அடிக்கடி திருத்தியமைக்கப்பட்டு மூன்றாவது முறையாக திருத்தி அமைக்கப்படுகிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் மழை வந்தால் அல்லது பெருவெள்ளம் வந்தால் அத்திட்டம் எப்படி உருவாகும் என்பதைப்பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆற்றில் போட்டாலும் அளந்து போடு என்று சொல்வார்கள் சாதாரணமாக. அதேபோல் அந்த அடிப்படையில் கூவம் திட்டம் உருவாக்கப்பெற்றிருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறைந்த தொகையாக இருந்து இப்போது வளர்ந்து கொண்டே போகிறது. இது ஒரு வெள்ளை யானையாக இருக்கிறது, வொயிட் எலிபென்ட் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அந்த முறையில் வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்தமாதிரித் திட்டங்களில் எல்லாம் என்ன ரிட்டேர்ன் கிடைக்கிறது, என்ன வருவாய் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இன்னும் மழை வந்தால் அல்லது வேறுவிதமான கஷ்டங்கள் வந்தால் அதைத் தவிர்ப்பதற்கு என்னென்ன வழிவகைகள் செய்திருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். ஸுவேஜ் வந்து கலக்காமல் இருப்பதற்கு என்ன தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் பார்க்க வேண்டும். கூவம் மணக்கிறது, என்று ஒரு உறுப்பினர் எடுத்துக் கூறினார். நன்றாக மணக்கட்டும், அதை நாங்கள் வரவேற்கிறோம். பணத்தை அதிகமாக விரயம் செய்வதினால் என்ன பிரயோஜனம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொதுப் பணத்தைச் செலவு செய்கிறோம். இதை வேண்டாம் என்று சொல்ல வரவில்லை. மக்களுக்குப் பயன் உள்ளதாக இருக்க வேண்டும் என்பதால்தான் பொதுப்பணத்தைச் செலவழிக்கும்போது இந்த இலாகா பொறுப்புணர்ச்சியோடு இருக்க வேண்டும் என்பதால்தான் இதைச் சொல்கிறேன்.



1972 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூவம் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படுகிற பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்பட வேண்டும், பொறுப்புணர்ச்சியோடு செலவழிக்கப்பட வேண்டும் என்றால் ஏதோ அப்படிச் செலவழிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டுவதாக இருக்கிறது. எப்படி எப்படி அது தவறாகச் செலவழிக்கப்பட்டது என்பதை விளக்கினால் நாங்களும் புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். இல்லையென்றால் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு பொன்னப்ப நாடார் அவர்கள் கூவம் திட்டம் ஒழுங்காகச் செயல்படவில்லை என்று கூறுகிறார். இது ஒரு ஊழல், இதற்கு என்ன பதில் என்று போடுவார்கள். ஆகவே என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை விளக்கினால் திருத்திக்கொள்ள ஏதுவாகயிருக்கும்.

[1972 மார்ச் 21

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இத்திட்டத்திற்கு முதலில் எவ்வளவு மதிப்பீடு இடப்பட்டிருந்தது, அதற்குப் பிறகு அதைத் திருத்தியமைத்தார்கள், விரைவில் முடிந்து விடும் என்று சொன்னார்கள். ஆரம்பத்தில்...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திருத்திய மதிப்பீடு என்றால் அது கடந்த இருபது ஆண்டுகளாக நடைபெற்று வருகிற ஒன்று தான். ஒரு திட்டத்திற்கு முதலில் ஒரு மதிப்பீடு போடுவதும் அதற்குப் பிறகு பத்து அல்லது இருபது லட்சம் அதிகமாக திருத்திய மதிப்பீடு வெளியிடுவதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு புதிதாக ஏற்படும் ஒன்றல்ல. காலகாலமாக மதிப்பீடு போட்டு திருத்திய மதிப்பீடு என்று இருந்து வந்திருக்கிறது. எம்.எல்.ஏ. ஹாஸ்டல் கட்டியபோது முதலில் போட்ட மதிப்பீடும் திருத்திய மதிப்பீடும் வெவ்வேறுதான். காங்கிரஸ் ஆட்சியில்கூட எல்லாத் திட்டங்களுக்கும் முதலில் ஒரு மதிப்பீடு போட்டு பிறகு திருத்திய மதிப்பீடு போட்டுத்தான் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அதில் என்ன தவறு வந்துவிடும் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: முதலில் மதிப்பீடு குறைத்துப் போட்டு பிறகு 200 மடங்கு அதிகமாக செலவழிக்கிறது என்றால் அது மதிப்பீடாகாது. மதிப்பீடு என்றால் குத்துமதிப்பாக இருக்கக் கூடாது. வரைபடங்கள் மற்றவைத் தயார் செய்து, என்ஜினியர்கள், வல்லுனர்கள் போன்றவர்களின்.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆரம்ப மதிப்பீட்டை விட 200 மடங்கு அதிகம் என்று சொல்கிறார்கள். ஆரம்பத்தில் ரூபாய் 1 கோடி 20 லட்சம் என்று போடப்பட்டது. 200 மடங்கு அதிகம் என்றால் 200 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டதா என்பதை விளக்கவும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த மாதிரியாக அடிக்கடி திருத்திய மதிப்பீடுகள் வருவதன் காரணமாகத்தான் இதில் சந்தேகம் வரவேண்டிய ஒரு நிலை ஏற்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆரம்பத்தில் போட்டது ரூ. 1 கோடி 20 லட்சம் என்றால் 200 மடங்கு அதிகமாகியுள்ளது என்றால் இப்போது ரூ. 200 கோடி செலவு செய்யப்பட்டுள்ளதா?



1972 மார்ச் 21]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஆரம்பத்தில் 71 லட்சம் என்று ஒரு கணக்கு இருந்தது. பிற்பாடு ஒரு கோடிக்கு மேல் வளர்ந்தது. இப்போது ஒன்றே முக்கால் கோடி, இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு எட்டிப்பிடிக்கும் நிலை இருக்கிறது. அடுத்த மழையில் எவ்வளவு கோடியாக உயரப்போகிறது என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மதிப்பீடு திருத்தியமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். அதற்குச் சில விளக்கங்கள் சொல்லி விடலாம் என்று நினைக்கிறேன். கூவம் திட்டம் பொறுத்த வரையில் மூன்று பிரிவுகளாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதில் பர்ஸ்ட் ஸ்டேஜ்.

| | LAKHS. |
|---|---|
| Construction of a tidal weir and river training works ... ... ... ... ... ... | 13. 70 |
| Dredging and disposal of dredged materials ... | 10. 30 |
| Construction of jetty for mounting the sand pump | 8.00 |

முதல் கட்டத்தில் 32 லட்சம் செலவிடவேண்டுமென்று 67-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதைத் துவக்கிய நேரத்தில்,

| | |
|---|---|
| Construction of regulator at Cooum mouth ... | 23. 89 |
| Dredging and disposal of dredged material ... | 15.39 |
| Construction of jetty for mounting the sand pump | 18.06 |

கொஞ்சம் அதிகமாயிற்று.

| | |
|---|---|
| Providing inlet arrangement into Buckingham Canal to receive 150 cusecs of Coolant water from Ennore Thermal Scheme ... ... | 12 |
| Construction of tidal weir subsequently converted construction of regulator involving an excess amount of ... ... ... ... ... | 10 |

ட்ரெட்ஜிங் செய்யும்போது அதிகம் செலவாகியிருக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் திருத்திய மதிப்பீடு போடப்படுகிறது. அதுபற்றி சென்ற ஆண்டு பேசும்போது விவரங்களைத் தந்தேன். அந்த விவரங்களைச் சொல்கிறேன். லோயர் பவானி ப்ராஜெக்ட் திட்ட மதிப்பீடு ரூ. 765.72 லட்சம், திருத்திய மதிப்பீடு ரூ. 1,034 லட்சம். மணிமுத்தாறு 398 லட்சம், திருத்திய மதிப்பீடு 514

லட்சம், அமராவதி 272 லட்சம், திருத்திய மதிப்பீடு 334 லட்சம். நியூ கட்டளை ஹை லெவல் சானல் 156 லட்சம், திருத்திய மதிப்பீடு 225 லட்சம், புள்ளம்பாடி 142 லட்சம், திருத்திய மதிப்பீடு 216 லட்சம், நொய்யாறு 48 லட்சம், திருத்திய மதிப்பீடு 111 லட்சம், 63 லட்சம் ரூபாய் கூடுதல், பாலாறு அணைக்கட்டு இம்ப்ரூவ்மெண்ட்ஸ் 48 லட்சம், திருத்திய மதிப்பீடு 63 லட்சம், கோமுகி 87 லட்சம் திருத்திய மதிப்பீடு 121 லட்சம். பரம்பிக்குளம்–ஆளியாறு 35.7 கோடி, 65 கோடி ரூபாய் வரை செலவாகியிருக்கிறது. ஆகவே, திருத்திய மதிப்பீடு என்பது நம் அரசாங்கம் வந்த பிறகு போடுவதல்ல. இது ஒரு முறையாகும். வேலை துவங்கிய பின்னர் ஏற்படுவதே தவிர, அதில் எந்தவிதமான தவறும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எந்தத் திட்டங்களுக்கெல்லாம் அதிகமாகச் செலவிடப்பட்டது என்ற விவரத்தைத் தந்தார்கள். இந்தத் திட்டத்தில் ஸ்டாண்ட் பம்ப்ஸ்–க்கும் ட்ரெட்ஜர்களுக்கும் அதிகமாகச் செலவாகி இருக்கிறது. ட்ரெட்ஜர்ஸ் வந்துவிட்டனவா, ஸ்டாண்ட் பம்ப்ஸ் சரியான முறையில் வேலை செய்கின்றனவா என்பது குறித்து நிபுணர்கள் அறிக்கையையும் தந்திருக்கிறார்கள். கழிந்த மழையில் அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் மழை வரும்போது தூர்ந்து போய்விடும். ஆகவே பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் ஆரம்பத்தில் மதிப்பீடு தயாரிக்கும்போது அதுவும் இருக்கவேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பூனை ஒன்று உள்ளே வந்து விட்டது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பூனை வந்ததற்குப் புலி வந்தது மாதிரி கூறுகிறீர்களே?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே பூனை வந்ததற்குப் புலி வந்தது மாதிரி கூறுகிறீர்களே என்று சொல்லுகிறார்கள். அதற்காகச் சஞ்சலப்படத் தேவையில்லை.

நான் ஒன்று சொல்கிறேன். கூவம் பியூரிபிகேஷன் என்ற அமைப்பிலே, அதனுடைய எஸ்டிமேட் தயாரிப்பதிலே மாறுதல் ஏற்பட்டதாக இங்கே எடுத்துக்கூறினார்கள். நான் இதிலே கூறுகிற கருத்துக்கள் எல்லாம் ஏதோ அங்கே ஊழல் இருக்கிறது என்று சொல்வதற்காக அல்ல. அந்தமாதிரி மதிப்பீடு போடுகிறபோது ஒரு அடிப்படை இருக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இங்கே அமைச்சரவர்கள் பல திட்டங்களைப் பற்றி எடுத்துக்கூறினார்கள். சித்தார்–பட்டணங்கால் திட்டத்திற்குப் பல கோடிக்கு மேல் திட்டங்கள் போட்டார்கள், ஆனால் அதைவிடக் குறைவாக கடைசியில் இப்போது செலவழிந்து இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் கூற விரும்புகிறேன். பொதுவாக முன்பு இருக்கும் அனுபவத்தின் அடிப்படையிலே வரைபடங்கள் மதிப்பீடுகள் தயாரித்தால் சாதாரணமாக பத்திரிக்கையில் வருகிற அந்தமாதிரிக் குற்றச்சாட்டுகள் இல்லாமல் இருக்கும்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மதிப்பீடுகள் திருத்தப்படுவது ஊழலா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மதிப்பீடுகள் திருத்தப்படுவது ஊழலா, ஊழல் இல்லையா என்பதை இலாகாவில் இருப்பவர்கள் சரியான முறையில் பரிசீலிக்க வேண்டும். ஊழல் இருக்குமா இல்லையா என்பதை எனக்குச் சொல்ல முடியாது. முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. பொதுவாகப் போடுகிற திட்டங்கள் வளர்ந்துகொண்டே போகிற காரணத்தால் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது என்பதைக் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போடுகிற திட்டங்கள் மாற்றியமைக்கப்படுவதாலே, வளர்வதாலே சந்தேகம் ஏற்படுவதாகச் சொல்லுகிறார்கள். என்ன சந்தேகம்? என்ன தவறு நடந்து இருக்கும் என்று ஊகிக்கிறீர்கள் ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மாதிரித் திட்டங்களுக்கு அடிக்கடி இப்படி எஸ்டிமேட் திருத்தப்படுகிற காரணத்தால் யார் வேலை செய்கிறார்களோ அவர்களுக்கு அதிகப் பணம் சென்று விடுகிறது என்ற சந்தேகம் இருக்கிறது என்ற காரணத்தால் அதைக் கூறினேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படியானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்துக்காட்டினார்கள். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 30 கோடி போடப்பட்டது. பிறகு, 50 கோடி என்று ஆயிற்று என்று பல விஷயங்களைச் சொன்னார்கள். திருத்த மதிப்பீடுகளைப்பற்றிச் சொன்னார்கள். அங்கேயெல்லாம் சந்தேகம் இருக்கிறது என்று கருதுகிறீர்களா ?

[1972 மார்ச் 21

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அப்படி ஊழல் இருக்குமா, சந்தேகம் இருக்குமா என்று யாராவது சொன்னால், அதைப்பற்றி அரசாங்கம் விசாரிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. அது அல்லாமல் நான் ஏதோ தவறுதல் நடந்திருக்கிறது என்று சொல்ல வரவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கம் விசாரிப்பதற்குக் கடமைப்பட்டு இருக்கிறது என்று நான் சொல்லவேண்டும். அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஒரு மதிப்பீடு போட்டு திருத்த மதிப்பீடு போடுகிறபோது அதிகமாகிவிட்டது என்று சொன்னால் ஊழல் இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்களா? எனக்குத் திட்டவட்டமாகப் பதில் வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஊழல் இருக்கிறது என்று எனக்கு ஆதாரம் இருந்தால் தைரியமாகச் சொல்வேன், தயங்க மாட்டேன் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஊழல் இருப்பதற்கு இப்போது தங்களிடம் ஆதாரம் இருக்கிறதா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த குறுக்கு விசாரணைக்குப் பதில் சொல்ல நான் வரவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் எதிர்க் கட்சி என்ற பொறுப்புணர்ச்சியோடு அரசாங்கக் காரியங்களை விமர்சிக்கிற பொறுப்பு உண்டு. அந்தக் காரணத்தால் இதைக் கூறுகிறேன்.

இங்கே அந்த பியூடிபிகேஷன் ஸ்கீமோடு வேறு ஸ்கீமை இணைப்பது ஏன் என்பதைச் சற்றுச் சிந்திக்கவேண்டும். எவ்வளவு கோடி ரூபாய் வேண்டுமானாலும் பியூடிபிகேஷன் ஸ்கீமிற்குச் செலவழிக்கட்டும், வேறு திட்டத்தை இதோடு இணைப்பது பொருத்தமல்ல என்பதை மட்டும் கூற விரும்புகிறேன். மறைந்த முதலமைச்சர் அவர்களுடைய சமாதி நல்ல முறையிலே இருக்க வேண்டும். அதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஒட்டி அருகாமையில் இருக்கும் பகுதியில் சில திட்டங்கள் செய்கிற காரணத்தால் தவறான சில கருத்துக்கள் மக்கள் மன்றத்தில் இருக்கிறது. அந்தத் தவறுகளை அப்புறப்படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று



1972 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கருதுகிறேன். அந்தப் பெரிய மனிதருக்கு எந்தவிதமான மாசும், களங்கமும் கற்பிப்பது ஒழுக்கம் அல்ல என்பதைக் கூறவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அறிஞர் அண்ணா அவர்களுக்கு என்ன மாசு கற்பிக்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அவர்களுக்கு எந்த விதமான மாசும் கற்பிக்க நான் வரவில்லை. ஏதோ பியூடிபிகேஷன் ஸ்கீமில் அவர்களுடைய சமாதிக்குப் பணம் செலவழிக்கப்படுகிறது. அந்தப் பணம் அங்கே போய்விடுகிறது என்று ஒரு சிலர் நினைக்கிற நிலைமை இருக்கிறது. அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று கூறினேன். அவரைப்பற்றி நான் எந்த விதமான மாசும் இதுவரையில் சொல்லவில்லை. வெளியேயும் சொல்லவில்லை. இந்த மன்றத்திலும் சொல்லவில்லை. அது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூவம் நதியின் ஓரமாக உள்ள கடற்கரையில் அறிஞர் அண்ணா அவர்களின் சமாதி இருக்கிறது. கூவம் நதி இப்போது சீர்திருத்தப்பட்டு, அதில் இருக்கும் துர்நாற்றத்தை அகற்றி, அதை அழகுபடுத்துவதற்காகத் திட்டங்கள் அமைக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த காலத்திலேயே அதற்கு அடிக்கல் விழா நடத்தி அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேல்நாடுகளில், எந்த நகரத்தின் குறுக்கே ஒரு ஆறு ஓடினாலும், அது அழகான முறையில் அமைக்கப்பட்டு இருப்பது அந்த நகரத்திற்கு மேலும் எழுச்சியூட்டுவதாக அமைந்திருக்கிறது. சென்னை நகரம் அழகு படுத்தப்படவேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை என்பதை நான் நன்றாக அறிவேன். அப்படி அழகு படுத்தப்படவேண்டும், சீர்படுத்தப்படவேண்டும் என்ற அடிப்படையில் கூவம் நதியை அழகு படுத்துவதற்கும், சீரமைப்பதற்கும் அரசு முயற்சி எடுத்துக்கொண்டது. எதிர்பாராதவசமாக அண்ணா அவர்கள் சமாதி அதன் ஓரமாக அமைந்துவிட்டது. கூவம் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் படகு கட்டுவதற்கான துறை ஒன்றுக்கும், படகு குழாம் கட்டடம் ஒன்றுக்கும், வேறு பல நீர் நிலைத் தொட்டி, தோட்ட அமைப்புக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட செலவுகள் எங்கே செய்யப்படுகின்றன என்று

காட்டுகிற நேரத்தில் அண்ணா சமாதிக்கு அருகில் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகிறது என்று காட்டப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே அண்ணா சமாதிக்கு என்று அரசாங்கம் பணம் செலவு செய்திருக்கிறது. இதனால் அண்ணா அவர்களுக்கு இந்த அரசு எப்படி மாசு கற்பிக்கிறது என்பதை எல்லாம் விளக்க வேண்டுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சென்னை நகரம் அழகுபடுத்தப்படவேண்டுமென்பதில் யாருக்கும் இரண்டுவித கருத்து இருக்காது. கூவம் ஸ்கீமை தனியாக வைத்து இருக்கலாம். பியூடிபிகேஷன் ஸ்கீமை தனியாக வைத்து இருக்கலாம். இந்த இரண்டையும் இணைத்ததால்தான் இந்த மாதிரிப் பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவரவர்கள் இணைத்து என்று திரும்பத்திரும்பச் சொல்லுகிறார்கள். அண்ணா சமாதி தனி, கூவம் சீரமைப்புத் தனி. பியூடிபிகேஷனுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த பியூடிபிகேஷன் பணத்தை எப்படிச் செலவு செய்யலாம் என்று சொல்லுகிறபோது அண்ணா சமாதிக்கும் கூவம் ஆற்றுக்கும் இடையே உள்ள பகுதிகள் என்று கொடுத்து இருக்கிறோம். இரண்டையும் இணைத்துக்கொள்ளத் தேவையில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இன்னொன்றையும் திட்டவட்டமாகச் சொல்லிவிடுகிறேன். அண்ணா சமாதி இன்னும் அழகுபடுத்தப்படவேண்டுமென்று விரும்பினால் இந்த அரசு அதற்கு ரூ. 1 கோடி கூடச் செலவழிக்கத் தயாராக இருக்கிறது (ஆரவாரம்). அதே நேரத்தில் கூவம் ஆற்றில் ஒளிந்து கொண்டு, அந்த திரை மறைவில் அண்ணா சமாதிக்குச் செலவழிக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கவில்லை. அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள், அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆளும்கட்சியாக்க பாடுபட்டவர் அண்ணா அவர்கள் தான். தமிழ் நாட்டின் வழி காட்டியாக, விடிவெள்ளியாகத் திகழ்பவர்கள். அப்படிப்பட்ட மாமேதைக்கு அங்கே அமைக்கப்பட்டிருக்கும் நினைவுச் சின்னம் மேலும் அழகுற இருப்பதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது. இப்படி கூவம் திட்டத்தில் ஒளிந்து கொண்டு அண்ணா சமாதிக்குச் செலவு செய்ய வேண்டிய அவசியம்





இந்த அரசுக்கு இல்லை என்பதை மதிப்புமிக்க மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களுக்கு மிகுந்த பணிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அண்ணா அவர்களின் சமாதியை எழில் படுத்துவதோ விரிவுபடுத்துவதோ வேண்டாம் என்று சொல்லவில்லை. அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இந்த மாதிரி ஒரு கணக்கிலிருந்து ஒரு ஹெட்டிலிருந்து மற்றொரு ஹெட்டுக்கு மாற்றுவது இல்லாதிருந்தால் இப்படிப்பட்ட பேச்சுக்குக் காரணம் இல்லாமல் இருந்திருக்கும். அதைத்தான் நான் சுட்டிக் காட்டினேன். இப்படிச் செய்தது தவறா இல்லையா என்று நான் சொல்லவில்லை. அது அருகாமையில் இருக்கும் பகுதியாதலால் இது மாதிரியான வீண் சர்ச்சை ஏற்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத் தாங்கள் தெளிவுபடுத்தியதற்காக நன்றி. அருகாமையில் இருப்பதால் வீண் சர்ச்சை ஏற்பட்டது என்று சொன்னீர்கள். இப்போது நடந்தது அத்தனையும் வீண் சர்ச்சை என்று சொன்னதற்கு நன்றி. ஒரு ஹெட்டிலிருந்து மற்றொரு ஹெட்டிற்கு மாற்றுவது ஊழலாகி விடாது என்பதை உங்களைப்போல் விஷயம் தெரிந்தவர்கள் புரிந்துகொள்கிறீர்கள். அந்த விஷயம் புரியாதவர்களுக்கும் சேர்த்து அறிவுறுத்துங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எந்த ஹெட்டிலிருந்து எப்படி மாற்றலாம் என்பது நிதியமைச்சராகிய உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதைப்பற்றி நான் எடுத்துக்கூறத்தேவையில்லை. இந்த மாதிரியான காரியங்கள் நடக்கிறபோது அதிலே அதிகப்படியான செலவு வரக்கூடாது, அதிலே எந்த விதமான ஆட்சேபணையும் வரக்கூடாது என்ற காரணத்தினால்தான் நான் இதை எடுத்துக் கூறினேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான பிரச்னை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சிறுவாணி அணைத்திட்டம் பற்றியும், பாண்டியாறு—புன்னம்புழா ஸ்கீம் பற்றியும் பலவிதமான கருத்து எடுத்துக்கூறப்பட்டது. அண்மையில் கேரள மாநிலத்தின் முதல் அமைச்சர் இது சம்பந்தமாக அவர்களுடைய கருத்தை சட்டசபையிலும், வெளியிலும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சிறுவாணி திட்டத்தைப்பற்றி என்ன கூறினார்கள் என்றால்,

கோயம்புத்தூர் நகரத்தில் குடி தண்ணீருக்காகத்தான் என்று சொல்லிவிட்டு, தொழிற்துறைக்கு உபயோகப்படுத்த முனைகிறார்கள் என்பதாகவும், ஆண்டுக்கு 1.3 டி.எம்.சி. தண்ணீர் தரப்படும் என்றும் 1969-ல் அதற்கு ஒப்பந்தம் முடிவாகியிருக்கிறது என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்போது அதை மாற்றி தொழில் துறைக்கு உபயோகப்படுத்துவதற்கு முனைந்து இருக்கிறோம் என்று அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்கு நம் அரசாங்கம் விளக்கம் கூறவேண்டுமென்று விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் விரிந்து வருகிற கோவை நகரத்திற்கும், சிங்காநல்லூர் பகுதிக்கும், அருகாமையிலுள்ள பகுதிகளுக்கும் சிறுவாணித் தண்ணிர் கொடுக்கப்பட வேண்டும் என்று நாம் பேசிக் கொண்டிருப்பதும், அதைப்பற்றி அவர்கள் ஆட்சேபனை தெரிவிப்பதும், இப்படியாக நிலைமை இருக்கிறது என்று கருதுகிறேன். இம்மாதிரியான ஆட்சேபனைகளைத் தவிர்ப்பதற்கு நாம் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்?

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிறுவாணித் திட்டத்தைப்பற்றி இங்கே பேசினார்கள். சிறுவாணியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே பரம்பிக்குளம்-ஆளியாறு ஒப்பந்தம் ஏற்படும்பொழுது 1.3 டி.எம்.ஸி. தண்ணீர் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலம் 1.3 டி.எம்.ஸி. தண்ணீர் பெறுவதற்கு ஏற்கனவே ஒப்புக் கொண்டிருக்கிறது. ஒப்புக்கொள்ளப்பட்ட தண்ணீரை எப்படிப் பெறுகிறது என்பதற்கான திட்டங்கள் பற்றி நம்முடைய மாநில அரசுக்கும், கேரள அரசுக்கும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிகாரிகள், அதாவது செகரடரி லெவல் டிஸ்கஷன் முடிவடைந்திருக்கிறது. அவர்கள் சில கருத்துக்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நாமும் சில கருத்துக்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறோம். அந்தந்தக் கருத்துக்களை அந்த அதிகாரிகள் அந்த அந்த மாநில அரசுக்குச் சொல்லி மாநில அரசாங்கத்தினுடைய விளக்கங்களைக் கேட்டு தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இப்பொழுது நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எந்தவிதமான தகராறும் கிடையாது. சிறுவாணி தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்கனவே கேரள அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. கேரள முதல் அமைச்சரும் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதுபற்றி நடைமுறை சிக்கல், சிரமம் ஒன்றுமில்லை. எல்லா அதிகாரிகளோடும் பேச்சு வார்த்தை நடந்தது. அமைச்சர் அளவுக்கும் பேச்சு வார்த்தை





நடந்தது. எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம். கேரள முதல் அமைச்சர் வந்தபோது நமது முதல் அமைச்சரைப் பார்த்துச் சொன்னார். அமைச்சர் மட்டத்தில் பேசவேண்டுமென்று சொன்னார். அதைப்போல கேரள பொதுப்பணித் துறை அமைச்சர் திவாகரன் அவர்களிடமும் பேச்சுவார்த்தை நடந்தது. அதிகாரிகளிடையேயும் பேச்சுவார்த்தை நடந்தது. கேரள மாநில அமைச்சர் கோயா அவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப் பட்டது. இந்தப் பிரச்னைக்கு முடிவு காண எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களின் கருத்துக்களும் அதற்கு அனுகூலமாக நல்ல முறையில் அமைந்தால் நலமாக இருக்கும்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார் :</u> சிக்கல்களைத் தவிர்த்து நல்ல முடிவு காண்பதற்கு எடுக்கின்ற முயற்சிகளை வரவேற்கிறேன். இம் மாதிரியான கருத்துக்களை அடிக்கடி கூறுகிற காரணத்தினால் இந்தப் பிரச்னை சிக்கல் ஆகிவிடுகிறது என்பதற்காகத்தான் நான் இதைத் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், அண்மையிலே பத்திரிகையிலே வந்ததைப் படித்து எழுதிவைத்திருக்கிறேன். அதாவது, காவேரி நீர்ப் பிரச்னை. காவேரி நீர்ப் பிரச்னையைப் பொறுத்த வரையில் 1924-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மிகுதியாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். காவேரி தண்ணீர் பகிர்ந்து கொள்வதற்கு தாராளமாக தண்ணீர் இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். நமக்குத் தெரியும், எவ்வளவு தண்ணீர் நமக்குக் கிடைக்கப்போகிறது, ஹேமாவதி அணைக்கட்டு கட்டினால் நாம் எவ்வளவு பாதிக்கப் படுவோம் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இதைப்பற்றி அமைச்சர்களோடு கலந்து பேசவேண்டும். பொதுவாக காவேரித் தண்ணீர் நமக்கு எவ்வளவு கிடைக்கும், இன்னும் கிடைக்குமா, கிடைக்காதா என்ற ஐயப்பாட்டில் நாம் இருக்கவேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு போடப்பட்டிருக்கிறது. இன்ஜங்ஷன் கோரினோம். ஆனால் நமக்கு இன்ஜங்ஷன் கிடைக்கவில்லை. இப்பொழுது எல்லா டாகுமெண்ட்களும் ஆஜர் செய்தாகிவிட்டது என்று முன்பு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தக் கேஸை உடனடியாக பைசல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அந்தக் கேஸ் ஒரு பக்கம் இருந்தாலும் மத்திய அரசாங்கத்தோடு அதிகத் தொடர்பு கொண்டு, இதற்குத் துரிதமாக ஒரு தீர்வு காணவேண்டியதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். 1924-ம் ஆண்டு

ஒப்பந்தத்தின் அடிப்படையில் நமக்குச் சாதகமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த முடிவை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் எடுத்துக்கூறவேண்டிய விஷயம் பாண்டியாறு—புன்னப்புழா அணைத் திட்டம். இது சம்பந்தமாகவும் ஒரு சிக்கல் இருக்கிறது. அதையும் கேரள அரசாங்கத்தோடு பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும். இந்த அணையானது எங்கு கட்ட வேண்டும், கேரளப் பகுதியிலே கட்டவேண்டும், வரைபடங்களெல்லாம் முன்னதாக அவர்களுக்குக் கொடுக்கவேண்டும், அவர்களே தான் அதைக் கண்காணிப்போம் என்றெல்லாம் சொல்லிவருகிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, இம்மாதிரி சிக்கல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாண்டியாறு—புன்னப்புழா திட்டத்தைப்பற்றியும் நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். வரைபடங்கள் கொடுப்பது என்பதெல்லாம் இல்லை. பாண்டியாறு—புன்னப்புழா திட்டம் அப்பொழுது மின்சார உற்பத்தி திட்டமாக 1962-ம் ஆண்டில் ஒப்புக் கொள்ளப்பட்டது. நம்முடைய அரசாங்கத்தின் எஸ்டிமேட் கமிட்டி அதை நீர்ப்பாசனத் திட்டமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கருத்துத் தெரிவித்ததால், அந்தக் கருத்தின் அடிப்படையில் கேரள அரசாங்கத்தோடு இந்த அரசு தொடர்பு கொண்டு அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டோம். கேரள அரசாங்கம், ஏற்கனவே ஒப்பந்தம் ஆகிவிட்டது, இப்பொழுது அதை நீர்ப்பாசனத் திட்டமாக மாற்றுவதற்கு இல்லை என்று சொல்கிறது. இரு மாநிலங்களுக்கும் பாதகம் இல்லாத முறையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். அந்த அடிப்படையில் நம்முடைய அரசுக்கும், கேரள அரசுக்கும் கடிதப் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த அணையானது நம்முடைய பகுதியில் அமைந்தால், தண்ணீரை சாலியாற்றில் திருப்பி விட வேண்டும் என்ற கருத்தை அவர்கள் கூறிவருகிறார்கள். அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து நமக்குச் சாதகமான முறையில் இதைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்தபடியாக, ஒரு முக்கியமான விஷயம் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது கிழக்கு கடலோர சாலையானது அமைக்கப்படுவதற்கு நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையும் அதி விரைவிலே அமைத்துக்கொடுக்கவேண்டும். கிழக்கு கடலோரச் சாலையில் பல பகுதிகள் இன்று அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை யெல்லாம் ஒருங்கிணைத்து அதிவிரைவிலே செயலாற்றவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் நான் கூறுவதற்கு முற்படுவது என்ன வென்றால், பொதுவாக நமது பொதுப்பணித் துறை மானியத்தின் கீழ் என்னென்ன வேலைகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்த வேண்டுமோ அதைப்பற்றி அந்த ஜில்லாவில் இருக்கிற டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலோடு தொடர்பு கொண்டு, அவர்கள் என்னென்ன பரிந்துரைகள் செய்கிறார்கள் என்ற அடிப்படையில் கூடுமானவரையில் அதையெல்லாம் அமல் நடத்துவதற்கு இந்த அரசாங்கம் வழி வகை செய்யவேண்டும். ஏதோ அதிகாரிகள் சொல்கிற ஒரே அடிப்படையில் மாத்திரம் இந்தத் திட்டங்கள், வேலைகள் அமைந்தால் போதாது. மக்கள் பிரதிநிதிகள் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலில் இருக்கிறார்கள். சட்டசபை உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்து அந்தந்த ஜில்லாவிற்கு என்னென்ன தேவை என்று சொல்கிறார்களோ, அந்தக் காரியங்களைச் செய்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி இன்னொரு விஷயத்தை எடுத்துக்கூறவேண்டுமென்று கருதுகிறேன். தூத்துக்குடி துறைமுகத் திட்டமானது இன்னும் துரிதமாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டினை நான் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். 1972-ல் முடிவடைந்துவிடும் என்று முன்பு எடுத்துக் கூறினார்கள். ஆனால் துரிதமாக நடக்க வில்லை. இன்னும் அதை விரைவு படுத்தவேண்டும், அதிகமான அக்கறை நமது அரசாங்கம் செலுத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே சேதுசமுத்திர திட்டத்தைப்பற்றி பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் நான் விரிவாக எடுத்துக் கூறவேண்டிய தேவையில்லை. நமக்குத் தந்திருக்கிற அறிக்கையில் ஒரு பகுதியில் சேதுசமுத்திர ப்ராஜெக்டைப்பற்றி இம் மாதிரி கூறியிருக்கிறார்கள். "இத்திட்டத்தில் வளம் பெறக் கூடிய தன்மை பற்றி இறுதி ஆய்வுகள், இந்தக் காரியத்திற்காக 1965-ம்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 21

ஆண்டு மே திங்களில் இந்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் திரு. சி. வி. வெங்கடேஸ்வரன் அவர்களால் நடத்தப்பட்டன" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிற்பாடு உயர்திரு ஆர். நடராஜன், ஐ.ஏ.எஸ்., ப்ராஜக்ட் ஆபீசர், சேது சமுத்திர திட்டம் அவர்களும் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் இவ்விதமாகக் கூறப்பட்டிருக்கிறது :

"It has been indicated in the report that the Sethusamudram Project is economically viable and technically feasible".

அது எப்படி அமையவேண்டும், எந்த வழியில் அமையவேண்டும், அதிலே லாபகரமானது எது என்ற கருத்தையும் கூறியிருக்கிறார்கள். இராமேசுவரத்தோடு அலேன்மெண்டு அமையவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ரூ. 37.50 கோடியில் இது தீரும் என்று கணக்கு கூறியிருக்கிறார்கள். இதெல்லாம் மத்திய அரசின் ஆய்வில் இருக்கிறது என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 1968 ஜூனில் மத்திய அரசுக்கு சேதுசமுத்திர ப்ராஜக்ட் அறிக்கையானது தரப் பட்டது. அதற்குப் பிற்பாடு நவம்பர் 1971-ல் இதைப்பற்றிய மத்திய அரசு, டிரான்ஸ்போர்ட் விங்கிலிருந்து நம்மை ஏதோ கூடுதல் தகவல்கள் கேட்டதாக அறிகிறோம். இந்தத் திட்டத்தை அதி விரைவிலே உருவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்து மத்திய அரசோடு நாம் தொடர்பு கொண்டு வாதாடவேண்டும். ஏனென்றால் 1968-ல் பிராஜக்ட் ரிபோர்ட்டு கொடுக்கப்பட்டு, இப்பொழுது 1972-ல் இருக்கிறோம். நீண்ட காலமாக நித்திரையில் ஆழ்ந்து விட்டது மத்திய அரசின் கையில் இந்தத் திட்டம் என்ற குற்றச்சாட்டினை நான் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, தென்மாவட்டங்களில் இருப்பவர்களுக்கெல்லாம் இந்த சேதுசமுத்திர திட்டமும், அதே மாதிரி தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் மிகவும் இன்றியமையாதவை என்று கருது கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டங்களை விரைவிலே நிறைவேற்று வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக பாதுகாப்புக்கு இது மிக்வும் அத்தியாவசியமானது என்பதை நான் கூறிக்கொள்வ தற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பாகிஸ்தான் போர் வந்தபொழுது நமக்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தன என்பதை எல்லாம் நாம் எல்லோரும் அறிவோம். இலங்கையைச் சுற்றி கப்பல்களெல்லாம் வரவேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்த சேது சமுத்திரத் திட்டம் உருவாக்கப்பட்டிருந்தால், அது ஒரு நல்ல திட்ட மாக இருக்கும், தமிழகத்திற்கு அது ஒரு வரப்பிரசாதமாக அமையும்



1972 மார்ச் 21] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

என்று கூறிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக இந்தத் திட்டமானது அதி விரைவில் உருவாவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, "மைனர் போர்ட்ஸ்" சம்பந்தமாக ஒரு அறிக்கை யானது நமக்குத் தரப்பட்டிருக்கின்றது. அதில் கடலூர் போர்ட் நடந்து கொண்டிருக்கிறது என்ற விவரங்களெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் மற்ற சிறு சிறு துறைமுகங்களும் இருக்கின்றன. அதில் எந்த வித முன்னேற்றமும் காணவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக, குளச்சல் துறைமுகம் மேற்கு கடற்கரை ஓரத்தில் இருக்கிறது. அந்தத் துறைமுகத்திலிருந்து வெளியே போகும் "டன்னேஜ்" அதிகரித்துக் கொண்டிருப்பதாக இந்த அறிக்கை யிலிருந்து அறிகிறோம். 1963–64-ல் 14,455 டன்னாக இருந்தது; 1964–65-ல் 25,598 ஆக உயர்ந்திருக்கிறது. 1965–66-ல் 26,000 ஆக உயர்ந்திருக்கிறது. 1966–67-ல் 29,230 டன்னாக உயர்ந்திருக்கிறது. 1967–68-ல் 39,413 ஆக வளர்ந்திருக்கிறது. மேலும் இப்போது கழிந்த ஆண்டில் 41,705 டன்னாக ஏற்றுமதிப் பொருள்கள் எல்லாம் இருக்கின்றன என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்தில் தூத்துக்குடி துறைமுகத்துடன் இணைந்த திட்ட மாக அதைச் சேர்க்க வழிவகை செய்யவேண்டுமென்ற காரணத்துக் காக எடுத்துச் சொல்கிறேன். மேற்கு பகுதியில் வேறு எந்தத் துறைமுகமும் இல்லை. இதன் காரணமாக தூத்துக்குடிக்கு உதவி யாக இருக்கும். குறிப்பாக அந்தப் பகுதியில் சிறு "வெசல்கள்" (Vessels) வருகின்ற காரணத்தால் ஒரு "பியர்" (pier) அமைத்துத் தர வேண்டுமென்று கூறக் கடமைப்பட்டவனாக இருக் கிறேன். பொதுவாக பல நல்ல காரியங்கள் செய்வதற்குத் திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் குளச்சல் துறைமுகத்தைப் பொறுத்தவரை ஒன்றும் செய்யப்படவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம். பெருவழித் துறையைப் பொறுத்தவரை தேசிய நெடுஞ்சாலைப் பாலங்கள் திருத்தி அமைக் கப்பட்டு வருகின்றன. பல இடங்களில் பாலங்கள், கலிங்குகள் அமைப்பதில் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது. உதாரணமாக சென்னையிலிருந்து நாகர்கோயில் சென்றால் பல இடங்களில் பாலம் கட்டுவதற்குக் கால தாமதம் ஏற்பட்டு வருகிறது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் அமைக்கவேண்டுமென்ற நிபந்தனையுடன் கொடுக்க

வேண்டும். அப்படியானால் தான் இந்த மாதிரி வேலைகள் துரிதமாக நடக்கும். எந்த காண்டிராக்டர்கள் முடக்கமாக அல்லது சுணக்க மாக இருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதில் துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். இந்த இலாகாவில் பணியாற்றும் ஜூனியர் என்ஜினியர்கள் சம்பந்தமாகப் பலரும் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்குத் தமிழ்நாட்டில் கொடுக்கும் ஊதியம் ரூ. 420 ஆக இருக்கிறது. அது மிகக் குறைவாக இருக்கிறது என்ற குறையை அவர்கள் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஜூனியர் என்ஜினியர்கள் சம்பளம் கேரளாவில் ரூ. 475 ஆக இருக்கிறது; குஜராத்தில் ரூ. 500; மத்தியப் பிரதேசத்தில் ரூ. 550 ஆக இருக்கிறது; உத்தரப் பிரதேசத்தில் ரூ. 550; ஹரியானாவில் ரூ. 550; பஞ்சாபில் ரூ. 550 ஆக இருக்கிறது என்ற புள்ளிவிவரங்களை அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதை எல்லாம் நமது சம்பளக் கமிஷனால் ஏற்பட்ட விபரீதம் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதைத் திருத்தி அமைப்பதற்கு "ஒன் மேன் கமிஷன்" நியமனம் ஆகியிருக் கிறது. அதில் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல் "எமர்ஜென்சி" அடிப்படையில் ஜூனியர் என்ஜினியர்ஸ் வைத்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் "ரெகுல ரைசேஷன்" ஒழுங்குமுறைப் படுத்தவேண்டுமென்று தெரிவித்திருக் கிறார்கள். அது மட்டுமல்லாமல் தொடர்ந்து 5 வருடம் வேலையில் இருந்தவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்க வேண்டுமென்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாதிரியான காரியங்களை இலாகாவில் பணியாற்றும் பல ஜூனியர் என்ஜினியர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாதிரி வேலை செய்யும் சூபர்வை சர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்ற கருத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போதுள்ள விகிதாசார முறை "ரேஷியோ" பாதகமாக இருக்கிறது. டிப்ளோமா-ஹோல்டர்களுக்கும் கெஜட் பதிவு அந்தஸ்து வேண்டு மென்று கருத்து சொல்கிறார்கள். அதை இந்த அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும் என்பதற்காக இங்கு கூற விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். பி. டபிள்யூ. டி-யில் "லைன்மேன், வயர் மேன்" இவர்களுக்குப் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்ற கருத்தை அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உதாரணமாக 1960-க்கு





முன்பு எல்.டி.சி.க்கு 45—2—65 என்று இருந்தது. ஆனால் அவர் களுடைய சம்பளமானது 1—6—1960-ல் ரூ. 90—4—110—3—140 என்று உயர்ந்தது. வயர்மேன்களுக்கு 1960-க்கு முன்பு 45—2—65 என்று இருந்தது. அதை 80—2—100 என்று மாற்றி அமைத்திருக் கிறார்கள். இப்போது அந்த எழுத்தருக்கெல்லாம் திருத்தி அமைக்கப் பட்டிருப்பது எப்படியென்றால், 200—5—250—10—300 என்று மாற்றியமைத்திருக்கிறார்கள். ஆனால் லைன்மென், வயர்மென் சம்பளம் ரூ. 160—5—240 ஆக இருக்கிறது. ரூ. 80—2—100 என்பது ரூ. 160—5—240 ஆக அவர்களுக்கு உயர்த்தப்பட்டிருக் கிறது. அது மட்டுமல்லாமல் வேறு பல சங்கடங்களும் இருக்கிற தென்று சொல்கிறார்கள். அதாவது பென்ஷன் இல்லை; வேறு எந்த விதமான சலுகையும் இல்லை என்று ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார் கள். அதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். பொதுவாக விவசாயத்திற்கு பம்ப்செட் கனெக்ஷன் கிடைப்பதற்கு கால தாமதம் ஏற்படுகிறது. ஒரு வேளை இது எலக்ட்ரிசிடி டிபார்ட்மெண்டு குறையா அல்லது மற்ற இலாகா குறையா என்பதை ஆராய்ந்து விவசாயத்திற்கு கனெக்ஷன் கொடுப் பதில் எந்தவித கஷ்டமும் இல்லாமல் துரித நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன். பொதுவாக இந்த இலாகாவிலே பல காரியங்கள் இருந்து கொண்டிருக்கிறது. வேலை எல்லாம் துரிதமாக நடக்கவில்லை. எஸ்டிமேட் தயார் செய்கிறார்கள். ஆனால் குறித்த காலத்தில் வேலைகள் முடிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக சில பகுதிகளில் எஸ்டிமேட் போட்ட நல்ல வேலைகளைத் துவக்காமல் பட்ஜெட்டில் போட்டிருந் தாலும் காலாகாலத்தில் ஒதுக்கிய பணம் செலவழிக்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டு பரவலாகப் பல பகுதிகளிலும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரியாகக் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கும் நேரத்தில் சமதர்ம அடிப்படையில் எல்லாப் பகுதி களுக்கும் பகிர்ந்தளிக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. ஆனால் ஒரு சில பகுதிகள் நல்ல பகுதிகளாகக் கருதியும், மற்ற சில வற்றை ஒதுக்கப்பட்ட பகுதியாகக் கருதுவது நியாயமல்ல. உதாரண மாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய சொந்தத் தொகுதியில் எந்த வேலையும் நான் சட்ட சபை உறுப்பினராக வந்த பிறகு இந்த அரசாங்கத்தால் செய்யப் படவில்லை; வேண்டுமென்றே திட்டமிட்டு இப்படிச் செய்யப்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 21

படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்வதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அங்கு பல பாலங்கள் அமைக்கவேண்டும். முன்பு டி.டி.சி.யில் தீர்மானம் நிறைவேற்றினோம். சென்று பார்த்தால் அந்த வேலை தொடங்கப்படவில்லை. அதை நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். என்னுடைய தொகுதியில், பொதுவாக அந்த ஜில்லாவில், எந்தவித வேலையும் நடைபெறவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் பல காரியங்கள் இருக்கின்றன. காலம் அதிகம் எடுத்து அதைப் பற்றி நீண்ட நேரம் பேசவேண்டுமென்று நினைக்கவில்லை. பொதுவாக இந்த இலாகாவில் வேகம் போதாது. பல முன்னேற்றங்கள் தேவை. துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு காலாகாலத்தில் வேலைகளை முடித்தால் தான் நல்ல முறையில் நடக்கும் என்ற கருத்தைக் கூறி, மேற்கூறிய கருத்துக்களை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுவாகக் காவேரித் தண்ணீரைக் கொண்டுவருவதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்படியானால் தமிழ் நாட்டில் இருக்கின்ற அதிலும் குறிப்பாகத் தஞ்சாவூரில் இருக்கின்ற விவசாயிகள் மகிழ்வார்கள் என்று கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, பொதுப்பணித்துறை இலாகா மூலமாக ரூ. 55,79,97,900-க்கான இந்த மானியக் கோரிக்கைகளுக்கு இந்த மன்ற உறுப்பினர்களின் அனுமதி கோரப்பட்டது. மொத்தம் 47 பேர் இந்த மானியத்தின் மீது இன்றைக்குப் பேசி இருக்கிறார்கள். நம் உறுப்பினர் மாண்புமிகு திரு. செழியன் அவர்கள் இதற்கு இரண்டு நாள் ஒதுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்த இலாகா மீது அக்கறை காட்டினார் என்று எண்ணுகிறேன். உறுப்பினர்கள் பேசியதில் அநேகமாகத் தங்கள் தொகுதியில் செய்யப்பட வேண்டிய காரியங்களை பற்றி பொதுவாகப் பேசினார்கள். நெடுஞ்சாலைத் துறை மூலம் செய்யப்பட வேண்டிய பல காரியங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். காலையிலும் மாலையிலும் சேர்த்து 47 பேர் பேசியிருக்கிறார்கள். அத்தனைக்கும் என்னால் பதில் சொல்ல முடியுமா என்று அஞ்சுகிறேன். இருந்தாலும் என்னால் முடிந்த அளவிற்கு அவர்கள் கருத்துக்குப் பதில் அளிக்க முற்படுகிறேன்.

முதலில் கொல்லிமலையில் அணைக்கட்டு கட்டவேண்டுமென்ற திட்டம் பற்றிப் பேசப்பட்டது ; திரு. முத்துச்செல்வன் கொல்லிமலை பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அது மாண்புமிகு உறுப்பினர் அழகமுத்து அவர்கள் தொகுதியில் வருகிறது. அரசாங்கம் ரூ. 125.5 லட்சத்திற்கு திட்டம் போட்டு மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி



1972 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

யிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, திரு. பொன். சொக்கலிங்கம் அவர்கள் வீராணம் ஏரி பற்றிச் சொன்னார்கள். தூர் எடுக்கும் பணி சிரமமானதாகத் தெரிகிறது. இருப்பினும் "லோயர் கொலரான் சிஸ்டத்தின்கீழ் நீர்ப்பாசனப் பணிகளுக்கான வேலைகள் தீவிரமாகப் பரிசீலிக்கப் பட்டு வருகின்றன. விரைவில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. மலைக்கண்ணன் அவர்கள் பரமக்குடி தாலூகாவில் உள்ள கீழ்நாட்டார்கால் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். 15.2 லட்சம் ரூபாய்க்கான இத்திட்டம் எஸ்.எம்.ஐ.பி.-ல் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. சிவப்பிரகாசம் அவர்கள் கடானா—ராம நதித் திட்டம் எப்போது முடியும் என்று கேட்டார்கள். 1972-லேயே அதன் பலனைப் பெற முடியும். 1973-ல் இத்திட்டம் முடிவடைந்து விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் வைகை நதியினுடைய தண்ணீரை கிருதமால் நதியில் திருப்பிவிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். வைகை திட்டத்தின் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் பாயக்கூடிய அளவில் அதை மாடர்னைசேஷன் பண்ணிய பிறகுதான் கிருதமால் நதியில் தண்ணீர் திருப்பி விடுவதற்கு வாய்ப்பு உண்டா என்பதைப்பற்றி பரிசீலிக்க முடியும் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள்.

அருப்புக்கோட்டைத் தாலூகா, குள்ளூர் சந்தை குளத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, 25 லட்சம் ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. கோதண்டராமையா அவர்கள் தளவாய் செருவார் டாங்க் ரெஸ்டரேஷன் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஹோசூர் தாலூகாவுக்கு அது எவ்வளவு முக்கியமானது என்பதை நானும் உணருகிறேன். அதன் காரணமாக ரூ. 4.65 லட்சத்தில் தயாரிக்கப் பட்டுள்ள திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோதண்டராமையா அவர்கள் கேளவரப்பள்ளி கிராமத்திற்கு அருகில் பொன்னியாறு நதியில் ஒரு ரிசர்வாயர் கட்டுவதைப் பற்றி தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தினுல் 4,040 ஏக்கராக்களுக்குமேல் பயனடையும் என்கிற காரணத்தால் 158 லட்சம் ரூபாயில் தயாரிக்கப்பட்ட திட்டம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோதண்டராமையா அவர்கள் தொட்டஹல்லாத் திட்டம் பற்றியும் சொன்னுர்கள். காஸ்ட் ரேஷியோ போட்டுப்பார்த்தால் இந்தத் திட்டம் அவ்வளவு பயனுடையதாக இருக்காது என்ருலும் சென்ட்ரல் வாட்டர் அண்டு பவர் கமிஷனே இதில் அதிக அக்கறை உடையதாக இருக்கின்ற காரணத்தினுல் நமது அரசாங்கமும் இந்தத் திட்டத்தினுல் ஏற்படும் பயனே அதிகப்படுத்துவதின் மூலம் இந்தத் திட்டத்தை எவ்வாறு லாபகரமானதாக்கலாம் என்பதைத் தீவிரமாகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் சிறுவாணித் திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். சிறுவாணியிலிருந்து கோயம்புத்தூருக்கு அதிகமான தண்ணீர் கொண்டுவரவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய விருப்பமும். பிராஜக்ட் ரிப்போர்ட்டிலேயே 1.3 டி.எம்.சி. நமக்குத் தரப்பட வேண்டும் என்பது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுபற்றி நமது அரசு கேரள அரசாங்கத்துடன் பேசி வேண்டிய நடவடிக்கைகளே எடுத்துக்கொள்ள முயன்று வருகிறது.

திரு. கோவை செழியன் அவர்கள் பேசும்பொழுது இதுபோன்ற நதித்திட்டங்கள் சம்பந்தமாக அண்டை மாநில அரசோடு பேசி, ஒப்பந்தம் செய்து கொள்வது ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தான் இருக்கிருர். இத்துறைப் பொறியாளர்கள் இல்லாத காரணத்தினுல் குறை ஏற்படுகிறது என்ருர். அது சரியல்ல. இது போன்ற கூட்டங்களில் தலைமைப் பொறியாளர் (பி.ஏ.பி.), தலைமைப் பொறியாளர் (பப்ளிக் ஹெல்த்), அரசுத் தலைமைச் செயலாளர், பொதுத் துறைச் செயலாளர், கவர்ன்மென்ட் பிளீடர் ஆகிய எல்லோரும் சேர்ந்து இருந்து பேசி ஒப்பந்தம் செய்துகொள்கிருர்கள்.

அடுத்து, திரு. ராமன் அவர்கள் பேசும்போது பூவரசன்குப்பம், ஆண்டிப்பாளையம் ஆகிய கிராமங்களில் மலட்டாறு கரைகள் வெள்ளத்தடுப்பு நடவடிக்கையாகச் செப்பனிடப்படவேண்டுமென்று





கேட்டுக்கொண்டார். இதற்காகவும் 1.16 லட்சத்தில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 1972–73 நடப்பாண்டில் இத்திட்டம் செயல்முறைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர் வளவனூர் ஏரியைப் பற்றியும் குறிப்பிட்டார். இந்த ஏரிக்கு ரூ. 17 லட்சத்தில் டி.சி.ஆர். ஸ்கீம் பரிசீலனையில் இருந்து வருகிறது. பிதிரப்பட்டு ஏரிக்கு தளவனூரில் அணை கட்டி, சர்பிளஸ் வாட்டரை விடவேண்டும் என்கிற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அணைக் கட்டுத் திட்டத்திற்காக ரூ. 1.49 லட்சத்தில் ஒரு திட்டம் தலைமைப் பொறியாளரால் அங்கீகரிக்கப்படும் நிலையில் இருக்கிறது.

திரு. செல்லையா அவர்கள் குறிப்பிட்டபடி வில்லியனூர் அணைக் கட்டு, அம்புலியூர் அணைக்கட்டு, அக்கினியார் அணைக்கட்டு ஆகியவைகளும் கூட இந்த அரசினுல் நல்ல முறையில் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. வில்லியனூர் அணைக்கட்டிற்காக ரூ. 3.6 லட்சத்தில் ஒரு திட்டமும், அம்புலியார் அணைக்கட்டுத் திட்டத்திற்காக ரூ. 6.25 லட்சத்தில் ஒரு திட்டமும், அக்கினியார் அணைக்கட்டுத் திட்டத்திற்காக ரூ. 23 லட்சத்தில் ஒரு திட்டமும் போடப்பட்டு, அவைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்தில் சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்று பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். சில புதுச் சாலைத் திட்டங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிருர்கள். அவர்கள் சொன்ன கருத்தையும் மனதில் கொண்டு, அவையாவும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக காட்பாடி, பொன்னியாறு பாலம், நாப்பாளம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலம் ஆகியவை பற்றியெல்லாம் இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, முள்ளியாறு வடிகால் திட்டத்தைப்பற்றிச் சொன்னுர்கள். இதற்காக 20 லட்சம் ரூபாயில் ஒரு திட்டம் ஸ்தல அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. சீக்கிரத்திலேயே எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல உறுப்பினர்கள் சொல்லிய தனித்தனித் திட்டங்களைத் தவிர, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை சில பொதுவானத் திட்டங்களைப் பற்றிய விளக்கங்கள் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கங்கை—காவிரி இணைப்புத் திட்டத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் அவரவர்களுடையக் கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த கங்கை—காவிரி இணைப்புத் திட்டத்தைப்பற்றி பட்ஜெட் உரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. கங்கை—காவிரித் திட்டத்தைப் பற்றி பரிசீலிப்பதற்கு யு.என்.டி.பி. அஃபிஷியல் டீம் வந்து இது பற்றி டிஸ்கஸ் செய்தார்கள். அது அஃபிஷியலாக அல்ல; இன்ஃபார்மலாக விவாதித்தார்கள். அவர்கள் சில விளக்கங்களையும் கேட்டார்கள். கங்கை—காவிரி இணைப்புத் திட்டம் ஒரு பிரமாண்டமானத் திட்டம். இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது ஏற்படக்கூடிய சிரமங்களை எப்படி எப்படி ஏற்றுக்கொள்வீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். அதுபற்றி பின்னால் விரிவாகப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறோம்.

அடுத்து கேட்கப்பட்டிருக்கக்கூடிய குறிப்பு, இந்தத் தண்ணீரை தமிழ்நாட்டிலே பரவலாகப் பாசனத்திற்கு உபயோகப்படுத்துவார்கள். ஆனால் "வால்யூ மெட்ரிக் சப்ளை ஆஃப் வாட்டர்" என்ற முறையில் அளந்து விடுவதுதான் சாத்தியமாக இருக்கும் என்று கருதப்படுகிறது; விவசாயிகள் அதை ஏற்றுக்கொள்வார்களா என்று கேட்டார்கள். தமிழ்நாட்டு விவசாயிகள் பழங்காலம் தொட்டே பாசனத்தைப் பரவலாகப்பெற்று அனுபவித்து இருக்கிறார்கள். அவர்கள் "வால்யூ மெட்ரிக் சப்ளை ஆஃப் வாட்டர்" என்ற அடிப்படையில் விவசாயம் செய்வது கிடையாது. தஞ்சாவூரைப் பொறுத்தவரையில் விவசாயிகள் இப்படி மீட்டர் வைத்து கணக்குப் பார்த்து தண்ணீரைப் பயன்படுத்துவது சிரமமாகவும், கஷ்டமாகவும் இருக்கும் என்று சொன்னோம். ஆனால் புதிதாகப் பாசனம் பெறக்கூடிய இடங்களில் இந்த முறையை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்து இருக்கிறோம்.

அதுமாத்திரம் அல்ல. எங்கள் திட்டத்தில் நாங்கள் சொல்லியது கங்கை—காவேரி இணைப்புத் திட்டத்தை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். அதை இரு கட்டமாகக் கூடச் செயலாற்றலாம். முதற்படியாக, கிருஷ்ணா—கோதாவரி—காவேரி இணைப்புத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கிறோம்.

கங்கை—காவேரி இணைப்புத் திட்டத்தில் கூட இரண்டு இடங்களில் குறிப்பாக பாட்னாவுக்கு அருகிலும், கிருஷ்ணாவுக்கு அருகிலும் பம்பிங் ஸ்டேஷன் வைத்து தண்ணீரை மேலே ஏற்றிக்கொண்டுவர வேண்டிய சங்கடம் இருக்கிறது என்றார்கள். காவேரி—கிருஷ்ணா—கோதாவரி





இணைப்பு என்கிறபோது இதுபோல பம்பிங் செய்யாமல் கொண்டு வரக்கூடிய சாத்தியக் கூறு இருக்கிறது என்பதாக நம்முடைய பொறியாளர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னமும் சொல்லப்போனால் கிருஷ்ணா—கோதாவரி—காவேரி இணைப்பை தாம்பிரபரணி அளவில் கூடக் கொண்டுபோகவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறோம். அப்போதுதான் பரவலாக எல்லா மாவட்டங்களும் பயன் அடையும். நம் அரசைப் பொறுத்த வரையில் தெளிவாக அந்தத் திட்டத்தை வரையறுத்து நம் கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறோம். அந்தத் திட்டம் இப்போது மத்திய அரசாங்கத்தின் அளவில் முடிவு செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது.

அடுத்து, மைசூர் மாநிலத்தைப்பற்றியும், கேரளாவைப் பற்றியும் பேசினார்கள். மைசூர் மாநிலத்திற்கும் நமக்கும் காவேரி நதி நீர் பங்கீடு குறித்து ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். அதுபற்றி நம்முடைய அரசு பல தடவைகள் மைசூர் மாநிலத்தவர்களுடன் பேசியிருக்கிறது. கடைசியாக மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் அதுபற்றி பேச்சு வார்த்தைகள் முடியவில்லை என்று அறிவித்த பிறகுதான் நமது அரசு எல்லாக் கட்சித்தலைவர்களையும் கலந்து பேசிற்று. பல கட்சித் தலைவர்களின் ஒருமித்த கருத்திற்கு இணங்கத்தான் அந்த வழக்கை நாம் சுப்ரீம்கோர்ட்டுக்கு எடுத்துச்சென்றிருக்கிறோம். அதுபற்றி வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால் மேலும் நான் அதுபற்றிப் பேச விரும்பவில்லை. ஓரிரு மாதங்களில் அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் எடுத்துக்கொள்ளப்படலாம் என்பதாக அங்கேயுள்ள நமது வழக்குரைஞர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

கேரள மாநிலத்தில் மேற்காக ஓடுகின்ற நதித்தண்ணீரை எல்லாம் இந்தப் பக்கம் திருப்பிவிட்டால் வரண்ட இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் பயன் அடையுமே என்கிற கருத்தை உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதுபற்றி தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கேரள மாநில அமைச்சர்களோடும் அதுப்பற்றி நாம் தொடர்பு கொண்டுதான் இருக்கிறோம். முடிந்த அளவுக்கு அந்தத் துறையில் நமது அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவேரி டெல்டா பகுதி சீரமைப்புத் திட்டத்தைப்பற்றிப் பேசினார்கள். அந்தத் திட்டம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லையே, காலதாமதம் ஆகிறதே என்கிற கவலையைத் தெரிவித்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1972 மார்ச் 21

தார்கள். காவேரி டெல்டா பகுதி சீரமைப்புத் திட்டத்திற்காக நாம் 49 கோடி ரூபாயில் நல்ல முறையில் பரிசீலித்து ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அதை உலக பாங்குக்கும் உதவி கோரி அனுப்பி வைத்தோம். உலக பாங்க் அதிகாரிகள் வந்தார்கள். இதைப் பரிசீலித்து இது ஏற்றுக்கொள்ளக் கூடிய திட்டம் தான் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்தத்திட்டத்திற்கு அனுமதி கொடுக்கிற அதிகாரம் மத்திய அரசாங்கத்தினிடத்தில்தான் இருக்கிறது. இதுவரை இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தில் இருந்து நமக்கு க்ளியரன்ஸ் கிடைக்கவில்லை.

DR. H. V. HANDE : What was the reason given by the Central Government for not giving clearance ? Have they given any specific reason or it is because of administrative delay ? If there had been objections, have the objections been answered by the State Government ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Unfortunately the Government of India have not given any reasons.

DR. H. V. HANDE : What exactly have the Government of India stated ? They must have written some letter.

MR. SPEAKER : When they have not given any reason, how can the Hon. Minister answer ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : We have addressed the Government of India for clearance of this project but unfortunately they have not given any reason why this project has not been cleared.

MR. SPEAKER : The answer is specific.

DR. H. V. HANDE : They must have replied in a letter.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : They have replied but they have not given any reason.

DR. H. V. HANDE : I want a clarification. The Hon. Minister is himself not sure. He is not clear of the subject. Have the Central Government not given any reasons at all in their letter.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I shall get the information now.



1972 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

அடுத்து சில உறுப்பினர்கள் எல்லா ஏரி, குளங்களையும் பொதுப் பணித்துறையே, மராமத்து செய்யவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். கிட்டத்தட்ட முப்பத்தையாயிரம், நாற்பதாயிரம் ஏரிகள் இருக்கின்றன. இருநூறு ஏக்கராக்கள் பாசன வசதி அளிக்கிற ஏரிகள் எல்லாம் பஞ்சாயத்துகளாலேயே மராமத்து செய்யப்படுகின்றன. எல்லா ஏரி குளங்களையும் மராமத்து செய்ய பொதுப்பணித்துறை இலாக்காவே ஏற்றுக்கொள்ளலாமா என்பது பற்றி 1971-ல் விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டது. அப்போது இருநூறு ஏக்கராவுக்கு உள்பட்ட பாசன வசதி அளிக்கும் ஏரிகளை, குளங்களை பஞ்சாயத்துக்கள் பராமரிப்பதுதான் உடனுக்குடன் வேலையைச் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்ற கருத்து வற்புறுத்தப்பட்டதால் அவை அவர்களிடமே விட்டுவைக்க அரசு முடிவு செய்தது.

இப்போது இருக்கிற நிலைமை—பல கிராமங்களில் குடிமராமத்து என்று இருக்கிறது. ஆனால், குடிமராமத்து செயல்படுவதாகச் சொல்ல முடியாது. ஆகவே நாங்கள் என்ன கருதுகிறோம் என்றால் குடிமராமத்துக்காக விவசாயிகள் இன்றையதினம் கொடுக்கிற காண்ட்ரிப்யூஷனை ஏதாவது ஒரு முறையில் வசூலித்து, அரசாங்கமும் தன்னுடைய காண்ட்ரிப்யூஷனைப்போட்டு பொதுப்பணித்துறை இலாக்கா மூலமாகவே இந்த மராமத்துப்பணிகளை எல்லாம் நிறைவேற்ற ஏற்பாடு செய்யலாமா என்பதுதான். இதுபற்றி அரசாங்கம் யோசித்து சீக்கிரத்தில் இறுதி முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு பத்து லட்சம் ரூபாயில் "ஏ க்ளாஸ் சானல் சிஸ்டம்—இன்னும் இரண்டு பஞ்சாயத்துகள் வழியாகப் போகிற கால்வாய்கள் மாரமத்துத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அந்த வட்டார விவசாய மக்கள் பெரிதும் அதை வரவேற்று இருக்கிறார்கள்.

தேவிப்பட்டணம்–நையினார் கோயில் சாலையைப்பற்றிச் சொன்னார்கள். அது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அதை ஃபேஸ்டு ப்ரோக்கிராமாக எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில உறுப்பினர்கள் காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றிவிட்டார்கள். கழக ஆட்சியில் என்ன திட்டங்கள் புதியதாக எடுத்து நிறைவேற்றி வருகிறார்கள் என்று தெரிவித்தார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1972 மார்ச் 21

விரும்புகிறேன். இந்த அரசு 13 திட்டங்களை—குறிப்பாக பாலாறு பொரந்தலாறு திட்டம் ரூ. 281.60 லட்சத்தில், பரப்பலாறு திட்டம் ரூ. 39.12 லட்சத்தில், சின்னாறு திட்டம் ரூ. 118.25 லட்சத்தில், தண்டரை அணைக்கட்டுத் திட்டம் ரூ. 51.81 லட்சத்தில், நந்தன் வாய்க்கால்களைப் புதுப்பித்தல் திட்டம் ரூ. 48 லட்சத்தில், கறுப்பா நதித்திட்டம் ரூ. 154 லட்சத்தில், பொன்னனியாறு திட்டம் ரூ. 50.70 லட்சத்தில், பிளவுக்கல் திட்டம் ரூ. 83.16 லட்சத்தில் நிறைவேற்ற அனுமதி வழங்கியிருக்கிறது. இவை எல்லாம் புதிய திட்டங்கள் இல்லாமல் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் யோசிக்க வேண்டும்.

அடுத்து கிழக்குக் கடற்கரைச் சாலையைப்பற்றிச் சொன்னார்கள். இது 1965-ம் ஆண்டிலேயே சர்வே செய்யப்பட்டு 16 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டம் போட்டு அதைச் சீரமைக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்திய அரசாங்கம் அந்தத் தொகையைக் குறைக்க வேண்டும் என்றதால் மீண்டும் அது பரிசீலிக்கபபட்டு 7.18 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் அனுப்பப்பட்டது. அதுவும் நிறைவேற்றப்படவில்லை. அதையும் குறைக்க வேண்டும் என்றார்கள்.

மறுபடியும் குறைக்க வேண்டும் என்று 1969-ல் திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் சொல்லி, நாம் $6\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டோம். ஆனால் திட்டம் போட்டுக்கொடுத்ததை ஏற்றுக்கொண்டு பணம் கொடுத்தார்களா என்றால் இல்லை. இப்போது ஈஸ்ட் கோஸ்ட் ரோடுக்குக் கொடுக்கின்ற தொகையை கிராண்டாக கொடுப்பதற்கு இல்லை. செண்ட் பர்சன்டையும் லோனாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். சரி, கடனாகக் கொடுத்தாலும் பரவாயில்லை, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தச் சாலை விஷயத்தில் மிகவும் அக்கறையாக இருக்கிறார்கள். நாம் கடன் வாங்கியாவது சாலை வசதி செய்து கொடுத்து விடலாம் என்று எண்ணி கேட்டோம். இப்பொழுது 2 கோடியே 65 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக 27—10—1971-ல் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சாலையின் மொத்த நீளம் 480 மைல் ஆகும். நாங்கள் ஏன் வற்புறுத்துகிறோம் என்றால் இந்தச் சாலை மிகமிக முக்கியமானது. பல துறைமுகங்களை இணைக்கக்கூடியது. மீனவர்களுக்கு நல்ல போக்குவரத்து வசதியை உண்டாக்கித் தரக்கூடியது. இந்த 480 மைல் சாலையையும் நேஷனல் ஹைவேஸ் மூலமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னோம். மத்திய அரசு இதைச் செய்தால் நமக்குப் பேருதவியாக இருக்கும். இன்றைக்கு நமக்கு 2.65



1972 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கோடி ரூபாயை கடனாகத் தந்திருக்கிறார்களே தவிர மானியமாக அல்ல. அந்தச் சாலையை நேஷனல் ஹைவேஸாக ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த ஆண்டு கொஞ்சம் அதிகமாக பணம் கிட்டத்திட்ட 8 கோடி ரூபாய் வரையில் செலவிட்டிருக்கிறோம். திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும், இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடு, "ஸ்டேடஜிக் அண்டு டிஃபென்ஸ் இம்பார்ட்டன்ஸ்" என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசின் மூலமாக 15 சாலைகளை நேஷனல் ஹைவேஸாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தோம். ஆனால் பத்திரிகை வாயிலாக ஒரு செய்தி வந்திருக்கிறது, நேரடியாக அல்ல. அதுவும் ஒரே ஒரு சாலையை—அதாவது பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடி வரையிலுள்ள சாலையை எடுத்துக்கொள்வதாக பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. இந்த அளவிற்குத்தான் நமக்கு நேஷனல் ஹைவேஸில் லாபம் கிடைத்திருக்கிறது. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்லியதுபோல் ஈஸ்ட் கோஸ்ட் ரோடு, பாம்பன் பிரிட்ஜ், சேதுசமுத்திரத் திட்டம் எல்லாம் மிகமிக முக்கியமானவை. இவையெல்லாம் முக்கியமான திட்டங்களாகும். இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மத்திய அரசாங்கத்திலிருந்து அனுமதி கிடைக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் ஓர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மென்ட்டைப் பற்றிச் சொன்னார்கள். நாம் ஒரு குறிப்பிட்டவகையில் "ப்ரொவின்சியலைசேஷன்" செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டோம். அவர்களில் "டிஃபரென்ட் கேட்டிகரிஸ்" இருக்கின்றன. "அன்-க்வாலிஃபைடு" ஆட்கள் இருக்கிறார்கள். "ஓவர்-ஏஜ்டு" ஆட்கள் இருக்கிறார்கள். எப்படி இவர்களையெல்லாம் ரெகுலரைஸ் பண்ணுவது என்று கேட்டார்கள். மேலும், ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும்போது எம்ப்ளாய்-மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வழிவகை செய்திருக்கிறோம். வயது அதிகமாக இருந்தால்—ஓவர்-ஏஜ்டு-ஆக இருந்தால் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது.

அவர்கள் எல்லாம் வெவ்வேறு இனங்களில் வேலை செய்கிறார்கள் என்று தலைமைப் பொறியாளர் கூறியிருக்கிறார். அவர்களில் எம்ப்-ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலமாக எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும்கூட அவர்களை எப்படி ப்ரொவின்சியலைசேஷன் செய்யலாம். ஓவர் ஏஜாக இருந்தால் எப்படிச்செய்யலாம், வெவ்வேறு இனங்களில் இருந்தால் எப்படிச் செய்யலாம் என்பது குறித்து

ஆலோசனைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் அவர்களுடைய சம்பள விகிதத்தைப் பொறுத்தவரையில் அந்த விஷயம் இப்போது நிதி இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது. அதுவும் விரைவாக வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 22 ஆயிரம் "கேங் மஸ்தூரர்" இருக்கிறார்கள். இவர்களுடைய பிரச்சினை மனிதாபிமான பிரச்சினை என்பதை ஒத்துக் கொள்கிறோம். இவர்களுக்கு "ஈக்விலண்ட் போஸ்ட்" இல்லை யென்ற காரணத்தால் இவர்களுக்குச் சம்பள விகிதம் நிர்ணயிக்க வில்லை. அவர்கள் எல்லோரும் தினக் கூலிகள்தான். அதாவது என். எம்: ஆர். —தினக் கூலிகள். அவர்களுக்கு நிரந்தரம் கிடையாது. இவர்களுடைய பிரச்சினையை எந்த முறையில் அணுகலாம் என்பது குறித்து அதிகாரிகள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். நேற்றுக்கூட அவர்கள் சார்பில் திரு. காட்டூர் கோபால், திரு. பராங்குசம் அவர்களும் நேரில் சந்தித்து அவர்களுடைய குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். எந்தச் சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அதை அடிப்படையாக வைத்து அவர்களை ரெகுலரைஸ் செய்யலாம் என்கிற ஒரு கருத்து பரிசீலிக்கப்பட இருக்கிறது.

அடுத்தபடியாக, ஜூனியர் எஞ்சினியர்ஸ் பற்றிச் சொன்னார்கள். அந்தக் காலத்தில் அவர்களுக்காக ஒரு உதவியும் செய்யாதவர்கள் கூட, "பே கமிஷன்" சம்பள உயர்வு கொடுத்த பிறகு, அவர்களுக்காக பரிந்து பேசுகிறார்கள். ஜூனியர் என்ஜினியர்ஸ் அசோசியேஷன் சார்பாக என்னைச் சந்தித்தார்கள். இப்போது இருக்கிற "பே ஸ்கேல்" எல்லாம் சரியாக அமையவில்லை. நான்கு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் ஆனால், "ஆட்டோமேடிக் ப்ரமோஷன்" வேண்டும் என்றார்கள். அந்தமாதிரி எங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எந்த இலாகாவிலும் ஆட்டோமேடிக் ப்ரோமோஷன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான்கு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் இருந்தால் ஆட்டோமேடிக் ப்ரமோஷன் இருப்பதாக எனக்குத் தெரிந்தவரையில் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. சம்பளப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் கூறுவதுபோல், இருக்கின்ற குறைபாடுகளை கவனிக்க "ஒன் மேன் கமிஷனுக்கு" அனுப்ப வேண்டும் என்பதை நாங்கள் ஏற்கனவே அதைச் செய்திருக்கிறோம். இந்தப் பிரச்னையை ஒன் மேன் கமிஷனுக்கு அனுப்பியிருக்கிறோம். அந்தக் கமிஷன் அவர்களையெல்லாம் கூப்பிட்டுக் கேட்டு விரைவில் தக்க முடிவுக்கு





வரும். அவர்களும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஜூனியர் எஞ்சினியர்ஸ் பொறுத்தவரையில் இந்த விளக்கத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் காலையில் பேசும் போது காரசாரமாகப் பேசினார்கள். மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவருக்கு நல்ல முறையில் விளக்கம் தந்தார்கள். நான் இடை வேளையில் அவர் குறிப்பிட்ட அந்த ஜி.ஓ.வைப் படித்துப் பார்த்தேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிந்துதான் குற்றச்சாட்டு சொல்லுகிறாரோ, அனாவசியமாக குற்றம் சாட்ட மாட்டாரே, ஆடிட் அப்ஜெக்ஷன் வந்திருக்கிறதா, இல்லையா என்றெல்லாம் நான்கூட பயந்து விட்டேன். அதிகாரிகளைக் கேட்டதில் எந்தவிதமான ஆடிட் அப்ஜெக்ஷனும் வரவில்லை என்று சொன்னார்கள்.

முதலாவதாக, ஏ.ஜி. ஆபிசிலிருந்து சூப்பரின்டெண்டெண்ட் அளவுக்கு அதிகாரிகள் வருகிறார்கள். அவர்கள் பரிசீலிக்கிறார்கள்.. பின்னர் இன்ஸ்பெக்ஷன் நோட்ஸ் தயார் செய்கிறார்கள். அந்த நோட்ஸை ஏ.ஜி. ஆபிசிலிருந்து எக்சிக்யூடிவ் என்ஜினியருக்கு அனுப்புவார்கள். அவர் விளக்கம் தருவார். அவருடைய விளக்கத்தை ஏ.ஜி. ஆபீஸ் ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதைக் குறித்து சீஃப் என்ஜீனியரிடம் விளக்கம் கேட்பார்கள். சீஃப் என்ஜினியர் விளக்கம் தருவார். அவருடைய விளக்கமும் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் தான் ஏ.ஜி. ஆபிசிலிருந்து "ஆடிட் அப்ஜெக்ஷன்" என்று எழுதி அரசுக்கு அனுப்புவார்கள். இப்பொழுது ஏதோ இன்ஸ்பெக்ஷன் நோட்ஸ் வந்திருக்கிறது. அதுவும் அவருக்கு யார் கொடுத்தது என்று தெரியாது. அதை வைத்துக்கொண்டு, ஆடிட் அப்ஜெக்ஷன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். என்னிடம் கேட்டிருந்தால்கூட விவரத்தைத் தந்திருப்பேன். (சிரிப்பு) அவர் சொல்வதெல்லாம் என்ன? வேலைகள் சரியாக நடக்க வேண்டும். தவறுகள் நடைபெறக் கூடாது என்பதுதான். தவறு எங்கேயாவது நடந்தால் உடனே அவர் எனக்குப் போன் செய்தால்கூட நடவடிக்கை எடுத்துக் கொள்வேன். அவர் எனக்குப் போன் செய்திருந்தால்கூட சரியான விளக்கம் தந்திருப்பேன். அவர் விளக்கம் கேட்டிருந்தால், அப்படி விளக்கம் வேண்டும் என்று சொல்லியிருந்தால் தந்திருப்பேன். அப்படிச் செய்திருந்தால் நல்லது.

[1972 மார்ச் 21

டாக்டர் எச். வி. ஹாண்டே: இன்ஸ்பெக்ஷன் நோட்ஸ் யார் கொடுத்தார்கள்? எந்த எஞ்சினியருக்குக் கொடுத்தார்கள்? அந்த எஞ்சினியர் பதில் கொடுத்தார்களா ? ஆடிட் அப்ஜெக்ஷன் கொடுத்தால் எஞ்சினியர் பதில் கொடுக்க வேண்டும், அப்படிப் பதில் ஏதாவது கொடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே முடிந்துவிட்ட விஷயம். பொதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தெளிவாக விளக்கம் சொல்லி விட்டார்கள். ஒரே விவாதத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்வது சரியல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே: I want a clear cut answer. இன்னும் தஞ்சாவூரைப்பற்றி அவரால் சொல்ல முடியவில்லை. He had not clearly stated whether there was any letter. We do not want vague answers. இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட் என்றால் யார் கொடுத்தார்கள் ? பதில் கொடுத்திருக்கிறார்களா ? அதையெல்லாம் சொல்லாமல் சிரிக்கிற மாதிரிச் செய்தால் நான் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சில பிரச்னைகளை எழுப்பினீர்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் பேசினார்கள். அதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் பதில் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் விளக்கங்கள் தந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொன்ன நிலைமையைப்பற்றியே மீண்டும் விவாதத்தைத் தொடங்கினால் அது முறையாகாது. அதுதான் ரிப்பெடிஷன் ஆப் ஆர்குமெண்ட் ஆக ஆகிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதானால் சொல்லலாம். ஆனால் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்க முடியாது. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ஏ.ஜி.க்கும் அரசாங்கத்திற்கும் இருக்கிற முறைகளைப்பற்றி. அவர்கள் பதில் சொல்லுகிறார்களா என்று கேட்டால் அமைச்சர் அவர்கள் இஷ்டப்பட்டால்தான் பதில் சொல்லலாமேதவிர திருப்பித் திருப்பி அதையே சொல்வது சரியல்ல. இந்த விவாதம் 56 கோடி ரூபாய்க்கான விவாதம். அதிலே $1\frac{1}{2}$ லட்ச ரூபாயை—$1\frac{1}{2}$ லட்ச ரூபாயை நான் சிறிதாகச் சொல்லவில்லை; 3 லட்சம் முதலிலே எஸ்டிமேட், பிறகு $4\frac{1}{2}$ லட்சமாகப் போடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றியெல்லாம் காலையிலேயே பதில் சொன்னார்கள். அப்படி தெளிவாக்கியும் மீண்டும் டீடியஸ்



1972 மார்ச் 21]

ரெப்படிஷன் என்ற முறையிலே—நான் இதைச் சொன்னால் உங்களுக்குக் கோபம் வரும்—அடிக்கடி குற்றச்சாட்டுச் சொல்லக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இஷ்டப்பட்டால்தான் பதில் சொல்லலாமே தவிர, நிலைமைகள் தெளிவாக்கப்பட்ட பிறகு ஒரு தடவை முடிந்த பிரச்னையை மீண்டும் கிளப்பிக்கொண்டே இருப்பது என்றால், விதி முறைகளிலே டீடியஸ் ரெப்படிஷன் கூடாது என்று இருக்கின்றது, அந்த முறையிலே அவர்களை நிர்ப்பந்தப்படுத்துவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எனக்கு டாக்டர் ஹாண்டே அவர்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. அந்தப் பழக்கமும் எனக்குக் கிடையாது. யாரையும் அலட்சியப்படுத்துகிற பழக்கமும், புண்படுத்துகிற பழக்கமும் கிடையாது. அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புண்படுத்தியிருப்பதாக நினைத்துக்கொண்டால் நான் வருந்துவேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. உறுப்பினர் அவர்களுக்கு நான் காலையிலேயே சில விளக்கங்களையெல்லாம் சொன்னேன். இப்பொழுது அந்த ஜி.ஓ.க்களைப் படித்தால் மிகத் தெளிவாக இருக்கும் என்று கருதுகிறேன்.

G.O. Ms. No. 2180, P.W.D., dated 5th December 1969.

The Chief Engineer (General) has forwarded ........... plans and estimates for the beautification of the area in between the right bank of the Cooum river and the Anna Samadhi at Marina at a cost of Rs. 3 lakhs.

அண்ணா சமாதிதான் கண்ணுக்கு உறுத்துகிறதே தவிர வேறு அல்ல. ' Right bank of the Cooum river ' என்று சொல்லியிருந்தால் பிரச்னைக்கு இடம் இருந்திருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

' The estimates provide for the formation of flower beds, lilly ponds, construction of green house, summer shed, formation of pathway etc. in the above area.

The Chief Engineer (General) has stated that the work is proposed to be done as part of the Cooum Improvement Scheme...

In view of the urgency, he has instructed the Superintending Engineer, Madras-Chingleput Circle, to arrange to call for tenders for the work in anticipation of sanction of the Government.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1972 மார்ச் 21

The Government after careful consideration, approve the proposal of the Chief Engineer (General) for laying out gardens and for beautification of the area between the right bank of Cooum river and Anna Samadhi at Marina as a part of Cooum Improvement Scheme and sanction an expenditure of Rs. 3 lakhs.

The expenditure should be debited to "99. Capital Outlay on Irrigation, Navigation, Embankment and Drainage Works (Commercial)—11. Development Scheme in the Fourth Five-Year Plan —B. Navigation, Embankment and Drainage Works—2. Unproductive—3. Improvements to the Cooum River in Madras City".

The action of the Chief Engineer (General) in having instructed the Superintending Engineer, Madras-Chingleput Circle, to arrange to call for tenders for the work in anticipation of sanction of the Government is ratified. The Chief Engineer (General) is requested to take up the work for execution immediately ........... '

'G.O. Ms. No. 2014, dated 12th November 1969.

The Chief Engineer (General) has in his letter, dated 31st March 1969, and two other letters requested that sanction may be accorded for a sum of Rs. 21,000 incurred towards construction of Samadhi of the late Chief Minister of Tamil Nadu at Marina. In his letter second read above the Chief Engineer (General) has forwarded proposals for effecting improvements to the Samadhi at an estimated cost of Rs. 1.55 lakhs, based on the design prepared by Thiru Atchut R. Chandur,...................

The Government after careful consideration, approve the proposal of the Chief Engineer (General) for effecting improvements to the Samadhi of the late Chief Minister of Tamil Nadu at Marina, Madras, at an estimated cost of Rs. 1.55 lakhs based on the design prepared by Thiru Atchut R. Chandur. They also sanction a total expenditure of Rs. 1.76 lakhs towards construction of Samadhi and also for effecting improvements to Samadhi as detailed in the Annexure to the order.

The expenditure on the work should be debited to the head of account "103. Capital Outlay on Public Works—(a) Original Works—Buildings—L. Public Works—Major Works". The expenditure is a "New Service" and the approval of the Legislature will be obtained in due course through a supplementary grant. Pending approval of the Legislature the expenditure should be met by an advance from the Contingency Fund,..................



1972 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

The estimates received from the Chief Engineer (Buildings) are returned to him.

'G.O. Ms. No. 694, P.W.D., dated 15th March 1971.

Letter from the Special Chief Engineer, dated 6th August 1970.

In the Government Order read above, the Government approved the estimate for Rs. 3 lakhs for beautification of the area between right bank of Cooum river mouth and Anna Samadhi as part of the Cooum Improvement Project, has now reported that the area on the right bank of Cooum river mouth could not be utilised as originally intended, in view of the location of a swimming pool and a boat-club, that the area for beautification had to be extended further southward around Anna Samadhi also so as to make the area a complete stretch for development and that in view of the extension of the beautification around Anna Samadhi the estimates have to be revised to Rs. 4.40 lakhs.

He has also stated that the entire beautification works have been taken up and completed in view of the urgency and has requested approval of the revised estimate.

The Government approve the revised estimate for Rs. 4.40 lakhs for beautification of the area around Anna Samadhi and the area on the southern bank of Cooum mouth in modification of the orders issued in G.O. Ms. No. 2180, P.W., dated 5th December 1969. The action of the Special Chief Engineer in having taken up the work and completed it in anticipation of approval of the revised estimate by the Government is ratified.

The expenditure should be debited to "99 Capital Outlay on Irrigation, Navigation Embankment and Drainage Works (Commercial)—II. Development Schemes in the Fourth Five-Year Plan—B. Navigation, Embankment and Drainage Works—(2) Unproductive—(3) Improvements to Cooum river in Madras City."

So far as beautification work is concerned it has to be under the head '99'.

அதைத்தான் செய்திருக்கிறார்களே தவிர எந்தவிதத் தவறும் இல்லை. அடுத்து இன்னொரு விவரத்தையும் சொன்னார்கள். ஏதோ 3,000 காண்ட்ராக்ட்டிற்குக் கொடுத்து விட்டதா என்று கேட்டார்கள். என்ன நிலை என்றால், பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் கோட் என்று ஒரு "கோட்" இருக்கிறது. அதற்கு உட்பட்டுத்தான் காரியங்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1972 மார்ச் 21

களைச் செய்ய வேண்டும். அதற்கு உட்பட்டுச் செய்திருக்கிறார்களா என்றுதான் பார்க்க வேண்டும். அதைப் பரிசீலிக்கும்பொழுது

Madras Public Works Department Code. Chapter I, Rule 60.

When labourers and artificiers are unavoidably brought from a distance, they may be paid wages for the days of journey to and from site of the work provided they join the work with quick despatch. At the discretion of the Executive Engineer, bona fide travelling allowance may be paid. These charges must be debited to the estimate of the work.

இந்த விதிப்படிதான் எக்ஸிகியூட்டிவ் எஞ்சினியருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுத்துவிட்டு வேலை செய்த பிறகு தவறு என்று எப்படிச் சொல்ல முடியும்?

DR. H. V. HANDE : Is the Minister going to recover the amount from the contractor? That is my question. This has been paid to the contractor. Whether the Accountant-General's office have not asked Government to recover the amount so that Government might not be put to loss. That is my question.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : So far as I am concerned I am convinced that recovery is not necessary. That is my conclusion. It is for the Accountant-General to decide. I had gone through the provisions of the P.W.D. Code. The Executive Engineer has incurred the expenditure bona fide. There is no question of recovery. I am sure recovery is not necessary.

இதைப் பொறுத்தவரையில் மிகவும் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். எக்ஸிகியூடிவ் எஞ்சினியர் அதே இடத்தில் இருக்கிறார்கள். கூவத்தில் வேலை செய்வதற்கு இங்குள்ளவர்கள் வர மறுக்கிறார்கள். தென்னார்க்காடு மாவட்டம், வடார்க்காடு மாவட்டம், சேலம் மாவட்டத்திலிருந்துதான் வந்து வேலை செய்கிறார்கள். ஒரு நாள் வேலை செய்தால் உடம்பிலே அரிக்க ஆரம்பித்து விடும்.

DR. H. V. HANDE : I am very glad the Hon. Minister has explained the difficulties. I know all the difficulties of the work. I had done such work when I was student. What I say is, we should not set up precedents like this. It will be indirectly asking the officials to adopt this practice in future.

MR. SPEAKER : Mr. Hande ......

DR. H. V. HANDE : This is budget session and we are interested to limit the expenditure of Government and we do not want them to commit mistakes, setting up precedents.



1972 மார்ச் 21]

MR. SPEAKER : You are again re-opening. The Hon. Minister has categorically answered. He has challenged. It is for Accountant-General to say it is wrong. This is Government's view and they have stated that.

DR. H. V. HANDE : We have got a right to say they are wrong.

MR. SPEAKER : It is your opinion. The Hon. Minister says the Government's opinion. That is official opinion.

DR. H. V. HANDE : We do not want then to create precedents.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Unfortunately there are precedents.

MR. SPEAKER : The Hon. Minister has given categorical answer that it is correct. It need not be re-opened. The matter is over. You are again re-opening. I think the Hon. Minister can proceed to the next point.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி ப்ரீசிடெண்ட்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் அடுத்த சப்ஜெக்டைப் பற்றிப் பேசலாம். அவர் ஒன்றைச் சொன்னார். நீங்கள் பதில் சொல்லிவிட்டீர்கள். சொல்லி முடிந்து விட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவசர வேலைகளுக்கு அத்தியாவசிய நேரத்தில் தொழிலாளர்கள் தேவைப்படுகிறார்கள். தொழிலாளர்கள் உள்ளூரில் தேவைப்படும் அளவிற்குக் கிடைக்கா விட்டால் வெளியூர்களிலிருந்து கொண்டு வரப்படலாம். இது இங்கே மட்டும் பின்பற்றப்படும் முறை அல்ல. லோயர் பவானி அணைக்கட்டிலும் பின்பற்றப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு ரூல் இருக்கிறது. அதைப் பின்பற்றுகிறார்கள். ஆகவே, எந்தவிதத் தவறும் இல்லை; மாண்புமிகு உறுப்பினர்கள் 47 பேர் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். எல்லோருடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டைச் சிலர் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. பணம்தான் போதவில்லை என்ற பிரச்னையே தவிர, வேலை நடைபெறவில்லை என்ற பிரச்னை இல்லை. நம்முடைய

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1972 மார்ச் 21

அதிகாரிகளும் வந்திருக்கிறார்கள். அதிகாரிகளும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் குறைபாடு இருந்தாலும் அதை நிவர்த்தி செய்து கொடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுப்பார்கள் என்று நம்புகிறேன். கடந்த ஓராண்டுக் காலமாக பொதுப்பணித் துறையில் ஒத்துழைப்புத் தந்த அதிகாரிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை வெட்டு இல்லாமல் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: What has become of laying of pipes so far as Veeranam project is concerned? Is it ready? Are we laying the pipes? Is it in progress? I want clarification.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, வீராணம் குடித்தண்ணீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது இந்தத் திட்டம் 21 கோடி திட்டம் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். இந்தத் திட்டத்திலே ஃபாரின் எக்சேஞ்ச் பெற வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கிருக்கும் காண்டிராக்டர் வெளிநாட்டிலுள்ள தொழில் நிபுணர்களோடு கொலாபரேஷன் வேண்டியிருக்கிறது. மூன்று பேக்டரிஸ் இப்பொழுது இருக்கிறது. Pipe manufacture, Pipe Joint இரண்டு பாக்டரீஸ். Rubber gasket இரண்டையும் ஜாயின்ட் செய்யும் வேலைக்கு ஒரு பேக்டரி இருக்கிறது. அந்த அளவிற்கு விரைவாக நடைபெற்றிருப்பதால், நம்முடைய அதிகாரிகளும் இந்த வீராணம் குடிதண்ணீர் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித் தர வேண்டுமென்பதற்காக டெல்லியிலே போய் உட்கார்ந்துக்கொண்டு முயற்சியெடுத்து, நமக்கு ஃபாரின் எக்சேஞ்ச்க்கு அனுமதி கிடைத்திருக்கிறது. திரு. கந்தப்பன் அவர்கள் சொல்லியதைப்போல் ஏப்ரல் மாதத்தில் first pipe will come out of the factory என்று சொல்லியிருக்கிறார்கள். ஃபர்ஸ்ட் பைப் வந்தபிறகு ஏற்பாடு செய்யப்படும். வீராணம் குடிதண்ணீர்த் திட்டம் விரைவாக நடக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. அதனால்தான் இப்பொழுது குடிதண்ணீர் வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வாரியத்தின் தலைவர் சென்னை மக்களுக்கும், எங்களுக்கும் சீக்கிரத்தில் தண்ணீர் கொடுப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

DR. H. V. HANDE: Government told us last time that they have revised the estimate to over Rs. 1.78 crores. May I know whether any further revision of estimate is going to be made this



1972 மார்ச் 21] [Dr. H. V. Hande]

time? May I know whether it is not a fact that nearly Rs. 7 lakhs have been spent only on beautification when there are other objects as set out by the Technical Committee? Further recurring expenditure of Rs. 25,398 is required for maintaining this beautified area. I want to know whether this aspect has been gone into and whether this Government is going to revise the estimates.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பியூட்டிபிகேஷனுக்காக உறுப்பினரவர்கள் 9 லட்சம் என்றார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: 6,66,017 ரூபாய்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: என்னிடத்தில் உள்ள விவரப்படி பியூட்டிபிகேஷனுக்காக 12 லட்சம் ரூபாய் ஒதுக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறேன்.

DR. H. V. HANDE: Without going into the central basic thing we have been concentrating on beautification. We have put the cart before the horse. The recurring expenditure to maintain is Rs. 25,398.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: We have not concentrated on beautification only. We have concentrated on all aspects of work, channelisation, beautification, navigation, etc. We have concentrated on all. Everything is being done. By June 1972 the work will be over. I would invite the hon. Member to take a trip in the boat in the Cooum.

MR. SPEAKER: So it has ended pleasantly.
விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

நிதிக் கோரிக்கை எண் 26-க்கு திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சோ. அழகர்சாமி ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

டாக்டர் ஹாண்டே அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,22,36,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 27-க்கு திரு. நா. வெ. குருசாமி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப் பணிகள், பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,27,04,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 28-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆ. கு. சுப்பையா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாமையால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 28—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திர சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,71,85,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 41-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,54,62,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 42-க்கு திரு. ஜே. ஜேம்ஸ், திரு. வடிவேல் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 42—பொதுப் பணிக்ள் மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,04,08,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## (4) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

73. Notification issued with G.O. Ms. No. 3820, Revenue, dated the 23rd November 1971, in regard to an amendment to the Revenue Department order issued in G.O. Ms. No. 998, Revenue, dated the 24th March 1965. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

74. Notification issued with G.O. Ms. No. 8911, Revenue, dated the 30th November 1971, in regard to setting up of checkposts at Velandavalam and Kalinkarayanpalayam of Coimbatore Division. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).

B. *Reports, Notifications and Other Papers.*

@ 98. Policy Note on Harijan Welfare Demand 1972–73 (Tamil).

99. Policy Note on Demand No. 25-A—Welfare of the Backward Classes 1972–73 (Tamil).

£ 100. The Performance Budget relating to Harijan Welfare Department, 1972–73.

£ 101. The Performance Budget relating to Backward Class Department, 1972–73.

@ 102. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works, on Demands for Irrigation and Public Works Department Grants, 1972–73 (English and (Tamil).

@ 103. A Review on Irrigtion in Tamil Nadu—1972–73 (English).

---

@ Despatched to Members on 18th March 1972.

£ Laid on the Table of the House on 20th March 1972.



## இணைப்பு 1

[465 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க]

### பாசன-பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கைகள் 1972–73.

ஏற்கெனவேயுள்ள பாசன ஏற்பாடுகளை விரிவுபடுத்தவும், அவற்றை மேம்படுத்தவும், அவற்றிலிருந்து உயர்ந்த அளவு பயனைப் பெறும் வண்ணம் அவற்றைச் சரியான நிலையில் வைத்திருக்கச் செய்யப்படும் இயல்பான பேணுதல் செலவும், வெள்ளம், புயல் காரணமாக ஏற்படும் சேதங்களைப் பழுது பார்த்தல் ஆகியவற்றுக்காகும் செலவும், நடப்பு வருவாயிலிருந்து "கோரிக்கை 26—பாசனம்" என்பதன்கீழ் அளிக்கப்படும் மானியத்தின் மூலம் பெறப்படும். ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வருகின்ற அல்லது இவ் வரவு-செலவு திட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிற புதிய பாசனத் திட்டங்களின் மீதான செலவின் பெரும் பகுதி "கோரிக்கை 41—பாசனத்திற்கான மூலதன முதலீடு" என்னும் தலைப்பின்கீழ் அளிக்கப்படும் மானியத்திலிருந்து பெறப்படும், கோரிக்கை 26-ன்கீழ் அளிக்கப்படும் நிதி ஒதுக்கத்தில் வருவாய்த் துறை ஆளுகையில் உள்ள சிறு பாசனப் பணிகள் செலவுக்கான ரூ. 1,03,83,500 தொகையும் அடங்கும். பணியாளர்கள், பாசனக் கட்டுமான வேலைகளுக்கும் பேணுதலுக்கும் தேவைப்படும் கருவிகள், தளவாடங்கள் ஆகியவற்றின் மொத்தச் செலவும் கோரிக்கை 28-ன்கீழ் வருகின்றன; பாசனத் தொடர்பான செலவில் ஒரு பகுதி அதாவது ரூ. 1,79,47,000 "கோரிக்கை 26—பாசனம்" என்பதில் சேர்க்கப்பட்டுள்ளது.

2. கட்டிடங்கள், சாலைப்போக்குவரத்துகள், பலவகைப்பணிகள், போன்ற மூலப்பணிகளுக்கும், சாலைகள் பாலங்கள் கட்டுதலும் சீரமைத்தலும் போன்ற பழுது பார்த்தல் செலவுகளுக்கும், இப்போதுள்ள கட்டிடங்களையும் சாலைகளையும், பேணிவருவதற்குரிய இயல்பான செலவுக்கும் உள்ள நிதி ஒதுக்கீடு கோரிக்கை 27-ல் அடங்கும். பொதுப்பணித் துறையிலும், நெடுஞ்சாலை—கிராமப் பணிகள் துறையிலும் பணியாளர்களுக்கும், கருவிகளுக்கும், தளவாடங்களுக்கும் ஆகும் மொத்த செலவு கோரிக்கை 28-ன் கீழ் வருகின்றது. ஒவ்வொன்றும் தனித்தனியே ரூ. 1 லட்சம் செலவாகிற சாலைகள் கட்டடங்களுக்குரிய புதிய பணிகளுக்கும் அல்லது தனித்தனியே இந்தத் தொகை வரம்புக்குக் குறைவாக இருப்பினும், நோக்கம், காலம், இடப்பரப்புவகையில் நீடித்த ஒரு திட்டமாக அமைந்து மொத்தத்தில் ரூ. 5 லட்சத்திற்கு மேல் செலவாகக் கூடிய பணிகளுக்கும் ஆகும் செலவு கோரிக்கை 42-ன்கீழ் பெறப்படும்.

3. இவ்வாறு 1971-72-ல் பாசனம், சாலைகள், கட்டடங்கள் ஆகியவை குறித்துச் செலவிடக் கருதப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 55,79,97,900 ஆகும்.

பாசனம்.

4. நடப்பாண்டில் அதாவது 1971-72-ல், பருவ நிலைகள் பொதுவாக மன நிறைவளிப்பவையாயிருந்தன. தென்மேற்கு பருவ மழை சற்றுக் காலங் கடந்தே தொடங்கியது; காவிரி நீர்க்கோள் பகுதியில் மழையளவு ஏறத்தாழ 11 சதவீதம் குறைவாக இருந்தது. பவானி பெரியாறு நீர்க்கோள் பகுதிகளில் மழையளவு இயல்பாக இருந்தது. மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 11 சதவீதமும், பவானிசாகரில் 18 சதவீதமும், பெரியாறு ஏரியில் 15 சதவீதமும், அமராவதி நீர்த்தேக்கத்தில் 12 சதவீதமும் நீர்வரவு குறைந்தது. பாபநாசம் நீர்த்தேக்கம், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்கள் இவற்றில் கிடைத்த நீர்வரவு இயல்பான அளவிற்கு அதிகமாகவே இருந்தது.

5. கோதையாறு பாசன ஏற்பாடு, கோமுகி நதி, மணிமுத்தா நதி, மஞ்சளாறு, பவானிசாகர் முதல்பாசன உரிமை முறை ஆயக்கட்டு ஆகியவை தவிர ஏனைய நீர்த்தேக்க ஏற்பாடுகள் பாசனத்திற்குத் திறந்து விடப்படும் தேதி பொதுவாகத் தள்ளிப் போடப்பட்டது. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் கீழ், கூடுதல் பயிர் விளைவிக்க, சிறப்பு முறையில் நீர் வழங்கப்பட்டது. காவிரி கயவாய்ப் பகுதியில் இரு போகப் பயிரின்கீழ் மேலும் நிலங்களைப் பயிரிடும் திருத்த முறை இவ்வாண்டிலும் பின்பற்றப்பட்டது.

6. வடகிழக்குப் பருவ மழை மொத்தத்தில் சாதகமாகவே இருந்தது. இருப்பினும் இக்கால அளவில் காவிரி நீர்க்கோள் பகுதியில் 25 சதவீதமும் பவானி நீர்க்கோள் பகுதியில் 12 சதவீதமும் மழை குறைந்துவிட்டது. மேட்டூர், பவானி சாகர், பெரியாறு நீங்கலாக எல்லா நீர்த்தேக்கங்களிலும் இந்தப் பருவத்தில் நீர் வரவு நல்ல வகையில் இருந்தது. ஏரிகளும் நிரம்பின. ஏரிகளிலுள்ள நீரைப் பயன்படுத்திக் கோடைப் பயிர் விளைவிக்கப்படும்.

7. பவானிசாகரின்கீழ் இரண்டாவது பாசன உரிமை முறை ஆயக்கட்டுகளுக்கு, புன்செய்ப் பயிர் விளைவிக்க நீர் வழங்கப்பட்டு வருகிறது.

8. தமிழ்நாடு, அதன் மேற்பரப்பு நீர் வளங்கள் அனைத்தையும் பெரும்பாலும் பயன்படுத்திவிட்டது. எனவே நமது நில நீர் வளத்தைக் கண்டறிந்து பயன்படுத்திக் கொள்ளும் முயற்சிகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம். நில நீர் வளம் குறித்த அறிவியல் ஆய்வை கீழ்க்காணும் இரு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர்: (அ) ஐக்கிய நாடு வளர்ச்சி வேலைத்திட்ட நிறுவனம்; (இ) அரசின் நில நீர் இயக்குநரகம்.





9. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனம் தனது ஆய்வுப் பணியின் முதல் நிலையை நிறைவேற்றியுள்ளது. மதிப்பீட்டு ஆய்வு முடிவுகளுக்கிணங்க, சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், இயல்பான அளவு மழை பெய்யும் காலங்களில் உழவர்களுக்கான பாசன வசதிக்கு இடையூறு இல்லாமலே நாளொன்றுக்கு ஏறத்தாழ 275 லட்சம் கேலன் நீர் பெற முடியும். இந்தப் பகுதியில் ஊற்று நீர் எடுத்து சென்னை எண்ணெய்த் தூய்மை ஆலை, சென்னை உரத் தொழிற்சாலை, ஏனைய தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் இரண்டாவது நிலை நீரியல் ஆய்வை விரிவாக மேற்கொள்வதை நோக்கமாக உடையது. காவிரி கயவாய்ப் பகுதியின் நில நீர் வளத்தை ஆராயும் பணி 1969-ல் தொடங்கியது. இது 1972-ன் முற்பகுதியிலேயே முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 87,000 அடிகளுக்குமேல் நிலத்தில் துளைகள் இறக்கப்பட்டு, நிலத்திற்கடியிலுள்ள பல நீரோட்டப் பகுதிகளைக் கண்டறிய குழாய்ச் சோதனைகளும் செய்யப்பட்டன. தமிழ்நாடு முழுவதிலுமுள்ள நில நீர் வளத்தை மதிப்பிட்டு அறிவதற்காக, புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பணியில் நில நீர் இயக்குநரகம் ஈடுபட்டுள்ளது.

10. அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழகம் அளிக்கும் உதவியுடன், வடிகுழாய்க் கிணறுகள், குழாய்க் கிணறுகள், கிணறுகள் முதலியவை தஞ்சாவூர், திருச்சி, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் அமைக்கப்படும். அனைத்து நாட்டு வளர்ச்சிக் கழக நிதி உதவியின் கீழ் வராத மாவட்டங்களில் வேளாண்மை மறு நிதி உதவிக் கழகத்தின் உதவி பெறும் திட்டங்களும் உள்ளன.

11. கோயம்புத்தூர், வட ஆர்க்காடு, மதுரை மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளில் உணவு உற்பத்தி நடவடிக்கை நிறுவனம் நில நீர் வள ஆய்வுப் பணியை மேற்கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. நில நீர் வள ஆய்வுக்கு அமெரிக்க அமைதிப் படைத் தொண்டர்களது சேவையைப் பயன்படுத்திக் கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது.

12. காவிரி கயவாய்ப் பாசன ஏற்பாட்டில் பழுது பார்த்தல், புதுப்பித்தல் பற்றிய விரைவுத் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1972-73-லிருந்து அமையும் பணிகளை மேற்கொள்வதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1972-73-ல் ரூ. 244 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

13. பவானி ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் காளிக்கராயன், தாடபள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால்களை ஏற்றவாறு புதுமைப்படுத்தி அமைப்பதற்கான செயற்குறிப்புகள் முடிவாகத் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இப்போது அமராவதி, தாமிரவருணி வாய்க்கால்களைப் புதுப்பிக்கும் பணி ஏற்கெனவே

மேற்கொள்ளப்பட்டு முன்னேற்ற நிலையை அடைந்துள்ளது. அமராவதி நீர்த் தேக்கத் திட்டத்தைச் சேர்ந்த அமராவதி கால்வாய்க்குக் காரை பூச வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் அரசு ஏற்றுள்ளது. இவ்வேலையை அரசு படிப் படியாக எடுத்துக் கொள்ளும். கால்வாயின் இரு பகுதிகளுக்குக் காரை பூசும் முதல் நிலைப் பணியின் மதிப்பீடுகளுக்கு அரசு ஏற்பளித்துள்ளது.

14. சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களின்கீழ் நடப்பு ஆண்டில் ரூ. 300.00 லட்சம் செலவிடப்படும். இவ்வாண்டு இலக்கு 725 பணிகளாகும். இப்போதுள்ள ஆயக்கட்டில் 61,250 ஏக்கருக்கு இடையீடற்ற பாசனம் அளிப்பதோடு, 25,750 ஏக்கர் புதிய பரப்பளவுக்குப் பாசன வளம் இதனால் உருவாகலாம்.

## உள்நாட்டு நீர்வழிகள்.

### (1) கூவம் சீரமைப்புத் திட்டம்.

15. சென்னை மாநகர எல்லைக்குள் கூவம் ஆற்றை அழகுற அமைத்துத் தூய்மையாகவும், நீர் ஏற்ற, நீர் வற்ற வசதிகளுடன், படகில் செல்லத் தக்கதாகவும் செய்யும் நோக்கத்துடன், ரூ. 110.45 லட்சம் செலவில் ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டம் மூன்று நிலைகளில் எடுத்துக் கொள்ளப்பட்டது. முதல் நிலையின் கீழ் பொறிமதகு, தோணித்துறை கட்டும் வேலை பெரும்பாலும் முடிந்துவிட்டது. பொறி மதகின் எதிரோட்டத் திசையில் பாதுகாப்புப் பணிகளும் தோணித் துறைக்கு மேல் நிறுவப்பட்ட மணல்வாரி இயந்திர இறுதிச் சோதனை மட்டுமே பாக்கியாக உள்ளது. இரண்டாவது நிலையில், ஆற்றின் இரு கரைகளிலும் காரை பூசி வாய்க்கால் வழிப்படுத்தல், பூங்காக்களும் புல்வெளிகளும் அமைத்தல், நீச்சல் குளம், படகு குழாம் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூல ஆற்றின் நீளம் முழுவதும், வட பகுதி முழுவதும் காரை பூசி வாய்க்கால் வழிப்படுத்தும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மூல ஆற்றில் கரை கட்டும் பணியில் 80 சதவீதம் முடிவுற்றுள்ளது. வட பகுதி முழுவதிலும் காரை பூசும் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது. நீச்சல் குளமும் படகுக் குழாமும் கிட்டத் தட்ட வேலை முடிவுறும் தறுவாயில் உள்ளன. இத் திட்டத்தின் மூன்றாவது நிலையின் கீழ், 941 குடிசை வாழ் குடும்பத்தினருக்கு தீப்பிடிக்காத குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குடியிருப்பு கட்டும் வேலை முடிந்து விட்டது. இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 189.97 லட்சத்திற்குத் திருத்தி அமைக்கப்பட்டதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் தொடர் செலவு ரூ. 174.83 லட்சமாகும்.



### (2) பக்கிங்ஹாம் கால்வாய்.

16. மாநகர எல்லைக்குள் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயினை ரூ. 44 லட்சம் செலவில் சீரமைப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டம் ஒன்றுள்ளது. இந்தச் செலவு மதிப்பீட்டில், பக்கிங்ஹாம் கால்வாயின் வடகரைப் பகுதிகளில் விறகுத் துறையிலும் கிளிஞ்சல் துறையிலும் சாலைகள் அமைத்தல், சிந்தாதிரிப்பேட்டையில் தோணித் துறை கட்டுதல் சில பகுதிகளில் கால்வாய்க்குக் கரை பூசுதல் ஆகிய பணிகள் செய்யப்பட்டன. கால்வாயில் சேறு வாருவதற்கான சேறுவாரி இயந்திரங்களும், கூவம் கழிமுகத்தில் பயன்படுத்த மணல்வாரி இயந்திரமும் வாங்கப்பட்டன. தமிழ்நாடு எல்லைக்குள் பக்கிங்ஹாம் கால்வாயின் சேறுவாரி ஆழப்படுத்திச் சீரமைக்கும் நோக்குடன் ரூ. 30 லட்சம் செலவில் செயற்குறிப்புகள் அண்மையில் மத்திய அரசு கடனுதவித் திட்டத்தின்கீழ் அளிக்கப் பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 1971 டிசம்பர் வரை ஏறத்தாழ மொத்தம் ரூ. 27 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்புகள்.

17. பொறியாளர்களுக்கு மேலும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் கருத்துடன், தமிழ்நாட்டிலுள்ள பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பற்றி ஆய்வதற்கு 10 கோட்டங்களை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. மத்திய அரசு கடனுதவித் திட்டத்தின்கீழ் இது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## கடலரிப்புத் தடுப்புத் திட்டங்கள்.

18. கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்க்காணும் இடங்களில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன :—

(1) ஏராமந்துறை.

(2) மிடாலந்துறை.

(3) மேலமணக்குடி.

(4) பள்ளந்துறை.

திருநெல்வேலி மாவட்டம் மணல்பாடு கிராமத்திலும், செங்கற்பட்டு மாவட்டம் கோவளம் கிராமத்திலும் கடலரிப்பைத் தடுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்புத் தடுப்புக்கும் நிலையான ஏற்பாடாக, தமிழ்நாட்டின் அராபியக் கடற்கரையில் கடல் சுவர் கட்டும் செயற்குறிப்பு முடிவாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு முழு மானிய உதவி பெறுவதற்கு கடலரிப்புத் ஏற்பாடாக இத்திட்டம் விரைவிலேயே இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**காவிரி கால்வாய்ப் பகுதியில் வெள்ளக் கட்டுப்பாடு வடிகால் திட்டங்களும்.**

20. இவ்வரசு, ரூ. 52.00 லட்சம் செலவில் 19 பணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அவை நடைபெற்று வருகின்றன. 1970–71-ல் செலவு ரூ. 6.75 லட்சம் ஆகும். 1971–72-ல் எதிர்பார்க்கும் செலவு ரூ. 22.99 லட்சம், 1971–72-ல் 1971 டிசம்பர் வரையில் செலவு ரூ. 18.27 லட்சமாகும். 1972–73 ஆண்டுத் திட்டச் செலவு ரூ. 20.73 லட்சமாகும்.

கொள்ளிடம், காவிரிக் கரைகளில் பலமற்றப் பகுதிகளில் அவற்றைப் பலப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1970-71-ல் ரூ. 4.53 லட்சம் செலவிடப்பட்டது. 1971–72-ல் எதிர்பார்க்கும் செலவு ரூ. 5.25 லட்சமாகும். 1971–72-ல் 1971 டிசம்பர் வரையில் செலவிட்ட தொகை ரூ. 4.14 லட்சமாகும். 1972–73 ஆண்டுத் திட்டச் செலவு ரூ. 9.25 லட்சமாகும்.

காவிரி சுயவாய்ப் பகுதியில் வெள்ளம் ஏற்படுவதை செவ்வையாகக் கட்டுப்படுத்தும் பொருட்டு ரூ. 2.12 லட்சம் செலவில் மேல் அணைக்கட்டில் காவிரிக்குக் குறுக்கே தடுப்பு அணை கட்டும் செயற்குறிப்பு இந்திய அரசு அனுமதி பெற அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திட்ட ஆணைக் குழு அனுமதி கிடைத்ததும் இவ்வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

**மைசூர் அரசு காவிரியில் பாசனத் திட்டங்களை கட்டுதல்.**

21. தமிழ்நாட்டிற்கும் மைசூருக்கும் இடையே 1892-லும், 1924-ஆம் ஆண்டிலும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறி, காவிரியிலும் அதன் கிளை நதிகளிலும், மைசூர் அரசு ஒருதலைப் பட்சமாக ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, ஸ்வர்ணவதி, யாகாக்ஷி முதலிய சில பாசனத் திட்டங்களைக் கட்டுவது பற்றியே இந்த இரு மாநிலங்களுக்கும் இடையே தகராறு எழுந்தது. பாசனம்-மின்சக்தி மத்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் தலைமை தாங்கிய கூட்டங்களில் எதிலும் இணக்கமான உடன்பாடு ஏற்பட இயலாது போனதால், 27—10—1970-ல் நடைபெற்ற இரு மாநிலப் பேச்சின் முடிவில் டாக்டர் ராவ் செய்த முடிவினையொட்டி, நடுவர் மன்றம் ஒன்றை அமைத்து அந்த நடுவர் மன்றத்திற்கு காவிரி நீர்ச் சிக்கலை அனுப்பிவைக்குமாறு இந்திய அரசை இவ்வரசு அவ்வப்போது வேண்டியுள்ளது.





22. 1971 ஜூலையில் சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் கொண்டு வந்த தீர்மானத்திற்கு இந்தியத் தலைமையமைச்சரிடமிருந்து கிடைத்த பதில் 31—7—1971-ல் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சரால் படித்துக் காட்டப்பட்டதை இங்கு நினைவு கூறலாம். 31—7—1971-ல் முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் இது பற்றி விவாதிக்கப்பட்டது. தலைமையமைச்சரிடமிருந்து கிடைத்த பதிலினால் பலனில்லை எனக் கருதப்பட்டது. ஆகவே, இந்த வழக்கில் நியாயம் பெற நீதி மன்றத்திற்குப் போவதென்று இவ்வரசு முடிவு எடுத்துள்ளது. இந்த முடிவையொட்டி, இந்திய அரசு நடுவர் மன்றம் ஒன்றை அமைக்குமாறு தலைமை உயர் நீதிமன்றம் கட்டளையிடும் அறிவிப்பு பெறுவதற்காக 4—8—1971-ல் தலைமை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றை இவ்வரசு பதிவு செய்துள்ளது. இவ்வழக்கு இப்போது தலைமை உயர் நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

**சாலைகள்.**

23. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் அதாவது 1969 ஏப்ரல் திங்கள் 1-ம் நாளில் சாலைகளின் மொத்த நீளம் 65,014 கிலோ மீட்டராகும். 1969–70, 1970–71-ம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சித் திட்டங்களின் பலனாக, சாலைகளின் மொத்த நீளம் 1—4—1971 நிலவரப்படி 67,001 கிலோ மீட்டர் ஆக உயர்ந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் தமிழ்நாட்டில் சாலைகளின் மொத்த நீளம் 77,947 கிலோ மீட்டராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

24. ஊராட்சி ஒன்றிய, ஊராட்சிப் பேருந்து வழித்தட சாலைகளை இவ்வரசு மேற்கொள்ளும் திட்டத்தின்கீழ் 1960–61 முதல் 1971–72 வரையில், 12 ஆண்டுக் கால அளவில் இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 9,298 கிலோ மீட்டர். இதில் 1971-72-ல் அரசு எடுத்துக் கொண்ட சாலையின் நீளம் ஏறத்தாழ 594 கிலோ மீட்டர். 1972–73-ல் மொத்தம் 1,600 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பேருந்து வழித்தடச்சாலைகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

25. நெடுஞ்சாலைத் துறைப் பணித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான சில பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) ரூ. 265.50 லட்சம் செலவில் வடிகால்களுக்குக் குறுக்கே 40 பாலங்கள் கட்டி கிழக்குக் கடற்கரைச் சாலையைச் சீரமைத்தல்;

(ii) பாம்பன் கடல் இடைக்கழிக்குக் குறுக்கே இராமேஸ்வரம் தீவை இந்தியாவின் ஏனைய நிலப்பரப்புடன் இணைக்கின்ற சாலைப் பாலம் ஒன்றை ரூ. 6.50 கோடி செலவில் கட்டுதல்;

[1972 மார்ச் 21

(iii) திருச்சிக்கு அருகே 45-ம் எண் தேசிய நெடுஞ்சாலையில் ரூ. 70 லட்சம் செலவில் காவிரி பாலத்திற்கு மீண்டும் தளமிடுதல்;

(iv) மாயூரத்தில் கும்பகோணம்-சீர்காழி சாலை 20—7வது மைலில் ரூ. 40 லட்சம் செலவில் மேம்பாலம் கட்டுதல்;

(v) காவிரியின் குறுக்கே முசிரியையும், குளித்தலையையும் இணைக்கும் பாலம் ஒன்றை ரூ. 80 லட்சம் செலவில் கட்டுதல்.

கட்டிடங்கள்.

26. பொதுப் பணித் துறை கட்டிடப் பிரிவின் முக்கியமான அலுவல், மாநில அரசின் பெரும்பாலான துறைகளின் கட்டிடத் தேவைகளை நிறைவேற்றுவதே ஆகும்.

27. பல்வேறு துறைகளின் தேவைகளுக்கிணங்க திட்டமிடுதல், வடிவமைப்பு, கட்டிடம் கட்டும் வேலை ஆகியவற்றுக்குக் கட்டிடப் பிரிவு பொறுப்புடையதாகும். சிறப்பு நேர்வுகளில் மத்திய அரசுத் துறைகளுக்கும் அரசுத் தன்மையுள்ள பிற அமைப்புகளுக்கும் கட்டிடப் பணிகளை முகவரமைப்பு அடிப்படையில் செய்துகொடுக்கிறது. மாநில அரசுக் கட்டிடங்களைப் பேணும் பொறுப்பும் பொதுப்பணித் துறையிடம் நிலைபெற்றுள்ளது.

28. இதுவரை கட்டி முடிக்கப்பெற்ற அல்லது திட்டத்தட்ட முடிவுறும் நிலையில் உள்ள பெரும் பணிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 | செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி II-வது தொகுதிக்கு மேல் முதல், இரண்டாவது மாடி. | 10·50 |
| 2 | திருப்பத்தூரில் (38 படுக்கைகள் கொண்ட) அரசு மருத்துவமனை. | 10·10 |
| 3 | திருவாரூரில் அரசு மருத்துவ மனை (70 படுக்கைகள்) | 10·30 |
| 4 | சென்னை, அரசு பொது மருத்துவ மனையில் ஏழு அடுக்கு இதய நோயியல் தொகுதி கட்டுதல். | 16·00 |
| 5 | கண் மருத்துவமனைக்கு புதிய புறநோயாளித் தொகுதி, சென்னை. | 14·09 |
| 6 | தாம்பரம் அரசு மருத்துவமனை (104 படுக்கைகள்). | 11·965 |
| 7 | தேவக்கோட்டையில் அரசு மருத்துவமனை (50 படுக்கைகள்.) | 10·00 |



1972 மார்ச் 21]

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 8 | பல்வேறு மருத்துவமனைகளில் X-கதிர் தொகுதிகள் கட்டுதல். | 10·00 |
| 9 | கோயம்புத்தூர் நகராட்சியில் ஆறு அடுக்குக் கட்டிடம் கட்டுதல். | 20·00 |
| 10 | தருமபுரி நகராட்சிப பேருந்து நிலையம் கட்டுதல் .. | 12·71 |
| 11 | மதுரை நகராட்சி—ரூ.ல் நகரமண்டபம் கட்டுதல் .. | 13·00 |
| 12 | வேலூர் நகராட்சி—II-ம் நிலை அங்காடிக் கட்டிடம் கட்டுதல். | 10·0 |

29. மேற்சொன்ன திட்டப் பணிகளைத் தவிர, திருச்சி சிறு படைக்கலத் திட்டம் குறித்த வேலைகள் நிறைவேற்றப்படுவதற்காக ரூ. 5.733 கோடி செலவு மதிப்பீட்டில் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வேலை 1964 மார்ச்சில் தொடங்கியது. திட்டத்தின் பெரும் பகுதி வேலைசெய்து முடிக்கப்பட்டுள்ளது.

30. இந்திய அரசுச் சார்பில்—(1) சென்னையில் தொலைப்படக் காட்சி நிலையம் ஏற்படுத்துவது குறித்த கட்டடப் பணிகள், (2) கோயம்புத்தூரிலும், திருச்சியிலும் மத்திய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

31. திட்டப்பணிகளின் முன்னேற்றம், பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விரிவான ஆய்வுரைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு 2

### தமிழ்நாட்டின் பாசன வசதிகள்—ஆய்வுரை, 1971–72.

இந்த ஆய்வுரை ஆண்டு, அதாவது 1971–72, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டாகும். திட்டங்களின் செலவு அடிப்படையில் பாசனத் திட்டங்களும் பணிகளும், பெரிய, நடுத்தர, அல்லது சிறிய திட்டங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. ரூ. 500 லட்சத்திற்கு மேற்பட்ட திட்டங்கள் பெரிய திட்டங்களாகும்; ரூ. 25 லட்சத்திலிருந்து ரூ. 500 லட்சம் வரையுள்ள திட்டங்கள் நடுத்தர திட்டங்களாகும்; ரூ. 25 லட்சத்திற்கும் குறைவாக செலவு ஆகும் திட்டங்கள் சிறுபாசனத் திட்டங்களாகும். 1971–72-ஆம் ஆண்டில் பெரிய, நடுத்தரத் திட்டங்களின் முன்னேற்றம் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய இரண்டு ஆண்டுகளுக்கான வேலைத் திட்டமும் கீழே விளக்கப்பட்டிருக்கிறது.

## முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள்.

2. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் இருபத்திநாலு பாசன ஏற்பாடுகளின் கீழ் 22·00 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றிருந்தது. முதலாவது திட்டக் காலத்தில் ஒன்பது புதிய பாசனத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1·32 லட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலம் விளைச்சலுக்குக் கொண்டுவரப்பட்டது. இது தவிர 1·24 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்கு இடையுறாத பாசன வசதி அளிக்கப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 1·77 லட்சம் ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது, 1·15 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்கு இடையுறாத பாசன வசதி அளிக்கப்பட்டது. முதலாவது, இரண்டாவது திட்டங்களின்போது பாசனத் திட்டங்களுக்கென முறையே ரூ. 20·15 கோடியும், ரூ. 14·45 கோடியும் செலவிடப்பட்டன.

## மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டமும், 1966–67, 1967–68, 1968-69 ஆண்டுத் திட்டங்களும்.

3. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தைத் தவிர, III-ம் திட்டக்காலத்தில் பாலாறு அணைக்கட்டுக்கும் வாய்க்கால்களுக்கும் சீரமைப்பு, சாத்தனூர் நீர்த் தேக்கத் திட்டம் III-ஆம் நிலை, கோமுகி நதித் திட்டம், சித்தாறு-பட்டணங்கால் திட்டம், மஞ்சளாறு திட்டம் ஆகிய 5 வேலைத் திட்டங்களுக்கு மட்டுமே அரசு அனுமதி வழங்கியது. இவற்றுள், முதல் மூன்று திட்டங்களின் பணி முடிவுற்று அவற்றிலிருந்து பலன்களும் பெறப்பட்டன. மஞ்சளாறு நீர்த்தேக்கத் திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, திட்டத்தில் சேராத பணியாக நிறைவேற்றப்பட்டது. 1963–64-ல் பணி மேற்கொள்ளப்பட்ட சித்தாறு-பட்டணங்கால் திட்டம் தற்போது அநேகமாக வேலை முடிந்து விட்டது. 1970–71-ல் பாசனப் பணி தொடங்கி வைக்கப்பட்டது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஏனைய மூன்று திட்டங்களாகிய மணிமுக்தா நதி திட்டம், இராம நதித் திட்டம், கோமுகி நதித் திட்டம் 1966–67-ல் நிறை வேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மணிமுக்தா நதித் திட்டம் முடிவடைந்து பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இராம நதி, கடானா நதித் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்கால அளவிற்குள் இவை கட்டி முடிக்கப்படும்.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி வேலைத் திட்டமான வைகை கால்வாயைக் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கும் திட்டம் 1967–68-ல் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி நடந்தேறி வருகிறது. 1968–69-ல் புதிய திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் பெரும் பாசனத்தின் கீழ் வரும் வேலைத்திட்டங்களுக்கு ரூ. 41·10 கோடி ஒதுக்கப்பட்டது. செலவிடப்பட்ட தொகை ரூ. 44·00 கோடியாகும்.





## நிறைவேற்றப்பட்டு வரும் பழைய திட்டப் பணிகள்.

4. கீழ்க்காணும் திட்டங்கள் தற்போது பணி நிறைவேற்றப்பட்டு வரும் முந்தைய வேலைத் திட்டங்களாகும் —

(1) பரம்பிக் குளம்–ஆளியாறு திட்டம்.
(இரண்டாவது திட்டம்).

(ரூ. இலட்சத்தில்).

| | |
|---|---|
| திட்டச் செலவு—மூல மதிப்பீடு .. .. .. .. | 3508 |
| திருத்திய மதிப்பீடு .. .. .. .. .. | 6753 |
| இரண்டாவது திட்டக் காலத்தில் செலவு .. .. .. | 426·71 |
| மூன்றுவது திட்டக் காலத்தில் செலவு .. .. .. | 2,621·16 |
| 1966–67 முதல் 1968–69 வரை செலவு .. .. .. | 832·00 |
| 1969–70-ல் செய்த செலவு .. .. .. .. | 277·74 |
| 1970–71-ல் செய்த செலவு .. .. .. .. .. | 233·30 |
| 1970–71-ல் இறுதி வரை மொத்தச் செலவு .. .. | 4,390·91 |
| 1971–72 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 152·51 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் இறுதி வரை செலவு .. .. | 107·29 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 203·50 |

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பரம் பிக்குளம் ஆளியாறு திட்டம் ஒரு பல நோக்கத் திட்டமாகும். இது மூன்றுவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப் பெற்று, நான் காவது திட்டக் காலத்தில் எல்லாவகைகளிலும் பணி நிறைவெய்தும். இத் திட்டத்திற்கு ரூ. 67·53 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக் கிறது. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் • வட்டங்களில் 2·40 லட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலத் திற்குப் பாசன வசதி கிடைப்பதற்காகவும், தமிழ்நாடு, கேரள மாநி லங்களில் பாலாறு, ஆளியாறு திட்டத்தின்கீழ் தற்போதுள்ள பழைய ஆயக் கட்டுப் பகுதியின் 30,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி யைப் பெருக்குவதற்காகவும், நான்கு மின் நிலையங்களில் 1,85,000 கிலோ வாட் உற்பத்தித் திறனுடன் மின்சக்தியை உற்பத்தி செய்யும் வகை யிலும் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டம் இரு மாநிலங்களின் பொது நன்மைகளுக்காக, இரு மாநில எல்லைகளுக்கிடையே ஓடும் ஆறுகளின் நீரைத் தேக்குவதற்கான திட்டமாகையால், கேரள மாநிலத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியமாகிறது. கேரள மாநிலம் அளித்த ஒத்துழைப்பு காரணமாக, இத்திட்டத்தின்கீழ் நாம் தொடங்கக் கருதியுள்ள எல்லாப் பணி கள் குறித்தும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுக்கும், கேரள அரசுக்குமிடையே 29—5—1970-ல் ஏற்பட்ட இரு மாநில ஒப் பந்தத்தின்படி, (i) நீராற்றின் மேல் பகுதியில் அதற்கு குறுக்கே சிற்றணை ஒன்றைக் கட்டுவதற்கும் அங்கிருந்து சோலையாறு பள்ளத் தாக்கிற்குச் செல்லும் சுரங்கக் கால்வாய் ஒன்றை அமைக்கவும், (ii) தேக்கடி நீர்த் தேக்கத்தினால் ஏற்படும் நீரிழப்பை ஈடு செய்வதற்காக நீராற்றின் கீழ்ப் பகுதியில் ஒரு சிற்றணை கட்டவும், அண்மையிலுள்ள ஆனைமலையாறு பள்ளத்தாக்கிலிருந்து தமிழ்நாட்டிற்கு 250 கோடி

கன அடி நீரை ஒரு தனி உடன்படிக்கை மூலம் முடிவு செய்து திருப்பி விடுவதற்கும் தமிழ் நாடு அரசுக்கு உரிமை உள்ளது. ஏற்கெனவே ஒப்புக் கொண்டுள்ள 250 கோடி கன அடி நீரைச் சிறந்த பகிர்ந்தளிப்பு முறை ஒன்றின் மூலம் பெறுவதற்கு தமிழ்நாட்டின் பாசன உரிமைக்குப் பாதகமில்லாமல் நீர் திருப்பு முறைகளைத் தாங்களே செய்து கொண்டு ஆனைமலையாற்றுக்குக் குறுக்கே பொது அணை ஒன்றைக் கட்டுவதற்காக கேரள அரசின் செயற்குறிப்பை ஆராய இந்த அரசு தயாராக உள்ளது என்று கேரள அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கேரள அரசின் இசைவு எதிர்ப்பார்க்கப்படுகிறது.

முகாம் கட்டிடங்கள், திட்ட நிலையம் ஆகியவற்றைக் கட்டி முடித்த பின்னரும், முகாமிற்குச் செல்லும் சாலைகள் போடப்பட்ட பின்னரும் நீராறுக்குக் குறுக்கே சிற்றணை கட்டும் பணியும், அருகிலுள்ள பள்ளத்தாக்கிற்கு நீரை எடுத்துச் செல்லுவதற்கான சுரங்கக் கால்வாய் அமைக்கும் பணியும் முழு மூச்சுடன் நடைபெற்று வருகின்றன. சிற்றணையின் இடது பக்கத்தில் கடைக்கால் போடும் பணியும், வலது பக்கத்தில் கல் கட்டிடப் பணியும் நடைபெற்று வருகின்றன. சுரங்கப் பாதையின் நுழைவு வாயில், வெளியேறும் வாயில் ஆகிய இரண்டு இடங்களில் தலை வாய்க்கால் வெட்டும் பணியை முடித்த பின்னர், இரண்டு பக்கங்களிலும் சுரங்கப் பணி தொடங்கப் பட்டுள்ளது. நீராறு நீர் கோள் பகுதியில் பெய்த பெரு மழை காரணமாக, நீராறு சுரங்கப் பாதையின் முகப்பு வாயிலில் 1971 ஜூனில் பெரும் மண் சரிவுகள் ஏற்பட்டன; இதனால் தலை வாய்க்காலின் பகுதி மூடப்பட்டதோடு சுரங்க வாயிலுக்கு நுழையும் பாதையும் அடைபட்டு விட்டது. எனவே, மண் சரிவை அகற்ற சுரங்கக் கால்வாய் வெளி வாயிலில்தான் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கீழ் நீராறு அணை, சுரங்கப் பாதை ஆகியவை குறித்த விரிவான ஆய்வு முடிவடைந்துள்ளது. கீழ்க்காணும் செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(i) ஏற்ற உயரத்தில் உப்பாசி ஓடைக்கு குறுக்கே சிற்றணை ஒன்றைக் கட்டுதல் ;

(ii) உப்பாசி ஓடை நீர் முழுவதையும் திருப்பி விடவும், வலது பக்க நீர்க்கோள் பகுதி நீரைத் நீர்த் தேக்கத்தில் விடவும் வகை செய்ய செயற்கை நீர்க் கால் வெட்டுதல் ;

(iii) உப்பாசி நீர் கோள் பகுதி நீருடன் முழு நீர் கோள் பகுதி நீர் முழுவதையும் வெளியேற்றுவதற்கான ஏற்பாட்டுடன், கடல் மட்டத்திலிருந்து 3,305 அடி உயரத்தில், ஒவ்வொன்றும் 5' × 6' அளவுள்ள ஆற்று மதகுகள் இரண்டுடன் கல் கட்டிட அணை ஒன்றைக் கட்டுதல் ;

(iv) கடல் மட்டத்திலிருந்து 3,310 அடி உயரத்தில் நுழைவு வாயிலையும் கடல் மட்டத்திலிருந்து 3,290 அடி உயரத்தில் வெளி வாயிலையும் கொண்ட லாட வடிவிலான 22' × 6'' விட்டமுள்ள சுரங்கப் பாதை அமைத்தல்.



எனினும், கேரள (திட்டத்) தலைமைப் பொறியாளருடன் சேர்ந்து கூட்டு ஆய்வு நடத்திய பின்னர், கீழ் நீராறு அணை, சுரங்கப் பாதை ஆகியவற்றின் வடிவமைப்பு, அணை இருப்பிடம் ஆகியவை (பரம்பிக் குளம்–ஆழியாறு திட்டத்) தலைமை பொறியாளரால் முடிவு செய்யப்படும்.

கட்டுமானத்தின்போதே இத்திட்டம் பாசனத்திற்குக் கொண்டுவரப் பட்டது குறிப்பிடத்தக்க தனிச் சிறப்பு ஆகும். படிப்படியாக இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு பாசன வளம் உருவாக்கப்படுகிறது.

ஆழியாறு அணை, பரம்பிக் குளம் அணை, தூணக் கிடவு அணை, சர்க்கார் பதி மின் நிலையம், திருமூர்த்தி அணை, தண்ணீரை எடுத்துச் செல்வதற்கான இடை இணைப்பு ஏற்பாடுகள், பகிர்ந்தளிப்பதற்கு நிகரான பாசனக் கால்வாய் ஏற்பாடுகள் ஆகியவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 345 அடி உயரமுள்ள சோலையாறு அணை (இதுவே தமிழ் நாட்டில் உள்ள மிக உயரமான அணையாகும்) சென்ற ஆண்டின் இடைப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்டது. ஒப்பந்தத்தின்படி 1971-ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் நாளிலிருந்து கேரள சோலையாறு நீர்த்தேக்கத்திற்கு இந்த அணையிலிருந்து நீர் விடப்பட்டுள்ளது. மேலும், 1971-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் முதன் முறையாகப் பரம்பிக்குளம் நீர்த் தேக்கத்திற்கும் இந்த அணையிலிருந்து நீர் திருப்பிவிடப்பட்டுள்ளது. பெருவரிப்பள்ளம் குறித்த பணி சென்ற ஆண்டின் இடைப்பகுதியிலேயே முடிக்கப்பட்டு, 1971-ஆம் ஆண்டு ஜூலை 14-ஆம் நாளன்று முதன் முறையாக நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது.

1971-ல் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பகுதியில் பருவ மழை அதிகமாக இருந்தது. வட கிழக்குப் பருவ மழை காலத்திலும் பெரு மழை பெய்தது. இதனால், ஆழியாறு, திருமூர்த்தி, உப்பாறு நீர்த் தேக்கங்கள் நிரம்பி வழிந்தன. புதிய ஆயக்கட்டின் 1,52,900 ஏக்கர் பரப்பளவிற்குப் பாசன வசதிகள் கீழ்க்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் வாய்க்காலின் பெயரும், நீர் அடைவுப் பகுதிகளும். | தண்ணீர் விடப் படும் நாள். | பாசனம் பெறும் பரப்பளவு (ஏக்கரில்). | நீட்டிப்பு கால அளவு உட்பட தண்ணீர் விடுவது நிறுத்தப்படும் நாள். | வாய்க்கால் நீரினால் பயனடையும் பரப்பு (ஏக்கரில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| I-வது கால அளவு— | | | | |
| (1) பரம்பிக்குளம் தலைக் கால்வாய் 70/5-லிருந்து 78/3 வரை | 7—7—1971 | 19,500 | 12—1—1972 | 80,57·46 |
| (2) உடுமலைப் பேட்டைக் கால்வாய் .. .. .. .. | 7—7—1971 | 18,500 | 22—12—1971 | 11,513·05 |
| II-வது கால அளவு— | | | | |
| (3) பரம்பிக்குளம் தலைக் கால்வாய் 0/0-லிருந்து 18/7 வரை | 15—7—1971 | 53,000 | 21—1—1972 | 23,877·35 |
| (4) வேட்டைக்காரன் புதூர் கால்வாயின் " A " மண்டலம் .. | 16—9—1971 | 5,900 | 29—2—1972 | 344·07 |
| (5) உப்பாறு நீர்த் தேக்கம் .. .. .. .. .. .. | 7—10—1971 | 6,060 | 7—3—1972 | 1,248·47 |
| (6) பரம்பிக் குளம் முக்கிய கால்வாய் 18/7-லிருந்து 44/6 வரை | 15—11—1971 | 50,000 | 31—3—1972 | * |
| | | 1,52,960 | | 45,040·41 |

* கால்வாய் நீரைப் பயன்படுத்தும் பகுதியின் ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.



தவிர, ஆளியாறு திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் தற்போதுள்ள பழைய ஆயக்கட்டான 16,400 ஏக்கர்களுக்கும், கேரளாவில் 20,000 ஏக்கர்களுக்கும் பாசன வசதி அளிக்கப்பட்டது.

### (3) சித்தாறு-பட்டணங்கால் திட்டம் (இரண்டாவது திட்டம்).

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| திட்டத்தின் மொத்தச் செலவு .. .. .. .. | 6,84·00 |
| மூன்றாவது திட்டக் காலத்தில் செய்யப்பட்ட செலவு .. .. | 2,05·35 |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செய்யப்பட்ட செலவு .. | 2,72·96 |
| 1969–70-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. .. | 72·67 |
| 1970–71-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. .. | 44·69 |
| 1970–71 முடிய செய்யப்பட்ட மொத்தச் செலவு .. .. | 5,95·67 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. .. | 2,22·00 |
| 1971–72 திருத்த மதிப்பீடு .. .. .. .. .. | 41·51 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செலவு .. .. .. | 19·89 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 29·54 |

பேச்சிப்பாறை அணைக் கட்டின் கீழ் கோதையாற்றில் கலக்கும் இரு சிற்றாறுகளின் குறுக்கே 2 சிறிய நீர்த் தேக்கங்களை அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்போதுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் முழு நீர்த் தேக்க மட்டங்கள், அவற்றின் கொள்ளளவுகளைக் கூடுதலாக்குவதற்காக உயர்த்தப்படும். பட்டணங்கால் கால்வாய் எனப்படும் புதிய கால்வாய் ஒன்றையும் வெட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் துணை வட்டத்தில் 17;000 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கெனத் தற்போதுள்ள நீலப்பாறைக் கால்வாயிலிருந்து ஒரு கிளைக் கால்வாய் வெட்டப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 15,000 ஏக்கர் (நன்செய்) இரு போகப் பயிருக்கும் (மொத்தப் பரப்பு 30,000 ஏக்கர்), திருநெல்வேலி மாவட்டத்தில் 17,000 ஏக்கர் புன்செய்ப் பயிருக்கும் இத்திட்டத்தின் மூலம் பாசன வசதி கிடைக்கும்.

பணிகள் கிட்டதட்ட முடிவுறும் நிலையில் உள்ளன. பாசனத்திற்காகத் தண்ணீர் விடப்பட்டது.

### மணிமுத்தா நதித் திட்டம் (1966–67 ஆண்டு திட்டம்).

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. .. | 1,06·00 |
| 1966–67-லிருந்து 1968–69 வரை செய்யப்பட்ட செலவு .. | 92·52 |
| 1969–70-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. .. | 6·55 |
| 1970–71-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. .. | 2·76 |
| 1970–71 முடிய செய்யப்பட்ட மொத்தச் செலவு .. .. | 1,01·83 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கம் .. .. .. | 18·00 |

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1971–72 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 2·45 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செலவு .. .. .. | 0·33 |
| 1972–73 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 1·29 |

தென் ஆர்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் மணிமுக்தா நதியின் குறுக்கே 72·8 கோடி கன அடி கொள்ளளவு உள்ள ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதும், வலப்புறத்தில் 7½ மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டுவதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். தற்போதுள்ள சுமார் 250 ஏக்கருக்கு இடையருத பாசனம் அளிப்பதும், 4,000 ஏக்கர் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றுவதும் இத் திட்டத்தின் குறிக்கோளாகும். இத் திட்டம் முடிவடைந்து பாசனப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(4) இராமநதித் திட்டம் (1966–67 ஆண்டுத் திட்டம்).

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. .. | 1,80.00 |
| 1966–67 முதல் 1968–69 வரை செய்த செலவு .. .. | 10·33 |
| 1969–70-ல் செய்த செலவு .. .. .. .. .. | 29·14 |
| 1970–71-ல் செய்த செலவு .. .. .. .. .. | 54·94 |
| 1970–71 முடிய செய்த மொத்தச் செலவு .. .. .. | 94·41 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கம் .. .. .. | 75·00 |
| 1971–72 திருத்த மதிப்பீடு .. .. .. .. .. | 33·51 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு .. .. | 28·74 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 36·14 |

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமிரவருணியின் துணைக் கிளை நதியாகிய இராமநதியின் குறுக்கே 15 கோடி கன அடி கொள் அளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பதும், புதிய கால்வாய் ஒன்றை வெட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆற்றின் கீழ் 4,170 ஏக்கர் தற்போதைய ஆயக்கட்டு நிலங்களில் 30 சதவீத நிலங்களுக்கு இடையருத பாசன வசதி அளிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும் இத்திட்டம். அம்பாசமுத்திரம் வட்டத்தில் 500 ஏக்கர் புதிய நிலப் பரப்பும் இந்தப் பாசன ஏற்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்படும். ஆனால், இந்நிலங்களுக்கு அக்டோபர்–பிப்ரவரி பருவத்தில் ஒரு போகம் மட்டும் பயிரிடப்படுவதற்குப் பாசன வசதி அளிக்கப்படும். இத் திட்டத்திற்கு 1966 அக்டோபரில் அனுமதி வழங்கப்பட்டது. வெள்ளக்கால் கல் கட்டிடப் பணியும், ஆற்று மதகுகள் கட்டும் பணி கிட்டத்தட்ட முடிவடையும் நிலையில் உள்ளது. மண் அணை, வெள்ளக்கால் அல்லாத கல் கட்டிட அணை கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.



(5) கடனா நதித் திட்டம் (1966–67 ஆண்டுத் திட்டம்).

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. .. | 190·00 |
| 1966–67 முதல் 1968–69 வரை செய்த செலவு .. .. | 30·30 |
| 1969–70-ல் செய்த செலவு .. .. .. .. .. | 38·35 |
| 1970–71-ல் செய்த செலவு .. .. .. .. .. | 77·57 |
| 1970–71 முடிய செய்த மொத்தச் செலவு .. .. .. | 146·22 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கம் .. .. .. | 154·00 |
| 1971–72 திருத்த மதிப்பீடு .. .. .. .. .. | 36·99 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு. .. .. | 34·70 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 10·97 |

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பான்குளம் கிராமத்திலிருந்து இரண்டு மைல் தொலைவில் கடனா நதியின் (தாமிர வருணியின் கிளை நதி) குறுக்கே 38 கோடி கன அடி கொள் அளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஆற்றினால் பாசனம் பெறும் 7,112 ஏக்கர் கொண்ட தற்போதைய ஆயக்கட்டு நிலத்திற்கு இடையருத பாசன வசதி அளிப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்துடன் இத்திட்டம் இரண்டு பருவங்களில் கூடுதலாக 1,000 ஏக்கர் நிலத்தைப் பாசனத்தின் கீழ்க் கொண்டுவரும். இத்திட்டத்திற்கு 1967-ல் அனுமதி வழங்கப்பட்டது. மண் அணை, வெள்ளக்கால் கல் கட்டிடப்பணி, தலை மதகுகள், ஆற்று மதகுகள் கட்டும் பணி ஆகியவை கிட்டத்தட்ட முடிவடையும் நிலையில் உள்ளன. உபரி நீரைக் கொண்டு செல்லும் வாய்க்கால் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது.

(6) வைகை வாய்க்காலை காலத்திற்கேற்றவாறு மாற்றியமைத்தல் (1967–68 ஆண்டுத் திட்டம்).

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. .. | 433·00 |
| 1968–69-ல் செய்த செலவு .. .. .. .. .. | 5·41 |
| 1969–70-ல் செய்த செலவு .. .. .. .. .. | 11·69 |
| 1970–71-ல் செய்த செலவு .. .. .. .. .. | 14·87 |
| 1970–71 முடிய செய்த செலவு .. .. .. .. | 31·97 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. .. | 393·00 |
| 1971–72 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 55·71 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு .. .. | 24·39 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 78·75 |

வைகைக்குக் குறுக்கே, விராகனூரில் ஒன்றும், பார்த்திபனூரில் ஒன்றுமாக இரண்டு பொறி மதகுகளைக் கட்டுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தப் பொறி மதகுகளின் இரு பக்கங்களிலும் பொது வாய்க்கால்கள் வெட்டப்படும். தற்போதுள்ள பல ஏரிகளும், கால்வாய்களும் இதனால் நீர் பெறும். தற்போது பாசனம் பெறும் சுமார் 95,882 ஏக்கர் நிலங்களுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கப்படும். ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டிருந்தும் இதுவரை பாசன வசதி பெறாத 13,900 ஏக்கருக்குப் பாசன வசதி கிட்டும்.

பார்த்திபனூரில் பொறி மதகு கட்டும் பணியும், இடது, வலது தலைக் கால்வாய் கட்டும் பணியும் முழுமூச்சுடன் நடைபெற்று வருகின்றன. விராகனூரில் பொறி மதகு கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்.**

5. நான்காவது திட்டத்தில் 13 புதிய திட்டங்கள் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன. கீழ்க்காணும் திட்டங்களுக்கு இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

(1) பாலாறு–பொரந்தலாறு திட்டம்.
(2) பரப்பலாறு திட்டம்.
(3) சின்னாறு திட்டம்.
(4) தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.
(5) நந்தன் வாய்க்கால்களைப் புதுப்பித்தல்.
(6) கறுப்பா நதித் திட்டம்.
(7) பொன்னணியாறு திட்டம்.
(8) பிளவுக் கல் திட்டம்.

இத் திட்டங்களின் விவரங்களும் கிடைக்கவிருக்கும் பயன் முதலிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**(1) பாலாறு–பொரந்தலாறு திட்டம்.**

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு | 281·60 |
| 1970–71-ல் செய்த செலவு | 0·20 |
| 1970–71 முடிய செய்த மொத்தச் செலவு | 0·20 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | 256·90 |
| 1971–72 திருத்த மதிப்பீடு | 80·00 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு | 54·44 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 100·00 |



மதுரை மாவட்டம், சண்முக நதியின் துணைக் கிளை நதிகளாகிய பாலாறு-பொரந்தலாறு ஆறுகளின் குறுக்கே 7,910 அடி நீளமுள்ள இணைப்பு அணை ஒன்றைக் கட்டுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. பழைய, புதிய ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்காக அணையின் இடது பக்கத்தில் 15 மைல் நீளமுள்ள தலைக் கால்வாய் ஒன்று வெட்டப்படும். 4,500 ஏக்கர் கொண்ட புதிய பகுதியைப் பாசனத்தின்கீழ்க் கொண்டுவருவதற்குத் தக்கபடி இந்த நீர்த்தேக்கம் 125·4 கோடி கன அடி நீர் கொள் அளவு உடையதாக இருக்கும். மேலும், தற்போதுள்ள ஆயக்கட்டிலிருந்தும், பாசனம் பெறாத 481 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கவும் இத் திட்டம் பயன்படும். மேலும், தற்போதுள்ள 10,000 ஏக்கர் நிலத்திற்கு இடையறாத பாசன வசதியை அளிக்கும்.

பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**(2) பரப்பலாறு திட்டம்.**

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு | 39·12 |
| 1970–71-ல் செய்த செலவு | 1·80 |
| 1970–71 முடிய செய்த மொத்தச் செலவு | 1·80 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | 36·00 |
| 1971–72 திருத்த மதிப்பீடு | 25·00 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு | 13·00 |
| 1972-73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 25·00 |

நங்காஞ்சி ஆறு எனப்படும் பரப்பலாறு அமராவதி ஆற்றின் கிளை நதியாகும். அணைக்கட்டு, வாய்க்கால்கள் மூலமாக இந்த ஆறு 1,422 ஏக்கருக்குப் பாசனம் அளிக்கிறது. மேற்சொன்ன பகுதிக்கு இடையறாத பாசன வசதி அளிக்கவும், மேலும் 890 ஏக்கர்களுக்கு இந்த ஆற்றினால் பாசன வசதி பெறச் செய்யவும் வேண்டி, தாழையூத்து அருவிக்கு சுமார் 6 பர்லாங்கு மேற்பகுதியில் 16·7 கோடி கன அடி நீரைத் தேக்க, 3,660 அடி நீளமுள்ள கல் கட்டிட அணை ஒன்றைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள அணைக்கட்டுகள் அவசியமான இடங்களில் சீரமைக்கப்படும். தற்போதுள்ள வாய்க்கால்கள் பாசனம் அளிக்கும் தரமான நிலைக்குக் கொண்டுவரப்படும். இப்பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

**(3) சின்னாறு திட்டம்.**

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| திட்டச் செலவு | 1,18·25 |
| 1970–71-ல் செய்த செலவு | 2·17 |
| 1970–71 முடிய செய்த மொத்தச் செலவு | 2·17 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | 1,08·00 |
| 1971–72 திருத்த மதிப்பீடு | 28·86 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு | 18·46 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 44·88 |

தருமபுரி மாவட்டம், சின்னாறுக்குக் குறுக்கே 50 கோடி கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 4,500 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலங்கள் (புதிய பகுதி 1,874 ஏக்கர், 2,626 ஏக்கர் பரப்புள்ள பழைய ஆயக்கட்டுப் பகுதி) பாசனப் பயனைப் பெறும். சாலைப் பணிகளும் மண் அணைகட்டும் பணியும் நடைபெற்று வருகின்றன. எல்லாக் கட்டிடப் பணிகளும் கிட்டத்தட்ட முடிவடையும் நிலையில் உள்ளன.

### (4) தண்டரை அணைக்கட்டுத் திட்டம்.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு | 51·81 |
| 1970–71-ல் செய்த செலவு | 5·30 |
| 1970–71 முடிய செய்த மொத்தச் செலவு | 5·30 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | * |
| 1971–72 திருத்த மதிப்பீடு | 18·92 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு | 8·45 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 20·69 |

வட ஆர்க்காடு மாவட்டம், தண்டரை கிராமம், செய்யாற்றுக்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்றைக் கட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இடது பக்கக் கால்வாயை வெட்டுவதன் மூலம் தூசி, மாமண்டூர் ஏரிகளுக்கும் பிற 15 ஏரிகளுக்கும் தண்ணீர் விடப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதால் தற்போதுள்ள ஆயக்கட்டு நிலங்களில் 6,135 ஏக்கருக்கு இடையறாத பாசன வசதி கிடைக்கும். மேலும், ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டிருந்தபோதிலும் பாசனம் பெறாத 1,400 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிட்டும்.

அணைக்கட்டு கட்டும் பணி நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. கால்வாய் வெட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்ட நிலையம், பண்டங்கள் வைக்கப்படுகிற கொட்டகைகள், அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் பணி முடிவடைந்து விட்டது.

### (5) நந்தன் வாய்க்காலைப் புதுப்பித்தல்.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு | 48·00 |
| 1970–71-ல் செய்த செலவு | 0·08 |
| 1970–71 இறுதி வரை செய்த மொத்தச் செலவு | 0·08 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | * |
| 1971–72 திருத்த மதிப்பீடு | 7·35 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு | 1·27 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 22·27 |

* ஒரு மொத்த நிதி ஒதுக்கமான ரூ, 225 இலட்சத்தில் இது அடங்கும்.



பனைமலை ஏரிக்கும், ஏனைய எட்டு ஏரிகளுக்கும் தண்ணீர் விடுவதற்காக, வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், செம்மந்தனூர் கிராமத்துக்கருகில், துரிஞ்சலாற்றுக்குக் குறுக்கேயுள்ள கீரனூர் அணைக்கட்டிலிருந்து வரவுகால் வெட்டுவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம், ஆயக்கட்டிலிருந்தும் பாசனம் பெறாத 257·42 ஏக்கர் பரப்புள்ள நிலத்திற்குப் பாசனம் அளிக்கும் என்றும் தற்போதுள்ள 4,805 ஏக்கர்களுக்கு இடையறாத பாசன வசதி அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பாசன வசதி குறித்த ஆய்வுகள் முடிவடைந்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (6) கறுப்பா நதித் திட்டம்.

| | (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| திட்டச் செலவு | 154·00 |
| 1970–71-ல் செலவு | 0·03 |
| 1970–71-ல் முடிய செய்த செலவு | 0·03 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | * |
| 1971–72 திருத்த மதிப்பீடு | 29·93 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு | 10·01 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 87·63 |

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சொக்கம்பட்டி கிராம எல்லையில் கறுப்பா நதிக்குக் குறுக்கே 18·5 கோடி கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆறு அணைக்கட்டு பாசன ஏற்பாடுகளின்கீழ் 7,867 ஏக்கர் நீண்டகாலப் பயிர்களுக்கும், 796 ஏக்கர் குறுவைப் பயிர்களுக்கும் பாசன வசதி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்துடன், நீண்ட காலப் பயிர் விளைவிக்கப்படும், ஆயக்கட்டிலிருந்தும் பாசனம் பெறாத 1,647 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிப்பதும், குறுவைப் பயிர் விளைவிக்கப்படும் 1,223 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளிப்பதும் இதன் குறிக்கோளாகும். பாசனப்பணி தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது.

### (7) பொன்னணியாறு திட்டம்.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு | 50·75 |
| 1970–71-ல் செய்த செலவு | 8·66 |
| 1970–71 முடிய செய்த செலவு | 8·66 |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | * |
| 1971–72 திருத்த மதிப்பீடு | 24·23 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு | 9·52 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 39·94 |

* ஒரு மொத்த நிதி ஒதுக்கமான ரூ. 225 இலட்சத்தில் இது அடங்கும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம், பொன்னணியாற்றுக்குக் குறுக்கே 17·5 கோடி கன அடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இருமுறை நீர் நிரப்பப்படுவதால், 1,830 ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசனம் அளிக்கவும், 271 ஏக்கர்களுக்கு இடையறாத பாசனம் அளிக்கவும் 35 கோடி கன அடி நீரைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்றுவருகிறது

(8) பிளவுக்கல் திட்டம்.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. .. .. | 83·16 |
| 1970–71-ல் செய்த செலவு .. .. .. .. .. | .. |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. .. | * |
| 1971–72 திருத்த மதிப்பீடு .. .. .. .. | 17·83 |
| 1971–72-ல் 1971 டிசம்பர் முடிய செய்த செலவு .. .. | 4·53 |
| 1972–73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு .. .. .. | 49·93 |

(* ஒரு மொத்த நிதி ஒதுக்கமான ரூ. 225 இலட்சத்தில் இது அடங்கும்.)

கோவிலாறுக்குக் குறுக்கே ஒன்றும், பெரியாற்றுக்குக் குறுக்கே மற்றொன்றுமாக முறையே 13·3 கோடி கன அடி, 19·20 கோடி கன அடி கொள்ளளவுள்ள இரண்டு நீர்த்தேக்கங்கள் அமைக்கும் பணி இத்திட்டத்தில் அடங்கும். கீழ்க்காணும் பாசனப் பலன்களை இத்திட்டம் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது: (1) சுமார் 7,389 ஏக்கர் உள்ள தற்போதைய ஆயக்கட்டிற்கு இடையறாப் பாசன வசதி அளித்தல், (2) தண்ணீர் வரி விதிக்கப்படும் 501 ஏக்கர்கள் நிலத்தினை முறைப்படுத்தல், (3) 1,315 ஏக்கர் புதிய ஆயக்கட்டிற்குப் பாசனம் அளித்தல் (புன்செய் நிலத்தை நன்செய்யாக மாற்றுதல்), (4) ஆயக்கட்டிலிருந்தும் பாசனம் பெறாத 187 ஏக்கர் நிலத்திற்குப் பாசனம் அளித்தல், (5) தற்போதைய ஏரிப் பாசனத்தின்கீழ் கூடுதலாக 1,146 ஏக்கரில் குறுவைப் பயிருக்குப் பாசனம் அளித்தல்.

தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவிலாறு, பெரியாறு மண் அணைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு பணி தொடங்கியுள்ளது.

6. நான்காவது திட்டத்திலடங்கிய கீழ்க்காணும் எஞ்சிய திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன :—

(1) தஞ்சாவூர் வாய்க்கால்களைக் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைத்தல்.
(2) பெரியாறு வாய்க்கால்களுக்குச் சீரமைப்பு.
(3) மருதா நதித் திட்டம்.
(4) தொட்டஹள்ளா திட்டம்.
(5) கொல்லி மலைக்கருகே அய்யாறுக்குக் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுதல்.



இவற்றுள், திட்ட ஆணைக் குழுவிடமிருந்து அண்மையில் அனுமதி கிடைத்துள்ள மருதா நதித் திட்டம் 1972–73-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

## பெரிய-நடுத்தரத் திட்டங்களைக் குறித்த 1972–73-ஆம் ஆண்டு வேலைத் திட்டம்.

7. 1972–73-ஆம் ஆண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நான்காவது ஆண்டாகும். இந்த ஆண்டில், 4-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சென்ற திட்டங்களில் எஞ்சிய வேலைத் திட்டங்களும், 5-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள நான்காவது திட்டத்தின் வேலைத் திட்டங்களும், தொடர்ந்து நிறைவேற்றப்படுவதோடு மருதா நதித் திட்டமும் எடுத்துக் கொள்ளப்படும். காவிரிக்கயவாய்ப் பாசன ஏற்பாட்டினைப் பழுதுபார்க்கும், புதுப்பிக்கும் விரைவுத் திட்டத்திற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1972–73 ஆண்டு தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ. 1,298·33 இலட்சம் செலவு ஆகும். பணிகளை மேற்கொள்ளும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. 1972–73-ல் இத்திட்டத்தின்கீழ், ரூ. 244 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## திட்டத்தில் சேராத வேலைத் திட்டங்கள்.

8. திட்டப் பணிகள் தவிர, திட்டத்தில் சேராத பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில முக்கியமான பணிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| வேலைத் திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு | தற்போதைய நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 13 அமராவதி வாய்க்கால்களைப் புதுப்பித்து அமைத்தல். | 30·08 | பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. |
| 2. தாமிரவருணி வாய்க்கால்களைப் புதுப்பித்து அமைத்தல். | 24·56 | ஐந்து வாய்க்கால்களில் பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய 4 வாய்க்கால்களின் பணி செவ்வனே நடைபெறுகிறது |
| 3 மஞ்சளாறு திட்டம். | 109·00 | மண் அணையில் தார் போடும் பணி, அவசரகால வாயில்கள் பொருத்துவது, இறுதிப் பணிகள் தவிர மற்ற எல்லா பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. |

| வேலைத் திட்டத்தின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு. | தற்போதைய நிலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 4 நெய்யாறு II-வது நிலை. | 2·5 | 45 கூடுதல் மதகுகள் கட்டுவதற்கும், 50 ஏக்கர் வரையில் கண்ணி வாய்க்கால்களை வெட்டவும் ரூ. 2·5 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 45 மதகுகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 21 கண்ணி வாய்க்கால்களில் 20 வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. நீதிமன்றத் தடை ஆணையினால் ஒரு கண்ணி வாய்க்கால் வெட்டும் பணி மட்டும் தடைப்பட்டுள்ளது. |

### சிறு பாசனச் சிறப்புத் திட்டம்.

9. இது ஒரு திட்டப் பணியாகும். ஒவ்வொன்றும் ரூ. 25·00 இலட்சத்திற்கும் குறைவாக ஆகும் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதே இத்திட்டப் பணியின் நோக்கமாகும். இந்தத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன :—

(1) உடைப்பு எடுத்த அல்லது புறக்கணிக்கப்பட்ட ஏரிகளைச் சீரமைத்தல்.

(2) புதிய ஏரிகளை அமைத்தல், பயன்படா ஏரிகளையும், ஆறுகளிலிருந்து பிரிந்து செல்லும் பழைய ஊற்று வாய்க்கால்களை அல்லது வெள்ள வாய்க்கால்களைத் தூர் எடுத்துப் புதுப்பித்தல்.

(3) பாசன ஏரிகளின் நீர் வரவைப் பெருக்குவதற்கு ஆற்றுக்குக் குறுக்கேயும், ஓடைகளுக்குக் குறுக்கேயும் முறையே அணைக்கட்டு கட்டுதல். திசை திருப்பும் சாதன அமைப்புகளை ஏற்படுத்துதல். ஏற்கனவே உள்ள அணைக்கட்டுகளையும் பாசனப் பணிகளையும் புதுப்பித்தல்.

(4) உப்பங்கழியால் பாதிக்கப்படும் கடற்கரைக்கு அருகில் உள்ள சதுப்பு நிலங்களுக்குத் தக்க வடிகால் வசதி ஏற்படுத்திப் பண்படுத்தல்.

(5) ஆற்று நீரிறைக்கும் திட்டம்.

(6) ஊற்று நீர் மட்டத்தை உயர்த்தும் பொருட்டு குளங்கள் அமைத்தல்.





கடந்த திட்டகாலங்களிலும், நான்காவது திட்டத்திலும் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவும், அடைந்த பலன்களும், முடிந்த வேலைகள் முதலியவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கால அளவு. | முடிக்கப்பட்ட வேலைகள். | செலவு. | புதிய பரப்பளவு இடைவெளி. | இடையறாத பாசனவசதி பெற்றவை. | மூழ்கிய நிலங்களை மீட்டல். | கூடுதல் உணவு உற்பத்தி ஏற்படுத்தப் பட்ட வளம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | (ஏக்கரில்) | (ஏக்கரில்.) | (ஏக்கரில்.) | (டன்களில்.) |
| முதலாவது திட்டம் .. .. .. .. .. .. | 2,458 | 382·60 | 32,000 | 4,30,000 | .. | 69,750 |
| இரண்டாவது திட்டம் .. .. .. .. .. | 2,250 | 498·95 | 65,328 | 1,22,272 | .. | 47,948 |
| மூன்றாவது திட்டம் .. .. .. .. .. | 4,286 | 1,168·49 | 1,35,492 | 4,10.581 | .. | 1,19,024 |
| ஆண்டுத்திட்டம்— | | | | | | |
| 1966–67 .. .. .. .. .. .. | 935 | 328·91 | 23,059 | 73,909 | 3,416 | 21,110 |
| 1967–68 .. .. .. .. .. .. | 751 | 307·74 | 18,022 | 51,544 | 691 | 15,524 |
| 1968–69 .. .. .. .. .. .. | 661 | 252·69 | 22,402 | 68,378 | 8,192 | 20,567 |
| நான்காவது திட்டம்— | | | | | | |
| 1969–70 .. .. .. .. .. .. | 1,009 | 241·03 | 26,278 | 95,514 | 5,187 | 25,597 |
| 1970–71 .. .. .. .. .. .. | 923 | 290·37 | 21,986 | 94,232 | 5,177 | 67,288 |

நடப்பாண்டில் 25,750 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதியளிக்கவும், இப்போதுள்ள 61,250 ஏக்கர் நிலத்திற்கு இடையறாத பாசன வசதி அளிப்பதற்கும் 725 பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 300 இலட்சமாகும். 1971 டிசம்பர் வரை, ரூ. 238 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 501 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

1972–73-ஆம் ஆண்டில் 25,750 ஏக்கர் புதிய பரப்பளவும், இப்போதுள்ள 61,250 ஏக்கர் ஆயக்கட்டுக்கு இடையறாத பாசன வசதி அளித்து விளைச்சலுக்குக் கொண்டுவரவும், 725 பாசன வேலைகள் செய்துமுடிக்கப்படுமெனத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. 1972–73-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 300 இலட்சமாகும்.

## தூர் வாருதல்—பண்படுத்துதல்

10. முழுமையாகவும், பகுதியாகவும் தூர் எறிவிட்டதன் காரணமாக கொள் அளவு இழந்துவிட்ட ஏரிகளின் படுகைகளில் தூர் எடுக்கவும், முழு ஏரி மட்டத்தை உயர்த்துவதன்மூலம் இழந்த முழு சேமிப்பு அளவில் ஒரு பகுதியை அல்லது முழு அளவையும் மீட்கவும் இத்திட்டத்தின் கீழ்க் கருதப்பட்டுள்ளது. திட்டகாலங்களில் தூர் எடுத்தல்—பண்படுத்தல் திட்டத்தின்கீழ் ஏற்பட்ட செலவும், முடிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கையும்,* பலன்கள் முதலியவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| திட்டகாலம். | முடிக்கப்பட்ட வேலைகள். | செலவு. | பாசன வசதி அளிக்கப்படாத பகுதிகள். | ஏரி எதிர்வாய் நிலம் பண்படுத்துதல். | கூடுதல் உணவு உற்பத்தி ஏற்படுத்தப்பட்ட வளம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| இரண்டாவது திட்டம் .. .. | 38 | 30·68 | 2,208 | 604 | 1,255 |
| மூன்றாவது திட்டம் .. .. | 53 | 85·65 | 2,039 | 1,038 | 1,279 |
| ஆண்டுத் திட்டங்கள்— | | | | | |
| 1966–67 .. .. .. .. | 5 | 21·14 | 174 | 45 | 98 |
| 1967–68 .. .. .. .. | 15 | (—)5·48* | 489 | 209 | 297 |
| 1968–69 .. .. .. .. | 10 | 17·07 | 488 | 163 | 285 |
| நான்காவது திட்டம்— | | | | | |
| 1969–70 .. .. .. .. | 7 | 11·69 | 249 | 179† 1,421*** | 347 |
| 1970–71 .. .. .. .. | 19 | 21·21 | 699 | 408† 4,605*** | 3,066 |

* (மற்ற கோட்டங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்ட இயந்திரங்களுக்கு வாடகைக் கட்டணங்கள் பெருமளவிற்கு வசூலிக்கப்பட்டதால், செலவு குறைந்துள்ளது.)

*** (இடையறுத பாசன வசதியளித்தல்)



நடப்பாண்டில் 10 பணிகள் நிறைவேற்றப்படும். ஆயக்கட்டுப் பகுதியிலிருந்தும் பாசன வசதி பெறாத 500 ஏக்கர் பகுதிக்குப் பாசன வசதியளிக்கும் பணிகளும், ஏரி எதிர்வாய் நிலங்களில் 250 ஏக்கர் பகுதியை பண்படுத்தி விளை நிலமாக்கும் பணிகளும் நிறைவேற்றப்படும். 1971–72-ல் செலவாகுமென எதிர்பார்க்கப் படும் தொகை ரூ. 11·36 லட்சமாகும். 1971–72-ல் 1971 டிசம்பர் திங்கள் முடிய ஆன செலவு ரூ. 5·45 லட்சமாகும். இதுவரை 15 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆயக்கட்டுப் பகுதியிலிருந்தும் பாசன வசதி பெறாத 500 ஏக்கர் பரப்பளவிற்கு பாசன வசதியளிப்பதற்காகவும், ஏரி எதிர்வாய் நிலங்களில் 250 ஏக்கர் பகுதியைப் பண்படுத்தி விளை நிலமாக்கவும், 1972–73-ல் 10 பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972–73 வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 17·68 லட்சமாகும்.

### நில நீர் ஆய்வு—(1) ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டம்.

11. ஐக்கிய நாடுகள் வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன் இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நில நீர் ஆய்வுக்கான திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கியது. கீழ்க்காணும் பகுதி களில் நில நீர் வளங்களைப்பற்றி விரிவான ஆய்வு செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும் :—

(1) சென்னை மாநகரம் அதன் சுற்றுப்புறங்கள், (2) பாலாறு பள்ளத்தாக்குப் பகுதி, (3) நெய்வேலி பகுதி, (4) காவிரி கயவாய்ப் பகுதி.

இத் திட்டம் 1966 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது. இத் திட்டத்தின் முதல் நிலை ஆய்வுப்பணி 30-6-1969-ல் செய்து முடிக்கப்பட்டது.

ஆய்வின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(2) சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் செய்த ஆய்விலிருந்து குறிப்பிடத்தக்க நீர் வளமுடைய ஒரே ஆதாரம் புவியியல் வகையில் அண்மைக்கால வண்டல் மண் நிலமாகும். இயல்பான அளவு மழை பொழியும் ஆண்டுகளில் குடியானவர்கள் பாசனத்திற்கு நீர் பெறுவதற்கு ஒருவித இடையூறுமில்லாமல் கீழே விவரித்துள்ளவாறு கூடுதல் ஊற்றுநீர் பெறமுடியும்.

| | | |
|---|---|---|
| மீஞ்சூர் | .. .. .. | நாள் ஒன்றுக்கு 75 லட்சம் கேலன் நீர். |
| துரநல்லூர்-பஞ்செட்டி | .. | நாள் ஒன்றுக்கு 90 லட்சம் கேலன் நீர். |
| தாமரைப்பாக்கம்-கீழனூர் | .. | நாள் ஒன்றுக்கு 110 லட்சம் கேலன் நீர். |

**மொத்தம்** நாள் ஒன்றுக்கு 275 லட்சம் கேலன் நீர்.

[1972 மார்ச் 21

சென்னை எண்ணெய் தூய்மைத் தொழிற்சாலைக்கு நீர் வழங்குவதற்காக மீஞ்சூர், பஞ்செட்டி, துரநல்லூர் பகுதியில் இப்போது நில நீர் எடுக்கப்பட்டு வருகிறது.

பாலாறு பள்ளத்தாக்குப் பகுதியில் நில நீர் வளங்களுடன் மேம்பாட்டிற்காகப் பரிவுரை செய்யப்பட்ட இடங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1 பொய்னி-பாலாறு சங்கமம். | திட்டமிட்ட வளர்ச்சிக்காக நாள் ஒன்றுக்கு 45 லட்சம் காலன். |
| 2 செங்கற்பட்டு பாலம் | செங்கற்பட்டு தொழுநோய் மருத்துவ நிறுவனத்திற்காக நாள் ஒன்றுக்கு 10 லட்சம் காலன். |
| 3 பழங்காநல்லூர் (கடல் நீர் கலந்துவிடும் அபாயமின்றி.) | நாள் ஒன்றுக்கு அணுமின் நிலையத்திற்குத் தேவைப்படும் 40 லட்சம் காலன் நீருக்காக, நாள் ஒன்றுக்கு 62 லட்சம் காலன் நீர். |

நெய்வேலி பகுதியில் செய்த ஆய்விலிருந்து பண்ணுருட்டிக்கு அருகில் கடிலம் ஆற்றுப்பகுதி நிலத்தின் குறைந்த அளவுத் திறனளவின்படி நாள் ஒன்றுக்கு 350 லட்சம் காலன் இடைக்குமென்று கூறப்படுகிறது.

காவிரி கயவாய்ப் பகுதியின் நீரியல்-நீர் வளம் குறித்த விரிவான ஆய்விற்கு, 1-7-1969-லிருந்து இரண்டாம் நிலை வேலை தொடங்கப்பட்டு, 1972 பிப்ரவரியில் முடிக்கப்பட்டது. அப்பகுதியில் மொத்த வேளாண்மை உற்பத்தியை கூடுதல் நில-நீர் எவ்வாறு பெருக்கமுடியும் என்பதற்கான வழிவகைகளை கண்டறிய நடத்தப்படும் வேளாண்மை, மண்வள ஆய்வுகள் இவ்வாராய்ச்சியில் அடங்கும். இந்த கயவாய்ப் பகுதியின் நில-நீர் வளங்கள் பொதுவாக மதிப்பிடப்பட்டு, துளைக் கிணறுகள் இறக்க விரும்புபவர்களுக்கு நீரோட்டம் இருக்குமிடங்கள் குறித்தும், நீரின் தன்மை குறித்தும் விவரம் கொடுக்கப்பட்டு வருகிறது. நில-நீர் ஆய்வு குறித்த தொழில் நுட்ப உத்திகளில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, 1970 செப்டம்பர்-அக்டோபரிலும் 1971 செப்டம்பர்-அக்டோபரிலும் நான்கு வாரம் இந்த நிறுவனம் பயிற்சி நடத்தியது.

### மாநிலத்தின் நில நீர்வள ஆய்வு இயக்குநரகம்.

12. "நில நீர்வள ஆய்வு இயக்குநரகம்" ஒன்று அமைப்பதன் மூலம் அரசு மேலும் ஒரு முன்னேற்ற நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், வேலூர், காரைக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமை



1972 மார்ச் 21]

யிடமாகக் கொண்ட எட்டு கோட்டங்கள் தற்போது இந்த இயக்குநரகத்தின்கீழ்ச் செயல்படுகின்றன. இந்த இயக்குநரகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :—

(1) நில நீர் வளம் மிகக பகுதிகளைக் கண்டறிவதற்காக இம் மாநிலம் முழுவதிலும், ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளுதல், ஆய்வுகள், குழாய் இறக்கிச் சோதனை செய்தல், நீரைப் பயனபடுத்தும் துறைகளுக்கும், முகவர் நிறுவனங்களுக்கும் தேவையான தகவல்களையும் ஆலோசனையும் நல்குதல்.

(2) ஊற்று நீரைப்பற்றி ஆய்வதிலும் அதனைப் பயன் படுத்துவதிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், துறைகள் அனைத்திடமிருந்தும் கிடைக்கும் புள்ளி விவரங்களைச் சேகரித்து ஒருங்கு திரட்டுதல்.

(3) சிறு குடியானவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை அளித்தல்.

(4) தேவைக்கு அதிகமாக நீர் எடுக்கப்படாதிருக்கும் பொருட்டு கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைப்பதை முறைப்படுத்துதல்.

(5) கடல் நீர் உள்புகுதல், நீர் மூழ்கு நிலங்களை வடிகட்டுப் பண்படுத்துதல், செயற்கை முறையில் மழை பொழிய வைத்தல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்.

தமிழ்நாடு முழுவதிலும் நில நீர் வளம் குறித்து மூன்று ஆண்டுகளில் மதிப்பிடுவதற்காகத் தேவையான எல்லாப் புள்ளி விவரங்களையும் சேகரிக்கும் பணியில் நில நீர் வளக் கோட்டங்கள் ஈடுபட்டுள்ளன. தேவையான சாதனங்களுக்குத் தேவைக்குறிப்பு ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன..

### உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து—கூவம் சீரமைப்புத் திட்டம்.

13. சென்னை மாநகர எல்லைக்குள் ஓடும் கூவம் ஆற்றை எழில் மிகுந்ததாகவும், தூய்மையானதாகவும், நீரூற்று இறக்க வசதிகளுடனும் நீர்ப் போக்குவரத்துக்கு ஏற்றதாகவும் அமைக்கும் பொருட்டு, இந்த ஆற்றின் சீரமைப்பிற்காக ரூ. 110·45 லட்சம் செலவிலான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் மூன்று நிலைகளைக் கொண்டதாகும்.

ரூ.32 லட்சம் செலவிலான முதல் நிலைப்பணிக்கு 1967-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்த முதல் நிலைப் பணியின் கீழ், கூவம் முகத்துவாரத்தில் பொறி மதகு ஒன்றும், மணல்வாரி இயந்திரத்துக்கான தோணித் துறை ஒன்றும் கட்டும் பணியும், நேப்பியர் பாலத்திலிருந்து பொறி மதகு வரை இரு பக்கங்களிலும் கரையமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. பொறி மதகின் எதிர் நீரோட்டப் பகுதியில் பாதுகாப்புப் பணிகள், தோணித்துறையின்மீது மணல்வாரி இயந்திரத்தின் இறுதிச் சோதனைப் பணி நீங்கலாகப் பொறி மதகு, தோணித் துறை கட்டும் பணிகள் நிறைவெய்தின. எஞ்சியுள்ள பணிகளும் 1972 ஜூன் திங்களுக்குள் செய்து முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முதல் நிலைப் பணிக்கு 1967–68–ல் ரூ. 1·24 லட்சமும், 1968–69–ல் ரூ. 5·24 லட்சமும், 1969–70–ல் 23·76 லட்சமும், 1970–71–ல் ரூ. 19·42 லட்சமும் செலவிடப்பட்டது. 1971–72ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 13·01 லட்சம் ஆகும். நடப்பாண்டுச் செலவு 1971 டிசம்பர்வரை ரூ. 7·35 லட்சமாகும்.

ரூ. 62 லட்சம் செலவிலான இரண்டாம் நிலைப் பணிகளுக்கு 1969–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டன. இதன்கீழ், கூவம் முகத்துவாரத்திலிருந்து சேத்துப்பட்டு ரயில் பாலம்வரை கால்வாய் வழிப்படுத்தல், சிமிட்டி கற்கலவைகள் பரப்பப்பட்ட நடைபாதைகளுடன் ஆற்றின் வடக்குப் பக்கத்தில் கால்வாய் வழிப்படுத்தல், படகு குழாம் ஒன்றையும், நீச்சல் குளம் ஒன்றையும் கட்டுதல், பூங்காக்கள், புல் வெளிகள் அமைத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

முக்கிய ஆற்றில் 5 மைல் 3 பர்லாங்கு நீளம் முழுவதும், ஆற்றின் வடபிரிவும் இதுவரை கால்வாய் வழிபடுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. முக்கிய ஆற்றின் இருபுறமும் சிமிட்டிக் காரை பூசிய கரையமைக்கும் பணியில் சுமார் 80 சதவீதம் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளது. வடக்குப் பகுதியின் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. பூங்காக்களும், புல் வெளிகளும் அமைக்கப்பட்டு, போர் நினைவுச் சின்னத்திற்கு எதிராகப் பேணப்பட்டு வருகின்றன. நீச்சல் குளம், படகு குழாம் இவை கிட்டத்தட்ட முடிவடையும் தறுவாயிலுள்ளன. கரணப் பாய்ச்சல் நீச்சல் குளமும், உடை மாற்றிக்கொள்ளும் அறையும் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள், 30–6–1972-க்குள் செய்து முடிக்கப்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

இரண்டாவது நிலைப் பணிக்காக 1969–70–ல் ரூ. 12·37 லட்சமும், 1970–71–ல் ரூ. 56·26 லட்சமும் செலவிடப்பட்டன. 1971–72 திருத்த மதிப்பீடு ரூ. 39·00 லட்சமாகும். நடப்பாண்டுச் செலவு 1971 டிசம்பர் வரை ரூ. 40·45 லட்சமாகும்.

மூன்றும் நிலையின்கீழ், ஆற்றின் இரு மருங்கிலும் வசித்து வரும் குடிசைவாழ் மக்களின் 941 குடும்பங்கள் சிந்தாதிரிப்பேட்டையிலும் கிண்டி பொறியியல் கல்லூரிக்குப் பின்புறம் கோட்டூரிலும் கட்டப்பட்டுள்ள தீப்பிடிக்காத குடியிருப்புகளில் குடியேற்றப்படுவர். சிந்தாதிரிப்பேட்டையில் 242 குடியிருப்புகளும் கோட்டூரில் 699 குடியிருப்புகளும் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 174·83 லட்சமாகும். இத்திட்டத்திற்கு ரூ. 189·97 லட்சம் செலவிலான திருத்த மதிப்பீடு 1971 அக்டோபரில் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

கூவம் ஆற்றில் பாலங்களின் கீழுள்ள படகு போக்குவரத்துக்குள்ள உயரத்தைக் கருத்தில் கொண்டு விடப்படவேண்டிய படகுகளின் தன்மை குறித்தும் பயணிகள் படகுப் போக்குவரத்தை முறைப்படி விடுவது குறித்தும் செயற் குறிப்புகள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. கூவம் ஆற்றின் இரு மருங்குகளையும் எழில்மிக்கதாக்குவதற்கும், சீருலாவில் வருபவர்களைக் கவரும் வண்ணம் பீச்சு நீர் ஊற்று ஒன்றை அமைப்பதற்கும், சென்னை மாநகரவாசிகளுக்குப் பொழுது போக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவும் முதன்மையான கட்டிடக் கலை வல்லுநர்களிடமிருந்து செயற்குறிப்புகளும், வடிவமைப்புகளும் கோரப்பட்டு வருகின்றன.



### பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டம்.

14. இத்திட்டத்திற்கு ரூ. 44·00 லட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், விறகு தோணித் துறையிலும் கிளிஞ்சல் தோணித் துறையிலும், பக்கிங்ஹாம் கால்வாயின் இருமருங்கிலும் சாலைகள் அமைத்தல், சிந்தாதிரிப்பேட்டையில் தோணித் துறை கட்டுதல், கால்வாயின் சில பகுதிகளுக்குக் காரை பூசுதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டன. பக்கிங்ஹாம் கால்வாயில் தூர் எடுப்பதற்கான இயந்திரமும், கூவம் சீரமைப்புத் திட்டத்திற்காகக் கூவம் முகத்துவாரத்தில் பயன்படுத்துவதற்கு மணல்வாரி இயந்திரமும் வாங்கப்பட்டன.

மேலும், தமிழ் நாட்டிற்குள் பக்கிங்ஹாம் கால்வாயில் தூர் எடுத்து நன்கு ஆழப்படுத்திச் சீரமைக்கும் செயற்குறிப்புகளுக்கு மத்திய அரசு கடனுதவியின்கீழ் அண்மையில் ரூ. 20 லட்சம் செலவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1970–71 முடிய இதற்கான செலவு ரூ. 17·964 லட்சமாகும். 1971–72–ல் 1971 டிசம்பர் முடிய செலவு ரூ. 9·04 லட்சமாகும்.

### கடல் அரிப்புத் தடுப்புத் திட்டங்கள்.

15. கன்னியாகுமரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகளில் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளுக்காக 1971–72 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசு ரூ. 1·96 லட்சம் ஒதுக்கியுள்ளது. (1) எரமாந் துறை, (2) மிடாலம் துறை, (3) மேலமணக்குடி, (4) பள்ளந் துறை. 1970 இறுதிக்குள் நிறைவேற்றுவதற்காக இந்த இடங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1971–ல் எல்லாப் பணிகளும் முடிக்கப்பட்டன.

இந்த ஆண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்புப் பணிகளுக்காக ரூ. 4·40 லட்சம் செலவிடப்பட்டது.

தமிழ் நாட்டின் கடற் கரையோரப் பகுதிகளில் கடல் அரிப்பு ஏற்பட்ட இடங்களை ஆய்வு செய்தல், புள்ளி விவரம் சேகரித்தல் பணியும், பூண்டி–பாசன ஆராய்ச்சி நிலைய நிர்வாகப் பொறியாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடற்கரைப் பகுதிகளில் கரைவரை ஆய்வும், கடற்கரை ஆழ ஆய்வும் நடத்தப்பட்டு வருகின்றன. தங்கச்சிமடத்தில் கடல் ஏற்ற இறக்கம், காற்றுப் பதிவுகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரைச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள்

பகுப்பாய்வுச் செய்யப்பட்டு எல்லா நிலையங்களிலும் கணக்கிடப் பட்டுள்ளன. கடல் அரிப்பைத் தடுப்பதற்கான செயற்குறிப்புகளை வகுப்பதன் நோக்கத்துடன் ஆய்வுப் பணியை விரைவு படுத்துவதற்குத் தமிழ் நாட்டின் கடற்கரையோரப் பகுதிகளில் விமானத்திலிருந்து ஆய்வு செய்யும் பணியை மேற்கொள்ளும் செயற்குறிப்பு ஒன்று பரிசீலனையிலுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் மணப்பாடு இராமத்திலும் செங்கற்பட்டு மாவட்டம் கோவளம் இராமத்திலும் கடல் அரிப்புத் தடுப்பு ஏற்பாடுகளுக்கு வகைசெய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காகத் தமிழ் நாட்டின் அராபியக் கடற்கரை நெடுகவும் நிரந்தரமாகக் கடல் சுவர் ஒன்று கட்டும் செயற்குறிப்பு முடிவு செய்யப்பட்டு வருகிறது. கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசிடமிருந்து முழுமானியம் பெறுவதற்கு இந்தச் செயற்குறிப்புகள் விரைந்து பணிந்தனுப்பப்படும்.

## காவிரி கயவாய்ப் பகுதியில் வெள்ளக் கட்டுப்பாடு–வடிகால் திட்டங்கள்.

16. வடிகால் திட்டங்களின்கீழ் ரூ. 52·00 லட்சம் செலவிலான 19 பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவை பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. 1970–71-ல் இதற்கான செலவு ரூ. 6·76 லட்சமாகும். 1971–72-ல் ரூ. 22·98 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1971–72-ல் 1971 டிசம்பர் திங்கள் வரை செலவு ரூ. 18·27 லட்சமாகும். 1972–73-ல் நிதி ஒதுக்கீடு ரூ. 20·73 லட்சம் ஆகும்.

கொள்ளிடம், காவிரி ஆகியவற்றின் வெள்ளக் கரைகள் எங்கெல்லாம் வலுவிழந்து உள்ளனவோ அங்கெல்லாம் வெள்ளத் தடுப்புத் திட்டத்தின் கீழ் அவைகளை வலுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொள்ளிடம் கரையை வலுப்படுத்துவதற்காக ரூ. 10·54 இலட்சம் மதிப்பீட்டுச் செலவிற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அகண்ட காவிரியின் கரைகளையும் கொள்ளிடம் கரையின் சில பகுதிகளையும் ரூ. 10·84 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் வலுப்படுத்துவதற்கான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையிலுள்ளது. பணிகள் நடந்தேறி வருகின்றன. 1970–71-ல் இதற்கான செலவு ரூ. 4·58 லட்சமாகும். 1971–72-ல் திருத்த மதிப்பீடு ரூ. 5·25 லட்சமாகும். 1971 டிசம்பர் முடிய ஆன செலவு ரூ. 4·14 லட்சமாகும். 1972–73-ல் ரூ. 22·35 லட்சம் நிதி ஒதுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

காவிரி கயவாய்ப் பகுதியில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, ரூ. 212 லட்சம் செலவில் மேல் அணைக்கட்டில் காவிரியின் குறுக்கே தடுப்பு அணை ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு இந்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது. திட்ட ஆணைக் குழுவின் ஏற்பளிப்புப் பெறப்பட்டவுடன் பணி மேற்கொள்ளப்படும்.





## பருவ நிலைகள்.

17. 1971–72-ஆம் ஆண்டில் தென்-மேற்குப் பருவமழை காலந் தாழ்த்திப் பெய்யத் தொடங்கியது என்றாலும், பவானி, பெரியாறு, தாமிரவருணி, கோதையாறு ஆகிய ஆறுகளின் நீர்கோள் பகுதிகளில் மழை இயல்பாக இருந்தது. காவிரி, அமராவதி ஆகிய ஆறுகளின் நீர்கோள் பகுதிகளில் சாதாரணமாகப் பெய்யும் மழையைக் காட்டிலும் குறைவாகவே மழை பெய்தது.

வட கிழக்குப் பருவ மழை இம் மாநிலம் முழுவதும் நன்றாகப் பெய்தது. மேட்டூர், பெரியாறு, பவானிசாகர் நீங்கலாக ஏனைய எல்லா நீர்த்தேக்கங்களிலும் நல்ல நீர்வரவின் காரணமாக நீர் நிரம்பி வழிந்தது. இந்த ஆண்டு பாசன ஏற்பாடுகள் அனைத்தும் பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டன. கீழ்பவானி தலைக்கால்வாய் திட்டத்தின்கீழ் புன்செய் பயிருக்கான இரண்டாம் முறை ஆயக்கட்டிற்குப் பாசனம் அளிக்கப் பட்டது.

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மிகவும் குறைந்த அளவு நீர் இருந்த காரணத்தாலும், தென்மேற்குப் பருவமழை காலங்கடந்து பெய்ததாலும், நீர்த்தேக்கம் 1971 ஜூன் 27–ஆம் நாளன்றுதான் பாசனத்திற்குத் திறக்கப்பட முடிந்தது. காவிரி கயவாய்ப் பகுதியில் பெருவாரியான நிலப் பரப்பில் குறுவை அல்லது நடுத்தரக் கால வகையைச் சேர்ந்த இரண்டு பயிர்களை விளைவிப்பதற்காக இயல்பான பயிர் முறையை மாற்றி வேறு முறை பின்பற்றப்பட்டது. மொர்க்காராவில் காவிரி நீர்கோள் பகுதியில் தென்மேற்குப் பருவமழை சுமார் 11 சதவீதம் குறைவாகவே பெய்தது நீர் விடுவதை விவேகமுடனும், விழிப்போடும் முறைப்படுத்தியதன் பலனாக குறுவையும், ஆடுதுறை 27 ரக நெல்லும் செவ்வனே விளைவிக்கப் பட்டன. மொர்க்காராவில் வடகிழக்குப் பருவ மழைக்காலத்தின்போது இயல்பான அளவைவிட சுமார் 25 சதவீதம் குறைவாகவே மழை பெய்தது. எனினும், ஆயக்கட்டு பகுதியில் நல்ல மழை பொழிந்தது. சம்பா பயிர்கள் நன்றாக விளைந்து அறுவடை செய்யப்பட்டன. தாளடிப் பயிர் கதிர் முற்றுவதற்கு 1972-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ஆம் நாளுக்குப் பிறகும் பிப்ரவரி 15-ஆம் நாள் வரை நீர் வழங்கப்பட்டது.

புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயும், புள்ளம்பாடிக் கால்வாயும், மேட்டூர் கால்வாயும், 1971 செப்டம்பர் 1-ஆம் நாளன்று பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்டன. மேட்டூர் கால்வாயில் 1972 பிப்ரவரி 10 ஆம் நாள் வரையிலும், புதிய கட்டளை உயர்மட்டக் கால்வாயிலும், புள்ளம்பாடிக் கால்வாயிலும் 1972 பிப்ரவரி 15 ஆம் நாள் வரையிலும் நீர் வழங்க அனுமதி அளிக்கப்பட்டது. கீழ்ப் பவானி கால்வாயின்கீழ் முதல் முறைப் பாசன ஆயக்கட்டிற்கு 1971 ஆகஸ்டு திங்கள் 1 ஆம் நாளிலிருந்து நீர் வழங்கப்பட்டது. 15 நாட்களுக்குக் கூடுதலாக நீர் வழங்க அனுமதிக்கப் பட்ட பின்னர் பாசனத்திற்கு நீர்விடப்படுவது 1971 டிசம்பர் திங்கள் 16-ஆம் நாளில் நிறுத்தப்பட்டது. புன்செய்ப் பயிர் விளைவிப்பதற்காக 1971 டிசம்பர் திங்கள் 23 ஆம் நாளிலிருந்து இரண்டாவது முறை பாசன ஆயக்கட்டிற்கு நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது.

அமராவதி கால்வாய், 1971 செப்டம்பர் 1-ஆம் நாளன்று பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது. தென்மேற்குப் பருவமழை காலத்தில் இந்த நீர்த்தேக்கத்தில் சேர்ந்த நீரின் அளவு 12 சதவீதம் குறைவானதாகும். வடகிழக்குப் பருவமழை காலத்தில் நீர்த்தேக்கத்திற்கு நல்ல நீர் வரவு கிடைத்து நீர்த்தேக்கம் நிரம்பி வழிந்தது. நீர் வரவு இயல்பான அளவைவிட 77 சதவீதம் கூடுதலாகும். பரசன நீர் வழங்குவது நிறுத்தப்படுவதற்கு வரையறுக்கப்பட்ட நாள் 1972 ஜனவரித் திங்கள் 31-ஆம் நாள் ஆகும். சேமிக்கப்பட்ட நீரைக்கொண்டு 1972 பிப்ரவரித் திங்கள் 29-ஆம் நாள் வரை தேவைப்படும் அளவு நீர்வழங்க அனுமதிக்கப்பட்டது.

கம்பம் பள்ளத்தாக்கில் இரு போகப் பயிர் விளையும் பகுதியில் முதல் போகப் பயிருக்கு 1971 ஜூன் திங்கள் 20-ஆம் நாளிலிருந்தும், பெரியாறு பகுதியில் 1971 ஜூலை திங்கள் 5-ஆம் நாளிலிருந்தும் நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. தென்மேற்குப் பருவ மழையின்போது இந்த நீர்த்தேக்கத்தில் சேர்ந்த நீரின் அளவு இயல்பான அளவைவிட 15 சதவீதம் குறைவானதாகும். வடகிழக்குப் பருவ மழையின்போது இந்த நீர்த்தேக்கத்தில் சேர்ந்த நீரின் அளவு வழக்கமான அளவைவிட 20 சதவீதம் அதிகமானதாகும். பாசன காலத்தின் தொடக்கத்தில் பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு குறைவாகவே இருந்தமையால், திருமங்கலம் கால்வாய்க்கு வழக்கமாக 1971 ஜூன் திங்கள் 1-ஆம் நாளில் விடப்படும் நீர் 1971 செப்டம்பர் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து விடப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டது. ஒருபோகப் பயிர் விளைவிக்கும் பகுதிக்கு வழக்கமான நாளான ஆகஸ்டு 15-ஆம் நாளிலிருந்து நீர் விடப்பட்டது. பெரியாறு புதிய விரிவுப் பகுதிக்கு வழக்கமாக நீர்விடும் நாளான 1971 செப்டம்பர் திங்கள் 15-க்கு பதிலாக 1971 அக்டோபர் 15-ஆம் நாளிலிருந்து நீர் விடப்பட்டது.

வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின்போது வைகை, பெரியாறு நீர்த்தேக்கங்களில் நீர் வரவு அதிகமாயிருந்தது. வைகை நீர்த்தேக்கம் டிசம்பர் திங்களில் நிரம்பி வழிந்தது. இந்த இரண்டு நீர்த் தேக்கங்களிலும் போதுமான அளவு நீர் பெருகியதன் காரணமாக, பெரியாறு பாசன ஏற்பாடு, வைகை நீர்த்தேக்கத் திட்டம், வைகை பழைய ஆயக்கட்டு ஆகியவற்றின்கீழ் தேவைப்படும் நீரைக் கதிர் முற்றும் வரை வழங்குவதில் இடர்பாடு ஏதும் இருக்காது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில், ஆயக்கட்டு முழுவதிலும் குறுவைப் பயிர் விளைவிப்பதற்காக 1971 ஜூலை 12 ஆம் நாளிலிருந்து நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. முதல்போகப் பயிர் அறுவடை செய்யப்பட்ட நிலங்களில் இரண்டாம் போகப் பயிர் விளைவிப்பதற்காகவும் நீர் வழங்கப்பட்டது. நீர் வழங்கப்படுவது நிறுத்தப்படும் நாள் 1972 மார்ச்சு 31 ஆம் நாள் என வரையறுக்கப்ப்ட்டது. கதிர் முற்றும் வரை தேவைப்படும் நீரை வழங்குவதற்கு நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இருக்கிறது.

இந்த ஆண்டு, சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு மிகவும் குறைவாக இருந்ததால், கூடுதல் பயிர் விளைவிப்பதற்காக ஜூன் திங்களில் முன்னதாகவே சிறப்பு வகையில் நீர் வழங்க இயலவில்லை. வடகிழக்குப்



பருவ மழையின்போது இந்த நீர்த்தேக்கத்தில் அதிக அளவு நீர் வரவு ஏற்பட்டு நீர்த்தேக்கம் நிரம்பி வழிந்தது. 21,000 ஏக்கர் பரப்பளவு முழுவதற்கும் முறையான பயிர் விளைவுக்கு 1972 ஜனவரி 1–ஆம் நாளிலிருந்து நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. திருக்கோயிலூர் அணைக்கட்டுப் பாசன ஏற்பாட்டின்கீழ் 5,000 ஏக்கர் நிலத்தில் இரண்டாம் போகப் பயிருக்காக நீர் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வீடூர் நீர்த் தேக்கத்தில், 1971 அக்டோபர், நவம்பர் திங்களில், நீர் இருப்பு மிகவும் குறைவாக இருந்தது. எனவே, 1971 நவம்பர் திங்கள் 21-ஆம் நாளிலிருந்து 600 ஏக்கர் நிலப்பரப்பிற்கு மட்டுமே நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. அதன் பின்னர் நீர்த்தேக்கத்தின் நீர் வரவு பெருகியது. எஞ்சிய 2,600 ஏக்கர் நில்ப்பரப்பிற்கு 1971 டிசம்பர் 16-ஆம் நாளிலிருந்து நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது.

தாமிரவருணி பாசன ஏற்பாட்டில், பாபநாசம் நீர்த்தேக்கம், தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழையினால் இயல்பான அளவைவிட முறையே 38 சதவீதமும் 80 சதவீதமும் அதிகமாகவே நீர் வரவு பெற்றது. நீர்த்தேக்கம் நிரம்பி வழிந்தது. இந்தப் பாசன ஏற்பாட்டின்கீழ் பிசானப் பயிர் தேவைகளை ஈடு செய்வதற்குப் பாபநாசம் நீர்தேக்கச் சேமிப்பு இப்போது சாதகமாயுள்ளது.

| 9 பழைய ஆயகுடி-சட்டப்பாறை சாலை மேம்பாடு செய்தல் (109/6 கோவை-திண்டுக்கல் சாலை முதல் சட்டப்பாறை வரை). | 5·00 | ஷை |

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண்ணும், நாளும். (3) |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்.) | |
| 10 திருநெல்வேலி மாவட்டம். | | |
| மைல் 3/6 வெளவால் ஓடையிலும் மற்றும் மைல் 5/4 அம்பாசமுத்திரம் — பாப்பாகுடி சாலை கடானா ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைப்பது. | 6·00 | 2027 பொ. ப. மற்றும் உள்ளாட்சி துறை 1971-ம் ஆண்டு செப்டம்பர் 4-ம் நாள். |
| 11 ராமநாதபுரம் மாவட்டம். | | |
| மம்சாபுரம்-ராஜபாளையம் சாலையின் குறுக்கே பாலம் அமைப்பது. | 1·00 | ஷை |
| 12 கோவை மாவட்டம். | | |
| மைல் 11/6-ல் கோவை-சிறுவாணி சாலை முதல் நரசாபுரம் (வழி) பொலுவம்பட்டி சாலையிலிருந்து பிரிந்து 0/2-ல் குறுக்கிடும் நொய்யல் ஆற்றின் மேல் பாலம் அமைத்தல். | 4·00 | ஷை |
| 13 செங்கை மாவட்டம். | | |
| சென்னை - திருச்சி - திண்டுக்கல் சாலையில் கி.மீ.31/4-ல் இருந்து பிரிந்து சுமார் 660 அடி நீளத் திறக்கப்போகும் அரோன் சாமுவேல் மருத்துவமனை வரை சாலை அமைத்து கப்பி போட்டு தார் போடுதல். | 0·35 | 2160 பொ.ப. மற்றும் உள்ளாட்சி துறை 1971-ம் ஆண்டு செப்டம்பர் 21-ம் நாள். |
| மொத்தம் .. | 30·65 | |



## இணைப்பு 3.

**பொருளாதார—பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள்.**

**1971-72-ல் ஒப்பளிக்கப்பட்டவை.**

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண்ணும், நாளும். (3) |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்). | |
| செங்கல்பட்டு மாவட்டம். | | |
| 1 வயலூர்-வெப்பஞ்சேரி சாலையில் பாலாறுக்கு குறுக்கே பாலம் அமைத்தல். | 35·00 | அரசு ஆணை எண் 2236, பொதுப் பணி, 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26-ம் நாள். |
| தென் ஆற்காடு மாவட்டம். | | |
| 2 உப்பங்கழிகளுக்குக் குறுக்கே தென் பாக்கம் அருகே பாலம் அமைத்தல். | 30·00 | ஷை |
| தஞ்சாவூர் மாவட்டம். | | |
| 3 மைல் 15/3-ல் வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலையில் பாலம் அமைத்தல். | 5·00 | ஷை |
| 4 மைல் 18/3-ல் வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலையில் பாலம் அமைத்தல். | 5·50 | ஷை |
| 5 மைல் 16/2-3-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 6·00 | ஷை |
| 6 மைல் 25/6-7-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 3·00 | ஷை |
| 7 மைல் 26/3-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 4·50 | ஷை |

[1972 மார்ச் 21

தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூ. இலட்சத்தில்). | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண்ணும், நாளும். (3) |
|---|---|---|
| 8 மைல் 26/7-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 6·00 | அரசு ஆணை எண் 2236, பொதுப் பணி, 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26-ம் நாள். |
| 9 மைல் 31/1-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 2·50 | ஷை |
| 10 மைல் 36/3-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 6·00 | ஷை |
| 11 மைல் 37/6-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 3·00 | ஷை |
| 12 மைல் 39/7-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 9·00 | ஷை |
| 13 மைல் 41/1-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 6·00 | ஷை |
| 14 மைல் 41/7-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 4·50 | ஷை |
| 15 மைல் 42/3-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 4·50 | ஷை |
| 16 மைல் 43/1-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 9·00 | ஷை |
| 17 மைல் 46/4-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 3·75 | ஷை |



1972 மார்ச் 21]

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூ. இலட்சத்தில்.) | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண்ணும், நாளும். (3) |
|---|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.** | | |
| 18 மைல் 47/1-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 3·75 | அரசு ஆணை எண் 2236 பொதுப் பணி 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26-ம் நாள். |
| 19 மைல் 47/4-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 12·00 | ஷை |
| 20 மைல் 49/7-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 7·50 | ஷை |
| 21 மைல் 50/2-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 10·00 | ஷை |
| 22 மைல் 51/2-ல் முத்துப்பேட்டை-மிமிசால் சாலையில் பாலம் அமைத்தல். | 7·00 | ஷை |
| **இராமநாதபுரம் மாவட்டம்.** | | |
| 23 மைல் 1/1-ல் தொண்டி-சுந்தரபாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 2·40 | ஷை |
| 24 மைல் 1/7-8-ல் தொண்டி-சுந்தரபாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 2·50 | ஷை |
| 25 மைல் 3/6-ல் தொண்டி-சுந்தரபாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 7·50 | ஷை |
| 26 மைல் 4/1-ல் தொண்டி-சுந்தரபாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 5·10 | ஷை |
| 27 மைல் 6/7-ல் தொண்டி-சுந்தரபாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 5·85 | ஷை |

[1972 மார்ச் 21

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூ. இலட்சத்தில்.) | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண்ணும், நாளும். (3) |
|---|---|---|
| இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி. | | |
| 28 மைல் 8/4-5-ல் தொண்டி-சுந்தர பாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 6·00 | அரசு ஆணை எண் 2236, பொதுப்பணி 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26-ம் நாள். |
| 29 மைல் 9/2-ல் தொண்டி-சுந்தர பாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 4·63 | ஷை |
| 30 மைல் 9/3, 9/8 & 10/1-ல் தொண்டி-சுந்தர பாண்டிய பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 4·00 | ஷை |
| 31 மைல் 4/1–2-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 3·75 | ஷை |
| 32 மைல் 5/7-8-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 7·25 | ஷை |
| 33 மைல் 6/8-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 3·30 | ஷை |
| 34 மைல் 8/1-2-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 3·75 | ஷை |
| 35 மைல் 8/4-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 6·50 | ஷை |
| 36 மைல் 11/4-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 0·45 | ஷை |
| 37 மைல் 12/8-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 2·40 | ஷை |
| 38 மைல் 13/1-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 1·12 | ஷை |



1972 மார்ச் 21]

இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) (ரூ. இலட்சத்தில்.) | ஒப்பளிக்கப்பட்ட அரசு ஆணை எண்ணும், நாளும். (3) |
|---|---|---|
| 39 மைல் 14/3-ல் தொண்டி-திருப் பாலையக்குடி சாலையில் பாலம் கட்டுதல். | 3·00 | அரசு ஆணை எண் 2236, பொதுப் பணி, 1971-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26-ம் நாள். |
| 40 மைல் 0/2-ல் திருப்பாலையக்குடி-தேவிப்பட்டினம் சாலையில் பாலம் கட்டுதல். | 12·50 | ஷை |
| மொத்தம் .. | 2,65·50 | |

## இணைப்பு 4.

தேசிய நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சில பெரும் வேலைகளின் தொகுப்பு (1971-72-ம் ஆண்டின் திட்டம்).

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | மதிப்பீட்டுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| **சாலைகள்—** | |
| 1. தேசிய நெடுஞ்சாலை எண் 7, மதுரை-கன்னியாகுமரி சாலை கி.மீ. 37·6 முதல் 231·6 வரை அமைந்துள்ள ஒரு தட பாதையை வலுப்படுத்தலும் அகலப்படுத்தி இருத்தடப் பாதையாக மாற்றுதல். | 2,05·48 |
| 2. சேலம்-திண்டுக்கல் சாலையின் பகுதி எண் 7 கி.மீ. 206 முதல் 375 வரை அமைந்துள்ள ஒருதடப் பாதையை வலுப்படுத்தலும் அகலப்படுத்தி இருத்தடப் பாதையாக மாற்றுதல். | 1,53·48 |
| 3. ராணிப்பேட்டை-கிருட்டிணகிரி (தேசிய நெடுஞ்சாலையின் பகுதி) எண் 46 கி.மீ. 1·6 முதல் 23 வரை கி.மீ. 52·6 முதல் 65·6 வரை மேலும் கி.மீ. 75 முதல் 115 வரை அமைந்துள்ள ஒருதடப் பாதையை வலுப்படுத்தலும் அகலப்படுத்தி இருத்தடப் பாதையாக மாற்றுதல். | 97·06 |
| **பாலங்கள்—** | |
| 1 மைல் 214/4-ல் பாலம் .. .. .. .. .. | ரூ. 5,44,700 |
| 2 மைல் 254/3-ல் பாலம் .. .. .. .. .. | ரூ. 3,66,400 |

## இணைப்பு-4

### தமிழகச் சிறு துறைமுகங்கள்—1971-72-ஆம் ஆண்டிற்கான பணி ஆய்வுரை.

தமிழகத்தில் கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய மூன்று நடுத்தரத் துறைமுகங்களும், பரங்கிப்பேட்டை, தொண்டி, பாம்பன், இராமேசுவரம், கீழக்கரை, குலசேகரப்பட்டினம், குளச்சல், வேப்பலோடை, கன்னியாகுமரி ஆகிய ஒன்பது சிறு துறைமுகங்களும் உள்ளன. இந்த ஒன்பது சிறு துறைமுகங்களுள் வேப்பலோடை, கன்னியாகுமரி ஆகிய இரண்டு சிறு துறைமுகங்களும் சென்ற ஆண்டு புதிதாகத் திறக்கப் பட்டவை. இவற்றுள் கன்னியாகுமரித் துறைமுகம் விவேகாநந்தர் பாறைக்குச் செல்லும் படகுகளின் போக்குவரத்தைக் கண்காணிப்பதற் காகவும், வேப்பலோடைத் துறைமுகம் உப்பு ஏற்றுமதியின் பொருட்டும் திறக்கப்பட்டவை.

2. தமிழகத் துறைமுகத் துறையின் செலவுகள், மாநிலச் சிறு துறை முக நிதி மாநில இறக்குமதி ஏற்றுமதி நிதி, மாநிலக்கப்பல் வழிகாட்டிக் கட்டண நிதி ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன. மாநிலச் சிறு துறைமுக நிதி இம்மாநிலத்தின் சிறு துறைமுகங்கள் அனைத்துக்கும் பொதுவானதாகும். இறக்குமதி ஏற்றுமதி நிதிகள் சம்பந்தப்பட்ட ஒவ் வொரு துறைமுகத்திற்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டவை. துறை முகக் கடல்துறை நிதிகளை இம்மாநிலத் தொகு நிதியுடன் இணைக்க வேண்டுமென அரசு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இம் முடிவைச் செயல்படுத்த சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

3. **வளர்ச்சித் திட்டங்கள்.**—தமிழகத்தில் சிறு துறைமுக வளர்ச்சித் திட்டங்கள், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த கடற் பிரிவினால் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து தொடரும் திட்டங்களின் முன்னேற்றம்—கடலூர் துறைமுகம்.

நிறைவேற்றப்பட்டுவரும் கடலூர் துறைமுக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசு ஆதரவளிக்கும் திட்டமாகும். இத் திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது; (1) ஆற்றை ஓரிடத்தில் நிலையாக்கும் பணி, (2) அலைத் தடுப்புச் சுவர்கள் கட்டுதல். ஆறு கடலில் கலக்குமிடமாகிய இதில் ஆற்றை ஓரிடத்தில் நிலையாக்கும் பணி முடிந்துவிட்டது. அலைத்தடுப்புச் சுவர்கள் கட்டுமான அமைப்பு முறை ஒரு மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. கான்கிரீட் பாலத்தில் மணிக்கு 350 டன் வரை மண் வாரக்கூடிய இரு மண் வாரிகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. கான்கிரீட் பாலம் இப்பொழுது கட்டப்பட்டு வருகிறது. 1972-ம் ஆண்டு இறுதிக்குள் முழுத் திட்டமும் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி திட்டத் தின் திருத்திய மதிப்பீடு ரூ. 191 லட்சம்; மேற்படி திட்டத்தின்கீழ் டிசம்பர் 1971 வரை ஆன செலவு ரூ. 153·50 லட்சம்.



சிறு துறைமுகங்கள் பற்றிய தமிழ்நாடு அரசின் நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கான வரைவு செயற்குறிப்புகளைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது, இந்திய அரசு, நாட்டில் உள்ள ஒவ்வொரு கடல் சார்ந்த மாநிலத்திலும் ஒரு துறைமுகத்துக்கு மட்டும் நிதி உதவியை மத்திய அரசு செய்யும் என்று குறிப்பிட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு அரசு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கடலூர் துறைமுக வளர்ச்சித் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தில் சேர்த்துக் கொள்ளுமாறு கருத்து தெரிவித்தது. இதன் பொருட்டு இந்திய அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 89 லட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

4. **இராமேஸ்வரம் துறைமுகப்பட்டினம்—**

1964-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட புயற்காற்றின் விளை வினைத் தொடர்ந்து தனுஷ்கோடி துறைமுகம் பயனற்றுப்போன நிலையில் கைவிடப்பட்டது. இதன் காரணமாக இந்தியா-இலங்கை கப்பல் போக்கு வரத்து தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டுப் பின்னர் இராமேசுவரம் துறைமுகத்திலிருந்து இந்தக் கப்பல் போக்குவரத்து நடைமுறைக்கு வந்தது. இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வரும் அகதிகளை இந்திய மண்ணில் வரவேற்கும் முகத்தான் நிரந்தரமான கப்பல் துறைப்பாலம் ஒன்றினை அமைத்திட இந்திய அரசு எண்ணியது. இதற்கான இடம் ஒன்றினைத் தேர்ந்தெடுக்க ஒரு குழுவையும் அமைத்தது. இந்தக்குழு இராமேசுவரம் துறைமுகத்தை இதற்கான இடமாகத் தற்காலிகமாகத் தேர்ந்தெடுத்தது. குடிபெயர்ந்து வருவோருக்கு உடனடி வசதிகளை அளிக்க, ஐந்தரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தற்காலிகமாக இரண்டாம் இணைப்பிலுள்ள பணிகள் அடங்கிய கப்பல் துறைப்பாலம் வேலை மேற்கொள்ளப்பட்டு அஃது முடியும் தருவாயில் உள்ளது. தமிழ்நாடு அரசு இந்தப் பணிகளுக்குப் ஆகும் செலவுகளை மேற்கொள்ளும் வகையில் இந்திய அரசிடமிருந்து பின்னர் ஈடுபெறும் அடிப்படையில் ரூபாய் ஐந்தரை இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது.

**சி. பா. ஆதித்தனார்,**

**கூட்டுறவு அமைச்சர்.**

**சென்னை-9,**
**21—3—1972.**

## இணைப்பு—I

### 1972–73 ஆண்டு காலத்தில் மேற்கொள்ள எண்ணியுள்ள வேலைகள்.

| துறைமுகத்தின் பெயர். (1) | தொடர் எண்ணும் வேலையின் பெயரும். (2) | திருத்திய செலவு மதிப்பீடு. (3) | 1972 வரை செய்யப்பட விருக்கும் செலவுகள். (4) | 4-வது திட்ட முதலீடு. (5) | 1972–73-க்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கம். (6) |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எஞ்சிய வேலைத் திட்டங்கள்— | | | | | |
| கடலூர் துறைமுகம் வளர்ச்சித் திட்டம். | அலைத்தடுப்புச் சுவர்களைக் கட்டுதலும் ஆற்றுப் பயிற்சி வேலைகளும். | 191·00 | 61·08 | 89·00 | 25·95 |
| | மொத்தம் .. | 191·00 | 61·08 | 89·00 | 25·95 |



| துறைமுகத்தின் பெயர். (1) | தொடர் எண்ணும் வேலையின் பெயரும். (2) | திருத்திய செலவு மதிப்பீடு. (3) | 1972 வரை செய்யப்பட விருக்கும் செலவுகள். (4) | 4-வது திட்ட முதலீடு. (5) | 1972–7-3க்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கம். (6) |
|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | | |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் புதிய வேலைத் திட்டங்கள்— | | | | | |
| கடலூர் .. .. | 1. தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரி இயந்திரத்திற்குப் பதிலாக (நீர்க் கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சுவாய் அமைப்புடையதும் குழாய்த் தொடர்புடையதும் ஆகிய) தூர்வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல். | 15·00 | 5·75 | 15·00 | 5·00 |
| | 2. மரக்கலங்களை இழுப்பதற்காக 300 குதிரைத் திறனுடைய இழு படகு ஒன்றை வாங்குதல். | 7·00 | இல்லை. | 7·00 | 4·00 |
| | மொத்தம் .. | 22·00 | 5·75 | 22·00 | 9·00 |

[1972 மார்ச் 21

## இணைப்பு—II

### இராமேசுவரத் துறைமுக வளர்ச்சித் திட்டங்கள்.

1. மரத்தாலான புதிய தோணித்துறை கட்டுதல்.
2. பயணிகள் தங்கும் நிலையம்.
3. குடிபெயர்ந்து வருவோர் தங்குவதற்கான சிறிய கூடம் (உணவுக் கூடம்).
4. துறைமுகத்தைச் சுற்றி அடைப்புகள் அமைத்தல்.
5. தெரு விளக்குகள் அமைத்தலும் மின்னிசை வழங்குதலும்.
6. மேனிலைத் தொட்டி நீர்த்தேக்கம் அமைத்தல்.
7. பயணிகள் தங்கும் நிலையத்தில் மரச் சாமான்கள் பொருத்துதல்.
8. பயணிகள் தங்கும் நிலையத்தில் மின்சார வசதிகள் செய்தல்.



1972 மார்ச் 21]

இணைப்பு

1962-63 முதல் 1970-71 முடிய தமிழகத்தில் உள்ள துறைமுகங்களின்

| துறைமுகத்தின் பெயர். | 1962-63. | 1963-64 | 1964-65. | 1965-66 |
|---|---|---|---|---|
| தூத்துக்குடி .. .. | 10,25,173 | 9,34,893 | 10,50,272 | 9,93,734 |
| கடலூர் .. .. .. | 4,67,811 | 4,98,478 | 5,45,494 | 4,16,440 |
| நாகப்பட்டினம் .. .. | 57,619 | 52,340 | 71,929 | 72,162 |
| பரங்கிப்பேட்டை .. .. | .. | .. | .. | .. |
| தொண்டி .. .. | இல்லை. | இல்லை. | .. | .. |
| பாம்பன் .. .. .. | 1,478 | 6,129 | 2,094 | 8,152 |
| தனுஷ்கோடி .. .. | 7,221 | 7,430 | 3,581 | (துறைமுகம் |
| இராமேஸ்வரம் .. | .. | .. | .. | .. |
| கீழக்கரை .. .. | 1,058 | 1,538 | 1,243 | 4,795 |
| குளச்சல் .. .. | இல்லை. | 14,455 | 25,598 | 26,900 |
| குலசேகரப்பட்டினம் .. | 252 | 800 | 150 | .. |
| மொத்தம் .. | 15,60,612 | 15,16,063 | 17,00,361 | 15,22,183 |
| தூத்துக்குடி நீங்கலாக.. | 5,35,439 | 5,81,170 | 6,50,089 | 5,28,449 |

III

மூலமாகச் சென்ற மொத்தச் சரக்குகளின் பெறுமானம் (மெட்ரிக் டன்னில்)

| 1966–67. | 1967–68. | 1968–69. | 1969–70. | 1970–71. |
|---|---|---|---|---|
| 9,53,880 | 10,80,207 | 9,24,295 | 8,00,595 15 யூனிட் எண்ணெய், 1 மோட்டார் கார். | 6,13,922·00 |
| 3,97,375 | 2,40,370 | 1,96,455 | 1,53,651·50 400 மூட்டைகள். | 1,73,435·50 |
| 91,179 | 1,11,331 | 1,55,390 | 44,621·60 | 72,263·60 |
| .. | .. | .. | .. | .. |
| 2 | 15 | .. | இல்லை. | இல்லை. |
| 7,436 | 10,245 | 9,806 | 8,106 | 7,15,200 |
| மூடப்பட்டது) | .. | .. | இல்லை. | .. |
| .. | .. | 1,600 | 1,227 | .. |
| 436 | 922 | 12,492 | 11,494 | 10,881·00 |
| 29,230 | 39,413 | 36,600 | 36,200 | 4ı,705·00 |
| .. | .. | .. | .. | .. |
| 14,79,538 | 14,82,503 | 13,36,638 | 10,55,894 | 9,20,425·10 |
| 5,25,658 | 4,02,296 | 4,12,343 | 2,52,299* | 3,06,503·10 |

* 15 யூனிட்டுகள் எண்ணெய், 1 மோட்டார் கார், 400 மூட்டைகள்.



## இணைப்பு—5.

### தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேது சமுத்திரத் திட்டங்களின் 1971-72 ஆம் ஆண்டுப் பணி பற்றிய ஆய்வுரை.

தமிழ்நாட்டில், கடலூர் நாகபட்டிணம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மூன்று நடுத்தரத் துறைமுகங்களும், ஒன்பது சிறு துறைமுகங்களும் உள்ளன.

2. தூத்துக்குடியில் தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகம் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள வாரியத்திஞல் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டுவரும். தூத்துக்குடியில் பெரிய துறைமுகம் ஒன்று உருவாக்கப்பட்டு மேம்படுத்தப் பட்டு வருகிறது. புதிய துறைமுகம் செயல்படத் தொடங்கும்போது, தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகத்தின் நிர்வாகம் புதிய பெரிய துறைமுகத்தின் நிர்வாகத்துடன் இணைககப்பட்டு, புதிய துறைமுகப் பொறுப்புக் கழகத்திடம் ஒப்படைக்கப்படும்.

ஏற்றுமதி, இறக்குமதி ஏற்றதும், படகுகள் நிற்பதற்குரிய வசதி யுடனும் உள்ள அலை தாங்கிகளால் நன்கு பாதுகாக்கப்படுவதுமான 500 அடி நீளம் உள்ள ஒரு துறைமுகம் மாநில அரசின் பொதுப்பணித் துறையால் கட்டப்பட்டு வருகிறது. இதில் 13 அடி மீன்பிடி இழு படகுகள் வந்து தங்க முடியும். இந்தத் துறைமுகம் தற்பொழுதுள்ள துறைமுகத்தின் வளவிற்குத் தெற்கே கட்டப்பட்டு வருகிறது. இது முக்கியமாக மீன்பிடிக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படும். இது 1972 இறுதிக்குள் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற் கென்று துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் நிலத்திலிருந்து 4·73 ஏக்கர் நிலத்தை தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் ஒதுக்கியுள்ளது.

தூத்துக்குடி துறைமுகத் திட்டம்—பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுரை.—பொது, தற்பொழுதுள்ள தூத்துக்குடி துறைமுகத்தின் தென் கிழக்கில் "முயல் தீவிற்கு" அப்பால் ஆழ்கடல் துறைமுகம் ஒன்று ரூ. 24·40 கோடி செலவில் கட்டுவதற்கு இந்திய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தால் நிர்வாக ஏற்பளிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் 30 அடி அமிழ் ஆழம் அளவுள்ள கப்பல் தங்குமிடம் அமைக்கக் கருதப்பட்டது. எனினும் முதற்கண் நான்கு கப்பல் தங்குமிடம் கட்டுவதற்கு துணை வசதிகளை செய்வதற்கு மட்டும் ரூ. 21·76 கோடி செலவிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இத் திட்டம் மத்திய அரசுத்திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வேலைத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு அரசியலமைப்பில் 258-'ஏ' பிரிவின்கீழ் இந்திய அரசிடம் ஒப்படைத்துள்ளது.

வேலையில் முன்னேற்றம் (அ) கடற்கரைப் பணிகள்.—நிலம் கையகப் படுத்துதல், துறைமுக எஸ்டேட்டில் சாலைகள் அமைத்தல் பணியாளர்கள் குடியிருப்புகள் கட்டுதல், கள அலுவலகங்கள், துறைமுக எஸ்டேட்டில்

நீர்வழங்கு வசதிகள், கழிவுநீர் அகற்றும் வசதிகள், மின்சக்தி வழங்கல் துறைமுகத்திற்கும் பாறைவெட்டும் பகுதிக்கும் ரயில் பாதை அமைத்தல் போன்ற எல்லா தொடக்கப் பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

(ஆ) ஆழ்கடல் வேலைகள் வடக்கு அலை தடுப்புச்சுவர்.—கரையிலிருந்து 1,775 மீட்டர் தூரம் வரை வடிக்கு அலைதடுப்புச் சுவர் எல்லா வகையிலும் முடிக்கப்பட்டிருக்கிறது. "பெரிய ஒப்பந்தப்படி" 1,775 மீட்டருக்கு அப்பாலுள்ள வேலைகள் நடைபெற்று வருகின்றன. (1972ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 27–ம் நாள் கணக்குப்படி) வடக்குச்சுவர் 2,565 மீட்டர் தூரம் வரை சென்றிருக்கிறது. இதில் 1,775 மீட்டரில் இருந்து 2,665 மீட்டர் வரை உள்ளீட்டுப்பகுதி மட்டுமே முடிக்கப்பட்டிருக்கிறது. உள்ளீட்டுப் பகுதியின் சிறிய கற்களை அலைகளிலிருந்து தற்காக்க கவசக் கற்கள் அதே தூரம் வரை அரணாய் வைக்கப்பட்டுள்ளன.

தெற்கு அலைதடுப்புச்சுவர்.—கரையில் இருந்து 1,830 மீட்டர் தூரம் வரை தெற்கு அலைதடுப்புச்சுவர் எல்லா வகையிலும் முடிக்கப் பட்டிருக்கிறது. 1,830 மீட்டர் தூரத்திற்கு பின்பு உள்ள வேலைகள் "பெரிய ஒப்பந்தப்படி" செயல்பட்டு வருகிறது. பெரிய ஒப்பந்தப்படி 1,830 மீட்டரில் இருந்து 2,874 மீட்டர் வரை (1972 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ம் நாளில் உள்ளபடி) உள்ளீட்டுப்பகுதி மட்டும் சிறிய கற்களால் கட்டப்பட்டு அதே தூரத்திற்கு கவசக் கற்களும் இரு ஓரங்களிலும் போடப் பட்டு இருக்கின்றன.

1972 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27–ம் நாள் வரை சுமார் 21,03,323 டன் கற்கள் கொட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இரு அலை தடுப்புச் சுவர்களும் கட்டி முடிக்க 43,27,113 டன் கற்கள் கொட்டப்படல் வேண்டும்.

(இ) நீர்தூர்ப்புப் பகுதி.—கப்பல் துறையை நோக்கிச் செல்கின்ற சாலைகளும் ரயில் பாதைகளும் அமைப்பதற்காக தெற்கு சுவரின் உள்ளமைந்த பகுதி மணலால் 61 மீட்டர் அகலத்திற்கு தூர்க்கப்படுகிறது. கரையிலிருந்து 1,327 மீட்டர் தூரத்திற்கு அப்பால் தூர்ப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஈ) செய்யப்பட வேண்டுவன.—கப்பல் தளச்சுவர் தலைப்பு பீடங்கள் கப்பல் தளச்சுவற்றின் இடைவெளியே தூர்த்தல் மற்றும் கடலடியை வெடிவைத்து தகர்த்து ஆழப்படுத்துதல் ஆகியவை இதுவரை ஆரம்பிக்கப் படவில்லை. இவை அனைத்தும் "பெரிய" ஒப்பந்தப்படி செய்யப்பட வேண்டியவை.

செலவு பற்றி.—நான்கு கப்பல் துறைகளும் கட்ட செலவுக்காக அனுமதிக்கப்பட்ட 21·76 கோடியில் ஆரம்ப காலத்தில் இருந்து இதுவரை 18·72 கோடி மொத்தமாகவும் 13·09 கோடி நிகராகவும் செலவிடப் பட்டுள்ளது.



முடிவு தேதியும் குறிக்கோளும்.—தூத்துக்குடி துறைமுகத் திட்டம் மூன்றும் ஐந்தாண்டுத திட்டத்தில் சேர்த்து ஆரம்பிக்கப்பட்டு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடர்ந்து நான்காம் திட்டத்திலேயே முடிப்பதற்கு வகை செய்யப்பட்டது. இதைக் கருதி தூத்துக்குடியில் ஓர் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான அமைதியை இந்திய அரசு கொடுத்திருக்கிறது. உரத்தொழிலுக்கு தேவையான திரவப்பொருள்களான, நப்தா எரி பொருளான எண்ணெ முதலியன சுமார் 4·6 லட்சம் டன்கள் வரை தேவைப்படும் திடப்பொருள்களான கந்தகம், ராக்-பாஸ்பேட், பொட்டாஸ் முதலியன 2·92 லட்சம் டன்கள் வரை தேவைப்படுகிறது. இவை அனைத்தும் தூத்துக்குடி துறைமுகத்தின் வழியேதான் இறக்குமதி செய்யவேண்டி இருக்கிறது.

உரத்தொழிற்சாலையின் உற்பத்தி பொருள்கள் (சுமார் 2·1 லட்சம் டன் வரை) துறைமுகம் வழியாய்தான் ஏற்றுமதி செய்யப்படும். உரத் தொழிற்சாலையின் வளர்ச்சி துறைமுகத்தின் மூலப்பொருட்களின் இறக்குமதியையும் முடித்த பொருள்களின் ஏற்றுமதியையுமே சாரும். உரத் தொழிலுக்கு அத்தியாவசியமான ஓர் எண்ணெ நிலதாங்கியும் இரு கப்பல் துறைகளும் 1973-ம் ஆண்டு மத்திக்குள்ளாவது அவர்களிடம் ஒப்புவிக்கப்படவேண்டும். இவற்றை மனதில் கொண்டு பார்த்தால், ஆழ் கடல் துறைமுகத்தில் இரு கப்பல் துறைகளாவது 1973-க்குள் செயல்பட வேண்டும் என்பது தெளிவாகும். மற்ற இரு கப்பல் துறைகளும் 1973–74-க்குள் முடிக்கப்பட்டு நான்கு கப்பல் துறைகளும் 1973–74 முடிவில் செயல்படும். இத்தகையதோர் குறிக்கோளை அடைவதற்கான முழு முயற்சிகளும் எடுக்கப்பட்டு துரிதவேலை நடைபெற ஆவன செய்யப்பட்டிருக்கின்றன.

சேதுசமுத்திரத் திட்டம்.—இந்தியாவின் மேற்கு கரையையும் கிழக்குக் கரையையும் இணைக்கும் கடற்பாதையின் நீளத்தைக் குறைக்கும் பொருட்டும் மேம்படுத்தும் நோக்கத்திலும் மன்னார் வளைகுடாவை பாக் விரிகுடாவுடன் இணைப்பதே சேதுசமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும். இதனால் 30 அடி அமிழ் ஆழம் அளவுள்ள கப்பல்கள், இலங்கையைச் சுற்றியும் அதன் தென் முனையைச் சுற்றியும் வளைந்துப் போவதைத் தவிர்ப்பதுடன், சுற்றி வளைத்துக்கொண்டு போகும் இலங்கை வழியில் சில சமயம் சுழற்காற்றும், புயலும் வீசுவதால் இக்கடற்பாதையை அபாயமின்றிப் பயன்படுத்தவும் முடியும்.

இத் திட்டத்தில் வளம் பெறக்கூடிய தன்மை பற்றி முதி ஆய்வுகள், இந்தக் காரியத்திற்காக 1965-ம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் திரு. சி. வி. வெங்கடேஸ்வரன் அவர்களால் நடத்தப்பட்டன. அவர் சிறப்புப் பொறியியல் சரகம் ஒன்றுடன் ஆய்வுகளை முடித்து 1968 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்திய அரசுக்கு அவரது அறிக்கையைப் பணிந்தனுப்பினார். இத்துடன், இத் திட்டத்தின் பொருளாதார ஒப்பேறு நிலை குறித்து தனியான அறிக்கை ஒன்றை சேது சமுத்திரத் திட்ட, திட்ட அதிகாரி திரு ஆர். நடராஜன், ஐ.ஏ.எஸ். அவர்களது அறிக்கையும் அனுப்பப்பட்டது.

அந்த அறிக்கையில், சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார வகையில் ஏற்புடையதெனவும் தொழில் நுட்ப வகையில் சாத்தியமானதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கால்வாயின் பல்வேறு இணைப்புகள் குறித்துக் கருதப்பட்டன. இரண்டு இணைப்புகள் அதாவது (1) மண்டபம் இணைப்பு, (2) இராமேஸ்வரம் இணைப்பு ஆகிய இரண்டும் சாத்தியமாகுமெனக் கண்டறியப்பட்டது. இந்த இரண்டு இணைப்புகளில இராமேஸ்வரம் இணைப்பு மண்டபம் இணைப்பைக்காட்டிலும் குறைந்த தொலைவுடையதும் குறைந்த செலவுடையதும் ஆகும். (மண்டபம் அமைப்பின் நீளம் 1,44,400 அடி இராமேஸ்வரம் அமைப்பின் நீளம் 43,700 அடியாகும்) இதற்கு மதிப்பீட்டுச் செலவு முறையே ரூ. 55.60 கோடி, ரூ 37·50 கோடியாகும். எனவே இராமேஸ்வரம் இணைப்புத் திட்டமே இந்த அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கால்வாய் திறக்கப் பட்ட பின்னர் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் ரூ. 162 லட்சம் நிகர வருவாய், பெரும்பாலும் அன்னியச் செலாவணியில் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆலோசகரால் அளிக்கப்பட்ட புலன் ஆய்வுகள், கீழ்க்கண்ட முடிவு களுக்கு வழி கோருகின்றன :—

(i) இந்தத் திட்டம் தொழில் நுட்ப முறையில் ஏற்படைத்த ஒன்றாகும்.

(ii) மண்டபத்தில் ஒன்றும், ராமேஸ்வரத்தில் ஒன்றுமாக இரண்டு மாற்று இடங்கள் குறுக்கு வழிகளுக்காக ஆலோசனையில் இருந்தன. இவை இரண்டு பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. அதன் மூலம் கீழ்க் கண்டவாறு அறியப்பட்டது :—

(அ) மணல் திட்டத்தில் கடல் கொந்தளிப்பு காரணமாக, மண்டபம் வழியை அமைப்பது கடினமானதாகும். ஆனால் இராமேஸ்வரம் வழியில் இத்தகைய இடர்பாடுகள் எதும் இல்லை.

(ஆ) இராமேஸ்வரம் வழியைப் பொறுத்த வரையில் அமிழ் ஆழம் 30 அடி அளவுள்ள கப்பல் செல்வதற்கு வகை செய்யும் ஒரு திட்டத்திற்கு மதிப்பீட்டுச் செலவு ரூ. 37·50 கோடி, மண்டபம் வழியைப் பொறுத்த வரையில் சுமார் ரூ. 55·60 கோடியாகும். இராமேஸ்வரம் வழிக்கு வகை செய்தால் ரூ. 18·10 கோடி மிச்சப்படும்.

(இ) அமிழ் ஆழம் 32 அடி, 35 அடி உள்ள கப்பல்களுக்கு வகை செய்யப்பட்டால், ராமேஸ்வரம் வழியைக்காட்டிலும் மண்டபம் வழிக்காகும் அதிகப்படியான செலவு இன்னும் அதிகமாயிருக்கும்.

செலவு தொழில்நுட்ப கோணங்களில் இருந்து நோக்கினால், இராமேஸ் வரம் வழியே ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும் என்பது தெரியவரும்.

(iii) மேற்கிலிருந்து வரும் எல்லாப் போக்குவரத்திற்கும் பொது மையமாக அமைந்துள்ள கன்னியாகுமரி முனையிலிருந்து சென்னை, விசாகப்பட்டிணம், கல்கத்தா ஆகிய இடங்களுக்கு முறையே 353, 295, 259 கடல் மைல்களைக் குறைக்கிறது. தூத்துக்குடி துறைமுகம் வழியாகச் செல்லும் கப்பல்களுக்குக் கூடுதலாக 81 மைல் தொலைவு குறையும்.



(iv) தற்போது 30 அடி அமிழ் ஆழம் அமைக்கப்பட்டால் போது மானதென்று தெரிகிறது. பின்னர் இது 32 அடிக்கு அதிகப்படுத்தப் படலாம். நாளா வட்டத்தில் அனுபவத்தின் மூலம் அமிழ் ஆழத்தை அதிகப்படுத்துவது பற்றி தீர்மானிக்கலாம்.

(v) நிகர ஆதாயம் படிப்படியாக உயரும். காலம் செல்லச் செல்ல ஆதாயம் பெருகும்.

சேது சமுத்திரத் திட்டத்தின் ஆலோசகராலும், திட்ட அதிகாரியாலும் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை 1968 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இந்திய அரசுக்குப் பணிந்தனுப்பப்பட்டது. அது முதல் அந்த அறிக்கை மத்திய அரசின் பரிசீலனையிலுள்ளது.

மத்திய அரசின் பப்பல் போக்குவரத்து அமைச்சரகம் 1971 ஆம் ஆண்டு நவம்பரில் சில விளக்கங்களை கேட்டது. அவ்விளக்கங்களை இவ்வரசு தெளிவு படுத்தியது. மைய்யரசின் இறுதி ஆணை இன்னும் எதிர் பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1972 மார்ச் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் விடையளிக்க வேண்டிய கேள்விகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். கேள்வி எண் 625 இப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

*Government Hospitals in Tamil Nadu*

* 625 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of Government Hospitals in this State as on date;

(*b*) whether the Government has any proposal to open new hospitals; and

(*c*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 312.

(இ) ஆம்.

(உ) நிதி வசதிகள், தொகுதிகளில் மருத்துவமனையின் தேவை, தனிப்பட்டோரின் நன்கொடைகள் முதலியவைகளைச் கருத்தில் கொண்டு புது மருத்துவ மனைகள், திட்டமிட்டு தொடங்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, புது மருத்துவமனை துவங்கப்படுகிற நேரத்தில், எங்கெங்கெல்லாம் தேவைப்படுகின்றனவோ அந்தப் பகுதிகளுக்கு முதலிடம் கொடுப்பதற்கும், பரிசுச் சீட்டு நடத்தி அதன்மூலம் அரசாங்கத்திற்கு வரும் தொகையிலிருந்து இந்தத் துறைக்குப் பணம் ஒதுக்கி, புது மருத்துவ மனைகளைத் திறக்கவும் அரசாங்கத்திற்கு ஆலோசனை உண்டா?

[1972 மார்ச் 22

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : தலைவர் அவர்களே, ஏறத்தாழ ஆயிரம் இடங்களில் மருத்துவமனைகள் தேவை என்று தெரிவித்திருக்கிறார்கள். கிராமப் பகுதிகளில் எங்கெங்கெல்லாம் மருத்துவமனை தேவையோ அங்கெல்லாம் மருத்துவ மனை அமைப்பது, பஞ்சாயத்து ஒன்றியத்தினுடைய பொறுப்பாக இன்றைய நடைமுறையில் இருக்கிறது. ஒன்றியம்தான் டிஸ்பென்சரியைத் துவங்குவதற்கும், அதனை மேற்பார்வையிட்டுச் செயல் படுத்துவதற்கும் ஏற்றதாகும். மருத்துவ மனை ஒரு அளவுக்கு படுக்கைகளைக் கொண்டதாகவும் ஒரு அளவுக்கு சிறப்புப் பகுதிகளைக் கொண்டதாகவும் அமைக்கப்படுகிற போதுதான் அரசாங்கம் அதிலே அதிகக் கவனம் செலுத்த முடியும். அப்படி வருகிற ஆண்டில் ஏறத்தாழ 40 அல்லது 45 எண்ணிக்கை, ஏற்கெனவே மாவட்டக் கழகத்தால் நடத்தப்பட்ட மருத்துவ மனைகள், ஓரளவுக்கு கட்டட வசதியோடு இருந்தும் நல்ல முறையில் செயல்படாமலிருக்கும் மருத்துவமனைகள், பொருளாதார வசதி இல்லாத காரணத்தால், போதுமான மருந்து வழங்கப்படாத மருத்துவ மனைகள் என்ற அடிப்படையில் அதிக மக்களுக்குப் பயன்படக்கூடிய அடிப்படையைக் கொண்டு அவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசாங்கத்தால் அவை நடத்தப்படும். எல்லா ஏற்பாடுகளையும் தனியாரோ ஒன்றியமோ செய்வதற்கு முன்வந்தால் அவை கருத்தில் கொள்ளப்பட்டு தேவைக்கு ஏற்பவும் வசதிக்கு ஏற்பவும் ஏற்றுக் கொள்ளப்படும்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : தலைவர் அவர்களே, மேஜர் பஞ்சாயத்துக்களில் உள்ள அரசாங்க மருந்தகங்களை அரசு மருத்துவமனைகளாக மாற்றியமைப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : மருந்தகங்களை மருத்துவ மனைகளாக மாற்றுகிறபோது ஏற்படுகிற செலவு மிகப் பெரிய அளவுடையதாகும். ஆகையால் பொது வகையில் அப்படிப்பட்ட கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளாது. ஆனால், தேவைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

<u>திரு. இ. ராமசாமி</u> : பொள்ளாச்சி மருத்துவமனை பத்து ஆண்டுக் காலமாகப் பழுதடைந்து ஒரு பகுதி சுவர் இடிந்துவிட்டது. மருத்துவ மனையைப் புதுப்பிக்க வேண்டுமென்று அரசுக்கு எடுத்துச் சொன்னபோது, "பொதுமக்களிடத்திலிருந்து நிதி வேண்டும்"



1972 மார்ச் 22]

என்று சொல்லப்பட்டது. நிதியைச் சேர்த்து அளித்திருக்கிறது. எனவே அந்த மருத்துவ மனையை உடனடியாகப் புதுப்பிக்க அரசு பரிசீலனை செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : புதுப்பிப்பது என்றால் "பழுதுபட்டதைப் புதுப்பிப்பது" என்று பொருள். அப்படிச் செய்வதாக இருந்தால் அது உடனடியாக முடியும். புதிதாகக் கட்டுவது என்றால் அதில் கொஞ்சம் காலதாமதம் ஆகும். இருந்தாலும் இதில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

<u>திரு. எஸ். முருகையன்</u> : ஒன்றியங்கள் நடத்தக்கூடிய மருந்தகங்களை அரசு எடுத்துக் கொள்வதானால் அதிகமான செலவு ஆகும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், ஒன்றியங்கள் நடத்தக்கூடிய மருந்தகங்களிலேயே இப்பொழுது ஒரு குறிப்பிட்ட தொகைதான் அதற்கு ஒதுக்கப்படுகிறது. அந்தத் தொகையை இரட்டிக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : அரசாங்கம் தங்களுடைய வருமானத்தில் ஏறத்தாழ 8.2 சதவீதம் முதல் 8.5 சதவீதம் வரையில் மருத்துவ சுகாதார வசதிகட்காகச் செலவிடுகிறது. ஒன்றியங்களுடைய மிக முக்கியமான குறிக்கோள் கிராமப் பகுதி மக்களுடைய நலத்தைப் பாதுகாப்பதாகும். எனவே, அவர்களுடைய வருமானத்தில் 8 சதவீதம் அல்லது தகுந்த அளவு. இதற்காக ஒதுக்கிவிட்டால் மிச்சத்தை அரசாங்கம் ஈடுசெய்ய முயற்சிக்கும்.

<u>திரு. கே. எ. வகாப்</u> : நம்முடைய தமிழ் நாட்டுக்கு இன்னும் ஏறத்தாழ ஆயிரம் மருத்துவ மனைகள் தேவைப்படும் என்று கூறினார்கள். அப்படித் தேவை இருந்தாலும் கூட, மிக முக்கியமாகத் தேவைப்படுகிற இடத்திற்கு முதல் சலுகை கொடுத்து அதைத் திறப்பதற்கு வகை செய்ய வேண்டும். அதே நேரத்தில் இப்பொழுது ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் போதிய அளவிலும் தரமான வகையிலும் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, இன்னும் அதிகமான தொகை ஒதுக்கி, இன்னும் அதிகமாக மருந்து சப்ளை செய்யவும் தரமான மருந்துகள் கொடுக்கவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u> : கடந்த ஆண்டுகூட ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகளின் அளவு குறைவாக இருக்கிறது என்று, ஏழாயிரம் ரூபாய் என்று இருந்த அளவை

பத்தாயிரம் ரூபாய் அளவுக்கு மருந்து தரவேண்டும் என்றும், தரப்படும் மருந்து நோயுற்ற மக்களுக்குப் பயன்படுகிற வழிவகைகளை ஆராய்ந்து, அதற்கேற்ப மருந்துப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இன்ன மருந்து ஆண்டு முழுதும் தேவைப்படக்கூடியது, இன்ன மருந்து எப்போதாவது தேவைப்படக்கூடியது என்று கணக்கிட்டு, அதிலே நல்ல தரமான மருந்துகள், விலை மலிவாக இருக்கக் கூடியதாகவும் தேர்ந்து அவற்றை வழங்குவதற்கு சில முறைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால், ஏராளமான மருந்துகள் மருத்துவ மனைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். ஏராளமாக வழங்கப்பட்டு, தாராளமாகச் செலவிட்டு, பெரும்பாலும் வீணாக்குவதற்கு அரசாங்கம் இடம் தர இயலாது.

திரு. வை பாலசுந்தரம்: நாளுக்கு நாள் நோயாளிகள் பெருகி வருகிறார்கள். எனவே, புதிய கட்டடங்கள் கட்டுவதைவிட முக்கியமாக நகரங்களில் காலையிலும் மாலையிலும் நடமாடுகின்ற மருத்துவ மனையை ஆரம்பிக்கின்ற உத்தேசம் நம்முடைய அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நகரங்களில் நடமாடும் மருத்துவ மனை தேவை என்றால், மலைப் பக்கத்தில் நடமாடாத மருத்துவ மனை அவர்களுக்கு வைக்க வேண்டும். நடமாடும் மருத்துவ மனை என்பது செலவு குறைவாக ஆகக்கூடியதல்ல. செலவு அதிகமாகும் ஒன்றாகும். அது ஒரு வளமான நாட்டிலே கூட இன்னும் நிறைவேற்றப்படாத ஒன்று. மலைப் பகுதிகளில், மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போக முடியாத நிலைமையில், ஓரிடத்தில் பத்து குடிசைகள், இன்னோரிடத்தில் இருபது குடிசைகள் என்று இருக்கக்கூடிய இப்படிப்பட்ட இடங்களில் அடிப்படை மருத்துவ வசதிகள் கிடைக்க நடமாடும் மருத்துவ மனை நடத்தலாமே தவிர, ஏராளமாக நோய் வருகிறது என்பதற்காக நடமாடும் மருத்துவ மனை வைத்து, அந்த மருத்துவ மனைகளை நோயாளிகளாக்க நான் விரும்பவில்லை.

திரு. கோ. இளங்கோவன்: புதிய மருந்தகங்கள் தொடங்குவதென்றால் அதிகச் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டது. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு எடுத்துக் கொள்வதால் அதிகம் செலவு ஆகும் என்று குறிப்பிடப்பட்டது. வேறு சில



துறைகளில் இருக்கக்கூடிய, உதாரணமாக சத்திரம் டிபார்ட்மெண்டில், இருக்கிற மருந்தகங்கள் சரியாக செயல்படவில்லை. அவற்றை உடனடியாக அரசாங்கம் எடுத்து நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: செயல்படாத மருந்தகங்களைப்பற்றி விவரமாக உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால், அந்த சத்திரம் இலாக்கா மூலமாக முறையாகச் செயல்படுத்த அரசாங்கம் ஆவன செய்யும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தற்போது மருத்துவ மனைகள் அமைக்க சில விதிமுறைகள் வகுக்கப்படுவதாகத் தெரிகிறது. அவை என்ன என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதற்கு முன்பெல்லாம் பல பேர் வலியுறுத்துவதற்கு ஏற்பவும், கட்டாயப்படுத்திக் கேட்டுக் கொள்வதற்கு ஏற்பவும் கூட ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், பல மருத்துவ மனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்கப்படுவதால் அவைகளில் ஒன்று, மருத்துவ மனை டிஸ்ட்ரிக்ட் போர்டு காலத்தில் தோன்றியதாகவும்–கட்டிடம் முதலிய வசதி உள்ளதாகவும் இருக்க வேண்டும். சரியாக நடக்காத மருத்துவ மனைகளை அரசாங்கம் எடுத்துக் கொள்வது என்ற நிலை அனுமதிக்கப் பட்டால், ஒருவேளை ஆண்டுக்கு இரண்டு மருத்துவ மனைகளை ஒன்றியம் ஏற்படுத்தி, அடுத்த ஆண்டு அரசாங்கத்தினிடத்தில் ஒப்படைத்துவிடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டுவிடும். ஆகவே, ஜில்லா போர்டு காலத்தில் ஏற்பட்ட மருத்துவ மனையாக இருக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், ஓரளவு கட்டட வசதி இருக்க வேண்டும். டாக்டர் நியமிக்கப்பட்டு, மருந்து வசதிகள் முதலியன எல்லாம் செய்ய மாதம் மூவாயிரம் ரூபாய் செலவாகும் நிலைமை ஏற்படும் போது, தகுந்த கட்டட வசதி இருக்க வேண்டும். அந்தக் கட்டடத்தில் படுக்கைகள் இல்லாவிட்டாலுங்கூட, மருந்துகட்கும், அவற்றை வழங்குவதற்கும் ஒரு தனிப் பகுதியில் டாக்டர் இருப்பதற்கும் இடம் இருப்பதைப் பொறுத்தும், எந்த அளவு அதிக மக்களுக்குப் பயன்படுகிற இடத்தில் அது அமைந்துள்ளது என்பதைப் பொறுத்தும் அவை ஏற்கப்படும்.

[1972 மார்ச் 22

திரு. மு. சண்முகம் : விழுப்புரத்தில் அரசினர் மருத்துவ மனைக்காக, புதிதாக அமைக்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு நான்கைந்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தப் புதுக் கட்டடத்தைத் துவக்க அரசினர் எப்போது ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்கள்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பல்வேறு இடங்களில் அப்படிக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதிவசதி இல்லாததால் கட்டமுடியாத நிலை ஏற்படுகிறது. விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மிகவும் செல்வாக்குப் படைத்தவர்கள். அவர்களது தலைமையில் அந்தக் கட்டடத்திற்கு நிதிக் குழு ஒன்று ஏற்படுத்தி வசூலித்து மிச்சப் பணத்தை அரசாங்கம் போட்டுக் கட்டலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. ஆ. முனியாண்டி : கொடைக்கானலில் உள்ள நோயாளிகள் வத்தலகுண்டு மருத்துவ மனைக்கு வரவேண்டியிருக்கிறது. அங்கு படுக்கை வசதிகள் மிகவும் குறைவாகயிருப்பதால் அருகாமையில் உள்ள இடத்தை பொதுமக்கள் வாங்கித் தரத் தயாராயிருக்கிறார்கள். ஆகவே அதை அதிகப் படுக்கைகள் கொண்டதொரு மருத்துவமனையாக மாற்றித் தருவதற்கு அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதுபற்றித் தனி கேள்வி போட்டால் ஆலோசிக்கப்பட்டு பதில் தரப்படும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது நகரங்களில் நடமாடும் ஆஸ்பத்திரிகளை உண்டாக்க முடியாது என்று சொன்னார்கள். நகரங்களில், ஹெட்க்வார்ட்டேர்ஸ் ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர்கள் ஒன்றிரண்டு துறைகளில்தான் சிறந்தவர்களாக இருப்பார்கள். எல்லாத் துறைகளிலும் சிறந்தவர்களாக அவர்கள் இருக்க முடியாது. மாவட்டத் தலைமை ஆஸ்பத்திரிகளில் ஒவ்வொரு துறைக்கும் சிறந்த டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையோ தாலுகா ஹெட்க்வார்ட்டேர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று அங்குள்ள நோயாளிகளை இன்ஸ்பெக்ட் செய்வதன் மூலம் அங்குள்ள ஏழை நோயாளிகள், அங்கு சிகிச்சை பெறுகிறவர்கள் நல்ல முறையில் சிகிச்சை பெறக்கூடுமே, அதற்கான வழிவகைகள் செய்யப்படுமா?



1972 மார்ச் 22]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒளிமயமான எதிர்காலத்தில் எண்ணப்பட வேண்டிய திட்டம் அது. இன்னும் ஒளி பிறக்கவில்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : புதிதாக தமிழகத்தில் ஏற்படுத்த இருக்கும் மருந்தகங்களில் மலைப் பகுதிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவ மனை ஏற்படுத்துகிறபோது பஞ்சாயத்து ஒன்றியத்தின் அடிப்படையில் ஏற்படுத்துவது தான் அரசாங்கத்தின் இன்றைய முறை. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பிரதம சுகாதார நிலையம், குடும்பக் கட்டுப்பாடு மருத்துவ மனை, அதையொட்டி தாய்சேய் நல விடுதி ஐந்திலிருந்து ஏழு எட்டு வரையில் கட்டுவது என்பது இன்றுள்ள முறை. மலைப்பகுதிகளில் சில பின்தங்கிய பகுதிகளுக்கு அங்குள்ள மக்களுக்கு மருத்துவ வசதி வழங்க நடமாடும் மருத்துவமனை நடத்துவதற்கு ஓரளவிற்குத்தான் வழி செய்ய முடிகிறது. அங்குள்ள மக்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்து ஒரு மருத்துவ மனை சிறிய அளவில் நடத்தப்படுவது இன்றியமையாத தேவை என்று அரசால் உணரப்படுமானால் அப்போது நடத்தப்படும்.

*Common examination for VIII standard.*

* 618 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to hold common examinations for all VIII standard students in the State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1971 ஏப்ரல் திங்களில் நடைபெற்ற தேர்வு முதற்கொண்டு ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் அனைத்துப் பள்ளிகளுக்கும் எட்டாம் வகுப்பு ஆண்டிறுதித் தேர்வுக்கான பொது வினாத் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன, விடைத் தாள்கள் அந்தந்தப் பள்ளிகளிலேயே தான் திருத்தப்படுகின்றன. விடைத் தாள்களை வேறு பள்ளி ஆசிரியர்கள் திருத்த வேண்டும் என ஆணையிடும் செயற்குறிப்பு இப்போது பரிசீலனையில் இல்லை.

[1972 மார்ச் 22

திரு. என். கே. பழனிசாமி: இந்தப் பரீட்சைக்கு முன்னதாகவே கேள்வித் தாள்கள் வெளியாகாமல் இருப்பதற்கும், அந்தந்தப் பள்ளி மாணவர்களின் வினாத்தாள்களை அதே பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் திருத்தாமல் இருப்பதற்கும் சர்க்கார் வேறு ஏதாவது வகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கனவே 1941-ல் இருந்து 1961-ம் ஆண்டு வரை ஈ.எஸ்.எல்.ஸி. என்று பொதுத் தேர்வு நடைபெற்று வந்தது. பிறகு அது நிறுத்தப்பட்டது. மறுபடியும் எட்டாவது வகுப்பிற்கு அந்தந்தப் பள்ளிகளிலேயே தேர்வு நடைபெறுகிற முறை கையாளப்பட்டு வந்தது. சாதாரணமாகத் தனியார் பள்ளிகளிலும், ஒன்றியப் பள்ளிகளிலும் படித்து வருகிறவர்கள் உயர் நிலைப் பள்ளிகளில் எடுத்துக் கொள்வதற்கு பல தகராறுகள் இருந்தன. ஒரு பொதுத் தேர்வு நடந்து அதில் வெற்றி பெறுகிறவர்கள் மறு தேர்வு நடத்தப்படாமல் சேர்த்துக் கொள்வதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படுத்துவதற்கு பொதுக் கேள்வித்தாள்கள் மாவட்ட அளவில் தயாரிக்கப்படுகிறது. அவை மாவட்ட தலைமை கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு, பாதுகாப்போடு தயாரிக்கப்பட்டு வழங்கப்படும். எஸ்.எஸ்.எல்.சி.யைப் பொறுத்த வரையில் பாதுகாப்பான முறையில் கேள்வித் தாள்கள் தயாரிக்கப்பட்டு தரப்படுகின்றன. திருத்துவதற்கு வேறு பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னால் நிர்வாகச் செலவு போன்ற வேறு பல நிலைமைகள் ஏற்படும். நிதிவசதியை ஒட்டித்தான் அது செய்யப்படுகிறது. கேள்வித் தாள்கள் மாவட்ட அளவில் பொதுவாகத் தயாரிக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: பழைய எலிமென்ட்ரி ஸ்கூல் லீவிங் சர்டிபிக்கட் என்று பழைய மாதிரி கொண்டு வருகிற நிலை இருப்பதால் இதனால் இப்போதுள்ள நிலைக்கும் அப்போதிருந்த நிலைக்கும் ஏதாவது கல்வித் தரம் குறையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கல்வித் தரம் உயருகிற நிலை அல்ல. எட்டாவது படித்தவர்கள், தனியார் பள்ளிகளாக இருந்தாலும் சரி, ஒன்றியப் பள்ளிகளானாலும் சரி, அல்லது வேறு எந்தப் பள்ளிகளானாலும் சரி, எட்டாவது வகுப்பு தேறி வருகிறவர்கள் மறுபடியும் தேர்வு எழுதி ஒன்பதாவது வகுப்பில் சேர்த்துக்கொள்ளும் இடர்பாடு இல்லாமல் செய்வதற்குப் பொதுத் தேர்வு என்று வைத்துவிடுவதால் பாடம் சொல்லிக் கொடுப்பவர்கள் அலட்சியமாக இல்லாமல் சொல்லிக் கொடுக்கும் சூழ்நிலையும் ஏற்படும். கல்வித் தரம் ஓரளவு உயர வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் பொதுக் கேள்வித் தாள்கள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.



1972 மார்ச் 22]

## தஞ்சை மாவட்டத்துக்குப் புதுக் கல்லூரிகள்.

* 619 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், இந்தக் கல்வியாண்டில் எத்தனை புதிய கல்லூரிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் ஒரு அரசினர் ஆண்கள் கலைக்கல்லூரி 1971–72-ம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நடப்புக் கல்வியாண்டில், புதுக் கல்லூரிகள் அமைக்கக் கோரி எந்தெந்த இடங்களிலிருந்து அரசுக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன? அவைகளில் எவை எவை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்ற ஆண்டைப் பொறுத்தவரை, மன்னார்குடி, திருப்பூர், உடுமலைப்பேட்டை ஆகிய மூன்று இடங்களில் அரசாங்கக் கல்லூரிகள் வைக்கப்பட்டன. தனியார் துறையில் ஏழு கல்லூரிகள் வைக்கப்பட்டன. மொத்தம் 169 கல்லூரிகள் இருக்கின்றன. வருகிற ஆண்டு புதுக் கல்லூரிகள் அரசுத் தரப்பில் நான்கு வைப்பதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்கள் என்பதும் தனியார் துறையில் என்னென்ன கல்லூரிகள் என்பதுபற்றி பல்கலைக் கழக முடிவு அரசினருக்கு வர வேண்டும். பிறகுதான் 1972–73-ம் ஆண்டுக்கான கல்லூரிகள் பற்றி அறிவிக்க இயலும்.

[1972 மார்ச் 22

## கல்லூரிகளில் மாலே நேர வகுப்புகள்.

* 620 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு , கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை, குடந்தை, மாயூரம் கல்லூரிகளில் மாலே நேரக் கல்லூரி வகுப்புக்களைத் துவக்க திட்டமேதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தஞ்சாவூரிலுள்ள அரசர் சரபோஜி அரசினர் (ஆண்கள்) கலைக் கல்லூரியிலும், குடந்தையிலுள்ள அரசினர் (ஆண்கள்) கலைக் கல்லூரியிலும் ஏற்கனவே மாலே நேரக் கல்லூரிகள் உள்ளன. குடந்தை அரசினர் பெண்கள் கல்லூரியிலும், சில ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்ட தஞ்சை அரசினர் பெண்கள் கல்லூரியிலும், மாயூரம் ஞானம்பிகை அரசினர் (பெண்கள்) கலைக் கல்லூரியிலும் மாலே நேரக் கல்லூரிகள் துவங்குவது பற்றிய செயற்குறிப்பு ஒன்றும் இல்லே.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, புதுக் கல்லூரிகள் துவங்குவதற்குத் தேவைப்படும் பணம், கட்டடங்கள் ஆகிய நிலைமைகளைத் தவிர்க்கும் பொருட்டு மாலேநேரக் கல்லூரிகளை அதிக அளவில் துவங்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாலே நேரக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கும் அளவிற்கு ஓரளவு ஆதரவு இருக்கிறது என்று விண்ணப்பங்கள் அரசுக்கு வருமேயானல் அவற்றைப் பரிசீலித்து மாலே நேரக் கல்லூரிகள் துவங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி : மாலே நேரக் கல்லூரிகளில் பல இடங்களில் பணிபுரியும் ஊழியர்கள் படிக்கிருர்கள். அதில் பல ஊழியர்கள் ஏற்கனவே பி.யு.ஸி. படித்தவர்களாக இருக்கிருர்கள். அவர்கள் பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்புகளில் சேர்ந்து படிக்க நினைக்கிருர்கள். ஆனல் மாலேநேரக் கல்லூரிகளில் ஆர்ட் சப்ஜெக்ட்ஸ் மட்டும்தான் சொல்லித் தரப்படுகிறது. ஸயன்ஸ் சப்ஜக்ட்ஸ் சொல்லித் தருவதில்லே. எனவே மாலே நேரக் கல்லூரிகளில் ஸயன்ஸ் ஸப்ஜெக்டஸ்-ம் சொல்லிக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்குமா?



1972 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சில இடங்களில் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதுபற்றி ஆராய்ந்து அதில் இடர்பாடுகள் இருக்குமானல் அதைக் களையச் செய்வதற்கு வேண்டியதைச் செய்யலாம். என்ன முறைகள் உள்ளன என்பது பற்றி பல்கலைக் கழகத்தோடு கலந்து ஆலோசித்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

## தமிழ்நாடு புலவர்க் குழு.

* 621 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் புலவர்க் குழு அலுவலகக் கட்டட நிதிக்காக அரசு மானியம் வழங்கியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். ரூ.25,000-ஐ தமிழக அரசு மானியமாக வழங்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, முன்பிருந்த மாரில அரசு ஆஸ்தானக் கவிஞர்களை நியமித்தது போல் இந்தப் புலவர் குழுவிலிருந்து ஒருவரை அரசவைக் கவிஞர் என்று நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பேரவையில் பல ஆஸ்தான புலவர்கள் இருக்கிருர்கள். ஆகவே, தனியாக ஆஸ்தானப் புலவர்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லே என்று கருதுகிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் நிதி அளித்திருப்பதாகச் சொன்னர்கள். அந்தக் கட்டடம் எங்கே கட்டப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் புலவர் குழுவினர் தமிழ்நாட்டின் மையப் பகுதியாக விளங்குகிற திருச்சியில் கட்டுவதாகச் சொல்லியிருக்கிருர்கள். ரூபாய் 1 லட்சத்திற்கு திட்டம் போட்டு, ஏறக்குறைய ரூ. 48,000 திரட்டியிருக்கிருர்கள். அரசு ரூ. 25,000 அளித்து இருக்கிறது. விரைவில் திருச்சியில் அமைக்கப் போகிருர்கள்.

[1972 மார்ச் 22

திரு. இ. எஸ். தியாகராாசன் : தலைவரவர்களே, அரசு உயர் நிலைப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களுக்குப் பதிலாக செகண்டரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதைத் தடுத்து தமிழ் ஆசிரியர்களையே நியமிக்க முதலிடம் தரப்படுமா?

(விடை இல்லை)

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சியில் அமைய இருக்கும் புலவர் குழுக் கட்டடத்திற்கு மொத்தம் எவ்வளவு மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே நான் முதலிலேயே சொன்னேன், ரூ. 1 லட்சம்.

திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அமைக்கப்பட்டு இருக்கிற அந்தப் புலவர் குழு எத்தகைய தமிழ்ப் பணிகள் செய்து வருகிறது என்பதையும், அந்தப் புலவர் குழுவுக்காகக் கட்டப்படும் கட்டடம் தமிழ் வளர்த்த மதுரையில் கட்ட அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கட்டடம் அந்த இடத்தில் கட்டப்பட வேண்டுமென்று முடிவு செய்தது புலவர் குழு. அதிலே 49 கவிஞர்கள் இருக்கிறார்கள். இலக்கண, இலக்கிய புலவர்கள் அதில் இடம் பெற்று, பல்வேறு இடங்களுக்குச் சென்று தமிழ் வளர்ப்பது பற்றியும், தமிழில் ஆர்வம் ஊட்டுவது பற்றியும் ஆகிய பணிகளைச் செய்து வருகிறார்கள். இப்போது கூட இரண்டு நாட்களுக்கு முன்பு டெல்லிக்குப் போயிருக்கிறார்கள். ஏற்கெனவே பம்பாயிலும் அவர்களுக்கு நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது. இப்படித் தமிழுக்கு ஆக்கம் தரும் பணியில் ஈடுபட்டிருக்கும் அந்தப் புலவர் குழு தான் திருச்சியில் இடவசதி இருக்கிறது என்றும், நிதி திரட்ட வசதியிருக்கிறது என்றும் சொல்லி திருச்சியில் கட்டுவதாக முடிவு செய்திருக்கிறார்கள்.



1972 மார்ச் 22]

*High Level Committee for Madras Corporation*

* 622 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have appointed a high level official committee to enquire into the fiscal and administration structure of the Corporation of Madras and suggest ways and means for augmenting the civic bodies, finances;

(*b*) if so, whether that committee has submitted its recommendations; and

(*c*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்;

(இ) ஆம்.

(உ) அறிக்கை அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, அந்த உயர் மட்டக் குழு மாநகராட்சி நடத்துகின்ற உயர்நிலைப்பள்ளிகளுக்கு கூடுதலான செலவினங்கள் ஏற்படுகிற காரணத்தால் பொருளாதார இக்கட்டு ஏற்படுகிறது என்றும், அத்தகைய பள்ளிக்கூடங்கள், உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்றும் ஏதாவது அவர்கள் தெரிவித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தக் குழுவினர் பல்வேறு நிதி வசதி, பல்வேறு சூழ்நிலை, அதை மாற்றியமைப்பது பற்றியும், பல்வேறுவிதமான கருத்துக்களைப்பற்றியும் அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். பல்வேறு துறைகளில் கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டும். அமைச்சரவையில் வைத்து அந்த முடிவு எடுக்க வேண்டும். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த கருத்துக்களும் இருக்கக்கூடும். அதைச் சரியாகச் சொல்வதற்கு இப்போது தகவல் இல்லை. முழுப் பரிசீலனை முடிந்த பிறகு அந்த இந்த அவை முன் வைக்கப்படும்.

[1972 மார்ச் 22

## கோவில்பட்டி—ஒசநூத்து சாலை

* 623 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி-ஒசநூத்து ரோடு இன்னும் பூர்த்தியாகாததின் காரணம் என்ன?

(இ) இது சம்பந்தமாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) நீத்தாம்பட்டியில் சாலை அமைப்பதற்காக 1.54 ஏக்கர் நிலத்தை சம்பந்தப்பட்ட பட்டாதாரர்கள் ஒப்படைக்க இசைவு தரவில்லை.

(இ) நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் 4(1) அறிவிக்கை 16—8—1971 நாளிட்ட அரசு ஆணை எண் 1765 வழியாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவுக்கான கருத்து திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரிகளிடமிருந்து இன்னும் வரவில்லை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்தச் சாலை ஏறக்குறைய 25 ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. அந்த நில ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரி பல அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் நில ஆர்ஜிதம் செய்யவில்லை. உடனடியாக நில ஆர்ஜிதம் செய்து, அந்தச் சாலையை அமைத்துத் தர இந்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1.5 ஏக்கர் நிலம் தனிப்பட்டவருக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த இடத்தைத் தர அவர் மறுக்கிறார். ஆகவே, 16—8—71 நாளிட்ட அரசு ஆணையில் நில ஆர்ஜிதம் செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனால் நில ஆர்ஜிதம் செய்கிற முறைப்படி செய்தாலும், உடனடியாகப் பணிகளைத் துவக்குவதற்கு இசைவு தாருங்கள் என்று கேட்டதற்குக் கூட அவர்கள் இசைவு தரவில்லை. ஆகவே, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. பொறியாளர் அவர்கள் மாவட்ட



1972 மார்ச் 22]

வருவாய்த் துறையினருக்கு இது சம்மந்தமாகச் சில குறிப்புகளை இணைக்கம் தெரிவிக்கும் வகையில் அனுப்பியிருக்கிறார்கள். அவரிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. வந்ததற்குப் பிறகு முறைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## வில்லிவாக்கம் பேரூராட்சி

* 624 வினா—திரு. க. சுப்பு : மாண்புமி கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வில்லிவாக்கம் பேரூராட்சியை நகராட்சியாக்கக் கோரி வில்லிவாக்கம் பேரூராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

## *Holidays under Shops Accounts Rules*

* 626 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Shops Accounts Rules (i.e.) Chapters II and III of the Tamil Nadu Shops and Establishments Act, 1947, in respect of holiday during Deepavali, Ramzan and Pongal Festival have been suspended ; and

(*b*) if so, the details thereof and the reasons therefor ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) வழக்கம்போல, தொழிலாளர் நலத்துறை ஆணையாளர், கீழ்க்கண்ட கால அளவுகட்கு, இம் மாநிலத்திலுள்ள எல்லாக்

கடைகள், நிறுவனங்கள் தொடர்பாகவும், தமிழ்நாடு 1947-ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் II, III வது அத்தியாயங்கள் செயல்படுவதை நிறுத்தி வைத்தார் :

| பண்டிகை | | காலஅளவு |
|---|---|---|
| தீபாவளி | .. | 19—9—1971 முதல் 19—10—1971 முடிய இரு நாட்களும் உட்பட |
| ரம்ஜான் | .. .. | 6—11—1971 முதல் 20—11—1971 முடிய இரு நாட்களும் உட்பட |
| கிறிஸ்துமஸ், பொங்கல் | .. | 11—12—1971 முதல் 15—1—1972 முடிய இரு நாட்களும் உட்பட |

பெருந்திரளாகப் பொருள்களை வாங்கவரும் பொதுமக்களின் வசதிக்காகவே, முக்கியமாக இவ்வாறு செய்யப்படுகிறது.

*Building for Hostels in Sendamangalam*

* 627 *Q.*—THIRU C. CHINNA VELLAIYAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to construct separate buildings to Government Boys and Girls Hostels in Sendamangalam, Salem district?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

எஸ். புதுக்கோட்டையிலுள்ள அரிசனங்களுக்குப் பாதை வசதி

* 628 விளு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி வட்டம், எஸ். புதுக்கோட்டை தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய சுடுகாட்டிற்குப் பாதை வசதியே இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், பாதை அமைத்துத்தர மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) பாதை வசதி அளிக்க திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரால் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்பட்டு அது முடியும் தருவாயில் உள்ளது. நில ஆர்ஜிதம் முடிவடைந்ததும் பாதை வசதி அளிக்கப்படும்.



திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் புதுக்கோட்டை கிராமத்திற்குப் பல ஆண்டுகாலமாக சுடுகாட்டிற்கு பாதை வசதியில்லாமல் இருக்கிறது. இறந்தவர்கள் மீண்டும் வந்து போராட்டம் நடத்தப் போவதில்லை. இருப்பவர்கள் கேட்டுக் கேட்டு அசந்து விட்டார்கள். ஆகவே, எவ்வளவு விரைவில் அதை முடித்துத் தரமுடியுமோ அவ்வளவு விரைவில் பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்த அவசியத்தை உணர்ந்து தான் நில ஆர்ஜிதம் முடிந்து விட்டது, பிறகு அந்தப் பாதை அமைப்பதற்கான வகையில் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று கூறினேன்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து அரிசி எடுத்துச் செல்லக் கட்டுப்பாடு

*629 விளு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்குச் சொந்த உபயோகத்திற்காக அரிசி எடுத்துச் செல்ல இருந்து வரும் கட்டுப்பாட்டை நீக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை. ஆனல் தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நெல்—அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாடு ஆணையின் கீழ் ஒருவர் 10 கிலோகிராம் வரை நெல்லையோ அல்லது அரிசியையோ எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி, எடுத்துச் செல்ல வழி வகை உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, யார் பெயருக்கு நிலத்தின் பட்டா இருக்கிறதோ அவர்களுக்கு மட்டும் சொந்த நிலத்திலிருந்து சொந்த உபயோகத்திற்கு அரிசி எடுத்துச் செல்ல பர்மிட் கொடுக்கப்படுகிறது. சொந்த நிலமுள்ள ஒரு குடும்பத்தில் உள்ள யாருக்கும் அந்த பர்மிட் வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, யார் பேரில் பட்டா இருந்தாலும், அவர் நிலத்திற்கு உரியவர்கள் என்று இருக்கும் பட்சத்தில் தாசில்தாருக்கு விண்ணப்பித்தால் அவர்கள்

அதை விசாரித்து, உரியவர்கள் தான் என்று தெரிந்தால் அவர்கள் சொந்தக்காரர்களுக்கோ, அல்லது அவர்களுக்கு உரியவர்களுக்கோ நெல்லையோ, அரிசியையோ எடுத்துக் கொண்டு செல்வதற்கு முடியும். அங்கேயிருக்கும், தாசில்தார், டி.எஸ்.ஓ. இதற்கான அனுமதியை வழங்குகிறார்கள்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர்களின் மகன், மகளுக்கு உறவினர்களுக்குத்தான் இந்த மாதிரி அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் நண்பர்கள் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் சென்னையில் சில நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அரிசி கேட்கிறார்கள். ஆனால் நான் அரிசி வியாபாரி அல்ல. நான் நிலம் வைத்து இருப்பவன். நான் அனுப்ப வேண்டுமானால் எப்படி அனுப்புவது? அனுப்ப முடியாமல் இருக்கிறது. இதற்கு என்ன வழி என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தஞ்சையில் நிலம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் அரிசி வியாபாரி என்பது மட்டும் எனக்குத் தெரியும். (சிரிப்பு).

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இப்போது உணவு தான்யம் தாராளமாக இருக்கிற காரணத்தால் இந்தக் கட்டுப்பாடு விதிமுறைகளை மாற்றியமைப்பதற்கு ஏதேனும் உத்தேசம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் துவக்கத்திலேயே சொன்னேன், இல்லை யென்று தெரிவித்தேன். உணவு தான்யங்கள் அதிகமாக விளைந்திருக்கிறது என்ற காரணத்தால் கட்டுப்பாட்டை நீக்கி விட்டால், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போய், வெளிமாநிலங்களுக்குப் போய் விடக்கூடிய நிலைமையேற்படும். அரசாங்கத்திற்கு நெல் கையிருப்புத் தேவையென்ற காரணத்தால் இந்தக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம்.



## தலைஞாயிற்றிலுள்ள கூட்டுறவுச் செங்கல் காளவாய்

* 630 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970–71-ம் ஆண்டில் மாயூரம் தாலுக்கா தலைஞாயிறு கிராமத்தில் இயங்கும் கூட்டுறவுச் செங்கல் காளவாய் அடைந்துள்ள லாபம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாயூரம் தாலுக்கா தலைஞாயிறு கிராமத்தில் இயங்கும் கூட்டுறவுச் செங்கல் காளவாய் 1970–71-ம் ஆண்டில் அடைந்துள்ள லாபம் ரூ. 13,869,59.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தத் தலைஞாயிறு கூட்டுறவுச் செங்கல் காளவாய் சரிவர நடைபெறவில்லை என்று பல விதமான புகார்கள் அந்தப் பகுதியில் இதற்கு முன்னால் கூறப்பட்டு வந்தது. அந்தக் கூட்டுறவு செங்கல் காளவாயைக் கண்காணிக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கையினை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1966–67-ல் அந்தச் சங்கம் ரூ. 54,227.86 காசு நஷ்டத்தில் ஓடியது. இப்போது நாம் வந்ததற்குப் பின்னாலே ரூ. 12,235.00, நஷ்ட மெல்லாம் வைப் அவுட் செய்து, லாபம் காட்டியிருக்கிறார்கள். அதில் ஏதுவும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை.

## *Indian Institute of Road Transport*

*631 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Minister for Public Works be pleased to state—

(a) whether the Indian Institute for Road Transport has been set up by the Government in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

[1972 மார்ச் 22

பல்லடம்-கொச்சின் சாலையில் கரடிவாவிக்கருகில் பாலம்

* 632 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம்-கொச்சின் ரோடில், கரடிவாவிக்கு மேல்புறம் உள்ள ரோட்டில் ஒரு பாலம் கட்ட வேண்டி சம்பந்தப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து விண்ணப்பம் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம்.

(இ) நிதிப் பற்றாக்குறையினால் அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சீர்காழி வட்டத்துக்கு நெடுஞ்சாலைத்துறைப் பிரிவு

*633 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்காழி தாலூகாவிற்குத் தனியே நெடுஞ்சாலைத்துறையைப் பிரிவினை ஏற்படுத்தி ஒரு சப்-டிவிஷன் ஆபீசர் நியமிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சீர்காழியில் முறையான நெடுஞ்சாலைத்துறை உட்கோட்டம் ஒன்றை அமைத்து உட்கோட்ட அதிகாரி ஒருவரை நியமிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

எனினும், காவிரி ஆயக்கட்டுப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சாலைகள் விற்பனை வசதிகள் செய்து கொடுப்பதற்கான இந்திய அரசினால் ஒப்பளிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட விருக்கின்ற பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசு ஆணை (பலவகை) எண். 2247, பொதுப்பணித்துறை, நாள் 28—10—1971-ல் இரண்டு கோட்டங்களும் ஆறு உட்கோட்டங்களும் ஏற்படுத்த ஒப்பளிக்கப்



1972 மார்ச் 22]

பட்டுள்ளது. இதில் நெடுஞ்சாலை கிராமப் பணிகள் தலைமைப் பொறியாளர் தன்னிடம் நிலைபெற்றுள்ள அதிகாரங்களைப் பயன் படுத்தி, சீர்காழியில் தனி உட்கோட்டம் அமைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளார். இந்தத் தனி உட்கோட்டம் 28—9—1971 முதல் சீர்காழியில் செயல்படுகிறது. எந்தப் பணிக்காக இந்தத் தனி உட் கோட்டம் அமைக்கப்பட்டதோ, அந்தப் பணி முடிவடைந்த உடனே இந்த உட்கோட்டம் நீக்கிவிடப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நமது கழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலே சீர்காழியைப் பொறுத்தமட்டில் பொதுப் பணித் துறையில் ஒரு சப்-டிவிஷன் புதியதாக உருவாக்கப்பட்டது. அதைப் போலவே இப்பொழுது மாயூரம் பகுதியைச் சேர்ந்த சப்-டிவிஷன் மிக அதிகமான பரப்பளவு உள்ள ஏரியாக இருப்பதால், அங்கு வேலைகள் அதனால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது என்று அறியப்படுவதால், இனிமேலாகிலும் சீர்காழிக்குத் தனியாக ஒரு நெடுஞ்சாலை சப்-டிவிஷன் பிரிவை உருவாக்க அரசு ஆலோசிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பரிசீலிக்கப்படும்.

பாலாற்று பேசின் திட்டம்

*634 வினா.—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"பாலாற்று பேசின்" என்று சொல்லப்படும் திட்டத்தைக் கைவிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. கே. ஏ. வஹாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது பாலாறு படுகை அமுலில் இருக்கிற காரணத்தினால் பல பேர்கள் தங்களுடைய விவசாயத்திற்குரிய நீரை இறைக்க முடியாமல் அவதிக் குள்ளாகிறார்கள். ஆகவே, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதைக் கருதி, இந்தப் பாலாறு படுகை திட்டத்தை அரசு எடுத்துவிட உடனடியாக ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ் நாட்டின் நிலநீர் ஆய்வு பற்றிய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கை பெறப்பட்டது. தற்போது உள்ள பாலாற்றுப் படுகை விதிகளை மறு பரிசீலனை செய்யும்போது மாறு பட்ட பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு பாசனத்திற்கு பருவ காலங்களில் மட்டும் குறைந்த அளவில் நிலநீரைப் பயன் படுத்துவதைவிட ஆண்டு முழுவதும் வீட்டுத் தேவைகட்கும், தொழிற்சாலைத் தேவைகட்கும் பயன்படுமாறு இருக்க வேண்டு மென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மேற்கண்ட பரிந்துரை களின் பேரில் தற்போதுள்ள விதி முறைகள் 31—3—1973 வரை நீடிக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன்: பாலாறு பேசின் திட்டத்தினால் வட ஆற்காடு மாவட்டம் அதிகமாக பாதிக்கப்படுகிறது. வட ஆற்காட்டில் பாலாறு ஒரு பகுதியில் ஓடுகிறது. பாலாறு ஓடுகிற தூரம் 20, 30 மைல் தூரத்திற்குக் கூட இந்த விதி அமுலாக்கப்படு கிறது. பக்கத்தில் இல்லாமல் தூரத்திலுள்ள பகுதியில் இருப் பவர்களுக்காவது அரசு விதிவிலக்கு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாலாற்றில் 20, 30 மைல் தூரம் வரையில் இந்த விதிமுறைகள் அனுஷ்டிக்கப்படு கிறதா என்ற விவரம் என்னிடம் இல்லை. பாலாற்றின் கீழ் அதன் சக்திக்கு மீறி பாசன வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற கருத்து தெரி விக்கப்பட்டிருக்கிறது. நிலநீர் ஆராய்ச்சியாளர்கள் இந்த விதி முறைகளைப் பின்பற்றுவதால் இந்த வட்டாரத்திலுள்ள விவசாயி களுக்கு பலன் அளிக்கிறது என்று கருதுகிறார்கள். இப்பொழுது அமுலில் இருக்கும் உத்தரவுகள் கிணறு வெட்டுவதை மொத்தமாகத் தடை செய்வதில்லை. அரசு அதிகாரிகள் அப்படி பிரிவினைப் படுத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கிணறுகள் ஒன்றுக்கொன்று குறுக் கிடாமல் இருக்கும் வகையிலும் ஊற்றுநீர் மட்டம் குறையாமலிருக் கும் வகையிலும் சில விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விதிகள் பாலாற்றால் பயனடையும் விவசாயிகளின் நலனுக்காகவே ஏற்படுத் தப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட குறைபாடுகள் ஏதாவது இருந்தால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. எஸ். முருகையன்: பாலாறு பேசின் விதிகளின் காரண மாக இதிலே சான்றிதழ் பெறுவதற்கு அரசாங்கத்திற்கு மனுச் செய்து, விவசாயிகள் பல தொல்லைகளுக்கு உள்ளாக வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதுவரையில் மனுச் செய்தவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. எல்லோருக்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குத் தொல்லைதான் ஏற்படுகிறது. சான்றிதழ் பெறுவதற்கு ஏறத்தாழ 100 அல்லது 200 ரூபாய் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. யாருக்கும் மறுக்கப்படுவதில்லை. எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. ஆகவே, இதுமாதிரி ஒரு நடைமுறை இருக்க வேண்டுமா? அதை உடனடி யாக ரத்து செய்வதுபற்றி அரசாங்கம் புனராலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பல தடவை புனராலோசனை செய்துதான் நிலநீர் ஆய்வுக்குப் பிறகு, ரெவின்யூ இலாகா, பொதுப்பணித் துறை இலாகா இவைகளினால் பரிசீலிக்கப் பட்டு, இந்த விதிமுறைகளை இப்பொழுது திருத்துவதற்கு இயலாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

திரு. தொ. ப. சீனிவாசன்: பாலாற்றுத் திட்டத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். அது எங்களுடைய பகுதி, பாலாறு பேசின் திட்டத்தின்கீழ் சான்றிதழ் வாங்குவது எவ்வளவு சங்கடம் என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தப் பகுதியிலே செய்யாறு ஓடுகிறது. செய்யாற்றில் நிறைய பம்பு செட்டுகள் அமைத்து நீர் இறைப்பதால், அந்தப் பகுதியில் இருக்கிற கிணற்று ஊற்று நீரை உறிஞ்சுகிறது என்று எங்கள் பகுதியிலிருந்து பொது மக்கள் அமைச்சர் அவர் களுக்குப் புகார் செய்திருக்கிறார்களா? அத்தகைய நிலைமையின்பேரில் நடவடிக்கை எடுத்து, அமைச்சர் அவர்கள் அந்த பம்பு செட்டுகளை அப்புறப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: செய்யாற்றில் மோட்டார் பம்பு செட்டுகள் வைத்து தண்ணீர் எடுக்கிறார்களா, அதைப்பற்றி ஆட்சேபனை வந்திருக்கிறதா என்ற விவரம் என்னிடம் இப்பொழுது இல்லாவிட்டாலும், அனுமதி இல்லாமல் மோட்டார் பம்பு செட்டுகள் வைத்து ஆற்றிலிருந்து அல்லது கால்வாயிலிருந்து தண்ணீர் எடுப்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. அதன் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். மாவட்ட

ஆட்சித் தலைவர் இதுபோன்று அனுமதி இல்லாமல் பம்பு செட்டு வைத்துத் தண்ணீர் எடுத்தால், அதன்பேரில் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பார்.

திரு. எஸ். முருகையன் : செய்யாறு பாலாற்றிற்கு ஏறக்குறைய 45 மைல் தூரத்திற்கு அப்பால் ஓடிக் கொண்டிருக்கிறது. செய்யாற்றங் கரையில் உள்ள இடங்களுக்கும் இது போன்று சான்றிதழ்கள் வாங்க வேண்டும் என்ற முறை சரிதானா? செய்யாற்றில் ஒரு கரையில் இருப்பவர்கள் சான்றிதழ் வாங்க வேண்டும். அடுத்த கரையில் இருப்பவர்கள் சான்றிதழ் வாங்க வேண்டியதில்லை. அந்தக் கரையில் உள்ளவர்கள் வாங்கினால் நீர் ஊற்று இழுத்துக் கொள்ளாதா? இது ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இருக்கிற காரணத்தினால், செய்யாற்றில் இவ்வளவு தூரத்தில் இருப்பவர்கள், ஏறக்குறைய 45 மைல் தூரத்திற்கு அப்பால் இருப்பவர்கள் இந்த சான்றிதழ் வாங்க வேண்டுமென்று வைத்திருப்பதை அரசு புனராலோசனை செய்து, இனிமேலாவது இதை உடனடியாக நிவர்த்திச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக்கேள்வி பாலாற்று பேசினைப் பற்றியது. செய்யாற்றுப் பேசினைப் பற்றி என்னிடம் விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல ஏதாவது கஷ்டம் இருக்குமானால், அதுபற்றி அரசு அதிகாரிகள் பரிசீலிப்பார்கள்.

திரு. கு. காமாட்சி : இந்தப் பாலாறு பாழாறாக இருக்கிறது. இந்தப் பாலாற்றின்கீழ் நீர் ஓட்டம் அதிகமாக இருப்பதாக நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆகவே, இந்த நீரைக் கொண்டு வருவதற்கான திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் திரு. காமாட்சி அவர்கள் திருச்சியைச் சார்ந்தவர்கள். வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பாலாற்றைப் பற்றிக் கேள்வி கேட்கிறார்கள். எனவே, தனியாக அவர் கேள்வி கேட்டால், அவருக்குத் தனியாக விவரம் சேகரித்துச் சொல்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இப்பொழுது பாலாற்று அடியிலே நீரோட்டம் இருக்கிறது. அந்த நீரோட்டத்தை எல்லாம் பூமி இழுத்துக் கொள்ளும் ஒரு அபாயம் இருக்கிறது. மேலே இருக்கிற தண்ணீரெல்லாம் பாலாற்றிற்கு அடியில்



நீராக ஓடிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது சம்மந்தமாக இனியாவது ஒரு நிபுணர் குழு ஏற்படுத்தி, இதை ஆராய்ச்சி செய்து, அந்த நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே சொன்னேன் பாலாற்றின் கீழ் அதன் சக்திக்கு மீறிய பாசன வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற நிலைமை இப்பொழுது இருக்கிறது. இப்பொழுது நிலநீர் ஆய்வாளர்கள் ஆராய்ச்சி செய்த பிறகு அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையின் அடிப்படையில் நிலநீரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிற காரணத்தினால், இதுபோன்ற தடைகள் விதிக்கப்பட ஏதுவாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருக்கிற காரணத்தினால், மேற்கொண்டு குழு நியமிப்பதற்கு அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

*Agricultural Production Plans.*

* 307 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the Union Ministry of Agriculture has proposed to review the agricultural production plan of Tamil Nadu Government for 1970–71; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) உணவு—வேளாண்மை சமுதாய வளர்ச்சி—கூட்டுறவு மத்திய அமைச்சகத்தின் அதிகாரிகள் குழு ஒன்று இம் மாநிலத்திற்கு வருகை தந்து 1970–71-ஆம் ஆண்டு வேளாண்மை உற்பத்தித் திட்டம் குறித்து மாநில அரசு அதிகாரிகளுடன் 1970 ஜூன் 10, 11, 12-ஆம் நாட்களில் விவாதம் நடத்தியது.

*Training Course for Gardeners.*

* 308 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any training course for gardeners has been given by the Agricultural Department in this State during 1971; and

(b) if so, the details thereof?

[1972 மார்ச் 22

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) சென்னை மாநகரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தோட்டக்கலை மேம்பாட்டு—காய்கறி உற்பத்தித் திட்டத்தின் கீழ் தோட்டக்காரர் களுக்குப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

(இ) காய்கறித் தோட்டங்களையும், அழகு தரும் செடிகளைக் கொண்ட தோட்டங்களையும் சரியான முறையில் வைத்துப் பேணி வருவதற்காகப் பயிற்சியளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சி காலம் ஒரு திங்களாகும். பயிற்சி பெறும் ஒவ்வொரு அணி யிலும் 20 பேர்கள் அடங்கியிருப்பர். 1971–72-ம் ஆண்டில் ஆறு அணியினருக்குப் பயிற்சியளிக்கப்படும். இடை நிகழ் செலவுகளைச் சரிக் கட்ட பயிற்சிபெறும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 50 பயிற்சி உதவிப் பணம் கொடுக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்தப் பயிற்சி படிப் படியாக எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, வெளியிடங்களில் உள்ளவர்கள் ஏற்கனவே வேளாண்மைத் துறையில் நல்ல பயிற்சி உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, சென்னை யிலும், சென்னையைச் சுற்றியுள்ள இடங்களிலும் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

திரு. துரை. கோவிந்தராசன் : தலைவரவர்களே, தோட்டப் பயிற்சிப் பெறுவதற்கு ஆள் எடுக்கும்போது என்ன தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அதற்கான தகுதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பெண் தோட்டக்காரர் களுக்கும் பயிற்சி அளிக்கப்படுமா? ஒரே ஒரு மாதத்தில் முழுப் பயிற்சியும் பெற்றுவிட முடியுமா? மேலும் பயிற்சி காலத்தை நீடிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1972 மார்ச் 22]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, வேளாண்மைத் துறையில் திறமைப் பெற்றவர்களுக்கு ஒரு திங்கள் பயிற்சி பெற்றால் போதும் என்று சொல்லப்படுகிறது. பெண்களையும் சேர்த்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளி எங்கெங்கே இருக்கிறது என்பதையும், தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டும் கிடைக்காததால் இத்தகைய பயிற்சிப் பள்ளிகளை அங்கே கொண்டு வர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பற்றி நான் புதிதாகத் திட்டம் எதுவும் போடவில்லை. தஞ்சையில் இருக்கக்கூடியவர்கள் இப்படிப்பட்ட காய்கறி பயிரிடுவதில் திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, நகரப் பகுதிகளில்தான் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: Sir, in our State in places like Ooty, Hosur and other places English vegetables are grown very well and people are not in a position to understand the diseases affecting these plants and are not able to give effective treatment. May I know from the Hon. Minister whether it would be people to extend such schemes where there are English Vegetables grown in our State?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்போது வீட்டிலே வேலை செய்கிற தோட்டக்காரர்களுக்கு வேளாண்மைப் பயிற்சி நேரத்தில், வீட்டுக்கே ஆள் அனுப்பி சொல்லித்தரக்கூடிய திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இதுபற்றி யோசனை செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்தத் தோட்டக் காரர்கள் பயிற்சி பெற்ற இளைஞர்களை வேளாண்மைத் துறையில் ஈடுபடுத்துகின்ற வகையில் அவர்களைத் தோட்டக்காரர்கள் என்று

அழைப்பதற்குப் பதிலாக தோட்டக் கலைஞர்கள் என்று அழைத்தால், அவர்களும் வேளாண்மைப் பெருக்கத்தில் ஈடுபடுவார்கள். அதற்கான முயற்சியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இதுபற்றி இப்போது பரிசீலிக்கப்படவில்லை. 50 ரூபாய் கொடுக்கின்ற ஸ்டைஃபெண்ட் ஸ்கீமில் யார் வேண்டுமானாலும் இந்தப் பயிற்சி பெறலாம்.

## கரும்பு வகைகள்

*309 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அதிக அளவு சர்க்கரைச் சத்து கொடுக்கக் கூடிய கரும்பு வகைகள் எவை?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : கீழ்க்கண்ட கரும்பு வகைகள் அதிக சர்க்கரை சத்துள்ள கரும்புவகைகள்:—

| நடும் பட்டம். | கரும்பு வகைகள். |
|---|---|
| 1 முன்பட்டம்—டிசம்பர், ஜனவரி .. | கோ. 658, கோ. 449 |
| 2 இடைப்பட்டம்—பிப்ரவரி, மார்ச் .. | கோ. 419, கோ. 449, கோ. 740 மேலும் கோ. 658 |
| 3 பின்பட்டம்—ஏப்ரல், மே .. | கோ. 419, கோ. 853, கோ. 449 மேலும் கோ- 740 |
| 4 தனிப்பட்டம்—ஜூலை, செப்டம்பர் | கோ- 449, கோ, 658, கோ, 740 மேலும் கோ, 853 |

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, குறிப்பிட்ட இந்தக் கரும்பு வகைகளை பல இடங்களில் பயிர் செய்ய முற்படுகிறார்கள். ஆகவே, எந்த எந்தப் பகுதியில் எந்த எந்த கரும்பு வகை அதிக சர்க்கரை சத்து கொடுக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை அறிந்து சொல்வதற்கு ஒரு நிபுணர் குழு அமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, சில கரும்பு வகைகளை சில இடங்களில் பயிரிட்டு ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆராய்ச்சியின் முழுப் பயனும் தெரிந்த பின்னால் அது பற்றி முடிவு செய்யப்படும்.



திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, இவ்வாறு அதிகமான சர்க்கரை கொடுக்கக்கூடிய கரும்பு நம்முடைய மாநிலத்திலே எந்த எந்த மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. அவ்வாறு பயிரிடுவதற்கு அரசின் மூலமாக என்ன உதவி செய்யப்படுகிறது. அந்த வகை கரும்புகளைப் பயிரிடுகின்றன ஊராட்சிகளுக்கு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, நல்ல கண்டுமுதல் கொடுக்கக்கூடிய கரும்பு வகைகளைப் பயிர் செய்தால், அதை விற்பனை செய்கின்றபோது, சர்க்கரை ஆலைகளில் அதற்கு அதிக ரேட் கொடுக்கச் செய்ய அரசாங்கம் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு, அது பற்றி முடிவு செய்யலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, best sugar has not been introduced in India. I understand that beet contains more sugar, the percentage being 2 per cent more than that of Sugarcane. May I know from the Hon. Minister whether it would be possible to introduce beet sugar wherever there is possibility that is, in places 3,000 feet above sea level?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கோ.658, கோ.449 என்று கரும்பு வகைகளுக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறதே. அதை மாற்றி அந்தக் கரும்பு வகைகளுக்கு சுதந்திரப் போராட்ட வீரர்களின் பெயர்களைச் சூட்டுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, முன்னாலேயே இதைச் செய்திருக்க வேண்டும். அதுபற்றி யோசனை செய்யலாம்.

[1972 மார்ச் 22

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, "கரும்பு தின்னக் கூலி வேண்டுமா" என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் அமைச்சரவர்கள் அறிவித்த கரும்பு வகைகள் எல்லாம் அதிகமாக சர்க்கரை கொடுக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. இப்போது தின்பதற்குத் தரமான கரும்பு இல்லை. அதனால் தின்னக்கூடிய நல்ல கரும்புவகைகளையும் பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அந்தக் காலத்தில் கரும்பிலிருந்து நேரடியாக சர்க்கரையை சாப்பிடும் சக்தி படைத்த மனிதர்கள் இருந்தார்கள். அவர்கள் சர்க்கரையைப் பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. ஆனால் இந்தக் காலத்தில் சர்க்கரை விரும்பிகள் தான் அதிகமாக இருப்பதால், சர்க்கரை அதிகமாகக் கிடைக்கக்கூடிய கரும்பு சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

## ஆற்றங்கரைகளில் தேக்குப் பயிர்

*636 விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தின் ஆற்றங்கரைகளில் தேக்கு பயிரிடும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழகத்தில் உள்ள கால் வாய்கள், ஆறுகள், ஏரிகளின் கரைகளில் தேக்கு, கருவேலம் போன்ற மரங்களைப் பயிரிடும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முதல் அமுலில் இருந்து வருகிறது.

## கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்

*637 விஞ.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கிடும் தமிழ்நாடு அரசின் திட்டத்துக்கு மத்திய அரசு மானியம் ஏதேனும் வழங்குகின்றதா?



1972 மார்ச் 22]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழ்நாட்டில் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்திற்காகவென்று குறிப்பாக எந்த மானியத்தையும், மாநில அரசுக்கு மத்திய அரசு அளிக்கவில்லை. எனினும் மாநிலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்காகவென்று கடன்கள், மானியங்கள் வகையில் மத்திய அரசு மொத்தமாக உதவித் தொகை வழங்குகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, 1972–73-ம் ஆண்டிற்குள் தமிழகத்தினுடைய எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கும் நமது அரசின் திட்டத்தின் அடிப்படையில் நமக்கு அதிகமான நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய மத்திய அரசாங்கத்திடமிருந்து மானியம் கேட்டுப் பெறும் திட்டத்தை நமது அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இதுவரை கேட்ட வெவ்வேறுவிதமான மானியங்களே நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. அவைகள் வந்த பின்னால் இதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, அரிசன காலனிகளுக்கு நாம் இப்போது துரிதமாக மின்சாரம் கொடுக்கிறோம். அகில இந்திய அடிப்படையில் அரிசனங்களுக்கு தனிச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று வகைச் செய்யப்பட்டிருக்கிறது. எனவே இந்தத் திட்டத்திற்கு மானியம் கிடைக்க இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு போராட்டம் நடத்தியாவது பணம் பெற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மத்திய அரசு அரிசனங்களுக்குச் சலுகை அளிப்பது பற்றித் தெரியாது. ஆனால் மாநில அரசே எல்லா அரிசன காலனிகளுக்கும் முதலில் மின்சாரம் கொடுப்பது என்றும், எரிப்புக் கட்டணத்தையும் அரசு ஏற்றுக்கொள்வது என்றும் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய ரீதியில் மின்சாரத்துறைக் கட்டணத்தை ஒழுங்குபடுத்துவதற்கு மின்சாரத் துறை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்

பட வேண்டுமென்று பத்திரிகை குறிப்பு வருகிறது. அப்படி வருகிற நேரத்தில் நம் உரிமையை விட்டுக் கொடுக்காமல், மின்சாரத்துறை மாநில அரசின் கையில் இருக்க போராட்டம் ஒன்றையே நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஜோனல் கவுன்சில் கூட்டத்திலே தென் மாவட்டங்களைப் பொறுத்த அளவிலாவது மின்சாரக் கட்டணம் ஒரே சீராக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறோம். இப்போதே மத்திய அரசாங்கத்திடம்தான் எலெக்ட்ரிசிடி ஆக்ட் இருக்கிறது. அவர்கள் என்ன மாறுதலை ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும். அவர்கள் செய்கிற மாறுதல் நமக்குப் பாதகமாக இருக்குமானால் எதிர்ப்போம். சாதகமாக இருக்குமானால் நிச்சயம் ஆதரிப்போம்.

திரு. சோ. அழகர்சாமி : கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கும் திட்டத்தின்கீழ் தெருக்களுக்கு எல்லாம் விளக்குகள் போடப்படுகின்றன. விவசாயிகளுக்குப் பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்கும்போது மிகுந்த தாமதம் ஆகிக்கொண்டு வருகிறது. தெருக்களுக்குக் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்பது போல பம்பு செட்டுகளுக்கும் கட்டாயம் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எல்லாம் நிதி வசதியைப் பொறுத்ததாகும்.

திரு. எம். சுரேந்திரன் : மின்சாரம் இன்றைக்கு எல்லா மக்களுக்கும் தேவையான பொருளாக மாறிவிட்டதனால்—மின்சாரக் கட்டணங்கள் ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொருவிதமாக இருப்பதை மாற்றி—நம் மாநிலத்தைப் பொறுத்த அளவிலாவது எல்லா இடங்களிலும் ஒரேவிதமாக இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நம் மாநிலத்தைப் பொறுத்து மட்டுமல்ல—அகில இந்திய அடிப்படையிலே ஒரேவிதமாக இருக்க மத்திய அரசாங்கம் யோசித்து வருவதாக நேற்றைய தினம் பத்திரிகையில் பார்த்தோம். நமது தொழில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அது நமக்குச் சாதகமாக இருக்குமானால் ஆதரிப்போம். இல்லை என்றால் எதிர்ப்போம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி அனந்தநாயகி......

திரு. நா. வீராசாமி : இந்தியாவிலேயே...............

MR. SPEAKER: The Hon. Member is not Thirumathi Anandanayaki.

திருமதி த. ந. அனந்தநாயகி : மின்சாரம் விஸ்தரிக்கப்படுகிறது என்று எல்லா இடங்களுக்கும் தெரு விளக்குகளை நாம் போட்டு வருகிறோம். ஆனால் தெரு விளக்குகள் தான் பெரும்பாலான இடங்களில் எரிவதில்லை. ஆகவே விளக்குகள் ஒழுங்காக எல்லா இடங்களிலும் எரியும்படி பராமரிக்கப்படுவதற்கு அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர்கள் ஆளும் கட்சியில் இருக்கிறபோதும் அழகாகப் பேசியிருக்கிறார்கள். அப்போதிருந்ததைவிட இப்போது குறைபாடுகள் குறைவுதான்.

திரு. நா. வீராசாமி : இந்தியாவில் தமிழ் நாட்டில் தான் உணவு உற்பத்தியை அதிக அளவில் பெருக்க நிறைய பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. நமக்கு மின்சார உற்பத்திச் செலவே யூனிட்டுக்கு 16 பைசாவாக இருக்கிறபோது நாம் விவசாயிகளுக்கு யூனிட் 12 பைசா என்று தான் கொடுக்கிறோம். இந்த நஷ்டத்தையாவது மத்திய அரசாங்கம் ஈடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி, அந்தத் தொகையை மத்திய அரசாங்கத்திடம் இருந்து பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அரசின் சார்பாக வேறுபல மானியங்கள் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்பட்டு வருகின்றன. அவைகளே இன்னும் பலன் அளிக்கவில்லை. அவை கிடைத்த பின் இதுபற்றியும் யோசிக்கலாம்.

*State Transport buses*

*638 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that the State Transport buses which were going via. Perambalur to different places have been stopped due to the introduction of double decker buses;

[1972 மார்ச் 22

(b) if so, whether the Government have made any alternative arrangement for the convenience of the travelling public of the Perambalur Town; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்;

(இ) அண்டு (உ) கடுவிசைப் பேருந்து வழித்தடங்களில் விடப்பட்ட மாடிப் பேருந்துகளுக்குப் பதிலாகப் பின்னர் சாதாரணப் பேருந்துகள் விடப்பட்டன. திருச்சிராப்பள்ளி—சென்னை வழித்தடத்தில் (வழித்தட எண் 503) செல்லும் A.D பணிப் பேருந்துகள் பயணிகளின் வசதிக்காக 23—8—1971 முதல் பெரம்பலூர் வழியாகச் செல்கின்றன.

## கோவில்களின் திருப்பணி

* 639 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 மார்ச் முடிய நமது மாநிலத்தில் அரசு நிதி உதவியுடன் திருப்பணி செய்யப்பட்டு வரும் கோவில்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : 105 கோயில்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள சில கோயில்களில் சிலைகள் வைப்பது என்றால் இங்கே வைக்கக் கூடாது, அங்கே வைக்கக் கூடாது என்று மத்திய அரசாங்கம் தெரிவித்து வருகிறதே, தமிழகத்தில் உள்ள கோயில் திருப்பணிகளுக்கு மத்திய அரசாங்கம் மானியம் ஏதாவது வழங்கி வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழகத்தில் அறநிலைய பாதுகாப்பு வாரியத்தின்கீழ் உள்ள கோயில்களுக்கு மத்திய அரசாங்கம் மானியம் எதுவும் வழங்குவதில்லை. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் உள்ள கோயிலில் சிலை வைப்பது குறித்துத் தான் விவகாரம் வந்திருக்கிறது.



1972 மார்ச் 22]

திரு. எம். தேவராசன் : தமிழகத்துக் கோயில் திருப்பணிகளுக்கு மத்திய அரசாங்கம் உதவி செய்யவில்லை என்று சொன்னார்கள். இனியாகிலும் மத்திய அரசை வற்புறுத்தித் திருப் பணிகளுக்கு உதவி பெறுவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நம்முடைய நிர்வாகத்தின்கீழ் உள்ள கோயில்களின் திருப்பணிக்கு மத்திய அரசு பண உதவி செய்வது இருக்கட்டும். இன்றையதினம் அவர்களுடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் உள்ள பல கோயில்கள் மிகவும் சேதமடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றை நம் செலவில் புதிப்பிப்பதற்குப் பல முறைகள் கேட்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் அனுமதி அளிக்கவில்லை. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் உள்ள கோயில்களைப் புதிப்பிப்பதற்கான அதிகாரத்தையாவது மத்திய அரசு அறநிலையத் துறைக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

திரு. கே. ரங்கநாதன் : கோவை தண்டுமாரியம்மன் கோயிலைச் செப்பனிடுவதற்கு அரசாங்கம் உதவ வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை.

DR. H. V. HANDE : Sir, are the Government aware that there are a number of temple tanks which are in a very bad and unhygienic condition and they are a source of infection, and in view of this, will the Government come forward to properly clean up these tanks along with the renovation of the temples ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில்களை மராமத்து செய்கிறபோது கோயில் குளங்களும் மராமத்து செய்யப்படுகின்றன. குறிப்பாக எங்காகிலும் குளங்கள் விடுபட்டிருந்தால் அவற்றையும் சீர்திருத்தம் செய்யலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it not a fact that neither the Central Government nor the State Government have any authority to manufacture or present or locate idols and that they are manufactured and located according to ancient Tamil Silpasastras?

[1972 மார்ச் 22

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சிலைகள் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. பி. கந்தசாமி : தமிழக அறநிலையப் பாதுகாப்புத் துறையின்கீழ் கொண்டுவரப்படாத—புராதன, சரித்திர, வரலாற்றுப் புகழ் படைத்த கோயில்கள் எல்லாம் இன்றைக்கு நிதியின்றி பராமரிக்கப்படாமல் இருக்கின்றனவே, அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு அதைப் பராமரிக்க நிதி உதவி அளிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பழுதுபட்ட கோயில்களை எல்லாம் பாதுகாக்க வேண்டுமென்றுதான் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிற்ப சாத்திரப்படி சிற்பத்தை அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் நேற்று பதில் சொல்லும்போது மயிலாப்பூர் திருவள்ளுவர் கோயில் செப்பனிடப்படும் என்றார்கள். மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்த தொழித்து விடின் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட வள்ளுவருக்குத் தாடியும், குடுமியும் வைத்திருக்கிறார்கள். அவருடைய சிலைக்குக் கிராப் வைக்க வேண்டும். இதை அரசாங்கம் யோசிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : திருவள்ளுவருடைய உருவச் சிலை இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அரசு சொல்லவில்லை. அந்தக் கோயிலை ஒரு கலைக்கேந்திரமாக ஏற்படுத்துவது பற்றித்தான் நேற்று குறிப்பிட்டேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தமிழ் நாட்டில் இன்னும் எத்தனை கோயில்கள் புதுப்பிக்கப்பட்டாக வேண்டும் என்ற கணக்கு எடுக்கப் பட்டிருக்கிறதா? 105 கோயில்களில் திருப்பணி நடப்பதாகக் குறிப் பிட்டார்கள். இவற்றுக்கான செலவை அரசு கொடுக்கிறதா? அல்லது தனியார், தர்மகர்த்தாக்கள் அந்தப் பணியில் ஈடுபட்டிருக் கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்த 105 கோயில் திருப் பணிகளும் அரசாங்க உதவியோடு நடைபெற்றுக்கொண்டு வருகிற திருப்பணிகளாகும். அரசாங்கத்தில் இருந்து ஒரு பகுதி உதவித்



1972 மார்ச் 22]

தொகை கொடுக்கிறோம். திருப்பணிக் குழு உறுப்பினர்கள், அறங் காவலர்கள் நிதி வசூல் செய்தும் அந்தக் காரியத்தை நிறைவேற்று கிறார்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இராஜராஜன் கட்டிய கோயிலுக்குள்ளே அவரது சிலையை வைக்கக் கூடாது என்று மத்திய அரசு கூறுவதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் குறித்து இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கோயிலுக்குள்ளே சிலையை வைத்தால், கோயிலின் தொன்மை கெட்டுவிடும் என்ற காரணத்தை மத்திய அரசு தெரிவித்திருக்கிறது.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவர் அவர்களே, இவ்வாறு கோயில் திருப்பணி வேலைகள் நடைபெறுகின்ற நேரத்தில் கோயிலுக்குச் சொந்தமான வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்கள், வாகனங்கள் சுவாமி பவனி வரக்கூடிய வீதிகள் முதலியவற்றையும் பழுது பார்க்க அரசு தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா? இவை யெல்லாம் இப்போது பழுதுபட்டிருப்பதால், அவைகளையும் திருப்பணி வேலைக ளோடு எடுத்து நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருப் பணி வேலைகள் செய்கிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறிய எல்லா அம்சங்களையும் பார்த்துத்தான் ஆரம்பிக்கிறோம். ஏதாவது கோயிலில் அப்படிப்பட்ட வேலைகள் விடுப்பட்டிருந்தால் கவனத் திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோயில் திருப் பணிக்கு முக்கிய பணியாளர்களான சுதை வேலை செய்பவர்கள், சிற்பக் கலைஞர்கள் ஆகியோருடைய எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து வருவதால், அந்தப் பணியாளர்களை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்குப் பயிற்சிப் பள்ளியை அறநிலையத் துறையின் சார்பாக அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற் போது அந்த எண்ணிக்கை குறைந்து வருகிறது என்று சொல்வது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. அதற்கான பயிற்சிப் பள்ளி ஒன்று மாமல்லபுரத்தில் நடந்து வருகிறது.

[1972 மார்ச் 22

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழர்களால் கட்டப்பட்டு, தமிழர்களால் பேணிக் காக்கப்பட்டு வந்த தமிழ்க் கோயில்கள் தற்போது மத்திய அரசாங்கத்தின்கீழ் இருந்து வருகின்றன. அந்தக் கோயில்களை எல்லாம் நம்முடைய அரசு மீண்டும் ஏற்றுக் கொண்டு நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்தக் கோயில்களை எல்லாம் நம்முடைய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டுமென்பதுதான் நமது நோக்கம். அதைத்தான் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள மத்திய அரசின் ஆணைக்குட்பட்ட கோயில்கள், கோட்டை கொத்தளங்கள் ஆகியவற்றில் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. அந்தக் கோயில்களும் கோட்டை கொத்தளங்களும் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அதை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி புதுப்பிக்கப்படுமா? அவர்களால் அவற்றைப் புதுப்பிக்க முடியாவிட்டால், நாம் எடுத்து பராமரிக்க வேண்டுமென்பதையாவது வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அவைகளையெல்லாம் நல்ல முறையிலே பராமரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நம்முடைய கட்டுப்பாட்டின் கீழ் வர வேண்டுமென்று நீண்டநாளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நமது வேண்டுகோளை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் 105 கோயில்களுக்கு நிதி ஒதுக்கியளித்திருப்பதாகச் சொன்னார்கள். எந்தெந்தக் கோயில்கள் என்று அறிவிக்கப்படுமா? சில கோயில்களில் பரம்பரை பாத்யம் என்று சொல்லிக்கொண்டு, அதிக நிதி வைத்திருந்தும், கோயில்களைத் திருப்பணி செய்யாமல் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் படவேடு அம்மன் கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் ஏதாவது வந்திருக்கிறதா? அதை அரசு நிறைவேற்றித் தருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் 11 கோயில்களுக்கு திருப்பணி செய்ய அரசாங்கத்தின் உதவி தந்திருக்கிறோம். தமிழ்நாட்டில் 105 கோயில்



1972 மார்ச் 22]

களுக்கு உதவி தரப்பட்டிருக்கிறது. படவேடு அம்மன் கோயிலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனியாக எழுதி அனுப்பினால் தக்க கவனம் செலுத்தப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, பழைய கோயில் அமைப்புகள் எல்லாம் வௌவால்கள் வந்து அடைவதற்கு ஏற்றதாக இருக்கின்றன. மேலும் அவற்றைத் திருப்பணி செய்வதற்கும் செலவு அதிகமாக ஏற்படுகிறது. ஆகவே, காலத்திற்கேற்றபடி அந்தக் கோயில்களை புதிதாக மாற்றி அமைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, புதிதாக மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் அந்த திருப்பணி வேலைகளைச் செய்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, பழுதுபட்ட கோயில்களை சீர்படுத்துவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பழுதுப்பட்ட கோயில்கள் என்பது காலத்தினால் பழுதுபட்டதாக இருக்கலாம், பக்தர்கள் போகாத காரணத்தினாலும் கோயில்கள் பழுதுபட்டிருக்கலாம். பழுதுபட்டிருக்கும் கோயில்களை புதுப்பிப்பதைவிட, பழுதுபட்ட மக்கள் நிறைய இருப்பதால், அவர்கள் பழுதின்றி வாழ வகை செய்தால் நலலது. அவர்கள் பழுதின்றி வாழ்ந்தால்தான் கோயில்களும் சிறப்படையும். ஆகவே, கோயில்களை புதுப்பிப்பதில் எடுக்கின்ற கவனத்தைவிட பழுதுபட்டிருக்கிற மக்களை பழுதின்றி வாழ வழிவகைகள் செய்யப்படுவதில் அதிக கவனம் செலுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பழுதுபட்ட மக்களை நல்ல முறையில் வாழவைக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும். அதே நேரத்தில் நம்முடைய பழுதுபட்ட கோயில்களையும் புதுப்பிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். இந்த இரண்டு நோக்கங்களையும் அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பழுதுபட்ட கோயில்கள் எத்தனை என்பது தெரிவிக்கப்படவில்லை. பழுதுபட்ட மக்களை முன்னேற்றுவது அவசியம்தான். மனிதர்களுக்கு மத்தியில் மனதிற்கு அமைதி கிடைக்கவில்லை என்பதற்காகத்தான் மக்கள்

[1972 மார்ச் 22

கோயிலுக்கு மன அமைதியை நாடிச் செல்லுகிறார்கள். கோயில் களைச் சார்ந்துள்ள நந்தவனங்கள் போன்றவற்றை நல்ல முறையில் பராமரித்து, அங்கே மலர்கள் நிறைந்த செடிகள், விருட்சங்கள் ஆகியவற்றை வைக்கத் திட்டம் ஏதாவது அரசு வகுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள். அவர் களுடைய கட்சியான காங்கிரஸ் ஆண்ட நேரத்தில் கோயில்களுக்கு ஆண்டுதோறும் 50 ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் 1970–71-ல் கோயில்களுக்காக 4 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. 1972–73-ல் 5 லட்சம் ரூபாய் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. அம்மையார் அவர்கள் காட்டும் அக்கறையைவிட அரசாங்கத்தின் அக்கறை அதிக மாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் வேதாந்த விசாரணையாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, இத்துடன் வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுறுகிறது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டு இருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, கவன ஈர்ப்புத் தீர்மானம்......

திரு. எம். சுரேந்திரன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், இந்த சபையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? தாங்கள் கொடுத்ததைப்பற்றித் தனியாகக் கேட்கலாம். அதை இங்கே கேட்கக்கூடாது. அறையிலே இருப்பதைப்பற்றி அம்பலத்திலே பேசக்கூடாது. அறையிலே இருப்பது அறையிலே தான் இருக்க வேண்டும். இந்த மன்றத்தின்மூலம் இருக்கும் விஷயங் களைப்பற்றித்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டும்.



1972 மார்ச் 22]

## (2) கவன ஈர்ப்பு.

**செலக்ஷன் முறையால் பாதிக்கப்பட்ட சேலம் சாரதா கல்லூரி மாணவிகளை பொதுத் தேர்வு எழுத அனுமதிப்பது குறித்து.**

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

"சேலம் சாரதா கல்லூரி மாணவிகள் இந்தாண்டு பொதுத் தேர்வு எழுத செலக்ஷன் முறையை வைத்து சுமார் 300-க்கும் மேற் பட்ட மாணவிகள் தேர்வு எழுத முடியாமல் பாதிக்கப்பட்டு இருப்ப தால் இந்தாண்டு எல்லா மாணவிகளையும் பொதுத் தேர்வு எழுத அனுமதி வழங்க வேண்டும்"

என்னும் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, திரு. எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ., சேலம் சாரதா கல்லூரி நிர்வாகத்தினர் செலக்ஷன் தேர்வு முறையைப் பின்பற்று வதன் மூலம் சுமார் 300 மாணவிகள் பல்கலைக் கழகப் பொதுத் தேர்வு எழுத இயலாமல் தடங்கல் ஏற்படுமெனத் தெரிவித்து, மாணவியர் அனைவரும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டு மென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

செலக்ஷன் தேர்வு நடத்தி அதன்மூலம் சில மாணவர்களை இறுதிப் பல்கலைக் கழகத் தேர்வை எழுத விடாமல் செய்வதற்கான உத்தரவு எதையும் அரசு நடத்தும் கல்லூரிகளில் பிறப்பிக்கவில்லை; மானியம் பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரை, இது தொடர்புள்ள பல்கலைக் கழகத்தாலும் அந்தந்தக் கல்லூரிகளாலும் முடிவு செய்ய வேண்டியவொன்றாகும். இப்பொருள் முழுவதும் தொடர்புள்ள பல்கலைக் கழக வரம்பிற்கும், கல்லூரி வரம்பிற்கும் உட்பட்டதாகும். இதில் அரசின் பொறுப்பு ஏதுமில்லை.

[1972 மார்ச் 22

(3) 1972-73-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்

"நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,33,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE : To discuss policy, I move the cut motion standing in my name, viz.—

" That the allotment of Rs. 14,33,300 under Demand No. 7—Elections—be reduced by Rs. 100. "

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, வாக்காளர்களுக்கு அவரவர் உருவப்படங்கள் பதிக்கப்பட்ட அடையாளச் சீட்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,33,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல்

"நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,46,42,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss policy I move the following cut motion—

' That the allotment of Rs. 6,46,42,500 made under Demand No. 8—Head of State, Minister and Headquarters Staff—be reduced by Rs. 100.'



1972 மார்ச் 22]

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, to discuss about the expenses incurred on the tour of Hon. Ministers—I move the following cut motion :

' That the allotment of Rs. 6,46,42,500 made under Demand No. 8—Head of State, Ministers and Headquarters Staff—be reduced by Rs. 100. '

(இ) நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,29,73,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும். "

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, தியாகிகளுக்குக் கொடுக்கும் பென்ஷன் தொகையை ரூபாய 50-லிருந்து 100 ஆக உயர்த்துவதுபற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 13,29,73,900-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 32,00,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும். "

DR. H. V. HANDE : Sir, to discuss policy—I move the following cut motion :

" That the allotment of Rs. 32,00,700 made under Demand No. 6—State Legislature—be reduced by Rs. 100. "

[1972 மார்ச் 22

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, to discuss about the facilities given to the different party groups of M.L.As.—I move the following cut motion:

"That the allotment of Rs. 32,00,700 made under Demand No. 6—State Legislature—be reduced by Rs. 100."

THIRU B. VENKATASWAMY: Sir, I thank the Hon. Speaker for giving me this opportunity to speak on the Demand relating to State Legislature and other Headquarters Staff and so on.

Now, I want to stress about the difficulties experienced by M.L.As. in their day-to-day life. All Chairmen of Panchayat Unions are given facilities as telephone in their residences. They have been given a jeep, a peon and even one clerk and such other things. But the M.L.As. have to deal with 18 departments, but it is highly impossible for them to deal with all the departments and do justice to the people of their constituencies. The Members want to do justice to the people; at least minimum facilities should be given to them to do justice to their voters. For example, if we want to write letters to the Government, and also replies to the people of our constituency, at least there should be a clerk of the Upper Division cadre. I request the Government to consider this matter very sympathetically and see some clerical assistance is given to the M.L.As.

Coming to the M.L.As. Hostel, so far no Party office has been provided with telephones. It should be considered and I request this Government to consider and see that telephones are provided in the Party office in this Hostel.

Regarding, the receptionistts they are working both day and night. The day man can do his work, we need not bother much. But the night man suffers a lot. At least some kind of facility and incentive must be given to the receptionists, especially those working in the night. Throughout the night they have to do service to Members, providing rooms and looking after their conveniences. Therefore, this request should be considered sympathetically. Regarding promotions for receptionists, that also should be considered and promotions should be given them.



1972 மார்ச் 22] [Thiru B. Venkataswamy]

Regarding tape recording, since so many days we have been pressing the Government to introduce tape recording. Previously I was talking in Telugu. In Rajya Sabha and other places simultaneous translation is given to all the members so as to understand what is spoken. But now I am not in a position to talk in Telugu, because in our State Legislature, simultaneous translation is not provided; for, otherwise, Hon. Ministers and other Members are not able to understand my Telugu speech and therefore, I have switched on to English, with the little knowledge of English I have. I request the Government to introduce tape recording. If we introduce tape recording, there will not be difficulty also; for some members feel that some corrections are made and speeches are altered by the Government and they are changing so according to their convenience. Therefore, it is much better to have tape recording.

Regarding correspondence between M.L.As. and Ministers, I request Hon. Ministers to send replies in proper time to M.L.As. That is most important. Otherwise, we are not able to tell the people what we are doing and what the Government's reply is. I, therefore, request the Ministers to give replies to M.L.As. correspondence. I understand that in the case of M.Ps., that is being done by Central Ministers. So I request this Government to take steps to see that replies are given by concerned Ministers to M.L.As. so that we can improve the efficiency of the Governmental activities and see that much of the time is saved and we can also do justice to the people.

Regarding facilities to M.L.As., I want to stress that more facilities must be given. Last time we were given Rs. 100 allowance and other things. Even in the British Parliament and other places the position is better. Our Hon. Chief Minister also went to America and he was also speaking about the Senators, that each Senator will have an Office, twice or thrice as big as that of our Chief Minister and they are given more facilities and more pay also. If a man wants to do his job honestly and sincerely, he must be well-fed and given full facilities; then only he can do his job successfully and he can do some good to the people. So, I request this Government to consider the difficulties of the M.L.As. and see that more facilities are given to the M.L.As.

[Thiru B. Venkataswamy] [1972 மார்ச் 22

to do their day-to-day administration and not any other thing and to do justice to the people for which all these things are necessary. Thank you, Sir.

* திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தைப் பொறுத்தவரையிலே இந்த மன்றத்திலேயுள்ள அங்கத்தினர்கள் அனைவரும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல் எல்லோரும் ஒருமித்த கருத்துக்களைச் சொல்லும் ஒரு மானியமாகும். பொதுவாக அங்கத்தினர்களுக்குள்ள வசதிகள் கூட்டபட வேண்டு மென்பதிலே எதிர்க்கட்சியானாலும் சரி, ஆளுங்கட்சியானாலும் சரி அதிலே ஒன்றும் மாறுபட்ட கருத்தை வைத்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

பொதுவாக மாவட்ட அதிகாரிகள் என்ற நிலையிலே இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் "டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில்" என்ற ஒரு அமைப்பு இயங்குகிறது. மாதத்திற்கு ஒருமுறை கூடுகிறோம். கலெக்டர் தலைமை வகிக்கிறார்கள். தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்படுகிறதே தவிர அவைகள் உடனடியாகச் செயலுக்கு வருவதில்லை. ஆகவே இந்த டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சிலின் தலைவராக, மகாராஷ்டிரத்திலே உள்ளது போல், ஒரு நான்-அபிஸியல் மெம்பர் சேர்மனாகயிருந்தால் போராடி பல காரியங்களைச் சாதிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று கருது கிறேன்.

அதேபோன்று, ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் என்று தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிகாரங்களைப் பகிர்ந்த காரணத்தினால் நிர்வாகம் நல்ல முறையிலே அமைந்திருக்கிறது. ஆகவே இன்றைக்குப் பல பிரச்னைகளை மாவட்ட ரீதியில் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்குக் காரணம் ஒர்க் லோட் கலெக்டருக்கும் மற்றவர்களுக்கும் இருக்கிறது. ஆகவே அந்த அதிகாரங்களை இன்னும் பரவலாகப் பிரித்து, வேண்டுமானால் இன்னும் சில புதிய அதிகாரிகளைப் போட ஏற்பாடு செய்யலாம்.

நம்முடைய அரசின் சாதனைகள், எவ்வளவோ திறமையான பல காரியங்களையெல்லாம் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட முடியாமல் நிலைமை இருக்கிறது. ஆகவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு தாலுக்காவிற்கும் விளம்பர அதிகாரிகளை இன்னமும் அதிக அளவில் நியமிக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய சாதனைகளை, விவசாயம் சம்பந்தமான பல கருத்துக்களை மக்களுக்குத்



1972 மார்ச் 22] [திரு. கோவை செழியன்]

தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். குறிப்பாக வேளாண்மைத் துறையிலே பல விவசாயிகளுக்குப் பல சங்கடங்கள் வருகின்றன. அவைகளையெல்லாம் எக்ஸ்டென்ஷன் சர்வீஸ் மூலம் நல்ல முறையில் விவசாயிகளுக்குச் சொல்வதற்குப் போதிய பிரசாரகர்கள் இல்லாமலிருக்கிறார்கள். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் முதலமைச்சரவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எல்.ஏ.-க்கள் தொகுதிகளுக்குப் போகும்பொழுது, ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் செல்லும்பொழுது அங்கேயிருக்கின்ற பொது மக்கள் பல குறைகளைச் சொல்கிறார்கள். ஆனால் அந்த இடத்திலே வாக்குறுதியும் சொல்ல முடியவில்லை, அந்தக் காரியங்களை நிறைவேற்றவும் முடியவில்லை. ஆகவே ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, எம்.எல்.ஏ.-க்கள் தொகுதியிலே சுற்றுப் பயணம் செய்யும்பொழுது அங்கேயிருக்கும் பி.டி. ஓ.-க்களிலிருந்து, ஆர்.டீ.ஓ.-க்கள், தாசில்தார், இன்னும் மின்சார இலாக்காவைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லோரும் தொகுதியிலே எம்.எல்.ஏ.-க்களோடு தொகுதி முழுவதும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை சுற்றுப்பயணம் செய்வதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பொதுமக்களின் பணியான காரணத்தினால் அதிகாரிகள் எம்.எல்.ஏ.-க்களோடு வந்து சின்ன காரியங்களை உடனுக்குடன் தீர்க்க மிகவும் வசதியாக இருக்கும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, குறிப்பாக மாவட்ட அளவிலேயும் சரி, இங்கே சென்னையிலேயும் சரி, சில அதிகாரிகள் எங்களுக்கு மக்களின் பிரதிநிதிகள் என்ற சாதாரண மரியாதையைக் கூடத் தருவதில்லை. இதையெல்லாம் நாங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பவில்லை. ஆனால் இன்றைக்குக் கொண்டுவர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட மாதிரி, டெல்லியிலே ஜவஹர்லால் நேரு அவர்கள் இருந்த காலத்திலேயிருந்து பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்குத் தனியாக ஒரு மரியாதை இருக்கிறது. ஒரு ஆபீசிற்குள் நுழைந்தால் ஆபீசர் எழுந்து வந்து மரியாதை செய்து அழைத்துச் செல்வார், திரும்பி வரும்பொழுது அந்த மரியாதையோடு திருப்பி அனுப்ப வேண்டுமென்று விதிமுறையை இன்றைக்கும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஆனால் நாங்கள் அப்படி அதிகாரிகள் எழுந்து நிற்க வேண்டுமென்று கூட எதிர்பார்க்கவில்லை. நாங்கள் வரும்பொழுது அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் கேட்டிலேயே காக்க வைத்துவிடுகிறார்கள். குறிப்பாக எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலே

நான் பலமுறை இந்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன். இரண்டு மணி நேரம் உட்கார்ந்திருந்தாலும் அதிகாரிகள் எங்களை அழைத்துப் பேசுவதில்லை. அந்த நிலைமை மாற வேண்டும்.

ஈரோட்டிலே ஒரு அதிகாரியை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பார்க்கச் சென்றேன். எனக்காக எழுந்து நிற்காவிட்டாலும் பரவாயில்லை. நான் சென்றவுடன் கால்கள் இரண்டையும் டேபிள்மேல் போட்டுக்கொண்டு அனுவசியமாக இருந்தார். எனக்கு தர்ம சங்கடமாகப் போய்விட்டது. இதை நாங்கள் மேலே சபாநாயகரவர்களுக்கோ, அல்லது அமைச்சர்களுக்கோ எழுதினால் ஆளுங் கட்சியிலே உள்ளவர்களே இப்படிச் சொல்கிறார்கள், அதிகாரிகள் மீது பழி போடுகிறார்கள் என்ற பெயர் வரக்கூடாது என்பதால் சொல்லவில்லை. இனிமேல் அத்தகைய நிகழ்ச்சிகள் வரக்கூடாது.

ஐ.ஏ.எஸ். ஆபீசராகயிருந்தாலும் சரி, தாசில்தாராகயிருந்தாலும் சரி, ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருந்தாலும் சரி நாங்கள் போனால்—நாங்கள் சொந்தக் காரியங்களுக்காகப் போகவில்லை, பொதுமக்களின் குறைகளைச் சொல்லப் போகிறோம்—அந்த அதிகாரிகள் கொஞ்சமாவது மனமிரங்கி மக்களின் பிரதிநிதி என்ற மரியாதைக் கொடுக்க ஒரு சுற்றறிக்கையை அனுப்ப வேண்டும். ஏற்கனவே ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பாக அங்கத்தினர்களுக்கு மரியாதை தர வேண்டுமென்பதிலே மிகவும் கண்டிப்பானவர், ஏற்கனவே ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் அந்த அறிக்கையை யாரும் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. மணிக்கணக்கில் எங்களை நிற்க வைக்க வேண்டாமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அமைச்சர்கள் அதிகமாகச் சுற்றுப் பயணம் செய்கிறார்கள். அப்படிப் போகிறபொழுது சின்னக் காரிலே போகிறார்கள். இது மக்களின் ஆட்சிக்குத் தேவைதான். ஆனாலும் அடிக்கடி இப்படிப் போவதால் ஆக்சிடெண்ட் ஏற்பட, அல்லது சுகவீனம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆகவே பெரிய கார்களிலே போக வேண்டும், இதனால் ஒன்றும் தவறில்லை. மக்களுக்காக உழைப்பவர்கள் தங்களுடைய உடல் நலத்தையும் கவனித்தால்தான் எங்களுக்கு உங்களால் உழைக்க முடியும். அதனால் கொஞ்சம் செலவு அதிகமானாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.



எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி எங்களுக்குப் போன் கிடைப்பதில்லை. பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு உடனே கிடைக்கிறது. எங்களுக்கு ஒரு வருஷம், இரண்டு வருஷமானாலும் போன் கிடைப்பதில்லை. எனவே மத்திய சர்க்காரிடம் சொல்லி உடனே போன் கிடைக்கச் செய்ய வேண்டும். அதோடு அந்த "கால்"களையும் எங்களுக்கு ஃப்ரீ கால்களாகத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரயில்வே டிக்கெட்டுகளைப் பொறுத்தவரையில் மாதத்திற்கு பத்துமுறை நாங்கள் சென்னைக்கு வருகிறோம். திடீர்திடீரென்று வர வேண்டிய நிலை ஏற்படுகிறது. எங்களுக்குத் தரும் 350 ரூபாயில் சம்பளமும் அலவன்சும் சேர்ந்து இரயில் டிக்கெட்டுக்கே போதுவதில்லை. சில நேரங்களில் கூட்டிக் கொண்டு வருபவர்கள் டிக்கெட் வாங்கிக் கொடுத்தால் உடனே சொல்வார்கள், ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள் லஞ்சம் வாங்கிவிட்டார்கள் என்று சொல்வார்கள். எனவே அவர்களிடத்திலேயும் டிக்கெட் கேட்க முடியாது. இந்த 350 ரூபாயும் போதவில்லை. எப்படி கவர்ன்மெண்ட் டிரான்ஸ் போர்ட்டிலே இலவசமாக பாஸ் தருகிறார்களோ அப்படி எங்களுக்கு மத்திய சர்க்காரோடு போராடி இரயில்வேயிலும் இலவசமாகப் பாஸ் வாங்கிக் கொடுங்கள். எம்.பி.க்கள் செய்யும் வேலைகளைவிட நாங்கள் எந்தவிதத்திலும் குறைந்த வேலை செய்யவில்லை, அதிகமாகவே செய்கிறோம். அவர்களுக்குக் கொடுக்கும் பாஸை எங்களுக்கும் கொடுங்கள், தமிழ்நாட்டோடு போதும், டெல்லிக்குப் ஃப்ரீ யாகக் கொடுக்க வேண்டாம், தமிழ்நாடு வரை இலவசமாகக் கொடுத்தால்போதும். உத்தரப்பிரதேசத்திலேயும், பீகாரிலேயும் இப்படித் தருகிறார்கள். வேண்டுமானாலும் வருஷத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயை மத்திய சர்க்காருக்கு இதற்காகக் கொடுத்துவிடலாம். அதில் ஒன்றும் தவறில்லை.

மேலும் இன்றைக்கு அதிகமாக அடிபடுவதெல்லாம் ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்களைப் பற்றித்தான். காரிலே போனாலும் ஆபத்து. கார் வசதியும் இல்லை. தொகுதியிலே வசூல் செய்து கார் வாங்கிக் கொடுத்தால் கார் வாங்கிக்கொண்டான் என்று திட்டுகிறார்கள். கட்டை வண்டியிலேயா போய் உடனே காரியங்களைச் செய்ய முடியும்? ஆகவே இப்படிச் செய்யும்பொழுது லஞ்சம் வாங்கி விட்டார், லஞ்சம் வாங்கிவிட்டார் என்று சொல்கிறார்கள். வேண்டுமானால் எங்களுக்கு சி.ஐ.டி. வைத்து, விஜிலென்ஸ் வைத்து கண்காணித்து பாதுகாப்பு கொடுங்கள், தவறு இருந்தால் கண்டிக்கட்டும். அந்தத் தவறுக்கு நாங்கள் எதையும் ஏற்றுக்கொள்கிறோம்.

[திரு. கோவை செழியன்] [1972 மார்ச் 22

ரயில்களுக்கு டிக்கெட்டிற்கு கடைசி நேரத்தில்தான் நாங்கள் போக வேண்டியிருக்கிறது. திடீரென்று 7 மணிக்கு வந்து இந்த மாதிரி ஆபத்து, சென்னைக்கு வாருங்கள் என்கிறார்கள். அந்த நேரத்தில் ரயிலுக்கு டிக்கெட் கிடைப்பதில்லை. ஆகவே அந்த ஃப்ரீ பாஸ் வரும்வரையில் எம்.எல்.ஏக்களுக்கு கடைசிவரை 2 டிக்கெட்டுகளுக்கு—பணம் கொடுக்கிறோம்—ப்ரையாரிட்டி கொடுக்க மத்திய சர்க்காரிடத்திலே சொல்லி அந்த சலுகையைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எம்.எல்.ஏ.க்களுக்கு இன்னும் சில வசதிகளைச் சென்னையில் செய்து தரவேண்டும். தினசரி அட்டெண்டன்ஸ் போடச் சொல்லுகிறார்கள். எலிமென்டரி ஸ்கூல் பையன் மாதிரி தினசரி அட்டென்டன்ஸ் போடச் சொல்லுவது கேவலமாக இருக்கிறது. எம்.எல்.சி.க்கள் போடுவதில்லை, எம்.பி.க்கள் போடுவதில்லை. சில நேரங்களில் கையெழுத்துப் போட மறந்துவிட்டால் 20 ரூபாய் போய்விடுகிறது. திருப்பி எழுதிக் கொடுத்தால் பணம் தருகிறார்கள். அது எவ்வளவு நாகரிகமாகத் தெரியவில்லை. ஆகவே, பத்து நாட்களுக்கு ஒருமுறை கையெழுத்து வாங்கினால் போதும் என்ற முறையை ஏற்படுத்த வேண்டும்.

இங்கு பல நாட்களில் 2½ மணி வரை செஷன் நடக்கிறது. காலையில் 9 மணிக்கே வந்துவிடுவதால் டிபன் சாப்பிடாமலே வரவேண்டியிருக்கிறது. 11 மணி ஆனால் பசி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சீக்கிரமாகப் பேசி முடித்தால் சீக்கிரம் அவையின் நடவடிக்கைகளை முடித்துவிடலாம்.

திரு. கோவை செழியன்: கான்டினில் இருந்து டீ, மசால்வடை தருகிற மாதிரி ஏற்பாடு செய்தால் எங்களுடைய தகுதிக்குத் தகுந்த மாதிரி பயன்படுத்திக் கொள்ளுவோம்.

நேற்றும் நான் சொன்னேன். முன்பக்கம் நாங்கள் உட்காருவதற்காக இரு பக்கமும் போடப்பட்டிருக்கும் பெஞ்சில் உட்காருவது ஒரு தண்டனையாக இருக்கிறது. முனிவர்கள் முள் படுக்கையில் படுப்பது போன்று குத்துகிறது. அதை மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 22] [திரு. கோவை செழியன்]

சட்டசபையிலுள்ள ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் வெளியே வருகிறபோது கட்சியை மறந்து விடுகிறோம். ஆகவே, வருஷத்திற்கு ஒரு முறை எங்களை எல்லாம் அரசாங்கச் செலவில் பிக்னிக் டூர் அழைத்துப் போனால் நாங்கள் கட்சி மறந்து மனிதர்கள் என்ற முறையில், இந்தியர்கள் என்ற முறையில், தமிழர்கள் என்ற முறையில் பழக வழி ஏற்படும். ஆகவே, இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பிக்னிக் போவதற்கு அரசாங்கச் செலவில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நம்முடைய முதல்வர் அவர்கள் பிச்சைக்காரர் நிதி திரட்டுகிறார்கள். அதை வசூலிக்க இன்னும் நல்ல வகை இருக்கிறது. இந்த மாமன்றத்தில் கலை உணர்வு பெற்றவர்கள் நிறைய இருக்கிறார்கள். நடிக்கக்கூடியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். திரு. துரைமுருகன் இருக்கிறார்; ஸ்திரி பார்ட்டுக்கு ஆர். ஆர். முனுசாமி இருக்கிறார். முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டால் அவர்கள் கதை வசனம் எழுதித் தருவார்கள். 20 வருஷங்களுக்கு முன்னால் ஹைகோர்ட் ஜட்ஜ்கள் எல்லாம் சேர்ந்து நாடகம் நடத்தி வார் பண்டுக்குக் கொடுத்தார்கள். இந்த மாதிரி இங்கிருக்கும் அங்கத்தினர்களை எல்லாம் பயன்படுத்தி நல்ல நாடகமாக ஒவ்வொரு ஊருக்கும் சென்று போட்டால் அந்தந்தத் தொகுதிக்காரர்களாகவது நிச்சயமாகப் பார்ப்பார்கள். பிச்சைக்காரர் நிதிக்கு வசூல் அதிகமாகும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இங்கு பணியாற்றுகின்றவர்களிலே வாச் அண்டு வார்டு என்ற பிரிவு இருக்கிறது. அவர்களுக்கு தினசரி கான்ஸ்டபிளாக இருந்தால் 1½ ரூபாயும், ஹெட் கான்ஸ்டபிளாக இருந்தால் 2 ரூபாயும் தருகிறார்கள். பூட்சுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தருகிறார்கள். அதுவும் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தரவில்லை என்று குறைபட்டுக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய பேட்டாவைக் கொஞ்சம் உயர்த்தவேண்டும். அமைச்சர் அவர்கள் பார்த்து நல்ல முறையில் உயர்த்த வேண்டும். எங்களுக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்கிற இடைக்கால பியூன்களுக்கும் வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, தேர்தல், சட்டசபை போன்ற முக்கியமான மானியக் கோரிக்கைகளின்மேல் எங்கள் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஸ்தாபன காங்கிரசின் துணைத் தலைவர் என்ற முறையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தேர்தல் என்று சொல்லும்போது நாம் இப்போது பல கட்டங்களில் பல தேர்தல்களை நடத்தி வருகிறோம். பொதுத் தேர்தல், கார்ப்பரேஷன் தேர்தல், முனிசிபாலிடி தேர்தல், பஞ்சாயத்துத் தேர்தல் என்று நான்கு கட்டங்களில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பொதுத் தேர்தலுக்கு "அண்டர் தி பீப்பிள்ஸ் ரெப்ரசென்டேஷன் ஆக்ட்" படி வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்படுகிறது. பஞ்சாயத்துத் தேர்தல், முனிசிபாலிடி தேர்தல், கார்ப்பரேஷன் தேர்தலுக்கு என்று மற்றொரு வாக்காளர் பட்டியலைத் தயார் செய்கிறோம். இந்த இரு பட்டியல்களுக்கும் சம்மந்தம் இல்லாமல் இருக்கிறது. இந்தப் பட்டியலிலே இடம் பெறும் பெயர் முக்கியமான பட்டியலிலே இடம் பெறாமல் போய்விடுகின்ற நிலை இருக்கிறது. ரெப்ரசென்டேஷன் ஆப் பீப்பிள்ஸ் ஆக்ட் படி தயார் செய்யப்படுகின்ற வாக்காளர் ஜாபிதாவையே வைத்துக் கொண்டு மற்றத் தேர்தல்களையும் நடத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். மீண்டும் ஒரு முறை வோட்டர்கள் ஜாபிதாவைத் தயாரிக்காமல் இருக்கக்கூடிய அந்தப் பட்டியலில் வேண்டுமென்றால் திருத்தங்கள் செய்து கொள்ளலாம். இப்போது பொதுத் தேர்தலில் பேர் இருந்தால் இடைத் தேர்தலில் பேர் இல்லாத கஷ்டமெல்லாம் ஏற்படுகிறது.

திருட்டு ஓட்டுப் பழக்கம் எப்படியும் இருந்து வருகிறது. அதை யாரும் மறுக்க முடியாது. அதைப் போக்க ஓட்டர்களின் உருவப் படத்தைக் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும். எவ்வளவு ஏஜண்டுகளை வைத்தாலும் யார் உண்மையான வோட்டர்கள் என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கொஞ்சம் அதிகம் செலவானாலும் ஓட்டர்களுக்கு அவரவர்களுடைய போட்டோவை அரசாங்கச் செலவில் எடுத்துக் கொடுத்தால், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை எடுத்துக் கொடுத்தால் ஜனநாயகத்திற்கு நன்மையான காரியமாக இருக்கும் என்ற வகையில் அரசாங்கம் அந்தக் காரியத்தை மேற்கொள்ளவேண்டும்.

எண்ணிக்கையில் தவறுகள், ஓட்டுப் போடுவதில் தவறுகள் போன்றவை வருகின்றன. இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு எம்.எல்.ஏ. தேர்தலில் கூட அதை ஒத்தி வைக்க வேண்டும், எண்ணிக்கையில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். நம்முடைய ஆபீசர்களை வைத்து எண்ணச் சொல்வதால்தான் இந்த நிலை ஏற்படுகிறது. எங்களுடைய ஏஜண்டுகள் அங்கு உட்கார்ந்திருந்தால் கூட ஒரு சில மணி நேரங்களில் லட்சக்கணக்கான ஓட்டுகளை எண்ணக்கூடிய முறையில் அதைச் சரிவரக் கண்காணிக்க கஷ்டமாக இருக்கிறது.





கனம் முதலமைச்சர் அவர்கள் ஐ.பி.எம். கம்ப்யூட்டர் மெஷினை வாங்கப் போவதாகச் சொன்னார்கள். தேர்தலுக்காகவும் ஒரு மெஷினை அரசு வாங்கலாம். அமெரிக்காவில் பட்டனை அழுக்கி ஓட்டுப் போடுகிற முறை இருப்பதால் அந்த மெஷினே எண்ணிக்கையை எல்லாம் போட்டு விவரத்தைச் சொல்லிவிடுகிறது. அப்படிப்பட்ட முறையை இங்கும் ஏற்படுத்துவது நல்ல முறையாக இருக்கும். இப்போது மனிதர்களை வைத்து எண்ணுவதில் பல தவறுகள் ஏற்படுகின்றன. ஏதோ 25, 25 ஆகக் கட்டுவது, டப்பாவில் போட்டுக் குலுக்குவது, பிறகு எண்ணுவது போன்ற இந்தக் கஷ்டங்களைப் போக்க அரசு ஒரு முறையைக் காண வேண்டும்.

அடுத்து, சட்டசபை அங்கத்தினர்கள், அமைச்சர்கள் பற்றியது. ஆளுநருக்கு எவ்வளவோ லட்சக் கணக்கான ரூபாயைச் செலவழிக்கிறோம். ஆள வந்திருக்கும் கட்சி அன்றைக்கு கவர்னருக்கு இவ்வளவு செலவு வேண்டாம், கவர்னர் வேண்டாம், வேண்டாம் என்று சொன்னார்கள். இன்றைக்கு வேண்டும், வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதுதான் "ரோஜுலு மாராயி"—காலம் மாறிப் போய்விட்டது.

கவர்னர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜனவரி 26-ம் தேதி ஒன்று, பட்ஜட் கூட்டம் முடிந்த பிறகு ஒன்று, ஆக இரண்டு விருந்துகளை ஒரு ஆண்டில் கொடுக்கிறார். இரண்டு மணி நேரம் கூட விருந்து நடைபெறுவதில்லை. இங்கிருந்து கிண்டிக்குப் போய் 10 நிமிஷத்தில் திரும்பிவிடும் நிலை இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களைக் கவர்னர் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முறையில் அந்த விருந்து நடைபெறுவதில்லை. விருந்து நல்ல முறையில் ஓரளவுக்கு, எந்த அளவுக்கு இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு கலந்து பழகுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து முக்கியஸ்தர்கள், மத்திய அரசு அமைச்சர்கள் வரும்போது கவர்னர் விருந்து கொடுக்கிறார். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களைக் கூப்பிடுவதில்லை, அமைச்சர்களை மட்டுந்தான் கூப்பிடுகிறார்கள். வேறு யார் யாரையோ அவர்களே ஒரு லிஸ்ட் வைத்துக் கொண்டு கூப்பிடுகிறார்கள். அதிலே பெரும் பணக்காரர்

[திருமதி ந. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 22

கள், மக்களுடைய தொடர்பு அற்றவர்கள் ஆகியவர்கள்தான் அந்தப் பட்டியலிலே இருக்கிறார்கள். பழைய காலம் மாதிரியே அந்தப் பட்டியலே வைத்திருக்கிறார்கள். மக்களோடு தொடர்பு கொண்டுள்ள சென்னை நகர சட்ட மன்ற உறுப்பினர்களையோ, மேல்சபை உறுப்பினர்களையோ அழைப்பதில்லை. ஊரைப் பற்றி எந்தவித அக்கறையும் இல்லாதவர்கள் அழைக்கப்படுகிறார்கள். சாமான்யர்கள் ஆட்சியில் சாமான்யர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. சாமான்ய மக்களை அறியாதவர்களுக்குத்தான் கவர்னர் மாளிகை விருந்துக்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. இதை மாற்றியமைக்க வேண்டும்.

அமைச்சர்கள் அவ்வளவு பேரும் சட்டசபை இல்லாத காலங்களில் காலை 11 மணி முதல் 4 மணி வரை அவரவர்களுடைய அறைகளிலே வந்து இருக்க வேண்டும். இன்றைக்கு ஒருசில அமைச்சர்கள் தான், ரெவின்யூ அமைச்சர், கூட்டுறவு அமைச்சர் ஆகியவர்கள்தான் அலுவலகத்திற்கு வந்து தங்கள் அறைகளிலே இருக்கிறார்கள். பெரும்பாலான அமைச்சர்கள் இருப்பதில்லை. இதனால் பல பிரச்சினைகளில் அமைச்சர்களைச் சந்திக்க முடிவதில்லை. கேட்டால் பைல் பார்க்கப் போயிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். ஆபீசில் பைல் பார்க்காமல் வெளியே போயா பைல் பார்ப்பது? பொதுமக்கள் தொந்தரவு அதிகமாக இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அதற்காகத்தான் வந்திருக்கிறீர்கள்.

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லவேல்
மீக்கூறும் மனன் நிலம்"

என்ற வள்ளுவன் கூற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். எல்லா அமைச்சர்களும் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை சட்டசபை இல்லாத காலங்களில், வெளியிலே டூர் போகாத நேரங்களில் கட்டாயமாக அவரவர்களுடைய அலுவலக அறைகளில் இருந்தாக வேண்டுமென்ற உத்தரவைக் கனம் முதல்வர் அவர்கள் போட்டாக வேண்டும், அதை அமல் நடத்தியாக வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 22] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அடுத்தபடியாக, அமைச்சர்கள் வெளியிலே சுற்றுப்பயணம் செய்வதுபற்றி ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அவர்கள் மொத்தம் மொத்தமாகப் போவதை நிறுத்த வேண்டும். குறிப்பாக திருமணங்களுக்கு The whole Cabinet moves away. எல்லா அமைச்சர்களும் போய்விடுகிறார்கள். என்னதான் அவர்கள் கட்சிக்காரர்கள் திருமணமாக இருந்தாலும் மொத்தமாக எல்லோரும் போய் ஆசீர்வாதம் செய்தால்தானா கல்யாணம் நடக்கும்? துரைமுருகன் கல்யாணத்தின்போது இங்கு ஒரு அமைச்சர் கூட இல்லை. எல்லோருமே காட்பாடிக்குப் போய் விட்டார்கள். ஒன்றிரண்டு அமைச்சர்கள் போனால் பரவாயில்லை. மொத்தமாக, காபினட் முழுவதும் கல்யாணத்திற்குப் போவது என்பது நியாயம் இல்லை. மக்கள் ஆட்சிக்கு அது தகுந்த முறையும் அல்ல, வேண்டுமானால் கட்சித் தலைவர், செயலாளர் போகட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. தொண்டர்களிடம் ஆர்வம் காட்ட வேண்டியதுதான், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அரசாங்க பூர்வமாக எல்லா மந்திரிகளும் அப்படிப் போவது என்பதை நிறுத்த வேண்டும்.

சுற்றுப்பயணம் போகும்போது கூட அந்தந்த இலாகா அமைச்சர்கள்தான், வேண்டுமானால் முதல் அமைச்சர் அவர்கள் போகலாம். போகலாமே தவிர மூன்று நான்கு அமைச்சர்கள் என்று மொத்தமாக சுற்றுப்பயணம் செய்து பொதுமக்களின் பணத்தை விரயம் செய்வதற்கு இடம் அளிக்கக் கூடாது.

அடுத்தபடியாக, எம்.எல்.ஏ.க்களை விழாக்களுக்கு அழைத்தால் அவர்களுக்கு வேண்டிய இடத்தையும் அளிக்கவேண்டும். ஒரு பரிசளிப்பு விழாவிற்குப் போயிருந்தேன். ரொம்பப் பரிதாபகரமாகயிருந்தது. ஹால் ஃபுல். ஒரு இடம் கூடக் கிடைக்கவில்லை. ரொம்பக் கஷ்டப்பட்டு மூலையில் ஒரு சேரைப் போட்டார்கள். மேடையில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை. எம்.எல்.ஏ.க்கள் என்றால் சென்னை நகரில் உள்ள ஒரு சில எம்.எல்.ஏ.க்கள், சென்னையில் தங்கியிருக்கும் ஒரு சில எம்.எல்.ஏ.-க்கள் என்று ஒரு சிலர்தான் வரப் போகிறார்கள். மொத்தம் இருபது முப்பது இடங்கள் ஒதுக்கி வைக்கவேண்டிவரும். ஆகவே எம்.எல்.ஏ.க்கள். எம்.எல்.ஸி.க்கள் அழைக்கப்பட்டால் மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்களுக்கு தக்க இடங்கள் ஒதுக்கித்தரப்பட வேண்டும்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 22

Information and Publicity Department or Public Department must be in charge.

ஆபீசர்கள் கண்டுகொள்ளமாட்டேன் என்கிறார்கள். அப்படி கண்டு கொண்டு விட்டால் ஸீட்ஸ் கொடுக்க வேண்டி வருமே என்று கண்டு கொள்ளாமல் இருக்கிறார்கள். நிலை பரிதாபகரமாகயிருக்கிறது. இந்த நிலை மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏற்படக் கூடாது.

அடுத்தபடியாக சட்டசபையில் ப்யூன்கள் பலர் வேலை செய்து வருகிறார்கள். பதினைந்து ஆண்டுகளாக அவர்கள் டெம்பரரியாக வேலை பார்த்து வருகிறார்கள். சட்டசபை கூடும்போது கூப்பிடு கிறார்கள். பின்னர் போ என்று சொல்லிவிடுகிறார்கள். அது நியா யம் இல்லை. எவ்வளவோ செலவு நாம் விருந்துகளுக்குச் செலவு செய்கிறோம். கூட்டம் நடக்கும்போது ஊழியர்கள் வருகிறார்களே, எவ்வளவு பேர்கள் நமக்குத் தேவை என்று பார்த்து அவர்களை பெர்மனென்ட் பேசிஸில் வைத்துக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். பதினைந்து ஆண்டுகள் டெம்பரரியாக வைத்துக் கொண்டு நாம் இங்கு கூடும்போது கூப்பிடுவது என்பது மனிதாபிமானக் கோணத்திலிருந்து கூட அது மிகமிகக் கண்டிக்கத்தக்கது.

சட்டசபை கூடும்போது சில க்ளார்க்ஸ்களை அப்பாயின்ட் செய் கிறார்கள். குறைந்தபட்சத் தேவை எவ்வளவு என்று பார்த்து, தொடர்ச்சியாக அவர்கள் தேவைப்படுகிறார்கள் என்று சொன்னால், செலவானாலும் பரவாயில்லை அவர்களை பெர்மனென்ட் பேசிஸில், மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு அப்புறமாவது அவர்களை பெர் மெனென்ட் ஸ்டாஃபாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கவேண்டு மென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடைநிலை ஊழியர்களுக்கு ஹௌஸஸ் கொடுக்க வேண்டும். குடிசைமாற்று வாரியம், வீட்டுவசதி வாரியம் என்று போட்டு வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறோம். அவற்றில் ஸ்லம் ட்வெல்லேர்ஸ் மட்டுமல்லாமல் அரசாங்கச் சிப்பந்திகளுக்கு, கடை நிலை ஊழியர்கள் இருந்தால் அவர்களுக்கு ஒரு ஸெர்டன் பர்ஸென் டேஜ், பத்து அல்லது இருபது டெனமென்ட்ஸ் அவர்களுக்கு ஒதுக்கி தரும் திட்டத்தை ஏற்படுத்தினால் அரசாங்கச் சிப்பந்திகளுக்கும் வசதி செய்து கொடுக்கமுடியும்.



1972 மார்ச் 22] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அடுத்து, சென்ற முறையே நான் சொல்லியிருந்தேன், முதல் அமைச்சர் அவர்களிடம், அந்தந்தத் தொகுதி உறுப்பினர் அந்தந்தத் தொகுதி விழாக்களில் கலந்துகொள்ள வாய்ப்பு தரவேண்டும். எனக்கு நொச்சிநகரில் ஒரு வாய்ப்பு தந்தார்கள். அதற்கு பெரு மகிழ்ச்சி.

திரு. தங்கமணி அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்தை பார்க்கும்போது பரவலாக இது கடைப்பிடிக்கப்படுகிறதா அல்லது ஒரு முறையாக அனுமதிக்கப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. நீங்கள் 184 பேர்கள் இருக்கிறீர்கள். நாங்கள், எதிர்க்கட்சியினர், தோழமைக் கட்சிகள் போக, இருபது பேர்கள். தோழமைக் கட்சியினருக்கே அழைப்பு இல்லை என்றால் அது நியாயம் இல்லை. அரசாங்க விழாக்களில் எல்லோருக்கும் பங்கு இருக்கவேண்டும். அந்தத் தொகுதி மக்கள் பிரதிநிதி, அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அதிகார பூர்வமாக நடத்தப்படும் விழாக்களில் கலந்துகொள்ள வாய்ப்பு இருக்கவேண்டும். இன்விடேஷன்ஸ் அனுப்புகிறார்கள். ஆயிரம் பேர்களுக்குப் போவதுமாதிரி ஒரு கடிதாசி போகிறது.

They must be permitted to participate in the function

ஆகவே அத்தகைய விழாக்களில் அந்தந்தத் தொகுதி உறுப்பினர்கள் பங்கு கொள்ள வேண்டிய வசதி செய்து தரவேண்டும்.

அடுத்தபடியாக, இங்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களுக்கு ஒரு ரூம் கிடையாது. அங்கே திருவாளர் ராஜாராம் அவர்களுக்கு ஒரு ரூம் கொடுத்திருக்கிறார்கள். எங்களுக்கு ரூம் கிடையாது. டெப்டி ஸ்பீக்கர் ரூமுக்கு எதிராக ஒரு அறை இருந்தது, முன்பு அதைப் பயன்படுத்தி வந்தோம். அதை இப்போது டெப்டி ஸ்பீக்கரிடம் வருகிற விருந்தாளிகள் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தார்கள். எங்களுக்கு ரூம் இல்லை. நாங்கள் 14 பேர்கள்தான் என்றாலும் எங்களுக்கு 54 இலட்சம் வோட்டர் பெருமக்கள் இருந்தார்கள். எங்களையும் ஒரு அரசியல் கட்சி என்று யோசித்துப் பார்த்து கனம் முதல் அமைச்சர் அவர்கள் எங்களுக்கு பக்கத்தில் ஏதாவது ஒரு அறை கொடுக்கவேண்டும், காங்கிரஸ் லெஜிஸ்லேட்டர்ஸ்க்கு ஒரு ரூம் ஏற்படுத்தித்தருவது மிக மிக அவசியம் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 22

அடுத்து, உணவுப் பிரச்னை. திரு. கோவை செழியன் அவர்கள் சொன்னதுபோல் ஒன்பது மணிக்கு அவசர அவசரமாக ஓடி வருகிறோம். கான்டீன் அரைமைல் தூரத்தில் இருக்கிறது. அங்கு சென்று வாங்கி வருவதற்குள் செஷன்ஸ் முடிந்துவிடும்போல் இருக்கிறது. போய் வாங்கி வா என்று சொல்லவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அருகாமையில் ஒரு கான்டீன் கட்டித் தருவதற்கு முன்வரவேண்டும். சுடச்சுட சாப்பிட்டு சுடச்சுட இங்கு பேசுவது என்று இருக்கவேண்டும். இன்று ஆறிப்போய் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே சுடச்சுட தேவையானதை சாப்பிடுவதற்கு பக்கத்தில் ஒரு கான்டீன் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இல்லாவிடில் மிகவும் கஷ்டமாகயிருக்கும்.

அடுத்து, ஆபீஸர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கிற பாலிஸி. That should be stopped. முன்னரே முதல் அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். யாருக்கும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கமாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். எங்களுக்கு வருகிற செய்தி எல்லாம் எக்ஸ்டென்ஷன் வாங்குவதற்கு சில அதிகாரிகள் பின்னே சுற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்று. எப்படியோ அதில் வெற்றி அடைந்தும் விடுகிறார்கள். இந்தப் பாலிஸி தவறு. நமக்கு யாரும் இன்டிஸ்பென்ஸபிள் இல்லை. No one is indispensable. அப்படி ஒருவரே இருந்து அதிகாரம் நடத்துவது என்றால் பின்னால் இருக்கிறவர்கள் லாயக்கில்லாதவர்களா? அப்படி பின்னால் இருக்கிறவர்களைத் தயார் செய்வது கிடையாதா? அப்படியானால் பின்னால் இருப்பவர்களுக்கு எப்படி வாய்ப்பு கிடைக்கும்? ஆகவே, No extension should be given. யாராகயிருந்தாலும் சரி எக்ஸ்டென்ஷன் கொடுக்கவேண்டாம். ஹெல்த் மினிஸ்ட்டரிடம் கேட்டபோது சொன்னார்கள். உங்கள் இலாகாவில் கொடுக்கப்பட்டிருக்கிறதே என்று கேட்டால் அவரை விட்டால் ஆள் இல்லை என்றார்கள். அப்படியென்றால் அந்த டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்கள் எல்லாம் உதவாக்கரைகளா? அப்படியானால் அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். What is the meaning? What are we training? முடிந்தவரையில் யாராகயிருந்தாலும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கவேண்டாம். அரசியலில் இளைஞர்கள் தேவை என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க அதிகாரிகளை, வயதானவர்களை வைத்து ஏன் வேலை வாங்கவேண்டும்? வயதானவர்களுக்கு, ரிட்டயரானவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கக்கூடாது. எங்களுக்கு எவ்வளவோ இன்பர்மேஷன் வருகின்றன. டயரக்டர்



1972 மார்ச் 22] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஆஃப் ஸ்டாட்டிஸ்டிக்ஸ், லெஜிஸ்லேச்சர் செகரட்டரி, டீ.எம்.இ. (மெடிகல்) என்று பல அதிகாரிகளுக்கு ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகள் என்று எக்ஸ்டென்ஷன் கொடுத்திருக்கிறீர்கள். அப்படிக் கொடுக்கக்கூடாது என்று, கட்டுத்திட்டமாக கிடையாது என்று திட்டவட்டமாக முடிவு கட்டிவிட்டால் அவர்கள் வேலையை ஒழுங்காகக் கவனிப்பார்கள். இல்லாவிடில் பலவித விருப்பு வெறுப்புகளுக்கு அவர்கள் இடம் கொடுக்க உதவியாக இருக்கும். அப்படிப்பட்டதொரு நிலையை ஏற்படுத்தக் கூடாது.

கடைசியாக, தியாகிகள் பென்ஷன். முதல் அமைச்சர் அவர்கள் ஒரு தியாகிகள் மாநாட்டில் ரூ. 100 அளிக்கப்போவதாக வாக்களித்தார்கள். அது வரவேற்கத்தக்கது. ஆனால் அதிகாரிகளிடமிருந்து போட்ட அப்ளிகேஷன்களுக்கு பதில் வருவதில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எந்த மாநாட்டில் ரூ. 100 அளிப்பதாக வாக்களித்தேன்? இல்லாத ஒன்றை கற்பனை செய்து பேசுவது சரியல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி : மௌண்ட் ரோடில் தியாகிகள் மாநாடு நடந்து, அங்கே வாக்களித்ததாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலில் தாங்கள் சொன்ன "வாக்களித்தார்கள்" என்பதற்கும் பிறகு திருத்திக்கொண்டு "வாக்களித்ததாகச் சொன்னார்கள்" என்பதற்கும் நிறைய முரண்பாடு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்தத் தியாகிகள் மாநாட்டிற்கு நான் வரவில்லை. வரக்கூடிய பாக்கியம் இல்லை. வந்தவர்கள் சொன்னார்கள் ரூ. 50-ல் இருந்து ரூ. 100 ஆகப்போகிறது என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள். மத்திய அரசு ரூ. 200 ஆக ஆக்கப் போகிறார்கள். நமது அரசாங்கம் ரூ. 100 என்றாவது உயர்த்த வேண்டும், அரசியல் தியாகிகளுக்கு ரூ. 100 என்றாக்குவது அவசியம். அப்ளிகேஷன்ஸ் போட்டால் பதில் வருவதில்லை. வந்தாலும் எக்கச்சக்கமான பதிலை அனுப்பிகொண்டிருக்கிறார்கள். கொடுக்கவேண்டுமென்ற மனப்பான்மை அந்த அதிகாரிகளுக்கு இல்லை. அவர்களுக்கு கிடைக்கப்போவது கொஞ்ச வருடங்களுக்குத்தான். எல்லோரும் வயதானவர்கள். தயவுசெய்து அவர்களுக்கு துரிதமாகக் கொடுத்தால்தான், 'செய்கிற உதவியை காலதாமதம் இல்லாமல் செய்தால்

தான் அவர்கள் அதைப் பெறமுடியும். ஆகவே அவர்களுக்கு வேண்டிய வசதிகளை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானியத்தின் மீது பேசுகிற வாய்ப்புக்கு நன்றி.

(திரு. எஸ். முருகையன்—தலைமை)

முன்பெல்லாம் இந்த சட்டமன்றத்திற்கு வந்தவர்கள் மிகப்பெரிய பணக்காரர்கள், தனவந்தவர்கள், ஜமீன்தார்கள், இவர்களெல்லாம் தான் இந்த சட்டமன்றத்திலே வந்து அமர்ந்தார்கள். ஆனால் இப்போது அம்மையார் அவர்களின் கூற்றுப்படி மிகச்சாமான்யமானவர்கள் வந்து அமர்ந்திருக்கிறோம். அப்போது சில சாமான்யர்கள் வந்து இருக்கக்கூடும். அவர்களெல்லாம் நல்ல வசதி படைத்தவர்களின் கண்காணிப்பில் வைத்து இருந்தார்கள். ஆனால் அப்போது இருந்த வசதி வாய்ப்புகள் இப்போதும் இருக்கிறது. இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் மீது கருணை கொண்டு ஒரு ரூ. 100 இன்றைக்கு அளித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. இருந்தாலும் கூட இப்போது இருக்கின்ற நமக்கு இவைகள் போதுமானதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. நான் சம்பளத்தை அதிகப் படுத்தவேண்டுமென்று சொல்வதற்கு வரவில்லை. இருக்கின்ற வசதிகள் ஓரளவுக்கு பெருக்கித்தந்தால் போதும் என்று சொல் கிறேன்.

படிப்பு வசதி சட்டமன்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு இன்றைக்கு அந்த எம்.இ.ஆர். படி கூட போதுமான வசதி கிடைக்க வில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000 வருமானத்திற்கு மேல் உள்ள வர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடையாது, மற்ற வசதிகள் எல்லாம் கிடை யாது என்று இருக்கிறது. அதைப் பார்க்கிறபோது எங்களுடைய சம்பளத்தை நாங்கள் அதிலே குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது. அப்போது நாங்கள் அந்த வசதிகளைப் பெற முடியாத சூழ்நிலை வருகிறது. நாங்களெல்லாம் குடும்பக்கட்டுப்பாடு பிரசாரம் வரு வதற்கு முன்பே குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்கள். ஒவ்வொரு வருக்கும் 6–7 இருக்கும். 7 குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டிய சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம்.





இன்றைக்கு என்னைப் பொறுத்தவரையில் 8 குழந்தைகள் இருக் கின்றன. 8 குழந்தைகளை நான் படிக்க வைக்க வேண்டும். அங்கே போய் நான் கேட்கும்போது ஸ்காலர்ஷிப்க்கு எழுதினால் ஸ்காலர் ஷிப் ரிஜக்ட் ஆகி வருகிறது. ஹாஸ்டலில் போய் சேர்ந்தால் அதற்குப் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. அந்த வசதிகளையாவது தயவு கூர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கொடுத்து, அவர்கள் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்து தர வேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, வைத்திய வசதி, மருத்துவ விடுதிகளில் சென்றால் எங்களுக்கு மருத்துவ வசதி செய்கிறார்கள். வேண்டிய மருந்துகள் எல்லாம் கொடுக்கிறார்கள். என்னுடைய துணைவியாரை அழைத்துச் சென்றால் கூட, அவர்களுக்கு அந்த வசதி கிடைப்பது இல்லை. எக்ஸ்-ரே எடுத்தால் ரூ. 50–60 பில் போட்டு உடனே வசூல் செய்து விடுகிறார்கள். ஆகவே, அந்த வைத்திய வசதியாவது சட்ட மன்ற உறுப்பினர்களின் குடும்பத்திற்கு, கூடுமான வரையில் மனைவி, குழந்தைகள், தாயாருக்கு, செய்து தரவேண்டுமென்று. நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசியவர்கள் சொன்னார்கள், தொகுதியைச் சுற்றிப் பார்ப்பதில் இருக்கிற கஷ்டங்களைப் பற்றி. தயவு கூர்ந்து அதையும் சிந்தித்துப் பார்த்து, ஆளுக்கு ஒரு ஜீப்பாவது கொடுத்து, அதை இந்த 5 ஆண்டுகள் முடிந்த பிறகு திரும்பப் பெற்றுக்கொள்கிற அளவுக்கு, அந்த வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இப்போது ரயில்வேயில் போனால் எங்களை மதிப்பது கூட கிடையாது. பர்ஸ்ட் கிளாசில் தான் போக வேண்டியிருக்கிறது. தேர்ட்டு கிளாசில் போக முடியவில்லை. பர்ஸ்ட் கிளாசில் போக வேண்டுமானால் இரவு பயணம் செய்யவேண்டுமானால், 2 நாள் 3 நாள் முன்புபோய் ரிசர்வ் செய்யவேண்டும்—காலையில் சென்றால் அவர்கள் கொடுப்பது இல்லை. எம்.எல்.ஏ-க்கள் என்றுகூட பார்ப்பது இல்லை. ரிசர்வேஷன் கார்டில் கூட "காமாட்சி, எம்.எல்.ஏ" என்று எழுதி கொடுத்தாலும், அவர்கள் எம்.எல்.ஏ. என்று போடுவது இல்லை எம்.எல்.ஏ. என்று போடாவிட்டால் பரவாயில்லை. ரிசர் வேஷன் கோட்டாவில் எம்.எல்.ஏ-க்கு கொஞ்சம் சீட் ரிசர்வு செய்து கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத் தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. காமாட்சி] [1972 மார்ச் 22

அமைச்சர்கள் இன்றைக்கு நல்ல முறையிலே மக்களை அணுகி எல்லாக் காரியங்களையும் செய்து வருகிறார்கள். முன்பு இருந்த அமைச்சர்களுக்கும் மக்களுக்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் அவர்கள் மக்களோடு ஒன்றிப்பழகவில்லை. இன்றைக்கு அமைச்சர்கள் திருமணத்திற்குச் செல்கிறார்கள் என்றால் அவர்கள் வரவேண்டு மென்று நாங்கள் விரும்புகிறோம். அவர்கள் வந்தால் தான் எங்க ளுக்கும் மதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் வருகிறார்கள். அமைச்சர்களாக இல்லாவிட்டாலும் கூட இங்கே இருக்கும் அமைச் சர்கள் எங்களுடைய திருமணத்திற்கு வருவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர்களாக இருக்கிற காரணத்தால் நாங்கள் அவர்களை அழைக்கவில்லை. அமைச்சர்களாக இல்லாத நேரத்திலும் கலைஞர், நாவலர், என்.வி.என். மற்றவர்கள் வந்திருக் கிறார்கள். அமைச்சர்களான காரணத்தால் தான் நாங்கள் அவர் களைத் திருமணத்திற்கு அழைக்கிறோம் என்ற குற்றச்சாட்டை தயவு செய்து நான் மறுக்கிறேன்.

இன்னும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கமிட்டிகளிலே தயவு செய்து இடம் ஒதுக்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தக் கமிட்டியிலே என்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக் கின்ற பொது நிகழ்ச்சிகள், அதிலே ஏற்படுகிற விளைவுகளை ஆராயும் போது கமிட்டிகள் அமைக்கிறார்கள். அந்தக் கமிட்டியிலே எங்களை அழைப்பது இல்லை. தயவு கூர்ந்து அதற்கான வழிவகை செய்ய வேண்டும். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், இந்த சுற்றுலா கமிட்டி திருச்சிக்கு வந்தது. அந்த நேரத்தில் அந்த சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துக்கேட்டிருந்தால் இன்னும் கொஞ்சம் நல மாக இருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதே போல் என்னுடைய பகுதியில் ஒரு தொழிற்சாலை இருக் கிறது. அதை எடுக்கவேண்டுமென்பதற்காக ஒரு கமிட்டி அமைத் தார்கள். அந்தக் கமிட்டியிலே தலைமைச்செயலாளர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களே போய் அந்த இடத்தைப் பார்க்கிறார்கள். அவர்களே முடிவு செய்கிறார்கள். அவர்களே அதற்காக பதிலைக் கூறுகிறார்கள். அந்தப் பகுதியிலே அந்தப் பிரச்னையை எடுத்து வைக்கின்ற, மக்களிடம் எடுத்துச் சொல்கின்ற எங்களைப்போன்றவர் களை அந்தக் கமிட்டியிலே போட்டால், அந்த ஏற்பாடுகளை அலசி ஆராய்ந்து ஒரு முடிவு காண முடியும். ஆகவே, அந்த மாதிரி பண்ண



1972 மார்ச் 22] [திரு. கு. காமாட்சி]

வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிலே இடமளிக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தியாகிகள் பென்ஷனைப் பற்றிச் சொன்னார்கள். நான் வரவேற் கிறேன். கொடுக்கவேண்டியதுதான். ஆனால் அதே நேரத்திலே இங்கே தமிழ் தியாகிகள் பலபேர் இருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் கொடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வேண்டு கோள் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய உயிரைக் கூட தியாகம் செய்து, தமிழுக்காக உயிரை விட்ட அவர்களுடைய குடும்பங்களுக்கு பென்ஷன் தரவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

தமிழுக்காக பல பேர் சிறை சென்று இருக்கிறார்கள். பலபேர் சிறையில் இறந்த காரணத்தால் அவர்களுடைய குடும்பங்களும் நொந்து போய் இருக்கிறது. அவர்களைத் தேடிக்கண்டுபிடித்து அவர் களுக்கும் பென்ஷன் வழங்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

<u>திரு. மணலி. சி. கந்தசாமி :</u> மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு அங்கத்தினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி விட்டார்கள். நானும் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படு கிறேன்.

முதலாவதாக, மேதகு ஆளுநர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப் பினர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிற இந்த நவீன காலத்தில், வளர்ந்து வரும் நவீன காலத்தில், ஆளுநர் அவர்கள் எம்.எல்.ஏக்களை வருஷத்திற்கு ஒரு முறையாவது டீயில் சந்தித்துப் பேசுகிற அளவுக்கு சில வசதிகள் செய்து கொடுத்தால் மிகவும் நல்ல தாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது டீயில் கூடி வேடிக்கை பேசுகிற மாதிரி இல்லாமல், நாம் இப்படிக் கூடுகிற போது இருக்கிற நிலைமைகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதற்கு வசதியான முறையில் இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 மார்ச் 22

நாம் இன்றைக்கு பல்வேறு சட்டங்களை இயற்றியிருக்கிறோம். மாறி வரும் சூழ்நிலைக்கு ஏற்ப பல்வேறு சட்டங்களைக்கொண்டு வருகிறோம். அந்தச் சட்டங்கள் எல்லாம் அமல் நடத்தப்படுகின்றனவா, அந்த சட்டத்தின் நோக்கங்கள் எந்த அளவுக்கு செயல்படுத்தப்படுகின்றன என்பதையெல்லாம் அவ்வப்போது ஓரளவுக்கு பரிசீலனை செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட அதிகாரியோ, ஒரு செல்லோ, அமைத்தால், அது நிச்சயம் அந்தச் சட்டங்களை அமலுக்குக் கொண்டு வருவதற்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக. எம்.எல்.ஏ.-க்களுடைய வசதிகளை எடுத்துக் கொண்டு பார்க்கிற நேரத்திலே, சம்பளம் அதிகப்படியாக வேண்டும், வசதிகள் அதிகப்படியாக வேண்டும் என்பதற்காக நான் சொல்ல வரவில்லை. அவர்கள் தங்களுடைய அரசியல் கடமைகளை செய்கின்ற விதத்தில் அவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும்.

சமீபத்தில் சட்டசபை அங்கத்தினராக வந்திருப்பவர்கள் பெரும்பாலும் சாமான்யர்கள். ஏற்கனவே ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், நில பிரபுக்கள், மில் முதலாளிகள் சட்டமன்ற உறுப்பினர்களாக வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது வெகு சாமான்யர்கள் உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கடமைகளை சரிவர ஆற்றுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக்குப் போனால் என்ன கேட்கிறார்கள். 100 கேள்விகள் கேட்கிறார்கள். கிராமத்திற்கு சாலை வசதி செய்துகொடுங்கள், பாலம் கட்டிக் கொடுங்கள், அணை கட்டிக்கொடுங்கள் என்று இப்படி பல கோரிக்கைகளை வைக்கிறார்கள். அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். ஒரு ஆற்றுப் பாலத்தைப் பார்க்கவேண்டும், அணைக்கட்டை பார்வையிடவேண்டுமென்றால் எப்படிச் செய்வது? நிச்சயமாக எம்.எல்.ஏ-க்கள் நாணயமாக செயல்படவேண்டியதற்கு, அவர்களுடைய தொகுதிக்கு கடமைகளை ஆற்றுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட வசதிகளை கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்வதென்றால்—வேறு சுற்றுப்பிரயாணம் செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும்—தொகுதியைச் சுற்றிவருவதற்கு தாலூகா ஆபீஸ்,



1972 மார்ச் 22] [திரு. மணலி சி. கந்தசாமி]

பிளாக் டெவலப்மெண்டு ஆபீஸ் ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய ஜீப்களை குறிப்பிட்ட காலத்திற்கு, ஒரு மாதத்தில் நான்கு அல்லது ஐந்து நாட்களுக்கு சட்டமன்றம் இல்லாத நேரத்தில், எம்.எல்.ஏ.-க்களுக்குக் கொடுத்து சுற்றுப் பிரயாணத்திற்கு வசதி செய்து கொடுக்கக்கூடிய விதத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அவர்களுக்கு தங்களுடைய கடமைகளைச் செய்ய முடியாமல் போய்விடும். ஒரு நாளைக்கு ரூ. 50 வாடகை கொடுத்து அல்லது பெட்ரோல் போட்டுக் கொண்டு கார் வைத்துக்கொண்டு போவதற்கு ஒன்று பணக்காரர்களாக இருக்க வேண்டும், இல்லாவிட்டால் கடமையைச் செய்ய முடியாமல் இருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஆகவே, இது அவசியம் கவனிக்கப்படவேண்டும் என்று நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே தாலூகா கச்சேரி இருக்கக்கூடிய இடத்தில், எம்.எல்.ஏ-க்கள் பெடிஷன் தயார் செய்துகொண்டு போனால், அங்கு இருக்கக்கூடிய ஒரு டைப்பிஸ்டு அதை அடித்துக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். எம்.எல்.ஏ. வேலைகளைச் செய்வதற்கு என்று அங்கே இருக்கக்கூடிய டைப்பிஸ்டுகளில் ஒருவரை ஒதுக்கிவைத்து ஏற்பாடு செய்தால், நல்ல முறையில் செயலாற்ற முடியும். சீக்கிரம் விருவிருப்பாக வேலை செய்ய முடியும். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொருவருக்கும் ஒரு டைப் மிஷினோ, ஒரு க்ளார்க்கோ கொடுக்க கொடுக்கவேண்டும் என்று கேட்பதற்கு இல்லை நம் நாடு இருக்கக்கூடிய நிலைமை. ஆகவே, அங்கு இருக்கும் டைப் மிஷின்களில் ஒரு மிஷினை எம்.எல்.ஏ-க்கள் வேலைக்காக உபயோகப்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவிடவேண்டும். இதற்காக வெளியே கொடுத்து டைப் அடிக்கவேண்டுமென்றால் ரூ. 3 அல்லது 4 கொடுத்து அடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு வேண்டி இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாம் எழுதக்கூடிய கடிதங்களுக்கு அமைச்சர்களிடமிருந்து உடனடியாக பதில் வருகிறது, மகிழ்ச்சி அடைகிறேன். இலாகாவிலிருந்தும் பதில் வருகிறது. ஆனால், தொடர்ச்சியாக இறுதியாக அந்தக் காரியத்தில் என்ன முடிவு செய்யப்பட்டது என்று முடிவான பதில் வருவதில்லை. முதலில் கடிதம் எழுதிய உடனேயே

"கடிதம் கிடைத்தது" என்று பதில் வந்துவிடுகிறது. ஆனால் இறுதி முடிவு பற்றி கடிதம் வருவதில்லை. இறுதி முடிவு பற்றி பதில் கடிதம் வந்தால்தான் தொகுதி மக்களுக்கு அந்த விஷயத்தைப்பற்றி நாம் சொல்ல முடியும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மந்திரி களுக்கும், இலாகாவிற்கும் நாம் அடிக்கடி கடிதம் எழுதுகிறோம். ஆனால், இறுதியாக அந்த விஷயத்தில் என்ன முடிவு எடுத்திருக் கிறார்கள். ஏன் அப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது என்ற விவரங் களோடு விளக்கமாக பதில் வந்தால், அதைப்பற்றி தொகுதி மக்க ளுக்கு நாங்கள் விளக்கமாகச் சொல்வதற்கு சௌகரியமாக இருக்கும்.

ஏற்கனவே குறிப்பிட்டார்கள், ரிடையர் ஆனவர்களைப் பற்றி. கீழ்த்தட்டிலுள்ள உத்தியோகஸ்தர்களைப் பற்றி சொல்லவில்லை. மேல் தட்டிலுள்ள உத்தியோகஸ்தர்கள், அதாவது ஐ.ஏ.எஸ். அல்லது ஐ.சி.எஸ். உத்தியோகஸ்தர்கள் பெரிய போஸ்டுகளில் இருக்கக்கூடியவர்கள் பெரிய அந்தஸ்தில் இருக்கக்கூடியவர்கள் பதவி யிலிருந்து விலகிய பிறகு நாணயமாக அவர்கள் ஓய்வுகால வாழ்வை நடத்த வேண்டுமானால், அவர்களை ஒரு அந்தஸ்துள்ள உத்தியோகத் தில் நியமிப்பது நல்லது என்று கருதுகிறேன். அப்படி வயதானவர் களுக்கு பிரமோஷன் கொடுத்து வேலையில் அமர்த்துவது, அவர்கள் வெளியே போய் பணக்காரர்கள் கம்பெனியில், பிரைவேட் செக்டா ரில் வேலை செய்வது போன்ற விஷயங்களை அனுமதிப்பது ஆரோக் கியமாக இருக்காது. அந்த வழி நல்ல வழி அல்ல. அரசாங்கத் திற்கும் அது நல்லது அல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தியாகிகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள் எல்லோரும். நாம் இதில் வேறு ஒரு பிரச்னையில் மாட்டிக் கொள்வோம் என்பது என்னுடைய அபிப்பிராயம். தியாகிகள் என்றால் மொழிக்காக தியாகம் செய்தவர்களும் தியாகிகள்தான். தொழிலாளர்களுக்காக, விவசாயிகளுக்காக தியாகம் செய்தவர் களும் தியாகிகள்தான். ஏற்கனவே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு மான்யம் கொடுத்து ஒரு வழக்கத்தை ஏற் படுத்திவிட்டோம் என்பதைத் தவிர, ஜெயிலுக்குப் போனவர்க ளெல்லாம் தியாகிகள் தான், தொடர்ச்சியாக இந்த விஷயம் வந்து கொண்டே இருக்கும், எல்லோரையும் தியாகிகள் என்று சேர்த்துக் கொண்டே போகக்கூடிய நிலைமை தான் ஏற்படும். பிறகு நானும் சொல்வேன், விவசாயிகளுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் தியாகம் செய்தவர்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்





என்று சொல்வேன். அப்படிச் செய்தால் சர்க்கார் போடக்கூடிய பட்ஜெட் தொகையில் ஒரு பாதி தொகையை தியாகிகளுக்காக ஒதுக்கிவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். இருக்கக்கூடிய தியாகிகளுக்கு கொடுத்துக்கொண்டுவருகிறோம். வேறு வழி இல்லை. அவர்களுக்கு மட்டும் ஒரு நியாயமான அடிப்படையில் ஒரு தொகையை கொடுத்துக்கொண்டு வருவதோடு நிறுத்திக்கொள் வோம். பழைய காலம் சுதந்திரம் பெறவேண்டிய காலம். இப்பொழுது சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு நிலைமை அப்படி இல்லை. ஆகையால், இப்படி தியாகிகள் பட்டியலை நீட்டிக்கொண்டு போகும் ஒரு கொள்கையை உருவாக்காமல் இருக்கவேண்டும் என்பது என்னுடைய முடிவு.

அடுத்தபடியாக, போன் சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், ஒரு எம்.எல்.ஏ. எங்கு இருந்தாலும் சரி, ஊரில் இருந்தாலும் சரி, இங்கு இருந்தாலும் சரி, அவர்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு மாத்திரமாவது போனை உபயோகப்படுத்தக்கூடிய முறை யில், லோகல் கால்களுக்கு உபயோகப்படுத்தக்கூடிய அளவில், ரூ. 50 அல்லது ரூ. 75 என்ற அளவுக்கு நிபந்தனை வைத்தால் கூட பரவாயில்லை, அந்த அடிப்படையிலாவது எம்.எல்.ஏ-க்களுக்கு போன் வசதி செய்து தரவேண்டும். வேறு எங்கே வெளியில் போய் பேசினாலும் மாதம் ரூ. 400, 500 கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும், அதை அனுமதிக்க முடியாது. பக்கத்தில் இருக்கிற என் வீட்டிற்கு ஒரு போன் கொடுங்கள் என்றால், அது வீடு, இது ஹாஸ்டல் என்று சொல்லிவிடுகிறார்கள். குறிப்பிட்ட அளவுக்கு பயன்படுத்தக்கூடிய அளவுக்கு, ரூ. 40, 50 என்று குறைந்தபட்ச கட்டணத்தை பயன்படுத்தக்கூடிய அளவுக்கு எம்.எல்.ஏ-க்களுக்கு போன் வசதி செய்து தரவேண்டும். அப்படி வசதி செய்துகொடுத் தால் வேலையை திறமையாக செய்வதற்கு அனுகூலமாக இருக்கும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி கட்சி என்று சொன்னால், எல்லா கட்சிக்கும் போன் வசதி செய்துகொடுக்கவேண்டும். அம்மையார் அவர்கள் 54 லட்சம் வோட்டு வாங்கினோம். ஆகவே எங்களுக்கு மாத்திரம் போன் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதை நான் ஒத்துக்கொள்வதற்கில்லை. இதிலே பிரபோர்ஷனல் ரெப்ரசென் டேஷன் பேசுவதில் பயன் இல்லை. கொடுத்தால் எல்லா கட்சி களுக்கும் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் ஒரு கட்சிக்கும்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 மார்ச் 22

கொடுக்க வேண்டாம். இதிலே 54 இலட்சம் வோட்டு வாங்கினேம் என்று சொல்லி கொம்பு குத்திக்கொண்டு போவது என்று சொன்னால், நான் அதை ஒத்துக்கொள்வதற்குத் தயாராக இல்லை.

தொகுதியில் சுற்றுப் பிரயாணம் வரக்கூடிய காலத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் அவர்களுடைய வேலைகளை மேற்கொள்வது மட்டுமல்லாமல், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.யை பங்ஷனுக்கு அழைக்கவேண்டும். அதோடு அவருடன் 10, 15 நிமிடமாவது தனியாக உரையாட வாய்ப்பு அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் மாண்புமிகு அமைச்சர்களுடன் எம்.எல்.ஏ.-க்கள் தங்கள் குறைகளைச் சொல்ல முடியும், அங்கு இருக்கக்கூடிய தொகுதி நிலவரத்தைப் பற்றிச் சொல்ல முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் வந்தால் அந்த ஜில்லாவில் இருக்கக்கூடிய எம்.எல்.ஏ-க்களை அழைத்து அரை மணி நேரமாவது அவர்களுடன் உரையாட வேண்டும். அங்கு இருக்கக்கூடியநிலைமைகளைப் பற்றி உரையாட வேண்டும். மற்றும் பொதுவாக பல்வேறு விஷயங்களைப் பற்றி உரையாட வேண்டும். கடிதம் எழுதுவது, அல்லது வேறு விதத்தில் கூட்டங்களில் பேசுவது என்பதையெல்லாம்விட, மனிதத் தொடர்பு மூலம் பல்வேறு விஷயங்கள் தீர்ந்துவிடக்கூடும், பல்வேறு பிரச்னைகளுக்கு பரிகாரம் கண்டுவிடலாம். ஆகவே, இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கலியாணத்திற்குப் போவது பற்றி நான் பேசவில்லை. வேண்டியவர்கள் வீட்டுக் கலியாணத்திற்குப் போகிறார்கள். அதிலே எந்தவிதமான பிரச்னையும் இல்லை. நாமும் கூட கலியாணத்திற்குப் போகிறோம். ஆனால் வேறு ஒரு பங்ஷன் என்று ஏற்பாடு செய்யப்பட்டால், அந்த பங்ஷனில் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-க்கு ஏதாவது ஒரு வேலை கொடுக்க வேண்டும், ஒரு பங்கு கொடுக்க வேண்டும். தலைமை தாங்குவதோ, அல்லது வேறு ஏதாவது முறையில் பங்கு கொள்ள சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். கட்சி பங்ஷனாக இருந்தால், அமைச்சர் கலந்துகொள்வார்கள், அந்தக் கட்சிக்காரர்கள் கலந்துகொள்வார்கள், அதைப்பற்றி யாரும் கோபித்துக் கொள்ள முடியாது. ஆனால் பொதுக்காரியத்தை ஒட்டிய ஒரு பங்ஷனாக இருந்தால், அந்தத் தொகுதி எம்.எல்.ஏ-க்கு அதில் ஏதாவது ஒரு பங்கு இருக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.



1972 மார்ச் 22] [திரு. மணலி சி. கந்தசாமி]

கடைசியாக நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் எம்.எல்.ஏ.-க்களுக்கு இன்னும் கொஞ்சம் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்பதுதான். அவர்கள் தொகுதி மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள, அவர்களுடைய கடமைகளைச் செய்வதற்கு என்னென்ன வசதிகள் தேவையோ, அந்த வசதிகளைச் செய்து கொடுப்பதில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மான்யக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு கோவை செழியன் அவர்களும், மாண்புமிகு காமாட்சி அவர்களும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினார்கள். எவ்வாறு பொது மக்களுக்கு கடமைப் பட்டிருக்கக்கூடியவர்கள், அவர்களுடைய பிரச்னைகளெல்லாம் என்ன என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துவைத்து, காரணகாரியங்களை விளக்கினார்கள். எங்களுடைய குறைகளை சொல்லிக்கொள்ளக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி கூட நாங்கள் எண்ணிப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அது மாத்திரமல்ல. நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொண்டு செய்வதற்காகத்தான், குறைகளை இங்கே சொல்வதற்காகத்தான் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறோம் என்பதையும் நாங்கள் உணர்கிறோம். அதற்காக பெரிய பெரிய வசதிகள், வாய்ப்புகள் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தக் குறைகளையெல்லாம் நான் சொல்லவில்லை என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக 1967-க்கு முன்னால் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை மாண்புமிகு காமாட்சி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வசதி பெற்றவர்கள், அதிகமாக வாய்ப்பு பெற்றவர்கள், பண வசதி பெற்றவர்கள், செல்வாக்கு பெற்றவர்கள்—செல்வாக்கு பெற்றவர்கள் என்று நான் சொல்கிற நேரத்தில் ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கியவர்கள் பல பேர் இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1967-க்குப் பின்னால் பொது மக்களோடு தொடர்பு கொண்டவர்கள், பொதுக் காரியங்களில் ஈடு

[திரு. சொ. காவேரிமணியம்] [1972 மார்ச் 22

பட்டவர்கள், அரசியல் கட்சியில் தீவிர பங்கு எடுத்துக்கொண்டவர்கள், சட்ட மன்ற உறுப்பினர்களாக, மக்களுடைய பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், எந்த உறுப்பினராக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் கேட்கக்கூடிய முதல் குறை, "எங்கள் கிராமத்திற்கு பாதை இல்லை, எங்களுக்கு ஆற்றுப் பாலம் இல்லை" என்பதைப் போன்று சாதாரண கேள்விகளைத்தான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் பார்த்து பொதுமக்கள் கேட்கிறார்கள்.

அந்தக் கேள்வியை நாங்கள் மன மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அதே நேரத்தில் அந்தந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய எந்தக் குறையானாலும் சரி—குளமானது வற்றிக் கிடந்தாலும், ரோடுகள் பாழ்பட்டுக் கிடந்தாலும், அல்லது வயல்கள் வறண்டு போனாலும்,—அது யார் பொறுப்பிலே இருக்கின்றது, யார் கவனிக்க வேண்டும், யார் செப்பனிட வேண்டும் என்று பார்க்காமல் அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரின் பொறுப்புதான் என்றெண்ணி அந்த அளவுக்கு பொது மக்கள் சட்ட மன்ற உறுப்பினர் மீது குறை சொல்லுகிறார்கள்.

அது மட்டுமல்ல, காலையிலிருந்து 11 மணி வரை தேர்ந்தெடுக்கப் பட்ட சட்ட மன்ற உறுப்பினர் பொதுமக்களில் பலரைச் சந்திக்கிறார்கள். சொல்லப்படும் குறைகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறைகளில் நியாயமானவையாக இருந்தாலும், நியாயம் அதிகம் இல்லாவிட்டாலும் அவற்றைக் கேட்டு திருப்திகரமான பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம் நம் பெரியவர் மணலி அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். உறுப்பினர்கள் நியாயமாக தொகுதியில் சுற்றிப் பார்க்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாத கடமை ஆகும். அவ்வாறு சுற்றிப் பார்ப்பதற்கு உறுப்பினர்களுக்கு மேலும் அதிகமான வசதிகள் செய்து தரவேண்டியது அரசினுடைய பொறுப்பு என்று கருதுகிறேன்.

நாங்கள் மிகச் சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்த சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். நாள் ஒன்றுக்கு 30 அல்லது 40 ரூபாய் செலவழித்து பேருந்து அல்லது மகிழ்வு உந்து அமைத்து தொகுதியில் செல்ல முடிவதில்லை. குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று, ஒவ்வொரு கிராமத்துக்கும் போய் அங்கே உள்ள குறைகளை மாதம் ஒரு முறை கேட்கும் வாய்ப்பு என்னால் பெற முடியவில்லை.



1972 மார்ச் 22] [திரு. சொ. காவேரிமணியம்]

ஆகவே இந்த மாமன்றத்தில் மிகப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஜீப் வழங்க வேண்டும். அந்த ஜீப் வழங்கும் முறையில் ஏதாவது ஒரு விதி முறையைக் கடைப்பிடித்தல் நல்லது என்று கருதுகிறேன். ஐந்தாண்டுக் காலம் அந்த ஜீப்பை பயன் படுத்தி, அவர்கள் பதவிக் காலம் முடிவடையும் நேரத்தில், அல்லது மீண்டும் தேர்தலைச் சந்திக்கும் நேரத்தில் அதை ஸ்தல ரெவின்யூ அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற விதி முறை ஏற்படுத்துவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நம் மணலி அவர்கள் சொன்னது போல், காலையில் எழுந்தவுடன் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணவேண்டும். ரெவின்யூ அதிகாரிகளுக்கு போன் பண்ண வேண்டும்; எல்லா அதிகாரிகளுக்கும் போன் பண்ணி அதிகாரிகள் இருக்கிறார்களா என்று கேட்கும் அளவுக்கு அவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டி இருக்கிறது. மூன்று மாதத்திற்கொரு முறை 300, 400 ரூபாய் என்ற நிலைமை ஏற்படுகிறது. இதை மணலி அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்கள். குறைந்த பட்ச அளவுக்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு விதிவிலக்கு தர வேண்டுமென்று சுட்டிக் காட்டினார்கள். இது மிக இன்றியமையாதது; தேவையானது. சட்ட மன்ற உறுப்பினர்கள் முறையாக, செம்மையாக, திறமையாகப் பணியாற்றுவதற்கு உதவியாக இருக்கும் என்று இந்த மாமன்றத்தில் மிகத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், புகைவண்டிப் பயணத்துக்கு பாஸ் கொடுத்தால், சட்ட மன்ற உறுப்பினர்கள் சம்பளத்தைக் கூட குறைத்தாலும்—ரூ. 350 கொடுப்பவர்கள், ரூ. 250 கொடுத்தாலும் போதும் ரயில்வே பாஸ் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். ஐந்தாண்டுக் காலம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறோம். ஐந்தாண்டுகட்குப் பின் எங்கள் நிலை பராரியாக இருக்கும் நிலையும் ஏற்படலாம். தொழில் பார்க்கக் கூடியவர்களுக்கு பிராவிடண்ட் பண்டு இருக்கிறது. அது போல் கொடுக்கும் ரூ. 350-ல், ரூ. 100 பிடித்துக் கொண்டு, அதற்கான பங்குத் தொகையை அரசு செலுத்தி, ஐந்தாண்டுகளுக்குப் பின் சட்ட மன்ற உறுப்பினர் ஓய்வு பெறும் நேரத்தில், அல்லது மீண்டும் தேர்தலைச் சந்திக்கும் நேரத்தில் அவர்களுக்கு கணிசமான ஒரு தொகை அளிக்க வேண்டும் என்று மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, மாவட்ட ரீதியாக, மாவட்ட வளர்ச்சிக் குழு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூடுகிறது. அந்த வளர்ச்சிக் குழுவில் சட்ட மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட அந்தந்தத் துறையிலுள்ள பெரிய பெரிய அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள். அவ்வாறு கலந்து கொள்ளும் நேரத்தில், இங்கே எழுப்பப்பட்ட பொருள்கள், விவாதிக்கும் விஷயங்கள் எந்த அளவுக்கு தீர்மான ரூபமாக வடிக்கப்பட்டு செயல்படுகிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது ஒரு திருமண விழா மாதிரி நடந்து விடுகிறதே தவிர, சொல்லக் கூடிய குறைகள், எடுத்து வைக்கப்படும் முறையீடுகள், காட்டக் கூடிய காரணங்கள் இவைகளெல்லாம் தெளிவாகக் கோர்க்கப்படுகின்றனவா என்பதில் எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. ஒட்டு மொத்தமாக அத்தனை பேரும் இணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூடுவதைக் காட்டிலும், ஆங்காங்கே உள்ள தாலுகா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அத்தனை பேரையும் கூட்டி, சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினரை வரவழைத்து இருக்கக் கூடிய குறைகளை முறையாக எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்க வேண்டும். அது எலக்ட்ரிசிடி சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, பி.டபிள்யூ.டி. சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, அந்தக் குறைகளைப் போக்குவதற்கான காரணங்களை ஆராய வேண்டும். அதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் ஒன்று சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக டி.டி.சி. கவுன்சிலில் உயர்தர மாவட்ட ரீதியாக இருக்கும் போலீஸ் அதிகாரிகள் கலந்து கொள்வதில்லை என்பது நான் அறிந்த உண்மையாகும். அவ்வாறு கலந்து கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு தாக்கீது அல்லது செயற்குறிப்பு அனுப்பவேண்டும். குறிப்பாக நம் மாநிலமானாலும் சரி, மாவட்டமானாலும் சரி, அமைதி, சட்டம் ஒழுங்கை காப்பது அரசின் முக்கிய கடமையாகும். அது சம்பந்தப்பட்ட பல பிரச்னைகள் சட்டமன்ற உறுப்பினர்களின் நேரடி கவனத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு வரும் விஷயங்களைப் பரிசீலனை செய்வதற்கு மாவட்ட உயர்தர போலீஸ் அதிகாரிகளிடத்தில் குறைகளை முறையிடுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். டி.டி.சி. கூடுவது போல் உயர்தர போலீஸ் அதிகாரிகள் கூடி அந்தந்தத் தொகுதியிலோ அல்லது வட்டாரத்திலோ இருக்கும் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கும் முறைகள் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே இங்கே பல குறைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் குறைகளைப் போக்க அவர்கள் தொகுதியில் சுற்றிப் பார்ப்பதற்கு தேவையான வாகன வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும். அது போல் மாவட்டந்தோறும் குழுக்கள் ஏற்படுத்தி சட்ட மன்ற உறுப்பினர்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கான நல் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை உறுப்பினர்கள் சிலர் அவை நடந்து கொண்டிருக்கும்போது குறுக்கும் நெடுக்குமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். அவை நடக்கும் போது, அவர்கள் அமைச்சர்கள் வரிசைக்குச் சென்று சந்திக்க வேண்டுமாயினும் சரி, கடந்து செல்லும்போது பேரவையின் அழகு கெடுகிறது என்று கருதுகிறேன். இன்றைக்கு சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமைகளைப் பற்றியெல்லாம் பேசுகிறார்கள். அதே நேரத்தில் அவர்களது கடமையை நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பேரவை நடக்கும் போது, அமைச்சரிடம் பேசுவதானாலும், ஒருவர் பேசும்போது போகாமல், சபையின் அமைதியையும் அழகையும் காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்புக்குரிய துணைத் தலைவரவர்களே, நாட்டிலே எத்தனையோ பல சீர்திருத்தங்களையெல்லாம் நாம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டாலும், குறிப்பாக அடிப்படையிலேயே சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியது நிர்வாக அமைப்பு என்பதை நாம் பல முறை வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த நிர்வாகத்தை எப்படி சீரமைப்பது என்பதைப் பற்றி அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக ஒரு கமிட்டியை அரசு நியமித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஆனால் அந்த கமிட்டியினுடைய வேலைகள், என்ன செய்ய வேண்டும் என்று அரசாங்கம் சொல்லி இருக்கின்றதா என்று எனக்குத் தெளிவாகத் தெரியாது. நிர்வாக சீர்திருத்தம் என்பது இருக்கின்ற அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு அதிலே என்ன மாற்றங்கள் இலேசாகச் செய்யலாம் என்ற முறையில் நிர்வாக சீர்திருத்தம் இருக்குமேயானால், அது நிச்சயமாக பெரும் பயனை நாட்டுக்கு கொடுக்காது. ஆகவே நிர்வாக அமைப்பை அடியோடு மாற்றி எப்படி புதிய அமைப்பை, புதிய முறை

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 22

களை உருவாக்குவது என்பதைப் பற்றி அந்த நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் ஆலோசனை செய்ய வேண்டும் என்று அரசு அவர்களுக்கு தாக்கீது அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் இந்த அமைப்பானது உளுத்துப்போன ஒரு அமைப்பு. காலத்திற்கேற்ற முறையில் செயல்பட முடியாத ஒரு அமைப்பு. ஒரு காரியத்தை செய்ய வேண்டுமென்று யார் விரும்பினாலும் செய்ய முடியாது. ஒரு சமயம் பண்டிட் ஜவஹர்லால் நேரு கூறினார்கள் "நான் ஒரு கிராமத்திலே ஒரு கூட்டுறவுச் சங்கம் வைக்க வேண்டு மென்று விரும்பினேன்; என்னால் முடியவில்லை" என்று. அப்படித் தான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிர்வாக அமைப்பு இருக்கிறது. அதனால் நாட்டிலே இன்றைக்கு நன்மை ஏற்பட முடியுமா என்றால் இல்லை. ஆகவே, மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய விதத்தில், மக்கள் பலன் அடையக்கூடிய முறையில் இந்த அமைப்பை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். கால தாமதம் எப்படி ஏற்படுகிறது என்பதைச் சொல்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே கயிறு தொழிற்சாலை கிடையாது. கேரளத்திலே நிறைய கயிறு தொழிற்சாலை இருக்கின்றன. தமிழகத்திலும் நிறைய கயிறு இன்டஸ்டிரிகளை ஆரம்பிக்க அரசாங்கம் விரும்பியது. தஞ்சை மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் தென்னை மரங்கள் நிறைய உள்ளன. ஆகவே, முதலில் தஞ்சையில் கயிறு இன்டஸ்டிரி ஆரம்பிக்க லாம் என்று அரசாங்கம் விரும்பியது. மற்ற தொழில்களுக்கு எல்லாம் தொழிலை ஆரம்பித்த பின்னால்தான் லோன் கொடுப் பார்கள். ஆனால் இந்தத் தொழிலுக்கு, தொழிலை ஆரம்பிப்பதற்கே கூட முன்வருபவர்களுக்கு லோன் கொடுக்கலாம் என்று முடிவு செய்து, அதற்காக தனி அசிஸ்டன்ட் டைரக்டர் ஒருவரையும் தஞ்சாவூரிலே நியமித்தார்கள். ஒரு சிலர் தொழில் தொடங்குவதற் காக லோன் அப்ளிகேஷன் போட்டார்கள். அப்ளிகேஷன் போட்டு கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதுதான் அது பற்றிய பரிசீலனை முடிந்து, லோன் கொடுப்பதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

இந்த மாதிரி காலதாமதம் ஏற்பட்டால் தொழில் எப்படி நடை பெறும்? தொழிலை ஆரம்பிக்க விரும்பியவர்களே அதற்குள் மனம் மாறிவிடுவார்கள். இன்றைய நிர்வாக அமைப்பு அப்படி இருக்கிறது. நிர்வாகத்திலிருக்கின்ற அதிகாரிகளையும் குறை கூற முடியவில்லை,



1972 மார்ச் 22] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

அதிகாரிகள் நல்ல முறையில் செயல்பட வேண்டும்; செயல்பட்டுத் தான் வருவதாகத் தெரிகிறது. ஒரு காரியத்தை செய்து முடிப்பதற்கு பல்வேறுபட்ட நிலைகளிலே பரிசீலனை செய்யப்படுவதால் கால தாமதம் ஏற்படுகிறது. ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத் தலைமை அலுவலகத்திலே—செக்ரெட்டேரியட்டிலே—மனு கொடுத்தால் அது கிராமத்திலே இருக்கக்கூடிய கணக்குப் பிள்ளைத் தலையிலே போய் முடிகிறது. அந்த மனுவை பரிசீலிக்க தலைமைச் செயலகத்திலிருந்து கலெக்டருக்கு அனுப்பிவைக்கிறார்கள். கலெக்டரிடமிருந்து ஆர்.டி.ஓ.க்குப் போகிறது. அங்கிருந்து தாசில் தாருக்குப் போகிறது. அங்கிருந்து கணக்குப்பிள்ளைக்குப் போகிறது. கணக்குப்பிள்ளையிடமிருந்து ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குப் போகிறது. அப்புறம் வில்லேஜ் முன்சீப்புக்குப் போகிறது. இப்படிப் போய் சுற்றி வருவதற்குள் 3 வருடங்கள், 4 வருடங்கள் ஆகிவிடுகின்றன. இந்த 3, 4 ஆண்டுகளுக்குள் என்ன என்ன மாற்றம் நாட்டிலே ஏற்படும் என்பதை இன்றைய தினம் நாம் அறிவோம். ஆகவேதான், இப்படிப்பட்ட காலதாமதத்தை தவிர்க்க, இப்போது இருக்கின்ற நிர்வாக அமைப்பை மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே வளர்ச்சி இல்லையென்று சொல்ல முடியாது. வளர்ச்சி இருக்கிறது. ஆனால் மக்களின் தேவைக்கேற்ற முறையில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா, எதிர்பார்க்கின்ற பலன் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. தேவைகளுக்கு ஏற்ற முறையில், எதிர்பார்க்கின்ற பலன்கள் கிடைக்கின்ற வகையில் நிர்வாக அமைப்பை மாற்றி அமைத்தால் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிளானிங் கமிஷன் சம்மந்தமாக சில கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குப் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் மேலே இருந்து போடப்படுகின்றன. திட்டம் என்பது மேலே இருந்து திணிக்கப்படக் கூடிய ஒன்றாக இருக்கக்கூடாது. கீழே இருந்துதான் திட்டங்கள் போடப்பட வேண்டும். அதுதான் தேவைக்கேற்ற திட்டமாக அமையும். இப்போது ஸ்டேட் பிளானிங் கமிஷன் போட்டிருக்கிறார்கள். இது போதாது. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு திட்டம் வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். பல கிராமங்களுக்கு நான் போயிருக்கிறேன். ஆயிரக்கணக் கான ஏக்கர் நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. அங்கே நல்ல தண்ணீர் வசதி இருக்கிறது. 20 அடி அல்லது 30 அடி ஆழத்தில் கிணறு

வெட்டினாலே நிறையத் தண்ணீர் கிடைக்கிறது. அதனால் நல்ல சாகுபடி செய்ய முடியும். தேவையான இடங்களில் ரோடுகள் போடப்படாமல் இருக்கின்றன. இந்த வேலைகளை எல்லாம் எப்படிச் செய்வது என்பதற்கு வில்லேஜ் பிளானிங் இருந்தால் செம்மையாக செயல்பட முடியும். ஒவ்வொரு கிராமத்திலும் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஊராட்சிகளிலும் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலும் அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் பயன்படுத்தி, அந்தத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுத் துறைத் தொழில்கள் லாபகரமாக இல்லை என்பது நமக்குத் தெரியும். அதைப் பரிசீலனை செய்வதற்காக இப்போது பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் இருக்கும் தொழில்துறைகளை எல்லாம் போய்ப் பார்த்து, கண்காணித்து, இதற்கு வேண்டிய ஆலோசனை கூறுவதற்கு பார்லிமென்ட் கமிட்டி ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அதைப் போன்று மாநில அரசாங்கத்தின் நிர்வாகத்தில் உள்ள தொழில் துறைகளைக் கண்காணித்து தக்க ஆலோசனை வழங்க, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தியாகிகள் பென்ஷனைப் பற்றி என் கருத்தினைக் கூற விரும்புகிறேன். இப்போது தியாகிகளுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதை 100 ரூபாயாக அதிகரிக்க வேண்டும். அடுத்து, தியாகிகள் என்று சொல்லும்போது அவர்கள் மூன்று மாதமாவது ஜெயிலில் இருந்திருக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. அதை மாற்றி, ஜெயிலுக்குப் போயிருந்தால் போதும் என்று செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், சொத்து சுகங்களை இழந்து சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட பல தியாகிகள் பயனடைவார்கள். எனவே, அரசாங்கம் அதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எத்தனையோ குறைகள் இருக்கின்றன. அதையெல்லாம் பல உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இப்போது இருக்கின்ற சட்டமன்ற லைப்ரரிக்கு போதிய இட





வசதி இல்லை. அல்மேராக்கள் போதுமான அளவில் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, சட்டமன்ற லைப்ரரிக்குப் போதுமான வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்கிறார்கள். அது தவிர்க்க முடியாதது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான் அமைச்சர்கள். அதனால் மக்களைச் சந்திக்க அவர்கள் சுற்றுப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. அதைக் கூடாது என்று சொல்லவில்லை. அதை ஓரளவு குறைத்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். அமைச்சரைப் பார்த்துவிட்டால், அவரிடம் ஒரு மனுவைக் கொடுத்துவிட்டால் தங்களுடைய குறைகள் எல்லாம் நீக்கப்பட்டு விடும் என்று மக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மனுக்கள் என்ன ஆயிற்று, எங்கே போயிற்று என்பது கூட தெரியாமல் போய்விடுகிறது.

அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கின்றபோது, அவர்களிடம் அளிக்கப்படுகின்ற மனுக்களை அன்று மாலையிலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூப்பிட்டு அவர்களிடம் கொடுத்து, குறிப்பிட்ட சில நாட்களுக்குள் நடவடிக்கை எடுத்து, மனுதாரர்களுக்கு விபரத்தைத் தெரிவித்துவிட்டு, அமைச்சர்களுக்கும் விபரம் தர வேண்டுமென்று சொன்னால், இன்னும் நல்ல முறையில் நடைபெறும்.

அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கின்ற ஒவ்வொரு நாளும் அங்குள்ள அதிகாரிகள் எல்லாம் அமைச்சர்களின் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது கூடாது. அதனால் அவர்களின் அலுவலகப் பணி பாதிக்கப்படுகிறது; காலதாமதம் ஏற்படுகிறது. சுற்றுப்பயணம் முடிந்த அன்று மாலையில் அமைச்சர்களை அதிகாரிகள் சந்தித்தால் போதும் என்று இருந்தால் காரியங்கள் காலதாமதம் இல்லாமல் ஒழுங்காக நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எம்.எல்.ஏ.க்களுக்கு பாஸ் கொடுக்க வேண்டுமென்று பலரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது பஸ்ஸுக்கு பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரயிலில் பிரயாணம் செய்வதற்கும் பாஸ் கொடுக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு அத்தொகையை கொடுக்க வேண்டும் என்று இருப்பதால் அந்தக் கோரிக்கை கவனிக்கப்படாமல் இருக்கிறது. அதே நேரத்தில் பாராளுமன்ற மெம்பர்களுக்கு இந்தியா பூராவும் சுற்றுப்பயணம் செய்ய ரயில் பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு அந்த

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 22

அளவுக்கு வேண்டாம். ஊரிலிருந்து சென்னைக்கு வந்து போவதற்கு மட்டும் ரயில் பாஸ் கொடுத்தால் போதும். பாஸ் கொடுத்து விட்டார்களே என்று நாங்கள் அடிக்கடி சென்னைக்கு வரப் போவதில்லை. ஏனென்றால், எங்களுக்கு மற்ற நேரங்களில் தொகுதியிலேயே வேலை சரியாக இருக்கிறது: இங்கு வேலையில்லை. எனவே, அரசாங்கம் இந்தக் கோரிக்கையை ஆய்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலையில்லாமல் சென்னை வர விரும்பமாட்டோம். ஜில்லாவில் இருக்கிற எங்கள் வேலைகளையே பார்க்க முடியவில்லை. சென்னை வருவதாக இருந்தால் ரொம்ப யோசித்து வரவேண்டியதாக இருக்கிறது. நூறு, இருநூறு செலவாகிவிடுகிறது. பிறரை செலவு செய்யச் சொன்னாலும் வேறு விதமான பேர் வந்துவிடுகிறது. இது ரொம்ப சங்கடம். ஆகவே, ரயில் பாஸ் வழங்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, இங்கே வரும்போது ஏழு நாளாவது அட்டெண்டன்ஸ் கொடுத்தால்தான் திரும்ப ஊருக்குப் போக முடியும் என்று இருக்கிறது. முதல் நாளே வருகிறோம். திடீரென்று அங்கே ஒரு முக்கியமான வேலை வந்துவிட்டால் போகத்தான் வேண்டியிருக்கிறது. இப்போது பார்லிமெண்டில் வைத்திருக்கின்றது போல இவ்வளவு நாட்கள் கூட்டம் நடக்குமென்றால் அதற்குள் இவ்வளவு முறை போய் வரலாம் என்பதாக ஏற்பாடு செய்திருப்பது போல—இங்கும் பத்து நாட்கள் கூட்டம் நடக்குமென்றால் ஒரு முறை போய் வரலாம். இருபது நாட்கள் என்றால் இரண்டு முறைகள் போய் வரலாம், இதுபோல பட்ஜெட் கூட்டத் தொடர் என்றால் மூன்று முறைகள் போய்வரலாம்—இத்தனை 'நாட்களுக்குள் போய்வர முடியாது என்று கண்டிஷன் எதுவும் வேண்டியதில்லை—அவர்கள் எப்படியோ வந்த ஓரிரு தினங்களுக்குள்ளேயே போய் வரவேண்டியதாக இருந்தால் போய் வந்துகொள்ளட்டும்—மொத்தமாக இத்தனை முறைகள் போய் வரலாம் என்பதாக நிர்ணயித்துவிட்டால் மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, எம்.எல்.ஏ.க்களுக்கு இருக்கிற வேலைகள் தெரியும், எல்லாக் காரியங்களுக்கும் மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களை இன்றையதினம் அணுகுகிறார்கள். நான் முன்பெல்லாம் ஒரே நாளில் நூறு கடிதங்கள் எழுதுவேன். இப்போது என்னாலேயே எழுத முடியவில்லை. வருகிற மக்களுக்கு வசதியாக குறிப்பிட்ட ஒரு இடத்தில் ஒரு ஆபீஸ் என்று திறந்துவிடலாம் என்றால் பட்டுக்கோட்டையில் ஒரு சின்ன அறைக்கு ரூ. 50 வாடகை கேட்கிறார்கள். என்ன



1972 மார்ச் 22] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

செய்வது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருக்கிறேன். சர்க்கார் ஏப்படியாவது எங்கள் கஷ்டத்தை உணர்ந்து நிவர்த்தி செய்ய முன்வர வேண்டும்.

எல்லா ஊர்களிலும் அரசாங்கக் கட்டிடங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு கட்டிடத்தில் ஒரு மூலையாக ஒரு அறையை ஒதுக்கித் தந்து ஒரு க்ளார்க்கின் உதவி எங்களுக்குக் கிடைக்கும்படி செய்தால் நாங்கள் மக்களுடைய காரியங்களைத்தான் கவனிக்கிறோம்—மக்களுக்கு மிகுந்த உதவி செய்ததாகவும் இருக்கும்—எங்கள் கஷ்டங்கள் பெரும்பாலும் போக்கப்படும். எங்களுக்கு வேறு எந்த சொந்தக் காரியமும் கிடையாதுனைசொந்தக் காரியம் எதையும் நாங்கள் கவனிக்கவும் போவதில்லை.

அடுத்து, டெலிபோன் வசதி கண்டிப்பாகச் செய்துதரப்பட வேண்டும். நானே இப்போது தஞ்சைக்குப் போக வேண்டுமென்றால் 35 மைல் போக இரண்டரை மணி, வர இரண்டரை மணி அங்கே ஒரு மணி–ஆக தஞ்சை போகவர 6 மணி நேரம் ஆகிவிடுகிறது. போய் அந்த அதிகாரி அங்கே இல்லை என்றால் போனது வீணாகப்போகிறது. டெலிபோன் இருந்தால் அந்த அதிகாரி ஊரில் இருக்கிறாரா என்று தெரிந்து கொண்டு போக முடியும். நானூறு கோடி ரூபாய் பட்ஜெட்டில் எம்.எல்.ஏ.-க்களுக்கு இந்த வசதி அளிக்க ஒன்றும் அதிகமாகச் செலவாகிவிடாது. ஐம்பது லட்சம், அறுபது லட்சம் செலவானால் கூட இது மிகவும் பயன் அளிக்கக் கூடியதாக இருக்கும்.

அடுத்து, எம்.எல்.ஏ.க்கள் மக்களுடைய குறைகளை எடுத்து அதிகாரிகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் எழுதுகிறார்கள். "உங்கள் கடிதம் கிடைத்தது" என்பதாக அதற்குப் பொதுப்படையாக பதில் வந்துவிடுகிறதே தவிர, அதைப் பரிசீலித்து அதைச் செய்ய முடியுமா, முடியாதா என்பது ஒன்றும் எங்களுக்கு எழுதுவதில்லை. அந்த மக்கள் வந்து வந்து எங்களைப் பார்க்கிறார்கள். சில நாட்கள் ஆனால், நாங்கள் எதுவுமே சொல்லவில்லை போல எங்களைப்பற்றி தவறாகப் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். அத்தகைய துரதிருஷ்டமான நிலையில் நாங்கள் இருக்கிறோம். அதிகாரிகள் இரண்டொரு மாதங்களிலாவது, அந்த விஷயத்தைப் பரிசீலித்தோம், செய்கிறோம் அல்லது செய்ய முடியாது, அதற்கு இன்ன காரணம் என்பதாக எங்களுக்கு எழுதத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாங்கள் சென்னைக்கு வரும்போது ஹாஸ்டலில் ரூம் தருகிறார்கள் தங்குவதற்கு. ஆனால் சாப்பாட்டு வசதி கிடையாது. உண்மையில் சொல்கிறேன், நான் சென்னை வந்தால் சாப்பாடு சாப்பிடுவதே இல்லை. டிபன் தான். இங்கிருந்து அசெம்பிளி முடிந்து அங்கே போனால் ஹாஸ்டலில் இருக்கும் காண்டின் சாப்பாட்டை நினைத்தாலே வாந்தி எடுக்க வருகிறது. நாங்கள் ஒன்றும் உயர்ந்த ரக சாப்பாட்டைக் கேட்கவில்லை. ஒரு சாம்பார், ஒரு ரசம், ஒரு கறி இருந்தால் போதும். சாப்பாடு அருவருப்பு ஏற்படுத்தாது நன்றாக இருந்தால் போதும். அதோடு உறுப்பினர்களில் பெரும்பாலோர் வாயு தொந்தரவு (காஸ் ட்ரபிள்) உள்ளவர்களாகத் தான் இருக்கிறார்கள். கொஞ்சம் சீக்கிரம் சாப்பிட்டு விட்டால் நல்லது என்று நினைக்கிறபோது ஒன்றரை மணிக்குள் இங்கே சாப்பிட எந்தவிதமான வசதியும் கிடையாது. அப்படிப் பட்டவர்களுக்கு இங்கேயே ஒன்றரை மணிக்குள்ளாக சாப்பாட்டைக் கொண்டுவந்து கொடுப்பதற்காவது ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, முதல் அமைச்சர் அவர்கள் கிண்டியில் கட்டமன்றக் கட்டடங்கள் கட்டப் போவதாகச் சொன்னார்கள். அப்படி இந்தக் கட்டடம் அங்கே போகிறபோது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூமுக்குப் பதிலாக குடியிருப்பாகக் கட்டிவிட வேண்டும், உப்புப் போட்டு பொங்கிச் சாப்பிடவாவது வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மிகவும் அவசியமான வசதிகளை செலவைப் பார்க்காமல் செய்துதர முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து சில பிரச்சினைகளை இங்கே வைக்க விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தேவைகளை இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக—ரெயில் பாஸ், டெலிபோன், சாப்பாட்டு வசதி போன்றவைகளை வலியுறுத்தினார்கள். இவை எல்லோருக்கும் வேண்டுமென்பதை—இந்த ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு இல்லாமல் கம்யூனிஸ்டுக் கட்சியினர்களும் சரி, காங்கிரஸ்



கட்சியினர்களும் சரி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி வற்புறுத்தியிருக்கிறார்கள். இவற்றை நிச்சயம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதோடு இந்த மன்றத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி அனந்தநாயகி அவர்கள் பல்வேறு நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்களையே பார்க்க முடியவில்லை என்றார்கள். அவர்கள் காலத்தில் எம்.எல்.ஏ.க்களையே பார்க்க முடியாமல் இருந்தது. அது அவர்களுக்கே தெரியும். அவர்களுக்கு இருக்கிற வருத்தம் எல்லாம் கட்சியைச் சேர்ந்தவர்களின் திருமணம் என்கிற போது எல்லா அமைச்சர்களும் போய்விடுகிறார்களே என்பதுதான். அமைச்சர்கள் ஒவ்வொரு ஊருக்கும் போகிறபோது அவர்களுடைய கட்சி அங்கே பலமாக ஆகிவிடுகிறது. மக்கள் எல்லாம் அவர்கள் பால் போய்விடுகிறார்களே என்கிற எண்ணத்தில்தான் திருமதி அம்மையார் அவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு அமைச்சராக இருக்கிறவர்கள் எல்லாம் அமைச்சராக இல்லாத நாட்களிலும்—கழகத் தலைவர்கள் என்கிற அடிப்படையில் இதுவரை கழகத்தைச் சேர்ந்தவர்களுடைய திருமணங்களுக்கு வந்து கலந்து கொண்டுதான் இருக்கிறார்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் சொல்லி விட்டார்களே என்பதற்காக இதுபோல வந்துகொண்டிருக்கும் பழக்கத்தை நிறுத்திவிட முடிவு எடுத்துவிடக் கூடாது என்று முதல் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கடைநிலை ஊழியர்கள் பதினைந்து ஆண்டுக்காலமாகப் பணியாற்றி வருகிறார்கள், அவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்றார். அந்த அம்மையாருடைய ஆட்சிக் காலத்தில் பத்தாண்டுகளாக நடக்காதது ஏழை எளியவர்களைப் பற்றிய பிரச்சினை, ஊழியர்களை நிரந்தரமாக்குவது பற்றிய பிரச்சினை தி.மு.க. ஆட்சியில்தான் முடியும் என்பதை உணர்ந்தே சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதையும் கவனித்து பல ஆண்டுகளாக தற்காலிகமாக இருக்கிறவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நானும் வலியுறுத்துகிறேன்.

அடுத்து, அம்மையார் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்கு என்று தனியாக ரூம் ஒதுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது எங்களுக்கே மிக உருக்கமாக இருந்தது. முன்பு எதிர்க்கட்சித் தலைவருக்கு என்று

[திரு. நா. வீராசாமி] [1972 மார்ச் 22

ஒதுக்கியிருந்த ரூமைக் கூட துணைச் சபாநாயகர் அவர்கள்தான் அனுபவித்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்வதில் எது உண்மை என்று எங்களுக்குப் புரியவில்லை. அமைச்சர் அவர்கள் சென்னையில் தங்குவதில்லை என்றார்கள். தங்கி மக்களுடைய பிரச்சினைகளை நேரிடையாகக் கவனித்து வருகிற துணைச் சபாநாயகர் அவர்களைப் பற்றி குறை சொல்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, நான் ஏதோ உருக்கமாகக் கேட்டேன் என்று அங்கத்தினர் கூறுகிறார். நான் உருக்கமாக ஒன்றும் கேட்கவில்லை; உரிமையோடுதான் கேட்டேன். அரசியல் கட்சிகள் அத்தனைக்கும் அறை கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். உருக்கமாக என்ன கேட்பது? பொதுப் பிரச்சினைக்காகத்தான் எல்லோரும் இங்கு உட்கார்ந்திருக்கிறோம். முன்னாளில் காங்கிரஸ் கட்சிக்கு என்று ஒரு அறை இருந்தது. இப்போது இல்லை. சட்டசபைக் காலங்களில் வந்து பார்த்தால் யார் யாரோ வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் முன்னுக்குப்பின் முரணைப் பேசுகிறார். என்னுடைய பேச்சிலே உருக்கமாக என்று நான் சொல்லவில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட உரிமைகளைக் கூட அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு எதிர்க்கட்சியை மதிக்க வேண்டுமென்ற தன்மையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு பல சலுகைகள் அளிக்க முன்வந்தது. கார் கொடுத்தோம், அலுவலர்கள் கொடுத்தோம். ஆனால் அவற்றையெல்லாம் காங்கிரஸ் கட்சியினர் அலட்சியப்படுத்தி விட்டார்கள். ஆனால் உள்ளூர ஆசைப்பட்டார்களோ, என்னவோ நமக்குத் தெரியாது. நானும் அம்மையார் அவர்களுக்குச் சிபாரிசு செய்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை; அவர்களுக்குத் தரக்கூடாது என்று நான் சொல்லவில்லை. முன்பு காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட அந்த அறைக்கு எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் வருகிறார்கள். அம்மையார் கட்சியைச் சேர்ந்தவர்களும் அம்மையாரைத் தேடிக் கொண்டு அந்த அறைக்கு வந்தார்கள். அம்மையார் அங்கு இல்லை. பேரவைத் துணைச் சபாநாயகர் அவர்கள் என்ன வேண்டும் என்று கேட்டார்கள். மருத்துவமனைக்குச் சேர சிபாரிசு கடிதம் வேண்டுமென்று சொன்னதற்கு அவரும் சிபாரிசுக் கடிதம் கொடுத்தனுப்பினார். ஆகவே, அம்மையார் அவர்களும் அந்த அறையை அனுபவிக்கலாம். உரிமைகள் எடுத்துச் சொன்னால் இந்த ஆட்சியில் கொடுக்கப்படுகிறது.



1972 மார்ச் 22] [திரு. நா. வீராசாமி]

அடுத்தபடியாக, அதிகாரிகளுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். பழைய ஆட்சியில் 55 வயதுக்கு மேல் ஒரு ஆண்டு என்று எக்ஸ்டென்ஷன் கொடுத்திருந்தாலும் பரவாயில்லை. 60 வயது வரையிலும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமை மாறியிருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி ஒன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முன்பாக, ஒன்றைச் சொல்கிறேன். காலையில் அம்மையார் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எல்லோரும் சிரிக்கக்கூடிய வகையில், "அமைச்சர்களுடைய டி.ஏ.பில் பற்றி விவாதிக்க" என்று ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (திருமதி த. ந. அனந்தநாயகி—குறுக்கீடு) ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் நிறைய டி.ஏ. வாங்குகிறார்கள், நிறைய ஊர் சுற்றுகிறார்கள் என்ற எண்ணம் பொதுமக்களிடையே வரக்கூடிய வகையில், அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை பொதுமக்களுக்கு இடையில் உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அந்த வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நானும் சில விஷயங்களைச் சொல்ல முடியும். திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் நிறைய டி.ஏ. வாங்குகிறார்களா? அல்லது அதற்கு முன்பு ஆட்சியில் இருந்த அமைச்சர்கள் நிறைய டி.ஏ. வாங்கினார்களா என்பதை எடுத்துப் பார்க்கட்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு அமைச்சர்கள், கட்சிக் கூட்டங்களில், கட்சி நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வதாயிருந்தால், டி.ஏ. வாங்கக்கூடாது என்ற நல்ல தன்மையை கட்சித் தலைமை உத்தரவுபோட்டு, அந்தக் கொள்கையை நிலைநாட்டி வருகிறது. ஆனால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எந்த அளவுக்குப் பணம் டி.ஏ. வாக வாங்கினார்களோ அதனுடைய விளைவுதான் இன்றைக்கு......

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, தலைவர் காமராஜ் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தபொழுது டி.ஏ. வாங்கவில்லை. நீங்கள்தான் ஏதோ புதிதாக அதைச் செய்திருப்பதாகச் சொல்கிறீர்கள். T.A. is different from D.A.

THIRU N. VEERASAMI: I am referring to D.A. In 1957 Kamaraj has drawn Rs. 395 as D.A.

[திரு. நா. வீராசாமி] [1972 மார்ச் 22

1957-ம் ஆண்டில் திரு. காமராஜ் அவர்கள் டி.ஏ. வாங்கியிருக்கிறார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. அந்த ஆண்டில் 2,839 ரூபாய் அவர் வாங்கியிருக்கிறார். அடுத்து திரு. பக்தவத்சலம் அவர்கள், அதாவது 1960-ல் ரூ. 13,706 D.A.. T.A.. வாக வாங்கியிருக்கிறார்கள். இப்படி ஆயிரக்கணக்கில் வாங்கியவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் பல இடங்களுக்குப் போய் நிறைய டி.ஏ. வாங்கிக்கொள்கிறார்கள் என்று சொல்வது நல்லதல்ல. நிறைய டி.ஏ. வாங்கியவர்கள் இந்த அமைச்சர்களைப் பார்த்து இப்படிப் பேசுவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று சொல்லப்பட்ட நேரத்தில் இப்போது 100 ரூபாய் தனிப்படியாகத் தருவது போதுமா? இன்னும் கொஞ்சம் கூட்டிக்கொடுக்கலாமே, நியாயம்தானே என்று பார்த்தேன். மற்ற மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன அளிக்கப்படுகிறது என்பதையும் பார்க்க வேண்டும். ஆந்திர மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினருக்கு 350 ரூபாய் சம்பளம், தினப்படி 30 ரூபாய். மகாராஷ்டிரத்தில் 300 ரூபாய் சம்பளம், கன்சாலிடேடட் சம்பளம் 200 ரூபாய், தினப்படி 30 ரூபாய். குஜராத் மாநிலத்தில் சம்பளம் 300 ரூபாய், தனிப்படி 150 ரூபாய், தினப்படி 21 ரூபாய், பஞ்சாபில் சம்பளம் 500 ரூபாய், தினப்படி 20 ரூபாய். ஜம்மு, காஷ்மீரில் சம்பளம் 400 ரூபாய், தினப்படி 21 ரூபாய், மத்தியப் பிரதேசத்தில் 500 ரூபாய் சம்பளம், தினப்படி 51 ரூபாய். இப்படி அதிகமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினருக்கு 250 ரூபாய் சம்பளம், தனிப்படி 100 ரூபாய், தினப்படி 20 ரூபாய் என்பதாகும். எங்களுக்குச் சம்பளம் என்பது கூட முக்கியம் அல்ல. அதை வைத்துக்கொண்டு குடும்பம் நடத்த வேண்டும், குழந்தைகுட்டிகளைக் காப்பாற்ற வேண்டும். அதை வைத்துக்கொண்டு செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு சட்டமன்ற உறுப்பினர் காலையில் எழுந்து, படுக்கைக்குப் போவதற்கு முன்னால் பல இடங்களில் பொதுப்பணியாற்ற வேண்டியிருக்கிறது. அந்த நேரங்களில் எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். மேலும் மாதத்திற்கு 200 ரூபாய்க்கு டெலிபோன் பில் ஆகிறது. மாதத்தில் பத்து அல்லது பதினைந்து நாட்களுக்காவது தொகுதியில் சுற்றுப்பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. காருக்குப் பெட்ரோல், கார் மெயின்டனன்ஸ் என்று அதற்கு 400 ரூபாயாவது ஆகும். ஆக, மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகிறதைப் பார்க்கிறோம். எங்களுக்கு சம்பளமாகக் கொடுக்காவிட்டாலும், மற்ற கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தியதுபோல டெலிபோன் வசதி, ரயில்வே பாஸ் முதலிய வசதிகளையாவது செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 22] [திரு. நா. வீராசாமி]

அடுத்தபடியாக, சட்டமன்றம்தான் பேசுகிற பேச்சுகளுக்கெல்லாம் பாதுகாப்பான இடம். இங்கே பேசினால் எந்தவிதமான ஆபத்தும் வந்து விடாது. உறுப்பினர்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், பேசித் தீர்த்துக்கொள்ளவும் சட்டப் பேரவை பாதுகாப்பான இடமாக இருக்கிறது. ஆனால் இங்கே பேசுகிற பேச்சுகளுக்குக்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன செய்ய முடியும்? இன்றையதினம் பல பத்திரிகைகள் இங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி, கருத்துக்களைப்பற்றி வெளியிடுகிறார்கள். பேரவை நிகழ்ச்சிகள் பற்றி கட்டுரைகள் எழுதுகிறார்கள். அந்தப் பத்திரிகைகளைச் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலசுந்தரம் பத்து, பதினைந்து நாட்களுக்கு முன்னால் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லி விவாதித்தார். அதை ஒரு பத்திரிகை "ஒரு பையன்...... பாலசுந்தரம் பேசினானும்" என்ற முறையில் சட்டமன்ற நிகழ்ச்சிகளையொட்டி எழுதியிருக்கிறது. இப்படி சட்டமன்றத்தைப் பற்றி, சட்டமன்ற நிகழ்ச்சிகளைப்பற்றி போடுகின்ற நேரத்தில், மக்களுக்குத் தவறான எண்ணம் ஏற்படுத்தத்தக்கூடிய வகையில் எழுதுகின்றன. ஒரு சட்டமன்ற உறுப்பினர் பேசுவதற்குப் பாதுகாப்பு இல்லையென்றால் எப்படி அவர் சரியாக தன் பணிகளை ஆற்ற முடியும்? ஆகவே, அதற்கான பாதுகாப்பை பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தருவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக பத்திரிகைகள் இன்றைக்கு இருக்கின்ற ஆட்சியை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த ஆட்சி தவறு செய்வதுபோல் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடுவதைப்போல இல்லாததையெல்லாம் எழுதுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஒரு பத்திரிகை மாண்புமிகு முதலமைச்சருக்கும் எனக்கும் தகராறு இருப்பதைப்போல ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறது. "ஆற்காடு எம்.எல்.ஏ. திரு. வீராசாமியின் தொகுதியில் நடைபெற்று வந்த அபிவிருத்தி வேலைகளுக்கான கான்ட்ராக்டுகளையெல்லாம் உடனே நிறுத்தி வைக்கும்படி அவசர உத்தரவு பிறப்

[திரு. நா. வீராசாமி] [1972 மார்ச் 22

பிக்கப்பட்டிருக்கிறதாம்" என்ற முறையில் எழுதி, கட்சிக்குள் இருப்பவர்களை வேறுபடுத்தி, இருவருக்குள்ளும் சிண்டுமுடிந்து, மனக் கசப்பை உண்டுபண்ணி, அவர்கள் கட்சி பிரியாதா, உடையாதா என்றெல்லாம் மனப்பால் குடித்துக்கொண்டு எழுதி வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் நடைபெறுகிற வேலையில் தலையிட்டார்களா, அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்ததா என்பதையெல்லாம் இன்றையதினம் பத்திரிகையில் பார்த்தபோது எனக்கேகூட புதிராக இருந்தது. நான் முதலமைச்சர் அவர்களிடம் இப்படிப் பத்திரிகையில் போட்டிருக்கிறார்களே என்று சொன்னேன். இப்படி சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பற்றியெல்லாம் எழுதுகிறார்கள். இப்படி எழுதுகிற நிலைமையைப் பார்த்தால் சட்டமன்ற உறுப்பினராக இருப்பது எவ்வளவு கடினமாக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் தெரிவித்துக் கொண்டு, இப்படிப்பட்ட நிலைமைகள் இல்லாதபடி உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : ஆன் ஏ பாயின்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் மக்களுடைய பிரதிநிதியாக வந்திருக்கிற நாம், மக்களுடைய குறைகளைப்பற்றிச் சொல்ல வேண்டிய நாம், நம்முடைய நிலையில் நம்முடைய குறைகளைப்பற்றிப் பேச வேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. நமக்கு இன்னின்ன காரியங்கள் செய்துகொடுக்க வேண்டுமென்பது பற்றி......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதில் என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்? திரு. வீராசாமி இன்னும் முடிக்கவில்லை. வேறு ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள்......... ...

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : நான் என்ன சொல்வதற்காக எழுந்தேன் என்றால் இம்மாதிரியான எங்களுக்குள்ள குறைகளைப் பற்றி இங்கே பேசாமல் எங்களுக்கு வேண்டிய எல்லா உரிமைகளையும் வசதிகளையும் கிடைக்குமாறு செய்துவிடவேண்டும் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்.

திரு. நா. வீராசாமி : பெரியவருக்கு அதற்காகத்தான் இந்த நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியாதுபோல் தெரிகிறது. இந்த நாளிலேதான் நம்முடைய குறைகளையெல்லாம் சொல்லலாம்.



1972 மார்ச் 22] [திரு. நா. வீராசாமி]

மற்ற நாட்களிலே பொது மக்களுடைய குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற நாம் இன்றைக்குத்தான் நம்முடைய குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறோம். சில பத்திரிகைகளில் ஆளுங் கட்சி உறுப்பினர்களைப்பற்றியும் அமைச்சர்கள்பற்றியும் இந்த அமைச்சர் அப்படி, அந்த அமைச்சர் இப்படிச் செய்தார், இதிலே ஊழல் என்றெல்லாம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மக்களிடையே தவறான எண்ணங்களைப் பரப்பவேண்டுமென்ற முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் பற்றி நடவடிக்கை மேற்கொள்வதற்கு வழிவகைகள் காணவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நிர்வாக அமைப்பில் இந்திய துணைக்கண்டத்திலே வேறு எந்த அளவுக்கும் இல்லாத முறையில் பெரிய அரசாங்க ஊழியர்களைப் போல என்ன சொத்திருக்கிறது, நகை வைத்திருக்கிறாரா, கார் வைத்து இருக்கிறாரா என்று பட்டியல் போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் கணக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் அப்படிக் கொடுக்கப்படவில்லை. குடும்ப வாழ்க்கையிலே உள்ள சொத்து விவரங்களை எல்லாம் இந்த மன்றத்திலே கொடுத்த பிறகும்கூட அங்கே ஊழல், இங்கே ஊழல், இந்த அமைச்சர் அப்படி, அந்த அமைச்சர் இப்படி என்று எழுதுவது முறைதானா? இன்றைக்கு நிர்வாக அமைப்பிலே அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னவுடனே ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஆடுவதைப்போல் கற்பனை செய்து கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக—நான் எந்த அதிகாரியையும் குறைகூறவில்லை—காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரு அமைச்சர் ஒரு சீப் என்சினீயரிடம் ஏதோ செய்யச் சொன்னதாகவும், அதற்கு அந்த சீப் எஞ்சினீயர் முடியாது என்று சொல்லி, சண்டை வந்து, அந்த சீப் எஞ்சினீயர்கூடச் சொன்னாராம் :

' I can become a Minister but you cannot become a Chief Engineer '

என்று. அந்த அளவுக்கு அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். அதிகாரிகள் இந்தக் காலத்திலே ஒரு அமைச்சர் சொல்லிவிட்டார், ஒரு எம்.எல்.ஏ. சொல்லிவிட்டார் என்பதற்காக கூடச் செய்வது கிடையாது. எனவே அதிகாரிகளை காரியங்கள் சொல்லியும் செய்ய முடியாமல் இருந்திருக்கிறார்கள். நியாயம் இருந்தால்தான் செய்கிறார்கள். எம்.எல்.ஏ. சொல்கிறார் என்பதற்காக கூடச் செய்வது கிடையாது. எனவே அதிகாரிகளை வைத்துக்கொண்டு ஏதோ செய்துவருகிறார்கள் என்ற பிரமை இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, is the hon. Member asserting that in spite of the orders of the Ministers, there are quite a number of officers who disobey the orders of the Ministers and if so, whether it is not necessary for the Government to take action against them ?

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஏதோ அமைச்சர் சொல்கிறார்கள் என்று அதிகாரிகள் செய்வது கிடையாது. சட்டத்திற்கு முரணானதாக செய்யக்கூடாததாக உள்ளதைச் செய்யுங்கள் என்று சொல்கிற நிலை யெல்லாம் இல்லை. நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். ஒரு எம்.எல்.ஏ.க்கு உடல்நிலை சரியில்லை என்று வைத்துக் கொள்வோம். உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன். அந்த எம்.எல்.ஏ.க்கு ஒரு ஸ்பெஷல் வார்ட் கொடு என்று அமைச்சர் சொன்னால் அது தவறா? இப்படிப்பட்ட பிரச்னைகளில் கூட பலன் கிடைக்காத சூழ்நிலையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். அங்கிருக்கின்ற நிலைமையும் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்று வைத்துக்கொள்வோம். உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன், தவறாக நினைக்கவேண்டாம், பாவம் அவர் நன்றாக இருக்கவேண்டும். இடம் அவருக்குக் கிடைக்கவில்லை என்றால் அமைச்சரிடத்திலே சொல்கிறார், அமைச்சரும் சொல்கிறார் என்று வைத்துக்கொண்டால் யாரோ ஒருவரை வெளியேற்ற வேண்டும், ஏனென்றால், நான்கு பெட்களிலும் நான்கு பேர்கள் இருப்பார்கள், யாரை வெளியேற்றிவிட்டு அவருக்கு இடம் கொடுப்பது என்ற பிரச்னை வருகிறது. எனவே, அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக ஒரு பேஷண்டை வெளியேற்றிவிட்டு ஹாண்டேக்கோ, வீராசாமிக்கோ இடம் கொடுப்பது இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : எனக்கு உடல்நலம் சரியில்லாவிட்டால் எப்படி இருக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆண்டவன் புண்ணியத்திலே இதுவரையிலே ஒரு ரிஇம்பர்ஸ்மெண்ட்டும் நான் வாங்கவில்லை. நாளைக்கு எப்படியிருக்குமோ யாருக்கும் தெரியாது. அமைச்சர் அவர்கள் உத்தரவுப்போட்டு ஸ்பெஷல் வார்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லி செய்யவில்லையா? அல்லது ஓரலாக இப்படிக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டிருந்தால் சங்கடமாக இருக்கலாம். ஏனென்றால், அங்கத்தினர் அவர்களே சொன்னார்கள், நான்கு பேஷன்ட்கள் இருக்கலாம், ஒருவரை எப்படி வெளியேற்றிவிட்டுக் கொடுக்கமுடியும் என்று. ஆகவே, என்ன விவரங்கள்



என்று விளக்கமாகச் சொன்னால் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : நான் உதாரணத்திற்குத்தான் சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் நலமாக இருக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். ஆண்டவன் புண்ணியத்திலே என்று சொன்னார்கள். எல்லோருடைய புண்ணியத்திலேயும் இருக்க வேண்டும். ஹாண்டேக்கு ஒன்றும் வரக்கூடாது. இப்படியெல்லாம் நிர்வாகத் துறை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் சொன்னேன். பொதுவாக இப்படி இருக்கிறது. கவர்னர், அதற்கு அடுத்தபடியாக அமைச்சர்கள், அடுத்தபடியாக ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகள். அதிகாரிகள், அதற்கு மேலே அமைச்சர்கள், அதற்கு மேலே கவர்னர், அதற்கு மேலே சென்ட்ரல் இண்டலிஜன்ஸ், என்றெல்லாம் இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள்கூட ஒருமுறை சொன்னார்கள். எப்படி ஒரு அமைச்சரவை இருக்கும் என்று கனவிலேகூட எண்ணாமல் இது அரசாங்கம்கூட அல்ல, கிராண்ட் ரிசிவிங் கார்ப்பரேஷன் என்று சுருக்கமாகச் சொன்னார்கள், சுருக்கமாக இருந்தாலும் எவ்வளவு பொருள் இருக்கிறது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் அதிக அதிகாரங்கள் தேவை. நம்முடைய நாட்டிற்காக, நம்முடைய மக்களுக்காக பணியாற்றக்கூடிய வழிவகைகள் தேவை என்பதால் தான் நாம் சுயாட்சியைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எதுவுமே செய்யமுடியாத ஒரு ஆட்சியிலே இருந்துகொண்டிருக்கிறோம். இதையெல்லாம் எண்ணிப்பார்த்து மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, தேர்தல்கள், சட்டமன்ற மானியங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்ததை வரவேற்குமுகத்தான் என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். மக்களுக்காக மக்களால் நடத்தப்படுகிற மக்களுடைய ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. அந்த ஜனநாயக ஆட்சியின் அடிப்படையிலே நடைபெறுகிற தேர்தல்கள் சாலச் சிறந்ததாக இருந்தாலும் சில பல குறைபாடுகளை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். கிராமப்புறங்களிலே தேர்தல் சாவடிகள் நிறைவு செய்யப்படாத நிலைமையில் இருக்கின்றன. பெரிய கிராமத்திலே

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 22

தேர்தல் சாவடியிருந்தால் அந்தக் கிராமத்திற்கு சுற்றியிருக்கிற இரண்டு மூன்று மைல் தொலைவு உள்ள கிராமங்களிலிருந்து மக்கள் வந்து வாக்களிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. மக்கள் தொகை குறைவாக இருந்தாலும் எதிர்காலத்திலாவது ஒவ்வொரு கிராமத்திலேயும் தேர்தல் சாவடிகள் அமைக்கின்ற முறையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சமுதாயத்திலே மைனாரிட்டி மக்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் வேண்டும். நாங்கள் எல்லாம் முற்போக்குக் கூட்டணி போன்ற நிலையினால்தான் சட்ட மன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறோம். மைனாரிட்டி என்ற அடிப்படையிலே கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஜனத்தொகையின் விகிதாசார முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்பு ஒரு புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள், தமிழகத்திலே மக்கள் தொகையில் 5.6 சதவீதம் முஸ்லீம்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு எல்லாம் 4.05 சதவீதம் என்ற அளவுக்குத்தான் வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. வேலைவாய்ப்புகளிலே கூட பிரதிநிதித்துவ அடிப்படையிலே அரசாங்கம் நல்ல முறையிலே சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மைனாரிட்டி முஸ்லீம் மக்களின் வாழ்விலும் தாழ்விலும் அக்கறை கொண்டிருக்கிற அரசாங்கம் என்ற காரணத்தினாலே அவர்கள் சார்பாக நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து ரிசர்வ் தொகுதிகள் இருக்கின்றன. வந்தவாசி, ஆம்பூர், பேரணாம்பட்டு போன்றவைகள் நான்கைந்து முறையாக ஒரே இடமாக ரிசர்வ் தொகுதிகளாக இருக்கின்றன. அதைப் பொதுத் தொகுதிகளாக மாற்ற வேண்டும். ஒரு ரிசர்வ் தொகுதியை எடுத்துவிட்டு வேறு தொகுதிகளுக்கு, அரிசனங்கள் வாழும் தொகுதிகளுக்கு மாற்ற வேண்டும். 10, 20 வருஷங்களாக இருக்கும் ரிசர்வ் தொகுதிகளை பொதுத் தொகுதிகளாக மாற்ற வேண்டும். அதே நேரத்தில் அரிசனங்களுக்கு வாய்ப்பு குறையாத வகையிலே மத்திய சர்க்காருக்கு நம்முடைய அரசாங்கம் யோசனை சொல்ல வேண்டும். ரிசர்வ் தொகுதியிலுள்ள அத்தனை மக்களின் ஆர்வத்தைத் தெரிவிக்கிறேன் என்ற முறையிலே இதை என்னுடைய சுருக்கமாகக் கூறுகிறேன்,



1972 மார்ச் 22] [திரு. கே. எ. வகாப்]

இன்றைக்கு மக்கள் தொகையில் முஸ்லீம்களுக்கு எவ்வளவு விகிதாச்சாரம் இருக்கிறது என்று கூறும்பொழுது, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தை நான் இந்த நேரத்தில் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். அண்ணா அவர்களும், எங்கள் அருமைத் தலைவர் காயிதே மில்லத் அவர்களும் முஸ்லீம்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றிச் சர்ச்சை செய்யும் நேரத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பெரிய அதிகாரியை அழைத்துக் கேட்டிருக்கிறார்கள், தமிழகத்தில் எவ்வளவு முஸ்லீம்கள் இருக்கிறார்கள் என்று: அந்த அதிகாரி கையிலிருந்த புள்ளிவிவரத்தைப்பார்த்து 3 சதவிகிதம் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அதைக் கேட்டு அண்ணா அவர்களுக்குக் கொஞ்சம் கோபமே வந்துவிட்டதாம். "முஸ்லீம்களுக்கு அலுவலகத்தில் உத்தியோகத்துறையிலே மிகவும் வாய்ப்பில்லாமலும், குறைவாக வைத்திருக்கிறீர்கள், ஆனால் ஜனத்தொகை விகிதாச்சாரத்தைக் கூட குறைத்து ஜனத்தொகையில் 3 சதவிகிதம் என்று சொல்லியிருக்கிறீர்களே, தமிழகமெங்கும் நான் சுற்றிப் பார்த்திருக்கிறேன், இன்னும் அதிகமாக இருக்கும், ஆகவே சென்சஸ் முறையை நல்ல முறையில் எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று உடனே ஆணையிட்டதாக அறிகிறேன். அந்த முறையில் உள்ளபடியே சென்சஸ் முறையில் பல கோளாறுகள் இருக்கின்றன. முஸ்லீம்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவர்கள் மட்டுமல்ல, பொதுவாக சமுதாயத்திலே உள்ள மக்கள் எல்லோரும் அந்தக் கணக்கில் கொண்டுவரப்படவில்லை என்று குறைபாட்டைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, சென்சஸ் நல்ல முறையிலே எடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன்பு சொல்லியதைப் போன்று, நாங்கள் 30 லட்சத்திற்கும் அதிகமாக இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டிருக்கும் நேரத்தில், அரசாங்கத்தின் புள்ளிவிவரங்கள் 20 லட்சம் என்று இருந்தால் மீதியுள்ள 10 லட்சம் பேர் எங்கே போகிறார்கள்? எனவே, ஜனத்தொகைக் கணக்கெடுப்பில் உள்ள இப்படிப்பட்ட கோளாறுகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விகிதாச்சார அடிப்படையில் உத்தியோகத் துறையிலே நியமனம் கொடுக்க வேண்டும். நிச்சயமாக எங்களுக்குத் தெரியும், இப்பொழுதிருக்கும் அரசாங்கமும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும் அந்த மைனாரிட்டி மக்களுக்கு நல்லதொரு தகுதியையறிந்து வாய்ப்புகளை அளிப்பார்கள் என்பதை நான் நன்கறிவேன். நேற்றைய தினம் பத்திரிகையைப் பார்த்தபொழுது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். தகுதியின் அடிப்படையில்,

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 22

திறமையின் அடிப்படையில், சீனியாரிட்டி அடிப்படையில் இன்றைக்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்த முஸ்லீம் ஒருவருக்கு தலைவர் பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நியாயத்தைத்தான் நாங்கள் முன்பு எதிர்பார்த்தோம். அப்போது கிடைக்கவில்லை. இப்போது கிடைத்திருக்கிறது என்பதில் மகிழ்ச்சியடைகிறோம். ஆகவே, அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் சட்டமன்றத்தில் பிரச்னைகளைப்பற்றி பேசுகிறோம், மற்றும் மனுக்களை அமைச்சர்களிடம் கொடுக்கிறோம். பதில் அனுப்பும் முறையிலே சில துறைகளிலேயிருந்து பதில்கள் வருகின்றன. உடனுக்குடன் அவர்களுக்குப் பதில் வந்துவிடுவதாக திரு. மணலி கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். ஒருவேளை அப்படிப்பட்ட பெரியவருக்கு உடனடியாக அனுப்புகிறார்களோ என்னவோ தெரியவில்லை. எங்களுக்கெல்லாம் சில நேரங்களில் வருகின்றன, சில நேரங்களில் நாங்களே சென்று டிபார்ட்மெண்டில் தகவல் கேட்டால் கூட சரியாகச் சொல்லமுடியாமல் இருக்கிறது. ஆகவே, இப்படிக் கொடுக்கும் மனுக்களுக்கு பதில் அனுப்புவதற்கு எல்லாத் துறைகளிலும் சுறுசுறுப்பு காட்ட வேண்டிய அம்சத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட மனுக்களுக்கெல்லாம், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பட்ஜெட் கூட்டத்தில் குறிப்பிட்டதைப்போல் இந்த அரசாங்கமும் அவர்களும் பந்தயக் குதிரையின் வேகத்திலே செல்வதற்கு ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்கிறேன். ஆனால் இலாகாக்காக்களில், எல்லா இலாகாக்களையும் சொல்லவில்லை, சில இலாகாக்களில், சில பகுதிகள் இன்னும் தென்னாலிராமன் குதிரையாகத்தான் இருக்கின்றன. முன்னேயிருந்து இரண்டு பேர் இழுக்க பின்னாலிருந்து இரண்டு பேர் தள்ள, "என்னேரம் வேதம் போம் வாயான் விகட ராமன் குதிரை மாதம் போகும் காதவழி" என்ற கதையாகத்தான் அந்த இலாகாக்கள் இருக்கின்றன என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நிச்சயமாக முதலமைச்சரவர்களுக்குள்ள ஆர்வத்திலே பாதி அளவாவது அந்த அதிகாரிகள் எடுத்துக்கொண்டு செயல்படுத்தினார்கள் என்றால் இன்றைக்குச் சட்டமன்றத்திலே கூறப்படும் குறைபாடுகளில் பாதி அளவு குறைந்துவிடும். ஒரு பிரச்னையை எடுத்துக்கொண்டால் அதற்கு முடிவு செய்யப்பட்டதா இல்லையா? முடிவு செய்யப்படாவிட்டால் எந்த அளவிலே பரிசீலிக்கப்படும்



1972 மார்ச் 22] [திரு. கே. எ. வகாப்]

என்பதைத் தயவுசெய்து உடனடியாகச் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பினால் அதை வைத்துக்கொண்டு—தொகுதியிலே வருபவர்கள் வாயால் சொன்னால் நம்ப மாட்டார்கள்—இந்தக் காகிதத்தைக் காட்டினால் நாங்களும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம், அரசாங்கமே எங்களை மதித்து பதில் அளித்திருக்கிறார்கள், உங்களுடைய வேலை பூர்த்தியாகிவிடும் என்று மகிழ்ச்சியோடு கூறுவோம். அவர்களுக்கும் ஆறுதல் ஏற்படும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார்கள். நிச்சயமாக நான் சொல்கிறேன், இப்பொழுது சட்டமன்ற நிகழ்ச்சிகள் போக, பாக்கி நேரங்களில் இன்னும் அதிகமாகச் சுற்றுப் பிரயாணத்தைச் செய்து மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் என்னுடைய தொகுதிக்கு வரவில்லை என்ற குறை எனக்கும் இருக்கிறது. என்னுடைய தொகுதிக்கு வர வேண்டுமென்று இரண்டு மாதங்களாக அழைத்தும் வரவில்லையே என்ற குறை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலுள்ள மக்கள் முதலமைச்சரவர்களை அழைத்து வாருங்கள், இங்கே பலவிதமான விழாக்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அப்படி விழாக்களுக்கு மட்டுமல்ல, முதலமைச்சரவர்களிடம் எங்களுடைய குறைகளைச் சொன்னால் இன்னும் வேகமாகக் கவனிக்கப்படும் என்ற சுயநலத்தின் காரணமாகத்தான் கூப்பிடுகிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இப்பொழுது அதிகமாக நகர்ப்புறங்களில் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார்கள், தயவுசெய்து இராணிப்பேட்டை போன்ற கிராமப்புறங்களுக்கு, கிராமங்களில் நடக்கின்ற விழாக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வந்து கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சியின் அடிவேரே, ஆணிவேரே கிராமங்களில்தான் இருக்கிறது. உங்களுடைய சேவையும், உழைப்பும் கிராமங்களுக்குத் தேவைப்படுகின்றன. ஆகவே, எல்லா அமைச்சர்களும், முதலமைச்சரவர்களும் கிராமப் புறங்களிலிருந்து வரும் அழைப்புகளுக்கு முதலிடம் கொடுத்து ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் டூர் ப்ரோகிராம் போடும்பொழுது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொண்டு அவர்களுக்கு முன்னாலே தெரிவிப்பது போன்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏனென்று கேட்டால் சில நேரங்களில் கட்சியைச் சேர்ந்தவர்கள்

புரோகிராம் வாங்கிச் சென்று விடுகிறார்கள். அது சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவதில்லை. பல சமயங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் புரோகிராம் வாங்கிச் சென்றுவிடுகிறார்கள், அது கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியாமல் போகிறது. ஆகவே, இரண்டு பேரையும் கலந்துகொண்டு புரோகிராம் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒருவேளை சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியாமல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அழைக்க வரும் நேரத்தில், அல்லது சட்டமன்ற உறுப்பினர் அந்த நேரத்தில் இல்லையென்றால், அவர்களுக்கு இந்தத் தேதியிலே டூர் புரோகிராம் இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் மிகவும் நெருக்கத்திலே எங்களுக்குத் தெரிகிறது. 10, 15 நாட்களுக்கு முன்பே ஏற்பாடு செய்கிறார்கள். அப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலேயும் நான் விடுக்கிறேன். குறிப்பாக தோழமைக்கட்சி என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன். கட்சி அழைக்கும் நேரத்தில் சில சமயங்களில் எங்களுக்குத் தெரியாமல் போகிறது. ஆகவே அப்படி வரும் நேரத்தில் இதையெல்லாம் பார்த்து உங்களுடைய டூர் புரோகிராமை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் தேவைகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். குறிப்பாகவும், சிறப்பாகவும் மாண்புமிகு நண்பர் திரு. காவேரிமணியம் அவர்கள் சொன்னதுபோல் ஜீப் வசதி நிச்சயமாகத் தேவைப்படுகிறது. நண்பர் லத்தீப் போன்றவர்கள் தொகுதி மலைப் பகுதியாக்வும், என் தொகுதியில் காட்டாற்றைக் கடக்க வேண்டிய பகுதிகளும் இருப்பதால் அங்கேயெல்லாம் செல்ல வேண்டுமென்றால் கார் இருந்தால்கூட முடியவில்லை. அரசாங்கம் எப்படி ஒவ்வொரு யூனியனுக்கும் ஜீப் என்று வைத்திருக்கிறதோ அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஜீப் வசதியைச் செய்துதர வேண்டும். அதனுடைய பராமரிப்பு, பெட்ரோல் முதலியவைகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். ஆகவே ஜீப்பை மட்டும் கொடுத்துவிட்டு, அதற்கான செலவுகளையெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளும் அளவில் செய்தால்கூட இன்னும் நல்ல முறையிலேயும், திறமையாகவும் வேலை செய்ய முடியும். அதைப்பற்றி ஆலோசிக்கலாம். ஆனால் அதற்கு முதலீடு அதிகமாகும் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனாலும் அதைப் பற்றிக் கனிவாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அதுமட்டுமல்ல, ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியில் ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்கிறார்கள் என்றால் பல மாவட்ட அதிகாரிகள் அதில் கலந்து கொள்வது மட்டுமல்ல, மாநில அளவில் உள்ள அதிகாரிகளில் சிலரும் கலந்து கொள்கிறார்கள். குறிப்பாக அறிஞர் அண்ணா காலேஜிலே ஒரு பெரிய விழா, ஆண்டு விழா நடக்கிறது என்றால் சட்ட மன்ற உறுப்பினருக்குக்கூடத் தெரியாமல் பெரிய பெரிய கல்வி அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள். அமைச்சர்கள் எப்படிச் செய்ய வேண்டுமோ அதைப்போலவே அதிகாரிகளும் செய்ய வேண்டும். ஏனென்றால், அவர்கள் செல்லும் நேரத்தில் எங்களுக்குத் தெரியப்படுத்தினால் எங்களையும் கலந்துகொள்ளச் செய்தால் அதையும் மக்களுக்குச் செய்யும் சேவைக்கான ஒரு வாய்ப்பாக ஏற்றுக்கொள்ள முடியும். எனவே அமைச்சர்கள் மட்டுமல்லாமல் பெரிய அதிகாரிகள் டூர் வரும் நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது மட்டுமல்லாமல், அந்த விழாக்களில், குறிப்பிட்ட கல்லூரிகள், பாடசாலைகள், மற்றும் தொழில் நிறுவனங்களில் நடக்கும் விழாக்களைத் தெரிவிப்பது மட்டுமல்லாமல் அதில் கலந்து கொள்ளவும் செய்ய வேண்டும், அதற்கான ஒரு குறிப்பை அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அதைச் செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்பாடுகளைச் செய்ய ஆலோசனைகளைக் கூற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு போன் வசதி நிச்சயமாக எம்.எல்.ஏ.க்களுக்கு இருக்க வேண்டும். அதனால் எவ்வளவோ பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. குமாஸ்தா வசதி, ரயில்வே பாஸ் வசதி பற்றிச் சொன்னார்கள். ரயில்வே பாஸ் கொடுத்தால் இப்பொழுது டி.ஏ. கொடுப்பதைப் பிடித்துக் கொள்ளலாம். அதை வைத்துத் தொகுதியிலே நல்ல முறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பணியாற்ற முடியும். இப்படிப்பட்ட ரயில்வே பாஸ் கேரளா, வட மாநிலங்கள் சிலவற்றில் கொடுக்கப்பட்டிருக்கிறது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தெரிகிறது. ஆகவே, அதைப்பற்றியும் நிச்சயமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தைப் பற்றியெல்லாம் பேசினார்கள். சட்டமன்றத்தை ஊட்டியில் நடத்த வேண்டுமென்ற எண்ணம் முன்பு இருந்தது. நாம் ஊட்டிக்கு செல்ல வேண்டாம். ஊட்டியை இங்கே கொண்டு வந்துவிடலாம். இந்தக் காலத்தில் ஏர்கண்டிஷன் செய்வது சர்வ சாதாரணமாக இருக்கிறது. பாத்ரூமை எல்லாம்

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 22

ஏர்கண்டிஷன் செய்கிறார்கள். இவ்வளவு பெரிய சட்டமன்றத்திற்கு ஏர்கண்டிஷன் செய்வது பொறுத்தமானதாகத்தான் இருக்கும். வெளியிலே இருக்கின்ற மக்களுக்காக உழைக்கின்ற நாம் சுகமாக இருந்தால்தான் அவர்களுக்காக உழைக்க முடியும் என்ற காரணத்தால் அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு காப்பி, டீ, கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. புகை பிடிப்பவர்களுக்கும் கஷ்டம் இருக்கிறது. ஒரு ரூபாய் கொடுத்தால் மிச்சம் வருமா இல்லையா என்று எண்ணிக்கொண்டே வேலை வாங்க வேண்டியிருக்கிறது. உடனடியாக பக்கத்தில் இருக்கும் அறைகளில் ஒன்றில் காப்பி, டீ,—செழியன் அவர்கள் சொன்னது போல்—மசால் வடை, போன்ற உணவு வகைகளைத் தர ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஏற்பாடுகள் மற்ற மாநிலச் சட்ட மன்றங்களில் இருக்கிறது. அந்த ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விடுதியைப் பொறுத்தவரையில் எவ்வளவோ நிறைவையும் சொல்லலாம், குறையையும் சொல்லலாம். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அங்கே டெலிபோன் வசதி செய்து கொடுத்திருப்பதற்காக நன்றி. பத்து அலுவலகங்களுக்குச் சென்று வரக் கூடிய நேரத்தைக் குறுக்கி டெலிபோன் மூலம் காரியத்தைச் செய்ய வசதியாக இருக்கிறது. அது டைரக்ட் டயலாக இல்லாமல் நம்பரைக் கேட்டுப் பெற்று பிறகுதான் தொடர்பு கொண்டு பேச வேண்டியிருக்கிறது. டிரங்க் கால் சார்ஜை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். உடனடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய முறையில் டைரக்ட் டயலாக அமைத்துத் தரவேண்டும்.

படுக்கைகள் எல்லாம் பழைய காலத்து படுக்கைகளாக சப்பையாக்கப்பட்டுக் கிடக்கின்றன. மாற்றுத் தலையணைகள் கிடையாது. ஸ்க்ரீன் ரொம்ப வசதியாக இருக்கிறது. மறைவுக்காக அல்ல; எங்கள் தொகுதி தோழர்கள் அதைத்தான் பாயாக விரித்துப் படுத்துக் கொள்ளுகிறார்கள். சிறு குறைபாடுகளை எல்லாம் நிவர்த்தி செய்யவேண்டும். தண்ணீர் இப்போது ஓரளவு வசதியாக இருக்கிறது. சட்டமன்றம் முடிகிற நேரத்தில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படலாம். சென்ற ஆண்டைப் போல் இந்த ஆண்டு தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உணவு பற்றியெல்லாம் மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, உணவின் தரம் மோசமாக இருக்கிறது.



1972 மார்ச் 22] [திரு. கே. எ. வகாப்]

என்னைப் பொறுத்த வரையில் திடகாத்திரமாக இருந்தாலும் ஓராண்டுக் காலத்தில் காஸ்ட்ரிக் ட்ரபிள் இருப்பதாக டாக்டர் சொல்லுகிறார். சட்டமன்றக் கூட்டம் 2½ மணி, 3 மணி வரை நடக்கிறது. அதற்குப் பிறகு சாப்பிடக்கூடிய நிலைமை இருக்கிறது. ரேட்டைக் கொஞ்சம் அதிகப்படுத்தினாலும் கொஞ்சம் நல்ல உணவாகப் போட்டால், தரமான உணவாகப் போட்டால் நல்லது. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அமைச்சரவர்கள் ஒரு நாளைக்கு நான்கு அல்லது ஐந்து மணி நேரந்தான் தூங்குகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களில் சிலரும் அப்படித்தான் இருக்கிறோம். இரவு இரண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டுகிறார்கள். சட்டமன்ற வேலைகளை ஊரில் இருந்தாலும், சென்னையில் இருந்தாலும் பார்க்கிறோம். அமைச்சர்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதிகாரிகளை நேரடியாகச் சந்திக்க வேண்டியிருக்கிறது. சில பேருக்கு போனில் சொன்னால் கூட நேரில் வந்து சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்குத் திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது. வேலை நேரத்திற்குமேல் அதிகமாக வேலை செய்தால் தொழிலாளர்களுக்காவது ஓவர்டைம் கொடுக்கிறார்கள். அதைப் போல் அதிகமாக வேலை செய்யக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓவர்டைம் கொடுப்பதில் தவறு இருக்க முடியாது. இதையெல்லாம் பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு முதல்வர் அவர்கள் பட்ஜட்டின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் சொல்லும்போது உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை எல்லாம் பற்றிக் குறிப்பெடுத்து அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் நாங்கள் பேசிய பேச்சு புத்தகமாகத்தான் இருக்கிறதே தவிர, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. நாங்கள் பேசுகின்ற பேச்சுக்களை உடனடியாக அந்தந்த டிப்பார்ட்மெண்டுக்கு அனுப்பி வைத்து முடிவைத் தெரிவிக்க முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

[திரு. எம். முத்தையா] [1972 மார்ச் 22

உறுப்பினர்களாகிய நாங்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தாலும்கூட, சட்டசபைக்கு வரும்போது பள்ளிச் சிறுவர்களைப் போல் ஆகிவிடுகிறோம். இது பரிதாபகரமான நிலை. வந்தவுடன் அட்டெண்டன்சில் கையெழுத்துப் போட வேண்டும். பள்ளிகளில் ஆசிரியரிடம் ப்ரெசென்ட் சார் என்று சொல்வது போல் வந்தவுடன் கையெழுத்துப் போட வேண்டும். பார்லிமெண்டில்கூட 15 நாட்களுக்கு ஒருமுறை கையெழுத்துப் போடலாம். இது சாதாரண விஷயம். ஒரு நாளைக்கு 20 ரூபாய் டி.ஏ. நாலு நாளைக்கு 80 ரூபாய் வாங்கி பெரிதாக ஒன்றும் செய்துவிட முடியாது. ஆகவே, இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை தொகுதியில் கால்நடையாகப் போக வேண்டியிருக்கிறது. நான் ஒவ்வொருவருக்கும் ஒரு ஜீப் கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. நான் கேட்பதெல்லாம் ஒவ்வொரு மாதமும் சட்டமன்ற உறுப்பினருக்கு இரண்டு நாட்களுக்கு ஊராட்சி ஒன்றிய ஜீப் கொடுக்க வேண்டுமென்று இங்கிருந்து ஜி.ஓ. அனுப்ப வேண்டும்.

ரயில்வே பாஸ் வேண்டும், போன் வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். அதைக் கொடுப்பது அரசாங்கத்தின் நிதிநிலையைப் பொறுத்த விஷயம். அரசாங்க அலுவலகங்களுக்குக் கொடுக்கக் கூடிய சர்வீஸ் ஸ்டாம்பை சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்திக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்காங்கு கிராமங்களில் இருக்கும் குறைகளைப் பற்றி மனுக்களை முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற டிப்பார்ட்மெண்ட் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அனுப்புகிறோம். அந்த பெட்டிஷன் என்ன ஆகிறது என்றால் ஒரு ரவுண்ட் வந்து பழையபடி V.M. இடமே, கர்ணத்திடமே வந்துவிடுகிறது. இதனால் அனுப்புகிற பெட்டிஷனுக்கு மதிப்பு இல்லாமல் போய்விடுகிறது. கடைசியிலே கர்ணத்திடந்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு மனுவுக்கும் ரேட் வைத்து வசூலிக்கிறார்கள். லோன்களைக் கொடுப்பதைப் பொறுத்தவரை குறைந்தது அந்தந்த வட்டார எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் அத்தாட்சி கொடுத்தால் லோன் சாங்ஷன் பண்ண உத்தரவிட வேண்டும்.



1972 மார்ச் 22] [திரு. எம். முத்தையா]

அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் வரும்போது ஆங்காங்கு அமைச்சர்களை வரவேற்று அவர்களிடத்தில் தங்களுடைய குறைகளை தீர்க்க வேண்டுமென்று மனுக்களை வைத்துக் கொண்டு காத்திருந்து அவர்களிடம் கொடுக்கிறார்கள். உடனே அமைச்சர்கள் அதை வாங்கி அமைச்சர்களுடன் வரக்கூடிய பி.ஏ.க்களிடம் கொடுக்கிறார்கள்.

சாதாரணமாக பெட்டிஷன்ஸ் போடுவதும் அமைச்சர்கள் கையில் கொடுப்பதும் ஒன்றாகவே இருக்கிறது. அமைச்சர்கள் கையில் கொடுப்பதற்கு ஒரு ரெஸ்பெக்ட் இருக்கவேண்டும். அப்போதுதான் அந்த மக்களுக்கும் பெருமை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு பெருமை ஏற்படும். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்திருந்தபோது அய்யனூரத்து கிராமத்தில் ஒரு வரவேற்பு கொடுத்தோம். இரண்டு கோரிக்கைகள்தான் வைக்கப்பட்டன. ஒரு குளம் வேண்டும், ரோட்டில் ஒரு பாலம் வேண்டும் என்று இரண்டு கோரிக்கைகள்தான் வைக்கப்பட்டன. இவை சாதாரண விஷயம். ஆனால் அவைப்பற்றி இதுவரையில் ஒன்றும் தெரியவில்லை. அய்யனூரத்து கிராமத்தில் அமைச்சர் அவர்களிடம் கொடுத்த பெட்டிஷன் என்னவாயிற்று என்பதற்கு ஒரு பதிலும் வரவில்லை. பெட்டிஷன்ஸ் அனுப்பினால் பரிசீலனையில் உள்ளது என்ற பதில்தான் வருகிறது. வேறு எந்த முடிவும் வருவதில்லை.

எம்.பி.க்கள் சொல்கிறார்கள், எப்படி என்று தெரியவில்லை. டெல்லியைப் பொறுத்தவரையில் எம்.பி.க்கள் ஒரு லெட்டர் எழுதினால் கன்ஸர்ன்ட் அமைச்சர் அவர்கள் பதில் அனுப்புவதாகச் சொல்கிறார்கள். அதேபோல் அமைச்சர்களிடமிருந்து எங்களுக்கு சட்டசபை உறுப்பினர்கள் என்ற முறையில் இன்னின்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற பதிலைத் தரவேண்டும்.

அடுத்தபடியாக, சட்டமன்ற ஹாஸ்டல் இருக்கிறது. அங்கு எங்கள் தொகுதியிலிருந்து மக்கள் வருகிறார்கள். இரவு பத்து மணிக்கு சிலர் சி.ஐ.டி. மாதிரி வருகிறார்கள், உங்கள் ரூமில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், என்று கேட்கிறார்கள். அது பெரிய கஷ்டமாக இருக்கிறது. இன்ஜெங்க்ஷன் ஆர்டர் மாதிரி இருக்கிறது. வசதி உடையவர்களாக இருந்தால் லாட்ஜிங்கில் தங்கிவிடுகிறார்கள். சாதாரணமானவர்கள் வந்தால் எங்களுடன் தங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்களை வெளியே போகச் சொல்ல முடியாத ஒரு நிலை இருக்கிறது. அப்படிச் சொன்னால் எங்கள் தொகுதி மக்கள் வருத்தப்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும்.

எனவே தொகுதிகளிலிருந்து வரும் மக்களுக்கு இப்படிப்பட்ட குறையாவது இல்லாமல் இருக்க நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அசெம்பளியில் ப்யூன் வேலை செய்கிறார்கள், ஹாஸ்டலிலும் ப்யூன் வேலை செய்கிறார்கள். இந்த டயத்தில்தான் அவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். மற்ற நேரங்களில் அவர்களுக்கு வேலை இல்லை. ஆகவே அவர்களுக்கு அரைச் சம்பளமாவது போட்டுக்கொடுத்து அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு, எனது உரையில் கூறியுள்ளவற்றை உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் கட்சி சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூறலாம் என்று கருதுகிறேன்.

முதலில் நம் சட்டமன்றத்தில் பணியாற்றக்கூடிய பல்வேறு வகை ஊழியர்களுக்கும் சரியான வகையில் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். பல ஆண்டுக் காலமாக சட்டமன்றத்தில் பணியாற்றிவருகிற தோழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிக ஊழியர்களாகவே இருந்து வருகிறார்கள். ஏறத்தாழ ஆறு, ஏழு, எட்டு வருடங்களாக அவர்கள் தற்காலிக ஊழியர்களாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். முன்பிருந்த ஆட்சியும் அவர்களைச் சரியாகக் கவனிக்கவில்லை, இந்த ஆட்சியும் வேண்டிய அளவிற்கு கவனிக்கவில்லையென்று கருதுகிறேன். ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் அழுத்தந்திருத்தமாக அவர்களுக்கு தக்க பாதுகாப்பு கொடுப்பேன் என்ற ஒரு வாக்குறுதியைத் தந்தால் அது எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இருக்கும். வேறு எந்த மானியத்திலும் அவர்களுக்கு பரிந்து பேச முடியாது என்பதினால் இந்த நேரத்தில் நான் அதைப்பற்றி வலியுறுத்திச் சொல்கிறேன். இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்பாகவே இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் இதுவரை அது கவனிக்கப்படவில்லை.





அசெம்பளியில் வாச் அண்ட் வார்ட் போலீஸ் இருக்கிறார்கள். அவர்களுக்கு சாதாரணமாக ஒரு வருடத்திற்கு இரண்டு பான்ட்ஸ், இரண்டு கோட்ஸ் கொடுக்கிறார்கள். 1971-ம் வருடத்தில் ஒரு பான்ட்டும் ஒரு கோட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எதற்காக அப்படிப் புறக்கணிக்கப்பட்டார்கள் என்று தெரியவில்லை. அதையும் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, வருடம் ஒன்றுக்கு அவர்களுக்கு ஒரு பேர் ஷூஸ் கொடுக்கிறார்கள். ஆனால் சென்ற மூன்று வருடங்களாக ஒரு பேர்தான் கொடுத்திருக்கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டும்.

சட்டசபையில் ட்யூட்டி செய்கிற காவலர்களுக்கு ரூ. 1.50 படி கொடுக்கிறார்கள், தலைமைக் காவலருக்கு ரூ. 2 கொடுக்கிறார்கள். மற்றபடி எழுத்தர்களுக்கு ரூ. 2.50 படி கொடுக்கிறார்கள். இதையும் சற்று ஏற்றிக்கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபையில் டிஸம்பர், ஜனவரியில் ட்யூட்டி செய்த ஊழியர்களுக்கு பாட்டா இன்னும் கொடுக்கப்படவில்லை. அதை உடனடியாகக் கொடுக்கவேண்டும்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்ன கருத்தை மீண்டும் என் கட்சி சார்பில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நண்பர் வீராசாமி அவர்கள் சொன்ன அந்தக் கருத்திலும் உண்மை இருக்கிறது என்று நினைக்கிறேன். எக்ஸ்டென்ஷன்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது குறைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறேன், இந்த எக்ஸ்டென்ஷன் முறையை ரத்து செய்துவிட்டு இவ்வளவு வருடங்கள் முடிந்துவிட்டால் உடனடியாக ரிடயராக வேண்டும் என்ற நிலையை உருவாக்கினால் அதனால் கிடைக்கும் நன்மையை விளக்கிக் கூற நினைக்கிறேன். அப்போதுதான் அங்கு பணிசெய்யும் தோழர்களுக்கு ஒரு நம்பிக்கை வரும் தங்களுக்கும் ப்ரமோஷன் வரும் என்று. செயலாளராக இருந்தாலும் சரி, உதவிச் செயலாளராக இருந்தாலும் சரி, எந்த அதிகாரியாக இருந்தாலும் சரி, தனிப்பட்ட அதிகாரியைக் குறிப்பிட்டுச் சொல்வது பண்பு அல்ல என்பதால் பொதுவாகச் சொல்கிறேன். யாராக இருந்தாலும் சரி எக்ஸ்டென்ஷன் இல்லை என்றால்தான் சபார்டினேட்ஸ்க்கு தங்களுக்கும் ப்ரமோஷன் கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை ஏற்படும்.

It will definitely tone up the general morale of the administration என்று சொல்லக்கூடிய அளவிற்கு, அழுத்தந்திருத்தமான ஒரு கருத்தை முதல் அமைச்சர் அவர்கள் தமது பதிலில் வெளியிட்டால் நன்றாகயிருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, ப்ரெஸ் ஆக்ட். பார்லிமெண்ட்டில் ஒரு ஆக்ட் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தின்கீழ் பாராளு மன்றத்தில் நடைபெறும் சர்ச்சைகள், விவாதங்கள், டிபேட்ஸ் இவைகளை எல்லாம் அப்படியே வெளியிட அவர்களுக்கு உரிமை இருக்கிறது. The Press Act is on that line. அங்கு ப்ரெஸ்ஸில் பணியாற்றுகிறவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை களுக்கும் இங்கு ப்ரெஸ்ஸில் உள்ளவர்களுக்கு உள்ள உரிமைகளையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது இதைவிட அங்கு ஜாஸ்தியாக இருக் கிறது. அந்த அளவிற்கு இங்கு உரிமை இல்லை. இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் அங்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதன்கீழ் சில உரிமைகள் வழங்கப் படுகின்றன. நான் "எல்லோ ஜர்னல்களுக்காகப்" பரிந்து பேசு கிறவன் அல்ல. "எல்லோ ஜர்னல்" என்றால் எல்லோருக்கும் தெரியும். இருதரப்பிலும் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஜர்னலிஸ்ட்ஸ்-க்கு நல்ல ப்ராப்பர் ப்ரொட்டக்ஷன் தரவில்லை என்றால் அவர்கள் தங்கள் பணியை சுதந்திரமாகவும் தைரியமாகவும் செய்யும் வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். ஆகவே அதைப்பற்றி ஒரு சூசகம் கொடுத்துவிட்டு பின்னால் சட்ட அமைச்சரோடு கலந்து கொண்டு, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால், மற்ற மாநிலங்களில் அப்படிப்பட்டதொரு சட்டம் இல்லையென்றால் அங்கும் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு நாம் ஒரு எடுத்துக்காட்டாக இருப்போம். பார்லிமெண்டில் சில குறிப்புகளை எக்ஸ்பஞ்ச் செய்கிறார்கள். அந்தக் குறிப்புகளை பத்திரிகைகளில் போடக் கூடாது, அதை ஒத்துக்கொள்ளலாம். பார்லிமெண்டில் வேகமாகச் சில வார்த்தைகளைச் சொன்னார்கள். அந்த வார்த்தைகள் பார்லிமெண்ட் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறது என்று பத்திரிகையாளர்களுக்கு போடுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த வார்த்தைகள் எவை எவை என்று போடக் கூடாது. பார்லிமெண்ட் நடவடிக்கைக் குறிப்பிலும் போடக் கூடாது. ஆனால் சில வார்த்தைகள் பேசப்பட்டன 'These words the Hon. Speaker has ordered to be expinged' இந்த வார்த்தைகள் நீக்கப்படவேண்டுமென்று உத்தரவிட்டார்கள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு அங்கு உரிமை இருக்கிறது.





அது மட்டுமல்லாமல், மற்ற விஷயங்கள், உதாரணமாக ஒரு வாக்-அவுட் நடந்தது என்றால் அவர்களுக்குப் போடுவதற்கு உரிமை இருக்கிறது. அம்மாதிரியான சந்தர்ப்பங்கள் சட்டமன்றத்தில் என்னென்ன வகைகளில் நடைபெறுகிறதோ அதை பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அப்படிப்பட்ட சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக்கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தை முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி விளக்கலாம் என்று நினைக்கிறேன். சில நாட் களுக்கு முன்பு போலீஸ் மானியத்தில் பேசுகிற நேரத்தில் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாரிஸ் என்ற அதிகாரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒரு இங்கிலீஷ்காரர் கலெக்டராக இருந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். உண்மையில் அந்த விஷயம் என்ன என்று எனக்குத் தெரியாது. நான் அரசியலுக்கு வந்தது 1964-க்கு பிறகு தான். இங்கேயிருக்கும் பழம்பெரும் அரசியல் வாதிகள் ஏதாவது சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். வெளியே விசாரித்த பிறகு எனக்குக் கிடைத்த தகவல்கள் சிலவற்றை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு அவசியம் இருந்தால் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். மாரிஸ் அவர்கள் கலெக்டராக இருந்தபோது தேனியில் நடந்த சம்பவத்தைப் பற்றி ஏதோ நடவடிக்கை எடுத்தது குறித்து கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அந்தக் கருத்தை எற்றுக்கொள்ளவில்லை. அரசாங்கம் கூறிய அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் எழுதினார்கள் என்று சொல்லப்பட்டது. அந்த நேரத்தில் நான் இங்கே எழுந்து சொன்னேன் ஒரு அதிகாரி இப்படிச் சொன்னார் என்றால் அது உண்மையிலேயே பாராட்டத்தக்கது, அந்த அளவுக்காவது ஒரு அதிகாரிக்கு ஒரு கருத்து வேற்றுமை எழுதுவதற்கு உரிமை இருக்கிறது என்று கூறினேன். அப்படி எழுதிய காரணத்தாலே அவர் 2–3 ஆண்டுகளுக்கு முன்பே பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்தார்கள்)

டாக்டர் எச். வி. ஹாண்டே: திருத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படி தவறாகவே சொல்லிவிட்டு, தவறாக சொன்னது பத்திரிகைகளில் வருகிறது. திருத்திக்கொள்வது பத்திரிகையில் வருவது இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆங்கிலத்திலேயே சொல்லி விடுகிறேன்.

I wanted to say retire, he was made to retire prematuely. அவருடைய பதவி காலம் முடிவதற்குள்ளாகவே அவர் ஓய்வு பெறும் நிலையில் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்து விட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி; அரசாங்கம் உத்தரவு பிறப்பித்ததாகச் சொல்லவில்லை. அவர் பதவிக்காலம் 53 வரை. அப்போது ஓய்வு பெறவேண்டியவர் 51-ல் ஓய்வு பெற்று விட்டார் என்று தான் சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பொதுவாகவே ரிடையர் ஆக வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போடுவது மாதிரி நீங்கள் 51-வது ஆண்டிலேயே ரிடையராக வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போட்டார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ரிடையர் ஆகிறவர்கள் இன்னும் கொஞ்ச நாள் நீடிக்கவேண்டுமென்றால் தான் அரசாங்கம் உத்தரவு போடுவார்கள். நீங்கள் இன்ன தேதியில் ரிடையராக வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை. குறிப்பிட்ட அந்த அதிகாரி 53-ம் ஆண்டில் ஓய்வுபெறவேண்டியவர் 51-ம் ஆண்டே ஓய்வு பெற்று விட்டார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தச் சூழ்நிலைகளைச் சொன்னேன். அவர் ஓய்வு பெற்று விட்டார் என்றும் சொன்னேன். நீங்கள் தான் காரணத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: As Congress Party Member, எங்கள் ஆட்சியில் இந்த மாதிரி நடந்தது என்று சொன்னார்கள். அந்த நிலைமை ஏன் என்றால் வெள்ளைக்காரர்கள் விருப்பப்பட்டால் முன்னாலேயே போய்க்கொள்ளலாம் என்று சுதந்திரம் வந்த பிறகு அரசாங்கம் சொன்னதால் போனாரே தவிர வேறு காரணத்தால் போனார் என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் பத்திரிகை தலையங்கத்தைப் படித்து விட்டுச் சொல்கிறார்கள். வல்லபாய் படேல் இந்தியாவிற்கு விடுதலை வந்த பிறகு வெள்ளைக்



காரர்கள் விருப்பம்போல் போகலாம் என்று சொன்னதைக் குறிப்பிடுகிறார்கள். சுதந்திரம் வந்தது 47-ல், அவர் சுதந்திரம் பெற்றது 51-ல். (சிரிப்பு.)

THIRUMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I.C.S. officers are eligible for the same pension even if they retire earlier. This eligibility to full pension perhaps induced him to go on voluntary retirement, with no special or specific reason.

அதன்படி அவர்கள் ரிடையராகி விட்டார்கள், ஆகையால் அதற்கு எந்தக் காரணமும் சொல்லுவதற்கு இல்லை என்று நினைக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இன்னும் விளக்கமாகச் சொல்கிறேன். 51-வது வயதிலே அரசாங்கத்தின் வற்புறுத்தலினால் விலகிக்கொண்டாரா? ரிடையராக வேண்டுமென்று விருப்பம் தெரிவித்து விலகினார்களா? அரசாங்கத்தின் போக்கு சரியல்ல என்று விலகினார்களா? இங்கே மணி என்ற ஒரு ஐ.சி.எஸ். ஆபீசர் இருந்தார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியனுப்பி இருந்தார்கள். அங்கே மேல்சபையில் கூட காரணம் கேட்டார்கள். அவர்கள் ரிசிக்னேஷன் செய்து எழுதிய கடிதத்தை அவையில் வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். வைக்கப்பட்டதா என்பது தெரியாது. அந்த மாதிரி ஒரு விளக்கம் கொடுத்து, அரசாங்கத்தின் மீது குறை சொல்லி, அதன் காரணமாக அவர்கள் ஓய்வு பெற்றார்களா? அவர்கள் ஓய்வு பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஓய்வு பெற்று இருக்கிறார்கள் என்று சொன்னால் அரசாங்கம் அப்படி உத்தரவு போட்டதா, இல்லாவிட்டால் வேறு ஏதாவது குற்றத்தில் சம்பந்தப்பட்டு இருக்கிறார்களா? இல்லாவிட்டால் தேனியில் ஏற்பட்ட சம்பவத்தின் காரணமாக சென்றார்களா? ஏனென்றால் அன்றையதினம் பேசிய முதலமைச்சர் அவர்கள் தேனி சம்பவத்திற்கும் இந்த அதிகாரியின் பதவி விலகலுக்கும் சம்பந்தப்படுத்திப் பேசினார்கள். ஆகவே, நான் சொல்வது, என்ன சம்பந்தம் இருக்கிறது என்று முதலமைச்சர் நிரூபிக்க முடியுமா? அவர்கள் அந்தக் காரணத்திற்காக ஓய்வு பெற்றார்கள் என்று கடிதம் காட்ட முடியுமா? எனக்கு இரண்டு தகவல்கள் கிடைத்து இருக்கின்றன. அதை நான் சொல்வதற்காகத்தான் வந்தேன். அதற்குள் அம்மையார் அவர்கள் குறுக்கிட்டு விட்டார்கள். ஒன்று, ஓ.பி.ஆர். அவர்கள் அந்த முன்பாகவே வெள்ளைக்காரர்கள் விலகிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினால் விலகிக்கொள்ளலாம் என்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்து

இருக்கிறது. இரண்டாவதாக, மாரிஸ் அவர்களுக்கு பிரிட்டிஷ் ஹை கமிஷனில் ஒரு உத்தியோகம் கிடைத்தது என்றும், அதனால் அவர்கள் விலகிக்கொண்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்த மாதிரியாக நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

இப்போது கூட கேள்விப்படுகிறேன். முன்பு இருந்த நம்முடைய சீப் செக்ரிடரி ராயப்பா அவர்கள் மீண்டும் மீண்டும் 2-3 தடவை கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஹெல்த் கிரௌண்ட்ஸ்ஸா என்ன என்று தெரியவில்லை: 60 நாட்கள் 60 நாட்களாக எக்ஸ்டெண்ட் செய்து கொண்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: அதற்குள் அவர்கள் ராயப்பா விஷயத்திற்குப் போய்விட்டார்கள். நான் தேனி விஷயத்திற்கு பதில் சொல்ல விரும்புகிறேன். தேனியில், இப்போது கல்வியமைச்சராக இருக்கும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொள்ள இருந்த கூட்டம், கொடியேற்று விழா பெரிய அமளியாகி, அவர் மீது பாராங்கல்லை தூக்கி எறிய முயற்சித்து, தேனி தியாகராசன் தலைமையில் ஒரு கலவரம் நடத்தப்பட்டது. 140-க்கு மேற்பட்டவர்கள் தேனி தியாகராசன் தலைமையில் அந்தக் கலவரம் செய்ய படையெடுத்து வந்தார்கள் என்ற காரணத்தால் தியாகராசன் கைது செய்யப்பட்டார். அவர் பின்னால் வந்த 140-க்கு மேற்பட்ட தொண்டர்களும் கைது செய்யப்பட்டார்கள். அப்படி கைது செய்யப்பட்டு மறுநாளே அந்த இடத்திற்கு, கலெக்டர் சென்று நிலைமைகளை ஆராய்ந்து சர்க்காருக்கு கடிதம் எழுதினார். இப்படிப்பட்டவர் ஒரு மாவட்டத்தில் ஜில்லா போர்டு தலைவராக செயல்படுவதா என்பதை அரசு யோசிக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார். அதன் தொடர்பாக அதற்கு பதில் எழுதுவதற்கு பதிலாக அங்கே இருந்த போலீஸ் அதிகாரிகள் சஸ்பெண்ட் செய்யப்பட்டு உடனடியாக தேனி தியாகராசன் விடுதலை செய்யப்பட உத்தரவிடப்பட்டு, அதற்கு பிறகும் நடைபெற்ற வழக்கில் யாரும் ஈடுபடுத்த முடியாது என்று மற்றவர்கள் மீது இருந்த வழக்கும் வாபஸ் பெறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையைத் தொடர்ந்து கலெக்டர் 53 வரை நீடிக்க வேண்டியவர் 51 ஆண்டிலேயே ஓய்வு பெற்றார் என்று தான் சொன்னேன். அதைத்தான் மீண்டும் சொல்கிறேன். இதற்கும் அதற்கும் உள்ள ரகசியத்தை நீங்கள் தான் புரிந்து கொள்ள வேண்டும்.





<u>(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).</u>

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: அதைத்தான் எழுதியிருந்தார்களா, அப்படிச் சொல்லியிருக்கிறார்களா என்பதைத்தான் கேட்கிறேன். மாரிஸ் அவர்கள் ராஜினாமா செய்கிறேன் என்றார்களா, ரிடையர் ஆகிறேன் என்று சொன்னார்களா. இதற்கும் அதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று சொல்வது காக்காய் உட்கார பனம் பழம் விழுந்தது போல் இருக்கிறது. அந்த வாதம் ஏற்றுக்கொள்ள முடியுமா என்று பார்க்க வேண்டும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: பழம் விழுந்ததா இல்லையா என்பதைப் பற்றி கவலையில்லை. காக்காய் உட்கார்ந்ததை ஒப்புக்கொண்டதற்கு நன்றி (சிரிப்பு).

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: அதற்கு ஆதாரமே இல்லை, அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஒப்புக்கொண்டதற்கு நீங்கள் "மகிழ்ச்சி அடைகிறேன், நன்றி தெரிவிக்கிறேன்" என்று........

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: நான் சம்பந்தம் இருந்ததாகச் சொல்லவில்லை. நடந்த விவகாரங்களைச் சொன்னேன். ஓய்வு பெற்றதை சொன்னேன். சம்பந்தப்படுத்திக் கொள்கிறவர்கள் சம்பந்தப்படுத்திக் கொள்ளலாம்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே</u>: சம்பந்தப்படுத்த வேண்டும் என்பது முதல் அமைச்சர் அவர்களுடைய வாதமாக இருக்கலாம். சம்பந்தப்படுத்த வேண்டாம் என்பது என்னுடைய வாதமாக இருக்கலாம்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: கலெக்டர் பற்றி வாதாடுகிறார்கள். தேனி தியாகராஜன் கைது செய்யப்பட்டு, 140 பேர்கள் கைது செய்யப்பட்டு, அப்படி கைது செய்த போலீஸ் அதிகாரிகள் மறு நாள் சஸ்பெண்டு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டவர்கள் அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் உடனே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைக் கொலை செய்கின்ற அளவுக்கு பெரிய பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டு, அமளி ஏற்பட்டிருந்த போதிலும், அது சம்பந்தமாக எந்த வழக்கும் இல்லை, அதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் எந்தவிதத்திலும் உருக்கமாகச் சொல்லவில்லை; கலெக்டர் பற்றி தான் அவர் பரிந்து பேசுகிறார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கலெக்டர் பற்றி முதல் அமைச்சர் தான் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் கலெக்டருக்குப் பரிந்து பேசவில்லை: காக்காய் உட்கார்ந்ததும் பனம்பழம் விழுந்ததும் தொடர்பு இருக்கிறதோ என்னவோ. பழம் விழுந்ததும் தொடர்பு இருக்கிறது என்று அம்மாதிரியாக அவர்கள் சொல்கிறார்கள். நான் ஒரு யோசனை கூறுகிறேன். இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு நேற்று கூட தெரிவித்தேன். நான் அதற்குள் கூட போகவில்லை. அரசாங்கத்தில் அமைச்சர் அவையின் முடிவு இறுதி முடிவு என்று நேற்று சொல்லப்பட்டது. நேற்று அதுபற்றி விவாதிக்கப்பட்டு, முடிந்து விட்டது, அதற்குள் நான் திரும்பவும் போகவில்லை. ஆனால், அமைச்சர் அவர்களுடைய உத்தரவு என்ன என்று பார்க்கவேண்டும். கவர்ன்மெண்டு செய்திருக்கக்கூடியது பைனலாக இருக்கலாம். ஆகவே நான் சொல்கிறேன். அதற்காக ஒரு என்கொயரி வையுங்களேன், தாராளமாக ஒரு என்கொயரி வைத்துப் பாருங்களேன். இரண்டு ஒபினியன், வெவ்வேறு அபிப்பிராயம் இருக்கக்கூடிய காரணத்தினால்தான் சொல்கிறேன். பழைய அரசாங்கத்தின் பேரில் இப்பொழுது குற்றம் சாட்டப்படுவதால்—நான் இப்பொழுது யாருக்கும் பரிந்து பேசவில்லை நமக்கு விவகாரம் தெரியாது—சொல்கிறேன். மாரிஸ் பேரில் குற்றம் சுமத்தப்பட்டு திடீரென்று ரிடையர் செய்த மாதிரி ஒரு நிலைமை என் மனதில் உண்டாகியது. இப்பொழுது அமைச்சர் விளக்கம் கொடுத்த பிறகு அம்மாதிரி நிலைமை இல்லை. எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை. விசாரித்ததில் எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல் என்ன என்று கூறுகிறேன். ஸ்காட் பிரௌன் கூட ஏறத்தாழ அதே நேரத்தில் ஓய்வு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். பல வெள்ளைக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள் அப்படி அப்பொழுது ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாரிஸ் என்பவர் "How he left" என்றால், My information is he left on good standing எனக்கு Authoritative information யாரிடமிருந்து கிடைத்தது என்பதற்கு வேண்டுமானாலும் நான் பெயரைச் சொல்ல தயாராக இருக்கிறேன். முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவச்சலம் அவர்களிடத்தில் கேட்டோம். he left on good standing என்று ஆதாரபூர்வமாக கூட சொல்ல முடியும் என்று சொன்னார். அது நியாயமா, இல்லையா, என்று நான் சொல்ல விரும்பவில்லை.





அதே மாதிரி இன்னொரு சம்பவத்தையும் நான் இங்கே எடுத்துக் காட்ட முடியும். உதாரணத்திற்காக நான் சொல்கிறேன். நம்முடைய முன்னாள் சீப் செக்ரடரி, பிரதம காரியதரிசி அவர்கள் ஓய்வு பெற்றுக்கொண்டிருக்கிறார்களோ, என்னவோ நமக்குத் தெரியாது. 60 நாட்கள், 60 நாட்களாக லீவு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

Under what circumstances he had to apply for leave? எதற்காக அவர் இப்படி லீவை நீட்டிக்கொண்டே போகிறார்? நாட்டில் சீப் செக்ரடரிக்கே இந்த நிலைமை என்றிருந்தால், மற்றவர்களுக்கு என்ன நிலைமை என்பதை நாம் பார்க்க வேண்டும். இப்படி ஒரு பயங்கரமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால், அது பற்றி விளக்கம் தரவேண்டும். சீப் செக்ரடரி மீண்டும், மீண்டும் 60 நாட்கள், 60 நாட்களாக லீவு எழுத வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

Under what circumstances he had been going on extending his leave

அதற்குக் காரணம் என்ன? அவர் மீது ஏதாவது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறதா, அதிருப்தி ஏற்படக்கூடிய அளவுக்கு ஏதாவது நடந்ததா என்று விளக்கிச் சொல்ல வேண்டியது நமது முதல் அமைச்சர் அவர்களுடைய கடமை.

அடுத்தபடியாக சில 'ஐ.பி.எஸ். ஆபீசர்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி போலீஸ் மானியத்தில் பேசலாம் என்றாலும், ஒட்டு மொத்தமாக ஜெனரல் அட்மினிஸ்ட்ரேஷன் முதல் அமைச்சர் அவர்களுடைய பொறுப்பில் இருக்கக்கூடிய காரணத்தினால் நான் இதைச் சொல்கிறேன். எலெக்ஷனுக்குப் பிறகு பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதற்குப் பிறகு கமிஷனர் ஆப் போலீஸ் மாற்றப்பட்டிருக்கிறார். திரு. சிங்காரவேலு, ஐ.பி.எஸ். மாற்றப்பட்டார்கள். 1967 தேர்தலுக்குப் பிறகு அடுத்தபடியாக, 1971 தேர்தலுக்குப் பிறகு மாற்றப்பட்டார் திரு. குப்புசாமி அவர்கள். எந்தக் காரணத்திற்காக இப்படித் திடீர் திடீரென்று மாற்றப்பட்டார்கள். பனிஷ்மெண்டு என்ற முறையிலே மாற்றப்பட்டார்களா? எந்தக் காரணத்திற்காக அவர்கள் மாற்றப்பட்டார்கள்? முதல் அமைச்சர் அவர்கள், ஒரு அதிகாரி, ஐ.சி.எஸ். அதிகாரி பிரிமெச்சூராக ரிடையர் ஆனதற்கும் வேறு நிகழ்ச்சிக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்று கருத்துச் சொல்லும்பொழுது, நான் மாத்திரம் இப்படிச் சம்பந்தப் படுத்திச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? இதுபற்றிய

விவரத்தை அந்த அதிகாரிகள் எந்தக் காரணத்திற்காக மாற்றப்பட்டார்கள் என்பதுபற்றி விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரியாக......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கமிஷனராக இருந்த சிங்காரவேலு அவர்கள் டெல்லிக்குச் சென்று விட்டார், ஆகவே அவர்கள் மாற்றப்பட்டார்கள் என்று கூறுவதற்கில்லை. அதற்குப் பின்னால் இருந்த கமிஷனர் மூன்று ஆண்டு பதவி வகித்துவிட்டார். மூன்று ஆண்டு பதவிக் காலத்திற்குப் பிறகு வேறு ஊருக்கு மாற்றப்பட்டார். யாரும் தண்டிக்கப்படவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அதே மாதிரியாக முதல் அமைச்சர் அவர்களிடத்தில் பெர்சனல் அசிஸ்டெண்டாக இருந்த ஒரு ஆபீசர் திரு. வைத்தியலிங்கம் இப்பொழுது மாற்றப்பட்டு, ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரை அங்கே நியமித்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? என்ன அடிப்படையில் இப்படி நியமித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அட்மினிஸ்ட்ரேஷன் ஈஸ் தி மோஸ்டு இம்பார்டெண்டு திங், நான் அதுபற்றிப் பேசக்கூடாது என்றால், வேறு பேச வேண்டிய அவசியமே இல்லை. எதற்காக இப்படி ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்திருக்கிறார்கள் என்று பத்திரிகை நிருபர்கள் அவரைக் கேட்டபொழுது ஏதோ ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். எந்த அடிப்படையில் நியமித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. இதுவரையில் தமிழக ஆட்சியின் வரலாற்றில் இல்லாமல், இது வரையில் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு ஐ.ஏ.எஸ். பெர்சனல் அசிஸ்டெண்டு வைத்துக் கொள்ளாமல் இருந்திருந்தும், இப்பொழுது வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை எதற்காக ஏற்பட்டது. இதை நான் ஒரு குற்றச்சாட்டாகக் கூறவில்லை, ஒரு கம்பளைண்டாகக் கூறவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பதற்கான விளக்கத்தை நாம் இந்த மானிய விவாதத்திற்குப் பதில் கூறும்பொழுது பெற முடியவில்லை என்றால், நாம் என்ன செய்ய முடியும் என்று எனக்குப் புரியவில்லை.

இறுதியாக நான் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் என்னிடம் தெரிவித்தார்கள். அவர்கள் கூறியதைச் சொல்லிக் கொள்கிறேன். சிலர் மந்திரிகளாக இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிப் பிரச்னை இல்லை. மற்றவர்களைப் பற்றிச் சொல்லக்கூடியது என்ன என்றால், ஏதாவது கொஞ்சம் சலுகைகள் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் கவனித்து எந்த அளவுக்கு அப்படிப்பட்ட சலுகைகளைத் தர முடியுமோ அந்த அளவுக்குச் சலுகைகளைச் செய்துகொடுக்க



வேண்டும் என்று சொல்லி, என்னுடைய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, பல முக்கியமான கருத்துக்களை இந்த மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இந்த மாமன்றத்தின் கவனத்திற்காக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

எலெக்ஷன் என்ற தலைப்பின்கீழ் ஓரிரண்டு கருத்துக்களை முதன் முதலாகக் கூற வேண்டுமென்று நான் கருதுகிறேன். குறிப்பாக, நடந்து முடிந்த தேர்தல் சம்பந்தமாக நடந்த ஒரு கேஸைப்பற்றி உள்ள ஒரு விவரத்தை முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். வடக்கு மேலூர் தொகுதியில் நடந்த தேர்தல் வழக்கில் பல அம்சங்கள் பற்றிக் கூறி, நீதிபதி அவர்கள் அவருடைய தீர்ப்பில் ஓரிரு பகுதிகளையும் கூறியிருக்கிறார்கள். அதிலுள்ள கருத்துக்களைமட்டும் நான் எடுத்துக் கூற முற்படுகிறேன். அதிலே அவருடைய தேர்தல் வழக்கில் என்ன காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதையெல்லாம் எடுத்துக் கூறி விவாதித்து முடித்த பிறகு இறுதியாக இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். ஓரிரு பாயிண்ட்ஸை, முக்கியமாக இருப்பதை, அதைப் பற்றிய கருத்தினை அந்த ஜட்ஜ்மெண்டில் கூறியிருக்கிறார்கள்.

From the foregoing discussion the following facts emerge என்று சொல்லி, அதில் மூன்றாவதாக

'III. The unlawful entry of Mr. O. P. Raman into the Counting Hall when the counting was going on caused dislocation and disturbance to the counting which was likely to have affected the accuracy in the counting,'

என்று ஒரு அப்சர்வேஷன் அதிலே இருக்கிறது. அதிலே குறிப்பாக.........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேர்தல் வாக்குகள் எண்ணுகின்ற நேரத்தில் மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்கள் உள்ளே சென்றார்கள் என்று தீர்ப்பில் இருப்பதாகச் சொன்னார்கள். அதைப் பற்றி இப்பொழுது பேசுவது முறையல்ல. ஏனெனில் அது சம்பந்தமாக அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டை ஒட்டி, திரு. ஓ. பி. இராமன் அவர்களுடைய வாக்குகள் எங்கே எண்ணப்பட்டனவோ அதே இடத்தில்தான் மற்ற உறுப்பினருடைய வாக்குகளும் எண்ணப்பட்டன. திரு. ஓ. பி. இராமன்

வெற்றிபெற்றார். சர்டிபிகேட் வாங்குவதற்கு அங்கே சென்றார்கள். சர்டிபிகேட் வாங்குவதற்குச் சென்ற குற்றம் தான் அவர் செய்தது. சர்டிபிகேட் வாங்கச் சென்றார்கள் என்பது நம்முடைய வாதம். அவர்கள் சென்றதே தவறு என்பது பிரதிவாதிகளுடைய வாதம். தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் பேரில் அப்பீல் செய்யப் பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : * * * அடுத்த விஷயத்திற்கு வருகிறேன்.

பொதுவாக நமது தேர்தலிலே என்னென்ன வழிமுறைகள் ஏற்பட வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் இங்கே கருத்துக்கள் கூறப்பட்டன. இந்தத் தேர்தலிலே அங்கு எலக்டோரல் ரோல் உரிய காலத்தில் கொடுக்கப்படாததால் "க்ளைம்ஸ் அண்டு அப்ஜக்ஷன்ஸ்" சரியாகக் கொடுக்க முடியவில்லை. இம்மாதிரி நேரங்களில் காலாகாலங்களில் இந்த எலக்டோரல் ரோல் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நாங்கள் எல்லாம் தேர்தலிலே நின்றவர்கள். பல முறை நின்றிருக்கிறோம். எலக்டோரல் ரோல் வேண்டுமென்று அப்ளிகேஷன் கொடுத்தால், இன்னும் வரவில்லை; பிரின்ட் செய்யப் படவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னால் பிரின்ட் செய்யக்கூடாது என்றிருப்பதால், அந்த வேலை ஒழுங்காக நடைபெறவில்லை. எனவே, சீரான முறையிலே உரிய காலத்திலே பிரின்ட் செய்து கொடுப்பதற்கு ஏற்ற வகையில் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த மாதிரி எலக்டோரல் ரோல் வருவதாக இருந்தால்தான் சட்டப்படி நடத்த முடியும் என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயம். தேர்தல் காலங்களிலே கூட்டங்கள் போடுவதற்கு அனுமதி கிடைப்பதில் பல சிரமங்கள், பல சங்கடங்கள், பல துன்பங்கள் இருக்கின்றன. கூட்டங்கள் நடத்துவதற்கு சங்கடங்கள் இல்லாத வகையில் இதை ஆராய்ந்து முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும், எந்தெந்த இடங்களிலே கூட்டம்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



நடத்தவேண்டும், அதற்கு என்னென்ன வகையிலே முன் அனுமதி பெறவேண்டும், என்ற விதி முறைகளை காலாகாலங்களில் எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் தெரிவித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுக்கூட்டங்கள் நடத்துவதிலே ஏற்படுகின்ற கஷ்டங்களையும், துன்பங்களையும் தவிர்க்கவும், உடனடியாக அனுமதி கிடைக்கவும் அந்தந்த வட்டார அதிகாரிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும். இங்கே இருக்கின்ற "ஹோம் செக்ரட்டரி" தான் அனுமதி வழங்கவேண்டுமென்று இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கத்திற்கு, அமைச்சர்களுக்கு நாங்கள் கடிதம் எழுதினால் அதற்கு உடனே பதில் வருகிறது என்று பலர் சொன்னார்கள். எல்லாக் கடிதங்களுக்கும் பதில் வருகிறதா என்றால், இல்லை. முக்கியமான கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அனுப்ப வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாங்கள் பல ஆட்சேபணைகளை தருகிறோம். அதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று எங்களுக்கு விபரம் தெரியப்படுத்தப்படுவதில்லை. உதாரணத்திற்கு ஒன்றை இங்கே சுட்டிக்காட்டுகிறேன். நான் இந்த மன்றத்திலே புகைப்படத்தோடு கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் கூறினேன். அதாவது ஒரு சட்டசபை உறுப்பினர் அங்கு விஜயம் செய்தபோது போலீஸ் அணிவகுப்பு மரியாதை செய்து சிறப்பித்தது. அந்த நிகழ்ச்சியைப் புகைப்படத்தோடு முதலமைச்சரிடம் கூறினேன். அதை யார் என்று நான் கூறத் தேவையில்லை. அதுசம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது அல்லது என்ன முடிவு அரசாங்கம் செய்திருக்கிறது என்பதைப்பற்றி எனக்கு அறிவிக்க வில்லை. இந்த மாதிரியான முக்கிய விஷயங்களுக்கு அறிவிப்புத் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக சட்டசபை உறுப்பினர்களுக்கு இந்தமாதிரி மரியாதை செய்யப்படுவது கிடையாது. யார் யாருக்கு இம்மாதிரி மரியாதை அளிப்பது என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளை மீறிய இந்தச் செயல்பற்றி பதில் தரப்படவில்லை. இதுமாதிரியான பல ஆட்சேபணைகளுக்குப் பதில் தரப்படவில்லை. இம்மாதிரியான நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 22

அடுத்து, ஒரு முக்கியமான விஷயம். பொதுவாக நமது சட்டசபையிலே பல கருத்துக்களைப்பற்றியெல்லாம் நாம் பேசுகின்றோம். சட்டசபையைப் பொறுத்தமட்டில் இன்று முக்கியமான பல கமிட்டிகள் இருக்கின்றன. பொதுக் கணக்கு கமிட்டி, எஸ்டிமேட் கமிட்டி இப்படிப் பல கமிட்டிகள் இருக்கின்றன. இந்தக் கமிட்டிகள் சம்மந்தமாக நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மற்ற மாநிலங்களிலே "பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி" என்று ஒரு கமிட்டியும் வைத்திருக்கிறார்கள். அதைப்போன்று நமது மாநிலத்திலும் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி ஒன்று நிறுவப்பட வேண்டும். அதற்கு இந்தத் தொடர் கூட்டத்திலேயே பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஏனென்றால் நமது மாநிலத்திலே பல கார்ப்பரேஷன்களை அரசாங்கமே நடத்திவருகிறது. என்னுடைய கையிலே கூட இப்போது 25-க்கு மேற்பட்ட கார்ப்பரேஷன்களின் பட்டியலை வைத்திருக்கிறேன். அவைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

NAMES OF THE PUBLIC UNDERTAKINGS.

1. Tamil Nadu Warehousing Corporation.
2. Government Mechanised Brick Plant, Tirumazhisai.
3. The Tamil Nadu Textile Corporation, Limited.
4. The Madras Handloom Finance Corporation, Limited.
5. The Madras Industrial Investment Corporation.
6. The Tamil Nadu Industrial Development Corporation.
7. The Tamil Nadu Small Industries Corporation, Limited.
8. The Tamil Nadu Small Industries Development Corporation.
9. The Tamil Nadu Agro Industries Corporation, Limited (partly sponsored by the State Government).
10. Cinchona Department.
11. State Transport Department.
12. Dairy and Milk Project.
13. Khadi and Village Industries Board.
14. State Housing Board.
15. State Electricity Board.
16. Fertiliser Corporation.
17. Water and Drainage Board.



1972 மார்ச் 22] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

18. The Tamil Nadu Slum Clearance Board.
19. Tea Plantation Scheme in the Nilgiris District.
20. The Rubber Plantation Scheme in Kanyakumari District.
21. Pallava Road Transport Corporation.
22. Pandia Road Transport Corporation.
23. Chola Road Transport Corporation.
24. Sera Road Transport Corporation.

In addition, there is the Tourism Corporation, etc.

பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தினால், அவைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைச் சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் கண்காணிக்க வாய்ப்பு இருக்கும். இப்போது அந்த வாய்ப்பு இல்லை. இந்த கார்ப்பரேஷன்கள் என்னென்ன செய்கின்றன என்ற விபரமும் நமக்கு தெரியவில்லை. மற்ற ராஜ்யங்களில் இந்தக் கமிட்டியை அமைத்து, அதன்மூலம் கண்காணித்து வருகிறார்கள். இந்த கார்ப்பரேஷன்கள் என்னென்ன செய்கின்றன என்பதைத் தெரிந்துகொள்வதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு அவகாசமும், உரிமையும் இருக்கின்ற காரணத்தினால், அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், இந்தத் துறையிலே கமிட்டி ஆபீஸர்களையும் நியமிக்க வேண்டுமென்று என் கருத்தினையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வேறு ராஜ்யங்களிலே கமிட்டி ஆபீஸர்களைத் தாராளமாகப் போட்டிருக்கிறார்கள். வடக்கு மாநிலங்களுக்குச் சென்றிருந்தபோது, அங்குள்ளவர்கள் இந்த விபரங்களைத் தந்தார்கள். ஆகையால் அதுபற்றியும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர் அவர்கள் லோக் சபையில் இருப்பதுபோன்று "கன்சல்டேட்டிவ் கமிட்டி" ஒன்றை அமைப்பது பற்றி ஆலோசனை செய்வதாகச் சொன்னார்கள். அது சம்பந்தமாக இதுவரையிலும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாதிரியான கன்சல்டேட்டிவ் கமிட்டி ஒன்றை அமைக்கவேண்டும். அதைப்பற்றியும் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 22

பொதுவாக இந்தத் துறையிலே இருக்கின்ற ஊழியர்களைப்பற்றி யெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் பல பிரச்சினைகளைச் சொன்னார்கள். பல வருஷமாக வேலையிலிருப்பவர்கள்கூட நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் என்றும் அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கவேண்டுமென்றும் கூறினார்கள். அவர்கள் சில குறிப்பிட்ட காலங்களிலே வேலை செய்கிறார்கள் என்பதற்காக நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். இந்த விஷயத்திலே டாக்டர் ஹாண்டே அவர்களின் கருத்தை நான் ஆதரிக்கிறேன்.

அதைப்போன்று இந்த வாட்ச் அண்டு வார்டுகளுக்கு பழைய அளவிலேயே படிகள், துணிகள் மற்றும் சில அலவன்ஸ்கள் கொடுக் கப்படுகின்றன. தற்கால நிலைமைகளுக்கு ஏற்றவகையில் அவர் களுக்கு அளிக்கப்படும் படிகள், மற்றவைகள் எல்லாம் அதிகமாகக் கொடுத்து, வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். இந்தத் துறையைப் பொறுத்த மட்டில், இது ஒரு தனித் துறையாக இருக்கிறது. செக்ரெட்டேரி யேட்டில் உள்ள மற்றத் துறைகள் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. அங்கு எல்லோரும் சேர்ந்து ஒரே துறையாக இருப்பதால் அவர் களுக்கு புரமோஷன் ஆப்பர்சூனிட்டி அதிகமாக இருக்கிறது. ஆனால் இந்தத் துறையிலே இருக்கின்றவர்களுக்கு புரமோஷன் ஆப்பர் சூனிட்டி குறைவாக இருக்கிறது. இவர்களுக்கும் அதிக புரமோஷன் கிடைக்க வகைசெய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே ஜூனியர் அசிஸ்டண்டாக ஒருவர் தேர்ந் தெடுக்கப்படவேண்டுமானால், அவர் ஒரு கிராஜுவேட்டாக இருக்க வேண்டும். இந்த முறை 1954-ல் இருந்தே இருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படி கிராஜுவேட்டாக வரக்கூடியவர்களுக்கு உத்தியோக உயர்வும் போதுமான அளவிற்கு இல்லை. மற்ற துறை களில் இருக்கக்கூடியவர்களுக்கு வேறு ஒரு விதி வைத்திருக்கிறார்கள். வெளியிலிருந்து நீதித் துறை அதிகாரிகளையும் வழக்கறிஞர்களையும் இத்துறையில் உதவிச் செயலாளராக நியமிக்கக் கூடிய முறை இன்னும் இருக்கிறது. இதனால் இங்குஉள்ளவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் இல்லாமல் போய்விடுகிறது என்ற கருத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1972 மார்ச் 22] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இதுமாதிரியான குறைகள் எல்லாம் இன்னும் நீடிக்காமல் அவர் களுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். அதேமாதிரி இன்னொன்றையும் எடுத்துக் கூறினார்கள். வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மறுமுறையும் உத்தியோகம் கொடுக்கப்படுகிற காரணத்தினால் புதிதாக வரக்கூடியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதில் கஷ்டம் இருக்கிறது. ஆகையால் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் நியமனம் செய்யக்கூடாது என்ற கருத்தினை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்தபடியாக, இப்போது பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வுக்கு 25 வயதிற்கு மேல் போகக்கூடாது அப்படி செய்வதற்கு என்கிற விதி முறை இருக்கிறது. கடந்த நான்கைந்து ஆண்டுகளாகவே வேலை யில்லாத் திண்டாட்டம் இருந்து வருகிறது. இப்போதிருக்கிற நிலைமையில் அது வளர்ந்தும் வளர்கிறது. 25 வயதிற்குள் சர்வீசுக்கு வந்துவிடவேண்டும் என்கிறபோது பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இவற்றை எல்லாம் கருதி 25 வயது என்று இருப்பதை 30 வயது என்ற அளவிலாவது உயர்த்தலாமா என்பதை அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்து பார்த்து 30 வயதாக உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் மேல்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள், எம்.எல்.ஏ.க்கள் சென்றால் மதிப்பதில்லை என்கிற கருத்தினை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முன்பு என்னவோ நடந்தது என்பதற்காக இன்னும் பழைய ஏற்பாட்டைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற கருத்து நியாயம் அல்ல. எம்.எல்.ஏ.க்கள் அதிகாரிகளை அணுகுகிற போது அவர்கள் வந்த பிரச்சினை என்ன என்பதை உடனடியாகக் கவனித்து அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாட்டினை அரசாங்கம் செய்யவேண்டும்.

இன்றைக்கு மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பெரிதும் மதிக்கிறார்கள் என்றால் மிகையாகாது: சாமான்ய மக்கள் எல்லாம் தங்கள் பிரச்சினைகளை உறுப்பினர்களிடம் வந்து சொல்லும்போது உறுப்பினர்கள் அவர்களுக்காகத்தான் அதிகாரிகளை அணுகவேண்டி யிருக்கிறது என்பதை உணர்ந்து, மேல்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளும் கட்சிக்கண்ணோட்டத்துடன் செயல்படாது, சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் மதிக்கும் மனோபாவம் உடையவர்களாக ஆகவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 22

அடுத்து, மாவட்ட ரீதியாக நிகழ்ச்சிகள் ஏற்படும்போது அந்த அந்தப் பகுதி உறுப்பினர்கள் விரும்பினால் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் ஆட்சேபணையில்லை. கலந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு அவ்வாறு கலந்துகொள்ளத் தக்க வாய்ப்பும் சந்தர்ப்பமும் அளிக்கப்படவேண்டும். அவர்களுக்கே ஏதாவது சங்கடமோ, ஆட்சேபணையோ இருந்தால் சேர்த்துக்கொள்ளவேண்டாம்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் நாகர்கோயிலுக்கு வந்தார்கள். எங்களுக்கு எல்லாம் அழைப்புத் தரப்பட்டது. நாங்களும் சென்று பார்த்தோம். எங்களுடைய பிரச்சினைகளை எல்லாம் அனுதாபப் பூர்வமாகக் கேட்டார்கள். அதற்காக திரு. ஜேம்ஸ் அவர்கள்கூட தம்முடைய நன்றியைக் கூறினார்கள். கட்சி விஷயம் அல்ல—பொது விஷயம் தான்—அவர்கள் நடந்து கொண்ட முறைக்கு நானும் அந்த வட்டார மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல எல்லா அமைச்சர்களும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் சொல்வேன்.

இங்கே அமைச்சர்களைச் சென்று பார்க்கப் போனால் கட்சி ஆட்கள் எப்போதும் அவர்களைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். எனக்கு அந்த அனுபவம் அதிகமில்லை. ஒரே ஒரு முறைதான் கல்வி அமைச்சர் அவர்களை ஒரு பள்ளிக்கூட விஷயமாகப் பார்க்கச் சென்றேன். சந்தைக்கடை போல கட்சிக்காரர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டே இருந்தார்கள். அமைச்சர் அவர்களுக்குக்கூடச் சங்கடமாகப்போய்விட்டது. வெறும் நமஸ்காரம் போட்டுவிட்டு இதுபோல போய்வா என்று சொல்வது நல்லது அல்ல—சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சரைக் காணப்போகிற போது தனிமையில் இரண்டொரு வினாடியாவது வந்த விஷயத்தைப் பற்றிப் பேசச் சந்தர்ப்பம் இருக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அமைச்சர்கள் சுற்றுப்பயணம் போகவேண்டியதுதான். மக்களுடைய குறைகளை நேரடியாகத் தெரிந்துகொள்ள அது வாய்ப்பாக இருக்கும். அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒவ்வொரு மாதமும் செக்ரட்டேரியட்டில் ஆபீஸ் நேரங்களில் இத்தனை நாட்களாவது இருந்தாகவேண்டும் என்கிற ஒரு வரையறையை ஏற்படுத்திக் கொண்டாகவேண்டும். இனியும் நீண்டநேரம் நான் பேசவிரும்பவில்லை. குறிப்பாக நான் குறிப்பிட்ட சில விஷயங்களையாவது அமைச்சர்கள் கவனிக்கவேண்டுமென்று கூறி அமைகிறேன். வணக்கம்.



1972 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது மின்சாரத்துறை அமைச்சர் அவர்களைப்பற்றி ஒரு விவாதம் வந்தது. ஒரு விஷயம் நீதிமன்றத்தில் இருக்கும்போது அதுபற்றிப் பொதுவாக ஒன்றிரண்டு கருத்தை மேலோட்டமாகச் சொல்லலாமேதவிர அதற்குள்போய் ஆராய்ச்சி செய்வது, தம் அபிப்பிராயங்களைச் சொல்வது நமது சட்டமன்ற விதிக்கு முரணானது. நமது சட்டமன்ற விதி 67-இன்படி

A member, while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending.

என்று இருக்கிறது.

நீதிமன்றத்தில் உள்ள விஷயத்தைப்பற்றி இங்கே குறிப்பிட முடியாது. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஹைகோர்ட்டின் தீர்ப்பைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அப்பீலில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அளவில் அந்த விவாதம் முடிந்துவிடும் என்கிற நினைப்பில் நான் கொஞ்சம் தாராளமாக இருந்துவிட்டேன். ஆனால் பின்னர் தொழில் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதும், அதற்கு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பதில் அளித்ததும் நம்முடைய சட்டமன்ற விதிக்கு முரணாக—அப்பீலில் உள்ள ஒரு வழக்கைப் பற்றியதாகப் போய் இருக்கிறது. ஆகவே அந்த விஷயம் பூராவையும் நான் குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: முழுமையாக நீக்கவேண்டிய தேவையில்லை. எந்தப் பகுதியில் இருந்து ஆட்சேபிக்கத்தக்க விஷயங்கள் வருகின்றனவோ அவற்றை நீக்கினால் போதும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர் குறிப்பிட்டது, அதற்கு நான் பதில் அளித்தது இருக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இரண்டுபேர்களுமே இந்த ஒரு கருத்தில் ஒத்துப்போவதனால் நீங்கள் குறிப்பிட்டது, முதல்வர் அவர்கள் பதில் அளித்தது நீங்கலாக மற்ற இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விஷயங்களைப் பேரவையின் நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டு, இது வரையில் பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 22

தெரிவித்துள்ள பல்வேறு மானியங்கள், குறிப்பாக, தேர்தல்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், சட்டமன்றம் ஆகியவைகளைப்பற்றி வெகு விரிவாக இங்கு பேசப்பட்டு இருக்கிறது. பேசிய எல்லா உறுப்பினர்களுமே மேலும் தங்களுடைய பணியினைச் செம்மையாக ஆற்றுவதற்கு வசதி வாய்ப்புகள் அரசின் சார்பில் செய்துதரப்படவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மன்றம் மக்களுக்காகப் பணியாற்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்று, சட்டங்களை உருவாக்கவும், உருவாக்கப்பட்ட சட்டங்களின் வழிநின்று முற்போக்குப் பணிகளைப் புரியவும், மக்களுக்கு அருந் தொண்டாற்றவும் சபதம் ஏற்றுக்கொண்டு வந்து வீற்றிருக்கிற அவையாகும்.

இந்த அவை முன்பெல்லாம் கூடிய நாட்களைவிட இப்போது அதிக நாட்கள் கூடி விவாதங்களை நிகழ்த்துகின்றது என்பதை அனைவரும் அறிவார்கள். ஏற்கனவே முப்பது நாட்கள், நாற்பது அல்லது நாற்பத்தெட்டு நாட்கள் இந்த அவை கூடி விவாதங்கள் நடத்தியது என்பதற்கு மாறாக 1970-இல் 61 நாட்களும், 71-இல் 63 நாட்களும் நாம் இந்த மன்றத்தில் கூடி விவாதங்களில் ஈடுபட்டு இருக்கிறோம். இது ஜனநாயகத்திலே குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியைக் காட்டுகின்ற அறிகுறி என்று சொன்னால் அது மிகையாகாது.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குள்ள ஆசையை அல்லது அவர்களுடைய ஆர்வத்தை நான் குறைத்துக் கணக்கிடவில்லை.

சென்றமுறை விவாதத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பல்வேறு குறைபாடுகள் நீக்கப்பட்டு, முறையீடுகள் ஏற்கப் பட்டிருக்கின்றன. தாங்கள் பெறுகிற 250 ரூபாய் போதாது என்று சொல்லப்பட்டதை நம்முடைய சட்டப் பேரவையினுடைய முன்னவர் டாக்டர் நாவலர் அவர்கள் ஏற்று, நானும் நிதியமைச்சர் என்கிற முறையில் ஒத்துக்கொண்டு, 250 என்பது 350 ரூபாயாக ஆக்கப் பட்டிருக்கிறது. பேருந்துகளிலே பயணம் செய்வதற்குச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்பதும் சென்ற ஆண்டு எடுத்துச் சொல்லப் பட்டு, அது ஏற்கப்பட்டு, இப்போது பல்வேறு போக்குவரத்துகளில் —பல்லவா போக்குவரத்து, பாண்டியா போக்குவரத்து என்று பிரிக்கப்பட்டாலும்—அவைகளில் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் களுக்குச் சலுகைகள் அளிக்கத்தக்க வகையில் வழிவகைகள் செய்யப் பட்டிருக்கின்றன.



1972 மார்ச் 22] [டாக்டர் மு. கருணாநிதி]

மேலும் பல வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று காலையில் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் அடி எடுத்துக்கொடுத்தார்கள். தொடர்ந்து பேசியவர்கள் எல்லாம் அந்த வழியிலிருந்து கொஞ்சமும் திசையைத் திருப்பாமல்—டாக்டர் ஹாண்டேயைத்தவிர—மற்ற அத்தனைபேரும் திரு. வெங்கடசாமி வழியிலேயே சென்று சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதும் கடிதங் களுக்கு உடனடியாக அமைச்சர்களிடமிருந்து பதில் வரவேண்டு மென்று திரு. வெங்கடசாமி அவர்களும், முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கே. எ. வகாப் அவர்களும் எடுத்துக் கூறினார்கள். கம்யூனிஸ்ட் கட்சிச் சார்பில் பேசிய திரு. மணலி அவர்கள் சொன்னபோதும் மற்ற உறுப்பினர்கள் பேசும்போதும், "அமைச்சர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் வருகிறது; ஆனால் இறுதியாக என்ன முடிவு எடுக்கப்பட்டது" என்ற விவரங்கள் அடங்கிய கடிதங்கள் வந்துசேரவில்லை என்றார்கள். "இறுதி முடிவு எடுக்கப்படாத காரணத்தால்தான்" அந்தக் கடிதங்கள் வரவில்லையே தவிர (சிரிப்பு) கடிதம் எழுதக் கூடாது என்பது அல்ல. இறுதி முடிவுக்கு முன் கடிதம் எழுதினால், "கடிதம் எழுதிக் கொண்டிருக் கிறார்கள், இறுதி முடிவு எப்போது?" என்று கேட்கத் தோன்றும், எனினும், உறுப்பினர்களுடைய ஆர்வத்தை அவர்களுடைய உரையின் வாயிலாக அதிகாரிகள் உணர்ந்து, இறுதி முடிவுக்குக் காலந்தாழ்த்தாமல் நடந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். அப்படி நடந்துகொள்வதற்கு ஏற்ற வழிவகைகளை அரசின் சார்பிலும் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

நிர்வாகம் சம்பந்தமாக திரு. முத்தையா அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் அளவிலே ஒரு கோரிக்கை ஏற்கப்படாமல், அதை அமைச்சர்களிடத்தில் கொடுத் ததில் உடனடியாகத் தீர்வு கிடைக்காமல், மீண்டும் பஞ்சாயத்து யூனியன் அளவுக்கு வந்து, மறுபடியும் ஆறு மாதம் சுற்றித் திரிந்து அதே பதில்தான் வருகிறது என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்க வேண்டுமென்பதற்காக, நிர்வாக அமைப்பு முறையைச் செழுமையான முறையாக, விரைவாகச் செயல்படக் கூடிய இயந்திரமாக மாற்றியமைப்பதற்கு இன்றைக்கு "நிர்வாகச் சீர்திருத்தக் குழு" அமைக்கப்பட்டு, அதனுடைய பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. அதனுடைய பரிந்துரைகள் விரைவில்

அரசுக்குக் கிடைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வெகு விரைவாகக் காரியங்கள் ஆற்ற வேண்டுமென்று அரசும், அமைச்சர்களும் அதிகாரிகளிடத்திலே தொடர்ந்து வேகத்தைத் தந்து, சட்டமன்ற உறுப்பினர்கள், வேறு பலதரப்பட்ட மக்கள் வாயிலாகவும், பொது மக்கள் வாயிலாகவும் தரப்படுகின்ற குறைபாடுகளும், முறையீடுகளும் உடனடியாகக் கவனிக்கப்பட ஏதுவான வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. கோவை செழியன் அவர்கள் பேசுகையில், "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரிகள் உரிய மரியாதை அளிப்பது இல்லை" என்று குறைப்பட்டுக் கொண்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை அளிக்க வேண்டுமென்பதைக்குறித்து, 24—5—1969 தேதியிட்ட ஒரு குறிப்பு எல்லா அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. "சட்டமன்ற உறுப்பினர்கள் நீண்ட நேரம் வெளியிலே காக்க வைக்கப்படுகிறார்கள்" என்ற குறையை திரு. கோவை செழியன் எடுத்துக்காட்டினார். வேறு சிலரோடு பிரச்சினைகளை அதிகாரிகள் பேசிக்கொண்டிருக்கும்போது வெளியிலே இருப்பவர்கள் காத்திருக்க வேண்டுமென்பதில் எந்தவிதமான கருத்து மாறுபாடும் இல்லை. ஆனால், எந்த வேலையும் இல்லாமல் இருக்கிற அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களைக் காத்திட வைப்பது முறை அல்ல. இந்தத் தாக்கீதின்படி நடந்துகொள்ளவில்லை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மரியாதை கொடுக்கவில்லை என்பன போன்ற விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வெளிப்படையாகச் சொல்வது சரியில்லை என்று கருதினாலும், அந்த விஷயங்களை எனக்கோ அல்லது தலைமைச் செயலாளருக்கோ எழுதி அனுப்பினால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்து வண்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகைகள் அளித்திருப்பதைப்போல புகைவண்டியிலும் சலுகைகள் தரவேண்டுமென்று உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தச் சலுகைகளை அளிக்கக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு அல்ல, மத்திய அரசுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது.

<u>திருமதி த. ந அனந்தநாயகி</u>: தலைவர் அவர்களே, கேரள மாநில அரசால் இது வழங்கப்பட்டிருக்கிறபோது, தமிழக அரசு வழங்க ஏன் தயங்க வேண்டும்?





<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: தலைவர் அவர்களே, கேரள அரசில் தருகிறார்கள் என்ற விவரம் இல்லை. அப்படித் தருவதாக இருந்தால், அந்தச் செலவை நானே ஏற்றுக்கொள்வதாக மத்திய அரசுக்கு எழுதிக் கொடுத்தால் தருவார்கள். எனக்கு இருக்கிற சங்கடம் என்னவென்றால், "நம்மைத் தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பினால் நமக்காகப்—பொது மக்கள்—பேசாமல், அவர்கள் அவர்களுக்காகவே பேசிக்கொண்டிருக்கிறார்களே என்று மக்கள் சந்தேகப்பட்டுவிடக் கூடாதே என்ற பயம் எனக்கு ஏற்படுகிறது. அதைத்தான் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் அவர்களும் குறிப்பிட்டார்கள். அதற்காக மிகுந்த கஷ்டங்களையும், இன்னல்களையும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனுபவிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள் படிப்படியாக நிறைவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். "சட்டமன்ற உறுப்பினர்கள் காரசாரமாகப் பேசிக்கொள்கிறார்கள், காரம் குறைவது நல்லது—காரம் குறைந்தால் போதும், சாரம் குறைய வேண்டாம் (சிரிப்பு). எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளக்கூடிய வகையில் பெரிய சுற்றுலா ஒன்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள். அதனால் ஒற்றுமை ஏற்படும், உறுப்பினர்கள் இடையே ஒற்றுமை வளரும் என்று கூறினார்கள். அதில் ஒற்றுமை ஏற்படுமா என்பது எனக்குச் சந்தேகம். இப்போதுகூடச் சில குழுக்கள் பல இடங்களுக்குச் செல்கின்றன. அந்தக் குழுவில் செல்லும் உறுப்பினர்கள் போகும்போது ஒன்றாகப் போகிறவர்கள் திரும்பி வரும்போது எல்லோரும் சேர்ந்து வருவதில்லை. அந்த மாதிரியான சிறிய குழுவிலேயே ஒற்றுமையைக் காண முடியவில்லை. போகும்போது ஒற்றுமையுடன் போகிறவர்கள் வரும்போது பார்த்தால், மணவறையில் உட்கார்ந்திருக்கும் மணமகனும், மணமகளும் போல—ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல்—திரும்பி வருகிறார்கள். கும்பலாகப் போனவர்கள் திரும்பி வரும்போது பிரிந்து பிரிந்து தனித்தனியாக வருவதை நான் பார்த்திருக்கிறேன். இவர்கள் அனைவரும் சேர்ந்து சுற்றுலா வந்தால் ஒற்றுமை ஏற்படுமா என்பது சந்தேகம்தான். எனக்குத் தெரிந்தவரையில் இந்தக் குழுக்கள் சென்ற இடங்களில் ஒருவருக்கொருவர் பேசுவது இல்லையென்கிற அளவுக்குக்கூட ஊடலிலே ஈடுபட்டார்கள் என்று தெரிகிறது.

அடுத்தபடியாக, தேர்தல் முறையைப்பற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். தேர்தல் முறையிலே மாற்றங்களைச் செய்வது என்பது மாநில அரசு செய்யக்கூடியது அல்ல. மாநில அரசு பரிந்துரைகளைத்தான் செய்ய முடியும். மாநில அரசு அதற்கான முயற்சிகளைச் செய்து முனைந்து செயல்படுத்தவும் முடியாது. இன்றைக்குத் தேர்தல் கமிஷன் அப்படிப்பட்ட முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. வாக்காளர்களையெல்லாம் புகைப்படம் எடுத்து, அதைப் பயன்படுத்துவதன்மூலம் தேர்தலில் நடைபெறும் ஒழுங்கீனங்களைத் தடுக்க முடியும் என்று கூறினார்கள். ஆனால் அது நடைமுறைக்கு ஒத்துவருமா என்பதைச் சிந்திக்க வேண்டும். புகைப்படங்கள்கூட மாறிவிடும். திடீரென்று விபத்துக்குள்ளாக நேரிடும்போது முகம்கூட மாறிவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. இவரே வந்து ஓட்டுக் கேட்கின்ற நேரத்தில் இன்னார்தான் என்று ஏப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும் ? மேலும் புகைப்படம் எடுக்கும்போது சிலர் தாடி வைத்துக்கொண்டிருக்கக்கூடும். பின்னர் அதை எடுத்துவிடலாம். இன்னும் சிலர் புகைப்படம் எடுக்கும்போது தாடி இல்லாமல் இருந்து, பின்னர் தாடி வைத்துக் கொள்ள நேரிடலாம். இப்படிப் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும் போது புகைப்படம் ஒரு சரியான அத்தாட்சி என்பதை ஏற்றுக் கொள்வது சிரமமாக இருக்கும்.

அடுத்தபடியாக கவர்னரைப்பற்றிப் பேசும்போது, கவர்னர் பதவியைப்பற்றிப் பேசும்போது, "முன்பெல்லாம் கவர்னரை எதிர்த்தவர்கள், இன்றையதினம் கவர்னரை வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள்" என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கூறினார்கள். எப்போதுமே நாங்கள் கவர்னரை எதிர்க்கவில்லை. தனிப்பட்ட ஒரு மனிதரைப்பற்றித் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பு காட்டவில்லை. அவரைக் குறைத்துப் பேசவும் இல்லை: " கவர்னர் பதவி தேவையா ? " என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி வந்தது. இன்றைக்கு நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கும்போதுகூட அதை அழித்துவிடவில்லை. " நீங்கள் கவர்னரை வரவேற்கிறீர்கள், ரோஜுலு மாராயி " காலம் மாறிப்போச்சு " என்று பட பாஷையில் பேசினார்கள். " காலம் மாறிப் போச்சு " என்பது எங்களுக்கா அல்லது சொன்னவர்களுக்கா என்பதை நாங்கள் பார்த்துக்கொண்டு வருகிறோம். 1971-ஆம் ஆண்டிற்கும் 1972-ஆம் ஆண்டிற்கும் எப்படிக் காலம் மாறிப்போயிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆக்வே கவர்னர் பதவியைப் பொறுத்த வரையிலும் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலும் ஆளுங்



கட்சியாக இருக்கிற நேரத்திலும் ஏற்கனவே கொண்டிருந்த அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. கவர்னருக்கு ஆடம்பரமான இடங்கள் தேவையில்லை என்ற கருத்தை சோஷலிஸ தத்துவத்தின் அடிப்படையில் முன்னேற்றக் கழகத்தின் சார்பில், முதலமைச்சர் என்ற முறையிலே நான் வெளியிட்டேன். ஆனால் அது ஏற்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றம் நன்றாக அறியும். ஆகவே கவர்னர் பதவியைப் பொறுத்தவரையில் கழகம் கொண்டிருக்கிற கருத்திலே எந்த மாறுபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிண்டி கவர்னர் மாளிகையில் விருந்துகள் நடத்தப்படுவது சம்பிரதாயமாக இருப்பதாகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் சரியாக அறிமுகப்படுத்தப்பட்டு நீண்ட நேரம் விருந்திலே கலந்துகொள்ளுகின்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் குறைபட்டுக்கொண்டார்கள். அந்தக் கருத்தை அப்படியே கவர்னர் மாளிகை நிர்வாகிகளிடத்திலே சொல்லி அவர்கள் நீண்ட நேரம் இருந்திடத் தக்க அளவுக்கும் நிறையப் பதார்த்தங்களைப் பரிமாறத் தக்க அளவுக்கும் ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிநாட்டுக்காரர்களுக்கு கவர்னர் கொடுக்கின்ற விருந்திலே மக்களோடு தொடர்பில்லாத மனிதர்கள்தான் அழைக்கப்படுகிறார்கள் என்றும் சாமானிய மக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டார்கள். வெளிநாட்டுக்காரர்களுக்கு கவர்னர் விருந்து வைக்கின்ற நேரத்தில் குறிப்பிட்ட அளவுக்குச் சிக்கனமாகத்தான் அவையெல்லாம் நடத்தப்படுகின்றன. இன்னும் சொல்லப் போனால் இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற கவர்னர் இதற்கு முன்பு இருந்த கவர்னர் மாளிகைக்கு ஏற்பட்ட செலவைக் குறைத்துச் சிக்கனப்படுத்துவதிலே அக்கறையுள்ளவர்களாக இருக்கிறார்கள். வெளிநாட்டுக்காரர்கள் கலந்துகொள்கின்ற விருந்தில் கலந்துகொள்வதற்குக் குறைந்த அளவில் அழைப்புகள் அனுப்பப்படுகின்றன. அமைச்சர்களுக்குக்கூட அனுப்பப்படுவதில்லை. அமைச்சர்கள் தேவையில்லை என்ற அளவுக்குத்தான் நடத்தப்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், சென்னையிலிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவர்னர் தருகின்ற பொதுவான விருந்திலே அழைக்கப்பட வேண்டுமென்றும் குடியரசு தினம், விடுதலை தினம் ஆகியவற்றில் அவர்கள் தக்க மரியாதையுடன் நடத்தப்பட வேண்டுமென்றும் கூறப்பட்ட கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்;

இன்றைக்கும் மரியாதையுடன்தான் நடத்தப்படுகிறார்கள். மேலும் குறைகள் இருக்குமானால் அதைப்பற்றி கவர்னர் மாளிகை நிர்வாகிகளிடத்திலே தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம்பற்றிப் பேசப்பட்டது. அமைச்சர்கள் காலையிலிருந்து மாலை 4 மணி வரையிலே மக்களைப் பார்க்க வேண்டுமென்கிற வாய்ப்பைப் பெறவேண்டுமென்று சொல்லப்பட்டது. பொதுவாக அமைச்சர்களுடைய சுற்றுப் பயணம் அதிக அளவிலே இல்லை என்பதுதான் நான் கூறுவது ஆகும். அமைச்சர்கள் திங்கள் தோறும் 10, 15 நாட்களுக்கு மேலாக சென்னைக்கு வெளியிலே தங்கி மக்களுடைய பிரச்னைகளை அணுகி வருகிறார்கள். அமைச்சர்கள் வெளியூர் செல்கின்ற நேரத்திலே மக்களைச் சந்திப்பதின்மூலம்—அமைச்சர்களைக் காணுவதற்காக மக்கள் பிரதிநிதிகள் சென்னைக்கு வருவதற்காகச் செலவழித்துக் கொண்டு வருகிறார்களே அது இல்லாத அளவுக்கு அமைச்சர்கள் செல்கின்ற இடங்களிலே—அவர்களைக் காணுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது, இது அமைச்சர்கள் சுற்றுப் பயணத்தால் ஏற்படுகிற பலன் ஆகும்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், அமைச்சர்களைப் பார்க்கச் சென்றால் கட்சிக்காரர்கள் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சந்தைக் கடைபோல் இருக்கிறது, நாங்கள் பார்க்க முடியவில்லை என்று சொன்னார்கள். பொறுப்புள்ள காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள், அவர்களும் மனிதர்கள்தான், மக்களுக்காகப் பரிந்து பேச வருகிறார்கள் என்று புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். நான் எத்தனையோ முறைகள் கூறியிருக்கிறேன். நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்திலும் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்திலும் அங்கு போயிருந்த நேரத்தில் எந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ. யாவது என்னைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியதும் துண்டுத் தாள் கொடுத்து அனுப்பியதும் கிடையாது, நீ வருகிறாயாமே கன்னியாகுமரிக்கு, என் வீட்டுக்கு வந்துவிட்டுப் போ, என்னை வந்து பார்த்துவிட்டுப் போ என்று தாக்கீது அனுப்பியது கிடையாது. நாங்கள் தங்கியிருக்கின்ற இடங்களிலே வருவதும் கிடையாது. கட்சிக்காரர்கள் வருத்தப்பட்டுக் கொண்டாலும் பரவாயில்லை, நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், கட்சிக்காரர்கள் கூடியிருந்தாலும் தோழமைக் கட்சிக்காரர்கள், மாற்றுக் கட்சிக்காரர்கள் இவர்களைப் பார்ப்பதற்கு முதல் இடம் என்றும், கட்சிக்காரர்களைப் பார்ப்பதற்கு அடுத்த இடம் என்றும்தான் மேற்கொண்டிருக்கிறோம். இதனால் கட்சிக்காரர்கள்கூட வருத்தப்பட்டுக்கொண்டு போயிருக்கிறார்கள். நாங்கள் வந்து காத்துக்கொண்டிருக்கிறோம், தோழமைக் கட்சிக்





காரர்களிடத்திலும் மாற்றுக்கட்சிக் காரர்களிடத்திலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே கட்சிக்காரர்களைப் பார்ப்பதும் பாவம் அல்ல. கட்சிக்காரர்கள் எங்களைச் சரியாகப் பார்ப்பதில்லை என்று வருத்தப்பட்டிருக்கிறார்கள், ஆனால் பொன்னப்ப நாடார் அவர்கள் கட்சிக்காரர்கள்தான் கூடியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள் போனால் பார்ப்பது இல்லை; கட்சிக்காரர்கள் போனால் பார்க்கிறார்கள் என்று பொன்னப்ப நாடார் அவர்கள் எங்களுக்காக வாதாடி கட்சிக்காரர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (சிரிப்பு.)

எல்லோருக்கும் பிரச்னை இருக்கிறது. எங்களுக்குக் கைகள் வலிக்கின்ற அளவுக்கு இந்தக் கையை நீட்டுகிறோம் ஒரு மனு வருகிறது, பிறகு இந்தக் கையை நீட்டுகிறோம் இன்னொரு மனு வருகிறது. இரண்டையும் முடித்து விட்டோம் என்று பெருமூச்சு விட்டால் இங்கேயிருந்து ஒரு மனு வருகிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் ஏதோ அந்த மனுவிலே கையெழுத்திடப்பட்டதும் உடனே உத்தரவு போடப்பட்டு, தாக்கீது அனுப்பப்பட்டு, காரியம் நிறைவேறி விடுகிறது என்று பொருள் அல்ல. நீங்கள் தருகிற தனித்தாள் தனித்தாளாக இருந்தாலும், பத்து பதினைந்து நாட்களில் ஐம்பது தாள்களாக உருவெடுத்து விடுகிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. பொதுவாக ஒரு மனு அளிக்கப்பட்டால் அமைச்சரின் கையெழுத்தேறி இலாகாவுக்குச் சென்றதும் இலாகாவிலே பைலாக்கப் படுகிறது. அந்த மனு ஒரு பைலாக எங்களுக்கு வருகிறது. அந்த பைலை நாங்கள் பார்க்க முடியாத அளவுக்கு மற்ற மனுக்கள் வந்து விடுகின்றன. இந்த அரசு மக்களோடு அதிகத் தொடர்பு கொண்டிருக்கிற அரசு என்ற அடிப்படையிலே அதிகமான மக்களைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், அதிகமான மனுக்களைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே அதிகமான பைல்களைப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆபீசிலே உட்கார்ந்து பைல் பார்க்கக்கூடாதா என்றார்கள். அது அந்தக் காலம். ஓய்வாக இருந்தார்கள் அமைச்சர்கள். ஜோதி அம்மையார் அவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்களுடைய கட்சி ஆட்சியிலே இருந்தபோதுகூட மந்திரிகள் ஓய்வாக இருந்தது கிடையாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆகவே அவர்கள் ஆபீசிலே உட்கார்ந்து பைலை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று சொல்லவில்லை. வெளியிலே நான்கு பேர்கள் நிற்கிறார்கள் என்றால் நான்கு சீட்டுகள் வந்திருக்கும். ஆகவே, பைலிலே என்ன இருக்கிறது என்று பார்த்து விவாதிப்பதற்கு நேரம் இல்லாமல் போய்விடும். ஆகவே தான் வீட்டிலே பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அலுவலகத்திலே உட்கார்ந்து பைல்களைப் பார்ப்பது என்பது இயலாததாகி விடுகிறது. அமைச்சர்கள் கூடிப் பேசியிருக்கிறோம். அமைச்சர்கள் சுற்றுப்பயணத்தைக் குறைத்துக்கொண்டு அதிக அளவுக்கு சென்னையிலே தங்கி கவனிக்க வேண்டுமென்று கருதியிருக்கிறோம்.

சுற்றுப் பயணத்தினாலே மக்களுடைய பணம் வீணாகிறது என்று பேசினார்கள். நான் கணக்கு எடுத்துப் பார்த்தேன். 1966-ஆம் ஆண்டிலே உள்நாட்டுப் பயணச் செலவு என்பதில்—அப்பொழுது 8 அமைச்சர்கள் இருந்தார்கள்—உள்நாட்டுப் பயணச் செலவு மாத்திரம் 79,606 ரூபாய் 1966-ஆம் ஆண்டிலே 8 பேர்களுக்கு ஆகியிருக்கிறது. 1971-ஆம் ஆண்டிலே 60,139 ரூபாய் உள்நாட்டுப் பயணச் செலவு 13 அமைச்சர்களுக்கு ஆகியிருக்கிறது. ஆகவே ஒரு அமைச்சருக்கு சராசரி 4,625 ரூபாய் அல்லது 5 ஆயிரம் ரூபாய் 1971-ஆம் ஆண்டில் சராசரி பயணப்படி ஆகியிருக்கிறது. ஆனால் 1966-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 9,900 ரூபாய் என்ற அளவுக்கு பயணப்படி ஆகியிருக்கிறது. நான் பயணப்படி விவரங்களை எடுத்துச் சொல்லி அதைவிட இது குறைவு அல்லது அதிகம் என்று எல்லாம் வாதாட வரவில்லை.

இன்றைக்கு அமைச்சர்கள் வெளியூர்களுக்குச் செல்வதால் அங்கே சட்டமன்ற உறுப்பினர்களையும், ஆங்காங்கு வட்டங்களில், மாவட்டங்களில் இருக்கும் அதிகாரிகளையும் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெற முடிகிறது. ஆங்காங்கு, அந்தந்த இடங்களில் சொல்லப்படும் குறைபாடுகளை அந்த இடத்திலேயே களைவதற்கும் வாய்ப்பும் வசதியும் இன்றைக்கிருக்கிறது.

திருமணத்திற்கு எல்லா மந்திரிகளும் செல்கிறார்களே, துரை முருகன் திருமணத்திற்கு எல்லா மந்திரிகளும் சென்றார்களே, ஒரு மந்திரிகூட இங்கேயில்லையே என்றெல்லாம் சொன்னார்கள். இரண்டு, மூன்று மந்திரிகளை இங்கே விட்டுவிட்டுத்தான் சென்றோம். ஏனென்றால் சென்னையிலே தங்கி ஏதாவது அவசரப் பிரச்னைகள் வந்தால் அதைக் கவனிப்பதற்கென்று இரண்டொருவர் சென்னையில்





இருந்தார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதால், எல்லா மந்திரிகளும் செல்ல வேண்டுமா என்று கேட்பதால் எங்களுடைய வேலைப் பளுவினைக் குறைக்கிறார்களே தவிர வேறல்ல. இருந்தாலும் நாங்கள் மந்திரிகளாக இன்றுதான் ஆகியிருக்கிறோம். ஆனால் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கும் நாங்களெல்லாம் கடந்த பல ஆண்டுகாலமாக முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு குடும்ப உணர்வாக, அண்ணன் தம்பிகளாகப் பழகி, ஊடாடி, ஒருவருடைய இன்ப துன்பங்களிலே பங்கு பெற்று, ஒருவருடைய சுகதுக்கங்களிலே மற்றவர்களுக்கு பங்கு உண்டு என்ற அளவிற்கு நாங்கள் பல ஆண்டுக்காலமாக ஒரு குடும்ப பாசத்தோடு கழகத்தை வளர்த்துவிட்டோம். அப்படி இந்தக் கழகத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்து வைத்தார்கள். ஆகவேதான் இன்றைக்கு எங்கள் கழகத்தவர் இல்லங்களிலே எந்த விழா நடந்தாலும், எந்த நிகழ்ச்சியாகயிருந்தாலும், அந்த நேரத்தில் நாம் அமைச்சராக இருக்கிறோமே அங்கே போக வேண்டுமா என்ற அந்தஸ்தெல்லாம் பார்க்கும் உணர்வு எங்களுக்கு ஏற்படுவதில்லை. சாதாரணத் தொண்டராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்பிலே இருப்பவர்கள் அவர்களின் இல்லங்களின் விழாக்களுக்குச் செல்வது தவறு அல்ல.

அப்படிச் செல்லும் நேரத்தில் வேண்டுமானால் அரசாங்க படி வாங்குகிறார்களா என்று பார்த்துக் கொள்ளுங்கள். அப்படி அரசாங்கப் படி வாங்கலாகாது என்றுதான் நாங்கள் விதித்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் 60,000 ரூபாய் அளவில்தான் உள்நாட்டுப் பயணப்படி ஆகியிருக்கிறது என்றால், 4 நிகழ்ச்சிகளுக்கு நாங்கள் செல்கிறோம் என்று சொன்னால் தஞ்சாவூர் என்று எடுத்துக் கொண்டால், அல்லது திருச்சி என்று எடுத்துக் கொண்டால் அல்லது மதுரை என்று எடுத்துக் கொண்டால் 4 நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறோம் என்றால், 4 நிகழ்ச்சிகள் காலையிலிருந்து மாலைவரையில் அரசாங்க நிகழ்ச்சிகளாயிருந்து, அத்துடன் நாங்கள் புகைவண்டி ஏறி சென்னைக்குத் திரும்பினால் அது அரசாங்கப் படி பெறுவதற்கு உரியது. ஆனால் இந்த நான்கு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டுவிட்டு ஐந்தாவதாக ஒரு கழகப் பொதுக்கூட்டத்தில் நாங்கள் கலந்துகொள்ளும் பொழுது கழகப் பொதுக்கூட்டம் நடத்தியவர்கள் அந்த அமைச்சருக்கு வழிச் செலவைத் தர வேண்டும் என்று அப்படி நாங்கள் பெறுகிறோம். அம்மையார் அவர்கள் கூறினார்கள், காமராஜர் அப்படித்தான் என்று சொல்கிறார்கள். அங்கு காமராஜர் மட்டும்

அப்படிச் செய்தார், இங்கே அத்தனை அமைச்சர்களும் அந்த முறையைக் கடைப்பிடிக்கிறோம். ஆகவே அப்படிச் செல்வதால் அதிகத் தொகை ஆகாத நிலைமையை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம்.

விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனி இடம் தரப்பட வேண்டுமென்று இங்கே கூறப்பட்டது. கூடுமான வரையிலும் அவ்வாறுதான் சட்டமன்ற உறுப்பினர்கள் மரியாதையாக நடத்தப்பட வேண்டுமென்று எல்லா அதிகாரிகளுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற விவாதத்திலே மயிலாப்பூர் தொகுதியில் அவர்கள் அழைக்கப்படவில்லை என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இன்றைக்கு அவர்களே நன்றி கூறும் அளவிற்கு உடனடியாக இந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட்டதை அனைவரும் அறிவார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மதுரையிலே நடைபெற்ற பாண்டியன் போக்குவரத்துக் கழகத் துவக்க விழாவில் அழைக்கப்படவில்லை என்று அவர் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்தாலும் அவர் வர மாட்டார் என்று கருதியோ என்னவோ அனந்தநாயகி அம்மையார் அவர்களே சேர்த்துப் பேசினார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஏதோ மதுரைக்கு மட்டும் உள்ள நிகழ்ச்சி அல்ல, அங்கிருந்து பல்வேறு சாலைகளை இணைக்கிற போக்குவரத்திற்காக நடைபெறும் விழா, ஆகவே மதுரையிலே உள்ள வேறு எந்த எம்.எல்.ஏ.க்களும் அழைக்கப்படவில்லை, தங்கமணி மட்டும் அல்ல, எந்த எம்.எல்.ஏ.-யும் அழைக்கப்படவில்லை. ஆனால் பேசுவதற்குத்தான் அழைக்கப்படவில்லையே தவிர நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அனைவரும் நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறார்கள். அன்றைக்கு 8, 9 நிகழ்ச்சிகள் எங்களுக்கு இருந்தன. நானும், நாவலர் அவர்களும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டியிருந்தால் மற்றவர்கள் பேசாமல் நாங்கள் மட்டும் கலந்துகொண்டு சென்றோமே தவிர யாரையும் அழைக்கக்கூடாது என்ற எண்ணம் அல்ல.

எந்தப் பள்ளிக்கூட கட்டிட விழா அல்லது குடிசை மாற்று வாரிய விழா அல்லது மருத்துவ மனை அல்லது அடிக்கல் நாட்டு விழா போன்ற பொதுமக்கள் தொடர்புடைய விழா, மக்கள் பிரதிநிதிகள் சம்மந்தமுடைய எந்த விழாவானாலும் அங்கிருக்கும் எம்.எல்.ஏ.க்கள் —எந்தக் கட்சிச் சார்பில் இருந்தாலும்—அழைக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் முடிவு என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



நான் சொன்னேன், அரங்கண்ணல் நடத்திய குடிசை மாற்று திறப்பு விழாவில் சொன்னேன், அம்மையார் அவர்கள் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள், நாங்கள் இப்பொழுது அழைத்திருக்கிறோம். ஆனால் ஒன்று சொல்லிக்கொள்வேன், எதிர்க் கட்சித் தலைவராகவும், துணைத் தலைவராகவும் முறையே நாவலரும், நானும் இருந்தபொழுது எந்த நிகழ்ச்சிக்கும் நாங்கள் அழைக்கப்படவில்லை என்று சொன்னேன். உடனே அம்மையார் அவர்கள் குறுக்கிட்டு இங்கே என்ன வாழ்கிறது, எங்களையே அழைக்கவில்லை என்றுதான் சொன்னார்கள். இந்த ஆட்சியில் எந்தக் கட்சி எம்.எல்.ஏ., என்ற பாகுபாடு இல்லாமல் அவரவர்கள் தொகுதியில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அந்த எம்.எல்.ஏ., அழைக்கப்பட வழிவகைகள் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரிகளின் பதவி நீடிப்பு பற்றி இங்கே பெரும்பாலான உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிகாரிகளின் பதவி நீடிப்பு, வரையறுக்கப்பட்ட காலத்திற்குமேல் கூடாது, அது இருக்காது என்பதை நான் இந்த மன்றத்தில் எடுத்துச்சொல்லி, தவிர்க்க முடியாத சில காரணங்களால், அவர்கள் தனித் திறமை பெற்றவர்களாயிருந்தால் ஒன்றிரண்டு விதிவிலக்கே தவிர மற்ற அதிகாரிகளுக்குக் கண்டிப்பாக பதவி நீடிப்பு இருக்காது என்று சொன்னேன். அந்த முறையைத்தான், நான் எடுத்துச்சொன்ன அடிப்படையில் இந்த அரசு இன்றைக்கு நடைமுறையிலே வைத்திருக்கிறது.

செயலாளரைப்பற்றிச் சொன்னார்கள், சபையின் செயலாளரைப் பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சியில் அங்கு ஹனுமந்தப்பா அவர்களுக்கு 3 ஆண்டுக்காலம்வரை பதவி நீடிப்பு அளிக்கப்பட்டது. இதை நம்முடைய ஜோதி அம்மையார் அவர்களும் அறிவார்கள். ஆகவே, பதவி நீடிப்பு சில குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு, தேவைப்படும் காரணத்தால் ஓரிருவருக்குச் செய்யப்படுகிறதே அல்லாமல் முன்பிருந்ததைப்போல எல்லோருக்கும் பதவி நீடிப்பு என்ற அளவில் இன்றைக்கு அரசு கைக்கொள்ளவில்லை என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தியாகிகள் பென்ஷன் பற்றிப் பேசப்பட்டது. தியாகிகளுக்கு, இந்த அரசு 7,224 நபர்களுக்கு பென்ஷன் அளித்து வருகிறது. 1—10—1966-ல் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. 31—12—66 வரையில் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் 5 பேர்களுக்குத்தான்

கொடுக்கப்பட்டது. தொடர்ந்து இருந்தால் கொடுத்திருப்பார்கள். ஆனால் தேர்தல் நேரத்தில் 1966-ல் தியாகிகள் பென்ஷன் கொடுக்கப் பட்டது. தியாகிகளெல்லாம், இவர்களே தேர்தலில் நின்று எம்.எல்.ஏ.-க்களாக வருவார்கள், அமைச்சர்களாக வருவார்கள், விடுதலைக் கொடி பிடித்த நாங்கள் என்ன கதிக்கு ஆவது என்று போர்க் கொடி காட்டிவிடுவார்கள் என்று எண்ணியோ என்னவோ 1—10—66 முதல் 31—12—66 வரையில் 5 பேர்களுக்கு தியாகிகள் மானியம் கொடுக்கப்பட்டது. 1—1—67 முதல் 31—12—67 வரையில் அண்ணா அவர்கள் காலத்தில் 1,254 பேர்களுக்குக் கொடுக்கப் பட்டது. 1—1—68 முதல் 31—12—68 வரையில் 1,817 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 1—1—69 முதல் 31—12—69 வரையில் 1,742 பேருக்குக் கொடுக்கப்பட்டது. 1—1—70 முதல் 31—12—70 வரையில் 1,914 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 1—1—71 முதல் 31—12—71 வரையில் 453 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. 1—1—72 முதல் இன்றுவரையில் 39 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆகவே, 7,224 பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதிலே வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்ட தொகை மாத்திரம் 43,96,800 ரூபாய் தியாகிகளுக்காக இந்த அரசு மானியமாகக் கொடுக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது இந்த அரசு எந்தவிதமான அரசியல் மாச்சரியங்களுக்கும் ஆட்படாமல் நாட்டினுடைய விடுதலைக்குப் போராடிய மாவீரர் களுக்கு நாம் செலுத்த வேண்டிய காணிக்கை, அளிக்க வேண்டிய மரியாதை, அளிக்க வேண்டிய மதிப்பு, செலுத்த வேண்டிய நன்றி இது என்ற அளவில் இதைச் செய்து வருகிறது. இதை மேலும் உயர்த்தவேண்டும் என்று கூறப்படுகிறது. மேலும் உயர்த்த வேண்டுமென்று கூறும் நேரத்தில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் வந்த அறிவிப்பைக் கவனிக்க வேண்டும். 200 ரூபாய் தியாகி களுக்குத் தருவதாக அறிவித்திருக்கிறார்கள். அதிலே 6 மாதம் சிறை யிலிருந்த தியாகிகள் என்று அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் கள். நாம், 3 மாதங்கள் சிறையிருந்தால் போதும் என்று 50 ரூபாய் தருகிறோம். ஆகவே 6 மாதம் உள்ளவர்கள் என்னும் கணக்கிலே இந்த ஏழாயிரத்தில் அவர்கள் எடுத்துக்கொண்டால் மிச்சமுள்ளவர் களுக்கு அதன் பிறகு நாம் அதை எவ்வளவு உயர்த்திக் கொடுக்கலாம் என்பதையும் நம்முடைய நிதிநிலைக்கு ஏற்றவாறு ஆராயக் கடமைப் பட்டிருக்கிறோம்.



திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போது தியாகிகள் ஏதாவது வேலையில் இருந்து, 100 ரூபாய் வருமானம் வருவதாக இருந்து, பின்னால் ரிடையர் ஆகிவிட்ட பிறகு இந்த தியாகிகள் பென்ஷனுக்கு மனுச் செய்தால் காலம் முடிந்துவிட்டது, மனுப் போடக்கூடாது என்று சொல்லப்படுகிறது. அப்படி இல்லாமல் அவர்களுக்கு வருவாய் வராத சூழ்நிலை ஏற்பட்டால் அப்போது இதற்கு மனுப் போடலாம் என்ற திட்டத்தை அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் திட்டம் முதலிலே வந்தபோது குடும்பத்திலே யாராவது 100 ரூபாய் சம்பாதித்தால் கூட இவர்களுக்கு தியாகிகள் பென்ஷன் கிடையாது என்று இருந்தது. இப்போது அதைக்கூட எடுத்துவிட்டோம். இவர்களுக்கே 100 ரூபாய் வருமானம் இருந்தால் பென்ஷன் கிடையாது என்று மாற்றி விட்டோம். இன்னும் இடர்பாடுகள் ஏதேனும் இருக்குமானால் கவனிக்கலாம். அண்மையில் நடைபெற்ற தியாகிகள் மாநாட்டில் பல விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அரசு பரிசீலனை செய்து வருகிறது. தியாகிகள் விஷயத்தில் எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் அரசு பரிசீலனை செய்து உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மணலி அவர்கள் பேசும்போது சொன்னார்கள்—தியாகிகளுக்குக் கொடுத்த வரையில் போதும் என்று. தமிழ்த் தியாகிகளுக்கெல்லாம் இதைத் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் காயாட்சி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மணலி அவர்கள் இப்படி தமிழ்த் தியாகிகளுக்குக் கொடுப்பது என்றால் விவசாயப் போராட் டத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும்; தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் வந்துவிடும் என்று சொன்னார்கள்.

அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே ஒருமுறை சொல்லி இருக்கிறார்கள். "தமிழுக்காகப் போராடி சிறை சென்றவர்களைத் தமிழ்நாடு தாங்கிக் கொள்ளும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். "தமிழ்நாடு தாங்கிக் கொள்ளும்" என்ற சொல்லை அவர்கள் எந்த வகையில் சொன்னார்கள் என்பதை மீண்டும் நாங்கள் ஒரு முறை ஆராய்ந்து, அந்தத் தமிழ்த் தியாகிகளுக்கு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்றவர்களுக்கு இந்த அரசின் சார்பில் ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றி யோசித்து உரிய நேரத்தில் நாங்கள் அறிவிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி பகுதி தாயகத்தோடு சேரவேண்டுமென்று போராடியவர்களைப் பற்றியும் ஆலோசிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : போராடிய தலைவரையே அப்போது யாரும் ஆலோசிக்காமல் விட்டுவிட்டார்கள். நாங்கள் ஆலோசித்த பிறகுதான் இன்றைக்கு அவரைப் பாராட்டத் தொடங்கினார்கள். கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று போராடி, அந்த ஆட்சிக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களுக்காக ஆறுதல் கண்ணீர் சிந்தியவர்களும், அந்தக் குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்கியவர்களும் இன்றைக்கு ஏராளமானவர்கள் ஆளும் கட்சியிலும், ஆளுங்கட்சிக்குத் தோழமையாக இருக்கும் வரிசையிலும் இருக்கிறார்கள். ஆகவே, அதுவும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

நண்பர் வகாப் அவர்கள் பேசும்போது, "சிறுபான்மை சமுதாய மக்களிடத்திலே தொடர்ந்து பரிவு காட்டிக் கொண்டிருக்கிறது, மேலும் பரிவு காட்ட வேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். "தொடர்ந்து பரிவு காட்டிக் கொண்டிருக்கிறது" என்று சொன்னதிலிருந்து இப்போது பரிவு காட்டிக்கொண்டிருக்கிறோம் என்பதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். "மேலும் பரிவு காட்ட வேண்டும்" என்று சொன்னது இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பரிவு காட்ட வேண்டுமென்பதற்காக வாதிட்டிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் பேரவைக்கு ஏ.சி. போடவேண்டுமென்று சொன்னார்கள். "நாம் ஊட்டிக்குப் போகவேண்டாம்; ஊட்டியை இங்கே கொண்டுவந்து விடலாம்" என்று சொன்னார்கள். எதிர்க் கட்சியில் இருக்கின்ற அவ்வளவு பேரும் சட்டமன்றத்தைக் குளு குளு மயமாக்க வேண்டுமென்று சொன்னால், அனைவரும் விரும்புவார்களேயானால் அதைப்பற்றி யோசிக்கலாம். இப்போது சட்டசபையைத் தவிர பல்வேறு இடங்கள், இந்தக் கோட்டையில் இருக்கும் இடங்களைத் தவிர வேறு பல இடங்களில் எல்லாம் இந்த வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. டிரான்ஸ்போர்ட் இலாகாவுக்குச் சென்று பார்த்தால் அங்கிருக்கும் அதிகாரிகள் எல்லாம் குளுகுளு அறையில் இருக்கிறார்கள். பல்வேறு இடங்களில் இந்த அறைகள் இருக்கின்றன. பேரவையைப் பொறுத்தவரை இப்போது நான் உங்களிடையே பேசிக்கொண்டிருக்கிறேன்; வேர்த்துக் கொட்டிக்கொண்டுதான் இருக்கிறது. கோடை காலத்தில் இன்னும் கஷ்டமாக இருக்கக்



கூடும். எதிர்க் கட்சியிலுள்ள அவ்வளவு பேரும் இது தேவை என்று உணர்ந்து எடுத்துச் சொல்லுவார்களேயானல் அதைப்பற்றி யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் மூன்று கோடி ரூபாயிலோ, நான்கு கோடி ரூபாயிலோ நமக்கு, செகரடேரியட்டுக்குத் தனியாகக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற யோசனை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தது செயல்படுத்தப்படுமா என்று கேட்டார்கள். இப்போது இங்கே இட நெருக்கடியால் தொல்லை அதிகமாகியிருக்கிறது என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனல் பழைய முதலமைச்சர் அவர்கள் "நான்கு கோடி ரூபாயில் ஏன் கட்டுகிறார்கள்? காண்டிராக்டுக்கு விட்டு பணத்தைக் கொள்ளையடிப்பதற்காகச் செய்கிறார்கள்" என்றார். இதெல்லாம் பழைய பழக்கம் (ஆரவாரம்) —அதைச் சொல்லுகிறார்கள்.

ஆகவே, நான்கு கோடி ரூபாய், ஐந்து கோடி ரூபாய் என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை. இப்படி ஒரு கேள்வி அன்றைக்குக் கேட்டார்கள். கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னேன்; யோசனை இருக்கிறது என்று சொன்னேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதை மேலும் வலியுறுத்தி "காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அதற்குத் திட்டம் இருந்ததே. அதை ஏன் கிண்டியில் நிறைவேற்றக்கூடாது? அதற்கு எவ்வளவு செலவாகும்" என்று கேட்டார்கள். அதற்குப் பதில் கூறும்போதும் இறுதியான முடிவாகச் சொல்லவில்லை. அமைச்சரவை பரிசீலிக்கும் என்றுதான் சொன்னேனே தவிர வேறல்ல. இதிலே நாங்களாக ஒரு முடிவுக்கு வரப்போவதில்லை. பெரிய பத்திரிகைகள் இருக்கின்றன. அவர்கள் தங்கள் கருத்துக்களை எழுதலாம். அவைகளைக் கூட அமைச்சரவை கணக்கில் எடுத்துக்கொண்டு யோசனை செய்யத் தயாராக இருக்கிறது.

நான்கு கோடி ரூபாய் கட்டடம், காண்டிராக்டுக்கு வரும், மந்திரிகள் எடுத்துக் கொள்ளுவார்கள் என்ற அந்தக் காரணங்களைச் சொன்னல் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நாட்டில் இருக்கும் அரசியல் பண்புடையவர்கள் யாரும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதுவே போதும் அல்லது அது தேவைதான் என்ற முறையிலே பத்திரிகைக்காரர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுவார்களேயானல் அவற்றை எல்லாம் பார்த்துத்தான் முடிவெடுப்பதாக இருக்கிறோமே தவிர, நாங்களாகவே இதிலே எந்த

வித முடிவும் எடுப்பதாக இல்லை. இங்கு போதிய வசதிகள் இல்லை என்பதை உணர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், வெளியிலே இருக்கும் போக்குவரத்து நெரிசலை உணர்ந்து அவற்றைப் பற்றி ஆலோசிப்பவர்கள், நாட்டில் இருக்கும் பத்திரிகைகள், அபிப்பிராயம் சொல்லக்கூடிய பெரியவர்கள் கூறுகின்ற அந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் இந்த அரசு இதிலே முடிவு எடுப்பதாக இருக்கிறது என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கிண்டியில் கட்டுவதாகச் செய்தி பார்த்தேன். அது நகரத்திலிருந்து ரொம்ப தூரத்தில் இருக்கிறது. எல்லா ஜனங்களும் வரக்கூடிய நடு மையத்தில் இடம் பார்த்துக் கட்டினால் சவுகரியமாக இருக்கும். இல்லாவிட்டால் பஸ்ஸுக்கு ஒரு ரூபாய் செலவழித்துக் கொண்டு ராயபுரத்தில் இருக்கிறவர்கள் கிண்டிக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். செண்ட்ரல் பார்ட் ஆப் தி டவுனில் இடம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இடத்தைப்பற்றி இப்போது "கிண்டி"க் கொண்டிருக்க வேண்டாம். கட்டலாம் என்ற யோசனை வந்து விட்டால் பிறகு எல்லோரையும் கலந்து கொண்டு, ஆளும் கட்சி மாத்திரம் முடிவு எடுக்காமல் எல்லோரையும் கலந்து முடிவு எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ப்ரஸ் ஆக்ட் வரவேண்டுமென்று சொன்னார்கள். சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எந்த அளவு போடவேண்டுமென்பதைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருசில விஷயங்களைப் பற்றி அதிகமாகப் பேசி விடப்படுமானால், அவைகளை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட்டால், சில விஷயங்கள் அதிகமாகப் பேசப்பட்ட காரணத்தால் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டு விட்டன என்ற அளவுக்காவது பத்திரிகைகளில் போடும் உரிமை பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அந்த உரிமைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், சட்டமன்றத்திற்கான விதிகளை வகுப்பவர்களும் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

திரு. வீராசாமி அவர்கள் பேசும்பொழுது பத்திரிகைகள் சட்டமன்ற உறுப்பினர்களைக் குறித்தும், அமைச்சர்களைக் குறித்தும், பொதுமக்கள் பிரதிநிதிகளைக் குறித்தும் வேண்டுமென்றே





எழுதுவதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கேரளாவில் அப்படி ஒரு சட்டம் இருக்கிறது என்று கருதுகிறேன். பத்திரிகைகள் அமைச்சர்கள் மீதும், சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்தும் எழுதுகின்ற குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொறுப்பை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறையில் ஒரு சட்டம் இருப்பதாக நினைவு. பத்திரிகைக்காரர்கள் தவறுதலாக செய்தியை வெளியிட்டு, அந்தச் செய்து தவறு என்று சம்மந்தப்பட்டவர்களால் அவர்களுக்கு எழுதப்பட்டு, அந்தச் செய்தி தவறு என்று அந்தப் பத்திரிகைகளில் முதலில் போட்ட அளவுக்கே போட்டுவிட்டால் பரவாயில்லை. போடாமல் இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என்ற அளவுக்கு சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்து ஒரு சட்டத்தை உருவாக்கலாமா என்று யோசிக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் யாராக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இரு தரப்பிலும் இருக்கிறார்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். மக்கள் பிரதிநிதிகளைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ சொன்ன கருத்துக்களை நிரூபிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிரூபித்துக்காட்டலாம்; இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கலாம் என்ற அளவுக்கு சட்டத்தை கொண்டுவரலாமா என்று அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கேரளாவில் —Kerala Public Men Enquiry Bill என்று கொண்டு வந்தார்கள். யார் பொது வாழ்க்கையில் இருப்பவர்களைப்பற்றி அவதூறாகச் சொன்னாலும் அவர்கள் 500 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும்; ஜுடிஷியல் ஆபீசரைக் கொண்டு விசாரிக்கப்படும் என்ற முறையிலே —A judicial officer should enquire into the allegations என்ற முறையில் கொண்டு வந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காமராஜ் அவர்கள் கூடப் பேசியிருக்கிறார்கள், பார்த்தேன். அவர்களுடைய காலத்திலேயே கொண்டு வந்திருக்கலாம், செய்யவில்லை. இப்போது கேரளாவிலோ, மற்ற மாநிலங்களிலோ, எவ்வாறு இருக்கிறது என்று பார்த்து அதைப்பற்றி ஆராயக் கடமைப்பட்டிருக்கிறேன்.

DR. H. V. HANDE : Already there is protection. We can file a defamation suit against the concerned person. That protection is there.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : That is more complicated and cumbersome. What is in Kerala is more simplified. You deposit Rs. 500. If it is proved, Rs. 500 will be returned. Otherwise it will be forfeited.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேண்டுமென்று அவதூறு சொல்கிறவர்கள் ரூ. 500-க்கு அவதூறு சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும். வேண்டுமென்றே சொன்னவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கேற்ற நிலையில் அவைகளை உருவாக்கவேண்டும்.

முன்னாள் சீப் செகரட்டரி பற்றியெல்லாம் இங்கு பேசினார்கள். அவர்களுக்கு உடல் நலம் இல்லை, உடல் நலம் இல்லை என்று விடு முறையில் இருக்கும் ஒருவரைப்பற்றி எந்த விளக்கமும் சொல்ல முடியாது. சீப் செகரட்டரியாக இருந்த திரு. ராயப்பா அவர்கள் எந்தக் காரணமும் சொல்லவில்லை. இன்று இருக்கிற மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவராக அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் விடுமுறையில்தான் இருந்துவருகிறார்கள். அதற்குப் பதிலாக, அவர்கள் அந்தப் பொறுப்பில் இல்லாததால் திரு. ராஜாராம் அவர்கள் அந்தப் பொறுப்பை கவனித்துக்கொண்டு வருகிறார்கள். விடுமுறை கழிந்த பிறகு அவர்கள் அந்தப் பொறுப் பிற்கு வருவார்கள். அதில் வேறு எந்தப் பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : What was the reason for his being transferred from the post of Chief Secretary ? Is there any specific reason ? That is what I want to know.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சீப் செகரட்டரி பற்றி, காரணங்களை முதல் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமா என்பது பிரச்னை. ராஜாஜி அவர்கள் அதற்கு வழி காட்டுகிறார்கள். அவர்களே சொன்னார்கள், அதிகமாக எல்லோருக்கும் பதவி நீட்டிப்பு எல்லாம் கொடுத்திருக்கிறீர்களே என்றதற்கு. ஒருவர் ரிட்டயராகி பத்தாண்டு காலமாகிவிட்ட பிறகு, ஆர். வி. கிருஷ்ண ஐயர் என்பவர் பத்தாண்டுகள் ரிட்டயராகி வீட்டில் இருந்தவர், 52-ல் ராஜாஜி முதல்வராக வந்ததும் அவரை அழைத்து சட்டசபை செகரட்டரியாக வைத்துக்கொண்டார். அப்படி வைத்துக்கொண்ட நேரத்தில் கேள்விகள் எழுந்தன. அப்போது அவர்கள் சொன்னார்களாம், முதல் அமைச்சர் நான், எதுவும் செய்வேன், அது என் இஷ்டத்தைப் பொறுத்தது என்று.



டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்னொன்று சொன்னார்கள். ப்ரைவேட் செகரட்டரியாக எந்த முதல் அமைச்சராவது ஐ.சி.எஸ். அல்லது ஐ.ஏ.எஸ். அல்லாதவரை வைத்துக்கொண்டிருக்கிறார்களா, நீங்கள் தானே ஐ.ஏ.எஸ். அல்லாத ஒருவரை நீண்ட நாட்களாக ப்ரைவேட் செகரட்டரியாக வைத்துக் கொண்டிருந்தீர்கள் என்று ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். காமராஜ் அவர்களும், பக்தவச்சலம் அவர்களும் கிருஷ்ணய்யா என்பவரை ப்ரைவேட் செகரட்டரியாக வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர் எஸ்.எஸ். எல்.சி. படித்த டெப்டி செகரட்டரி. நான் வைத்துக்கொண்டிருந்தவர் எம்.ஏ. படித்தவர். படிப்பிற்குள் நான் போகவில்லை. ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை ப்ரைவேட் செகரட்டரியாக வைத்துக்கொள்ள வேண்டும், எந்த முதல் அமைச்சரும் செய்யாத காரியத்தை பாவி, நீ மாத்திரம் செய்து அந்த மரபை கெடுத்துவிட்டாயே என்று......

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாவி என்று நான் சொன்னதே இல்லை. நான் அப்படி பாவி என்று சொல்வேனா? I have such a high regard for the Hon. Chief Minister. இதில் குற்றச்சாட்டு ஒன்றும் இல்லை. Even if Rajaji had done it, I would have opposed it. That is my nature.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாவி இல்லை என்று சொன்னதிலிருந்து என்னை புண்ணியவான் என்று ஏற்றுக்கொண் டார்கள். நன்றி. திரு. குமாரசாமி ராஜா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது திரு. ஏ. கே. டி. வெங்கட்ராஜ் என்பவர், அவரது ப்ரதர்-இன்-லா, அவர்து ப்ரைவேட் செகரட்டரி யாக இருந்தார்கள். இதற்கெல்லாம் மரபுகள் இருக்கின்றன என்பதற்காக எடுத்துச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

DR. H. V. HANDE : I want answer to two specific questions. The previous Private Secretary to the Chief Minister was transferred. The Chief Secretary also has been transferred. Are there special reasons for these transfers ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ப்ரைவேட் செகரட்டரியாக இருந்த வைத்தியலிங்கத்தின்மீது எனக்கு எந்தவிதமான கோபமும் இல்லை. அதற்காக விலகிப்போகவும் இல்லை. எந்தவிதமான காரணமும் கிடையாது. அவர் ஐந்தாறு மாத காலமாக உடல் நலிவால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போதுகூட, அவர்கள் பப்ளிக் டிபார்ட்மெண்டில் டெபுடி செகரட்டரியாக இருக்

கிறார்கள். ஆகவே எந்த பதவிக் குறைப்பும் செய்து நான் அனுப்பி விடவில்லை. எந்தக் காரணமும் கிடையாது. அவருக்கு என் வேகத்திற்குத் தகுந்தாற்போல், நான் ஒரு நாள் உழைக்கிற அளவிற்கு அந்த அளவு நேரம் அவர்கள் உழைப்பது கஷ்டம். இப்போது இருப்பவரும் கொஞ்ச காலத்திற்குத்தான் உழைத்துப் பார்க்க முடியும் என்று கருதுகிறேன். நண்பர்கள் என்னோடு பயணம் செய்தால் சொல்வார்கள். உன்னோடு பயணம் செய்யமுடியாது என்று கூறுவார்கள். சாப்பாடு, தூக்கம் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். அந்த அளவிற்கு என்னோடு இருந்து பணியாற்ற முடியாது அவர்கள் கஷ்டப்பட்டார்கள். ஆகவே கொஞ்சம் வேலை பளு குறைவான இடத்தில் இன்று இருக்கிறார். டெப்டி செகரட்டரியாக பப்ளிக் டிப்பார்ட்மென்டில் இருக்கிறார். திரு. ராயப்பா அவர்களின் மாற்றத்திற்கும் எந்தவிதக் காரணமும் கிடையாது. திரு. ராயப்பா நல்ல திறமை படைத்தவர் என்ற காரணத்தினால் ஒரு பெரிய திட்டக் குழுவிற்கு, மாநில அளவிற்கு அமைத்துள்ள குழுவிற்கு— இந்தியா முழுவதற்குமே வழிகாட்டத்தக்கது என்று திரு. சி. சுப்பிரமணியம் அவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்—துணைத் தலைவராக போடப்பட்டிருக்கிறார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தப் பதில் இந்த நேரத்தில் எங்களை திருப்தி செய்யலாமே தவிர அவர் மனதிற்கு திருப்தியாக யிருக்கிறதா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: பதிலிலிருந்து விஷயம் நமக்கு நன்கு புரிகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: என் மனதை எக்ஸ்-ரே எடுத்தார்கள். ஆனால் எக்ஸ்-ரே பார்க்கத் தெரியவில்லை. அப்படி திட்டக் குழுவிற்கு துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர வேறு அல்ல.

சில உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் குறித்து இங்கு பதில் கூற விடுபட்டுப்போயிருந்தாலும் அதிகாரிகள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும் அவை கவனிக்கப்படும் என்று கூறி, கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

The cut motion of Dr. H. V. Hande to Demand No. 7, was, by leave, withdrawn.

The cut motion of Thiru A. Swamidhas was deemed to have been withdrawn, since the hon. Member was not in his seat.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக்கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,33,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 8-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களாலும், திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களாலும் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக்கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,46,42,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 33-க்கு திரு. எஸ். வடிவேல் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக்கோரிக்கை எண். 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 13,29,73,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

[1972 மார்ச் 22

நிதிக்கோரிக்கை எண் 6-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களாலும், திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களாலும் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக்கோரிக்கை எண் 6—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 32,00,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவுடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (4) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

75. Notification issued with Roc. No. 181425/69-P1, dated the 2nd March 1970, in regard to exclusion of certain areas from the existing Theppampatty Panchayat of Madurai district for constitution into a separate Panchayat by name " Rajakkalpatti ". [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

76. Notification issued with G.O. No. 3834, Revenue, dated the 24th November 1971, in regard to appointment of Thiru R. Gopalakrishnan, Principal Sub-Judge, Chingleput to be the Additional Judicial Member, Sales Tax Appellate Tribunal, Madras. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

### *B. Reports, Notifications and Other Papers.*

@ 104. A Review on the working of Minor Ports in Tamil Nadu, 1971-72. (English and Tamil).

---

@ Despatched to Members on 20th March 1972.



1972 மார்ச் 22]

### *B. Reports, Notifications and Other Papers—cont.*

@ 105. A Review on Road Development and Buildings Programme in Tamil Nadu, 1971-72. (English and Tamil).

@ 106. A Review on Irrigation in Tamil Nadu, 1972-73. (Tamil).

@ 107. A Review on the working of Tuticorin Harbour Project and Sethusamudram Project in Tamil Nadu, 1971-72. (English and Tamil).

@ 108. The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Amendment) Bill, 1972 (L.A. Bill No. 3 of 1972).

---

@ Despatched to Members on 20th March 1972.

# HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M.) for Motion, (C.A.) for Calling Attention, (R.) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., 'Committee (s)', 'Council (s)', 'Corporation (s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | . | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance |
| C.A.St. | .. | Calling Attention Statement. |

| | | |
|---|---|---|
| Consid. | .. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to Circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | . | Consideration of Clauses of a Bill. |
| D.E.E. | . | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | .. | Demands for Supplementary Grants. |
| G.A. | .. | Governor's Address. |
| G.D. | | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | .. | Half-hour Discussion. |
| Int. | .. | Introduction stage of a Bill. |
| L.A. | .. | Legislative Assembly. |
| L.C. | .. | Legislative Council. |
| M. | .. | Motion. |
| P.M. | .. | Privilege Motion. |
| R./Res. | .. | Resolution. |
| St. | .. | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

18*th*, 20*th*, 21*st and* 22*nd March* 1972.

**VOLUME XIX (Nos. 1 to 4).**

**A**

PAGES

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1972–73—Voting :

Education .. .. .. .. .. 64–67

Irrigation, Public Works—Works, Public Works—Establishment and Tools and Plant, Capital Outlay on Irrigation, Capital Outlay on Public Works .. .. .. .. .. 512–514

ABUSALI, THIRU M. A.—

